உ

ஸ்ரீ ராம ஜயம்

ஸ்ரீமத் கம்ப ராமாயணம்

அயோத்தியா காண்டம்

மூலமும்—உரையும்

இவ்வுரை

திருமயிலை - வித்வான்

சண்முகம் பிள்ளையவர்கள்

இயற்றியது

திருவாலங்காடு இராமலிங்க முதலியாரவர்கள்

குமாரர்

திரு. இராமசாமி முதலியா ரவர்கள்

வெளியிட்டது.

1909

சாமிநாதன் பிரசில் அச்சிடப்பட்டது.

சிறப்புக்கவிகள்

———o———

காஞ்சிப்புரம் - மகாவித்துவான்

இராமசாமி நாயுடு அவர்கள்

இயற்றியது.

மறையிருந்த பொருளனைத்து மன்பதைசேர்ந் துயக்கம்பன்
வகுத்துத் தென்சொல்
உறையிருந்த விருத்தப்பா வினின்யாத்திட் டுதவுநில
வுலகத் தோங்கிச்
சிறையிருந்தா ளேற்றமொளிர் பத்திரதன் மகன்காதைச
செறியி ரண்டென்
றறையிருந்த காண்டமதற் குயர்வனப்பெல் லாமமைய
வறிவி னுடி. (௧)

பல்லாற்றுற் றமிழறிஞர் கொண்டாட வோருரையைப்
பண்பிற் றீட்டி
எல்லார்க்கு முதவவளித் திறவில்புக ழுடம்பதனை
யெய்தி யிட்டான்
நல்லாற்றி னட்டாவ தானியெனுஞ் சபாபதிப்பேர்
நாவ லோன்பால்
தொல்லாற்றி னிலக்கியமு மிலக்கணமு மொருங்குணர்ந்த
சுகுண னென்போன். (௨)

திருமுல்லை வாயிலெனுந் திருப்பதிக்கோர் புராணமது
செப்பி யின்னற்
கருமுல்லை கடந்துய்ந்தோன் கறைக்கண்ட னடிக்கமலக்
களிவண் டன்னான்
மருமுல்லை வனஞ்செறியுந் திருமயிலைத் தலக்கணியா
வந்தோன் மாரன்
வருமுல்லைக் கணைக்கிளையாச் சண்முகப்பேர் வாய்ந்த தமிழ்
வாணன் மாதோ. (௩)

அன்னதுதன் பெயரியைபா லமைந்திருத்த னுடிநிலத்
தவர்கொண் டாடப்
பன்னருஞ்சீர் வடவனத்து வருராம சாமிப்பேர்ப்
பருணி தன் சீர்த்
தென்னவிரச் செனுமூர்த்தி தனிலேற்றி யேவருஞ்சே
விக்கத் தந்தான்
துன்னுமவ னிசைசோறற் காயிரவாய்ச் சேடனுக்குந்
தோன்று தன்றே. (௯)

சேயூர் வித்வான்

வெள்ளி யம்பலம் பிள்ளை யவர்கள்

குமாரர்

சே. சிவஞானம் பிள்ளை யவர்கள்

இயற்றியது.

தமிழ்மொழியே தமிழ்மொழியா மெனவெவருங் கொண்டாடத்
தார ணிக்கண்
அமிழ்தினுமிக் கினிமையுற விருத்தப்பா வினிற்சந்த
வடைவு காட்டிக்
கமழ்தருசெந் தமிழ்மணக்க வரிந்தமன்சீர்ச் சரிதைதனைக்
கவினத் தந்தான்
தமயனெனத் தமிழ்க்காமேனன் கம்பனும் பெயர் மருவு
தமிழ்வ லோனே. (௧)

அப்பெரிய காவியத்து னிரண்டாவ தாகவரு
மருங்காண் டக்குச்
செப்பியலு நயனெல்லா மெம்மனோ ரினிதுணரத்
தெரித்து முன்னு
மொப்பியலு நங்கினார்க் கினியர்பரி மேலழக
ருரைத்தா ரென்னத்
திப்பியச்செந் தமிழுரையை யினிதளித்துப் புகழுடம்பு
செறிந்திட் டானல். (௨)

என்றனையாட் கொளுமுருக னிணையடிக்கே மாறாத
விதயம் பூண்டோன்
மன்றவரு கல்விநலந் தகவளித்தென் மனத்தேய்ந்த
மடமை தீர்த்தோன்

குன்றனைய குணமன்னன் மயிலைவளம் பதிசெய்தவம்
குலவ வந்தோன்
பொன்றவில்சீர்ப் புலமைசெறி சண்முகநற் பெயர்மருவு
புனிதன் மாதோ. (௰)

சென்னை புரொகிரெசிவ் பிரஸ் தலைவர்

பு. வே. சபாபதி முதலியார் அவர்கள்

பாடியவை,

நல்லன புகன்று ஞாலத் தவர்க்கரு ளென்று நாட்டி
யல்லன வோட்டி ஞான மடைவழி கூட்டி ராமன்
நல்லவச் சரிதை தன்னை யாத்தநற் கம்பன் சொற்ற
வல்லநற் காண்ட மாறுள் வருமயோத் தியகாண் டக்கே.

பல்லுரை யிருந்தும் பாரிற் பயனிலை யென்னக் கண்டே
நல்லுரை காணு மாறு நம்பியா ரிராம சாமி
எல்லுறு மனத்தால் வேண்ட வியற்றினன் தருணவ யொத்தே
வல்லுநர் வாழ்த்து மன்னோன் யாரெனில் வகுத்து மன்னோ.

மன்னிய குலத்த வந்தோன் மாசிலாக் குணத்தூச் சீலன்
தன்னிய லுணர்த்து சைவத் தவநெறி யொழுகு மேலோன்
மின்னியல் புடைய கீர்த்தி மிகுதமிழ்ப் புலமை சான்ற
நன்னய மயிலை வந்தோன் சண்முக நாவலோனே.

இந்நூலின் உரையாசிரியர் மாணாக்கர்

கா. நமச்சிவாய முதலியார் அவர்கள்

பாடியது.

திருவ மார்தரு வடமொழி யாகிய செல்விக்
குருவ வோடிரு கண்ணென வுரைத்திட வோங்கும்
மருவி ராமனற் காதையும் பாண்டுவின் மைந்தர்
விரவு காதையு மென்பரால் மேதக வினரே. (௧)

இன்ன வாமிவை யிரண்டனுண் முன்னுற வியலும்
மன்னி ராமநற் காதையை வடமொழி கொண்டே
சொன்ன சொற்றொறு மின்னயம் பலப்பல தொனிப்பக்
கன்ன லோடுசெந் தேன்விராய்த் தெனநலங் கவின. (௨)

முன்ன நூலினிற் காணுறு முரண்பல முறியப்
பன்னு வேற்றுநூற் றொடர்பினைப் பண்புற வயக்கி
தன்ன மும்கரி சில்வழி தனித்தமிழ் மாதுக்
குன்னு மங்கல வணியென வுரைத்தன னன்றே. (௩)

இம்ப ரார்தொழு மின்னவன் யாவனே யென்னின்
உம்ப ராரினு முயர்நிலை மருவிய வுரவோன்
நம்பு கல்வியிற் பெரியவ னெனவிய னவிலும்
கம்ப னுமென வீறிய கடவுணா வலனே. (௪)

அன்ன வன்புகல் காண்டமொ ராறினி லன்பு
மன்ன வீறும யோத்தியா காண்டக்கு வகையா
வுன்னி யேயுறு தொகைவகை விரிவெலா முணர்த்தி
நன்ன யத்தமி ழுரையினை யருளின னாலோ. (௫)

கல்லை மேவிய வென்னுளங் காணியாக் கொண்டு
மல்லை வாட்டிய வடியிலை வேல்வல னுயர்த்த
வல்ல வன்மல ரடியிணை மருவிய மனத்தோன்
முல்லை மான்மியம் செந்தமிழ்ப் பாவினின் மொழிந்தோன். (௬)

இம்மெ னும்முன மெவ்வகைப் பனுவலை யேனும்
செம்மை யார்தர யாத்திட வல்லவன் சீர்சால்
அம்ம நல்லியற் பாவையை யறிவெனும் புணையால்
மம்மர் நீங்குறக் கடந்தவன் மனநல முடையோன். (௭)

விண்மு கத்தவர் நாடிடு விமலனை யன்பால்
உண்மு கத்தினிற் கூடிடு முண்மையை யுணர்ந்தோன்
மண்மு கத்தினில் விளங்கிய மயிலையம் பதியோன்
சண்மு கப்பெயர் கொண்டெனை யாண்டிடச் சார்ந்தோன். (௮)

இப்பெ ரும்புல வன்றனை யிதயமா ரன்பின்
ஒப்ப மேவிடு முத்தம னண்பினர் தம்மை
வைப்பெ னக்கொளு மாண்பின னிங்கித முடையான்
செப்பு நல்லுரை திரம்பட மொழிகுவன் திறம்பான். (௯)

ஒரு யிர்க்கென வெழுபதோ டிரண்டெனு முயிரை
பாரி னல்கியும் மெய்யுரை நாட்டிடும் பதியோன்
மாரி யன்னசீர் கிருட்டின சர்மியாம் வள்ளல்
பேரி யன்றிடப் புவியினிற் றோன்றிடும் பின்னோன். (௧௦)

தேங்கு சீர்த்தமிழ் மொழிவயின் தீரகில் லாதே
ஒங்கு மார்வமே மிக்கவ னென்னிடத் தென்று
நீங்க கில்லதோர் நட்பினன் நன்னல நிலவும்
தீங்கி லாதவன் ராமசா மிப்பெயர் செறிவோன். (௧௧)

இவ்வு ரைச்சிறப் போர்ந்ததை யுலகின ரெய்தச்
செவ்வி சேர்தரு மச்சுவா கனத்தினிற் சேர்த்தே
தவ்வை தீர்தர வுதவின னவன்குலந் தழைத்து
மவ்வ லார்தரு மணமென வாழிய மாதோ. (௧௨)

படலங்கள்

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமத்கம்பராமாயணம்

அயோத்தியாகாண்டம்.

அயர்வருமமரர்கட்கிறைவனுகிய பகவான் பிதுர்வாக்கிய பரிபாலன மென்னுஞ் சாதாரணதருமத்தை அனுட்டித்துக் காட்டத்துணிந்து, தன் தந்தையாகிய சக்கரவர்த்தி திருவயோத்தியின் அரசபாரந் தாங்கென்றவழி யுடன்படலும், மாதுருவாக்கிய பரிபாலனமாகத் தன் தாய் கான்செல்கென உடனேகலுமாகிய செய்தியின் பிரிவினை யுணர்த்துதலின் இஃது பாலகாண்டத்தின்பின் வைக்கப்பட்டது. காண்டமுறையையு மிதனுனே விளங்கும்.

முதலாவது
மந்திரப்படலம்.

சக்கரவர்த்தி சூழ்ச்சித்துணைவராகிய 'மாசனம்பார்ப்பார்மருத்தர் வாழ் நிமித்தரோடமைச்சர், ஆசி லவைக்களத்தா ரைந்து' என்ற ஐம்பெருங் குழுவுள் புரோகிதர் அமைச்சர்களோடு இரகுநாயகனை அயோத்தியர் மன்னவனுவான் மந்திராலோசனை செய்தலின் மந்திரப்படலமென்றதென்க.

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போ லுள்ளும் புறத்து முளவென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்பக் கோறுறந்து
கானுங் கடலுங் கடந்திமையோ ரிடுக்கண் காத்த கழல்வேந்தை.

(இதன்பொருள்.)

கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்ப - கூனியாகிய மந்தரையும் சிறந்த தாயாகிய கைகேசியும் கொடுமைசெய்ய, கோல்துறந்து கானுங்கடலுங் கடந்து - அரசைத்துறந்து காட்டையுங் கடலையும் தாண்டிச்சென்று, இமையோரிடுக்கண் காத்த கழல் வேந்தை-தேவர்களைத் துன்பத்தினின்றுந் தவிர்த்தருளிய வீரக்கழலையணிந்த சீபாதத்தையுடைய இறைவனை, வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்-ஆகாயமுதற், அதி

னின்றுமிழிந்து அளவுகடந்த ஐம்பெரும் பூதமாகிய நிலையெங்கும், ஊனு முயிரு முணர்வும் போல - உடலும் உயிரும் அவ்வுயிருக்குச் சாதனமாகிய அறிவும்போல, உள்ளும் புறத்து முளனென்ப - அகத்தும் புறத்து நிறைந் துறைவானென்று கூறுவர் மேலோர்.—என்றவாறு.

ஊன், கூன், கோல் என்பன ஆகுபெயர்கள். வானை முதலாகக்கூறி யது சிருட்டிமுறை. வான் ஒழிந்த பூதங்களாவன காற்று, தீ, நீர், நிலமென் பன. மாபூதமென்றது பஞ்சீகரணப்படாமையை யுணர்த்தற்கு. தேவர்கள் பெற்ற வரமும் அரக்கர்செய்த தீமையுந் தூண்டலான் உண்டை வில்லடியு ண்ட கூனி சூழ்ச்சி தாயாகிய கைகேசியென்பாள் செம்மை மனம் வேறுபடு த்துத், தீமைசெய்வித்தலின் 'கூனுஞ்சிறிய கோத்தாயுங்கொடுமையிழைப்ப' என்றும், அதுகாரணமாகஅரசச்செல்வமிழந்து சனகியோடுந் தம்பியோடுங்கா ன்படர்தலின் 'கோறுறந்து' என்றும், சனகியை அற்றநோக்கிக்கொண்டு செ ன்று இலங்கையில் அசோகவனத்துச் சிறையிட, சுக்கிரீவனை நட்புக்கொ ண்டு வானரப்படையொடு காடுகடந்தும், திருவணைகட்டிக் கடல் கடந்தும், இலங்கையர்கோனை வேரொடுங் களைந்தமையாற் 'கானுங்கடலுங்கடந்திமை யோரிடுக்கண்காத்த' என்றும், அவ்வெற்றித்திரலை விளக்கவேயணிந்த வீரக் கழலை யுடையான் என்பதுபடக் 'கழல்வேந்தை' என்றும், உடம்பினை யிடங் கொண்ட வுயிரினு மதன் சாதனக்கருவியாகிய வுணர்வினும் இறைவன்கலந் திருப்பதுபோல் அண்டத்தினும் ஐம்பெரும்பூதங்களினும் நிறைந்திருக்கின்ற நிலைமையை யுணர்த்த 'வானின்றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங் கும் - ஊனுமுயிரு முணர்வும்போலுள்ளும்புறத்துமுளன்' என்றும், இது வேதசம்மதமும் ஆன்றோர் சம்மதமுமாமென்பதுபட 'என்ப' என்றுங்கூறி னர். மேலோரென்ற தெஞ்சிநின்றது. எங்குமென்புழி உம்மை முற்று, ஏனைய வெண்ணுப்பொருளன. இமையாநாட்டமுடையாரை இமையோ ரென்றது மங்கலங்கருதிவந்த ஒருவகை மரபுவழுவமைதி. இழைப்பத்துற ந்து கடந்து காத்த கழல்வேந்தை உள்ளும்புறத்து முளனென்பவென வினை முடிக்க. கொடுமையிழைத்தாலன்றித் துறத்தலுங் கடத்தலுங் காத்தலுஞ் செல்லாமையின் கொடுமை யிழைத்தலை முற்கூறினர். வேந்து-சொல்லா லஃறிணை; அமைச்சென் புழிப்போல. நிற்ப என்பது திரிந்துநின்றது * "வா னின்றுலகம்" என்புழிப்போல.

நூல்.

கலிவிருத்தம்.

மண்ணுறு முரசின மழையி னார்ப்புறப்
பண்ணுறு படர்சினப் பருமயானையான் 1
கண்ணுறு கவரியின் கற்றை சுற்றுற
வெண்ணுறு சூழ்ச்சியி னிருக்கை யெய்தினன். 2

---

* திருக்குறள், செ - கக.

(இ - ள்) பண்ணுறு படர் சினம் பருமம் யானையான் - படர்ந்த சினத்தையுடைய அலங்கரித்த மேற்றவிசினையுடைய யானைச்சேனையையுடைய் தயரதன், மண்ணுறு முரசினம் மழையி னார்ப்புற - மார்ச்சனை பூசிய முரசின் கூட்டம் மேகம்போ லாரவாரிக்கவும், கண்ணுறு கவரியின் கற்றை சுற்றுற - மூங்கிலிற் றொடுத்த சாமரையின்றொகுதி சூழ்ந்திரட்டவும், எண்ணுறு சூழ்ச்சியி னிருக்கையெய்தினன் - எண்ணத்தக்க அத்தாணி மண்டபத்தை யடைந்தனன்—எ-று.

யானையான் ஆர்ப்புறச் சுற்றுறவெய்தினனென வினைமுடிக்க. மண் - மார்ச்சனை. கண் - மூங்கில்; ஆகுபெயர். சூழ்ச்சியினிருக்கை ஆலோசனை செய்யுமிடம், அது அத்தாணிமண்டபம். சாமரை மூங்கிலிற்றொடுக்கப்பட்டதாகலின் ஒருபுறத்து அரசன் வரவே இரட்டலான் 'கண்ணுறுகவரியின் கற்றைசுற்றுற' என்றும், முரசின் கூட்டமு மொருபுறத்து முழக்கலின் அது மேகமுழக்கத்தை யடக்கலான் 'மண்ணுறு முரசினமழையினார்ப்புற' என்றும், சூழ்ச்சியினிருக்கையி லெண்ணுதலியல்பாகலான் 'எண்ணுறுசூழ்ச்சியினிருக்கையெய்தினன்' என்றும், அவன் யானையையுடைய படையுடையானென்பது தோன்றப் 'பண்ணுறுபருமயானையான்' என்றும், அது தன்னிழலைச் சுளித்தலியல்பாதலாற் 'படர்சினம்' என்றடைகொடுத்துங்கூறினார். பருமம்-யானை மேற்றவிசு. மழையினென்புழி இன் உருபு ஐந்தாவதன் உவமப்பொருளது. முரசு - ஒருவகைவாச்சியவிசேடம். * "கடுஞ்சினங்கடிந்தகாட்சியர்" என்புழிச்சினமென்பது கோபத்தின் பின்னாகச் சிறிதுபொழுது நிற்பதென நச்சினார்க்கினியர் கூறலானறிக. (௩)

புக்கபி னிருபரும் பொருவில் சுற்றமும்
பக்கமும் பெயர்கெனப் பலவும் பன்னினன்
ஒக்கநின் றுலகளித் தியோகி னெய்திய
சக்கரத் தவனெனத் தமிய னாயினன். 4

(இ - ள்.) புக்கபின்-இவ்வாறு செல்ல, நிருபரும் பொருவில் சுற்றமும் பக்கமும்பெயர்கவென-அரசரும் ஒப்பற்றசுற்றத்தவரும் பக்கத்தாரும் அவ்விடத்தினின்றும் புறம்பேபோகவென, பலவும் பன்னினன்-பலவற்றையுங்கூறி, ஒக்கநின்று - அந்தரியாமியாய் நின்று, உலகளித்து யோகி னெய்திய சக்கரத்தவனென - உலகத்தைக்காத்து அறிதுயிலமர்ந்த ஆழிப்படையை யுடைய இறைவனென்று கூற, தமியனாயினன் - தனித்திருந்தனன்.—எ-று.

இறைவனந்தரியாமியாய் நிற்றல்போன்று குடிகளெய்திய குறை தன்னதே யாகக்கொண்டிருத்தலின், 'ஒக்கநின்று' என்றும், காத்தற்றொழின் மேற்கொண்டிருத்தல்போலத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், பகைவராலும், கள்வராலும், பிறவுயிர்களாலும் குடிகளடைகின்ற துயர்கெடுத்தாண்டு வருதலால், 'உலகளித்து' என்றும், தனித்தாராய்ச்சிசெய்யத் துணிந்தமை

* திருமுருகாற்றுப்படை, வரி-கூகூ.

யாலும் ஆக்கினைசக்கரமுடைமையாலும் 'யோகினெய்திய சக்கரத்தவனெனத் தமியனையினன்' என்றுங் கூறினார். 'சக்கரத்தவன்' என்றார்-மன்னவனைத் திருமாலோடொப்பக்கூறலின். இதனைத் § "திருவுடைமன்னரைக்காணிற் திருமாலைக்கண்டேனேயென்னும்" எனப் பெரியாரும் பணித்தமையானறிக. இது தொழிலுவமம். பக்கமுஞ் சுற்றமுமென்பன ஆகுபெயர்கள். புக்கபின்-வினையெச்சம். யோகமென்றது யோகென நின்றது. நாகணையானென்புழிப் போல. சக்கரமென்றது சுதரிசனப்படையை. (௨)

சந்திரற் குவமைசெய் தரளவெண்குடை
அந்தரத் தளவுநின் றளிக்கு மாணையான் 5
இந்திரற் கிமையவர் குருவை யேய்ந்ததன்
மந்திரக் கிழவரை வருகென் றேவினான். 6

(இ - ள்.) சந்திரற்கு உவமைசெய் தரள வெண்குடை-சந்திரனோடொப்பக் கூறுகின்ற முத்தினாற் செய்யப்பட்ட வெண்கொற்றக் குடைநிழற்ற, அந்தரத்தளவு நின்றளிக்கு மாணையான் - விண்ணுலகமளவுஞ்சென்று காக்கும் ஆக்கினைசக்கரமுடையான், இந்திரற்கு இமையவர் குருவை யேய்ந்த - இந்திரனுக்குத் தேவகுருவை யொத்த, தன் மந்திரக்கிழவரை வருகவென்றேவினன் - தன் மந்திரிமார்களை வருகவென்று கட்டளையிட்டனன்:—எ-று.

சம்பரனைத்தடிந்து இந்திரனுக்கு வானுலகளித்த கொடைச்சிறப்புத்தோன்றத் 'தரளவெண்குடை அந்தரத்தளவுநின்றளிக்குமாணையான்' என்றும், தன் மந்திரிமாரறிவாற் றேவகுருவையொப்பவராகலின் 'இந்திரற்கிமையவர் குருவையேய்ந்த தன் மந்திரக்கிழவர்' என்றுங்கூறினார். வருகவென்ற தீறு தொகுக்கப்பட்டது. ஆணை-பாகதச்சிதைவு; இதனைச் * "சிதைந்தனவரினு மியைந்தனவரையார்" என்னுஞ் சூத்திரத்திற்கோதிய வுதாரணங்களானறிக. இந்திரற்கேய்ந்தவென்றொட்டுக. முத்தவெண்குடைக்குஞ் சந்திரனுக்கும் வேறுபாடு தோன்றாமையினன்றே 'சந்திரற்குவமை செய்தரளவெண்குடை' என்றதென்க. இது விபரீதவுவமை. மண்ணுலக முழுதுமேயன்றியெனப் பொருள்படலான் உம்மை இறந்ததுதழீஇயது. மந்திரக்கிழவராவார் புரோகிதரு மமைச்சருமென்க. (௩)

பூவரு பொலன்கழற் பொருவின் மன்னவன்
காவலி னாணையங் கடவு ளாமெனத்
தேவரு முனிவரு முணருந் தேவர்கள்
மூவரி னல்வனு முனிவந் தெய்தினன், 7

(இ - ள்.) பூவரு பொலன் கழல் பொருவில் மன்னவன் காவலின் - அழகிய பொன்னாற்செய்த வீரகண்டையையணிந்த ஒப்பில்லாத அரசன் காவ

§ திருவாய்மொழி, ௩-ம் பத்து-௪-அ.
* தொல்காப்பியம், சொல் - கூ - ௬௭௨.

லின்கண், ஆணையங்கடவுளாமென-ஆக்கினைசக்கரத்ததி தெய்வமென்று கூற, தேவரு முனிவரு மூணருந் தேவர்கள் மூவரின்-தேவராலும் முற்றத்துறந்த முனிவராலும் தியானிக்கப்படு மும்மைப்பெருந்தேவரில், நால்வனு முனிவந் தெய்தினன் - நான்காவதாகக்கொண் டெண்ணப்படுகின்ற வசிட்டமுனிவன் வந்தடைந்தனன்.—எ-று.

பூ - அழகு, பொன் என்றது பொலனெனத் திரிந்தமை ¶ "பொன் னென்கிளவி" என்னுஞ் சூத்திரத்தானமைக்க. மும்மைப் பெருந்தேவரென் றது உபேந்திரன், பிரமன், உருத்திரனெனப்படுவோரை; அவரோடொப்பக் கருதப்படுவானுகலின் 'நால்வனுமுனிவந்தெய்தினன்' என்றார். 1 யானையான் 2 எய்தி, 3 பன்னி, 4 தமியனாய், 5 ஆணையானாகி, 6 ஏவ, 7 முனி வந் தெய்தினனென வினைமுடிக்க. மூவரினென்னு மேழாவது பிரித்துக்கூட் டற்கண் வந்தது. புரோகிதரை முற்கூறினர் அவர் மும்மைப் பெருந்தேவ ரோடொப்பவராகலான். (ச)

குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினர் 1
நலமுத னலியினு நடுவு நோக்குவார் 2
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினர். 3

(இ - ள்.) குலமுதல் தொன்மையும் - பழங்குடிப்பிறப்பும், கலையின் குப்பையும் - கலைகளுணர்ச்சியும், பலமுதல் கேள்வியும் - பல முதன்மையா கிய கேள்விகளும், பயனு மெய்தினர்-பயனையுமடைந்தவர், நலமுதல் நலியி னும் - தமக்கு வருநன்மையே கெடுவதாயினும், நடுவு நோக்குவார் - நடுநிலை மையே நோக்குகின்றவர், சலமுதல் அறுத்து அருதருமம் தாங்கினர்-கோபத் தைவேருடன் களைந்து அருமையாகிய தருமத்தை மேற்கொண்டவர்.

தாமே இயல்பாகவுடையராந் தன்மையராய் அமைச்சு பூணற்குரிய குடி யிற் பிறந்தவராக வேண்டுதலின், 'குலமுதற்றொன்மையும்' என்றும், நீதி நூல் முதலியன தேர்ந்தவராக வேண்டுதலின், 'கலையின்குப்பையும்' என் றும், நூலாருள் நூல்வல்லவராக விருக்கவென்பார், 'பலமுதற்கேள்வியும்' என் றும், அமைச்சியல் அறிந்தவராகலின், 'பயனுமெய்தினர்' என்றும், தமக்கு மிக்க பெருஞ்செல்வமெய்தினும் அதனைநோக்காது நடுவுநிலைமையையே நாட லின், 'நலமுதனலியினு நடுவுநோக்குவார்' என்றும், அரசன் தம்மைக்கோபித் தவழியு மதனை நோக்காது தருமத்தையே நாடவேண்டலான் 'சலமுதலறுத் தருந் தருமந்தாங்கினர்' என்றுங் கூறினர். (ரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார் 1
மற்றது வினையின் வந்த தாயினு மாற்ற லாற்றும்

¶ தொல்காப்பியம், எழுத்து - சூ - ருருசு.

பெற்றியர் 5 பிறப்பின் மேன்மைப் பெரியவ 6 ரரிய நூலுங்
கற்றவர் 7 மான நோக்கிற் கவரிமா வனைய நீரார். 8

(இ - ள்.) உற்றது கொண்டு - நேர்ந்ததுகொண்டு, மேல்வந்துறு பொருள் - மேல்வந்தடையுங் கருமம், உணருங் கோளார் - அறியுங் கொள்கையுடையார், அது வினையின் வந்ததாயினும் - அது பழவினையால் வந்தடைந்ததாயினும், மாற்றலாற்றும் பெற்றியர் - மாற்றுதல் செய்யவல்ல தன்மையர்; பிறப்பின் மேன்மைப் பெரியவர்-பிறப்பினாற் சிறப்படைந்த பெருந்தகைமையுடையவர், அரிய நூலுங் கற்றவர் - அரிதாகிய அமைச்சியலை நன்கு தேர்ந்தவர், மான நோக்கின் - மானத்தை நோக்கின், கவரிமா வனைய நீரார் - கவரிமாவையொத்த தன்மையை யுடையவர்.

கண்டதொன்றனைக்கொண்டு இனிவருவதறியு மியல்பினராகலின் 'உற்றதுகொண்டு மேல்வந்துறு பொருளுணருங்கோளார்' என்றதென்க. இதனை * "மதிநுட்ப நூலோடுடையார்க்கதிநுட்பம் - யாவுளமுன்னிற்பவை" என்றதனாற்காண்க. ஊழையு முப்பக்கங்காணும் பெற்றியராகலின், 'வினையின் வந்ததாயினுமாற்றலாற்றும் பெற்றியர்' என்றும், கவரிமாமயிர்நீப்பின் வாழாமைபோல மானக்கேடுவந்துழித், தாமுயிர்வாழாமையான் 'மானநோக்கிற் கவரிமாவனையநீரார்' என்றுங்கூறினார். இதனை || "மயிர்நீப்பின் வாழாக்கவரிமாவன்னா - உயிர்நீப்பர்மானம்வரின்" என்றதனாலுணர்க. மற்று அசைநிலை. உம்மை இறந்ததுதழீஇயது. (௬)

காலமு மிடனு மேற்ற கருவியுந் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுணித்தறங் குணித்த மேலோர் 9
சீலமும் புகழ்க்கு வேண்டுஞ் செய்கையுந் தெரிந்து கொண்டு
பால்வரு முறுதி யாவுந் தலைவற்கே பயக்கு நீரார். 10

(இ - ள்.) காலமும் இடனும் ஏற்ற கருவியும் தெரியகற்ற நூல் உற நோக்கி - வினைசெய்யுமிடத்துக் காலமும் இடனும் தக்க கருவியும் தாம் தெரியக் கற்ற நூலினைப் பொருந்தநோக்கி, தெய்வநுணித்தறங்குணித்த மேலோர் - தெய்வத்தைக்கருதித் தருமத்தை மதித்த மேலோர், சீலமும் புகழ்க்கு வேண்டுஞ் செய்கையுந் தெரிந்துகொண்டு - ஒழுக்கமும் புகழ்பெறுதற்கு வேண்டுஞ் செய்கையு மறிந்துகொண்டு, பால்வரு முறுதியாவும் - அதன்பாலதாகிக்கிடைக்கும் பயனெல்லாம், தலைவற்கே பயக்கு நீரார்-தம்மரசனுக்கே யடைவிக்குந் தன்மையையுடையவர்.

காலம் தமக்காங்காலமும், அவர்க்காங்காலமும்; இடன் தாம் வெல்லுமிடனும், அவர் வெல்லுமிடனும்; கருவி தமது தானையும், அவர் தானையும்; செய்கை தாம் வல்லசெய்கையும், அவர் வல்ல செய்கையுமாம். (எ)

---

* திருக்குறள், செ - ௬௩௬.
|| ஷை செ - ௯௬௯.

தம்முயிர்க் குறுதி யெண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர் 11
செம்மையிற் றிறம்பல் செல்லாத் தேற்றத்தார் 12 தெரியுங் காலம்
மும்மையு முணர வல்லா 13 ரொருமையே மொழியு நீரார். 14

(இ - ள்.) தம் உயிர்க்கு உறுதி எண்ணார் - தம்முயிருக்கு நன்மையை நினையாமல், தலைமகன் வெகுண்டபோதும்-அரசன் தம்மைக் கோபிக்கினும், வெம்மையைத்தாங்கி - அவனதுகோபத்தைப் பொறுத்து, நீதிவிடாது - நீதியைக் கைவிடாமல், நின்று உரைக்கும் வீரர்-எதிர்நின்று கூறும் வீரத்தன்மையுடையவர், செம்மையின் திறம்பல் செல்லாத்தேற்றத்தார் - நடுவுநிலைமையினின்றுமாறுதல் செல்லாத தெளிவினையுடையவர், தெரியும் காலம்மும்மையும் உணரவல்லார்-தெரிகின்றகால மூன்றனையு மறியவல்லவர், ஒருமையேமொழியும் நீரார்-ஒருமைப்பாடாகவே கூறுந்தன்மையையுடையவர்.—எ-று.

தமக்குவரு மூதியங் கெடுதனோக்காமையால், 'தம்முயிர்க்குறுதி யெண்ணார்' என்றும், அரசன் தம்மை வெகுண்டகாலத்தும் அவன் கோபத்தைப்பொறுத்து அவனுக்கே நீதியை விடாது கூறு மியல்புடையாராகலின், 'தலைமகன் வெகுண்டபோதும் வெம்மையைத் தாங்கி நீதிவிடாது நின்றுரைக்கும் வீரர்' என்றும், எஞ்ஞான்றுந் தாம் நடுவு நிலைமை தவறுதொழுகலான், 'செம்மையிற்றிறம்பல் செல்லாத்தேற்றத்தார்' என்றும், காலமூன்றையு மறிந்துகூறுந் தன்மையான், 'தெரியுங்கால மும்மையு முணரவல்லார்' என்றும், அமைச்சர் பலரேனு மவர் கூறுவனவனைத்து மொரே முடிபாதலின், 'ஒருமையேமொழியு நீரார்' என்றுங்கூறினார். வெம்மையெனக் காரணத்தைக் காரியமாக வுபசரித்தார். எண்ணார் வினையெச்சமுற்று. மும்மை என்றது ஈண்டெண்ணின்கணின்றது; * "இருமைவகைதெரிந்து" என்புழிப்போல. காலமூன்றாவன-இறப்பு நிகழ் வெதிர்வென்பன. ஏகாரம் பிரிநிலை. உம்மை யிரண்டனுள் முன்னது எதிர்மறை, பின்னதுமுற்று. (அ)

கலிவிருத்தம்.

நல்லவுந் தீயவு நாடி நாயகற்
கெல்லையின் மருத்துவ னியல்பி னெண்ணுவார் 15
ஒல்லைவந் துறுவன வுற்ற பெற்றியின்
றொல்லைநல் வினையென வுதவுஞ் சூழ்ச்சியார். 16

(இ-ள்) நல்லவுந் தீயவு நாடி-நல்லனவற்றையுந் தீயனவற்றையு மாராய்ந்துதேடி, நாயகற்கு எல்லையின் மருத்துவனியல்பினெண்ணுவார் - அரசனுக்கு நோய்வந்த எல்லைக்கண் மருத்துவனேயென வெண்ணு மியல்பினையுடையவர், ஒல்லைவந்துறுவன வுற்றபெற்றியின் - விரைவாகவந்து பொருந்

* திருக்குறள், செ - உரு.

துந் தீங்கென்பனவந்து வருந்துந் தன்மையான், தொல்லை நல்வினையென - பழவினையாகிய நல்வினைவந்தெய்தி யுதவுதல்போல, உதவும் சூழ்ச்சியார்-உறுதி செய்யும் ஆலோசனையை யுடையவர்.

உறுதியை உழையிருந்தான் கூறல் கடனாகலின், 'நல்லவுந்தீயவுநாடி' என்றும், மருத்துவன் நோய் நீக்குதல்போல மந்திரி அரசனுக் கிடுக்கணுண்டாகாமை காத்தலியல்பாகலின் 'எல்லையின்மருத்துவனியல்பினெண்ணுவார்' என்றும், நல்வினை யொருவற்குத் தானுற்றுழி யுதவுதல்போல் அமைச்சுமவ்வாறு சூழ்ச்சித்துணைசெய்து நிற்றலின் 'ஒல்லைவந்துறுவன வுற்றபெற்றியின் தொல்லை நல்வினையென வுதவுஞ் சூழ்ச்சியார்' என்றுங்கூறினர். பழவினை தன்னைச் செய்தானைச்சென்று பற்றுதலால் 'ஒல்லை வந்துறுவன வுற்றபெற்றியின்' என்றதென்க; இதனைப் * "பழவினையுமன்னதகைத்தே தாஞ்செய்த - கிழவினை நாடிக்கொளற்கு" என்றதனாலறிக. இவ்வாறுபாட்டானும் அமைச்சிலக்கண முணர்த்தியவாறு. (கூ)

அறுபதி னாயிர ரென்னு மாண்டகைக்
குறுதியி லொன்றிவற் குணர்வென் றுன்னலர்ம்
பெறலருஞ் சூழ்ச்சியர் 17 திருவின் பெட்பினர் 18
மறிதிரைக் கடலென வந்து சுற்றினர். 19

(இ - ள்.) அறுபதினாயிரரென்னும் - அறுபதினாயிரவரெனப்படும், ஆண்டகைக்கு - ஆண்டன்மையுடைய அரசனுக்கு, உறுதியிலொன்றிவற்குணர்வென்றுன்னலாம் பெறலரும் சூழ்ச்சியர் - நன்மையிற்பொருந்திய இவனுக்கறிவென்றேயெண்ணலாகும் பெறுதற்கரிய ஆலோசனையையுடையவர், திருவின் பெட்பினர் - செல்வத்திற் சிறந்தவர், மறிதிரை கடலென - சுருட்டப்படுகின்ற அலையையுடைய கடலேபோல, வந்து சுற்றினர் - வந்து சூழ்ந்தனர்.—எ-று.

1 எய்தினர், 2 நோக்குவார், 3 தாங்கினர், 4 கோளார், 5 பெற்றியர், 6 பெரியவர், 7 கற்றவர், 8 நீரார், 9 மேலோர், 10 நீரார், 11 வீரர், 12 தேற்றத்தார், 13. வல்லார் 14. நீரார் 15 எண்ணுவார், 16 சூழ்ச்சியார், 17 சூழ்ச்சியர், 18 பெட்பினர் 19 வந்து சுற்றினரென வினைமுடிக்க. உலகுக்குறுதியை நாடுதலிறைவனுக்கியல்பாகலின்,'உறுதியிலொன்றிவற்கு' என்றும், உறுதியை நாடுவதற்கறிவுசாதனமாதலின் அவனுக்கறிவுணர்த்துவாரை,'உணர்வென்றுன்னலாம்பெறலருஞ் சூழ்ச்சியர்' என்றும், அவனோடொப்பச் செல்வமும் பெற்றுடையாராகலின், 'திருவின் பெட்பினர்' என்றும், அவர் அறுபதினாயிரவராகலின் 'கடலெனவந்து சுற்றினர்' என்றுங் கூறினர். ஆண்டகை-அன்மொழித்தொகை. (ய)

முறைமையி னெய்தினர் முந்தி யந்தமில்
அறிவனை வணங்கித்தம் மரசைக் கைதொழு

* நாலடியார், செ - ௱௧.

திறையிடை வரன்முறை யேறி யேற்றசொல்
துறையறி பெருமையா னருளுஞ் சூடினர்.

(இ - ள்.) முறைமையின் எய்தினர் - முறையானடைந்து, முந்தி அந்தமில் அறிவனை வணங்கி - முற்பட்டு அளவிடப்படாத அறிவினையுடைய வசிட்டமுனிவனை வணங்கி, தம்மரசைக் கைதொழுது-தமது வேந்தனைக் கையாலிறைஞ்சி, இறையிடை வரன்முறை ஏறி - அவனருகே வரலாற்று முறையாக ஆதனத்தேறியிருந்து, ஏற்ற சொல் துறை அறி பெருமையான் அருளுஞ் சூடினர் - ஏற்ற சொல்லின் வகையினையறிந்த பெருமையையுடைய அவனருளையு மேற்றனர்.—எ-று.

அரசு - இறை என்பன சொல்லாலஃறிணை; எய்தினர் - வினையெச்சமுற்று. இன்னோரன்னவர் இன்னவாறு வந்தடைதன் முறைமை யாகலான் 'முறைமையினெய்தினர்' என்றும், அரசனோடு வசிட்டமுனிவரையு முறையே வணங்கவேண்டுமாகலின் 'அந்தமிலறிவனை வணங்கித் தம்மரசைக் கைதொழுது' என்றும், பின்னர் ஆதனத்திருத்தலினு முறைமை வேண்டுதலான் 'வரன்முறையேறி' என்றும், அரசனருளையும் பெற்றமையான் 'ஏற்றசொற்றுறையறி பெருமையா னருளுஞ் சூடினர்' என்றுங்கூறினர். (கக)

1. அன்னவ ரருளமைந் திருந்த வாண்டையின்
மன்னனு மவர்முக மரபி னோக்கினன்
உன்னிய தரும்பெற லுறுதி யொன்றுள
தென்னுணர் வனையநீ ரினிது கேட்கென.

(இ-ள்.) அன்னவர் அருள்அமைந்து இருந்த ஆண்டையின்-அவர் அருள் அமைந்திருந்த பொழுதில், மன்னனும்-அரசனும், அவர் முகம் மரபின்நோக்கினன்-அவருடையமுகங்களை முறையேநோக்கி, அரும்பெறல் உறுதி ஒன்று உன்னியது உளது-பெறுதற்கருமையாகிய உறுதியொன்றென்னா லெண்ணப்பட்டதுண்டு, என் உணர்வு அனைய நீர்-என்னறிவையொத்த நீவிர், இனிது கேட்க என - அதனை இனிமையாகக் கேட்கவென்று.

உம்மை உயர்வுசிறப்பு. சிந்தையுமொழியுஞ் செல்லா நிலைமைத்தாய அந்தமிலின்பத்தழிவில் வீடுபெறுதற்குச் சாதனம் துறவற நெறியேயாகலான் அதனைப் பெறவெண்ணி யுசாவல்பற்றி 'உன்னியதரும்பெறலுறுதியொன்றுளது' என்றார். இதுகுளகம். * "குளகம்பலபாட்டொரு வினைகொள்ளும்" என்பதோத்தாகலின். (கஉ)

2. வெய்யவன் குலமுதல் வேந்தர் மேலவர்
செய்கையி னொருமுறை திறம்ப லின்றியே

* தண்டியலங்காரம், சூ - ச.

வையம்யா னாண்டவாண் டுங்கண் மாட்சியால்
ஐயமி லறுபதி னாயி ரம்மரோ.

(இ - ள்.) வெய்யவன் குலமுதல் வேந்தர் - சூரியவமிசத்திற்பிறந்த அரசரில், மேலவர் செய்கையில்-என் மூதாதைகள் செய்கையின்கண், ஒருமுறை திறம்பலின்றி - ஒருசார் மாறுபடாது, உங்கள் மாட்சியால் - உங்கள் பெருமையான், யான் வையம் ஆண்ட ஆண்டு - யானுலகையாண்ட வாண்டுகள், அறுபதினாயிரம்-அறுபதினாயிரமாண்டுகளாயின, ஐயமில்-இதற்கு ஐயமில்லை.

எனைத்துணையாற்றலுடையானேனும் சூழ்ச்சித்துணைவர் சொற்கேளாதொழியின் அரசாளுதன் முடிவு கூடாமையான் 'உங்கண்மாட்சியால்' என்றும், இதுவே யார்க்குஞ் சம்மதமென்பான் 'ஐயமில்' என்றுங்கூறினார். அரோ அசை.'வெய்யவன் குலமுதல்வேந்தர்'என்றது மனுமுதனிருபரை. (கூ)

3. கன்னியர்க் கமைவருங் கற்பின் மாநிலந்
தன்னையித் தகைதரத் தருமங் கைதர
மன்னுயிர்க் குறுவதே செய்து வைகினேன்
என்னுயிர்க் குறுவதுஞ் செய்ய வெண்ணினேன்

(இ-ள்.) கன்னியர்க்கு அமைவுஅரும் கற்பின் மாநிலம் தன்னை இத்தகைதர - மாதர்கட்கமைந்த கற்பினையுடைய பெரிய வுலகை இத்தன்மையாகத்தர, தருமம் கைதர-தருமங் கைகொடுக்க, மன் உயிர்க்கு உறுவதே செய்து வைகினேன் - நிலைபெற்ற உயிர்கட்கு நலத்தையேசெய்துவாழ்ந்த யான், என் உயிர்க்குஉறுவதும் செய்ய எண்ணினேன்-என்னுயிர்க்கு நன்மையுஞ்செய்யக் கருதினேன்.

பொதுக்கடிந் தரசாண்டு வருதலான் 'கன்னியர்க்கமைவருங் கற்பின் மாநிலம், என்றதென்க. உம்மை இறந்ததுதழீஇயது. உயிர் நித்தியமாதலின் 'மன்னுயிர்' என்றார். (கச)

4. விரும்பிய மூப்பெனும் வீடு கண்டயான்
இரும்பிய லனந்தனு மிசைந்த யானையும்
பெரும்பெயர்க் கிரிகளும் பெயரத் தாங்கிய
அரும்பொறை யினிச்சிறி தாற்ற வாற்றலேன்.

(இ - ள்.) விரும்பிய - தவம் விரும்ப, மூப்புஎன்னும் வீடு கண்டயான்- மூப்பென்று சிறப்பித்துக்கூறும் வீட்டினைக்கண்ட யான், இரும்புஇயல் அனந்தனும் - பெரும் பிடரின்கண் அனந்தனென்னு நாகமும், இசைந்த யானையும் - தாங்க இசைந்த திசையானைகளும், பெரு பெயர் கிரிகளும் - பெரிய குலகிரிகளும், பெயர-வருந்த, தாங்கிய அரும் பொறை - தாங்கிய அருமையாகிய பூபாரத்தை, இனி சிறிது ஆற்ற-இனிச் சிறிதும் பொறுக்க, ஆற்றலேன்- பொறேன்.

உலகைத் தாங்குவதற்குச் சமைந்தமையான் திசையானைகளை 'இசைந் தயானையும்' என்றார்; அவை ஐராவதமுதலியன. பெரும்பெயர்க்கிரிகளென்றது - ஏமகூடமுதலியனவாய குலகிரிகளை. விரும்ப என்னும் செயவென்னெச்சம் திரிந்து நின்றது. இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. (கரு)

5. நங்குலக் குரவர்க ணவையி னீங்கினார்
தங்குலப் புதல்வரே தரணி தாங்கப்போய்
வெங்குலப் புலன்கெட வீடு நண்ணினார்
எங்குலப் புறுவரென் றெண்ணி நோக்குகேன்.

(இ - ள்.) நம்குலம் குரவர்கள் - நமது மரபிற்றோன்றிய மூதாதைகள், நவையின் நீங்கினார் - குற்றத்தினின்று நீங்கி, தங்குலம் புதல்வரே - தமது சிறந்த மக்களே, தரணி தாங்க போய்-அரசபாரம் பொறுத்துச்சென்று, வெம்குலம் புலன்கெட -வெம்மையாகிய புலனைந்துங் கெட்டொழிய, வீடு நண்ணினார்-வீடு பேறடைந்தனர், எங்கு உலப்பு உறுவர் என்று எண்ணி நோக்குகேன் - எங்கு முடிவெய்துவரென் றெண்ணி யாராய்வேன்.

மனு முதலிய நிருபரை மூதாதையாக வுடைமையான் 'நங்குலக் குரவர்கள்' என்றும், அவர் பெரும்புகழ் நிறுத்துப் படியை யாண்டமையான் 'நவையினீங்கினார்' என்றும், அவர் தம்முதற்குமரனை மணிமுடி சூட்டிக்காடு போந்தருந்தவஞ்செய்து வீடுபேறடைந்தமையான் 'தங்குலப்புதல்வரே தரணிதாங்கப்போய் - வெங்குலப்புலன்கெட வீடுநண்ணினார்' என்றும், அவரை யளவிடன் முடியமாட்டாமையான் 'எங்குலப்புறுவரென்றெண்ணி நோக்குகேன்' என்றுங் கூறினார். (கசு)

6. வெள்ளநீ ருலகினில் விண்ணி னாகரில்
தள்ளரும் பகையெலாந் தவிர்ந்து நின்றயான்
கள்ளரிற் கரந்துறை காம மாதியாம்
உள்ளுறை பகைஞருக் கொதுங்கி வாழ்வெனோ.

(இ - ள்.) வெள்ளம் நீர் உலகினில் - கடல்சூழ்ந்த நிலவுலகத்தின்கண்ணும், விண்ணில் நாகரில்- விண்ணுலகினும் பாதலத்தினும், தள்ளரும் பகை எல்லாம் - கெடலருமையாகிய பகையெல்லாம், தவிர்ந்து நின்ற யான், நீங்கி நின்றயான், கள்ளரிற் கரந்து உறை - வஞ்சகர்போல மறைந்துறையும், காமம் ஆதியாம் உள் உறை பகைஞருக்கு-காமமுதலாகிய அகப்பகையாக நின்றாருக்கு, ஒதுங்கி வாழ்வெனோ - விலகி வாழ்வேனோ.

இந்திரனுக்கே அவன் பகைதடிந் தவனுக்குரிய வரசை நிறுத்தினோனாகலின் 'வெள்ளநீருலகினில் விண்ணினாகரிற் - றள்ளரும்பகையெலாந் தவிர்ந்துநின்றயான்' என்றும், அது புறப்பகையேயாக வெளிப்படாது அகத்து மறைந்தொழுகும் காமமாதி யறுவகைப் பகைவரையும் வெல்ல வலியிலேனென்பார் 'கள்ளரிற் கரந்துறை காமமாதியா - முள்ளுறை பகைஞருக்

கொதுங்கிவாழ்வெனே' என்றுங்கூறினர். ஓகாரமெதிர்மறை. காமமாதியாம் உள்ளுறை பகைஞரென்றது - காமம், குரோத முதலியவற்றை. (கஎ)

7. பஞ்சிமென் றளிரடிப் பாவைகோல்கொள
வெஞ்சினத் தவுணர்தேர் பத்தும் வென்றுளேற்
கெஞ்சலின் மனமெனு மிழுதை யேறிய
வஞ்சுதேர் வெல்லுமீ தருமை யாவதே.

(இ-ள்.) பஞ்சி மென் தளிர் அடி பாவை கோல் கொள-செம்பஞ்சூட்டிய மென்மையாகிய தளிர்போன்ற பாதங்களையுடைய பாவைபோல்வாளாகிய கைகேசி தேரை நடத்த முட்கோல் கைக்கொள்ள, வெம் சினத்து அவுணர் தேர் பத்தும் வென்றுளேற்கு-கொடுமையாகிய கோபத்தையுடைய அரக்கரது பத்துத்தேரையும் வெற்றி கொண்ட வெனக்கு, எஞ்சலில் மனமெனு மிழுதை ஏறிய-குறைவில்லாத மனமெனப்படு மறிவிலி யேறி நின்ற, அஞ்சுதேர் வெல்லுமீது-இந்திரியங்களாந்தென்னுந் தேரினை வெற்றிகொள்ளு மிது, அருமையாவதே - அருமை யெனப்படுவதே.

வெஞ்சினத்தவுணர் என்றது சம்பரனை யுள்ளிட்டவரக்கரை, அவர்பத்துத் தேரையும் வென்றமையாற் றயரதனென்பபோலும். ஐம்புலனோடு நிகழ்தலால், மனத்தை 'மனமெனுமிழுதையேறிய வஞ்சுதேர், என்றார். புலனைத் தேராக வுருவகஞ்செய்யாமையான் ஏகதேசவுருவகம். பத்துத்தேரையும் வென்ற எனக்கு அஞ்சுதேர் வெல்வதென்ப தருமையன்றென்பதுபட 'மனமெனுமிழுதையேறியவஞ்சுதேர்வெல்லுமீ தருமையாவதே'என்றதென்க.பாவை-ஆகுபெயர். கோல் என்றது தேரைச்செலுத்து முட்கோலை. ஈதெனச் சுட்டு நீண்டது. அஞ்சு-தொகைக்குறிப்பு. (கஅ)

8. ஒட்டிய பகைவர்வந் துருத்த போரிடைப்
பட்டவ ரல்லரேற் பரம ஞானம்போய்த்
தெட்டவ ரல்லரேற் செல்வ மீண்டென
விட்டவ ரல்லரேல் யாவர் வீடுளார்.

(இ-ள்.) ஒட்டிய பகைவர் வந்து உருத்த போரிடை பட்டவர் - நின்னைக்கொன்றே என்பகை தணிப்பேனென்று வஞ்சினஞ்செய்து நெருங்கிய பகைவராவார் ஒருவரோடொருவர் கிட்டிச் சினந்து பொருகின்ற போர்க்களத்து விழுப்புண்பட்டிறந்தவர், அல்லரேல் பரமஞானம் போய்தெட்டவர்-அல்லாதாராயின் மெய்யுணர்ச்சி சிறந்து தெளிந்தவர், அல்லரேல் செல்வ மீண்டென விட்டவர்-அல்லாதாராயின் செல்வத்தை நிலையாமை கண்டுதுறந்தவர், அல்லரேல் யாவர் வீடுளார்-அல்லாதாராயின் வீடுபேறடைவார்யாவர்.

பகையானெருங்கிப் போர்செய்கின்ற காலத்து ஒருவரோடொருவர் உன்னையானே வெல்வேன் நீ யெனக்கு எனைத்துணையன் என்று வஞ்சினஞ் செய்துகொண்டு பொருதலியல்பாதலின் 'ஒட்டியபகைவர்வந் துருத்தபோரி

டை' என்றும், அவர் விழுப்புண்பட்டே யிறந்து துறக்கம் புகுதலின் 'பட்டவர்' என்றும், மெய்யுணர்ச்சி யுடையார்வீடெய்தலொருதலையாகலின், 'பரமஞானம்போய்த் தெட்டவர்' என்றும், உலக நிலையாமை கண்டு துறந்தாரு மன்னராதலின் 'செல்வமீண்டெனவிட்டவர்' என்றும், இவரையன்றி வீடெய்துவாரில்லையாகலின் 'அல்லரேல்யாவர் வீடுளார்' என்றுங் கூறினர். (கக)

9. இறப்பெனு மெய்ம்மையை யிம்மை யாவர்க்கு
மறப்பெனு மதனின்மேற் கேடு மற்றுண்டோ
துறப்பெனுந் தெப்பமே துணைசெ யாவிடிற்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ.

(இ-ள்) இம்மை யாவர்க்கும் இறப்பெனு மெய்ம்மையை மறம்பெனும் அதனின் மேல் கேடு மற்றுண்டோ - இம்மையிலே யார்க்கும் இறப்பெனு மெய்ம்மையை மறப்பதினும் கேடு வேறுண்டோ, துறப்டெனுந் தெப்டமே துணைசெயாவிடின் - துறவறவொழுக்கமெனப்படுந் தெப்பமே துணைசெய்யாதாயின், பிறப்பு எனும் பெரும்கடல் பிழைக்கலாகுமோ - பிறப்பென்னும் பெரிய கடலை யொருவன் கடக்க முடியுமோ.

சாதலியற்கையாதலான் 'இறப்பெனு மெய்ம்மை'என்றும், அதனை மறத்தலினும்கேடு பிறிதில்லையாதலான்' இம்மைமறப்பெனுமதனின் யாவர்க்குங் கேடுமற்றுண்டோ' என்றுங் கூறினர். பிறவியைப் பெருங்கடலாக வுருவகஞ் செய்ததற்கேற்ப, அதனைக் கடப்பத்துறவினைத்தெப்பமாகியதுணையென வுருவகஞ் செய்யப்பட்டது. பிறவியைப்பெருங்கடலென்றது காரணகாரியத்தொடர்ச்சியாய்க் கரையின்றிவருதலின்; இதனைப் * "பிறவிப்பெருங்கடனீந்துவர்" என்பதனு மதற்குப் பரிமேலழகர் உரையானுமுணர்க. ஒகாரமெதிர்மறை. (உ0)

10. அருஞ்சிறப் பமைவருந் துறவு மவ்வழித்
தெரிஞ்சுற வெனமிகுந் தெளிவு மாய்வரும்
பெருஞ்சிற குளவெனிற் பிறவி யென்னுமிவ்
விருஞ்சிறை கடத்தலி னினிய தியாவதே.

(இ-ள்.) அருசிறப்பு அமைவுஅரும் துறவும்-வீடுபேறமைவிக்குந்துறவறவொழுக்கமும், அவ்வழி தெரிஞ்சு உறவென மிகும் தெளிவுமாய் வரும்பெருசிறகு உள வெனின்-அத்துறவறவொழுக்கந் தெரிந்தினமாய் மிகுகின்ற மெய்யுணர்ச்சியுமாய்வருகின்ற பெரிய சிறகுகளுள்ளனவெனின், பிறவி என்னுமிவ்விருஞ்சிறை கடத்தலின் இனியது யாவது - பிறப்டென்னு மிப்பெருங்கடலைக் கடத்தலி னினியதுயாது.

எல்லாப்பேற்றினும் வீடுபேறு சிறந்தமையான் 'அருஞ்சிறப்பு' என்றதெண்க. † "சிறப்பீனுஞ்செல்வமுமீனும்" என்பதற்குப் பரிமேலழகரு மிவ்வாறே

* திருக்குறள் - செ - ய. † திருக்குறள் - செ - கூக.

யுரைப்பர். துறவொடு மெய்யுணர்ச்சியு மில்லாதவழிப் பிறவியைக்கடத்தல் கூடாமையின் அவறைச் சிறைகளாகவும், எவ்வகையாற்ற லுடையராகப்பெறற்கரிதாகியபிறவியைச் சிறையாகவு முருவகஞ்செய்தார். பிறவியைக் கடக்கினு மதுபோற் பிறிதோரின்ப மின்மையான் 'இனியதியாவதே' என்றதென்க. யாதுஎன்றது மரீஇயது. (௨௧)

11. இனியது போலுமிவ் வரசை யெண்ணுமோ
துனிவரு நலனெனத் தொடர்ந்து தோற்கலா
நனிவரும் பெரும்பகை நவையி னீங்கியத்
தனியர சாட்சியிற் றாழு முள்ளமே.

(இ-ள்.) துனிவரு நலன்என தொடர்ந்து - துன்பந்தருஞ்செல்வமென த்தொடர்ந்து, தோற்கலா நனி வரும் பெரும்பகை நவையின் நீங்கி-தோல்வி யடையாமல் மிக வரும் பெரும்பகைமையாகிய குற்றத்தினீங்கி, அத்தனியர சாட்சியில் தாழும் உள்ளம் - அவ்வொப்பில்லாத வீடுபேறாகிய அரசாட்சியில் தாழாநிற்கு நெஞ்சம், இவ்வரசை இனியதுபோலும் எண்ணுமோ - இவ்வர சாட்சியினை இனியதுபோலு மெண்ணி நிற்குமோ.

சிந்தையுமொழியுஞ் செல்லாநிலைமைத்தாய அந்தமிலின்பமாகிய நிரதிசய வின்பம் பயக்கும் வீடுபேற்றினும் சிறந்ததின்மையா னதனையே விரும்பிநிற்பதென்பார் 'அத்தனியரசாட்சியிற்றாழுமுள்ளம்' என்றும், அதற்கிச் செல்வத்தினை விழைவது பெருந்துன்ப மெய்துவித்தலின் 'துனிவரு நலனெனத் தொடர்ந்துதோற்கலா-நனிவரும் பெரும்பகை' என்றும், அது நீங்கினன்றி யெய்தப்பெறாமையின் 'நவையினீங்கி' என்றும், இவ்வரசை நாடமாட்டாமையின் 'இனியதுபோலுமிவ் வரசை யெண்ணுமோ' என்றுங் கூறினர். (௨௨)

12. உம்மையா னுடைமையி னுலகம் யாவையுஞ்
செம்மையி னோம்பிநல் லறமுஞ் செய்தனன்
இம்மையி னுதவிநல் லிசைந டாயநீர்
அம்மையு முதவுதற் கமைய வேண்டுமால்.

(இ - ள்.) உம்மையான்உடைமையின்-உம்மையான் துணையாகப் பெற்றுடைமையான், உலகம் யாவையும் - எல்லாவுலகங்களையும், செம்மையின் ஓம்பி - நடுவு நிலைமையிற்காத்து, நல்அறமும் செய்தனன்-நல்ல தருமங்களையுஞ்செய்து முடித்தேன், இம்மையின் உதவி -இவ்வுலகத்தில் துணைசெய்து, நல்லிசை நடாய நீர் - நல்ல புகழையு நடாத்திய நீவிர், அம்மையும்உதவுதற்கு அமையவேண்டும் - மறுமையு மளிப்பதற்குப் பொருந்தவேண்டும்.

அரசன் புகழினை யெய்துவதற் கமைச்சனே காரணமாதலான் 'இம்மையினுதவிநல் லிசைநடாயநீர்' என்றதென்க. அம்மையென்றது துறக்

கம். நடாய என்புழி அகரநீண்டு பிறவினையாயிற்று; * "நடாவியகூற்றம்" எனப் பெரியாரும் பணித்தமை காண்க. வேண்டுமென்பது உம்மீற்று வியங்கோள். (உரு)

13. இழைத்ததீ வினையையுங் கடக்க வெண்ணுதல்
தழைத்தபே ரருளுடைத் தவத்தி னாகுமேற்
குழைத்ததோ ரமுதுடைக் கோர நீக்கிவே
றழைத்ததீ விடத்தினை யருந்த லாகுமோ.

(இ - ள்.) இழைத்த தீவினையையும் கடக்க எண்ணுதல்-தான் வேண்டிச் செய்த தீவினைகளையுங் கடக்க நினைப்பது, தழைத்த பேரருள் உடைய தவத்தின் ஆகுமேல் - நலமெல்லாம் தழைத்த பெருங்கருணையை யிடங்கொண்டதவத்தான்முற்றுப்பெறுவதாயின், குழைத்தது ஓர் அமுதுஉடைய கோரம் நீக்கி-அமைக்கப்பட்ட ஒப்பிலாத அமுதினை வட்டிலினின்றுநீக்கி, வேறு அழைத்த தீவிடத்தினை யருந்தல் ஆகுமோ-வேறாக அழைத்த தீயவிடத்தை யுண்ணலாமோ.

ஆகாமியத்தை இழைத்த தீவினையென்றதென்க. உம்மை நல்வினையைத் தழீஇ நின்றது. $ "தவத்தின் முன்னில்லாதாம் பாவம்" ஆகலின் 'தீவினையையுங் கடக்க வெண்ணுதல் தவத்தினாகும்' என்றும், தவமுடையார்க் கருள் சிறந்ததாகலின் 'பேரருளுடைத்தவம்' என்றுங்கூறினர். கோரம் - வட்டில். (உச)

14. கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுறப்
பிச்சமுங் கவிகையும் பெய்யு மின்னிழல்
நிச்சய மன்றெனி னெடிது நாளுண்ட
வெச்சிலை நுகருவ தின்ப மாகுமோ.

(இ - ள்.) கச்சை அம் கடம் கரி கழுத்தின் கண் உற - கச்சைகட்டிய அழகிய மதச்சுவட்டினையுடைய யானையின் கழுத்திற்பொருந்த, பிச்சமும் கவிகையும் பெய்யும் இன் நிழல் - மயிற்பீலியும் கவிகையும் பெய்த இனிய நீழலே, நிச்சயம் அன்றெனின்-உண்மையன்றெனின், நெடிது நாளுண்ட எச்சிலை நுகருவதின்பமாகுமோ-பலநாள் அனுபவித்த எச்சிலை நுகர்வது இன்பமாமோ.

கச்சை-யானையின் கழுத்திடு கயிறு. அரசச்செல்வத்தின் சிறப்புத்தோன்றக் 'கரிக்கழுத்தின் கண்ணுறப்-பிச்சமுங்கவிகையும் பெய்யுமின்னிழல்' என்றும், தான் பல வாண்டுக ளாண்டுவந்தமையின் 'நெடிதுநாளுண்ட எச்சிலை நுகருவதின்பமாகுமோ' என்றுங்கூறினர். நெடிதுநாள் அனுபவித்தமைநோக்கி, 'நெடிதுநாளுண்ட வெச்சிலை நுகருவ'தென்ற திலக்கணை. (உரு)

* திருவிருத்தம், செ - சு.
$ நாலடியார், செ - ருக.

15. மைந்தரை யின்மையின் வரம்பில் காலமு
நொந்தனெ னிராமனென் னோவை நீக்குவான்
வந்தன னினியவன் வருந்த யான்பிழைத்
துய்ந்தனன் போவதோ ருறுதி யெண்ணினேன்.

(இ - ள்.) மைந்தரை - மக்களை, இன்மையின் - இல்லாமையான், வரம்பில் காலமும் - அளக்கப்படாதகாலமும், நொந்தனென்-வருந்திநின்றேன், என் நோவை - என் துயரத்தை, நீக்குவான் - ஒழிக்க, இராமன், சீராமன், வந்தனன் - அவதரித்தனன், இனி அவன் வருந்த-இனி அவன் அரசபாரம் தாங்கி வருத்தப்பட, யான் பிழைத்து உய்ந்தனன் போவது-யான் தவிர்ந்துய்ந்துபோவதாகிய, ஓர்உறுதி எண்ணினேன்-ஒப்பிலாத உறுதியைக்கருதினேன்.

*“ அறிவறிந்தமக்கட்பேறல்லபிற” என்பவாகலின்,அதுபெற வருந்தினமையான், ‘மைந்தரையின்மையின் வரம்பில்காலமு நொந்தனென்’ என்றும், ‘இராம’னென்ற சொற்கு யாவருக்கு மின்பம் பயப்பிப்பானென்றதனுன் அவன் என்வருத்த நீக்கவே பிறந்தானென்பதுதோன்ற ‘இராமனென்னோவை நீக்குவான் வந்தனன்’ என்றும், அவன் அரசபாரந்தாங்கி யானீறிலின்பந்துய்க்கச் செய்வானென்பார், ‘இனி அவன்வருந்தயான் பிழைத்துய்ந்தனன் போவதோருறுதியெண்ணினேன்’ என்றுங்கூறினர். நீக்குவான் வானீற்றெச்சம். உய்தல் துணிவுபற்றி எதிர்காலத்தை இறந்தகாலமாகக்கூறியது வழுவமைதி; வினை எச்சமுற்று. போவது வினைப்பெயர். (உசு)

16. இறந்திலன் செருக்களத் திராமன் றாதைதான்
அறந்தலை நிரம்பமூப் படைந்த பின்னருந்
துறந்தில னென்பதோர் சொல்லுண் டானபின்
பிறந்தில னென்பதிற் பிறிதுண் டாகுமோ.

(இ-ள்.)செருக்களத்து இராமன்றாதை இறந்திலன்-போர்க்களத்தில் சீராமன்தந்தை செத்திலன், தான் அறம் தலை நிரம்ப மூப்பு அடைந்த பின்னரும் துறந்திலன் என்பது-தான் அறம் மிக முதுமைப்பருவமடைந்த பின்னுந் துறவறவொழுக்க மடைந்திலன் என்பதாகிய, ஓர்சொல் உண்டானபின் - ஒருசொல் நிகழ்ந்தபின்னர், பிறந்திலன் என்பதின் - பிறவாநின்றிலனென்று சொல்லப்படுவதினும், பிறிதுண்டாகுமோ-வேறுண்டாமோ.

வில்லுக்குச்சிறந்தவ னிராமனெனப்படுவதனு னிராமன்றாதை போர்க்களத்திற் பொருதொழியவேண்டும்அவ்வாறின்மையான்‘செருக்களத்திராமன்றாதை இறந்திலன்’என்றும்,எல்லாவறங்களுஞ்செய்து முற்றி மூப்படைந்துந் துறவறவொழுக்கமடையவேண்டும்,அவ்வாறின்மையான்‘அறந்தலைநிரம்பமூப்படைந்தபின்னரும் துறந்திலன்’என்றும்,இவ்விரண்டு நிகழ்ந்தவழி பிறந்ததனாற்பெற்றபயனில்லையாகலான் ‘ஓர்சொல்லுண்டானபின் பிறந்திலனென்பதிற் பிறிதுண்டாகுமோ’ என்றுங்கூறினர். (உஎ)

* திருக்குறள், செ - சுக.

17. பெருமக னென்வயிற் பிறக்கச் சீதையாந்
திருமகண் மணவினை தெரியக் கண்டயான்
அருமக ணிறைகுணத் தவனி மாதெனும்
ஒருமகண் மணமுங்கண் டுவப்ப தாயினேன்.

(இ-ள்.) பெருமகன் என்வயின் பிறக்க-புருடோத்தமனாகிய சீராமன் என்பால் தோன்ற, சீதையாம் திருமகள் மணவினை தெரியக்கண்ட யான்-சனகியாகிய செல்வமகள் மணத்தொழிலைக் கண்களாரக்கண்ட யான், நிறைகுணத்து அருமகள் அவனிமாதெனு மொருமகள் மணமும்-அருமை மகளாகிய நிறைந்த குணத்தையுடைய நிலமகளென்னு மொருபெண்ணினது மணத்தையும், கண்டு உவப்பதாயினேன்-பார்த்து மகிழ விருக்கின்றேன்.

சக்கரவர்த்தி முற்றத்துறந்த முனிவர்பாற் சீராமனைப் புருடோத்தமன் திருவவதாரமென்னக் கேட்டுள்ளானாகலின் 'பெருமகனென்வயிற் பிறக்க' என்றும், அவனுக்கு மலர்மகளும் நிலமகளு மனைவியராகலான் அவருள் மலர் மகளை மணம்புணர்த்தினே னென்பதுதோன்றச் 'சீதையாந்திருமகள் மணவினை தெரியக்கண்ட யான்' என்றும், இனி நிலமகளையும் புணர்த்திக்காண் மகிழ்ச்சியுடையேன் என்பார் 'அவனிமாதெனும்-ஒருமகள்மணமுங்கண்டுவப்பதாயினேன்' என்றும், அவள் பொறையுடையவளென்பதுதோன்ற 'நிறைகுணத்தருமகள்' என்றடைகொடுத்துங் கூறினர். பொறையுடையாள் நிலமகளென்பதனை † "அகழ்வாரைத்தாங்கு நிலம்போல" என்பதனானறிக. ஆயினேனென இறந்தகாலத்தாற் கூறினர், விரைந்து முடிசூட்டவேண்டுமென்பது பற்றி. * "வாராக்காலத்து நிகழுங்காலத்து-மோராங்குவரூஉம் வினைச்சொற் கிளவி-இறந்தகாலத்துக் குறிப்பொடுகிளத்தல்-விரைந்தபொருள வென்மனார் புலவர்" என்பதோத்தாகலின். நிறைகுணத்தருமகளென்றொட்டுக. (உ அ)

18. நிவப்புறு நிலனெனு நிரம்பு நங்கையுஞ்
செவப்புறு மலர்மிசைச் சிறந்த செல்வியும்
உவப்புறு கணவனை யுயிரி னெய்திய
தவப்பயன் றாழ்ப்பது தரும மன்றரோ.

(இ-ள்.) நிவப்புறு நிலனெனு நிரம்புநங்கையும்-உயர்வையடைந்த நிலமெனப்படும் பொறுமை நிரம்புமாதும், செவப்புறு மலர்மிசை சிறந்தசெல்வியும்-செந்தாமரைமலரில் வசிக்கும் சிறந்த செல்வப்பெண்ணும், உவப்புறுகணவனை-மனமகிழ்கின்ற கணவனாகியசீராமனை, உயிரினெய்திய தவப்பயன் - உயிர்போலடைந்த தவத்தின் பயன், தாழ்ப்பது தருமமன்று-தாமதிப்பது அறமன்று.

---

† திருக்குறள், செ - கடுக.

* தொல்காப்பியம், சொல்-கூ-உசக.

† "ஒன்றுந்தேவுமுலகுமுயிருமற்றும்யாதுமில்லா-வன்றுநான்முகன்றன்னொடுதேவருலகோடுயிர்படைத்தான்" எனத் தன்மகனைக் கண்டார் சொல்லக் கேட்டிருப்பவனாகலின் 'நிவப்புறுநிலனெனுநிரம்புநங்கையும்-செவப்புறுமலர்மிசைச்சிறந்தசெல்வியு - முவப்புறுகணவன்' என்றும், அவனைத் தனக்குயிர் போன்ற மகனாகப்பெற்றது முதுதவமாதலின் 'உயிரினெய்திய தவப்பயன்' என்றுங் கூறினர். (௨௯)

19. ஆதலா லிராமனுக் கரசை நல்கியிப்
பேதைமை தாய்வரும் பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேற்
கியாதுநுங் கருத்தென வினைய கூறினன்.

(இ-ள்) ஆதலால் இராமனுக் கரசைநல்கி-ஆகையால் சீராமனுக் கரசையளித்து, இப்பேதைமை தாய்வரும் பிறப்பை நீக்குவான் - இப்பேதைமைக் குணந் தாவிவரும் பிறப்பையொழிக்க, மாதவம் தொடங்கிய - பெருந்தவஞ் செய்ய, வனத்தை நண்ணுவேற்கு-காட்டினையடைய வெண்ணுகின்ற வெனக்கு, யாதுநுங்கருத்து என - உமதுஎண்ணம் யாது என, இனைய கூறினன்-மேற்கூறிய வனைத்துஞ் சொல்லி நிரப்பினன்.—எ-று.

என்னுணர்வனைய நீரினிது கேட்கவெனவெனக் கூறினனென வினைமுடிக்க. பிறப்பிற்கு முதற்காரணம் அவிச்சையாதலால் ஐனை நான்கு குற்றத்தினும் 'பேதைமை தாய்வரும் பிறப்பு' என்றார். ஐனைக்குற்றமாவன:—அகங்காரம், அவா, ஆசை, கோபமென்பன; இவற்றுள் அகங்காரம் அவிச்சையினும், அவா ஆசையினுமடக்கிக் காமம் வெகுளிமயக்கமென மூன்றெண்பது தமிழ் நூலார் வழக்கு. இப்பெற்றிநோக்கியன்றே * "காமம்வெகுளிமயக்கமிவை மூன்ற-னாமங்கெடக்கெடுநோய்" என்றதூஉமென்க; பிறப்பிற்குப் பேதைமை காரணமாகலின். ‡ "பிறப்பென்னும் பேதைமை நீங்க" என்றதூஉமிப்பெற்றி நோக்கி. இப்பத்தொன்பது செய்யுளானு மமைச்சரைவினைய துணர்த்தப்பட்டது. (௩௰)

கலிநிலைத்துறை.

திரண்ட தோளின னிப்படிச் செப்பலுஞ் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய வுவகைய ராங்கே
வெருண்டு மன்னவன் பிரிவெனும் விம்முறு நிலையா
லிரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார்.

(இ-ள்.) திரண்டதோளினன்-திரண்ட புயத்தையுடையதயரதன், இப்படிசெப்பலும்-இவ்வாறு கூறுதலும், சிந்தைபுரண்டு மீதிடப் பொங்கியவுவகையர்-

---

† திருவாய்மொழி, ௪-ம் பத்து - திரு - ௰.
* திருக்குறள், செ - ௩, ௬௰ ‡ ஷை திருக்குறள், செ - ௩௫௮

மனம்புரண்டு மேலிட மிகுந்தமகிழ்ச்சியையுடையாராய், ஆங்கே வெருண்டு-அங்கே பயந்து, மன்னவன்பிரிவெனும்-அரசனது பிரிவெனப்படும், விம்முறு நிலையால்-தேம்புகின்ற நிலைமையான், இரண்டு கன்றினுக்கிரங்குமோராவென வீருந்தார்- இரண்டு கன்றினுக்கிரங்கிய வொருபசுவையொத்திருந்தனர். எ-று

அரக்கரையெல்லாம் வென்ற திறலையுடையவனாகலின் தயரதனைத் 'திரண்டதோளினன்' என்றும், அமைச்சர் சீராமனுக்கரசென்றதனைற் றழைக்குமுள்ளத்தராதலின் 'சிந்தைபுரண்டுமீதிடப் பொங்கியவுவகையர்' எனறும், அரசன்பிரிவான் வருத்த மிகுதிதோன்ற 'மன்னவன் பிரிவெனும் விம்முறு நிலையால் வெருண்டு' என்றும், அவர்பரிவினை உவமைமுகத்தான் விளக்க 'இரண்டு கன்றினுக்கிரங்குமோராவென விருந்தார்' என்றுங் கூறினர். (௩௧)

அன்ன ராயினு மரசனுக் கதுவல துறுதி
பின்ன றில்லெனக் கருதியும் பெருநில வரைப்பின்
மன்னு மன்னுயிர்க் கிராமனின் மன்னவ ரில்லை
என்னவுன்னியும் விதியது வலியினு மிசைந்தார்.

(இ-ள்.) அன்னராயினும்-அவ்வாறிரங்குபவராயினும், அரசனுக்குஅதுவலது-அரசனுக்குக்காடுசெல்வதன்றி, உறுதிபின்னறில்லெனக் கருதியும்-உறுதி வேறில்லையெனத்துணிந்தும், பெருநிலவரைப்பில் - பெரிய நிலத்தின்கண், மன்னு மன்னுயிர்க்கு-மிகுதியு நிலைபேறுடைய வுயிர்கட்கு, இராமனின் மன்னவ ரில்லையென்னஉன்னியும்-சீராமனின் அரசரில்லையென நினைத்தும், விதியது வலியினு மிசைந்தார்-விதியினது வன்மையினுந் துணிவுகொண்டனர்.—எ-று.

இரண்டுகன்றினுக் கிரங்குமோராவினைப்போன்றவராகலின், 'அன்னராயினும்' என்றும், அரசன் தவஞ்செய்தே வீடுபெறவேண்டுமென்பார், 'அரசனுக்கதுவலதுறுதி பின்னறில்லெனக்கருதியும்' என்றும், இனிமன்னுயிர் புரக்கத்தக்கான் சீராமனல்ல தில்லையாகலின் 'மாநிலவரைப்பின் மன்னுமன்னுயிர்க் கிராமனின் மன்னவரில்லை யென்னவுன்னியும்' என்றும், இது தெய்வந்தரவந்த தென்பதுதோன்ற 'விதியது வலியினு மிசைந்தார்' என்றுங்கூறினர். இவ்விரண்டுசெய்யுளானு மமைச்சர் கருத்துணர்த்தியவாறு. ()

இருந்த மந்திரக் கிழவர தெண்ணமுந் தன்பாற்
பரிந்த சிந்தையம் மன்னவன் கருதிய பயனும்
பொருந்து மன்னுயிர்க் குறுதியும் பொதுவுற நோக்கித்
தெரிந்து நான்மறைத் திசைமுகன் றிருமகன் செப்பும்.

(இ-ள்) இருந்தமந்திரம் கிழவரது எண்ணமும் - அங்கு இருந்த மந்திரிமாரெண்ணமும், தன்பால் பரிந்த சிந்தை அம்மன்னவன் கருதிய பயனும்-தன்பாலன்பு மிகுந்த சிந்தையினையுடைய அவ்வரசன் எண்ணியகருத்தும்,

பொருந்து மன்னுயிர்க்குறுதியும் - பொருந்துகின்ற நிலைபெற்ற வுயிர்கட்கு நான்மறை திசைமுகன் திருமகன் செப்பும் - நான்குவேதங்களையுமறிந்த நான்குமுகங்களையுடைய பிரமன் மகனாகிய வசிட்டமுனிவன் சொல்வானாயினான்.—எ-று. (௩௩)

நான்குமுகங்களையுடைமையாற்பிரமனைத் 'திசைமுகன்' என்று கூறினார்.

நிருப நின்குல மன்னவர் நேமிபண் டுருட்டிப்
பெருமை யெய்தின ரியாவரோ யிராமனைப் பெற்றார்
கரும மேயிது கற்றுணர்ந் தோய்க்கினிக் கடவ
தரும மும்மிது தக்கதே நினைத்தனை தகவோய்.

(இ-ள்) நிருப-அரசனே, நின்குல மன்னவர்-நினது குலத்துத்தோன்றிய அரசர், நேமிபண்டே உருட்டி - ஆக்கினைசக்ரத்தை முன்னே செலுத்தி, பெருமை எய்தினர்-பெருமையையடைந்தனர், இராமனைப்பெற்றார் யாவரே-எவரே சீராமனை மகனாகப்பெற்றனர்; தகவோய் - தகுதிப்பாட்டினையுடையானே, கற்றுணர்ந்தோய்க்கு-கற்றறிந்த நினக்கு, கருமமே இது-தக்க காரியமே யிது, இனிக்கடவது-இனிச் செய்யக்கடவதாகிய தருமமும் இது-அறமும்மிது, தக்கதே நினைத்தனை-தக்ககாரியத்தையே யெண்ணினை.—எ-று

நின்குலத்தில் வந்த வரசரெல்லாம் அணியரங்கந்தந்தானும், புறவொன்றின்பொருட்டாகத் துலைபுக்கானும், இந்திரனுநந்தாமல் குரைகடலைக்கடைந்து அமுதுகொடுத்தானும், ஒருதனியே திரிந்தமராபதிகாத்தானும், இந்திரனை விடையேறுக்கொண்டானும், கடறொட்டானும், கங்கை கொணர்ந்தானும், பெருவேள்வி யொருநூறுஞ் செய்தானுமெனப் பட்டனரன்றி ஆதியஞ்சோதியுருவை யங்குவைத்திங்குப்பிறந்த இறைவனைத் தந்திருமகனாகப் பெற்றிலராகலின் 'நின்குலமன்னவர் நேமிபண்டுருட்டிப் பெருமையெய்தினரியாவரே யிராமனைப் பெற்றார்' என்றும், கற்றுணர்ந்தோய்க்குக் கருமமே யிது வல்லது செய்யத்தக்க தருமமுமிதுவாகலின் 'தக்கதே நினைத்தனை' என்றும், அது நினக்கின்றியமையாதென்பார் 'தகவோய்' என்றுங் கூறினார். கடவதென்புழி துவ்வீறு தொகுத்தல் பெற்றது. (௩௪)

புண்ணியந்தொடர் வேள்விகள் யாவையும் புரிந்த
அண்ண லேயினி யருந்தவ மியற்றவு மடுக்கும்
வண்ண மேகலை நிலமகண் மற்றுனைப் பிரிந்து
கண்ணி ழந்தில ளெனச்செயு நீதந்த கழலோன்.

(இ-ள்) புண்ணியம் தொடர்வேள்விகள் யாவையும் புரிந்த அண்ணலே - நல்வினை தொடர்ந்த யாகங்கள் யாவையுமுடித்த பெரியோனே, இனி அருந்தவ இயற்றவும் அடுக்கும் - இனி அருமையாகிய தவஞ்செய்யவுந் தகும், வண்ணம் மேகலை நிலமகள் - அழகிய மேகலையணிந்த நிலமடந்தை, உனை

பிரிந்து - உன்னைநீங்கி, கண் இழந்திலளென - கண் இழவாதாளென, நீதந்த கழலோன் செய்யும் - நீபெற்ற கழலையணிந்த மகனாகிய சிராமன் முற்றச் செய்து முடிப்பான்.—எ-று.

மேகலையென்பது "எண்கோவைமேகலை" என்பதனானுணர்க. 'யாருஞ் செய்யாத யாக மிவன்செய்து மறந்த' என முற்காண்டத்துரைத்தலானீண்டும் 'புண்ணியந்தொடர் வேள்விகள்யாவையும் புரிந்த - வண்ணலே' என அதனை வலியுறுத்தார். வேள்வியாற் புண்ணியமெய்தப்படுதலின் 'புண்ணியந்தொடர் வேள்விகள் யாவையும்' என்றும், வேள்வி யனைத்தையுஞ் செய்தமுடித்த நீயே யருந்தவமுமாற்றத் தகுமென்பார் 'அருந்தவ மியற்றவுமடுக்கும்' என்றும், நீதவஞ்செய்யச் சென்றவழி நின்மகனும் செம்மையி னோம்புவானென்பார் 'உனைப்பிரிந்து கண்ணிழந்திலளெனச்செயு நீதந்தகழலோன்' என்றும் கூறினர். 'கழலோன்' என விதந்தார் பகைவரை வெற்றிக்கொள்வோனென்பது குறித்தற்கு; வீடுபேற்றைப் பெறுவான் மெய்யுணர்ச்சியுடையோர் நாடுவது மதுவாதலின் 'கழலோன்' என்றாரெனினுமமையும். இப்பெற்றிநோக்கியே * "துயரறுசுடரடி தொழுதெழன்மனனே" என்றும் † "அறவாழியந்தணன்றாள் சேர்ந்தார்க்கல்லால்" என்றும் பெரியாரும் டணித்தல்மைகாண்க. (கரு)

புறத்து நாமொரு பொருளினிப் புகல்கின்ற தெவனோ
அறத்தின் மூர்த்திவந் தவதரித் தானென்ப தல்லாற்
பிறத்தி யாவையுங் காத்தவை பின்னுறத் துடைக்குந்
திறத்து மூவருந் திருத்திய திருத்துமத் திறலோன்.

(இ-ள்) பிறத்து யாவையும் காத்து அவைபின் உற துடைக்கும் - எல்லா வுயிரையும் தோற்றுவித்து நிலைபெறுவித்து அவற்றைப் பின்னே பொருந்த நீக்கும், திறத்து மூவருந் திருத்திய திருத்துமத் திறலோன் - வகைப்பட்ட மூவரும் திருத்தியவற்றைத் திருத்து மலகிலாற்றலை யுடையான், அறத்தின்மூர்த்தி - தருமசொரூபி, வந்தவதரித்தா னென்பதல்லால் - ஆதியஞ்சோதியுருவை யங்குவைத்திங்கு அறத்தை நிறுத்தப் பிறந்தானென்றெடுத்துச் சொல்வதன்றி, நாம் ஒருபொருள் இனி புறத்து புகல்கின்றது எவன் - நாமொரு பொருளினை இனிப் புறத்ததாகக் கூறுவது யாது? ஒன்றுமிலதென்க.—எ-று.

பிறத்து எனச் செய்வதன்றொழில் செய்விப்பதன்மேற்று, ‡ "குடிபொன்றிக் குற்றமுமாங்கேதரும்" என்புழிப்போல; ஈண்டு விவ்விகுதிதொகுத்தல் பெற்றது; அற்றன்றி இழிந்து இழித்தென்புழிப்போலப் பிறந்து பிறத்தென நின்றதெனினுமாம்; சிருட்டிக்கப் பிரமனுக்கு ளந்தரியாமியாயும், காக்க உபேந்திரனுக்கு ளந்தரியாமியாயும், அழிக்க வுருத்திரனுக்கு

---

* திருவாய்மொழி, க-செய்யுள். † திருக்குறள், செ-அ.

‡ திருக்குறள், செ - கஎக.

ளந்தரியாமியாயும் நின்று முத்தொழில் செய்விப்பானென்பார் 'பிறத்தி யாவையுங் காத்தவை பின்னுறத்துடைக்குந் - திறத்துமூவருந் திருத்தியதிருத்து மத்திறலோன்' என்றும், அவனே ‡ "கண்ணன் விண்ணோரிறை" என்பவராகலின் 'அறத்தின்மூர்த்தி' என்றும், அவனே அறத்தை நிறுத்த வந்தமையான் 'வந்தவதரித்தானென்பதல்லால்' என்றும், அவனையன்றி வேறொரு பொருளைக் கூறுதல் கடனன்றென்பார் 'புறத்துநாமொரு பொருளினிப் புகல்கின்றதெவன்' என்றுங்கூறினர். 'அறத்தின்மூர்த்தி வந்தவதரித்தானென்பது' என்றார் 'தீர்த்தனென்றறிந்ததோ வவர்தஞ்சிந்தையே' என முற்காண்டத்திற் கூறியதை வலியுறுத்தற்கு. 'திறத்துமூவருந் திருத்திய திருத்துமத்திறலோன்' என்பதனை $ "மூவர்காரியமுந் திருத்துமுதல்வன்." எனப் பெரியாரும் பணித்தமையானு முணர்க. (௬௬)

பொன்னு யிர்த்தபூ மடந்தையும் புவியெனுந் திருவும்
இன்னு யிர்த்துணை யிவனென நினைக்கின்ற விராமன்
தன்னு யிர்க்கென்கை புல்லிது தற்பயந் தெடுத்த
உன்னு யிர்க்கென நல்லன்மன் னுயிர்க்கெலா முரவோய்.

(இ-ள்.) பொன் உயிர்த்த பூமடந்தையும் - பொன்னை யடைந்தார்க்குத் தரும் திருமாமகளாலும், புவியெனுந் திருவும் - நிலமகளாகிய செல்வியாலும், இவன் இன் உயிர் துணை என - இவனே இனிமையாகிய உயிர்க்குத் துணைபோல்வானென்று, நினைக்கின்ற இராமன் - நினைக்கப்படுகின்ற சிராமன், தன் உயிர்க்கு நல்ல என்கை புல்லிது - தன்னுயிர்க்கு நல்லனென்று சொல்லப்படுவது சிறுமையையுடைத்து, தன் பயந்து எடுத்த உன்னுயிர்க்கென, தன்னைப்பெற்றெடுத்த வுன்னுயிர்க்கென மன்னுயிர்க்கெல்லாம் உரவோய் நல்லன் - அறிவுடையானே! நிலைபேறுடைய உயிர்கட்கெல்லாம் நல்லனேயாம்.—எ-று.

பொன்னுக் கதிதெய்வமாதலின் திருமாமகளைப் பொன்னுயிர்த்த பூமடந்தையென்றதென்க; இனிப் பேரழகினையுடையளாகலின் பொன்னுயிர்த்த பூமடந்தை என்றாரெனினுமாம். திருமகட்கும் நிலமகட்கும்கணவனாகலின்இரகுநாயகனை இன்னுயிர்த்துணையென்றார்; கற்புடையமாதர்கணவனையே தெய்வமாக வழிபடுதலின். இப்பெற்றிநோக்கியே 'தங்கணாயகரிற்றெய்வந் தவம் பிறிதிலவென்றெண்ணு, மங்கைமார்சிந்தைபோல' என இவ்வாசிரியரு முற்காண்டத்துங் கூறுதல்காண்க. நல்லனென்றது சொல்லெச்சம். எவர்க்குமெவற்றிற்குந் தம்முயிர் மருந்துபோல்வதாகலின் உயிரெனற்கு இன்னென்றடைகொடுத்துப் போந்தமைகாண்க. மைந்தனது உடைமைபெற்ற தாதையைக் காப்பதாகலின் 'தற்பயந்தெடுத்த உன்னுயிர்க்கென' என்றும் எல்லா

‡ திருவாய்மொழி, ௩ - ம் பத்து, பதிகம் - ௬.
$ முதலாயிரம் - பெரியாழ்வார் திருமொழி, ௪ - ம் பதிகம் - ௧ - பாசுரம்.

வுயிர்களையு மவ்வாறே காத்தோம்பலின் 'மன்னுயிர்க்கெலாநல்லன்' என்றும், நீ தயையுடையையாதலின் நின்மகனுந் தன்னுயிரையே துரும்பாகக்கருது பவனென்பார் 'தன்னுயிர்க்கென்கைபுல்லிது' என்றுங் கூறினர். (கஎ)

வார மென்னினிப் பகர்வது வைகலு மனையான்
பேரி னல்வரு மிடையுறு பெயர்கின்ற பயத்தால்
வீர நின்குல மைந்தனை வேதியர் முதலோர்
யாரும் யாஞ்செய்த நல்லறப் பயனென விருப்பார்.

(இ-ள்.) வீர - வீரத்தன்மையுடையானே! வைகலும் அனையான் பேரினல் - எஞ்ஞான்றும் அவன் திருநாமமோதலினன், வரும் இடையுறுபெயர்கின்ற பயத்தால் - தமக்கு எய்துகின்ற துன்பம் விட்டொழிகின்ற பயனல், நின்குலமைந்தனை - நின் முதற்புதல்வனை, வேதியர் முதலோர்யாரும் - மறையோர் முதலிய வருணத்தாரெல்லாம், யாம்செய்த நல்லறம் பயனென இருப்பார் - நாம் செய்துமுடித்த நன்மையாகிய தருமத்தின் பயனென்று இருப்பர், வாரம், இனி பகர்வது என் - ஆகலின் உரிமையாக இனிக் கூறுவது யாது? எ-று.

இடையுறு முதனிலைத்தொழிற்பெயர். வேதியர் முதலோர் யாருமென்றது அரசர், வாணிகர், வேளாளரென்றித் தொடக்கத்தவரை, அனையான்பேரினல் வருமிடையுறு பெயர்கின்றதென்றதனை 'தின்மையும்பாவமுஞ்சிதைந்து தேயுமே, சென்மமுமரணமு மின்றித்தீருமே, இம்மையேயிராமவென் றிரண்டெழுத்தினல்' என்றோதிய பயன் கூறுமுகத்தானு முணர்க. அனையான்பேரென்றது தாரகவாச்சியனகிய அவனது திருநாமத்தை. எவனென்னும் வினப்பெயர் என்னென்ருய், ஈண்டின்மை குறித்து நின்றது. இதனைக் * "கற்றதனலாயபயனென்" என்புழிப் பரிமேலழகர் கூறுதலானுமுணர்க. (கஅ)

மண்ணினு நல்லள் மலர்மகள் கலைமகள் கலையூர்
பெண்ணினு நல்லள் பெரும்புகழ்ச் சனகியோ நல்லள்
கண்ணினு நல்லன் கற்றவர் கற்றிலா தவரு
முண்ணு நீரினு முயிரினு மவனையே யுவப்பார்.

(இ - ள்.) பெரும்புகழ் சனகியோ-பெருங்கீர்த்தியையுடைய சனகியோ மண்ணினும் நல்லள்-நிலமகளினு நல்லாள், மலர்மகள் கலைமகள் கலையூர் பெண்ணினும் நல்லள் - பூமகளினுங் கலைமகளினு மானையூர்கின்ற மலைமகளினு நல்லாள், நல்லாள் கண்ணினும் நல்லன்-அச்சனகி கண்ணினும் அச்சீராமனே நல்லவனும், கற்றவர் கற்றிலாதவரும்-ஆகலின் கல்வியறிவுடையாரு மஃதில்லாருமாகிய இருதிறத்தவரும், உண்ணு நீரினும்-உண்ணுஞ்சோற்றினும், உயிரினும்-உயிரினும், அவனையே யுவப்பார்-அவனையே சிறந்தோனகக்கருதி விருப்புறுவர்—எ-று.

* திருக்குறள், செ - உ.

பொறையுடைமையான் மண்மடந்தையையும், பேரழகுடைமையான் மலர்மகளையும், அறிவுடைமையாற் கலைமகளையும், கற்புடைமையான் குலையூர்பெண்ணினையுமுவமித்தாரேனு மிவளனைத்தையு மொருங்குடையளாகலின் 'நல்லாள்' என்றும், தன்னொருமுலை திருகிவிடுத்துக் கூடலையழித்தும், கண்ணுன் விழித்து வேடனை எரித்தும் நின்ற மறக்கற்புடையார்போலாது தன் நாயகன் வருவழி நாடிநிற்பதே விழியாகவுடைமையின் 'கண்ணினும்' என்றும், தனக்கு நிரபராதியாகாத இலங்கையர்கோன்றன்றுனை முழுதும்பட்டுத் தளர்வுறுவேலை 'இன்றுபோய் நாளைவா'வென்ற தன்பேராண்மை காட்டலின் 'நல்லன்' என்றும், உண்ணுநீரவன் றிருநாமமும், அவர்க்குறுதிப்பொருளாத லவனுமேயாகலின் 'உண்ணுநீரினு முயிரினுமவனையேயுவப்பார்' என்றுங் கூறினுர். நீரொன்றது நீரொடுகூடிய சோற்றினை; இதனை ‡ "நீருண்டார்நீரான்வாய் பூசுப" என்றதனுனுமுணர்க. இவ்வாறன்றிப் பருகுநீரெனினுமமையும்; ததியர் உண்ணுநீர் முதலியன அவனேயாகக்காண்டலின். இப்பெற்றிநோக்கியே, $ "உண்ணுஞ்சோறும் பருகுநீருந் தின்னும்வெற்றிலையுமெல்லாங்-கண்ணன்" எனப் பெரியாரும் பணித்தமை காண்க. மண்ணினு நல்லளென வேறுபிரித்தோதினுர்; மண்மடந்தைபெற்றவளாகலின். இதனை 'நீர்தந்ததனைவெல் வானிலந்தந்துநிரப்பிற்றன்றே' என்றிவ்வாசிரியரும் பிற்காண்டத்துக்கூறுதல் காண்க. இன் உறழ்பொருஉ. (கக)

மனிதர் வானவர் மற் றுளா ரறங்கள்காத் தளிப்பார்
இனியிம் மன் னுயிர்க் கிராமனிற் சிறந்தவ ரில்லை
அனைய தாதலி னரசநிற் குறுபொரு ளறியிற்
புனித மாதவ மல்லதொன் றில்லெனப் புகன்றுன்

(இ-ள்.) மனிதர் வானவர் மற்றுளார்-மானிடரும் தேவரு நாகருமாகிய, இம்மன்னுயிர்க்கு - இந்நிலைபேறுடைய உயிர்கட்கு, இராமனிற்சிறந்தவர்-சீராமனினு மேலாயோர், அறங்கள் காத்தளிப்பார் இல்லை-செய்யு மறநெறிகளானவற்றைக்காப்பாரிலர், அனையதாதலின்-அத்தன்மையாகலான், அரச அறியின்நிற்கு உறுபொருள் புனிதமாதவம்-அரசனே! அறியுமிடத்து நினக்குறுதிப்பொருளாவது பரிசுத்தமாகிய பெருந்தவமெனப்பட்டதே; அல்லதொன்றில்-பிறிதொன்று இல்லை, என புகன்றுன் - என்று சொல்லிமுடித்தனன்—எ-று.

திசைமுகன் றிருமகன் செப்பும் அவை நினைத்தனை, அடுக்கும், புகல்கின்றதேவன், நல்லன், இருப்பார், நல்லள், நல்லன், உவப்பார், இல்லையெனக்கூட்டி இவையெனப் புகன்றுனென வினைமுடிக்க. * "வேண்டியவேண்டி

---

‡ நான்மணிக்கடிகை, செ - கச.

$ திருவாய்மொழி, கு-ம் பத்து,பதிகம் - எ.

* திருக்குறள், செ - உகரு

யாங்கெய்தலாற்செய்தவ-மீண்டு முயலப்படும்" என்பவாகலின் 'நிற்குறுபொருள் அறியிற் புனிதமா தவமல்லதொன்றில்லை' யென்றார் என்க. இவ்வெட்டுச் செய்யுளானும் வசிட்ட முனிவன் றன்கருத்தினைத்தெரிவித்தவாறு. (சஎ)

மற்ற வன்சொன்ன வாசகங் கேட்டலு மகனைப்
பெற்ற வன்றினும் பிஞ்ஞகன் பிடித்தவப் பொருவில்
இற்ற வன்றினு மெறிமழு வாளவ னிழுக்கம்
உற்ற வன்றினும் பெரியதோ ருவகைய னானான்.

(இ-ள்.) அவன் சொன்ன வாசகம் கேட்டலும்-அம்முனிவன் சொல்லிய சொல்லைக்கேட்டலும், மகனை பெற்றஅன்றினும்-மகனாகிய சீராமனைப்பெற்ற அந்நாளினும், பிஞ்ஞகன் பிடித்த அப்பொருவில் இற்ற அன்றினும் - சிவன் கையிற்பிடித்த அந்தப் போர்த்திறலையுடைய வில்லை யிறுத்த அந்நாளினும், எறிமழு வாளவன் இழுக்கம் உற்ற அன்றினும்-எறிகின்ற மழுப்படையை யுடைய இராமன் தோல்வியடைந்த அந்நாளினும், பெரியதோருவகையனானான்-பார்க்கப் பெரியதாகிய வொப்பற்ற மகிழ்ச்சியை யடைந்தனன்.—எ-று.

மற்று-அசைநிலை. கேட்டலும் உம்மீற்றெச்சம். பிள்ளை கலிதீர்க்கவந்த பெருமாளாதலின் 'மகனைப்பெற்ற வன்றினும்' என்றும், ஈசன் வில்லிறுத் தமைமருமகளைப் பெறுதற்பொருட்டாதலின்'பிஞ்ஞகன்பிடித்தவப்பொருவில் இற்ற வன்றினும்' என்றும், தனக்குந் தன் குலத்துக்கும் பகையாகிய பரசுராமனை வெற்றிகொண்டது தனக்குக் கழிபேருவகையாதலின் 'எறிமழுவாளவனிழுக்கமுற்றவன்றினும்' என்றும், வசிட்டமுனிவன் தன்னை நோக்கி நின் னெடும்புதல்வன் மணிமுடிசூட்டிக்கொள்ளத்தக்கானென்ற தெவற்றினுஞ் சிறந்தமையான் 'அவன் சொன்ன வாசகங்கேட்டலும் பெரியதோருவகையானான்' என்றுங் கூறினார். பிஞ்ஞம்-மயிற்பீலி.அதனை யணிபவனாகலிற் பிஞ்ஞகனென்றதென்க. இழுக்கம்-குற்றம். அன்று காலப்பொருண்மை யுணர்த்தி நின்றது; ஆண்டையிலென்புழிப்போல. மழுவாளவனென்றது பரசுராமனை. (சஅ)

அனைய தாகிய வுவகையன் கண்கணீ ரரும்ப
முனிவன் மாமலர்ப் பாதங்கண் முறைமையி னிறைஞ்சி
இனிய சொல்லினை யெம்பெரு மானருள் விழியிற்
றனிய னானிலந் தாங்கிய தவற்கிது தகாதோ.

(இ-ள்.) அனையதாகிய உவகையன் - அத்தன்மையதாகிய மகிழ்ச்சியை யுடைய தயரதன், கண்கள் நீரரும்ப-கண்களினின்றும் நீர்பெருக, முனிவன் மாமலர் பாதங்கள்-வசிட்டமுனிவன் பெருமையாகிய தாமரைமலர்போன்ற பாதங்களை, முறைமையின் இறைஞ்சி-முறையான் வணங்கி, எம்பெருமான்-எம்மிறைவனே! இனியசொல்லினை-இனியவற்றைக் கூறினை, அருள் விழியின்-நின் அருட்கண் பார்வையான், தனியன்-தன்னந்தனியேன், நால் நிலம்

தாங்கியது-பெரிய வுலகைக் காத்துவந்தது, அவற்கு இது ஏகாதோ-அச்சிராம னுக் கிது தகுதியாயிராதோ.—எ-று.

நானிலமென்றது நன்மக்கள் வாழ்க்கை செய்யாத பாலைத்திணையொழிந்த குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தலென்னு நாற்றிணைகளையும். எனக் கெடுத்துக்கூறிய மொழிகளனைத்து மினிய மொழிகளேயாகலின் 'இனிய சொல்லினை' என்றார். முறைமையி னிறைஞ்சியென்றது எட்டுறுப்பு மைந் துறுப்பு நிலமுறப்பணிதலை. பெருமாஅன் என்றது விளியுருபேற்றபெயர் ()

எந்தை நீயுவந் திதஞ்சொல வெங்குலத் தரசர்
அந்த மில்லரும் பெரும்புக ழவனியி னிறுவி
முந்து வேள்வியை முடித்துத்தம் மிருவினை முடித்தார்
வந்த தவ்வரு ளெனக்குமென் றுரைசெய்து மகிழ்ந்தான்.

(இ-ள்.) எந்தை நீ உவந்து இதஞ்சொல - எந்தையே நீ மகிழ்ந்து நன் மொழிகளைக்கூற, எம் குலத்துஅரசர் அந்தமில் அரும் பெரும்புகழ் அவனியில் நிறுவி-எம்முடைய குலத்திற்றோன்றிய அரசர்கள் முடிவில்லாத அருமையாகிய பெரும்புகழை நிலத்திலூட்டி, முந்துவேள்வியை முடித்து - முற்பட்ட வேள்விகளை முடித்து, தம் இருவினை முடித்தார்-தம்மிருவினையையு மழித் தனர், அவ்வருள் எனக்கும் வந்தது என்று உரைசெய்து மகிழ்ந்தான்-அக் கருணை யெனக்கு மமைந்தது என்று கூறிமகிழ்ச்சியடைந்தனன்.—எ-று.

எமது மூதாதைகள் புகழெய்திச் சிறத்தற்கு நின்மொழியே காரண மென்பான் 'எந்தை நீயுவந்திதஞ்சொல' என்றும், அதனால் அவர் புகழ் உல கின்கணூட்டப்பட்டதென்பான் 'அந்தமில்லரும்பெரும்புக ழவனியினிறுவி' என்றும், அவர் இருவினை தீர்தற்கு வேள்வி காரணமாகலின் 'முந்துவேள் வியை முடித்து' என்றும், அவ்வேள்வி இருவினையையுங் கெடுத்தலின் 'இரு வினைமுடித்தார்' என்றும், அவர்களடைந்த பெரும்பேறென்மாட்டு மெய்திய தென்பதுபற்றி 'வந்தவ்வருளெனக்கு மென்றுரைசெய்து மகிழ்ந்தான்' என் றுங்கூறினர். பிறவிக்குத் தீவினையோடொப்ப நல்வினையும் ஏதுவாகலான் 'இருவினைமுடித்தார்' என்றதென்க. இதனை * "இருள்சேரிருவினையுஞ் சேரா" என்றதற்குப் பரிமேலழக ருரையானு மறிக. இம்மூன்று செய்யுளா னும் தயரதன் தன் கருத்தினை விளக்கியவாறு. (சரு)

பழுதின் மாதவன் பின்னொன் றும் பணித்தில னிருந்தான்
முழுது மெண்ணுறு மந்திரக் கிழவர்தம் முகத்தால்
எழுதி நீட்டிய விங்கித மிறைமகற் கேறத்
தொழுத கையினன் சுமந்திரன் முன்னின் று சொல்லும்.

(இ-ள்.) பழுதில்மாதவன் பின்னொன்றும் பணித்திலன் இருந்தான்-குற்ற மற்ற பெருந்தவத்தையுடைய வசிட்டமுனிவன் பின் சிறிதுங் கூறாதிருந்

* திருக்குறள், செ - ரு.

தனன், (இதுநிற்க); முழுது மெண்ணுறு மந்திரக்கிழவர் தம்முகத்தால்எழுதி நீட்டிய இங்கிதம் - யாவுமாராயு மந்திரிமாரது முகக்குறியாலெழுதி வாங்கிய குறிப்புமொழி, இறைமகற்கேறத் தொழுதகையினன் சுமந்திரன் முன்னின்று சொல்லும் - அரசனுக்குப் பொருந்தத் தொழுத கையினனாகிச் சுமந்திரன் முன்னின்று கூறுவானாயினான். எ-று.

உம்மை இரண்டில் முன்னது இழிவுசிறப்பு ; பின்னது முற்று. முகம்-ஆகுபெயர். முகத்தால் எழுதி நீட்டிய இங்கிதம் என்றது குறிப்புமொழி. கையினன் வினையெச்சமுற்று; "வில்லினன் விறல் வழுதி" என்புழிப்போல; பணித்திலனென்பது மது. (சச)

(1) உறத்த கும்மர சிராமற்கென் றுவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீயெனுஞ் சொற்சுடு நின்குலத் தொல்லோர்
மறத்தல் செய்கிலாத் தருமத்தை மறப்பது வழக்கன்
றறத்தி னூஉங்கினிக் கொடிதென லாவதொன் றியாதே.

(இ-ள்.) இராமற்கு அரசு உறத்தகும் என்று உவக்கின்ற மனத்தை நீ துறத்தி எனுஞ் சொல் சுடும்-சீராமனுக்கு அரசு பொருந்துதல் தகுமென்று மகிழ்கின்ற மனத்தை நீயெம்மைவிட்டு நீங்குகின்றனையென்கின்ற மொழி சுடும், நின்குலத் தொல்லோர் மறத்தல் செய்கிலாத தருமத்தை மறப்பதும் வழக்கு அன்று- நின்குலத்து மூதாதைகள் மறப்பது செய்தறியாத அறத்தை மறப்பதும் முறைமையன்று, அறத்தினூங்குஇனிக் கொடிது எனல்ஆவது ஒன்று யாது-இனி அறத்தைக்காட்டிலும் கொடியதென்று கூறுவ தொன்றெது ?

இது வேற்றுப்பொருள்வைப்பு. சீராமனுக்கரசென்ற மகிழ்ச்சியை நீ துறக்கின்றனை யென்பதுகெடுத்தலின் 'உவக்கின்ற மனத்தைத்துறத்தி நீ யெனுஞ்சொற்சுடும்' என்றும், பரம்பரையாக நின்மூதாதைகள் கொண்ட வழக்கை நீயுமறத்தல் சாலாதென்பதுபற்றி 'நின்குலத்தொல்லோர்மறத்தல் செய்கிலாத்தருமத்தை மறப்பதும் வழக்கன்று' என்றும், இது அறமாகலின் இதனினும் கொடியதில்லையென்பார் 'அறத்தினூஉங்கினிக் கொடிதென லாவதொன்றியாதே' என்றுங் கூறினர். உறத்தகும் என்புழிதகும் என்றது உம்மீற்று வியங்கோள்முற்று. (சரு)

(2) புரசை மாகரி நிருபர்க்கும் புரத்துறை வோர்க்கும்
உரைசெய் மந்திரக் கிழவர்க்கு முனிவர்க்கு முள்ள
முரைச மூர்ப்பநின் முதன்மணிப் புதல்வனை முறையா
லரைச னாக்கிப்பின் னப்புறத் தடுத்தது புரிவாய்.

(இ-ள்.) புரசை மாகரி நிருபர்க்கும் புரத்து உறைவோர்க்கும் உரை செய் மந்திரக்கிழவர்க்கும் முனிவர்க்கும் - [illegible] கட்டப்பட்ட பெருங்களிற்

றையூரு மரசருக்கும் நகரமாந்தருக்கும் புகழமைந்த மந்திரிமாருக்கும் முற்றத்துறந்த முனிவருக்கும்; உள்ளம் முரைசம் ஆர்ப்ப-மனமுரசுபோன்றுரவாரிக்க, நின்முதல் மணி புதல்வனை - நின்னுடைய முதன்மையான மாணிக்கம்போன்ற மகனை, முறையால் அரைசன் ஆக்கி - முறைமையால் அரசனுகச்செய்து, பின் அப்புறத்து அடுத்தது புரிவாய் - அப்பால் பிற்பட்டதாகிய துறவறவொழுக்க மேற்கொள்வாய்.

புரசை - யானை கழுத்திடுகயிறு. மாசனம்பார்ப்பார் மந்திரிமார் தொடக்கமான ஐம்பெருங்குழுவுட் சில்லோரைக்கூறினர். மணியென்பதற்கு நீலமணிபோலும் நிறத்தென்னலுமாம். உள்ளமுரைசமார்த்தல் - மகிழ்ச்சியையுணர்த்திற்று. பகையிருளோட்டி விளக்குவானென்பார் 'மணிப்புதல்வன்' என்றும், பண்டைக்காலந்தொட்டு முதன்மகனுக்கே அரசளித்தல் முறையாகலின் 'முறையாலரைசனுக்கி' என்றும், பின் காடுசென்று துறவறநெறியொழுகுதல் கடனுகலின் 'பின் அப்புறத்தடுத்தது புரிவாய்' என்றுங் கூறினர். அடுத்தது வினைப்பெயர். 'அப்புறத்தடுத்தது' என்றார் தயரதன் காடுசென்று தவஞ்செய்வதற்கவர் வாயெழாமையின். இம்மூன்று செய்யுளானு மந்திரிகள் கருத்தினைச்சுமந்திர னுணர்த்தியவாறு. (சக)

என்ற வாசகஞ் சுமந்திர னியம்பலு மிறைவன்
நன்று சொல்லினை நம்பியை நளிர்முடி சூட்டி
நின்று நின்றது செய்வது விரைவினி னீயே
சென்று கொண்டணை திருமகள் கொழுநனை யென்றான்.

(இ-ள்.) என்றவாசகம் சுமந்திரன்இயம்பலும் - என்ற சொல்லைச் சுமந்திரன் சொல்லுதலும், இறைவன் நன்று சொல்லினை - அரசன் நன்று கூறினை, நம்பியை நளிர்முடிசூட்டி நின்று - புருடோத்தமனுகிய சீராமனுக்குப் பெருமையாகிய முடியினைத்தரித்து நின்று, நின்றது விரைவினின் செய்வது - நிலையாயதுறவற வொழுக்கத்தை விரைந்துசெய்வது, திருமகள் கொழுநனை நீயே சென்று கொண்டணையென்றான் - நீயே திருமகளுக்கு நாயகனுகிய சீராமபிரானைப் போயழைத்துவாவென்றனன். எ - று.

பரம்பரையாகவருகின்ற மணிமுடியாகலின் 'நளிர்முடி சூட்டிநின்று' என்றும், நிலையாமைகண்டு துறந்துசெல்வதாகலின் 'நின்றதுசெய்வது' என்றும், தன்மகனை மாயோனவதாரமென முற்றத்துறந்த முனிவர்பாற்கேட்டிருப்பவனுகலின் 'விரைவினினீயேசென்று கொண்டணைதிருமகள்கொழுநனை' என்றுங் கூறினர். செய்வது வியங்கோள்முற்று. இதனைக் * "கொள்ளப்படாது மறப்பதறிவிலேன் கூற்றுக்களே" என்றதனுனறிக. சுமந்திரன் முன்னின்று சொல்லும், அதுமறப்பதும் வழக்கன்று, கொடிதெனலாவதொன்றியாது, ஆக்கிப்புரிவாயென்ற வாசகமியம்பலும், சொல்லினை

* திருக்கோவையார், செ - அஎ.

சூட்டிநின்று செய்வதுசென்று கொண்டணை என்றான் எனக்கூட்டி வினை முடிக்க. இதனாற் சக்கரவர்த்தி சுமந்திரனை இராகவன்மாளிகைக் கனுப்பிய துணர்த்தப்பட்டது. (சஎ)

அலங்கன் மன்னனை யடிதொழு தவன்மன மனையான்
விலங்கன் மாளிகை வீதியில் விரைவொடு சென்றான்
தலங்கள் யாவையும் பெற்றனன் றானெனத் தளிர்ப்பான்
பொலன்கொ டேரொடு மிராகவன் றிருமனை புக்கான்.

(இ-ள்.) அலங்கல் மன்னனை அடிதொழுது - மாலையையணிந்த அரசனை யடிவணங்கி, அவன் மனமனையான் - அவன் மனம்போல்பவனாகிய சுமந்திரன், விலங்கல் மாளிகைவீதியில் - மலைபோன்ற மாளிகையையுடைய வீதியின்கண், விரைவொடுசென்றான் - விரைந்துசென்று, தலங்கள் யாவையும் பெற்றனன் தானெனதளிர்ப்பான் - உலகமுழுதும் தான் பெற்றாற்போலமகிழ்ந்து, பொலன் கொள்தேரொடும் இராகவன் திருமனைபுக்கான் - பொன்னாணியன்ற தேருடன் இரகுநாயகன் அழகியமாளிகையிற் புகுந்தான். எ-று.

சக்கரவர்த்தித் திருமகன்பால் வைத்த அன்பின் விசேடத்தான் 'தலங்கள் யாவையும் பெற்றனன்றானெனத்தளிர்ப்பான்' என்றார். என உவமவுருபு. தொழுது அனையான் சென்று தளிர்த்துபுக்கானென வினைமுடிக்க. பெற்றனன் வினைஎச்சமுற்று, அரசன் கருத்தின்வழி நடப்பவனாகலின், 'அவன் மன மனையான்' என்றதென்க. இதனாற் சுமந்திரன் சீராமன்மாளிகையடைந்தமை யுணர்த்தப்பட்டது. (சஅ)

பெண்ணி னின்னமு தன்னவ டன்னொடும் பிரியா
வண்ண வெஞ்சிலைக் குரிசிலு மருங்கினி திருப்ப
அண்ண லாண்டிருந் தானழ கருநற வெனத்தன்
கண்ணு முள்ளமும் வண்டெனக் களிப்புறக் கண்டான்.

(இ - ள்.) அண்ணல் - பெரியோனும், பெண்ணின் இன் அமுது அன்னவள் தன்னொடும் - பெண்களில் இனிமையாகிய அமுதம்போன்ற சனகி யுடன், பிரியாவண்ணம் வெஞ்சிலை குரிசிலும் மருங்கினிதிருப்ப ஆண்டுஇருந் தான் - தன்னை நீங்காமல் அழகிய கொடிதாகிய வில்லேந்திய இளையவனு மருகிலிருப்ப அங்கெழுந்தருளியிருந்தானுமாகிய இறைவனது, அழகு அருநறவென - அழகே அருமையாகிய தேன்போல, தன்கண்ணும் உள்ளமும் வண்டென - தன் கண்ணு நெஞ்சும்வண்டுபோல,களிப்புறகண்டான் - களிப் பினையடையும்படி கண்டனன். எ-று.

இருப்பநறவென, வண்டெனக்களிப்புறக் கண்டானென்றியைக்க. அமு தன்னவ டன்னொடும் பிரியாக்குரிசிலும் இருப்ப அண்ணல் இருந்தா னழ குறக்கண்டான் என வினைமுடிக்க. அமுது வடமொழிச்சிதைவு,ஈண்டு'அழகு

நறவு' எனவும், 'கண்ணுமுள்ளமும் வண்டு' எனவுங்கூறினமை உருவகம். இதனாற் ஸ்ரீராமனைக்கண்டதுணர்த்தப்பட்டது. (௬௬)

கண்டு கைதொழு தையவிக் கடலிடைக் கிழவோன்
உண்டொர் காரியம் வருகென வுரைத்தன னெனலும்
புண்ட ரீகக்கட் புரவலன் பொருக்கென வெழுந்தோர்
கொண்டல் போலவன் கொடிநெடுந் தேர்மிசைக் கொண்டான்.

(இ - ள்.) கண்டு கை தொழுதுஐய - பார்த்துவணங்கி நின்று ஐயனே! இக்கடலிடைக் கிழவோன் - இக்கடல் புடைசூழ்ந்த வுலகமுழுதாளும் சக்கரவர்த்தி, ஓர் காரியம் உண்டு வருகவென வுரைத்தனன்எனலும் - ஒரு காரியமுண்டு வருகவென்று கூறினனென்னலும, புண்டரீகம்கண் புரவலன் - தாமரைமலர்போலும் கண்களையுடைய இறைவன், பொருக்கெனவெழுந்து-விரைவாகவெழுந்து, ஓர் கொண்டல்போல் அவன் கொடிநெடுந் தேர்மிசை கொண்டான் - ஒரு மேகம்போல் அவனது கொடிமிடைந்த பெருந்தேரிலேறினன்.

மேகம் கோடையைத்தணிப்பான் மழைபெய்ய வெழுதல்போல் தேவர் துயரந்தீர்ப்பா னெழுபவனாகவின் 'கொண்டல்போலவன் கொடிநெடுந்தேர் மிசைக்கொண்டான்' என்றும், அதற்குக்காரணம் அவன்பெருங்கருணையே யாகலின் அவனருள் பொழியுங்கண்ணைப் 'புண்டரீகக்கண்' என்றுங் கூறினார். பொருக்கென விரைவுக்குறிப்பு. கண்டு, தொழுது, உரைத்தனன், எனலும், எழுந்துகொண்டான் என வினைமுடிக்க. இதனாற் சுமந்திரன் விண்ணப்பித்தமையும் ஸ்ரீராமன் தேரேறினமையு முணர்த்தப்பட்டது. (௬௭)

முறையின் மொய்முகி லெனமுர சார்த்திட மடவார்
இறைக ழன்றசங் கார்த்திட விமையவ ரெங்கள்
குறைமு டிந்ததென் றார்த்திடக் குஞ்சியைச் சூழ்ந்த
நறைய லங்கல்வண் டார்த்திடத் தேர்மிசை நடந்தான்.

(இ - ள்.) முறையில் மொய்முகில்என முரசு ஆர்த்திட-முறையாக மொய்த்த மேகங்களென முரசங்களாரவாரிக்க, மடவார் இறைகழன்ற சங்கார்த்திட-மாதருடைய கையினின்றுங்கழன்ற வளையலாரவாரிக்க, இமையவர் எங்கள் குறைமுடிந்தது என்றுஆர்த்திட-தேவர்கள் எங்கள்குறைமுற்றுப்பெற்றதென்றாரவாரிக்க, குஞ்சியைச்சூழ்ந்த நறை அலங்கல் வண்டு ஆர்த்திட-குடிமியைச் சூழ்ந்த தேனையுண்ணும் வண்டுகளாரவாரிக்க, தேர்மிசைநடந்தான் - தேரிலேறிச்சென்றனன்.

தந்தைபாற்செல்ல வருவோனாகலின் அரசர்க்குரிய முறையின் முரசடிபடுதலான் அதன் மிகுதிநோக்கி உவமைமுகத்தான் 'மொய்முகிலெனமுர சார்த்திட' என்றும், மாதர் வீதிவாய் அவனழகைக்கண்டு மொய்த்துநின்று ஏங்கலான் 'மடவார்நிறைகழன்றசங்கார்த்திட' என்றும், தேவர்கள் இன்று இறை

வன் தாதைபாற்சேறலாற் றங்கள் குறைமுற்றுப்பெறுதல் போலார்த்தலின் 'இமையவர் குறைமுடிந்ததென்றார்த்திட' என்றும், தான் தேரில் வருகையில் அதன் அதிர்ச்சியால் மாலையில் வண்டுகளார்த்தலான் 'குஞ்சியைச்சூழ்ந்த நறையலங்கல் வண்டார்த்திட' என்றுங் கூறினர். இறை ஆகுபெயர். மேகமுழக்கமென முரசொலியைக்கூறினர்; ‡"கோலமாமுரசிடியுமிழ்தழங்கென முழங்க" எனப்பிறருங்கூறுவது நோக்கி. இதனாற் சீராமன் தேரிலேறி வீதிவந்தமை யுணர்த்தப்பட்டது. (௩௧)

(1) பணைநி றைந்தன பாட்டொலி நிறைந்தன வனங்கன்
கணைநி றைந்தன நாணொலி கறங்கின நிறைப்பேர்
அணைநி றைந்தன வறிவெனும் பெரும்புன லனையார்
பிணைநி றைந்தெனப் பரந்தனர் நாணமும் பிரிந்தார்.

(இ-ள்.) பணைநிறைந்தன-ஊதுகொம்புநிறைந்தன, பாட்டொலிநிறைந்தன-பாட்டிேைசநிறைந்தன, நாணொலிகறங்கின - நாணினோசையொலித்தன, அனங்கன்கணை நிறைந்தன-மன்மதனுடைய பாணங்கள் நிறைந்தன, நிறைப்பேர் அணைநிறைந்திலன்ன அறிவெனும் பெரும்புனல்-கற்பாகிய பெரியதோரணையினின்றும் அறிவென்று சொல்லப்படும் பெரும்புனல் கடந்தாலொத்த, அனையார் பிணை நிறைந்தென - மாதரார் பெண்மான் நிரைபட நின்றாற்போல, நாணமும் பிரிந்தார் பரந்தனர் - நாணமு நீங்கிப் பரந்தனர்.

உருவிலியாகலின் அனங்கனென்றதென்க. அவன்கணையாவன தாமரை, *முல்லை, நெய்தல், மா, அசோகென்பன; அவற்றினியல்பு விரிப்பிற் பெருகும். நிறையைக்கூறினர் மாதர்க்கின்றியமையாத கற்பேபோலுஞ் சிறந்ததின்றாகலின்; இப்பெற்றி நோக்கியே * "உயிரினுஞ்சிறந்தன்று நாணே நாணினுஞ்-செயிர் தீர்காட்சிக் கற்புச்சிறந்தன்று" என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரும். நிறை - கற்பு - நிறையை யணையாகவும், அறிவைப் புனலாகவும் உருவகஞ்செய்தார். நாணம் மிகச்சிறந்ததென்பதற்குத் $ "தாயிற் சிறந்தன்று நாண்டையலாருக்கு" எனப் பெரியாரும் பணித்தமையானறிக.

(2) நீளெ முத்தொடர் வாயிலிற் குழையொடு நெகிழ்ந்த
ஆள கத்தினொ டரமியத் தலத்தினு மலர்ந்த
வாள ரத்தவேல் வண்டொடு கெண்டைகண் மயங்கச்
சாள ரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்.

(இ-ள்.) வாள் அரத்த வேல் வண்டொடு கெண்டைகள் மயங்க - வாட்படையும் குருதிதோய்ந்த வேற்படையும் வண்டுகளோடு கெண்டைமீன்களுமயங்க, சாளரத்தினும் பூத்தனதாமரைமலர்கள் - சாளரவாசலினும் பூத்த

‡ சிந்தாமணி-இலக்கணையாரிலம்பகம், செ - ௩௫.
* தொல்காப்பியம் பொருள், சூ-௧௧௩.
$ திருக்கோவையார், செ-உ௱௪.

னவாகிய தாமரைமலர்கள், நீள்எழு தொடர் வாயிலில் - நீண்ட தூண்கள் தொடரப்பட்ட வாயிலின்கண், குழையொடு நெகிழ்ந்த அளகத்திேைடு அரமியத்தலத்தினுமலர்ந்த - குழையினேடு சோர்ந்த கூந்தலோடு நிலாமுற்றத்தினு மலர்ந்தன.

வாள் வேல் வண்டு கெண்டைகள் கண்ணுக்குவமம், தாமரைமுகத்திற்குவமம். அளகமென்றது நீட்டும்வழி நீட்டல். ‡ "வீடுமின்முற்றவும்" என்புழிப்போல. அரமியம் - நிலாமுற்றம், சாளரம் - சாலேகம், எழு - தூண். முகத்தைத் தாமரையாகக் கூறி அரமியமுதலியன நீர்நிலையாகக் கூருமையான் ஏகதேசவுருவகம். பூத்தன வினைப்பெயர், அரமியம் - வடமொழிச்சிதைவு.

(3) மண்ட லந்தரு மதிகெழு மழைமுகி லனைய
அண்டர் நாயகன் வரைபுரை யகலத்து ளலங்கல்
தொண்டை வாய்ச்சியர் நிறையொடு நாணொடுந் தொடர்ந்த
கெண்டை யும்முள கிளைபயில் வண்டொடுங் கிடந்த.

(இ-ள்.) மண்டலம் தரும்மதிகெழு மழை முகிலனைய-வட்டமாகியசந்திரனைப்போலும் முகத்தையுடையமழை முகில்போன்ற, அண்டர்நாயகன் வரைபுரைஅகலத்துள் அலங்கல்-தேவர் நாயகனுகிய இறைவனது மலைபோன்ற மார்பின்கண் வேய்ந்தமாலையில், தொண்டைவாய்ச்சியர்-ஆதொண்டங்கனியையொத்தவாயையுடைய மாதர், நிறையொடும் நாணொடும் தொடர்ந்த கெண்டையும்உள - கற்பினேடு நாணினேடுந் தொடரப்பட்ட கெண்டைமீன்களுமுள்ளன, கிளைபயில் வண்டொடும்கிடந்த - அவை கிளையென்னு மிசையைப் பழகிய வண்டினேடுந்தங்கி யிருந்தன.

நிறை மதியையே முகத்துக்குவமமாகக் கூறலின் 'மண்டலந்தருமதி' என்றும், இறைவன் கார்மேகம்போல்வானுகலின் 'மழைமுகிலனைய அண்டர்நாயகன்' என்றுங் கூறியதென்க. நாணுநிறையுமேலே விளக்கிக்காட்டினுமாண்டுக்காண்க. கிளை-இசை. அண்டர்நாயகனென்றூர் * " அயவர்வரு மமரர்களதிபதி" ஆகலின். வரை - ஆகுபெயர். இறைவனைக்கண்டவுடன் மாதர் நாணுநிறையுமகன்றனராகலின்'தொண்டைவாய்ச்சியர்நிறையொடுநாணொடுந் தொடர்ந்தகெண்டையும்முள' என்றூர். தேனை நாடிவந்த வண்டுகளோடு மார்பழகை நாடிவந்த கெண்டைகளு மயங்கின என்றவாறு. (ருச)

(4) சரிந்த பூவுள மழையொடு கலையுறத் தாழ்வ
பரிந்த பூவுள பணிக்கடை முத்தினம் படைப்ப
எரிந்த பூவுள விளமுலை யிழையிடை நுழைய
விரிந்த பூவுள மீனுடை வானின்றும் வீழ்வ.

(இ-ள்.) சரிந்த பூவுள - சாய்ந்தமலரினையுடைய, மழையொடு கலையுறத்தாழ்வ - கூந்தலாகிய மேகங்களோடும் நெற்றியாகிய கலைகள் மிகத்தாழ்

‡ திருவாய்மொழி, முதற்பத்து. உ-ம் பதிகம்.
* ஷை ஷை க-ம் பதிகம்.

வண, (அங்ஙனந்தாழ்கையில்) பரிந்த பூவுள பனிக்கடை முத்தினம்படைப்ப - இரங்கிய குவளைமலரினைப்போன்றகுளிர்ச்சிபொருந்திய கடைக்கண்முத்தின் கூட்டம்படைப்பன, எரிந்தபூவுள இளமுலை - தன்மேற்பட்டவழிகரிந்துபோகும் பூவையுடைய இளமுலை, இழையிடை நுழைய - பருத்து அணிகலங்களில் நுழைய, மீனுடைய வானின்றும் வீழ்வ-மீனையுடைய வான்போன்ற இடையினின்றும் வீழ்வனவாகிய, விரிந்த பூவுள - அவிழ்ந்த பூத்தொழில் செய்த ஆடைகளுமுள்ளன.

கூந்தலை மேகமாகவும், நெற்றியைக்கலையாகவும், கண்ணைக்குவளையாகவும், கண்ணீரை முத்தினமாகவும், கையைத்தாமரையாகவும், இடையை வானாகவும் உருவகம் செய்தார். கண்ணீர்வருதல் முலைவிம்முதல் இடையினின்று மாடைநெகிழ்தல் மாதர்கட்குக் காமவிகாரத்தானமைவன. மழையொடு கலையுறத்தாழ்வ என்றமையாற் சீராமனை மாதரார்மாடத்தினின்றுங் குனிந்துநோக்கினரென்ப துணர்த்தியவாறு. இனி, இரட்டுறமொழிதலான் 'மீனுடைவானின்றும் வீழ்வ விரிந்த பூவுள' என்றதொடர்க்கு 'இமையோர் குறைமுடிந்த தென்ரூர்த்திட' என்றதற்கேற்ப மீனையுடைய வானினின்றும் பொழிவனவாகிய விரிந்தமலர்களு முண்டெனக் கொள்ளினுமமையும்; இதற்கு வேறு கூறுவாருமுளர். (ருரு)

(5) வள்ளு றைகழித் தொளிர்வன வாணிமிர் மதியந்
தள்ளு றச்சுமந் தெழுதருந் தமனியக் கொம்பிற்
புள்ளி நுண்பனி பொடிப்பன பொன்னிடைப் பொதிந்த
எள்ளு டைப்பொரி விரவின வுளசில விளநீர்.

(இ - ள்.) வள் உறை கழித்து - நெருங்கிய உறையினின்றுங் கழித்து, ஒளிர்வன வாள் நிமிர் மதியம் தள்ளுற-விளங்குவனவாகிய வாளுடன் ஓங்கிய சந்திரன் தள்ளுப்புப்பட்டு நிற்க, சுமந்தெழுதருந்தமனியக்கொம்பில் - சுமவாநின்றெழுகின்ற பொற்கொடியில், உள சில இளநீர்-உள்ளனவாகிய இரண்டு இளநீர்கள், புள்ளி நுண்பனி பொடிப்பன - புள்ளிகளாகிய நுட்பமாகிய பனியரும்புவன,பொன்னிடை பொதிந்த எள்ளுடைய பொரிவிரவின - பொன்னை இடையிலே பொதியப்பெற்ற எட்பொரி கலந்தாலொக்கும்.

இமையை உறையாகவும், விழியை வாளாகவும், முகத்தை மதியாகவும், மாதராரைப் பூங்கொம்பாகவும், வியர்வினைப் பனியாகவும், தேமலைப் பொன்னாகவும், பசலைபோர்த்தலை எட்பொரியாகவும், கொங்கையை இளநீராகவு முருவகஞ்செய்தார். 'சில இளநீர்' என்புழி 'சில' என்பதற் கிரண்டெனப் பொருள் கொண்டமையை * "சில்காழல்குல், என்புழி 'சில்' என்றதற்கிரண்டு மணிவடமென நச்சினார்க்கினியர் கூறலானுமுணர்க. இவ்வைந்து செய்யுளானும் சீராமனைவீதிவாய்க்கண்ட மாதர்நிலைமையுணர்த்தப்பட்டது. (ருசு)

* திருமுருகாற்றுப்படை, வரி - கசு.

ஆய தவ்வழி நிகழ்தர வாடவ ரெல்லாந்
தாயை முன்னிய கன்றென நின்றுயிர் தளிர்ப்பத்
தூய தம்பியுந் தானுமச் சுமந்திரன் றேர்மேற்
போய கங்குளிர் புரவல னிருந்துழிப் புக்கான்.

(இ - ள்.) ஆயதவ்வழி நிகழ்தர-அத்தன்மையதாகிய செய்தி ஆங்கு நடப்ப, ஆடவரெல்லாம் -நகரமாந்தரெல்லாம், தாயை முன்னிய கன்றென நின்றுயிர்தளிர்ப்ப - தாயைக்கருதிய கன்றேபோல நின்று மனமகிழ்வெய்த, தூயதம்பியுந் தானும் அச்சுமந்திரன் தேர்மேல் போய்-பரிசுத்த குணமுள்ள தம்பியுந் தானும் அச்சுமந்திரன் கொணர்ந்த தேரிலேறிச்சென்று, அகங்குளிர்புரவலனிருந்துழி புக்கான் - தன்வருகையை நாடி மனமகிழ்கின்ற சக்கரவர்த்தி யிருக்குமிடத்தை யடைந்தனன்.—எ-று.

'ஆயதவ்வழி நிகழ்தர' என்றமையான் ஆடவரை வேறுகுறித்தோதினர். நடந்து அவ்வழி நிகழ்தரத் தளிர்ப்பப்போய்ப் புக்கானென வினைமுடிக்க. இறைவன் எவ்வுயிர்க்குந் தாயனையானாதலானும், ஈடுமெடுப்புமில்லாத புருடோத்தமனெனப் படுவானாதலானு நகரமாந்தரெல்லாம் 'தாயைமுன்னிய கன்றையொத்திருந்தனர்' எனஉவமை முகத்தாற் கூறினர். 'தம்பியுந்தானும்' எனச்சிறப்பினாற்பால்விரவி யுயர்திணை யாண்பான் முடிபேற்றது "தானுந் தேரும்பாகனும் வந்தென்னலனுண்டான்" என்புழிப்போல. ஆயதவ்வழி நிகழ்தர என்றது மேல் மாதர்கள் நின்றநிலைமையை. இதனாற் சீராமன் சக்கரவர்த்தியை யடைந்தமை யுணர்த்தப்பட்டது. (௱எ)

மாத வன்றனை வரன்முறை வணங்கிவா ளுழவன்
பாத பங்கயம் பணிந்தனன் பணிதலு மனையான்
காதல் பொங்கிடக் கண்பனி யுகுத்திடக் கனிவாய்ச்
சீதை கொண்கனைத் திருவுறை மார்பகஞ் சேர்த்தான்.

(இ - ள்.) மாதவன்றனை வரன்முறை வணங்கி-பெருந்தவத்தையுடைய வசிட்டமுனிவனை வரலாற்று முறையே வணங்கி, வாளுழவன் பாதபங்கயம் பணிந்தனன் - வாளையுடைய சக்கரவர்த்தியடித்தாமரைமலரை வணங்கினன், பணிதலுமனையான் காதல் பொங்கிட் கண்பனி யுகுத்திட-வணங்கலும் அவன் பரிவுமிகக்கண்ணினீர்பெருக, கனிவாய் சீதை கொண்கனை திருவுறை மார்பகம் சேர்த்தான் - ஆதொண்டங்கனிபோலும் வாயையுடைய சனகிக்கு நாயகனாகிய சீராமனைத் திருமகள் வசிக்குந் தன் மார்பினிலணைத்தனன். எ-று.

கண்ணினீர்பெருகுதற்குக் காரணம் காதல்மிகுதியாதலாற் காரணகாரிய முறையே வைத்தார். இதனை, * " அன்பிற்கு முண்டோ " என்றதனானு மதனுரையானும் பரக்கக்காண்க. கொண்கன் - கணவன், உழவன் - வீரன். வரன்முறையென்றது வணங்கவேண்டிய முறை; அதனை முற்காட்டி

* திருக்குறள், செ - எக.

ணும், ஆண்டுக்காண்க. பாதபங்கயம் இருபெயரொட்டுப் பண்புத்தொகை;வட நூன்முடிபு; † "ஆதிபகவன்" என்புழிப்போல. (ருஅ)

நலங்கொண் மைந்தனைத் தழுவின னென்பதென் னளிநீர்
நிலங்க டாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்
விலங்க லன்னதிண் டோளையு மெய்த்திரு விருக்கு
மலங்கன் மார்பையுந் தனதுதோண் மார்புகொண் டளந்தான்.

(இ - ள்.) நலங்கொள் மைந்தனை-நன்மையைக்கொண்ட மகனாகிய சீராமனை, தழுவினன் என்பது என் - தழுவினானென்று சொல்வது யாது? நளி நீர் நிலங்கள் தாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்-கடல்சூழ்ந்த வுலகங்களைத் தாங்குகின்ற நிலையை அளவையிட நினைந்து, விலங்கல் அன்னதிண் தோளையும்-மலைபோன்ற திண்ணிய தோளையும், மெய்திரு இருக்கும் அலங்கல் மார்பையும் - மெய்மையாகிய திருமகள் தங்கும் மாலையையணிந்த மார்பினையும், தனது தோள் மார்புகொண்டு அளந்தான்-தனது தோளையும் மார்பையுங் கொண்டளந்தனன்.—எ-று.

நற்குணங்கட்கெல்லா மிருக்கையாகலின் 'நலங்கொள்மைந்தன்' என்றதென்க.உலகபாரந் தாங்குந் தக்கதோளும் மார்புமுடையனோ வல்லனோவென அளப்பான்போன்று 'விலங்கலன்னதிண்டோளையு மெய்த்திருவிருக்கு-மலங்கன் மார்பையுந் தனது தோண்மார்புகொண்டளந்தான்' என்றார். இவ்விரண்டு செய்யுளானும் சீராமன்கண்டமையும், சக்கரவர்த்தி அவனைத்தழுவினமையும் உணர்த்தப்பட்டன. (ருகூ)

(1) ஆண்டு தன்மருங் கிரீஇயுவந் தன்புறநோக்கிப்
பூண்ட போர்மழு வுடையவ னெடும்புகழ் குறுக
நீண்ட தோளைய நிற்பயந் தெடுத்தயா னின்னை
வேண்டி யெய்திட விரைவதொன் றுளதென விளம்பும்.

(இ - ள்.) ஆண்டு தன் மருங்கு இரீஇ அன்பு உவந்துறநோக்கி - ஆங்குதன்னிடத்திருத்தி யன்பான் மகிழ்ந்து பார்த்து, பூண்டபோர் மழுவுடையவன் நெடும்புகழ் குறுக நீண்டதோள் ஐய-போர்த்தொழின் மேற்கொண்ட பரசுராமனது நெடும்புகழ்குறைபட நீண்ட தோளையுடைய ஐயனே, நின் பயந்து எடுத்த யான், உன்னைப்பெற்றெடுத்த யான், நின்னை வேண்டியெய்திட - உன்னை வேண்டியடைய, விரைவ தொன்றுதுளதென விளம்பும்-விரைந்து கேட்பதொன்றுண்டெனச்சொல்லும்.

தன்குலத்தவர்க்கெல்லா மிடுக்கண்செய்த மழுப்படையுடைய விராமனை வெற்றிகொண்ட வெற்றித்திறலை விளக்கப் 'பூண்டபோர்மழுவுடையவனெடும்புகழ்குறுக நீண்டதோளைய' என்றும், மெய்யுணர்ச்சியின்றி வினையாற்

† திருக்குறள், செ - க.

பிறப்பழுந்திய யான் நின்னைப் பெற்றதனாற் பெறத்தக்கது நின்னைவேண்டித் தவஞ்செய்வதேயென்பான் 'நிற்பயந்தெடுத்த யானின்னை வேண்டியெய்திட வினைவதொன்றுளது' என்றுங்கூறினர். முன்னையவதரித்த மழுப்படையிராமனினு மிவ்வவதாரத்தின் சிறப்புத்தோன்ற 'மழுவுடையவன் நெடும்புகழ்குறுக நீண்டதோளைய' என்றாரெனினு மமையும். இரீஇ உவந்து நோக்கி வேண்டியெய்திட வுளதென விளம்புமென வினைமுடிக்க. இரீஇ பிறவினை வினையெச்சம். (கூ0)

(2) ஐய சாலவு மலசின னரும்பெரு மூப்பும்
வெய்ய தாயது வியலிடப் பெரும்பரம் விசித்த
தொய்யன் மாநிலச் சுமையுறு சிறைதுறந் தினியான்
உய்ய லாவதோர் நெறிபுக வுதவிட வேண்டும்.

(இ-ள்.) ஐய - ஐயனே, சாலவுமலசினன் - மிகவும் வருந்தினேன், அரும்பெரு மூப்பும் வெய்யதாயது - அருமையாகிய பெருமூப்பும் கொடியதாயது, வியலிடம் பெரும்பரம் விசித்த தொய்யன்மாநிலம் சுமையுறு சிறைதுறந்து - பெரியவிடமாகிய பெரும்பாரந்தாங்கிய மாநிலமென்னும் சுமையாகப் பொருந்திய காவலை நீங்கி, இனி யான் உய்யலாவதோர் நெறிபுக வுதவிடவேண்டும் - யான் இனி பிழைப்பதாகிய ஒப்பற்ற வழியிற் புகவுதவ வேண்டும்.

வியலிடமாகிய மாநிலமென்றாட்டுக. முதுமைப்பருவம் தவத்தை விரும்பச் செய்வதாகலின் 'அரும்பெருமூப்பும் வெய்யதாயது' என்றார்; இது 'விரும்பிய மூப்பெனும் வீடுகண்டயான்' என முற்கூறிப் போந்தமையை வலியுறுத்தற்கு. பாரமென்றது குறுக்கும்வழி குறுக்கல் பெற்றது. பொல்லா வாக்கையின் புணர்ப்பினை யறுக்க வேண்டுவோனாதலின் 'தொய்யன்மாநிலச் சுமையுறு சிறைதுறந்து' என்றும், * "கண்டுகேட்டுற்றுமோந் துண்டுழலுமைங்கருவி - கண்டவின்பந் தெரிவரிய வளவில்லாச் சிற்றின்பம்" ஆதலின் ‡ "உளங்கொண்ஞானத்துவைம்மின்" என்பார் 'உய்யலாவதோர் நெறிபுகவுதவிடவேண்டும்' என்றுங் கூறினர். வியல் உரிச்சொல். அலசினன், வெய்யதாயது, துறந்துபுக வுதவிடவேண்டுமென வினைமுடிக்க. (கூக)

(3) உருமை மைந்தரைப் பெறுகின்ற துறுதுயர் நீங்கி
யிருமை யும்பெறற் கென்பது பெரியவ ரியற்கை
தரும மன்னநிற் றந்தயான் றளர்வது தகவோ
கரும மென்வயிற் செய்யிலென் கட்டுரை கோடி.

---

* திருவாய்மொழி ச-ம் பத்து ; ம-ம் திருப்பதிகம்.

‡ ஷை ரு-ம் பத்து, க-ம் திருப்பதிகம்.

(இ-ள்.) உருமை மைந்தரை பெறுகின்றது-உரிமையனைத்தும் உடைய மக்களைப்பெறுவது, உறுதுயர் நீங்கி இருமையும் பெறற்கென்பது பெரியவரியற்கை - இம்மை மறுமையென்னும் இரண்டனையும் அடைவதற்கெனப்படுவது மேலோரியல்பு, தருமமன்ன நின் தந்தை யான் தளர்வது தகவோ-அறக்கடவுளைப்போன்ற உன்னைப்பெற்ற யான் தளர்ச்சியடைவது தகுதியோ, கருமம் என்வயின் செய்யில் - என்பால் குற்றேவலைச்செய்ய விரும்பினையாயின், என் கட்டுரைகோடி - என் உறுதிமொழியைக்கொள்.

¶ "தம்மிற்றம்மக்களறிவுடைமை" பெற்றுச்சிறத்தலான் இம்மைப் பயனும், நீர்க்கடன் முதலிய செய்து தம்மை நல்லுலகின்கண் செலுத்தலான் மறுமைப்பயனும் பெறுவித்தலின் 'இருமையும்பெறற்கு' என்றும், பெறுவிப்பார் மக்களாதலின் அதுபற்றி 'உருமைமைந்தரைப்பெறுகின்றது' என்றும், இது உலகியல்பென்பார் 'பெரியவரியற்கை' என்றும், அறவாழியந்தணனாகிய நின்னையே மகவாகப்பெற்ற யான் வருந்தலாகாதென்பார் 'தருமமன்ன நிற்றந்தயான் றளர்வதுதகவோ' என்றும், தந்தைசொன் மந்திரமாக்கொண்டு யான் வேண்டு மிது செய்தல் நின்கடனென்பார் 'கருமமென்வயிற்செய்யிலென் கட்டுரைகோடி' என்றுங் கூறினர். (சுஉ)

(4) மைந்த நங்குல மரபினின் மணிமுடி வேந்தர்
தந்த மக்களே கடைமுறை நெடுநிலந் தாங்க
வைந்தொ டாகிய முப்பகை மருங்கற வகற்றி
யுய்ந்து போயின ரூழிநின் றெண்ணினு முலவார்.

(இ-ள்.) மைந்த - மகனே! நங்குலமரபினின் மணிமுடிவேந்தர் தம்தம் மக்களே கடைமுறை நெடுநிலம் தாங்க - நமது சிறந்த மரபிற்றோன்றிய இரத்தினம்பதித்த முடிவேந்தர்கள் தந்தம் மக்களே முதுமைப்பருவத்து நெடிய பூமிபாரந்தாங்க, ஐந்தோடு ஆகிய முப்பகை மருங்கு அற அகற்றி - இந்தியங்களைந்தானுமுண்டாகிய முப்பகையினையும் சுவடொழிய நீக்கி, உய்ந்துபோயினர்-பிழைத்துப்போயினர், ஊழி நின்று எண்ணினு முலவார் - அவர் தொகையை ஊழியென்னுங்கணக்காக நின்றெண்ணினாலும் குறைபடார்.

அணியரங்கந்தந்த இட்சுவாகுமுதலிய வரசரெல்லாரும் முதுமை வந்த வழித்தத்தம் புதல்வர்க்கு மணிமுடிசூட்டித் தவஞ்செய்யச் சென்றனராகலின் 'நங்குலமரபினின் மணிமுடிவேந்தர் தந்தமக்களே கடைமுறை நெடுநிலந் தாங்க-வுய்ந்துபோயினர்'என்றும்,அவர் உய்ந்துபோவதற்குக்காரணம் இன்னதென்பான் 'ஐந்தொடாகியமுப்பகைமருங்கறவகற்றி' என்றும்,அவர் அளவில்லாதாரென்பதுபற்றி 'ஊழி நின்றெண்ணினுமுலவார்' என்றும் கூறினர். 'நங்குலமரபினின் மணிமுடிவேந்தர்' என்றது - மனுதொடங்கித் தன்னையுள்ளிட்டவரை. ஐந்தென்றது தொகைக்குறிப்பாய் இந்தியமைந்தனையுமுணர்த்திநின்றது.ஐந்தொடாகிய என்புழி ஒடு உருபு ஆனுருபின்பொருளது.

¶ திருக்குறள், செ - சுஅ.

(5) முன்னை யூழ்வினைப் பயத்தினு முற்றிய வேள்வி
பின்னை யெய்திய நலத்தினு மரிதினிற் பெற்றேன்
இன்னம் யானிந்த வரசிய லிடும்பைய னென்ருல்
னின்னை யீன்றுள பயத்தினி னிரம்புவ தியாதோ.

(இ - ள்.) முன்னை ஊழ்வினைபயத்தினும் - முன்னைப் பிறவியிற்செய்த தவத்தானும், முற்றிய வேள்வி பின்னை யெய்திய நலத்தினும்-வேள்வியைப் பின்னர் செய்த நலத்தானும், அரிதின் நின்பெற்றேன்-அருமையாக நின்னைப் பெற்றனன், இன்னம் யான் இந்த அரசியல் இடும்பையன் என்ருல் - இன்னும் நான் இவ்வரசபாரந்தாங்குவதாகிய துன்பமுடையவனென்னின், நின்னை ஈன்றுள பயத்தினின் - நின்னைப்பெற்ற பயனல், நிரம்புவது யாது - நிறைவது யாது.

தாம் செய்த நல்வினை ஊட்டாது கழியாமையானும், பரிமேத முதலிய வேள்வியின் பயனும் பெற்ற மகப்பேறென்பான் 'முன்னை யூழ்வினைப்பயத்தினு முற்றியவேள்வி பின்னையெய்திய நலத்தினுமரிதினிற்பெற்றேன்' என்றும், நின்னைப்பெற்றதாற்பெற்ற பயன் தவஞ்செய்தே வீடுபெறவேண்டும், அவ்வாறு செய்திலேனென்பார் 'இன்னம்யானிந்த வரசியலிடும்பையனென்ருல்-நின்னையீன்றுளபயத்தினி னிரம்புவதியாதோ' என்றுங் கூறினர். (கூச)

(6) ஒருத்த லைப்பரத் தொருத்தலைப் பங்குவி னூர்தி
யெருத்தி னீங்குநின் றியல்வரக் குழைந்திட ருழக்கும்
வருத்த நீங்கியவ் வரம்பறு திருவினை மருவும்
அருத்தி யுண்டெனக் கையவீ தருளிட வேண்டும்.

(இ-ள்.) ஒருதலை பரத்து ஒருத்தலை-ஒருபாற்பூட்டிய பாரத்தையுடைய வண்டியினெருதுபோலும், பங்குவின் ஊர்தியெருத்தின்-முடவனது வாகனமாவோன் பிடர்போலும், ஈங்கு நின்று இயல்வர குழைந்து இடருழக்கும் வருத்த நீங்கி-இங்கேநின்று திரிய மனங்குழைந்து துயருறும் துன்பமொழிந்து, அவ்வரம்பறுதிருவினை மருவும் அருத்தியுண்டு - அவ்வெல்லையில்லாத செல்வத்தை யெய்தப்பெறும் ஆசையுளது, எனக்கு ஐய ஈதருளிட வேண்டும் - எண்க்கையனே இதனை யருளவேண்டும்.

துணையின்மையான் 'ஒருத்தலைப்பரத்து' என்றும், நீங்காத துன்பமாதலான் 'பங்குவினூர்தியெருத்தின்' என்றுங் கூறினர். பங்குவினூர்தியெருத்தினென்பதற்குச் சனியினூர்தியாகிய காகத்தின் பிடர்போன்று என்றுரைப்பாருமுளர். காகத்தின் கண்ணிரண்டிற்கொன்றே மணிபோலக் காதலனுக்குங் காதலிக்கு மொத்த மனத்தைக் குறித்ததன்றிப் பிறிதன்மையினஃது வமையாகாமையறிக. 'அவ்வரம்பறுதிரு' வென்ருர் நிரதிசய வின்பமென்பது பற்றி என்க. (கூரு)

(7) ஆளு நன்னெறிக் கமைவரு மமைவின னாகி
நாளு நங்குல நாயக னறைவிரி கமலத்
தாளி னல்கிய கங்கையைத் தந்துதந் தையரை
மீள்வி லின்னுல கேற்றின னொருமகன் மேனாள்.

(இ - ள்.) ஆளும் நல் நெறிக்கு அமைவரு மமைவினனாகி - ஆள்கின்ற நன்மையாகிய நெறிக்குப் பொருந்துகின்ற அமைவுடையானாகி, நாளும் நம் குலநாயகன் - எந்நாளும் நம்மரபிற்கு இறைவனது, நறைவிரி கமலத்தாளினல்கிய-விரிந்த தாமரைமலர்போன்ற தாளிற்பிறந்த, கங்கையைத்தந்து-கங்கையைக்கொணர்ந்து, தந்தையரை மீள்வில் இன் உலகேற்றினன் ஒருமகன் மேனாள்-தாதையரை ஒருமகன் முன்னானான்று மீளாத இனிய வுலகத்தில் ஏற்றினன்.

ஒருமகனென்றது பகீரதனை. நங்குலநாயகன் என்றது ஆயிரமோலியானை; அவர் இட்சுவாகுவாற் கொணரப்பட்டமையை 'பிணியரங்கவினையகலப்பெருங்காலந்தவம்பேணி-மணியரங்கநெடுமுடியாய் மலரயனைவழிபட்டுப்-பணியரங்கநெடும்பாயற் பரஞ்சுடர்' என்று முற்காண்டத்துக் கூறலானுமுணர்க. தந்தையரென்றது சகரன்மைந்தரை. மீள்வில் இன்னுலகென்றது ஒளிவிசும்பை; முத்தராயினார் மீண்டும் பிறவாமையின்; மீள்வினின்னுலகமெனப் பாடங்கூறுவாருமுளர். அற்றேல் ஆண்டுச்சென்றார் மீண்டும் லீலாவிபூதியடையாமையானும், அது நிரதிசயவின்பம் பயக்கு முலகமாதலானும் பொருந்தாமையறிக. கங்கை இறைவன்றாளிற் பிறந்தமையை 'அண்டகோளகைப்புறத்ததா யகிலமன்றளந்த-புண்டரீகமென்பதத்திடைப்பிறந்து' என்று முற்காண்டத்துக் கூறுதல் காண்க. (சுசு)

(8) மன்ன ரானவ ரல்லர்மேல் வானவர்க் கரசாம்
பொன்னின் வார்கழற் புரந்தரன் போலிய ரல்லர்
பின்னு மாதவந் தொடங்கிநோன் பிழைத்தவர் பிறரார்
சொன்ம ருமகப் பெற்றவ ரருந்துயர் துறந்தார்.

(இ - ள்.) மன்னரானவர் அல்லர் - அரசராவாரல்லர், மேல் - மேலும், வானவர்க்கு அரசாம் பொன்னின் வார்கழல் புரந்தரன்போலியர் அல்லர்-தேவர்கட்கரசனாகிய பொன்னாலாகிய நீண்ட வீரக்கழலையணிந்த இந்திரன் போன்றவரல்லர், பின்னும் மாதவம்தொடங்கி நோன்பு இழைத்தவர்-மீட்டும் பெருந்தவந் தொடங்கி நோற்றவர், பிறரார்-வேறியாவர், சொன்மருமகபெற்றவர் அருந்துயர் துறந்தார் - சொற்றவறுத மக்கட்பேறு பெற்றவரே அருமையாகிய துன்பமொழிந்தனர்.

மன்னவர் செல்வத்தினுஞ் சிறந்த செல்வ மின்மையான் 'மன்னரானவர்' என்றும், அவரினும் வானவர்க்கரசாக வீற்றிருத்தல் சிறப்புடைமையான் 'மேல்வானவர்க்கரசாம் பொன்னின் வார்கழற் புரந்தரன் போலியர்' என்றும்,

தம் மேவலின் வழிநின்ற மக்களைப்பெறுதவழி அச்செல்வத்தைப் பொருளெனக் கொளப்படாமையின் 'சொன்மருமகப்பெற்றவர்' என்றும், அவரே துயரினின்று நீக்கினரென்பதுபடப் 'பின்னுமாதவந்தொடங்கி நோன்பிழைத்தவர்' என்றும், அவரா யல்லதில்லை யென்பார் 'பிறரார் அருந்துயர் துறந்தார்' என்றுங்கூறினர். (சூஎ)

(9) அனைய தாதலி னருந்துயர்ப் பெரும்பர மரசன்
வினையி னென்வயின் வைத்தன னெனக்கொள வேண்டா
புனையு மாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க
நினையல் வேண்டும்யா னின்வயிற் பெறுவதீ தென்றான்.

(இ-ள்.) அருந்துயர் பெரும்பரம் - அரிதாகிய துன்பம் விளைக்கும் அரசபாரம், அனையது ஆதலின் - அத்தன்மையதாதலின், அரசன் வினையினென்வயின் வைத்தனனென - அரசன் வஞ்சனையால் உன்பால் இறுத்தனன் என்று, கொள்ளவேண்டா - கொள்ளல் தக்கதாகா, புனையுமாமுடிபுனைந்து - அணியத்தக்க பெரியமுடியினையணிந்து, இந்த நல்லறம்புரக்க, இந்த நன்மையாகிய அறத்தினை யோம்ப, நினையல்வேண்டும்-நினைதல் வேண்டத்தக்கது, யான் நின்வயிற்பெறுவது ஈது என்றான் - யானின்பாலடைவதிது வென்று கூறினான்.—எ-று.

மலரயனை வழிபட்டு அணியரங்கந்தந்த இட்சுவாகு தொடக்கத்தவர் புனைந்த முடியை நீ புனைதன் முறையென்பார் 'புனையுமாமுடிபுனைந்து' என்றும்; நீயவரைப்போன்றாளுதன் முறையென்பார் 'இந்தநல்லறம்புரக்க நினையல்வேண்டும்' என்றும், இது நினக்கே கடனென்பார் 'நின்வயிற்பெறுவதீதென்றான்' என்றுங்கூறினர். 'வினையினென்வயின் வைத்தனன்' என்றது வஞ்சகமன்று, அறனெறியென்பது பற்றியென்க. இவ்வொன்பது செய்யுளானுஞ் சக்கரவர்த்தி சீராமனை மணிமுடி சூடவேண்ட லுணர்த்தப்பட்டது.

தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லுற்றில னிகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்தும்
யாது கொற்றவ னேவிய ததுசெய லன்றோ
நீதி யெற்கென நினைந்துமப் பணிதலை நின்றான்.

(இ - ள்.) தாதை அப்பரிசு உரைசெய-தந்தை அவ்வாறுரைக்க, தாமரை கண்ணன்-செந்தாமரைமலர்போலுங்கண்ணையுடைய இறைவன், காதல்உற்றிலன் - ஆசையடைந்திலன், இகழ்ந்திலன் - தடுத்திலன், கடனிதென்றுணர்ந்தும் - அவ்வாறு தாங்குவதே யுரிமையென்றறிந்தும், கொற்றவன் ஏவியது யாது-அரசன் கட்டளையாது, அது செயலன்றோ நீதியெற்கென நினைந்தும்-அது செய்துமுடிப்பதன்றோ நீதியெனக்கெனவெண்ணியும், அப்பணிதலை நின்றான் - அக்கட்டளை மேற்கொண்டு நின்றனன்.—எ-று.

தந்தைசொன்மறுது நிற்றலே கடனுதலானும், அதுவே பெருந்தவமாத லானும் 'யாதுகொற்றவனேவியததுசெயலன்றோ - நீதியெற்கெனநினைந்து மப்பணிதலைநின்றான்' என்றார். காதலுற்றிலனிகழ்ந்திலனென்றது. 'சித்திரத் தினலர்ந்தசெந்தாமரை யொத்திருந்தமுகத்தினை' எனப் பிற்கூறுதலோக்கி. நினைத்தலுஞ் செய்வதனேடொக்குமர்கலி னங்ஙனங்கூறினர். எவரெவரைத் திறத்தரத் திறத்திறத்தராய் நின்றவரவர்க்காவன கூறி யவரவர்க்குப்பாலாய் நிற்கும் பகுதியானும், அகத்தாரது பகைமையும், புறத்தாரது பகைமையும் களையவேண்டுதலின் 'பெரும்பரம்' என்றதென்க. இதனுற் சீராமன் உடன் பட்டமையுணர்த்தப்பட்டது. (சுசு)

குரிசில் சிந்தையை மனங்கொண்ட கொற்றவெண் குடையான்
தருதி யிவ்வர மெனச்சொலி யுயிருறத் தழுவிச்
சுருதி யன்னதன் மந்திரச் சுற்றமுஞ் சுற்றப்
பொருவின் மேருவும் பொருவருங் கோயில்போய்ப் புக்கான்.

(இ-ள்.) குரிசில் சிந்தையை மனங்கொண்ட கொற்றவெண்குடையான்- சீராமபிரானது கருத்தைக்கண்ட வெண்கொற்றக் குடையையுடைய சக்கரவர்த்தி; இவ்வரம் தருதியெனச்சொலி - இவ்வரத்தையளித்தி யென்று கூறி, உயிருற தழுவி-உயிர்பொருந்தக் கட்டியணைத்து, சுருதியன்ன தன்மந்திரம் சுற்றமும்சுற்ற-வேதமே யன்ன தன் மந்திரிமார் கூட்டமும் சூழ, பொருவில் மேருவும் பொருவரும் கோயில்போய் புக்கான் - தனக்கொப்பில்லாத மேரு மலையும் ஒப்பாகாத மாளிகையிற் சென்றடைந்தனன்.—எ-று.

வேதமுதலிய வாய்த்த கலைகண் முதலியன வல்லுநராகலின் மந்திரச் சுற்றத்தாரைச் 'சுருதியனன' என்றுபசரித்துக் கூறினர். மேருவரை தேவர்கட்கிருக்கையேனும் அதனையே அவர்பெறவளித்த கொடையுடையானுடைய மாளிகைக் கொப்புமைகூறப்படாமையின் 'பொருவின் மேருவும் பொருவருங் கோயில்' என்றதென்க. இதனுல் அரசன் தன் மாளிகை சேர்ந்தமை யுணர்த்தப்பட்டது. (எ௰)

நிவந்த வந்தணர் நெடுந்தகை மன்னவர் நகரத்
துவந்த மைந்தர்கண் மடந்தைய ருழையர்பின் றொடரச்
சுமந்தி ரன்றடந் தேர்மிசைச் சுந்தரத் திரடோ
ளமைந்த மைந்தனுந் தன்னெடுங் கோயில்சென் றடைந்தான்.

(இ-ள்.) நிவந்த அந்தணர் - அறுதொழிலோங்கிய அழகிய தட்பமாகிய குணமுடைய மறையோர், நெடுந்தகை மன்னவர் - பெருந்தகைமையுடைய அரசர், நகரத்துவந்தமைந்தர்கள் - நகரத்தில் விரும்பிவசிக்கும் மாந்தர், மடந்தையர்-மாதர்,உழையர் பின்றொடர-அண்மையராய்ப் பின்சூழ்ந்து செல்ல, சுமந்திரன் தடந்தேர்மிசை - சுமந்திரன் பெருந்தேரிலேறி, சுந்தரம் திரள்தோ

ளமைந்த மைந்தனும்-அழகிய திரண்டதோளமையப்பெற்ற சீராமனும், தன் நெடுங் கோயில் சென்றடைந்தான் - தனது பெரியமாளிகைசென்று சேர்ந்தனன்.—எ-று.

அந்தணர் அறுதொழிலாவன - ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வேட்டல், வேட்பித்தலென்பன. இதனை * "இருமூன்றெய்திய வியல்பினின் வழாஅது" என்றதற்கு நச்சினார்க்கினியர் கூறுதலானுணர்க. அந்தணரென்பதற்கு வேதாந்தத்தை யணவுவாரெனவே நச்சினார்க்கினியர் பொருள் விரிப்பர். இதனை * "அந்தணர் வேள்வியோர்க்கும்மே" என்றபடையினும், ‡ "ஆறறியந்தணர்" என்ற கலியினும் காண்க. இதனால் சீராமன் தன் மாளிகை யடைந்தமை யுணர்த்தப்பட்டது. (எக)

(1) வென்றி வேந்தரை வருகவென் றுவணம்வீற் றிருந்த
பொன்றி ணிந்ததோட் டரும்பெற லிலச்சினை போக்கி
நன் று சித்திர நளிர்முடி கவித்தற்கு நல்லோய்
சென் று வேண்டுவ வரன்முறை யமைக்கெனச் செப்ப.

(இ-ள்.) வென்றி வேந்தரை வருகவென்று-வெற்றியையுடைய அரசரை வருகவென்று, பொன்றிணிந்த பெறலரும்தோடுப் பொன்னாலாகிய அரிய பெறுதலையுடைய திருமுகத்தை, உவணம் வீற்றிருந்த இலச்சினை போக்கி-கருடமுத்திரையுடன் தூதுவர் கையிலனுப்பி, சித்திரநளிர்முடி நன்று கவித்தற்கு-அழகிய மேன்மையாகிய முடியை நன்றாகத்தரிக்க, நல்லோய் வரன்முறைசென்று வேண்டுவ அமைக்கவெனச்செப்ப-நல்லதவத்தையுடையவனே வரலாற்று முறையாக வமைக்கவேண்டுவனவமைக்கவென்றுசொல்ல.—

வென்றி மன்னரென்றது பலதேயமன்னரை. வேண்டுவன என்றது உபகரணங்களை. நன்று என்ற குறிப்பால் நன்மைபயவாத மணிமுடியென வீண்டுங் குறிக்கப்பட்டது. நல்லீரென்றும் பாடம். இலச்சினையெனினும், குறியெனினு மடையாளமெனினுமொக்கும். 'உவணம்வீற்றிருந்த பொன்றிணிந்த தோட்டரும்பெறலிலச்சினை' என்றதற்கு வேறுரைப்பாருமுளர். § பெறலரும் என்பதை முன்பின்னாக நிறுத்தி அரிய பெறுதலையுடையவென்பொருள் கூறினார் பேராசிரியரும். (எஉ)

(2) உரிய மாதவ னுள்ளிதென் றமைந்தனன் விரைந்தோர்
பொருவி றேர்மிசை யந்தணர் குழாத்தொடும் போக
நிருபர் கேண்மின்க ளிராமற்கு நெறிமுறை மையினாற்
றிருவும் பூமியுஞ் சிந்தையிற் சிறந்தன வென்றான்.

(இ-ள்.) உரியமாதவன்-பெருந்தவத்திற்குரியவனாகியவசிட்டமுனிவன், ஒன்றிதென்றமைந்தனன்-ஓமென்றுடன்பட்டு, விரைந்து ஓர் பொருவில் தேர்

---

* திருமுருகாற்றுப்படை, வரி-கஎஎ, கூசு.

‡ கலித்தொகை, கடவுள்வாழ்த்து-வரி-௯. § திருக்கோவையார், செ-உகஅ.

மிசை அந்தணர்குழாத்தொடும் போக- விரைந்து ஒப்பில்லாத ஒரு தேரிலேறி அழகிய தட்பமாகிய குணத்தினையுடைய மறையோருடன் செல்ல, நிருபர் கேண்மின்கள், அரசரே கேண்மின்கள், இராமற்கு நெறிமுறைமையினால் - சிராமனுக்குத் தொன்று தொட்டு வருமுறைமையான், திருவும் பூமியும் - செல்வமும் அரசும், சிந்தையின் சிறந்தன வென்றான் - என் சிந்தையினும் சிறந்தன என்றனன்.—எ-று.

மாதவக்குரியானென முறையே முன்பின்னாக நிறுத்திப் பொருள் விரிக்கப்பட்டது; கொடிச்சேவலனென்புழிப்போல. நிருபர் விளிப்பெயர். கேண்மின்களென்பது விகுதிமேல் விகுதிபெற்றது. நன்றென்றதற்கேற்ப, நெறிமுறைமையினால் 'திருவும் பூமியுஞ் சிந்தையிற்சிறந்தன' என்ற தொடர்க்குத்தன் கருத்தின்வண்ணம் சிராமனுக்குத் திருவும்பூமியுந் தொன்றுதொட்டு வருமுறைமையினாற் சிறந்தன என்றதன்றிக், கைகேசி கருத்தின்வண்ணம் அன்னவை சிறந்தன அவள்பெற்ற வரத்தினென்றும் வேறுமொரு பொருடோன்றியவாறு. வருகவென்று போக்கியமைக்க எனச்செப்ப, ஒள்ளியதென்றமைந்தனன் விரைந்துபோக, கேண்மின்களென்றானென வினைமுடிக்க. இவ்விரண்டுசெய்யுளானும் பொன்னோலைபோக்கலும், வசிட்டமுனிவனை நோக்கி முடிகவிக்கவேண்டு முபகரணங்களை வேண்டியமைக்கக்கூறலும், அரசரைநோக்கி முடிகவிக்குஞ் செய்திகூறலு முணர்த்தப்பட்டன. (எகூ)

(1) இறைவன் சொல்லெனு மின்னற வருந்தினர் யாரும்
முறையி னின்றிலர் முகந்துறு களியிடை மூழ்கி
நிறையு நெஞ்சிடை யுவகைபோய் மயிர்வழி நிமிர
வுறையும் விண்ணக முடலொடு மெய்தின ரொத்தார்.

(இ-ள்.) இறைவன் சொல் எனும் இன்நறவருந்தினர் யாரும்-அரசனது மொழியெனப்படு மினிய தேனையுண்டவரெல்லாம், முகந்துறு களியிடை மூழ்கி-முகந்துகொண்ட களிப்பிலமுழ்ந்தி, முறையினின்றிலர்-முறையினில்லாமல், நிறையுநெஞ்சிடை உவகைபோய் மயிர்வழிநிமிர - நிறைந்த மனத்தின்கண் மகிழ்ச்சிசென்று மயிரின்வழிதோன்ற, உறையும் விண்ணகம் உடலொடு மெய்தினரொத்தார் - யாவரும் விரும்பியடையும் துறக்கத்தை யுடம்பினோடடைந்தவரை யொத்திருந்தனர்.—எ-று.

இன்பநிலைக்களமாகிய துறக்க முடம்பொழிந்தவழிக் கூடுவதன்றிக் கூடாமையின் 'விண்ணகமுடலொடு மெய்தினரொத்தார்' என்றும், ஆண்டமிழ்த முண்டல்போல் ஈண்டரசன்மொழி கேட்டதை 'இன்னறவருந்தினர்' என்றுங் கூறினர். (எச)

(2) ஒத்த சிந்தையி னுவகையி னொருவரோ டொருவர்
தத்த மக்குற்ற வரசெனத் தழைக்கின்ற மனத்தர்

முத்த வெண்குடை மன்னனை முறைமுறை தொழுதார்
அத்த நன்றென வன்பினோ டறிவிப்ப தானார்.

(இ - ள்.) ஒத்த சிந்தையர் உவகையர்-ஒத்த கருத்தினரும் மகிழ்ச்சியினரும், ஒருவர்க்கங்கொருவர் அரசு தம் தமக்குற்ற என தழைக்கின்ற மனத்தர்-ஒருவரினொருவர் அரசு தமக்கெய்தினாற்போலக் களிப்புறுகின்ற மனமுடையாருமாய், முத்த வெண்குடை மன்னனை முறைமுறை தொழுதார் - முத்தினானியன்ற வெண்குடையையுடைய அரசனைப் பலமுறை வணங்கி, அத்த நன்றென அன்பினோடு அறிவிப்பதானார்-ஐயனே ! நன்றென்று அன்பாய்த் தெரிவிப்பதாயினர்.

சீராமனுக்கு அரசுகிடைத்தவழி அவருடைய சிந்தையின் மகிழ்ச்சிபோலத் தாமும் அந்த வரசைப்பெற்றவாறு நினைக்கின்றமையான் 'ஒத்தசிந்தையருவகையர்' என்றதென்க. அனைவர்க்குந் தெய்வமன்னவனாகலின் 'அத்த' என்றார். அருந்தினர் யாரும் நின்றிலர் மூழ்கிப்போய் நிமிரவொத்துதொழுது அறிவிப்பதானாரென வினைமுடிக்க. (எரு)

கலிவிருத்தம்.

(3) மூவெழு முறைமையெங் குலங்கண் முற்றுறப்
பூவெழு மழுவினாற் பொருது போக்கிய
சேவகன் சேவகஞ் செகுத்த சேவகற்
காவவிவ் வுலகமீ தறனென் றாரரோ.

(இ-ள்.) மூவெழு முறைமை எங்குலங்கள் முற்றுற பூவெழு மழுவினால் பொருது போக்கிய - இருபத்தொருமுறை யெங்கள் குல முற்றுப்பெறக் கூர்மையெழுந்த மழுவினாற் போர்செய்து வெற்றிகொண்ட, சேவகன் சேவகம் செகுத்த சேவகற்கு - வீரனது ஆண்மையையழித்த ஆண்மையுடையனாகிய சீராமனுக்கு, இவ்வுலகம் ஆவ - இவ்வுலகமாகத்தக்கது, ஈது அறன் என்றார் - இதுவும் அறநெறியே யாகுமென்றனர்.—எ-று.

பூ-கூர்மை, பூவராவுவேலெனப் பிறகாண்டத்துக் கூறலானுமுணர்க. ஆவ அகரவீற்று வியங்கோள். நமது குலங்களை வேருடன்செற்றானைச்செற்ற வீரனுக்கே யுலகமாள்வது தக்கதென்பார் 'சேவகற்காவவிவ் வுலகமீதறனென்றார்' என்றதென்க. அரோ-அசை. இம்மூன்று செய்யுளானும் அரசர் கருத்துணர்த்தப்பட்டது. சொற்பின் வருநிலை. (எசு)

(1) வேறெலா மன்னரும் விரும்பி யின்னது
கூறினா ரதுமனங் கொண்ட கொற்றவன்
ஊறினா னுவகையை யொளிக்குஞ் சிந்தையான்
மாறுமோ ரளவைசால் வாய்மை கூறினான்.

(இ-ள்.) வேறு எல்லா மன்னரும் விரும்பி இன்னது கூறினார்-மற்றை யரசர் யாவரும் விரும்பி இன்னமொழியைக் கூறினர், அது மனம் கொண்ட

கொற்றவன் - அதனை மனத்திற்கொண்ட அரசன், கூறினன் உவகையை ஒளிக்கும் சிந்தையான் - அன்புமிகுந்து களிப்பிற் கரந்த மனமுடையனாய், மாறுமோரளவை சால்வாய்மை கூறினன்-வேறுமொரு பிரமாணம் நிரம்பிய சொல்லைக் கூறிமுடித்தான்.

'தயரதனையொழிந்த மன்னரை'வேறெலாமன்னரும்' என்றதென்க 'அரசன் கூறியதனைத்தும் வேதமொழியோ டொப்பனவாகலான் 'அளவைசால் வாய்மை' என்றார். (எஎ)

(2) மகவயி னன்பினான் மயங்கி யானிது
புகலநீர் புகன்றவிப் பொம்மல் வாசக
முகவையின் மொழிந்ததோ வுள்ள நோக்கியோ
தகவென நினைந்ததோ தன்மை யென்னென்றான்.

(இ-ள்.) மகவயினன்பினால் மயங்கி-மகனிடத்துக் காதலால் மயக்கமடைந்து, யானிது புகல - யானிதனைச்சொல்ல, நீர் புகன்ற இப்பொம்மல் வாசகம் உகவையின் மொழிந்ததோ - நீர் சொல்லிய வுசிதமொழி அன்பினாற் கூறியதோ, உள்ள நோக்கியோ-என் எண்ண நோக்கியோ, தகவு என நினைந்ததோ-தகுதியென்று நினைத்ததோ, தன்மை என் என்றான் - உங்கள் தன்மை யாதென்றனன்.—எ-று.

என்மகனென்று யான் மயங்கிக்கூறுவது தகாதென்பார் 'மகவயினன்பினான் மயங்கியானிதுபுகல' என்றும், அதனை அரசன் மொழியென்று தடுக்காமை உடன்பட்டமையான் 'நீர்புகன்ற இப்பொம்மல்வாசகம்' என்றும், எனக்கு மகிழ்ச்சி விளைக்கச்சொன்னதோ,என் கருத்தின்படி நடக்கத்துணிந்ததோ, இது பண்டையோர் வழக்கோ என்றின்னவெனத் துணியாமையான் 'உகவையின் மொழிந்ததோ வுள்ளநோக்கியோ தகவெனமொழிந்ததோ' என்றும் ஐயநிலையாற் கூறினார். இவ்விரண்டு செய்யுளானும் அரசவைநோக்கி வினாவிய துணர்த்தப்பட்டது. (எஅ)

(1) இவ்வகை யுரைசெய விருந்த வேந்தவை
செவ்விய நின்றிரு மகற்குத் தேர்ந்துளோ
ரவ்வவர்க் கவ்வவ ராற்ற வாற்றுறும்
எவ்வமி லன்பினை யினிது கேளென.

(இ-ள்.) இவ்வகை யுரைசெய - இவ்வாறு சொல்லியருள, இருந்த வேந்தவை-அங்கேயிருந்த அரசவையார், செவ்விய நின்றிருமகற்கு-செம்மையான குணத்தையுடைய நின்றிருமகனுக்கு, தேர்ந்துளோர் - கல்வியினுங் கேள்வியினுந் தேர்ந்த பெரியோராகிய, அவ்வவர்க்கு அவ்வவர் ஆற்ற ஆற்றுறும்-அவரவர்க் கவரவர் மிகுதியுஞ் செய்யாநின்ற, எவ்வமில் அன்பினை இனிது கேளென-குற்றம் தீர்ந்த அன்பினை இனிமையாகக் கேட்டருளென்று.—

எல்லா நற்குணங்கட்கு மிருப்பிடமாகலின் சொல்லிய நின்றிருமகன், என்றும், அவ்வன்பு எழுமையுந்தொடர்ந்த அன்பாகிய தலையளிபோல்வதாக லின் 'எவ்வமிலன்பு' என்றுங் கூறினர். (எக)

(2) தானமுந் தருமமுந் தகவுந் தன்மைசேர்
ஞானமு நல்லவர்ப் பேணு நன்மையும்
மானவ வையநின் மகற்கு வைகலும்
ஈனமில் செல்வம்வந் தியைக வென்னவே.

(இ-ள்.) மானவவைய - மனுகுலத்திற் சிறந்தோனே, தானமும் தருமமும் தகவும் தன்மைசேர் ஞானமும் நல்லவர் பேணு நன்மையும்-தானமும் அறனும் ஒழுக்கமும் மேன்மையமைந்த மெய்யுணர்ச்சியும் பெரியோரிடத்து வழிபாடும், நின்மகற்கு வைகலுமீனமில் செல்வம் வந்தியைகவென்ன- உன்மகனுக்குக் குற்றமற்ற அரசச்செல்வமும் வந்து பொருந்துக (என்று கூறுநிற்பர்).

மனுவின்வழி வந்தமையான் மானவவைய வென்றதென்க. தொன்று தொட்டுவந்த வரசச்செல்வமாதலின் 'ஈனமில்செல்வம்' என்றார். தானமென்றது பேற்றைக் கருதிச்செய்யுங் கொடை. தருமமென்றது பேற்றைக் கருதாதுசெய்யுங் கொடை. தகுதியென்றது நடுவுநிலைமை, அது பகைநொதுமல் நண்பென்னு முத்திறத்தினு மறத்தின் வழுவாது ஒப்ப நிற்கு நிலைமை. ஞானம் என்றது மெய்யுணர்ச்சி. நல்லவர்ப்பேணு நன்மை ஆக்கினைசக்கர முடையனாய்த் தவத்தான் மனந்தூயராய முனிவர்பாலும், ஆற்றலிற் சிறந்தோராய அரசர்பாலும், அறிவிற்சிறந்தோராய அமைச்சர்பாலும்கோதாட்டிக் குற்றங்கூறி யிகவாது காந்த பசாசம்போல யாவரையுந் தன் பணிவாற் கவரத் தக்கதன்மை. (அஎ)

(3) ஊருணி நிறையவு முதவு மாடுயர்
பார்கெழு பழுமரம் பழுத்தற் றூகவுங்
கார்மழை பொழியவுங் கழனி பாய்நதி
வார்புனல் பெருகவு மறுக்கின் றூர்கள்யார்.

(இ-ள்.) ஊருணிநிறையவும்- தண்ணீர்க்குளம் நிறையவும், உதவுமாடுஉயர் பார்கெழு பழுமரம் பழுத்து அற்றூகவும் - பயன்படும் நடுஊரிலுள்ள பழுத்தற்குரியமரம் பழுத்துப் பயனளிக்கவும், கார்மழைபொழியவும்-மேகம் மழைபொழியவும், கழனிபாய்நதி வார்புனல்பெருகவும் மறுக்கின்றூர்கள் யார்- வயலிற்பாயு மாற்றினது நீண்ட புனல்பெருகவுந் தடுப்பவர் யாவர்.

ஊருணியும், ஊர் நடுவேநின்ற பழுமரமும் யாவரானுங் கொள்ளப்படுவ தனானும்; கார்மழைபொழிதல் கைம்மாறு வேண்டப்படாமையானும்; கழனியிற்பாயு நதியினீர் எஞ்ஞான்றும் விளையுளாக்கப்படுவதனானும்; பேரறிவாளனாகிய சிராமன் அரசச்செல்வம்பெற்றுழி அது யாவரானுங் கொள்ளப்படுவத

னனும், கைம்மாறு வேண்டப்படாமையானும், என்றும் நன்மைவிளைக்கப் படுவதனானும், அவற்றையே யுவமைமுகத்தா லெடுத்துக்காட்டினர். (அக)

(4) பனையவா நெடுங்கரப் பரும யானையாய்
நினையவாந் தன்மையை நினைந்த மன்னுயிர்க்
கெனையவா றன்பின னிராம னீண்டவர்க்
கனையவா றன்பின வவையு மென்றனர்.

(இ-ள்.) பனையவாம் நெடுங் கரம் பருமம் யானையாய் - பனை விரும்புகின்ற நீண்ட கையையும் மேற்றவிசினையுமுடைய யானையுடையானே! நினையவாம் தன்மையை நினைந்த மன்னுயிர்க்கு - நின்னை விரும்புந் தன்மையை, நினைந்த நிலைபேறுடைய வுயிர்களிடத்து, இராமன் ஈண்டெனையவா றன்பினன் - சீராமன் எவ்வகையான வன்பினையுடையான், அவையு மனையவா றன்பின என்றனர் - அவையு மவ்வகையான அன்பினையுடையன வென்று கூறினர்.—எ-று.

பனையவாநெடுங்கரவென்றும், பருமயானையாய் என்றுங் கொண்டுரைப் பாருமுளர். பனையவாமென்புழி அவாவுமென்பதின் ஈற்றுமிசை யுகரங்கெட்டது. அனைவோர்க்குந் தெய்வ மரசனெனப்பட்டமையின் 'நினையவாந் தன்மையை நினைந்த மன்னுயிர்க்கு' என்றும், சீராமன் நின்னுவியன்னுகலானும், அவையு நின்னுடல் போல்வனவாகலானும், அவ்வுயிர்கட் கிரங்குவானென்பதுதோன்ற 'எனையவாறன்பின்னிராமன்' என்றும், அவனையு நின்போற் கருதி யன்புசெய்கின்றன என்பார், 'ஈண்டனையவாறன்பினவவையுமென்றனர்' என்றுங்கூறினர். உரைசெயகேளென வந்தியைகவென்ன, மறுக்கின்றோர்கள்யார், யானையாய், என்றனர் என வினைமுடிக்க. இந்நான்கு செய்யுளானும் வேத்தவை கருத்துணர்த்தப்பட்டது. (அஉ)

(1) மொழிந்தது கேட்டலு மொய்த்து நெஞ்சினைப்
பொழிந்தபே ருவகையான் பொங்கு காதலான்
கழிந்ததோ ரிடரினன் களிக்குஞ் சிந்தையான்
வழிந்தகண் ணீரினன் மன்னன் கூறுவான்.

(இ-ள்.) மொழிந்தது கேட்டலும் - அவ்வாறு அரசரெல்லாஞ் சொல்லியதைக்கேட்டு, மொய்த்து நெஞ்சினை பொழிந்த பேருவகையான் - மனத்தினெருங்கிப்பொழிகின்ற பெருங்களிப்பினையுடையானும், பொங்குகாதலான்- மிக்க அன்பினையுடையானும், கழிந்ததோரிடரினன் - துன்ப நீங்கினனும், களிக்குஞ் சிந்தையான் - களிக்கின்ற சிந்தையுடையானும், வழிந்த கண்ணீரினன்-பெருக்கெடுத்த ஆனந்தக்கண்ணீருடையானுமாய, மன்னன் கூறுவான்- சக்கரவர்த்தி சொல்லத்தொடங்கினன்.—

கழிந்ததோரிடரினன் என்பதனை இடர்கழிந்தோன் என முன்பின்னாகக் கூறியது வடநூன்முடிபு; கொடிச்சேவலனென்புழிப்போல. அவர்

கூறக்கேட் டாங்குவகையும், உவகையாற்காதலும், காதலானிடர் நீங்கலும், இடர்நீங்கலாற் சிந்தையிற் களிப்பும், அக்களிப்பாற் கண்ணி லன்புநீர் பொழிதலுமுடைமையாற் காரணகாரிய முறையே வைத்தார். (அரு)

(2) செம்மையிற் றருமத்திற் செயலின் றீங்கின்பால்
வெம்மையி னொழுக்கத்தின் மெய்மை மேவினீர்
என்மக னென்பதென் னெறியி னீங்கிவன்
நும்மகன் கையடை நோக்குமுங் கென்றான்.

(இ-ள்.) செம்மையின்-நடுவுநிலைமையினும், தருமத்தின்- அறத்தினும், செயலின்-நற்செயலினும், தீங்கின்பால் வெம்மையும்-தீயவொழுக்கத்தின்பாற் கொடுமையினும், ஒழுக்கத்தின் - நல்லொழுக்கத்தினும், மெய்மை மேவினீர்-மெய்மையையடைந்த வரசரே! என்மகன் என்பது என்-என்மகனென்று யான் கூறுவதுயாது, ஈங்கு இவன் நும்மகன்-இங்கேயுள்ளவனாகிய இச்சீராமன் உம்முடைய மகனேயாம், கையடைநோக்கும் ஊங்கு என்றான்-அடைக்கலப்பொருளாக அவனை மிகுதியுங் கொள்ளுங்களென்றனன்.—எ-று.

செம்மையென்றதற்கு ‘தகவு’ என்புழி யுரைத்ததுகொள்க. தருமத்திற்கு மாண்டுரைத்தாம். செம்மையுந் தருமமுமுடையார் தீயசெயலை யொறுத்த லியல்பாகலானும்; இவையெய்தியவழி நல்லொழுக்க மமைவதனானும் முறையே கூறினர். யான் றவஞ்செயற்குக் கான்படர்தலா லென்மகனைக்காத்தனுங் கடனென்பான் ‘என்மகனென்பதென் நெறியினீங்கிவன் நும்மகன் கையடைநோக்கும்’ என்றார். இவ்விரண்டுசெய்யுளானும் சக்கரவர்த்தி மறுமொழி கூறினமை யுணர்த்தப்பட்டது. (அச)

அரைசரை விடுத்தபி னாணை மன்னவன்
புரைதபு நாளொடு பொழுது போக்குவான்
உரைதெரி கணிதரை யொருங்கு கொண்டொரு
வரைபொரு மண்டப மருங்கு போயினான்.

(இ-ள்.) அரைசரை விடுத்தபின்-அரசரை நீங்கியபின், ஆணை மன்னவன் புரைதபுநாளொடு பொழுதுபோக்குவான்-ஆக்கினைசக்கரமுடைய அரசன் குற்றம் தீர்ந்த நாளாராய்ச்சியிற் பொழுதுபோக்க, உரைதெரிகணிதரை யொருங்குகொண்டு-கணிதநூலை நன்குணர்ந்த கணிதரையெல்லாமொருங்கே யழைத்துக்கொண்டு, ஒரு வரை பொருமண்டப மருங்குபோயினான்-ஒரு மலைபோன்ற மண்டபத்தின் மருங்கேசென்றனன்.—எ-று.

வேதத்தினங்கமாதலாற் கணிதத்தை ‘உரைதெரிகணிதம்’ என்றானெனினுமாம். விடுத்தபின் போக்குவான் கொண்டு போயினனென வினைமுடிக்க. தபுவென்றது தன்வினை பிறவினைகட்குப் பொதுவான முதனிலையேனும். ஈண்டுத் தன்வினையாக்கொள்க. நோக்குவானென்றும்பாடம். போக்குவான்

வானீற்றெச்ச .இதனாற் சக்கரவர்த்தி சோதிடரை யொருமண்டபத்திற் கழைத்துச்சென்றமை யுணர்த்தப்பட்டது. (அ௫)

வேறு.

(1) ஆண்ட வங்நிலை யாக வறிந்தவர்
பூண்ட காதலர் பூட்டவிழ் கொங்கையர்
நீண்ட கூந்தலர் நீள்கலை தாங்கலர்
ஈண்ட வோடின ரிட்டிடை யிற்றிலர்.

(இ-ள்.) ஆண்ட அங்நிலையாக-அங்கே அவனிலை யவ்வாறிருக்க, அறிந்தவர் பூண்ட காதலர்-அறிந்தவராய்க் காதலையுடையாரும், பூட்டு அவிழ் கொங்கையர் - கச்சின்பூட்டவிழ்ந்த கொங்கையுடையாரும், நீண்ட கூந்தலர்-சரிந்த கூந்தலையுடையாரும், நீள்கலை தாங்கலர் - நீண்ட ஆடைதாங்காதாரும், இட்டிடை இற்றிலர் - வருந்துகின்ற இடை இருதவருமாகி, ஈண்டவோடினர்-நெருங்கவோடினர்.—

சீராமனுக்கு மணிமுடிசூட்டுதல் கேட்டு மகிழ்ச்சியுடையராய் மாதர்க்குக் காதன் மிகுதலான் கொங்கைபூட் டவிழ்ந்தமையும், கூந்தல் சரிந்தமையும், கலையவிழ்ந்தமையும், இடைதள்ளாடவோடினமையும் நிகழ்ந்தன. இட்டிடை—சுருங்கிடை. ஆண்டவென்றது அகரச்சாரியை யேற்றுநின்றது; நாம என்புழிப்போல. (அ௬)

(2) ஆடு கின்றனர் பண்ணடை யின்றியே
பாடு கின்றனர் பார்த்தவர்க் கேகரஞ்
சூடு கின்றனர் சொல்லுவ தோர்கிலர்
மாடு சென்றனர் மங்கையர் நால்வரே.

(இ-ள்.) ஆடுகின்றனர் - ஆடுவாரும், பண்ணடையின்றி பாடுகின்றனர்-பண்ணியல்பின்றிப் பாடுவாரும், பார்த்தவர்க்கு கரஞ்சூடுகின்றனர்-கண்டவர்க்குக் கைகூப்புவாருமாகி, சொல்லுவதோர்கிலர் - சொல்வதறியாராய், மங்கையர் நால்வர் மாடுசென்றனர்-மாதர்கள் நால்வர் அருகேபோயினர்.—

ஆடுதலும் பாடுதலு முதலிய நிகழ்ந்தமை களிப்பின் மிகுதியாலென்க. பண்ணடை என்புழிப் பண்ணினடையெனக் கொள்ளினு மிழுக்காது. இவ்விரண்டுசெய்யுளானும் மகுடஞ்சூடுதலைக்கேட்ட மாதர் கோசலையிடஞ் சென்றமை யுணர்த்தப்பட்டது. (அ௭)

கண்ட மாதரைக் காதலி னோக்கினள்
கொண்டல் வண்ணனை நல்கிய கோசலை
யுண்டு பேருவ கைப்பொரு ளென்னது
தொண்டை வாயினிர் சொல்லுமி னீண்டென்றாள்.

(இ-ள்.) கொண்டல்வண்ணனை நல்கிய கோசலை -மேகம்போன்ற நிறத்தையுடைய ஸ்ரீராமனையளித்த கோசலை, கண்டு அ மாதரை காதலின் நோக்கினாள் - அம்மாதர்களைக்கண்டு ஆசையுடன் பார்த்து, பேருவகைக்கடல் உண்டு -பெரிய களிப்பின் கடல்போன்ற செய்தியுண்டு, அன்னது தொண்டைவாயினிர் ஈண்டு சொல்லுமினென்றாள்-அதை ஆதொண்டங்கனிபோலும் வாயையுடைய பெண்காள்! எனக்குச் சொல்லுமென்றனள்.—எ-று.

கண்டமாத்திரையி னறிந்துகொண்டமையான் 'உண்டுபேருவகைப்பொருளன்னதீண்டு சொல்லுமின்' என்றதென்க. இதனை * "அடுத்ததுகாட்டும் பளிங்குபோனெஞ்சங் - கடுத்ததுகாட்டு முகம்" என்றதனானுமுணர்க. சொல்லுதல் வாயினாதலின் அதனைத் 'தொண்டைவாயினிர்' என விசேடித்தார். உவகையைப்பொருளென்றது வைசேடிகர்மதம் பற்றியென்க. இதனான் மாதரை வினவியதுணர்த்தப்பட்டது. (அஅ)

மன்னெடுங் கழல் வந்து வணங்கிடப்
பன்னெடும் பகல் பாரளிப் பாயென
நின்னெ டும்புதல் வன்றனை நேமியான்
றொன்னெ டும்முடி சூட்டுகின் றானென்றார்.

(இ - ள்.) மன்நெடுங்கழல்வந்து வணங்கிட - அரசர் பெரிய வீரக்கழலையணிந்த அடிகளில்வணங்க, பல்நெடும்பகல்பாரளிப்பாய் என-பலநாளும் பூமியையாண்டுவருவாயென, நின்நெடும் புதல்வன்றனை - உன் முதற்குமரனை, நேமியான் - சக்கரவர்த்தி, தொல் நெடுமுடி சூட்டுகின்றான் என்றார்-பழமையாகிய நீண்முடியைத் தரிக்கின்றனனென்றனர். எ-று.

மன் ஆகுபெயர். அரசரெல்லாம் வணங்குஞ் செல்வமாதலான் 'மன்னெடுங்கழல்வந்து வணங்கிட' என்றதென்க. இட்சுவாகு உள்ளிட்ட வரசரெல்லாம் புனைந்துவந்த மணிமுடியாதலான் 'தொன்னெடுமுடி' என்றார். நேமியான் என்றது தயரதனை. நின்னெடும்புதல்வனென்றது ஸ்ரீராமனை. இதனாற்கோசலைக்கவர் ஸ்ரீராமன் மணிமுடிபுனைதல் கூறினமை உணர்த்தப்பட்டது.

சிறக்குஞ் செல்வ மகற்கெனச் சிந்தையிற்
பிறக்கும் பேருவ கைக்கடல் பெட்பற
வறக்கு மாவட வைக்கன லானதாற்
றுறக்கு மன்னவ னென்னுந் துணுக்கமே.

(இ-ள்.) மன்னவன் துறக்குமென்னும் துணுக்கம் - அரசன் துறந்து செல்வானென்னுமச்சம், மகற்கு செல்வம் சிறக்குமென - தன்மகனாகிய ஸ்ரீராமனுக்கு அரசச்செல்வம் சிறக்குமென்று, சிந்தையில் பிறக்கும் பேருவகைக் கடல் பெட்பற-மனத்தினுண்டாகும் பெருங்களிப்பாகிய கடலின்பெருமை

* திருக்குறள், செ-எ0சு.

யொழிய, வறக்குமாறு வடவைக்கனலானது - வற்றுமாறு வடவைத்தீயை யொத்திருந்தது. எ-று.

வறக்குமாறு என்புழி று தொகுத்தல்பெற்றது; † "கற்றவாகடவான்" என்புழிப் பேராசியர் விரித்தலானுமுணர்க. உவமையைக் கடலாகவும், துனுக்கத்தை வடவைக்கனலாகவு முருவகஞ்செய்தனர். இதனான் அதனைக்கேட்ட கோசலை நிலைமை யுணர்த்தப்பட்டது. (கூ)

(1) அன்ன ளாயு மரும்பெற லாரமும்
நன்னி திக்குவை யுந்நனி நல்கித்தன்
துன்னு காதற் சுமித்திரை யோடெம்போய்
மின்னு நேமியன் மேவிட மேவினாள்.

(இ-ள்.) அன்னளாயும் - அத்தன்மையளாயும், அரும்பெறல் ஆரமும் - அரியபெறுதலையுடைய மாலைகளையும், நன்னிதி குவையும் நனிநல்கி - நன்மையாகிய திரவியக்குப்பையையும் மிகுதியு மளித்து, தன் துன்னுகாதல் சுமித்திரையோடெம்போய் - தன்பாலன்புமிக்க சுமித்திரையுடன் சென்று, மின்னு நேமியன் மேவிடமேவினாள் - பிரகாசிக்கின்ற சக்கரப்படையையுடைய, ஆயிரமோலியானது சந்நிதியை யடைந்தனள்.

விலையுயர்ந்த வாரங்களாகலின் 'அரும்பெறலாரம்' என்றார். மின்னு நேமியனென்றது ஆயிரமோலியானை. அரும்பெறலென்றதற்கு முற்கூறி னுமாண்டுக்காண்க.

(2) மேவி மென்மல ராணில மாதெனுந்
தேவி மாரொடுந் தேவர்கள் யாவர்க்கு
மாவி யும்மறி வும்முத லாயவன்
வாவி மாமலர்ப் பாதம் வணங்கினாள்.

(இ-ள்.) மென்மலராள் நிலமாதெனுந் தேவிமாரொடும் - மென்மையாகிய தாமரையாள் நிலமகளென்னுங் மனைவியரோடும், தேவர்கள் யாவர்க்கும் - தேவர் யாவருக்கும், ஆவியும் அறிவும் முதலாயவன் - உயிரும் உணர்வு முதலியனவாகிய ஆயிரமோலியானது, வாவிமாமலர்பாதம் மேவிவணங்கினாள் - தடாகத்திற் பூத்தபெருமையாகிய தாமரைமலர்போன்ற திருவடிகளை அவ்வாறடைந்து வணங்கினாள்.

தேவர்கள் யாவர்க்குமென்றது கற்பாந்தத்திலழியுந் தேவரையன்று, அயர்வரு மமரர்களாகிய நித்தரை. வாடுதல் குவிதல் முதலியன வின்றி என்றும் ஒருபெற்றித்தாய்ப் பொலிவுடன் விளங்குவதனு னிறைவனடியை 'வாவிமாமலர்' என்றுவமித்தார். மலராளும் நிலமாதுமிறைவன் திருத்தேவி

† திருக்கோவையார், செ- கூ௰.

களென்றதனை * "போதின்மங்கை பூதலக்கிழத்திதேவி" என்ற பெரியாரருளிச்செயலானுமறிக. (௯௨)

(3) என்வ யிற்றரு மைந்தற் கினியருள்
உன்வ யிற்றதென் றாளுல கியாவையும்
மன்வ யிற்றி னடக்கிய மாயனைத்
தன்வ யிற்றி னடக்குந் தவத்தினாள்.

(இ-ள்.) உலகியாவையும் மன்வயிற்றி னடக்கிய மாயனை-உலகமனைத்தையும் நிலைபேறுடைய வயிற்றிலடக்கிய சீராமபிரானை, தன்வயிற்றினடக்கும் தவத்தினாள் - தன்வயிற்றின்க ணடக்கிய தவமுடையளாகிய கோசலை, என்வயின்தருமைந்தற்கு-என்னிடந்தந்த மகனுக்கு, இனி அருள் உன்வயிற்றது என்றாள்-இனி மணிமுடிசூடக் கருணைசெய்வது உன்னிடத்ததென்றுரைத்தனள்.—எ-று.

உலகனைத்தும் தன்வயிற்றினடக்கலின் அதனை 'மன்வயிறு' என்றும், அவ்வாறடக்கியான் அகடிதகடனாசாமர்த்தியமுடையனாகலின் 'மாயன்' என்றும், அவனைச்சிற்றுதரத்தின் கண்வைத்திருந்தது முன்னைப்பிறவியிற்செய்த முதுதவமாதலின் 'தன்வயிற்றினடக்குந் தவத்தினாள்'என்றுங்கூறினார்.இறைவனுலகனைத்துந் தன்னகட்டில் வைத்திருக்கின்றனனென்பதனை ‡ "ஏழுலகுண்டாலிலையின்-முன்னொருவனாயமுகில்வண்ணா" எனப்பெரியாரும் பணித்தமை காண்க. மாயன்-விசித்திரசத்தியையுடையான். நல்கி, போய், மேவி, வணங்கி உன்வயிற்றதென்றாள் என வினைமுடிக்க. இம்மூன்றுசெய்யுளானுங் கோசலை ஆயிரமோலியானையடைந்து வழிபட்டமையுணர்த்தப்பட்டது.

(1) என்றி றைஞ்சியவ் விந்திரை கேள்வனுக்
கொன்று நான்மறை யோதிய பூசனை
நன்றி ழைத்தவ ணல்ல தவர்க்கெலாம்
கன்று டைப்பசு வின்கட னல்கினாள்.

(இ-ள்.) என்றிறைஞ்சி - என்றுசொல்லி வணங்கி, அவ்விந்திரை கேள்வனுக்கு-அத்திருமகள் கணவனாகிய ஆயிரமோலியானுக்கு, ஒன்று நான்மறை யோதிய பூசனை-நான்மறையிற்பொருந்திய விதிமுறையிற் செய்யும் பூசனை, நன்று செய்து-நன்றாகச்செய்து, அவண் நல்ல தவர்க்கெலாம் - அங்கேயுள்ள நல்ல தவமுடையார்க்கெல்லாம், கன்றுடைய பசுவின் கடன் நல்கினாள்-கன்றையுடைய பசுக்களைமுறையாகக் கொடுத்தனள்.—

ஒருசிறிதும் குறையின்றி வேதநெறியிற் பூசனைமுடித்தலின் 'நன்றிழைத்து' என்றும், கன்றிலாப்பசுவைத்தருதல் கொடைக்கிலக்கணமன்றாதலாற் 'கன்றுடைப்பசு' என்றும் கூறினார். பசு-சாதியொருமை, பசுவின்கடல் நல்கினாளெனக்கொண்டு கூறுவாருமுளர். (௯௪)

* திருச்சந்தவிருத்தம், செ-௭௨.
‡ இயற்பா, முதற்றிருவந்தாதி, செ - ௫௪.

(2) பொன்னு மாமணி யும்புனை சாந்தமும்
கன்னி மாரொடு காசினி யீட்டமும்
இன்ன யாவையு மீந்தன ளந்தணர்க்
கன்ன தானமு மாடையு நல்கினாள்.

(இ-ள்.) பொன்னும் மாமணியும் புனைசாந்தமும் - பொன்னும் சிறந்த மணியும் அணிகின்ற பூச்சுகளும், கன்னிமாரொடு காசினியீட்டமும்-கன்னியரோடு நிலத்தின் கூட்டங்களும், இன்ன யாவையும் ஈந்தனள்-இவைபோல்வன பிறவுமளித்து, அந்தணர்க்கு-அழகிய தட்பமாகிய குணமுடைய மறையோருக்கு, அன்னதானமும் ஆடையு நல்கினாள்-அன்னமும் ஆடையுமாகிய தானப்பொருள்களையுதவினள்.—

கன்னி வடமொழிச்சிதைவு. ஒருவருக்கின்றியமையாதன அன்னமு மாடையு மாதலான் அந்தணர்க்கவற்றையே 'நல்கினாள்' என்றும், காசிபனாற் பெறப்பட்டதனாற் பூமியைக் 'காசினி' என்றுங் கூறியவாறென்க. ஏனைய தானங்களைக்குறிக்க 'இன்னயாவையும்' என்றார். (கரு)

(3) நல்கி நாயக னாண்மலர்ப் பாதத்தைப்
புல்லிப் போற்றி வணங்கிப் புரையிலா
மல்லன் மாளிகைக் கோயில் வலங்கொளாத்
தொல்லை நோன்புகள் யாவுந் தொடங்கினாள்.

(இ-ள்.) நல்கி நாயகன் நாண்மலர் பாதத்தை புல்லிபோற்றி வணங்கி-கொடுத்து அவ்விறைவனது நாளலர்ந்த தாமரைமலர்போன்ற திருவடிகளைத் தழுவித்துதித்து வணங்கி, புரையிலாத மல்லல் மாளிகை கோயில் வலங்கொளா-குற்றந்தீர்ந்த வளப்பம்பொருந்திய மாளிகையுடைய கோயிலை வலங்கொண்டு, நோன்புகள் யாவுந் தொடங்கினாள் - பழமையாகிய விரதங்களனைத்தும் செய்யத்தொடங்கினள் எ-று.

நாயகனென்றது ஆயிரமோலியம்மானை; அவனெழுந்தருளியிருக்கத் தவஞ்செய்தமையின் 'புரையிலாமல்லன் மாளிகைக்கோயில்' என்றார்;இராச மாளிகையிலுள்ள சந்நிதியாதலான்'மாளிகைக்கோயில்' என்றாரெனினுமமையும். தொல்லைநோன்புகள் என்றது மணிமுடிபுனையத் தாயர்செய்யும் அடிப்பட்ட வழக்கமாகிய நோன்புகளை. என்றிறைஞ்சி இழைத்து நல்கி ஈந்து, நல்கிப்புல்லிப்போற்றி வணங்கி வலங்கொளா தொடங்கினாளென வினைமுடிக்க. இம்மூன்று செய்யுளானுந் தானஞ்செய்தமையு நோன்புகள் செய்தமையு முணர்த்தப்பட்டன. (கசு)

மந்திரப்படலம் - முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், காப்புடன் - கஎ.

மந்தரைசூழ்ச்சிப்படலம்.

மந்தரை சக்கரவர்த்தி தன் திருமகனுக்கு மணிமுடிசூட மந்திராலோசனை செய்வது கேட்டுக் கைகேசிபாற்சென்று கலாய்த்து நிற்பதுணர்த்துகின்றமையின், இது மந்திரப்படலத்தின்பின் வைக்கப்பட்டது. படலமுறையுமிதனனே விளங்கும். மந்தரையென்பதற்கு மனக்கலக்கஞ் செய்வாளென்றதென்க. சூழ்ச்சி, ஆலோசனை. அது ஆலோசனை கூறித் தடுத்தல். ‡ "சூழ்ந்து கொளல்" என்புழிப் பரிமேலழகர் கூறுதல் காண்க.

கடிகமழ் தாரினன் கணித மாக்களை
முடிவுற நோக்கியோர் முதன்மை கூறிப்பின்
வடிமழு வாளவற் கடந்த மைந்தற்கு
முடிபுனை கடிகைநாண் மொழிமி னென்றனன்.

(இ-ள்.) கடிகமழ்தாரினன் - மணங்கமழ்கின்ற மலர்மாலையணிந்த தயரதன், கணிதமாக்களை முடிவுற நோக்கியோர் முதன்மை கூறி-சோதிடரை நன்குபார்த்து ஒப்பில்லாத முகமன்கூறி, பின் வடிமழுவாளவன் கடந்த மைந்தற்கு - பின்வடித்த மழுப்படையுடைய விராமனை வெற்றிகொண்ட வீரனுக்கு, முடிபுனை கடிகை நாள் மொழிமினென்றனன்-முடியைத் தரிக்கின்ற முகூர்த்தவோரையைச் சொல்லுமென்றனன்.—எ-று.

* "மாக்களுமையறிவினவே" என்றாரேனும், கவி இவர் சோதிடம் பயன்படாமைப்பொருட்டன்றே 'மாக்கள்' என இழித்துக்கூறினர். கடிகமழ் தாரினனென்றது தயரதனை; 'வடிமழுவாளவற்கடந்தமைந்தன்' என்றார், தானுந்தன்குலத்தவரும் பரசுராமனாற் பலகாலுமடைந்த பரிபவந்தீர்த்தமை நோக்கியென்க. 'பூண்டபோர் மழுவுடையவனெடும்புகழ்குறுக நீண்டதோளைய' என்றே யீண்டுங்கூறியது வற்புறுத்தற்கு. முதன்மை - ஆகுபெயர், மேம்பாடாகிய சொல்லை யுணர்த்திநிற்றலின். 'முடிபுனைகடிகைநாள்' என்ற தொடர்க்கு முடிபுனைதலைக் கடிதல் செய்யு நாளென வேறுமொருபொருள் விளக்கிய நின்றது. இதனாற்கணிதரை முடிபுனையு நாள்வினவிய துணர்த்தப்பட்டது. (க)

பொருந்துநா ளுளைநின் புதல்வற் கென்றனர்
திருந்தில ரன்னசொற் கேட்ட செய்கழல்
பெருந்திண்மால் யானையான் பிழைப்பில்செய் தவம்
வருந்தினன் வருகென வசிட்ட னெய்தினன்.

‡ திருக்குறள், செ - ௪௪௫.

* தொல்காப்பியம், பொருள். சூ-௫அ௮.

(இ-ள்.) திருந்தினர் பொருந்துநாள் நாளை நின்புதல்வற்கு என்றனர்- கணிநர் அவ்வாறு பொருந்துகின்ற சுபதினம் நாளை நின்மகனுகிய ஸ்ரீராமனுக்கென்று கூறினர்; அன்னசொல் கேட்ட செய்கழல் பெருந் திண்மால் யானையான் - அச்சொல்லைக்கேட்ட செம்மையான வடியினையும் பெரியவலிமையுடைய மதமயக்கங்கொண்ட யானையையுமுடைய தயரதன், பிழைப்பில் செய்தவம் வருந்தினன் வருக எனவசிட்டன் எய்தினன் - குற்றமற்ற செம்மையாகிய தவத்தில் வருந்தின வசிட்டமுனிவனை வருகவென்று வேண்டிக்கொள்ள அவன் வந்து அடைந்தனன்.—எ-று.

பிரமவிருடிகளிற் சிறந்த தவமுடையானும், கோசிகனுல் தவஞ்செய்து பெறப்பட்ட தெய்வக்கணைகளையெல்லாம் தன் கைத்தண்டத்தாற் கவரச்செய்த தவத்திறற்ற லுடையானுமாகலின் 'பிழைப்பில் செய்தவம் வருந்தினன்' என்றதென்க. திருந்தினர் என நாளை நன்குநோக்கிக் கூறுமையாணிழித்துக் கூறினர். இதனுன் கணிதர் கூறக்கேட்ட அரசன் வசிட்டரை வருகவென்ன அவர் வந்தமை கூறப்பட்டது. (உ)

நல்லியன் மங்கல நாளு நாளையவ்
வில்லிய றோளவற் கீண்டு வேண்டுவ
வொல்லையி னியற்றிநல் லுறுதி வாய்மையுஞ்
சொல்லுதி பெரிதெனத் தொழுது சொல்லினன்.

(இ-ள்.) அவ்வில் இயல்தோளவற்கு-அவ்வில்லமைந்த தோளையுடைய ஸ்ரீராமனுக்கு, நல் இயல் மங்கலநாளும் நாளை - நன்மையாகிய இயல்பினையுடைய மங்கல நாளு நாளையேயாம், ஈண்டு வேண்டுவ-இங்குவேண்டுவனவற்றை, ஒல்லையினியற்றி-விரைவினிற்செய்து, நல் உறுதிவாய்மையும்-நல்ல உறுதியாகிய உண்மைகளையும், பெரிது சொல்லுதியென தொழுது சொல்லினன் - மிகுதியுஞ் சொல்வாயென வணங்கிக்கேட்டனன்.—எ-று.

வில்லுக் கிராமனெனப்படுதலின் 'வில்லியறோளவற்கு' என்றும், வாய்மைபோலு முறுதிபயப்பன வில்லையாகலின் 'உறுதிவாய்மையும்' என்றும், அதனைக் கூறுதல் நின்கடனென்பார் 'சொல்லுதி பெரிதெனத் தொழுது சொல்லினன்' என்றுங் கூறினர். உம்மை அந்நாளின் சிறப்புணர்த்த நின்றது. இதனுற் சக்கரவர்த்தி வசிட்ட முனிவனைநோக்கி வாய்மை கூறுகவென்ற துணர்த்தப்பட்டது. (ங)

முனிவனு முவகையுந் தானு முந்துவான்
மனுகுல நாயகன் வாயின் முன்னினன்
அனையவன் வரவுகேட் டலங்கல் வீரனு
மினிதெதிர் கொண்டுதன் னிருக்கை யெய்தினன்.

(இ - ள்.) முனிவனு முவகையுந்தானு முந்துவான் - வசிட்ட முனிவனும் மகிழ்ச்சியுந் தானுமுற்பட்டு, மனுகுலநாயகன் வாயின்முன்னினன் - மனுகுலத்துக் கரசனுகிய ஸ்ரீராமனது வாயிலையடைந்தனன், அனையவன் வரவுகே

ட்டு அலங்கல்வீரனும் - அவனது வருகையையறிந்து மாலையை யணிந்த ஸ்ரீராமனும், எதிர்கொண்டு இனிதுதன் இருக்கை எய்தினன்-எதிர்கொண் டழைத்துக்கொண்டு இனிமையாகத் தன் மாளிகையைச்சேர்ந்தனன்.—எ-று.

மனுவின் குலத்தை விளக்கவந்தவனாகலின் 'மனுகுலநாயகன்' என்றார். 'முனிவனு முவகையுந் தானுமுகந்துவான்' எனச் சிறப்பினால் திணைவிரவி யுயர்திணைமுடிபேற்ற வழுவமைதி. முந்தி முன்னினான் வரவுகேட்டெதிர்கொ ண்டெய்தினனென வினைமுடிக்க. இருக்கை-மாளிகை. இதனால் வசிட்ட முனிவன் வருகையேற்ற துணர்த்தப்பட்டது. (ச)

வேறு.

ஒல்க லில்தவத் துத்தம னோதுநூல்
மல்கு கேள்விய வள்ளலை நோக்கினான்
புல்கு காதற் புரவலன் போர்வலாய்
நல்கு நானில நாளை நினக்கென்றான்.

(இ - ள்.) ஒல்கலில் தவத்து உத்தமன் - சுருங்குதலில்லாத தவத்தையு டைய உத்தமனாகிய வசிட்டமுனிவன், ஓது நூல் மல்குகேள்வி அ வள்ளலை நோக்கினான்-ஓதப்படுகின்ற நூற்கேள்விநிரம்பிஅவ்வள்ளற்றன்மையுடையசீரா மனைநோக்கி, புல்குகாதல் புரவலன்-நிரம்பிய காதலையுடைய வரசன், போர் வலாய்! - நினக்கு நானில நாளை நல்குமென்றான் - போரினாற்றலையுடை யானே! உனக்குலகமெல்லா நாளை யளிப்பானென்றனன்.—எ-று.

எல்லாக் கேள்விகட்கும் பிறப்பிடமாகலின் 'ஓதுநூல் மல்கு கேள்வி அவ் வள்ளலை' என்றதென்க. வேண்டுவோர் வேண்டியாங்குதவுஞ் சிறப்பு நோக்கி 'வள்ளலை' என்றும், யாவரானும் வெல்லப்படாத ஆற்றனோக்கிப் 'போர்வலாய்' என்றுங் கூறினார். வள்ளல் ஆகுபெயர், நோக்கி நல்கு மென்றா னென வினைமுடிக்க. இதனால் அரசன் நாளை நினக்கு முடிசூட்டுவனென்ற துணர்த்தப்பட்டது, (ரு)

என்று பின்னு மிராமனை நோக்கினான்
ஒன்று கூறுவ துண்டுறு திப்பொரு
ணன்று கேட்டுக் கடைப்பிடி நன்றெனத்
துன்று தாரவற் சொல்லுதன் மேயினான்.

(இ - ள்.) என்று பின்னும் இராமனை நோக்கினான்-என்று பின்னரும் ஸ்ரீராமனைப்பார்த்தருளி, உறுதிப்பொருள் ஒன்று கூறுவது உண்டு-ஒருறுதிப் பொருள் சொல்வதுனக்குண்டு, நன்றுகேட்டு - நன்றாகக்கேட்டு, கடைப்பிடி நன்றென-கடைப்பிடி நன்றாகவென்று, துன்றுதாரவன் சொல்லுதன் மேயி னான் - தேன் றங்கிய மலர்மாலையையணிந்த ஸ்ரீராமனுக்குச் சொல்லத் தொடங்கினன்.—எ-று.

நோக்கி உண்டுகேட்டுக் கடைப்பிடியெனச் சொல்லுதன் பேயினன் எனவினைமுடிக்க. மங்கலகோலத்தவனாக வேண்டலின், 'துன்றுதாரவன்' என்றும், எல்லாமறிந்த நினக் கியான் கூறுதலுங் கடன் என்பார் 'நன்றுகேட்டு' என்றும், கேட்டவாறே நீ ஒழுகவேண்டுமென்பார் 'கடைப்பிடிநன்றெனா' என்றுங் கூறினர். சொல்லுதன்மேயினா னொருசொல். இதனான் இராமனை வசிட்டமுனிவன் வேண்டிக்கோட லுணர்த்தப்பட்டது. (சு)

(1) கரிய மாலினுங் கண்ணுத லானினு
முரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோ ரைந்தினு மெய்யினு
பெரிய ரந்தணர் பேசுதி யுள்ளத்தால்.

(இ - ள்.) கரிய மாலினும்-கரிய கோலத்துத் திருமாலினும், கண்ணுதலானினும்-கண்ணை நெற்றியிலுடைய உருத்திரனிலும், உரியதாமரைமேலுறைவானினும்-உரிமையாகிய தாமரைமலரில் வசிக்கும் பிரமனிலும், விரியும் பூதமோரைந்தினும் - விரிந்தஐம்பூதங்களினும், மெய்யினும் - உண்மையினும், அந்தணர்பெரியர்-அந்தணராவோர் பெரியராம், உள்ளத்தால் பேசுதி மனத்தாலுணர்வாய்.—

* "ஒன்னார்த்தெறலுமுவந்தாரையாக்கலு - மெண்ணிற்றவத்தால்வரும்" என்பவாகலின் 'கரியமாலினுங் கண்ணுதலானினும், தாமரைமேலுறைவானினும் பூதமோரைந்தினுமெய்யினும் பெரிய ரந்தணர்' என்றும், மனத்தானினைத்தலும் செய்வதனேடொக்குமாகலின் 'பேசுதியுள்ளத்தால்' என்றுங்கூறினர். இப்பெற்றிநோக்கியன்றே "உலகமுழுதுந்தெய்வத்தின்வயத்தது" என்றும், "அத்தெய்வமந்திரத்தின் வயத்தது" என்றும், "அம்மந்திரம் அந்தணர்வயத்தது" என்றும், "அவ்வந்தணர் எமக்குக் கடவுளாவார்" என்றும் கண்ணன் கூறியதூஉமென்க. (எ)

(2) அந்த ணாளர் முனியவு மாங்கவர்
சிந்தை யாலருள் செய்யவுந் தேவரி
னொந்து ளாரையு நொய்துயர்ந் தாரையு
மைந்த வெண்ண வரம்புமுண் டாங்கொலோ.

(இ - ள்.) மைந்த-வீரனே, அந்தணாளர் முனியவும் - அந்தணர் கோபிக்கவும், தேவரில் நொந்துளாரையும் - தேவர்களில் துன்பமெய்தினரையும், ஆங்கு அவர் சிந்தையாலருள் செய்யவும் - அதுபோல அவர்கள் மனத்தாலருளவும், நொய்து உயர்ந்தாரையும்-விரைந்து உயர்பதம்பெற்றாரையும், எண்ணவரம்பும் உண்டாங்கொல் - நினைக்க அளவைப்படுமோ—எ-று.

துருவாசமுனிவன் சாபமொழியான் இந்திரனும் தன்பதமிழந்து தாமரைத்தண்டின் ஒளித்தமையும், அகத்தியமுனிவன் சாபமொழியான் இந்திர

* திருக்குறள், செ - உசுச.

பதம்பெற்ற நகுடனு மலைப்பாம்பாதலும், புலைத்தன்மையெய்தியானும் விசுவாமித்திரமுனிவனால் துறக்கமெய்துதலும் அந்தணர் சாபவருள்களின் சிறப்புணர்த்துதல் காண்க. இப்பெற்றிநோக்கியே * "நிறைமொழிமாந்தர்" என்றதூஉமென்க. இது நிரனிறை. 'ஆங்கு' மறுதலைத்தொழிலுவமத்தின்கண்வந்த இடைச்சொல். இதனை, * மற்றுங்கே யெடுப்பதூஉம்" என்றதனானறிக. (அ)

(3) அனைய ராதலி னையவிவ் வெய்யதீ
வினையி னீங்கிய மேலவர் தாளிணைப்
புனையுஞ் சென்னியை யாய்ப்புகழ்ந் தேத்துதி
யினிய கூறிநின் றேயின செய்தியால்.

(இ-ள்.) அனையராதலின் - அத்தன்மையராதலின், ஐய இவ்வெய்ய தீவினையினீங்கிய மேலவர்தாளினை - ஐய இக்கொடிய தீவினையினின்றும் நீங்கிய மேலோர் பாதங்களை, புனையும் சென்னியையாய் - தரிக்கு முடியையுடையையாய், புகழ்ந்தேத்துதி - புகழ்ந்து வணங்கு, இனிய கூறி நின்று ஏயின செய்தி - இனிய சொற்களைக்கூறி நின்று அவர் ஏவினவற்றைச் செய்.—எ-று.

மறைகூறிய வொழுக்கத்திற் றிறம்பாமணிற்றலாற் றீவினை யொழிதலின் அவரை 'வெய்யதீவினையினீங்கிய மேலவர்' என்றும், அவர் வழிபாடே எல்லாப்பேற்றையுந் தருதலின் 'புனையுஞ்சென்னியையாய்ப் புகழ்ந்தேத்துதி' என்றுங்கூறினர். புகழ்தலேயன்றியேவினசெய்தலு மொருதலையாகவேண்டுதலின் 'புகழ்ந்தேத்துதி' என்றும்; 'இனியகூறி நின்றேயினசெய்தி' என்றும் கூறியவாறென்க. இனிய குறிப்புவினைப்பெயர். ஏயின வினைப்பெயர். (கூ)

(4) ஆவ தற்கு மழிவதற் கும்மவர்
ஏவ நிற்கும் விதியுமென் றாலினி
யாவ தெப்பொரு ளிம்மையு மம்மையுந்
தேவ ரைப்பர வுந்துணை சீர்த்ததே.

(இ-ள்.) ஆவதற்கும் அழிவதற்கும் அவர் ஏவநிற்கும் விதியுமென்றால் - ஒருவர் ஆக்கம் பெறுவதற்கும் அஃதொழிவதற்கும் அவரேவ ஊழென்பதே நிற்குமெனின், இம்மையும் அம்மையும் - இம்மையினும் அம்மையினும், இனி ஆவதெப்பொருள் - இனி ஆவதாகியிருப்பதெப்பொருள், தேவரைப் பரவுந்துணை சீர்த்ததே - தேவரை வழிபடுமளவு சிறப்புடையதே.—எ-று.

ஆகலூழ் போகலூழென்பனநோக்கி ஆவதழிவதென்றார். நல்லவையுந்தீயவையு மாக்குவது ஊழாகலான் 'ஆவதற்கு மழிவதற்கும் விதி' என்றும், அது அவர் குறிப்பின்வழி நிற்றலான் 'அவர் ஏவநிற்கும்' என்றும், அவரை

* திருக்குறள், செ - உஅ, கடு.

வழிபடுதலே சிறப்புடையதாதலால் 'ஆவதெப்பொரு ளிம்மையுமம்மையுந் - தேவரைப்பரவுந் துணைசேர்த்ததே' என்றுங் கூறினர். நல்லவையுந் தீயவையும் ஊழான் முற்றுப்பெறுமென்பதனை *" நல்லவையெல்லாஅந் தீயவாந்தீயவு - நல்லவாஞ் செல்வஞ் செயற்கு" என்பதனானறிக. இந்நான்கு பாட்டானும் அந்தணரை வழிபடுதல் கூறப்பட்டது. (கய)

உருளு நேமியு மொண்கவ ரெஃகமும்
மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்கும்
தெருளு நல்லற மும்மனச் செம்மையும்
அருளு நீத்தபி னாவதுண் டாகுமோ.

(இ-ள்.) உருளும் நேமியும் ஒண்கவரெஃகமும் மருளில்வாணியும் வல்லவர் மூவர்க்கும் - உருண்டு செல்லுஞ் சக்கரப்படையும் ஒள்ளிய பிளப்பினையுடைய சூலமும் மயக்கமகன்ற வாக்கும் படையாகக்கொண்ட மும்மைப்பெருந்தேவருக்கும், தெருளு நல்லறமும் - தெளிந்த நன்மையாகிய அறமும், மனம் செம்மையும்-மனத்து நடுவுநிலைமையும், அருளும் நீத்தபின்-கருணையுமுறையே நீங்கியபின்னர், ஆவது உண்டாகுமோ-ஆகத்தக்கதுண்டாமோ.—

சக்கர முருளை வடிவுடைமையானும், சூலமுக்கவடுடைமையானும், வாக்கு மருளில்லாமையானு மவற்றிற் கடைகூறினர். அவை வல்லவர் மூவரென்றது மால் உருத்திரன் அயனென்பாரை. நேமிப்படை, சூலப்படை, வாணி என்பவற்றான் நிலைபெறுவித்தலும், நீக்கலும், ஆக்கலுமாகிய முத்தொழிலையுடைய மும்மைப் பெருந்தேவர் தத்தந்தொழிலை நடத்துதலினான் 'நேமியும் எஃகமும் வாணியும் வல்லவர்' என்றும், அவர்க்கும் அருளும் மனச்செம்மையு மருளுநீத்தவழியாதும் செய்யப்படாமையின் 'ஆவதுண்டாகுமோ' என்றுங்கூறினர். முறையே அவற்றிற் கடைகொடுத்தமை அவற்றைச் சிறப்பித்தற்கு. இதனான் அறமுதலியன நீங்காதிருக்கவேண்டுமெனச் செய்தக்கதுணர்த்தப்பட்டது. (கக)

சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த நினக்கிலை யாயினும்
ஏத மென்பன யாவையு மெய்துதற்
கோது மூல மவையென வோர்தியே.

(இ-ள்.) சூது முந்துறச் சொல்லிய மா துயர்-சூதென முற்பொருந்தக் கூறிய பெருந்துயரம், நீதி மைந்த நினக்கிலை யாயினும் - நீதியையுணர்ந்த மகனே! நினக்கில்லையேனும், ஏதமென்பன யாவையு மெய்துதற்கு-பொல்லாங்கென்பன அனைத்துமடைவதற்கு, ஓதுமூல மவையெனவோர்தி-கூறப்படுங்காரண மவையென்றேயறி.—எ-று.

---

* திருக்குறள், செ - ஙஎரு.

ஐம்பெரும் பாதகத்தினும், சிறுமைபலசெய்து சீரழிப்பது ஆதலான் 'சூது முந்துறச்சொல்லிய மாத்துயர்' என்றும், * "உடைசெல்வமூணொளி கல்வியென்றைந்து மடையாவாம்" என்பதனால், 'ஏதமென்பலவயாவையும்' என்றும், * "பழகியசெல்வமும் பண்புங்கெடுக்கும்" ஆதலின் சூதினை 'ஓதுமூலமவை' என்றும், அதனை நீயேயறிவையென்பார் 'நீதிமைந்தவோர்தி' என்றுங் கூறினர். இதனாற் சூது தீமைதருமென்பதுணர்த்தப்பட்டது. (கஉ)

யாரொ டும்பகை கொள்ளில னென்றபின்
போரொ டுங்கும் புகழொடுங் காதுதன்
தாரொ டுங்கல்செல் லாதது தந்தபின்
வேரொ டுங்கெடல் வேண்டலுண் டாகுமோ.

(இ - ள்.) யாரொடும் பகை கொள்ளிலன் என்றபின் - யாருடனும் பகைகொண்டொழுகிலன் என்றபின்னர், போரொடுங்கும் - போர்த்தொழிலடங்கிவிடும், புகழொடுங்காது - புகழ் என்பது ஓங்கிவளரும், தன் தார் ஒடுங்கல் செல்லாது-தன்னுடைய அறுவகைத்தானையும் கெடாமலிருக்கும், அது தந்தபின் வேரொடுங்கெடல் வேண்டலுண்டாகுமோ - அது தந்த பின்னர் பகையை வேரொடுங் களைதலை வேண்டுடப்பமோ.—எ-று.

புகழ் என்றது-இம்மைப்பயனாகி இவ்வுலகின்கணிகழ்ந்து இறவாது நிற்குங்கீர்த்தி; அது பாட்டுமுரையுமென் றிருவகைப்படும். அவை உரைப்பாருரைப்பவையென எல்லார்க்கும் உரிய வழக்கும், புலவர்க்கே யுரிய செய்யுளுமாம். அறுவகைத்தானையாவன-மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை யென்பன. இதனாற் பகைமை வேண்டாமை யுணர்த்தப்பட்டது. (கரு)

கோளு மைம்பொறி யுங்குறை யப்பொருள்
நாளுங் கண்டு நடுக்குறு நோன்மையின்
ஆளு மவ்வர சேயர சன்னது
வாளின் மேல்வரு மாதவ மைந்தனே.

(இ - ள்.) மைந்தனே - இராகவனே, கோளும் ஐம்பொறியும் குறைய-தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்கின்ற வைம்பொறிகளுமடங்க, பொருள் நாளுங் கண்டு நடுக்குறு நோன்மையின்-செல்வத்தை யென்றுந் தேடிப் பழிபாவங்கட்கு அஞ்சும் பொறையினால், ஆளும் அவ்வரசே யரசு-உலகையாண்டுவரு மரசே யரசெனப்படுவது, அன்னது வாளின்மேல் வருமாதவம் - அது வாளின்மேற்கிடந்து செய்யும் பெருந்தவமாம்.—எ-று.

---

* திருக்குறள், செ - கஙக, கஙஎ.

கோளுமென்பது நீட்டும்வழி நீட்டல் பெற்றது. பழிபாவங்கட்கஞ்சியான் பொருளீட்டியஞான்று தீச்சார்புக்கஞ்சுதலான் 'கோளுமைம்பொறியுங் குறைய' என்றும், அவ்வாறு ஈட்டிய பொருளான் அரசாண்டுவருவதே யரசாதலின் 'நோன்மையினூளும் அவ்வரசேயரசு' என்றும், அதனினுஞ் சிறந்த தவமில்லையாகலான் 'அன்னது வாளின்மேல் வருமாதவம்' என்றுங் கூறினர். இதனன் அரசனுக்குத் தவமின்னதென்ப துணர்த்தப்பட்டது. (கச)

உமைக்கு நாதற்கு மோங்குபுள் ளூர்திக்கும்
இமைப்பி னாட்டமோ ரெட்டுடை யானுக்கும்
சமைத்த தோள்வலி தாங்கின ராயினு
மமைச்சர் சொல்வழி யாற்றுத லாற்றலே.

(இ - ள்.) உமைக்கு நாதற்கு-உமைக்கு நாயகனினும், ஓங்குபுள் ஊர்திக்கும்-ஓங்குகின்ற பறவையையூரும் திருமாலினும், இமைப்பு இல்நாட்டம் ஓரெட்டுடையானுக்கும்-இமைத்தல் இல்லாத கண்கள் எட்டுடைய பிரமனினும், சமைத்ததோள்வலி தாங்கினராயினும் - பொருந்திய தோளாற்றல் படைத்தவரேனும், அமைச்சர் சொல்வழியாற்றுதல் ஆற்றல் - ஆற்றலெனப்படுவது மந்திரிமார் சொல்வழிநடப்பதே.—எ-று.

ஆற்றலைத்தருவதனை யாற்றலென்றது உபசாரவழக்கு. அமைச்சரென்றது அமாத்தியரென்னும் வடமொழிச்சிதைவு. மும்மைப்பெருந்தேவரினும் தோள் வலி சமைந்தாரேனும் அமைச்சர் சொல்வழிநடப்பதே கடமையென்பார் 'தோள்வலி தாங்கினராயினு மமைச்சர் சொல்வழியாற்றுதலாற்றலே' என்றார். நான்கனுருபுகள் மூன்றும் ஐந்தாவதன் எல்லைப்பொருளன. நாட்டமோரெட்டுடையானென்றது பிரமனை. புள் என்றது கருடனை. சமைந்த என்றது வலிக்கும் வழி வலித்தல்பெற்றது. உம்மை நான்கனுள் ஈற்றில் நின்றது உயர்வு சிறப்பு. ஏனைய எண்ணுப்பொருளன. இதனன் அரசன் அமைச்சர் சொற்கேட்பது தக்கதென்பதுணர்த்தப்பட்டது. (கரு)

என்பு தோ லுடை யார்க்கு மிலார்க்குந்தம்
வன்ப கைப்புலன் மாசற மாய்ப்பதென்
முன்பு பின்பின்றி மூவுல கத்தினு
மன்பி னல்லதோ ராக்கமுண் டாகுமோ.

(இ - ள்.) என்புதோல் உடையார்க்கும் - என்பினனுந் தோலினனுமாகிய யாக்கையையுடைய மானிடர்க்கும், இல்லார்க்கும்-அஃதில்லாத வானவர்க்கும், தம் வன்புலப்பகை - தமதுவன்மையாகிய புலப்பகையை, மாசற மாய்ப்பது என்-குற்றந்தீரக்கெடுப்பது யாது பயன்? முன்பு பின்பு இன்றி-தொன்மையும் புதுமையும் நாடாது எக்காலத்தும், மூவுலகத்தினும் - மும்மையுலகத்தினும், அன்பினல்லது ஓராக்கம் உண்டாகுமோ - அன்பினாலன்றியொரு செல்வங்கிடைக்குமோ.—எ-று.

மனிதரும் தேவரும் புலப்பகையை வெல்லுதலாற் பயனில்லையென் பார் 'வன்புலப்பகை மாசறமாய்ப்பதென்' என்றும், அன்பு எல்லாச்செல்வமுந் தருமென்பார் 'அன்பினல்லதோ ராக்கமுண்டாகுமோ' என்றுங் கூறினார். 'முன்பு' என்றது தொன்றுதொட்டுவந்த நட்பினை. 'பின்பு' என்றது புதி தாய்க்கொண்ட நட்பினை. 'அன்பினல்லது' என்பதற்கு அன்பினைப்போலு நல்லதாகிய எனக் கொண்டுரைப்பது மொன்று. நான்காவதிரண்டுங் கருத் தாப்பொருளன, "அவட்குக் கொள்ளு மிவ்வணிகலம்" என்புழிப்போல. ஆக்கந் தருவதனை ஆக்கமென்றார். இதனால் நட்பொடும் வாழவேண்டுமென்பதுணர் த்தப்பட்டது. (கசு)

வைய மன்னுயி ராகவம் மன்னுயி
ருய்யத் தாங்கு முடலன்ன மன்னனுக்
கைய மின்றி யறங்கட வாதருள்
மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ.

(இ-ள்.) வையம் மன்னுயிராக-உலகமே நிலைபெற்ற வுயிராக, அ மன் னுயி ருய்ய-அந்நிலைபெற்ற வுயிருய்ய, தாங்கும் உடலன்ன மன்னனுக்கு - காக்குமுடம்புபோன்ற அரசனுக்கு, ஐயமின்றி அறங்கடவாது அருள்மெய் யின் நின்றபின் - சந்தேகமில்லாது தருமத்தைக்கடவாத அருளினிடத்தும் வாய்மையினிடத்தும் இருந்த பின்னர், வேள்வியும் வேண்டுமோ - வேள்வி செய்தலும் வேண்டப்படுமோ.—எ-று.

உடல் உயிரைத் தாங்குதல்போன்று குடிகளை அரசன் காத்தோம்பல் கடனாதலின் 'வையமன்னுயிராக வம்மன்னுயிருய்யத்தாங்கு முடலன்ன மன்னவன்' எனவுவமித்தார். உயிர்கள்மாட் டருளும் வாய்மையு முளனா யின் அவன் செயக்கடவதொன்றும் வேண்டாமையின் செயற்கரிதாய 'வேள் வியும்வேண்டுமோ' என்றதென்க. செயற்கரிதாய வேள்வியாவன பரிமேத முதலியன, இதனானே அறநெறிகடவா தாண்டொருதலே சிறந்த வறமெனப் பட்டது காண்க. ஓகாரமெதிர்மறை. உம்மை உயர்வுசிறப்பு. இதனான் அர சனுக்குவேள்வி வேண்டுமென்பதுணர்த்தப்பட்டது. (கஎ)

இனிய சொல்லின னீகைய னெண்ணினன்
வினையன் றூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வானெனின்
அனைய மன்னற் கழிவுமுண் டாங்கொலோ.

(இ - ள்.) இனிய சொல்லினன் - இன்சொலுடையானும், ஈகையன் - ஈகையுடையானும், எண்ணினன் - மதிக்கப்படுவானும், வினையன் - முயற்சி யுடையானும், தூயன்-உள்ளந் தூய்மையுடையானும், விழுமியன்-சிறப்பினை யுடையானும், வென்றியன் - பகைவரை வெற்றிகொள்வானும், நினையு நீதி

நெறிகடவானெனின் - யாவரானும் நினைக்கப்படும் நீதியும் ஒழுக்கமும் கடவானேயாயின், அனைய மன்னற் கழிவுமுண்டாங்கொல்-அவ்வரசனுக்குக் கேடென்பது முண்டு கொல்.—எ-று.

மனத்தின்கணுவகையை வெளிப்படுத்துவது ஒருவன் வாக்கிற்பிறக்குஞ் சொல்லாகலின் அதனைக் கூறுவதுபற்றி முன்னே 'இனியசொல்லினன்' என்றும், வறியராய் ஏற்றோர்க்கு மாற்றாது கொடுத்தலான் அதைப்பற்றி 'ஈகையன்' என்றும், அவ்வாறீவார் மேற்புகழ் நிற்றலின் 'எண்ணினன்' என்றும், புகழெய்த இடைவிடாத மெய்ம்முயற்சியுடையனாதல் வேண்டப்படுதலின் 'வினையன்' என்றும், அவ்வினை செய்துழிப் பிறரால் பழிக்கப்படாமையின் 'தூயன்' என்றும், இழிவாந்தன்மை வேண்டப்படாமையின் 'விழுமியன்' என்றும், புறங்கொடாது விழுப்புண்படப் போர்க்களத்து நின்றவனே வெற்றியெய்து மாகலின் 'வென்றியன்' என்றும், அவன் உலகோம்புங்கால் நடத்த வேண்டுவது நீதியும் அதன் காரணமாகிய நெறியுமாகலின் உடனெண்ணியும், இவை யொருங்குடையான் அழிவெய்தானாகலின் 'அனையமன்னற் கழிவுமுண்டாங்கொலோ' என்றுங்கூறினார். இதனான் அரசனுக்கு இன்றியமையாத குணங்களுணர்த்தப்பட்டன. (கஅ)

சீல மல்லன நீக்கிச்செம் பொற்றுலைத்
தால மன்ன தனிநிலை தாங்கிய
ஞால மன்னற்கு நல்லவர் நோக்கிய
கால மல்லது கண்ணுமுண் டாங்கொலோ.

(இ-ள்.) சீலமல்லன நீக்கி-ஒழுக்கமல்லனவற்றினைச்செய்யாதொழித்து, செம்பொன் துலைதாலமன்ன-தன்னிலிட்ட செம்பொன்னை வரையறுக்கும் துலைநாவேபோன்ற, தனிநிலை தாங்கிய ஞாலமன்னற்கு - நடுநிலைமையாக உலகையாண்டு வருமரசனுக்கு, நல்லவர் நோக்கிய காலமல்லது கண்ணுமுண் டாங்கொல் - அறிவுடையார் நோக்கியிருக்கின்ற காலமேயல்லது வேறுகண்ணும் வேண்டப்படுவதோ.—எ-று.

துலை சமன்செய்தலுஞ் சீர் தூக்கலும்போல அரசனும் அமைதலு மொருபாற்கோடாமையும் உடையனாதல் வேண்டுமாதலின் 'செம்பொற்றுலைத்தாலமன்ன தனிநிலை தாங்கிய ஞாலமன்னற்கு' என்றும், அப்பெற்றியான் உலகமுழுதுந் தன்னகப்படுத்தும் ஆற்றலுடையானேனுங் காலங்கருதியிருத்தல் வேண்டுமாதலின் 'நல்லவர்நோக்கியகாலமல்லது கண்ணுமுண்டாங்கொல்' என்றுங் கூறினார். அவ்வாறு கூறினர் காலங் கருதாதுசொல்லிற் பெருமையனைத்துந் தேய்ந்து வருத்த முறுதல் நோக்கி; இதனைக் * "காலங்கருதியிருப்பர்கலங்காது-ஞாலங்கருதுபவர்" என்றதனானறிக. நோக்கியிருத்தலாவது நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டலென்னு

* திருக்குறள், செ - சஅடு.

மாறுவகைக்குணங்களுண் மேற்செலவிற்கு மாறாயது. இதனான் எவ்வகை ஆற்றலுடையானேனும் காலங்கருதியிருக்கவேண்டுமென்பதுணர்த்தப்பட்டது.

ஓர்வி னல்வினை யூற்றத்தி னாருனா
பேர்வி றொல்விதி பெற்றுள தென்றரோ
தீர்வி லன்பு செலுத்தலிற் செவ்வியோர்
ஆர்வ மன்னவற் காயுத மாவதே.

(இ - ள்.) ஓர்வின் நல்வினை யூற்றத்தினாருனா - ஆராய்ச்சிபெற்ற நல்வினையிலழுந்தினாரது சொல், பேர்வில் தொல்விதி பெற்றுளதென்ற-நிலைபெயர்தலில்லாத பழையவிதியினை அடைந்துளதென்று, தீர்விலன்பு செலுத்தலின் - நீங்குதலில்லாத வன்பினையாவரும் செலுத்துவதனான், செவ்வியோர் ஆர்வம்-செம்மைநெறிமேற்கொண்டார் வைத்த அன்பு, மன்னவற் காயுதமாவது-அவ்வரசனுக்குப் படைக்கலம் போல்வதாகும்.—எ-று.

அன்னவற்கெனக்கொண்டு அவனுக்கென் றுரைப்பினும் அமையும். எவ்வகையினுஞ் சென்று நடத்தலிற் 'பேர்வில்தொல்விதி' என்றார். விதி-சட்டம். இதனான் அரசனுக்குக் கைப்படை யின்னதென்ப துணர்த்தப்பட்டது. (உ0)

தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனு
நாம மில்லை நரகமு மில்லையே.

(இ - ள்.) புவிக்கு தூமகேதுவென தோன்றிய - நிலவுலகத்துத் தூமகேதுவெனத்தோன்றிய, வாம மேகலை மங்கையரால் வரும் - அழகிய மேகலை அணிந்த மாதராற் றோன்றும், காமமில்லையெனின் - காமமென்ப தில்லையாயின், கடுங்கேடெனும் நாமமில்லை நரகமுமில்லை - கொடுமையாகிய கெடுதியென்னும் பெயரில்லை நரகமுமில்லை.—எ-று.

தூமகேதுவாலையுடைய விண்மீன்; அது உற்பாதக்குறி. உயிர்க்குக் கேடு சூழ்வதுமாதர்தருஞ் சின்னீரதாகிய சிற்றின்பமாகலி னதனை யொருதலையாஎரீக்கவேண்டுமென்பார் 'தூமகேதுபுவிக்கெனத்தோன்றிய வாமமேகலைமங்கையரால்வருங் காமமில்லை' என்றும், அஃதில்லையேற் 'கேடுநரகமுமில்லை' எனப் பயனையு முடன் கூறினார். இதனான் மங்கையர் வாஞ்சை கேடுதருமென்ப துணர்த்தப்பட்டது. (உக)

ஏனை நீதி யினையன வையகப்
போன கற்கு விளம்பிப் புலங்கொளீஇ
ஆன வன்னெடு மாயிர மோலியான்
தான நண்ணினன் றத்துவ நண்ணினன்.

(இ - ள்.) இனையன ஏனை நீதி வையகம் போனகற்கு - இவை போல்வனவாகிய பிறநீதிகளையும் உலகமுண்ட பெருவாயனாகிய இறைவனுக்கு, விளம்பி புலங்கொளீஇ- சொல்லி அறிவுறுத்தி, ஆனவனெனும்-அவனேனும், தத்துவ நண்ணினன்-மெய்யுணர்ச்சியை யடைந்த வசிட்டமுனிவன், ஆயிர மோலியான் தானம் நண்ணினன் - ஆயிரமோலியானது சந்நிதியையடைந்தனன்.—எ-று.

இட்சுவாகு பணியரங்க வினையகலப் பெருங்காலந் தவம்பேணி மலரயனை வழிபட்டுக் கொணர்ந்த டணியரங்கநெடும்பாயற் பரஞ்சுடரை 'ஆயிர மோலியான்' என்றதென்க. உலகமுண்ட பெருவாயனாகலின் 'வையகப்போனகற்கு' என்றார். வையகப்போனகற்கு இவன் கூறுதல் சாலாதென்பது நோக்கி அங்ஙனங் கூறினனெனினுமாம்.விளம்பி புலங்கொளீஇ நண்ணினனென வினைமுடிக்க. இதனால் வசிட்டமுனிவன் சீராமனெனும் ஆயிரமோலியானை யடைந்தமை யுணர்த்தப்பட்டது. (உஉ)

(1) நண்ணி நாகணை வள்ளலை நான்மறைப்
புண்ணி யப்புன லாட்டிப் புலமையோர்
எண்ணு நல்வினை முற்றுவித் தேற்றினன்
வெண்ணி றத்த தருப்பை விரித்தரோ.

(இ - ள்.) நாகணை வள்ளலை நண்ணி - சர்ப்பசயனத்திற் கண்படைகொள்ளுமிறைவனை யடைந்து,நான்மறைப் புண்ணியம் புனல் ஆட்டி-நான்குவேதங்களாலும் கூறப்பட்ட மந்திரப்புனலானீராட்டி,புலமையோர் எண்ணு நல்வினை முற்றுவித்து - அறிவுடையோரா லெண்ணத்தக்க உபசாரங்களையெல்லாஞ் செய்துமுடித்து, வெண்ணிறத்த தருப்பை விரித்து ஏற்றினன்-வெண்ணிறத்தையுடை தருப்பையைப் பரப்பி அதில் வீற்றிருக்கச்செய்தனன்.

யாவருமெண்ணுவது மங்கலவினையாகலின் 'எண்ணுநல்வினை' என்றும், வேதமந்திரங்கூறி முகந்து கொணர்ந்தமையான் 'புண்ணியப்புனல்' என்றுங் கூறினர்; அல்லது கங்கை முதலிய சகல தீர்த்தங்களை யெனினுமமையும். நண்ணி ஆட்டி முற்றுவித்து விரித்து ஏற்றினனென வினைமுடிக்க. தன் குலதெய்வத்தை வழிபடவேண்டுமாகலின்'நண்ணிநாகணைவள்ளலை' என்றார்.

வேறு.

(2) ஏற்றிட வாண்டகை யினிதி ருந்துழி
நூற்றட மார்பனு நொய்தி னெய்தப்போ
யாற்றல்சா லரசனுக் கறிவித் தானவன்
சாற்றுக நகரணி சமைக்க வென்றனன்.

(இ - ள்.) ஆண்டகை - புருடோத்தமனாகிய விறைவன், ஏற்றிட இனிதிருந்துழி - வசிட்டமுனிவனிருக்கச்செய்ய இனிமையாக விருந்தபொழுது,

நூல் தடமார்பனும் - நூலையணிந்த விசாலமாகிய மார்பினையுடைய வசிட்ட முனிவனும், நொய்தி னெய்தபோய் - விரைவாக வடைந்துசென்று, ஆற்றல் சால் அரசனுக் கறிவித்தான் - வலிமையுடைய அரசனுக்குத் தெரிவித்தனன், அவன் நகரணி சமைக்க சாற்றுக வென்றனன்-அவன் நகரத்தை யலங்கரிக்கப் பறைசாற்றுகவென்று கட்டளையிட்டனன்.—எ-று.

ஏற்றிடவிருந்துழி நொய்தினெய்தப்போ யறிவித்தான், சமைக்கச் சாற்றுகவென்றனன் என வினைமுடிக்க. நாளையே முடிசூட்டுநாளாகலின் 'விரைவினெய்தப்போய்' என்றார். இவ்விரண்டு செய்யுளானும் வசிட்டமுனிவன் மங்கலகாரியமுடித்தமையும் அரசன் நகரலங்கரிக்கக் கட்டளையிட்டமையும் உணர்த்தப்பட்டன. (உச)

ஏவின வள்ளுவ ரிராம ஞளையே
பூமகள் கொழுநனுய்ப் புனையு மௌலியிக்
கோநக ரணிகெனக் கொட்டும் பேரியத்
தேவருங் களிகொளத் திரிந்து சாற்றினர்.

(இ - ள்.) ஏவின வள்ளுவர்-ஏவப்பட்ட வள்ளுவர், இராமன் நாளையே பூமகள் கொழுநனுய் மௌலிபுனையும்-நாளையே நிலமடந்தைக்குக் கணவனுய் மணிமுடிசூட்டிக்கொள்வான், இக் கோ நகரணிக எனக் கொட்டும் பேரி-இச் சிறந்த நகரினையலங்கரிக்கவெனக் கொட்டுகின்ற முரசு, அத்தேவருங் களி கொளத் திரிந்து சாற்றினர் - அவ்வானவரும் களிப்பினையெய்தத் திரிந்து சாற்றினர்.—எ-று.

நகரமேழினு முன்னிற்பதாதலின் 'இக்கோநகர்' என்றும், பறைசாற்றற்குக் காரணம் தாம் துன்பந்தவிர்ந் துய்வதற்கிடனுகலின் 'அத்தேவருங் களிகொள' என்றுங் கூறினுர். ஏவினவெனச் செய்யப்படுபொருள் வினைமுதல் போலக் கூறப்பட்டது; * "இல்வாழ்வானென்பான்" என்புழிப்போல. பூமகளென்றது ஈண்டு நிலமகளை. பூமகள் கொழுந னென்பதனை நான்காவதன் தொகையாகக்கொள்க. இதனுன் வள்ளுவர் முரசறைந்தமையுணர்த்தப்பட்டது.

(1) கவியமை கீர்த்தியக் காளை நாளையே
புவியமை மணிமுடி புனையு மென்றசொற்
செவியமை நுகர்ச்சிய வெனினுந் தேவர்த
மவியமு தன்னவந் நகரு ளார்க்கெலாம்.

(இ-ள்.) கவியமை கீர்த்தி-கவிகளாலமைந்த புகழினையுடைய, அக்காளை நாளையே புவியமை மணிமுடி புனையும் - அக்காளைபோல்வனுகிய ஸ்ரீராமன் நாளையே அரசச்செல்வத்திற்குரிய மணிமகுடம் புனைவான், என்றசொல்- என்று சொல்லப்பட்டசொல், செவி அமை நுகர்ச்சிய எனினும்-காதுக்கினி

* திருக்குறள், செ - சக.

மையைப் பயப்பதேயாயினும், அந்நகருளார்க்கெல்லாம் தேவர்தம் அவியமுதன்ன - அந்நகரின் ஆடவர் மகளிரென்னு மிருபாலார்க்கும் வானோரமுதம் போன்றது.

இவ்வாசிரியர் 'முனிவரும் புகழ்ந்ததுவரம்பில்' என முற்காண்டத்திற் கூறியதை 'கவியமைகீர்த்தி' என ஈண்டும் வற்புறுத்தினர். புலவராற் பாடப்படும் செய்யுளேயே விதந்தாராயினும், இனம்பற்றி யார்க்குமுரிய வழக்கினையுங்கொள்க. இதனை முன்னே விளக்கின மாண்டுக்காண்க. இவர் கேட்டது சொல்லளவன்று என்பார் 'தேவர் தயவியமுதன்ன' என்றும், இவனே மணிமுடிபுனைவது தக்கதென்பார் 'புவியமை மணிமுடிபுனையும்' என்றுங் கூறினர். துவ்வீறு தொகுக்கப்பட்டது. காளை ஆகுபெயர். (உசு)

(2) ஆர்த்தனர் களித்தன ராடிப் பாடினர்
வேர்த்தனர் தடித்தனர் சிலிர்த்து மெய்ம்மயிர்
போர்த்தனர் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்
தூர்த்தனர் நீணிதி சொல்லி னார்க்கெலாம்.

(இ - ள்.) ஆர்த்தனர் - ஆரவாரித்தனர், களித்தனர்-மகிழ்ந்தனர், ஆடிபாடினர்- ஆடிப்பின்பாடினர், வேர்த்தனர் - வியர்த்தனர், தடித்தனர்- பூரித்தனர், சிலிர்த்து மெய்ம்மயிர் போர்த்தனர் - உடம்பு சிலிர்த்து உரோமாஞ்சிதங்கொண்டனர், மன்னனை புகழ்ந்து வாழ்த்தினர்-அரசனைப்புகழ்ந்து வாழ்த்துதல் செய்தனர், நீணிதி சொல்லினார்க்கெலாம் தூர்த்தனர் - நீண்ட திரவியத்தைச் சொன்னவர்கட்கெல்லாம் நிரப்பினர். (உஎ)

(3) திணிசுட ரிரவியைத் திருத்து மாறுபோல்
பணியிடைப் பள்ளியான் பரந்த மார்பிடை
மணியினை வேகடம் வகுக்கு மாறுபோ
லணிநக ரணிந்தன ரருத்தி மாக்களே.

(இ - ள்.) திணிசுடரிரவியை திருத்துமாறுபோல் - திணிந்த சுடரினையுடைய ஞாயிற்றைத்திருத்தல்போலவும், அப்பணியிடைபள்ளியான் பரந்தமார்பிடை மணியினைவேகடம் வகுக்குமாறுபோல்-அச்சர்ப்பசயனத்தினையுடைய இறைவனது அகன்றமார்பின் மணியை வேகடம் வகுக்கும் வகைபோலும், அருத்தி மாக்கள் அணிநகர் அணிந்தனர் - அவாவையுடைய நகரமாந்தர் அலங்காரமுற்றும் பெற்ற நகரத்தை யலங்கரித்தனர்.

உவாமதியாகிய சந்திரனைப்போலாது ஆயிரங்கதிரையுடைமையின் திணிசுடரென்றதென்க. பணியிடைப்பள்ளியானென்றது திருமாலே. மார்பிடை மணியென்றது கௌத்துவமணியை; திருவீற்றிருக்கப்பெற்றமையாற் 'பரந்தமார்பு' என்றார். தொழிலுவமம். 'அருத்திமாக்கள்' என்றார் ஆசையினாற் செய்தமையன்றி யறிவாற்செய்யாமையின். வேகடம்-மணியழுக்ககற்றல். ()

(4) வெள்ளிய கரியன செய்ய வேறுள
கொள்ளைவான் கொடிநிரைக் குழாங்க டோன்றுவ
கள்ளவிழ் கோதையான் செல்வங் காணிய
புள்ளெலாந் திருநகர் புகுந்த போன்றவே.

(இ-ள்.) வெள்ளிய கரியன செய்ய வேறுள - வெண்மைநிறம்படைத்தன கருமைநிறம்படைத்தன செம்மைநிறம்படைத்தன பிறநிறங்கள் படைத்தனவாகிய, கொள்ளைவான் கொடிநிரை குழாங்கள் தோன்றுவ - மிகுதியாக வானையளாவிய கொடியின்கூட்டங்கள் தோன்றுவன, கள்ளவிழ் கோதையான் - தேனைச்சொரிகின்ற மாலையுடையான், செல்வங்காணிய - காட்சியைக்காண, புள் எல்லாம் திருநகர் புகுந்தபோன்ற-பறவைகளெல்லாம் திருநகரத்திற் புகுந்தனபோன்றன.—

இது தற்குறிப்பேற்றம். தோன்றுவ காணிய புகுந்த போன்ற என வினைமுடிக்க. பறவையினும் கொடியினும் முறையே வெண்மை முதலிய நிறமுண்மையி னங்ஙனங் கூறினர். 'வெள்ளியகரியன' பொருண்முரண். ()

(5) மங்கையர் குறங்கென வருத்த வாழைக
ளங்கவர் கழுத்தெனக் கமுக மார்ந்தன
தங்கொளி முறுவலிற் றாம நான்றன
கொங்கையை நிகர்த்தன கனக கும்பமே.

(இ-ள்.) மங்கையர் குறங்கென வாழைகள் வருத்த - வாழைகள் மாதரது தொடைபோல் வருக்கப்பட்டன, அங்கவர்கழுத்தென கமுகமார்ந்தன- அவ்விடத்தவர் கழுத்தேபோற் கமுகமைந்தன, தங்கு ஒளிமுறுவலில் தாமம் நான்றன - தங்குகின்ற ஒளியினையுடைய நகைபோலு முத்தமாலை நாலவிட்டன, கொங்கையை கனககும்பம் நிகர்த்தன - பொற்கும்பங்கள் அம்மாதர் கொங்கையை யொத்தன.—

இது விபரீதவுவமை, கொங்கையி னிறைந்தனவென்றும் பாடங் கூறுவாருமுளர். (௫)

(6) முதிரொளி யுயிர்த்தன முடுகிக் காலையிற்
கதிரவன் வேறொரு கவின்கொண் டானென
மதிதொட நிவந்தன மகர தோரணம்
புதியன வலர்ந்தன புதவ ராசியே.

(இ-ள்.) காலையில் கதிரவன் முடுகி வேறொரு கவின் கொண்டானென- இள ஞாயிறு விரைந்து வேறொரு அழகு கொண்டதுபோல, மதிதொட நிவந்தன புதியன மகரதோரணம்-சந்திரமண்டலம் அளாவின புதியனவாகிய மகர தோரணங்கள், அலர்ந்தன புதவராசி - பெற்றனவாகிய கோபுரவாயிற் கதவுகளின் கூட்டம், முதிரொளி யுயிர்த்தன - மிக்க வொளியை வீசின.—

கதிரவனென்னுது 'காலையிற் கதிரவன்' என்றமையான் இளஞாயிற்றை யுணர்த்தி நின்றது. மதி-ஆகுபெயர். புதவு-கோபுரவாயிற்கதவு. கவின்-அழகு.

(7) துனியறு செம்மணித் தூண நீறுதோய்
வனிதையோர் கூறினன் வடிவு காட்டின
புனைதுகி லுறைதொறும் பொதிந்து தோன்றின
பனிபொதி கதிரெனப் பவளத் தூண்களே.

(இ - ள்.) புனைதுகில் உறைதொறும் பொதிந்து - அலங்கரிக்கப்பட்ட ஆடையினுகிய உறைகளினுல் மூடப்பட்டு, துனியறு செம்மணி தூணம்-குற்றந்தீர்ந்த செம்மணியினுய தூண்கள், நீறுதோய் வனிதையோர் கூறினன் வடிவுகாட்டின - நீறுபூசிய பெண்ணொருபாகத்துப் பெரியோன் வடிவைக் காட்டிநின்றன, பவளத்தூண்கள் - பவளத்திறுய தூண்கள், பனிபொதி கதிரென தோன்றின-பனியான்மூடப்பட்ட ஞாயிற்றைப்போல்விளங்கின.—

புனைதுகிலுறைதொறும் பொதிதலைச் செம்மணித்தூண், பவளத்தூண் என்னுமிரண்டிடத்துங்கூட்டுக. தொறுமென்பது மூன்ருவதன் பொருள்பட நின்றதோரிடைச்சொல். வனிதையோர் கூறினனென்பது சிவனென்னுந் துணையாய்நின்றது. உறையெண்ணிறந்த வாய்த்தூண்களிற் பொதிந்தனவற்றுள் மணிநிறத்து இறைவன் வடிவத்தை யொப்பனவாகிய மாணிக்கத்தூண்கள் சிவனது நீறுதோய் வடிவத்தையும், பவளத்தூண்கள் ஞாயிற்றைப்பொதிந்த பனியையு முவமைமுகத்தா னறிவித்தவாறு. கதிர் - ஆகுபெயர். இது தொழிலுவமம். (கூ௨)

(8) முத்தினின் முழுநில வெறிப்ப மொய்ம்மணிப்
பத்தியி னிளவெயில் பரப்ப நீலத்தின்
றொத்தின மிருள்வரத் தூண்டச் சோதிட
வித்தகர் விரித்தநா ளொத்த வீதியே.

(இ - ள்.) முத்தினில் முழுநிலவெறிப்ப - முத்தின்கண் முழுநிலவு வீசவும், மொய்ம்மணிபத்தியின்-நெருங்கிய மணிவரிசையில், இளவெயில் பரப்ப-இளஞாயிற்றினொளிவீசவும், நீலத்தின் தொத்தினம் இருள்வரத்தூண்ட -நீலமணியின் கூட்டம் இருள்வரத்தூண்டலான், வீதி சோதிடவித்தகர் விரித்த நாளொத்த-வீதிகள் கணித நூற்புலவர் விரித்தநாளை யொத்திருந்தன.—

நவமணிகளொன்பானுக்குங் கோளொன்பானும் அதிதெய்வமாகலான், சூரிய சந்திர ரதிதெய்வமாகிய மாணிக்க முத்தென்பனவற்றி னொளியடங்கியதும், பாபக்கிரகமாகிய சனியதிதெய்வமாகிய நீலமணியி னொளிவிஞ்ச நின்றதும் ஏதுவாக, சீராமனுக்கு முடிபுனைகோல மின்றென்பதனை அவ் விராசவீதியே கணிதநூற்புலவர்போன்றுணர்த்திற்றென்க. இக்கிரகங்களே மணிகளொன்பானுக்கு மதிதெய்வ மென்பதனை முத்திற்கதிதெய்வம் 'முத்தி

னின் முழுநிலவெறிப்ப' என்பதனானும், மாணிக்கத்தினதிதெய்வம் 'மணிப் பத்தியினிளவெயில்பரப்ப' என்பதனானும், நீலத்தினதிதெய்வம் 'நீலத்தின் றெத்தினமிருள்வரத்தூண்ட' என்பதனானு மோர்ந்துணர்க. 'வீதிசோதிட வித்தகர்விரித்தநாளொத்த' என்றார், அப்புலவர் இன்னகிரகம் இன்னபடி சுபாசுபமறிவிக்கும் என்பதனைத்தானே யவ்வீதி விளக்கலானென்க. முத்து-பத்தி என்பன வடமொழிச்சிதைவு. (௯௯)

(9) ஆடன்மான் றேர்க்குழா மவனி காணிய
வீடெனு முலகின்வீழ் விமானம் போன்றன
ஓடைமா கடகளி றுதய மால்வரை
தேடருங் கதிரொடுந் திரிவ போன்றன.

(இ - ள்.) ஆடல்மான் தேர்க்குழாம் அவனி காணிய - கதியைந்தினையு முடைய குதிரைகள் பூட்டிய தேரின்கூட்டம் நிலவுலகத்தைக் காணும்படி, வீடெனும் உலகின்வீழ் விமானம்போன்றன-வீடென்று சிறப்பித்துச் சொல்லப்படும் உலகினின்றும் விழுகின்ற விமானத்தை யொத்திருந்தன, ஓடை மாகடகளிறு - நெற்றிப்பட்டமணிந்த பெரிய மதச்சுவட்டினையுடைய யானைகள், உதயமால்வரைதேடருங் கதிரொடுந்திரிவபோன்றன-உயர்வாகிய உதய மலைகள் தேடுதற்கருமையாகிய ஞாயிற்றினோடுந்திரிவன வொத்திருந்தன—

இந்திரன் முதலிய விறையவர் பதங்கட்கப்பாற் பட்டதாகலின்'வீடெனு முலகு' என்றதென்க. ஆடலென்றது கதியைந்தினையும்; அவை - மயூரகதி, மல்லகதி, வானரகதி, இடபகதி, வியாக்கிரகதியென்பன. உலகு என்பதனை வடமொழியென்றாரால் வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையரெனின், அவ்வாறு வடமொழி வருவதன்மையானும், * "காலமுலகம்" என்னுஞ் சூத்திரத்துக் 'காலமுலகம்' என ஆசிரியர் தொல்காப்பியராற் கொளப்பட்டமையானும்,அக்காலத் திவ்வாறு வடசொற்றமிழில் வழங்கிவரும் வழக்கமின்மையானும், யாங் கூறியதே நச்சினார்க்கினியர்க்கு முடன்பாடாகலானும் வடசொற் சிதைவன்றெனக் கூறிவிடுக்க. (௯௪)

(10) வளங்கெழு திருநகர் வைகும் வைகலும்
பளிங்குடை நெடுஞ்சுவ ரடுத்த பத்தியிற்
கிளர்ந்தெரி சுடர்மணி யிருளைக் கீறலால்
வளர்ந்தில பிரிந்தில செக்கர் வானமே.

(இ - ள்.) வைகலும் வளங்கெழு திருநகர் வைகும்-நாடோறும் வளப்பமிகுந்த சிறந்த நகரத்தில் பொருந்துகின்ற, பளிங்குடைய நெடு சுவர் அடுத்த பத்தியின் - பளிங்கினாற் செய்யப்பட்ட நீண்ட சுவரினையடுத்த வரிசையில், கிளர்ந்தெரி சுடர் மணி இருளை கீறலால் - மிகவும் விளங்கும் சுடரை

* தொல்காப்பியம், சொல் - ௬ஏ.

யுடைய மணிகள் இருளைப் போக்குகையால், 'செக்கர் வானம் வளர்ந்திலபிரிந் தில-செவ்வானம் ஆண்டுத் தோன்றியதுமில்லை நீங்கியதுமில்லை.—

'மணியிருளைப் போழ்தலின் செக்கர்வானம் வளர்ந்தில பிரிந்தில' என்றார். இறைவனவதரிக்கப் பாக்கியஞ்செய்த நகரமாதலின் 'வளங்கெழுதிரு நகர்' என்றதென்க. செக்கர் பண்புப்பெயர். மணிக்கு வேறுகாரணங் காட்டுவாருமுளர்; மணியினொளி இயல்பானிருளைக் கீறலினது சிறப்பன்மையறிக.

(11) பூமழை புனன்மழை புதுமென் சுண்ணத்தின்
தூமழை தரளத்தின் றோமில் வெண்மழை
தாமிழை நெரிதலிற் றகர்ந்த பொன்மழை
மாமழை நிகர்த்தன மாட வீதியே.

(இ-ள்.) பூமழை - புட்பவருடமும், புனல்மழை - சலவருடமும், புது மென் சுண்ணத்தின்தூமழை - புதிய மென்மையாகிய பொற்சுண்ணத்தால் தூவப்படுமழையும், தோமில்வெண்மழை - குற்றந்தீர்ந்த வெண்மையாகிய மழையும், இழைநெரிதலின் தகர்ந்தபொன்மழை - ஆபரணங்கள் ஒன்றோ டொன்று தாக்குதலாற் றகரப்பட்ட பொன்மழையும், மாடவீதி மாமழை நிகர்ந்தன் - மாடங்களையுடைய வீதியில் பெரியமழையை யொத்தன.—

தேவர்கள், சீராமபிரான் காடுசென்று தம்பதந்தரும் கழிபேருவகையாற் கற்பகமலர்மாரி பொழிதலாற் 'பூமழையை' முற்கூறினர். சனநெருக்கத்தாலிழைகளொன்றோடொன்றுபட்டு நெரிந்து தகர்ந்துக்கனவாய் வீழ்தலின் அவற்றின் மிகுதி தோன்ற 'இழைநெரிதலிற்றகர்ந்த பொன்மழை' என்றதென்க.

(12) காரொடு தொடர்மதக் கரிகள் சென்றன
வாரொடு தொடர்கழன் மைந்த ராமெனத்
தாரொடு நடந்தன பிடிகள் தாழ்கலைத்
தேரொடு நடக்குமத் தெரிவை மாரினே.

(இ - ள்) காரொடு தொடர்மதம் கரிகள் - மேகத்தினை இனமென்றடையும் மதம்பொழிகின்ற யானைகள், வாரொடு தொடர்கழல் மைந்தராமென சென்றன - கவசத்தொடு வீரக்கழலையுமணிந்த வீரராமென்று சொல்லச்சென்றன, தாழ்கலை தேரொடும் நடக்கும் அத்தெரிவைமாரின் - சரிகின்ற மேகலையையணிந்த அல்குலாகிய தேரினையுடையராய் நடந்துசெல்லு மாதரைப் போல, பிடிகள் தாரொடு நடந்தன-பிடிகள் கிண்கிணிமாலையுடன் சென்றன.

வார் - கவசம்; தார் கிண்கிணிமாலை; கலைத்தேரென்றமையான் அல்குலாகிய தேரென்றாம். மேகலை முதற்குறைந்து நின்றது. ஒடுநான்கினுள் காரொடு இசை நிறை, வாரொடு காவிப்பொருட்டு, ஏனைய அடைமொழிப் பொருளன. இன் ஐந்தாவத னொப்புப்பொருளது. மைந்தரென்றது வீரரை.

(13) எய்ந்தெழு செல்வமு மழகு மின்பமுந்
தேய்ந்தில வனையது தெரிகிலாமையால்
ஆய்ந்தனர் பெருகவு மமர ரிம்பரிற்
போந்தவர் போந்தில மென்னும் புந்தியால்.

(இ-ள்.) எய்ந்து எழுசெல்வமும் - பொருந்தி எழுகின்ற செல்வமும், அழகும் இன்பமும் - அழகுமின்பமும், தேய்ந்தில - குறைந்தில, அனையது தெரிகிலாமையால் - அவ்வேறுபாடு உணரமாட்டாமையான், இம்பரில் போந்தவர் - சீராமனது பட்டாபிடேகங்காண மண்ணுலகிலிழிந்தவராகிய, அமரர் போந்திலமென்னும் புந்தியால் பெருகவும் ஆய்ந்தனர்-தேவர்கள் அயோத்தியை வந்தெய்திலமென்னு மறிவினால் மிகுதியும் ஆராய்ந்தனர்- எ-று.

இந்திரதிருவமெனச் சொல்லப்படுஞ் செல்வமுடைய அயோத்தியை யடைந்த தேவர்கள் தம்பொன்னுடொழிந்திலமென்று கருதியிருந்தனரென்பார் 'அமரரிம்பரிற் போந்தவர் போந்திலமென்னும் புந்தியால்' என்றார். அழகுமின்பமு மெய்துதற்கேது செல்வமாகலின் 'எய்ந்தெழுசெல்வமுமென' அதனை முற்றினார். இப்பதின்மூன்று செய்யுளானும் அரசனாணையான் நகரலங்கரித்தமை யுணர்த்தப்பட்டது. (கூஅ)

(1) அந்நக ரணிவுறு மமலை வானவர்
பொன்னக ரியல்பெனப் பொலியு மெல்வையி
லின்னல்செ யிராவண னிழைத்த தீமைபோற்
றுன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்.

(இ - ள்.) அந்நகர் அணிவுறும் அமலை - அந்நகரத்தினை யலங்கரிக்கும் ஓசை, வானவர் பொன்னகர் இயல்பென பொலியு மெல்வையில் - தேவரது பொன்னகரத்தி னியல்பென்று விளங்கு மமையத்து, இன்னல்செய் இராவணன் இழைத்ததீமைபோல் - உலகினுக்குத் துன்பத்தை விளைக்குமிராவணன் செய்தபொல்லாங்கனைத்து மொருவடிவங்கொண்டதுபோல, துன் அரு கொடுமனம் கூனிதோன்றினாள் - பொருந்துத லருமையான கொடிதாகிய மனத்தையுடைய கூனி தோன்றினள்.—

இராவணனிழைத்த 'தீமையனைத்து மொருவடிவுகொண்டாலொப்பக் கைகேசி தூயமனங்கலைப்பான் றோன்றுகின்றவளாகலின் 'இன்னல்செயிராவணனிழைத்த தீமைபோல்' என்றும், யாவர் மனத்துக்கு மினியான் காடு செல்லத்துணிந்த நெஞ்சமுடையாளாகலின் 'துன்னருங்கொடுமனக்கூனி' என்றுங் கூறினார். கொடுமனமென்பதற்குக் கூனிய வுடம்பேயன்றிக் கூனிய மனமுமுடையாளென்றது குறித்துநின்றது; இதுபற்றிநோக்கியே * "கூனி லாவியமடந்தைதன் கொடுஞ்சொலின்றிறத்திளங்கொடியோடுங்-கானுலாவியகருமுகில்" என்ற திருப்பாட்டிற் கண்ணிற் குறாடேயன்றி நெஞ்சுங் குரு

* பெரியதிருமொழி, கூ-பத்து, ௨-பதிகம்.

பெட்டிருப்பதொப்ப, முதுகிற் கூனேயன்றி நெஞ்சு மவ்வாறிருப்பதென்பர் அவ்வருளிச்செயலி னுரையாசிரியரும். (௩௯)

(2) தோன்றிய கூனியுந் துடிக்கு நெஞ்சினள்
ஊன்றிய வெகுளியா ளுளைக்கு முள்ளத்தாள்
கான்றெரி நயனத்தாள் கதிக்குஞ் சொல்லினள்
மூன்றுல கினுக்குமோ ரிடுக்கண் மூட்டுவாள்.

(இ - ள்.) தோன்றிய கூனியும் - அவ்வாறு தோன்றிய கூனியும், துடிக்கும் நெஞ்சினள் - துடிக்கின்ற நெஞ்சுடையளாயும், ஊன்றிய வெகுளியாள் - நிலைத்த கோபமுடையளாயும், உளைக்கு முள்ளத்தாள்-வருந்து மனமுடையளாயும், கான்று எரி நயனத்தாள்-தீயைக் கான்றெரிகின்ற கண்ணையுடையளாயும், கதிக்கும் சொல்லினள் - அதிருஞ் சொல்லையுடையளாயும், மூன்று உலகினுக்கும் ஒரிடுக்கண் மூட்டுவாள் - மும்மையுலகத்திற்கு மொருதுன்பத்தை விளைவிப்பாளாயும்.—

மூட்டுவாளென்றமையான் இடுக்கணைத் தீயாகக்கொண்டுரைக்க. சீராமன் காடுபோதல் மும்மையுலகமும் வருந்துந் தன்மையதாகலின் 'மூவுலகினுக்குமோரிடுக்கண் மூட்டுவாள்' என்றதன்றி, அவள் சீராமன்மகுடாபிடேகங்கேட்டுப் பொறுதாளாகலின் துடித்தன் முதலியனவு முடன்கூறினர். தேவர்கள் காரியமே காடுசெல்வதாயினும் அவன்காடுசெல்வது கேட்கக் கழிபெருந்துன்பம் பயப்பதனன், 'மூன்றுலகினுக்கும்' என ஆகுபெயரான் அவ்வுலகையு முடனெண்ணிக்கூறினர். (௪0)

(3) தொண்டைவாய்க் கேகயன் றோகை கோயின்மேல்
மண்டினள் வெகுளியின் மடித்த வாயினள்
பண்டைநா ளிராகவன் பாணி வில்லுமிழ்
உண்டையுண் டதனைத்தன் னுள்ளத் துன்னுவாள்.

(இ - ள்.) வெகுளியின் மடித்த வாயினள்-கோபத்தால் மடித்த வாயினையுடையளும், பண்டைநாள் இராகவன் பாணிவில்லுமிழ் உண்டை யுண்டதனைத் தன்னுள்ளத்துன்னுவாள் - முன்னைநாள் சீராமன் கைவில்லுண்டைபட்டதனைத் தன்னுள்ளத் தெண்ணுவாளுமாகி, தொண்டைவாய் கேகயன் தோகை கோயில்மேல் மண்டினள் - தொண்டைக்கனிபோலும் வாயையுடைய கேகயன்பெற்ற மயில்போல்வாளாகிய கைகேசி மாளிகையிலடைந்தனள்.—

தொண்டை, தோகை என்பன ஆகுபெயர்கள். பண்டைநாளிராகவன் பாணிவில்லுமிழ் உண்டையுண்டதனை' * "கொண்டைகொண்டகோதைமீது தேனுலாவு கூனிகூன் - உண்டைகொண்டரங்கவோட்டி" என்றருளிச்

* திருச்சந்தவிருத்தம். செ - ௪௯.

செயலானுணர்க. சிறுகாலையாகலின் 'பண்டைநாள்' என்றார். தொண்டை வாய் எனக் கைகேசியை விசேடித்தார் இராகவன் மகுடாபிடேகங்கேட்டு முள்ள மகிழ்ந்து கூறலின். (௬௧)

(4) நாற்கடற் படுமணி நளினம் பூத்ததோர்
பாற்கடற் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண்ணளி பொழியப் பொங்கணை
மேற்றுயின் றாடனை விரைவி னெய்தினாள்.

(இ - ள்.) நாற்கடற் படுமணி - நாற்கடலில் தோன்றுகின்ற மணிகளைப்பொருந்தி, நளினம் பூத்ததோர் பால்கடல் - தாமரைமலரைப் பூத்ததாகிய பாற்கடலின்கண், படுதிரை பவள வல்லியேபோல் - தோன்றிய திரையின்கண் அமைந்த பவளக்கொடியேபோல, கடைக்கண் அளிபொழிய பொங்கு அணைமேல் துயின்றாடனை விரைவின் எய்தினாள்-கடைக்கண் கருணை பொழியத் துயின்ற கைகேசியை விரைந்தடைந்தனள். எ-று.

நாற்கடல் படுமணி என்றது-நாற்றிசைகடலிற்றோன்று மணியணியை. நளினம் பூத்ததோர் பாற்கடல் என்றது முகமாகிய தாமரைமலர்வதாகிய தோர் பாற்கடற்படுக்கையை - படுதிரையென்றது அலைபோன்ற திரையை. பவளவல்லியென்றது பவளக்கொடிபோல்வாளாகிய கைகேசியை; நளினம் பூத்ததோர் பாற்கடலென்றது இல்பொருளுவமை; பாற்கடற் பவளவல்லி என்றது உருவகம். படுதிரையென்றதுதிரைக்கு மலைக்குஞ்சிலேடை. இவையனைத்தும் பொருந்துதலாற் சங்கீரணம். தோன்றினாள் நெஞ்சினாள் உள்ளத்தாள் நயனத்தாள் சொல்லினாள் மண்டினாள் வாயினாள் உன்னுவாள் எய்தினாளென வினைமுடிக்க. இந்நான்குசெய்யுளானு மந்தரை கைகேசி யாளிகையடைந்தமை யுணர்த்தப்பட்டது. (௬௨)

எய்தியக் கேகயன் மடந்தை யேடவிழ்
நொய்தலர் தாமரை நோற்ற நோன்பினாற்
செய்தபே ருவமைசால் செம்பொற் சீறடி
கைகளிற் றீண்டினாள் காலக் கோளனாள்.

(இ - ள்.) எய்தி - அவ்வாறடைந்து, அக்கேகயன் மடந்தை-அக்கேகயராசன்மகள், ஏடவிழ் நொய்து அலர்தாமரை நோற்ற நோன்பினால் - இதழ் விரிந்துவிரைந்து மலர்ந்த தாமரைமலர் செய்ததவத்தினால், செய்தபேருவமைசால்-செய்யப்பட்டபெரிதாகிய உவமை நிரம்பிய, செம்பொன் சீறடி - செம்பொன் அணியணிந்த சிறியபாதங்களை, காலக்கோளனாள்-உற்பாதம் போன்றவளாகிய மந்தரை, கைகளில் தீண்டினாள்-கைகளினால் தீண்டினள். எ-று.

தாமரையொற்றைத் தாளினின்றும் தன்னாயகனாகிய சூரியனைநோக்கித் தவஞ்செய்வ தக்கைகேசி பாதங்கட் கொப்புமையாக வேண்டியென்

பார் 'தாமரை நோற்றநோன்பினாற்செய்த பேருவமைசால் செம்பொற்சீறடி' என்றும், மந்தரை சீராமன் மகுடாபிடேகத்தைக் கெடுக்க விரைந்தெய்தினமையின் 'காலக்கோளனாள்' என்றும், படுக்கையிற் கண்படைகொண்டாளையழைத்தல் கூடாமையின் 'கைகளிற்றீண்டினாள்' என்றுங் கூறினர். காலக்கோளனாளென்பதற்குக் காலனாகிய கிரகம்போல்வா ளெனினுமமையும். தாமரையாகுபெயர். சீரடியென்றும் பாடங் கூறுவாருமுளர்; இதனான் அக்கைகேசியைத் துயினீக்கு லுணர்த்தப்பட்டது. (௪௩)

(1) தீண்டலு முணர்ந்தவத் தெய்வக் கற்பினாள்
நீண்டகண் ணனந்தரு நீங்கு கிற்றிலள்
மூண்டெழு பெரும்பழி முடிக்கும் வெவ்வினை
தூண்டிடக் கட்டுரை சொல்லன் மேயினாள்.

(இ - ள்.) தீண்டலும் - அவ்வாறு கைகளால் தீண்டுதலும், உணர்ந்த அத்தெய்வம் கற்பினாள்-துயிலறிந்த அத்தெய்வத்தன்மைபொருந்திய கற்பினையுடைய கைகேசி, நீண்டகண் அனந்தரும் நீங்குகிற்றிலள் - நீண்ட கண்களில் துயில் நீங்காதாளாக, மூண்டெழு பெரும்பழி முடிக்கும் - மூண்டெழுகின்ற பெரும்பழியினை நிறைவேற்றும், வெவ்வினை தூண்டிட-வெய்ய வினை ஏவ, கட்டுரைசொல்லல் மேயினாள் - உறுதிமொழிகள் கூறத்தொடங்கினள்.—

மந்தரையெழுப்பக் கைகேசி யெழுகின்றாளென்பது தோன்றத் 'தீண்டலுமுணர்ந்த' என்றும், கற்பில் வடமீன் ஒப்பாளாகலின் 'தெய்வக்கற்பினாள்' என்றும், காதளவு நீண்ட கண்ணுடைமை உத்தமமாதர்க்கிலக்கணமாதலின் 'நீண்டகண்' என்றும், துயிலுணர்த்தலு நீங்காமையான் 'அனந்தருநீங்குகிற்றிலள்' என்றும், மந்தரை உண்மைவில்லடியுண்டமை நோக்கிப்பொறாது அடைந்ததனால் 'மூண்டெழுபெரும்பழிமுடிக்கும் வெவ்வினை தூண்டிட' என்றும், அவள் சொல்லாற் சீராமன் மகுடாபிடேக மெய்தாமை நாடிக்கூறலின் 'கட்டுரைசொல்லன் மேயினாள்' என்றுங் கூறினர். (௪௪)

(2) அணங்குவாள் விடவரா வணுகு மெல்லையுங்
குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் டிங்கள்போற்
பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவா யல்லைநீ யுறங்கு வாயென்றாள்.

(இ - ள்.) அணங்குவாள் விடம் அரா அணுகும் எல்லையும் - வருத்துமியல்பினையுடைய நீண்ட இராகுவென்னும் பாம்பு நெருங்கிய வமையத்தும், குணங்கெடாதொளிவிரி குளிர்வெண்டிங்கள்போல்-தன்குணம் சிறிதேனுங் குறையாமலொளிவிரிகின்ற குளிர்ந்த சந்திரன்போல, பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும்-வருந்தும்படி பெருந்துன்பம் வருத்த நெருங்கவும்

உணங்குவாயல்லை - வருந்துவாயல்லை, நீ யுறங்குவா யென்றாள் - நீ துயில்கின்றனை யென்றனள்.—எ-று

சந்திரன் விடவராவணுகியும் தன்குணங்கெடாதொளி விடுவதுபோலும் சீராமன் மணிமுடி புனையப்பெறுவது கேட்டு நீ செல்வ மிழப்பதாயினும் களிப்பாற் றுயில்கின்றனையென்பார் 'விடவராவணுகுமெல்லையுங் குணங்கெடாதொளிவிரி குளிர்வெண்டிங்கள்' என அதனை உவமைமுகத்தால் விளக்கிக் கூறினர். பேரிடர்பிணிக்க நண்ணுதல்-மணிமுடி தரித்தலை. பிணங்குவான்-வானீற்றெச்சம், இவ்விரண்டுசெய்யுளானும் கைகேசியை நோக்கி மந்தரை துயில்வது தக்கதன்றென்பதுணர்த்தப்பட்டது. (சரு)

(1) வெவ்விட மனையவள் விளம்ப வேற்கணாள்
தெவ்வடு சிலைக்கையென் சிறுவர் செவ்வியர்
அவ்வவர் துறைதொறு மறந்தி றம்பலர்
எவ்விட ரெனக்குவந் தடுப்ப தீண்டென்றாள்.

(இ - ள்.) வெம் விடம் அனையவள் விளம்ப-கொடிய விடம்போல்வாளாகிய மந்தரை கூற, வேற்கணாள் - வேல்போலும் கண்ணளாகிய கைகேசி, தெவ் அடுசிலை கை என் சிறுவர் செவ்வியர்-பகைவரை வெல்லும் என்மக்கள் சுகமாயிருக்கின்றனர், அவ்வவர் அறம் துறைதொறும் திறம்பலர் - அவரவர் தத்தம் அறத்தொழிலினின்றும் தவறுதொழுகுகின்றனர், ஈண்டெனக்கு வந்தடுப்ப தெவ்விடரென்றாள்-இங்கென்னை வந்தடையுந் துன்பம் யாதென்றனள்.—

விடமுண்டாற் கொலைத்தொழில் செய்யும், இவள் சொல் கேட்டாங்கு அதனைப் பயந்தே விடுதலின் வெவ்விட மனையவளென அவ்விடத்தினும் விசேடித்துக் கூறினர். அவ்வவர் துறையென்றது - சீராமன் தாய் தந்தையர் சொற்கடவாமை, பெரியோர் சொற்கடவாமை; இளையவன் சீராமனைப் புறத்தே காத்திருத்தல்; பரதன் சீராமனையன்றித் தேவுமற்றறியேனெனல்; சத்துருக்கன் அவ்விறைவனை யடைந்த பரதனையன்றி வேறறியாதிருத்த லென்கை; இதனைக் கண்ணிநுண்சிறுத்தாம்பின் உரையானறிக. (சகு)

(2) பராவரும் புதல்வனைப் பயக்க யாவரும்
உராவருந் துயரைவிட் டுறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்தவெற் கிடருண் டோவென்றாள்.

(இ - ள்.) பராவரும் புதல்வரை பயக்க-பரவுதற்கருமையாகிய மக்களைப் பெற்றமையான், உராவரும் துயரைவிட்டு-பொருந்துத லருமையாகிய துன்பமொழிந்து, உறுதி காண்பர் - யாவரும் உறுதிப்பொருளை யெய்துவர், விராவரும் புவிக்கெலாம்-கலத்தற்கருமையாகிய நிலவுலகத்தினெல்லாம், வேதமே

யன இராமனை - வேதமேபோன்ற சிராமனை, பயந்த எற்கு இடருண்டோ என்ருள்-மகனைப்பெற்ற எனக்குந் துன்பமுண்டோ என்றனள்.—எ-று.

இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக விறுக்கப்படுங் கடன் மூன்றனுள் முனிவர்கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானுமல்லது இறுக்கப்படாமையின் அக்கடன் இறுத்தற்பொருட்டு நன்மக்களைப் பெறவேண்டலின் 'பராவரும் புதல்வரைப்பயக்க' என்றும், அப்புதல்வரைப்பெறின் அவர் செய்யு நீர்க்கடன் முதலியவற்ருல் புத்தென்னு நரகத்தினின்றும் பிதிரர் நீக்கப்படுதலின் 'யாவரும் உராவருந்துயரைவிட் டுறுதிகாண்பர்' என்றும், வேதங்களிவன் நற்குணங்களையெல்லாம் விதந்து கூறலின் 'விராவரும்புவிக்கெலாம் வேதமேயன இராமன்' என்றும், அவனையே மகனைப்பெற்ற வெனக்குத்துன்பமுண்டோ வென்பாள் 'பயந்தவெற்கிடருண்டோவென்ருள்'என்றுங் கூறினர்.

'வேதமேயனவிராமன்' என்றூர். 'சுருதியன்ன சேவகன்சீருமுன்னம்' எனப் பிற்காண்டத்துக் கூறுதனேக்கி. எற்குமென்புழி உயர்வு சிறப்பும்மை தொகுத்தல்பெற்றது. இவ்விரண்டுசெய்யுளானும் மக்கட்சிறப்புக்கூறிய துணர்த்தப்பட்டது. (சஎ)

ஆழ்ந்தபே ரன்பினு ளனைய கூறலும்
சூழ்ந்ததீ வினைநிகர் கூனி சொல்லுவாள்
வீழ்ந்தது நின்னலந் திருவும் வீந்தது
வாழ்ந்தனள் கோசலை மதியி னலென்ருள்.

(இ - ள்.) ஆழ்ந்த பேரன்பினுள் - அன்புமிக்கவளாகிய கைகேசி, அனைய கூறலும் - அவற்றைச் சொல்லலும், சூழ்ந்த தீவினை நிகர் கூனி சொல்லுவாள் - நெருங்கிய தீவினையையொத்த கூனி சொல்லுகின்றனள், நின்னலம் வீழ்ந்தது - நின் வனப்பழிந்தது, திருவும் வீந்தது-செல்வமுங்கெட்டது, கோசலை மதியினல் வாழ்ந்தனள் என்ருள் - கோசலை அறிவால் வாழ்வடைந்தனளென்றனள்.—எ-று.

சிராமன்பால் மிகப் பரிவுடையளாகலின் கைகேசியை 'ஆழ்ந்தபேரன்பினுள்' என்றும், தீவினையே வடிவுகொண்டதுபோல்வாளாகலின் கூனியை 'சூழ்ந்ததீவினை நிகர்கூனி' என்றும், கைகேசியைநோக்கி நீ சிராமன் மணிமுடி புனைதலான் அழகொடுந்திருவு நீங்குகின்றனையென்பாள் 'வீழ்ந்ததுநின்னலந் திருவும்வீந்தது' என்றும், கோசலை தன்மக னரசனதலாற் செல்வம் பெற்றனளென்பாள் 'கோசலை மதியினல் வாழ்ந்தனள்' என்றுங்கூறினர். உம்மை-இறந்தது தழீஇயது. இதனன் மந்தரை கோசலை செல்வம்பெற்ற சிறப்பும், அதனைக் கைகேசி இழந்தமையு முணர்த்தினளென்பது காட்டப்பட்டன. (சஅ)

அன்னவ ளவ்வுரை யுரைப்ப வாயிழை
மன்னவர் மன்னனேற் கணவன் மைந்தனேற்
பன்னரும் பெரும்புகழ்ப் பரதன் பார்தனில்
என்னிதன் மேலவட் கெய்தும் வாழ்வென்றாள்.

(இ - ள்.) அன்னவள் அவ்வுரை யுரைப்ப - அவள் அச்சொல்லை யெடுத்துக் கூற, ஆயிழை-ஆய்ந்த விழையினையுடையாளாகிய கைகேசி, பார்தனில் மன்னவர் மன்னன் கணவனேல் - இந்நிலவுலகத்தில் சக்கரவர்த்தி என் கணவனேயாயின், பன்னரும் பெரும்புகழ் பரதன் மைந்தனேல் - சொல்லுதற்கரிதாகிய பெரும் புகழினையுடையானாகிய பரதன் என்மகனேயாயின், அவட்கு எய்தும் வாழ்வு இதன்மேல் என் என்றாள் - அவட்குப்பொருந்தும் வாழ்வு இதன்மேல் யாதென்றனள்.—எ-று.

ஆயிழை - அன்மொழித்தொகை. உலகமுழுது மாளு மரசனையே கணவனாகப் பெற்றிருத்தலின் 'மன்னவர் மன்னனேற் கணவன்' என்றும், கட்டளை கடவாத்தன்மையனாகிய பரதனை மகனாகப்பெற்றிருத்தலிற் 'பன்னரும் பெரும் புகழ்ப் பரதன் மைந்தனேல்' என்றும், இதனினும் அவள் அடையும் செல்வம் யாதென்பாள் 'என்னிதன்மேலவட்கெய்தும் வாழ்வென்றாள்' என்றுங் கூறினார். இதனாற் றன் கணவன் சிறப்பும் தன்மகன் சிறப்பு முணர்த்தப்பட்டன.

(௪௧)

ஆடவர் நகையுற வாண்மை மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தையலாள்படக்
கோடிய வரிசிலை யிராமன் கோமுடி
சூடுவ னாளைவாழ் விதெனச் சொல்லினாள்.

(இ - ள்.) ஆடவர் நகையுற - ஆடவர்கள் நகையினையெய்த, ஆண்மை மாசுற - ஆண்டன்மை குன்ற, தாடகையெனும் பெயர் தையலாள் பட-தாடகையென்னும் பெயரையுடைய பெண்மாய, கோடிய வரிசிலை இராமன்-வளைத்த வரிந்துகட்டிய வில்லையுடைய சிராமன், கோமுடி நாளை சூடுவன்-சிறந்த முடியை நாளையே தரித்துக்கொள்வான், வாழ்வு இது எனச் சொல்லினாள் - வாழ்வு இதுவென்று சொல்லிமுடித்தனள்.—எ-று.

தாடகையைக் கொல்லும்பொருட்டே வில்லை வளைத்தமையான் அதனை 'தாடகையெனும் பெயர்த் தையலாள்படக் கோடியவரிசிலை' என்றும், பெண் கொலைசெய்வதே நாணும் பழிப்புமாகலின் அவளைக் கொன்றமை சிறப்பன்றென்பாள் 'ஆடவர் நகையுற வாண்மைமாசுற' என்றும், அவனுக்குப் பரம்பரையாகவரு மணிமுடி சூட்டலான் 'கோமுடி சூடுவனாளை' என்றும், இப்பெருவாழ்வு நீ பெற்றிலையென்பாள் 'வாழ்விதெனச்சொல்லினாள்' என்றுங் கூறினார். நகையுற மாசுற படக் கோடிய சிலையிராமன் சூடுவன் வாழ்விதெ

னச் சொல்லினள் என வினைமுடிக்க. இதனாற் சீராமன் கோமுடி சூடப்பெறுவதனாற் கோசலை செல்வம் பெற்றாளென்பதுணர்த்தப்பட்டது. (ரு௰)

மாற்றமஃ துரைசெய மங்கை யுள்ளமும்
ஆற்றல்சால் கோசலை யறிவு மொத்தவால்
வேற்றுமை யுற்றிலள் வீரன் றாதைபுக்
கேற்றவ ளிருதயத் திருக்க வேகொலாம்.

(இ - ள்.) மாற்றமஃ துரைசெய-அவ்வுரையையெடுத்துக்கூற, மங்கை யுள்ளமும் - கைகேசி யுள்ளமும், ஆற்றல்சால் கோசலை யறிவுமொத்த-வலிமைநிரம்பியகோசலை யறிவுமொத்திருந்தன, (ஏனெனின்) வீரன் தாதை- சீராமன் தாதை, ஏற்றவள் இருதயத்து புக்கு இருக்கவே கொலாம்-தக்காளாகிய கைகேசி யுள்ளத்திற் போந்திருப்பதனாலேயோ, வேற்றுமை யுற்றிலள் - வேறுபாடெய்திலள்.—எ-று.

கண்வழி புகுந்து அவள் இதயததிருத்தலின் 'வீரன்றாதைபுக்கேற்றவளிருதயத்திருக்கவேகொலாம்' என்றும், கைகேசி மணிமுடி சூடுதல் கேட்டு மகிழ்ந்தமையான் 'மங்கையுள்ளமும்' என்றும், கோசலை தன்மகனுக் கரசெனத் தளிர்க்குஞ் சிந்தையளாகலின் 'கோசலையறிவுமன்ன' என்றும், அவ்விருவருள்ளத்தினுங் கண்வழிபுகுந்து சென்றிருப்பா னொருவனே யாகலின் கைகேசியை 'வேற்றுமையுற்றிலள்' என்றுங் கூறினர். புக்கு ஏற்று இருக்கவே கொலாம் உரைசெய அன்னது வேற்றுமை யுற்றிலளெனவினைமுடிக்க. இது கவிக்கூற்று. (ருக)

ஆயபே ரன்பெனு மளக்க ரார்த்தெழத்
தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத்
தூயவ ளுவகைபோய் மிகச்சு டர்க்கெலாம்
நாயக மனையதோர் மாலை நல்கினள்.

(இ - ள்.) ஆயபே ரன்பெனு மளக்க ரார்த்தெழ-அந்தப் பேரன்பென்னுங்கடல் மிகுதியுமொலிக்க, தேய்விலா முகமதி விளங்கி தேசுற - என்றுநிரம்பி நெருங்குகின்ற முகமாகிய சந்திரன் விளங்கியொளியெய்த, தூயவள் உவகைபோய் மிக - தூயதன்மையுள்ள கைகேசி களிப்புப் போய்மிக, சுடர்க்கெலாம் நாயகம் அனையதோர் மாலை நல்கினள் - சுடர்கட்கெல்லாம் தலைமையதாகியதொரு மாலையை யளித்தனள்.—எ-று.

என்று நிரம்பிய கலைகளை யுடைமையான் 'தேய்விலாமுகமதி' என்றும், மணிவடம் ஒளிமிகுதியையுடையதாகலின் 'சுடர்க்கெலாநாயகமனையதோர் மாலை' என்றுங் கூறினர். இராகவனுக்கு மணிமுடி புனைவதைக்கேட்டு மகிழ்பவளாகலின் 'தூயவள்' என்றதென்க. இதனாற் கைகேசி மந்தரைக்கு மணிமாலை நல்கியமை யுணர்த்தப்பட்டது. (ருஉ)

(1) தெழித்தன ளுரப்பினள் சிறுக்கண் டீயுக
விழித்தனள் வைதனள் வெய்து யிர்த்தனள்
அழித்தன ளழுதன ளம்பொன் மாலையாற்
குழித்தனள் நிலத்தைக் கொடிய கூனியே.

(இ - ள்.) அக்கொடிய கூனி - அத்தீயமந்தரை, தெழித்தனள் உரப்பினள்-இரைந்தனள் அதட்டினள், சிறுகண் தீயுக விழித்தனள் - சிறிய கண் தீச்சொரியப்பார்த்தனள், வைதனள் வெய்துயிர்த்தனள்-பழித்தனள்.நெட்டுயிர்த்தனள், அழித்தனள் அழுதனள்-தன் கோலமழித்தனள் புலம்பினள், அம்பொன்மாலையால் நிலத்தை குழித்தனள்-அழகிய பொன்மாலையால் நிலத்தைக் குழிப்படுத்தினள்.—

∴ கொடியகூனிஎன்றதற்கு முற்கூறினும். 'சிறுக்கண்' என விகாரத்தான் மிக்கது. சீராமனுக்குற்பாதமாகத் தோன்றுவதாக விளக்கலின் 'விழித்தனள் வைதனள் வெய்துயிர்த்தனள் அழித்தனள் அழுதனள் அம்பொன்மாலையாற் குழித்தனள்' என்றாரென்க. இது தொழிற்றன்மை. (௫௩)

(2) வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கியப்
பேதையைப் பித்திநிற் பிறந்த சேயொடு
நீதுயர் படுகநா னெடிதுன் மாற்றவள்
தாதியர்க் காட்செயத் தரிக்கி லேனென்றாள்.

(இ - ள்.) வேதனை கூனி-துன்பம் விளைக்கு மந்தரை,பின் வெகுண்டு நோக்கி-பின்னே கோபித்துப்பார்த்து, அப்பேதையை-அப்பேதைமை யுடையளாகிய கைகேசியை, பித்தி நின் பிறந்தசேயொடு நீ துயர் படுக-பித்தகுணமுடையாளே! நின்பாற்பிறந்த மகனோடு நீ துயரமெய்துக, நான்நெடிது உன் மாற்றவள் தாதியர்க்காட்செய தரிக்கிலே னென்றாள் - நான் மிகுதியும் உன் மாற்றாளுடையதாதிகட்குக்குற்றேவற்றொழில்செய்யப்பொறேனென்றனள்.

தன் சொற்கேளாமையிற் 'பித்தி' என்றும், அதனையெய்தும் பயனிது வென்பாள் 'நிற்பிறந்த சேயொடு நீதுயர்படுக' என்றும், நான் கோசலை தாதியர்க்குக் குற்றேவல் செய்யேனென்பாள் 'உன்மாற்றவள் தாதியர்க்காட் செ தரிக்கிலேன்' என்றுங் கூறினார். பேதை - ஆகுபெயர்; இது பருவத்தை நோக்கியதன்று. (௫௪)

(3) சிவந்தவாய்ச் சீதையுங் கரிய செம்மலும்
நிவந்தவாத னத்தினி திருப்ப நின்மகன்
அவந்தனுய் வெறுநிலத் திருக்க லானபோ
துவந்தவா றென்னிதற் குறுதி யாதென்றாள்.

(இ - ள்.) சிவந்த வாய் சீதையும் - சிவந்த வாயையுடைய சானகியும், கரிய செம்மலும்-கரிய நிறத்தினையுடைய சிராமனும், நிவந்த ஆசனத் தினி

திருப்ப-ஓங்கிய வாசனத்தில் இனிதாக வீற்றிருப்ப, நின்மகன் அவந்தனாய்-உன்மகனாகிய பரதன் பயனற்றவனாய், வெறுநிலத்திருக்கலானபோது-வெறுந்தரையிலிருக்கையுடையவனாயிருக்கிறகாலத்து, உவந்தவாறு என் - மகிழ்ந்தவகையாது, இதற்குறுதி யாதென்றாள் - இதற்குறுதிப்பொருள் யாதென்றனள்.—எ-று.

கரியகோலத் திருவுருவுடையனாகலின் 'கரியசெம்மல்' என்றார். அவந்தன் - பாக்கியமற்றவன். வெறுநிலம் - சிங்காசனத்தில் வீற்றிராது தாழ்ந்திருக்கையிலிருத்தல். நின்மகன் அவந்தனாய் வெறுநிலத்திருக்கல் - நின்மகனாகிய பரதன் அவ்விராமன்போல் சிங்காசன மெய்தப்பெறாமை. (௫௫)

மறந்திலள் கோசலை யுறுதி மைந்தனுஞ்
சிறந்தநற் றிருவினிற் றிருவு மெய்தினான்
இறந்தில னிருந்தன னென்செய் தாற்றுவான்
பிறந்திலன் பரதனீ பெற்ற தாலென்றாள்.

(இ - ள்.) கோசலை உறுதிமறந்திலள் - கோசலை உறுதியைத்தேடிக்கொண்டனள், மைந்தனும் சிறந்த நல் திருவினில் திருவுமெய்தினான்-மகனாகிய சிராமனும் செல்வத்திற் சிறந்த செல்வமுமடைந்தனன், இறந்திலன்-செத்திலன், இருந்தனன்-உயிர்பெற்றிருக்கின்றனன், என்செய்தாற்றுவான்-யாதுசெய்து பொறுப்பான், நீ பெற்றதால் பரதன் பிறந்திலன் என்றாள்-நீ மகனைப்பெற்றதனால் அவன் அரசமாலையிற்றோன்றினவனல்லனென்றனள்.

கோசலை அரசன் அன்புபெறாதாளாக விருந்தும், மன் மகனை யரசெய்தச்செய்துகொண்டமையின் 'மறந்திலள் கோசலையுறுதி' என்றும், அவன் சக்கரவர்த்தியாக மணிமுடி சூட்டிக்கொள்வதனான் 'மைந்தனுஞ் சிறந்த நற்றிருவினிற் றிருவுமெய்தினான்' என்றும், அதுகண்டு பரதனிறக்கவேண்டும் அவன் இறவாமையானும், உயிரோடிருத்தலானும் 'இறந்திலனிருந்தனன்' என்றும், நீபெற்றதனான் அவன் மன்னர் மாலையிற் சேராமையான் 'நீபெற்றதாற் பிறந்திலன்' என்றும், இனி அவன் செய்வதென்னென்பாள், 'என்செய்தாற்றுவான்' என்றுங் கூறினார். (௫௬)

சரதமிப் புவியெலாந் தம்பி யோடுமிவ்
வரதனே காக்குமேல் வரம்பில் காலமும்
பரதனுந் தம்பியும் பதியி னீங்கிப்போய்
விரதமா தவஞ்செய விடுத னன்றென்றாள்.

(இ - ள்.) சரதம் இப்புவியெலாம் தம்பியோடும் இவ்வரதனே காக்குமேல் - உண்மையாக இவ்வுலகமுழுதும் இளையவனோடும் இவ்வரதனாகிய சிராமனே காப்பனாயின், வரம்பில்காலமும் பரதனும் தம்பியும்-அளவில்லாத காலமும் பரதனும் இளையவனும், பதியினீங்கிப்போய் - நகரினின்று நீங்கிச்

சென்று, விரதமாதவஞ்செய விடுதல் நன்று என்றாள்-விரதத்துக்குரிய பெருந்தவஞ் செய்யவிடுவது நல்லதென்றனள்.—எ-று.

தம்பியோடு ஸ்ரீராமன் அரசாளுதல் மறுக்கப்படாத வுண்மையாதலின் 'சரதமிப்புவியெலாம் தம்பியோடு மவ்வரதனே காக்குமேல்' என்றும், பரதனும் தம்பியும் ஈண்டிருப்பதினும் தவஞ்செய்தலே தக்கதென்பாள் 'பரதனுந்தம்பியும் பதியினீங்கிப்போய் விரதமாதவஞ்செயவிடுதனன்று' என்றும், தான்பெற்ற செல்வத்தை நீகேட்கினு மில்லையென்னு தீயுமென்னுங் குறிப்புத்தோன்ற 'வரதன்' என்றுங் கூறினார். இப்பெற்றிநோக்கியே 'வரதனுதித்திடு' என முற்காண்டத்துங் கூறிப்போந்ததென்க. தம்பியென்பன விரண்டும் முறையே சுமித்திரைபெற்ற இலக்குவனையும், சத்துருக்கனையு முணர்த்தின. (கள)

பண்ணுறு கடகரிப் பரதன் பார்மகள்
கண்ணுறு கவினரா யினிது காத்தவம்
மண்ணுறு முரசுடை மன்னர் மாலையில்
எண்ணுறப் பிறந்தில னிறத்த னன்றென்றாள்.

(இ - ள்.) பண்ணுறுகடகரிப்பரதன் - அலங்காரம்பெற்ற மதச்சுவட்டினையுடைய யானையையேறும் பரதன், பார்மகள் கண்ணுறுகவினராய்இனிது காத்த - நிலமகள் கண்ணுக்கமைந்த அழகுடையராய் இனிமையாகக்காத்த, அம்மண்ணுறு முரசுடை மன்னர் மாலையில் - அம்மார்ச்சனைபூசிய முரசினையுடைய அரசர்மாலையில், எண்ணுறப்பிறந்திலன்-கணக்கிடப்பிறந்திலன், இறத்தல் நன்றென்றாள்-அவன் இறப்பதே நல்லதென்றனள்.—எ-று.

'அம்மன்னர் மாலை' என்றது குலமுறைகிளத்து படலத்துரைக்கப்பட்ட வேந்தரை. பட்டத்திற்குரியனல்லனாகாமையின் 'மன்னர்மாலையி லெண்ணுறப்பிறந்திலன்' என்றும், அவனிருந்தும் பயனில்லையென்பாள் 'இறத்தல் நன்று' என்றுங் கூறினாள்- பார் ஆகுபெயர். பொதுக்கடிந்து நீதியோடரசாண்டமையின் 'பார்மகள் கண்ணுறுகவினரா யினிதுகாத்தவம்மன்னர்' என்றாளென்க. இறத்தலென் புழிப்பிரிநிலை ஏகாரம் விகாரத்தாற்றொக்கது.

பாக்கியம் புரிந்திலாப் பரதன் றன்னைப்பண்
டாக்கிய பொலங்கழ லரச னாணையாற்
றேக்குயர் கல்லதர் கடிது சேணிடைப்
போக்கிய பொருளெனக் கின்று போந்ததால்.

(இ - ள்.) பாக்கியம் புரிந்திலா பரதன் தன்னை - புண்ணியம்பண்ணியறியாத பரதனை, பண்டாக்கிய பொலங்கழலரசன்-முன்செய்த பொன்னினாகிய வீரக்கழலையணிந்த சக்கரவர்த்தி, ஆணையால்தேக்குயர் கல்லதர்கடிது சேணிடைபோக்கிய பொருள் - ஆணையினால் தேக்கமரமுயர்ந்த மலைச்சரியின்

கண் வினாவாகத் தூரத்தேசெலுத்திய வுண்மை, எனக்கின்று போந்தது-என க்கின்று தெரியவந்தது.—எ-று.

அரசர் மாலையிற் றோன்றுமையிற் 'பாக்கியம் புரிந்திலாப் பரதன்றன்னை' என்றும், அரசன் அணிந்த வீரக்கழல் அவ்வரசர் மாலையில் வந்தாரெல்லா மணியப்பெறுவதாகலின் 'பண்டாக்கியபொலங்கழல்' என்றும், அரசன் பரதனைக் கேகயநாட்டிற்குப் போகவிடுத்தமை சிராமனுக்கரசளிக்கவென்பாள் 'ஆணையாற்றேக்குயர் கல்லதர்கடிது சேணிடைபோக்கிய பொருளெனக்கின்றுபோந்தது' என்றுங் கூறினாள். தேக்கு-மரவிசேடம். கல்லதர்-மலைச்சரி. முற்கூறியதே பின்னும் பின்னும் கூறியது கைகேசியுள்ளத்தைத் தன்வயப்படுத்தற்கும் தான் பட்டாபிடேகத்தைத் தடுத்தற்குமென்க. (ருக)

மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்
அந்தரந் தீர்ந்துல களிக்கு நீரினாற்
றந்தையுங் கொடியனற் றாயுந் தீயளால்
எந்தையே பரதனே யென்செய் வாயென்றாள்.

(இ - ள்.) மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள் - மந்தரை பின்னும் வகைப்படுத்துக் கூறுவள், அந்தரம் தீர்ந்து உலகளிக்கும் நீரினால்-முடிவுதீர்ந்து உலகங்காக்குந்தன்மையினான், தந்தையும் கொடியன் - தந்தையும் தீயன், நல்தாயும் தீயள்-நன்மையாகிய தாயும் தீயள், எந்தையே பரதனே என்செய்வா யென்றாள்-எந்தையே பரதனே யாது செய்வை யென்றனள்.

பூபாரந் தாங்கத்தக்கானென்னும் பொருள்படப் 'பரதனே' என்றமையாற் சிராமனுக் கரசளிப்பது தகாதென்பாள் 'தந்தையுங்கொடியன்' என்றும், அவன் கொள்கையை மேற்கொண்டொழுகுவ தவட்குக் கடனன்றென்பாள் 'நற்றாயுந்தீயள்' என்றும், அரசன் கோல்கோடிச்செய்வதுணர்த்துகின்றதென்பாள் 'அந்தரந்தீர்ந்துலகளிக்கு நீரினால்' என்றுங்கூறினார். பின்னரும் என்றது வினைமாற்றுப்பொருளது. (சுய)

அரசரிற் பிறந்துபின் னரச ரில்வளர்ந்
தரசரிற் புகுந்துபே ரரசி யானநீ
கரைசெயற் கருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய்
உரைசெயக் கேட்கிலை யுணர்தி யோவென்றாள்.

(இ - ள்.) அரசரில் பிறந்து பின் அரசரில் வளர்ந்து அரசரிற்புகுந்து பேரரசியான நீ - அரசரிடந்தோன்றிப் பின் அரசரிடம் வளர்ந்து அரசரிடம் புகுந்து பேரரசியாகிய நீ, கரைசெயற் கருந்துயர் கடலில் வீழ்கின்றாய் - நீ கரையிடற் கருமையாகிய துன்பக்கடலில் விழுகின்றனை, உரைசெயக் கேட்கிலை - யான் சொல்லவும் கேட்கிலை, உணர்தியோ என்றாள் - நீயேனுமறிவையோ என்றனள்.—எ-று.

கைகயன் மகளாகப் பிறந்து அவன்பால் வளர்ந்து சக்கரவர்த்தியை மணந்து பட்டமகிஷியாகிச் சிறந்தனையென்பாள் 'அரசரிற் பிறந்து பின்னரசரில் வளர்ந்தரசரிற்புகுந்து பேரரசியான நீ' என்றும், நீ யடையத்தக்க செல்வம் பெறுமையான் துன்பமெய்துகின்றனை யென்பாள், 'கரைசெயற் கருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய்' என்றும், பிறர் சூழ்ச்சியைக்கேட்டேனுந் தன்மொழி யவேண்டும், கேளாதொழிந்தனையென்பாள் 'உரைசெயக்கேட்கிலை' என்றும், அதனை நீயேனு மறிகின்றிலையென்பாள் 'உணர்தியோ' என்றுங்கூறினார்.

கல்வியு மிளமையுங் கணக்கி லாற்றலும்
வில்வினை யுரிமையு மழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதற் கேயது
புல்லிடை யுகுத்தமு தேயும் போலென்றாள்.

(இ - ள்.) கல்வியும் இளமையும் கணக்கிலாற்றலும் - கல்வியும் இளமைப்பருவமும் வரம்பிலாத வன்மையும், வில்வினை யுரிமையும் அழகும் வீரமும்-விற்றொழிலுரிமையு மழகும் வீரத்தன்மையுமாகிய, எல்லையில் குணங்களும் பரதற்கேயது-அளவையிடலாகாத குணங்களும் பரதனுக்கமைந்தவை, புல்லிடையுகுத்த அமுதேயும்போல் என்றாள்-புல்லினிடத்துகுத்த அமுதத்தை யொக்கு மென்றனள்.—எ-று.

பயனெய்தாமையிற் 'புல்லிடையுகுத்த வமுதை' உவமை முகத்தாற் கூறினார். அமுதேயுமென்பதற் கமுதொக்குமெனக் கொண்டுபோலென்பதசைநிலையெனக்கொள்க. (கூஉ)

கலிநிலைத்துறை.

வாய்க யப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்
காய்க னற்றலை நெய்சொரிந் தெனக்கதங் கனற்றக்
கேக யர்க்கிறை திருமகள் கிளரிள வரிக்
டோய்க யற்கண்கள் சிவப்புற நோக்கினள் சொல்லும்.

(இ - ள்.) வாய் கயப்புற-வாய் கயப்பெய்த, மந்தரை வழங்கிய வெஞ்சொல்-மந்தரைகூறிய கொடுஞ்சொல், காய்கனல் தலை நெய் சொரிந்தாலென-காய்ந்த தீயின்கண் நெய்விடுத்தாற்போல, கதங்கனற்ற-கோபமெழுப்ப, கேகயர்க்கிறை திருமகள்-கேகயநாட்டார்க் கரசன்மகளாகிய கைகேசி, கிளரிளவரிகள் தோய்கயல் கண்கள்-விளங்குகின்ற இளமையான வரிகள்தோய்ந்த கயல் போன்ற கண்கள், சிவப்புற நோக்கினள் சொல்லும் - சிவப்படைய நோக்கிக் கூறும்.—எ-று.

'கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப்பொருள' என்பவாகலின் செவப்புற வென்றதென்க. நெய்விடுந்தோறுந் தீமூளல்போலக் கடுஞ்சொல் வழங்குந்தோறுஞ் சினமிகுதலின் 'காய்கனற்றலை நெய்சொரிந்தாலெனக்கடுப்ப' என

வுவமைமுகத்தாற் கூறினர். 'வாய்கயப்புற' என்றது இன்னாச்சொல்லின் தீமையை விளக்குதற்கு, நோக்கினள்-எச்சமுற்று. சொரிந்தாளென்பது ஈறு தொகுக்கப்பட்டது. ‖ "எண்ணிக்கொண்டற்று" என்புழிப்போல. (சுரு)

(1) வெயின்முறைக்குலக் கதிரவன் முதலிய மேலோர்
உயிர்முதற்பொருடிறம்பினு முரைதிறம் பாதோர்
மயின்முறைக்குலத் துரிமையை மனுமுதன் மரபைச்
செயிருறப்புலைச் சிந்தையா லென்சொனாய் தீயோய்.

(இ - ள்.) வெயின் முறை குலம் கதிரவன் முதலிய மேலோர்-கிரணங்களைப்பரப்பும் சிறந்த சூரியன் முதலிய மேலோர், உயிர்முதல் பொருள் திறம்பினும்-உயிர்முதலிய பொருள்கள் மாறுபடினும், உரைதிறம்பாதோர்-சொற்றவறுதவராவர், மயில் முறை குலத்துரிமையை - மயிலினது முறைமையுடைய குலத்துரிமையையுடைய, மனுமுதல் மரபை - மனுமுதலிய அரசர் தோன்றிய மரபினை, செயிருறப் புலைச் சிந்தையால் என்சொனாய் தீயோய்-கொடியாளே! குற்றமுறப் பேதைமையையுடைய சிந்தையினால் யாது கூறினை.—

மயில் முட்டையிட்டுப் பொரித்துழிமுதற் பார்ப்பின் கலாபத்துப்பீலி பொன்னிறம்படர்தலானு, மேனையவற்றிற் கங்ஙனமன்மையானும் மயின்முறைக்குலத்துரிமையென்றாள். இதனானே முதற்குமரனே மணிமுடிபுனைதன் மரபெனப் பொருள்படலாற் கருத்துடையணியென்னு நலம்படக் கூறியதென்க. இனி மயின்முட்டையிட்டுப் பொரித்தபின்னர் முதற் பார்ப்பின்பாற் சென்றாடினல்லது கலாபந் தோன்றாமையானும், மயிலடிவைக்குஞான்று முன்னடிவைத்தலு மளவிற்சேறலும் பொருந்துமாற்றானும், முதற்பார்ப்பினுக்குச் சுடிகைதோன்றாமை யேனையவற்றிற் குளவாகாமையானும் எனப் பலபடவுரைப்பர். மயில் என்றதற்குக் கேகயமெனக்கொண்டு கேகய நாட்டிற்கு வழக்கெனவுங் கூறுவாருமுளராலோவெனின் அது பொருந்தாமையானும், கேகயநாட்டிற்கு வழக்கெனின் ஏனைய நாட்டிற் கதுவழக்காறன்றென்பது பெறப்படுவதனானும், மனுமுதன் மரபையென்றது பயனில் கூற்றாக முடிதலானும் அஃதுரையன்மை தெளிக. உரைதிறம்பாதோரென்றதனைப் புறவின்பொருட்டுற்றுறந்தார் முதலானோர்பாற் காண்க. மனு ஞாயிற்றின் மகனாதலானும், அவன் வழிவந்தாரே கடைமுறை யுலகங்காத்தமையானு மனுமுதன் மரபென்றதென்க. முறைதிறம்பாதோரென்றும்பாடம். என்-வினைப்பெயர். இது உருபேற்று * "என்னுக்கின்னும் பெருக்கின்றதே" என்றும், † "என்னானுமொன்று" என்றும்வருவது காண்க. (கூசு)

‖ திருக்குறள், செ - உஉ.
* திருக்கோவையார், செ - கஉக.
† நாலடியார், செ - ரு.

(2) எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்
றனக்கு நல்லையு மல்லையத் தருமமே நோக்கி
லுனக்கு நல்லையு மல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்.

(இ - ள்.) எனக்கு நல்லையுமல்லை - எனக்கு நன்மைசெய்தாயுமல்லை, என்மகன் பரதன் றனக்கு நல்லையுமல்லை - என்மகனாகிய பரதனுக்கு நன்மை செய்தாயுமல்லை, அத்தருமமே நோக்கில் - அவ்வறத்தையே நோக்குமிடத்து, உனக்கு நல்லையு மல்லை - உனக்கு நன்மைசெய்துகொண்டனையுமல்லை, மதியிலாமனத்தோய் - அறிவில்லாத மனமுடையாளே! வந்துஊழ்வினை தூண்ட மனக்கு நல்லன சொல்லினை - நீ ஊழ்வினைவந்து தூண்டலினால் உன்மனத்துக்கொப்பாவனவற்றையே சொல்லி நிரப்பினை.—

நீ என்னுயிர்த்தோழியாதலான் எனக்கு நன்மைசெய்தல் வேண்டும், அவ்வாறு செய்யாமையின் 'எனக்குநல்லை யுமல்லை' என்றும், என்மகனை வளர்த்து வந்தமையின் அவனுக்கேனு நன்மைசெய்யவேண்டும்; அது செய்யாமையான் 'என்மகன் பரதன் றனக்கு நல்லையுமல்லை' என்றும், அத்தருமமே நோக்கின் உனக்கேனு நன்மை செய்யவேண்டும்; செய்துகொள்ளாமையின், 'உனக்கு நல்லையுமல்லை' என்றும், உன் மனத்துக்கொவ்வாதனவற்றைச்சொல்கின்றமையான் 'மனக்கு நல்லனசொல்லினை' என்றும், இது அறிவுடைமையன்றென்பதுபட 'மதியிலாமனத்தோய்' என்றும், இது நின்செய்கையன்று, தெய்வச்சூழ்ச்சிபோலுமென்பாள் 'ஊழ்வினை வந்துதூண்ட' என்றுங் கூறினாள். ()

(3) பிறந்தி றந்துபோய்ப் பெறுவது மிழப்பதும் புகழே
னிறந்தி றம்பினு நியாயமே திறம்பினு நெறியின்
றிறந்தி றம்பினுஞ் செய்தவந் திறம்பினுஞ் செயிர்தீர்
மறந்தி றம்பினும் வரன்முறை திறம்புதல் வழக்கோ.

(இ - ள்.) பிறந்து இறந்துபோய் பெறுவது மிழப்பதும் புகழேல் - மக்கள் யாக்கை யெடுத்து மிறந்தும்போய் அடையும்பயனும் இழக்கும் பயனும் புகழேயாயின், நிறந்திறம்பினும் - குணமேகெடினும், நியாயமேதிறம்பினும் - நீதியேகெடினும், நெறியின் திறந்திறம்பினும் - நன்னெறியின் வகையே கெடினும், செய்தவந்திறம்பினும் - செய்தற்குரிய தவமே கெடினும், செயிர் தீர் மறம் திறம்பினும் - குற்றந்தீர்ந்த ஆற்றலே கெடினும், வரன்முறை திறம்புதல் வழக்கோ - வரலாற்று முறைமை கெடுதல் வழக்காமோ.

* "தோன்றிற்புகழொடு தோன்றுகவஃதிலார் - தோன்றலிற்றோன்றாமை நன்று" என்பவாகலின் 'பிறந்திறந்துபோய்ப் பெறுவதுமிழப்பதும் புகழேல்' என்றும், அப்புகழெய்துவதற்கு நற்குணமுதலியன வின்றியமையாமையான் அவையெய்தவேண்டும். அவையெய்தப்பெறாமையான் 'நிறந்திறம்பினு

* திருக்குறள், செ-உ௩௬.

நியாயமே திறம்பினுநெறியின் - நிறந்திறம்பினுஞ் செய்தவந் திறம்பினுஞ் செயிர்தீர் - மறந்திறம்பினும்' என்றும், அவை கெடமொழியினும் வரன்முறையினிற்கவேண்டும், அதுதிறம்புதலழகன்றென்பாள் 'வரன்முறை திறம்புதல் வழக்கோ' என்றுங் கூறினாள். ஓகாரமெதிர்மறை. (சுசு)

(4) போதி யென்னெதிர் நின்று நின் புன்பொறி நாவைச்
சேதி யாதிது பொறுத்தனென் புறஞ்சில ரறியின்
நீதி யல்லவு நெறிமுறை யல்லவு நினைந்தா
யாதி யாதலி னறிவிலி யடங்குதி யென்றாள்.

(இ - ள்.) என்னெதிர் நின்றும்போதி-என்னெதிரினின்று மப்பாற்செல்லுதி, நின் புன்பொறிநாவைசேதியாது இதுபொறுத்தனென்-நின்னுடைய புன்சொல்வழங்கும் பொறியாகிய நாவினை அறுத்தெறிந்துவிடாது இப்பிழைபொறுத்தேன், புறம் சிலரறியின்-புறத்தாரிற் சிலரறிந்தால், நீதியல்லவு நெறிமுறையல்லவு நினைந்தாயாதியாதலின் - நீதியல்லாவையு நன்னெறியல்லாவையு நினைந்தனை யாகின்றனையாதலின், அறிவிலி அடங்குதியென்றாள்- அறிவில்லாதாளே! வாயடங்கென்றனள்.—எ-று.

சீராமன் மணிமுடி புனைதலை நீக்குஞ் சொல்லாதலின் 'புன்பொறிநா' என்றதென்க. சொல்லத்தக்கன வல்லாமை சொல்லலின் 'போதி' என்றும், சொல்லுதலினு நினைத்தல் கொடிதாகலின் 'நீதியல்லவு நெறிமுறையல்லவு நினைந்தாயாதி' என்றும், புறத்தாரறியிற் பழிப்பாமாகலின் 'அடங்குதி' என்றும், என்பாங்கியாதலிற் பொறுத்தேனென்பாள் 'நாவைச்சேதியா திதுபொறுத்தனென்' என்றுங் கூறினளென்க. இந்நான்கு செய்யுளானுங் கைகேசி வற்புறுத்திய துணர்த்தப்பட்டது. (சுஎ)

(1) அஞ்சி மந்தரை யகன்றில ளம்மொழி கேட்டு
நஞ்சு தீர்க்கினுந் தீர்கிலா ததுநலிந் தென்னத்
தஞ்ச மேயுனக் குறுபொரு ளுணர்த்துகை தவிரேன்
வஞ்சி போலியென் றடிமிசை வீழ்ந்துரை வழங்கும்.

(இ - ள்) அம்மொழிகேட்டும் - அச்சொல்லைக்கேட்டும், நஞ்சு தீர்க்கினும் தீர்கிலாது அது நலிந்தாலென்ன - விடத்தை நீக்கினுநீங்காது அதுவருத்தினாற்போல, அஞ்சி மந்தரை அகன்றிலள் - மந்தரைபயந்து நீங்கிலள், தஞ்சமே யுனக்குறு பொருளுணர்த்துகை தவிரேன்- எனக்குத் தஞ்சமாவாளே! உனக்குற்ற நன்மையை யறிவித்தலையொழியேன், வஞ்சிபோலியென் றடிமிசை வீழ்ந்துரை வழங்கும் - கொடிபோல்வாய்! என்றவளடிமேல் விழுந்து கூறத்தொடங்கினள்.

கைகேசி நீதிகூறினுங் கேளாமையான் 'நஞ்சுதீர்க்கினுந் தீர்கிலாதது நலிந்தென்ன' என வுவமைமுகத்தாற்கூறியும், எனக்குத் தஞ்சமாகலின்நின

க்கு நன்மை நாடுவேனென்பாள் 'தஞ்சமேயுனக்குறுபொருளுணர்த்துகை தவிரேன்' என்றுங்கூறினாள். (௬அ)

(2) மூத்த வற்கர சுரித்தெனு முறைமையி னுலகங்
காத்த மன்னனி னிளையனன் றோகடல் வண்ணன்
ஏத்து நீண்முடி புனைவதற் கிசைந்தன னென்றான்
மீத்த ருஞ்செல்வம் பரதனை விலக்குமா றெவனோ.

(இ - ள்.) அரசு மூத்தவற்குரித்தெனு முறைமையின்-அரசு மூத்தவனுக்கென்னு முறைமையான், உலகம் காத்த மன்னனின் இளையன் அன்றோ கடல் வண்ணன் - உலகை யாண்டுவந்த அரசனிற் கடனிறமுடைய ஸ்ரீராமன் இளமைப்பருவ முடையனன்றோ, ஏத்து நீண்முடி புனைவதற்கிசைந்தனன் என்றால் - அவனே யாவரானு மேத்தப்படுகின்ற நெடுமுடி சூட்டிக்கொள்ள உடன்பட்டனனெனின், மீத்தருஞ்செல்வம் பர்தனை விலக்குமாறு எவன் - மேம்பட்ட அவ்வரசச்செல்வம் பரதனை நீங்கும்வகை எப்படி?—

'ஏத்துநீண்முடி' என்றார் தொன்றுதொட்டு மனுத்தொடக்கமாகிய அரசர் புனைந்தமையின். பேரரசாதலின் 'மீத்தருஞ்செல்வம், என்றதென்க. கடல் வண்ணனென்றாள், கடல் தன்னைக் கடைந்தழி அமுதமுதலியன வுதவியவாறுபோல், ஸ்ரீராமனை நீ காடுசெல்லெனச் சொல்வதனான் அவ்வரசச்செல்வம் பெறுவையென்பதுநோக்கி. (௬௯)

(3) அறநி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்
மறநி னைந்துமை வலிகில ராயினு மனத்தால்
இறலு றும்படி யியற்றுவ ரிடையறா வின்னல்.

(இ - ள்.) அறநிரம்பிய அருளுடைய அருந்தவர்க்கேனும் - துறவறவொழுக்க நிரம்புதற்கேதுவாகிய வருளைப்பெற்றுடைய முற்றத்துறந்த முனிவருக்காயினும், பெறலருந்திருபெற்றபின்-பெறுதற்கரியசெல்வம்பெற்றபின், சிந்தனைபிறிதாம்-கருத்து வேறுபடும், மறநினைந்து உமை வலிகிலராயினும்-கொடுமையையெண்ணி யும்மை வருத்தாதொழியினும், இடையறாத இன்னல் மனத்தால் இறலுறும்படியியற்றுவர்-நெஞ்சினான் வருந்தும்வண்ணமொருபோதும் நீங்காத துன்பஞ்செய்வர்.—

செல்வம் எத்தன்மையர்பெறினு மவர் விழியை மறைக்குமாகலின் 'அறநிரம்பிய வருளுடை யருந்தவர்க்கேனும்-பெறலருந்திருப்பெற்றபின் சிந்தனை பிறிதாம்' என்றாள். உம்மை-உயர்வு சிறப்பு. (௭௰)

(4) புரியுந் தன்மக னரசெனிற் பூதல மெல்லாம்
விரியுஞ் சிந்தனைக் கோசலைக் குடைமையா மென்றாற்

பரியு நின்குலப் புதல்வற்கு முனக்குமிப் பார்மே
லுரிய தென்னவ ளுதவிய வொருபொரு ளல்லால்.

(இ - ள்.) தன்மகன் அரசு புரியுமெனின்-தன்மகனாகிய ஸ்ரீராம னரசாள் வானெனின், விரியுஞ்சிந்தனை கோசலைக்கு பூதலமெல்லா முடைமையா மென்றால்-விரிந்த எண்ணத்தினையுடைய கோசலைக் குலகமுழுவது முடைமையாமெனின், பரியுநின்குலப்புதல்வற்கு முனக்கும்-அன்பினையுடைய நின் சிறந்த மகனாகிய பரதனுக்கு முனக்கும், இப்பார்மேல் அவளுதவிய ஒருபொரு ளல்லால் உரியதென் - இப்புவிமேல் அவளுபகரித்த சிறிய பொருளல்லது உரிமை யாது.—

'தன் மகனரசுபுரியுமெனின்' என மாறுக. கோசலை கொடுக்க நீ யனுப விக்கவேண்டுமென்பாள் 'அவளுதவிய வொருபொருளல்லாலுரியதென்' என்றாள். (எக)

(5) தூண்டு மின்னலும் வறுமையுந் தொடர்தரத் துயரா
லீண்டு வந்துனை யிரந்தவர்க் கிருநிதி யவளை
வேண்டி யீதியோ வெள்குதி யோவிம்ம னோயான்
மாண்டு போதியோ மறுத்தியோ வெங்ஙனம் வாழ்தி.

(இ - ள்.) தூண்டுமின்னலும் வறுமையுந்தொடர்தர-ஏவுகின்ற துன்பமும் வறுமையுந் தொடராநிற்ப, துயரா லீண்டுவந்துனை இரந்தவர்க்கு-துன்பத்தா லுன்னையடைந்திரப்பவர்க்கு, இருநிதி அவளை வேண்டி யீதியோ வெள்குதியோ-பெருஞ்செல்வம் அக்கோசலையை யிரந்து நின்றளிப்பையோ இரக்க நாண மெய்துவையோ, விம்மல் நோயால் மாண்டுபோதியோ மறுத்தியோ-துயரமாகிய நோயினால் இறந்து படுவையோ அவர்க்கில்லையென்று மறுப்பையோ, எங்ஙனம் வாழ்தி-எவ்வாறு உயிருடன் வாழாநிற்றி.—

இன்னலும் வறுமையுங் காரியமுங் காரணமுமாகலின் முறைபிறழக் கூறினார். * "இரப்பார்க்கொன்றீவார்மேனிற்கும்புகழ்" ஆகலின் இரந்தேனு மீதல் சிறப்பாகலின் 'வேண்டியீதியோ' என்றும், தன் மாற்றவள்பாலிரத்தல் சாலாமையான் 'வெள்குதியோ' என்றும், ஈயாமையினும் உடனிப்பது தனி பெனக் கருதுவையென்பாள் 'மாண்டுபோதியோ' என்றும், கைப்பொருளின் மையான் 'மறுத்தியோ' என்றும், எங்ஙனம் உயிர்வாழ்வையென்பாள் 'எங் ஙனம் வாழ்தி' என்றுங் கூறினாள். (எஉ)

(6) சிந்தை செய்கையிற் றிகைத்தனை யினிச்சில நாளிற்
றந்த மின்மையு மெளிமையு நிற்கொண்டு தவிர்க்க
உந்தை யுன்னையுன் கிளைஞர்மற் றுன்குலத் துள்ளோர்
வந்து காண்பதுன் மாற்றவள் செல்வமோ மதியாய்.

* திருக்குறள், செ - உரு௨.

(இ - ள்.) செய்கையில் சிந்தை திகைத்தனை-செயலின்கண் கருத்துப் பிறழ்ந்தனை, இனிச் சிலநாளில்-இனிச் சிலநாள்கழிய, தந்தமின்மையு மெளிமையும்-தத்தமக்கெய்திய இல்லாமையும் அதனாற் றோன்றிய தாழ்வும், நின் கொண்டு தவிர்க்க-நின்னாலொழிக்க, உந்தை உன்னை உன்கிளைஞர் மற்றுன் குலத்துள்ளோர்-உன் தந்தை உன்தாய் உன்சுற்றம் உன் குலத்தவரெனப்படுவோர், வந்து காண்பது உன்மாற்றவள் செல்வமோ மதியாய் - வந்துகாண்பது உன் மாற்றாள் செல்வத்தினையோ ஆய்ந்துபார்.—

பெருஞ்செல்வமுடையை நீயென்று நினைந்து உன் தந்தைமுதலியோர் நின்னைக்கொண்டு வறுமை தவிர்க்க வருவரேல் யாது செய்வையென்பாள் 'வந்துகாண்பதுன் மாற்றவள்செல்வமோ மதியாய்' என்றாள். (எரு)

(7) காத லுன்பெருங் கணவனை யஞ்சியக் கனிவாய்ச்
சீதை தந்தையுன் றாதையைத் தெறுகில னிராமன்
மாது லன்னவ னுந்தைக்கு வாழ்வினி யுண்டோ
பேதை யுன்றுணை யாருளர் பழிபடப் பிறந்தார்.

(இ - ள்.) காதலுன் பெருங்கணவனை யஞ்சி - விருப்பமிகுந்த நின்பெருமித மிக்க கணவனுக்குப் பயந்து, அக்கனிவாய் சீதைதந்தை-அத்தொண்டையங் கனிபோலும் வாயையுடைய சீதைக்குத் தந்தையும், இராமன்மாதுலன் அவன் - சீராமனுக்கு மாதுலனுமாகிய அச்சனகனும், உன் தாதையைதெறுகிலன் - உன் தந்தையாகிய கேகயனைத் துயரியற்றிலன், உந்தைக்கு இனி வாழ்வுண்டோ - உன் தந்தையாகிய கேகயனுக்கு இனி வாழ்வுண்டோ உன்றுணைபேதையாருளர் - உன்னளவு பேதைமைக் குணமுடையார் யாவர்? பழிபட பிறந்தார் - பழிமிகப்பிறந்தவர்.—

சனகன் முதலானோர் நின் தாதையை வருத்தாமை தயரதனை நோக்கியென்பாள் 'காதலுன்பெருங் கணவனையஞ்சி' என்றும், இனி யஞ்சாரென்பாள் 'வாழ்வினியுண்டோ' என்றுங் கூறினாள். (எசு)

(8) மற்று நுந்தைக்கு வான்பகை பெரிதுள மறத்தார்
செற்ற போதிவர் சென்றுத வாரெனிற் செருவிற்
கொற்ற மென்பதொன் றெவ்வழி யுண்டது கூறாய்
சுற்ற முங்கெடச் சுடுதுயர்க் கடல்விழத் துணிந்தாய்.

(இ - ள்.) மற்று நுந்தைக்கு வான்பகை பெரிதுள - பின்னும் நின் தந்தைக்குச் சிறந்தபகை மிகுதியுமுள, மறத்தார் செற்றபோது இவர்சென்று உதவாரெனின் - கொடியோர் எதிர்த்துவந்து பொருகையில் இக்கோசலை நாட்டவர்போய்த் துணைசெயாராயின், செருவில் கொற்றம் என்பது ஒன்று எவ்வழியுண்டு - போரின்கண் வெற்றியென்று சொல்லப்படுவது எவ்வாறுண்டு, சுற்றமும்கெட சுடுதுயர் கடல்விழதுணிந்தாய் - உறவின

ரும் வருந்த வருத்துகின்ற வியல்பினையுடைய துன்பக்கடலிலாழத் துணிந்த வளே, அது கூறாய் - அதைச்சொல்.—

* "சுற்றத்தாற்சுற்றப் படவொழுகல்செல்வந்தான்-பெற்றதாற்பெற்ற பயன்" ஆகலின் நினக்கிது முறையன்றென்பாள் 'சுற்றமுங்கெடச் சுடுதுயர்க்கடல் விழத்துணிந்தாய்' எனக்கூறினாள். (எரு)

(9) கெடுத்தொ ழிந்தனை யுனக்கரும் புதல்வனைக் கிளர்நீர்
உடுத்த பாரக முடையவ னொருமகற் கெனவே
கொடுத்த பேரர சவன்குலக் கோமைந்தர் தமக்கு
மடுத்த தம்பிக்கு மாம்பிறர்க் காகுமோ வென்றாள்.

(இ - ள்.) உனக்கரும் புதல்வனை கெடுத் தொழிந்தனை - உனக்கருமைப்புதல்வனாகிய பரதனைக் கெடுத்து விட்டனை, கிளர் நீருடுத்த பாரகம் உடையவன் - கடல் சூழ்ந்த நிலமுழுது முடையவனாகிய சக்கரவர்த்தி, ஒரு மகற்கெனகொடுத்த பேரரசு-தன் மகனாகிய சிராமனுக்கென்றே மகுடாபிடேகஞ்செய்த அரசச்செல்வம், அவன் குலக்கோமைந்தர்தமக்கும் அடுத்த தம்பிக்கும் ஆம் - அவனது சிறந்த மக்களுக்கும் அவனையடுத்த இளையவனுக்குமாகும், பிறர்க்காகுமோ என்றாள் - பிறருக்காகுமோ என்றனள்.—எ-று.

கிளர் நீர் - அன்மொழித்தொகை. ஒருமகன் என்றது சிராமனை, தம்பியென்றது இலக்குவனை. ஒகாரமெதிர்மறை. இவ்வொன்பதுசெய்யுளானும் மந்தரை கைகேசியை யுடன்படச்செய்வ துணர்த்தப்பட்டது. (எசு)

(1) தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந்தேவி
தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
மாயை'யும்மவர் பெற்றநல் வரவுண்மை யாலும்
ஆய வந்தண ரியற்றிய வருந்தவத் தாலும்.

(இ - ள்.) தீயமந்தரை இவ்வுரை செப்பலும் - கொடிய மந்தரை இம்மொழிகூறலும், தேவி தூய சிந்தையும் - கைகேசியது பரிசுத்தமான மனமும், இமையோர் மாயையும் - தேவர்கள் மாயையாலும், அவர்பெற்ற நல் வரவுண்மையாலும் - அவர்கள் பெற்ற நல்வரத்தின்மெய்ம்மையாலும் ஆயவந்தணரியற்றிய அருந்தவத்தாலும் - அவ்வந்தணர் செய்த வருமையாகிய தவத்தினாலும், சூழ்ச்சியின் திரிந்தது - ஆலோசனையின் மாறுபட்டது.—

'விராவரும்புவிக்கெலாம் வேதமே யன - இராமனைப்பெற்றவெற்கிடருண்டோ' என்றவள் கைகேசியாதலின் அவள் மனத்தை 'தேவிதூயசிந்தையும்' என்றும், அது திரிவதற்கேதுவை விளக்க 'இமையோர்மாயையுமவர்பெற்ற நல்வரவுண்மையாலும்' 'ஆயவந்தணரியற்றிய வருந்தவத்தாலும் சூழ்ச்சியிற்றிரிந்தது' என்றுங்கூறினார். (எஎ)

* திருக்குறள்-செ. ருஉச.

(2) அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வரமும்
துரக்க நல்லரு டுறந்தன டூமொழி மடமான்
இரக்க மின்மையன் றேவின்றிவ் வுலகங்க ளிராமன்
பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகுகின் றதுவே.

(இ - ள்.) அரக்கர்பாவமும் அல்லவரியற்றிய வறமும் - அரக்கர்செய்த தீவினையும் அவரையல்லாதார் செய்த நல்வினையும், துரக்க நல் அருள்தூமொழிமடமான் துறந்தனள் - அகற்ற நல்ல கருணையையும் பரிசுத்தமான மொழியையுமுடைய கைகேசி யொழிந்தனள், இன்று இவ்வுலகங்கள் இராமன் பரக்கும் தொல்புகழமுதினை பருகுகின்றது இரக்கமின்மையன்றே-(ஆகலின்) இன்று இவ்வுலகங்கள் சீராமனது பரந்த பழமையாகிய புகழாகிய வமுதை யுண்பது அவ்விரக்கமில்லாமையானன்றே.—எ-று.

அல்லவரென்றது - அரக்கரையொழிந்த தேவரையு மந்தணரையும். அவளிரக்கமில்லாமை காட்டாளேல் சீராமனது குணனுபவம் விளங்காதென்பார் 'இரக்கமின்மையன்றே இன்றிவ்வுலகங்களிராமன் பரக்குந்தொல்புகழமுதினைப் பருகுகின்றது' என்றார். 'வானோர் கேள்விச்செல்வம் துய்க்க வயிற்றோர் கிளைதந்தாள்' எனப்பிற் கூறுவதூஉம் இப்பெற்றிநோக்கி. இவ்விரண்டு செய்யுளும் கவிக்கூற்று. (எஅ)

அனைய தன்மைய ளாகிய கைகய னன்னம்
வினைநி ரம்பிய கூனியை விரும்பின ணோக்கி
எனையு வந்தனை யினியையென் மகனுக்கு மனையான்
புனையு நீண்முடி பெறும்படி புகலுதி யென்றாள்.

(இ - ள்.) அனையதன்மையளாகிய கைகயன் அன்னம் - அத்தன்மையளாகிய கேகயராசன்பெற்ற அன்னம்போல்வாள், வினைநிரம்பிய கூனியை விரும்பினள்நோக்கி - முயற்சி நிரம்பிய மந்தரையை விரும்பிப்பார்த்து, எனையுவந்தனை-என்பால் விருப்பமிகுதியுமுடையை, என்மகனுக்கும் இனியை-என் மகனாகிய பரதனுக்கு நல்லை, அனையான் புனையு நீண்முடி பெறும்படி புகலுதியென்றாள் - அவன் அலங்காரம்பெற்ற நீண்முடியைப் பெறும்வகையைச் சொல்லென்றனள்.—எ-று.

தன் கருத்து முற்றுப்பெற நின்றவளாகலின் 'வினைநிரம்பிய கூனி'என்றார். 'எனக்கு நல்லையுமல்லை' என்றாற்போல்வன கூறியவற்றிற்கு 'எனையுவந்தனை' முதலியன மாறாகக் கூறுதற்கேது தேவிசிந்தை தெய்வச்சூழ்ச்சியாற் றிரிந்தமை யென்க. இதனாற் கைகேசி யுடன்பட்ட துணர்த்தப்பட்டது. ()

(1) மாழை யுண்கணி யுரைசெயக் கேட்டமந் தரையென்
றோழி வல்லளென் றுணைவல்ல ளென்றடி தொழுதாள்
தாழு மன்னிலை யென்னுரை தலைநிற்பி னுலகம்
ஏழு மேழுமுன் னொருமகற் காக்குவெ னென்றாள்.

(இ - ள்.) மாழை உண்கணி யுரைசெய - மாவடுவொத்தமையுண்ட கண்ணையுடைய கைகேசி சொல்ல, கேட்ட மந்தரை என்தோழி வல்லள் - கேட்ட கூனி என்தோழி வல்லவள், என்துணை வல்லள்-என்துணைவி வல்லவள், என்று அடிதொழுதாள்-என்று அடிவணங்கினாள், என்னுரைதலை நிற்பின்-என்சொற்படி நிற்கின், மன்னிலை தாழும் - அரசன் முயற்சி தவறும், உலகமேழுமேழு முன்னொரு மகற்காக்குவனென்றாள் - பதினான்குலகமும் உன்னொப்பற்ற மகனாகிய பரதனுக்கேயுரிமையாக்குவனென்றனள்.—

மாழை - மாவடு. உண்கண் - மையுண்ட கண்; இதனை * "இருநோக்கிவளுண்கண்" என்புழிப் பரிமேலழகர் கூறலானுமறிக. 'என்தோழிவல்லள் என்றுணைவல்ல' ளென்று வியந்தது கைகேசி தன் சொல்வழி நடக்கத் துணிந்தமையினென்க. தன்சொல்வழி நிற்பின் அலகில் செல்வமும் பெறுவையென்பாள் 'மன்னிலைதாழும், ஏழுமேழு முன்னொருமகற்காக்குவென்' என்று கூறினாள். தலைநிற்றல் - ஒருசொல். (அஎ)

(2) நாடி யொன்றுரை செய்குவெ னளிர்மணி நகையாய்
தோடி வர்ந்ததார்ச் சம்பரன் றொலைவுற்ற வேலை
ஆடல் வென்றியா னருளிய வரமவை யிரண்டுங்
கோடி யென்றன ளுள்ளமுங் கோடிய கொடியாள்.

(இ - ள்.) நளிர்மணி நகையாய் - குளிர்ந்த முத்தம்போலு நகையினையுடையாளே! நாடியொன்று உரை செய்குவென்-ஆராய்ந்து ஒன்றுனக்குரைப்பேன், தோடிவர்ந்ததார் சம்பரன் - இதழ்கள் விரிந்த மலர்மாலையணிந்த சம்பராசுரன், தொலைவுற்ற வேலை - போரில் மடிந்தபொழுது, ஆடல் வென்றியானருளிய வரமவை யிரண்டும்-அப்போரில் வெற்றிகொண்ட சக்கரவர்த்தி யளித்த வரங்க ளிரண்டையும், உள்ளமும் கோடிய கொடியாள் கோடியென்றனள் - உடம்பேயன்றி மனமும் கோணிய கொடியளாகிய மந்தரை இன்று கொள்ளென்றனள்.—

இதுகாறு நீ யறியாது இருந்தனையென்பாள் 'நாடியொன்றுரைசெய்குவன்' என்றும், நீ சம்பரனைத் தொலைத்தஞான்று பெற்ற வரங்களை இன்று பெறுதியென்பாள் 'சம்பரன் தொலைவுற்றவேலை ஆடல்வென்றியா னருளிய வரமவை யிரண்டுங்கோடி' என்றுங் கூறினாள். 'உள்ளமுங்கோடிய கொடியாள்' என்பதற்கு 'கொடுமனக் கூனி' என்புழி யுரைத்ததுகொள்க. (அக)

(3) இருவ ரத்தினி லொன்றினா லரசுகொண் டிராமன்
பெருவ னத்திடை யேழிரு பருவங்கள் பெயர்ந்து
திரித ரச்செய்தி யொன்றினாற் செழுநில மெல்லாம்
ஒருவ ழிப்படு முன்மகற் குபாயமி தென்றாள்.

* திருக்குறள், செ - ருகக.

(இ - ள்,) இருவரத்தினிலொன்றினல் அரசுகொண்டு - இரண்டுவரங்களி லொன்றால் அரசச்செல்வம்பெற்ற, இராமன் பெருவனத்திடையேழிரு பருவங்கள் பெயர்ந்து திரிதரச்செய்தி-சீராமன் பெரிய காட்டில் பதினான்கு ஆண்டு அயோத்தியைவிட்டுத் திரியச்செய், ஒன்றினல் உன்மகற்குசெழுநிலமெல்லாம் ஒருவழிப்படுமுபாயமிது என்றாள்-செழுமையாகியஉலகமெல்லாம் உன்மகனாகிய பரதனுக்குஒரு வழிப்படு முபாய மிதுவேயென்றனள்.—எ-று,

பருவமென்றது ஆண்டுகளை. 'பத்துநாலு பகலலவோ' எனப்பிற்கூறுவது மிப்பெற்றிநோக்கி. இம்மூன்றுசெய்யுளானும் மந்தரைதெருட்டியதுணர்த்தப்பட்டது. (அஉ)

(1) உரைத்த கூனியை யுவந்தன ளுயிருறத் தழுவி
நிரைத்த மாமணி யாரமு நிதியமு நீட்டி
இரைத்த வேலைசூ ழுலகமென் னொருமகற் கீந்தாய்
தரைக்கு நாயகன் றாயினி நீயெனத் தணியா.

(இ - ள்.) உரைத்த கூனியை உவந்தனள் - அவ்வாறு சொல்லிய மந்தரையை மகிழ்ந்து, உயிருறத்தழுவி - உயிர்பொருந்தத் தழுவிக்கொண்டு, நிரைத்தமாமணியாரமு நிதியமுநீட்டி - வரிசைபட்ட மணிவடங்களும் செல்வங்களுங் கொடுத்து, இரைத்தவேலை சூழுலகமென்னொரு மகற்கீந்தாய்-ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த உலகமென் னொருமகனுக்கே கொடுத்தனை, இனி தரைக்குநாயகன் தாய் நீயெனத்தணியா - இனி உலகமுழுது முடையோனுக்குத் தாய் நீயேயென்று மனங்குளிர்ந்து.—

இதுகாறும் பெற்றதனு லென்னைத் தாயென்பார் பலரும், அவனுக்கு உலகையளித்தமையால் இனி நீயே தாயென்பாள் 'தரைக்குநாயகன்றாயினிநீ, என்றாள். ஈந்தாயென விறந்தகாலத்தாற் கூறியது துணிபுபற்றியென்க. ()

(2) நன்று சொல்லினை நம்பியை நளிர்முடி சூட்டல்
துன்று கானத்தி லிராமனைத் துரத்தலிவ் விரண்டு
மன்ற தாமெனி லரசன்முன் னாருயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவென்யான் போதிநீ யென்றாள்.

(இ-ள்.) நன்று சொல்லினை - நன்றாகக்கூறினை, நம்பியை நளிர்முடிசூட்டல்- பரதனுக்கு மணிமுடிசூட்டுதல், துன்றுகானத்திலிராமனைத்துரத்தல்-மரங்களடர்ந்த காட்டிற் சீராமனைச்செலுத்தல், இவ்விரண்டும் அன்றதாமெனின்-இவ்விரண்டும் வேறுபடுவதாயின், அரசன்முன் ஆருயிர் துறந்து யான் பொன்றி நீங்குதல் புரிவென்-அரசனுக்கு முன் உடலைநீக்கி யானிறப்பேன், நீ போதியென்றாள் - நீ போவென்றனள்.—எ-று.

யானறியாதிருந்தமையை நீயெடுத்துக் காட்டினையாதலால் 'நன்றுசொல்லினை' என்றும், இவ்விரண்டு செய்கையு முற்றுப்பெறாதாயின் யான் பொன்

றுதல் துணிபுஎன்டாள் 'பொன்றிநீங்குதல்புரிவன்' என்றுங்கூறினாள். இவ்விரண்டுசெய்யுளானும் கைகேசி துணிபுரைத்தமை யுணர்த்தப்பட்டது.

(1) கூனி போனபின் குலமலர்க் குப்பைநின் றிழிந்தாள்
சோனை வார்குழற் கற்றையிற் சொருகிய மாலை
வான வார்மழை நுழைதரு மதிபிதிர்ப் பாள்போல்
தேன வாவுறு வண்டின மலமரச் சிதைத்தாள்.

(இ - ள்.) கூனிபோனபின் குலமலர் குப்பைநின் றிழிந்தாள்-மந்தரை சென்றபின் சிறந்த மலர்க்குப்பையினின்றுமிழிந்து,சோனைவார்குழற் கற்றையில்-மழைபோலு நீண்டகூந்தற்கற்றையில், சொருகிய மாலை-சொருகியிருக்கிற மாலையை, வானம்வார் மழைநுழை தருமதி பிதிர்ப்பாள்போல - வானிலுள்ள நீண்டமழையி னுழைகின்ற சந்திரனைப் பிதிர்ப்பவள்போல, தேன வாவுறு வண்டின மலமர சிதைத்தாள்-தேனை விரும்பியடைகின்ற வண்டின் கூட்டம் வருந்தச் சிதைத்தனள்.—

சோனை-விடாது பெய்மழை. 'பொங்கணைமேற்கிடந்தாள்' என்பதுநோக்கி 'குலமலர்க்குப்பை நின்றிழிந்தாள்' என்றதென்க. குலமலர்க்குப்பையென்றது பூவணையை. 'சோனைவார்குழல்' என்றும், 'மதி' என்றும் குழலையு மாலையையு முவமித்தார். அம்மாலையிலுள்ள வண்டின்கூட்டம் வருந்துதலான் 'தேனவாவுறுவண்டினமலமர' என்றுங் கூறினார்.　　(அடு)

(2) விளையுந் தன்புகழ் வல்லியை வேரறுத் தென்னக்
கிளைகொள் மேகலை சிந்தினள் கிண்கிணி யோடும்
வளைது றந்தனள் மதியினின் மறுத்துடைப் பாள்போல்
அளக வாணுத லரும்பெறற் றிலகமு மழித்தாள்.

(இ - ள்.) விளையும் தன்புகழ் வல்லியை வேரறுத்தால் என்ன - விளைகின்றதன் புகழாகிய கொடியை வேரறுத்தாற்போல, கிளைகொள் மேகலை சிந்தினள்-கிளைத்திருக்கின்ற மேகலையைச்சிதறினள், கிண்கிணியோடும் வளைதுறந்தனள்-கிண்கிணி மாலையுடன் கைவளையலை நீக்கினள், மதியினின் மறுத்துடைப்பாள்போல் அளகம் வாணுத லரும்பெறல் திலகமுமழித்தாள்-சந்திரனிடத்தில் மாசுதுடைப்பவள்போல அளகந்தங்கிய ஒள்ளிய நெற்றியிலிட்ட அரிய பெறுதலையுடைய திலகத்தையு மழித்தனள்.—

மேகலையினைத்தென முற்கூறினும், மேகலை முத்தினுய வடமாதலான் அதனைச் சிதறலாற் 'தன்புகழ்வல்லியை வேரறுத்தென்னக் கிளைகொள்மேகலை சிந்தினள்' என்றும், அதற்கியையக் கிண்கிணிமுதலியன விழத்தலின் 'கிண்கிணியோடும் வளைதுறந்தனள்' என்றும், நுதலிற்றிலக மழித்தமையை யுவமைமுகத்தாலுணர்த்துவான் 'மதியினின் மறுத்துடைப்பாள்போல நுதலிற்றிலகமுமழித்தாள்' என்றுங் கூறினார். கிண்கிணி என்றது காலிற் புனையுமணி.　　(அசு)

(3) தாவின் மாமணிக் கலன்மற்றுந் தனித்தனி சிதறி
நாவி நன்குழ ஞனிலந் தைவரப் பரப்பிக்
காவி யுண்கண்க ளஞ்சனங் கான்றிடக் கலுழாப்
பூவு திர்த்ததோர் கொம்பெனப் புவிமிசைப் புரண்டாள்.

(இ - ள்.) தாவில் மாமணி கலன் மற்றும் தனிதனி சிதறி-கேடில்லாத பெருமையாகிய இரத்தினுபரணங்களும் பிறவும் வேறுவேருகச்சிதறி, நாவி நன்குழல் நானிலம் தைவர பரப்பி - கத்தூரி மணங்கமழு நன்மையாகிய கூந்தலை நிலத்திற் புழுதிபடப்பரப்பி, காவி யுண்கண்கள் அஞ்சனங் கான்றிட கலுழா-காவிமலரையொத்த மையுண்ட கண்கள்அஞ்சனஞ் சிந்த வழுது, பூவுதிர்த்ததோர் கொம்பென புவிமிசை புரண்டாள் - பூவுதிர்த்த கொம்பே போலப் பூமியிற் புரண்டனள்.—எ-று.

இலக்கணமனைத்துங் குறைவற்றமையால் 'தாவின்மாமணிக்கலன்' என்றதென்க. அஞ்சனம்-மை. நாவி-கத்தூரி. சிதறிப்பரப்பிக் கான்றிடக் கலுழாப் புரண்டாளென வினைமுடிக்க. காவி-நீலமலர். கொம்பு பூநீத்தகாலத்துப் பொலிவற்றதேபோலக் கலனெல்லாங் கழற்றியெறிந்தாளென வுவமைமுகத்தாற் கூறினர்; 'தவ்வையாமெனக் கிடந்தனள்' எனப் பிற்கூறுவதை வலியுறுத்தற்கு. பூவுதிர்ந்த கொம்பேபோற் பூமியிற் புரண்டனளென்றதனை * "கொடிபூத்துதிர்ந்த தோற்றம்போல்" என விசையையை கூறலானுமறிக. இம்மூன்றுசெய்யுளானு மவளணிகலன் கழற்றி யெறிந்தமை யுணர்த்த ப்பட்டது.()

நவ்வி வீழ்ந்தென நாடக மயிறுயின் றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாங் கடிகமழ் கமலத்
தவ்வை நீங்குமென் றயோத்திவந் தடைந்தவம் மடந்தை
தவ்வை யாமெனக் கிடந்தனள் கைகயன் றனையை.

(இ - ள்.) நவ்வி வீழ்ந்தென - மான் வீழ்ந்தாற்போலும், நாடக மயில் துயின்றென்ன - நடஞ்செய் மயில் உறங்குதல்போலும், கவ்வை கூர்தர-துன்பமிக, சனகியாம் கடிகமழ் கமலத்து அவ்வை நீங்கும் என்று-சானகியாகிய மணங் கமழ்கின்ற தாமரையில் வீற்றிருக்கும் அன்னை நீங்குவளென்று, அயோத்திவந்தடைந்த அம்மடந்தை தவ்வை யாம் என - அயோத்தியை வந்தடைந்த மூத்தாளென்ன, கைகயன் தனையை கிடந்தனள்-கைகேசி யிருந்தனள்.

பூமியில் வீழ்தலால் 'நவ்விவீழ்ந்தென' என்றும், அயர்ந்திருத்தலால் 'நாடக மயிறுயின்றென்ன' என்றும், திருமகணீங்கவந்த தவ்வையேபோலக் கைகேசி இருத்தலான் 'அவ்வை நீங்குமென் றயோத்திவந்தடைந்த தவ்வை யாமெனக் கிடந்தனள்' என்றுங் கூறினர். இது கவிக்கூற்று. (அஅ)

மந்தரைசூழ்ச்சிப்படலம் முற்றிற்று.
ஆகத்திருவிருத்தம் - அஅ.

---

* சிந்தாமணி, நாமகளிலம்பகம். செ-கூஉச

கைகேசி சூழ்வினைப்படலம்.

கைகேசி சக்கரவர்த்தித்திருமகன் மணிமுடி சூடுதற் கிடையூற்றை யாராய்தல். மந்தரைசூழ்ச்சியான் இது தவிதூயசிந்தையுந் திரிந்துடன்படலின்மந்தரைசூழ்ச்சிப்படலத்தின் பின் வைக்கப்பட்டது. படலமுறைமையு மிதனானே விளங்கும்.

கலிவிருத்தம்.

(1) நாழிகை கங்குலி னள்ளடைந்த பின்றை
யாழிசை யஞ்சிய வஞ்சொலேழை கோயில்
வாழிய வென்றயின் மன்னர் துன்ன வந்தான்
ஆழி நெடுங்கை மடங்கலாளி யன்னான்.

(இ - ள்.) நாழிகை கங்குலி னள்ளடைந்த பின்றை-அத்தயாம மடைந்தபின்னர், ஆழிநெடுங்கை மடங்கலாளி யன்னான் - ஆக்ஞாசக்கரத்தையுடைய சிங்கவேறுபோன்ற தயரதன், யாழிசை யஞ்சிய அஞ்சொலேழை கோயில் - யாழினோசையஞ்சும் அழகியசொல்லையுடைய கைகேசிமாளிகையில், வாழியவென்று அயில் மன்னர் துன்னவந்தான் - வாழ்கவென்று வேலையுடைய வரசர் நெருங்கி யேத்தெடுப்பவந்தனன்.—

'ஆழிநெடுங்கை' என்றார் ஆக்ஞாசக்கரமுடைமையான். மடங்கலாளி என்றது - அரசனாற்றற்குவமை. யாழிசை - சொற்குவமை. நள்ளிரவே அந்தப்புர மணுகுதற்குக் காலமாகலான் 'நாழிகை கங்குலினள்ளடைந்த பின்றை' என்றதென்க. (க)

(2) வாயலின் மன்னர் வணங்கிநிற்ப வந்தாங்
கேயின செய்யு மடந்தைமாரொ டேகிப்
பாய றுறந்த படைத்த டங்கண் மென்றோ
ளாயிழை தன்னை யடைந்தவாழி மன்னன்.

(இ - ள்) வாயலில் மன்னர் வணங்கி நிற்பவந்து - வாசலின்கண் அரசர் தொழுது நிற்கவந்து, ஆங்கு ஏயின செய்யு மடந்தைமாரொ டேகி-அங்கேவினவற்றைச் செய்தொழுகு மாதரொடுஞ்சென்று, பாயல் துறந்த படைதடங்கண் மெல் தோள் ஆயிழைதன்னை - படுக்கையை நீங்கிய படைபோலுந்தடங்கண்ணையு மென்றோளையுமுடைய ஆய்ந்த அணிகலமுடையாளை, அடைந்த ஆழிமன்னன் - அடைந்த சக்கரவர்த்தி.—

ஆயிழை - அன்மொழித்தொகை. 'ஏயினசெய்யு மடந்தைமார்' என்றது கைகேசிக்குக் குற்றேவல் செய்யுஞ் சிலதியரை. தடந்தோளென்றொட்டுக. (உ)

(3) அடைந்தவ ணோக்கி யரந்தையென்கொல் வந்து
தொடர்ந்த தெனத்துயர் கொண்டுசோரு நெஞ்சன்,
மடந்தையை மானை யெடுக்குமானை யேபோல்
தடங்கைகள் கொண்டு தழீஇயெடுக்க லுற்றான்.

(இ-ள்.) அடைந்து அவள் நோக்கி-வந்து அவளை நோக்கி, அரந்தை யென் வந்து தொடர்ந்ததென - துன்பம் யாது வந்து சூழ்ந்ததென்று, துயர் கொண்டு சோருநெஞ்சன் -துயர்கொண்டு சோருமனத்தனாய், மடந்தையை மானையெடுக்கும் ஆனையேபோல-கைகேசியைமானையையெடுக்கு மானையை யொப்ப, தடங்கைகள் கொண்டு தழீஇயெடுக்கலுற்றான் - தடங்கைகளால் தழுவி யெடுத்தனன்.—எ-று.

மருண்ட பார்வையளாகலின் மானையும், பனையவாங்கையனாகலின் ஆனையையு முவமித்தார். தழீஇ சொல்லிசை யளபெடை. அவளென் புழி இரண்டாவதனுருபுதொக்கது. இம்மூன்று செய்யுளானும் அரசன் கைகேசி மாளிகை யடைந்தமை யுணர்த்தப்பட்டது. (ரு)

நின்று தொடர்ந்த நெடுங்கைதம்மை நீக்கி
மின்றுவள் கின்றது போலமண்ணில் வீழ்ந்தாள்
ஒன்று மியம்பல ணீடுயிர்க்க லுற்றாள்
மன்றல ருந்தொடை மன்னனாவி யன்னாள்.

(இ-ள்.) நின்று தொடர்ந்த நெடுங்கை தம்மை நீக்கி- நின்று தொடர்ந்த தடங்கைகளைத் தன் கைகளா னீக்கி, மன்று அலரும் தொடை மன்னனாவி யன்னாள் - மணங்கமழு மாலையையுடைய அரசனுக்காவிபோல்வாள், மின் துவள்கின்றதுபோல மண்ணில் வீழ்ந்தாள் - மின்னல் துவளல்போல மண் ணில் வீழ்ந்து, ஒன்று மியம்பலள் - சிறிதும் பேசுதலின்றி, நீடுயிர்க்கலுற் றாள் - நெட்டுயிர்த்தனள்.—எ-று.

தன்னை நிலத்தினின்று மெடுத்தலைத் தவிர்த்துப் பிணங்குகின்றமை யின் 'நின்றுதொடர்ந்த நெடுங்கை த மை நீக்கி-மின்றுவள்கின்றபோல மண் ணில் வீழ்ந்தாள்' என்றும், தன் கருத்தைச் சாதிப்பவளாகலின் 'ஒன்றுமியம் பலணீடுயிர்க்கலுற்றாள்' என்றுங் கூறினார். இதனான் அவளிருந்த நிலைமை யுணர்த்தப்பட்டது. (சு)

அன்னது கண்ட வலங்கன்மன்ன னஞ்சி
என்னை நிகழ்ந்ததிஞ் ஞாலமேழில் வாழ்வார்
உன்னை யிகழ்ந்தவர் மாள்வருற்ற தெல்லாம்
சொன்னபி னென்செயல் காண்டிசொல்லி டென்றான்.

(இ-ள்.) அன்னது கண்ட அலங்கல் மன்னன் அஞ்சி - அதைக்கண்ட மாலையணிந்த அரசன்பயந்து, என்னை நிகழ்ந்தது - உனக்கு யாது நடந்தது,

இந்ஞாலமேழில் வாழ்வார் உன்னை யிகழ்ந்தவர் மாள்வர்-இவ்வுலகமேழினும் வாழ்வாருள்ளும் உன்னையிகழ்ந்தவர்களிறந்துபடுவர், உற்றதெல்லாம் சொன்னபின் என்செயல் காண்டி சொல்லிடென்றான்- நடந்ததெல்லாஞ் சொன்ன பின்னர் என் செய்கையையறிவை சொல்லென்றனன்.—எ-று-

அன்னது என்றது அவளிருந்தநிலைனமயை. நடந்ததையெல்லாம் சொல்லினன்றி என்செய்கையறியாயென்பான் 'சொன்னபினென்செயல் காண்டி' என்றான். இதனுன் அரசன்கைகேசியை வினவியதுணர்த்தப் பட்டது.

வண்டுளர் தாரவன் வாய்மைகேட்ட மங்கை
கொண்ட நெடுங்கணி னலிகொங்கை கோப்ப
வுண்டுகொ லாமரு ளென்கணுன்க ணொக்கிற்
பண்டைய வின்று பரிந்தளித்தி யென்றாள்.

(இ-ள்.) வண்டுளர் தாரவன் வாய்மை கேட்டமங்கை-வண்டுகள் ஒலிக்கின்ற மாலையையுடைய அரசன் உண்மை மொழியைக் கேட்ட கைகேசி, கொண்ட நெடுங்கணினலி கொங்கைகோப்ப- வலிதிற்கொண்ட நீண்ட கண்ணினின்றும் நீர்த்துளிபெருகி முலைமேல்கோக்க, என் கண் அருள் உண்டு கொலாம்- என்னிடத்தன் புண்டுகொலாம், உன் கண் ஒக்கின் - உன்னிடத்தன்பு மொக்குமாயின், பண்டைய இன்று பரிந்தளித்தியென்றாள் - முன்னை நாளில் கொடுத்தவற்றை இன்று விரும்பிக்கொடுவென்றனள்.—எ-று.

ஆலி - நீர்க்கட்டி. 'நெடுங்கணினலிகொங்கைகோப்ப' என்றது அழாநிற்கஎன்றபடி. நீதருவது புதிதன்றென்பாள் 'பண்டைய' என்றும், தன்கணருளில்லானென்றிழித்துக்கூற 'உண்டுகொலாமருள்' என்றும், நீயெவ்வாறேனும் விரும்பி யுதவல் நின்கடனென்பாள் 'பரிந்தளித்தி, என்றுங்கூறினள் இதனுன் அவள் வரங்கேட்டமை யுணர்த்தப்பட்டது. (சு)

கள்ளவிழ் கோதை கருத்துணர்ந்த மன்னன்
வெள்ள நெடுஞ்சுடர் மின்னின்மின்ன நக்கான்
உள்ள முவந்துள செய்வெனொன் றும் லோவேன்
வள்ள லிராமனுன் மைந்தனை யென்றான்.

(இ-ள்.) கள் அவிழ் கோதை கருத்து உணர்ந்தமன்னன் - கள் விரிந்த பூமாலையுடைய கைகேசி யெண்ணமறிந்த அரசன், வெள்ள நெடுஞ்சுடர்மின்னின்-வெண்மையாகிய நெடிய ஒளியையுடையமின்போல, மின்ன நக்கான்-மின்ன நகைத்து, உள்ளமுவந்துளசெய்வென்-உள்ளமகிழ்ந்துள்ளவாறு செய்வேன், ஒன்றும்லோவேன்-சிறிதுமுலோபஞ்செய்யேன், வள்ளலிராமன் உன் மைந்தனை யென்றான் - வள்ளற்றன்மையுடைய சீராமனாகிய உன் மகனை யென்றனன்.—எ-று.

கோதை - ஆகுபெயர். வள்ளலென்றார் தான்பெற்ற வரனைத் தானே தருதலின். கருத்துணர்ந்தமன்னன் என்றது அவள் கேட்ட வரமென்ற பொ

துமையை நோக்கியென்க. இப்பெற்றிநோக்கியே 'உரங்கொண் மனத்தவள் வஞ்சமோர்கிலாதான்' எனப பிற்கூறுதலு மென்க. இதனுன் அரசன் அவள் சிந்தையறியாதியைந்தமை யுணர்த்தப்பட்டது. (எ)

ஆன்றவ னவ்வுரை கூறவைய மில்லாள்
தோன்றிய பேரவ லந்துடைப்ப துண்டேற்
சான்றிமை யோர்குல மாகமன்ன நீயன்
றேன்ற வரங்க ளிரண்டுமீதி யென்ருள்.

(இ - ள்.) ஆன்றவன் அவ்வுரைகூற - அறிவின் மிக்கானுகிய அரசனம்மொழிசொல்ல, ஐயமில்லாள் - ஐயப்பாடில்லாளாகி, தோன்றிய பேரவலந் துடைப்பதுண்டேல் - தோன்றிய பெருந்துன்பந் துடைப்பதாயின், மன்ன - அரசனே, இமையோர்குலம் சான்ருக - தேவர்கள் கூட்டஞ் சாட்சியாக, நீயன்று என்ற வரங்களிரண்டு மீதியென்ருள்-நீ யந்நாளிற்றர விசைந்தவரங்க ளிரண்டினையு மளித்தியென்றனள்.—எ-று.

வள்ளலிராமனுன் மைந்தனுணே யென்றதனுற் றன்கருத்து முற்றுப்பெறுதலின் 'அவ்வுரைகூற வையமில்லாள்' என்றதென்க. 'இமையோர் குலம் சான்ருக' என மாறுக. நீ யன்றேன்ற வரங்களென்றது சம்பரனைத் தடிந்த காலத்தளித்த வரங்களை. ஆன்றவன் என்பது அகன்றவனென்பதன் மரூஉ. இதனுற்கைகேசி அரசனை மீண்டுங் கேட்டதுணர்த்தப்பட்டது.

வரங்கொள வித்துணை மன்னுமல்ல லெய்தி
இரங்கிட வேண்டுவ தீவனேகொ ளென்பாற்
பரங்கெட விப்பொழு தேபகர்ந்தி டென்ருன்
உரங்கொண் மனத்தவள் வஞ்சமோர்கி லாதான்.

(இ - ள்.) வரங்கொள இத்துணை மன்னு மல்லலெய்தி இரங்கிட-வரத்தைப்பெற இவ்வளவு நிலைபெற்ற துன்பமடைந்தேற்க, என்பால்வேண்டுவது ஈவனேகொள்-வேண்டியதையே தருவேன் என்பாற் பெற்றுக்கொள், பரங்கெட - பாரமொழிய, உரம் கொள் மனத்தவள் வஞ்ச மோர்கிலாதான்-வயிரங்கொண்ட மனத்தையுடைய அக்கைகேசி வஞ்சனை யறியாதானுய், இப்பொழுதே பகர்ந்திடென்ருன் - இப்பொழுதே சொல்லென்ருன்.-எ-று.

அவள் பெற்ற வரந் தன்பாலிருத்தலின பரமென்றும், ஈதற்குத் தடையில்லையாகலின் 'ஈவனேகொள்' என்றும், தான் கொண்ட கருத்திற் சிதையாமையின் 'உரங்கொள்மனத்தவள்' என்றும், அவள் கருத்தினையதென வறியாதானுகலின் தயரதனை 'வஞ்சமோர்கிலாதான்' என்றுங்கூறினுர். இதனுன் அரசன்வரங்களீந்தமை யுணர்த்தப்பட்டது. (கூ)

ஏய வரங்க ளிரண்டிலொன்றி ஞலென்
சேயர சாள்வது சீதைகொண்க னென்ருற்

போய்வன மாள்வ தெனப்புகன்று நின்றாள்
தீயவை யாவையி னுஞ்சிறந்த தீயாள்.

(இ - ள்.) தீயவையாவையினுஞ் சிறந்த தீயாள் - கொடியவை யனைத்தினுஞ்சிறந்த கொடியவளாகிய கைகேசி, ஏயவரங்களிரண்டில்-பொருந்திய வரங்களிரண்டில், ஒன்றினால் என்சேயரசாள்வது - ஒன்றால் என் மகனாகிய பரதனரசாளல், ஒன்றால் சீதை கொண்கன் போய்வனமாள்வது - சனகிக்குக் கணவனாகிய சீராமன் ஒன்றால் வனம் போயாளல், என புகன்று நின்றாள் - என்றுசொல்லி நின்றனள்.—எ-று.

தான் சாரதியாக நிற்புழிப்பெற்றவையாகலின் 'ஏயவரங்கள்' என்றும். லீலாவிபூதிக்குத்தலைவியாகலின்சீதைமணவாளன் நாடாளவேண்டும், அவ்வாறன்மையான் அவன்'போய்வனமாள்வது'என்றும், அரசனுக்குடனின்று அன்புசெய்தலு மறஞ்செய்தலுங் கற்புடையாட்கிலக்கணமாகப் பண்பும்பயனுமல்லாமை யேற்கொண்டொழுகலின் 'தீயவையாவையினுஞ் சிறந்ததீயாள்' என்றுங் கூறினர். யாவையினு மென்புழிச்சாரியை பெறும்வழிச்சாரியை தவிர்ந்து நின்றது; * "பலவுடன்" என்புழிப்போல. இரண்டிலென்புழி ஏழாவது கூட்டிப்பிரித்தற் பொருண்மையின் வந்தது. யாவையினு மென்புழியுமது. ஒன்று, சேய் என்பன ஆகுபெயர்கள். இதனாற் கைகேசி அரசனுக் கவ்வரங்க ளிவையென் றமையுணர்த்தப்பட்டது. (ய)

(1) நாக மெனுங்கொடி யாடனாவி னீந்த
சோகவி டந்தொட ரத்துணுக்க மெய்தா
ஆகம டங்கலும் வெந்தழிந்த ராவின்
வேகம டங்கிய வேழமென்ன வீழ்ந்தான்.

(இ - ள்.) நாகமெனுங் கொடியாள் தனாவினீந்த - பாம்பெனப்படும் கொடியவளாகிய கைகேசி நாவினளித்த, சோகவிடம் தொடர-புத்திரசோகமெனும் விடந்தொடர்ந்ததனால், துணுக்கமெய்தா - நடுக்கமடைந்து, ஆகமடங்கலும் வெந்தழிந்து - உடன்முழுதும் வெந்தழிந்து, அராவின் வேகமடங்கிய வேழமென்ன வீழ்ந்தான் - பாம்பான் வேகங்கெட்ட யானைபோல வீழ்ந்தனன்.—

தன்னைப் பாலூட்டி வளர்த்தானையே கொல்லும் பாம்பேபோற் றன்னை மணந்தானையே கொல்லத்துணிந்தமையான் 'நாகமெனுங் கொடியாள், என்றும், அவள்பெற்ற வரங்கள் சொன்னிகழ்ச்சியால் ஆகலின் அச்சொல்லாற் றுயருறுதலை 'நாவினீந்தசோகவிடம்' என்றும், அச்சோகந் தலைக்கெய்தியிறந்தாலொப்ப வீழ்தலின் 'ஆகமடங்கலும் வெந்தழிந்தராவின் வேகமடங்கிய வேழமென்ன வீழ்ந்தான்' என்றும் உவமைமுகத்தாற்கூறினர். (கக)

* திருமுருகாற்றுப்படை, வரி-கூச.

(2) பூதல முற்றத னிற்புரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யாவர்சொல்ல வல்லார்
வேதனை முற்றிட வெந்துவெந்து கொல்லன்
ஊதுலை யிற்கன லென்னவெய்து யிர்த்தான்.

(இ - ள்.) பூதலமுற்ற தனிற் புரண்ட மன்னன் - பூமியையடைந்து அதிற்புரண்டவரசன், மாதுயரத்தினை யாவர் சொல்லவல்லார்-பெருந்துயரத்தை யெவரேசொல்லவல்லவர், வேதனை முற்றிடவெந்துவெந்து-துன்பமுதிர மிகநொந்து, கொல்லன் ஊது உலையின் - கொல்லனது ஊதுகின்ற உலையின்கண், கனலென்ன வெய்துயிர்த்தான் - தீயேபோல நெட்டுயிர்ப்பெறிந்தான்.—

இது கவிக்கூற்று. உலையிற் கனலடங்கி நின்று மேற்கிளர்வதுபோலுந் துயரமடங்கி நின்று மேலோங்கலின் அதனையே யுவமித்தார். இது சாக்காட்டையொத்ததாகலின் 'மாதுயரம்' என்றதென்க. அடுக்கு மிகுதிப்பொருளது. (கஉ)

(3) உலர்ந்தது நாவுயி ரோடலுற்ற துள்ளம்
புலர்ந்தது கண்கள் பொடித்தபொங்கு சோரி
சலந்தலை மிக்கது தக்கதென்கொ லென்றென்
றலந்தலை யுற்ற வரும்புலன்க ளைந்தும்.

(இ - ள்.) நாவுலர்ந்தது - நாவறண்டது, உயிரோடலுற்றது-உயிர்போகலுற்றது, உள்ளம் புலர்ந்தது - உள்ளம் வாடிற்று, கண்கள் பொங்குசோரி பொடித்த -கண்கள் மிக்க வுதிரம் சிந்தின, சலம் தலைமிக்கது-துன்பமிக்கது, தக்கது என் என்று என்று - செயத்தக்கது யாதென்று நினைந்து, அரும்புலன் களைந்தும் அலந்தலையுற்ற-ஐம்புலன்களும் கலக்க மிக்கன.—

இங்கு அரசனிருந்த நிலைமையை யுணர்த்துவான் நாவறண்டது முதலியன வுடன் கூறியவாறென்க. அலந்தலை-ஒருசொல். புலன்களைந்தாவன-சத்தம் பரிசம் உருவம் இரதம் கந்தமென்பன; உம்மைமுற்று. புலன்களைந்துந் தத்தநெறியினின்றுங் கலங்குதல் சாக்காடெய்துமமையத்தென்க. அடுக்கு இடைவிடாமைப்பொருளது. அலந்தலையுற்றதென்பதனை* "மணிநீலகண்டத்தலந்தலைக்கு" எனப் பிறர்கூறலானுமுணர்க. (கங)

(4) மேவி நிலத்தி லிருக்குநிற்கும் வீழும்
ஓவிய மென்ன வுயிர்ப்படங்கி யோயும்
பாவியை யுற்றெதிர் பற்றியெற்ற வெண்ணும்
ஆவி பதைக்க வலக்கணெய்து நின்றான்.

* பொன்வண்ணத்தந்தாதி, செ-கரு.

(இ-ள்.) ஆவிபதைக்க வலக்கணெய்துகின்றான்-உயிர்பதைக்கத் துன்பமடைகின்ற அரசன், மேவிநிலத்திலிருக்கும் நிற்கும் வீழும்-நிலத்திற்பொருந்தியிருப்பான் நிற்பான் விழுவான், ஓவியமென்ன உயிர்ப்பு அடங்கியோயும்-பதுமைபோல உயிர்ப்படங்கி யோய்வான், பாவியையுற்று எதிர்பற்றி எற்ற எண்ணும் - பாவியாகிய கைகேசியைப்பிடித்து எதிரின்மோத வெண்ணுவான்.—

அசைவற்றிருத்தலைக் கூறவந்தவர் உவமைமுகத்தான் 'ஓவியமென்னவுயிர்ப்படங்கியோயும்' என்றும், தன்னைக் கரவின்கண் வரம்பெற்று வருத்தமுறச் செய்தலின் 'பாவியையுற்றெதிர்பற்றி யெற்றவெண்ணும்' என்றுங் கூறினார். அலக்கண்-துன்பம். தன்கருத்தின்வழி நில்லாமையின் 'பாவி' என்றார். எய்துகின்றான் இருக்கும்,நிற்கும், வீழும், ஓயும், எண்ணுமென வினைமுடிக்க. (கச)

(5) பெண்ணென வுற்ற பெரும்பழிக்கு நாணும்
உண்ணிறை வெப்பொ டுயிர்த்துலாவி வாழும்
கண்ணினி னோக்கு மயர்க்குமிக்க கைவேல்
புண்ணுழை தைக்க வுழைக்குமானை போல்வான்.

(இ - ள்.) கைவேல் மிக்க புண்ணுழைதைக்க வுழைக்கு மானைபோல்வான் - சிறியவேல் மிகுந்த புண்ணின்கண்பாய வருந்தும் யானைபோல்வானாகிய அரசன், பெண் என உற்ற பெரும்பழிக்கு நாணும் - பெண்ணென வந்தடைந்தபெரும்பழிக்கு நாணங்கொள்வன், உள்நிறை வெப்பொடுயிர்த்து உலாவிவாழும் - உள்ளே நிறைந்த வெப்பினோ டுயிர்ப்பெறிந் துலாவிவாழ்வான், கண்ணினினோக்கும் - கண்ணாற்பார்ப்பான், மயர்க்கும்-மயங்குவான்.

தான் கொடுத்த வரம் தன்னை வருத்துதலாற் 'கைவேல் புண்ணுழை தைக்க' என்றும், தான் பெருமிதத்தான் யானைபோல்வானாகலான் 'உழைக்குமானைபோல்வான்' என்றும் உவமைமுகத்தாற் கூறினார். இவ்வைந்து செய்யுளானும் அரசன் எய்திய துயரமெடுத்துரைக்கப்பட்டது. (கரு)

(1) கம்ப நெடுங்களி யானையன்ன மன்னன்
வெம்பி விழுந்தெழும் விம்மல்கண்டு வெய்துற்
றும்பர் நடுங்கின ரூழிபேர்வ தொத்த
தம்பன கண்ணவ ளுள்ளமன்ன தேயால்.

(இ-ள்.) கம்பநெடுங்களியானை யன்னமன்னன்-கம்பத்திற் கட்டப்பட்ட மதக்களிப்பினையுடைய யானைபோன்ற அரசன், வெம்பிவிழுந்து எழும் விம்மல் கண்டுவெய்துற்று உம்பர் நடுங்கினர் - வருந்தியெழுகின்ற துன்பங் கண்டு நெட்டுயிர்ப்பெறிந்து தேவரும் நடுக்கமடைந்தனர், ஊழிபேர்வதொத்தது - ஊழிகாலம் பெயர்வதொத்திருந்தது; அம்பன கண்ணவ ளுள்ள மன்னதே-கணைபோலுங் கண்ணையுடைய கைகேசி நெஞ்சமு மத்தன்மையதே.

தங்களிறைவனுக்குத் தாதையாகலின் அவன் வருந்துவதைக்கண்டு தேவர்கள் வருத்தமுறுதலான் "உம்பர்நடுங்கினர்" என்றும், உலகமும் வருந்துதலான் 'ஊழிபேர்வதொத்தது' என்றும் கூறினர். 'அம்பனகண்ணவள்' என்றார் அவள் அரசனைவருத்தினமையானென்க. (கசு)

(2) அஞ்சில ளையன தல்லல்கண்டு முள்ளம்
நஞ்சில ளுணில ளென்னநாண மாமால்
வஞ்சனை பண்டு மடந்தைவேட மென்றே
தஞ்செ்ன மாதனை யுள்ளலார்க டக்கோர்.

(இ - ள்.) ஐயனதல்லல் கண்டும் அஞ்சிலள் உள்ளம் நஞ்சிலள்-தயரதனது துன்பங்கண்டும் பயப்படமாட்டாளாகிய கைகேசி வருந்தாள், நாணிலள் என்ன நாணமாம் - நாணங்கொள்ளாள் யாது நாணமெனப்படும், வஞ்சனை பண்டு மடந்தை வேடமென்று - (ஆதலான்) வஞ்சகமென்பது முன்னர் பெண்வடிவமென்று, தஞ்சமெனமாதனை தக்கோர் உள்ளலார்கள் - களைகணுவாரென அம்மடந்தையைப் பெரியோர் நினைக்கின்றிலர்.—எ-று.

மேலிரண்டுசெய்யுளும் கவிக்கூற்று. கற்புடையாளஞ்சாமலும் உள்ளனையாமலும் இருந்தமையானும், நாண மகன்றிருந்தமையானும் 'இது என்ன நாணம்' என்றார் ; நாணிற் சிறந்தது வேறின்மையினென்க. இதனை * "உயிரிற்பழகியுடன்வளர்ந்த - வருநாண்" என்றதனானு முணர்க. வேடமென்றது வடமொழிச்சிதைவு. தஞ்சமென்றது ஈறுதொகுக்கப்பட்டது. இறைவனை மகனாகப்பெற்றமைநோக்கி 'ஐயன்' என்றதென்க. (கஎ)

இந்நிலை நின்றவ டன்னையெய்த நோக்கி
நெய்ந்நிலை வேலவ னீதிசைத்த துண்டோ
பொய்ந்நிலை யோர்கள் புணர்த்தவஞ்ச முண்டோ
அந்நிலை சொல்லென தாணையுண்மை யென்றான்.

(இ - ள்.) இந்நிலை நின்றவுள் தன்னை எய்தநோக்கி - இந்த நிலைமையில் நின்ற கைகேசியைப் பொருந்தநோக்கி, நெய் நிலை வேலவன் நீ திசைத்தது ண்டோ - நெய்தடவிய வேலையுடைய அரசன் நீ திகைத்ததுளதோ, பொய்நிலையோர்கள் புணர்த்தவஞ்சமுண்டோ - பொய்ச்சார்புடையோ ரறிவித்த வஞ்சனையுண்டோ, அந்நிலைசொல் எனது ஆணை உண்மையென்றான் - அந்நிலை கூறு என் ஆணை யுண்மையானென்றனன்.—எ-று.

ஒகாரமையப்பொருளன. நீமனமாறுபட்டுழைத்ததேயோ, அல்லது பொய்ந்நிலையோர் புணர்த்திய வஞ்சமேயோ எனக்குண்மை கூறுகவென்பான் 'அந்நிலைசொல்லென தாணையுண்மையென்றான்' என்றதென்க. மன்னன் பிறனைவருந்தும் வேலிங்குவாளா இருக்கின்றமையான் 'நெய்ந்நிலைவேல

* திருக்கோவையார். செ-சச.

வன்' என்றார். இந்நிலையென்றது 'அஞ்சிலள் நஞ்சிலள் நாணிலள்' என் பவற்றை. 'எனதாணையுண்மை' என்றது கற்புடைய மாதரார்க்குக் கணவனையன்றிக் கடவுளின்மையானென்க. இதனால் தசரதன் கைகேசியை நினக்கு நேர்ந்தமை கூறுகவென வினவிய துணர்த்தப்பட்டது. (கஅ)

திசைத்தது மில்லை யெனக்குவந்து தீயோர்
இசைத்தது மில்லைமு னீந்தவிவ்வ ரங்கள்
குசைப்பரி யோய்தரி னின்றுகொள்வெ னன்றேல்
வசைத்திற னின்வயின் வைத்துமாள்வெ னென்றாள்.

(இ - ள்.) திசைத்ததுமில்லை-மயங்கியதுமில்லை, எனக்குவந்து தீயோர் இசைத்ததுமில்லை - எனக்கு வந்து தீயவர் கூறியதுமில்லை, முன் ஈந்த இவ் வரங்கள் - முன் நீ கொடுத்த இவ்வரங்களை, குசை பரியோய் - பிடர்மயிரையுடைய குதிரையுடையானே! தரின் இன்று கொள்வென்-கொடுத்தால் இன்றுபெறுவேன், அன்றேல் வசைதிறன் நின் வயின் வைத்து மாள்வென் என்றாள் - அல்லதேல் வசையின் வகையை நின்பால் வைத்து இறப்பேனென்றனள்.—எ-று.

'நீ திசைத்ததுண்டோ' என்றதற்குத் 'திசைத்ததுமில்லை' என்றும், 'பொய்ந்நிலையோர்கள் புணர்த்த வஞ்சமுண்டோ' என்றதற்குத் 'தீயோர்வந் திசைத்ததுமில்லை' என்றும், நீ கொடுத்தவரங்களை நல்காயேல் 'வசைத்திற னின்வயின்வைத்து மாள்வென்' என்றுங் கூறினாள்.' இதனால் கைகேசி மறுமொழிகூறிய துணர்த்தப்பட்டது. 'குசைப்பரியோய்' என்றது சாதியடை. இதனால் வரந்தந்தகால முணர்த்தப்பட்டது. (கக)

(1) இந்த நெடுஞ்சொலவ் வேழைகூறு முன்னே
வெந்த கொடும்புணில் வேனுழைந்த தொப்பச்
சிந்தை திரிந்து திகைத்தயர்ந்து வீழ்ந்தான்
மைந்த னலாதுயிர் வேறிலாத மன்னன்.

(இ - ள்.) இந்த நெடுஞ்சொல் அவ்வேழை கூறுமுன் - இந்தக் கொடுமொழி அப்பேதைசொல்லுமுன், வெந்த கொடு புணில் வேல் நுழைந்ததொப்ப - வெந்த கொடியபுண்ணில் வேல் நுழைந்தாற்போல, மைந்தன் அலாது உயிர்வேறு இலாத மன்னன் - மகனையல்லது உயிரெனவேறறியாத அரசன், சிந்தைதிரிந்து திகைத்தயர்ந்து வீழ்ந்தான்-மனமாறுபட்டு மயங்கியயர்ந்து விழுந்தனன்.—

சிராமனே தன்னுயிரெனக் கருதுபவனாகலின் 'மைந்தனல்லாதுயிர்வேறிலாத மன்னன்' என்றும், அவள் கூறிய சொற்கேட்டாங்குக் கழிபெருந்துன்பமெய்துதலி னதனை யுவமமுகத்தால் 'வெந்த கொடும்புணில் வேனுழைந்தவொப்ப' என்றுங் கூறினார். (உ0)

(2) ஆகொடி யாயெனு மாவிகாலு மந்தோ
ஓகொடி தேயற மென்னுமுண்மை யொன்றும்
சாகவெ ளுவெழு மெய்தளாடி வீழும்
மாகமு நாகமு மண்ணும் வென்ற வாளான்.

(இ - ள்.) மாகமும் நாகமும் மண்ணும் வென்றவாளான் - விண்ணுலகமும் பாதலவுலகமும் மண்ணுலகமுமாகிய மும்மையுலகமும் வென்றவாளினையுடைய தயரதன், ஆ கொடியாயெனும் -ஆகொடியாளேயென்பான், ஆவிகாலும் - உயிர் நீங்குகின்றது, அந்தோ அறம் ஓ கொடிதேயெனும் - ஐயோ ஓ கெட்டதே யறமென்பான், உண்மை ஒன்றும் சாகவெனுவெழும்- மெய்ம்மையென்றும் இறக்கவென்று வெழுவான், மெய் தளாடி வீழும்-உடம்பு சாய்ந்து விழுவான்.—

செய்யுமென்னு முற்று 'ஆவிகாலும்' என்புழி நிகழ்காலத்தில் வந்தது. ஆகார மோகாரமிரண்டு மிரக்கப்பொருளன. ஒன்றும் என்புழி உம்மை இழிவுசிறப்பு, 'மாகமுநாகமு மண்ணும் வென்றவாளான்' என்ருர் 'அந்தரத் தளவுநின்றளிக்குமாணையான்' என முற்கூறியதை வற்புறுத்தற்கு. மாகம் வடமொழிச்சிதைவு. மனைவியாகவந்து வாய்த்தும் தனக்குக் கேடு சூழ்ந்தாளாகலின் 'ஆகொடியாயெனும்' என்றும், அதன் காரியமுயிர் நீக்கமாகலின் 'ஆவிகாலும்' என்றும், அறத்தின்பயனிதுவோ வென்பான் 'ஓகொடிதேயறம்' என்றும், யான் கொடுத்த வரமேயென்னைக் கெடுத்ததென்பான் 'சாகவெனுவெழும்' என்றும், 'மெய்தளாடிவீழும்' என்றும், உலகமுழுதும் வென்ருனுமிக்கழி பெருந்துன்பமெய்துதலான் 'மாகமுநாகமுமண்ணும்வென்றவாளான்' என்றுங் கூறினர். (உக)

(3) நாரிய ரில்லையிஞ் ஞாலமேழு மென்னக்
கூரிய வாள்கொடு கொன்றுநீக்கி யானும்
பூரிய ரெண்ணிடை வீழ்வெனென்று பொங்கும்
வீரியர் வீரம் விழுங்கிநின்ற வேலான்.

(இ - ள்.) வீரியர் வீரம் விழுங்கிநின்ற வேலான் - வீரர் வீரத்தை வெற்றிகொண்ட வேலையுடைய அரசன், நாரியரில்லை இ ஞாலமேழு மென்ன கூரிய வாள்கொண்டு கொன்று நீக்கி - மாதரில்லை இவ்வேழுலகத்தினு மென்னக் கூரிய வாளால் கொன்று களைந்து, யானும் பூரியர் எண்ணிடைவீழ்வெனென்று பொங்கும் - யானுங் கீழோரெண்ணிக்கையில் விழுவேனென்று சினங்கொள்வான்.—

வீரரென்பார் வீரமென்பதனை வென்றதிறலினை அவனது வேலின்கணேற்றி 'வீரியர் வீரம் விழுங்கிநின்ற வேலான்' என்றதென்க. பெண்ணல் விழுமமெய்தியமையான் அவளைக்கொல்லத் துணிந்தமைபற்றி 'நாரியரில்லையிஞ்ஞாலமேழு மென்னக்கூரிய வாள்கொடுகொன்று நீக்கி' என்றும், அத

றற் பழிபாவமொருங்கெய்தலின் 'பூரியரெண்ணிடை வீழ்வெனென்று பொங்கும்' என்றுங் கூறினர். உம்மை முற்று. (உஉ)

(4) கையொடு கையைப் புடைக்கும்வாய் கடிக்கும்
பொய்யுரை குற்ற மெனப்புழுங்கி வாடும்
நெய்யெரி யுற்றென நெஞ்சழிந்து சோரும்
வையக முற்று நடந்தவாய்மை மன்னன்.

(இ - ள்.) வையகமுற்று நடந்த வாய்மை மன்னன் - உலகமுழுதுஞ் சென்ற மெய்மையையுடைய அரசன், கையொடு கையை புடைக்கும் - கையொடுகையை மோதுவான், வாய்கடிக்கும் - வாயைக் கடிப்பான், பொய் உரை குற்றம் என புழுங்கிவாடும் - பொய்மொழி பாவந்தருமென்று மனம் புழுங்கிவருந்துவான், நெய் எரி உற்றால் என நெஞ்சழிந்து சோரும்-நெய்யில் தீப்பட்டாற்போல மனமுருகித் தளர்வான்.—

நெய் எரியடையுந்தோறு முருகுதல்போல நினைக்குந்தோறு மனமுருகுதலான் 'நெய்யெரியுற்றென நெஞ்சழிந்துசோரும்' என்றும், தன்வாய்மையுலகமுழுதுஞ் சென்றதாகலின் 'வையகமுற்று நடந்த வாய்மைமன்னன்' என்றுங் கூறினர். கைபுடைத்தல், வாய்கடித்தல், புழுங்கிவாடல், நெஞ்சழிந்து சோரல் ஆகிய இவை சோகத்தானென்க. (உரு)

(5) ஒறுப்பினு மந்தர முண்மையொன்று மோவா
மறுப்பினு மந்தர மென்றுவாய்மை மன்னன்
பொறுப்பினு மிந்நிலை போகிலாளை வாளா
லிறுப்பினு மாவ திரப்பதென் றெழுந்தான்.

(இ - ள்.) வாய்மை மன்னன் - மெய்மையுடைய அரசன், ஒறுப்பினும் அந்தரம் - இவளைத் தண்டனைசெய்யினும் தீமையே விளையும், உண்மையொன்றும் ஓவாமல் மறுப்பினுமந்தரம் - மெய்மையைச் சிறிதுங் காவாமல் மறுக்கினும் தீமையேவிளையும், என்று பொறுப்பினும் இந்நிலை போகிலாளை- என்று நினைந்து பொறுக்கினும் இந்நிலையினின்றும் விலகாதாளை, வாளால் இறுப்பினும் இரப்பது ஆவதுநன்று என்று எழுந்தான்-வாளாற்கொன்று களைதலினு மிரந்துபெறுவது நன்றென்று எழுந்தனன்.—எ-று.

தண்டஞ்செய்வதனானும் மெய்மையைக் காவாமையானுந் தீமை விளையுமாகலின் * "இன்சொலினிதீன்றல் காண்பானெவன்கொலோ-வன்சொல் வழங்குவது" என்பதனான் 'இரப்பதாவது நன்றென்றெழுந்தான்' என்க. தானின்றநிலையிற் றிரியாமையான் 'இந்நிலைபோகிலாளை' என்றார். இவ்வைந்து செய்யுளானும் சோகமெய்தினமை கூறப்பட்டது. (உச)

* திருக்குறள், செ-கூகூ.

கலிநிலைத்துறை.

(1) கோன்மேற் கொண்டுங் குற்ற மகற்றிக் குறைகொண்டார்
போன்மே லுற்ற துண்டெனி னன்றும் பொறையென்னுக்
கான்மேல் வீழ்ந்தான் கந்துகொல் யானைக் களிமன்னர்
மேன்மேல் வந்து முந்தி வணங்கி மிடைதாளான்.

(இ - ள்.) கந்துகொல் யானைகளி மன்னர் மேல்மேல் வந்து முந்தி வணங்கி மிடைதாளான் - கட்டுத்தறியை முறிக்கும் மதக்களிப்பினையுடைய யானையையுடையவரசர் முற்பட்டொருவர்பின்ன ரொருவராகவந்து வணங்கி நெருங்குகின்ற தாளையுடைய அரசன், கோல்மேற்கொண்டும் - செங்கோல் கைக்கொண்டும், குற்றமகற்றிக் குறைகொண்டார்போல் - குற்றமொழித்துக் குறையை நீக்கிக்கொண்டார்போல, மேலுற்றதுண்டெனின்-மேற்பெறுவது நன்மையேயாயின், பொறை நன்றும் என்னு-பொறுமையுடைமை நன்மையாமென்று, கான்மேல் வீழ்ந்தான் - அவள் காலில் விழுந்தனன்.

அடுக்கு இடைவிடாமைப்பொருளது. அரசரெல்லாம் வணங்குஞ்செல்வமுடையானுகலின் 'மன்னர் மேல்மேல்வந்து முந்திவணங்கி மிடைதாளான்' என்றும், தான் கருதியது சித்திப்பதாயின் பொறுமைநன்றென்பான் 'நன்றும் பொறை 'என்றும்' அதன் பயனிதுவென்பான் 'கான்மேல் வீழ்ந்தான்' என்றுங் கூறினர். (உரு)

(2) கொள்ளா னின்சே யிவ்வர சன்னுன் கொண்டாலும்
நள்ளா திந்த நானில ஞாலந் தனிலென்று
முள்ளா ரெல்லா மோத வுவக்கும் புகழ்கொள்ளா
யெள்ளாநிற்கும் வன்பழி கொண்டென் பயனென்றுன்.

(இ-ள்.) இவ்வரசு நின்சேய் கொள்ளான் - இவ்வரசினை உன்மகனுகிய பரதன் கைக்கொள்ளான், கொண்டாலும் இந்த நானிலம் நள்ளாது - கைக்கொண்டாலும் இவ்வுலகத்தவர் விரும்பார், ஞாலந்தனிலென்று முள்ளார் எல்லாம் ஓதஉவக்கும் புகழ்கொள்ளாய்-உலகத்தில் என்றுமுள்ளார் யாவரும் சொல்ல மகிழும் புகழினைக் கைக்கொள்ளமாட்டாய், எள்ளாநிற்கும் வன்பழி கொண்டென்பயன் என்றுன் - அதனுல்நிந்தனைசெய்யும் வன்மையாகியபழிச்சொல்லைக்கொண்டு பயன்யாதென்றனன்.

அறிவுடையனுகலின் 'கொள்ளானின்சேய்' என்றும், அவன் கொண்டானெனினு முலகவர்விரும்பாராகலின் 'நள்ளாதிந்த நானிலம்' என்றும், புகழுடம்புடையாரோ என்று மிருப்பாராகலின்' ஞாலந்தனிலென்று முள்ளார்' என்றும், அவர் மகிழமாட்டாமையின் 'ஓதவுவக்கும் புகழ்கொள்ளாய்' என்றும், அதனுற் பழியேயல்லது பயனில்லாமையான் 'எள்ளாநிற்கும் வன்பழி கொண்டென் பயனென்றுன்' என்றுங் கூறினர். (உசு)

(3) வானோர் கொள்ளார் மண்ணவ ருய்யா ரினிமற்றென்
ஏனோர் செய்கை யாரொடு நீயிவ் வரசாள்வாய்
யானே சொல்லக் கொள்ள விசைந்தான் முறையாலே
தானே நல்கு முன்மக னுக்குந் தரையென்றான்.

(இ-ள்.) வானோர் கொள்ளார்-தேவர்களொப்பார், மண்ணவருய்யார்-மண்ணுலகத்தார் பிழையார், இனி மற்றென் ஏனோர் செய்கை-ஏனையோரா கிய நாகலோகத்தார் செய்கை இனியாது, (இவ்வாறாயின்) யாரொடும் நீயிவ் வரசாள்வாய்-எவருடனிருந்திவ்வரசினையாண்டுவருவாய்,யானே சொல்லகொள்ள விசைந்தான்-யானே வேண்டிக்கொள்ள மேற்கொள்ள விசைந்தனன், உன்மகனுக்குந் தரைதானே முறையாலே தரும் என்றான் - உன்மகனாகிய பரதனுக்கும் பூமியைத்தானே அம்முறையாற் கொடுப்பனென்றனன்.—

யான் வேண்ட விசைந்தவன் நீ கேட்கவுந் தருவானென்னுந் துணிபான் 'முறையாலே தானேநல்குமுன் மகனுக்குந்தரை' என்றதென்க. இது முறையன்றென்பார் 'வானோர்கொள்ளார்' என்றும், இவ்வுலகத்தவருக் கவனுயிராதலான் 'மண்ணவருய்யார்' என்றும், ஏனோர்செய்கை சொல்லவேண்டாமையின் 'இனிமற்றென் ஏனோர்செய்கை' என்றுங் கூறினார். 'மண்ணவருய்யார்' என்றது 'உண்ணுநீரினு முயிரினுமவனையே யுவப்பார்' என முற்கூறியதனை வற்புறுத்தற்கு; 'உண்ணுநீர்' என்றது ஆசமனமும், 'உயிர்' என்றது பிராணாயாமமுமென்க. அவற்றிற்குரிய மனு அவன் றிருநாமமேயாகலி னங்ஙனங் கூறினார். (உஎ)

(4) கண்ணே வேண்டு மென்னினு மீயக் கடவேனென்
உண்ணே ராவி வேண்டினு மின்றே யுனதன்றே
பெண்ணே வண்மைக் கைகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொண்ணீ மற்றைய தொன்றும் மறவென்றான்.

(இ-ள்.) கண்ணே வேண்டுமென்னினு மீயக்கடவேன் - கண்ணையே பெற வேண்டினுங் கொடுக்க விசைவேன், என் உள் நேர் ஆவிவேண்டினும் இன்றே உனதன்றே - என்னுட்பொருந்திய உயிரினை வேண்டினு மிப்போதே யுனதேயாம், பெண்ணே - பெண்ணே, வண்மை கைகயன் மானே - கொடைத்தொழிலையுடைய கேகயநாட்டாருடைய அரசனாகிய உதாசித்தென்பவன் மகளே, பெறுவாயேல் - பெறவேண்டுவையாயின், மண்ணேகொள் - மண்ணையே பெற்றுக்கொள், மற்றையதொன்றும் மறவென்றான் - மற்றையதொன்றைப் பெறுதலு மறவென்றனன்.—

கண்ணிற்சிறந்த வுறுப்பில்லையாகலிற் 'கண்ணேவேண்டுமென்னினு மீயக்கடவேன்' என்றும், அதனினுஞ் சிறந்த வுயிரையே வேண்டினுந் தருவேனென்பான் 'உண்ணேராவிவேண்டினு மின்றேயுனதன்றே' என்றும், பெண்ணிற்சிறந்தவளாகலானும், கைகயன் மகளாகலானும் 'பெண்ணே கைகயன்

மானே' என்றும், அவனீகையிற் சிறந்தவனாகலின் 'வண்மை' என்றடைதந்தும், கொடையாளி மகளாகலின்முறைதிறம்பி அரசை விரும்பாதொழிவை, ஒருவாறு விரும்புவையேல் 'மண்ணேகொண்ணீ' என்றும், மற்றொன்றை வாயாற்கூறி நாடன் முறையன்றென்பான் 'மற்றையதொன்றுமற' என்றுங் கூறினர். (உஅ)

(5) வாய்தந் தேனென் றேனினி யானே வதுமாற்றேன்
நோய்தந் தென்னை நோவன செய்து நுவலாதே
தாய்தந் தென்னத் தன்னை யிரந்தாற் றழல்வெங்கண்
பேய்தந் தீயு நீயிது செய்தாற் பிழையாமோ.

(இ-ள்.) வாய்தந்தேனென்றேன்-வாயால் கொடுத்தேனென்று சொல்லிவிட்டேன், இனியானே அதுமாற்றேன்-இனியானே வதனைத்தடுக்கேன், நோய்தந்து-நோயைவிளைவித்து, என்னை நோவனசெய்து நுவலாது-என்னை நோவத்தக்கமொழிகளைச் சொல்லிப்போகாது, தாய்தந்தையென்ன - தாயும் தந்தையு மென்ன, தன்னை இரந்தால்-தன்னை வேண்டியிரந்தால், தழல்வெங்கண் - நெருப்பினையொத்தகொடுங்கண்ணையுடைய, பேய்தந்துஈயும் - பேயும்விரும்பிக் கொடுக்கும், நீயிதுசெய்தால் பிழையாமோ - நீ யிதுசெய்வையாயின் குற்றமாமோ.—எ-று.

தாய்தந்தையென்றமை தாய்தந்தென நின்றது. தந்தீயுமொருபொருட்பன்மொழி. பேயுமென்புழி இழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. ஓகாரமெதிர்மறை. வாய்மைதவறேனென்பான் 'வாய்தந்தேனென்றேனினியானே வதுமாற்றேன்' என்றான். நீ பல்காலென்னொடும் பயின்றுயாதலி னீசெய்வது கடனென்பான் 'நீயிதுசெய்தாற் பிழையாமோ' என்றதென்க. இவ்வைந்து செய்யுளானும் கைகேசியை அரசன் வேண்டிய துணர்த்தப்பட்டது. (உக)

இன்னே யின்னே பன்னி யிரந்தா னிகல்வேந்தன்
தன்னே ரில்லாத் தீயவளுள்ளந் தடுமாறாள்
முன்னே தந்தா யிவ்வர நல்காய் முனிவாயேல்
என்னே மன்ன யாருளர் வாய்மைக் கினியென்றாள்.

(இ-ள்.) இகல்வேந்தன் - வலிமையுடைய அரசன், இன்னே இன்னே பன்னியிரந்தான்-இவ்வாறு இவ்வாறு சொல்லியிரந்தனன், தன் நேர் இல்லாத தீயவள்-தன்னையொப்பாரில்லாத கொடியாள், உள்ளந்தடுமாறாள்-உள்ளந் தடுமாற்றமடையாது, முன்னே இவ்வரந்தந்தாய்-முன்னே இவ்வரங்களையளித்தனை, நல்காய்-இப்போதுகொடாமல், முனிவாயேல் - சினங்கொள்வையேல், மன்ன-அரசனே, என்-இதுவென், வாய்மைக்கினி யாருளர் என்றாள்-மெய்ம்மைமொழிக்கினி யாவரோயுள்ளார் என்றனள்.—எ-று

அடுக்குப்பன்மை. கணவனுயிர்க் குறுகண் செய்பவளாதலானும், அவனது துன்பங்கண்டுழியு மிரங்காதாளாகலானும் 'தன்னேரில்லாத்தீயவள்' என்

றும், தானின்ற நிலையிற்றிரியாமையின் 'உள்ளந்தமொருள்,என்றும், இன்று தவாமற்றடுப்பது தக்கதன்றென்பான் 'நல்காய்முனிவாயேல்' என்றும், நின்னினும் வாய்மையுடையார் யாவரென்பாள் 'யாருளர்வாய்மைக்கினியென்ருள்' என்றுங் கூறினர். இதனுற் கைகேசி அரசனை யிழித்துக்கூறிய துணர்த்தப்பட்டது. (கூ0)

(1) அச்சொற் கேளா வாவி புழுங்கா வயர்கின்ருன்
பொய்ச்சொற் கேளா வாய்மொழி மன்னன் பொறைகூர
நச்சுத் தீயே பெண்ணுரு வன்ருே வெனநாணு
முச்சத் தார்போற் பின்னு மிருந்தே மொழிகின்ருன்.

(இ-ள்,) அச்சொல்கேளா - அம்மொழிகேட்டு, ஆவிபுழுங்கா - நெடுமூச்செறிந்து, அயர்கின்ருன் - வருந்துகின்றவனுகிய, பொய்சொல்கேளா வாய்மொழிமன்னன் பொறைகூர - பொய்மொழிபேசியறியாத வாய்மைமொழியையுடைய தயரதன்பொறுமைமிக, நச்சுதீயே பெண்ணுருவன்ருேவெனநாணு - பெண்வடிவமென்பது விடாக்கினியேயன்ருேவென்று நாணமுற்று, முச்சத்தார்போல் பின்னுமிருந்தேமொழிகின்ருன் - செத்தார்போலப் பின்னுமிருந்து கூறுகின்றனன்.—

'அச்சொல்,' என்றது 'யாருளர் வாய்மைக்கினியென்ருன்' என்பதனை. அதனைக் கேட்டுப் பொருமையின் 'அச்சொற்கேளாவாவிபுழுங்காவயர்கின்ருன்' என்றும், இது பொய்ம்மைமொழி பேசியறியாமையான் வருந்துவதனுற் 'பொய்ச்சொற்கேளாவாய்மொழிமன்னன் பொறைகூர' என்றும், விடமுள்ளேசென்றெரிப்பதுபோன்று தன்னை யவளவ்வாறு செய்தலின் 'நச்சுத்தீயே பெண்ணுரு' என்றும், சாக்காட்டையொப்பதாகலின்'முச்சத்தாற்போல்' என்றுங் கூறினர். முச்சம் - சாதல். முச்சற்ருரெனக் கொண்டுரைப்பாருமுளர்; அதுபொருள் சிறவாமையறிக. (கூக)

(2) நின்மக னுள்வான் நீயினி தாள்வாய் நிலமெல்லாம்
உன்வய மாமே யாளுதி தந்தே னுரைகுன்றேன்
என்மக னென்க ணென்னுயி ரெல்லா வுயிர்கட்கும்
நன்மக னிந்த நாடிற வாமை நயவென்ருன்.

(இ - ள்.) நிலமெல்லாம் நின்மகனுள்வான் - நிலமுழுதும் உன்மகனுண்டுவருவான், நீயினிதாள்வாய் - நீயுமினிதாக ஆளுகைசெய்வாய், உன்வயமாமே - உன்வசப்படுமே, தந்தேன்ஆளுதி - கொடுத்தேவிட்டேன் ஆண்டுவா, உரைகுன்றேன் - சொல்தவறேன். (ஆயினும்) என்மகன் - என்மகனும், என்கண் - என்கண்போல்வானும், என்னுயிர்-என்னுயிர்போல்வானும், எல்லாவுயிர்கட்கும் நன்மகன்-எல்லாஉயிர்கட்கு நல்லோனுமாகிய சீராமன், இந்த நாடிறவாமை நயவென்ருன் - இந்நாட்டைக் கடவாதிருக்க விரும்பியருளென்றனன்.—

நீபெற்ற வரங்களிரண்டினென்றாற் பரதற்கரசாதலின் 'நின்மகனுள்வான்' என்றும், அவனைப்பெற்றவளாகலின் 'நீயினிதாள்வாய்' என்றும், அதனால் நிலமுழுது முன்வயமாதலின் 'நிலமெல்லாமுன்வயமாமே' என்றும், நீ என் வரத்தா லெய்தப்பெற்றமையிற் பொய்சொலற் குடன்படேன் என்பான் 'ஆளுதிதந்தேனுரைகுன்றேன்' என்றும், தானருந்தவத்தாற் பெற்றமையாற் சிராமனை 'என்மகன்' என்றும், தன் கண்ணைப்போலெனைத்தும் விளக்கலின் 'என்கண்' என்றும், உயிரேபோற் றன்னை யியக்கலின் 'என்னுயிர்' என்றும், எல்லாவுயிர்க்கு நன்னெறி காட்டுபவனாகலின் 'எல்லாவுயிர்கட்கு நன் மகன்' என்றும், அவன் காடுபோகாமையே வேண்டலின் 'நாடிறவாமைநய' என்றுங் கூறினார். (௬௨)

(3) மெய்யே யென்றன் வேரற நூறும் வினைநோக்கி
நையா நின்றே னாவு முலர்ந்தே னளினம்போற்
கையா னின்றென் கண்ணெதிர் நின்றுங் கழிவானேல்
உய்யே னங்கா யுன்னப யம்மென் னுயிரென்றான்.

(இ - ள்.) மெய்யே என்றன் வேரறநூறும் வினைநோக்கி நையாநின்றேன் - உண்மையாக என் சுற்றத்துடன் கழியும் வினையையெண்ணி வருந்துகின்றேன், நாவுமுலர்ந்தேன்-நாவும் வறண்டேன், நளினம்போல்கையான்-தாமரைமலர்போலுங் கையையுடைய சிராமன், என்கண் எதிர்நின்றும் கழிவானேல்-என்கண்ணெதிரினின்று நீங்குவனேயாயின், நங்காயுய்யேன்-பெண்ணேபிழையேன், என்னுயிர் உன்னபயமென்றான் - என்னுயிர் உன்னடைக்கலப் பொருளென்றனன்.—எ-று.

வேர் ஆகுபெயர். தான்பெற்ற அரசச்செல்வத்தை மீட்டுமுதவிய கொடைச் சிறப்பினைக்கையினேற்றி 'நளினம்போல் கையான்' என்றதென்க. அவன் கண்ணெதிர் நின்றும் கழிவதுண்மையாகலின் 'உய்யேன்' என்றும், அவ்வாறாகாமற் காப்பதுன்கடனென்பான் 'உன்னபயம்மென்னுயிர்' என்றுங்கூறினார். இம்மூன்றுசெய்யுளானும் பின்னுங் கைகேசியை அரசன்வேண்டியதுணர்த்தப்பட்டது. (௬௩)

இரந்தான் சொல்லு மின்னுரை கொள்ளாண் முனிவெஞ்சாள்
மரந்தா னென்னு நெஞ்சின ளுணாள் வசைபாராள்
சரந்தா வில்லாய் தந்த வரத்தைத் தவிர்கென்றல்
உரந்தா னல்லா னல்லற மாமோ வுரையென்றாள்.

(இ - ள்.) இரந்தான் சொல்லுமின்னுரைகொள்ளாள் - இரந்து வேண்டுவோனது இன்சொல்லைக்கொள்ளாதாளும், முனிவெஞ்சாள்-கோபத்திற்குறையாதாளும், மரந்தானென்னு நெஞ்சினள் நாணாள்-மரமொத்த மனமுடையாளு நாணமிலாளும், வசைபாராள் - பழிநோக்காதாளுமாகிய கைகேசி, தந்த வரத்தை தவிர்கென்றல் - நீ கொடுத்தவரத்தைத் தவிர்கவென்று சொல்

வது, உரந்தானல்லால் - அறிவல்லாமல், நல்லறமாமோ வுரையென்றாள்-நன்மையாகிய அறச்செய்கையாமோ சொல்லென்றனள்.—எ-று.

* "மனத்தொடு வாய்மைமொழியிற் றவத்தொடு - தானஞ்செய்வாரிற் றலை" என்பவாகலின் 'தந்தவரத்தைத்தவிர்கென்றல்-உரந்தானல்லானல்லறமாமோ' என்றும், கணைமழைபொழிந்து பகைவரை வெற்றிகொள்ளு நீ சொற்பிழைத்தல் அறனெனமாட்டாமையின் 'சரந்தாவில்லாய்' என்றுங்கூறினார். இதனாற் கைகேசி கடுமொழிகூறியதுணர்த்தப்பட்டது. (௩௪)

(1) கொடியா ளின்ன கூறினள் கூறக் குலவேந்தன்
முடிசூ டாமற் காத்தலு மொய்கா னிடைமெய்யே
நெடியா னீங்க நீங்குமென் னாவி யினியென்னா
இடியே றுண்ட மால்வரை போன்மண் ணிடை வீழ்ந்தான்.

(இ - ள்.) கொடியாள் இன்ன கூறினள் - கொடியவளாகிய கைகேசி இவற்றைச்சொல்லினள், கூற குலவேந்தன் - அவ்வாறுசொல்லச் சிறந்த அரசன், நெடியான் முடிசூடாமல் - சீராமன் முடிபுனையாமல், காத்தலுமொய்கானிடை மெய்யே - தடுக்கப்படுதலும் நெருங்கிய காட்டினிடை மெய்யாகவே, நீங்க என்னாவிநீங்கும் - நீங்க என்னாவிபோய்விடும், இனி என்னா-இனியென்று, இடியேறுண்ட மால்வரைபோல் மண்ணிடை வீழ்ந்தான்-சிறந்த இடியோசை கேட்ட பெருமலைபோல் மண்ணில் விழுந்தனன்.

மால்வரை யென்பதற்கு மால்போலு நீண்ட வரையென்றதனை ‡ "மால்வரை நிவந்த சேணுயர்வெற்பின்" என்ற திருமுருகாற்றுப்படைக்கு நச்சினார்க்கினியருரையானு முணர்க. சலியாதானையுஞ் சலித்தலைச்செய்தலான் 'இடியேறுண்ட மால்வரைபோன் மண்ணிடைவீழ்ந்தான்' என உவமைமுகத்தாற் கூறினார். இது கவிக்கூற்று. (௩௫)

(2) வீழ்ந்தான் வீழா வெந்துய ரத்தின் கடல்வெள்ளத்
தாழ்ந்தா னாழா வக்கட லுக்கோர் கரைகாணான்
சூழ்ந்தாள் துன்பஞ் சொற்கொடி யாள்சொற் கொடுநெஞ்சம்
போழ்ந்தா ளுள்ளப் புன்மையை நோக்கிப் புலர்கின்றான்

(இ - ள்.) வீழ்ந்தான் - விழுந்த வரசன், வீழாவெந்துயரத்தின் கடல் வெள்ளத்தாழ்ந்தான்-விழுந்து கொடிய துன்பக்கடல்வெள்ளத்திலாழ்ந்தனன், ஆழா அக்கடலுக்கோர் கரைகாணான் - ஆழ்ந்து அக்கடலுக்கோர் கரைகாணானாகி, துன்பம் சூழ்ந்தாள் - துன்பத்தை ஆராய்ந்தாளும், சொல்கொடியாள் சொல்கொடு - சொல்லிற் கொடியாளுமாகிய கூனிசொற்கொண்டு, நெஞ்சம்போழ்ந்தாள் - மனத்தை வாட்டிய கைகேசியினது, உள்ளம் புன்மையை

* திருக்குறள், செ-உ௯௫.
‡ திருமுருகாற்றுப்படை, வரி-௧உ.

நோக்கி புலர்கின்றான்-உள்ளத்தி னற்பத்தன்மையாகிய நிலைமையைநோக்கி வருந்துகின்றனன்.—

அரசன் எவ்வகையாய இரப்புரைகூறினு மிரங்காமையான் 'உள்ளப்புன்மை' என்றும், அவன் துயர்க்கடற்குக் கரைகாணுமையாழ்ந்தமையின் 'துன்பத்தின் கடல்வெள்ளத்தாழ்ந்தானுழாவக்கடலுக்கோர் கரைகாணுன்' என்றும், பிறர்கூறிய கேட்டுத்துணிந்தவளாகலிற் 'சூழ்ந்தாள் துன்பம்' என்றும், அவள் சொல்லான் வருந்துகின்றமையிற் 'புலர்கின்றான்' என்றுங் கூறினர். (சுசு)

(3) ஒன்றா நின்ற வாருயி ரோடு முயிர்கேள்வர்
பொன்றா முன்னம் பொன்றின ரென்னும் புகழல்லால்
இன்றோர் காறு மெல்வளை யார்தம் மிறையோரைக்
கொன்றா ரில்லை கொல்லுதி யோநீ கொடியாளே.

(இ - ள்) ஒன்றாநின்ற ஆருயிரோடும்-பொருந்திநின்ற அருமையாகிய வுயிருடன், உயிர் கேள்வர் - உயிர்போன்ற கணவர், பொன்றா முன்னம்-சாகாமுன்னம், பொன்றினரென்னும் புகழல்லால் - இறந்தன ரென்னும் புகழேயன்றி, இன்றோர் காறும் - இற்றைவரையும், எல் வளையார்-விளக்கமாகிய வளையலையணிந்த மாதர், தம் இறையோரை கொன்றாரில்லை-தங்கணவரைக்கொன்றவரிலர், கொடியாளே நீ கொல்லுதியோ - கொடியவளே நீ கொல்லுகின்றனையோ.—

மாதர் தங்கணவன் இறந்துபடுவதற்குமுன் இறப்பது அறநூல் விதியென்பதும், இறப்பிற் சககமனமாதல் வேண்டுமென்பது முறையாகலின் 'உயிர்கேள்வர் பொன்றாமுன்னம் பொன்றினரென்னும் புகழல்லால்' என்றும், இதுகாறும் மாதரிற் கொன்றாரிலர், நீ கொல்லத் துணிந்தமையாற் 'கொல்லுதியோ நீ கொடியாளே' என்றுங் கூறினர். (சுஎ)

(4) ஏவம் பாரா யினமுறை நோக்கா யறமெண்ணாய்
ஆவென் பாயோ வல்லை மனத்தா லருள்கொன்றாய்
நாவம் பாலென் னாருயி ருண்டா யினிஞாலம்
பாவம் பாரா தின்னுயிர் கொள்ளப் படுகின்றாய்.

(இ - ள்.) ஏவம் பாராய் - துன்பத்தைப் பார்த்திலை, இனமுறை நோக்காய் - இனத்தின் முறையும் பார்த்திலை, அறமெண்ணாய் - தருமத்தையுங் கருதாய், ஆவென்பாயோ அல்லை - ஆவென்றிரங்குவையோ அல்லை, மனத்தால் அருள் கொன்றாய் - மனத்தி லருளைச் சிதைத்தனை, நாவம்பாலென்னாருயிருண்டாய் - நாவாகிய கணையாலென்னருமையாகிய உயிரை யழித்தனை, இனி ஞாலம் பாவம் பாராது-இனி உலகம்பாவத்தை நோக்காது, இன் உயிர் கொள்ளப்படுகின்றாய் - இனிமையாகிய உயிர் கொள்ளப்படுகின்றனை.—

ஆவென்ற திரக்கத்தின்கட் குறிப்பு. ஞாலம் ஆகுபெயர். வரம்பெற்றமை சொல்லானாகலின் 'நாவம்பால்' என்றான். எவ்வமென்பது திரிந்து நின்றது.

(5) எண்பா லோவா நாண்மட மச்ச மிவையேதம்
பூண்பா லாகக் காண்பவர் நல்லார் புகழ்பேணி
நாண்பா லோரா நங்கையர் தம்பா னணுகாரே
ஆண்பா லாரே பெண்பா லாரோ டடைவம்மா.

(இ - ள்.) எண்பால் ஒவாத - மாட்சிமையின் பகுதி நீங்காத, நாண் மடம் அச்சம் இவையே - நாணம் மடம் அச்சம் என்னு மிவற்றையே, புகழ் பேணி - புகழை விரும்பி, தம் பூண்பாலாகக் காண்பவர் நல்லார்-தம் பூணும் பகுதியையுடைய அணிகலமாக நோக்குவோர் மாதரேயாம், நாண்பால் ஓராத நங்கையர் - நாணின்பகுதியை யறியாதமாதர்கள், தம்பால் நணுகார் ஆண்பாலார் - தம்பகுதியை யடையாதார் ஆண்பாலாரேயாம், பெண்பாலாரோடடைவு - (அவ்வாறு நணுகுவாராயின் அவர்) பெண்பாலாரோடு ஒருபுடையொப்பு.—

பயிர்ப்பு - உபலக்கணத்தினாற் பெறப்பட்டது. இனைத்தென்றுணர்த்து மெண்ணு முற்றும்மையும் விகாரத்தாற்றொக்கன. * பயிர்ப்பென்றது 'பயிலாத பொருட்கண்வரு மருவருப்பு' என்பர் பேராசிரியரும். நாண் புகழ் என்பன முதனிலைத் தொழிற்பெயர்கள். நாணென்றில்லாமையான் ஆடவர் என்றும், வடிவான் மாதராகலின் 'பெண்பாலாரோடடைவு' என்றுங் கூறினார். அம்மா - வியப்புப்பொருட்டு. (௬௧)

(6) மண்ணாள் கின்றா ராகி வலத்தான் மதியால்வைத்
தெண்ணா நின்றார் யாரையு மெல்லா விகலாலும்
விண்ணோர் காறும் வென்ற வெனக்கென் மனைவாழும்
பெண்ணால் வந்த தந்தர மென்னப் பெறுவேனே.

(இ - ள்.) வலத்தால் மண்ணாள்கின்றாராகி -புயவலிமையான் மண்ணையாள்கின்றவராகி, மதியால் வைத்து எண்ணா நின்றார் யாரையும்-அறிவினால் வைத்து எண்ணப்படுகின்றவர் யாரையும், எல்லா இகலாலும்-எவ்வகையாகிய வன்மையானும், விண்ணோர்காறும் வென்ற எனக்கு - தேவர்வரையும் வெற்றிகொண்ட எனக்கு, என்மனை வாழும் பெண்ணால் அந்தரம் வந்தது என்ன பெறுவேனே-என்மனைவியால் முடிவு நேர்ந்ததென்னப் பெறுவேனே.

எவ்வகைப்போரினு மெல்லாவுலகத்தினையும் வென்றமை விளக்க 'எல்லாவிகலாலும் விண்ணோர்காறும் வென்றவெனக்கு' என்றும், அது என்மனைக்கண்வாழும் பெண்ணான் முடிவெய்தப்படுவ தாகாதென்பார் 'என் மனைவாழும் பெண்ணால் வந்த தந்தரமென்னப் பெறுவேனே' என்றுங் கூறினார். ஓகார மெதிர்மறை. உம்மைகள் முற்று. (௬௨)

---

* திருக்கோவையார், செ-௯௨.

(7) என்றென் றுன்னும் பன்னி யிரக்கு மிடர்தோயும்
ஒன்றுென் றுெவ்வா வின்ன லுவக்கு முயிருண்டோ
இன்றின் றென்னும் வண்ண மயங்கும் மிடியும்பொற்
குன்றுென் றுென்றே டொன்றிய தென்னக் குவிதோளான்

(இ - ள்.) பொன் குன்று ஒன்று ஒன்றேடு ஒன்றியது என்ன குவி தோளான் - மேருகிரி யொன்றுடன் வேறென்று பொருந்ினுற்போன்ற குவிதலையுடைய தோளானுகிய சக்கரவர்த்தி, என்று என்று உன்னும்-என்று இவ்வாறு நினைப்பான், பன்னியிரக்கும் - சொல்லிச்சொல்லி யிரப்பான், இடர் தோயும்- துன்பப்படுவான், ஒன்று ஒன்று ஒவ்வாத இன்னல் உவக்கும்- ஒன்றுடனென் றுெப்பாகாத துன்பத்தான் மகிழும், உயிர் உண்டோ-உயிர் உள்ளதோ, இன்று இன்று என்னும் வண்ணம் மயங்கும் இடியும்-இல்லை இல்லையென்னும் வகையாக மயங்குவான் இடிவான்.—எ-று.

அடுக்கிரண்டின் முன்னது இடைவிடாமைப் பொருளது ; பின்னது துணிவுப்பொருளது. தன்னிகரில்லாமையானும், உலகுக் கச்சாணிபோற் றுங்குவதாகலானும், யாவரானு மதிக்கப்பட்டமையானும் 'பொற்குன்றே ன்று' என்றும், அதனேடொப்பதாக வேறென்றுண்டாயி னிவ்வரசன்றேட் கொப்புமையாமென்பார் 'ஒன்றேடொன்றியதென்னக் குவிதோளான்' என் றும், தம்மினறயோரைக் கொன்றுரில்லை என்றின்னனகூறி வருந்துகின்ற மையான் 'பன்னியிரக்கும்' என்றும், அதுகேட்டிரங்காமையான் 'இடர்தோயும்' என்றும், அவ்வின்னலுக் கெல்லையின்மையான் 'இன்னலுவக்கு முயிருண்டோ வின்றின்றென்னும் வண்ணமயங்கும்' என்றும், மயங்கிச்சாதலை யொத்த வழியினிற்றலின் 'இடியும்' என்றுங்கூறினுர். பன்னுதல் நவிற்றுதல்போற் கூறியதே கூறல். இவ்வேழுசெய்யுளானும் தயரதன் அவளுள ளப்புன்மையை நோக்கிப் புலர்தலைக்கூறிய துணர்த்தப்பட்டது. (சுக)

(1) ஆழிப் பொற்றேர் மன்னவ னிவ்வா றயர்வெய்திப்
பூழிப் பொற்றேண் முற்று மடங்கப் புரள்போழ்தி
லூழிற் பொய்த்தா லென்னுரை யின்றே யுயிர்மாய்வென்
பாழிப் பொற்றூர் மன்னவ வென்றுள் பசையற்றுள்.

(இ-ள்.) ஆழிப்பொன் தேர் மன்னவன்-பொன்னுருளை பூண்ட தேரை யுடைய அரசன், இவ்வாறுஅயர்வுஎய்தி-இவ்வகை அயர்ச்சியடைந்து, பொற்றேண் முற்றும் பூழியடங்க புரள் போழ்தில்-அழகிய தோள்முழுதும் புழுதிபடியப் புரண்ட காலத்து, பசையற்றுள்-கணவன்பால் அன்பில்லாதவளாகிய கைகேசி, ஊழில் என்னுரை இன்றே பொய்த்தால்-முறையாக என் சொல்லை இன்றே குன்றச்செய்வையாயின், பாழிபொன் தார் மன்னவ-வலிய மைந்த அழகிய மாலையுடையானே, இன்றே உயிர் மாய்வென் என்றுள் - இன்றே என்னுயிர் துறப்பேனென்றுள்.—

வாய்மை மன்னனாகலின் தன்னுரை குன்றச் செய்யானென்னுந் துணி பாற் 'பொய்த்தால்' எனக் கூறினள். மாதர்கட்குக் கணவன்பாலன்பிருத்தல் வேண்டும், அவ்வாறின்மையாற் 'பசையற்றாள்' என்றும், உன்னுதல் பன்னு தல் முதலியனவாகிய மேற்கூறியனவடங்க 'இவ்வாறு' என்றும் கூறினா ரென்க. எய்திப் புரள்போழ்திற் பொய்த்தாலுயிர்மாய்வெனென்றாளென வினைமுடிக்க. (சஉ)

(2) அரிந்தான் முன்னோர் மன்னவ னன்றே யருமேனி
வரிந்தார் வில்லாய் வாய்மை வளர்ப்பான் வரநல்கிப்
பரிந்தா லென்னா மென்றனள் பாயுங் கனலேபோ
லெரிந்தே றாதே யின்னுயி ருண்ணு மெரியன்னாள்.

(இ-ள்.) பாயுங்கனலேபோல் எரிந்து ஏறாதே இன்னுயிருண்ணும் எரி யன்னாள் - பாயும் நெருப்பேபோல் எரிந்து மேற்சென்றெழாது இனிய உயி ரை மாய்க்கும் நெருப்பேபோல்பவளாகியகைகேசி, வரிந்தார் வில்லாய்-வரிந் துகட்டிய வில்லை யுடையானே! முன் ஒர் மன்னவன் அருமேனி அரிந்தான் அன்றே-உமது முன்னோரில் ஒரு அரசன் ஒருபுறவின்பொருட்டுத் தன்னரு மையாகிய உடம்பினை யறுத்துதவினானன்றே, வாய்மை வளர்ப்பான் வரம் நல்கிப் பரிந்தாலென்னா மென்றனள் - இன்று மெய்மையை வளர்க்க வரமளி த்து இப்போது வருந்தினால் என்னபயனாமென்று கூறினள்.—எ-று

*"பொய்யாமைபொய்யாமையாற்றினறம்பிற - செய்யாமைசெய்யா மை நன்று" என்பவாகலின், 'வாய்மைவளர்ப்பான் வரநல்கிப்பரிந்தாலென் னாம்' என்றும், தீத்தன்னையடுத்த பொருளைப் பற்றுதலும், எரித்தலும் மேற் சேறலு முயிர் வாங்குதலும்போல, இவள்மொழி அரசனைப்பற்றி யுடம்பினை வருத்தி மேற்செல்லா துள்ளேசென் றுயிர்வாங்குதலின் 'பாயுங்கனலேபோ லெரிந்தேறாதே யின்னுயிருண்ணுமெரியன்னாள்' என்றும், சொற்றவறாமை குலமுறைமையென்பது காட்டாகத் தன்னகம்புக்க குறுநடைப் புறவின்றபுதி கண்டஞ்சித் துலைபுக்கோனையு மெடுத்துக்காட்ட 'அரிந்தான்முன்னோர் மன் னவனன்றே யருமேனி' என்றும் கூறினார். அன்புடைமையைக் காட்டுவான் 'அரிந்தானன்றே' எனக் காட்டினாளென்னலுமாம். இப்பெற்றிநோக்கியே † "என்பு முரியர்பிறர்க்கு" என்றதற்குப் பரிமேலழகரு மிதனையே விரிப்பர்; அவ்வரசனை இவ்வாசிரியரும் 'இவர்குலத்தோன்மேற் பறவை மன்னுயிர்க்குத் தன்னுயிரை மாறாக வழங்கினனால்' என முற்காண்டத்துக் கூறுதல் காண்க. உடம்பினைச்சென்று வருத்தும் தீப்போலா துயிரைச்சென்று வருத்தலான் 'பாயுங்கனலேபோலெரிந்தேறாதே யின்னுயிருண்ணுமெரியன் னாள்' என்றார். இவ்விரண்டு செய்யுளானும் கைகேசி அரசனை வாய்மைதவற லாகாதெனக் காட்டினாற் கூறிய துணர்த்தப்பட்டது. (சங)

* திருக்குறள், செ - உகஉ. † திருக்குறள், செ - எஉ.

வீந்தா ளேயிவ் வெய்யவ ளென்னு மிடல்வேந்த
னீந்தே னீந்தே னிவ்வர மென்சேய் வனமாள
மாய்ந்தே நான்போய் வானுல காள்வேன் வசைவெள்ள
நீந்தாய் நீந்தாய் நின்மக னோடு நெடிதென்றான்.

(இ - ள்.) மிடல் வேந்தன்-வெற்றியுள்ள அரசன், இவ்வெய்யவள் வீந்தாளே என்னு-இக்கொடியளாகிய கைகேசி நானுடன்படாவிடி னிறந்துபடுவ ளென்றெண்ணி, இவ்வர மீந்தே னீந்தேன் - இவ்வரத்தினைக் கொடுத்தேன் கொடுத்தேன், என்சேய் வனம் ஆள நான்மாய்ந்தேபோய் வானுலகாள்வேன்- என்மகனாகிய ஸ்ரீராமன் காடுசென்றடைய நானிறந்துபோய் வானுலகத்தை யடைவேன், நின்மகனோடு வசைவெள்ள நீந்தாய் நீந்தாய் நெடிதென்றான்- நின்மகனாகிய பரதனோடு பழிப்பாகிய கடலினின்று நீந்தாய் நீந்தாய் என்றனன்.—எ-று.

அடுக்கிரண்டில் முன்னது துணிவையும், பின்னது வெகுளியையு முணர்த்தி நின்றன. நான் வரங்கொடேனாயின் இறந்துபடுவளென்று கருதி வரந்தந்தேனென்பான் 'வீந்தாளேயிவ்வெய்யவளென்னு இவ்வரமீந்தேனீந் தேன்' என்றும், அவ்வரம் ஸ்ரீராமனைக் காடுசென்றடையவும் தான் வான்சென் றடையவுஞ் செய்வதனான் 'என்சேய்வனமாளமாய்ந்தே நான்போய் வானுல காள்வேன்' என்றும், இதனால் நீயு நின்மகனோடும் பழிப்பினீங்காயென்பான் 'வசைவெள்ள நீந்தாய் நீந்தாய் நின்மகனோடும்' என்றும், இது ஆசந்திரார்க்க பரியந்த மென்பான் 'நெடிதென்றான்' என்றுங் கூறினார். இதனாற் கைகேசி க்கு வரங்களைக் கொடுத்துவிட்டமை யுணர்த்தப்பட்டது. (சச)

கூறா முன்னங் கூறு படுக்குங் கொலைவாளி
னேறா மென்னும் வன்றுய ராகத் திடைமூழ்கத்
தேறா னாகிச் செய்கை மறந்தான் செயன்முற்றி
யூறா நின்ற சிந்தையி னாளுந் துயில்வுற்றாள்.

(இ - ள்.) கூறாமுன்னம்-இவ்வாறு சொல்லாமுன்னம், கூறுபடுக்கும் கொலைவாளின் ஏறாமென்னும் வன்றுயர் - கூறுபடுத்தும் கொலைத்தொழில் செய்கின்ற சிறந்தவாளெனப்படும் வன்மையாகிய துன்பம், ஆகத் திடை மூழ்க - மார்பிற்பட்டுருவ, தேறானாகி செய்கைமறந்தான்-தெளியாத சிந்தை யனாகி அரசன் செயலற்றுக் கிடந்தனன், செயல் முற்றி யூறாநின்ற சிந்தையி னாளும் துயில்வுற்றாள்-தன் கொடுஞ்செய்கை முற்றப்பட்டுக் களிப்பினாலூறு கின்ற சிந்தையளாகிய கைகேசியுந் துயில்கொண்டனள்.—எ-று.

வாட்படை எய்தாலன்றிக் கொலைத்தொழில் செய்யாமையின் அதனோ டிதற்கு வேற்றுமைதோன்றக் 'கொலைவாளினேறாம்' என்றும், துயராற் செய லற்றுக்கிடத்த லியல்பாகலின் 'தேறானாகிச் சிந்தைமறந்தான்' என்றும், தன் கருத்து முற்றுப்பெறத் துயில் வுறுத லியல்பாகலின் 'செயன்முற்றியூறா

நின்ற சிந்தையினளுந் துயில் வுற்றாள்' என்றுங் கூறினர். உம்மை இறந்தது தழீ இயது.கூறாமுன்னமூழ்கத் தேருஞகி மறந்தான் சிந்தையினளுந் துயில் வுற்றாளென வினைமுடிக்க. இதனன் அரசன் அயர்ந்தமையோடு கைகேசி துயில்கொண்டமை யுணர்த்தப்பட்டது. (சரு)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

(1) சேணுலாவிய நாளெலாமுயி ரொன்றுபோல்வன செய்துபின்
ஏணு லாவிய தோளி ஞனிட ரெய்த வொன்று மிரங்கிலா
வாணி லாநகை மாத ராள்செயல் கண்டு மைந்தர்மு னிற்கவும்
நாணி னளென வேகி னளிர் கங்கு லாகிய நங்கையே.

(இ - ள்.) சேண் உலாவிய நாள் எல்லாம் உயிர் ஒன்றுபோல்வன செய்து - பலநாளெல்லா முயிரொன்றுபடச் செய்வனபோற்செய்து, பின் ஏணுலாவிய தோளினன் இடர் எய்த - பின் மாட்சிமைப்பட்ட தோளினை யுடைய அரசன் துன்பமெய்த, ஒன்று மிரங்கிலா வாணிலாநகை மாதராள் செயல்கண்டும் - சிறிதுமிரங்காத ஒளியுள்ள நகையையுடைய பெண்ணின் செயலைக்கண்டும், மைந்தர்முனிற்கவு நாணினளென-ஆடவர் முன்னே நிற் றற்கு நாணங்கொண்டவள்போல, நளிர் கங்குலாகியநங்கை யேகினள்-குளிர்ந்த இரவென்னும் பெண் சென்றனள்.—

மணஞ்செய்துகொண்ட காலமுதல் அரசனும் கைகேசியும் வேற்றுமை ப்படாமையொழுகிய துணர்த்துவான் 'சேணுலாவியநாளெலாமுயி ரொன்று போல்வனசெய்து' என்றும், பின் வரம்பெற்று அவனையே வருத்துகின்ற மையின் 'பின் ஏணுலாவியதோளினனிடரெய்த' என்றும், சிறிது மிரங்காது நின்ற பெண்ணின் செய்கையைக்கண்டுந் தானுடவர்முன்னே நிற்பதற்கு நாணங்கொண்டவள்போல் இரவாகிய மாதுசென்றனளென்பார் 'ஒன்றுமிரங் கிலாவாணிலாநகைமாதராள் செயல்கண்டுமைந்தர்முனிற்கவு-நாணினளென வேகினளிர்கங்குலாகியநங்கையே' என்றுங் கூறினர். இது தற்குறிப் பேற்றம். தனக்கின்பமளித்தவனென்பதுதோன்ற 'ஏணுலாவியதோளினன்' என்றதென்க. இரவினைப் பெண்பாலாகக்கூறினர். * "தென்றலஞ்செல்வன் யாண்டுளன்கொல்லோ" என்றும், $ "நாணென்னு நல்லாள்" என்றும் பிற ரும், ‡"பால்வாய்ப்பிறைப்பிள்ளையொக்கலைக்கொண்டுபகலிழந்த-மேல்பாற்றி சைப்பெண்புலம்புறுமாலை" என்றும், இவற்றையே பெரியாரும் ஆண்பாலாக வும் பெண்பாலாகவும் கூறும் வடமொழி மதம்பற்றியென்க. (சசு)

(2) எண்ட ருங்கடை சென்ற யாம மியம்பு கின்றன வேழையால்
வண்டு தங்கிய தொங்கன் மார்பன் மயங்கி விம்மிய வாறெலாம்

---

* சிலப்பதிகாரம், அந்திமாலைச்சிறப்புச்செய்காதை. வரி - ச.
$ சிந்தாமணி. முத்தியிலம்பகம், செ - உகூஉ.
‡ திருவிருத்தம், செ - கரு.

கண்டு நெஞ்சு கலங்கி யஞ்சிறை யான காமர் துணைக்கரங்
கொண்டுதம்வயிறெற்றியெற்றிவிளிப்பபோன்றனகோழியே.

(இ - ள்.) எண்தரும் கடை சென்ற யாம மியம்புகின்றன கோழி-எண்ணப்படுங்கடைசென்ற யாமத்தை அறிவிக்கின்றனவாகிய கோழிகள், ஏழையால் வண்டுதங்கிய தொங்கல் மார்பன் மயங்கி விம்மியவாறெலாம்கண்டு-பெண்ணால் வண்டுதங்கிய மாலையணிந்த மார்பினையுடைய சக்கரவர்த்தி மயங்கி வருந்திய வகையெல்லாம் பார்த்து, நெஞ்சு கலங்கி-மனங்கலங்கி, அம்சிறையான காமர் துணைகரம் கொண்டு தம் வயிறு எற்றி எற்றி விளிப்பபோன்றன - அழகிய சிறைகளாகிய அழகிய இரண்டு கையினானும் தன் வயிற்றிற் பலமுறை யடித்துக்கொண்டழுகின்றனபோலிருந்தன.—எ-று.

இதுவு மேலையணி. அடுக்கு பன்மைப்பொருளது. ஏழை-நெஞ்சு-ஆகுபெயர். காமர்-உரிச்சொல். கடைசென்ற யாமமென்றது மூன்றாம் யாமத்தை. ஏழை என்றது இரக்கமு மறிவுமாகிய உள்ளீடின்மைபற்றி என்க. உலகமுழுதாளு மரசன் ஒருபெண்மொழியான் வருந்திக்கிடக்கின்றானென்பதுதோன்ற 'ஏழையால்வண்டுதங்கிய தொங்கன்மார்பன் மயங்கி விம்மியவாறு' என்றார். சக்கரவர்த்தி வருந்துவதற்கு அஃறிணைப்பொருளும் வருந்துகின்றனவென்பதுணர்த்த 'நெஞ்சு கலங்கிச் சிறையான துணைக்கரங்கொண்டு வயிறெற்றியெற்றிவிளிப்ப' என்றும், அவை கடையாமத்தினை யுணர்த்துவனவாகலின் 'விளிப்பபோன்றன'என்றும் கூறினர். விளிப்ப அகரவிறுதிப் பலவறிசொல். ¶ "எல்வளையுகுப" என்புழிப்போலப் படுத்தலோசையாற் பெயராய் நின்றதென்பர் நச்சினார்க்கினியரும். இவ்விரண்டுசெய்யுளானும் இரவு கழிவேயன்றிக்கோழிகள் பொழுதுணர்த்தலு மறிவிக்கப்பட்டது. (சஎ)

(1) தோய்கயத்து மரத்துமென்சிறைதுள்ளி மீதெழுபுள்ளெலாம்
தேய்கை யொத்த மருங்குன் மாதர் சிலம்பி னின்று சிலம்புவ
கேகயத்தர சன்ப யந்த விடத்தை யின்னதோர் கேடுசூழ்
மாக யத்தியை யுட்கொ தித்து மனத்து வைவனபோன்றவே.

(இ - ள்.) தோய் கயத்தும் மரத்தும் மெல்சிறை துள்ளிமீதெழு புள் எலாம் - நீராடுகின்ற தடாகத்தினும் மரத்தினு மென்மையாகிய சிறைகளாற்றுள்ளி மேலெழாநின்ற பறவைகளெல்லாம், தேய்கை யொத்த மருங்குல் மாதர் சிலம்பின் நின்று சிலம்புவ - தேயுமியல்பையுடைய இடையினையுடைய மாதர்கள் காற்சிலம்பேபோன்று நின்றொலிப்பன, கேகயத்தரசன் பயந்தவிடத்தை-கேகயராசனாகிய பாற்கடலன்னான் பெற்ற விடம்போல்வாளும், இன்னதோர் கேடுசூழ் மாகயத்தியை - இத்தன்மையதோர் கேட்டினை யாராய்ந்துசெய்த பெரிய கொடியாளுமாகிய கைகேசியை, உட்கொதித்து மனத்து வைவனபோன்ற - மனத்திற் கோபித்து நிந்திப்பனபோன்றன.—

¶ கலித்தொகை, குறிஞ்சி. செ - சஅ.

விடம் ஆகுபெயர். இன் உருபு ஒப்புப்பொருளது. பறவையினொலியை மகளிர் காற்சிலம்புக்குவமை கூறியது * "மின்னார்சிலம்பிற் சிலம்புங்குரலன்னம்" என்புழிப்போல. சீராமனைக் காடுசெல்லக் கட்டளையிடும் பெருங்குற்றமுடையா ளென்பார் 'இன்னதோர் கேடுசூழ் மாகயத்தியை' என்றதென்க. அவை யொலிப்பவற்றை 'உட்கொதித்து மனத்து வைவன போன்றன' என்றுங்கூறினார். இதுவுமேலையணி. (சஅ)

(2) சேம மென்பன பற்றி யன்பு திருந்த வின் றுயில்செய்தபின்
வாம மேகலை மங்கை யோடு வனத்துள் யாரு மறக்கிலா
நாம நம்பி நடக்கு மென் று நடுங்கு கின் ற மனத்தவாய்
யாமுமண்ணி னிறத்து மென்பனபோலெ ழுந்தன யானையே.

(இ - ள்.) சேமமென்பனபற்றி-காவல் வீடென்பனவற்றைப்பொருந்தி, அன்பு திருந்த - அன்புதிருந்த, இன் துயில் செய்தபின் - இனிய துயில் செய்தபின்னர், வாமமேகலை மங்கையோடு - அழகிய மேகலையணிந்தபெண்ணுடன், வனத்துள் யாருமறக்கிலா நாமம் நம்பி நடக்குமென்று - காட்டில் யாருமறவாத திருநாமத்தையுடைய இரகுநாயகன் நடந்துசெல்வனென்று நடுங்குகின்ற மனத்தவாய் - நடுங்குகின்ற மனமுடையனவாய், யாமும் மண்ணின் இறத்து மென்பனபோல - நாமு மண்மேலிறப்போ மென்பனபோல, யானையெழுந்த - யானைகள் எழுந்தன.—எ-று.

சீராமனது திருநாமமே யாவரு மோதியுய்யு மந்திரராசமாகலின் 'யாரு மறக்கிலாத நாமநம்பி' என்றார்; 'நாமநம்பி' அச்சத்தைவிளக்கு நம்பியென விரிப்பாருமுளர்; அற்றேல் 'மறக்கிலாத' என்றடைகொடுத்துக் கூறினமையான் யாவரு மறக்கிலாமை அவனது திருநாமமல்லது வேறன்மையானும், வனவேடனு மிதனையேயோதி இறைவன் பெருங்கருணை பெற்றானெனப் படுவதனானும், அது போலியுரையென்க. 'நம்பி' என்றது நம்முதனிலையாக நமக்கின்னா னென்னும் பொருள்பட வருவதோர் உயர்ச்சிச்சொல் என்பர் * "எல்லிருட்கனவிற்கண்டேன்" என்புழி நச்சினார்க்கினியரும். இறத்தும் என்றது தும் மீற்றுத் தன்மைப்பன்மை. இவ்விரண்டு செய்யுளானும் முறையே பறவையும் யானையுந் துயினீத்தமையுணர்த்தப்பட்டன. இதுவுமேலையணி. (சக)

(1) சிரித்த பங்கய மொத்த செங்க ணிராம னைத்திரு மாலையக்
கரிக்கரம்பொரு கைத்த லத்துயர் காப்பு நாணணி தற்குமுன்
வரித்ததண்கதிர் முத்த தாகியிம் மண்ணனைத்து நிழற்றமேல்
விரித்த பந்தர் பிரித்த தாமென மீனொ ளித்தன வானமே.

(இ-ள்.) சிரித்த பங்கயம் ஒத்த-அலர்ந்த செந்தாமரைமலரைப் போன்ற, செங்கண் இராமனை-செங்கண்ணையுடைய சீராமனை, திருமாலை-திருமாலினை,

* சிந்தாமணி - முத்தியிலம்பகம், செ-உகூஉ.
* ஷை. விமலையாரிலம்பகம்-செ. உக.

அக்கரிகரம் பொருகைத்தலத்து - அந்த யானைத்துதிக்கைபோன்ற கைகளின் கண், உயர்காப்பு நாணணிதற்குமுன் - உயர்வாகிய காப்பிணை அணிவதற்கு முன், வரித்த தண்கதிர் முத்ததாகி-வேய்ந்த குளிர்ச்சிபொருந்திய ஒளியினை யுடைய முத்ததாகி, இம்மண் அனைத்து நிழற்ற - இம்மண்முழுது நிழலைச் செய்ய, மேல்விரித்தபந்தர் பிரித்ததாமென - மேல்விரித்த பந்தரைப் பிரித் ததுபோல, வானம் மீனொளித்த - ஆகாயத்தில் நாண்மீன்கள் மறைந்தன.

நிரதிசயவின்பம் தரியருக் களித்தலு நம்போலும் பிறவித்துயரமில்லா மையுமுடைய இறைவனதுஅருள்பொழியுங்கண்ணைச் 'சிரித்தபங்கயமொத்த செங்கண்' என்றும், தன்னிகரீடு மெடுப்புமில்லாதவனாகலான் 'திருமாலை' என்றும், உலகமுழுது மவற்குடைமையாமென்பதுதோன்ற 'மண்ணனைத் தும்' என்றும் கூறினர். கரிகரமென்னும் வடசொல் எதுகைநோக்கி விரி த்தல்பெற்றது. இதுவு மேலையணி. (ருய)

(2) நாம விற்கை யிராம னைத்தொழு நாள டைந்த நமக்கெலாம்
காம விற்குடை கங்குன் மாலை கழிந்த தென்பது கற்பியாத்
தாமொ லித்தன பேரி யவ்வொலி சாரன் மாரி தழங்கலா
மாம யிற்குல மென்ன முன்ன மலர்ந்தெ ழுந்தனர் மாதரே.

(இ - ள்.) நாமவில் கை இராமனை தொழுநாள் அடைந்த நமக்கெல் லாம் - அச்சந்தரும் வில்லேந்திய கையையுடைய சீராமனைத்தொழுகின்ற நாளடைந்த நமக்கெல்லாம், காமவிற்கு உடை கங்குன் மாலை கழிந்ததென்ப துகற்பியா - மன்மதன் வில்லுக்கு வருந்தும் இரவாகிய மாலைப்பொழுது நீங் கியதென்பது நினைத்து, பேரி தாமொலித்தன - பேரிகைகள் முழக்கப்பட் டன, அவ்வொலி சாரன்மாரி தழங்கலாக மாமயிற் குலமென்ன மாதர் முன் னமலர்ந்தெழுந்தனர் - அவ்வொலியைக்கேட்டு மலைச்சாரலிற் பெய்கின்ற மழைமுழக்கங் கேட்டெழுங் கருமைநிறத்து மயில்களின் கூட்டமென்ன மாதர்கள் முன்னர் கண்மலர்ந்தெழுந்தனர்.—எ-று.

பரசுராமனை வெற்றிகொண்ட வில்லாளியாகலான் 'நாமவிற்கை யிராம னை' என்றதென்க. காமன் சரம்பெய்து மாதரை வருத்துங் காலமிரவாதலிற் 'காமவிற்குடை கங்குன்மாலை' என்றும், அது நீங்கியதென்றுணர்த்துதற்குப் பேரிகையடிபடுமோசையை 'கழிந்ததென்பது கற்பியாத்தாமொலித்தனபேரி' என்றும், அவ்வொலியைக்கேட்டு மாதரெழுந்தமையை உவமைமுகத்தால் 'சாரன்மாரிதழங்கலா - மாமயிற்குலமென்ன முன்னமலர்ந்தெழுந்தனர்' என் றுங்கூறினர். இவிரண்டுசெய்யுளானும் முறையே வான்மீன் கரந்தமை யும், மாதர் துயினீத்தமையு முணர்த்தப்பட்டன. (ருக)

(1) இனம லர்க்குலம் வாய்வி ரித்திள வாச மாருதம் வீசமுன்
புனைது கிற்கலை சோர நெஞ்சு புழுங்கி னார்சில பூவைமார்
மனம னுக்கம் விடத்த னித்தனி வள்ள லைப்புணர் கள்ளவன்
கனவி னுக்கிடை யூற டுக்க மயங்கி னார்சில கன்னிமார்.

(இ - ள்.) இனம் மலர்க்குலம் வாய் விரித்து - இனமாகிய மலரின் கூட்டம் வாய்மலர்ந்து, இளவாச மாருதம் வீச - மணங்கமழு மிளந்தென்றல் வீச, முன்புனை துகில் கலை ஆவிசோர - முன்னுடுத்த வாடையு மேகலையுஞ்சோர, சில பூவைமார் நெஞ்சு புழுங்கினர் - சில நாகணவாய்ப் பறவையன்ன மாதர் மனம் வருந்தினர், மனம் அனுக்கம் விட தனிதனி வள்ளலை புணர் - மனத்துயர நீங்கத் தனித்தனியாக வள்ளன்மையுடையனாகிய சீராமனைப் புணர்கின்ற, கள்ளம் வல் கனவினுக்கு - வஞ்சமமைந்த வன்மையாகிய கனவிற்கு, இடையூறடுக்க சில கன்னிமார் மயங்கினர் - இடையூறநெருங்கச் சிலமாதர் மயக்கமடைந்தனர்.—

பூவைமார் - வள்ளல் ஆகுபெயர். அடுக்கு மிகுதிப்பொருளது. பயன் விளைக்காமையானும், துன்பமிகுதியானும் கனவினைக் 'கள்ளவன்கனவு' என்றதென்க. தென்றல் வீசுதல் மாதர்க்குக் காமநலம் பயத்தலின் 'துகிற்கலை சோரநெஞ்சு புழுங்கினர்சில பூவைமார்' என்றார். பூவை சொற்குவமை, அனுக்கம் - வருத்தம்.　　(௫௨)

(2) சாய டங்க நலங்க லந்து தயங்கு தன்குல நன்மையும்
போயடங்க நெடுங்கொ டும்பழி கொண்டரும்புகழ் சிந்துமத்
தீய் டங்கிய சிந்தை யாள்செயல் கண்டு சீரிய நங்கைமார்
வாய டங்கின வென்ன வந்து குவிந்த வண்குமு தங்களே.

(இ - ள்.) சாயடங்க - மேன்மையடங்க, நலம்கலந்து தயங்கு தன்குல நன்மையும் போயடங்க - நன்மையடைந்து விளங்குந் தன் குலச்சிறப்பும் போயழிய, நெடுங்கொடும்பழிகொண்டு-நெடிய கொடும்பழியால், அரும் புகழ் சிந்தும் - அரிய புகழினைக்கெடுக்கும், அத்தீயடங்கிய சிந்தையாள் செயல் கண்டு - அத்தீயையொத்த மனத்தவளாகிய கைகேசி செய்கையைக்கண்டு, சீரிய நங்கைமார் வாயடங்கினவென்ன - சிறந்த குணமுடைய மாதர்கள் வாயடங்கினாற்போல, வண் குமுதங்கள் வாயடங்கின-வண்மையாகிய குமுதமலர்கள் குவிந்துநின்றன.—

சாயல் என்றது ஈறுதொகுக்கப்பட்டது. * "சாயன்மேன்மை" என்றதனானுணர்க. தான் பழிமேற்கோடலுக்கு' மேன்மை யடங்கலும், தன் குல நன்மைபோதலு மேதுவாகலின் 'சாயடங்கநலங்கலந்து தயங்குதன்குல நன்மையும் போயடங்க' என்றும், தன்புகழ் கெடுதற்குப்பழியே யேதுவாகலின் 'கொடும்பழிகொண்டரும்புகழ்சிந்தும்' என்றும், இரக்கம் சிறிதுமின்மையான் 'அத்தீயடங்கிய சிந்தையாள்' என்றும், அவள் செயலைக்கண்டு நம்மைப்போலுமோர்பேதை நமக்கிழிவெய்தச்செய்தனளே யென்றேங்கி வாயடங்கினபோலும், குமுதங்கள் குவிந்தமையைக் கூறுவான் 'வாயடங்கின' வென்றுங் கூறினர். இதுவு மேலையணி. இதனாற்குமுதமலர்குவிந்தமை யுணர்த்தப்பட்டது.

* தொல்-செ-சூ-௩௨௫.

(3) மொய்ய ராக நிரம்ப வாசை முருங்கு தீயின் முழங்கமேல்
வைய ராவிய மாரன் வாளியும் வானி லாநெடு வாடையும்
மெய்ய ராவிட வாவிசோர வெதும்பு மாதர்த மின்செவி
பையரா நுழை கின்ற போன்றன பண்க னிந்தெழுபாடலே.

(இ - ள்.) மொய் அராக நிரம்ப - நெருங்கிய காதல் நிறைய, ஆசை முருங்குதீயின் முழங்க - ஆசை வருத்துந் தீயைப்போல் முழங்க, மேல் வை அராவிய மாரன் வாளியும்-மேல் கூர்மைப்பட அராவப்பட்ட மன்மதன் கணைகளும், வான் நிலாநெடு வாடையும் - வானினிலவும், மெய்அராவிட - உடலைவருத்த, ஆவிசோர - உயிர்வருந்த, வெதும்பு மாதர் தம்இன்செவி-வருந்துகின்ற மாதர்களுடைய இனிய செவித்தொளையாகிய புற்றில், பண் கனிந்தெழு பாடல்-பண்தங்கியெழுகின்ற பாடல், பையரா நுழைகின்ற போன்றன-படத்தையுடைய பாம்புகள் நுழைகின்றனவொத்தன.—

அராகம் - பொருண்மேற்செல்லும் பற்றுள்ளம், ஆசை - அதனையெய்த நினைப்பது. விரகங்கொண்ட மாதர்க்குப் பாடன்முதலியன கேட்டல் மிக்க காமம் பயப்பதாகலின் அவர் செவித்தொளையிடைப் 'பையரா நுழைகின்றபோன்றன' என்றதென்க. இதுவுமன்றி மாரன்வாளியும் வாடையும் அவருடம் பினை வெதுப்புத லியல்பாதலின் 'மாரன்வாளியும்வானிலா நெடுவாடையும் மெய்யராவிட' என்றுங் கூறினர். பாடலைப் பையரவாகக்கூறிச் செவியைப் புற்றெனன்னுமை ஏகதேச வுருவகம். (நச)

(4) ஆழி யான்முடி சூடு நாளிடை யான பாவியி தோரிரா
ஊழி யாயின வாறெ னுவுயர் போதின் மேலுறை பேதையும்
ஏழுலோகமுமெண்டவஞ்செய்தகண்ணுமெங்கண்மனங்களும்
வாழும் நாளிதெ னுவெ ழுந்தனர் மஞ்சு தோய்புய மஞ்சரே.

(இ - ள்.) ஆழியான் முடிசூடு நாள் - சக்கரப்படையையுடைய சீராமன் முடிபுனையும்பகற்கு, இடையான பாவியோரிராவிது-இடையாக நின்ற பாவியாகிய இவ்வோரிரவு, ஊழியாயின ஆறெனு - பல்லூழிகாலம்போலுமிருப்பது யாதென்று, உயர்போதின் மேலுறை பேதையும்- சிறந்ததாமரையாளும், ஏழுலோகமும்-ஏழுலகத்தவர்கள்,எண்தவஞ்செய்தகண்ணும் எங்கள் மனங்களும்-எண்ணத்தக்க தவஞ்செய்தகண்களும் மனங்களும், வாழுநாளிதெனு - வாழ்வெய்துநா ளிதுவென்று, மஞ்சுதோய் புய மஞ்சர் எழுந்தனர்-மேகம்போல்கின்ற கைகளையுடைய வீரர் துயினீங்கி யெழுந்தனர்.—எ-று.

'உயர்போதின் மேலுறை பேதையும்' என்றதற்கேற்ப 'ஆழியான்' என்றார். 'ஆழியான்' என்றது சீராமனை. சீராமன் முடிசூடு நாட்கு முன்னை நாளிரவு நீடித்திருந்தல் போன்று தோன்றுதலான் 'பாவியிதோரிரா' என்றதென்க. இரவைப் பாவி என்றது *"அழுக்காறெனவொருபாவி" என்பதற்குப்பரி

* திருக்குறள், செ - கசுஅ.

மேலழகர் கூறுவதனாற் காண்க. பேதை உலோகமென்டன ஆகுபெயர். காட்சிக்குக்கண்புலனாதனோக்கி எண்டவஞ்செய்த கண்களும் என்றதன்றி, அது சாதனமாக அறியாநிற்பது மனமாகலின் 'எங்கள்மனங்களும்' என்றுபிற்கூறினார். இரா ஆயினவாறெனுபேதையும் உலோகமும் கண்ணுமனங்களும் வாழுநாளிதெனுமஞ்சர் எழுந்தனர் என வினைமுடிக்க. உயர்போதென்றது-தாமரையை; ‡ இதனைப் "பூவிற்குத் தாமரையே' என்றதனானுணர்க. தோய் உவமச்சொல். எண்டவஞ்செய்த கண்ணுமனங்களுமென்றது:—§"கனியிருந்தனைய செவ்வாய்க்கண்ணனைக்கண்டகண்கள்-பனியரும்புதிருமாலோ" எனப் பெரியாரும்பணித்தமையானறிக. இந்நான்குசெய்யுளானும்மாதர் வருந்தினமையும் குமுதங் குவிந்தமையும், பாட்டோசை மிக்கமையும், வீரர் துயினீங்கினமையுமுறையேயுணர்த்தப்பட்டன. (௫௫)

(1) ஐயு றுஞ்சுடர் மேனி யானெழில் காண மூளு மவாவினாற்
கொய்யு றுங்குல மாம லர்க்குவை நின்றெ ழுந்தனர் கூர்மைகூர்
நெய்யுறுஞ்சுடர்வேனெடுங்கண் முகிழ்த்துநெஞ்சினினைப்பொடும்
பொய்யு றங்கு மடந்தை மார்குழல் வண்டுபொம்மென விம்மவே.

(இ - ள்.) கூர்மைகூர் - கூர்மைமிகுந்த, நெய்யுறும் சுடர்வேல் நெடுங்கண் முகிழ்த்து-நெய்பூசப்பட்ட ஒளிமிக்கவேல்போன்ற நீண்ட கண்ணைமூடி, நெஞ்சில் நினைப்பொடும் பொய் உறங்கும் மடந்தைமார்-மனத்திற் சிராமன் பாலெண்ணங்கொண்டு பொய்த்துயில்கொண்ட மாதருடைய, குழல் வண்டு பொம்மென விம்ம-குழலினின்றும் வண்டுகள் பொம்மென்றொலிக்க, ஐயுறும் சுடர்மேனியான்-வியப்பினை யடைவிக்கு மொளியையுடைய மேனியானாகிய சிராமனது, எழில்காண மூளுமவாவினால்-அழகினைக்காண நெருங்குமாசையால், கொய்யுறும் குலமாமலர்க்குவை நின்றெழுந்தனர் - கொய்தற்குரிய சிறந்த மாமலர்ப்படுக்கையினின்று மெழுந்தனர்.—

காம்பறிந்து பரட்பிய மலராகலின் 'கொய்யுறுமலர்' என்றதென்க. ஆடவரை வருத்தலான் கண்ணை வேற்குவமை கூறினார். எழில் என்றது மகுடாபிடேகக்காட்சியை. குழல் என்றதற்கு வரியென்றும் இசைப்பாட்டென்றுங் கூறினு மமையும். மலர்க்குவை என்றது பூம்படுக்கையை. (௫௬)

(2) ஆட கந்தரு பூண்மு யங்கிட வஞ்சி யஞ்சி யனந்தரால்
ஏட கம்பொதி தார்பொ ருந்திட யாம பேரி யிசைத்தலாற்
சேடகம்புனைகோதை மங்கையர்சிந்தை யிற்செறிதிண்மையா
லூடல் கண்டவர் கூடல் கண்டிலர் நையு மைந்தர்களுய்யவே.

(இ - ள்.) ஆடகம் தரு பூண் முயங்கிட-பொன்னாற்செய்யப்பட்ட அணிகலம் நெருங்க, அஞ்சி அஞ்சி - மிகவும் அச்சமெய்தி, அனந்தரால் ஏடகம்

‡ திருவள்ளுவமாலை, செ - ௬௬.
§ முதலாயிரம். திருமாலை, செ - ௧௮.

பொதிதார் பொருந்திட-நித்திரையினுல் இதழ் தன்னகத்தடங்கிய மாலைபொருந்த, யாம பேரி இசைத்தலால்-கடையாமத்தொலிக்கும் பேரிகை முழக்கப்படலானும், சேடகம் புனைகோதை மங்கையர் சிந்தையில் செறி திண்மையால்-பெருமையாகப்புனைந்த மாலையணிந்த மாதரது மனத்திற்செறிந்த திண்மையானும், ஊடல் கண்டவர்-ஊடலைக்கண்டவர், நையுமைந்தர்களுய்ய-வருந்திய ஆடவர்கள் உய்ய, கூடல் கண்டிலர்-புணர்தலைக்கண்டிலர்.—

ஊடல், பிணக்கு, புலவி என்பன ஒருபொருட்கிளவி. அது தலைவனும் தலைவியும் ஒருபடுக்கையின்கட்பொருந்தியவழி அவன்பாற் புலப்பது ஒரேதுவின்மையேயாயினும், காதன்மிக்குழி யோரேதுவுளதாக வுட்கொண்டு புலத்தல். அதுநோக்கியன்றே; * "ஊடுதல் காமத்திற்கின்பம்" என்ருராகலின், 'ஊடலை' விதந்து கூறினர். வஞ்சி-என்றது ஒரு விசேடமாகிய கொடியை, அது ஈண்டாகுபெயராய் மாதரை யுணர்த்திநின்றது; அவர் நடக்கத்தாற் கொடிபோறலின். இதனை ‡ "மின்னுமிளிர் பூங்கொடியுமென்மலருமொப்பார்" என்றதற்கு நச்சினர்க்கினியர் கூறலானுமறிக. (௫௪)

(3) தழையொலித்தனவண்டொலித்தன தாரொலித்தனபேரியாம்
முழவொலித்தனதேரொலித்தனமுத்தொலித்தெழுமல்குலார்
இழையொலித்தனபுள்ளொலித்தனயாழொலித்தனவெங்கணும்
மழையொலித்தன போற்கலித்த மனத்தின் முந்துறு வாசியே.

(இ - ள்.) தழையொலித்தன-மயிற்பீலிகள் விளங்கின, வண்டொலித்தன - வண்டுகளொலித்தன, தாரொலித்தன - கிங்கிணிமாலைகள் விளங்கின, பேரியாம் முழவொலித்தன - பேரிகையாகிய முழவொலித்தன, தேர் ஒலித்தன - தேர்கள் ஒலித்தன, முத்தொலித்தெழு மல்குலார் - முத்தொலித்துத் தோன்றுகின்ற அல்குலையுடைய மாதர், இழையொலித்தன-அணிகளொலித்தன, புள்ளொலித்தன-பறவைகளொலித்தன, யாழொலித்தன-வீணைகளொலித்தன, மனத்தின் முந்துறு வாசி - மனத்தின் முற்பட்டுச் செல்லுங் குதிரைகள், எங்கணும் மழையொலித்தன போற்கலித்த - எங்கும் மழைமுழக்கமென்ன வொலித்தன.—

மனோவேகஞ் சிறந்ததாகலி னதனினு முற்பட்டுச்செல்வதனன் 'மனத்தின் முந்துறும் வாசி' என்ருர். தாரென்றதற்கு மாலையெனினுமமையும். ()

(4) வைய மேழுமொ ரேழு மாருயி ரோடு கூடவ ழங்குமம்
மெய்யன்வீரருள்வீரன்மாமகன் மேல்விளைந்ததோர்காதலான்
நைய நையந லம்பு லன்க ளவிந்த டங்கி நடுங்குவான்
தெய்வமேனி படைத்தசேயொளி போன்மழுங்கின தீபமே.

(இ - ள்.) வையமேழுமோ ரேழுமாருயிரோடுகூட வழங்கும்-பதினன்குலகங்களையுந் தன்னுயிருடன்கூட வழங்கிய, அம்மெய்யன் - அவ்வாய்மை

* திருக்குறள், செ - ௧௩௩௰.

‡ சிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம். செ - ௧௧.

யையுடையானும், வீரருள் வீரன்-வீரர்களிற்சிறந்த வீரனும், மாமகன்மேல்-தன் முதன்மகனாகிய ஸ்ரீராமன்மேல், விளைந்ததோர் காதலான்-உண்டாயதொருகாதலன், நைய நைய-மிகவும் வருந்த, நல் ஐம்புலன்கள் அவிந்தடங்கி-நன்மையாகிய புலனைந்துங் கெட்டொழிந்து, நடுங்குவான்-நடுங்குவானுமாகிய அத்தயரதனது, தெய்வமேனி படைத்த சேயொளிபோல் - தெய்வத்தன்மை பொருந்திய மேனியிற்படைத்த நல்ல வொளிபோல, தீபமழுங்கின - விளக்கொளி மழுங்கின.—

பொய்ம்மை கூறுதற்கஞ்சி யுயிரை வழங்குபவனாகலின் 'அம்மெய்யன்' என்றும், சம்பரனைத் தடிந்திந்திரனுக் கவன்பதம் வழங்கலின் 'வீரருள்வீரன்' என்றுங் கூறினார். நைய என்னு மடுக்கு மிகுதிப்பொருளது. அரசனது மேனியினொளிபோல் தீபவொளிமழுங்கினமை யுவமைமுகத்தாற் கூறினார். (௫௧)

(5) வங்கி யம்பல தேன்வி ளம்பின வாணி முந்தின பாணியின்
பங்கி யம்பர மெங்கும் விம்மின பம்பை பம்மின பல்வகை
பொங்கி யம்பல வுங்க றங்கின நூபு ரங்கள் புலம்பவெண்
சங்கி யம்பின கொம்ப லம்பின சாம கீத நிரம்பவே.

(இ - ள்.) வங்கியம்பல-இசைக்குழல்கள், தேனியம்பின-தேன்போலும் ஒலித்தன, வாணிமுந்தின-வாழ்த்துகள் முற்பட்டன, பாணியின் பங்கி-பாட்டின் வகைகள், அம்பரமெங்கும் விம்மின-ஆகாயமெங்குஞ்சென்று நிரம்பின, பம்பைபம்மின-பம்பை யொலித்தன, பல்வகை பொங்கு இயம் பலவும் கறங்கின-பலவகையாகியமிகுந்தவாச்சியம்ஒலித்தன, நூபுரங்கள் புலம்ப-சிலம்புகளார்க்க, வெண்சங்கியம்பின-வெண்ணிறத்துச் சங்கொலித்தன, சாமகீதநிரம்ப கொம்புஅலம்பின-சாமவேதத்திசைநிரம்ப ஊதுகொம்பொலித்தன.—எ-று.

'அம்பரமெங்கும் பாணியின்பங்கி விம்மின' என்றார் தேவர்தமக்குக்களி பேருவகை பயப்பது இச்ஸ்ரீராமனது பட்டாபிடேகமாகலின். கொட்டுவன ஊதுவன முதலனவாகப் பலவகையவாகலின் 'பொங்கியம்பல' என்றதென்க. இவ்வைந்து செய்யுளானும் வைகறையினைச் சிறப்பித்த துணர்த்தப்பட்டது.

(1) தூப முற்றிய காரி ருட்பகை துள்ளி யோடிட வுள்ளெழுந்
தீப முற்றவு நீர்த்த கன்றென சேய தாருயிர் தேய்தலாற்
பாபமுற்றிய பேதை செய்த பகைத்தி றத்தினில் வெய்யவன்
கோபமுற்றிமிகச்சிவந்தனனொத்தனன்குணக்குன்றிலே.

(இ - ள்.) தூப முற்றிய காரிருள் பகை துள்ளியோடிட-தூபத்தினான் முதிர்ந்த கருமையாகிய இருட்பகை துள்ளிச்சென்றேக, உள்ளெழும் தீப முற்றவு நீர்த்தகன்றென - உள்ளே தோன்றும் விளக்கமுழுதும் நீர்த்தகன்றாற்போல, சேயதாருயிர் தேய்தலால்-தன்மகனது அரிதாய உயிர் வருந்துதலினால், பாபமுற்றிய பேதைசெய்த பகைத்திறத்தினில்-பாவமிக்கபேதைபோல்வாளாகிய கைகேசிசெய்தபகைவகைமையில், குணக்குன்றில்வெய்ய வன்கோ

பழுற்றி மிகச் சிவந்தனனொத்தனன் - உதயகிரியில் ஞாயிறு கோபமிகுந்து மிகச் சிவந்து தோன்றினவனை யொத்திருந்தனன்.—

இது தற்குறிப்பேற்றம். குணக்குன்று என்றது உதயகிரியை, பேதை என்றது மாதர் பருவத்தைக் குறித்ததன்று, பெண்ணென்னுந் துணையாய் நின்றது. சேய் என்பது ஆகுபெயர்; ஈண்டுத் தயரதனை. பேதையென்றது கைகேசியை. 'தெய்வமேனி படைத்தசேயொளி போன்மழுங்கினதீபமே' என்றதனை வற்புறுத்தற்குத் 'தீபமுற்றவுநீர்த்தகன்றெனசேயதாருயிர்தேய்தலால்' என்றதென்க. (சுக)

(2) மூவராய்முத லாகி மூலம தாகி ஞாலமு மாகுமத்
தேவ தேவர் பிடித்த போர்வி லொடித்த சேவகர் சேணிலம்
காவன் மாமுடி சூடு பேரெழில் காண லாமெனு மாசைகூர்
பாவை மார்முக மென்ன முன்ன மலர்ந்த பங்கய ராசியே.

(இ - ள்.) மூவராய் முதலாகி-மும்மைப் பெருந்தேவராகி அவருக்குண் முதல்வராகி, ஞாலமதாகி-உலகப்பேருருவாகி,அத்தேவதேவர்பிடித்த போர்வி லொடித்தசேவகர்-அம்மகாதேவனாகிய சிவன் கையிற்பிடித்த போர்த்தொழிற் கமைந்த வில்லையொடித்த ஆண்மையுடையார், சேணிலம் காவல் மாமுடி சூடுபேரெழில்காணலாமெனுமாசைகூர்பாவைமார்முகமென்ன - இடமகன்ற வுலகத்தைக் காத்தற்றொழில்செய்யும் பெருமுடிபுனையும் பெரியகாட்சியினைக் காணலாமென்னு மாசைமிகுந்த மாதரார்முகமென்ன, பங்கயராசி மலர்ந்த-தாமரைமலரின்கூட்டம் மலர்ந்தன.—எ-று.

மூவரென்றது பிரமன்மாலுருத்திரரை; அவருள் முதல்வன் காத்தற்றொழில் செய்பவனாகலின் 'முதலாகி' என்றும், அவன் அயர்வருமமரர்கட்கதிபதியாய் நித்தியவிபூதியின்கண் நித்தர்முத்தரால் வழிபடுவானாகலின் 'மூலமதாகி' என்றும், அவன் உலகப் பேருருவாகிய விராட்டுருவனாகலின் 'ஞாலமுமாகி' என்றும், அவன் சனகிபொருட்டா அறுபதினாயிரவராகிய அளவிலாற்றலர் சுமந்து கொடுவந்த ஈசன் வில்லையிறுத்த மிடுக்கினையுணர்த்த 'அத்தேவ தேவர்பிடித்த போர்விலொடித்த சேவகர்' என்றும்,அவனது முடிபுனைகோலங்காணு மவாவினான் மாதர்முகமலர்தலை விபரீதவுவமையாற் 'பாவைமார்முக மென்னமுன்னமலர்ந்தபங்கயராசி' என்றுங்கூறினார். பாவைமார் ஆகுபெயர். இவ்விரண்டுசெய்யுளானுஞ் சூரியோதய முணர்த்தப்பட்டது. (சுஉ)

இன்னவேலையினேழுவேலையுமொத்தபோலவிரைந்தெழுந்
தன்னமாநகர்மைந்தன்மாமுடிசூடும்வைகலிதாமெனாத்
துன்னுகாதல்துரப்பவந்தவைசொல்லலாம்வகையெம்மனோர்க்
குன்னலாவனவல்லவென்னினுமுற்றபெற்றியுணர்த்துவாம்.

(இ - ள்.) இன்னவேலையின் - இவ்வமையத்து, எழுவேலையு மொத்த போல-எழுகடலு மொன்றானாற்போல, விரைந்தெழுந்து-விரைவாயெழுந்து,

அன்னமாநகர்-அப்பெருநகருள், மைந்தன் மாமுடி சூடும் வைகலி தாமெனு-வீரன் பெருமுடி புனையுநாளிதுவென்று, துன்னுகாதல் துரப்ப - நெருங்கிய ஆசைதுரப்ப, வந்தவைசொல்லலாம் வகை எம்மனோர்க்கு உன்னலாவன அல்ல என்னினும்-வந்தவைகளைச்சொல்லலாம் பகுதிஎம்மவரால் நினைப்பன வல்லவேனும்,உற்றபெற்றியுணர்த்துவாம்-தக்கவகையையறிவிப்பாம்.—எ-று.

சனங்களின் மிகுதியைநோக்கி 'எழுவேலையுமொத்தபோல விரைந்தெழுந்து' என்றார். உம்மை அதனருமையையுணர்த்திநின்றது.இதுகவிக்கூற்று.

கலி விருத்தம்.

(1) குஞ்சர மனையார் சிந்தைகொ ளிளையார்
பஞ்சினை யணிவார் பால்வளை தெரிவார்
அஞ்சன மெனவா ளம்புக ளிடையே
நஞ்சினை யிடுவார் நாண்மலர் புனைவார்.

(இ-ள்.) குஞ்சரமனையார்-யானைபோல்வாரது, சிந்தைகொளிளையார்-மனத்தைக் கவர்கின்ற திருவையொத்த மாதர், பஞ்சினையணிவார்-செம்பஞ்சினைக் காலிற் கூட்டுவர், பால்வளை தெரிவார் - கையில் வெண்மையாகிய வளையலையணிவர், அஞ்சனமென-கண்ணின்மையிடுவதாக, வாளம்புகளிடையே நஞ்சினை யிடுவார் - வாளு மம்புமெனப்படு மவற்றினிடையே விடத்தை யிடையிடுவர், நாள் மலர் புனை வார்-அன்றலர்ந்த மலரினை யணிவர்.—

வாளு மம்பும் கண்ணுக்குவமை. இளையாளெனத் திருமகளைக்கூறுதல் வழக்கேனுமவளையன்னராகலின் 'இளையா' ரென்றார். பஞ்சென்றது செம்பஞ்சினை. 'பால்வளை' யென்றது வெள்வளையென்னுந்துணையாய் நின்றது.(சுசு)

அறுசீர்க்கழி நெடிலடியா சிரியவிருத்தம்.

(2) பொங்கிய வுவகை வெள்ளம் பொழிதரக் கமலம் பூத்த
சங்கையில் முகத்தார் நம்பி தம்பிய ரனைய ரானார்
செங்கய னறவ மாந்திக் களிப்பெனச் சிவக்குங் கண்ணார்
குங்குமச் சுவடு நீங்காக் குவவுத்தோட் குமர ரெல்லாம்.

(இ-ள்.) பொங்கிய வுவகை வெள்ளம் - மிகுந்த மகிழ்ச்சி வெள்ளம், பொழிதர-பொழிய, கமலம்பூத்த சங்கையில் முகத்தார்-தாமரைபோன்மலர்ந்த சங்கையில்லாத முகத்தினையுடையராய், செங்கயல்-செந்நிறத்தையுடைய கயல்மீன், நறவமாந்தி - கள்ளினையருந்தி, களிப்பென சிவக்கும் கண்ணார்-களிப்பென்று சொல்லச் சிவக்கும் கண்ணையுடைய மாதர், குங்குமச் சுவடு நீங்காத-குங்குமத்தின்பொறியை நீங்காத, குவவுதோள் குமரரெல்லாம்-குவிதலையுடைய தோளையுடைய வீரர்களெல்லாம், நம்பி தம்பியரனையரானார் - இறைவனது தம்பியரை யொத்திருந்தனர்.—

செங்கயல் நறவமாந்துதலின்மையான் இல்பொருளுவமை என்க. ஊடனிகழ்ச்சியாற் கண்சிவத்தலைக் கூறினர்;அது குங்குமச்சுவடு நீங்காக் குவவுத்தோளென்பதனாற் பெறுதும்; (கூரு)

(3) மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை யொத்தார்
வேதியர் வசிட்ட னொத்தார் வேறுள மகளி ரெல்லாம்
சீதையை யொத்தா ரன்ன டிருவினை யொத்தா ளவ்வூர்ச்
சாதுகை மாந்த ரெல்லாந் தயரதன் றன்னை யொத்தார்.

(இ - ள்.) கற்பின்மிக்கார் மாதர்கள் கோசலை மனத்தை யொத்தார்-கற்பின்மிக்காராகிய மாதரார் கோசலை மனத்தை யொத்திருந்தனர், வேதியர் வசிட்டனொத்தார்-அந்தணர்கள் வசிட்டனை யொத்திருந்தனர், வேறுள மகளிரெல்லாம் சீதையையொத்தார்-அவரை யொழிந்த மாதரெல்லாம் சனகியை யொத்திருந்தனர், அன்னள் திருவினையொத்தாள் - அச்சனகி திருமகளை யொத்திருந்தனள், அவ்வூர் சாதுகை மாந்தரெல்லாம் தயரதன் தன்னையொத்தார்-அந்நகரிற்சாந்தமிக்கமனிதரெல்லாம் தயரதனையொத்திருந்தனர்.—

கற்புடையார் கணவனையன்றி மகிழாமையாற் சீராமன் முடிபுனைவதாக மகிழ்வது கோசலை தன்மக னரசுபெறுவதுபோல்வதாகலின் 'கற்பின்மிக்கார் கோசலைமனத்தை யொத்தார்' என்றும், அந்தணர்தம் வேள்விக்கிடை யூறில்லாமை மகிழ்தலின் வசிட்டனையும், ஏனைய மகளிர் காதலானடி மகிழ்தலின் 'சீதையையும் ஒத்தார்' என்றும், அவள் திருவின் திருவவதாரமாகலின் 'திருவினையொத்தாள்' என்றும், நகரமாந்தரெல்லாம் தங்காதற் புதல்வன்போன் மகிழ்கின்றமையின் 'தயரதன்றன்னையொத்தார்' என்றுங்கூறினர். (சுசு)

(4) இமிழ்திரைப் பரவை ஞால மெங்கணும் வறுமை கூர
உமிழ்வதொத் துதவு காத லுந்திட வந்த தன்றே
குமிழ்முலைச் சீதை கொண்கன் கோமுடி புனைதல் காண்பான்
அமிழ்துணக் குழுவு கின்ற வமரரி னரச வெள்ளம்.

(இ - ள்.) குமிழ்முலை சீதை கொண்கன் - குமிழ்போலு முலைகளையுடைய சனகி கணவனாகிய சீராமன், கோமுடி புனைதல்காண்பான் - சிறந்த முடியினைச் சூடிக் கொள்ளுதலைக் காண்பதற்கு, அமிழ் துணக்குழுவுகின்ற அமரரின்-அமுதமுண்ணத்திரண்ட தேவரைப்போல, அரசவெள்ளம் - அரசரின் கூட்டம், இமிழ்திரை பரவைஞாலமெங்கணும் வறுமைகூர-ஒலிக்கின்ற அலைகளையுடையகடல்சூழ்ந்த உலகமெங்கும் வறியதாக, உமிழ்வதொத்துதவு காத லுந்திடவந்தது - உமிழ்வதை யொத்துதவாநிற்கு மாசை தம்மைச் செலுத்தவந்தடைந்தது.—

காண்பான் என்பது பானீற்றுத்தொழிற்பெயர்: இவ்வாறே வான்பாக் கென்பன அவ்விகுதிகளாகவரும்; இதனை * "கரப்பாக்கறிந்து" என்புழிப் பரிமேலழகர் கூறலானுமுணர்க. உலகமெங்குமுள்ளாருமீண்டெய்துதலின்

* திருக்குறள், செ - ககஉஎ.

'ஞாலமெங்கணும் வறுமைகூர' என்றார். அமரர்-தேவர்கள். அவர்கள் அமுதுண்ணக்குழுமி நின்றாற்போலும் அரசர் கூட்டம் சிராமன் முடிபுனை கோலங்காண'மூந்துதலின் அதனை யுவமித்தார். கொண்கன்-கணவன். (சு௭)

(5) பாகியல் பவளச் செவ்வாய்ப் பணைமுலைப் பரவை யல்குல்
தோகையர் குழாமு மைந்தர் சும்மையுந் துவன்றி யெங்கும்
ஏகுமி னேகு மென்றென் றிடையிடை நிற்ற லல்லால்
போகில மீள கில்லா பொன்னகர் வீதி யெல்லாம்.

(இ-ள்.) பாகியல் பவளம் செவ்வாய் பணைமுலை பரவையல்குல் தோகையர் குழாமும் - பாகுபோலு நிகழ்கின்ற பவளம்போலும் செவ்வாயையும் பருத்த முலையையும் கடல்போலு மாழ்ந்த வல்குலையுமுடைய தோகைபோல்வார் கூட்டமும், மைந்தர் சும்மையும் துவன்றி - ஆடவரது கூட்டமு நெருங்கி, எங்கும் ஏகுமின் ஏகும் என்று என்று - எவ்விடத்துஞ் சென்மின் சென்மின் என்று என்று, இடை இடை நிற்றலல்லால் - அவ்வவ்விடங்களிலே நிற்பதல்லாமல், பொன்னகர் வீதியெல்லாம் போகில மீளகில்லா - அழகிய வீதியெங்கும் போகாநின்றில மீண்டனவுமல்ல.—

ஏகுமினேகுமென்னு மடுக்கு விரைவுப்பொருளது; என்று என்றென்றது மிகுதிப்பொருளது; இடையிடை என்றது பன்மைப்பொருளது. (சு௮)

(6) வேந்தரே பெரிதென் பாரும் வீரரே பெரிதென் பாரும்
மாந்தரே பெரிதென் பாரு மகளிரே பெரிதென் பாரும்
போந்ததே பெரிதென் பாரும் புகுந்ததே பெரிதென் பாரும்
தேர்ந்ததே தேரி னல்லால் யாவரே தெரியக் கண்டார்.

(இ-ள்.) வேந்தரே பெரிதென்பாரும் - அரசர் வெள்ளமே மிகுதியென்பாரும், வீரரே பெரிதென்பாரும் - வீரர் கூட்டமே மிகுதியென்பாரும், மாந்தரே பெரிதென்பாரும் - மக்கள் கூட்டமே மிகுதியென்பாரும், மகளிரே பெரிதென்பாரும் - மாதர் கூட்டமே மிகுதியென்பாரும், போந்ததே பெரிதென்பாரும் - வந்த சனத்திரளே மிகுதியென்பாரும், புகுந்ததே பெரிதென்பாரும் - அடைந்த சனத்திரளே மிகுதியென்பாரும், தேர்ந்ததே தேரினல்லால்-அறிந்ததே யறிந்தவளவையிற் கூறியதன்றி, யாவரே தெரிய கண்டார்-எவரே முழுதுமறியவல்லவர்.—

வீரரே பெரிதென்பாரு மென்பதற்கு * "அந்தணாளர்க்கரைசுவரைவின்றே" என்பதனால் அந்தணர் கூட்டமென்பாருமுளர்; அஃது வேந்தர் பின்னிற்றியின்மையானும், வீரத்தன்மை அரசருக்கல்லது அந்தணர்க்குக் கூறுதல் சாலாமையானும், வீரருள் வீரன் மாமகனென்பதற்கும் அந்தணருட்சிறந்த அந்தணன் மகனெனப்படாமையானும் அஃது உரையன்மையறிக. (சு௯)

* தொல், பொருள். உரி - சூ - ௭சு,

குவளையினெழிலும்வேலின்கொடுமையுங்குழைத்துக்கூட்டித்
திவளுமஞ் சனமென் றேய்ந்த நஞ்சினைத் தெரியத் தீட்டித்
தவளவொண்மதியுள் வைத்த தன்மைசால் தடங்கணல்லார்
துவளுநுண்ணிடையாராடுந்தோகையங்குழாத்திற்றொக்கார்.

(இ - ள்.) குவளையினெழிலும் - குவளைமலரி னழகையும், வேலின் கொடுமையும் - வேலினது தீமையும், குழைத்து கூட்டி-ஒன்றுபடச்செய்து சேர்த்து, திவளும் அஞ்சனம் என்று ஏய்ந்த நஞ்சினை தெரிய தீட்டி-நெருங்கியமை யென்று சொல்லப்பட்டு அமைந்தவிடத்தினைத் தெரியத்தடவி, தவளம் ஒள்மதியுள் வைத்த தன்மை சால் தடங்கணல்லார் - வெண்மையாகிய ஒள்ளிய சந்திரனில் வைத்த தன்மை நிரம்பிய விசாலமாகிய கண்ணையுடைய மாதரராகிய, 'துவளுநுண்ணிடையாராடும் தோகையங்குழாத்தின் தொக்கார்- துவள்கின்ற நுட்பமாகிய இடையினையுடைய மாதர்கள் ஆடுகின்ற மயிலின் கூட்டத்தை யொத்திருந்தனர்.—எ-று.

அழகிற்குவளையும் கொடுமையில் வேலையு மொன்றுபடச்சேர்த்து மையென்னும் விடந்தடவிய தடங்கண்ணை மதியுள் வைத்தாற்போலென்றமையான் இது இல்பொருளுவமையென்னு மணிநலம்படவந்ததென்க. இதனான் அவர் மதியன்ன முகத்தாரென்பதூஉம் பெறப்பட்டது. தவளமதி வெண்மையாகிய மதி. 'தவண்மதிபுனையரன்' எனமுற்கூறலானுமுணர்க. இடைதுவளலான் ஆடுந்தோகையோடுவமித்தார். இவ்வேழு செய்யுளானுமாதராடவர் முடிபுனை கோலங்காணவந்தமை யுணர்த்தப்பட்டது. (எ௰)

நலங்கிளர் பூமி யென்னு நங்கையை நறுந்து ழாயின்
அலங்கலான் புணருஞ் செல்வங் காணவந் தடைகி லாதார்
இலங்கையி னிருத ரேயிவ் வேழுல கத்து வாழும்
விலங்கலு மாசை நின்ற விடாமத விலங்க லேயால்.

(இ - ள்.) நலம் கிளர் பூமியென்னு நங்கையை - நன்மைமிகுந்த புவியென்னு மங்கையை, நறுந்துழாயின் அலங்கலான் புணரும் செல்வம்-நறுமணங்கமழும் துளவமாலையணிந்த சீராமன் அடையும் செல்வம், காணவந்தடைகிலாதார் - காணவந்தடையப்பெறாதவர், இலங்கையின் நிருதரே-இலங்காபுரத்து அரக்கரேயாம், இவ்வேழுலகத்து வாழும் விலங்கலும் - அன்றி இவ்வேழுலகத்தினும் கிடந்த மலைகளும், ஆசைநின்ற விடாமத விலங்கலே - திசையினின்ற மதம் விடாதுபொழியும் யானைகளுமாம்.—எ-று.

மணிமுடிபுனையுங் கோலங்காணப் பெறாதார் பகைமையா னரக்கரேயாகலின் அவரைப் பிரிநிலை ஏகாரத்தாற் பிரித்தும், அசேதனப்பொருளாகலின் மலைகளையும், திசைதாங்குவவன்றி நீங்காமையான் 'ஆசைநின்ற விடாமதவிலங்கலையு' முடன் கூறினர். செல்வங்காணவந்தடைகிலாதார் இலங்கையினிருதரேயன்றி விலங்கலும் ஆசைநின்ற மதவிலங்கலுமாமென வினைமுடிக்க.

அரக்கர் பிறவிடத்து முள்ளாரேனும் இலங்கையில்அவர்க்கரசனிருப்பதுநோக்கி, 'இலங்கையினிருந்தரே' என்றார். இதனுன் முடிபுனைகோலங் காணவாராதாரும் வாராதனவுமுணர்த்தப்பட்டன. (எக)

(1) சந்திரர் கோடி யென்னத் தரளவெண் கவிகை யோங்க
அந்தரத் தன்ன மெல்லா மார்ந்தெனக் கவரிதுன்ன
இந்திரற் குவமை சாலு மிருநிதிக் கிழவ ரெல்லாம்
வந்தனர் மவுலி சூட்டு மண்டப மரபிற் புக்கார்

(இ - ள்.) சந்திரர் கோடியென்ன தரளவெண் கவிகை யோங்க-சந்திரர் கோடியென்று சொல்லவெண் முத்தக்குடை நிழலைச்செய்ய, அன்னமெல்லாம் அந்தரத்தார்ந்தாலென கவரிதுன்ன-அன்னங்களெல்லாம் அந்தரத்திற் பொருந்தினாற்போலக்கவரிபுடையிரட்ட, இந்திரற்கு உவமைசாலும் இருநிதிக்கிழவரெல்லாம் - இந்திரனுக்குவமை நிரம்பிய பெருஞ்செல்வத்துக்குரியவரெல்லாம், மவுலி சூட்டு மண்டப மரபின் வந்தனர் புக்கார் - முடிபுனையு மண்டபத்து மரபின்வந்து புகுந்தனர்.—

சந்திரரென்றது பூரணசந்திரரை, குடைகள் பலவாகலானு முத்தத்தினுயவாகலானும் 'சந்திரர்கோடி' யென்றார். அவர் இந்திரதிருவமுடைமையான் 'இந்திரற்குவமைசாலு மிருநிதிக்கிழவரெல்லாம்' என்றதென்க. * "வீறுசால்மன்னர் விழையுங்குடியுள" என்றதூஉமிப் பெற்றிநோக்கி. (எஉ)

(2) முற்பயந் தெடுத்த காதற் புதல்வனை முறையி னேடும்
இற்பயன் சிறப்பிப் பாரி னீண்டிய வுவகை தூண்ட
அற்புதன் றிருவைச் சேரு மருமணங் காணப் புக்கார்
நற்பயன் றவத்தி னுய்க்கு நான்மறைக் கிழவ ரெல்லாம்.

(இ - ள்.) முன்பயந்து எடுத்த காதல் புதல்வனை - முன்னை நல்வினையாற் பெற்றெடுத்த ஆசையையுடைய மகனை, முறையினேடும் - முறையினல், இல்பயன் சிறப்பிப்பாரின்-மணவினை அயர்விப்பவர்போல், ஈண்டிய உவகை தூண்ட - நெருங்கிய மகிழ்ச்சி தூண்டலால், நற்பயன் தவத்தின் உய்க்கும் நான்மறைக்கிழவரெல்லாம் - நன்மையாகிய பயனைத் தவத்திற்செலுத்த நான்குவேதங்களை யறிந்துடைய மறையோரெல்லாம், அற்புதன் திருவைசேரு மருமணம் காணபுக்கார் - அற்புதனுகிய இறைவன் திருவையடையும் அருமையாகிய மணங்காணப் புகுந்தனர்.—எ-று.

அற்புதன் என்றது சிராமனை; பேறுவேண்டாது தவத்தைச் செய்பவராகலின் 'நற்பயன்றவத்தினுய்க்கு நான்மறைக்கிழவரெல்லாம்' என்றார். இற்பயன் என்றது மனையறத்தின்பயனை. மறைக்கிழவரென்றது அந்தணரை. இவ்விரண்டுசெய்யுளானும் முடிபுனை மண்டபத்துஅரசருமந்தணருமுறையே வந்தமையுணர்த்தப்பட்டது. (எந)

* நான்மணிக்கடிகை, செ - ருஉ.

(1) விண்ணவர் விசும்பு தூர்த்தார் விரிதிரை யுடுத்த கோல
மண்ணவர் திசைக டூர்த்தார் மங்கல மிசைக்குஞ் சங்கம்
கண்ணகன் முரசி னோதை கண்டவர் செவிக டூர்த்த
எண்ணருங் கனகமாரி யெழுதிரைக் கடல்க டூர்த்த.

(இ - ள்.) விண்ணவர் விசும்பு தூர்த்தார்-தேவர்கள் ஆகாயத்தை மறைத்தனர், விரிதிரை யுடுத்த கோல மண்ணவர் திசைக டூர்த்தார் - விரிந்த அலைகளையுடைய கடலை யுடுத்த அழகிய மண்ணுலகத்தவர் திசைகளை மறைத்தனர், மங்கல மிசைக்கும் சங்கம் - மங்கலத்தைக்குறிக்கும் சங்கினோடு, கண் அகல் முரசி னோதை - கண்ணகன்ற முரசி னோசையும், கண்டவர் செவிகள் தூர்த்த - காணவந்தவர் காதுகளைச் செவிடுபடச்செய்தன, எண் அருகனக மாரி - எண்ணற்கரிய பொன்மழை, எழுதிரைகடல்கள் தூர்த்த - எழுகடலினையுந் தூர்த்தன.—

மங்கலமிசைக்குஞ் சங்கமென்றது மங்கலத்திற் குறிக்குஞ் சங்கினை, கனகத்தினைமாரியாக வுருவகஞ்செய்தார். எழுதிரைக்கடலென்பதற்குத்திரைகளையுடைய ஏழாகிய கடலென்றதன்றி எழுகின்ற திரைகளையுடைய கடலென்றுரைப்பினு மமையும். (எச)

(2) விளக்கொளி மறைத்த மன்னர் மின்னொளி மகுட கோடி
துளக்கொளி விசும்பி னூருஞ் சுடரையு மறைத்த சூழ்ந்த
அளக்கர்வாய் முத்த மூரன் முறுவலா ரணியின் சோதி
வளைக்கலா மென்றவ் வானோர் கண்ணையு மறைத்த வன்றே.

(இ - ள்.) மன்னர் மின்னொளி மகுடகோடி விளக்கொளி மறைத்த - அரசரது மின்போலு மொளிசெய்கின்ற மகுடகோடி விளக்கினொளியை மறைத்தன, துளக்கொளி விசும்பி னூரும் சுடரையு மறைத்த - அன்றியும் அசையு மொளியதாகி ஆகாயத்தினூரும் சந்திர சூரியரையு மறைத்தன, சூழ்ந்த அளக்கர் வாய்முத்த மூரன் முறுவலா ரணியின் சோதி- உலகைச்சூழ்ந்த கடலிற்றோன்றும் முத்தம்போலு நகையினையுடைய மாதர் அணியுமணிகலத்தினொளி, வளைக்கலாமென்ற அவ்வானோர் கண்ணையு மறைத்த - சூழலாமென நினைந்த அத்தேவர்கள் இமையா நாட்டத்தையும் இமைக்கச்செய்தன.—எ-று.

விசும்பினூருஞ் சுடரெனப் பொதுப்படக் கூறினமையாற் சூரியசந்திரரையுணர்த்தின. அவ்வானோர் என்புழி அகரம் பண்டறிசுட்டு. உம்மை யிரண்டின் முன்னது இறந்ததுதழீஇயது; பின்னது உயர்வுசிறப்பு. இவ்விரண்டு செய்யுளானும் அங்கு நிகழ்ந்தமை யுணர்த்தப்பட்டது. (எரு)

(1) ஆயதோ ரமைதி யின்க ணையனை மகுடஞ் சூடற்
கேயுமங்க கலங்க ளான யாவையு மியையக் கொண்டு
தூயநான் மறைகள் வேத பாரகர் சொல்லத் தொல்லை
வாயில்க ணெருக்க நீங்க மாதவக் கிழவன் வந்தான்.

(இ - ள்.) ஆயதோரமைதியின்கண் - அவ்வாறு நடக்கையில், ஐயனை மகுடம்சூடற்கு - ஸ்ரீராமனை முடிசூட்டற்கு, ஏயுமங்கலங்களான யாவையு மியையக்கொண்டு - வேண்டுஞ் சுபகரமான வுபகரணங்க ளனைத்தையும் பொருந்தக்கொண்டு, தூயநான் மறைகள் வேத பாரகர் சொல்ல - பரிசுத்தமான வேதங்களனைத்தையும் வேதபாரகர் சொல்லிக்கொண்டுவர, தொல்லை வாயில்கள் நெருக்க நீங்க - பழமையான வாயில்கள் சனநெருக்க நீங்க, மாதவக்கிழவன் - பெருந்தவத்திற்குரிமையுடையோனாகிய வசிட்டமுனிவன், வந்தான் - அடைந்தனன்.—எ-று.

நான்மறையென்றது - நான்குகூறுமாய் மறைந்த பொருளுமுடைமை யானென்க; அவை தைத்திரியம், பௌடிகம், தல்வாகாரம், சாமமென்பன; இருக்கு, எசுர், சாமம், அதர்வணமெனின் இவை பின்னர் நெடுநாட்கழிவெய்த வேதவியாதர் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினோருணர்தற்கு நான்கு கூறுகச்செய்தமையான் அமையாதென்க. இதனைத் தொல்காப்பியப் பாயிர வுரையில் நச்சினார்க்கினியர் கூறலானுமுணர்க. நான்மறைகளையும் மறையோர் ஓதிவருதலியல்பாகலின் 'தூயநான்மறைகள் வேதபாரகர்சொல்ல' என்றதென்க. இதனை ¶ "ஓதலந்தணர்வேதம்பாட" என்றதனானுமறிக. பிறவுமென்றது புரோகிதர் முதலானோரை வரித்தலும், அங்குரார்ப்பணம், அதிவாசமுதலியனவாகிய சடங்குகளை யியற்றுவது நோக்கியென்க. (எசு)

(2) கங்கையே முதல வாய கன்னியீ றான தீர்த்த
மங்கலப் புன லு நா லு வாரியி னீரும் பூரித்
தங்கியின் வினையிற் கேற்ற யாவையு மளித்து வீர
சிங்கவா தனமும் வைத்துச் செய்வன பிறவுஞ் செய்தான்.

(இ - ள்.) கங்கையே முதலவாய கன்னியீறான தீர்த்த மங்கலம் புனலும் - கங்கைமுதற் கன்னியிறுதியாகிய மங்கலகரமான தீர்த்தப்புனலையும், நாலுவாரியினீரும் - நாற்கடனீரையும், பூரித்து - கலசங்களினிரப்பி, அங்கியின் வினையிற்கேற்றயாவையு மமைத்து - அக்கினிகாரியத்துக்கு இன்றியமையாதன அனைத்து மமைத்து, வீரன் சிங்க ஆதனமும் வைத்து - வீரன் வீற்றிருத்தற்குரிய சிங்காதனமும் வைத்து, செய்வன பிறவும் செய்தான் - செய்யத்தக்க பிறவற்றையும் செய்தனன்.—எ-று.

திசைகளைநோக்கி 'நாலுவாரி' என்றார். கங்கையே முதலவாயகன்னியீறாயதீர்த்தமென்றது - கங்கை, காளிந்தி, சரச்சுவதி, கோதாவரி, நருமதை, சிந்து, காவேரி, கன்னியென்பனவற்றை. அங்கியென்றது வடமொழிச்சிதைவு, நீராட்டுங்கால் இவற்றின் புனலானும் கடலின்புனலானு மாட்டவேண்டன் மரபாகலானுமவை மங்கலப்புனலாகலானு மவற்றையே யோதினார். கன்னியென்றது குமரியாற்றை. சிங்கவாதனமென இவ்வாறு பிரித்துக்கூறினார்; சந்திரவுதயங்கண்டார் என முற்காண்டத்துக் கூறுதல்போலும். இவ்

¶ மதுரைக்காஞ்சி, வரி - சுூ௬சு,

விரண்டு செய்யுளானும் வசிட்டமுனிவன் மகுடாபிடேகத்திற்கு வந்தமைய ன்றி, இன்றியமையாமை யமைத்தமையுமுணர்த்தப்பட்டது. (எஎ)

கணிதநூ லுணர்ந்த மாந்தர் காலம்வந் தடுத்த தென்னப்
பிணியற நோற்று நின்ற பெரியவன் விரைவி னெய்தி
மணிமுடி வேந்தன் றன்னை வல்லையிற் கொணர்தி யென்னப்
பணிதலை நின்ற காதற் சுமந்திரன் பரிவிற் சென்றான்.

(இ - ள்.) கணிதம் நூலுணர்ந்த மாந்தர் - சோதிடநூலையறிந்த புலவர், காலம் வந்தடுத்ததென்ன - காலம்வந்து நெருங்கியதென்ன, பிணியற நோற்றுநின்ற பெரியவன் - பிறவிப்பிணி நீங்க நோற்றுநின்ற பெரியவனாகிய வசிட்டமுனிவன், விரைவினெய்தி - விரைந்தடைந்து, மணிமுடி வேந்தன் தன்னை வல்லையின் கொணர்தி என்ன - மணிகள் பதித்த முடியை யணிதற்குரிய தயரதனை விரைந்து கொணர்கவென்று சொல்ல, பணிதலை நின்ற காதல் சுமந்திரன் பரிவின் சென்றான் - குற்றேவல் தலைக்கணின்ற காதலையுடைய சுமந்திரன் அன்பாய்ச் சென்றனன்.—எ-று.

பிணி - பந்தம். அஞ்ஞானமாகிய பந்தமே பிறவிக்கேதுவாகலின்; பிணியறநோற்பதே தவமென்பார் 'பிணியறநோற்றுநின்ற' என்றார். தான் பெற்றாற்போற் களிக்கின்றமையாற் 'காதற்சுமந்திரன்' என்றதென்க; 'தலங்கள் யாவையும் பெற்றனன்றானெனத்தளிர்ப்பான்' என முற்கூறிப்போந்தமையும் இப்பெற்றிநோக்கியென்க. இதனான் வசிட்டமுனிவன் சுமந்திரனைநோக்கி அரசனை யழைத்துவருகென்ற துணர்த்தப்பட்டது. (எஅ)

விண்டொட நிவந்த கோயில் வேந்தர்தம் வேந்தன் றன்னைக்
கண்டிலன் வினவக் கேட்டான் கைகயள் கோயி னண்ணித்
தொண்டைவாய்மடந்தை மாரிற்சொல்லமற்றவருஞ்சொல்லப்
பெண்டிரிற்கூற்ற மன்னாள் பிள்ளையைக்கொணர்தி யென்றாள்.

(இ - ள்.) விண்தொட நிவந்த கோயில் வேந்தர்தம் வேந்தன் தன்னை - விண்தொட அளாவிய கோயிலின்கண் சக்கரவர்த்தியை, கண்டிலன் - காணானாகி, வினவ கேட்டான் - சொல்லக்கேட்டானாய், கைகயள் கோயில் நண்ணி - கைகேசி திருமாளிகையையடைந்து, தொண்டைவாய் மடந்தைமாரின் சொல்ல - ஆதொண்டங்கனிபோலும் வாயையுடைய மாதர்பாற் சொல்லியனுப்ப, மற்றவரும் சொல்ல - பின் அவரும் சொல்லிமுடிக்க, பெண்டிரில் கூற்றமன்னாள் - மாதரிற் கூற்றம்போல்வாளாகிய கைகேசி, பிள்ளையைகொணர்தி என்றான் - பிள்ளையைக் கொணர்வாயென்றனள்.—எ-று.

தன் கணவனை உயிர்கொல்லச்சமைந்தமையான் 'பெண்டிரிற்கூற்றமன்னாள்' என்றதென்க. 'விண்டொட நிவந்தகோயில்' என்றதிலக்கணை. இதனாற்கைகேசி சிராமனை யழைத்துவருகென்ற துணர்த்தப்பட்டது. (எகூ)

என்றன ளென்னக் கேட்டா னெழுந்தபே ருவகை பொங்கப்
பொன்றிணி மாட வீதி பொருக்கென நீங்கிப் புக்கான்
தன்றிரு வுள்ளத் துள்ளே தன்னையே நினையு மற்றக்
குன்றிவர் தோளி னானை நினைந்துவாய் புதைத்துக் கூறும்.

(இ - ள்.) என்றனள்-என்று கூறினள், என்ன கேட்டான் - என்று கேட்ட சுமந்திரன், எழுந்தபேருவகை பொங்க-எழுந்தபெருமகிழ்ச்சி பெருக, பொன் திணி மாடவீதி பொருக்கென நீங்கி-பொன்னாற்செய்யப்பட்ட மாடங்களையுடைய தெருவை விரைவிற்கடந்து, தன் திருவுள்ளத்துள்ளே தன்னையே நினையும் - தன்னழகிய உள்ளத்தின்கண் தன்னையே நினையாநின்ற, அக்குன்றிவர்தோளினானை-அம்மலைபோலுந்தோளையுடையானாகிய சீராமனை, புக்கான் நினைந்து வாய்புதைத்து கூறும் - அடைந்து நினைந்து வாய்புதைத்துக் கூறுவான்.—எ-று.

பொருக்கென விரைவுக்குறிப்பு. தானே பரம்பொருளென்பதனை அதிமானுட சேட்டிதத்தால் அறியாது நினைத்தலின் 'தன்னையேநினையும்' என்றதென்க. இதற்கு வேறு கூறுவாருமுளர். வாய்புதைத்துக்கூறல் அரசர்பாற் செயற்பாலதாகிய முறைமை. (அ௰)

கொற்றவர் முனிவர் மற்றுங் குவலயத் துள்ளோ ருன்னைப்
பெற்றவன் றன்னைப் போலப் பெரும்பரி வியற்றி நின்றார்
சிற்றவை தானு மாங்கே கொணர்கெனச் செப்பி னாளப்
பொற்றட மகுடஞ் சூடப் போதுதி விரைவி னென்றான்.

(இ - ள்.) கொற்றவர் முனிவர் மற்றுங் குவலயத்துள்ளோர் - அரசர் முற்றத்துறந்த முனிவர் மற்றும் உலகத்திலுள்ளவர், உன்னைப்பெற்றவன் தன்னைபோல பெரு பரிவியற்றி நின்றார்- உன்னைப்பெற்றசக்கரவர்த்தியைப் போல மிக்க அன்புகொண்டு இருக்கின்றனர்; சிற்றவைதானுமாங்கே கொணர்க என செப்பினாள் - சிற்றன்னையாகிய கைகேசியு மங்கழைத்துவரச் சொல்லினள், அப்பொன் தடமகுடஞ்சூடபோதுதி விரைவினென்றான் - அப்பொன்னாலாகிய பெரிய முடிபுனைந்துகொள்ள விரைவில் வருதியென்று கூறினன்.—எ-று.

சிற்றவைதானுமென்றது கைகேசியை; உம்மை இறந்தது தழீஇயது. மற்றுமென்புழியுமது. அரசன் பரிவேபோல் வேறுபாடின்மையான் 'கொற்றவர் முனிவர் மற்றுங் குவலயத்துள்ளோருன்னைப் - பெற்றவன் றன்னைப் போலப் பெரும்பரிவியற்றி நின்றார்' என்றதென்க; கொணர்கவென்ற தீறு தொகுக்கப்பட்டது. ஆங்கே யென்றது அவளிருக்கு மந்தப்புரத்தினை. இதனாற் சுமந்திரன் கைகேசி சொன்னமை யறிவித்த துணர்த்தப்பட்டது. (அக)

ஐயனு மச்சொற் கேளா வாயிர மோலி யானைக்
கைதொழு தரச வெள்ளங் கடலெனத் தொடர்ந்து சுற்றத்
தெய்வகீ தங்கள் பாடத் தேவரு மகிழ்ந்து வாழ்த்தத்
தையலா ரிரைத்து நோக்கத் தாரணி தேரிற் சென்றான்.

(இ - ள்.) ஐயனும் அச்சொல் கேளா - சீராமனும் அம்மொழியைக்கேட்டு, ஆயிரமோலியானை கைதொழுது-ஆயிரமோலியம்மானை வணங்கி, அரசவெள்ளம் கடலென தொடர்ந்து சுற்ற - அரசர்கூட்டம் கடல்போலே நெருங்கிச்சூழ - தெய்வ கீதங்கள் பாட-தெய்வகீதங்களைப்பாட, தேவருமகிழ்ந்து வாழ்த்த - வானோரு மகிழ்ந்து வாழ்த்தெடுப்ப, தையலாரிரைத்து நோக்க - மாதர்களிரைத்துப் பார்க்க, தாரணி தேரிற்சென்றான் - மாலையணிந்த தேரிற் சென்றனன்.—எ-று.

'ஆயிரமோலியானைக் கைதொழுது' என்றது தன் குலதெய்வத்தை வணங்குதல் விதியாகலின். சுற்ற பாட வாழ்த்த நோக்க சென்றானென வினைமுடிக்க. ஐயனுமென்றது ஒருபுடை இறந்தது தழீஇயது. இதனாற் சீராமன் தேரேறிக் கைகேசி மாளிகை சென்றமை யுணர்த்தப்பட்டது. (அஉ)

(1) திருமணி மகுடஞ் சூடச் சேவகன் செல்கின் றானென்
றொருவரி னொருவர் முந்தக் காதலோ டுவகை யுந்த
இருகையுமிரைத்துமொய்த்தாரின் னுயிர்யார்க்குமொன் றாய்ப்
பொருவருந் தேரிற்செல்லப் புறத்திடைக்கண்டார்போல்வார்.

(இ - ள்.) திருமணி மகுடஞ்சூட சேவகன்செல்கின்றான்-சிறந்த மணியினாலாகிய முடிபுனைந்துகொள்ள ஆண்மையுடையானாகிய சீராமன் போகின்றனன், என்று ஒருவரினொருவர் முந்த - என்று நினைந்து ஒருவரோடொருவர் முற்பட்டுச்செல்ல, காதலோடுவகையுந்த - ஆசையுடன் மகிழ்ச்சியும் செலுத்த, இன்னுயிர் யார்க்குமொன்றாய் பொருவரு தேரிற்செல்ல - இனிமையாகிய உயிர் எவர்க்கு மொருவடிவமாய் ஒப்பற்ற தேரிற்போக, புறத்திடை கண்டார்போல்வார்-புறத்திற் கண்டவர்போலாகி, இருகையுமிரைத்து மொய்த்தார் - இரண்டுகையையு மிரைத்து நெருங்கினர்.—

இருகையுமிரைத்து மொய்த்தல் - தொழிற்றன்மை. காரணகாரியமாகலின் 'காதலொடுவகை' யெனமுறையேகூறினார். 'இன்னுயிர் யார்க்குமொன்றாய்' என்றார் யாவருள்ளு மந்தரியாமியாய் நிற்பவனாகலினென்க. இதனான் நகரமாந்தர் இரைத்து மொய்த்தமை யுணர்த்தப்பட்டது. (அ௩)

(2) துண்ணெனுஞ் சொல்லாள் சொல்லச் சுடர்முடி துறந்து தூய
மண்ணெனுந் திருவை நீங்கி வழிக்கொளா முன்னம் வள்ளல்
பண்ணெனுஞ் சொல்லி னார்தந் தோளெனும் பணைத்த வேயும்
கண்ணெனுங் காலவேலு டைநெடுங்கானம் புக்கான்.

(இ - ள்.) துண் எனும் சொல்லாள் சொல்ல - துண்ணென்ற சொல்லையுடைய கைகேசி சொல்ல, சுடர்முடி துறந்து - ஒளியையுடைய முடிபுனைதலைத்தவிர்ந்து, தூயமண் என்னும் திருவை நீங்கி வழிகொளா முன்னம் - பரிசுத்தமாகிய மண்ணென்னுஞ்செல்வத்தை நீங்கி வழிக்கொள்ளாமுன்னம், வள்ளல் - வள்ளற்றன்மையையுடைய சீராமன், பண் என்னுஞ் சொல்லினார் தம்தோளென்னும் பணைத்தவேயும் - பண்ணென்கின்ற மொழியையுடைய மாதரது தோளென்கிற பருத்தமூங்கிலும், கண் என்னும்காலன்வேலு மிடைநெடு கானம் புக்கான் - கண்ணென்கிற காலனையொத்த வேலுநெருங்கிய பெருங்கானமடைந்தனன்.—

கானென வுருவகஞ்செய்ததற்கேற்பத் 'தோளை' வேயாகவும், 'கண்ணை' வேலாகவும் கூறினார். வருவதறியாது கூறலின் 'துண்ணெனுஞ்சொல்லாள்' என்றார். வள்ளலென்றார் தான்பெற்ற அரசச்செல்வத்தைத் தம்பிக்களிக்குங் கொடைச்சிறப்புநோக்கி. (அச)

(3) சுண்ணமு மலருஞ் சாந்துங் கனகமுந் தூவ வந்து
வண்ணமே கலையு நாணும் வளைகளுந் தூவு வாரும்
புண்ணுறவனங்கன் வாளி புழைத்ததம் புணர்மென்கொங்கை
கண்ணுறப் பொழிந்த காம வெம்புனல் கழுவு வாரும்.

(இ - ள்.) சுண்ணமு மலரும் சாந்துங் கனகமுந் தூவவந்து - பொற்சுண்ணமும் மலரும் சாந்தமும் பொன்னுந் தூவும்படி வந்து, வண்ணமேகலையும் நாணும் வளைகளுந் தூவுவாரும் - அழகிய மேகலையு நாணும் வளையலுந் தூவுவாரும், புண்ணுற அனங்கன் வாளி புழைத்ததம் புணர்மென் கொங்கை - புண்ணெய்த மாரனம்பு தொளைத்த தம் பரந்த மென்மையாகிய முலையை, கண்ணுற பொழிந்த காம வெம்புனல் கழுவுவாரும் - கண்ணினின்றும் பொழிந்த காமமாகிய கொடிய நீராற் கழுவுவாரும்.—

நாணுமுடன்கூறியது அவர் அதனையு நீங்கினமையானென்க. அனங்கனென்றது மாரனை, அவன் உருவிலியாகலின். சுண்ணம் என்றது பொற்சுண்ணத்தை. புண்ணுறவென்றது காரியப் பொருட்டாகிய செயவெனெச்சம். (அரு)

(4) அங்கண னவனி காத்தற் காமிவ னென்ன லாமோ
நங்கணன் பிலனென் றுள்ளந் தள்ளுற நடுங்கி நைவார்
செங்கணுங் கரிய கோல மேனியுந் தேரு மாகி
எங்கணுந் தோன்று கின்றா னெனைவரோ விராம னென்பார்,

(இ - ள்.) நங்கண் அன்பிலன் என்று உள்ளம் தள்ளுற நடுங்கி நைவார்-நம்பால் அன்பிலனென்று உள்ளந் தள்ளுற நடுக்கமடைந்து வருந்தி, அங்கணன் அவனி காத்தற்கு ஆம் இவன் என்னலாமோ - அழகிய கண்ணுளனாகிய இவன் நிலத்தினை யோம்புதற்காமென்று சொல்லலாமோ, செங்க

ணும் கரிய கோலமேனியும் தேருமாகி எங்கணும் தோன்றுகின்றான் - செம்மையாகிய கண்ணும் கரிய கோலமும் தேருமுடையானாகி யாண்டுந் தோன்றுகின்றனன், இராமன் எனைவரோ என்பார் - இராமன் எத்தனை பெயரோ என்பாரும்.—எ-று.

ஓகாரமெதிர்மறை. 'எங்கணும் செங்கணும் கரிய கோலமேனியுந்தேருமாகித் தோன்றுகின்றான்' என்றார், அம்மாதர் அவனிடைவைத்த காதலான் அவனுருவமெங்குந் தோன்றினமையின். இதுகாறும் சீராமனொருவனெனக்கொண்டாம், கண்ட கண்டவிடம் எல்லாந் தோன்றாநிற்றலின் 'எனைவரோ இராமன்' என்றதென்க. இந்நான்கு செய்யுளானும் கைகேசி மாளிகையடையுஞ் சீராமனை மாதர் தனித்தனி கண்டு வருந்தினமை யுணர்த்தப்பட்டது. (அசு)

இனையரா மகளி ரெல்லா மிரைத்தனர் நிரைத்து மொய்த்தார்
முனைவரு நகர மூதூர் முதிஞரு மிளைஞர் தாமும்
அனையவன் மேனி கண்டா ரன்பினுக் கெல்லை காணார்
நினைவினர் மனத்தால் வாயா னிகழ்ந்தது நிகழ்த்த லுற்றாம்.

(இ - ள்.) இனையராம் மகளிரெல்லாம் இரைத்தனர் நிரைத்து மொய்த்தார்-இத்தன்மையராகிய மாதரெல்லாம் இரைத்து வரிசையாய்ச் சூழ்ந்தனர், முனைவரும் நகரமூதூர் முதிஞரும் இளைஞர் தாமும் - முற்றத்துறந்த முனிவரும் பழயநகரிலுள்ள முதியோரும் இளையோருமாகிய, அனையவன் மேனி கண்டார் - அவன் திருமேனியைக் கண்ட மாந்தர், அன்பினுக்கெல்லைகாணார்-அன்பிற் கவதிகாணாமல், நினைவினர் மனத்தால் வாயால் நிகழ்ந்தது நிகழ்த்த லுற்றாம் - நினைவினையுடையராய் மனத்தாலும் வாக்கினாலு நிகழ்ந்தது கூறத்தொடங்கினோம்.—எ-று.

இனையராமென்றது இவ்வாறு வழிநின்று காதல்கொண்ட மகளிரை, முனைவரென்றது முற்றத்துறந்த முனிவரை. (அஎ)

(1) உய்ந்ததிவ் வுலக மென்பா ரூழிகாண் கிற்பா யென்பார்
மைந்தநீ கோடி யெங்கள் வாழ்க்கைநாள் யாவு மென்பார்
ஐந்தவித் தரிதிற் செய்த தவமுனக் காக வென்பார்
பைந்துழாய்த் தெரிய லாய்க்கே நல்வினை பயக்க வென்பார்.

(இ - ள்.) இவ்வுலகமுய்ந்ததென்பார் - இவ்வுலகம் பிழைத்ததென்பாரும், ஊழிகாண்கிற்பாயென்பார் - ஊழிகாலங் காண்பாயென்பாரும், மைந்த நீ கோடி எங்கள் வாழ்க்கைநாள் யாவுமென்பார்-வீரனே நீ எங்கள் வாழ்நாள் யாவையும் கொள்ளென்பாரும், ஐந்தவித்து அரிதின் செய்த தவம் உனக்காக என்பார்-இந்தியமைந்தையுமடக்கி அருமையாய்ச்செய்த தவமுனக்காகவென்பாரும், பைந்துழாய் தெரியலாய்க்கே நல்வினை பயக்கவென்பார் - பசிய துளவமாலையணிந்த நினக்கே புண்ணியமுண்டாகவென்பாரும்.—

ஐந்தவித்தலென்றது புலன்களிற்செல்லு மவா வைந்தினையு மடக்குதலை. இதனை * "ஐந்தவித்தானாற்றல்" என்புழிக்காண்க. வாழ்க்கைநாளென்றது தம் உயிருடம் பொடுகூடி வாழுநாளை. பைந்துழாய்த் தெரியலென்றது அவனணியு மாலையை; நல்வினையென்றது தாம் இயற்றும் அறப்பயனை. ஆக, பயக்கவென்பன வியங்கோள் வினைமுற்று. (அஅ)

(2) உயரரு ளொண்க ணொக்குந் தாமரை நிறத்தை யொக்கும்
புயல்பொழி மேக மென்ன புண்ணியஞ் செய்த வென்பார்
செலருந் தவங்கள் செய்திச் செம்மலைத் தந்த செல்வத்
தயரதற் கென்ன கைம்மா றுடையம்யாந் தக்க தென்பார்.

(இ - ள்.) உயர் அருள் ஒண்கண் ஒக்கும் தாமரை - உயர்வாகிய அருளையுடைய ஒள்ளிய கண் தாமரைமலரையொக்கும், நிறத்தையொக்கும்புயல் பொழி மேகம் - மழைபொழிகின்ற மேகம் நிறத்தையொக்கும், என்ன புண்ணியம் செய்த என்பார், இவை என்ன நல்வினை செய்தனவென்பாரும், செயல் அரு தவங்கள் செய்து - செய்தற்கருமையாகிய தவங்களைச்செய்து, இ செம்மலைதந்த செல்வம் தயரதற்கு-இச்செம்மலாகிய சிராமனைத்தந்த செல்வத்தையுடைய சக்கரவர்த்திக்கு, யாம் என்ன கைம்மாறுடையம் தக்கது என்பார் - யாம் யாது கைம்மாறு தக்கதாகவுடையே மென்பாரும்.—

கண் அருள்பொழிதற்கிடனாகலின் 'உயரருளொண்கண்' என்றதென்க. உயரருளொண்கண் தாமரை யொக்குமெனவும், புயல்பொழி மேகம் நிறத்தை, யொக்குமெனவுங் கூட்டுக. புத்திரச்செல்வம் பெறுதலும் தாம் பண்டையிற்செய்த நற்றவத்தினாகலின் 'செயலருந்தவங்கள் செய்து' என்றார்.

(3) வாரண மரற்ற வந்து கராமுயிர் மாற்று நேமி
நாரண னொக்கு மிந்த நம்பிதன் கருணை யென்பார்
ஆரண மறித றேற்றா வையனை யணுகி நோக்கிக்
காரண மின்றி யேயுங் கண்கணீர் கலுழ வென்பார்.

(இ - ள்.) ஆரணம் அறிதல் தேற்றா ஐயனை-வேதங்களறிதற்கெட்டாத இறைவனை, அணுகி நோக்கி - நெருங்கிப்பார்த்து, காரணமின்றி எயும்-ஏது இல்லாமலுக்கும், கண்கள்நீர்கலுழ என்பார்-கண்கள் நீர்பொழிய என்பாராய், வாரணம் அரற்ற வந்து-யானை யோலமிட நடந்துவந்து, கராம் உயிர் மாற்று நேமி நாரணன் ஒக்கும் - முதலையினுயிர் வாங்கிய சக்கரப்படையினையுடைய நாரணனை யொக்கின்றது, இந்த நம்பி தன் கருணையென்பார் - இச்சிறந்த சிராமன் அருள் என்பாரும்.—

'வாரணமரற்றவந்துகராமுயிர் மாற்றுநேமி - நாரணன்' என்றது யானை முதலையால் வருந்தி மூலமேயென்றழைப்ப இறைவன் அருளாற்சக்கரப்படையை யெறிந்து நடந்துவந்தம்முதலையைக் கொன்றமைநோக்கி; இதனை -

* திருக்குறள் - செ - உரு.

* "கவளமாகதத்தகரியுய்யப் பொய்கைக்கராங் கொளக் கலங்கியுண்ணினைந்து, துவளாமேல்வந்துதோன்றிவன் முதலைதணிபடச்சுடுபெடைதுரந்தோன்" என்பதனுனறிக. அனுகிநோக்கிக் கலுழ வென்பார் நம்பி தன்கருணை நாரணனெனக்கு மென்பாரென்றெருட்டுக. 'காரணமின்றியேயுங் கண்கணீர்கலுழ' என்றார்அஃதன்பின் றன்மையைவிளக்குதற்கென்க.†"அன்பிற்குமுண்டோ" என்றது மிக்கருத்தேபற்றி. (கூ௰)

(4) நீலமா முகில னன்ற னிறையி னோடறிவு நிற்க
சீலமார்க் குண்டு கெட்டேன் றேவரி னடங்கு வானோ
காலமாக் கணிக்கு நுண்மைக் கணக்கையுங் கடந்து நின்ற
மூலமாய் முடிவி லாத மூர்த்தியிம் முன்ப னென்பார்.

(இ - ள்.) நீலமாமுகிலனன்றன் நிறையினோ டறிவு நிற்க - நீலமாகிய பெரிய மேகம்போன்ற சிராமனது சால்பினோடறிவுநிற்ப, சீலமார்க்குண்டு - ஒழுக்க மெவர்க்குள்ளது, காலமாக கணிக்கும் நுண்மை கணக்கையுங் கடந்துநின்ற - காலமெனமதிக்கு நுட்பமாகிய கணக்கினையுங் கடந்துநின்ற, மூலமாய்-மூலமுதற்பொருளாய், முடிவிலாத மூர்த்தி இம்முன்பன், தேவரினடங்குவானோ என்பார் - எல்லைகடந்த இறைவனாகிய இம்முன்னோன் தேவரினடங்குவானோ என்பாரும்.—

சிராமனொழுக்கத்திற் சிறந்தவனாகலின் 'நீலமாமுகிலனன்றனிறையினோடறிவு நிற்க' என்றார். நிறை என்றது மெய்மை, வெற்றியுடைமை முதலிய குணங்களை; கெட்டேன் என்றது இரக்கத்தின்கட்குறிப்பு. ஓகாரமெதிர்மறை. முக்காலமில்லாதவனாதலானும் மூலமுதற் பொருளாதலானும் முடிவிலாதவனாதலானும் 'காலமாக்கணிக்கு நுண்மைக்கணக்கையுங் கடந்து நின்ற - மூலமாய் முடிவிலாதமூர்த்தி' என்றும், அவன் கரியகோலத்தனாகலினதனை யுவமைப்பாற்படுத்து 'நீலமாமுகிலனன்' என்றுங் கூறியதென்க. ()

(5) ஆர்கலிபகழ்ந்தோர்கங்கையவனியிற்கொணர்ந்தோர்முந்தைப்
போர்கெழு புலவர்க் காகி யசுரரைப் பொருது வென்றோர்
பேர்கெழு சிறப்பின் வந்த பெரும்புகழ் நிற்ப வையன்
தார்கெழு திரடோ டந்த புகழினைத் தழுவி யென்பார்.

(இ - ள்) ஆர்கலி அகழ்ந்தோர் - கடலைத் தொட்டவர், கங்கை அவனியிற்கொணர்ந்தோர் - கங்கையைப் பூமியிற் கொணர்ந்தவர், முந்தை போர்கெழு புலவர்க்காகி அசுரரைப் பொருதுவென்றோர் - முன்னாளில் போரைநாடிய தேவர்க்குத் துணையாகி அசுரரை நூழிலாட்டயர்ந்து வெற்றிகொண்டவர், பேர்கெழு சிறப்பின்வந்த பெரு புகழ் - இவருடைய பெயர் விளங்கிய சிறப்பினையுடைய புகழ், ஐயன் தார்கெழு திரள் தோள் தந்த புகழினை தழுவி நிற்பதென்பார் - இறைவனது வாகைமாலையணிந்த திரண்ட தோளினாற்றரப்பட்ட புகழினைத்தழுவி நிற்பதென்று கூறுவாரும்.—

* பெரிய திருமொழி, கூ-ம் பத்து, க-பதிகம்.
† திருக்குறள்-செ-௭க.

ஆர்கலி-அன்மொழித்தொகை. 'ஆர்கலியகழ்ந்தோர்' என்றது கடலைத் தொட்டசகரரை, 'கங்கையவனியிற் கொணர்ந்தோர்' என்றது பகீரதனை. 'முந்தைப்போர் கெழுபுலவர்க்காகி அசுரரைப் பொருதுவென்றோர்'என்றது தேவர்பொருட்டசுரரைப் பொருதுவென்ற ககு என்பானை. இறைவன் புகழானல்லது அவர்கள் புகழ் விளங்காமையான் 'பேர்கெழுசிறப்பின்வந்த பெரும்புகழ் நிற்பதையன் தார்கெழு திரடோடந்தபுகழினைத்தழுவி' என்றதென்க. புகழினை முன்னர் விளக்கினுமாண்டுக்காண்க. நூழிலாட்டு - போர்.

கலிவிருத்தம்.

(6) சந்தமிவை தாவின்மணி யாரமிவை யாவும்
சிந்துரமு மிங்கிவை செறிந்தமத வேழப்
பந்திகள் வயப்பரி பசும்பொனின் வெறுக்கை
மைந்தவறி யோர்கொள வழங்கென நிரைப்பார்.

(இ - ள்.) சந்தம் இவை தாவில்மணி ஆரம் இவை-சந்தனமிவை கேடில்லாத மணிவடங்களிவை, யாவும் சிந்துரமு மிங்கிவை செறிந்த மதம் வேழம் பந்திகள் வயப்பரி பசும்பொனின் வெறுக்கை - சிந்துரமணிந்த மதத்தையுடைய யானைக்கூட்டங்களிவை வெற்றியுள்ள குதிரைகளிவை செம்பொனிதியிவை, யாவும் மைந்த வறியோர்கொள வழங்குக என நிரைப்பார் - இவையனைத்தையும் வீரனே வறியோர் முகந்துகொள்ள வழங்குகவென்று நிரைப்பாரும்.—

மணிகள் பாடத்திற் குறைவுபடாமையின் 'தாவில்' என வடைமொழி கொடுத்தோதினர். வறியோர் கொள்ளுத லியல்பாகலின் 'வறியோர் கொள வழங்கு' என்றும், அவற்றின் மிகுதிநோக்கி 'நிரைப்பார்' என்றுங் கூறினர். பந்தி - வடமொழிச்சிதைவு. 'வறியோர்கொளவழங்கு' என்றதனை * "வறியார்க்கொன்றீவதேயீகை" என்றதனுனுமறிக. (கூரு)

(7) மின்பொருவு தேரின்மிசை வீரன்வரு போழ்தில்
தன்பொருவில் கன்றுதனி தாவிவரல் கண்டாங்
கன்புருகு சிந்தையொடு மாவுருகு மாபோல்
என்புருகி நெஞ்சுருகி நஞ்சுருகி நிற்பார்.

(இ - ள்.) மின்பொருவு தேரின்மிசை வீரன்வரு போழ்தில் - மின்னலையொத்த தேரின்கண் வீரன்வருமையில், தன்பொருவில் கன்று - தன்னொப்பில்லாத கன்று, தனிதாவி வரல் கண்டு-தனியாகத் தாவிவருவதைக்கண்டு, அன்புருகு சிந்தையொடும் - அன்பினுலுருகுகின்ற மனத்தால், ஆவுருகுமாப்போல் - பசு உருகுவதுபோலும், என்புருகி நெஞ்சுருகி நஞ்சுருகி நிற்பார் - என்பு குழைந்து-மனங்குழைந்து நைந்துருகி நிற்பாரும்.—

* திருக்குறள், செ - உஉக.

சிந்தையொடு என்புழி ஒடு ஆனுருபின் பொருளது. வீரன்வருகையில் கன்று சேதாவரக்கண்டுருகுவதுபோற் கண்டமாந்தருருகி நின்றனர் என உவமமுகத்தாற்கூறினர். 'மின்பொருவு தேரின்மிசை' என்றார்; அதினெளியானும் விரைந்துசென்று மறைதலானுமென்க. (கூச)

(8) சத்திர நிழற்றநிமிர் தானையொடு நானு
அத்திர நிழற்றவரு ளோடவனி யாள்வார்
புத்திர ரினிப்பெறுதல் புல்லிதென நல்லோர்
சித்திர மெனத்தனி திகைத்துருகி நிற்பார்.

(இ - ள்.) சத்திரம் நிழற்ற-கவிகை நிழலைச்செய்ய, நிமிர்தானையொடு - ஓங்கிய சேனையுடன், நானு அத்திர நிழற்ற - பலவகையாகிய அத்திரநிழற்ற, அருளோடவனியாள்வார் புத்திர ரினிபெறுதல் புல்லிதென - அருளால்நிலத்தையாளு மரசர் சிராமனைப்போற் புத்திரரை யினிப்பெறுதல் சிறுமையதென்று சொல்ல, நல்லோர் சித்திர மென தனி திகைத்துருகி நிற்பார் - நல்லதோர் சித்திரமென்று சொல்லும்படி தனித்துத் திகைத்துருகி நிற்பாரும்.—

சத்திரம் அத்திரமென்பன வடமொழிச்சிதைவு. எய்வன எறிவன முதலிய தொடக்கத்தனவாகலின் 'நானுவத்திரம்' என்றதென்க., 'நல்லோர் சித்திரம்' என்றதற்கு நல்லவர் சித்திரமெனக் கூறலுமொன்று. (கூரு)

(9) கார்மினொடு லாயதென நூல்களுலு மார்பன்
தேர்மிசைநம் வாயில்கடி தேகுதல்செய் வானே
கூர்கனக ராசியொடு கோடிமணி யாலும்
தூர்மினெடு வீதியினை யென்றுசொரி வாரும்.

(இ - ள்.) கார்மினொடு - மேகம் மின்னலோடு, உலாயதென - உலாவியதென்ன, நூல்களுலு மார்பன்- நூல்விளங்கு மார்பினையுடைய சிராமன், தேர்மிசை நம் வாயில் கடிதேகுதல் செய்வானே -தேரேறி நம் வாயிலைவிரைந்து நடந்துவருதல் செய்வானே, கூர்கனக ராசியொடு - மிக்க பொற்குவியலோடு, கோடிமணியாலும் - கோடி இரத்தினத்தாலும், நெடுவீதியினை - நீண்ட வீதியை, தூர்மின் என்று சொரிவாரும் - தூர்மி னென்று வழங்குவாரும்.—

கார் - சிராமனுக்குவமை; மின் - நூற்குவமை. ஓ வினு. அரசர் வீதியாதலின் 'நெடுவீதி' என்றார். மார்பன் ஏகுதல் செய்வானேவென்று சொரிவாரு மென்றெட்டுக. (கூசா)

(10) தாய்கையில் வளர்ந்திலன் வளர்த்தது தவத்தால்
கேகயன் மடந்தை கிளர்ஞால மிவனுள
ஈகையி லுவந்தவவ் வியற்கையிது வென்றால்
தோகையிவள் பேருவகை சொல்லலரி தென்பார்.

(இ - ள்.) தாய் கையில் வளர்ந்திலன்-தாயாகிய கோசலைகையில் வளர்ந்திலன், தவத்தால் கேகயன் மடந்தை வளர்த்தது - தவத்தினால் கைகேசி வளர்த்தது, கிளர்ஞால மிவனுள - விளங்குகின்ற உலகினை இவனுள, ஈகையிலுவந்த - கொடுத்தலின் மகிழ்ந்த, அவ்வியற்கை இதுவென்றால் - அவ்வியல்பிதுவாயின், தோகை இவள்பேருவகை சொல்லலரிதென்பார் - தோகைபோல்வாளாகிய இவளது பெருமகிழ்ச்சி சொல்வதரிதென்பாரும்.—

தோகை - ஆகுபெயர். 'வளர்த்தது தவத்தால் கேகயன் மடந்தை' என்றதனுன்-'தாய்கையில் வளர்ந்திலன்' என்றதற்குப்பெற்ற தாயாகிய கோசலைவளர்த்திலளெனக் கொள்க. தவத்தாற்றுனே வளர்த்தவளாகலின் அரசினையுமளிக்க மகிழ்வுகொண்டாளெனக் கூறினுரென்க; பெற்றாரினும் வளர்த்தார்க்கு மிகுதியுங் கழிபேரன்பாகலின். (கஎ)

(11) பாவமு மருந்துயரும் வேர்பறியு மென்பார்
பூவலய மின்றுதனி யன்றுபொது வென்பார்
தேவர்பகை யுள்ளனவிவ் வள்ளறெறு மென்பார்
ஏவல்செயு மன்னர்தவம் யாவதுகொ லென்பார்.

(இ - ள்.) பாவமும் அருந்துயரும் வேர்பறியு மென்பார் - தீவினையுமரிய துயரும், வேரற்றுப்போமென்பாரும், பூவலயம் இன்று தனியன்று பொது என்பார் - வட்டமாகிய நிலவுலகம் இன்று தனிமை அவன் பிறவாதமுன் பொதுமையென்பாரும், தேவர் பகையுள்ளன இவ்வள்ளல் தெறுமென்பார் - தேவரது பகைமையை இவ்வள்ளியோனுகிய சீராமனே அகற்றுமென்பாரும், ஏவல் செயும் மன்னர் தவம்யாவது கொலென்பார் - இவனுக்குக் குற்றேவற்றொழில்செய்யு மரசர் தவந்தான்யாதோ வென்பாரும்.—எ-று.

மந்திரராசமாகிய அவனது திருநாமங்கூறிய மாத்திரையானே பிறவியாகிய பெருங்கடல் கடக்கப்படுதலான் 'பாவமுமருந்துயரும் வேர்பறியும்' என்றும், அவன்மாட்டியாவரு மன்புசெய்கின்றமையானும், பகைவராவாரைச் சிதைக்கு மாற்றலுடையானுகலானும் 'பூவலயமின்று தனியன்றுபொது' வென்றும்; தாடகை முன்னுவாரை வென்றமையானினி அவ்வாறே செய்வானென்பதுபற்றி 'தேவர்பகையுள்ளன விவ்வள்ளறெறும்' என்றும், இவனைத் தமக்கு மன்னனுகப்பெற்ற வரசர் செய்தவ மியாதென்பார் 'ஏவல்செயு மன்னர் தவமியாவதுகொல்' என்றுங் கூறினுர். 'பூவலயமின்று தனியன்றுபொது' எனற்கு இன்று பூவலயம்தனி - இற்றைநாள் சீராமனுக்கே நிலவலயமுரித்து, பொதுவன்று - பலர்க்குமுரித்தன்று எனக் கொண்டுரைப்பதுமொன்று. இப்பதினுருசெய்யுளானும்சீராமன் தேரேறிவரக்கண்டார் கூறுதலுணர்த்தப்பட்டது. (கஅ)

(1) ஆண்டினைய ராயினைய கூறவடல் வீரன்
தூண்டுபுர விப்பொருவில் சுந்தர மணித்தேர்
நீண்டகொடி மாடநிரை வீதிநிறை யப்போய்
பூண்டபுகழ் மன்னனுறை கோயில்புக லோடும்.

(இ - ள்.) ஆண்டு இனையராய்-அங்கு இத்தன்மையராய், இனைய கூற - இம்மொழி கூற, அடல் வீரன்-வெற்றியுள்ள வீரன், தூண்டு புரவி பொருவில் சுந்தரம் மணித்தேர் -தூண்டுகின்ற குதிரைகள் பூட்டிய ஒப்பற்ற அழகிய மணிகளாற் பதிக்கப்பட்ட தேரிலேறி, நீண்ட கொடிமாடம்நிரைவீதி- நீண்ட கொடிகள் கட்டிய மாடங்களை வரிசையாகவுடைய வீதி, நிறையபோய் - நிறையச்சென்று, பூண்ட புகழ் மன்னன் உறைகோயில் புகலோடும் - புகழ் பூண்ட தயரதன் வசிக்கும் மாளிகையிற்புகலும்.—

ஒடு இசைநிறைப்பொருளது. 'இனையகூற' என்றது 'வழங்கென வுரைப்பார்' என்பது தொடக்கமாகியவற்றை. 'புகழுடம்பினையே நிறுத்தினோராகலின் 'பூண்டபுகழ்' என்றார். 'அடல்வீரன்' என்றது ஸ்ரீராமனை. 'ஆண்டு' என்றது அவன் செல்லுமிடத்தை. அவனெழுந்தருளியிருக்கத் தவஞ்செய்தமையின் 'பொருவில் சுந்தரமணித்தேர்' என்றதென்க; இதனைத் * "திருவேங்கடமென்னு-மெம்பெருமான் பொன்மலைமேலேதேனுமாவேனே" எனப் பெரியாரும் பணித்தமையானுமுணர்க. உய்ந்த திவ்வுலகமென்பாரும், காண்கிற்பாயென்பாரும், யாவுமென்பாரும், உனக்காகவென்பாரும், பயக்கவென்பாரும், செய்தவென்பாரும், தக்கதென்பாரும், கருணையென்பாரும், இம்முன்பனென்பாரும், தழுவியென்பாரும், நிரைப்பாரும், நிற்பாரும், நிற்பாரும், சொரிவாரும், சொல்லலரிதென்பாரும், வேர்பறியுமென்பாரும், பொதுவென்பாரும், தேறுமென்பாரும், யாவதுகொலென்பாரும், இனையராய் இனைய கூறப்போய்ப் புகலோடுமென வினைமுடிக்க.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

(2) ஆங்குவந் தடைந்த வண்ண லாசையின் கவரி வீசப்
பூங்குழன் மகளி ருள்ளம் புதுக்களி யாடநோக்கி
வீங்கிருங் காதல் காட்டி விரிமுகக் கமல பீடத்
தோங்கிய மகுடஞ் சூடி யுவகைவீற் றிருப்பக் காணான்.

(இ - ள்.) ஆசையின் கவரிவீச - அன்பாற் சாமரைவீச, பூகுழல் மகளிருள்ளம் புதுக்களியாட - பூவைமுடித்த கூந்தலையுடைய மாதருடைய நெஞ்சம் புதுமகிழ்ச்சியெய்த, ஆங்குவந்தடைந்த அண்ணல் - அங்கேவந்தடைந்த பெரியோனாகிய ஸ்ரீராமன். நோக்கி - பார்த்து, வீங்கிரு காதல் காட்டி-மிக்க அன்பினைக்காட்டி, விரிமுகம் கமலபீடத்து - விரிந்த விடத்தையுடைய தாமரைமலர்போற்செய்த பீடத்தில், ஓங்கிய மகுடம் சூடி - ஓங்கிய முடிபுனைந்து, உவகை வீற்றிருப்பகாணான் - உவகை மிகுந்திருக்கப்பாரானாய்.—எ-று.

'ஆசையின் கவரிவீச' என்பதற்குத்திசைதோறுங்கவரிபுடையிரட்ட எனப்பொருள் கூறலுமொன்று. சிங்கஞ் சுமந்தவணை பதுமவடிவமாகச் செய்யப்பட்டதாகலின் 'விரிமுகக் கமலபீட'மென்றும், பரம்பரையான்வந்த மகுடமாகலின் 'ஓங்கிய மகுடம்' என்றுங் கூறினார். (௩)

* பெருமாள்திருமொழி, ௪-வது திருப்பதிகம், செ - ௰.

(3) வேத்தவை முனிவ ரோடு விருப்பொடு களிக்குமெய்ம்மை
ஏத்தவை யிசைக்குஞ் செம்பொன் மண்டபமினி தினெய்தான்
ஓத்தவை யுலகத் தெங்கு முள்ளவை யுணர்ந்தா ருள்ளம்
பூத்தவை வடிவை யொப்பான் சிற்றவை கோயில் புக்கான்.

(இ - ள்.) ஓத்தவை உலகத்தெங்கு முள்ளவை - வேதங்களையும் உலகத்திலுள்ள ஏனைய அங்கமுதலியவற்றையும், உணர்ந்தார் உள்ளம் பூத்தவை வடிவையொப்பான் - அறிந்த பெரியோருள்ளத்திற் றோன்றியவை தன் திருமேனியாகக்கொண்ட ஸ்ரீராமன், வேத்தவை முனிவரோடு - அரசர் கூட்டம் முற்றத்துறந்த முனிவருடன், விருப்பொடு களிக்கு மெய்ம்மை ஏத்தவை இசைக்கும் - விருப்பினோடு மகிழ்கின்ற மெய்ம்மையாகிய புகழினை யெடுத்துக்கூறும், செம்பொன் மண்டபம் இனிதினெய்தான் - செம்பொன்மயமாகிய மண்டபத்தினை இனிமையாக அடையானாகி, சிற்றவை கோயில் புக்கான் - சிற்றன்னை மாளிகையை யடைந்தனன்.—எ-று.

* "அங்கமாறும் வேதநான்குமாகி நின்றவற்றுளே-தங்குகின்றதன்மையாய்" என்பவாகலின் 'ஓத்தவை யுலகத்தெங்கு முள்ளவையுணர்ந்தாருள்ளம் பூத்தவைவடிவை யொப்பான்' என்றதென்க. 'சிற்றவைகோயில்' என்றது கைகேசி மாளிகையை. ஓத்தவை, உள்ளவை, பூத்தவை வினைப்பெயர்கள். புகலோடும் அண்ணல்காணான் எய்தான்புக்கான் எனவினைமுடிக்க. இம்மூன்றுசெய்யுளானு ஸ்ரீராமன் கைகேசிமாளிகை யடைந்தமை யுணர்த்தப்பட்டது.

புக்கவன் றன்னை நோக்கிப் புரவலன் முனிவர் யாருந்
தக்கதே நினைந்தான் றாதை தாமரைச் சரணஞ் சூடித்
திக்கினை நிமிர்த்த கோலச் செல்வனே செம்பொற் சோதி
மிக்குயர் மகுடஞ் சூட்டச் சூட்டுதல் விழுமி தென்றார்.

(இ - ள்.) புக்கவன்றன்னை - அவ்வாறடைந்த ஸ்ரீராமனை, நோக்கி-பார்த்து, புரவலர் முனிவர் யாரும் - அரசர் முற்றத்துறந்த முனிவர் யாரும், தக்கதே நினைந்தான் - தகுதியாகிய செய்கையே நினைந்தனன், தாதை தாமரை சரணஞ்சூடி - தந்தையாகிய சக்கரவர்த்தி தாமரைமலர்போன்ற பாதங்களை யணிந்து, திக்கினை நிமிர்த்த கோலம் செல்வனே - திசையனைத்தும் வெற்றி கொண்ட அழகிய செல்வமுடைய ஸ்ரீராமனே, செம்பொன் சோதி மிக்கு உயர் மகுடம் - செம்பொன்னொளிமுகுந்துயர்கின்றமுடியை, சூட்ட சூடுதல் விழுமி தென்றார்-அணிய அணிவதுசிறப்புடைய தென்றனர்.—

அழகியனுன் முற்றத்துறந்தாரையுந் துவளச்செய்வதனால் 'திக்கினை நிமிர்த்த கோலச்செல்வன்' என்றமதென்க. இப்பெற்றிநோக்கியே 'ஆடவர் பெண்மையையவாவுந்தோளினாய்' என முற்காண்டத்துக் கூறியதூஉ மென்க. நோக்கி நினைந்தான் மகுடஞ் சூட்டச்சூட்டுதல் விழுமிதென்றார் என வினைமுடிக்க. இதனுன் அரசவையுள்ளார்தாதையே சூடுதல்சிறப்பெனக்கருதினமை யுணர்த்தப்பட்டது. (௯௨)

* திருச்சந்தவிருத்தம், செ-கடு.

ஆயன நிகழும் வேலை யண்ண லு மயர்ந்து தேறாத்
தூயவ னிருந்த சூழ றுருவினன் வருத னோக்கி
நாயக னுரையான் வாயா னானிது பகர்வ னென்னாத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்.

(இ - ள்.) ஆயன நிகழும் வேலை - அத்தன்மையனநடக்கும் பொழுது, அண்ணலும் - பெரியோனாகிய சீராமனும், அயர்ந்துதேறா தூயவன் இருந்த சூழல் - தன்னை மறந்தறியாத பரிசுத்தனாகிய தயரதனிருந்த விடத்தை, தருவினன் வருதல் நோக்கி - தேடிவருதனோக்கி, நாயகன் வாயானுரையான் - கணவனாகிய சக்கரவர்த்தி தானே வாயாற் சொல்லான், நானிது பகர்வன் என்னா - நானே காடுசெல்லென்றதைச் சொல்வனென்று, தாய் என வருவான் முன்னே - தாயென் றெண்ணிவருஞ் சீராமன் முன்னே, கூற்றென தமியள் வந்தாள் - நமனையொப்பத் தன்னந்தனியளாய் வந்தனள்.—

'ஆயன நிகழும்வேலை' என்றது-பிறர் கூறிக்கொள்வது முதலிய என்க. கைகேசி வரம்பெற்றமையான் அரசன் தன்னை மறந்து கிடத்தலானும் பொய்மை யறியா மனத்தனாகலானும் 'அயர்ந்து தேறாத்தூயவன்' என்றும், கூற்றஞ் சென்றுயிர் கோடல்போலச் சீராமன்பாற்சென்று காடுசெல்லென மகுடஞ் சூடுதலினின்றும் பிரித்தலின் அதனை யுவமைமுகத்தாற் 'கூற்றென' என்றும், சீராமன் தன்னைப்பெற்ற தாயாகிய கோசலைபோலுங் கருது மியல்புடையானாகலின் 'தாயென நினைவான்' என்றுங் கூறினார். தருவினன் எச்சமுற்று. இதனாற் கைகேசி சீராமனைக்கண்டமை யுணர்த்தப்பட்டது. ()

வந்தவ டன்னைச் சென்னி மண்ணுற வணங்கி வாய்த்த
சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்றான்
அந்திவந் தடைந்த தாயைக் கண்டவான் கன்றி னன்னான்.

(இ - ள்,) வந்தவள் தன்னை - அவ்வாறடைந்த கைகேசியை, அந்திவந்தடைந்த தாயைக்கண்ட ஆன்கன்றினன்னான் - மாலைக்காலத்து வந்தெய்திய பசுவினைக்கண்ட கன்றினை யொப்பவனாகிய சீராமன், சென்னி மண்ணுற வணங்கி - முடிமண்ணிற் பொருந்த வணங்கி, வாய்த்த சிந்துரம் பவளம் செம் வாய் செங்கையிற் புதைத்து - அமைந்த சிவந்த பவளம்போலும் செம்மையாகிய வாயைச் செங்கையால் மூடி, மற்றை சுந்தரம் தடக்கை தானை மடக்குற துவண்டு நின்றான் - ஏனை யழகிய விசாலமாகிய ஆடைமடங்கத் துவண்டு நின்றனன்.—எ-று.

வாய்பொத்தி யாடையை யொதுக்கி நிற்றல் பெரியார்பாற் செய்யப்படுவனவாகலின் 'செவ்வாய் செங்கையிற் புதைத்து மற்றைத் தடக்கைதானை மடக்குறத் துவண்டு நின்றான்' என்றும். கைகேசிபால் அன்புடையனாகலின் அதனை யுவமைமுகத்தால் 'அந்திவந்தடைந்த தாயைக்கண்ட வான்கன்றினன்னான்' என்றுங் கூறினார். இதனாற் சீராமன் வழிபாடுசெய்தமை யுணர்த்தப்பட்டது. (ாச)

நின்றவன் றன்னை நோக்கியிரும்பினு னியைந்த நெஞ்சிற்
கொன்றுழல் கூற்ற மென்னும் பெயரினிற் கொடுமை பூண்டாள்
இன்றுனக் குணர்த்த லாவ தேயதே யென்னி னாகும்
ஒன்றுனக் குந்தை மைந்த வுரைப்பதோ ருரையுண் டென்றாள்.

(இ - ள்.) நின்றவன் தன்னைநோக்கி - நின்ற ஸ்ரீராமனைப்பார்த்து, இரும்பினுனியைந்த நெஞ்சின் - இரும்பினமைந்த மனத்தால், கொன்றுழல்கூற்றமென்னும் பெயரினில் கொடுமை பூண்டாள் - கொன்றுழலா நிற்கும் நமனென்னும் பெயரினுற்கொடுமைபூண்டவளாகிய கைகேசி, மைந்த-மகனே; உனக்கு உந்தை யுரைப்பதோருரை - உனக்குச் சக்கரவர்த்தி சொல்வதாகிய தோருறுதி, உண்டு-உள்ளது, எயதே - அது அரசனாணையே, இன்று எனக்கு உணர்த்தலாவது - இன்று என்னாலறிவிக்கலாவது, என்னின்-வேண்டுமென்னின், ஆகுமென்றாள் - கூறலாமென்றனள்.—எ-று.

கொடுமைமாறாத சிந்தையளாகலின் 'இரும்பினுனியைந்த நெஞ்சின்' என்றும், உலகிலோருயிரை யொருபோழ்து கோறல்செய்யுங் கூற்றுவனே போலாது உலகமுழுது மொரேபோழ்திற் கொலைத்தொழில் செய்யத்துணிந்தமையின் 'கொன்றுழல் கூற்றமென்னும் பெயரினிற்கொடுமைபூண்டாள்' என்றும், 'நாயகனுரையான் வாயானுனிதுபகர்வன்' என முற்கூறியதனையே வற்புறுத்தற்கு 'இன்றுனக்குணர்த்தலாவதேயதே யென்னினாகும்' என்றும், அது யானே கூறிய வுறுதியன்று, அரசனாணையென்பாள் 'ஒன்றுனக்குந்தை யுரைப்பதோருரை' என்றுங்கூறினாள். இவ்வாறு கூறியதனைத் *"தொத்தலர் பூஞ்சுரிகுழற் கைகேசிசொல்லாற் றொன்னகரந்துறந்து" என்று பெரியாரும் பணித்தமையானறிக. இதனாற்கைகேசி ஸ்ரீராமன் பாலுந்தையறிவிப்ப துண்டென்பதுணர்த்தப்பட்டது. (௱௫)

எந்தையே யேவ நீரே யுரைசெய வியைவ துண்டேல்
உய்ந்தென னடியே னென்னிற் பிறந்தவ ருளரோ வாழி
வந்ததென் றவத்தினாய வருபயன் மற்றொன் றுண்டோ
தந்தையுந் தாயு நீரே தலைநின்றேன் பணிமி னென்றான்.

(இ - ள்.) எந்தையே யேவ - தந்தையே கட்டளையிட, நீரே யுரைசெய - நீரே சொல்ல, இயைவதுண்டேல் - அமைவதாயின், அடியேனுய்ந்தனன் - யான் பிழைத்தேன், என்னிற் பிறந்தவருளரோ - என்போலும் பிறப்பெய்தினோரிருப்பரோ, என் தவத்தினாய வருபயன் வந்தது - என் தவத்தினாற் பெறப்படுவதாகிய பயன் வந்தெய்தியது, மற்றொன்றுண்டோ - வேறொன்றுள்ளதோ, தந்தையுந்தாயு நீரே - தந்தை யாவாருந் தாயாவாரு நீரேயாம், தலைநின்றேன் பணிமினென்றான் - செய்யக் காத்திருக்கின்றேன் கட்டளையிடுமென்றனன்.—எ-று.

வாழி-அசைச்சொல். ஒகார மெதிர்மறை. எ பிரிநிலை. தாய்தந்தையர் சொன் மந்திரமொழியாகலின் தந்தைதாயரே கூறுவதனைக்கேட்டுய்வது கடனாகலின் 'உய்ந்தனன்' என்றும், அவ்வருள்பெற்றாரென்னிற் பிறரின்மையான்

* பெருமாள்திருமொழி, ௯ - வது பதிகம், செ - ௪.

'என்னிற்பிறந்தவருளரோ' என்றும், அது முன்னைப்பிறவிற்செய்த முதுதவத்தானேர்ந்தமையின் 'வந்ததென்றவத்தினைய வருபயன்மற்றென்றுண்டோ' என்றும், அதனைக் காட்டலையிடவேண்டுமென்பான் 'தலைநின்றேன் பணிமின்' என்றுங் கூறினார். இதனாற் சிராமன் தன்னுள்ளக்கருத்தை வெளியிட்டதுணர்த்தப்பட்டது. (௭௬)

ஆழிசூ ழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பின னரச னென்றாள்.

(இ - ள்.) ஆழிசூழுலகமெல்லாம் பரதனேயாள - கடல்சூழ்ந்த நிலவுலகமெல்லாம் பரதனே அரசாண்டுவர, நீபோய் தாழிருஞ்சடைகள் தாங்கி-நீ சென்று தாழ்ந்த பெருஞ்சடைகளைப்புனைந்து, தாங்கரு தவமேற்கொண்டு - தாங்குதற்கருமையாகிய தவவேடங்கொண்டு, பூழிவெம் கானநண்ணி - புழுதிபடிந்த கொடிய காட்டையடைந்து, புண்ணியம் துறையுளாடி - புண்ணிய தீர்த்தங்களினீராடி, ஏழிரண்டாண்டின் வாவென்றியம்பினன் அரசனென்றாள் - பதினான்காமாண்டில் வருகவென் றரசன் கட்டளையிட்டனனென்றனள்.—எ-று.

பரதனே நாடாளவும் நீ காடாளவும் வேண்டுமென்பாள் 'பரதனேயாள நீ போய்ப் பூழிவெங்கானநண்ணிப் புண்ணியத்துறைகளாடி' என்றும், மீண்டும் பதினான்காண்டின் வாவென்ப தரசனாணையென்பாள் 'ஏழிரண்டாண்டின் வாவென்றியம்பினன் அரசனென்றனன்' என்றுங் கூறினாள். இதனாற் கைகேசி சிராமனைப் பதினான்காண்டு கானிற்செல்கவென்ற தரசனாணையெனக்கூறிய துணர்த்தப்பட்டது. (௭௭)

இப்பொழு தெம்ம னோரா லியம்புதற் கெளிதே யாரும்
செப்பருங் குணத்தி ராமன் றிருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா.

(இ - ள்.) இப்பொழுது எம்மனோராலியம்புதற்கு - இப்பொழுது எம்போலியரால் சொல்வதற்கு, யாரும் செப்பரும் குணத்திராமன் -யாவரானுங் கூறற்கரிய மங்கலகுணமமைந்த சிராமன், திருமுகம் செவ்வி நோக்கின்-திருமுகத்தினழகினைப்பார்க்கின், எளிதே-எளியதேயன்று, ஒப்பதே முன்பு பின்பு - முன்னும் பின்னும் அது தாமரைமலரினை யுவமையிற் பொருந்துவதாயினும், அவ்வாசக முணரக்கேட்ட அப்பொழுது அலர்ந்த செந்தாமரையினை வென்றது - அம்மொழியை யறியக்கேட்ட வப்பொழுது நாளலர்ந்த செந்தாமரைமலரை யொத்திருந்தது.—எ-று.

இது கவிக்கூற்று. சிராமன் கானேகெனக்கேட்ட ஞான்றும் முகமலர்ச்சிபோடிருந்தனனென்பது தோன்ற 'அவ்வாசக முணரக்கேட்ட அப்பொழுதலர்ந்த செந்தாமரையினை வென்றது' என்று கூறினார், இதனை 'சித்திரத்தினலர்ந்த செந்தாமரை - யொத்திருந்த முகத்தினை' எனப் பிற்கூறுதலானுமறிக. (௭௮)

தெருளுடை மனத்து மன்ன னேவலிற் றிறம்ப வஞ்சி
இருளுடை யுலகந் தாங்கு மின்ன லுக் கியைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூண்ட வுடையவ னுய்த்த காரே
றருளுடை யொருவ னீக்க வப்பிணி யவிழ்ந்த தொத்தான்.

(இ - ள்.) தெருளுடைய மனத்து மன்னன் ஏவலில் திறம்பவஞ்சி - தெளிவையுடைய மனத்தரசன் கட்டளையை மறுக்கப் பயந்து, இருளுடைய உலகம் தாங்கு மின்னலுக்கு இயைந்து நின்றான் - மயக்கமமைந்த உலகத்தைக் காக்குந் துன்பத்திற்கு அமைந்து நின்றனன், உருளுடைய சகடம் பூண்ட வுடையவனுய்த்த காரேறு - சக்கரமுடைய வண்டியிற் பூட்டப்பட்ட வுடையவன் செலுத்திய பெரிய எருது, அருளுடைய ஒருவனீக்க - கருணையுடையானொருவனீக்க, அப்பிணி யவிழ்ந்தது ஒத்தான் - அத்துன்பந் தவிர்ந்த தொத்திருந்தனன்.—எ-று.

தெருளுடை மனத்து மன்னனேவலாவது 'புனையுமாமுடி புனைந்திந்த நல்லறம்புறக்க - நினையல்வேண்டும்' என முற்கூறியபோந்ததனை. அதனை யிண்டு நீக்கப்பெற்றானாகலின் உவமைமுகத்தால் 'உருளுடைச்சகடம் பூண்ட வுடையவனுய்த்தகாரே - றருளுடையொருவனீக்க வப்பிணியவிழ்ந்த தொத்தான்' என்றறிக. உடையவென்பன ஈறுதொகுக்கப்பட்டன. இதனாற் சீராமன் அரணியஞ் செல்லக்கட்டளை யெய்தினமை யுணர்த்தப்பட்டது. ()

மன்னவன் பணியன் றாகி னும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வ மடியனேன் பெற்ற தன்றோ
என்னினி யுறுதி யப்பா லிப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கான மின்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்.

(இ - ள்.) மன்னவன் பணியன்றாகில் - அரசன் கட்டளையேயன்றாயின், நும்பணி மறுப்பனோ - நுமது கட்டளை யதுவாயின் அதனைத் தடுப்பனோ, என் பின்னவன் பெற்ற செல்வ மடியனேன் பெற்றதன்றோ - என் பிற்றோன்றி யோனடைந்த செல்வம்யான் அடைந்ததேயன்றோ, அப்பால் இனி யுறுதி என் - பின் இதனினுஞ்சிறந்த நன்மை யாது; இப்பணிதலை மேற்கொண்டேன் - இக்குற்றேவ லேற்றுச்செய்ய விசைந்தேன், மின் ஒளிர் கானமின்றே போகின்றேன் - மின்போலும் விளங்குங் காட்டிற்கின்றே செல்கின்றேன்; விடையுங் கொண்டேன் - விடையும் பெற்றேன்.—எ-று.

'மன்னவன்' என்றது தயரதனை. 'பின்னவன்' என்றது பரதனை. தந்தை மொழிபோ னின்மொழியையுங் கோடலறனென்பான் 'மன்னவன் பணிய றாகிலும் பணிமறுப்பனோ' என்றும், தனக்கும் பின்னவனுக்கும் வேறுபாடின் மையையுணர்த்த 'என் பின்னவன் பெற்றசெல்வமடியனேன்பெற்றதன்றோ' என்றும், அரசபார நீக்கப்பெற்றமையினும் வேறுநன்மை யில்லையென்பான் 'என்னினியுறுதி யப்பால்' என்றும், யான் அவ்வாணை மேற்கொண்டு காடு செல்லத் துணிந்தேன் என்பான் 'இப்பணிதலை மேற்கொண்டேன் மின்னொளிர்கானமின்றே போகின்றேன் விடையுங்கொண்டேன்' என்றுங் கூறினார். இதனாற்கைகேசியாற் சீராமன விடைபெற்றமை யுணர்த்தப்பட்டது.

கைகேசிசூழ்வினைப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ககல.

நகர் நீங்கு படலம்.

கூனிசொல்லாற் றுணிந்த கைகேசி தயரதன் பா லிரண்டு வரங்களையும் பெற்றுச் சீராமனைக் காடுசெல்கென அவன் திருநகர நீங்கிய துணர்த்து கின்றமையின் அதன்பின் வைக்கப்பட்டது. 'பூழிருங்கான நண்ணிப்புண்ணியத் துறையுளாடி - ஏழிரண்டாண்டின்வாவென்றியம்பினன் வேந்தனென்றாள்' என்றிவ்வாசிரியர் தோற்றுவாய் கூறிப்போந்தமையின் அக்கைகேசி சொல் லாற் சீராமன் திருவயோத்தியை நீங்குகின்றமையின் இது கைகேசி சூழ்வி னையின் பிற்கூறப்பட்டது. படலமுறைமையு மிதனானே விளங்கும்.

(1) என்றுகொண் டினைய கூறி யடியிணை யிறைஞ்சி மீட்டுந்
தன்றுணைத் தாதை பாத மத்திசை நோக்கித் தாழ்ந்து
பொன்றிணி போதி னாளும் பூமியும் புலம்பி னைய்க்
குன்றினு முயர்ந்த தோளான் கோசலை கோயில் புக்கான்.

(இ-ள்.) என்று கொண்டு-என்றதாய்சொற் றலைமேற்கொண்டு, இனை யகூறி-நும்பணி மறப்பனோவென்பது சொல்லி, மீட்டும் அடியிணை யிறைஞ் சி - பின்னும் அக்கைகேசி யடிகளிரண்டையும் வணங்கி, தன் தாதை துணை ப்பாதம் அத்திசைநோக்கி தாழ்ந்து-தன் தந்தை யடியிணைகளை அவனிருந்த திசையைக்குறித்து நோக்கி வணங்கி, பொன் திணிபோதினாளும் பூமியும் புலம்பி னைய - அழகு தங்கிய தாமரையாளும் நிலமகளும் புலம்பிவருந்த, குன்றினு முயர்ந்ததோளான் - மலையினு மாணவுயர்ந்த தோளை யுடையானா கிய சீராமன், கோசலை கோயில் புக்கான் - தன்னையீன்ற கோசலை மாளிகை யை யடைந்தனன்.—

(2) குழைக்கின்ற கவரி யின்றிக் கொற்றவெண் குடையு மின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் னிரங்கி யேக
மழைக்குன்ற மனையான் மவுலிகவித்தனன் வருமென்றென்று
தழைக்கின்றவுள்ளத் தன்னாண் முன்னொரு தமியன் சென்றான்.

(இ - ள்.) மழைகுன்ற மனையான் - மேகந்தங்கு மலையன்னானாகிய சீராமன், மவுலி கவித்தனன் வருமென்றென்று - முடிபுனைந்து வருவானெ ன்று பலமுறை யெண்ணி, உள்ளம் தழைக்கின்ற அன்னாள் முன்-மன மகிழ் வெய்து மக்கோசலைமுன், குழைக்கின்ற கவரியின்றி-இரட்டுகின்ற சாமரை யுமில்லாது, கொற்ற வெண்குடையுமின்றி - வெண்கொற்றக் குடையுமில் லாது, இழைக்கின்ற விதிமுன் சொல்ல - தானே செய்துகொண்ட சங்கற்ப முன்செல்ல, தருமம் பின்னிரங்கியேக - தருமமானது பின்னிரங்கிச்செல்ல, ஒருதமியன் சென்றான்-தன்னந்தனியனாய்ப் போயினன்.—எ-று.

மகுடம் புனையாது அரசனுதலினின்று தடுக்கப்பட்டமையான் 'கவரியின்றி' எனவும், 'கொற்றவெண்குடையுமின்றி' எனவும், பிறருக்குப் போகூழாற் றடுக்கப்பட்டதுபோலாது தான் தேவருக்குக் கொடுத்திருந்த வரத்தாற்றடுக்கப்பட்டமை தன் சங்கற்பமாத்திரையான் நடந்ததென்பார் 'இழைக்கின்ற விதிமுன்செல்ல' என்றும், சீராமன் காடுபோவது கருதி அறம் வருந்துகின்றமையான் 'தருமம்பின்னிரங்கியேக' என்றுங் கூறினர்; 'என்று' என்ற வடுக்கு பன்மைப் பொருளது. மழைகவிந்த மலையாயின் அது சீராமனையொக்கு மென்பார் 'மழைக்குன்றமனையான்' என்றார். காத்தனன்வினைஎச்சமுற்று. இவ்விரண்டு செய்யுளாற் கோசலைபாற் சீராமன் சென்றமை யுணர்த்தப்பட்டது. (உ)

புனைந்திலன் மவுலி குஞ்சி மஞ்சனப் புனித நீரான்
நனைந்தில னென்கொ லென்னு மையத்தா ணளின பாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன் வணங்கலுங் குழைந்து வாழ்த்தி
நினைந்ததென் னிடையூ றுண்டோ நெடுமுடி புனைதற் கென்றாள்.

(இ-ள்.) மவுலி புனைந்திலன் - மகுடஞ் சூடிக் கொண்டானல்லன், குஞ்சி மஞ்சனம் புனித நீரால் நனைந்திலன் - மயிர் மஞ்சனமாகிய பரிசுத்த நீரால் நனையப்பெற்றானல்லன், என்கொலென்னும் ஐயத்தாள் - யாதோவென்னு மையமுடையகோசலை, நளினபாதம் - தாமரைமலர்போன்ற பாதங்களை, வனைந்த பொற்கழற்கால் வீரன் வணங்கலும் - அழகிய வீரகண்டைதரித்த பாதங்களையுடைய வீரனாகியசீராமன் வணங்குதலும், குழைந்துவாழ்த்தி - மனங்குழைந்து வாழ்த்துதல் செய்து, நினைந்தது என் - அரசன் கருதியது யாதாயிற்று, நெடுமுடி புனைதற் கிடையூறுண்டோ என்றாள் - நீண்ட முடியைப் புனைதற்கு யாதேனுந் தடைநேர்ந்ததோ என்றனள்.—எ-று.

அரசன் மணிமுடிபுனைவதாகக்கூறி முடிபுனையாமையான் 'நினைந்ததென்' என்றும், தடுப்பாரின்மையான் தடைநேர்ந்தமைக்கென்ன காரணமென்பாள் 'இடையூறுண்டோ' என்றும், இது தொன்றுதொட்டு அணியுமணிமுடியென்பாள் 'நெடுமுடி' என்றுங் கூறினர். இதனாற் கோசலை சீராமனை நீ முடிபுனைந்துகொள்ளத் தடையாதென்பது வினவிய துணர்த்தப்பட்டது.

கலிவிருத்தம்.

மங்கை யம்மொழி கூறலு மானவன்
செங்கை கூப்பிநின் காதற் றிருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின்றா னென்றான்.

(இ - ள்.) மங்கை அம்மொழி கூறலும் - கோசலை அவ்வாசகஞ்சொல்லலும், மானவன் - சீராமன், செங்கை கூப்பி - செம்மையாகிய கைகளைக் கூப்பி நின்று, நின் காதல் திருமகன் - நின்னுடைய சிறந்த அழகிய மகனும்,

பங்கமில் குணத்தெம்பி பரதனே - குற்றந்தீர்ந்த குணமுடையானுமாகிய என்பிற் றோன்றலாகிய பரதனே, துங்கமாமுடி சூடுகின்றானென்றான் - மிகவுயர்ந்ததாகிய முடிபுனைகின்றானென்றனன்.—எ-று.

சீராமனை யல்லது வேறறியாச்சிந்தையனாகலின் 'பங்கமில்குணத்து' என்றார். ஏகாரம் பிரிநிலை. 'நால்வர்க்கு' மறுவிலன்பினில் வேற்றுமை மாற்றினாள்' எனப் பிற்கூறுதனோக்கி 'நின்னாதற்றிருமகன்' என்றதென்க. மனுகுலத்திற் றோன்றியமையான் 'மானவன்' என்றதென்க; இது இராகவன், காகுத்தனென்புழிப்போல. அரசர்க்கரசனாகப்புனைபு முடியாகலின் 'துங்கமாமுடி' யெனக் கூறினார். இதனாற் சீராமன் பரதனுக்கு முடிசூடப் படுமென்றது துணர்த்தப்பட்டது. (ச)

(1) முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையி
னிறைகு ணத்தவ னின்னினு நல்லனால்
குறைவி லன்னெனக் கூறினா ணால்வர்க்கு
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள்.

(இ - ள்.) நால்வர்க்கு மறுவிலன்பினில் வேற்றுமை மாற்றினாள் - தன் மக்கணால்வரிடத்துங் குற்றந்தீர்ந்த அன்பின்கண் வேறுபாட்டினை யொழிந்தாளாகிய கோசலை, முறைமை யன்றென்ப தொன்றுண்டு - மூத்தானுளனாக இளையான் முடிசூடிவருதல் முறைமை யல்லாமையென்ப தொன்றுண்டு, நிறைகுணத்தவன் நின்னினு மும்மையின் நல்லன் - எல்லா நற்குணங்களை யுமுடைய பரதன் நின்னினு மும்மடங்கு நல்லவனாம்.—

மும்மையென்றதற்கு 'இருமையும் பெறற்கு' என்புழி யுரைத்தாங் குரைத்துக்கொள்க. இன் உறழ்பொருஉ. நற்குணமெல்லா மொருங்கு நிரம்பினனாகலின் 'நிறைகுணத்தவன்' என்றும், நின்னினும் அவை மும்மடி நிறைந் திருக்கப்பட்டவனென்பது கருதி 'மும்மையில் நின்னினு நல்லன்' என்றும், நால்வர்பாலு மொரே தன்மையாய தண்ணளி யுடையாளென்பார் 'நால்வர்க்கு மறுவிலன்பினில் வேற்றுமைமாற்றினாள்' என்றும், தொன்றுதொட்டு முதற்குமரனே மணிமுடிபுனைந்துவருவது வேறுபட்டமையான் 'முறைமையன்றென்பதொன்றுண்டு' என்றுங்கூறினாள். (ரு)

(1) என்று பின்னரு மன்னவ னேவிய
தன்றெ னாமை மகனே யுனக்கறன்
நன்று நும்பிக்கு நானில நீகொடுத்
தொன்றி வாழுதி யூழி பலவென்றாள்.

(இ - ள்.) என்று பின்னரும் - என்று சொல்லிப் பின்னும், மகனே - மைந்தனே! உனக்கறன் - உனக்குத் தருமமென்பது, மன்னனேவிய தன்றெனாமை - அரசன் கட்டளையை மறுக்காமை, நன்று-நற்செயலேயாம், நும்

பிக்கு நானில நீ கொடுத்து - உன் தம்பியாகிய பரதனுக்கு நீ நிலவுலகத்தை யுதவி, ஊழிபல ஒன்றி வாழுதி யென்றாள் - பல்லூழிகால மவனோடு பொருந்தி வாழ்வாயென்றனள்.—எ-று.

அரசன் நமக்கரசு தருவனென்றுரைத்து மறுத்தனனென்பது கோள் ளற்க, அவனேவிய தறன் என்பாள் 'மன்னவனேவிய தன்றெனுமை யுனக் கறன்' என்றும், அதுவே நீ செயத்தக்கதென்பாள் 'என்று' என்றுங்கூறினாள். உம்மை இறந்ததுதழீஇயது. இவ்விரண்டுசெய்யுளானும் அரசனாணையே அறனெனக் கோசலை கூறிய துணர்த்தப்பட்டது. (சு)

தாயு ரைத்தசொற் கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தையத் தோமில் குணத்தினன்
நாய கன்னெனை நன்னெறி யுய்ப்பதற்
கேய துண்டோர் பணியென் றியம்பினான்.

(இ - ள்.) தாயுரைத்த சொல் கேட்டு - தாய்கூறிய கட்டுரை கேட்டு, தழைக்கின்ற தூயசிந்தை அத்தோமில் குணத்தினன்-தழைக்கின்ற பரிசுத்த மான சிந்தையின் மகிழ்ச்சி யெய்துகின்ற குற்றமற்ற குணமுடையசீராமனே! நாயகன் எனை நன்னெறியுய்ப்பதற்கு - அரசன் என்னை நன்மார்க்கத்தினிற் செலுத்த, ஏய துண்டோர்பணியென்று-ஏவியதொரு குற்றேவலுண்டென்று, இயம்பினான்-சொல்லிமுடித்தனன்.—எ-று.

தாயென்றது கோசலையை-'சுருதியன்ன சேவகன்' என்றும், 'வேதமே யன வீராமன்' என்றும் இவ்வாசிரியர் கூறலின் 'தூயசிந்தையத்தோமில்குண த்தினன்' என்றதென்க. 'மறுவிலன்பில் வேற்றுமைமாற்றினாள்' என்பவாக லின் அவள் சொல்லைக்கேட்டு 'தழைக்கின்றசிந்தை' என்றார். 'நாயகன்' என்றது தயரதனை. முற்றத்துறந்த முனிவருழைச்சென்றவர்க்குக் குற்றே வல் செய்கிற்பதோர் பணியெனக்குதவலின் 'நன்னெறிக் யுய்ப்பதற்கேய தோர்பணி' என்றுங்கூறினார். இதனாற்கோசலைவினாவிய துணர்த்தப்பட்டது.

(1) ஈண்டு ரைத்த பணியென்னை யென்றவட்
காண்டோ ரேழுட னேழகன் கானிடை
மாண்ட மாதவ ரோடுடன் வைகிப்பின்
மீண்டு நீவரல் வேண்டுமென் றானென்றான்.

(இ - ள்.) ஈண்டுரைத்த பணி என்னை என்றவட்கு - உனக்குக் கட்டளையிட்ட பணியாதென்ற கோசலைக்கு, ஆண்டோ ரேழுடனேழ் - பதினான்காண்டு, அகன் கானிடை-இடமகன்ற காட்டின்கண், மாண்ட மாதவரோடு டன்வைகி-மாட்சிமைப்பட்ட பெருந்தவத்தரோ டுடன் வாழ்ந்து, பின்மீண்டு நீ வரல் வேண்டுமென்றா னென்றான் - பின்னே நீ மீண்டு வரவேண்டுமென் றனனெனக் கூறிமுடித்தனன்.

தவத்தான் மனந்தூயராதலின் 'மாண்டமாதவர்' என்றார். 'மீண்டு நீ வரல்வேண்டும்' என்றது திருவயோத்தியைப்பின்னுஞ் சென்றடைதலை. வேண்டும் என்றது உடம்பீற்று வியங்கோள். (அ)

(2) ஆங்கவ் வாசக மென்னு மனல்குழை
தூங்கு தன்செவி யிற்றொட ராமுனம்
ஏங்கினா ளிளைத் தாடிகைத் தாண்மனம்
வீங்கினாள் விம்மி னாள்விழுந் தாளரோ.

(இ - ள்.) ஆங்கு அவ்வாசகமென்னும் அனல் - ஆண்டச் சொல்லென்னுந் தீ, குழை தூங்கு தன்செவியில் தொடராமுனம்-குழைதங்கிய காதிற் சென்றடையா முன்னர், ஏங்கினாள்-வருந்தினாள், இளைத்தாள்-மெலிந்தாள், திகைத்தாள் - மயங்கினாள், மனம் வீங்கினாள்-மனந் தடித்தாள், விம்மினாள் - அழுதாள், விழுந்தாள் - நிலத்திற் சாய்ந்தாள்.

புறத்தே சுட்டெரிக்கும் நெருப்பேபோற் காதின்வழிச்சென் றுள்ளத்தைச்சுட்டு வருத்தலின் 'ஆங்கவ்வாசகமென்னு மனல்' என்றும், குழையாற்றடுக்கப்படாமற் சென்றெய்தலின் 'குழைதூங்குதன்செவி' என்றும்கூறினார்.

(3) வஞ்ச மோமக னேயுனை மாநிலம்
தஞ்ச மாகநீ தாங்கென்ற வாசகம்
நஞ்ச மோவினி நானுயிர் வாழ்வெனோ
அஞ்சு மஞ்சுமென் னாருயி ரஞ்சுமால்.

(இ - ள்.) மகனே - சீராமனே! உன்னை மாநிலம் தஞ்சமாக நீ தாங்கென்ற வாசகம் - உன்னைப்பெரிதாகிய நிலவுலகம் அடைக்கலப் பொருளதாக நீ யரசாண்டுவா வென்றசொல், வஞ்சமோ-கள்ளமேயோ, நஞ்சமோ-விடமேயோ, நானினி உயிர்வாழ்வேனோ - நானுயிரை வைத்தினி வாழ்ந்திருப்பேனோ, என்னாருயிர் அஞ்சுமஞ்சுமஞ்சும் - என்னரியவுயிர் மிகவும் பயப்படும்.

கள்ளத்தால் அரசுனக்கெனக் கூறினனென்பாள் 'உனைமாநிலந்தாங்கென்றவாசகம் வஞ்சமோ' என்றும், அது காடுசெல்லச்செய்ததாகலின் 'நஞ்சமோ' என்றும், இதனன் நானுயிர்வாழமாட்டேனென்பாள் 'நானுயிர்வாழ்வெனோ' என்றும், இதுகேட்டுயிர் அஞ்சுமென்பது திண்ணமென்பாள் 'அடுக்கியும்' கூறினார். (கய)

(4) கையைக் கையி னெரிக்குந்தன் காதலன்
வைகு மாலிலை யன்ன வயிற்றினைப்
பெய்வ ளைத்தளி ராற்பிசை யும்புகை
வெய்து யிர்க்கும் விழுங்கும் புழுங்குமால்.

(இ - ள்.) நையை கையினெரிக்கும் - கையைக் கையினுனெரிப்பாள், தன்காதலன் வைகுமாலிலை யன்ன வயிற்றினை - தன்மகனுகிய ஸ்ரீராமன் தங்கியிருந்த ஆலிலைபோன்ற வயிற்றை, பெய்வளை தளிரால் பிசையும்-வளையலணிந்த கைத்தளிராற் பிசைவாள், புகை வெய்துயிர்க்கும்-புகைந்து நெட்டுயிர்ப்பெறிவாள், விழுங்கும்-விழுங்குவாள், புழுங்கும்-வருந்துவாள்.—

'காதலன்' என்றது ஸ்ரீராமனை. வயிற்றை ஆலிலைபோலுவமங் கூறினர். கையையும் பெய்வளைத் தளிரென்றது மது. (கக)

(5) நன்று மன்னன் கருணையெ னுநகும்
நின்ற மைந்தனை நோக்கி நெடுஞ்சுரத்
தென்று போவ தெனவெழு மின்னுயிர்
பொன்றும் போதுற்ற துற்றது போலுமே.

(இ - ள்.) மன்னன் கருணை நன்று எனுநகும் - அரசன் கருணை நன்றாயிருக்கின்றதெனச் சிரிப்பாள், நின்ற மைந்தனை நோக்கி-தன்னெதிரினின்ற மகனைப்பார்த்து, இன்னுயிர் பொன்றும்போது உற்றது உற்றது போலும் - இனிமையாகிய உயிர் நீங்குங்காலத்தடையு மிக்க வருத்தம்போலும், நெடுஞ்சுரத்தென்றுபோவதென எழும் - நீண்ட காட்டிற்கென்று செல்வதென வெழுவாள்.—

முன் விழுந்தாளென்றதனுன் ஈண்டும் 'எழும்' என்று கூறினர். சரமதசையிலெய்துவதின்னபடி யென்றுகூறும் பரிசன்றுகலின் 'உயிர்பொன்றும் போதுற்ற துற்றதுபோலும்' என அவளெய்திய துன்பத்தையுவமமுகத்தாற் கூறினர்.

(6) அன்பி ழைத்த மனத்தர சற்குநீ
என்பிழைத்தனை யென் றுநின் றேங்குமால்
முன்பி ழைத்த வறுமையின் முற்றினேர்
பொன்பி ழைக்கப் பொதிந்தனர் போலவே.

(இ - ள்.) முன்பிழைத்த வறுமையின் முற்றினேர் - முற்பிறவியிற்செய்த தீவினையான் வறுமைரின் முதிர்ந்தோர், பொன்பிழைக்கபொதிந்தினர் போல - நடவையிற் செல்வம் கிடைப்பதனை யிழந்தவர் போன்று, அன்பிழைத்த மனத்தரசற்கு - உன்பாலன்பு வைத்தருளிய சக்கரவர்த்திக்கு; நீ என்பிழைத்தனையென்று நின்றேங்கும்-நீயாதுபிழை செய்தனையென்று நினைந்துவருந்துவாள்.—

பலகாலும் புத்திரனின்மை வருந்தினமையாலும், பின் வேள்விசெய்து பெற்றமையாலும் இன்று காடுசெல்ல விடுத்தலாலும் 'முன் பிழைத்த வறுமையின் முற்றினேர் பொன்பிழைக்கப்பொதிந்தனர்போல' என வுவமமுகத்தாற் கூறினர். அன்பின்னதென முற்கூறினும். (கஉ)

(7) அறமெ னக்கிலை யோவெனு மாவிநைந்
திறவ டுத்ததென் றெய்வ தங்காளெனும்
பிறவு ரைப்பதென் கன்று பிரிந்துழிக்
கறவை யொப்பக் கரைந்து கலங்கினாள்.

(இ - ள்.) அறமெனக்கு இலையோ எனும் - தருமமென்பதெனக்குத் துணையாவதில்லையோவென்பாள், ஆவிநைந்து இற அடுத்தது என் தெய்வ தங்காள் எனும் - உயிர் வருந்திநிற்க நேர்ந்தது தெய்வங்காள் யாதென்பாள், பிறவுரைப்பது என் - அவளெய்திய துயரத்துக் குவமையெடுத்துக்கூறுவது யாது, கன்று பிரிந்துழி கறவையொப்ப கரைந்து கலங்கினாள் - கன்றுபிரியப் பசு வருந்துவதொப்ப மனங்கரைந்து கலங்கினாள்.—எ-று.

தெய்வதங்காளென்றது விளி. அவளடைந்த துயருக்களவில்லையாகலின் 'பிறவுரைப்பதென்' என்றும், சேதாகன்று நீங்கியவழிக் கவலுற்றேங்குதல்போலேங்கி நிற்றலின் அதனை யுவமைமுகத்தான் 'கன்றுபிரிந்துழிக்கறவையொப்பக் கரைந்து கலங்கினாள்' என்றுங்கூறினார். 'அறமெனக்கிலையோ' என்பதற்கு வேறுரைப்பாருமுளர். தான்செய்தவறந்தனக்குத் துணையாவதேனும், அது இற்றைப்போழ்து துணையாக வந்திலையென்பாள் 'அறமெனக்கிலையோ' என்றதென்க. இவ்வேழுசெய்யுளானும்கோசலை துயருற்றதுணர்த்தப்பட்டது. (கச)

(1) இத்தி றத்தி னிடருறு வாடனைக்
கைத்த லத்தி னெடுத்தருங் கற்பினோய்
பொய்த்தி றத்தின னாக்குதி யோபுகல்
மெய்த்தி றத்துநம் வேந்தனை நீயென்றான்.

(இ - ள்.) இத்திறத்தின் இடருறுவாள்தனை - இவ்வகையாகத் துயரெய்துகின்றவளாகிய கோசலையை, கைத்தலத்தினெடுத்து - கையினாலெடுத்து, அருகற்பினோய் - அருமையாகிய கற்பினையுடையாளே, மெய்திறத்து நம் வேந்தனை - வாய்மைதவறாத நம்மரசனை, பொய்திறத்தினன் ஆக்குதியோ - பொய்கூறுகின்றவனாகச் செய்தியோ, புகல் நீயென்றான் - நீசொல்லென்றனன்.—

'இத்திறத்தினிடருறுவாள்' என்றது 'வாசகமென்னு மனல்குழைதூங்குதன்செவியிற் றொடராமுனமேங்கினாள்' என்பது முதலியவற்றை. நீ கற்புடைமையாற் சிறந்தனையாகலின் அரசனை வாய்மைவழி நிறுத்தல் நின்கடனென்பான் 'அருங்கற்பினோய் பொய்த்திறத்தினனாக்குதியோ' என்றும், அரசனும் வாய்மையுடையானெனப்படுதலான் 'மெய்த்திறத்து நம்வேந்தன்' என்றுங் கூறியவாறென்க. (கரு)

(2) பொற்பு றுத்தன மெய்மை பொதிந்தன
சொற்பு றுத்தற் குரியன சொல்லினன்
கற்பு றுத்திய கற்புடை யாடனை
வற்பு றுத்தி மனங்கொளத் தேற்றுவான்.

(இ - ள்.) கற்புறுத்திய கற்புடையாள் தனை - கற்பெனப்படும் திண்மையையுடைய கற்பினளாகிய கோசலையை, வற்புறுத்தி-உறுதிமொழிகூறி, மனங்கொளதேற்றுவான் - மனத்திற் பொருந்தத் தேற்றுவானாகிய ஸ்ரீராமன், பொற்புறுத்தன - அழகமைந்தனவும், மெய்மை பொதிந்தன - வாய்மையுடையனவுமாகிய, சொற்புறுத்தற்குரியன - சொல்லத்தக்கனவற்றை, சொல்லினன் - கூறிமுடித்தனன்.—

பொற்பு-அழகு; சொற்பு-சொற்றன்மை; கற்புகணவன்வழிநிற்றல்; வற்புறுத்தல்-உறுதிமொழி கூறல். தேற்றுவான்-வினைப்பெயர். (கசு)

(3) சிறந்த தம்பி திருவுற வெந்தையை
மறந்தும் பொய்யிலனாக்கி வனத்திடை
உறைந்து தீரு முறுதிபெற் றேனினிப்
பிறந்து நான்பெறும் பேறென்ப தியாவதோ.

(இ - ள்.) சிறந்த தம்பி திருவுற - நற்குணத்திற்சிறந்த தம்பியாகியபரதன் அரசச்செல்வமடைய, எந்தையை மறந்தும் பொய்யிலனாக்கி-சக்கரவர்த்தியை மறந்தும் பொய் சொல்லாதவனாகச்செய்து, வனத்திடை உறைந்து தீருமுறுதி பெற்றேன் - காட்டில் வசித்தொழியு முறுதியடைந்தேன், இனிப் பிறந்து நான் பெறும்பேறு என்பது யாவதோ-இதனினும் பிறந்து யானடையும் செல்வமெனப்படுவது யாதோ.—

சிறந்ததம்பிஎன்றது 'நிறைகுணத்தவனின்னினுநல்லனால்' என்றதனை வற்புறுத்தற்கு 'மறந்தும்பொய்யிலனாக்கி' என்றான். *" மறந்தும்பிறன்கேடு சூழற்க" என்பதனான். தவஞ்செய்வதனினும் சிறந்த தொன்றில்லையாகலின் 'இதிற்பிறந்து நான் பெறும்பேறென்பதியாவதோ' என்றதென்க.

(4) விண்ணு மண்ணுமிவ் வேலையு மற்றும்வே
றெண்ணும் பூத மெலாமிறந் தேகினும்
அண்ண லேவன் மறுக்க வடியனேற்
கொண்ணு மோவிதற் குள்ளழி யேலென்றான்

(இ - ள்.) விண்ணும் மண்ணும் - ஆகாயமும் நிலனும், இவ்வேலையும்-அதைச்சூழ்ந்த இக்கடலும், மற்றும்வேறெண்ணும்பூதமெலாமிறந்தேகினும்-மற்றும் வேறாகக்கருதப்படும் பூதங்களெல்லா மழிந்தொழியினும், அண்ணல் ஏவல் மறுக்க - அரசன் ஆணையைக்கடக்க, அடியனேற்கு ஒண்ணுமோ-எனக்

* திருக்குறள், செ-உ0ச.

குப்பொருந்துமோ, இதற்குள்ளழியேலென்றான் - இதற்கு நெஞ்சம் வருந்துத லொழியென்றனன்.—எ-று.

உம்மை எண்ணுப்பொருளன. எகினும்என்புழி உம்மைச்சிறப்பு. அண்ணல் என்றது தயரதனை; ஒன்றுபோ என்றது மரீஇயது. ஒகாரமெதிர்மறை. இந்நான்கு செய்யுளானும் அரசன் ஆணைகடக்கலாகாதென் வற்புறுத்திய துணர்த்தப்பட்டது. (கஅ)

ஆகி னைய வரசன்ற னாணையா
லேக லென்பதி யானு முரைக்கிலென்
சாக லாவுயிர் தாங்கவல் லேனையும்
போகி னின்னொடுங் கொண்டனை பேகென்றாள்.

(இ - ள்.) அரசன்றன் ஆணையாகினைய-நீ சொல்வ தரசனாணையாயின், ஏகலென்பது - போகாதை யென்பதனை, யானும் உரைக்கிலென்-நானுஞ் சொல்லேன், சாகலாவுயிர்தாங்கவல்லேனையும்-அழியாவுயிரைத் தாங்கவல்ல என்னையும், போகின் நின்னொடுங் கொண்டனை போகென்றாள் - நீ போகுங்கா னின்னொடுங் கொண்டுபோகென்றனள்.—எ-று.

ஏகலென்பதல்லீற் றெதிர்மறை யேவல் வினைமுற்று. கொண்டனை வினையெச்சமுற்று. உயிர்நித்தமென்பார் மதம்பற்றி 'சாகலாவுயிர்' என்றதென்க. உம்மைஇரண்டின் முன்னது ஒருபுடை இறந்தது தழீஇயது; பின்னது உயர்வுசிறப்பு. அரசனாணையாகாதென்பாள் 'ஆகின்' என்றாள். இதனாற் கோசலை என்னையுங்கொண்டு காடுசெல்லென்றதுணர்த்தப்பட்டது. (கக)

(1) என்னை நீங்கி யிடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற்புறுத் தாதுடன்
துன்னு கானந் தொடரத் துணிவதோ
அன்னை யேயறம் பார்க்கிலை யாமென்றான்.

(இ - ள்.) என்னை நீங்கி - என்னைக் கானின் விடுத்து, இடர்கடல் வைகுறும் - துன்பக்கடலிலாழும், மன்னர் மன்னனை வற்புறுத்தாது - சக்கரவர்த்தியைத் தெருட்டாது, துன்னு கானம்தொடர உடன் துணிவதோ - மரநெருங்கிய காட்டிற் றொடர என்னுடன் துணிவதோ, அன்னையே அறம் பார்க்கிலை யாமென்றான் - தாயே தருமத்தை நோக்கிலைபோலு மென்றனன்.

என்னை நீங்கியிருப்பதே அரசனுக்கின்னலாக அவனைத் தெருட்டுவோர் நின்னையல்லது வேறில்லையாகலின் 'அறம்பார்க்கிலையாம்' என்றும், நீ வருவதடாதென்பான் 'தொடரத்துணிவதோ' என்றுங்கூறினான். அன்னையே என்பது விளியுருபேற்றபெயர். (உ0)

(2) வரிவி லெம்பியிம் மண்ணர சாயவற்
குரிமை மாநில முற்றபின் கொற்றவன்

திருவி னீங்கித் தவஞ்செய்யு நாளுடன்
அருமை நோன்புக ளாற்றுதி யாமன்றே.

(இ - ள்.) வரிவில் எம்பி இம்மண் அரசாய் - வரிந்துகட்டிய வில்லையுடைய தம்பி பரதன் இம்மண்ணுலகத்துக்கரசனாகி, அவற்கு உரிமை மாநிலம் உற்றபின்-அவனுக்கு இந்நிலவுலகம் உரிமையாகவெய்தியபின், கொற்றவன் திருவி னீங்கித் தவஞ்செய்யுநாள் - அரசன் அரசச்செல்வத்தினின்று நீங்கித் தவஞ்செய்யப்போகுநாளில், உடன் அருமை நோன்புக ளாற்றுதியாம் - அவனுடனருமையாகிய நோன்புகளைச்செய்திபோலும்.—

பரதன் அரசாளத்தொடங்கின் அரசன் தவஞ்செயக்கானடைதல் மெய்மையாகலின் நீயுமுடன்செல்வது நின்கடனென்பார் 'உடன் அருமைநோன்புகளாற்றுதியாம்' என்றும், இவ்வாறே நங்குலக்குரவர் தவஞ்செய்யப்போவது முறைமையாகலின் 'திருவினீங்கித்தவஞ்செய்யுநாள்' என்றுங்கூறினார்.

(3) சித்த நீதிகைக் கின்றதென் றேவரும்
ஒத்த மாதவஞ் செய்துயர்ந் தாரன்றே
எத்த னைக்குள வாண்டுக ளீண்டவை
பத்து நாலும் பகலல வோவென்றான்.

(இ - ள்.) நீசித்தம் திகைக்கின்றதென் - நீ மனந்திகைக்கின்றதியாது, தேவரும் ஒத்தமாதவஞ்செய்து உயர்ந்தார் - தேவர்களும் ஒத்ததாகிய பெருந் தவத்தைச் செய்து சிறந்தனர், ஆண்டுகள் எத்தனைக்குள - வருடங்களெத்தனையுள்ளன, பத்து நாலும் பகலலவோ என்றான் - அவை பத்தும் நாலுமாகிய பகலல்லவோ என்றனன்.—

தேவரும் தவஞ்செய்தன்றே யுயர்ந்தாராகலின் யானுந் தவஞ்செய்தேயுயர்வெய்தவேண்டுமென்றது குறித்து 'தேவருமொத்த மாதவஞ் செய்துயர்ந்தார்' என்றும், அதனால் நீ சிந்தை வருந்தலாகாதென்பான் 'சித்தநீதிகைக்கின்றதென்' என்றுங்கூறியதன்றி, தான் அயர்வருமமரர்களதிபதியாகலின் 'பத்துநாலுபகலலவோ' எனத் தேவமானத்தானுங் கூறினார். இனி அவள் சிந்தைத்துயரந்தீரப் பத்துநாலும் ஆண்டுகளென்னாது 'பகலலவோ' என்றாரெனினுமாம். (உஉ)

(4) முன்னர்க் கோசிக னென்னு முனிவரன்
தன்ன ருட்டலை தாங்கிய விஞ்சையும்
பின்ன ரெய்திய பேறும் பிழைத்தவோ
இன்ன நன்றவர்க் கேயின செய்தலே.

(இ - ள்.) முன்னர்கோசிகனென்னு முனிவரன் - முன் விசுவாமித்திரனென்னு முனிவர்பிரான், அருள்தலை தாங்கிய விஞ்சையும் - அருளாற் பெற்றுயர்ந்த வித்தைகளும், பின்ன ரெய்தியபேறும் பிழைத்தவோ - பின்ன

டைந்த புகழ்களும் பிழைபட்டனவோ, அவர்க்கு ஏயின செய்தல் இன்னம் நன்று - அவர்களேவினவற்றைச் செய்தொழுகல் இன்னமுநன்று.—

தேவர்கள் கொடுக்க வேண்ட விசுவாமித்திரமுனிவனுற் பெற்றவையாகலின் 'கோசிகனென்னு முனிவரன் தன்னருட்டலைதாங்கிய விஞ்சையும்' என்றும், யாவரானும் வெல்லற்கரிய பரசுராமனையும் சுவாகு முதலியோரையும் தான் வெற்றிகொண்டமையான் 'பின்னரெய்திய பேறும் பிழைத்தவோ' என்றும், அவைமுனிவர்க் கேவல்செய்தபெருப்பேறென்பான் 'இன்னநன்றவர்க்கேயின செய்தல்' என்றுங்கூறினர். (௨௩)

(5) மாத வர்க்கு வழிபா டிழைத்தரும்
போத முற்றிப் பொருவரு விஞ்சைகள்
ஏத மற்றன தாங்கி யிமையவர்
காதல் பெற்றுநன் காவரக் காண்டியால்.

(இ - ள்.) மாதவர்க்கு வழிபாடிழைத்து - முற்றத்துறந்த முனிவருக்குக் குற்றேவல் செய்தொழுகி, அருபோதமுற்றி - அருமையாகிய உணர்ச்சி முதிர்ந்து, பொருவருவிஞ்சைகள்-ஒப்பில்லாதவித்தைகள், ஏதமற்றனதாங்கி-குற்றமற்றனமேற்கொண்டு, இமையவர் காதல்பெற்று - தேவர்கள் நட்பெய்தி, நன்காக வரக்காண்டி - நன்றாகவரப் பார்ப்பை.—

அகத்தியனுரை வழிபடலும், அவர்பால் வின்முதலியன பெறுதலும், இராவணவேட்டையாடித் தேவகாரிய முடித்தலுமாகிய நல்லறச்செய்கை நிறுத்தற்கே தான் றேன்றியமையான் அதனை நன்கு விளக்க 'வழிபாடிழைத்து' என்றும், 'தாங்கி' என்றும் 'காதல்பெற்று' என்றும் 'நன்காவரக்காண்டி' என்றுங் கூறினர். (௨௪)

(6) மகர வேலைமண் டொட்டவண் டாடுதார்ச்
சகரர் தாதை பணிதலை நின்றுதம்
புகரில் யாக்கையி னின்னுயிர் போக்கிய
நிகரின் மாப்புகழ் நின்றதன் றேவெனு.

(இ - ள்.) மகரம் வேலை - மகரமீனெறிகின்ற கடல்சூழ்ந்த, மண் தொட்ட-மண்ணைத் தொட்ட, வண்டு ஆடுதார்-வண்டுகள் நெருங்கும் மாலையையணிந்த, சகரர்தாதை பணிதலைநின்று - சகரர்கள் தாதையினது குற்றேவல் மேற்கொண்டு, தம்புகரில் யாக்கையின் - தங்குற்றந்தீர்ந்த உடம்பினின்று, இன் உயிர் போக்கிய-இனிமையாகியஉயிரைப்போக்கிய, நிகரில் மாபுகழ் நின்றது அன்றேஎனு-ஒப்பிலாதபுகழ் நிலைபெற்றதுஅன்றேஎன்று.

சகரர் தந்தையேவலாற் பரிமேதைக்குதிரையின் பின் சென்றிந்திரனொளித்த அப்பரியினைத்தேடுவான் பாதலஞ்சென்று கபிலமுனிவனை வருத்த அம்முனிவன் விழிப்பத் தம்முடல் விட்டமையின் 'இன்னுயிர்போக்கிய நிகரின்மாப்புகழ் நின்றதன்றே' என்றதென்க. தலைநில் ஒருசொல் (௨௫)

(7) மான்ம றிக்கரத் தான்மழு வேந்துவான்
தான்ம றுத்திலன் றாதைசொற் றாயையே
ஊன றக்குறைத் தானுர வோனருள்
யான்ம றுப்பதென் றெண்ணுவ தோவென்றான்.

(இ - ள்.) மான்மறிகரத்தான் - மான்கன்றையேந்தும் கையையுடைய சிவனது, மழுவேந்துவான்-மழுவினை வரத்தாற்பெற்றேந்துகின்ற விராமன், தாதை சொல் - தந்தைசொல்லை, மறுத்திலன்-மறுக்கானாகி, தாயையே-தன்னைப்பெற்ற அன்னையையே, ஊனறகுறைத்தான் - உடம்பினை முற்றுமொழித்தனன், உரவோன் - அறிவையுடைய அரசனது, அருள் - குற்றேவலை, யான் மறுப்பதென்று - யான் தடுப்பதென்று, எண்ணுவதோ என்றான் - நினைப்பதோ என்றனன்.—எ-று.

மான்மறிக்கரத்தான் மழுவேந்துவானென்பதனை உம்மைத்தொகையாகக்கொண்டு சிவனும் பரசுராமனுமென்றுரைவிரிக்கின் தாயை யூனறக்குறைத்ததாக மாட்டாமையானும், தான் மறுக்கிலனென வமையாமையானும் பொருந்தாமையறிக. மான்மறிக்கரத்தான் ஒருசொல். ஒகார மெதிர்மறை. மறுப்பது வினைப்பெயர். இவ்வேழு செய்யுளானும் சீராமன் கோசலையுள்ளந்தெருட்டிய துணர்த்தப்பட்டது. (உசு)

(1) இத்தி றத்த வெனைப்பல வாசகம்
உய்த்து ரைத்த மகனுரை யுட்கொளா
எத்தி றத்து மிறக்குமிந் நாடென
மெய்த்தி றத்து விளங்கிழை யுன்னுவாள்.

(இ - ள்.) இத்திறத்த - என்றிவ்வகைப்பட்ட, எனைப்பலவாசகம்-இன்னும் பலசொற்களை, உய்த்துரைத்த - ஆராய்ந்துசொன்ன, மகனுரையுட்கொளா - மகனாகிய சீராமன்சொல்லை மனங்கொண்டு, எத்திறத்தும் இந்நாடிறக்குமென - எவ்வகையானும் இந்நாடு நீங்குவானென்று, மெய்த்திறத்து விளங்கிழை உன்னுவாள் - வாய்மையே தனக்கணிகலனாகக்கொண்ட கோசலை நினைந்தனள்.—

மகனென்றது சீராமனை. மெய்ம்மைவழி யொழுகுபவளாகலின் 'மெய்த்திறத்துவிளங்கிழை' என்றார். விளங்கிழை - அன்மொழித்தொகை. உம்மைமுற்று. 'எத்திறத்து மிறக்குமிந்நாடு' என்பதற்கு எவ்வகையானு மிந்நாடுவருந்துமெனக் கொள்ளினு மிழுக்காது. (உஎ)

(2) அவனி காவல் பரதன தாகுக
இவனிந் ஞால மிறந்திருங் கானிடைத்
தவனி லாவகைக் காப்பென் றகைவிலாப்
புவனி நாதற் றொழுதென்று போயினள்.

(இ - ள்.) அலனிகாவல் பரதனதாகுக - உலகோம்பல் பரதனுடைய தாக, இவன் இ ஞாலம் இறந்து - சீராமன் இந்நாடகன்று, இருகானிடை - பெருங்காட்டில், தவன் நிலாவகை - தவத்தின்க ணில்லாவண்ணம், தகைவிலாப் புவனிநாதன் தொழுது - தகுதியில்லாத அரசனைத்தொழாநின்று, காப்பெனென்று போயினாள் - காப்பேனென்று சென்றனள்.—எ-று.

புவனம்-புவனி எனவருவதனை * "புவனியெலாம்-நீரேற்றளந்த நெடியபிரான்" எனப்பெரியாரும் பணித்தமையானுமுணர்க. 'தவனிலாவகை' என்றதற்குத் தவத்தினில்லாவகை யென்றதன்றி, 'தவன் இலாவகை' எனக்கொண்டு தவமில்லாதபடி யென்றுரைப்பினு மமையும். 'தகைவிலா' என்றதற்குத்தடை செய்யாதவென்றுரைப்பாருமுளர். முறைமாறிச்செய்த வரசனெனக்கொண்டு 'தகைவிலாத' என்றுளெனினுமாம். இவ்விரண்டுசெய்யுளானும் சீராமன் தெருட்டத்தெருளாது கோசலை அரசன் இருந்துழியடைந்தமை யுணர்த்தப்பட்டது. (உஅ)

போகின் றாளைத் தொழுது புரவலன்
ஆக மற்றவ டன்னையு மாற்றியிச்
சோகந் தீர்ப்பவ ளென்று சுமித்திரை
மேகந் தோய்தனிக் கோயிலை மேயினான்.

(இ - ள்.) போகின்றாளை - போகின்றகோசலையை, தொழுது - வணங்கி, புரவலனாக - தயரதன்போல, மற்றவள் தன்னையுமாற்றி - அக்கோசலையையுதேற்றி, இ சோகம்தீர்ப்பவளென்று-இத்துயர்நீக்குபவளென்று, சுமித்திரை-சுமித்திரையினது, மேகம்தோய் தனிகோயிலை மேயினான் - மேகமண்டலமளாவிய ஒப்பற்ற மாளிகையை யடைந்தனன்.—எ-று.

புரவலன் என்பதற்குச் சீராமன் எனக்கொண்டு கூறினுமாம். அங்ஙனங்கொள்ளின் ஆக என்பது அசைநிலை. எல்லாத்துன்பத்திலும் புத்திரசோகஞ்சிறந்ததாகலின் அதனைத் தீர்ப்பதுநோக்கி 'இச்சோகந்தீர்ப்பவள்' என்றான். இதனாற் சீராமன் சுமித்திரை மாளிகை யடைந்தமை யுணர்த்தப்பட்டது. (உகூ)

நடந்த கோசலை கேகய நாட்டிறை
மடந்தை கோயிலை யெய்தினண் மன்னவன்
கிடந்த பார்மிசை வீழ்ந்தனள் கெட்டுயி
ருடைந்த போதி னுடல்விழுந் தென்னவே.

(இ - ள்.) நடந்தகோசலை - இவ்வண்ணஞ்சென்றகோசலை, கேகயநாட்டிறை மடந்தைகோ யிலையெய்தினள் - கைகேசிமாளிகையையடைந்து, மன்னவன் கிடந்தபார் மிசை - அரசன் விழுந்து கிடக்கின்ற நிலத்தில், உயிருடைந்த போதின் - உயிர்நீங்கியகாலத்து, உடல்விழுந் தாலென்ன - உடம்பு வீழ்ந்தாற்போல, கெட்டு வீழ்ந்தனள்-அறிவுசோர்ந்து விழுந்தனள்.—எ - று.

அரசனுயிர்போல்வானுகலின் அவனைக்கண்டவழி வருந்தி நிலத்தின் வீழ்ந்தமையான் 'கெட்டுயிருடைந்தபோதினுடல் விழுந்தென்ன' என உவமைமுகத்தாற் கூறினர். இதனுற்கோசலை அரசனிலைகண்டு வருந்தியமை யுணர்த்தப்பட்டது. (௫0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

(1) பிறியார் பிறிவே தென்னும் பெரியோய் தகவோ வென்னு
நெறியோ வடியோ நிலைநீ நினையா நினைவே தென்னும்
வறியோர் தனமே யென்னுந் தமியே வலியே யென்னும்
அறிவோ வினையோ வென்னு மரசே யரசே யென்னும்.

(இ - ள்.) பிறியார் பிறிவே தென்னும்-பிரியாதார் பிரிதற்குக் காரணம் யாதென்பாள், பெரியோய் தகவோ வென்னும் - பெரியானே நினக்குத் தகுதியோவென்பாள், நெறியோ என்னும் - இது நீதிதானோ வென்பாள், அடியோம்நிலை நீ நினையா நினைவே தென்னும்-அடியோங்கட்கு நிலைக்களமாகிய ஒரு நீ எம்மை நினைப்பிற்கொள்ளாத தென்னென்பாள், வறியோர் தனமே யென்னும் - வறியவர்க்கு அவர் தேடிய பொருளன்னனே யென்பாள், தமியேன் வலியே யென்னும் - ஒருவேன் வலிபோல்வானே யென்பாள், அறிவோவினையோ என்னும் - இது நினக்கறிவேயோ தொழிலேயோ என்பாள், அரசே அரசே யென்னும் - அரசனே அரசனே யென்பாள்.— (௫௧)

(2) இருளற் றிடவுற் றௌிரு மிரவிக் கெதிருந் திகிரி
யுருளத் தனியுய்த் தொருகோ னடையிற் கடைகா ணுலகம்
பொருளற் றிடமுற் றுறுமப் பகலிற் புகுதற் கென்றோ
அருளக் கருதிற் றிதுவோ வரசர்க் கரசே யென்னும்.

(இ - ள்.) இருளற்றிட-இருணீங்க, உற்றௌிரும் இரவிக்கு-மிகுந்து விளங்கும் சூரியனுக்கு, எதிரும் திகிரி யுருள-நேருஞ் சக்கரமுருள, தனியுய்த்து-தனியே ஆணைசெலுத்தி, ஒருகோல்நடையிற்கடைகாணுலகம்-ஒப்பற்ற செங்கோலில் கடந்து வருமுலகம், பொருளற்றிட-எப்பொருளுமழிய, முற்றும் அப்பகலில் புகுதற்கென்றோ - அழிவெய்தும் அக்காலத்தினிலையெய்த வென்றோ, அரசர்க்கரசே - மன்னவர் மன்னவனே, இதுவோ அருளக்கருதிற்று என்னும் - இதனையோ நின்றிருவுள்ளத் தெண்ணினை என்பாள்.—

இது காறும் நின்செங்கோலினடங்கிய வுலகைத்துயரான் எப்பொருளுமழி யுமக்காலம்போற் செய்தனை யென்பார் 'ஒருகோனடையிற் கடைகாணுலகம்-பொருளற்றிடமுற்றறுமப்பகலிற் புகுதற்கென்றோ - அருளக்கருதிற்றிதுவோ' என்றதென்க. 'பொருளற்றிட முற்றுறு மப்பகல்' என்றது ஊழிகாலத்தை. (௫௨)

(3) திரையார் கடல்சூ ழுலகின் றவமே திருவின் றிருவே
நிரையார் கலையின் கடலே நெறியார் மறையின் னிலையே

கரையா வயர்வே னெனைநீ கருணா லயனே யெனினென்
றுரையா விதுதா னழகோ வுலகே ழுடையா யென்னும்.

(இ - ள்.) திரையார் கடல்சூ ழுலகின்றவமே - அலையார்ந்த கடல்சூழ்ந்த வுலகினுக்குத் தவம்போல்வானே ! திருவின்றிருவே - செல்வத்திற்குச் செல்வம்போல்வானே ! நிரையார் கலையின் கடலே-முறையார்ந்த கலைக்கடல் போல்வானே! நெறியார் மறையின் நிலையே - மதங்கள் அடங்கிய மறையின் நிலைபோல்வானே ! கரையா அயர்வேன் - கரைந்து வருந்துவேன், எனை நீ கருணாலயனேயெனின் - இது என்னை நீ அருட்கிருக்கையேயென்னின், உலகு ஏழுடையாய் - உலகேழினையுமுடையானே! ஒன்று உரையாத இது தான் அழகோ - சிறிதேனும் எனக்குச் சொல்லாதிருப்பது அழகேயோ, என்னும் - என்பாள்.—எ-று.

உலகம் அவனரசனாகத் தவஞ்செய்ததனான் 'உலகின்றவமே' என்றும், வருந்தித்தேடுவது செல்வமாகலின் 'திருவின்றிருவே' என்றும், உலகோர்க்குரிய நீதியையறிவித்தலான் 'கலையின்கடலே' என்றும், அவற்றிற்கு நிலைக்களமாதலின் 'மறையின்னிலையே' என்றும், கருணைக்கிடனாகவின் 'கருணாலயனே' என்றும், யான் வருந்தியுஞ் சிறிது முரையாதிருந்தனையென்பது கருதி 'ஒன்றுரையாவிதுதானழகோ' என்றுங் கூறியதென்க. (ருரு)

(4) மின்னின் றனைய மேனி வெறிதாய் விடநின் றதுபோல்
உன்னுந் தகைமைக் கடையா வுறுநோ யுறுகின் றுணரான்
இன்னென் றுரையா னென்னே யிதுதான் யாதென் றறியே
மன்னன் றகைமை காண வாராய் மகனே யென்னும். [ன்

(இ - ள்.) மின்னின்றால் அனையமேனிவெறிதாய் விடநின்றதுபோல் - மின் நின்றாலொத்தவுடம்பு பயனின்மையாய்க்கழிய நின்றதுபோல, உன்னுந் தகைமைக்கடையா - நினையுந்தன்மையடைந்து, உறுநோயுறுகின்றுணரான் - மிகுநோயையடைகின்றதறியான், இன் என் றுரையான் - இன்னதென்றுங்கூறான், என்னேயிது - யாதேயீது, யாதென்று அறியேன்-யாதென்றுணரேன், மன்னன் தகைமைகாண - அரசன் தன்மையைக்காண, மகனே வாராயென்னும் - மகனே வாராயென்பாள்.—எ-று.

மின்தோன்றியவழி நிற்றல் கண்கூடாக மாட்டாமையின் 'மின்னின்றனையமேனி' என்றார். இதனை *"மின்னினிலையில - மன்னுயிராக்கைகள்" எனப் பெரியாரும் பணித்தமையானுமறிக. இன்னது என்னும் குறிப்புவினைப்பெயர் இன் எனப்பகுதிமாத்திரையாய் நின்றது. உறுகின்று எனவருவதை † "இனிநினைந்திரக்கமாகின்று" என்ற புறப்பாட்டானுமுணர்க. (ருச)

* திருவாய்மொழி, முதற்பத்து, இரண்டாந்திருப்பதிகம், செ. உ.
† புறநானூறு, செ. உசரு.

(5) இவ்வா றழுவா ளிரியற் குரல்சென் றிசையா முன்னம்
ஒவ்வா தொல்லா தென்று வொளிவா ணிருபர் முனிவர்
அவ்வா றறிவா யென்ன வந்தான் முனிவ னவனும்
வெவ்வா ளரச னிலைகண் டென்னும் விளைவென் றுன்னு.

(இ - ள்.) இவ்வாறழுவாள் இரியல் குரல் சென்று இசையாமுன்னம்- இவ்வாறழுகின்ற கோசலை அழுகுரல் போயடையாமுன்னம், ஒளிவாள் நிருபர் முனிவர் - ஒளியையுடைய வாட்படையுடைய அரசரும் முற்றத்துறந்த முனிவரும், ஒவ்வாது - ஒவ்வாது, ஒல்லாதென்று - இசையாதென்று, அவ்வாறறிவாயென்ன -அவ்விடத்து நிகழ்ந்தமை யறிவாயென்று வேண்ட, முனிவன்வந்தான் - வசிட்டமுனிவனு மெழுந்தருளினன், அவனும் - அம்முனிவனும், வெம்வாளரச னிலைகண்டு - வெம்மையாகிய வாளையுடைய அரசனது நிலையைக்கண்டு, என்னும் விளைவென்றுன்னு - யாதே விளைந்தமையென்று நினைந்து.—எ-று.

இரியற்குரல் - அழுகுரல். நாளை முடிசூட்டுதலெனக்கூறி அரசன் வராமைதக்கதன்றென்பார் 'ஒவ்வாது' என்றும், யாதுகருதியோவந்திலனென்பார் 'ஒல்லாது' என்றுங்கூறினர். இவ்வைந்து செய்யுளானும் அரசவையோர் வேண்டியனுப்பவசிட்டமுனிவன் அரசனையடைந்த துணர்த்தப்பட்டது. (௩௫)

(1) இறந்தா னல்ல னரச னிறவா தொழிவா னல்லன்
மறந்தா னுணர்வென் றுன்னு வன்கே கயர்கோன் மங்கை
துறந்தா டுயரந் தன்னைத் துறவா தொழிவா ளிவளே
பிறந்தார் பெயருந் தன்மை பிறரா லறிதற் கெளிதோ.

(இ - ள்.) அரசன் இறந்தானல்லன் - அரசன்இறந்தவனுமல்லன், இறவாது ஒழிவானல்லன்-இறவாமற் போவானுமல்லன், மறந்தானுணர்வு என்றுன்னு-உணர்வுகெட்டிருக்கின்றனன் என்றுணர்ந்து, வல்கேகயர்கோன் மங்கைதுயரந்தன்னை துறந்தாள் - மனம் வலியளாகிய கைகேசியே துன்பமொழிந்திருப்பவள், இவளே துறவாது ஒழிவாள்-இக்கோசலையே துன்பமெய்துபவள், பிறந்தார் - உலகிற் பிறவியெய்தினோர், பெயரும் தன்மை-மாறுபடும் தன்மை, பிறராலறிதற் கெளிதோ-பிறராலறியவல்லதோ.—

உணர்வொடுங்கியிருத்தலான் 'இறந்தானல்லன்' என்றும், அரசனின்ற நிலையைநோக்கி 'இறவாதொழிவானல்லன்' என்றும், கைகேசி யரசுபெற்றுவத்தலின் 'வன்கேகயர்கோன் மங்கைதுறந்தாள் துயரந்தன்னை' என்றும், கோசலை துன்பமெய்துபவளாகலின் 'துறவாதொழிவாளிவளே' என்றுங்கூறினர். (௩௬)

(2) என்னு வுன்னு முனிவ னிடரா லழுவா டுயரஞ்
சொன்னு னாகா ளனமுன் றெழுகே கயர்கோன் மகளை

அன்று வுரையா யரச னயர்வா னிலையென் னென்னத்
தன்று னிகழ்ந்த தன்மை தானே தெரியச் சொன்னாள்.

(இ - ள்.) என்றுவுன்று முனிவன்-என்று நினைந்து வசிட்டமுனிவன், இடராலழுவாள் துயரம் சொன்னாளாகாளென - துன்பத்தாலழுகின்றகோசலை துயரஞ்சொல்லியாகமாட்டாளென்று, முன்தொழு கேகயர்கோன்மகளை-முன் தன்னைவணங்கி நின்ற கைகேசியை நோக்கி, அன்று அரசனயர்வான் - அன்னே! அரசன் அயர்ந்து நிற்கின்றனன், நிலை என் என்ன-நிலைமையாதென்ன, தன்றுனிகழ்ந்ததன்மை-தன்றுன் முற்றுப்பெற்ற தன்மையை, தானே தெரியசொன்னாள் - தானே யறியக்கூறினள்.—எ-று.

சுருங்கச்சொல்லலான் 'தன்றுனிகழ்ந்ததன்மை' என்றது தானரசன்பால் வரங்களிரண்டினையும்பெற்று ஒன்றான் பரதன் நாடெய்தலும், மற்றொன்றானிராமன் காடெய்துதலுமா மிவற்றினை. அறிவாயென்னவந்தான், என்றுமென்றுன்று, உன்று, என்று, உன்று உரையாயென்னத் தெரியச்சொன்னாளென வினைமுடிக்க. இவ்விரண்டுசெய்யுளானும் முனிவன்கைகேசியைக் கேட்ப அவள் தன்றுனிகழ்ந்தமை விளக்கியதுணர்த்தப்பட்டது. (கூஎ)

(1) சொற்றாள் சொற்று முன்னஞ் சுடர்வா ளரசர்க் கரசைப்
பொற்று மரைபோற் கையாற் பொடிசூழ் படிநின் றெழுவிக்
கற்று யயரே லவளே தருநின் காதற் கரசசென்
றெற்றே செயலின் றொழிநீ யென்றென் றிரவா நின்றான்.

(இ - ள்.) சொற்றாள் - கைகேசி இவ்வாறுசொல்லினள், சொற்றுமுன்னம் - அவள் சொல்லுமுன்னர், சுடர்வாளரசர்க்கரசை-ஒளியையுடையவாளையேந்திய சக்கரவர்த்தியை, பொன்தாமரைபோற்கையால் - அழகியதாமரைமலர்போன்ற கையினால், பொடிசூழ்படிநின்றெழுவி-புழுதிபடிந்த தரையினின்றெழுவித்து, கற்றுயயரேல்-எல்லாக்கலைகளும் கற்றவறியுடையானே வருந்தாதை, அவளே தருநின்காதற்கரசென்று-அக்கைகேசியே நின்காதற்புதல்வனுக்கரசளிப்பளென்று, எற்றேசெயலின்றொழிநீ-எத்தன்மையே இன்றன் செய்கையொழிநீ, என்றென்றிரவா நின்றான் - என்று பலமுறையு மிரக்கின்றனன்.—

காதல் ஆகுபெயர். சகலகலையுங்கற்ற நீயயர்தல் தக்கதன்றென்பார் 'கற்றுயயரேல்' என்றும், நின்மகனுக்கவளே யரசுவந்தளிப்பதனுன் நீ யஞ்சுதலாகாதென்பார் 'நின்காதற் கரசென்றெற்றே செயலின்றொழிநீ' என்றுங் கூறினர். அடுக்கு-பன்மை. (கூஅ)

(2) சீதப் பனிநீ ரளவித் திண்கா லுதவுந் தண்கால்
போதத் தளவே தவழ்வித் தின்சொற் புகலா நின்றான்
ஓதக் கடனஞ் சனையா ளுறைநஞ் சொருவா றவியக்
காதற் புதல்வன் பெயரே புகல்வா னுயிருங் கண்டான்.

(இ - ள்.) சீதம்பனிநீர் அளவி - குளிர்ந்த பனிநீரைச்சேர்த்து, திண்காலுதவுந்தண்கால் - திண்ணிய சிவறிதருங்காற்றால், போதத்தளவேதவழ்வித்து - அவனுக்குணர்ச்சி வருமளவே தவழச்செய்வித்து, இன்சொல்புகலாநின்றான் - இனிமையாகிய மொழியைச்சொல்கின்ற வசிட்டமுனிவன், ஓதக்கடல்நஞ்சனையாள் - ஓதக்கடலிற்றோன்றிய ஆலவிடம்போன்ற கைகேசியினது, உரைநஞ்சொருவாறவிய - சொல்லாகிய விடமொருவாறுநீங்க, காதல்புதல்வன்பெயரே-காதலையுடைய மகனாகிய சீராமன் திருநாமத்தையே, புகல்வானுயிருங்கண்டான்-சொல்கின்றவனாகிய தயரதன் உயிருங்கண்டனன்.—

கைகேசி சொல்லான் அயர்ந்துகிடத்தலான் அதனை உவமமுகத்தான் 'ஓதக்கடனஞ்சனையாளுரைநஞ்சு' என்றும், நஞ்சின்மயக்க நீங்கியவழிக்காண்டல் உயிரையேயாகலின் 'உயிருங்கண்டான்' என்றும், அதற்கு மருந்தாவதிறைவன்பெயராகலின் 'காதற்புதல்வன்பெயரேபுகல்வான்' என்றுங்கூறினார்.

(3) காணா வையா வினிநீ யொழிவாய் கழிபே ரவலம்
ஆணா யகனே யினிநா டாள்வா னிடையூ றுளதோ
மாணா வுரையா டானே தருமா மழையே யனையான்
பூணா தொழிவா னெனில்யா முளமோ பொன்றே லென்றான்.

(இ - ள்.) காணாவையா - மெய்ம்மையறியாதவையனே, இனி கழிபேரவலம் ஒழிவாய் - இனி நீ மிகுந்தபெருந்துயர மகல்வாய், ஆணாயகனே இனிநாடாள்வான் - புருடோத்தமனாகிய சீராமனே இனி யுலகையாண்டுவருவான், இடையூறுளதோ-இனி தடையென்பதுளதோ, மாணாவுரையாடானே தரும்-மாட்சிமைப்படாத சொல்லினளாகிய கைகேசியே தருவாள், மழையேயனையான் - மழைநிறம்போல்வானாகிய சீராமன், பூணாதொழிவானெனில்-அரசாளாதொழியின், யாமுளமோ - யாமிருப்பமோ, பொன்றேலென்றான்-வருந்தாதையென்றனன்.—எ-று.

சீராமனுக்குப் புருடோத்தமனென்னும் பெயர்பற்றி 'ஆணாயகனே' என்றதென்க. இது முறையன்றென்றுணராது வேண்டிப்பெற்றமையின் 'மாணாவுரையாள்' என்றான். கழிபேரவலமொருபொருட்பன்மொழி. இம்மூன்றுசெய்யுளானும் வசிட்டமுனிவன் அரசனை வருந்தாதொழியென்றதுணர்த்தப்பட்டது. (௬௰)

என்றம் முனிவன் றன்னை நினையா வினையே னினியான்
பொன்றும் மளவி லவனைப் புனைமா மகுடம் புனைவித்
தொன்றும் வனமென் றுன்னவண்ணஞ்செய்தென் னுரையுங்
குன்றும் பழிபூ ணுமறக் காவாய் கோவே யென்றான்.

(இ - ள்.) என்ற அம்முனிவன் றன்னை நினையா-என்றுகூறிய அவ்வசிட்டமுனிவனை எண்ணி, வினையேன் இனியான் பொன்றுமளவில்-வினையையுடையேனாகிய யானிறக்குமளவில், அவனை புனைமாமகுடம் புனைவித்து-

அச்சீராமனைப் புனைதற்குரியமாமுடிபுனைவித்து, வனமொன்றுமென்றுன்ன வண்ணஞ்செய்து-காடணைவானென்று நினையாதவகை செய்து, என்னையும் குன்றும் பழிபூணமல் - என்வாய்மொழியும் பொய்க்கும் வகைசெய்யா தொழிந்து, காவாய்கோவே யென்றான்-தவத்தவர்க்கரசனே! காவாயென்றனன்.

உம்மை உயர்வுசிறப்பு. என்ற என்னும் பெயரெச்சத்திறு தொகுத்தல் பெற்றது. பொன்றுமளவில் என்பதற்கு யான் பொன்றுதல் திண்ணமாகலின் அதன் முன்னென்பதுணர்க. இனையேனெனக்கொண்டு, இத்தன்மையேனெனக் கூறுவதுமொன்று. வரங்கொடுத்துயிரிழக்கின்றவனாகலி னங்ஙனங் கொண்டதென்க. இதனான் அரசன் தன்கருத்துணர்த்திய துணர்த்தப்பட்டது. (௬௧)

முனியும் முனியுஞ் செய்கைக் கொடியாண் முகமே நோக்கி
இனியுன் புதல்வற் கரசும் மேனை யோர்க்கின் னுயிரும்
மனுவின் வழிநின் கணவற் குயிரும் முதவி வசைதீர்
புனிதம் மருவும் புகழே புனையாய் பொன்னே யென்றான்.

(இ - ள்.) முனியும் - வசிட்டமுனிவனும், முனியும் செய்கை கொடியாள் முகமே நோக்கி - யாவரும் சினங்கொள்கின்ற செய்கையையுடைய கொடியளாகிய கைகேசி முகம்பார்த்து, இனி உன் புதல்வற்கு அரசும் - இனிநின்மகனாகிய சீராமனுக்கரசச்செல்வமும், ஏனையோர்க்கின்னுயிரும் - பிறர்க்கவ ரினியவுயிரும், மனுவின்வழி நின்கணவற்குயிரும் - மனுவின்வழி வந்த உன்கணவனாகிய தயரதனுக்குயிரும், உதவி - அளித்து, வசைதீர் - குற்றநீங்கிய, புனிதமருவும் - பரிசுத்தமமையும், புகழேபுனையாய் - புகழினையே மேற்கொள்வாய், பொன்னே யென்றான் - பொன்போல்வாளே என்றனன்.

'கானீயுமென்றுரைத்த கைகேசியுங்கொடிய-கூனீயுமல்லாற் கொடியார் பிறருளரோ' என முற்கூறியதனை வற்புறுத்தற்கு 'முனியுஞ்செய்கைக்கொடியாள்' என்றார். மனுவின்வழிவந்தோர் முறைதிறம்பாராகலின் 'மனுவின்வழி நின்கணவன்' என்றதென்க. உன்மகனென்றது சீராமனை. பொன் - ஆகுபெயர். இதனான் வசிட்டமுனிவன் கைகேசியைநோக்கிச் சீராமனுக்கரசும், அரசனுக்குயிரு முதவுவாயென வேண்டிய துணர்த்தப்பட்டது. (௬௨)

மொய்ம்மாண் வினைவே றறவென் றொழிவான் மொழியா முன்னம்
விம்மா வழுவா ளரசன் மெய்யிற் றிரிவா னென்னில்
இம்மா வுலகத் துயிரோ டினிவாழ் வுகவே னென்சொல்
பொய்ம்மா ணமற் கின்றே பொன்று தொழியே னென்றாள்.

(இ - ள்.) மொய் மாண் வினை வேரற - நெருங்கிய மாட்சிமைப்பட்ட வினைவேரற்றுப்போக, வென்று ஒழிவான் மொழியாமுன்னம் - வென்றஒழிந்தமுனிவன் சொல்லா முன்னம், விம்மாவழுவாள்-விம்மிநின்றழுங்கைகேசி, அரசன் மெய்யின் திரிவானென்னின் - அரசன் மெய்யினின்று மாறுபடுவனாயின், இம்மாவுலகத்து - இப்பெரிய வுலகத்து, உயிரோடினி வாழ்வுகவேன்-

உயிரோடினிவாழ்வை விரும்பேன், என் சொல் பொய் மாணாமற்கு - என் மொழி பொய்யாகாமலுக்கு, இன்றே பொன்றாதொழியே னென்றாள் - இன்றே இறவாழலிரோன் என்றனள்.—எ-று.

அழுவாள் வினைப்பெயர். மாணாமற்கு உவ்வீற்றெதிர்மறைச் செய்தெனெச்சம். அரசுபெறாதொழியின் உயிர்துறப்பளென்பதற்குப் 'பொய்ம்மாணாமற்கின்றே பொன்றாதொழியேன்' என்றதென்க. மாண்வினை என்றது தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவுமென மூவகையான் வருந்துன்பங்களை. இவற்றை ஆதியான்மிகம், ஆதி பௌதிகம், ஆதிதெய்விகமென்பர் வடநூலார். இதனாற் கைகேசி மறுத்தமை யுணர்த்தப்பட்டது. (சரு)

(1) கொழுநன் றுஞ்சும் மெனவுங் கொள்ளா துலகம் மெனவும்
பழிநின் றுயரும் மெனவும் பாவம் முளதா மெனவும்
ஒழிகின் றிலையன் றியுமொன் றுணர்கின் றிலையா னினிமேல்
மொழிகின் றனவென் னென்னாமுனியும் முறையன் றென்பான்.

(இ - ள்.) கொழுநன்துஞ்சும் எனவும் - கணவன் இறப்பனெனவும், உலகம் கொள்ளாதெனவும் - உலகத்தவர் கொள்ளமாட்டாரெனவும், பழிநின்றுயரும்மெனவும் - பழிநின்றோங்குமெனவும், பாவமுளதாமெனவும் - பாவமுண்டாகுமெனவும், ஒழிகின்றிலை - கொண்டவெண்ணம் நீங்கிலை, அன்றியும் ஒன்றுணர்கின்றிலை - அல்லாமலும் சிறிதுமறிந்திலை, யான் இனிமேல் மொழிகின்றன என் என்னா - நானினிமேற் கூறுவனயாவையுள என்று, முனியும் முறையன்றென்பான் - வசிட்டமுனிவனுமிது முறையன்றென்று கூறுவன்.

ஆத்தவாக்கியமுங் கேட்டிலை யென்பார் 'அன்றியு மொன்றுணர்கின்றிலை' என்றும், யான்சொல்லவேண்டுவன வெல்லாஞ்சொல்லிவிட்டேனென்பார் 'யான் மொழிகின்றனவென்' என்றுங் கூறினார். (சச)

(2) கண்ணோ டாதே கணவ னுயிரோ டிடர்கா ணாதே
புண்ணோ டோடுங் கனலோ விடமோ வென்னப் புகல்வாய்
பெண்ணோ தீயோ மாயாப் பேயோ கொடியாய் நீயிம்
மண்ணோ டுன்னோ டென்னாம் வசையோ வலிதே யென்றான்.

(இ - ள்.) கண்ணோடாது - பின்னுங்கண்ணோட்டமின்றி, கணவன் உயிரோடிடர்காணாது - சக்கரவர்த்தி உயிர் உடம்பினின்றேகுந் துன்பங்காணாமல், புண்ணோடோடுங்கனலோ - புண்ணொடுசெல்லுந்தீயோ, விடமோ-விடமேயோ, என்னப்புகல்வாய் -என்னப்பேசாநிற்கின்றனை, நீ பெண்ணோ - நீ பெண்ணேயோ, தீயோ - நெருப்பேயோ, மாயாப்பேயோ - அழியாதபேயேயோ, கொடியாய் - கொடியவளாகிய கைகேசியே, இம்மண்ணோடுன்னோடென்னும், உலகினிடத்தும் உன்னிடத்தும் யாது இயைபுண்டு, வசையோவலிதே யென்றான் - உனக்குண்டான பழிச்சொல்லோ வலியதென்றனன்.—

வடிவாற்பெண்ணொத்தலின் 'பெண்ணே' என்றும், அரசனை உள்ளும் புறம்பும் வருத்தலின், 'தீயோ' என்றும், கொள்கைவிடாது நிற்றலின் 'பேயோ' என்றும் கூறினர். கணவனுழை அன்புடையளாகாமையான், 'கண்ணோடாதேகணவனுயிரோடிடர்காணுதே' என்றதென்க. (சரு)

(3) வாயான் மன்னன் மகனை வனமே கென்னு முன்னம்
நீயோ சொன்னு யவனே நிமிர்கா னிடைவெந் நெறியிற்
போயோ புகலோ தவிரான் புகழோ டுயிரைச் சுடுவெந்
தீயோய் நின்போற் றீயா ருளரோ செயலென் னென்முன்.

(இ - ள்.) வாயால்மன்னன்மகனை - வாயினுல் அரசன் தன் மகனை, வனமேகு என்னுமுன்னம்-வனஞ்செல்லென்னுமுன்னர், நீயோசொன்னுய்-நீயேயோ சொல்லிவிட்டனை, அவனே - அவ்விராமனே, போயோ புகலோ தவிரான்-போயடைவதையோ நீங்கிலன், புகழோடு-புகழினேடு, உயிரைசுடு வெந்தீயோய் - உயிரைவருத்துந் தீயினையொப்பாளே, நின்போல் தீயாருளரோ - உன்போற் கொடியவருண்டோ, செயலென் என்முன் - இது என்ன செய்கை யென்றனன்.—எ-று.

எவனென்னும் வினுவினைக்குறிப்புமுற்று என்னென்முகி ஈண்டு இன்மை குறித்துநின்றது; * "கற்றதனுலாயபயனென்கொல்" என்புழிப்போல. நீயோ சொன்னுயென்புழி, ஒகாரம் வினு. புறத்தே சுடுந்தீயைப்போலாதுயிரைச்சென்று வெதுப்புந்தீயாகலின் 'உயிரைச்சுடுவெந்தீ' என்றதென்க. இம்மூன்றுசெய்யுளானும் வசிட்டமுனிவன் கைகேசிக்கு நல்லறிவுச் சுடர் கொளுத்திய துணர்த்தப்பட்டது. (சசு)

(1) தாவின் முனிவன் புகலத் தளரா நின்ற மன்னன்
நாவி னஞ்ச முடைய நங்கை தன்னை நோக்கிப்
பாவி நீயே வெங்கான் படர்வா யென்றென் னுயிரை
ஏவி னுயோ வவனு மேகி னுனே வென்முன்.

(இ - ள்.) தாவில் முனிவன் புகல - குற்றங்கணீங்கிய வசிட்ட முனிவன் கூற, தளரா நின்ற மன்னன் - மனந்தளர்கின்ற தயரதன், நாவில் நஞ்சமுடைய-நாவின்கண்விடத்தையுடைய, நங்கைதன்னைநோக்கி-கைகேசியைப் பார்த்து, பாவி - கொடியாளே! நீயே வெம் கான்படர்வாய் - நீயே கொடிய காடு செல்வாய், என்று என்னுயிரை ஏவினுயோ - என்று சொல்லி என்னுயிர்போல்வானுகிய சீராமனைச் செலுத்தினையோ, அவனுமேகினுனேவென்முன்-அவனும் சென்றனனே என்றனன்.—

விடத்தைப்பல்லிலுடைய நாகத்தினின்றும் வேறுபடுத்தற்கு 'நாவினஞ்சமுடைய நங்கை' என்முர். உயிரென்றது சீராமனை, ஆகுபெயர். காமம் வெ

* திருக்குறள், செ - உ.

குளிமயக்கமென்னு முக்குற்றமுமறக் களைந்தவனாகலின் 'தாவில்முனிவன்' என்றதென்க. (சஎ)

(2) கண்டே னெஞ்சங் கனிவாய்க் கனிவாய் விடநா னெடுநாள்
உண்டே னதனா னீயென் னுயிரை முதலோ டுண்டாய்
பண்டே யெரிமுன் னுன்னைப் பாவி தேவி யாகக்
கொண்டே னல்லேன் வேறோர் கூற்றந் தேடிக் கொண்டேன்.

(இ - ள்.) நெஞ்சம் கனிவாய் கண்டேன் - பின்னும் உன்கருத்தினை நன் கறிந்தேன், கனிவாய் விடநாள் நெடுநாள் உண்டேன் - நின்கொவ்வைக் கனிபோலும் வாயிற் பிறந்த விடத்தினை நான் பலகாலுண்டேன், நீ யென் உயிரை முதலோடு உண்டாய்-ஆகலின் என்னுயிரை வேருடன் களைந்தனை, பண்டேயெரிமுன் - முன்னரே தீ முன், உன்னை பாவிதேவியாக கொண்டே னல்லேன் - உன்னைக்கொடியாளே மனைவியாகக் கொண்டவனல்லேன், வேறோர் கூற்றம் தேடி கொண்டேன் - வேறொரு கூற்றுவனைத் தேடிக் கொண்டனன்.—

விடத்தையுண்டாரை யஃதுடனே கொல்லும், அதுபோல்வதொன் றன்றாகலின் 'வாய்விடம்' என்றும், தீமுன் மனையாளாக வரிப்பார் வரிக்கயானு யிரைவாங்குங்கூற்றந்தேடினேனென்பார் 'எரிமுன் தேவியாகக்கொண்டே னல்லேன் வேறோர் கூற்றந் தேடிக்கொண்டேன்' என்றும் கூறினார். (சஅ)

(3) விழிக்குங் கண்வே றில்லா வெங்கா னென்கான் முளையைச்
சுழிக்கும் வினையா லேகச் சூழ்வா யென்னைப் போழ்வாய்
பழிக்கு நாணாய் மாணாப் பாவி யினியென் பலவுன்
கழுத்தின் னாணுன் மகற்குக் காப்பின் னாணு மென்றான்.

(இ - ள்.) விழிக்கும்கண் - தன்னையல்லது இமைத்துப்பார்க்கும் கண், வேறில்லாத என் கான்முளையை-வேறுபொருளை அறியாத என்மகனாகிய சீரா மனை, சுழிக்கும் வினையால்-வருத்துமியல்பினையுடைய தீவினையால், வெங்கா னேக - கொடிய காட்டிற் புக, சூழ்வாய் - ஆராய்ந்தவளே, என்னைப்போழ் வாய் - என்னைக்கொல்பவளே! பழிக்கு நாணாய் - பழியெய்த நாணமடையா தாளே! மாணாபாவி-மாண்டகுணமில்லாதபாவியே! இனி என் பல-இனிக்கூ றியதனாற்பயன் யாவை? உன் கழுத்தின்நாண்-உன்கழுத்திலணிந்தமங்கலசூத் திரம், உன்மகற்குக்காப்பினாணுமென்றான் - உன் மகனாகிய பரதனுக்கு மணி முடிபுனையக்காப்பினாணாகுமென்றனன்.—எ-று.

கான்முளை - அன்மொழித்தொகை. 'சுழிக்கும் வினை' என்றது முன்னை வினையெனக்கொள்வதன்றி வரநல்கியமையாகிய கொடுந்தொழிலுமாம். அவ ன் காடு செல்லப் பிறரொடுமொராயு நின்றனுயிர்நீங்கு மென்பார் 'வினையா லேகச் சூழ்வாயென்னைப்போழ்வாய்' என்றும், அதனாற்பழிக்கு நாணமையா னதனைக்கூறின் யாதென்பார்'இனியென்பல'என்றுங்கூறினார். கழுத்தினாண்

மங்கலசூத்திரம். காப்பிஞண் - இரட்சாபந்தனம். தான் காணப்பிறரில்லாமை யான் 'விழிக்குங்கண்வேறில்லா' என்றதென்க. இம்மூன்றுசெய்யுளானும் அரசன் கைகேசியைநோக்கி வருந்திக் கூறியதுணர்த்தப்பட்டது. (சுக)

இன்னே பலவும் பகர்வா னிரங்கா தாளை நோக்கிச்
சொன்னே னின்றே யிவளென் றார மல்ல டுறந்தேன்
மன்னே யாவான் வருமப் பரதன் றனையும் மகனென்
றுன்னேன் முனிவா வவனு மாகா னுரிமைக் கென்றான்.

(இ - ள்.) இரங்காதாளை நோக்கி - கணவன் படுந்துயர்க்கு மனமழியாத கைகேசியைப்பார்த்து, இன்னே பலவும் பகர்வான் - இத்தன்மையவாய பலமொழிகளையுங்கூறுந் தயரதன், முனிவா-முற்றத்துறந்த முனிவனே! இன்றே சொன்னேன் - இற்றைப்பொழுதே சொல்கின்றேன், இவள் என்தாரமல்லள் துறந்தேன் - இக்கைகேசி என்மனையாளல்லள் என்றே நீக்கினேன், மன்னேயாவான்வரும்அப்பரதன்றனையும் - இனி அரசனுக வருகின்ற அப்பரதனையும், மகனென்றுன்னேன்-மகனென்றுநினையேன், அவனும் உரிமைக்கு ஆகானென்றான் - அவனு முரிமைக்கடன்செயற்கு உரியனுமாகானென்றனன்.—எ-று.

கணவன் வழிநில்லாது அவனுயிர் வாங்குங் கூற்றேபோனிற்றலின் 'இவளென்றாரமல்லடுறந்தேன்' என்றும், முறைமாறி அரசாளக்கருத்துடையனுகலானும், சீராமனைக்காடுபோகச் செய்தமையானும் பரதனை 'மகனென்றுன்னேனுரிமைக்காகான்' என்றுங்கூறினுர். 'இன்னேபலவும்பகர்வான்' என்றது 'பாவிநீயேவெங்கான்படர்வாயென்றென்னுயிரை-ஏவினுயோ' என்பதுமுதலாயினவற்றை. இதனுன்வசிட்டமுனிவனைநோக்கிக் கைகேசிதாரமல்லள் என்றும், பரதன்மகனல்லன் என்றுங்கூறியதுணர்த்தப்பட்டது. (ருய)

என்னைக் கண்டு மேகா வண்ணமிடையூ றுடையான்
உன்னைக் கண்டி லனோ வென்றா னுயர்கோ சலையைப்
பின்னைக் கண்டா னனையான் பிரியக் கண்ட துயரந்
தன்னைக் கண்டே தவிர்வா டளர்வா னிலையிற் றளர்வான்.

(இ - ள்.) பின்னை - இவ்வாறுகூறியபின்னர், என்னைக்கண்டும் - என்னைப்பார்த்தும், ஏகாவண்ணம்-வனம்போகாதவகை, இடையூறுடையான்-துயரமுடைய சீராமன், உன்னை கண்டும் இலனோ-உன்னையும் பார்த்திலனோ, என்றான் - என்றுசொல்லி, உயர்கோசலையை - உயர்ந்தகுணத்தையுடைய கோசலையை, கண்டான் - கண்டு, துயரம்தன்னைக்கண்டே - துன்பத்தினைத் தன்னைப்பார்த்தே, தவிர்வாள்-அவன் பிரிவைத்தவிர நினைந்து, தளர்வாள் - மனந் தளர்பவளாகிய அக்கோசலையினது, நிலையிற்றளர்வான் - நிலையிற்றானும் தளர்கின்றனன்.—எ-று.

தன்னைக்காணக் கைகேசி தடைசெய்தமையான் 'என்னைக்கண்டுமேகாவண்ணமிடையூறுடையான்'என்றும், அவன் உன்னையுங்காணத் தடை நேர்ந்ததோ என்பதற்கு 'உன்னைக்கண்டுமிலனோ' என்றும், எல்லாநற்குணங்கட்கு மிருக்கையாகலின் 'உயர்கோசலையை' என்றுங்கூறினார். பின்னைக்கண்டுமேகாவண்ணமிடையூறுடையான் கண்டுமிலனோ என்றான் கண்டான், கண்டே தவிர்வாடளர் வாணிலையிற்றளர்வானென வினைமுடிக்க. இதனாற் கோசலையைநோக்கி அரசன் வருந்தினமை யுணர்த்தப்பட்டது. (௫க)

(1) மாற்றாள் செயலா மென்றுங் கணவன் வரமீந் துள்ளம்
ஆற்றா தயர்ந்தா னென்று மறிந்தா ளவளு மவனைத்
தேற்றா நின்றாண் மகனைத் திரிவா னென்றா ளரசன்
தோற்றான்மெய்யென் றுலகஞ்சொல்லும் பழிக்குஞ்சோர்வாள்.

(இ - ள்.) அரசன் - தயரதன், தோற்றான்மெய்யென்று - வாய்மையிற்றிரிந்தானென்று, உலகம் சொல்லும்பழிக்குஞ்சோர்வாள் - உலகம் கூறும் பழிச்சொற்கும் வருந்துகின்ற கோசலை, மாற்றாள்செயலாமென்றும் - இது மாற்றவளாகிய கைகேசியினது செய்கையேயாமென்றும், கணவன்வரமீந்து - கணவன் வரங்கொடுத்து, உள்ளமாற்றாதயர்ந்தான் - உள்ளம்பொறாதயர் வெய்தினன், என்றுமறிந்தாள் - என்றுந்தெரிந்துகொண்டு, அவளு மவனைத் தேற்றாநின்றாள் - அவளுமரசனைத் தேற்றாநின்று, மகனைத்திரிவானென்றாள் - தன்மகனை மீண்டும் வருவனென்றனள்.—

மேல் உயர்கோசலையென்பதற்கேற்ப 'அரசன்தோற்றான்மெய்யென்றுலகஞ் சொல்லும் பழிக்குஞ்சோர்வாள்' என்றதென்க. மகனை நாடிவருந்துகிற்பவளாகலின் அரசனைநோக்கி 'மகனைத்திரிவானென்றாள்' என்று கூறினார். 'மாற்றாள்'என்றது கைகேசியை. சோர்வாள் ஈந்தயர்ந்தானென்றுமறிந்தாள், தேற்றாநின்றாள் திரிவானென்றாள் என வினைமுடிக்க. (௫௨)

(2) தள்ளா நிலைசான் மெய்ம்மை தழுவா வழுவா வகைநின்
றெள்ளா நிலைகூர் பெருமைக் கிழிவா மென்றா லுரவோய்
விள்ளா நிலைசே ரன்பான் மகன்மேன் மெலியி னுலகங்
கொள்ளா தன்றோ வென்றாள் கணவன் குறையக்குறைவாள்.

(இ - ள்.) கணவன் குறைய குறைவாள் - கணவன் வருந்தத் தானுமுடன் வருந்துபவளாகிய கோசலை, தள்ளா நிலைசால் மெய்ம்மை தழுவா - கெடாதநிலைமை நிரம்பிய மெய்ம்மை சேர்ந்து, வழுவாவகை நின்று-தவறாத நெறியினின்று, எள்ளா நிலைகூர் பெருமைக்கிழிவாமென்றால் - பிறரால் இகழப்படாத நிலைமைமிக்க பெருமைக்கிழிவேதரின், உரவோய் - அறிவையுடையானே, விள்ளாநிலைசேர் அன்பால் மகன்மேல் மெலியின் - வேற்றுமைப்படாத நிலைமையமைந்த அன்பினால் மகனாகிய சீராமன் பால் வருந்தின், உலகம் கொள்ளாதன்றோ வென்றாள் - உலகம் உடன்படாதன்றோ வென்றனள்.—

அறிவுடையானெனப்பட்டு மிவ்வாறிரங்கல் நன்றன்றென்பாள் 'உரவோய்' என்றும், மகன்பால் அன்புகாரணமாக மெலிவது அறமன்றென்பாள் 'அன்பான் மெலியின்' என்றுங் கூறினாள். (நுரு)

(3) போவா தொழியா னென்றாள் புதல்வன் றன்னைக் கணவன்
சாவா தொழியா னென்றென் றுள்ளந் தள்ளூற் றயர்வாள்
காவா யென்றும் மகனைக் கணவன் புகழுக் கழிவாள்
ஆவா வுயர்கோ சலையா மன்ன மென்னுற் றனளே.

(இ - ள்.) கணவன் சாவாதொழியானென்றென்று - தன் நாயகனிறந்துபடுவனென்று பலமுறையெண்ணி, உள்ளந்தள்ளூற்றயர்வாள் - உள்ளம் வருந்து மியல்பினையுடையாளாகிய, உயர் கோசலையாம் அன்னம் - உயர்ந்த குணத்தையுடைய கோசலையென்னும் அன்னம்போல்வாள், புதல்வன் றன்னை - தன் மகனாகிய சீராமனைக்கருதி, போவாதொழியானென்றாள் - காட்டிற்செல்வ தொழியானென்பாள், மகனைகாவா யென்றாள் - மகனை எண்ணித்தந்தையைக் காப்பாயென்பாள், கணவன் புகழுக்கழிவாள் - தன் கணவனுடைய புகழினுக்கு உள்ள மழிபவளாய், ஆ ஆ என் உற்றனள் - அந்தோ எத்தன்மையதாகிய துயரத்தையடைந்தனள்.—எ-று.

அன்னம்-ஆகுபெயர். ஆ ஆ-இரக்கத்தின்கட்குறிப்பு. 'கணவன்புகழுக் கழிவாள்' என்றது - வாய்மைக் குயிர்விடுகின்றமைநோக்கி. 'உயர்கோசலை' என்றார் - இராமனாகிய மகனைத்தந்த பெருமிதம்பற்றி. கருதி என்பதுசொல்லெச்சம். இம்மூன்றுசெய்யுளானும் கோசலை அரசனைநோக்கி வருந்தினமை யுணர்த்தப்பட்டது. (நுச)

(1) உணர்வா னனையா ளுரையா லுணர்ந்தா னுரைசால் குமரன்
புணரா னிலமே வனமே போவா னேயா மென்னா
இணரார் தருதா ரரச னிடரா லயர்வான் வினையேன்
துணைவா துணைவா வென்றான் தோன்றா ரென்றா யென்றான்.

(இ - ள்.) உணர்வான் - அறிவினையுடையதயரதன், அனையாள் உரையால் உணர்ந்தான் - அக்கோசலைசொல்லினால் சிறிதுணர்ச்சிவரப்பெற்று, உரைசால்குமரன்நிலமேபுணரான் - புகழினையுடைய தன்மகனாகிய சீராமன் நிலத்தையடையாமல், வனமேபோவானேயாமென்னா - காட்டிற்குப்போவானேயாமென்று, இணரார்தருதாரரசன் - பூங்கொத்தாலியன்ற மாலையை யுடைய அரசன், அயர்வான் - வருந்தி, வினையேன்துணைவா துணைவா என்றான் - தீவினையுடையவென் துணைவனே துணைவனேயென்று கூறுவான், தோன்றாரென்றாயென்பான் - மன்னேஎன் கட்புலனுக்குத்தோன்றாயோ வென்று கூறுவான்.—

அடுக்கு அவலப்பொருளது. எவ்வகைப்புகழுந்தனக்கிடனாகவுடையனாகலின் 'உரைசால்குமரன்' என்றார். இனி மறையனைத்துமறிந்த குமரனெனினுமிழுக்காது. (நுரு)

(2) கண்ணு நீரா யுயிரு மொழுகக் கழியா நின்றேன்
எண்ணு நீர்நான் மறையோ ரெரிமு னின்மேற் சொரிய
மண்ணு நீராய் வந்த புனலை மகனே வினையேற்
குண்ணு நீரா யுதவி யுயர்கா னடைவா யென்றான்.

(இ - ள்.) கண்ணு நீராய்- கண்ணிரண்டும் நீர்சொரிய, உயிருமொழுக- உயிருஞ்செல்ல, கழியாநின்றேன் - இறக்கின்றேன், எண்ணுநீர் நான்மறையோர் - யாவரானு மெண்ணப்படும் தன்மையையுடைய நான்குவேதங்களையு மோது மந்தணர், எரிமுன் - வேள்வித்தீமுன், நின்மேற்சொரிய - நின்னை யாட்டுதற்கு, மண்ணுநீராய்வந்தபுனலை - சுத்தோதகமாய்க்கொணர்ந்த நீரை, மகனே - மகனே! வினையேற்குண்ணுநீராயுதவி - தீவினையேனாகிய எனக்கு உண்ணுநீராய்த்தந்து, உயர்கானடைவாயென்றான் - பெருங்காட்டிற்செல லென்றனன்.—

மண்ணுநீராய் வந்தபுனலென்றது 'கங்கையேமுதலவாய கன்னியீறான தீர்த்த - மங்கலப்புனலும் நாலுவாரியினீரும்' என்றும், 'எரிமுன்' என்றது 'அங்கியின் வினைக்கேற்றயாவையுமமைத்து' என்று முற்கூறிப்போந்தவற்றை. 'மண்ணுநீ' என்றார் நீராட்டுதற்கு வந்ததனை. இதனை "மண்ணுநீர்மருளவாட்டி" எனப்பிறருங்கூறுதல் காண்க. வினையேனென்பதற்குத் தீவினையேனெனவிரித்ததனை. ० "வல்வினையேன்" என்றும், "பெரும்பாவியேன்" என்றும், 'உயிருமொழுகக்கழியாநின்றேன்' என்பதனை "நானும்வானகமே மிக விரும்பிப்போகின்றேன்" என்றும் பெரியாரும் பணித்தமையானுமுணர்க.()

(3) படைமா ணரசைப் பலகாற் பழுவாய் மழுவா லெறிவான்
மிடைமா வலிதா னனையான் வில்லா லடுமா வல்லாய்
உடைமா மகுடம் புனையென் றுரையா வுடனே கொடியேன்
சடைமா மகுடம் புனையத் தந்தே னந்தோ வென்றான்.

(இ - ள்.) படைமாணரசை - சேனையின்மாண்புபெற்ற அரசரை, பல கால் - பலமுறை, பழுவாய் மழுவா லெறிவான் - பழுக்கக்காய்ச்சிய கூரிய மழுப்படையாற் கொல்பவனும், மிடைமாவலிதானனையான் - வென்றியையுடையமாவலியையே யொப்பவனுமாகிய இராமனை, வில்லாலடுமாவல்லாய்- வில்லினால் வெற்றிகொண்ட திறத்தினையுடையசீராமனே, உடைமா மகுடம் புனையென்றுரையா - நீ புனைதற்குரிய பெரியமுடியைப்புனை யென்றுகூறி, உடனே-விரைவாய், கொடியேன்-தீவினையையுடையேனாகியயான், சடைமா மகுடம் புனையதந்தேன் அந்தோ என்றான் - ஐயோ சடைமுடியைப் புனையத் தந்தேன் என்றனன்.—

மாவலி வானோரையெல்லாம் வென்றாங்குப் பரசுராமனுமரசரையெல்லாம் வென்றதனா னவனையேயுவமித்தார்; இனி பெருவலியிற்றன்னையே யொப்பானெனினுமாம். இதனை § "முன்னொருநாண்மழுவாளிசிலைவாங்கியவன்றவத்தைமுற்றுஞ் செற்றாய்" எனப்பெரியாரும் பணித்தமைகாண்க.

பெருமாள்திருமொழி, { ० கூ-வது திருப்பதிகம், செ - கo
§ கூ-வது திருப்பதிகம், செ-கூ.

(4) கறுத்தா யுருவம் மனமுங் கண்ணுங் கையுஞ் செய்ய
பொறுத்தாய்பொறையேயிறைவன்புரமூன்றெரித்தபோர்வில்
இறுத்தாய் தமியே னென்று தென்னை யிம்மூப் பிடையே
வெறுத்தாயினிநான்வாழ்நாள்வேண்டேன்வேண்டேனென்றான்.

(இ - ள்.) உருவம் கறுத்தாய் - கரியகோலத்திருவுடையானே! 'மனமும் கண்ணும் கையும் செய்ய பொறுத்தாய் - மனத்தையும் கண்ணையும் கையையும் செம்மையாகக்கொண்டானே! பொறை எய் இறைவன் புரமூன்றெரித்த போர்வில் இறுத்தாய்-கைலைமலையில் வீற்றிருக்கும் சிவனது முப்புரம் பொடித்த போர்த்தொழிலையுடையவில்லை யொடித்தவனே! தமியேனென்று து- துணையாவாரொருவருமில்லாதேனென்றது, என்னை இம்மூப்பிடையே வெறுத்தாய்-என்னை இம்முதுமைப்பருவத்திலே கைவிட்டனை, இனிநான் வாழ்நாள் வேண்டேன் வேண்டேனென்றான் - இனிநான் வாழ்க்கைநாளை மிகுதியும் வேண்டேன் என்றனன்.—

'பொறையேயிறைவன் புரமூன்றெரித்தபோர்வில் இறுத்தாய்' என்றதனை * "மலராள்கூந்தல்வேய்போலு மெழிற்றோளிதன்பொருட்டால் விடையோன்றன் வில்லைச்செற்றாய்" எனப்பெரியாரும் டணித்தமையானுமுணர்க. 'கரியகோவே' என்பவாகலின் கறுத்தாயுருவமென்றும், கண் கை மார்வம் செந்தாமரையொப்பவாகலின், 'மனமுங் கண்ணுங் கையுஞ்செய்யபொறுத்தாய்' என்றும், சிவனது வில்லையொடித்துச் சனகியை மணந்தமைதோன்றப் 'புரமூன்றெரித்தபோர்வில் இறுத்தாய்' என்றும், கயிலையிலுறையுமிறைவனென்பதுதோன்றப் 'பொறையேயிறைவன்' என்றுங்கூறினார். வாழ்நாளென்றது மரீஇயது. மகன்றந்தையை முதுமையிற் காப்பது முறையேயாகக்காவாமையின் 'என்னை இம்மூப்பிடையேவெறுத்தாய்'என்றதென்க. அடுக்கு மிகுதிப்பொருளது. (௫அ)

(5) பொன்னின் முன்ன மொளிரும் பொன்னே புகழின் புகழே
மின்னின் மின்னும் வரிவிற் குமரா மெய்யின் மெய்யே
என்னின் முன்னம் வனநீ யடைதற் கெளியே னல்லேன்
உன்னின் முன்னம் புகுவே னுயர்வா னகம்யா னென்றான்.

(இ - ள்.) பொன்னின் முன்ன மொளிரும் பொன்னே-பொன்னுக்கு முற்பட்டொளிவிடும் பொன்னொப்பானே! புகழின் புகழே - புகழிற்குப் புகழொப்பானே! மின்னின் மின்னும் வரிவில்குமரா - மின்னினு மொளிவிடுகின்ற வரிந்துகட்டிய வில்லையுடைய மகனே! மெய்யின் மெய்யே-மெய்க்கு மெய்யொப்பானே! என்னின் முன்னம் வனம் நீயடைதற்கு-எனக்கு முன்னர் நீ காட்டிற் செல்வதற்கு, எளியேனல்லேன்-ஆற்றலில்லாதேனல்லேன், உன்னின் முன்னம் உயர்வானகம் - உனக்குமுன் உயர்வாகிய துறக்கம், யான் புகுவேனென்றான் - யான் சென்றடைவேனென்றனன்.—

'உன்னின் முன்னம் புகுவேனுயர்வானகம்யானென்றான்' என்பதனைந் *"கொடியவடன் சொற்கொண்டின்று - கானகமே மிகவிரும்பி நீதுறந்த

* பெருமாள்திருமொழி கூ-வது திருப்பதிகம்-செ. கல.

வளங்களைத்துறந்து நானும்-வானகமேமிக விரும்பிப்போகின்றேன் மனுகுல த்தார் தங்கள்கோவே" எனப்பெரியாரும் பணித்தமையானுமுணர்க. இது பொருளவநுதியென்னு மணி. (ருக)

(6) நெருதற் கொத்த நெஞ்சு நேயத் தாலே யாவி
உருதற் கொத்த வுடலு முடையே னுன்போ லல்லேன்
தருதற் கொத்த சனகன் றையல் கையைப் பற்றிப்
புகுதக் கண்ட கண்ணாற் போகக் காணே னென்றான்.

(இ - ள்.) நேயத்தால் நெகுதற்கொத்த மனமும் - அன்பான் உருகுதற்குத்தகுந்த மனமும், ஆவியுகுதற்கொத்த வுடலும் - உயிர்போதற்கொத்த வுடம்பும், உடையேன் உன்போல் அல்லேன்-உடையவனாகுவேன் நின்னைக்க இவை படைத்தவனல்லேன், தருதற்கொத்த சனகன் றையல் கையைப்பற்றி - நினக்குரியளாகிய சனகியை மணமயருங்காலத்திற் கையைப்பிடித்து, புகுதக்கண்ட கண்ணால் - தீயைவலம்வரக்கண்ட கண்களால், போக காணேன் என்றான் - செல்லப்பாரேனென்றனன்.—

கன்னெஞ்சமும் கற்படிவமு முடையையாகலி னிங்குவந்திரங்கக்காண்கிலேனென்பான் 'உன்போலல்லேன' என்றும், தவவொழுக்க னனிநிரம்பியோனாகலான் சனகனைத் 'தருதற்கொத்த' என்றடை கொடுத்துங்கூறினார். இனி வடநூலார் வழக்கிற்கேற்பச் சனகிக்குக் கூறினாரெனினுமாம். றையல்-ஆகுபெயர். கையைப்பற்றுதல் என்றது பாணிக்கிரகணத்தை. (கூய)

(7) எற்றே பகர்வே னினியா னென்னை யுன்னிற் பிரிய
வற்றே யுலகம் மெனினும் வானே வருந்தா தெனினும்
பொற்றே ரரசே தமியேன் புகழே யுயிரே யுன்னைப்
பெற்றேனருமையறிவேன்பிழையேன்பிழையேனென்றான்.

(இ - ள்.) இனியான் எற்றே பகர்வேன் - இன்னமும் எவ்வகையாக யான் சொல்வேன், உன்னின் என்னை பிரிய உலகம் வற்றேயெனினும் - உன்னைவிட்டு என்னைப்பிரியும்வண்ணம் உலகத்தவர் பொறுக்க வலியரேயாயினும், வானே வருந்தாதெனினும் - தேவரே மனம் வருந்தாராயினும், பொன்றேர் அரசே - பொன்னினாலாகிய தேரையுடைய அரசனே! தமியேன் புகழே - எனக்குப் புகழொப்பானே! உயிரே - உயிரொப்பானே, உன்னைப் பெற்றேன் - உன்னையே மகனாகப்பெற்றேன் - அருமை அறிவேன் - அதனருமையை யறிவேன், பிழையேன் பிழையேன் - பிழைக்கமாட்டேன் பிழைக்கமாட்டேன், என்றான் - என்றனன்.—

அடுக்குத் துணிவுப்பொருளது. தன்னையொத்த அரசனாகலின் 'பொற்றேரரசே' என்றும், தன் புகழுக்கிருக்கையாகலின் 'தமியேன்புகழே' என்றும், உயிரினுஞ்சிறந்த பொருளின்மையான் 'உயிரே' என்றும், சீராமனை மகனாகப்

பெறத்தவஞ்செய்தமையான் 'பெற்றேனருமையறிவேன்' என்றும், உன்னைப் பிரிந்தா லுயிர்நீங்குதல் துணிபாகலின் 'பிழையேன் பிழையேன்' என்றுங் கூறினர். (சுக)

(8) அள்ளற் பள்ளப் புனல்சூ ழகன்மா நிலமும் மரசுங்
கொள்ளக் குறையா நிதியின் குவையும் முதலா மெவையுங்
கள்ளக் கைகே சிக்கே யுதவிப் புகழ்கைக் கொண்ட
வள்ளற் றனமென் னுயிரை மாய்க்கு மாய்க்கு மென்றான்.

(இ - ள்.) அள்ளல் பள்ளம் புனல் சூழ் அகன்மா நிலமும் அரசும்- சேற்றையுடைய ஆழமாகிய நீரையுடைய கடல்சூழ்ந்த மிகப் பரந்த நிலமும் அரசும், கொள்ளக்குறையா நிதியின் குவையும் - யாவரெவ்வாறு கொண்டாலுங் குறைவெய்தாத செல்வத்திரளும், முதலாமெவையும் - இவை முன்னாகிய வெனைத்தும், கள்ளம் கைகேசிக்கே - தன் செயலில் வஞ்சகமுடைய கைகேசிக்கே, உதவிபுகழ் கைக்கொண்ட - கொடுத்துப் புகழினை மேற்கொண்ட, வள்ளல் தனம் - ஈகைத்தன்மை, என் உயிரை மாய்க்கும் மாய்க்கும் என்றான் - என்னுயிரினைக் கெடுக்கும் கெடுக்குமென்றனன்.—

நல்லவள்போற்காட்டி வஞ்சிக்கத் தொடங்கினமையான் 'கள்ளக்கைகேசி' என்றும், அரசை யுதவிய பெருஞ்சிறப்பென்னுயிரை நீக்கலான் 'என்னுயிரைமாய்க்கும்' என்றுங் கூறினர். வள்ளற்றனம் பண்புப்பெயர். அடுக்கு - துணிவுப்பொருளது. (சுஉ)

(9) ஒலியார் கடல்சூ ழுலகத் துயர்வா னிடைநா கரினும்
பொலியா நின்றா ருன்னைப் போல்வா ருளரோ பொன்னே
வலியா ருடையா ரென்றால் மழுவா ளுடையான் வரவுஞ்
சலியா நிலையா யென்றாற் றவிர்வா ருளரோ வென்றான்.

(இ - ள்.) பொன்னே - பொன்போல்வானே! ஒலியார் கடல்சூழுலகத்து - ஒலித்தலையுடைய கடல்சூழ்ந்த உலகத்துள்ளாரினும், உயர்வானிடை- உயர்ந்தவானுலகத்தவரினும்,நாகரினும்-நாகரினும்,பொலியாநின்றார்-வெற்றியால் விளங்குகின்றவர், உன்னைப்போல்வார் உளரோ - நின்னையொப்பார் பிறருளரோ, வலியாருடையாரென்றால் - மிடுக்குடையார் பிறருளரெனின், மழுவாளுடையான் வரவும் - பரசுராமன் வரவும், சலியா நிலையாயென்றால்- சலியாத நிலைமையுடையாயெனின், தவிர்வாருளரோவென்றான்-விலக்குவார் பிறருளரோவென்றனன்.—

மழுவாளுடையான் என்றது பரசுராமனை. ஓகாரங்கள் எதிர்மறைப்பொருளன. மழுவாளிவர நின்னல்லது வெல்வாரின்மையின் 'வரவுஞ்சலியாநிலையாய்' என்றதென்க.

(10) கேட்டே யிருந்தே னெனினுங் கிளர்வா னின்றே யடைய
மாட்டே னாகி லன்றோ வன்கண் ணென்கண் மைந்தா

காட்டே யுறைவாய் நீயிக் கைகே சியையுங் கண்டிந்
நாட்டே யுறைவே னென்று னன்றென் றன்மை யென்றான்.

(இ - ள்.) மைந்தா - மகனே, கேட்டேயிருந்தேனெனினும்-நீகாடுசெல்வது கேட்டிருந்தேனாயினும், கிளர்வான் இன்றே யடையமாட்டேனாகில்- ஓங்கிய் துறக்கம் இன்றெய்தப்பெறேனாயின், வன்கண் என்கண் அன்றோ- கொடுமை யென்பாலதன்றோ, நீ காட்டே யுறைவாய் - நீகாட்டில் வசிக்கின்றனை, இக்கைகேசியையும்கண்டு - இக்கைகேசியையும் பார்த்து, இந் நாட்டே யுறைவேனென்றால் - இவ்வுலகின்கண் வாழ்வேனாயின், என் தன்மை நன்றென்றான்-என் தன்மை நல்லதென்றனன்.—

நீ காடுசெல்லவே யான் றுறக்கமெய்துதல் திண்ணமாகலின் வன்கண்மையுடையே னல்லேனெனக்கூறுவார் 'கிளர்வானின்றே யடையமாட்டேனாகிலன்றோவன்கணென்கண்' என்றும், காடுசெல்லவும் கைகேசியையுங் கண்டிங்கே வசியேனென்பது கருதி 'நாட்டேயுறைவேனென்றானன்றென் றன்மை' என்றுங் கூறியதென்க. உம்மை இரண்டு மெதிர்மறை. (கூசு)

(11) மெய்யார் தவமே செய்துன் மிடன்மார் பரிதிற் பெற்ற
செய்யா ளென்னும் பொன்னு நிலமா தென்னுந் திருவும்
உய்யா ருய்யார் கெடுவே னுன்னைப் பிரியின் வினையே
னையா கைகே சியைநே ராகே னேயா னென்றான்.

(இ - ள்.) மெய்யார் தவமே செய்து - மெய்ம்மையாகிய தவஞ்செய்து, உன் மிடல் மார்பு-உன் வலிமையுடைய மார்பினை, அரிதிற்பெற்ற-அருமையினெய்திய, செய்யாளென்னும் பொன்னும் - திருமாமகளும், நிலமாதென்னும்திருவும்-நிலமகளும்,உய்யார் உய்யார்-பிழைக்கின்றிலர்,பிழைக்கின்றிலர், வினையேன் யான் உன்னை பிரியிற் கெடுவேன் - யான் உன்னைப்பிரிந்தால் கெடுவேன், ஐயா -ஐயனே, கைகேசியை நேராகேனேவென்றான்-கைகேசியையொத்தவனாக மாட்டேனேவென்றனன்.—

அடுக்கு துணிவுப்பொருளது. பொன்னுக்கதிதெய்வமாகலின் 'செய்யாளென்னும் பொன்னும்' என்றும், அவளொடு வேற்றுமைதோன்ற 'நிலமாதென்னுந்திருவும்' என்றுங் கூறினர். கெடுவேன் என்றது அவலத்தின்கண்வந்த குறிப்புமொழி. (கூரு)

(12) பூணா ரணியும் முடியும் பொன்னா சனமுங் குடையும்
சேணார் மார்புந் திருவுந் தெரியக் காணத் திரிவேன்
மாணா மாவற் கலையும் மானின் றோலும் மவைநான்
காணா தொழிந்தே னென்று னன்றாய்த் தன்றோகருமம்.

(இ - ள்) பூணாரணியும்- பூணுதலார்ந்த ஆபரணமும், முடியும்-கிரீடமும், பொன் ஆசனமும் குடையும்-அழகிய ஆசனமுங் குடையும், சேணார் மார்பும்

திருவும் - விசாலமான மார்பும் திருமகளும், தெரிய காண திரிவேன்-தெரியும்படி காணத்திரியாநிற்பேன், மாணுமாவற்கலேயும்-மாட்சிமைப்படாத மரவுரியும், மானின்றோலும் அவை-மானறோலுமாகிய அவைகளை, நான் காணுது ஒழிந்தேன் என்றால்-யான் காணமலொழிந்தனனெனின், கருமம் நன்றாய்த்து அன்றோ - கொண்டகாரிய நன்றாய் முடிந்ததன்றோ.—எ-று.

ஆய்த்து இறந்தகாலத்தொன்றன் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்று. நீ யுடுக்கத்தக்கதன்றாகலின் 'மாணுவற்கலே' என்றார். வற்கலே-வடமொழிச் சிதைவு. இப்பன்னிரண்டுசெய்யுளானும் தனயன் கான்புகத் தயரதன் புலம்புதலுணர்த்தப்பட்டது. (சுசு)

என்று வொன்றோன் றொவ்வா விசைதந் தரச னுயிரும்
சென்று னின்றே டென்னுந் தன்மை யெய்தித் தேய்ந்தான்
மென்றோன் மார்பின் முனிவன் வேந்தே யயரே லவனை
இன்றே காத வண்ணந் தகைவே னுலகோ டென்னு.

(இ - ள்.) என்று-என்று, ஒன்றொன்றொவ்வாத இசைதந்து-ஒன்றினோடொன்றொவ்வாத சொற்களைக்கூறி, அரசன் உயிரும் சென்றுனென்னும்-அரசன் உயிரு நீங்கினனென்கின்ற, தன்மையெய்தி தேய்ந்தான் - தன்மையையடைந்து அழிந்தனன், மென்தோல் மார்பின் முனிவன் - மார்பின்கண் மானின் மெல்லிய தோலையணிந்த வசிட்டமுனிவனும், 'வேந்தே அயரேல்-அரசனே வருந்தாதை, அவனை இன்று ஏகாதவண்ணம்-அச்சிராமனை இன்று காடுசெல்லாதவகை, உலகோடு தகைவேன் என்னு - உலகின்கண் தடுப்பனென்று.—எ-று.

மென்றோல் - மான்றோல். உலகோடென்னு மூன்றுவதேழாவதனிடப்பொருளது. உம்மை - உயர்வு சிறப்பு. முனிவனென்றது வசிட்டனை. இசைதந்து ஒருசொல். அயரேல் எலீற்றெதிர்மறையேவலொருமை வினைமுற்று. 'என்றுவொன்றொன்றொவ்வாவிசைதந்து' என்றது 'இணரார்தருதாரரசனிடராலயர்வான்வினையேன் துணைவா துணைவா என்றான்' என்பது முதலாயினவற்றை. இதனாற் றயரதன் புலம்புதல் கண்ட வசிட்டமுனிவன் அவனுள்ளந்தெருட்டிய துணர்த்தப்பட்டது. (சுஎ)

முனிவன் செல்லு மளவின் முடியுங் கொல்லென் றரசன்
தனிநின் றுழல்தன் னுயிரைச் சிறிதே தகைவா னிந்தப்
புனிதன் போனு லிவனுற் போகா தொழிவா னென்னு
மனிதன் வடிவங் கொண்ட மனுவுந் தன்னை மறந்தான்.

(இ - ள்.) முனிவன் செல்லுமளவில்-வசிட்டமுனிவன் போமளவில், முடியுமென்று - தன் கருத்து முற்றுப்பெறுமென்று, அரசன் தனிநின்றுழல் தன்னுயிரை-அரசன் தனியே நின்று வருந்தும் தன்னுயிரினை, சிறிதே தகைவான் - சிறிது தடுத்தே, இந்தபுனிதன்போனுல் இவனுல் போகாதொழிவான்

என்று-இப்பரிசுத்தகுணமுடையானாகிய வசிட்டமுனிவன் செல்லின் இவனால் போகாதொழிவனென்று, மனிதன் வடிவங்கொண்ட மனுவும் மனித வடிவத்தைக்கொண்ட மனுவை யனைய தயரதனும், தன்னை மறந்தான்-தன்னை மறந்துவிட்டனன்.—எ-று.

மனுவென்றது வைவச்சுதமனு, இவன் சூரியன்மகன்; இம்மனுவே சூரியகுலத்துக்காதிபுருடன். அவனையொப்ப நீதிசெலுத்தலி னவனையே உவமை கூறினர். கொல் அசைநிலை. தனி என்னு முதனிலைத் தனிவினைப்பெயர் ஈண்டு வினையெச்சப்பொருளது. * "வரிப்புனைபந்தொடு பாவைதூங்க" என்புழிப்போல. தன் கருத்து முற்றுப்பெறாதவென்றது சிராமன் காடுசெல்லாமையை. இதனால் அரசன் அயர்ந்தமையுணர்த்தப்பட்டது. (கூஅ)

(1) மறந்தா னினைவு முயிரு மன்ன னென்ன மறுகா
இறந்தான் கொல்லோ வரச னென்ன விடருற் றழிவாள்
துறந்தாய் மகனே யுலகோ டுமையு மென்னத் துணையாம்
அறந்தா னிதுவோ வையா வரசர்க் கரசே யென்றாள்.

(இ - ள்.) நினைவும் உயிரும் மன்னன் மறந்தான் என்ன மறுகா-அரசன் நினைவையும் உயிரையு மறந்தனனென்று கலங்கி, இறந்தான் கொல்லோ அரசன் என்ன - இறந்தனனோ அரசனென்று, இடருற்றழிவாள் - துன்பமெய்தி யழிபவளாகிய கோசலை, மகனே உலகோடுமையும் துறந்தாயென்ன - மகனே உலகத்தினோ டும்மையு நீங்கினை யென்று சொல்லி, துணையாம் அறந்தானிதுவோ - துணையாகிய தருமந்தானிதுவேயோ, ஐயா அரசர்க்கரசேஎன்றாள்-ஐயா சக்கரவர்த்தியேயேன்றனள்.—

அழிவாள் வினைப்பெயர். அரசனிறந்துபடின் தானு முடன்மாயக் கருதுபவளாகலின் 'துறந்தாயெமையும்' என்றாள். என்று என்பது திரிந்துநின்றது. ஒருவன் செய்தவற மவனுக்குத்தோட்கோப்பொப்பதாலின் 'துணையாமற' மென்றதென்க.

(2) மெய்யின் மெய்யே யுலகின் வேந்தர்க் கெல்லாம் வேந்தே
உய்யும் வகைநின் னுயிரை யோம்பா திஞ்ஞான் றேம்பில்
வையம் முழுதுந் துயரான் மறுகும் முனிவ னுடனம்
ஐயன் வரினும் வருமா லயரே லரசே யென்றாள்.

(இ - ள்.) மெய்யின் மெய்யே-வாய்மையுடைமையான் வாய்மைபோல்வானே! உலகின் வேந்தர்க்கெல்லாம் வேந்தே-உலகினுள்ள அரசருக்கெல்லா மரசனே! நின்னுயிரை உய்யும்வகையோம்பாது - உன்னுயிரைப் பிழைக்கும்படி காவாது, இஞ்ஞான் றேம்பில்-இங்கே வருந்தினால், வையம்முழுதும் துயரால் மறுகும்-உலகமுழுதுந்துயரத்தால் வருந்தும், நம் ஐயன் முனிவன் உடன்வரினும் வருமால் - நம் ஐயனாகிய சிராமன் வசிட்டமுனிவனுடன் வந்தாலும் வருவனாகையால், அயரேல் அரசேயென்றாள் - அரசே வருந்தாதையென்றனள்.—எ-று.

* திருமுருகாற்றுப்படை, வரி - கூஅ.

வருதலொருதலை யன்மையான் 'வரினும்வரும்' என்றதென்க. 'நம்மை யன்' என்றாள் காதற்குமரனாகலின். இங்ஙனமென்றது மரீஇயது. இவ்வி ரண்டுசெய்யுளானும் மீண்டும் அரசனயர்ந்தமை யுணர்த்தப்பட்டது. (எ0)

(1) என்றென் றரசன் மெய்யு மிருதா ளிணையும் முகமும்
தன்றன் செய்ய கையாற் றைவந் திடுகோ சலையை
ஒன் றுந் தெரியா மம்ம லுள்ளத் தரசன் மெள்ள
வன் றிண் சிலைநங் குரிசில் வருமே வருமே யென்றான்.

(இ - ள்.) என்றென்று - என்றிவ்வாறு பலபடக்கூறி, அரசன் மெய்யு மிருதாளிணையு முகமும்-இரண்டுபாதமும் முகமும், தன்தன் செய்யகையால்- தன்னிரண்டு சிவந்தகைகளானும், தைவந்திடுகோசலையை-பிடித்துக்கொண் டிருக்கின்ற கோசலையைநோக்கி, ஒன்றும் தெரியா மம்மல் உள்ளத்தரசன்- சிறிது முணர்ச்சியில்லாத மயக்கமெய்திய அரசன், மெள்ள - மெல்ல, வன் திண்சிலை நம் குரிசில் - மிகவன்மையாகிய வில்லேந்திய நமது சீராமன், வருமே வருமே என்றான் - வருவனே வருவனே வென்றனன்.—

அடுக்கு இரண்டின்முன்னது பன்மைப்பொருளது, பின்னது இடை விடாமைப்பொருளது. ஒன்றுமென்ற உம்மை இழிவுசிறப்புப்பொருளோடு முற்றுப்பொருளது. ஏனைய வெண்ணுப்பொருளன. மழுவாளியாகிய பரசு ராமனைவென்ற வில்லின் திறனோக்கி 'வன்றிண்சிலைநங்குரிசில்' என்ற தென்க. ஓகாரம் வினா. (எக)

(2) வன்மா யக்கை கேசி வாக்கா லென்ற னுயிரை
முன்மாய் விப்பத் துணிந்தா ளேனுங் கூனி மொழியால்
தன்மா மகனுந் தானுந் தரணி பெறுமா றன்றி
என்மா மகனைக் கானே கென்று ளென்று ளென்றான்.

(இ - ள்.) வன்மாயம் கைகேசி வாக்கால் - கொடிய வஞ்சனையுள்ள கைகேசிசொல்லால்,என்றனுயிரை-என்னுயிரை, கூனிமொழியால்-மந்தரை யாகிய கூனிசொல்லால், முன்மாய்விப்ப துணிந்தாளேனும்-முன்னே கொல் லத் துணிந்தனளாயினும், தன் மாமகனும் தானும் - தன் சிறந்த மகனுந்தா னும், தரணிபெறுமாறன்றி-அரசடைவதல்லது, என்மாமகனை-என்சிறந்த மக னாகிய சீராமனை, கானேகென்றாள் என்றாள்-காட்டிற்குச் செல்லென்று மிகு தியும் சொல்லினள், என்றான்-என்று கூறினன்.—

அடுக்கு மிகுதிப்பொருளது. துணிந்தாளேனும் என்றது துணியாதாள் துணிந்தாளென்னும் பொருள்பட நின்றது. 'கூனி' என்றது மந்தரையை. 'தன்மாமகனை, என்றது பரதனை; என்மாமகனை என்றது சீராமனை. (எஉ)

(3) பொன்னார் தோளான் கானே புகுதப் புகுத றவிரான்
என்னா ருயிரோ வகலா தொழியா திதுகோ சலைகேள்
முன்னா ளொருமா முனிவன் மொழியுஞ் சாப முளதென்
றந்நா ளுற்ற தெல்லா மவளுக் கரச னறைவான்.

(இ - ள்.) பொன்னுர் தோளான்-விசயமடந்தை நல்கிய தோளையுடைய ஸ்ரீராமன், கானேபுகுதப்புகுதல்தவிரான்-காட்டிற்போகத்துணிதல் ஒழியான், என்னுருயிரோ அகலாதொழியாது-என்னருமையாகிய உயிரோநீங்காதிராது, இதுகோசலை கேள் - இதனுண்மையைக்கோசலையே கேள், முன்னுள்-முன்னொருகாலத்தில், ஒருமாமுனிவன் மொழியுஞ் சாபமுளது-ஒரு சிறந்த முனிவனிட்ட சாபமுண்டு, என்று அந்நாளுற்ற தெல்லாம்-என்று அந்நாள் நடந்த அனைத்தும், அவளுக்கரசன் அறைவான் - அக்கோசலைக் கரசன் கூறுவானாயினன்.—

பொன்னுர்தோளான் என்றது விசயமடந்தை தங்கிய தோளினனென்பது குறித்துநின்றது; இனி அழகிய தோளையுடையானெனினு மமையும். அவன் காடுசெல்வதும் தன்னுயிர் நீங்குவதுந் திண்ணமாகலின் 'கானேபுகுதப்புகுதறவிரான்' என்றும், அவனீங்கியவழி உயிர் நீங்குத லுண்மையின் 'ஆருயிரோவகலாதொழியாது' என்றுங்கூறினுன். இம்மூன்று செய்யுளானும் தன்மகன் காடுபோவானென்பதனேடு தான் சாபமெய்தியமையும் உணர்த்தப்பட்டது. (எரு)

(1) வெய்ய கானத் திடையே வேட்டை வேட்கை மிகவே
ஐய சென்று கரியோ டரிக டுருவித் திரிவேன்
கையார் சிலையுங் கணையுங் கொடுகார் மிருகம் வருமோர்
செய்ய நதியின் கரைவாய்ச் சென்றே மறைய நின்றேன்.

(இ - ள்.) வெய்ய கானத்திடை - கொடிய காட்டின்கண், வேட்டை வேட்கைமிக-வேட்டையாடுதலின்கண் வேட்கை மிகுந்து, ஐயசென்று-மெத்தெனச்சென்று, கரியோடு அரிகள் துருவித்திரிவேன் - யானையோடு சிங்கங்களைத்தேடித்திரிவேன், கையார் சிலையும்-கையிற்பொருந்திய வில்லும், கணையும் கொடு-பாணமுங்கொண்டு, கார்மிருகம் வரும் - யானைகள் வராநிற்கும், ஓர் செய்ய நதியின் கரைவாய்-ஒரு செம்மையாகிய ஆற்றங்கரையில், சென்றேமறைய நின்றேன்-போய் மறைந்து நின்றேன்.—

கார்மிருகம் என்றது யானையை. ஐயசென்று என்றது மெல்லெனச் சென்று என்பதனை. (எச)

(2) ஒருமா முனிவன் மனையோ டொளியொன் றிலவாய் நயனம்
திருமா மகனே துணையாய்த் தவமே புரிபோழ் தினின்வாய்
அருமா மகனே புனல்கொண் டகல்வான் வருமா றறியேன்
பொருமா கணைவிட் டிடலும் புவிமீ தலறிப் புரள.

(இ - ள்.) ஒருமாமுனிவன்-பெருமையாகிய ஒருமுனிவன், மனையோடு-மனைவியுடன், நயனம் ஒளியொன்றிலவாய்-கண்கள் பார்வையில்லாதனவாகி, திருமாமகனே துணையாய்-தன் சிறந்தமகனே துணையாக, தவமே புரிபோழ்தினின்வாய்-தவஞ்செய்கின்ற அமையத்தின்கண், அருமாமகனே-

அவ்வரிய மகனே, புனல்கொண்டு அகல்வான் வருமாறு-நீர்கொண்டு அகன்றுவரும் வகையை,அறியேன்-அறியாமல், பொருமாகணைவிட்டிடலும் - போர்க்குரிய பாணத்தை விடலும், புவிமீதலறி புரள-நிலத்தி லலறிக்கொண்டு புரளாநிற்ப.—

தந்தைதாயருக்கேவற்றொழில்செய்யும்பெருமிதம்பற்றித் 'திருமாமகன்' என்றும், 'அருமாமகன்' என்றுங் கூறினர். போழ்தினின்வாய் என்பது இன்சாரியையோடின்னுருபு பெற்றதன்றி உருபின்மே லுருபும் பெற்றுவந்த ஒருபொருட் பன்மொழி; * "நிலவார்நிலமிசைமேல்" என்புழிப்போல. (எரு)

(3) புக்குப் பெருநீர் நுகரும் பொருபோ தகமென் றொலிமேல்
கைக்கட் கணைசென் றதலாற் கண்ணிற் றெரியக் காணேன்
அக்கைக் கரியின் குரலே யன்றீ தென்ன வெருவா
மக்கட் குரலென் றயர்வேன் மனநொந் தவண்வந் தனனல்.

(இ - ள்.) பெருநீர் புக்குநுகரும் - மிகுந்த நீரைத் தடாகத்திற் புகுந்துண்ணும், போதகமென்று - யானையேயென்று நினைந்து, ஒலிமேல் - அவ்வொலி வந்தவழியில், கைக்கண்கணை சென்றதலால் - கையினின்றும் கணையை விடுத்ததல்லாமல், கண்ணில் தெரிய காணேன் - கண்ணினல் தெரியக்கண்டிலேன், அ கைக்கரியின் குரலேயன்று - அந்தப் புழைக்கையையுடையயானையி னொலியேயன்று, ஈதென்னவெருவா - இதுவென்று பயந்து, மக்கள் குரலென்று அயர்வேன்-மக்களது ஒலியென்று அயர்ந்து, மனம்நொந்து அவண் வந்தனன்-மனம்வருந்தி அங்கே வந்தேன்.—

போதகம்-யானை. கைக்கட்கணை - கையிலுள்ள கணை. கையென்றது புழைக்கையை. கரி-கரமுடையதென்னும் பொருளது. இவ்வாறு தந்தி, பட்சி, கேசரியெனவருதல் காண்க. காணேனென்றது வினைப்பெயர். (எசு)

(4) கையுங் கடனு நெகிழக் கணையோ டுருள்வோற் காணு
மெய்யுந் தனுவும் மனனும் வெறிதே கிடமேல் வீழா
ஐய னீதான் யாவ னந்தோ வருள்கென் றயரப்
பொய்யொன் றறியா மைந்தன் கேணீ யென்னப் புகல்வான்.

(இ - ள்.) கையும் கடனும் நெகிழ - கையும் பாத்திரமும் நீங்க, கணையோடுருள்வோன்காணு - பாணத்தானுருள்வோனைக்கண்டு, மெய்யும் தனுவும் மனனும் - உடலும் வில்லும் நெஞ்சமும், வெறிதேகிட - வாளாகழிய, மேல்வீழா - மேல் விழுந்து, ஐயன் நீதான் யாவன் - ஐயனே நீயேயார், அந்தோ அருள்கவென்று அயர - ஐயோ கூறென்று வருந்திக்கேட்ப, பொய்யொன்றறியா மைந்தன் - பொய்மையென்பது சிறிதேனுமுணராத மகன், நீ கேளெனப் புகல்வான் - நீ கேளென்று சொல்வானாயினன்.—

அந்தோ என்பது இரக்கத்தின் கண்வந்தது. ஐயன் விளிப்பெயர். ஒன்றும் என்புழி இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. தனு வடமொ

ழிச்சிதைவு. தந்தைதாயர் குற்றேவல் செய்வதன்றி வேறறியா மனத்தனாக லின் 'பொய்யொன்றறியாமைந்தன்' என்றும், அவனைக்கண்டுழி அதிபாதகஞ்செய்தனமேயென்று வருத்தமெய்தலின் 'மெய்யுந்தனுவும்மனனும்வெறி தேகிட' என்றும், அவன் இன்னவனென்றுணர வேண்டினமையின் 'ஐயநீ தான்யாவன்' என்றுங்கூறினார். (எஎ)

(5) சேலா கியமா முதல்வன் றிருவுந் தியினீண் மலரின்
மேலா கியநான் முகனால் வேதங் களின்மா முறையின்
பாலா கியயோ னிகளின் பலமா வருணந் தருவான்
நாலா கியதாம் வருணந் தனின்முன் னெமைநல் கினனால்.

(இ - ள்.) சேலாகிய மாமுதல்வன் - மீனுருக்கொண்ட இறைவனது, திருவுந்தியினீண்மலரின் - திருவுந்தியாகிய நீண்ட தாமரைமலரின்கண்தோன்றிய, மேலாகிய நான்முகனால் - சிறந்த நான்முகங்களையுடைய பிரமனால், வேதங்களின் மாமுறையின் பாலாகிய யோனிகளின் - வேதங்களின் பான்மையினாகிய யோனிகளின்கண், பலமாவருணந்தருவான் - பலவாகிய பெருவருணந்தருகையில், நாலாகியதாம் வருணந்தனில்-நான்கு வருணங்களில், முன் எமை நல்கினன் - முதலில் அந்தணர் மரபினைத்தந்தனன்.—

சேலாகிய மாமுதல்வன் என்றது மச்சவடிவங்கொண்ட இறைவனை. திருவுந்தியினீண்மல ரென்றது திருவுந்தித் தாமரையை. நான்முகனென்றது நான்முகங்கொண்ட பிரமனை. யோனிகளென்றது நால்வகையாகிய முட்டையினும் கருவினும் வித்தினும் வியர்வினும் வருவனவற்றை. நாலாகிய வருணமென்றது அந்தணர் அரசர் வணிகர் சூத்திரரை. மச்சவடிவங்கொண்டமை கூறினார் அவ்வடிவங்கொண்டே சோமுகனைக்கொன்று அவன்கொடுசென்றமறையை அந்தணர்க்குதவுஞ் சிறப்புநோக்கி. (எஅ)

(6) அந்நான் மறையோன் வழியி லருள்கா சிபனன் மைந்தன்
மின்னார் புரிநூன் மார்பன் விருத்தே சனன்மெய்ப் புதல்வன்
நன்னான் மறைநூ றெரியு நாவான் சலபோ சனெனச்
சொன்னான் முனிவன் றருசு ரோச னன்யா னென்றான்.

(இ - ள்.) அந்நான்மறையோன் வழியில் - அவ்வந்தணர்மரபில், அருள் காசிபன் - வந்த காசிபமுனிவன், நன் மைந்தன் - அவனது நன்மையாகிய குமாரன், மின்னார்புரி நூல்மார்பன் - மின்போலும் விளங்குகின்ற புரிந்த நூலையணிந்த மார்பினையுடையானாகிய, விருத்தேசனன் - விருத்தேசனனெனப்படுவேன், மெய்புதல்வன்-அவனதுமெய்ம்மையாகிய குமரன், நல்நால்மறைநூல்தெரியுநாவான்-நன்மையாகிய நான்குவேதங்களையுமோதிய நாவினையுடையானாகிய, சலபோசனெனசொன்னான்-சலபோசனெனச் சொல்லப்பட்டோனாகிய, முனிவன்றருசுரோசனன் யானென்றான்- முனிவனால் தரப்பட்ட சுரோசனன் யானெனக்கூறினன்.—

அந்தணர்க்குச் சாதியடையாகலின் 'நன்னான்மறை நூறெரியு நாவான்' என்றதென்க. அந்நான்மறையோன் வழியில் என்றது 'நாலாகிய தாம்வரு ணந்தனின் முன்னெமைநல்கினன்' என்பதனை. முன்னீயாவனென்பதற் கு இறைபயப்ப 'அந்நான்மறையோன் வழியில் சலபோசனன்றரு சுரோச னன் யானென்றான்' எனக்கூறினானென்க. (எசு)

(7) இருகண் களுமின் றியதாய் தந்தைக் கும்மீங் கவர்கள்
பருகும்புனல்கொண்டகல்வான்படர்ந்தேன்பழுதாயினதால்
இருகுன் றனைய புயத்தா யிபமென் றுணரா தெய்தாய்
உருகுந் துயரந் தவிர்நீ யூழின் செயலீ தெனவே.

(இ - ள்.) இருகண்களு மின்றியதாய் தந்தைக்கும் - இருகண்களு மில் லாத தாய் தந்தையர்க்கும், ஈங்கவர்கள் பருகும் புனல்கொண்டு அகல்வான் படர்ந்தேன்-இங்கவர்கள் உண்ணுநீர் கொண்டுபோகவந்தேன், பழுதாயினது- குற்றமாயது, இருகுன்றனைய புயத்தாய்-இரண்டுமலைபோலுந் தோளையுடை யானே, இபமென்றுணராது எய்தாய்-யானையென்று அறியாமலம்பெய்தனை, ஊழின் செயல் ஈதென்று - தீவினைச்செய லிதுவென்று, நீ உருகும் துயரந் தவிர் - நீ வருந்துந் துயரத்தையொழி.—

பருகும் புனல் என்றது நீர்வேட்கைக் கருந்தும்புனல்: பழுதாயினதெ ன்றது யானிறத்தலாற்கொண்டு சென்று தருவாரின்மையை. இன்றியஎதிர் மறைக்குறிப்புப் பெயரெச்சம். தாய்தந்தையென்னும் வினைமுதற் பெயர் கொண்டது. இபம் - யானை. * "ஊழிற்பெருவலி யாவுளமற்றொன்று- சூழினுந்தான்முந்துறும்" என்பவாகலின், 'உருகுந்துயரந்தவிர் நீ யூழின் செயலீது' என்று கூறினாரென்றுணர்க. இருகுன்றனையபுயத்தாய்' என் றது தயரதனை. (அஎ)

(8) உண்ணீர் வேட்கை மிகவே யுயங்கு மெந்தைக் கொருநீ
தண்ணீர் கொடுபோ யளித்தென் சாவு முரைத்தும் புதல்வன்
விண்மீ தடைவான் றொழுதா னெனவு மவர்பால் விளம்பென்
றெண்ணீர்மையினன் விண்ணோரெதிர்கொண்டிடவேகினனால்.

(இ - ள்.) உண் நீர் வேட்கை மிக-உண்ணுதற்குரிய நீர்மேல் விருப்ப மிக, உயங்கும் எந்தைக்கு - வருந்துகின்ற தந்தைக்கு, ஒரு நீ தண்ணீர் கொ டுபோயளித்து-நீ தண்ணீர்கொண்டு சென்றுதவி, என் சாவு முரைத்து-என் மரணத்தையுங்கூறி, விண்மீதடைவான் உம்புதல்வன்-சுவர்க்கம்புகு மும து மகன், தொழுதானெனவும் - வணங்கினானென்றும், அவர்பால் விளம்பு எ ன்று-அவரிடங் கூறென்று, எண் நீர்மையினன் - எண்ணத்தக்க குணமுடை யான், விண்ணோர் எதிர்கொண்டிட-விண்ணோர் எதிர்ந்துவர, ஏகினன் - செ ன்றனன்.—

---

* திருக்குறள், செ-௩அ௰.

எந்தையென்றது ஈண்டுத் தந்தைதாயரை. தன்மரணமாகாது ஊழினை டைந்தமையான் 'விண்ணோரெதிர்கொண்டிட வேகினன்' என்றும், மிகத்தவ முடையனாகலின் 'எண்ணீர்மையினான்' என்றுங்கூறினார். (அக)

(9) மைந்தன் வரவே நோக்கும் வளமா தவன்பான் மகவோ
டந்தண் புனல்கொண் டணுகா வையா விதுபோ தளவாய்
வந்தி கணுகா தென்னோ வந்த தென்றே நொந்தேம்
சந்தங் கமிழுந் தோளாய் தழுவிக் கொளவா வெனவே.

(இ - ள்.) மைந்தன் வரவே நோக்கும் - மகன் வருகையே நாடிநின்ற, வளமாதவன்பால் - தவமாகிய பெருஞ்செல்வத்தையுடைய முனிவன்டால், மகவோடு-மகனொப்ப, அம் தண் புனல் கொண்டணுகா - அழகிய குளிர்ந்த தண்ணீர் கொண்டணையாத, ஐயா - ஐயனே! இதுபோது அளவாய் - இது வரையும், வந்திங்கணுகாது-எம்பால் வந்தணையாது, வந்தது என்னோவென்று நொந்தேம்-வந்தது யாதுகாரணமோவென வருந்தினோம், சந்தம்கமிழும் தோ விக்கொள்ளாய்-மணம்கமழ்கின்ற தோளையுடையானே, தழுவிக்கொளவா வென - தழுவும்படி வாவென்ன.—

மகவோடென்னு மூன்றுவது ஐந்தாவத னொப்புப்பொருளது. கால நீட்டியாதுவருவதாக, இற்றைக்கு நீவருவ தென்னையென்பார் 'இதுபோத ளவாய் வந்திங்கணுகாதென்னோ' என்றும்; வருநடவையில் யாதேனுந் தீமை நேர்ந்ததோவென் றிருந்து வருந்தினமென்பார் 'வந்ததென்றே நொந்தேம்' என்றுங் கூறினார். (அஉ)

(10) ஐயா யானோ ரரச னயோத்தி நகரத் துள்ளேன்
மைவார் களபந் துருவி மறைந்தே வதிந்தே னிருள்வாய் [ல்
பொய்யாவாய்மைப்புதல்வன்புனன்மொண்டிடுமோதையின்மே
கையார் கணைசென் றதலாற் கண்ணிற் றெரியக் காணேன்.

(இ - ள்.) ஐயா - ஐயனே! யானோரரசன் - நானரசர் குலத்துப் பிறந் தேன், அயோத்தி நகரத்துள்ளேன் - அயோத்தி நகரத்தில் வாழ்வேன், மையார்களபம் துருவி - கருமையாகிய யானையைத்தேடி, மறைந்து வதிந்தேன்- ஒளிந்திருந்தேன், இருள்வாய் பொய்யாதவாய்மை புதல்வன் - இருளின்கண் பொய்யாதவாய்மையையுடையகுமரன், புனல்மொண்டிடுமோதையின்மேல்- நீரை முகந்து கொள்ளுமொலியின்மேல், கையார்கணை சென்றதலால்-கையி ற்பொருந்திய பாணஞ்சென்றதேயன்றி, கண்ணில் தெரியகாணேன் - யான் கண்ணினாற் றெரியக்கண்டிலேன்.—

களபம்-யானை. என்சாவுமுரைத்தென்றுமுற்கூறிப்போந்தமையானும், தான்மகனன்மையானும் 'யானோரரசனயோத்திநகரத்துள்ளேன்' என்றும் இன்னன கூறினார். கையார்கணை என்பதற்குச் சிறுகணை எனினுமமை யும். 'தந்தைதாயர் குற்றேவ லொழியாதவனென்பதுதோன்ற 'பொய்யா

வாய்மைப்புதல்வன்' என்றும், கண்டுசெய்தமையன்மையான் 'இருள்வாய்புனன் மொண்டிடுமோதையின்மேல் கையார்கணைசென்றது' என்றும், 'கண்ணிற்றெரியக்காணேன்' என்றுங்கூறினர். காணேன் என்றது எதிர்மறைத்தன்மை யொருமை வினைமுற்று; ஈண்டு என் விகுதியே எதிர்மறைப்பொருளில் வந்ததெனச் சேனாவரையர் கூறினராலெனின், கண்டேன் முதலியனவு மங்ஙனங் கொள்ளப்படவேண்டுதலின் அவரதனைநோக்கிற்றிலர். (அரு)

(11) விட்டுண் டலறுங் குரலால் வேழக் குரலன் றெனவே
ஒட்டந் தெதிரா நீயா ரெனவுற் றவெலா முரையா
வாட்டந் தருநெஞ் சினனாய் நின்றான் வணங்கா வானோ
ரீட்ட மெதிர்வந் திடவே யிறந்தே கினன்விண் ணிடையே.

(இ - ள்.) வீட்டுண்டலறும் குரலால்-கொல்லப்பட்டலறுமொலியால், வேழம் குரல் அன்று என - யானையினோசை யன்றென்ன, ஒட்டந்து-ஓடிச்சென்று, எதிரா-நேர்ந்து, நீயாரென-நீயாரெனவினவ, உற்றவெலாம் உரையா - தன்வரலாற்றினை யெல்லாமுரைத்து, வாட்டம் தருநெஞ்சினனாய்-மனவாட்டமுடையானாய், நின்றான்-இருந்தனன், வானோர் ஈட்டம் - தேவர்கூட்டம், வணங்கா எதிர் வந்திட - வணங்கி யெதிரில்வர, விண்ணிடை இறந்தேகினன்-உடம்புநீத்து விண்ணிற்சென்றனன்.—

ஒட்டந்தந்தென்பது மரீஇயது. வேழம் - யானை. நீயாரென வுற்றவெலாமுரையா என்றது 'அந்நான்மறையோன் வழியிலருள்காசிபனன்மைந்தன்' என்பது முதலாயினவற்றை. கணையால் வருந்துகின்றவனாகலின் 'வாட்டந்தருநெஞ்சினனாய்' என்றும், இது துன்மரணமன்றென்பான் 'வானோரீட்டமெதிர்வந்திட' என்றும், தந்தைதாயரையே நினைந்து வழிபடுவோனென்பதுபட 'வணங்கா' என்றுங் கூறினர். (அச)

(12) அறுத்தாய் கணையா லெனவே யடியேன் றன்னை யையா
கறுத்தே யருளா யானோ கண்ணிற் கண்டே னல்லேன்
மறுத்தானில்லான் வனமொண்டிடுமோ தையினெய்ததலாற்
பொறுத்தேயருள்வாயென்னாவிருதாள் சென்னிபுனைந்தேன்.

(இ - ள்.) ஐயா - ஐயனே! கணையால் அறுத்தாயென - பாணத்தாற்கொன்றனையென்று, அடியேன் தன்னை கறுத்தே யருளாய்-என்னைக் கோபியாதை, யானோ கண்ணில் கண்டேனல்லேன் - யானோ கண்களாற் பார்த்தேனல்லேன், மறுத்தானில்லான்-குற்றமில்லாதவன், வனம்மொண்டிடுமோதையின் - நீரைமுகந்ததனாலுண்டாகும் ஒலியினால், எய்ததலால்-எய்ததன்றி, பொறுத்தேயருளாய் என்னா - (வேறன்மையான்) பொறுத்தருளென்று, இருதாள் சென்னி புனைந்தேன்-அவனிரண்டு பாதங்களையு முடிமேற் றரித்தேன்.

கறுத்தல்-கோபித்தல். வனம் - நீர். மனமாசில்லாதானென்பதுபட 'மறுத்தானில்லான்' என்றும், யான் கண்ணிற்காணாது கொன்றமையான்

'கறுத்தல்வேண்டா' என்பான் 'பொறுத்தேயருள்வா யென்னுவிருதாள் செ ன்னிபுனைந்தேன்' என்றுங்கூறினர். (அரு)

(13) வீழ்ந்தா ரயர்ந்தார் புரண்டார் விழிபோ யிற்றின் றென்றார்
ஆழ்ந்தார் துன்பக் கடலு ளையா வையா வென்றார்
போழ்ந்தாய் நெஞ்சை யென்றார் பொன்னு டதனிற் போய்நீ
வாழ்ந்தே யிருப்பத் தரியேம் வந்தேம் வந்தே மினியே.

(இ - ள்.) வீழ்ந்தார் - இருமுதுகுரவரும் விழுந்தனர், அயர்ந்தார்-வருந்தினர், புரண்டார் - புரண்டனர், இன்று விழிபோயிற்று என்றார் - இன்று கண்ணிழந்து விட்டது என்றனர், துன்பக்கடலுள் ஆழ்ந்தார் - துயரக்கடலிலழுந்தினர், ஐயா ஐயா என்றார் - ஐயனே ஐயனே யென்றனர், நெஞ்சை போழ்ந்தாயென்றார் - மனத்தைப் பிளந்தனை யென்றனர், பொன்னுடதனிற் போய் நீ வாழ்ந்தே யிருப்பத்தரியேம்-பொன்னுலகிற்சென்று நீ வாழ்ந்திருக்கப்பொறோம், இனி வந்தேம் வந்தேம் - இனி வந்துவிட்டோம் வந்துவிட்டோம்.—

புத்திரசோபஞ் சிறந்மையின் 'வீழ்ந்தாரயர்ந்தார்' என்றும், கண்ணில்லாத வெமக்குக் கண்போலுதவிசெய்தனையே, அதனை இன்றிழக்கப்பெற்றேமென்பார் 'விழிபோயிற்றின் றென்றார்' என்றும், அவரடைந்த துன்பமிவ்வளவினதன்றென்பதுபட 'துன்பக்கடலுளாழ்ந்தார்' என்றும், அவர்மனத்தை வருத்துதலான் 'போழ்ந்தாய்நெஞ்சை' என்றும், இன்னனகூறினர். 'பொன்னுடதனிற்போய்' என்றார் அறஞ்செய்தாரடைவது துறக்கமாகலின். அடுக்கு துணிவுப்பொருளது. (அசு)

(14) என்றென் றயருந் தவரை யிருதாள் வணங்கி யானே
இன்றும் புதல்வ னினிநீ ரேவும் பணிசெய் திடுவேன்
ஒன்றுந் தளர்வுற் றயரீ ரொழிமி னிடரென் றிடலும் [ன்.
வன்றிண்சிலையாய் கேண்மோவெனவேயொருசொல்வகுத்தா

(இ - ள்.) என்று என்று - என்று இடைவிடாமையெண்ணி, அயரும் தவரை - வருந்தும் தவமுடைய அவ்விருமுதுகுரவரையும், இருதாள் வணங்கி - இரண்டுபாதங்களையும் தொழுது, யானே இன்று உம்புதல்வன்-யானே இன்று தொட்டுமக்கு மகன், இனி நீர் ஏவும் பணிசெய்திடுவேன்-இனி நீரேவத்தக்க குற்றேவல் செய் தொழுகுவேன், ஒன்றுந் தளர்வுற்றயரீர் - சிறிதும் மனத்தளர்ச்சியெய்தாதீர், இடரொழிமி னென்றிடலும் - துயரத்தை நீங்குமினென்று கூறலும், (அதற்கு) வல் திண் சிலையாய் - வன்மையாகிய வில்லையுடையானே! கேளென-கேளென்று, ஒருசொல் வகுத்தான்-அம்முனிவன் ஒருமொழி கூறுகின்றனன்.—

தயரதன் அவர் பணிசெய்வாரின்மைநோக்கி 'இன்றும்புதல்வனினி நீரேவும் பணிசெய்திடுவேன்' என்றும், அவனிறந்து பட்டதற்காகத்துயரவே

ண்டாவென்பான் 'ஒன்றுந் தளர்வுற்றயரீரொழிமினிட ரென்றிடலும்' என்றுங் கூறினன். 'இன்றும் புதல்வன்' என்றதனுன் இதுகாறும் அயன் மகனெனப்பட்டேன், இன்றஃதன்றென்பதுபட நின்றது. அந்தணன்மகனைக் கொன்ற வில்லாகலின் 'வன்திண்சிலை' என்றதென்க. (அஎ)

(15) கண்ணுண் மணிபோன் மகவை யிழந்தும் முயிர்கா தலியா
வுண்ணவெண்ணி யிருந்தா லுலகோ ரென்னென் றுரையார்
விண்ணின் றலைசே ருதும்யா மெம்போல் விடலை பிரியப்
பண்ணும் பரிமா வுடையா யடைவாய் படர்வா னென்னு.

(இ - ள்.) கண்ணுண்மணிபோல் மகவை இழந்தும் - கண்ணின்கண் பாவைபோல்வானுகிய மகனைப் பறிகொடுத்தும், உயிர்காதலியா - உயிரை விரும்பி, உண்ண எண்ணியிருந்தால் - உண்ண நினைத்திருந்தால், உலகோர் என் என்று உரையார் - உலகத்தவர் யாதென்று சொல்லார், யாம் விண்ணின் றலை சேருதும் - யாங்கள் விண்ணுலகத்திற் சேர்வோம், எம்போல் விடலை பிரிய - எம்மைப்போல மகனீங்க, பண்ணும் பரிமாவுடையாய் - அலங்கரிக்கப்பட்ட குதிரையுடையானே ! படர்வானடைவாயென்னு - அகன்ற வானுலகமடைவாயென்று.—

கண்ணுண்மணிகண்ணிற்கறிவிப்பதுபோன் றெங்கட்கவனங்ஙனமிருந்தானென்பார் 'கண்ணுண்மணிபோன்மகவை' என்றும், அவனையிழந்து முயிர்கொண்டிரேமென்பார் 'உயிர்காதலியா' என்றும், மக்களை யிழந்தாரை மாநிலம் பழியெடுத்துக் கூறுமாகலின் 'உண்ணவெண்ணியிருந்தாலுலகோ ரென்னென்றுரையார்' என்றுங் கூறினர். 'விண்ணின்றலை' என்பது 'அதுபோழ்தினின்வாய்'என்புழிப்போல,உருபின்மேலுருபுவந்தஒருபொருட்பன்மொழி. சேருதும் தன்மைப்பன்மை யெதிர்கால வினைமுற்று; விகுதியே காலங்காட்டிற்று. அரசனென்றது விளக்கப் 'பண்ணும் பரிமாவுடையாய்' என்முர்.(அஅ)

(16) தாவா தொளிருங் குடையாய் தவறிங் கிதுநின் சரணம்
காவா யென்ரு யதனுற் கடிய சாபங் கருதேம்
ஏவா மகவைப் பிரிந்தின் றெம்போ லிடருற் றனைநீ
போவா யகல்வா னென்னுப் பொன்னுட் டிடைபோயினரால்.

(இ - ள்.) தாவாதொளிரும் குடையாய்-நீங்காது ஒளிசெய்யும் குடையையுடையானே ! தவறிங்கிது - இது என்பிழை, நின்சரணம் - யானுன்னடைக்கலம், காவாயென்ருய் - காத்தருளென்றனை,' அதனுல் - ஆகையால், கடிய சாபம் கருதேம் - கொடிய சாபமிடவெண்ணேம், ஏவா மகவைப்பிரிந்து - ஏவத்தக்க மகனை நீங்கி, இன்று எம்போல் இடருற்றனை-இன்று யாமடைந்ததுபோலத் துயரடைந்து, நீ அகல்வான் போவாயென்னு - நீ அகன்ற வானுலகமடைவாயென்று, பொன்னுட்டிடை பேரயினர்-தாமுமுடனீத்துப் பொன்னுலகமடைந்தனர்.—

குறிப்பறிந்து செய்கின்ற மகனென்பதுதோன்ற ‘ஏவாமக’ என்றதெ ன்க. உற்றனை வினையெச்சமுற்று. பிழைசெய்தமைகரவாது கூறினமையான் ‘தவறிங்கிது நின்சரணம் காவாயென்றுயதனுற் கடியசாபங்கருதேம்’ என் றுங் கூறினுர். ‘தாவாதொளிருங் குடையாய்’ என்றது அரசவிலக்கணத்ததா கலின்.

(அகூ)

(17) சிந்தை தளர்வுற் றயர்தல் சிறிது மிலனு யின்சொல்
மைந்த னுளனென் றதனுன் மகிழ்வோ டிவண்வந் தனனுல்
அந்த முனிசொற் றமையு மண்ணல் வனமே குதலும்
என்ற னுயிர்வீ குதலு மிறையுந் தவறு வென்றுன்.

(இ - ள்.) சிந்தை தளர்வுற்றயர்தல் - மனத்தளர்ச்சியடைந்து வருந்து தல், சிறிது மிலனுய் - சிறிது மில்லாதானுய்; இன்சொல் மைந்தனுளன் என்றதனுல் - இனிய மொழிகூறு மகனுளனுதனேக்கி, மகிழ்வோடு இவண் வந்தனன் - மகிழ்ச்சியுடையானு யிங்கே மீண்டேன், அந்தமுனி சொற்றமை யும் - அம்முனிவன் சொன்னமையும், அண்ணல் வனமேகுதலும் - சிராமன் காடுசேறலும், என்றனுயிர் வீகுதலும் - என்னுயிர் நீங்குதலும், இறையும் தவறு என்றுன் - சிறிதும் தவறமாட்டா என்றனன்.—எ-று.

இறை-அளவுப்பண்பு. இதுகாறு மைந்தனில்லாது வருந்துகின்றேன் பால் மைந்தனுல் இறப்பையென்றதனுன் ‘சிந்தைதளர்வுற்றயர்தல் சிறிது மிலனுய்’ என்றதென்க. ‘இவண்’ என்றது அயோத்தியை. சொற்றமையும் ஏகுதலும் வீடுதலுந் தவறு என வினைமுடிக்க. “மக்கட்பேற்றிற் பெறும்பே றில்லை” ஆகலின் ‘மைந்தனுளனென்றதனுன் மகிழ்வோடுவந்தனன்’ என் றுர். * “குழலினிதியாழினிதென்பதம் மக்கள் மழலைச்சொல்கேளாதவர்” என்பவாகலின் மைந்தனுக்கு ‘இன்சொல்’ என்றடை கொடுத்துக்கூறினுர். இப்பதினேழு செய்யுளானும் தான் வேட்டையாடச்சென்று முனிமைந்தனை க்கொன்றதனுன் அவன் தந்தை சாபமிட்டமை கோசலைக்கரசனுணர்த்திய துணர்த்தப்பட்டது.

(கூ0)

இம்மா மொழிதந் தரச னிடருற் றிடுபோழ் தினிலச்
செம்மா மயில்கோ சலையுந் திகையா வுணர்வோய் வினளாய்
விம்மா நெறியின் விதியின் விளைவுந் தளர்வின் ருடர்வும்
அம்மா தவனும் விரைவோ டவலந் தருநெஞ் சினனுய்.

(இ-ள்.) இம்மாமொழிதந்து-இவ்வரலாறுகூறி, அரசன்இடருற்றிடுபோழ் தினில்-அரசன் துயரடையும்போழ்தில், அ செம்மாமயில் கோசலையும்-அச்செ ம்மையாகிய குணமுடைய கருமயிலன்னுளாகிய கோசலையும், திகையா - திகைத்து, உணர்வோய்வினளாய் - அறிவழிந்தனளாக, அம்மாதவனும் - அப் பெருந்தவத்தையுடைய வசிட்டமுனிவனும், நெறியின் - முறையான், விதி யின் விளைவும்-வினையினிகழ்ச்சியையும், தளர்வின் தொடர்வும்-துயரத்தின்

* திருக்குறள், செ-சுகூ.

ருெடர்ச்சியையும் கண்டு, விரைவோடு - விரைவாய், அவலம் தரு நெஞ்சி னன் ஆய் - வருத்தத்தைத்தரு மனமுடையானுய்.

சாயலேநோக்கிச் 'செம்மாமயில்' என்றதென்க. அரசன் சொன்னதுகே ட்டு வருந்துபவளாகலின் 'திகையாவுணர்வோயினளாய்' என்றதென்க. இரக் கமே வடிவமாகவுடையனுகலின், 'அம்மாதவனும் விரைவோட வலந்தரு நெஞ்சினனுய்' என்றுங்கூறினர். (கூக)

நாலடித்தரவுகொச்சகக்கலிப்பா.

உரைசெய் பெருமை யுயர்தவத்தோ ரோங்கல்
புரைசை மதகளிற்றுன் பொற்கோயின் முன்னர்
முரைச முழங்க முடிசூட்ட மொய்த்தாண்
டரைச ரினிதிருந்த நல்லவையி னுனன்.

(இ - ள்.) உரைசெய்பெருமை - எடுத்துச்சொல்லப்படும் பெருமிதத் தையுடைய, உயர்தவத்தோர் ஓங்கல் - உயர்தவமுடையார்க்குள் மலேயன்ன ணுகிய வசிட்டமுனிவன், புரைசை மதம் களிற்றுன் - கழுத்திடு கயிற்றினை யுடைய மதயானேயையுடையானுகிய தயரதன், பொன்கோயில் முன்னர் - அழகிய அத்தாணிமண்டபத்தில், முரைச முழங்க - முரசவாத்திய மாரவாரி க்க, முடிசூட்ட மொய்த்து-முடிதரிக்கநெருங்கி, அரைசரினிதிருந்த-பலதேய மன்னவரினிதாகவிருந்த, நல்லவையினுனன்-நல்ல சபையை யடைந்தனன்.

'உரைசெய்பெருமை உயர்தவத்தோ ரோங்கல்செய்' எனப் பாடங்கொ ண்டு 'உலகத்தாராற்சொல்லப்படும் புகழையும் மிக்க தவத்தையுமுடைய ஒப் பற்ற மலேயையொத்த' என்றும், 'புரைமதகளிற்றுன்' என்பதற்கு 'மேன்மை யையுடைய மதயானேயுடைய சக்கரவர்த்தி' என்றும் விரிப்பாருமுளர்; அற் றேல் அவர் அரசனுக்குத் தவங்கூறுதல் சாலாமையும் அம்மாதவனென்றத னேடியையாமையும் நோக்கிற்றிலர். இதனுன் வசிட்டமுனிவன் அரசவை யடைந்த துணர்த்தப்பட்டது. (கூஉ)

வந்த முனியை முகநோக்கி வாள்வேந்தர்
எந்தை புகுதற் கிடையூறுண் டாயதோ
அந்தமில் சோகத் தழுகுரல் தானென்ன
சிந்தை தெளிந்தோய் தெரியெமக்கிவ் வென்றுரைத்தார்.

(இ - ள்.) வந்தமுனியை-வந்தடைந்த வசிட்டமுனிவனே, முகநோக்கி - முகத்தைநோக்கி; வாள்வேந்தர் - வாட்படையையுடைய அரசர், எந்தை புகு தற்கு-தேவரீரெழுந்தருள்வதற்கு, இடையூறுண்டாயதோ-தடைநேர்ந்ததோ, அந்தமில் சோகத்து - முடிவில்லாத துயரான், அழுகுரல் தான் என்ன-அழுத வோசை யாது, சிந்தை தெளிந்தோய் - மனத்தெளிவையுடைய முற்றத்துற ந்த முனிவனே, இவ் எமக்கு - இவற்றை யெங்கட்கு, தெரி என்று உரைத் தார் - சொல்லென்று கேட்டனர்.—எ-று.

* "அடுத்தது காட்டும் பளிங்குபோனெஞ்சிற் - கடுத்தது காட்டுமுகம்" என்பதனான் அந்தமுனியை முகநோக்கியென்றதென்க. இவ் என்றது வகரவீற்றுப் பலவறிசொல். மனந்தெளிந்து நிற்பவனாகலின் 'சிந்தை தெளிந்தோய்' என்றார். இதனான் வசிட்டமுனிவனை யந்தப்புரத்துச்செய்தி யாதென்றதுணர்த்தப்பட்டது. (கூரு)

(1) கொண்டாள் வரமிரண்டுங் கைகயர்கோன் கொம்பவட்குத்
தண்டாத செங்கோற் றயரதனுந் தானளித்தான்
ஒண்டார் முகிலைவனம் போகென் றொருப்படுத்தாள்
எண்டானும் வேறில்லை யீதடுத்த வாறென்றான்.

(இ - ள்.) கைகயர்கோன் கொம்பு வரமிரண்டும் கொண்டாள்-கேகயராசன் மகளாகிய பூங்கொம்புபோன்ற கைகேசி இரண்டுவரமும் கொண்டனள், அவட்கு தண்டாத செங்கோல் - அவளுக்குக் கோடாத செங்கோலையுடைய, தயரதனுமளித்தான்-தயரதனுங் கொடுத்துவிட்டான், ஒள் தார்முகிலை-ஒள்ளிய மலர்மாலையணிந்த மேகம்போல்வானாகிய சீராமனை, வனம்போக என்று ஒருப்படுத்தாள்-வனத்திற் செல்லென் றுடன்படச்செய்தனள், எண் தானும் வேறில்லை-எட்டுணையும் வேறொன்றுமில்லை, ஈதடுத்தவாறு என்றான் - இது நடந்தவண்ணமென்றனன்.—

கொம்பு-ஆகுபெயர். மணிமுடிபுனைய இடையூற்றை விளைத்தாளென்பதுணர்த்த 'கொண்டாள்வரமிரண்டுங் கைகயர்கோன்கொம்பு' என்றும், அதற்கரசனு மிசைந்தானென்பதற்கு 'அவட்குத்தண்டாத செங்கோற்றயரதனுந் தானளித்தான்' என்றும், சீராமனும் அயோத்தியை நீங்குவானென்பதற்கு 'ஒண்டார்முகிலைவனம்போகென்றொருப்படுத்தாள்' என்றும், ஈதல்லது வேறில்லை நிகழ்ந்தமையென்பான் 'எண்டானும்வேறில்லை யீதடுத்தவாறென்றான்' என்றுங்கூறினார். ஒண்டார்முகில்-இல்பொருளுவமை. முகில் - உருவகம். ஒருப்படுத்தல் - உடன்படுத்தல். (கூச)

(2) வேந்தன் பணியினாற் கைகேசி மெய்ப்புதல்வன்
பாந்தண் மிசைக்கிடந்த பாரளிப்பா னாயினான்
ஏந்து தடந்தோ ளிராமன் றிருமடந்தை
காந்த னொருமுறையே காடுறைவா னாயினான்.

(இ - ள்.) வேந்தன் பணியினால் - அரசனாணையினால், கைகேசிமெய்புதல்வன்-கைகேசி பயந்த மெய்மையுடைய மகனாகிய பரதன், பாந்தள்மிசை கிடந்த-பாம்பின்மேற் கிடந்த, பாரளிப்பானாயினான்-உலகை யாண்டுவருவானாயினான், ஏந்து தடந்தோள் - ஏந்துகின்ற விசாலமாகிய தோளையுடைய, இராமன் - சீராமன், திருமடந்தை காந்தன் - திருமாமகள் கேள்வன், ஒருமுறையே காடுறைவானாயினான்-ஒருவந்தம் காட்டில் வசிப்பானாயினான்.—எ-று.

சீராமன் காடாளுதலும் பரதன்நாடாளுதலும் அரசனாணை என்பார் 'வேந்தன்பணியினாற்கைகேசிமெய்ப்புதல்வன்பாரளிப்பானாயினான்'என்றும்,'இரா

* திருக்குறள் - செ, எ0சு.

மன் காடுறைவானுயினன்' என்றுங்கூறினர். நிலத்தைச்சுமப்ப தரவென்பார் மதம்பற்றிப்'பாந்தண்மிசைக்கிடந்தபார்' என்றதென்க. தன்றோளாற்றலானே உலகையெல்லாம் வெல்லுமென்பார்'ஏந்துதடந்தோள்' என்றும், யாவருக்குங் கழிபெருமகிழ்ச்சி விளைவிப்பவனாகலின் 'இராமன்' என்றும், யாவருக்கும் அவரவர் வேண்டியவேண்டியவாறே நல்குவோனாகலின் 'திருமடந்தைகாந்தன்' என்றுங் கூறினர். ஒருமுறையென்றார் - பதினான்காண்டுவரையுமென்பது கருதி. இவ்விரண்டு செய்யுளானும் அரசவையோர்க்கு வசிட்டமுனிவன் அரசன் வரங்கொடுத்தமை யுணர்த்தப்பட்டது. (கூ௫)

(1) வாரார் முலையாரு மற்றுள்ள மாந்தர்களும்
ஆராத காத லரசர்களு மந்தணரும்
பேராத வாய்மைப் பெரியோ னுரைசெவியிற்
சாராத முன்னந் தயரதனைப் போல்வீழ்ந்தார்.

(இ - ள்.) வாரார்முலையாரும் - கச்சினையணிந்த முலையையுடைய மாதரும், மற்றுள்ள மாந்தர்களும்-அவரையொழிந்த நகரமாந்தரும், ஆராதகாதலரசர்களும்-நீங்காத அன்பினையுடைய அரசரும், அந்தணரும்-அழகியதட்பமாகிய குணமுடையாரும், பேராதவாய்மை பெரியோன் உரை - தவிர்தலில்லாத வாய்மையையுடைய பெரியோனாகிய வசிட்டமுனிவன் சொல், செவியில் சாராதமுன்னம் - செவியின்கணடையாத முன்னம், தயரதனைபோல் வீழ்ந்தார் - தயரதனைப்போல் விழுந்தனர்.—

மங்கைப்பருவமுதன் பேரிளம்பெண்ணீறாகிய மாதரையெல்லா முணர்த்த 'வாரார்முலையாரும்' என்றும், நகரமாந்தரையுணர்த்த 'மற்றுள்ளமாந்தர்களும் என்றும், அவர் தாம்பெற்றவாறு உவப்பவராகலின் 'ஆராதகாதலரசர்களுமந்தணரும்' என்றும். வாய்மை பெரிதுமுடையானாகலின் 'பேராதவாய்மைப்பெரியோன்' என்றும், அவன் சொற்கேட்டாங்கு அயர்தலின் அதனை யுவமமுகத்தால் 'உரைசெவியிற்சாராதமுன்னந் தயரதனைப்போல்வீழ்ந்தார்' என்றுங்கூறினர். 'பேராதவாய்மைப்பெரியோன்' என்றது வசிட்டமுனிவனை. (கூசு)

(2) புண்ணுற்ற தீயிற் புகையுற் றுயிர்பதைப்ப
மண்ணுற் றயர்ந்து மறுகுற் றுடம்பெல்லாம்
கண்ணுற்ற வாரி கடலுற்ற தந்நிலையே
விண்ணுற்ற தெம்மருங்கும் விட்டழுத பேரோசை.

(இ - ள்.) புண் உற்ற தீயின் - புண்ணையடைந்த நெருப்பேபோல, புகையுற்று-புகையடைந்து, உயிர் பதைப்ப - உயிர்வருந்த, மண் உற்று அயர்ந்து-மண்ணையடைந்து வருந்தி, மறுகுற்று உடம்பெல்லாம் கண்ணுற்றவாரி கடலுற்றது - கலங்கி உடம்பெல்லாம் கண்ணேயாகவந்த வெள்ளநீர் கடலையடைந்தது, அந்நிலையே எம்மருங்கும் விட்டழுதபேரோசை விண்ணுற்றது-அந்நிலையிலேயே எப்பபாலும் விட்டழுத பேரொலி விண்ணடைந்தது.—

புண்ணுற்றதீயின்' என்பதற்கு வேறு விரிப்பாருமுளர். அவரழுத கண்ணீரை உவமமுகத்தான் 'கண்ணுற்றவாரிகடலுற்றது' என்றார். கண்ணீர் கடலையடைந்தமையும், பேரோசை விண்ணுற்றமையுங்கூறினமை உயர்வு நவிற்சியணி. 'அந்நிலையே' என்றது அவ்வாறழுதவண்ணமெனபதுகுறித்து நின்றது. (கூஎ)

(3) மாத ரருங்கலமு மங்கலமுஞ் சிந்தித்தம்
கோதை புடைபெயரக் கூற்றனைய கண்சிவப்பப்
பாத மலர்சிவப்பத் தாம்பதைத்துப் பார்சேர்ந்தார்
ஊதை யெறிய வொசிபூங் கொடியொப்பார்

(இ - ள்.) மாதரருங்கலமும் மங்கலமுஞ் சிந்தி - மாதர்கள் அருமையாகிய ஆபரணங்களையு மங்கலங்களையுஞ் சிதறி, தம் கோதை புடைபெயர-தம்முடைய மாலை புடைபெயர, கூற்றனைய கண் சிவப்ப - கூற்றினையொத்த கண்சிவக்க, பாதமலர் சிவப்ப-கான்மலர் சிவக்க, பதைத்து - வருந்தி, ஊதையெறிய - காற்றுமோத, ஒசி பூங்கொடி யொப்பார் - தளர்கின்ற பூங்கொடி போல்வாராகி, பார் சேர்ந்தார்-பூமியிலடைந்தனர்.—

அவர் துன்பத்தா னயர்ந்துவீழ்ந்தமையை 'ஊதையெறிய வொசிபூங்கொடியொப்பார்' என்றுவ மமுகத்தாற் கூறினர். 'மங்கலமுஞ்சிந்திக்கோதை புடைபெயரக் கண்சிவப்பப் பாதமலர்சிவப்பப் பதைத்துப்பார்சேர்ந்தார்' என்றது தொழிற்றன்மை. கோதை-மாலை. 'கூற்றனைய கண்' என்றது கண்ணின் கொடுமையை விளக்கிற்று. (கூஅ)

(4) ஆவா வரச னருளிலனே யாமென்பார்
காவா வறத்தையினிக் கைவிடுவேம் யாமென்பார்
தாவாத மன்னர் தலைத்தலைவீழ்ந் தேங்கினார்
மாவாதஞ் சாய்த்த மராமரமே போல்கின்றார்.

(இ - ள்.) மாவாதம் சாய்த்த மராமரமே போல்கின்றார் - பெருங்காற்று சாய்த்த மராமரத்தையொப்பாராகி, ஆ ஆ அரசன் அருளிலனே யாமென்பார்-ஆவா அரசன் அருளுடையானல்லனேயாகுமென்பார், யாம் காவா அறத்தை இனி கைவிடுவேம் என்பார்-யாம் காவாமல் அறத்தை இனி இழப்பேமென்பர், தாவாத மன்னர் தலைத்தலை வீழ்ந்தேங்கினார் - ஆற்றலிற்குன்றாத அரசர் அவ்வவ்விடங்களில் விழுந்தேங்கினர்.—

அரசன் சிராமனைக் காடுபோக்கலின் 'அரசனருளிலனேயாமென்பார்' என்றும், அறமும் அவனைக் காடுபோதச்செய்தமையின் இனிச் செய்வதனாற் பயனில்லையென்பார். 'காவாவறத்தையினிக்கைவிடுவோம்யாமென்பார்' என்றும், தம்பெருமிதநோக்காது மரம்போற் புழுதியில் விழுந்தமையின் 'மாவாதஞ்சாய்த்த மராமரமே போல்கின்றார்' என்றுங் கூறினர். (கூக)

(5) கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யழுத வுருவறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவா னென்றுரைத்த மாற்றத்தால்

(இ - ள்.) வள்ளல் வனம்புகுவானென் றுரைத்த மாற்றத்தால்-வள்ளியோனாகிய சீராமன் காட்டிற்புகுவானென்று சொல்லிய சொல்லான், கிள்ளையொடு-கிளியுடன், பூவையழுத - நாகணவாய்ப்புள்ளழுதன, கிளர்மாடத்துள்ளுறையும் பூசையழுத-விளங்குகின்ற மனையினுள் வசிக்கும் பூனைகள் அழுதன, உருவறியாப்பிள்ளையழுத - உருத்தோன்றாத குழவியழுதன, பெரியோரை யென்சொல்ல -பெரியாரைப்பற்றி யாதுகூற.—

கிள்ளை பூவை என்பனவற்றினை மாதர்கள் போற்றாது விட்டமையினானும், அவை இறைவன்கானேகல்கூறியகேட்டேவருந்தினமையானும் கிள்ளையொடு பூவையழுத வென்றதன்றிமனையின்கண்வசிக்கும் பூசையையுமுடன் கூறினார். இன்னவை விரும்பற்பாலன விரும்பப்படாதன வென்பனவில்லாத அஃறிணைபோன்றனவாகியசிற்றஞ்சிறாரையுணர்த்த 'உருவறியாப் பிள்ளையழுத' வென்றும், அவையே யழுத காலையின்ஆறறிவுடையராய மக்களைக்கூற வேண்டாவென்பார் 'பெரியாரையென்சொல்ல' வென்றுங்கூறினார். தனக்குமுறையேவந்த அரசுரிமையைத் தம்பிக்குதவித்தான் கான்படர்தலின் 'வள்ளல் வனம்புகுவானென்றுரைத்த மாற்றத்தா' லென்றதென்க. (௪00)

(6) சேதாம்பற் போதனைய செங்கனிவாய் வெண்டளவப்
போதாம்பற் றோன்றப் புணர்முலைமேற்பூந்தரள
மாதாம்பற் றென்ன மழைக்கண்ணீ ராலியுக
நாதாம்பற் றாமழலை நங்கைமா ரேங்கினார்.

(இ - ள்.) சேதாம்பற்போதனைய செங்கனிவாய் - செவ்வல்லி மலரும் சிவந்த கொவ்வைக்கனியும் போன்றவாயும், வெண்டளவப்போதாம்பல் தோன்ற - வெண்மையாகிய முல்லைமலர்போன்ற பற்களுந்தோன்ற, புணர்முலைமேல் பூதரள மாதாம்பு அற்றன்ன மழைகண்ணீர் ஆலியுக-நெருங்கியமுலைமேல் அழகிய முத்தமாலையற்று வீழ்ந்தாற்போலுங்கண் மழைநீர்சிந்த, நாதாம் பற்றாத மழலை நங்கைமார் ஏங்கினார் - நாக்கள் தாம் நிரம்பாதகுதலைச் சொல்லைப்பேசுகின்ற மாதர்கள் வருந்தினர்.

ஆம்பலுங் கனியும் வாய்க்கும், முல்லை பற்களுக்கும், மழை கண்ணுக்குமுவமை கூறினார். நங்கைமாரென்றது பெண்களுட்சிறந்தாரை. கண்ணினின்று நீருகுத்தலைத் தாம்பற்றதற் குவமித்தார். (௪0௧)

(7) ஆவு மழுதவதன் கன்றழுத வன்றலர்ந்த
பூவு மழுதபுனற் புள்ளழுத கள்ளொழுகும்

காவு மழுத களிறழுத கால்வயப் போர்
மாவு மழுதனவம் மன்னவனை மானவே.

(இ - ள்.) அம்மன்னவனைமான-சீராமன் பிரிவாற்றாது வருந்துஞ் சக்கரவர்த்திபோல, ஆவுமழுத-பசுக்களுமழுதன, அதன்கன்றழுத-அதன் கன்றுகளுமழுதன, அன்றலர்ந்தபூவுமழுத-நாளிலர்ந்த பூக்களுமழுதன, புனற்புள்ளழுத - நீர்வாழ் பறவையுமழுதன, கள்ளொழுகுங் காவுமழுத - தேன் பொழியுஞ் சோலையுமழுதன, களிறழுத - களிற்றியானையுமழுதன, கால்வயப் போர்மாவுமழுத - கால் வாயுவேகமுள்ள வெற்றிதரும்போர்த் திறலையுடைய குதிரைகளு மழுதன.

ஆ முதலிவன பால்பகாவஃறிணைப் பெயர்களாகலின் அழுதவெனப்பன்மை வினைகொண்டன. அதனென்றது சாதியொருமை. கால் ஆகுபெயர், சீராமனே தன்னுயிராகலினவன் பிரிவதனான் வருந்துகின்றமையின் 'அம்மன்னவனைமான' என்றார். களிற்றினையுங் குதிரைகளையுங் கூறலினேனைய படைகள் கூறாதேயமைந்தவாறு. (கo௨)

(8) ஞானியு முய்கலா னென்னாதே நாயகனைக்
கானீயு மென்றுரைத்த கைகேசி யுங்கொடிய
கூனியு மல்லாற் கொடியார் பிறருளரோ
மேனியு மின்றி வெறுநீரே யாயினார்.

(இ - ள்.) ஞானியும் - மெய்யுணர்ச்சியுடையானும், உய்கலானென்னாது - சீராமனைப் பிரிந்துய்யா னெனக்கருதாமல், நாயகனைக் கானீயுமென்றுரைத்த கைகேசியும் - தன்கணவனைக்காட்டினை மகனுக்குதவுமென்று வேண்டிக்கொண்டகைகேசியும், கொடிய கூனியுமல்லால்-கொடிய குணத்தையுடைய கூனியுமல்லாமல், கொடியார் உளரோ - கொடியவர் பிறருளரோ, பிறர்மேனியு மின்றி வெறு நீரேயாயினார் - பிறரெல்லாரும் உடலில்லாது வெறு நீரினை யொத்துருகினார்.—எ-று.

பற்றற்றான் பற்றினைப்பற்றி இகலற்றுநின்ற மெய்யுணர்ந்தாரும் வேறுபற்றிலராயினு மவருஞ்சீராமன் பிரிவினை நோக்கி யுய்யாரென்பதெண்ணாது அரசனைக்கானீயுமென்றதனான் 'ஞானியு முய்கலானென்னாதே நாயகனைக் கானீயுமென்ற கைகேசியும்' என்றும், அவளது பொன்போன்ற மனத்தைச் சூழ்ச்சியாற் கெடுத்தமையாற் கூனியைக் 'கொடிய கூனியு' மென்றும், இவ்விருவரையல்லதுகான்செல்லச்செய்தாரில ராதலிற் 'கொடியார்பிறருளரோ' வென்றும், அங்ஙனநின்றார் தன்மையையுணர்த்த 'மேனியுமின்றி வெறு நீரே யாயினா' ரென்றுங்கூறினார், ஆதலிண்டாக்கப் பொருடராதுவமப்பொருள் குறித்து நின்றது, "ஆள்வாரிலி மாடாவேனோ" வென்புழிப்போலஎனக்காட்டுரைப்பார் பிறரும். கானீயுமென்பதொழிந்த வெதுகைகள் நீட்டும்வழிநீட்டல், "வீடுமின்முற்றவு" மென் புழிப்போல. இவ்வெட்டுசெய்யுளானுஞ் சீராமன் பிரிவு கேட்டிரங்கிய துணர்த்தப்பட்டது. (கoரு)

தேருு தறிவழிந்தா ரெங்குலப்பார் தேரோட
நீருகிச் சுண்ண நிறைந்த தெருவெல்லா
மாருகி யோடின கண்ணீ ரருநெஞ்சங்
கூருகி யோடாத வித்துணையே குற்றமே.

(இ - ள்.) தேருது அறிவு அழிந்தார் எங்கு உலப்பார் - தெளியாதறிவிழக்கப் பெற்றவர் எங்கேயொழிவர், தேரோட - தேரோடுவதனல், நீருகி சுண்ணம் நிறைந்ததெருவெல்லாம் - புழுதியடைந்து சுண்ண நிறைந்ததெருவனைத்தும், கண்ணீராருகியோடின - நகரமாந்தர் பெருக்கிய கண்ணீராருகியோடின, அருநெஞ்சம் கூருகியோடாத இத்துணையேகுற்றம் - பெறற் கரியமனம் கூறுபட்டோடாத இவ்வளவே பிழைபாடு—எ-று.

சீராமன் நீக்கத்தால் தம்மைமறந்தமையான் 'தேருதவழிந்தாரெங்குலப்பா' ரென்றதென்க. தேரோடும் வீதியின்பால் நகரமாந்தர் கண்ணீராருகி யழுது செல்வதனன் முன்னேநாள் 'சுண்ணநிறைந்த தெருவெல்லாம் கண்ணீராருகியோடின' வென்றும், அவர்மனமு மப்பெருந்தகைபிரிவான் உடலினின்றும் பிரியாதிருந்தமையே பெருங்குற்றமென்பார் 'அருநெஞ்சங்கூருகி யோடாத இத்துணையே குற்ற' மென்றுங் கூறினர். மனமருவென்பார் மதம்பற்றி 'அருநெஞ்ச' மென்றதென்க, இதுகவிக்கூற்று. (கoச)

மண்செய்தபாவமுளதென்பார்மாமலர்மேற்
பெண்செய்தபாவமதனிற்பெரிதென்பார்
புண்செய்தநெஞ்சைவிதியென்பார்பூதலத்தோர்
கண்செய்தபாவங்கடலிற்பெரிதென்பார்.

(இ - ள்.) மண்செய்தபாவமுளதென்பார் - நிலமடந்தை செய்தபாவமுண்டென்பர், மாமலர்மேற் பெண்செய்தபாவ மதனிற் பெரிதென்பார் - பெரிய தாமரையாள்செய்த பாவமதனினும் பெரியதென்றுரைப்பர், விதிநெஞ்சை புண்செய்ததென்பார்-போகூழ் மனத்தைப் புண்படுத்தியதென் றுரைப்பர், பூதலத்தோர் கண்செய்தபாவம் கடலிற்பெரிதென்பார் - நிலவுலகத்தவர்கள்செய்த பாவங்கடலினும்பெரிதென் றுரைப்பர்.—

சீராமன் மணிமுடிபுனையநிலமடந்தைபாக்கியஞ்செய்யப்பெருமையின் 'மண்செய்தபாவமுளதென்பா' ரென்றும், திருமடந்தையு மவ்வாறெய்தப்பெருமையின் 'மாமலர்மேற்பெண்செய்தபாவ மதனிற்பெரிதென்பா' ரென்றும், தம்மனத்தைப் புண்படுத்தியது ஆ கூழல்லது வேறென்றே அன்றென்பார் 'புண்செய்தநெஞ்சைவிதியென்பா' ரென்றும், இதனைக்காணக்கண்படைக்கு நிலவுலகத்தவர்கள்செய்த பாவமளக்கப் படாமையாற் 'பூதலத்தோர்கண் செய்த பாவங் கடலிற் பெரிதென்பா' ரென்றுங் கூறினர். செய்ததென்பது ஈறுதொகுத்தல் பெற்றது. (கரு)

(2) ஆளான்பரதனரசென்பாரையனினி
மீளானமக்குவிதிகொடிதுகாணென்பார்
கோளாகிவந்தவாகொற்றமுடிதானென்பார்
மாளாதநம்மின்மனவலியாராரென்பார்.

(இ - ள்.) பரதன் ஆளான் அரசுஎன்பார் - பரதன் அரசினை ஆளானென்பர், இனி ஐயன் மீளான் - சீராமன் இனி மீள்கிலான், விதி கொடிது காண்என்பார்-விதிகொடியதுகாணென்பர், கொற்றமுடிகோளாகி வந்தவா என்பர்-வெற்றியையுடைய திருமுடிஉயிர்கோடல் செய்யும் கூற்றமாகி வந்தவாறென்னென்பர், மாளாதநம்மின்-(இதைக்கண்டு) உயிர்நீங்காத நம்மினும், மனம் வலியாராரென்பார்-மனம் வலிமையுடையார் யாரென்பர்.—

ஐயனென்றது சீராமனை; ஐயனென்றதற்கழகனென்றது பற்றி அங்ஙனங்கூறியதென்க. சீராமன் கான்சென்றது கேட்டுப் பரதன்றான் பெற்ற வரசாளாமையுண்மையின் 'ஆளான் பரதனரசு' என்றும், தாயேவலிற்செல்வதனாற் சீராமனீடெய்தாமையின் 'ஐயனினி மீளான்' என்றும், இது விதியது செய்கையாதலின் 'விதி கொடிது காண்' என்றும், சீராமன் பிரிதற்குக்காரணமுடி பெறுவதாகலின் 'கோளாகிவந்தவா கொற்ற முடி' யென்றும், இதைக்கண்டுயிர்வாழுமன வலிமையின்மையின் 'மாளாதநம்மின் மனவலியாரார்' என்றுங்கூறினார். வந்தவாவென்புழி று-ஈறுதொகுத்தல்பெற்றது; யார்என்றதுமரீஇயது; அது ஈண்டின்மைப்பொருட்டு, இதனை *"யாஅருலகத்தோர்சொல்லில்லார்" என்றதனானுணர்க. (௧0௬)

(3) ஆதியரசனருங்கேகயன்மகண்மேற்
காதன்முதிரக்கருத்தழிந்தானுமென்பார்
சீதைமணவாளன்றன்னோடுந்தீக்கானம்
போதுமதுவன்றேற்புகுதுமெரியென்பார்.

(இ - ள்.) ஆதியரசன் - பழைய அரசன், அருங்கேகயன் மகண்மேற் காதல் முதிர-அருமையாகிய கேகயராசன் மகளாகியகைகேசிபாலன்புமிகுதலால், கருத்தழிந்தானுமென்பார் - மனமழிந்தனன்போலு மென்பர், சீதை மணவாளன் தன்னோடும் - சீதை நாயகனாகிய சீராமனோடும், தீக்கானம்போதும் - கொடுங்காட்டினை யடைவேம், அதுவன்றேல் - அதுகிடைக்கப்பெறுதொழியின், எரிபுகுதுமென்பார் - தீப்புகுவேமென்பர்.—

'ஆதியரசனருங்கேகயன்மகண்மேற்காதன் முதிரக்கருத்தழிந்தானும்' என்றார் பருவமுதிர்ந்து மரசனுக்குக்குணக்கேடெய்தினமையின். ஆமென்பதாக்கப் பொருடாராதுவமப் பொருள் குறித்துநின்றது. புகுதுமென்றது மரீஇயது. யார் யார் யாதுயாது வேண்டினு மவற்றை யளிப்பவளாகலானும், புருடாகாரியாகலானுஞ்சீராமனை வாளாகூறுது சீதை மணவாளனென்றதென்க.

* நாலடி - செ, ௧௧௬

(4) கய்யானிலந்தடவிக்கண்ணீர்மெழுகுவார்
உய்யாள்போற்கோசலையென்றோவாதுவெய்துயிர்ப்பார்
அய்யாவிளங்கோவேயாற்றுதியோநீயென்பார்
நெய்யாரழலுற்றதுற்றாரந்நீணகரார்.

(இ - ள்.) கய்யால் நிலம் தடவி கண்ணீர்மெழுகுவார்-கையால் நிலத்தினைத் தடவிக் கண்ணீரான் மெழுகாநிற்பர், கோசலை உய்யாளென்று ஓவாது வெய்துயிர்ப்பார் - கோசலை பிழையாளென்று நீங்காது பெருமூச்செறிவர், அய்யா இளங்கோவே - ஐயனே! இளையோனே, நீ யாற்றுதியோ என்பார் - நீ மனந்தணிவையோ என்பர், அந்நீள் நகரார் நெய்யார் அழலுற்ற துற்றார் - அந்நெடிய நகரமாந்தர் நெய்வார்த்த தீயடைந்த தன்மையை யடைந்தனர்.—

ஸ்ரீராமனீக்கத்தாற் கண்ணீர்பெருக்கெடுத்து நிலத்தில் விழக் கையாற்றடவுதலினங்ஙனங் கூறினார். சுபாவயுத்தியணி. போல் அசை. ஒகாரமெதிர்மறை. இளங்கோவென்றது இலக்குவனை. (௧௦அ)

(5) தள்ளுறுவேறில்லைத்தன்மகற்குப்பார்கொள்வான்
எள்ளுறியகருமநேர்ந்தாளிவளென்னாக்
கள்ளுறுசெவ்வாய்க்கணிகைகாண்கைகேசி
உள்ளுறுகாதலிலள்போலென்றுள்ளழிந்தார்.

(இ - ள்.) தள்ளுறு வேறில்லை - ஸ்ரீராமனைக் கான் செல்லச் செய்வது பிறிதொன்றில்லை, தன்மகற்குப் பார்கொள்வான் - தன்மகனாகிய பரதனுக்கரசுபெறுவான், எள்ளுறியகருமம் - இகழ்தற்காகிய காரியம், இவள்நேர்ந்தாள்காண் என்னா-அவளிசைந்தனள் காண்மினென்று, கள்ளுறுசெவ்வாய்க்கணிகைபோல் - தேனினு மினிய செவ்வாயையுடைய கணிகைபோல, கைகேசி உள்ளுறுகாதலிலளென்று -கைகேசியுள்ளத்திற் சுரக்குமன்பிலளென்று, உள் அழிந்தார் - மனமழிந்தனர்.—

இக்கைகேசி நாடுபெற்றமை யாவரானும் பழிக்கப்படுவதனான் 'தன்மகற்குப்பார் கொள்வானெள்ளுறியகருமநேர்ந்தாள்' என்றும், கணிகை கரந்தவுள்ளத்தளாய்க் காதலிப்பதுபோற் காட்டலின் 'கணிகைகாண் கைகேசி' என்றும், தான் மன்னவர்மன்னனுக்குயிர்போல் வானைக் கானேக விடுத்தலின் 'உள்ளுறுகாதலிலள்' என்றுங்கூறினார். காண்மின் என்றது ஈறுதொகுக்கப்பட்டது.

(6) நின்றுதவமியற்றித்தான்றீரநேர்ந்ததோ
அன்றிவ்வுலகத்துளாருயிராய்வாழ்வாரைக்
கொன்றுகளையக்குறித்தபொருளன்றோ
நன்றுவரங்கொடுத்தநாயகற்குநன்றென்பார்.

(இ - ள்.) நின்று தவமியற்றி-தவநிலைபெறச்செய்து, தான்தீரநேர்ந்ததோ - தானீங்கவிசைந்ததோ, அன்றி இவ்வுலகத்துள் - அல்லது இவ்வுல

கின்கண், ஆருயிராய் வாழ்வாரை - அரிய உயிராய் வாழ்பவரை, கொன்று களைய - கொன்று அழிக்க, குறித்தபொருளன்றோ - எண்ணிய துணிவன்றோ, வரங்கொடுத்த நாயகற்குநன்றுநன்று என்பார்-வரமளித்த இறைவற்குச் சால நன்றென்பர்.—

அடுக்கு மிகுதிப்பொருட்டு; அன்றி என்பது அன்றெனத்திரிந்துநின்றது. தாமென்றது தயரதனை-வாழ்வாரென்றமையான் ஆருயி ரென்றது உயர்திணைப்பொருளை. வரங்கொடுத்தமை சீராமனைக் கான்விடுப்பக்கேட்டமை. (௧௧0)

(7) பெற்றுடையமண்ணவளுக்கீந்துபிறந்துலக
முற்றுடையகோவைப்பிரியாதுமொய்த்தீண்டி
உற்றுறைதும்யாருமுறையவேசின்னாளிற்
புற்றுடையகாடெல்லாநாடாகிப்போமென்பார்.

(இ - ள்.) பெற்றுடையமண் - தான்பரம்பரையாற் பெற்றுடைய அரசினை, அவளுக்கீந்து-அக்கைகேசிக்குதவி, பிறந்துலக முற்றுடைய கோவை - பிறந்ததனால் உலகமுழுதுமுடையஇறைவனை, பிரியாது-நீங்காது,மொய்த்திண்டி - திரண்டுசூழ்ந்து, உற்றுறைதும் - யாமடைந்து வாழ்வேம், உறைய - யாவரும் வாழ, சின்னாளில் - சில்பகலில், புற்றுடையகாடெல்லாம்-புற்றினையுடையகாடுமுழுதும், நாடாகிப்போமென்பார்-நாடாய்விடுமென்பர்.—

தான் பரம்பரையாக வந்தமையின் பிறந்துலகமுற்றுடைய கோவென்றதென்க. (௧௧௧)

(8) என்னேநிருபரியற்கையிருந்தவா
தன்னேரிலாததலைமகற்குத்தாரணியை
முன்னேகொடுத்துமுறைதிறம்பத்தம்பிக்குப்
பின்னேகொடுத்தாற்பிழையாதோமெய்யென்பார்.

(இ - ள்.) நிருபர் இயற்கை இருந்தவாறு என்னே - அரசரியற்கையிருந்தவகையாது, தன்னேரிலாத தலைமகற்கு - தன்னொடு நிகரில்லாத சீராமனுக்கு, தாரணியை முன்னேகொடுத்து-நிலத்தைமுன்னளித்து, தம்பிக்கு-பரதனுக்கு, பின்னே கொடுத்தால்-பின்னே யளித்தால், மெய்பிழையாதோ என்பார் - உண்மைதவறுதோ என்றனர்.—

நிருபரென வெகுளிபற்றிப் பன்மைப்பாலாற்கூறினர். தன்னேரிலாத தலைமகனென்றது சீராமனை. தம்பி என்றது பரதனை.

தனக்குமேல் அதிகார முடையார் பிற ரின்மையான் 'நிருபர்' என்றும், மைந்தர்பலருள் மூத்தான்பாற்றுதைக்கும் இளையான் பாற்றுய்க்குங் காதலுடைமையான் 'தலைமகன்' என்றும், மூத்தாற்குடல்பழுதாயினிளையானரசாளன்முறையென்பது நீதிநூல் வழக்குண்மையான் 'தன்னேரிலா' வென்றும், 'இந்தநல்லறம் புரக்க நினையல்வேண்டும்' என்றரசனிரந்தமையான் 'தாரணியைமுன்னேகொடுத்து' என்றும், அம்முறைதிறப்பி இளையானுக்குவரத்தாலின் 'பின்னேகொடுத்து' என்றுங் கூறினர். நினைத்தலும், சொல்லுதலுஞ்

கொடுத்தலோடொக்குமாதலின்கொடுக்க நினைத்தமையும், சொன்னமையும் 'கொடுத்' தெனக்கூறியவாறென்க. சீராமனுக்கு அரசுரிமை கொடுத்தலான் வாய்மை பிழைக்கு மென்பதற்கு மாறாகப் பரதனுக்குதவலின் 'வாய்மைபி ழையாதோ' வென்றார். (கக௨)

(9) கோதைவரிவிற்குமரற்கொடுத்தநில
மாதையொருவர்புணர்வராவஞ்சித்த
பேதைசிறுவனைப்பின்பார்த்துநிற்குமா
சீதைபிரியினும்பிரியாத்திருவென்பார்.

(இ - ள்.) கோதை வரிவிற் குமரற் கொடுத்த - மாலையணிந்த வரிந்து கட்டிய வில்லையுடைய சீராமனுக்குக்கொடுத்த, நிலமாதை - நிலமடந்தை யை, ஒருவர்புணர்வரா - ஒருவர் அணைவரா, வஞ்சித்தபேதை-வஞ்சஞ்செய்த அறிவிலியாகிய கைகேசி, சிறுவனை - மகனாகிய பரதனை, பின் பார்த்து - பின்னோக்கி,சீதைபிரியினும்-சனகிபிரிந்தாலும், பிரியாதிரு-நீங்காதசெல்வம், நிற்குமா-நிற்குமோ, என்பார்-என்பர்.—

குமரற்கு என நான்காவதுதொகுக்கப்பட்டது;* "ஐந்தவித்தானாற்ற" லெ ன்புழிப் பரிமேலழகர் கூறலானு முணர்க. கயத்திமொழிகேட்டுடன் பட்ட மையிற் 'பேதை' யென்றார். (ககரு)

(10) உந்தாதுநெய்வார்த்துதவாதுகாலெறிய
நந்தா விளக்கினடுங்குகின்றநங்கைமார்
செந்தாமரைத்தடங்கண்செவ்வியருணோக்கம்
அந்தோபிரிதுமோவாவிதியேயோவென்பார்

(இ-ள்.) உந்தாது-செலுத்தாது, நெய்வார்த்துநெய்சொரிந்து-உதவாது காலெறிய-உதவாமற்காற்றுமோத, நந்தாவிளக்கின்-அழியாத விளக்குப்போ லும்-நடுங்குகின்ற நங்கைமார்-நடுங்காநிற்கின்ற மாதர்கள், செந்தாமரை தடங் கண் செவ்வியருணோக்கம் - செந்தாமரை மலர்போன்ற செவ்வியவருட்பார் வையை, அந்தோ பிரிதுமோ - ஐயோ பிரிந்துயிர் வாழ்வேமோ, ஆவிதியே யோ என்பார்-ஆவிதியேயோவென்பர்.—எ-று.

கருணைபொழியும் பார்வையாகலிற் 'செந்தாமரைத்தடங்கண் செவ்வி யருணோக்கம்' என்றார். அந்தோ இரக்கக்குறிப்பு. இப்பத்துச்செய்யுளானு நகரத்தவர் வருந்தினமை யுணர்த்தப்பட்டது. (ககசு)

(1) கேட்டானிளையோன்கிளர்ஞாலம்வரத்தினாலே
மீட்டாளளித்தாள்வனந்தம்முனின்வெம்மைமுற்றித்
தீட்டாதவேற்கட்சிறுதாயெனயாவரானும்
மூட்டாத காலக் கடைத்தீயென மூண்டெழுந்தான்.

(இ - ள்.) தீட்டாதவேற்கட்சிறுதாய் - தீட்டாத வேல்போன்ற கண் ணையுடைய சிற்றன்னை, கிளர்ஞாலம் - விளங்குகின்றவுலகம், வரத்தினால்

* திருக்குறள் - செ. உரு.

மீட்டாள் - வரத்தான் மீட்டுக்கொண்டாள், தம் முனின் வெம்மை முற்றி - தமையன்பாற் கொடுமைமிகுந்து, வனம் அளித்தாள் - காட்டைக்கொடுத்தனள், எனக்கேட்டான் - எனக்கேட்டு, யாவராலும் மூட்டாதகாலக்கடை தீயென மூண்டெழுந்தான் - யாவராலு மூட்டாத ஊழித்தீப்போல மூண்டெழுந்தனன்.—

ஊழித்தீயோ டிவன்கொண்டசினத்திற்கு வேற்றுமை தோன்ற 'மூட்டாத காலக்கடைத்தீ' என்றும், வேலோடுகண்ணுக்கு வேற்றுமைதோன்றத் 'தீட்டாதவேற்கண்' என்றுங்கூறினர். கேட்டான் வினையெச்சமுற்று. காலக்கடைத்தீ என்றது ஊழித்தீயை. தம்முனென்றது ஸ்ரீராமனை. (கசரு)

(2) கண்ணிற்கடைத்தீயுகநெற்றியிற்கற்றைநாற
விண்ணிற்சுடருஞ்சுடர்தோன்றமெய்ந்நீர்விரிப்ப
உண்ணிற்குமுயிர்ப்பெனுமூதைபிறக்கநின்ற
அண்ணற்பெரியோன்றனதாதியின்மூர்த்தியொத்தான்.

(இ - ள்.) கண்ணிற்கடைத்தீயுக - கண்ணிடை யூழித்தீச்சிந்த, நெற்றியிற்கற்றைநாற - நெற்றியின்கண் தீக்கற்றைதோன்ற, விண்ணிற்சுடருஞ்சுடர்தோன்ற - விண்ணிடைச் சுடர்விளங்க, மெய்ந்நீர்விரிப்ப - உடம்பினின்று நீர் பெருக, உள்நிற்கும் உயிர்ப்பெனு மூதை பிறக்க - உள்ளே நிற்குமுயிர்ப் பென்னும் பெருங்காற்றுத்தோன்ற, நின்ற அண்ணற்பெரியோன் - நிலைபெற்ற மிகப்பெரியோனாகிய இலக்குவன், தனதாதியின் மூர்த்தியொத்தான் - தன்முன்னவதாரமாகிய ஆதிசேடனையொத்தனன்.—

தனதாதியின்மூர்த்திஎன்றதுதிருவனந்தாழ்வானை; இதனை 'வடவைதீதரவிளைதருகடுவுடைவிரிகொள்பாயலும்' எனமுற்காண்டத்துக்கூறலானுமுணர்க. அவன் உலகைச்சங்காரஞ்செய்வதுயிர்ப்பானெனப் பாகவதபுராணங்கூறிற்று.

(3) சிங்கக்குருளைக்கிடுதீஞ்சுவையூனைநாயின்
வெங்கட்கடுங்குட்டியையூட்டவிரும்பினளே
நங்கைக்கறிவின்றிறநன்றிதுநன்றிதென்னாக்
கங்கைக்கிறைவன்கடகக்கைபுடைத்துநக்கான்.

(இ - ள்) சிங்கக்குருளைக் கிடுதீஞ்சுவையூனை - சிங்கவேற்றிற் கிடுகின்ற இனிய சுவையையுடையவூனினை, நாயின் வெங்கட்கடுங்குட்டியை யூட்ட விரும்பினளே - வெம்மையாகிய கண்ணையுங் கடுமையையுமுடைய நாய்க்குட்டியை யுண்பிக்கவிழைந்தனளே, நங்கைக்கு அறிவின்திற நன்றிது நன்றிது என்னா - கைகேசிக்கு அறிவின்வகை மிகநன்று என்று, கங்கைக்கு இறைவன் கடகக்கைபுடைத்துநக்கான் - இலக்குவன் கடகமணிந்த கையைப்புடைத்துச் சிரித்தனன்.—

நங்கையென்றது கைகேசியை; சிங்கவேற்றிற் கிடுமூனைநாய்க்குட்டிக் கிடுவதுபோல இறைவனடைதற்பாலதாய அரசினைப்பரதனுக்குதவியதுமுறையன்றென்றுவமைமுகத்தானுரைத்தார். கங்கைக் கிறைவன் என்றது

கங்கையைப் புவியிற்கொணர்ந்த வரசன் வழித்தோன்றலென்பது பற்றி யென்க. அடுக்கு மிகுதிப்பொருட்டு. (கஎ)

(4) சுற்றார்மணியார்வடிவாள்புடைதோன்றவார்த்து
விற்றாங்கிவாளிப்பெரும்புட்டில்புறத்துவீக்கிப்
பற்றார்ந்தசெம்பொற்கவசம்பனிமேருவாங்கோர்
புற்றெனவோங்கியதோளொடுமார்புபோர்க்க.

(இ - ள்.) சுற்று ஆர்மணியார்வடிவாள் - சுற்றிலும்பொருந்திய மணி தங்கிய கூரியவாள், புடைதோன்றவார்த்து - பக்கமேவிளங்கக்கட்டி, வில் தாங்கி-வில்லேந்தி, பனிமேருவாங்கோர் புற்றெென-குளிர்ந்த மேருமலை யினுள்ள தோர்புற்றையொப்ப, வாளிப்பெரும்புட்டில் புறத்துவீக்கி-அம் பறாத்தூணியைப் புறத்திற்கட்டி, பற்றார்ந்தசெம்பொற்கவசம் -பொருந்துத லமைந்த செம்பொன்னினாலாகிய கவசம், ஓங்கியதோளொடு மார்புபோர்க்க- ஓங்கிய தோளினுடன் மார்புமறைப்பவும்.—

பனிமேருவைத் தோட்கும், புட்டிலைப் புற்றினுக்குமுவமை கூறினர். இது குளகம், ஒடு எண்ணொடு, வாளார்த்துப் புட்டில்வீக்கி விற்றாங்கிக் கவ சம்போர்க்க என்றியைக்க. (கஅ)

(5) அடியிற்சுடர்பொற்கழலார்கலிநாணவார்ப்ப
பொடியிற்றடவுஞ்சிறுநாண்பெரும்பூசலோசை
இடியிற்றொடரக்கடலேழுமடுத்திஞ்ஞாலம்
முடியிற்குமுறும்மழைமும்மையின்மேன்முழங்க.

(இ - ள்.) அடியிற் சுடர்பொற்கழல் - தாளிற் பிரகாசிக்கின்ற பொன் னாலாகிய வீரகண்டை, ஆர்கலிநாணவார்ப்ப-கடலும் வெட்கவாரவாரிக்கவும், பொடியிற் றடவுஞ் சிறுநாண் பெரும்பூசலோசை - இந்நிலத்திற்படுஞ் சிறு நாணிடத்துளதாய பெரும்போர்க்குரித்தாமொலி, தடங் கடலேழுமடுத்து இஞ்ஞாலமுடியிற் றொடர-எழுகடலும் பருகி இவ்வுலகமுடிவில் இடியொடு ந்தொடர, குமுறும் மழைமும்மையின் மேல்முழங்க - குமுறுகின்ற மழை மும்மடங்கு மிகவுமொலிக்கவும்.—

மும்மையின் என்பது ஈண்டெண்ணிற் கணின்றது ; "இருமைவகை தெரிந்" தென்புழிப்போல. ஞாலமுடியென்றது உகாந்தகாலத்தை. உம்மை முற்று. ஆர்கலி - அன்மொழித்தொகை. (கக)

(6) வானுந்நிலனும்முதலீறில்வரம்பில்பூத
மேனின்றுகிழ்காறும்விரிந்தனவீழ்வபோலத்
தானுந்தனதம்முனுமல்லதும்மைஞாலத்
தூனும்முயிரும்முடையார்களுடைந்தொதுங்க.

(இ - ள்.) வானும் நிலனுமுதல் ஈறில்வரம்பில் பூதம் மேல்நின்று கீழ்காறும் விரிந்தனவீழ்வபோல-வான்முதல் நிலமிறுதியாகக் கிடந்த அளவில்லாத ஐம்பெரும்பூதங்களும் மேலிருந்து கீழ்வாயும் வீழ்வனபோல, தானும் தனதம்முனுமல்லது-தானுந்தன் முன்னோனுமல்லாது, மும்மைஞாலத்து ஊனும் உயிரும் உடையார்கள்-மூன்றுலகத்துமுள்ள உடலு முயிருமுடையார்கள், உடைந்தொதுங்க-வருந்திவிலகிப்போகவும்.—

ஐம்பெரும் பூதத்துள்வானின்று ஏனைப் பூதங்கடோன்றலினதனை முன்னும், அவற்றிற்கடை நின்றது நிலமாதலி னதனை யிற்றினுங்கூறினார். இதுசிருட்டிமுறை. ஊனுமுயிருமுடையாரெனச்சிறப்புடைஉயர்திணையைக் கூறலின் அஃறிணையுமடங்கிற்று. ஊன் ஆகுபெயர். உம்மை எண். (கஉ0)

(7) புவிப்பாவைபரங்கெடப்போருவந்தோரையெல்லா
மவிப்பானுமவித்தவராக்கையையண்டமுற்றக்
குவிப்பானுமெனக்கொருகோனினைக்கொற்றமௌலி
கவிப்பானுநின்றேனிதுகாக்குநர்காமினென்றான்.

(இ - ள்.) போருவந்தோரை யெல்லாம் - போர்விரும்பினாரை யெல்லாம், புவிப்பாவை பரங்கெட - நிலமடந்தை பாரமொழிய, அவிப்பானும் - அழிப்பானும், அவர் ஆக்கையை யவித்து - அவர் உடம்பைக்கெடுத்து, அண்டம் முற்றக்குவிப்பானும் - உலகமுழுதும் குவிக்கின்றானும், எனக்கொரு கோனினை - எனக்கொப்பற்ற இறைவனை, கொற்றமௌலி - வெற்றித்திருமுடியை, கவிப்பானு நின்றேன் - சூட்டுவோனுமாகி நின்றேன், இது காக்குநர்காமி னென்றான்-இதைத்தடுப்பார் தடுமினென்றனன்.—

தான் ஸ்ரீராமனையல்லது அறியாமையின் எனக்கொரு கோனினையென்றார். யாக்கை யென்றது மரீஇயது. அரசர் மாலையுள் வருவதோர் முடியாதலிற் கொற்ற மௌலியென்றதென்க. உம்மை எண். காக்குநர்காமினென்றது முன்னிலையிற் படர்க்கைவந்த இடவழுவமைதி. (கஉக)

(8) விண்ணாட்டவர்மண்ணவர்விஞ்சையர்நாகர்மற்று
மெண்ணாட்டவர்யாவருநிற்கவொர்மூவராகி
மண்ணாட்டுநர்காட்டுநர்வீட்டுநர்வந்தபோதும்
பெண்ணாட்டமொட்டேனினிப்பேருலகத்துளென்னா.

(இ - ள்.) விண்ணாட்டவர் மண்ணவர் விஞ்சையர் நாகர் மற்றும் எண்ணாட்டவர் யாவருநிற்க - விண்ணுலகத்தவர் மண்ணுலகத்தவர் வித்தியாதரவுலகத்தவர் நாகருலகத்தவர் மற்றுமெண்ணத்தக்க உலகத்தவர் வறிதேகிடப்ப, ஒர்மூவராகி மண்ணாட்டுநர்காட்டுநர்வீட்டுநர்வந்தபோதும்-ஒருமும்மைப்பெருந்தேவராய் விதிப்பாரும் திதிப்பாரு மழிப்பாரு மாவாராய் வந்தபோதும், இனிப்பேருலகத்தில் பெண்ணாட்டமொட்டேன் - இனிப்பெரிதாகிய வுலகத்தின்கண் பெண்ணென்ற நாட்டத்தைவையேன், என்னா-என்று.—

மற்று மெண்ணாட்டவரென்றது கிம்புருடர் முதலிய வுலகத்தவரை. ஒட்டேனென்றது எதிர்மறை வினை, இது எதிர்காலமல்லது ஏனைக்காலங்களில் வாராமை காண்க. மற்று மென்றது எதிரது தழீஇயது. யாவருமென்றது முற்று. போது மென்ற உம்மை உயர்வுசிறப்பு. (கஉஉ)

(9) காலைக்கதிரோனடுவுற்றதோர்வெம்மைகாட்டி
ஞாலத்தவர்கோமகனந்நகரத்துநாப்பண்
மாலைச்சிகரத்தனிமந்தரமேருமுந்தை
வேலைத்திரிகின்றதுபோற்றிரிகின்றவேலை.

(இ - ள்.) ஞாலத்தவர்கோமகன்-உலகத்தவர்க் கரசனாகிய தசரதகுமாரன், காலைக்கதிரோன் நடுவுற்றதோர் வெம்மை காட்டி - காலையிற்றோன்றுஞ்சூரியன்உச்சியில்வருங்கொடுமையைக்காட்டி, அ நகரத்து நாப்பண்-அந்நகரத்து நடுவில், மாலை சிகரம் தனி மந்தரமேரு - சிகரமாகிய வரிசையையுடைய ஒப்பற்ற மேருமலை, முந்தை வேலைதிரிகின்றதுபோல் - முற்காலத்திற் கடலிற் றிரிவதுபோல, திரிகின்றவேலை - திரிகின்றபோது.—எ-று.

மந்தரமேரு என்றார் மந்தரவரை மேருமலையின் சிகரத்தொன்றாதலின். வேலை-ஆகுபெயர். வெம்மையின் கொடுமை விளக்க கதிரோனடுவுற்றமைக் கெடுத்துக்காட்டினார். இவ்வொன்பது செய்யுளானும்தமையன் கானேகல் கேட்டஇளையோன் வருந்தினமையுணர்த்தப் பட்டது. (கஉ௩)

வேற்றுக்கொடியாள்விளைவித்தவினைக்குவிம்மித்
தேற்றத்தெளியாதயர்சிற்றவைபாலிருந்தான்
ஆற்றற்றுணைத்தம்பிதன்விற்புயலண்டகோளங்
கீற்றொத்துடையப்படுநாணுருமேறுகேட்டான்.

(இ - ள்.) வேறு கொடியாள் - வேறாகிய கொடியளாகிய கைகேசி, விளைவித்த வினைக்குவிம்மி - செய்வித்தசெயற்குவருந்தி, தேற்றதெளியாது- தேற்றவுந்தெளியாது, அயர்சிற்றவைபாலிருந்தான் - வருந்திய சிற்றன்னையாகிய சுமித்திரையிடத்திருந்த சீராமன், ஆற்றல் துணைதம்பிதன் விற்புயல்- வன்மையையுடைய துணைவனாகிய தம்பி இலக்குவனுடைய வில்லாகிய மேகம், அண்டகோளம் கீற்றொத்து உடையப்படும் - அண்டகோளகைகீற்றையொத்துடையப்படும், நாணுருமேறு கேட்டான் - நாணாகிய வோசையைக் கேட்டனன். —

சிற்றவை - சுமித்திரனை, நாணோசையுரு மேறுபோலொலித்தலின் அதனையே யுவமை கூறினார். கொடுமையினிவளொப்பவரிலராகலின் 'வேற்றுக்கொடியாள்' என்றார். (கஉ௪)

வீறாக்கியபொற்கலன்வில்லிடவாரமின்ன
மாறாத்தனிச்சொற்றுளிமாரிவழங்கிவந்தான்
காறாக்கநிமிர்ந்துபுகைந்துகனன்றுபொங்கும்
ஆறாக்கனலாற்றுமோரஞ்சனமேகமென்ன.

(இ - ள்.) வீறுக்கிய பொற்கலன்வில்லிட - பெருமையாகிய பொன்னணி ஒளிசெய்ய, ஆரமின்ன - முத்துமாலை ஒளிசெய்ய, கால்தாக்க - காற்று மோத, நிமிர்ந்துபுகைந்து - ஓங்கிப்புகைபரந்து, கனன்று பொங்கும் - மிகக் கோபிக்கும், ஆறுக்கனல் ஆற்றும்-தணியாத நெருப்பையவிக்கும், ஓரஞ்சன மேகமென்ன - ஒருகரியமேகம்போல, மாறுத தனிச்சொற்றுளிமாரி - மாறுபடுதலில்லாத ஒப்பற்றசொல்லாகியமழைத்துளியை, வழங்கிவந்தான்-பெய்து வந்தனன்.—

தம்பி சீற்றந்தணிப்பான்பொருட்டு வருகின்றமையின் அஞ்சனமேகமென்ன வென்றுவமை கூறினர். (கஉ௫)

(2) மின்னொத்தசீற்றக்கனல்விட்டுவிளங்கநின்ற
பொன்னொத்தமேனிப்புயலொத்தடக்கையானை
என்னத்தவென்னீயிமையோரைமுனிந்திலாதாய்
சன்னத்தனுகித்தனுவேந்துதற்கேதுவென்றான்.

(இ - ள்.) மின் ஒத்த சீற்றம் கனல் விட்டுவிளங்க - மின்போன்றகோபத்தீவிட்டுப் பிரகாசிக்க, நின்ற பொன் ஒத்தமேனி - நின்ற பொன்போன்ற மேனியையும், புயலொத்த தடக்கையானை - மேகம்போன்ற விசாலமாகிய கையையுமுடையானை, என் அத்த-என் அப்ப, என் நீஇமையோரை முனிந்திலாதாய் - யாதுநீ இமையளவுபோதும் கோபமடையாதாய், சன்னத்தனுகி-போர்க்குமுயன்றவனுகி, தனுவேந்துதற்கு ஏதுஎன்றான்-வில்லேந்துதற்குக் காரணமென்னென்றனன்.

சீராமனைக் கண்டாங்குச்சினந்தவிர்ந்தானுகலின் 'மின்னொத்த சீற்றக் கனல்விட்டு' என்றும், அவன் திருமேனிபொன்னொத்தலின் 'பொன்னொத்த மேனி' என்றும், ஈகையையுடையனுகலின் 'புயலொத்ததடக்கையானை' என்றும், அச்சினந்தவிர்தற்கு அவனை 'என்னத்த' என்றும், கணமுஞ்சின முடையையல்லையென்பார் 'இமையோரை - னிந்திலாதாய்' என்றுங்கூறினர். இங்ஙனங்கூறுது, 'இமையோரை' என ...ற்குத்தேவரைக்கோபியாதா'யெனக் கொண்டுஅவர்காரணமாகத் திருவவதரித்த லினங்ஙனங் கூறியதாகவிரிப்பாருமுளர்; அற்றேல் அவன் கோபியாமை அதற்குக் காரணமாகாமையிற் பொருந்தாமையறிக. இவ்விரண்டு செய்யுளானும் சீராமன் இளையவனை யடைந்து நீசன்னத்தனுகித் தனுவேந்தவேது யாதென்பதுணர்த்தப்பட்டது.

(1) மெய்மையைச்சிதைவித்துநின்மெய்ம்முறைநீத்தநெஞ்சம்
மையிற்கரியாளெதிர்நின்னைநன்மௌலிசூட்டல்
செய்யக்கருதித்தடைசெய்குநர்தேவரேனுந்
துய்மைச்சுடுவெங்கனலிற் சுடுவான்றுணிந்தேன்.

(இ - ள்.) மெய்மையை சிதைவித்து - மெய்மையக்கெடுப்பித்து, நின்மெய்ம்முறை நீத்தநெஞ்சம் - மெய்யின்முறைமையை நீங்கியமனம், மையிற்கரியாளை

திர் - மையினுங்கரிய மனத்தளாகிய கைகேசியெதிர், நின்னை நன்மௌலி சூட்டல் செய்யக்கருதி - நின்னை நன்மையாகிய முடிபுனைவித்தல் செய்ய நினைத்து, தடைசெய்குநர் தேவரேனும் - தடைப்படுத்துவார் தேவரேயாயினும், துய்யைச்சுடு வெங்கனலின் - பஞ்சின் றொடர் நுனியைச் சுடுகின்ற கொடிய தீப்போல, சுடுவான் துணிந்தேன்-சுடத்துணிந்தனன்.—

முடிபுனைதற் கெண்ணியதைக் கெடுத்தலின் 'மெய்யைச்சிதைவித்து' என்றும், அரசர்மாலையுள்வருபவனாகலின் 'நின்மெய்ம்முறை நீத்த' என்றுங் கூறினர். மௌலிசூட்டல் தேவர் தடைசெய்குநரேனும் துய்யைச்சுடுதல் கனற்கெண்மை போன்று நானவரைவேறல் பெரிதன்றென்பதை உவமைமுகத்தாற் காட்டியதென்க. துய்யென்பதுபஞ்சின்றொடர்நுனி. (கஉஎ)

(2) வலக்கார்முகமென்கையதாகவவ்வானுளோரும்
விலக்காரவர்வந்துவிலக்கினுமென்கைவாளிக்
கிலக்காவெரிவித்துலகேழினோடேழுமன்னர்
குலக்காவலுமின்றுனக்கியான்றரக்கோடியென்றான்.

(இ - ள்.) வலம் கார்முகமென்கையதாக - ஆற்றலையுடைய வில்லென் கையினுள்ளதாக, அவ்வானுளோரும் விலக்கார்-அத்தேவரும் தடுக்கார், அவர் வந்து விலக்கினுமென்கைவாளிக் கிலக்கா வெரிவித்து-அவர்வந்து தடுக்கினுமென்சிறுவாளிக்கிலக்காகத்தீத்து, உலகேழினோடேழும் - உலகம் பதினான்கும், மன்னர்குலக்காவலும் - அரசர் சிறந்த காவற்றொழின்மையும், இன்று உனக்கு யான் தரகோடிஎன்றான் - இற்றைக்கியானளிக்கக் கொள்ளென்றனன்.—எ-று.

வலக்கார் முகமென்றது இந்திரசித்தைவெல்லும் வில்லாதலினென்க. கைவாளியென்றதற்குச்சிறியதென்பதன்றிக்கையிலுள்ளவாளியெனினுமாம். வானுளோரும் என்ற உம்மை உயர்வு சிறப்பு. 'உலகேழினோடேழ்' என்றதுமேல் கீழினுள்ள உலகங்களை. இவ்விரண்டுசெய்யுளானும் ஸ்ரீராமனுக்கு இளையவனுரைத்தமையுணர்த்தப்பட்டது. (கஉஅ)

இளையானிதுகூறவிராமனியைந்தநீதி
வளையாவருநன்னெறிநின்னறிவாகுமன்றே
உளையாவறம்வற்றிடவூழ்வழுவுற்றசீற்றம்
விளையாதநிலத்துனக்கெங்கண்விளைந்ததென்றான்.

(இ - ள்.) இளையானிதுகூற-இளையவனிதுகூறநிற்ப, ஸ்ரீராமன் இயைந்த நீதிவளையாவரும் நன்னெறி நின்னறிவாகுமன்றே - ஸ்ரீராமன் பொருந்திய நீதிகெடாமல்வரு நன்மார்க்க நின்னறிவேயாம், உளையாவறம்வற்றிட - கெடாததருமமழிய, ஊழ்வழுவுற்ற சீற்றம்விளையாத நிலத்து - முறைமைவ

மூவாகாதசினம்தோன்றாதநிலத்திடை,எங்கண்விளைந்ததென்றான்-எவ்வண்ணந் தோன்றியதென்றனன்.—எ-று.

'இதுகூற' என்றதுநினக்கு மவுசூலிட்டக் கருதுதலைத்தேவர் தடுக்கினு மென்கைவாளியாற்கொன்றுனக் கரசுதருவேனென்பதனை. நின்னறிவென்பது மறையொழுக்க மென்பார் 'இயைந்த நீதிவிளையாவருநன்னெறி நின்னறி' வென்றார். இதனால் நினக்குச்சினம் வருவானே னென்றிளையவனைக்கேட்ட துணர்த்தப்பட்டது. (கஉகூ)

(1) நீண்டானதுரைத்தலுநித்திலந்தோற்கநக்குச்
சேண்டான்றொடர்மாநிலநின்னதென்றுந்தைசெப்பப்
பூண்டாய்பகையாலிழந்தேவனம்போதியென்றால்
யாண்டோவடியேற்கினிச்சீற்றமடுப்பதென்றான்.

(இ - ள்.) நீண்டானதுரைத்தலும் - சிராமனது செப்பலும், நித்திலந்தோற்கநக்கு சேண்தொடர்மாநிலம் நின்னதென்று உந்தைசெப்ப பூண்டாய் - முத்தந்தோல்வியெய்தச் சிரித்துச் சேய்மைதொடர்ந்த பெருநிலமுன்னதென்று உன்றாதைகூறமேற் கொண்டனை, பகையால்இழந்தேவனம்போதியென்றால் - பகைமையாலதனை யொழிந்து காடுசெல்கின்றாயெனின், அடியேற்கினிச் சீற்றமடுப்பது யாண்டோ என்றான் - அடியேனுக்கினிக் கோபமுளதாவது எவ்விடத்தோ என்றனன்.—எ-று.

அதுவென்பது 'ஊழ்வழுவுற்ற சீற்றம்விளையாத நிலத்துனக்கெங்கண் விளைந்த' தென்பதனை. சொன்னிலைதவறினமையா னவனெந்தையாகானென்பதற்'குந்தைசெப்ப'என்றான். நீண்டானென்றது திரிவிக்கிரமனென்பதை.

(2) நின்கட்பரிவில்லவர்நீள்வனத்துன்னைநீக்கப்
புன்கட்பொறியாக்கைபொறுத்துயிர்போற்றுகேனோ
என்கட்புலமுன்னுனக்கீந்துவைத்தில்லையென்ற
வன்கட்புலந்தாங்கியமன்னவன்காண்கொலென்றான்.

(இ - ள்.) நின்கண்பரிவில்லவர் - நின்னிடையன்பிலாதார், நீள்வனத்துன்னை நீக்க-நீண்டகானிடைநின்னையனுப்ப,புன்கண்பொறியாக்கைபொறுத்து - அற்பத்தன்மையுடைய பொறிகளையுடைய தேகந்தாங்கி, உயிர்போற்றுகேனோ - உயிரைக்காப்பேனோ, என்கட்புலமுன் - என்கண்ணுக்கெதிர், உனக்கீந்துவைத்தில்லை யென்ற - உனக்கரசளித்துப்பின்னில்லை யென்ற, வன்கட்புலந்தாங்கிய மன்னவன்காண் கொலென்றான் - வன்கண்மை யுடையகட்புலனைப் பெற்றமன்னவன் காணென்றனன்.—

நின்கட்பரிவில்லவர் நீள்வனத்துன்னை நீக்க அதுகேட்டியான் பொறே னென்பார் 'புன்கட்பொறியாக்கை பொறுத்துயிர் போற்றுகேனோ' என்று கூறினார். இவ்விரண்டு செய்யுளானும் இளையவன் விடையளித்தமையுணர்த்தப்பட்டது. (கருக)

(1) பின்குற்றமன்னும்பயக்கும்மரசென்றல்பேணேன்
முன்கொற்றமன்னன்முடிகொள்கெனக்கொள்ளமூண்ட
தென்குற்றமன்றேவிகன்மன்னவன்குற்றம்யாதோ
மின்குற்றொளிரும்வெயிநீக்கொடமைந்தவேலோய்.

(இ - ள்.) மின்குற்றொளிரும் வெயிநீக்கொடமைந்தவேலோய் - மின் பதித்து விளங்கும் வெயிலின்ஒளியொடு அமைந்தவேலையுடையானே, பின் குற்றம் அரசுமன்னும் பயக்குமென்றல் பேணேன் - பின்னேபிழை அரசுமி குதியும் பயக்குமென்பதைவிரும்பாதேன், முன்கொற்றமன்னன்முடிகொள் க என - முன்னேவெற்றியையுடைய அரசன்முடிபுனைந்துகொள்க என - கொள்ளமூண்டது என்குற்றமன்றே - கொண்டதனால் மூண்டது என் பிழையேயன்றே, இகல்மன்னவன்குற்றம்யாதோ-வலிமையையுடைய அர சன்குற்றம்யாதோ.—

அரசன்சொல்ல மேற்கொண்ட தென்குற்றமல்லது அவன் மேற்கோ டல் அறமன்றென்பார் 'என்குற்றமன்றேவிகன் மன்னவன்குற்றம் யா தோ' வென்றார். (கருஉ)

(2) நதியின்பிழையன்றுநறும்புனலின்மையற்றே
பதியின்பிழையன்றுபயந்துநமைப்புரந்தாள்
மதியின்பிழையன்றுமகன்பிழையன்றுமைந்த
விதியின்பிழைநீயிதற்கென்கொல்வெகுண்டதென்றான்.

(இ - ள்.) நறும்புனலின்மை நதியின்பிழையன்று - நறும்புனலில்லா மை ஆற்றின்குற்றமன்று, அற்றேபதியின்பிழையன்று-அத்தன்மையாகவே அரசன்குற்றமன்று, பயந்து நமைப்புரந்தாள் மதியின்பிழையன்று - பெற் றெடுத்து நம்மைக்காத்தவள் அறிவின்குற்றமன்று, மகன்பிழையன்று-பரத ன்குற்றமன்று, மைந்த - இளையவனே, விதியின்பிழை - விதியின்குற்றம், நீ இதற்கென்கொல் வெகுண்டதென்றான் - நீ இதற்கென்ன காரணஞ் சினங்கொண்டதென்றனன்.—எ-று.

ஊழைவெல்லுதல் எவ்வகை யாற்றலுடையாரானுங் கூடாமையின் 'விதியின்பிழை நீ இதெற்கென் கொல்வெகுண்டது' என்று கூறினார். இவ் விரண்டு செய்யுளானும் சீராமன் அரசன் முதலியோர்பாற் பிழைகூறலாகா தென்கதுணர்த்தப்பட்டது. (கருரு)

உதிக்கும்முலையுள்ளுறுதீயெனவுதைபொங்கக்
கொதிக்கும்மனமெங்கணமாற்றுவென்கோளிழைத்தாள்
மதிக்கும்மதியாய்முதல்வானவற்கும்வலீஇதாம்
விதிக்கும்விதியாகுமென்விற்றொழில்காண்டியென்றான்.

(இ - ள்.) உதிக்கும்உலையுள்ளுறு தீயென-பருமையாகிய உலையிலுற்ற தீப்போல, கொதிக்கும்மனம்-வருந்தும் மனம், எங்கணம் ஆற்றுவென்-எவ்வ ண்ணம் பொறுப்பேன், கோளிழைத்தாள் - துன்பத்தைச் செய்தகைகேசி,

மதிக்கும்மதியாய் - அறிவுக்கு மறிவாய், முதல்வானவர்க்கும் வலிதாம் - முதன்மையான தேவர்க்கும் வன்மையாம், விதிக்கும் விதியாகும்-விதியினுக்கும் விதியாகும், என்வில்தொழில் காண்டிஎன்றான்-என்வில்லின்தொழிலைக்காணென்றனன்—எ-று.

மனத்துயரை உலையுள்ளுறு தீயோடுவமை கூறினார்- என்விற்றொழில்கூறலரிதென்பான் 'விதிக்கும்விதியாகு' மென்றான். இதனான் இளையவன் என்விற்றொழில் காணென்ப துணர்த்தப்பட்டது. (க௱௪)

(1) ஆய்தந்தவனவ்வுரைகூறலுமையநின்றன்
வாய்தந்தனகூறுதியோமறைதந்தநாவால்
நீதந்ததன்றேநெறியோர்கணிலாததீன்ற
தாய்தந்தையென்றாலவர்மேற்சலிக்கின்றதென்னே.

(இ - ள்.) ஆய்தந்தவன் அவ்வுரைகூறலும் - தாயன்னனாகிய இலக்குவன் அம்மொழிசொல்லலும், ஐயநின்றன்வாய்தந்தன-ஐயனே நின்னுடைய வாயிற்பிறந்தசொற்களை, மறைதந்தநாவால் கூறுதியோ - மறைகளையளித்த நாவினாற்சொல்லுகின்றனையோ, நெறியோர்கண்நிலாதது நீ தந்ததன்றே - நன்னெறியுடையாரிடை நில்லாதது நீ தந்தமையன்றே, ஈன்றதாய்தந்தையென்றால் - ஈன்றதாய்தந்தையரெனின், அவர்மேற்சலிக்கின்றதென்னே - அவரிடைவருந்துவதுயாதோ—

சொல்லப்படாதன சொல்லலான் 'வாய்தந்தன கூறுதியோ' வென்றும், அதுவாயில்வருவனவல்லவென்பதுநோக்கி 'மறைதந்தநாவா'லென்றும், ஒழுக்கம்பிழையாதார்பால் வழங்குஞ்சொற்கணின்னிடைத் தோன்றாமையின் 'நீதந்ததன்றே நெறியோர்கணிலாத'தென்றுங்கூறினார். இலாததெனக்கொண்டுரைப்பினு மமையும். (க௱௫)

(2) நற்றாதையுநீதனிநாயகனீவயிற்றிற்
பெற்றாயுநீயேபிறரில்லைப்பிறர்க்குநல்கக்
கற்றாயிதுகாணுதியின்றெனக்கைமறித்தான்
முற்றாமதியம்மிலைந்தான்முனிந்தானையன்னான்.

(இ - ள்.) முற்றாமதியம் மிலைந்தான்முனிந்தானையன்னான் - இளமதியம்புனைந்தசிவனைப்பகைத்த மாரன்போல்வானாகிய சீராமன், நற்றாதையுநீ - நன்மைபயக்குந்தந்தையு நீ, தனிநாயகனீ - ஒப்பற்றஇறைவனீ, வயிற்றிற்பெற்றாயுநீயே - வயிற்றிடைப்பெற்றதாயுநீயே, பிறர்க்குநல்கக்கற்றாய்-பிறர்க்குணர்த்தக்கற்றுக் கொண்டனை, இது காணுதியின்றெனக்கை மறித்தான்-இதனைக்காணென்றுகையை மறித்தனன்—

அன்பின் மிகுதியான் 'நற்றாதையு நீ நாயகனீபெற்றாயுநீயே' என்றான். பேரழகனாகலானும் கரியகோலத்திருவுருவனாகலானும் 'முற்றாமதியம் மிலைந்தான் முனிந்தானையன்னா' னென்றதென்க. 'கைமறித்தல்' இதனைச்செ

ய்யற்கவெனத்தடுத்தலே. 'பிறர்க்குநல்கக்கற்ருய்' என்றதனுன் நினக்குநல்கக் கற்றிலேயென்பது கருதி. (கறுசு)

(3) வரதன்பகர்வான்வரம்பெற்றவடானிவ்வையஞ்
சரதம்முடையாளவனென்றனித்தாதைசெப்பப்
பரதன்பெறுவானினியான்படைக்கின்றசெல்வம்
விரதம்மிதினல்லதுவேறினியாவதென்ருன்.

(இ - ள்.) வரதன் பகர்வான்-யாவர்க்கும் பேறுதருபவனுகிய சீராமன் கூறுவான், வரம்பெற்றவள்தான் - வரத்தினைப்பெற்றவளாகிய கைகேசியே, இவ்வையம் சரதம் உடையாள் - இவ்வுலகினை யுண்மையாகப் பெற்றுடையாள், அவள் என்தனிதாதை செப்ப - அவள் என்தனித்தந்தை சொல்ல, பரதன் பெறுவான்-பரதன் அடைவான், இனியான் படைக்கின்றசெல்வம் விரதம் - இனியானடைகின்ற செல்வம்வனப்பிரவேசமாகிய பெரியவிரதம், இதினல்லது - இதனினுநல்லது, வேறினியாவதென்ருன்- வேறுயாதென்றனன்—

அல்லதெனக்கொண்டுரைப்பினுமமையும். இதுகவிக்கூற்று-வரதனென்றதுசீராமனே, 'இவ்வாறேவரதனுதித்திட' எனமுற்காண்டத்துங்கூறுதல்காண்க. அரசர் மாலேயிலென்பால் வருமுலகம்வரம்பெற்றமையான் 'வரம்பெற்றவளிவ்வையஞ்சரதம்முடையா'ளென்றும்,அதனுற்பரதன்பெறுதலின்''தனித்தாதைசெப்பப்பரதன்பெறுவா'னென்றும், இனியான் பெறுவது காடாகலின் 'யான்படைக்கின்றசெல்வம்விரத' மென்றம், இதனினுஞ் சிறந்ததொன்றில்லேயென்பதுபட'இதினல்லதுவேறினியாவ' தென்றுங்கூறினுர். தான் தேற்றப்பொருள் படவந்தது. (கறுஎ)

(4) ஆன்ருன்பகர்வான்பினுமையவிவ்வையமையல்
தோன்ருநெறிவாழ்துணைத்தம்பியைப்போர்தொலேத்தோ
சான்ருேர்புகழுந்தவத்தாதையைவாதைகொண்டோ
ஈன்ருளெவன்ருேவினியிக்கதந்தீர்வதென்ருன்.

(இ - ள்.) ஆன்ருன் பகர்வான் - இறைவன்கூறுவான், பினும் ஐயஇவ்வையம் மையல்தோன்ருத நெறிவாழ்துணைதம்பியைப் போர்தொலேத்தோ - பின்னும் ஐயனே இவ்வுலகமயக்கந்தோன்றப் பெருதநெறியில் வாழுந்துணையாகிய தம்பியைப்போரிற்கழித்தோ, சான்ருேர்புகழுந்தவத்தாதையை வாதைகொண்டோ-பெரியோராற் புகழப்படுந்தவத்தினையுடையதந்தையைத்துன்பஞ்செய்தோ,ஈன்ருளெவன்ருே-பெற்றெடுத்தாளேவெற்றிகொண்டோ, இனிஇக்கதந்தீர்வதென்ருன் - இக்கோபமினித்தணிவ தென்றனன். எ-று.

இந்நான்குசெய்யுளானும் சீராமன் நீதிகள் பலகாட்டினமை யுணர்த்தப்பட்டது. (கறுஅ)

செல்லுஞ்சொல்வல்லானெதிர்தம்பியுந்தெவ்வர்சொல்லும்
சொல்லுஞ்சுமங்தேனிருதோளெனச்சோம்பியோங்கும்

கல்லுஞ்சுமந்தேன்கணைப்புட்டிலுங்கட்டமைந்த
வில்லுஞ்சுமக்கப்பிறந்தேன்வெகுண்டென்னையென்றான்.

(இ - ள்.) செல்லுஞ் சொல்வல்லானெதிர்-செல்லாநின்ற சொல்லை வல்லுதலையுடையசீராமன் முன்னர், தம்பியும்-இளையவனும், தெவ்வர் சொல்லுஞ்சொல்லும் சுமந்தேன்-பகைவர்சொல்கின்றசொல்லையுந்தாங்கினேன், இருதோளெனச்சோம்பியோங்கும் கல்லும்சுமந்தேன்-இருதோளென்று கூறும் பயனின்றிக்கிடந்தமலைகளையுந்தாங்கினேன், கணைப்புட்டிலும் கட்டமைந்த வில்லும் சுமக்கபிறந்தேன்-அம்பறாத்தூணியையும் கட்டமைந்த வில்லையுந் தாங்கத்தோன்றினேன், வெகுண்டென்னையென்றான்-சினங்கொண்டென் பயனென்றனன்.—எ-று.

இவன் சொல் செல்லாவிடன் யாண்டுமின்மையின் 'செல்லுஞ்சொல் வல்லா' னென்றதென்க. பிறராற் சீராமன் முடிபுனையும் விதிபெறு தொழிந்தன னென்னப்பட்டமையின் 'தெவ்வர் சொல்லுஞ் சொல்லுஞ்சுமந் தே' னென்றும், தோளும்வில்லு மம்பறாத்தூணியும் வறிதேதாங்கி நின்றமை யான் 'இருதோளெனச்சோம்பியோங்குங் கல்லுஞ்சுமந்தேன் கணைப்புட்டி லுங்கட்டமைந்தவில்லுஞ் சுமக்கப்பிறந்தேன்' என்றும், போர்த்தொழிலெய் தாமையின் 'வெகுண்டென்னையென்றா' னென்றுங் கூறினர். இதனான் இளையவன் வெகுண்டென்பயனென்ப துணர்த்தப்பட்டது. (கரு௧)

(1) நன்சொற்கடந்தாண்டெனைநாளும்வளர்த்ததாதை
தன்சொற்கடந்தெற்கரசாள்வதுதக்கதன்றால்
என்சொற்கடந்தாலுனக்கியாதுளதீனமென்றான்
தென்சொற்கடந்தான் வடசொற்கலைக் கெல்லைதேர்ந்தான்.

(இ - ள்.) வடசொற்கலைக்கெல்லை தேர்ந்தான் - வடமொழிக்கலையி னெல்லையறிந்த சீராமன், நன்சொற்கள்தந்து ஆண்டு எனைநாளும் வளர்த்த தாதைதன் சொல்கடந்து-நன்மொழிகளைகூறிப் பல்லாண்டுகளாக என்னை அங்கு வளர்த்த தாதையாகிய தயரதன் சொல்லைக்கடந்து, எற்கு அரசாள் வது தக்கதன்று - எனக்கு அரசாண்டுவருவது தகுதியன்று, என்சொல்கடந் தால் - என்மொழியைக்கடந்தால், உனக்கு யாதுளதீனமென்றான் - உனக் குப் பெருமிதம்யாது தாழ்வேயாமென்று, தென்சொற்கள்தந்தான்-இன்னு ரைகள் கூறினன்.—

தந்தைசொன் மிக்கதொரு மந்திரமில்லையென்பது மறைநூற்றுணிபாக லின் 'வளர்த்ததாதைதன் சொற்கடந்தாண்டரசாள்வது தக்கதன்று' என்று கூறினர். என்றான் வினையெச்சமுற்று. தென்சொற்கடந்தா னென்பதற்குத் தமிழ்மொழியைக்கடந்தவ னெனவிரிப்பாருமுளர். அற்றேல், 'தென்குரு கூர்ப்புனிதன்கவியோர் பாதத்தின் முன்செல்லுமே தொல்லைமூலப்பரஞ்சு டரே' என்றிவ்வாசிரியர் பிறாண்டுங்கூறியகூற்றுக்கு முரணுகலானும், இறை வன் திரவிடசுருதிக்குப்பின்சேறலானு மஃது பொருந்தாமையறிக. நன்சொற்

கள்மக்கட்குக்கழிபேருவகைபயப்பத் தந்தை தாயர் கூறுஞ்சொற்கள். ஆல் அசை. உம்மை முற்று. வடசொற்களைக்கெல்லைதேர்ந்தா னென்றது மறைகளுக்கும்அளவைகளானுமறுதியிட்டுரைக்கப்படுவானென்பதை. (கசo)

(2) சீற்றந் துறந் தானெ திர் நின் று தெரிந் துசெப்பு
மாற்றந் துறந் தான்மறைநான்கெனவாங்கல்செல்லா
நாற்றெண்டிரைவேலையினம்பிதனுணையாலே
பேற்றந்தொடங்காக்கடலிற்றணிவெய்திநின்றான்.

(இ - ள்.) மறைநான்கென-நான்மறைகளென்று, வாங்கல்செல்லா-கடத்தலரிதான, நம்பிதனுணையால்-இறைவனுணையால், நால்தெண்டிரைவேலையின்-நான்காகிய தெள்ளியஅலைகளையுடையகடலிடை, ஏற்றம்தொடங்காக் கடலின்-பெருக்கமெழாத கடல்போல, சீற்றந்துறந்தான்-சினநீங்கி, எதிர்நின்று -நேர்நின்று, தெரிந்துசெப்பு மாற்றந்துறந்தான்-அறிந்துரைக்குஞ்சொல்லையொழிந்து, தணிவெய்திநின்றான் - அடங்கி நின்றனன்—

இறைவன் ஆணையைமறைநூல் கடப்பதரிதாகலின் 'மறைநான்கென வாங்கல் செல்லா' வென்றதென்க. ஆணையென்பது வடசொற்சிதைவு, இவ்வாறே வட்டம், கண்ணன்முதலாக வருமெனச்சேனவரையர் கூறுதலுங் காண்க. 'நம்பி' யென்றது அயர்வருமமரர்கட் கிறையாகிய தனிமுதலை. துறந்தான் என்பன வினையெச்சமுற்றுகள். (கசக)

(3) அன்னான்றனையையனுமாதியொடந்தமென்று
தன்னாலுமளப்பருந் தானுந் தன்பாங்கர்நின்ற
பொன்மானுரியானுந் தழீஇயெனப்புல்லிப்பின்னைச்
சொன்மாண்புடையன்னைசுமித்திரைகோயில்புக்கான்.

(இ - ள்.) ஐயனும் - சீராமனும், ஆதியொடந்தமென்று - முதலிறுதிகளென்று, தன்னாலுமளப்பருந்தானும் - தன்னாலுமளவையா னளக்கப்படாத தானும், தன்பாங்கர்நின்ற பொன்மானுரியானும் தழீஇயென-தன்னயலின் கணின்றபொன்னிறத்தமா னுரிவையுடைய அரனுந்தழுவினாற்போல, அன்னான்றனைப்புல்லி - அவ்விலக்குவனைத் தழுவிநின்று, பின்னைசொன்மாண்புடைய அன்னைசுமித்திரை கோயில்புக்கான்-பின்னர்ச்சொல்லின்மாட்சிமையுடைய தாயாகிய சுமித்திரைமாளிகையினை யடைந்தனன்—

ஐயனுமென்ற உம்மை இறந்ததுதழீஇயது. தன்னாலும் என்புழிஉம்சாரியை; ஏனையஎண். பொன்மானுரியானென்றதுஅரனை; உடையஎன்னுங்குறிப்புப்பெயரெச்சத் தகரவீறுதொகுக்கப்பட்டது. தன் பெருமையையேதானறியவல்லானன்மையின் 'தன்னாலுமளப்பருந்தானு' மென்றார். தழீஇயென்புழி ஆலீறுதொகுக்கப்பட்டது.பொன்மானுரியானுந்தழீஇ யென்றது *"பிறைதங்குசடையானைவலத்தேவைத்துப் பிரமனைத்தன்னுந்தியிலேதோற்றுவித்து'

* பெரியதிருமொழி - திருப்பதிகம் - உச, செ. கூ.

எனப்பெரியாரும்பணித்தமையானறிக. யாவரையுந்தன்னிடைநட்பாக்கவல்லனென்னுந்தன்பெயர்க்காக்கந்தோன்றச்'சொன்மாண்புடைய'என்றனெதன்க. கோயில் ; இலக்கணப்போலி. (௧௭௨)

(4) கண்டாண்மகனும்மகனுந் தனகண்கள்போல்வார்
தண்டாவனஞ்செல்வதற்கேசமைந்தார்கடம்மைப்
புண்டாங்குநெஞ்சத்தனளாய்ப்படிமேற்புரண்டா
ளுண்டாயதுன்பக்கடற்கெல்லையுணர்ந்திலாதாள்.

(இ - ள்.) தண்டாவனம்செல்வதற்கே - தண்டகவனத்திற் செல்வதற்கே, சமைந்தார்கள்-துணிந்தாரும், மகனும் மகனும்-சீராமனும் இளையவனுமாகிய,தன்கண்கள்போல்வார்தம்மை-தன்கண்கள்போல்வாரை, கண்டாள் - பார்த்து, புண்டாங்குநெஞ்சத்தனளாய்-புண்பட்டநெஞ்சமுடையளாய், உண்டாயதுன்பக்கடற்கெல்லை யுணர்ந்திலாதாள் - அங்குநேர்ந்ததுன்பமாகியகடற்கெல்லை யறியாதாளாகிய சுமித்திரை, படிமேற்புரண்டாள் - நிலத்திற்புரண்டழுதனள்.—எ-று.

கண்டாள்-வினையெச்சமுற்று. தன் மகன் கானேகத் தன்கணவனுயிர் துறப்பதுண்மையாகலானும் அதனினும்துன்பம் வேறின்மையானு'முண்டாயதுன்ப'மென்றதன்றி அதனைக்கடலாகவுமுருவகஞ் செய்தார். ஏகாரம் பிரிநிலை. தண்டகவனமென்றது திரிந்துநின்றது, ஆலிகை என்றாற்போல. இந்நான்கு செய்யுளானும் இளையவன் சினந்தணிந்தமையும் இறைவன் சுமித்திரைமாளிகையை யடைந்தமையு முணர்த்தப்பட்டன. (௧௭௩)

(1) சோர்வாளையோடித்தொழுதேந்தினன்றுன்பமென்னு
மீர்வாளைவாங்கமனந்தேற்றுதற்கேற்றசெய்வான்
போர்வாளரசர்க்கிறை பொய்த்தனனுக்ககில்லேன்
கார்வானெடுங்கானிறைகண்டிஙன்மீள்வனென்றான்.

(இ - ள்.) சோர்வாளை - மனந்தளர்கின்ற சுமித்திரையை, ஓடிதொழுது - ஓடிவணங்கி, ஏந்தினன் - தாங்கிநின்று, துன்பமென்னும் ஈர்வாளை வாங்க - துயரமென்னு மறுக்கும்வாட்படைவாங்க, மனந்தேற்றுதற்கேற்ற செய்வான் - மனந்தெளிதற்குத்தக்க காரியஞ்செய்பவனாகிய சீராமன், போர்வாளரசர்க்கிறை பொய்த்தனன் ஆக்ககில்லேன் - போர்த்தொழிலையுடைய வாட்படையையுடைய அரசர் பெருமானைப் பொய்மொழிந்தவனாகச் செய்ய வலியில்லேன், கார்வானெடுங்கான் - கரியமேகந்தவழ்கின்ற பெருங்கானை, இறைகண்டு இஙன்மீள்வனென்றான் - சிறிதுகண்டு ஈண்டைமீள்வே னென்றனன்—

துயரமனத்தைத் துருவிச்சென்றுவருத்தலின் அதனை வாட்படையாகக் கூறினார். இஙன் என்பதுகுறைந்து நின்றது. ஏந்தினன் - வினையெச்சமுற்று. வயிரம் முதலியன சாதியடையாதலின் ஈர்வாளென்றெடுத் தோதினார். வாளைஎன்புழி ஐ சாரியை. (௧௭௪)

(2) கான்புக்கிடினுங்கடல்புக்கிடினுங்கலிப்பேர்
வான்புக்கிடினுமெனக்கன்னவைமாணயோத்தி
யான்புக்கதொக்குமெனையார்நலிகிற்குமீட்டார்
ஊன்புக்குயிர்புக்குணர்புக்குலையற்கவென்றான்.

(இ - ள்.) யான்கான்புக்கிடினும் - யான் காட்டை யடையினும், கடல்புக்கிடினும் - கடலையடையினும், கலிப்பேர்வான்புக்கிடினும்-ஒலியையும் பெருமிதத்தையுமுடைய வானையடையினும், எனக்கன்னவைமாண் அயோத்திபுக்க தொக்கும் - எனக்கவைமாட்சிமையுடைய அயோத்திநகரத்தை யடைந்த தொக்கும், எனையார்நலிகிற்கு மீட்டார் - யாரேயென்னை வருத்து மியல்பினையுடையார், ஊன்புக்கு உயிர்புக்கு உணர்புக்கு உலையற்க என்றான் - ஊனையடைந்து உயிரினையடைந்து உணர்வினையடைந்து வருந்தற்க என்றனன்—எ-று.

தாய்சொற்கொண்டேகலான் கான் முதலியவனைத்து மெமக்கு அயோத்தியெனவேதோன்றுமென்றானென்க. ஊன் - ஆகுபெயர். முத்திநகரமேழினுஞ்சிறப்புடைமையின் மாணயோத்தியென்றான். புக்கது-வினைப்பெயர். இவ்விரண்டு செய்யுளானுஞ்சீராமன்கான்படரவிடை கேட்டமையுணர்த்தப்பட்டது. (கசரு)

(1) தாயாற்றுகிலாடனையாற்றுகின்றார்கடம்பாற்
றீயாற்றுகிலார்தனிச்சிந்தையினின்றுசெற்ற
நோயாற்றுகில்லாவுயிர்போலநுடங்கிடையார்
மாயாப்பழியாடரவற்கலையேந்திவந்தார்.

(இ - ள்.) தாய் ஆற்றுகிலாடனை - தாயாகியதுன்பந்தணி வெய்தாத சுமித்திரையை, ஆற்றுகின்றார் கடம்பால் - தணிக்குமியல்பையுடைய சீராமலக்குவரிடை, தனிச்சிந்தையினின்று-தனிமையாகிய சிந்தையினின்று, செற்ற நோயாற்றுகில்லா உயிர்போல - சினமாகியநோயைப்பொறாத உயிரினைப்போல, தீயாற்றுகிலார் - தீமையைப்பொறாதாராகிய, நுடங்கிடையார்- துவளுமிடையை யுடையமாதரார், மாயாப்பழியாடர - அழியாதபழியினையுடைய கைகேசிகொடுப்ப, வற்கலையேந்திவந்தார் - மரவுரியையேந்திக் கொண்டுவந்தனர்—

நுடங்கிடையைச்செற்றநோய்யாற்றுகிலாவுயிர்க்குவமைகூறினர். என்றுங்கெடாதபழியை மேற்கொண்டனளாதலான் மாயாப்பழியாளென்றதென்க.

(2) கார்வானமொப்பான்றனைக்காண்டொறுங்காண்டொறும் [போய்
நீராயுகக்கண்ணினுநெஞ்சழிகின்றநீரார்
பேராவிடர்ப்பட்டயலாருறுபீழைகண்டுந்
தீராமனத்தாடரவந்தனசீரமென்றார்.

(இ - ள்.) கார்வானமொப்பான்றனை- கரியமேகவண்ணத்தொருவனை, காண்டொறும் காண்டொறும்போய்-பலமுறைகாண்பொழுதெல்லாம், கண்

ணினும்-கண்ணைப்பார்க்கிலும், நீராய்போயுக-நீராகக்கசிந்துருக, நெஞ்சழிகின்ற நீரார்-மனமழிகின்ற இயல்பினையுடையராய், பேராவிடர்ப்பட்டு-நீங்காததுயரமடைந்து, அயலாருறு பீழைகண்டும் - அயலாரெய்தும் பெருந்துயர் கண்டும், தீராமனத்தாடர - தீமையகலாதசிந்தையளாகிய கைகேசியளிக்க, சீரம்வந்தனவென்றார் - மரவுரிவந்தன என்றனர்—எ-று.

கார்வான மொப்பானெனற்குக் காரையொத்தவனென்புழிப் பிற்கூறலாற்காண்க. இவ்விரண்டு செய்யுளானும் கைகேசிதருமரவுரிபாங்கியர் கொணர்ந்தமையுணர்த்தப்பட்டது. (கசஎ)

வாணித்திலவெண்ணகையார்தரவள்ளறம்பி
யாணர்த்திருநாடிழப்பித்தவரீந்தவெல்லாம்
பூணப்பிறந்தானுநின்றானவைபோர்விலோடுங்
காணப்பிறந்தேனுநின்றேனவைகாட்டுமென்றான்.

(இ - ள்.) வாள்நித்திலம் வெள்நகையார்தர - ஒளியையுடைய முத்தம் போன்றவெள்ளிய பற்களையுடைய மாதரார்கொடுவந்தளிப்ப, வள்ளல்தம்பி-வள்ளியோனாகிய சீராமனுக்கிளையவன், யாணர்த்திருநாடு இழப்பித்தவர் - அழகிய கோசலநாட்டை இழக்கச்செய்த கைகேசி, ஈந்தஎல்லாம் பூணபிறந்தானுநின்றான் - அணியப்பிறந்த சீராமனும் நின்று கொண்டிருக்கின்றனன், அவை போர்வில்லோடும் - அவற்றைப் போர்த்தொழிலையுடைய வில்லையுடையானாய், காணப்பிறந்தேனு நின்றேன்-காணப்பிறந்தயானுநிற்கின்றேன், அவைகாட்டுமென்றான் - அவற்றைக் காட்டுமென்றனன்—எ-று.

நாடிழப்பித்தவரீந்தமை பூணற்குரிமையுடையனாகலின் 'பூணப்பிறந்தானுநின்றா' னென்றும், கையில்வில்லிருந்தும் எனக்குப் பயனின்றென்பார் 'போர்விலோடும் காணப்பிறந்தேனு நின்றே' னென்றுங்கூறினார். இதனான் இளையவன் மரவுரியைக்காட்டு மென்பதுணர்த்தப்பட்டது. (கசஅ)

அன்னானவர்தந்தனவாதரத்தோடுமேந்தி
இன்னாவிடர்தீர்ந்துடனேகெனவெம்பிராட்டி
சொன்னாலதுவே துணையாமெனத்தூயநங்கை
பொன்னாரடிமேற்பணிந்தானவளும்புகன்றாள்.

(இ - ள்) அன்னான் - அவ்விளையவன், அவர்தந்தன ஆதரத்தோடு மேந்தி - அம்மாதரார் கொடுவந்தனவாகிய மரவுரிகளையன்போடும்பெற்று, இன்னா இடர்தீர்ந்து-கொடிதாகிய துயரநீங்கி, உடனேகென-உடன்போகென்று, எம்பிராட்டி-எம்மிறைவியாகிய நீ, சொன்னாலதுவே துணையாமென-கூறின் அதுவேவழித்துணையாமென்று, தூயநங்கை பொன்னாரடிமேல் பணிந்தான்-சிந்தைதூயளாகிய சுமித்திரை பொன்போன்றபாதங்களில்விழுந்து வணங்கினன், அவளும்புகன்றாள்-அவளுஞ்சொல்லலாயினள்.—எ-று.

தமையனணியப்பெறு வனவாதலான் 'ஆதரத்தோடுமேந்தி' யென்றான். இதனான் இளையவன் தன்றாயைவிடைகேட்டமை யுணர்த்தப்பட்டது.

(1) ஆகாததன்றானுனக்கவ்வனமிவ்வயோத்தி
மாகாதலிராமனம்மன்னவன்வையமீந்தும்
போகாவுயிர்த்தாயர்நம்பூங்குழற்சீதையென்றே
ஏகாயினியிவ்வயினிற்றலுமேதமென்றாள்.

(இ-ள்.) உனக்கவ்வனம் ஆகாததன்று இவ்வயோத்தி என்று-உனக்குக் கானகம் ஆகாதிருப்பதன்று இவ்வயோத்தியென்றும், மாகாதல் இராமன் நம் மன்னவன் என்று - பெருங்காதலையுடைய சீராமன் நம்மரசனென்றும், வையமீந்தும் - உலகினளித்தும், போகாஉயிர்த்தாயர் நம்பூங்குழற் சீதையென்று - போகாத உயிர்போன்றதாயர் நமது பூவைமுடித்த குழலையுடைய சனகி யென்றும், ஏகாய் - செல்லாய், இனி இவ்வயினிற்றலுமேத மென்றாள் - இனி இவ்விடையிருப்பதுந் துன்பமென்றனள்—

கானகம் அயோத்தியென்றும், சீராமனை நம்மரசனென்றும், சனகியை உயிர்போன்ற தாயரென்றுமேகாயெனக்கூட்டுக. 'இனி இவ்வயினிற்றலு மேதமென்றாள்' ளென்றதனான் அக்கானத்துறைதல்கழிபேருவகைபயப்பதென்பது தானேபோதரும். இனிவடநூலாருரைக்கியைய அயோத்தியென்றதற்குத்தாமரைக் கண்ணனுலகென்றும், மாகாதலிராமனென்பதற்குத் திருமாமகள் விழைதலையுடைய சீராமன், அம்மன்னவனென்றும்-அகாரவாச்சியனாகியஇறைவனென்றும், வையமீந்தும்போகு ஆ உயிர்த்தாயர்எனக்கொண்டு வையமளித்தும் உடன்போகின்ற உயிர்க்குத்தாயாகிய திருமாமகளென்றும் வேறுமொரு பொருள்கொள்க. என்று-எண்ணிடைச்சொல்; இதனைக்கடைநிலைத் தீவகமாகக்கொண்டு அயோத்தி, மன்னவனென்புழியுமொட்டுக. ஏகாரம்பிரிநிலை; ஆல் - அசைநிலை. அவ்வனமென்றது தண்டகவனத்தை. (கஞ0)

(2) பின்னும்பகர்வாண்மகனேயிவன்பின்செல்தம்பி
என்னும்படியன்றடியாரினினேவல்செய்தி
மன்னுந்நகர்க்கேயிவன்வந்திடின்வாவதன்றேல்
முன்னும்முடியென்றனள்பான்முலைசோரநின்றாள்.

(இ - ள்.) பின்னும்பகர்வாள் - மீட்டுங்கூறுவாள், மகனே இவன்பின் செல் - மகனே இவன்பின்போ, தம்பியென்னும்படியன்று - தம்பியென்று சொல்லும்வகையன்று, அடியாரினின் ஏவல்செய்தி - அடியாரையொப்பக் குற்றேவல் செய், மன் உம்நகர்க்கே இவன்வந்திடின்வா - நிலைபேறுடைய உம்முடைய நகரத்துக்கே இவன் வரின்வா, அது அன்றேல் - அஃதல்லதாயின், முன்னம்முடி யென்றனள் - முன்னமுடிவெய்து என்று கூறினள், பான்முலை சோரநின்றாள் - பால்முலையிற் சொரியநின்ற சுமித்திரை.—

பின்னும்வினைமாற்றுப் பொருள்தருமிடைச்சொல். பான்முலைசோரல் மக்கள்மாட்டுத் தாயர்வைத்த காதலின்பிகுதி. அருவப்பொருளாகிய அன்

பைக்காட்டுதற்கு 'மூலைப்பால்சோரல்' குறியாகலினங்ஙனங் கூறினர். இவ்வாறு * "புன்கணீர்பூசறரு" மென்புழிப் பரிமேலழகர்கூறலானுமுணர்க. அரையன்மகனெனக் கருதாது நீ குற்றேவல்செய்வதே நின்பெயர்க் குரிமையென்பாள் 'தம்பியென்னும்படி யன்றடியாரினி னேவல்செய்தி' யென்றும், இவன் நகர்நீங்கிச்செல்வானேற்கொடும்போர்க்கிலக்காவன், அவனைப்போர்க்களத்து விட்டுக்கழிதனினக்கறனன் றென்பாள் 'இவன்வந்திடின்வா' என்றும், இவனப்போரிடையே காலிட்டுவருந்துங்காலையினீ முனைந்து முடிவதே அயர்வருமமரர்களெய்து நிரதிசயவின்பவீடென்பாள் 'முன்னமுடி' யென்றுங் கூறினர். மன்னுந் நகரென்றது அயோத்தியை, அது மனுத்தொடக்கமாகிய அரசராண்டு வந்தநகரமாதலினென்க. 'இவன்பின் செல்' என்றாள்தமியனுய்ச்செல்லுந்தனையனுடுபின் செல்வாரின்மை நோக்கி. இவ்விரண்டுசெய்யுளானும் சுமித்திரை இளையவனுக்கு விடையளித்தமை யுணர்த்தப்பட்டது. (கருக)

இருவருந்தொழுதனரிரண்டுகன்றொரீஇ
வெருவருமாவினிற்றாயும்விம்மினள்
பொருவருங்குமரரும்போயினர்புறந்
திருவரைத்துகிலொரீஇச்சீரைசாத்தியே.

(இ - ள்.) இருவரும் - சீராமனும் இளையவனும், தொழுதனர் - வணங்கினின்றனர், இரண்டு கன்றொரீஇ - இரண்டுகன்றுகளை நீங்கி, வெருவரும் ஆவினின்தாயும் விம்மினள் - பயந்து நிற்கும் பசுவைப்போலத்தாயு மழுதனள்; பொருவருங்குமரரும் - தமக்குவமையில்லாத மைந்தரும், திருவரைதுகில்ஒரீஇ சீரைசாத்திபுறம்போயினர் - அழகியஅரையிலுடுத்த ஆடைகளைக் களைந்து மரவுரியையுடுத்துப் புறத்திற் சென்றனர்—எ-று.

இருவருமென்ற உம்மைமுற்று; இருவரும் தாயைநீங்குவதனைக் கன்றிழந்த ஆவினுக்குவமை முகத்தாற்கூறினர். ஈடுமெடுப்பு மில்லவராகலின் 'பொருவருங்குமர' ரென்றார். இதனற் சீராமனும் இளையவனு மரவுரியுடுத்துச் சென்றமையுணர்த்தப்பட்டது. (கருஉ)

(1) தான்புனைசீரையைத்தம்பிசாத்திடத்
தேன்புனைதெரியலான்செய்கைநோக்கினன்
வான்புனையிசையினய்மறுக்கிலாதுநீ
யான்புகல்வனையதோருறுதிகேளென.

(இ - ள்.) தான்புனை சீரையைதம்பிசாத்திட - தான் உடுத்த மரவுரியைத்தம்பியுடுத்திக்கொள்ள, தேன்புனைதெரியலான் செய்கைநோக்கினன் - மதுத்தங்கிய மாலையையுடையானுகிய இளையவன் செய்கையைக்கண்ணுற்று, வான்புனையிசையினய் - வானையலங்கரிக்கும் புகழினையுடையானே, நீ மறுக்கிலாதுயான் புகல்வனைய தோருறுதிகேளென - நீமறுக்காது யான் சொல்வதாகிய வுறுதிமொழியைச் செவிகொடென்று—

இதுகாறும் நின்னொத்தபின் பிறந்தாரைக்காணேன், நீசெய்வதுயாவரும் புகழ்ந்து கூறுவதென்பார் 'வான்புனையிசையின' யென்றார். (கருரு)

* திருக்குறள்-செ-எக.

(2) அன்னையரனைவருமாழிவேந்தனு
முன்னையரல்லர்வெந்துயரின்மூழ்கினூர்
என்னையும்பிரிந்தனரிடருறுவகை
உன்னைநீயென்பொருட்டுதவுவாயென்றான்.

(இ- ள்.) அன்னையரனைவரும் - தாய்மார்யாரும், ஆழிவேந்தனும் - சக்கிரவர்த்தியும், முன்னையரல்லர் - முன்னிலைமையரல்லர், வெந்துயரின் மூழ்கினூர் - கொடியதுன்பத்தழுந்தினர், என்னையும்பிரிந்தனர் - என்னையும்பிரிந்திருக்கின்றனர், இடருறுவகை உன்னைநீ யென்பொருட்டுதவுவா யென்றான்-அவர் துன்பத்தழுந்தாவண்ணம் உன்னைநீ யெனக்காகவுதவு வாயென்றனன்—எ-று.

அன்னையரனைவருமென்றது கோசலைமுதலாய பட்ட மகிஷிகள் மூவரேயன்றி அறுபதினுயிரமாதரை. உன்னைநீ யென்பொருட்டுதவு கென்றது அவர்க்குத்துணையாக விருவென்பதை. இடருறுவகை என்றது தன்னைப்பிரிவதனுலாய துன்பத்தை. இவ்விரண்டு செய்யுளானும் சீராமன் இளையவனை அயோத்தியிலிருவென்ப துணர்த்தப்பட்டது. (கருச)

(1) ஆண்டகையம்மொழிபகரவன்பனுந்
தூண்டகுதிரள்புயந்துளங்கத்துண்ணெனு
மீண்டதோருயிரிடைவிம்மவிம்முவான்
ஈண்டுனக்கடியனேன்பிழைத்ததியாதென்றான்.

(இ - ள்.) ஆண்டகை - ஆணிற்சிறந்த சீராமன், அம்மொழிபகர - அம்மொழிகூற, அன்பனும் தூண்டகுதிரள்புயம்துளங்க - அன்புடையனுகிய இளையவனும் தூண்போலும் திரண்டதோள்நடுங்க, துண்ணெனு - அச்சமெய்தி, மீண்டதோருயிரிடை விம்மவிம்முவான் - திரும்பிவந்ததாகியதோருயிர் இடையேகலங்க அழுபவன், ஈண்டுஉனக்கு அடியனேன்பிழைத்தது - இற்றைக்காலத்து நின்னிடையான் பிழைசெய்தது, யாதென்றான் - யாதென்றனன்—

ஆண்டகையெனற்குமேற்கூறிணும். ஆண்டகை-அன்மொழித்தொகை. இறைவன்குற்றேவல் செய்தலாகிய பெருஞ்செல்வமுடைமையான் இலக்குவனெனவமைந்த பெயர்க்கியைய 'அன்பனு' மென்றதென்க. நின்னைத்தொடர்ந்துவர நாடியவென்னை வேண்டாவெனற் கொன்று மறியேனென்பான் 'அடியனேன்பிழைத்ததியா' தெனக்கூறினன். (கருரு)

(2) நீருளவெனினுளமீனுநீலமும்
பாருளவெனினுளயாவும்பார்ப்புறின்
நாருளதனுவுளாய்நானுஞ்சீதையும்
ஆருளரெனினுளமருளுவாயென்றான்.

(இ - ள்.) நீருளவெனினுள மீனுநீலமும் - நீருள்ளதனையு மீனுநீலோற்பல மலருமுள்ளன, பாருளவெனினுளயாவும் - எவ்வகைப்பொருளும் பாருளதனையமுள்ளன, பார்ப்புறின் - நோக்குமிடத்து, நாருளதனுவுளாய் - நாணையுடையவில்லையுடையானே, நானும்சீதையும் ஆருளரெனினுளம் - யானும்சனகியும் யாருளராயின் இருப்பேம், அருளுவாயென்றான் - சொல்லென்றனன்—

நீலமாகுபெயர்; யாவுமென்ற திருதிணையுயிர்களை; அவை - இயங்குதிணை, நிலைத்திணையென்பனவற்றை. நாருளதனுவென்றது கோதண்டத்தை.

(3) பைந்தொடியொருத்திசொற்கொண்டுபார்மகள்
நைந்துயிர்நடுங்கவுநடத்திகானென
உய்ந்தனனிருந்தனனுண்மைகாவலன்
மைந்தனென்றினையசொல்வழங்கினையென.

(இ - ள்.) பைந்தொடி யொருத்திசொற்கொண்டு - பசும்பொன்னாற் செய்த வளையலையணிந்த வொருத்தியாகிய கைகேசிசொல்லான், பார்மகள் நைந்துயிர் நடுங்கவும் - நிலமகள் வருந்தியுயிர் நடுங்காநிற்கவும், கான்நடத்தியென - காட்டிற்குச்செல்லென, உண்மைகாவலன் - மெய்மை கூறும் அரசனாகிய, உய்ந்தனன் இருந்தனன் - பிழைத்திருந்ததயரதன், மைந்தனென்று - மகனென்று, இனையசொல் வழங்கினையென - இச்சொற்களைச்சொல்லினையென்று—

கான்செல்லென நின்னைவிடுத்து முயிர்வைத்திருத்தலடாதென்பார் 'நடத்திகானெனவுய்ந்தன' னென்றும், முன்னினக்குமுடிபுனைவதாகக்கூறித்தவறினனென்பார் 'உண்மைகாவல' னென்றும், அவன்மகனதலா 'னீ உன்னைநீ 'யென்பொருட்டுதவுவா' யெனக்கான் செல்வதைத்தடுக்க 'இனையசொல் வழங்கினை' யென்று கூறினர்.　　(கடுஎ)

(4) மாறினியென்னைநீவனங்கொள்வாயென
வேறினவெகுளியையாதுமுற்றுற
வாறினைதவிர்கெனவையவாணையிற்
கூறியமொழியினுங்கொடியதாமென்றான்.

(இ - ள்.) ஐயமாறினியென்னை நீவனங்கொள்வாயென - இறைவனே வேறுகூறுவதென்னை நீவனம்புகுதென்று, ஏறினவெகுளியையாதுமுற்றுற - யான்கொண்ட சீற்றமுழுதுமொழிய, ஆறினைதவிர்கஎன - தணிந்தொழிகவென்று, ஆணையின்கூறிய மொழியினும் - ஆணையாற் சொன்ன சொல்லினும், கொடியதாமென்றான் - கொடியதுபோலுமென்றனன்.—

நீ என்னோடு வனம்புகுதாதொழிக வென்றது நீ கான்படர்கின்றனையென்றசொற் கேட்டப்பொழுது கொண்ட சீற்றத்தினைத்தவிர்க வென்றதினும் கொடியதென்பார் 'ஆணையிற்கூறியமொழியினுங் கொடியதாமென்றான்' என்றார்.　　(கடுஅ)

(5) செய்துடைச்செல்வமோயாதுந்தீர்ந்தெமைக்
கைதுடைத்தேகவுங்கடவையோவையா
நெய்துடைத்தடையலர்நேயமாதர்கண்
மைதுடைத்துறைபுகும்வயங்கொள்வேலினாய்.

(இ - ள்.) நெய்துடைத்த அடையலர் நேயமாதர்கண் மைதுடைத்து உறைபுகும் வயங்கொள்வேலினாய்-நெய்தடவப்பட்டுப்பகைவர் ஆசைமிக்கம னைவியர் கண்ணிற்பூசிய மையையழித்துறையிற் புகுதரும் வெற்றிபெறும் வேலினையுடையானே, ஐயா-இறைவனே, செய்துடைய செல்வமோயாதுந் தீர்ந்தெமைக்கைதுடைத்தேகவுங் கடவையோ-உமக்குச்செய்துவைத்த செல் வமோ முற்றுமொழிந்து எம்மைக் கைகழுவிச்செல்லவுங் கடவையோ-எ-று.

செல்வமீட்டுதெ லியல்பாகலின் 'செய்துடைச் செல்வ' மென்றதென்க; "ஈட்டும்பொரு"ளென்றதுமிப்பெற்றிநோக்கி. யாதுமென்புழிஉம்மைமுற்று. நெடுங்களனாட்பிடைப்பட்ட கொழுநர்க்கிரங்கிமாதரா ரழுதலியல்பாகலான் 'அடையலர் நேயமாதர்கண்மைதுடைத்' தென்றும், பொருவாரின்மையின் 'உறைபுகு'மென்றும், வேல்வாகைசூடிச் சிறத்தலின்'வயங்கொள்வே' லென் றுங்கூறினர். கடவை எதிர்காலவினைமுற்று, இது ஏனைக்காலங்களில் வரா மைகாண்க. வேலினாய், ஐயா எனச் சீராமனைவிளித்தான். கைதுடைத்தல் விட்டொழிதல் ; இதுவழக்கு. ஓவினா. ஏகவுமென்புழி உம்மை எதிர்மறை. இவ்வைந்து செய்யுளானும் இளையவன் சீராமனோடு யானுடன் வருவதைத் தடுத்தல் முறையன்றென்ப துணர்த்தப்பட்டது. (கருக)

உரைத்தபின்னிராமனென் றுரைக்கநேர்ந்திலன்
வரைத்தடந்தோளினன்வதனநோக்கினன்
விரைத்தடந்தாமரைக்கண்ணின்மிக்கநீர்
நிரைத்திடையிடைவிழநெடிதுநிற்கின்றான்.

(இ - ள்.) உரைத்தபின் இராமன் - சொன்னபின் சீராமன், வரைத்த டந்தோளினன் வதனநோக்கினன் - மலைபோலும் பெருந்தோளினனாகிய இளையவன் முகத்தைப்பார்த்து, விரைத்தடந் தாமரைக்கண்ணின்மிக்கநீர் - மணங்கமழ்கின்ற பெரியதாமரைபோலுங்கண்ணினின்று மிக்கநீர், நிரைத்தி டையிடைவிழநெடிதுநிற்கின்றான்-நிரைத்திடையிடையேவிடாமல்விழமிகு தியுநின்று, ஒன்றுரைக்கநேர்ந்திலன்-சிறிது மறுமொழிகூற வுடன்பட்டிலன்.

'உரைத்தபின்'என்றது'யாதுந்தீர்ந்தெமைக்கைதுடைத்தேகவுங்கடவை யோ'வென்பதனை. ஒன்றென்புழி இழிவுசிறப்பும்மைவிகாரத்தாற்றொக்கது. தம்பிக்குமறுமொழி கூறற்கஞ்சிவருந்துத லொழியாமையின் 'ஒன்றுரைக்க நேர்ந்தில' னென்றார். வரைதோட்குவமை. தாமரை கண்ணுக்குவமை. இதனாற் சீராமன் தம்பியை நோக்கி வருந்தினமை யுணர்த்தப்பட்டது. ()

அவ்வயினரசவைநின் றுமன்பினன்
எவ்வமிலிருந்தவமுனிவனெய்தினன்
செவ்வியகுமாருஞ்சென்னிதாழ்ந்தனர்
கவ்வைபம்பெருங்கடன்முனியுங்கால்வைத்தான்.

(இ - ள்.) அவ்வயின் - அதுபொழுது, அரசவைநின்றும் அன்பினன் எவ்வமில் இருந்தவமுனிவனெய்தினன் - அரசவைக்களத்தினின்றும் அன்புடையானாகிய குற்றநீங்கிய பெருந்தவத்துவசிட்டமுனிவன் வந்தடைந்தனன், செவ்வியகுமாரும் சென்னி தாழ்ந்தனர் - அழகியகுமரரிருவருந்தலைவணங்கினர், கவ்வையம் பெருங்கடல்முனியும் கால்வைத்தான் - பெருந்துயர்க்கடலிடைமுனிவனும் அடிவைத்தனன்—எ-று.

உலகவர்விழையும் பேரழகினராகலிற் 'செவ்வியகுமாரு' மென்றதென்க. அன்பினன் குறிப்புவினைப்பெயர். சிராமனீக்கம் முனிவனுக்குக் கழிபெருந்துயரமாகலின் 'கவ்வையம் பெருங்கடன் முனியுங்கால் வைத்தா' னென்றுகூறினர். உம்மை-உயர்வு சிறப்பு. கால்வைத்தல் - அடிவைத்தல். இதனான் வசிட்டமுனிவன் சிராமனைக்கண்டுவருந்திய துணர்த்தப்பட்டது.

(1) அன்னவர்முகத்தினோடகத்தைநோக்கினன்
பொன்னரைச்சீரையின்பொலிவுநோக்கினன்
என்னினியுணர்த்துவதெடுத்ததுன்பத்தாற்
றன்னையுமுணர்ந்திலனுணருந்தன்மையான்.

(இ - ள்.) உணருந்தன்மையான் - மெய்யுணர்ச்சியையுடைய முனிவன், அன்னவர்முகத்தி னோடகத்தை நோக்கினன் - அவர்முகத்தொடகத்தையும்பார்த்து, பொன்னரை சீரையின்பொலிவுநோக்கினன் - அழகியவரையினுடுத்த மரவுரியினழகினைப் பார்த்து, என்னினி யுணர்த்துவது - யாதினியெடுத்துக் கூறுவது, எடுத்ததுன்பத்தால் தன்னையுமுணர்ந்திலன் - உண்டாயதுயரானே தன்னையுமறந்தனன்.—

இவர்காடு செல்லுங்கருத்தை முகமுன்னுணர்த்தலின் முகத்தைமுற்கூறினர்; இப்பெற்றிநோக்கியன்றே * "அடுத்தது காட்டும்பளிங்கு போனெஞ்சிற் - கடுத்ததுகாட்டுமுகம்" எனப்பிறருங் கூறியவாறுகாண்க. (கசுஉ)

(2) வாழ்வினை நுதலியமங்கலத்துநாள்
தாழ்வினையதுவரச்சீரைசாத்தினன்
சூழ்வினைநான்முகத்தொருவர்ச்சூழினும்
ஊழ்வினையொருவராலொழிக்கற்பாலதோ.

---

* திருக்குறள்-செ-எ0சு.

(இ - ள்.) வாழ்வினைநுதலியமங்கலத்துநாள் - முடிபுனைந்து வாழ்கைக்குக் கூறப்பட்டமங்கலநாளில், தாழ்வினையதுவர சீரைசாத்தினன் - அதுதவிர்தற்குரித்தாகியவினைவர மரவுரிபுனைந்தனன், சூழ்வினைநான் முகத்தொருவர்சூழினும் - இடைவிடாது தொடரும்வினைப்பயன் நான்முகத்தையுடைய ஒருவனைச்சூழ்ந்தாலும், ஊழ்வினையொருவரா லொழிக்கற்பாலதோ - தன்னையாக்கினோனைச் சென்றடையுமூழ்வினை யொருவரால் நீக்கும்பான்மையதோ.—

படைத்தற்றொழிற்குரிய பிரமனைக்கூறினமையான்ஏனையவரைக் கூறவேண்டாவென்க. ஊழ், பால், தெய்வம், விதி, நியதிஎன்பனஒருபொருட்கிளவி. *"ஊழிற்பெருவலியாவுள" என்பவாகலின் 'ஊழ்வினையொருவராலொழிக்கற்பாலதோ' என்றார். நான்முகனென்றது பிரமனை. 'வாழ்வினைநுதலியமங்கலத்துநா'ளென்றதுசீராமனுக்குமுடிபுனைகோலஞ்செய்தற்குச்சமைந்தநாளை; 'தாழ்வினையென்றார்' போகூழை; அது கான்செல்லவாணை பிறப்பித்தமைபற்றி. 'சூழ்வினை'என்றது இடைவிடாதுதொடரும் வினைப்பயனை. சூழினுமென்றது சூழ்தலினருமைநோக்கிநின்றது. (௧௯௩)

(3) வெவ்வினையவடரவிளைந்ததேயுமன்
றிவ்வினையிவன்வயினெய்தற்பாற்றுமன்
றெவ்வினைநிகழ்ந்ததோவேவரெண்ணமோ
செவ்விதினொருமுறைதெரியும்பின்னென்றான்.

(இ - ள்.) வெவ்வினை அவள் தரவிளைந்ததேயுமன்று-கொடியதொழில் அவள்விளைக்கவிளைந்ததுமன்று, இவ்வினை இவன்வயின் எய்தற்பாற்றுமன்று- இத்தொழினிகழ்ச்சி இவன்பாலடையும்பகுதியுமன்று, எவ்வினைநிகழ்ந்ததோ- எவ்வினை யடைந்ததோ, ஏவரெண்ணமோ - யாவர்கருத்தோ, பின்செவ்விதின் ஒருமுறைதெரியுமென்றான் - பின்னரொருமுறை செவ்வனே தெரியுமென்றனன்.—

'விராவரும் புவிக்கெலாம் வேதமேயன - இராமனைப்பயந்த வெற்கிடருண்டோ' என்றவளாகலின் 'வெவ்வினையவடர விளைந்ததேயுமன்' றென்றும், † "கற்பாரிராமபிரானையல்லால் மற்றுங்கற்பரோ" எனப்பெரியாரும்பணித்தலின் 'இவ்வினையிவன்வயினெய்தற்பாற்றுமன்று' என்றும், இவன்காடுசெல்லவேவப்பட்டமையின் 'எவ்வினை நிகழ்ந்ததோ வேவருள்ளமோ' வென்றும், இதுபின்அறியப்படுமென்பார் 'செவ்விதினொருமுறைதெரியும் பின்னென்றான்' என்றுங்கூறினார். ஒகாரங்கள்ஐயப்பொருளன. உம்மை தெரிநிலை.(௧௯௪)

(4) விற்றடந்தாமரைச்செங்கண்வீரனை
யுற்றடைந்தையநீயொருவியோங்கிய
கற்றடங்காணுதியென்னிற்கண்ணகன்
மற்றடந்தானையான்வாழ்கிலானென்றான்.

† திருவாய்மொழி - திருப்பதிகம், ௯௫-செ. ௧.
* திருக்குறள்-செ. ௩௮௰.

(இ - ள்.) வில்தடவுதாமரை செங்கண்வீரனை-வில்லேந்திய விசாலமாகிய தாமரைமலர்போலுஞ் செங்கண்மாலை, உற்றுஅடைந்து ஐய - மிகவடைந்து ஐயனே, நீ யொருவி ஒங்கியகற்றடங்காணுதியென்னின் - நீ நீங்கிவளர்ந்தோங்கிய மலைகளடர்ந்த காட்டினையடைவையேல், கண்ணகன் மற்றடந்தானையான் வாழ்கிலானென்றான் - இடமகன்ற மற்போர்க்குரிய பெருஞ் சேனையையுடைய தயரதன்வாழமாட்டா னென்றனன்—எ-று.

வில்லென்றதுகோதண்டத்தை. புண்டரீகாட்சனென்னும் பெயர்பற்றித்தடந்தாமரைச் செங்கண் வீரனென்றதென்க. கற்றடமென்றது மலைகளடர்ந்தகாட்டினை. மல்லென்றதுமற்போரை. இந்நான்கு செய்யுட்களானும்வசிட்ட முனிவன், சீராமன்பால் நீகாடேகன் முறையன்றென்ப துணர்த்தப்பட்டது. (கசுரு)

அன்னவன்பணிதலையேந்தியாற்றுதல்
என்னதுகடனவனிடரைநீக்குதல்
நின்னதுகடனிதுநெறியுமென்றனன்
பன்னகப்பாயலுட்பள்ளிநீங்கினான்.

(இ - ள்.) பன்னகம் பாயலுள்பள்ளி நீங்கினான் - சர்ப்பசயனத்தைத் துறந்த இறைவன்; அன்னவன் பணிதலையேந்தி யாற்றுதல்என்னதுகடன் - அவனது குற்றேவல் தலைமேற்கொண்டொழுகுதலெனதுகடமை, அவன் இடரைநீக்குதல் நின்னதுகடன்-அவன்துயரைக்கடப்பித்தல் நினதுகடமை, இது நெறியுமென்றனன் - இதுமுறையுமாமென்றனன்—

தன் ஆதியஞ்சோதி யுருவைஅங்குவைத்திங்குப்பிறந்தமை திருவயோத்தியைநீங்குவதாகலின் 'அன்னவன் பணிதலையேந்தி யாற்றுதலென்னது கட'னென்றும், என்பிரிவானவன்வருந்த னீப்பதுனக் குரிமையென்பார் 'அவனிடரைநீக்குதனின்னதுகட'னென்றும், இதுவேமறைநூற்றுணி பென்பார் 'இதுநெறியுமென்றன'னென்றுங்கூறினார்.இதனான்வசிட்டமுனிவனைச்சீராமன் யான்கானேகலானீயாற்று வித்திருவென்பதுணர்த்தப்பட்டது. (கசுசு)

வெவ்வரம்பையில்சுரம்விரவென்றானலன்
தெவ்வரம்பனையசொற்றீட்டினாடனக்
கவ்வரம்பொருதவேலரசனாய்கிலா
திவ்வரந்தருவெனென்றேன்றதுண்டென்றான்.

(இ - ள்.) வெவ்வரம்பு இல்சுரம்விரவென்றானலன் - கொடிதாகியவரம்பகன்ற கானையடையென்றானல்லன், தெவ்வர் அம்புஅனையசொல் தீட்டினாள் தனக்கு-பகைவரம்பினை யொத்தசொல்கூறிய கைகேசிக்கு, அவ்வரம் பொருதவேல் அரசன் - அரத்தாற்பொருத வேற்படையையுடைய அவ்வேந்தன், ஆய்கிலாது இவ்வரம் தருவென் என்று ஏன்றதுஉண்டு என்றான் - ஆராயாது இவ்வரத்தைத் தருவேனென்றிசைந்த துண்டென்றனன்—எ-று.

வெவ்வரம் பையிலெனக்கொண்டு வேறுகூறுவாருமுளர். வருத்துமியல் பிணியுடைய வம்பினை அவள்சொல்லுக்குவமை கூறினர். அரசன் அவள் கேட்டவரமின்னதென்றறியாது கொடுத்தமையின் 'ஆய்கிலாதிவ்வரந்தருமெ னென்றேன்றதுண்டென்று' னென்றதென்க. இதனான்வசிட்டமுனிவனால் அரசன் கைகேசிக்கு ஆயாது வரங் கொடுத்ததென்ப துணர்த்தப்பட்டது. ()

என்றனனெந்தையிவ்வரங்களேவினள்
ஈன்றவள்யானதுசென்னியேந்தினேன்
சான்றெனநின்றநீதடுத்தியோவென்றான்
தோன்றியநல்லறநிறுத்தத்தோன்றினான்.

(இ - ள்.) தோன்றிய நல்லறநிறுத்தத்தோன்றினான் - தோன்றிய நன்மையாகிய அறத்தை நிறுத்துதற்குத் திருவவதரித்த ஸ்ரீராமன், எந்தை இவ் வரங்கள் என்றனன் - எந்தையாகிய தயரதன் இவ்வரங்களைத்தர விசைந்த னன், ஈன்றவள் ஏவினள்-பெற்றதாய்கானேகக் கட்டளையிட்டனள், யான் அது சென்னியேந்தினேன் - யானது தலைமேற்கொண்டேன், சான்றென நின்ற நீ தடுத்தியோவென்றான் - யாவற்றினுக்குஞ் சான்றாகநின்ற நீவிலக் குதியோ வென்றனன்.—எ-று.

அறத்தை நிறுத்தற்பொருட்டுப் பாற்கடற்பரமன் ஸ்ரீராமன்முதலிய வவ தாரங்களை யெடுப்பதாகக் கண்ணன் கீதையிற் கூறுகின்றமையின் 'தோன் றியநல்லற நிறுத்தத்தோன்றினான்' என்றதென்க. தன்னைவளர்த்த அன்பு டையாளாகலின் 'ஈன்றவ' ளென்றும்,'இப்பணிதலைமேற்கொண்டேன்' என ப்பிற்கூறுதலின் 'யானது சென்னியேந்தினே' னென்றும், முழுதொருங்கு ணர்ந்தவனீ யென்பார் 'சான்றெனநின்ற நீ' யென்றும், என்னைத்தடுத்தல் முறையன்றென்பார் 'தடுத்தியோ' வென்றுங் கூறினர். இதனாற் ஸ்ரீராமன் நீதடுப்பது முறையன்றென்பது ணர்த்தப்பட்டது. (கசுஅ)

என்றபின்முனிவனொன் றுரைக்கநேர்ந்திலன்
நின்றனனெடுங்கணீர்நிலத்துநீர்த்துகக்
குன்றனதோளவன்றொழுதுகொற்றவன்
பொன்றிணிநெடுமதில்வாயில்போயினான்.

(இ - ள்.) என்றபின் - என்று சொன்னபின்னர், முனிவன் நெடுங்க ணீர் நிலத்துநீர்த்துக ஒன்றுரைக்க நேர்ந்திலன் நின்றனன் - வசிட்டமுனி வன் மிகுந்த கண்ணீர் நிலத்தின்கண் தாரையாய்ப் பெருகிச்சிந்தச் சிறிதும றுமொழிகூற வறியாது நின்றனன், (இஃதிவ்வாறாக) குன்றனதோளவன் தொழுது - மலைபோலுந் தோளையுடையானாய ஸ்ரீராமன் வணங்காநின்று, கொ ற்றவன் பொன்றிணி நெடுமதில் வாயில்போயினான் - அரசனது பொன்னாற் செய்யப்பட்ட நீண்டமதிலையுடைய வாயிலைக்கடந்து சென்றனன்.—எ-று.

என்றபின்என்றது 'என்றனனெந்தை யிவ்வரங்கள்' முதலியன. ஒன்று என்புழிஇழிவுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. நேர்ந்திலன் வினையெச்சமுற்று. என்றவென்னும் பெயரெச்சம் பின்னென்னு மிடைச்சொல்லொடு முடிந்தது. இதனுன் வசிட்டமுனிவன் வாளாவிருந்தமையும், சிராமன் மதில்வாயில் கடந்தமையு முணர்த்தப்பட்டன. (௧௬௯)

சுற்றியசீரையன்றொடர்ந்ததம்பியன்
முற்றியவுவகையன்முளரிப்போதினுங்
குற்றமின்முகத்தினன்கொள்கைகண்டவர்
உற்றதையொருவகையுணர்த்துவாமரோ.

(இ - ள்.) சுற்றிய சீரையன் - அரையிற்சாத்திய மரவுரியுடையானும், தொடர்ந்த தம்பியன்-பின்றொடரப்பட்ட இளையவனையுடையானும், முற்றிய வுவகையன்-முதிர்ந்தமகிழ்ச்சியையுடையானும், முளரிப்போதினும்-தாமரை மலரினும், குற்றமில் முகத்தினன்-குற்றமில்லாத முகத்தினையுடையானுமாகிய சிராமனது, கொள்கைகண்டவருற்றதை - கோட்பாட்டினைக்கண்டார் அடைந்தநிலையினை, ஒருவகையுணர்த்துவாம்-ஒருவாறு கூறுவாம்—எ-று.

சீரையன், தம்பியன், உவகையன், முகத்தினன் ஒருபொருள் மேற்பல பெயர்கள் கொள்கை கண்டவ ரென்பதனோடு முடிந்தது. 'முளரிப்போதினுங்குற்றமில்முகத்தினன்'என்றதுகாடுசெல்வதிற்கழிபேருவகையனுதலை. இதனை 'அப்பொழுதலர்ந்தசெந்தாமரையினைவென்றது' எனவும்'சித்திரத்தினலர்ந்தசெந்தாமரையொத்'தெனவும் பிற்கூறுதலிற்பெற்றி நோக்கியென்க. இதுகவிக்கூற்று. (௧௭௦)

அந்தணரருந்தவரவனிகாவலர்
நந்தலினகருளார்நாட்டுளார்கடஞ்
சிந்தையென்புகல்வதுதேவருள்ளமும்
வெந்தனர்மேல்வருமுறுதிவேண்டலார்.

(இ - ள்.) அந்தணர் - அழகியதட்பமாகிய குணமுடையாரும், அருந்தவர்-அருமையாகிய தவமுடையாரும், அவனிகாவலர்-நிலத்தையாளுமரசரும், நந்தலில்நகருளார் - கெடுதியில்லாத நகரமாந்தரும், நாட்டுளார் கடம்சிந்தை-நாட்டவருமாகிய இவரெண்ணத்தினை, என்புகல்வது-யாதெனக்கூறுவது, மேல்வருமுறுதி வேண்டலார்- பின்வருநலத்தை விரும்பாது, தேவருள்ளமும் வெந்தனர்-தேவர்களும் மனம்வருந்தினர்—எ-று.

அந்தணர் என்பதற்கு வேதத்தினந்தத்தை யணவுவாரெனவு முரைப்பர். எவன்என்னும்வினு வினைக்குறிப்புமுண்டென்னென்றாய் இன்மைகுறித்தது. 'மேல்வருமுறுதி' யென்றது இராவணவேட்டையாடித்தமது பதம் தருதலை. 'தேவருள்ளமும்வெந்தன'ரென்புழித்தேவரென்னுமுயர்திணையைத்தொடர்ந்

தசினைப்பெயராகிய உள்ளமுமென்றது விரவியுயர்திணைவினை கொண்டது. இதனன் அந்தணர்முதலியோ ரெய்திய துயரமுணர்த்தப்பட்டது. (களக)

(1) ஐயனைக்காண்டலுமணங்கனர்கடாம்
மொய்யிளந்தளிர்களான்முளரிமேல்விழும்
மையலின்மதுகரங்கடியுமாறெனக்
கைகளின்மதர்நெடுங்கண்களேற்றினர்.

(இ - ள்.) அணங்கனர்கடாம் - அரமகளிரை யொப்பார்கள், ஐயனைக் காண்டலும் - இறைவனைக்காண்டலும், மொய்யிளந்தளிர்களான் முளரிமேல்விழும்மையலின் மதுகரங் கடியுமாறென - மொய்க்கின்றஇளந்தளிர்களால் தாமரைமலர்மேல் விழுகின்றவண்டுகளை மதுமயக்கங்கொண்ட வண்டினமழிப்பதுபோல, கைகளின்மதர் நெடுங்கண்கள் எற்றினர் - தங்கைகளால் களிப்பினையுடைய நீண்டகண்களை மோதினர்.—

தளிர்களால் தாமரை மேல்விழும் வண்டினத்தைக்கடிவதுபோல முகமாகியதாமரையிற்கண்ணாகிய வண்டினைத்தளிராகிய கையாலெற்றினரென உவமமுகத்தாற்கூறினர். (களஉ)

(2) தம்மையுமுணர்ந்திலர் தணிப்பிலன்பினல்
அம்மையினிருவினையகற்றவோவன்றேல்
விம்மியபேருயிர்மீண்டிலாமைகொல்
செம்மறன்றாதையிற்சிலவர்முந்தினர்.

(இ - ள்.) சிலவர்தணிப்பில் அன்பினல்-சிலர்தணிப்பிலாத வன்பினல், தம்மையுமுணர்ந்திலர் - தம்மையுமறியாது, செம்மல்தன்தாதையின் - சீராமன் தந்தையாகிய தயரதன்போல், அம்மையின் இருவினையகற்றவோ-இனிவரும் பிறப்புத்தொடரும் இருவினை நீக்கவோ, அன்றேல் விம்மியபேருயிர் மீண்டிலாமைகொல் - அல்லதேல்வருந்துகின்ற உயிர்மீளாமையாலோ, முந்தினர் - முற்பட்டுத்துறக் கம்புக்கனர்.—

சிலவரென்றது நகரமாந்தரை. அவர் தயரதன்போல துறக்கமடையமுந்தினரென்பது இருவினையகற்றவே, 'அன்றி விம்மியபேருயிர் மீண்டிலாமை கொ'லென ஐயத்தாற்கூறினர். (களஈ)

(3) விழுந்தனர்சிலர்சிலர்விம்மிவிம்மிமேல்
எழுந்தனர்சிலர்முகத்திழிகண்ணீரிடை
அழுந்தினர்சிலர்பதைத்தளகவல்லியின்
கொழுந்தெரியுற்றெனத்துயரங்கூர்கின்றார்.

(இ - ள்.) சிலர் விழுந்தனர்-சிலவர் விழுந்தனர், சிலர் விம்மிவிம்மி மேலெழுந்தனர் - சிலவர் சாலவிம்மி மேலெழுந்தனர், சிலர் முகத்திழி கண்ணீரிடைஅழுந்தினர் - சிலவர்முகத்தினின்று மிழிகின்றகண்ணீரிலழுந்

தினர், சிலர்பதைத்து அளகவல்லியின் கொழுந்தெரியுற் றெனத்துயர ங்கூர்கின்றார்-சிலவலர்பதைத்து இளங்கொடியில் தீப்பற்றினாற்போலத் துயர மிக்கனர்.—

சிலர் பதைத்து 'வருந்துதலை அளகவல்லியின் கொழுந்தெரியுற்' றென்று வமைமுகத்தாற் கூறினர். (கஎச)

(4) கரும்பனமொழியினர்கண்பனிக்கிலர்
வரம்பறுதுயரினான்மயங்கியேகொலாம்
இரும்பனமனத்தினரென்னநின்றனர்
பெரும்பொருளிழந்தவர்போலும்பெற்றியார்.

(இ - ள்.) பெரும்பொருளிழந்தவர் போலும்பெற்றியார்-பெரும்பொருளிழந்தவரொத்த தன்மையராகி, கரும்பனமொழியினர் - கரும்பையொத்த சொல்லியர், வரம்பறுதுயரினான் மயங்கியே கொலாம் - அளவிறந்ததுன்பத்தான் மயங்கியேயோ, கண்பனிக்கிலர்-கண்ணீர்விடாதிருந்தனர், இரும்பன மனத்தினரென்னநின்றனர்-இரும்பையொத்த நெஞ்சத்தவர்போலநின்றனர்.

துயருக்களவில்லையாதலாற்'பெரும்பொருளிழந்தவர்போலும்பெற்றியா' ரென்றார். கண்பனித்தல் முதலியன நிகழாமையின் 'இரும்பனமனத்தின' ரென்ன நின்றனரென்க. (கஎரு)

(5) நெக்கனவுடலுயிர்நிலையினின்றில
இக்கணமிக்கணமென்னுந்தன்மையும்
புக்கனபுறத்தனபுண்ணிற்கண்மலர்
உக்கனநீர்வறந்துதிரவாரியே.

(இ - ள்.) புறத்தன - புறத்திலுள்ள, உடல் நெக்கன - உடம்புதளர்ந்தன, உயிர்நிலையினின்றில - உயிர்உடம்பின்கணின்றில, இக்கணம் இக்கணம் என்னுந்தன்மையையும் புக்கன - இக்கணமேவிரைந்து போமென்னுந் தன்மையெய்தின, கண்மலர் நீர்வறந்துதிரவாரிஉக்கன-கண்ணாகியமலர் வறண்டுதிரப்பெருக்கைச்சிந்தின—எ-று.

அடுக்குப்பன்மை. உதிரவாரி இருபெயர்ப்பண்பு. கண்ணின் நீர்வறண்டமையின் 'உதிரவாரியுக்கன' என்றார். 'உயிர்நிலையினின்றில' என்றதுயிர் உடம்பினின்றில என்பதை. இக்கணமிக்கணமென்றது இவ்வுயிர் இதுபோதுநின்றது இதுபோது நின்றதென்பதுகருதிற்று. அடுக்கு இடைவிடாமைப்பொருட்டு. இவ்வைந்துசெய்யுளானும்மாதராரடைந்த துயரமுணர்த்தப்பட்டது. (கஎசு)

இருகையிற்கரிநிகரெண்ணிறந்தவர்
பெருகையிற்பெயர்த்தனர்தலைப்பேணலர்

ஒருகையிற்கொண்டன ருருட்டுகின்றனர்
சுரிகையிற்கண்மலர்சூன் றுநீக்கினர்.

(இ - ள்.) இருகையிற் கரிநிகரெண்ணிறந்தவர் - இருகையினையுடைய யானையொத்த கணக்கிலாதவர், பெருகையிற்பெயர்த்தனர் - பெரிதாகியகையாற் பெயர்த்து, தலையைபேணலர் - தலையைவிரும்பாதவராய், ஒருகையிற் கொண்டனர் - ஒருகையிற்கொண்டு, உருட்டுகின்றனர் - உருட்டினர், சுரிகையிற்கண்மலர் சூன்றுநீக்கினர் - (மற்றுஞ்சிலர்) உடைவாளாற்கண்மலரைச்சூன்று போக்கினர்—எ-று.

இருகையிற்கரி என்றது இல்பொருளுவமை. பெருகையிற் பெயர்த்துத்'தலையைப்பேணல'ரென்றது குறைத்தலைகளையுணர்த்திற்று. சுரிகையென்றது குற்றுடைவாளை.இதனுன் வீரரடைந்த துயரமுணர்த்தப்பட்டது. ()

(1) சிந்தினவணிமணிசிதறிவீழ்ந்தன
மைபந்துணர்மாலையிற்பரிந்தமேகலை
நந்தினநகையொளிவிளக்கநங்கைமார்
சுந்தரவதனமுமதிக்குத்தோற்றவே.

(இ - ள்.) அணிசிந்தின - ஆபரணங்கள்சிந்தின, மணிசிதறிவீழ்ந்தன-அவ்வாபரணங்களிற் பதித்தமணிகள் சிதறிவீழ்ந்தன, மேகலைபைந்துணர் மாலையிற்பரிந்த-மேகலைபசியபூமாலைபோல அறுந்தன, நங்கைமார் நகையொளிவிளக்க நந்தின - மாதரார் நகையின்மிக்க வொளிமாழ்கின, சுந்தரவதனமும் மதிக்குத்தோற்ற - அவரது அழகியமுகமும் சந்திரனுக்குத் தோல்வியடைந்தன.—

இதுகாறும் மதிமுகத்துக்குத் தோல்வியடைந்ததேயாக, இற்றை ஞான்றது இறைவனீக்கத்தான் வருந்துதலின் 'சுந்தரவதனமுமதிக்குத்தோற்ற' என்றார். மேகலையென்றது எண்கோவைவடத்தை. (கஎஅ)

(2) அறுபதினயிரரரசன்றேவியர்
மறுவறுகற்பினர்மழைக்கணீரினர்
சிறுவனைத்தொடர்ந்தனர்திறந்தவாயினர்
எறிதிரைக்கடலெனவிரங்கியேங்கினர்.

(இ. - ள்.) அறுபதினயிரர் அரசன்தேவியர் - அரசனது தேவிமாராகிய அறுபதினயிரவர், மறுவறுகற்பினர்-குற்றமற்றகற்பினையுடையராகிய, மழைக்கணீரினர் - மழைபோன்றகண்ணினீரைப் பெருக்கினராய், திறந்தவாயினர் - வாயைத்திறந்து, சிறுவனைத்தொடர்ந்தனர் - சீராமனைத்தொடர்ந்து, எறிதிரைகடலென விரங்கியேங்கினர் - அலைவீசுங்கடல் போலமுழுதுவருந்தினர்.—

சிறுவனென்றது ஸ்ரீராமனை. அறுபதினாயிரந் தேவியர், கற்பினரென்பன ஒருபொருள்மேல்வந்தபல்பெயர்க்கிளவி. கண்ணீரினர், தொடர்ந்தனர், வாயினர் என்னும் வினையெச்சமுற்றுகளைக்கொண்டும், அவையேங்கினர் என்னுந் தன்னெச்சங்கொண்டுமுடிந்தன. 'திறந்தவா' யென்றது வாய்விட்டரற்றலை. இரங்கியேங்கலைக்கடற்குவமைகூறினர். (கஎகூ)

(3) கன்னிநன்மயில்களுங்குயிற்கணங்களும்
அன்னமுஞ்சிறையிழந்தவனிவீழ்ந்தன
என்னவீழ்ந்துழந்தனரிராமனல்லது
மன்னுயிர்ப்புதல்வனைமற்றும்பெற்றிலார்.

(இ-ள்.) இராமனல்லது மன்னுயிர்புதல்வனைமற்றும்பெற்றிலார்-ஸ்ரீராமனையல்லாமல் நிலைபெற்றஉயிர்போன்றமகனைப் பெற்றிலாமல், கன்னிநன்மயில்களும்-இளமையான நல்லமயில்களும், குயிற்கணங்களும்-குயிலின்கூட்டங்களும், அன்னமும்-அன்னங்களும், அவனிசிறையிழந்துவீழ்ந்தன என்ன-நிலத்திற்சிறையிழந்துவீழ்ந்தாற்போல, வீழ்ந்துழந்தனர்-விழுந்து வருந்தினர்.—

சாயலான்மயிலையும், மொழியாற்குயிலையும், நடையானன்னத்தையும் உவமைகூறியதன்றி, அவைசிறையிழந்துநிலத்திடைவீழ்ந்தமைமான அம்மாதருநிலத்திற்புரண்டு விழுந்தழுதனரென உவமைமுகத்தால் விளக்கினர். ஸ்ரீராமனையல்லதுகாதற்புதல்வனை வேறு பெற்றறியாவரசன்போல், அவ்வரசனுக்குடலன்னவராதலின் 'மன்னுயிர்ப்புதல்வனைமற்றும் பெற்றிலா' ரென்றார். மற்றுஎன்பதுவினை மாற்றுப்பொருள் பயப்பதோரிடைச்சொல். (கஅ௦)

(4) கிளையினுநரம்பினுநிரம்புங்கேழன
அளவிறந்துயிர்க்கவிட்டரற்றுந்தன்மையான்
தொளைபடுகுழலினோடியாழ்க்குத்தோற்றன
இளையவரமுதினுமினியசொற்களே.

(இ - ள்.) இளையவரமுதினு மினியசொற்கள் - அம்மாதராரது அமுதினுமினியவாய சொற்கள், கிளையினு நரம்பினும் நிரம்புங்கேழன-கிளையினும் நரம்பினும் நிரம்பியொளியையுடையனவாயினும், அளவிறந்துயிர்க்கவிட்டரற்றுந் தன்மையான், அளவுகடந்து பெருமூச்செறிந்து விட்டழுமியல்பினான்,. தொளைபடுகுழலினோடியாழ்க்குத் தோற்றன - தொளையிட்டகுழலோடு வீணைக்குத்தோல்வி யடைந்தன.—

பட்டமகிஷிகட்குப்பின் மணஞ்செய்யப்பட்டவராகலின் இளையவரென்றதும், ஐவகைக்கருவிகளிற் றுளைக்கருவிவகையவாகலின் தொளைபடுகுழலென்றது மென்க. நரப்புக்கருவி, குழல், வீணைமுதலாயவற்றிற்கமிழ்தினுமினிய வேனுமின்சொற்கள் அழுகுரலான் தோற்றனவென்க. (கஅக)

(5) புகலிடங்கொடுவனம்போலுமென்றுதம்
மகன்வயினிரங்குறுமகளிர்வாய்களால்

அகன்மதினெடுமெனயரத்தவாம்பல்கள்
பகலிடைமலர்ந்ததோர்பழனம்போன்றவே.

(இ - ள்.) புகலிடம் கொடுவனமென்று - தமக்குப் புகலிடம் கொடியவனமே என்று நினைத்து, தம்மகன்வயின் இரங்குறுமகளிர் - தம்புதல்வன்மாட்டிரங்கு மாதரார், வாய்களால் அகன்மதில்நெடுமனை அரத்தவாம்பல்கள்-வாய்களினுன் அகலமாகிய மதிலையுடைய நீண்டமாளிகைகளிற் செவ்வாம்பன்மலர்கள், பகலிடைமலர்ந்ததோர் பழனம்போன்ற - பகலின்கண்மலர்ந்ததோர் வயலினையொத்தன.—

வாயாம்பலாதலின் அவர்வாய்விட்டரற்றலை 'அரத்தவாம்பல்கள் பகலிடைமலர்ந்த தோர்பழனம் போன்ற' என்றார். போலுமென்றது அசைநிலை. மகனென்றது சீராமனை, பழனம்-வயல். (சுஅ௨)

(6) திடருடைக்குங்குமச்சேறுஞ்சாந்தமும்
இடையிடைவண்டலிட்டாரமீர்த்தன
மிடைமுலைக்குவடொரீஇமேகலைத்தடங்
கடலிடைப்புகுந்தகட்கலுழியாறரோ.

(இ - ள்) கட்கலுழியாறு - கண்ணினின்றும் பெருகுகின்ற வாற்றுவெள்ளம், திடருடைய குங்குமச்சேறும் - மேடாகிய குங்குமத்தின்சேறும், சாந்தமும் - செஞ்சாந்தும், இடையிடைவண்டலிட்டு ஆரமீர்த்தன - நடுவில் வண்டலிட்டோடி முத்துக்களை யிழுத்துக்கொண்டு, மிடைமுலைக்குவடொரீஇ-நெருங்கிய கொங்கைக்குன்றை நீங்கி, மேகலைத்தடங்கடலிடைப்புகுந்த - மேகலையணிந்த கடிதடமாகிய கடலிடைப்புக்கன.—

முலைக்குவடு, மேகலைத்தடங்கடல் என்பன உருவகம். கடிதடமென்பது முதற்குறுகி நின்றது. அடுக்கு மிகுதிப்பொருளது. ஈர்த்தன-வினைமுற்றெச்சம். ஒரீஇ சொல்லிசை நிறைக்கவந்தவளபெடை, மேகலை என்றது எட்டுவடங்கொண்டது; இதனை 'எண்கோவைமேகலை' என்பதனானு முணர்க.

(7) தண்டலைக்கோசலைத்தலைவன்மாதரைக்
கண்டனனிரவியுங்கமலவாண்முகம்
விண்டலத்துறையுநல்வேந்தர்க்காயினும்
உண்டிடருற்றபோதென்னுறுதன.

(இ - ள்.) விண்டலத்துறையும் நல்வேந்தர்க்காயினும் - விண்ணின்கண் அமுதமருந்தி வசிக்குமிந்திரனுக்கேனும், இடருற்றபோது உறுதன என் - துன்பம்வந்தகாலத்தெய்தாதனயாவையுள, (ஆதலால்) தண்டலைக்கோசலைத்தலைவன்மாதரை-சோலைகள்சூழ்ந்த கோசலநாட்டரசன்மனைவியரை, இரவியும் கமலவாண்முகம் கண்டனன் - பரிதியும் தாமரைமலர்போலு மொள்ளியமுகத்தைக்கண்டனன்.—

இதுகாறும் அத்தமாளிகைகளினின்றும் வெளிப்படாத மாதரார்யாரும் இன்றுமகன்வயினிரக்கத்தான்வெளிப்பட்டுத்தொடர்ந்தமையான்'கமலவாண் முகம் கண்டனனிரவியு' மென்றார். அமுதாண்டு விண்ணிலுறையுமிந்திரனுக் கேனுந்தியாவூழான்வாராவிடர்வந்தெய்தன் முறையாகலினதனையேயெடுத்து க்காட்டியதென்க. போலும் என்பது எஞ்சி நின்றது. இதுவேற்றுப் பொருள்வைப்பு. (கஅச)

(8) தாயருங்கிளைஞருஞ்சார்ந்துளார்களும்
சேயருமணியருஞ்சிறந்தமாதரும்
காயெரியுற்றனரனையகௌவையர்
வாயினுமுன்றிலுமறையமொய்த்தனர்

(இ - ள்.) தாயரும் கிளைஞரும் சார்ந்துளார்களும் - தாயரும் உறவினரும் நட்பினரும், சேயருமணியருஞ் சிறந்தமாதரும் - தூரத்தவரும் சமீபத்தவரும் சிறந்தமாதராரும், காயெரியுற்ற னரனையகௌவையர்-பற்றித்தொடர்ந்த தீயையடைந்தாற்போன்ற துயரமெய்தி, வாயிலுமுன்றிலும் மறைய மொய்த்தனர் - வாயிலினுமுற்றத்தினுமிடனிலதாக நெருங்கிச்சூழ்ந்து.எ-று

தாயரென்றது கைத்தாய், செவிலித்தாய் முதலியோரை. மாதரெனப் பிற்கூறியது கிளைஞாயுள்ளிட்டார் மனைவியரை. கௌவையர் மொய்த்தனர் என்பன வினையெச்சமுற்று. அதுவருஞ்செய்யுளில் இரைத்தன ரென்னும் வினைமுற்றைக் கொண்டது. தாயர் முதலானோர் வருத்தமிகுதியைக் காயெரி யுற்றமைக் குவமைகூறினர். இவ்வெட்டுச்செய்யுளானும் அரசன் தேவியர்முதலாயோ ரடைந்த துயரமுணர்த்தப்பட்டது. (கஅரு)

இரைத்தனரிரைத்தெழுந்தேங்கியெங்கணும்
திரைப்பெருங்கடலெனத்தொடர்ந்துபின்செல
உரைப்பதையுணர்ந்திலனொழிப்பதோர்கிலன்
வரைப்புயத்தண்ணறன்மனையைநோக்கினன்.

(இ - ள்.) இரைத்தனர் இரைத்தெழுந் தேங்கியெங்கணும் திரைப் பெருங்கடலெனத் தொடர்ந்துபின்செல - கூவினர் அங்ஙனங் கூவியெழுந்தேங்கியாண்டு மலைகளையுடைய கடல்போலத்தொடர்ந்து பின்போக, உரைப்ப துணர்ந்திலன் - இன்னது கூறுவாமென்றறியாது, ஒழிப்பதோர் கிலன் - அவரை நீக்கவுமறியாது, வரைபுயத்து அண்ணல் -மலைபோலுந்தோள்களையுடைய சீராமன், தன் மனையை நோக்கினன் - தன் மாளிகையைநோக்கி நடந்தனன்.—எ-று.

இதுகவிக்கூற்று. அறுபதினாயிரந் தாயராதலின் 'திரைப்பெருங்கடலெனத்தொடர்ந்து பின்செல' வென்றார். வரை, புயக்குவமை. தாய்மாரை முறையேகண்டுதான்கான் படர்வதைக் கூறித்தன் மாளிகையடைந்தானென்பார்'தன்மனையை நோக்கினு' னென்றார். (கஅசு)

நன்னெடுநளிர்முடிசூடநன்மணிப்
பொன்னெடுந்தேரொடும்பவனிபோனவன்
துன்னெடுஞ்சீரையுஞ்சுற்றிமீண்டுமப்
பொன்னெடுந்தெருவிடைப்போதன்மேயினான்.

(இ - ள்.) நல்நெடுநளிர்முடிசூட - நன்மையாகிய மிகப்பெரிய முடிபுனைய, நன்மணிப்பொன்னெடுந்தேரொடும் பவனி வந்தவன் - நல்லமணியாலும் பொன்னாலும் செய்யப்பட்ட நீண்டதேரிற்பவனி சென்ற சீராமன், துன்னெடுஞ்சீரையுஞ்சுற்றி-பொருந்திய நீண்டமரவுரியுமுடுத்து, மீண்டும் அப்பொன்னெடுந் தெருவிடைப் போதல்மேயினான் - பெயர்த்தும் அவ்வழகிய நீண்டவரசவீதியிற் செல்லத்தொடங்கினன்.—எ-று.

பவனிபோதல்-உலாப்போதல், நன்னெடுநளிர்முடி சூடவென்றார் 'உடைமாமகுடமென' முற்கூறுதனோக்கி. மீண்டுமென்பது வினைமாற்றுப் பொருள் பயப்பதோரிடைச்சொல். இதனான் இறைவனரச வீதியடைந்தமையுணர்த்தப்பட்டது. (கஅஎ)

(1) அஞ்சனமேனியிவ்வழகற்கெய்திய
வஞ்சனைகண்டபின்வகிர்ந்துநீங்கலா
நெஞ்சினும்வலிதுயிர்நினைப்பதென்சில
நஞ்சினும்வலியநந்நலமென்றார்சிலர்.

(இ - ள்.) சிலர் - சிலவர், அஞ்சனமேனி இவ்வழகற்கெய்திய - கரிய கோலத்தையுடைய இவ்வழகனுக்கமைந்த, வஞ்சனைகண்டபின் - வஞ்சனையைப்பார்த்தபின்னர், வகிர்ந்துநீங்கலா நெஞ்சினும் உயிர்வலிது - பிளந்து நீங்காத மனத்தினு முயிர்வலியது, சிலநினைப்பதென் - வேறுசில நினைப்பதுயாது; நந்நலம் நஞ்சினும்வலிய என்றார் - நம்முடைய நலம் விடத்தினுங் கொடியதென்றனர்.—

கரியகோலப் பிரானாகலின் 'அஞ்சனமேனியிவ்வழக' னென்றார். வஞ்சனை என்றது கைகேசி சூழ்வினையை. நலமென்றது அழகுமுதலியன வற்றை.

(2) மண்கொடுவருமெனவழியிருந்ததியாம்
எண்கொடுசுடர்வனத்தெய்தல்காணவோ
பெண்கொடுவினைசெயப்பெற்றநாட்டினிற்
கண்கொடுபிறத்தலுங்கடையென்றார்சிலர்.

(இ - ள்.) சிலர் - சிலவர், மண்கொடுவருமெனயாம் எண்கொடு வழியிருந்தது - அரசுபெற்றுச் சீராமன் வருமெனச் சிந்தைகொண்டு வரும்வழியிலிருந்தது, சுடர்வனத்தெய்தல் காணவோ-கிரணமிக்க கானிலடையக்காணவா, பெண்கொடுவினைசெயப் பெற்றநாட்டினில் - ஒரு பெண் கொடி

வினைசெய்து அரசினைப்பெற்ற நாட்டின்கண், கண்கொடு பிறத்தலுங் கடையென்றார் - கண்கொண்டு பிறப்பதுங்கடையென்றனர்.—

கைகேசிசூழ்வினையாற் பெற்றநாடாகலின் 'பெண்கொடு வினைசெயப் பெற்ற நா' டென்றும், அதிற்கண்கொண்டு பிறத்தலுந்தகுதியன்றென்பது கருதி 'கண்கொடு பிறத்தலுங் கடையென்று' ரென்றுங் கூறினார். (கஅகூ)

(3) முழுவதேபிறந்துலகுடையமொய்ம்பினேன்
உழுவைசேர்கானகத்துறைவென்யானென
எழுவதேயெழுதல்கண்டிருப்பதேயிழிந்
தழுவதேயழகிதிவ்வன்பென்றார்சிலர்.

(இ-ள்) சிலர்-சிலவர், முழுவதுபிறந்துலகுடைய மொய்ம்பினேன்-தான் பிறந்ததனானே யுலகேழுந்தன்னுரிமையாகவுடையவலியனாகிய சீராமன், உழுவை சேர்கானகத்துறைவென் யானென வெழுவதே- வேங்கைகள் வசிக்குங்காட்டிற்சேர்ந்துறைவேனெனநடப்பதே, எழுதல்கண்டிருப்பதே - அவ்வாறு நடப்பதைக்கண்டும் உயிருடனிருப்பதே, இவ்வன்பழகென்றார் - இவ்வன்பு அழகிதாமென்றுகூறினர்.—

அரசபரம்பரையின் முற்றோன்றலாய்த் தோன்றலின் 'முழுவதே பிறந்துலகுடைய மொய்ம்பினோ' னென்றார். ஈண்டு மொய்ம்பினோனென்றது சீராமனை. (ககூ0)

(4) வலங்கடிந்தேழையராயமன்னரை
நலங்கடிந்தறங்கெடநயக்கலீர்களுங்
குலங்கடிந்தான்வலிகொண்டகொண்டலை
நிலங்கடிந்தாளொடுநிகரென்றார்சிலர்.

(இ - ள்.) சிலர்-சிலவர், வலங்கடிந்து ஏழையராயமன்னரை-ஆற்றலையிழந்துவறுமையடைந்த அரசரை, நலங்கடிந்து அறங்கெடநயக்கலீர்கள்-நலத்தையறவேவிட்டு அறமொழியவிரும்பாதநீவிர், நுங்குலங்கடிந்தான்வலி கொண்ட கொண்டலை-நுமதுகுலத்தையறக் களைந்தவன் ஆற்றலைத்தவிர்த்தகொண்டல்போல்வானாகிய சீராமனை, நிலங்கடிந்தாளொடு நிகரென்றார் - நிலத்துரிமையடைய மாட்டாமைதவிர்த்த கைகேசியோடொப்பா மென்றனர்.—

கொண்டலென்றது சீராமனை; உருவகம். நுங்குலங்கடிந்தான் என்றது மழுவாளியாகிய விராமனை; அவனையேவென்றஆற்றலுடையானாகலின் 'வலிகொண்ட கொண்ட' லென்றார். நிலங்கடிந்தாளென்றது கைகேசியை.

(5) திருவரைசுற்றியசீரையாடையன்
பொருவருந்துயரினன்றொடர்ந்துபோகின்றான்
இருவரைப்பயந்தவளீன்றகான்முளை
ஒருவனேவிவற்கிவ்வுருறவென்றார்சிலர்.

(இ - ள்.) சிலர் - சிலவர், திருவரைசுற்றிய சீரையாடையன் - அழகிய வரையின்கண் சாத்தியமரவுரியாகிய வாடையையுடையானாய், பொருவருந் துயரினன் - தன்னொப்பில்லாத் துயரமேற்கொண்டு, இருவரைப்பயந்தவளீன்ற காளைதொடர்ந்து போகின்றான் - இரண்டுமக்களைப் பெற்றாளாகிய சுமித்திரைமகனாகியஇளையபெருமாள்தொடரச் செல்கின்றனன், இவற்கிவ்வூரொருவனோ உறவென்றார் - இவனுக்கிவ்வூரின் கணுற வொருவனேயோ வென்றனர்.—

இருவரென்றது இலக்குவசத்துருக்கரை; அவரைப் பயந்தவளென்றது சுமித்திரையை, காளை அன்மொழித்தொகை. இவற்கென்றது சீராமனை. தொடர்ந்து என்பது செயவெனெச்சந்திரிந்தது. (கக௨)

(6) முழுக்கலின்வலியநம்மூரிநெஞ்சினை
மழுக்களிற்பிளத்துமென்றேடுவார்வழி
ஒழுக்கியகண்ணினிற்கலுழியூற்றிடை
இழுக்கலில்வழுக்கிவீழ்ந்திடருற்றார்சிலர்.

(இ - ள்.) சிலர் - சிலவர், முழுக்கலின்வலியநம் மூரிநெஞ்சினை - பெருங்கற்பாறையினுந் திண்ணிதாயநங்கொடியமனத்தை, மழுக்களிற்பிளத்துமென்றேடுவார் - மழுக்களாற்பிளப்பா மென்றோடுவாராகி, வழிஒழுக்கியகண்ணினிற்கலுழி யூற்றிடை-வழியினொழுகவிட்டகண்ணீராகிய கலங்கலூற்றின்கண், இழுக்கலில்வழுக்கிவீழ்ந்திடருற்றார்-சேற்றிடத்து வழுக்கிவிழுந்து துயரமடைந்தனர்.—

கண்ணீர்மிகுதிபற்றிக் 'கலுழி யூற்றிடை' யென்றதென்க. நெஞ்சின்கடுமைபற்றி 'முழுக்கலின் வலியநம்மூரிநெஞ்' சென்றார். பிளத்து மென்றது தும்மீற்றுத் தன்மைப்பன்மை; செய்விப்பதன்மேற்று. (ககந)

(7) பொன்னணிமணியணிமெய்யிற்போக்கினர்
மின்னெனமின்னெனவிளங்குமெய்விலைப்
பன்னிறத்துகிலினைப்பறித்துநீக்கினர்
சின்னநுண்டுகிலினைப்புனைகின்றார்சிலர்.

(இ - ள்.) சிலர்-சிலவர், பொன்னணிமணியணி மெய்யிற்போக்கினர்-பொன்னாபரணத்தையும் இரத்தினாபரணத்தையு முடம்பினின்றுங் கழற்றியெறிந்து, மின்னெனமின்னெனவிளங்குமெய் விலைப்பன்னிறத்துகிலினைப் பறித்து நீக்கினர்-பலமின்னென்றேசொல்லலாம்படிவிளங்கும் மெய்ம்மையாகியவிலையுள்ள பலநிறவாடைகளைப் பறித்து நீக்கி, சின்னநுண்டுகிலினைப்புனைகின்றார் -சிறிதாகியநுண்ணியவாடையைப்புனையலாயினர்.—

அடுக்குப்பன்மை. போக்கினர், நீக்கினர் வினையெச்சமுற்று, போக்கி, நீக்கிப்புனைகின்றார்சிலரெனவினை முடிக்க. (ககச)

(3) நிறைமகவுடையவர்நெறிசெலைம்பொறி
குறைமககுறையினுங்கொடுப்பராருயிர்
முறைமகன்வனம்புகமொழியைக்காக்கின்ற
இறைமகன்றிருமனமிரும்பென்றார்சிலர்.

(இ-ள்.) சிலர்-சிலவர்,நிறைமகவுடையவர்நெறிசெலைம்பொறிகுறை மககுறையினுமாருயிர் கொடுப்பர்-புலனெறிகுறையாதநிறைந்தமக்களையுடையாரும் சிலமக்கள் புலனெறிகுறையினுந்தம் மாருயிரைக்கொடுப்பர், முறைமகன் வனம்புக-அரசமுறைமைக்குரியமைந்தனாகியசீராமன்கானிற்செல்ல, மொழியைக்காக்கின்ற இறைமகன் திருமனம்-தம்மனையவட்களித்த சொல்லைக்காக்கின்ற அரசனது அழகியமனம்,இரும்பென்றார்-இரும்பையொக்குமென்றனர்.

உயர்வுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. புலனெறிகுறைந்தமையென்றது மெய்வாய்கண் மூக்குச்செவிப்புல னொன்றொழிந்தமையை. அரசமாலையின் வருதலின் 'முறைமக' னென்றும், மனையவட்கு வரத்தையளித்தலின் 'மொழியைக்காக்கின்ற' வென்றும், அவ்வரத்தையளித்து மாற்றியிருந்தமையின் 'இரும் பென்று' ரென்றுங் கூறினர். மகசொல்லானஃறிணை. (கசுரு)

(9) வாங்கியமருங்குலார்வைத்தகொங்கையர்
பூங்கொடியொதுங்குவபோலொதுங்கினர்
ஏங்கியகையினரிணைந்தகாந்தளிற்
றாங்கியசெங்கைதந்தலைகண்மேலுளார்.

(இ - ள்.) வாங்கியமருங்குலார் - துவண்டஇடையாரும், வைத்த கொங்கையர்-பரந்தமுலையை யுடையாரு மாகிய மாதரார், ஏங்கிய'குரலினர்-அழுகுரலராய், இணைந்தகாந்தளில் தாங்கியசெங்கைதந்தலைகள் மேலுளார்-இணைந்த காந்தண்மலர்போல் நெருங்கிய செங்கையைத் தலைமேலுடையராய், பூங்கொடியொதுங்குவபோலொதுங்கினர் - பூங்கொடியொதுங்குவ போலொதுங்கிநின்றனர்.—

குரலினர், உளார்என்பனவினையெச்சமுற்று,இவைஒதுங்கினரென்னுந் தன் னெச்சங் கொண்டன. காந்தள் கைக்குவமை. (கசுசு)

(10) தலைக்குவட்டயன்மதிதவழுமாளிகை
நிலைக்குவட்டிடையிடைநின்றநங்கைமார்
முலைக்குவட்டிழிகணீராலிமொய்த்துக
மலைக்குவட்டகவுறுமயிலின்மாழ்கினார்.

(இ - ள்.) குவடுதலையயல் மதிதவழுமாளிகைநிலைகுவட்டிடையிடை - மலையினுச்சியில் மதியந்தவழுமனையின்மேனிலை யிடங்கடோறும், நின்றநங்கைமார் - நின்று கொண்டிருந்தமாதரார், முலைக்குவட்டிழி கணீராலிமொய்த்

துக - முலைத்தடத்திழிகின்றகண்ணீர்த்துளிவிடாது சிந்த, மலைகுவட்ட கவுறுமயிலின் மாழ்கினர் - மலைத்தலையிலாடு மயிற்பெடையெனவழுதனர்.

தலைக்குவட்டயல் மகிதவழுமாளிகை என்றதுயர்வு நவிற்சியணி. அடுக்குமிகுதிப்பொருளது. (கஙஎ)

(11) மஞ்செனவகிற்புகைவழங்குமாளிகை
எஞ்சலில்சாளரத்திரங்குமின்சொலார்
அஞ்சனக்கண்ணினீரருவிசோர்தரப்
பஞ்சரத்திருந்தழுங்கிளியிற்பன்னினர்.

(இ - ள்.) மஞ்சென அகில்புகைவழங்கும்மாளிகை - மேகம்போலஅகிற்கட்டையின் புகைவழங்கா நிற்குமனைகளின், எஞ்சலில் சாளரத்திரங்கும்இன்சொலார் - குறைவற்ற சாளரத்திடையே பார்த்திரங்குமினிய சொல்லையுடைய மாதரார், அஞ்சனக்கண்ணின்நீர் அருவிசோர்தர - மையிட்டகண்ணினின்று மருவிநீர்சோர, பஞ்சரத்திருந்தழுங்கிளியிற்பன்னினர் - கூடுகளிலிருந்தழுங் கிளியெனவழுதனர். —

புகைபடர்தல்கரிய மேகம்போற்றேன்றலின் 'மஞ்செனவகிற்புகைவழங்குமாளிகை'யென்றும், பஞ்சரத்துக்கிள்ளையழுதல்போல்மாத்ர்மனைவயினேங்கியழுதலின் 'பஞ்சரத்திருந்தழுங்கிளியிற் பன்னின' ரென்றுங் கூறினர்.')

(12) நன்னெடுங்கண்களினின்றநீர்த்துளி
தன்னெடுந்தாரைகடடத்தின்வீழ்தலான்
மன்னெடுங்குமரன்மாட்டழுங்கிமாடமும்
பொன்னெடுங்கண்குழித்தழுவபோன்றவே.

(இ-ள்.) நல்நெடுங்கண்களின் - அழகிய நீண்ட கண்களினின்றும், நான்ற நீர்த்துளி தன்னெடுந் தாரைகள்-வீழ்ந்தநீர்த்துளிகளின் பெருந்தாரைகள், தளத்தின்வீழ்தலான் - மேனிலையின் கண்விழுதலான், மன்னெடுங்குமரன் மாட்டு அழுங்கி - அரசர்பெருமான் பெரும்புதல்வனிடைவருந்தி, மாடமும் பொன்னெடுங்கண்குழித்து அழுவபோன்ற-மனையும் அழகியநீண்டகண்கள்குழிபடுத்தியழுவவொத்தன.—

இது தற்குறிப்பேற்றமென்னுமணி. மன்ஆகுபெயர். மன்னெடுங்குமரனென்றார் சீராமன் மன்னவர்மன்னன் முற்றேன்ற லாகலின். (கஙக)

(13) மக்களைமறந்தனர்மாதர்தாயரைப்
புக்கிடமறிந்திலர்புதல்வர்பூசலிட்
டுக்கனரயங்கினருருகிச்சோர்ந்தனர்
துக்கநின்றறிவினைச்சூறையாடவே.

(இ - ள்.) மாதர்மக்களை மறந்தனர்-மாதரார்தம்மக்களைமறந்தனர், புதல்வர் தாயரைப்புக்கிடம் அறிந்திலர் - மக்கள்தாயரடைந்த விடமறிந்திலர், துக்கநின்று உணர்வினைச்சூறையாட - அந்நகரமாந்தர்துயரநிலைத் தறிவைக் கொள்ளையிட, பூசலிட்டு மனம் உக்கனர் உயங்கினர் உருகிச்சோர்ந்தனர் - மிக்சொலித்து மனந்தளர்ந்துருகிச் சோர்ந்தனர்.—

துயரமறிவு முழுது மறைத்தலாற் 'றுக்க நின்றறிவினைச் சூறையாட' என்றார். தாயரைமக்களும், மக்களைத்தாயரு முறையேபுக்கிடமறியாது மயங்கினரென்பதாம். (உ00)

(14) காமரங்கனிந்தெனக்கனிந்தமென்மொழி
மாமடந்தையரெலாமறுகுசேர்தலால்
தேமருநறுங்குழற்றிருவினீங்கிய
தாமரையொத்தனதவளமாடமே.

(இ - ள்.) காமரம் கனிந்தாலென - சீகாமரமென்னும் பண்கனிந்தாற்போல, கனிந்தமென்மொழிமா மடந்தையரெலாமறுகுசேர்தலால் - இனிய மென் சொல்லையுடைய மாதரா ரெல்லாம் தெருவினடைந்ததனால், தேமருநறுங்குழல் திருவின்நீங்கிய - தேன்மருவிய நறுங்கூந்தலையுடைய திருமகளாலீங்கப்பட்ட, தாமரையொத்தன தவளமாடம் - தாமரைமலரை நிகர்த்தன வெண்சுதை தீற்றியமனைகள்.—

திருவன்னவ ராதலான் மாதர்நீங்கிய மாடங்களைத் 'திருவினீங்கிய தாமரையொத்தன' என்றார். தாமரை-ஆகுபெயர். காமரம்-பண்ணின்விசேடம், அது முதற்குறைந்துநின்றது. கனிந்தாலென்பது திரிந்து நின்றது. (உ0க)

(15) மழைக்குலம்புரைகுழல்விரிந்துமண்ணுறக்
குழைக்குலமுகத்தியர்குழாங்கொண்டேகினர்
இழைக்குலஞ்சிதறிடவேவுண்டோய்வுறும்
உழைக்குலமுழைப்பனவொத்தொர்பாலெலாம்.

(இ - ள்) ஏவுண்டோய்வுறும் உழைக்குலம் உழைப்பனவொத்து ஓர்பாலெலாம் - அம்புபட்டுவருந்தும் பிணைமான்கூட்டம் வருந்துவனவொத்தொர்புறமெல்லாம், குழைக்குலமுகத்தியர் மழைக்குலம் புரைகுழல்விரிந்து மண்ணுற இழைக்குலஞ்சிதறிடக் குழாங்கொண்டேகினர் - காதிற்சிறந்த குண்டலமணிந்தமடவார் மேகக்கூட்டமொத்த கூந்தல்விரிந்து நிலத்துவிழ அணிகளின்கூட்டஞ்சிதறத்திரள் கொண்டுசென்றனர்.—

முகமென்றது ஆகுபெயர். மடவார்வருந்திச் செல்வதை யேவுண்டுழைக்கு மான்பிணைக் குவமங்கூறினர்; அம்மாதரது கூந்தலைமழைக்குலத்துக்குவமை கூறினமை அவரதிளமையை விளக்குதற்கென்க. (உ0உ)

(16) கொடியடங்கினமனைக்குன்றங்கோமுர
சிடியடங்கினமுழக்கிழந்தபல்லியம்
படியடங்கலுநிமிர்பசுங்கண்மாரியாற்
பொடியடங்கினமதிற்புறத்துவீதியே.

(இ - ள்.) மனைக்குன்றம் கொடியடங்கின-மாளிகைகளாகிய மலைகள் கொடிகளை இழந்தன, கோமுர சிடியடங்கின-சிறந்தபேரிகைக ளடிபடுத லொழிந்தன, பல்லியம்முழக்கிழந்த - பலவாத்தியங்களு மோசையிழந்தன, மதிற்புறத்து வீதியடங்கலு நிமிர்பசுங்கண்மாரியால் பொடியடங்கின-மதிலின் புறத்துத்தெரு நிலமுழுதுமோங்கிய பசியகண்ணீராகிய மழையாற் றுகளொழிந்தன.—

இயமென்றது வாச்சியப்பொதுவை. முரசாகிய தோற்கருவியைக் கூறினமையான் ஏனைய கருவிகளைக்கூறாமை உபலக்கணத்தானமைக்க. பசுங்கணென்றமையான் அம்மாதரிளமைதோன்ற நின்றது; இழந்த என்றது சாரியைதவிர்ந்துநின்ற பலவின்படர்க்கை வினைமுற்று. கண்மாரி உருவகம்.

(17) அட்டிலுமிழந்தனபுகையகிற்புகை
நெட்டிலுமிழந்தனநிறைந்தபால்கிளி
வட்டிலுமிழந்தனமகளிர்கான்மணித்
தொட்டிலுமிழந்தனமகவுஞ்சோரவே.

(இ - ள்.) அட்டிலும்புகையிழந்தன - அடுமனையும் புகையிழந்தன, நெட்டிலும் அகிற்புகையிழந்தன - நீண்டமேனிலைகளு மகிற்புகையிழந்தன, கிளி பால் வட்டிலுமிழந்தன - கிள்ளைகள்பாற்கிண்ணங்களிழந்தன, மகவுஞ் சோர மகளிர்கான்மணித் தொட்டிலுமிழந்தன-சிறார்வருந்த ஒளிகாலும் மணித்தொட்டில்களு மாதரார் வருகையிழந்தன.—

புகையெனவாளாகூறியது அட்டில் மனைகடோறும் வல்சிசமைத்தற்கிடும் புகையை; அகிற்புகை அவர் கூந்தலினீரம்புலர்த்து மகிற்கட்டையின் புகையை. கான்மணித்தொட்டிலென்பதற்குக் காலையுடையவெனினுமாம். வருகை என்பது சொல்லெச்சம். (உ0௪)

(18) ஒளிதுறந்தனமுகமுயிர்துறந்தெனத்
துளிதுறந்தனமுகிற்றொகையுந்தூயநீர்த்
தளிதுறந்தனபரிதானயானையுங்
களிதுறந்தனமலர்க்கள்ளுண்வண்டினே.

(இ-ள்.) முகம்உயிர்துறந்தாலென ஒளிதுறந்தன-முகம் உடலினின்றும் உயிர்நீங்கினாலொப்ப ஒளியையிழந்தன, முகில்தொகையும் துளிதுறந்தன-மேகத்தின் கூட்டமும் துளித்தலையிழந்தன, பரிதூயநீர்த்தளிதுறந்தன-குதிரைகளும் தூயதண்ணீர்த்துறைகளையிழந்தன, கள்ளுண்வண்டின்தான யானையும் களிதுறந்தன-மதவுண்டவண்டேபோன்மதயானைகளும்களிப்பினையிழந்தன.

உயிர்நீங்கியவழி உடம்புபிணமெனப்பட்டு ஒரு பொருளாகமதிக்கப்படாமையான தனையேயுவமைகூறினார். முகந்தன்னுள்ளத்தின் றுயரத்தைக்காட்டினமையான் ஒளியிழந்தனவென்றதென்க; இதனை ¶ "யாதுமுகம்போலமுன்னுரைப்பதில்" என்பதனானுணர்க. (உ௦௫)

(19) நிழல்பிரிந்தனகுடைநெடுங்கணேழையர்
குழல்பிரிந்தனமலர்குமரர் தாளிணை
கழல்பிரிந்தனசிலைக்காமன்வாளியும்
அழல்பிரிந்தனதுணைபிரிந்தவன்றிலே.

(இ - ள்.) குடைநிழல்பிரிந்தன - குடைகணிழலைநீங்கின, நெடுங்கண் ஏழையர்குழல் மலர்பிரிந்தன - நீண்டகண்ணையுடைய மாதரார் கூந்தன்மலரை நீங்கின, குமரர்தாளிணைகழல்பிரிந்தன-வீரர்இருகால்களுஞ்சிலம்பைநீங்கின, சிலைக்காமன்வாளியும் அழல்பிரிந்தன-வில்லையுடைய மன்மதன் அம்புந்தீயை நீங்கின, துணைபிரிந்த அன்றில் - அன்றில்கள் பெடையை நீங்கின.—

அந்நகரத்துமாதர் சீராமன் பிரிவான் தங்கணவனைப்பிரிந்தாலெய்திய துயரெய்திக்காதலையெய்தாமையின் 'காமன்வாளியுமழல் பிரிந்தன' வென்றதென்க. காமத்தை விளைவிப்பவனென்பதுபற்றி மன்மதனை அவ்வாறு கூறுப. பறவையினமு மவ்வாறுதுயரெய்தினவென்பதற்குத் 'துணைபிரிந்தவன்றி' லென்றார். (உ௦௬)

(20) தாரொலிநீத்தனபுரவிதண்ணுமை
வாரொலிநீத்தனமழையின்விம்முறும்
தேரொலிநீத்தனதெருவுந்தெண்டிரை
நீரொலிநீத்தனநீத்தம்போலவே.

(இ - ள்.) புரவிதாரொலிநீத்தன - குதிரைகள் கிங்கிணிமாலையினொலியைநீங்கின, தண்ணுமைவாரொலிநீத்தன-பேரிகைவாரொலியைநீங்கின, மழையின்விம்முறும் தேரொலிதெருவும் நீத்தன - மேகத்தினொலியின் விம்முறுந் தேர்களினொலியைத் தெருக்களுநீங்கின, நீத்தம்போலத் தெண்டிரை நீரொலிநீத்தன - கடல்போன்றுதெள்ளிய வலைகளையுடைய நீரொலிநீங்கின.

தாரென்னும் பலபொருளொருசொல் ஈண்டுக்கிங்கிணிமாலையை யுணர்த்திற்று. உருளையுரைத்தோடலான் மழையின்விம்முறுந்தேரொலியென்றார்.

(21) முழவெழுமொலியிலமுறையின்யாழ்நரம்
பெழவெழுமொலியிலவிமைப்பில்கண்ணினர்
விழவெழுவொலியிலவேறுமொன்றில
அழவெழுமொலியிலவரசர்வீதியே.

¶ நான்மணிக்கடிகை. செ-சகூ

(இ - ள்.) முழவெழுமொலியில-முழவினாலாகிய ஓசையடங்கின, முறையின்-முறைமையான், நரம்பெழவெழுமொலியில - நரம்பெழவெழுகின்ற வொலியடங்கின, இமைப்பில்கண்ணினர் விழவெழுமொலியில - இமைத்தலில்லாத கண்ணினையுடையார் விழாவெழுகின்றவொலியடங்கின, வேறுமொன்றில-வேறொன்று நிகழ்ந்தில, அரசர் வீதி அழவெழுமொலியில-அரசர் தெரு அழுகையாலெழுமொலியடங்கின.

'இமைப்பில் கண்ணின' ரென்றார்தேவரை; அவர் இமையா நாட்டமுடையாராகலின்; இதனை ¶ "நுதலதிமையா நாட்ட" மென்பதனானறிக. விழவென்றது நைமித்திமாகியசிறப்பினை. 'வேறுமொன்றில' என்றது விருந்துமுதலியன நிகழாமையும், அறச்சாலையின்கண் தருமமுதலியன நடவாமையுமாம். அரசவீதியின் துயரமிகுதியுமுணர்த்த'அழவெழுமொலியிலவரசர் வீதி' என்றார். (உ0அ)

(22) தெள்ளொலிச்சிலம்புகள்சிலம்புபொன்மனை
நள்ளொலித்திலநளிர்கலையுமன்னவே
புள்ளொலித்திலபுனல்பொழிலுமன்னவே
கள்ளொலித்திலமலர்களிறுமன்னவே.

(இ-ள்.) தெள்ளொலி சிலம்புகள்சிலம்பு பொன்மனைநள்ளொலித்தில-தெளிந்த ஓசையையுடைய சிலம்புகள்அவைதாமொலிக்கு மழகியமாளிகைநடுவில் ஒலித்தில, நளிர்கலையுமன்ன-பெரிதாகிய மேகலையுமத்தன்மைய, புள்ளொலித்திலபுனல்-நீரிடைப்பறவைகளொலித்தில, பொழிலுமன்ன-சோலையுமத்தன்மைய, மலர்கள்ளொலித்தில-மலரின்கண் வண்டொலித்தில, களிறுமன்ன - களிறுமத்தன்மைய.—

மேகலை-என்றது முதற்குறைந்து நின்றது. அன்ன-பலவின்படர்க்கைக் குறிப்பு முற்று. பொன்மனை யென்பதற்கழகியமனையென்பதன்றித் திருவீற்றிருக்குமனையெனினும்,அன்றிச்செல்வம்பொருந்தியமனையெனினுமமையும்

(23) செய்ம்மறந்தனபுனல்சிவந்தவாய்ச்சியர்
கைம்மறந்தனபசுங்குழவிகாந்தெரி
நெய்ம்மறந்தனநெறியறிஞர்யாவரும்
மெய்ம்மறந்தனரொலிமறந்தவேதமே.

(இ-ள்.) செய்மறந்தன புனல்-வயல்கள் நீர்நீங்கப்பெற்றன, சிவந்தவாய்ச்சியர்கை மறந்தன பசுங்குழவி-சிவந்தவாயையுடையமாதரார்கை இளங்குழந்தை நீங்கப்பெற்றன-காந்தெரிநெய்மறந்தன-சுடர்கின்ற தீநெய்நீங்கப்பெற்றன - நெறியறிஞர்யாவரும்மெய்மறந்தனர் - நன்னெறியிற்படரு மறிவுடையார் பலரும்தம்முடம்பு மறக்கப்பெற்றனர், ஒலிமறந்தவேதம் - வேதங்களும் ஓசைநீங்கப்பெற்றன.—

செய்யென்றது விளைநிலத்தினை. பசுங்குழவியென்றது இளங்குழந்தையை, வேதவொலியென்பன உதாத்தம், அநுதாத்தம், சுவரிதமென்பவற்றினை. (உகo)

¶ அகநானூறு, கடவுள்வாழ்த்து.

(24) ஆடினரழுதனரமுதவேழிசை
பாடினரழுதனர்பரிந்தகோதைய
ரூடினரழுதனருயிரினன்பரைக்
கூடினரழுதனர்குழாங்குழாங்கொடே.

(இ - ள்.) குழாங்குழாங்கொடு - மிகுந்தகூட்டமாகநின்று, ஆடினர் அழுதனர் - ஆடல்புரிந்தவர் அழுதனர், அமுதவேழிசைபாடினர் அழுதனர் - அமிழ்தினுமினிதாகிய ஏழிசைகளைப்பாடிநின்றவர் அழுதனர் - பரிந்தகோதையர் ஊடினர் அழுதனர் - நீக்கியமலர்மாலையுடையராய் ஊடல் கொண்டவர் அழுதனர், உயிரினன்பரைகூடினர் அழுதனர் - உயிரினுஞ் சிறந்தகணவரைப்புணர்ந்தமாதர் அழுதனர்.—

'அமுதவேழிசை' யென்றார் அமுதமயமாகலினென்க. ஏழிசையென்பன இளி, குரல், துத்தமுதலியன. உயிரினன்பரென்றது உயிரன்னவராகியகணவரை. அடுக்குமிகுதிப்பொருளது. ஊடலென்றது கலவிச்சுவைமிகுதற்குப் பிணங்குதல்; அற்றாகலினன்றே * "ஊடுதல் காமத்திற் கின்ப" மென்றாரென்க. பரிந்தகோதையரென்றது மாலையையெறிந்தவரை.

(25) நீட்டிலகளிறுகைந்நீரின்வாய்ப்புதல்
பூட்டிலபுரவிகள்புள்ளும்பார்ப்பினுக்
கீட்டிலவிரைபுனிற்றீன்றகன்றையும்
ஊட்டிலகறவைகன்றுருகிச்சோர்ந்தவே.

(இ - ள்.) களிறுநீரின்கைநீட்டில-யானைகள் நீரிடைக்கையைநீட்டில, புரவிகள்வாய்புதல்பூட்டில-குதிரைகள் வாயிடைப்புல்லிடப்பெற்றில, புள்ளும் இரைபார்ப்பினுக்கீட்டில - பறவைகளும் பார்ப்புக்கிரையைத்தேடுதலொழிந்தன, கறவைஈன்றபுனிறுகன்றையும் ஊட்டில - பசுக்களும் ஈன்ற இளங்கன்றையும் பாலூட்டுதலொழிந்தன, கன்று உருகிசோர்ந்த-ஆதலாற் கன்றுகளும் உருகித்தளர்ந்தன.—

†"பார்ப்பும்பிள்ளையும் பறப்பவற்றிளமை"என்றாராகலின், 'பார்ப்பினுக் கீட்டில விரை' யென்றதென்க. கையென்றது புழைக்கையை. கறவையென்றதுபசுவினை. (உகஉ)

(26) மாந்தர்தமொய்ம்பினின்மகளிர்கொங்கையாம்
ஏந்திளநீர்களும்வறுமையெய்தின
சாந்தமம்மகிழ்நர்தம்முடியிற்றையலார்
கூந்தலின்வறுமையமலரின்கூலமே.

(இ - ள்.) மாந்தர்தம்மொய்ம்பினில் மகளிர் கொங்கையாம் ஏந்திளநீர்களும் சாந்தம் வறுமையெய்தின - ஆடவர்மார்பிடை மங்கைமார் ஏந்

* திருக்குறள். செ-க௩௩௰. † தொல்-பொருள்.-சூ-கூ௰.

துகின்ற தெங்கங்காயன்ன கொங்கைகளும் சாந்தால்வறுமையடைந்தன, அம் மகிழ்நர்தம்முடியின் - அக்கணவர்முடியிடையும், தையலார்கூந்தலின்-மாதர் குழலிடையும், மலரின்கூலம்-மலர்க்கூட்டம், வறுமைய-இன்மையெய்தின.

மொய்ம்பென்றது மார்பினை; ஆகுபெயர். இளநீர்கொங்கைக்குவமை. வறுமையெய்தினவையென்றதுவறுமையையடைந்தமையை. வறுமையபலவின் படர்க்கைக் குறிப்புமுற்று. மகிழ்நர், கொழுநர், கணவரென்பன ஒருபொருளுதலிய சொல். சாந்தமென்றது நறுங்குவட்டினை. (உகரு)

கலிநிலைத்துறை.

(27) ஓடைநல்லணிமுனிந்தனவுயர்களிறுச்சி
சூடைநல்லணிமுனிந்தனதொடர்மனைகொடியின்
ஆடைநல்லணிமுனிந்தனவம்பொன்செயிஞ்சி
பேடைநல்லணிமுனிந்தனமென்னடைப்பிறவம்.

(இ - ள்.) உயர்களிறு ஓடை நல்லணிமுனிந்தன-உயர்வாகியயானைகள் நெற்றிப்பட்டமாகிய நல்லவழகை வெறுத்தன, தொடர்மனை உச்சி சூடை நல்லணிமுனிந்தன - நெருங்கியுளதாய மாளிகை சிகரமாகிய நல்லவழகை வெறுத்தன, அம்பொன்செய் இஞ்சிகொடியின் ஆடைநல்லணி முனிந்தன- அழகிய பொன்னுலாக்கப்பட்டமதில் கொடியாடையாகிய நல்ல வழகை வெறுத்தன, மென்னடைப்பிறவம் பேடை நல்லணி முனிந்தன-மென்மையாகிய நடையையுடைய புறுக்கள் பெடையாகிய நல்லவழகை வெறுத்தன.

பிறவம் எனினும் புறவமெனினுமமையும். சூடை-வடசொற்சிதைவு. பேடை, பெடை பெண்பறவையை யுணர்த்தும் மரபுப்பெயர். (உகச)

(28) திக்குநோக்கியதீவினைப்பயனெனச்சிந்தை
நெக்குநோக்குவோர்நல்வினைப்பயனெனநேர்வோர்
பக்கநோக்கலென்பருவரலின்பமென்றிரண்டும்
ஒக்கநோக்கியயோகருமருந்துயருழந்தார்.

(இ-ள்.) திக்குநோக்கியதீவினைப்பயனெனசிந்தைநெக்குநோக்குவோர்- ஆதரவுபற்றிய தீவினையின் பயனென்று மனநெகிழ்ந்தாராய்வோரும், நல்வினைப்பயனெனநேர்வோர் - நல்வினையின்பயனென்று ஆராய்வோருமாகிய இவ்விருவர், பக்கநோக்கலென் - பக்கத்தே நின்றாராய்வதிற் பயனில்லை, பருவரலின்பமென்றிரண்டு மொக்க நோக்கியயோகரும்-துன்பவின்ப மென்னும் இரண்டினையும் சமமாகவெண்ணும் யோகியரும், அருந்துயருழந்தார் - அருந்துயரமுழந்தினர்.—

தன்காலம் வருந்துணையும் புலனாகாது உயிரைப்பற்றி நின்று அதுவந்துழியுருப்பதாகலான் 'திக்குநோக்கியதீவினைப்பய'னென்றதென்க. பக்கம் வடசொற்சிதைவு. உம்மை இரண்டில் முன்னது முற்று, பின்னது இறந்தது

தழீஇயதனோடுயர்வுசிறப்பு. தீவினைப்பயன் நல்வினைப்பயனென்பன பருவரலின்பமென்பனவாம். இன்பத்துன்பக் கூறுபாடுகளைநோக்குவார் சீராமன் காடுபோந்தமை கேட்டாங்குவருந்துதனியதி, அவ்விரண்டனையு நீத்தாரும் அருந்துயருழத்தலின் 'பக்கநோக்கலென்'என்றும்,இன்பத்துன்பக் கூறுபாடுகளைத்துவரக்கெடுத்தார் நிரதிசயவின்பமாகிய வீடுபேற்றினையே நோக்குவார்; அவ்வீடுபேற்றினை யுதவுவானே சீராமனாகலின் அவனது நீக்கம் நோக்கிய வழியோகரும் வருந்தினாரென்பதுபற்றி 'யோகருமருந்துயருழந்தா' ரென்றுங்கூறினார். (௨௧௫)

(29) ஒவினல்லுயிருயிர்ப்பினோடுடல்பதைத்துலைய
மேவிநல்லழகெழில்கெடவிம்மனோய்விம்மத்
தாவிலைம்பொறிமறுகுறத்தயரதனென்ன
ஆவிநீக்கின்றதொத்ததவ்வயோத்திமாநகரம்.

(இ - ள்.) அவ்வயோத்திமாநகரம் - அவ்வயோத்தியாகிய பெரியநகரம், ஒவில்நல்லுயிர் உயிர்ப்பினோடு உடல்பதைத்துலையமேவி - நீங்குதலில்லாத இனிய உயிர் உயிர்ப்போடுடம்பு பதைத்துவருந்துதல்பொருந்தி, நல்லழகெழில்கெடவிம்மனோய்விம்ம-நன்மையாகிய மிக்கவழகொழியவும் துன்பத்தைத் தரும்பிணிஅதிகப்படவும், தாவிலைம்பொறிமறுகுற - கேடில்லாதவைம்பொறிகளுங் கலங்கவும், தயரதனென்ன ஆவிபோகின்றதொத்தது-தயரதனென்னுமரசர்பெருமான்போல உயிர்நீங்குகின்ற தொத்திருந்தது.—எ-று

உயிர் நித்தமென்னுமதம்பற்றி 'ஒவில்' என்றும், அதனையினிமையாகக்கருதல்பற்றி 'நல்லுயி'ரென்றுங் கூறியதென்க. அழகெழில் ஒருபொருட் பன்மொழி. பொறியைந்து நிலைகலங்குதல் சரமதசைக்கண்ணாகலின் 'தாவிலைம்பொறிமறுகுற' என்றார். அது அந்நகரமாந்தர் காதல் 'எமதுயிருடனேழ்-மகிதலமு முதையுமுறுகவிமலரோன், 'உகுபகலளவெனவுரை நனிபுரிவார்' என முற்காண்டத்துக் கூறுதனோக்கியென்க. இவ்விருபத்தொன்பது செய்யுளானு மந்நகரடைந்த துயரமுணர்த்தப்பட்டது. (௨௧௬)

உயங்கியந்நகருலைவுறவொருங்குழைசுற்ற
மயங்கியேங்கினர்வயின்வயின்வரம்பிலர்தொடர
இயங்குபல்லுயிர்க்காருயிரெனநின்றவிராமன்
தயங்குபூண்முலைச்சானகியிருந்துழிச்சார்ந்தான்.

(இ - ள்.) அந்நகர் உயங்கி உலைவுறவொருங்குழைசுற்ற - அந்நகரமாந்தர் மனத்தளர்ச்சியுடையராய் வருந்தவும் ஒருவந்தம்பக்கத்திற் சுற்றவும், வரம்பிலர்வயின்வயின்மயங்கியேங்கினர்தொடர-அளவிறந்தார் பலவிடங்களினு மயக்கமடைந்தேங்கிப்பின்தொடரவும் - இயங்குபல்லுயிர்க்காருயிரென நின்ற இராமன் - பலவாகிய சென்றுவாழ்கின்ற அரிதாயவுயிர்கட்குயிரென நின்ற

சீராமன், தயங்குபூண்முலை சானகியிருந்துழிசார்ந்தான் - விளங்குமணிகளை யணிந்த தனங்களையுடைய சனகியிருந்த விடத்தணைந்தனன்.— எ-று.

அடுக்குப்பன்மை. 'உயிர்க்கென்புழி முற்றும்மைவிகாரத்தாற்றொக்கது. 'உயங்கி யந்நகருலைவுற என்றது' வகிர்ந்து நீங்கலாநெஞ்சினும் வலிதுஎன் பது முதலியன.பல்லுயிரையுமியக்குபவனுகலின்'பல்லுயிர்க்காருயிரெனநின் றவிராம' னென்றார். ஏங்கினர் வினையெச்சமுற்று. இதனுற் சனகியிருக்கை யைச் சீராமனடைந்தமை யுணர்த்தப்பட்டது. (உகஎ)

அழுதுதாயரொடருந்தவரந்தணரரசர்
புழுதியாடியமெய்யினர்புடைவந்துபொருமப்
பழுதுசீரையினுடையினன்வரும்படிபாரா
எழுதுபாவையன்னுண்மனத்துணுக்கமொடெழுந்தாள்.

(இ - ள்.) தாயரொடு அருந்தவர் அந்தணர் அரசர் - தாய்மாரொடும் அரிதாகிய தவமுடையாரும் அழகியதட்பமாகிய குணமுடையாரும் அரசரும், அழுது புழுதியாடியமெய்யினர் - அழுநின்று புழுதிபடிந்த வுடம்பினராய், புடைவந்துபொரும - பக்கத்தே நெருங்கிவந்து வருந்தாநிற்ப, பழுதுசீரையி னுடையினன்-குற்றமமைந்த மரவுரியாகிய வாடையையுடையானுகி, வரும் படிபாரா-வரும்படிபார்த்து, எழுதுபாவையன்னுள் மனத்துணுக்கமொடெ ழுந்தாள்-சித்திரத்தெழுதியபாவைபோல்பவளாகிய சனகி மனக்கிலேசத்தோ டுமெழுந்தனள்.—எ-று.

சீராமன் மணிமுடிபுனையாது கொண்ட கோலங்கண்டு வருந்துதலே ன்றச் சனகியை 'எழுதுபாவையன்னுள்' என்றார். மாயாப்பழி யாடரும்வற் கலையாகலின் 'பழுது சீரையினுடையினன்' என்றதென்க. சீரையினுடை யினன் இன் அல்வழிச்சாரியை. இதனுற் சனகி துயரத்தொடெழுந்தமை யுணர்த்தப்பட்டது.

எழுந்தநங்கையைமாமியர்தழுவினரேங்கிப்
பொழிந்தவுண்கணீர்புதுப்புனலாட்டினர்புலம்ப
அழிந்தசிந்தையளன்னமிதின்னதென்றறியாள்
வழிந்தநீர்நெடுங்கண்ணினள்வள்ளலைநோக்கி.

(இ - ள்.) எழுந்த நங்கையை - எழுந்த சனகியை, மாமியர்தழுவின ரேங்கி - மாமிமார் தழுவியழுது, பொழிந்த உண்க ணீர்புதுப்புன லாட்டி னர் புலம்ப - சிந்தி யமையுண்ட கண்ணீராகிய புதிய நீரை யாட்டிப் புலம் பாநிற்ப, அழிந்த சிந்தையள் - மனமழிந்த சனகியாகிய, அன்னம் இது இன் னது என்று அறியாள்-அன்னம்போல்பவள் இதுஇன்னதென்றறியாளாகி, வழிந்த நீர்நெடுங்கண்ணினள்-வழிந்த நீரையுடைய நீண்ட கண்ணையுடைய ளாகி, வள்ளலைநோக்கி - வள்ளியோனுகிய சீராமனைப்பார்த்து.—

உண்கண்-மையுண்டகண்; இதனை ¶ "இருநோக்கிவளுண்கண்" என்புழிப்பரிமேலழகர்கூறலானுங்காண்க. அன்னம்-ஆகுபெயர், வள்ளல் என்பதுமது. 'எழுதுபாவை யன்ன'ளென்பதை வற்புறுத்த 'அழிந்தசிந்தையள்' என்றதென்க. ஆட்டினர் வினையெச்சமுற்று. அறியாளென்பதுமது. உள்ளத்தமைந்த துன்பமருவப்பொருளாதலின் அதனை வெளிப்படுப்பது கண்ணீரென்பது காட்ட 'வழிந்த நீர் நெடுங்கண்ணினள்' என்றார். (உகக)

கலிவிருத்தம்.

பொன்னையுற்றபொலன்கழலோய்புகழ்
மன்னையுற்றதுண்டோமற்றிவ்வன்றுயர்
என்னையுற்றதியம்பென்றியம்பினாள்
மின்னையுற்றநடுக்கத்துமேனியாள்.

(இ-ள்.) மின்னையுற்றநடுக்கத்துமேனியாள் - மின்னலைப்போன்ற நடுங்குதலையுடையமேனியளாகியசனகி, பொன்னையுற்றபொலன்கழலோய்-பொன்னினாகிய சிலம்பணிந்த சீராமனே, புகழ்மன்னை இவ்வன்றுயர் உற்றதுண்டோ - புகழினையுடைய அரசனை இக்கொடியதுயர மடைந்ததுண்டோ, என்னையுற்றது இயம்பென்றியம்பினாள்-யாதுநேர்ந்தது சொல்லென்று கூறினள்—.எ-று.

மின்னையுற்றநடுக்கத்துமேனியாளென்பதனை 'அழிந்தசிந்தையாள்'என்றதற்குரைத்தாங்குரைத்துக்கொள்க. வெற்றியையுடையவனாகியநீயின்னற்கோலங்கொண் டெய்தியதென்னென்பாள் 'பொன்னையுற்றபொலன்கழலோய்' என்றாள். மற்று-அசைநிலை. இவ்விரண்டு செய்யுளானும் சீராமனை நோக்கி நினக்கென்னை நேர்ந்ததென வினாவினமை யுணர்த்தப்பட்டது. (உஉ0)

பொருவிலெம்பிபுவிபுரப்பான்புகல்
இருவராணையுமேந்தினெனின்றுபோய்க்
கருவிமாமழைக்கற்கடங்கண்டுநான்
வருவெனீண்டுவருந்தலைநீயென்றான்.

(இ-ள்.) பெருவில் எம்பிபுவிபுரப்பான் - ஈடுமெடுப்புமில்லாத என் தம்பி நிலத்தைப்புரக்க, புகல் இருவராணையுமேந்தினென் - சொல்லப்பட்ட தாய் தந்தையரிருவர் கட்டளையையுந் தலைமேற்கொண்டேன், இன்றுபோய் கருவிமாமழை கல்கடம்கண்டு - இன்றுபோய் மின்னுமுழக்கு முதலாயவற்றது தொகுதியுமுடைய பெரியமழைதங்கிய மலையையும் காட்டையும் பார்த்து, நான்வருவென் - நான்மீள்வேன், ஈண்டுவருந்தலை நீயென்றான் - இங்கிருந்துநீ வருந்தலையொழி யென்றனன்.—எ-று.

'நிறைகுணத்தவனின்னினுநல்லனால்' எனப்பிறகூறுதற்கேற்பப் 'பொருவிலெம்பி' யென்றும் தான்காடுசேறல்இருமுது குரவரேவ லென்பார் 'இருவராணையு'மென்றுங்கூறினார். ‡ "கருவிதொகுதி" யென்னுஞ்சூத்திரத்துச்சேனாவரையரையுள்ளிட்டார் மின்னுமுழக்குமுதலாயவற்றினதுதொகுதியுமென்பதனானும், $ "கருவிவான" மெனக்காட்டுரைப்பதனானும்உலகத்துக்குத்துணைக்காரணமென்பதுபோலியுரையென்க. மலையும்காடுமேயிவர்சேறனோக்கிக்

¶ திருக்குறள்-செ. க0கக ‡ தொல், சொல்-ஙருஈ.
$ சிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகம். செ-உஙங.

'கற்கட' மென்றதென்க.என்பணிகற்கடங்கண்டுவருதலாகலின் இங்ஙென ன் பிரிவுநோக்கி யாற்றியிருவென்பதற்கு 'வருந்தலை நீ' யென்றதென்க. இதனாற் சீராமன் இருமுது குரவரேவலாற் கற்கடங்கண்டு வருவேனென்ப துணர்த்தப்பட்டது. (உஉக)

நாயகன்வனநண்ணலுற்றானென்றும்
மேயமண்ணிழந்தானென்றும்விம்மலள்
நீவருந்தலைநீங்குவென்யானென்ற
தீயவெஞ்சொல்செவிசுடத்தேம்புவாள்.

(இ - ள்.) நாயகன் வனம் நண்ணலுற்றானென்றும்-தன்கணவன் காடு போகத் துணிந்தானென்றும், மேயமண்ணிழந்தானென்றும் விம்மலள்-தன க்கேயுரித்தாகிய அரசுரிமையிழந்தா னென்றும் வருந்தாமல், நீவருந்தலை நீங்குவென்யான் - நீவருந்தாதொழி யானிற்பிரிவேன், என்றதீயவெஞ் சொல் செவிசுடத்தேம்புவாள்-என்று கூறிய சாலக்கொடிய சொல்செவியை வருத்தவருந்துவாள்.—எ-று.

'நாயக'னென்றது சீராமனை. 'தீயவெஞ்சொ'லென்றது 'நீவருந்தலைநீங் குவென்யா' னென்பதனை. தீயவெஞ்சொல்ஒருபொருட்பன்மொழி. 'மண்' என்றது அரசுரிமையை. இதனாற் சனகி நிற்பிரிவே னென்பதற் கிரங்கின மை யுணர்த்தப்பட்டது. (உஉஉ)

துறந்துபோமெனச்சொற்றசொற்றேறுமோ
உறைந்தபாற்கடற்சேக்கையுடனீஇ
அறந்திறம்புமென்றையனயோத்தியிற்
பிறந்தபின்பும்பிரிவிலளாயினாள்.

(இ-ள்.) உறைந்த பாற்கடற் சேக்கையுடனீஇ-தாம் வசித்தபாற்கடலா கியபடுக்கையையுடனீங்கி,அறந்திறம்புமென்று-தருமமார்க்க மாறுபடு மென க்கருதி, ஐயன் அயோத்தியிற்பிறந்த பின்பும்-இறைவன் அயோத்தியில் அவ தரித்த பின்னரும், பிரிவிலளாயினாள் - சனகியாகத் திருவவதரித்தும் பிரி யாதிருப்பவள், துறந்துபோமெனச் சொற்ற சொல்தேறுமோ - நீங்கிட்போ மெனக்கூறிய சொல்கேட்டாற்றியிருப்பளோ.—எ-று.

சீராமனாகத்திருவவதரித்தது பாற்கடற் பரமனாகலானும், அவனுடன் அறத்தை நிறுத்தற்பொருட்டுத்தானு முடனவதரித்தலானும் 'கருங்கடற்ப ள்ளியுட் கலவி நீங்கிப்போய்ப் - பிரிந்தவர் கூடினாற்பேசவேண்டுமோ' என முற்காண்டத்துக் கூறிப்போந்ததனைவற்புறுத்த 'உறைந்தபாற்கடற் சேக் கையுடனீஇ - அறந்திறம்பு மென்றையனயோத்தியிற் - பிறந்தபின் பும் பிரிவிலளாயினாள்' என்றார். ஓகாரமெதிர்மறை. போம் என்றது செய்யுமென்முற்று, இதுகவிக்கூற்று. (உஉரு)

அன்னதன்மையளையனுமன்னையும்
சொன்னசெய்யத்துணிந்ததுதூயதே
என்னையென்னையிருத்தியென்றானென
உன்னவுன்னவுயிருமிழாநின்றாள்.

(இ - ள்.) அன்னதன்மையள் - அத்தன்மையளாய சனகி, ஐயனுமன்னையும் சொன்ன செய்யதுணிந்தது தாயதே - இருமுதுகுரவரும் சொன்னவற்றைச் செய்யத்துணிந்தது தூயதன்மையதே, என்னை என்னையிருத்தியென்றான் - என்னை யீண்டிரு வென்றனன், எறு உன்ன உன்னஉயிருமிழாநின்றாள் - என்றுபன்முறை யெண்ணப் பெருமூச்செறியாநின்றனள்.—

தந்தைதாயர் வாக்கிய பரிபாலனஞ்செயல் மக்களாவார் கடனாகலான் 'ஐயனு மன்னையுஞ்-சொன்ன செய்யத்துணிந்தது தூயதே' என்றாள். அடுக்கு பன்மை. 'என்னையிருத்தி' என்றது கழிபெருந்துன்பம்பயத்தலான் 'உன்ன வுன்ன வுயிருமிழா நின்றாள்' என்றார். "அதனைக்கேட்டு நெட்டுயிர்ப்பெறிதலி னென்க. இதனாற் சீராமன் கான்போதலைச் சனகிக்குணர்த்திய துணர்த்தப்பட்டது. (உஉச)

வல்லரக்கரின்மால்வரைபோய்வீழ்ந்
தல்லரக்கினுருக்கழல்காட்டயற்
கல்லரக்குங்கடுமையவல்லநின்
சில்லரக்குண்டசேவடிப்போதென்றான்.

(இ - ள்.) நின்சில் அரக்கு உண்டசேவடிபோது - நின்னுடைய இரண்டாகிய செம்பஞ்சூட்டிய செந்தாண்மலர்கள், வல்லரக்கரின்மால்வரை போய் வீழ்ந்து - கொடிய அரக்கர்போல் பெரியமலையிற் சென்று விழுந்து, அல் அரக்கின் உருக்கு-இரவின்கண்ணும் அரக்கினுருக்கு, அழல்காட்டு அயல்கல்-வெப்பங்காட்டு மயலிற் கல்லிடத்து, அரக்குங்கடுமையவல்ல-வருத்துங் கடுமையுடையனவல்ல, என்றான்-என்றுகூறினன்.—எ-று.

இன் ஒப்பொருஉ. * "அனிச்சமு மன்னத்தின் றூவியுமாதரடிக்கு நெருஞ்சிப்பழம்' என்பவாகலின் 'மால்வரைபோய்வீழ்ந்தல்லரக் கினுருக்கழல் காட்டயற், கல்லரக்குங்கடுமையவல்ல' என்றான். சில - என்பதற்குச் சிலவிளரீரென்புழி யுரைத்தாங்குரைத்துக்கொள்க. இதனாற் சீராமன் கான்படர்தனினக் கொல்லாதென்ப துணர்த்தப்பட்டது. (உஉரு)

பரிவிகந்தமனத்தொடுபற்றிலா
தொருவுகின்றனையூழியருக்கனு
மெரியுமென்பதியாண்டையதீண்டுநின்
பிரிவினுஞ்சுடுமோபெருங்காடென்றாள்.

(இ - ள்) பரிவிகந்தமனத்தொடு பற்றிலாதொருவுகின்றனை - அன்பு நீங்கிய மனத்தினோடுதொடர்பொழிந்து நீங்குகின்றனை, ஊழியருக்கனும் எரியுமென்பது யாண்டையது - ஊழிகாலத்து ஞாயிறு மெரியுமென்றுசொல்லப்படுவது எத்தன்மைத்து, ஈண்டுநின்பிரிவினுஞ் சுடுமோபெருங்காடென்றாள் - நிற்பிரிவதினுமப்பெரியகாடு சுடுமோவென்றனள்—எ-று.

நின்பிரிவினும் பெருங்காடுசுடாதென்பாள் 'நின்பிரிவினுஞ்சுடுமோ பெருங்கா' டென்றதென்க. 'நீவருந்தலை நீங்குவென்யான்' என முற்கூறியதனை வற்புறுத்தப்'பரிவிகந்தமனத்தொடு பற்றிலாதொருவுகின்றனை' யென்றதென்க. கானினும் ஊழியருக்கனத்தனை வெங்கதிருடையனல்ல னென்பதாம். இதனாற் சனகிநின் பிரிவினு மக்கானங் கொடியதோ வென்ப துணர்த்தப்பட்டது. (உஉசு)

* திருக்குறள்—செ. ககஉ.

அண்ணலன்னசொற்கேட்டனனன்றியும்
உண்ணிவந்தகருத்துமுணர்ந்தனன்
கண்ணினீர்க்கடல்கைவிடநேர்கிலன்
எண்ணுகின்றனனென்செயற்பாற்றென.

(இ - ள்.) அண்ணல் அன்னசொற்கேட்டனன் அன்றியும் - இறைவனுமம்மொழிகேட்ட தல்லாமலும், உண்ணிவந்தகருத்து முணர்ந்தனன் - அவளுள்ளக் கருத்தினையுமறிந்து, என்செயற்பாற்றென கண்ணினீர்க்கடல் கைவிட நேர்கிலன் எண்ணுகின்றனன் - என்செயத்தக்கதென்று கண்ணீர்க் கடல்சொரியகைவிடற்கவளைநீங்கவுடன்படானாய் எண்ணுகின்றனன்—எ-று.

தான்உடன்வருதற் குடம்பட்டமை குறிப்பானுணர்ந்தமையான் 'உண்ணிவந்தகருத்துமுணர்ந்தனன்' என்றார்; இதனை "யாதும்-முகம்போலமுன்னுரைப்பதில்" என்பதனானுணர்க. இதனாற் சீராமன் உடன்பட்டமை யுணர்த்தப்பட்டது. (உஉஎ)

அணையவேலையகன்மனையெய்தினள்
புனையுஞ்சீரந்துணிந்துபுனைந்தனள்
நினைவில்வள்ளல்பின்வந்தயனின்றனள்
பணையினீள்கரம்பற்றியகையினள்.

(இ - ள்.) பணையின்நீள் கரம்பற்றியகையினள் - பணையினுநீண்டகையைப்பிடித்தசனகி, அணையவேலையகன்மனை யெய்தினள் - அவ்வமயத்துவிசர்வித்த மாளிகையையடைந்து, புனையுஞ் சீரந்துணிந்து புனைந்தனள்-புனைதற்குரிய மரவுரிதுணிந்தணிந்து, நினைவில்வள்ளல்பின் வந்தயனின்றனள் - கணத்தில் வள்ளியோன்பின் வந்தயலினின்றனள்—எ-று.

'அணையவேலை'யென்றார் சனகியைத்தன்னோடுவரவுடம்பட்டபின்னென்பதுணர்த்தற்கு. வள்ளல்-ஆகுபெயர். 'நினைவில்'என்றது நினைக்குமளவையை. 'பணையினீள்கரம்பற்றிய கையினள்' ளென்றார் தன்னைப்பாணிக்கிரகணஞ்செய்து கொண்டமையுணர்த்தற்கு. இதனாற் சனகி இறைவன்பான்மரவுரிபுனைந் தடைந்தமை யுணர்த்தப்பட்டது. (உஉஅ)

ஏழை தன்செயல்கண்டவர்யாவரும்
வீழுமண்ணிடைவீழ்ந்தனர்வீந்திலா
வாழுநாளுளவென்றபின்மாள்வரோ
ஊழிபேரினுமுய்குநருய்வரே.

(இ - ள்.) ஏழைதன் செயல்கண்டவர் யாவரும் - சனகிசெயலைக் கண்டாரெல்லாம், வீழுமண்ணிடை வீழ்ந்தனர் வீந்திலர்-விழுமண்ணிடை விழுந்தாரேனு மிறந்திலர், வாழுநாள்ஊவென்றபின் மாள்வரோ-ஆயுளினுள் உள்ளனவென்றபின்னர் சாவரோ, ஊழிபேரினும் உய்குநர் உய்வர் - ஊழிபேரினும் பிழைத்தற் கேயமைந்தோர் பிழைத்தற் கேயுரியராவர்—எ-று.

இந்நகரமாந்தர் இறந்துபடாமை தம்வாழ்நாள் வரையறுத்த நாள்கழியாமையான் 'வாழுநாளுளவென்றபின் மாள்வரோ' என்றார். ஊழிபேரி

னுழய்கு நருய்வரென்றது சாகாவரத்தலைமையுடையார் 'ஊழிபேரினுஞ் சாகா'ரென்றதனுனென்க. இதனை மார்க்கண்டேயரிடத்துங் காண்க. இதனுற் சனகியைக்கண்டார் வருந்தினமை யுணர்த்தப்பட்டது. (உ௪௯)

(1) தாயர் தவ்வையர் தன் றுணைச்சேடியர்
ஆயமன்னியவன்பினரென் றிவர்
தீயின்மூழ்கினரொத்தனர்செங்கணுன்
தூயதையலைநோக்கினன்சொல்லுவான்.

(இ - ள்.) தாயர் தவ்வையர் தன் துணை சேடியர் ஆயமன்னியவன்பினர் என்றிவர் தீயின்மூழ்கினரொத்தனர் - தாயருஞ் செவிலியருந்தன்னுயிர்ப் பாங்கியருமாகிய ஆயவெள்ளமாகப் பொருந்தியவன்பினையுடையாரென்ற இவர் தீயினுழ்ந்தவரையொத்தனர், செங்கணுன்தூயதையலை நோக்கினன் சொல்லுவான் - செந்தாமரைக்கண்ணனுகிய இறைவன் உள்ளந்தூயளாகிய சனகியைப்பார்த்துக் கூறுவான்.—

செங்கணுன் என்றது சிராமனை. யாரையும் பவித்திரம் செய்பவளாகலின் சனகியைத் 'தூயதைய'லென்ருர். தையல் - ஆகுபெயர். நோக்கினன்வினையெச்சமுற்று. (உ௫0)

(2) முல்லையங்கடன்முத்தமெதிர்ப்பினும்
வெல்லும்வெண்ணகையாய்விளைவுன் னுவா
யல்லைபோதவமைந்தனையாதலி
னெல்லையற்றவிடர்தருவாயென்ருன்.

(இ-ள்.) முல்லையங்கடல் முத்தமெதிர்ப்பினும் வெல்லும்வெண்ணகையாய் - முல்லைப்போதும்கடலிற்பிறந்தமுத்து மெதிர்ப்பினும் அவற்றினைவெல்லும் வெள்ளிய நகையையுடையாளே, விளைவுன்னுவாயல்லை-மேல்வினைவிளைவு நினையாதாளாய், போதவமைந்தனை - என்னுடன் வரச்சமைந்தனை, ஆதலினெல்லையற்ற இடர்தருவாயென்ருன் - ஆதலின் எல்லைகடந்த துன்பந்தருவை யென்றனன்—எ-று.

முல்லையுங் கடன்முத்தமும்பற்குவமை. இராவணவேட்டையாடன் முதலியனமுன்னரே விளக்கலும், சனகியையவன் இலங்கைக்குக்கொடுபோய்ச்சிறைவைத்தலுமுணர்த்த 'எல்லையற்றவிடர்தருவா' யென்றுகூறினுர். நீமே னடப்பதறிந்திலையென்பார் 'விளைவுன்னுவாயல்லை போதவமைந்தனை' என்றதென்க. 'வெண்ணகையா' யெனவிளித்தார் அவளொடும் இன்சொற் பயிறனுக்கி. இவ்விரண்டு செய்யுளானு மிறைவன்நின்னுனிடர்பல நேருமென்ற துணர்த்தப்பட்டது. (உ௫௧)

கொற்றவன்ன துகூறலுங்கோகிலஞ்
செற்றதன்னகுதலையள்சீறுவா
ளுற்றுநின்றதுயரமிதொன்றுமே
யெற்றுறந்தபினின்பங்கொலாமென்ருள்.

(இ - ள்) கொற்றவன் அதுகூறலும் - இறைவன் அங்ஙனங்கூறுதலும், கோகிலம் செற்றது அன்னகுதலையள் சீறுவாள் - குயிலின்மொழியைவென்றுமேலாந்த மழலைச்சொல்லாளாகியசனகி, உற்றுநின்ற துயரம் இது என்று பேர்பொருந்திநின்ற வித்துயரென்றமே, என்றுறந்தபின் இன்பங்கோளாமென்றாள் - என்னைநீங்கியபின் இன்பமாமோ வென்றனள்—எ-று.

குதலை, மழலை என்பன ஒருபொருட் கிளவி. கொற்றவனென்றது சீராமனை. நிற்பிரிவென்பதே துயர மென்பதாகலின் 'உற்றுநின்றதுயரமிதொன்றுமே' என்றும், அதுபொழுதுமெய்யாதாகலின் 'எற்றுறந்தபினின்பங்கொளாம்' என்றுங்கூறினார். இதனாற் சனகி சீராமனைத் தொடர்ந்தேவருவலென்றது உணர்த்தப்பட்டது. (உகூஉ)

பிறிதொர்மாற்றம்பெருந்தகைபேசலன்
மறுகிவீழ்ந்தழமைந்தருமாதரும்
செறுவில்வீழ்ந்தநெடுந்தெருச்சென்றனன்
நெறிபெருமையரிதினினீங்குவான்.

(இ - ள்.) பெருந்தகை - பெருந்தகைமையுடைய இறைவன், பிறிதொர்மாற்றம் பேசலன் - வேறொருமொழியும்பேசாமனின்று, மைந்தரும் மாதரும் மறுகிவீழ்ந்தழ - ஆடவர் பெண்டிரென்ற இருதிறத்தவரு மனங்கலங்கி விழுந்தழ, நெறிபெருமையரிதினின் நீங்குவான் - வழிபெறுது அரிதினீங்குவானாய், செறுவில்வீழ்ந்த நெடுந்தெருசென்றனன் - வயலெனக்கிடந்த நெடுந்தெருவிடைப் போயினன்—எ-று.

பெருந்தகை என்றது அன்மொழித்தொகை. பிறிது, வேறு என்னும் பொருளது. பேசலன், நீங்குவான் - வினையெச்சமுற்று. இதனாற் சீராமன் இராசவீதி சென்றமையுணர்த்தப்பட்டது. (உகூகூ)

சீரைசுற்றித்திருமகள்பின்செல
மூரிவிற்கையிளையவன்முன்செலக்
காரையொத்தவன்போம்படிகண்டவவ்
வூரையுற்றதுணர்த்தவொண்ணுமோ.

(இ - ள்.) சீரைசுற்றி திருமகள்பின்செல - மரவுரியையுடுத்துத் திருமகளாகிய சனகிபின்றொடர்ந்துசெல்ல, மூரிவிற்கை இளையவன்முன்செல - வலியவில்லேந்திய கையையுடைய இளையவன்முன்னேசெல்ல, காரையொத்தவன் போம்படிகண்ட - மேகம்போல்வானாகிய சீராமன்போகக்கண்ட, அவ்வூரைஉற்றது உணர்த்தவொண்ணுமோ - அவ்வயோத்திக் குளதாகிய துயரத்தைத் தெரிவிக்கவும் பொருந்துமோ—எ-று.

கற்புடையாள் தன்கணவனுக்கு முன்னடந்துசேறல் ஒல்லாதாகலிற் 'சீரைசுற்றித்திருமகள்பின் செல' வென்றும், சுமித்திரைநோக்கி 'தம்பியென்னும்படி யன்றடியாரினினேவல் செய்தி' யெனமுற்கூறியதனுனும், அவன் முன்னழகினும்பின்னழகேசிறத்தலான் பின்செல்வானேல் அழகிலீடுபட்டேவற்றொழில்சிதையுமாகலானும், மூரிவிற்கையிளையவன்முன்செலவென்றும், பன்னகப்பாயலுட் பள்ளிநீங்கிப் போய்த்தோன்றியநல்லறநிறுத்தத் தோன்றித்தேவர்களாகிய வுழவர்வேண்ட அரக்கர்கள்கொடுமையாகியகோடையின்

வருந்திய அறப்பைங் கூழ்வளர்ப்பான் தன்வாளியாகிய மழைபொழியக் கொண்டல்போற்செல்பவனாகலின்'காரையொத்தவ'னென்றும், மேகம் வில்லிட்டு மின்னிட்டுச் சேறல்முறையாகலின் மின்னற்கொடிபோன்ற திருமகளையும் வில்லையுமென்ற தன்றியெவ்வாறானும் வேறலொல்லாத மேகநாதனைவேறனுக்கி மூரி யென்றடைகொடுத்தும், திருமகள்தன் கணவனோடேயோத்திநகர் நீங்கலின் அது உலகமுழுதாளும் வேந்தர்பெருமானை யிழந்ததென்பதுபற்றி ஊரையுற்றதுணர்த்தவு மொண்ணுமோ வென்றுங்கூறினார். ஒன்றுமென்றது மரீஇயது. ஒகாரமெதிர்மறை. கார், ஊர் என்பனஆகுபெயர்கள். உம்மையெதிர்மறை. —

இனியோருரை.—சீரைசுற்றித் திருமகட்குப்பின்செல மூரிவிற்கையிளையவனென்றும், முன்செலக் காரை யொத்தவனென்றும் அமைத்துக்கொள்க. ஏனையவெளி.

திருமகட்கென்புழிநான்காவதுதொகுத்தல்பெற்றது; ‡ 'ஐந்தவித்தானாற்றல்' என்புழிப்போல. அகாரஉகாரமகார மெனக்கிடந்த பிரணவத்துள் அகாரவாச்சியனாகலிற் சீராமனைக்காரையொத்தவனெனமுன்னும், உகாரவாச்சியையாகலிற் சனகியைநடுவணும், மகாரவாச்சியனாகலிற் சேதனனாகியஇளையவனைச் சீரைசுற்றித்திருமகட்குப்பின்செல மூரிவிற்கையிளையவனெனப்பின்னும் கூறியவாறென்க. அவ்வூரென்றூர் அயர்வருமமரர் கட்கிறைவனீண்டுச் சிறுமாமனிசனாகத்தன்கட்டோன்றியபெருமிதநோக்கியென்க. ஊரையுநபுமயக்கம். இதுகவிக்கூற்று. (௨௫௪)

(1) ஆரும்பின்னரழுதவலித்திலர்
சோருஞ்சிந்தையர்யாவருஞ்சூழ்ந்தனர்
வீரன்முன்வனமேவுதும்யாமெனப்
போரென்றொல்லொலிகைம்மிகப்போயினார்.

(இ - ள்.) ஆரும்பின்னர் அழுதுஅவலித்திலர்-ஒருவரும்பின்னரழுது அமங்கலமொழி கூறிற்றிலர், சோரும்சிந்தையர் யாவரும் சூழ்ந்தனர் - மனஞ்சோர்ந்தியாரும் சுற்றிக்கொண்டு, வீரன்முன்வனமேவுதும்யாமென - இறைவன் முன்யாங்காடடைவேமென்று, போரென்றொல்லொலிகைம்மிகப் போயினார் - போரென்னுமொல்லொலிக்குறிப்பு அதிகப்படச்சென்றனர்.—

போரென்பது ஒருவகையொலிக் குறிப்பு; ஒல்லென்பது மது, சூழ்ந்தனர்வினையெச்சமுற்று. 'வீரனென்றது' சீராமனை. மேவுது மென்றது தும் மீற்றுத்தன்மைப்பன்மைமுற்று. கைம்மிகல் ஒருசொல். (௨௫௫)

(2) தாதைவாயிற்குறுகினன்சார்தலும்
கோதைவேலவன்றாயரைக்கும்பிடா
ஆதிமன்னனையாற்றுமினீரென்றான்
மாதராரும்விழுந்துமயங்கினார்.

(இ - ள்.) கோதை வேலவன்தாதை வாயிற்குறுகினன்சார்தலும் - வாகைவேய்ந்த வேலேந்திய சீராமன்தந்தை மாளிகைவாயிலையடைந்து நின்று, தாயரையகும்பிடா-தாயரைவணங்கி, ஆதிமன்னனை ஆற்றுமினீரென்றான்-பழையவரசனை யாற்றியிருமினென்ன, மாதராரும் விழுந்துமயங்கினார்-மாதரானும்நிலத்தின்கண்விழுந்து மனங்கலங்கினர். —

‡ திருக்குறள் செ-௨௫.

தோன்றுதொட்டுவந்த அரசச்செல்வமுடையவனாகலின் 'ஆதியரச'னென்றார். 'கோதைவேலவ'னென்றது ஸ்ரீராமனை, குறுகினனென்பது வினையெச்சமுற்று. 'தாயரென்றது' அறுபதினாயிரவரை. (உ௲௬)

(3) எத்தினார் தம்மகனை மருகியை
வாழ்த்தினாரிளையோனைவழுத்தினார்
காத்துநல்குமின்றெய்வதங்காளென்றார்
நாத்தழும்பவரற்றிநடுங்குவார்.

(இ-ள்.) நாத்தழும்ப அரற்றிநடுங்குவார் - நாத்தழும்பேறக் கூவிநடுங்குமியல்பினை யுடையராய அத்தாயர், தம்மகனையேத்தினார்-தம்மகனாகியசீராமனை யேத்தினர், தம்மருகியை வாழ்த்தினார் - தம்மருகியாகிய சனகியைவாழ்த்துதல் செய்தனர், இளையோனை வழுத்தினார் - இளையவனைவழுத்தினர், தெய்வதங்காள் காத்துநல்குமினென்றார்-தெய்வதங்காளிவரைக்காத்தருளுமினென்றனர்—

ஸ்ரீராமனது நீக்கத்தான் வருந்துபவராதலின் 'நாத்தழும்பவரற்றி நடுங்குவா' ரென்றும், தந்தையாணைதலைமேற் கொடு செல்லு நியமநோக்கி-'எத்தினார்தம்மகனை' என்றும், அவனைவிடாதுடன்சென்றுவாழ்தலேமுறைமையெனக்கோடலின்'தம்மருகியைவாழ்த்தினா'ரென்றும்,இன்னோர்க்குக்குற்றேவல் பூண்டொழுகலே கடனென்றேகலின் 'இளையோனை வழுத்தினா' ரென்றும், இவர்காளேகி மீட்பிப்பதுதெய்வங்கள் கருணையென்பார் 'காத்துநல்குமின் றெய்வதங்கா' ளென்றுங் கூறினார். (உ௲௭)

(4) அன்னதாயரரிதிற்பிரிந்தபின்
முன்னர்நின்றமுனிவனைக்கைதொழாத்
தன்னதாருயிர்த்தம்பியுந்தாமரைப்
பொன்னுந்தானுமொர்தேர்மிசைப்போயினான்.

(இ - ள்.) அன்னதாயர் அரிதிற் பிரிந்தபின் - அத்தாயர் அரிதாக நீங்கியபின்றை, முன்னர்நின்ற முனிவனைக்கைதொழா - தன்முன்வாளாநின்றவசிட்டமுனிவனைவணங்கி, தன்னதாருயிர்த்தம்பியுந்தாமரைப்பொன்னுந்தானு மொர்தேர் மிசைபோயினான் - தன்னுடையஅரியவுயிரன்னதம்பியும் தாமரையாளாகிய சனகியும் தானுமோர்தேர்மேற் சென்றனன்—எ-று.

தாயரைநீங்குவதரிதாகலின் 'அன்னதாயரரிதிற்பிரிந்தபின்'னென்றும்,முனிவன் பிரிவை நோக்கியொன்றுமுறையாடாதிருந்தமையான் வாளா'முன்னர்நின்றமுனிவ' னென்றும்,அவனைவணங்கலியல்பாதலிற் 'கைதொழா' வென்றும், தன்குறிப்பின்வழி நிற்பவனாகலின் 'தன்னதாருயிர்த்தம்பியும்' என்றுங் கூறினார். தாமரைப்பொன் என்றது திருமாமகளை; தானும் தம்பியும் தாமரைப்பொன்னும் போயினானெனச்சிறப்பானாண்பாற் பெண்பாற் பெயர்கள் விரவி ஆண்பான்முடிபேற்றதென்க. இந்நான்கு செய்யுளானும் தாயர் விடைதந்தமையும், இறைவனீங்கினமையு முணர்த்தப்பட்டன. (உ௲௮)

நகர்நீங்குபடலமுற்றிற்று.

———

தைலமாட்டு படலம்.

மன்னர் பெருமான் இறைவன்கானேகக் கேட்டாங்குயிர் துறப்ப, பரத சத்துருக்குநர் வரும்வரையும் அவர்தம்முடம்பைத் தைலமாட்டி னமையான் இதுநகர்நீங்குபடலத்தின் பின்வைக்கப்பட்டது. இதனைத் 'தையற்கடனின் றெடுத்தவனைத்தயிலக்கடலின் றலையுய்த்தா'னென்பதனானறிக.படலமுறையு மிதனானேவிளங்கும். இதனைத் தைலம் ஆட்டுபடலமெனினு மிழுக்காது.

ஏவியகுரிசில்பின்யாவரேகிலார்
மாவியறானையம்மன்னைநீங்கலாத்
தேவியரொழிந்தனர்தெய்வமாநகர்
ஓவியமொழிந்தனவுயிரிலாமையால்.

(இ-ள்.) மா இயல்தானை அம்மன்னைநீங்கலாத்தேவியரொழிந்தனர்-பெருமைதங்கிய சேனையையுடைய அவ்வரசனை நீங்குதலில்லாத தேவிமாரொழிந்தனர், உயிரிலாமையால் தெய்வமாநகர் ஓவியமொழிந்தன - உயிரில்லாமையான் தெய்வத்தன்மை பொருந்திய பெரிய நகரின்கணுள்ளவாய சித்திரமொழிந்தன, ஏவியகுரிசில்பின் யாவரேகிலார் - ஆதலான்ஏவப்பட்ட இறைவன்பின்னர் யாவரேயுடன் செல்லாதார்—எ-று.

அவ்வரையனை நீங்குதலில்லாததேவியரும் ஓவியமுமன்றி யாவருஞ்சென்றனரென்பார் 'ஏவியகுரிசில்பின் யாவரேகிலா' ரென்றார். ஏவிய குரிசில் என்றதுசிராமனை. உலகமுழுதையும் வென்றமைதோன்ற 'மாவியறானை' என்றதென்க. இது கவிக்கூற்று. (க)

கப்கணீர்பரந்துகாலொடரக்கண்ணுகும்
வெய்யநீர்வெள்ளத்துமெள்ளச்சேறலால்
உய்யவேழுலகுமொன்றானநீருழல்
தெய்வமீனொத்ததச்செம்பொற்றேரரோ.

(இ-ள்.) அச்செம்பொற்றேர்-அப்பசும்பொன்னானியன்ற தேர், கைகள் நீர் பரந்துகால்தொடர கண்ணுகும்வெய்யநீர்வெள்ளத்து மெள்ளச்சேறலால்-கைகளின்வழியாகநீர்பரந்துகண்ணினின்றுசிந்துஞ் வெம்மையாகியநீரையுடைய வெள்ளத்தின்கண் மெல்லச்செல்லுதலான், உய்ய எழுலகும் ஒன்றான நீருழல் தெய்வமீனொத்தது-பிழைக்கும்படி உலகமேழுமொன்றேயான நீரிடையுழலாநிற்கும் தெய்வத்தன்மை பொருந்தியமீனை யொத்திருந்தது.—எ-று.

உம்மைமுற்று.'அச்செம்பொற்றேரை' ஏழுலகுமொன்றானநீருழல்தெய்வமீனோடுவமை கூறினார். இதனாற் சிராமன் தேர்சென்றமை யுணர்த்தப்பட்டது. (உ)

(1) மீன்புகழ்பெறவெயிலொதுங்கமேதியோ
டான்புகக்கதிரவனத்தம்புக்கனன்
கான்புகக்காண்கிலேனென்றுகல்லதர்
தான்புகமுடுகினனென்னுந்தன்மையான்.

(இ-ள்.) மீன்புகழ்பெற-நாண்மீன்புகழெய்தவும், வெயிலொதுங்க-வெயில் கரப்பவும்,மேதியொடான்புக-மேதியினொடாவினமடையவும்,கான்புகக்காண்கிலேனென்று-சீராமன்கானடையக்காணவலியிலேனென்று,கல்லதர்தான்புகமுடுகினன்என்னுந்தன்மையான்-மலைவழியிற்போக முடுகிச்செல்கின்றனனென்னுந்தன்மையுடையனாய், கதிரவன்அத்தம்புக்கனன்-சூரியன் அத்தமனவரையை யடைந்தனன்—

உத்தரநாளினது தாரையும், அத்தநாளினது தாரையுமேதி யோடானுமாகலின் 'ஒதுங்கமேதியொடான்புக' வென்றுங் கூறுவாருமுளர். சீராமன் திருவயோத்தியினின்றுஞ் சேறல் பிற்பகலாகலின் 'வெயிலொதுங்க' வென்றும், இவனக்கானிலிருப்ப நாண்மீன்கள் விளக்கமாக விளங்கலின் 'மீன்புகழ்பெற' வென்றும்,தன்குலத்தோன்றல்அக்கானிற்சேறலாற்றாதுகிச் சேறலாற் 'கான்புகக்காண்கிலேனென்றுகல்லதர்தான் புகவத்தம்புக்கன' னென்றும்,மாலைக்காலம்வந்துழிமேதியுமானுந்தத்தமில்லந்தொறுஞ்சேறன் முறையாகலின் 'மேதியோடான்புக' வென்றுங்கூறினர். இதுதற்குறிப்பேற்றமென்னுமணி. தன்மையான் வினையெச்சமுற்று. (௫)

(2) பகுத்தவான்மதிகொடுபதுமத்தண்ணலே
வகுத்தவாணுதலியர்வதனராசிபோல்
உகுத்தகண்ணீரினிலொளியுநீங்கின
முகிழ்த்தழகிழந்தனமுளரியீட்டமே.

(இ - ள்.) பகுத்தவான்மதிகொடுபதுமத்தண்ணலே வகுத்தவாணுதலியர் வதனராசிபோல் - பகுத்தவெள்ளிய மதியங்கொண்டு தாமரையானாகிய பிரமனேபடைத்த வொள்ளியநுதலையுடையார்முகங்களின் கூட்டமேபோல, உகுத்தகண்ணீரினிலொளியு நீங்கின-சிந்திய கண்ணீரிடையொளியுமொழிந்தன, முகிழ்த்தழகிழந்தன முளரியீட்டம் - தாமரைமலர்க்கூட்டம் குவிந்தழகினை யிழந்தன—.

பகுத்தவான்மதியென்றது அட்டமச்சந்திரனை. 'வாணுதலியர்வதனராசிபோல முகிழ்த்தழகிழந்தன முளரியீட்டம்' என்றது விரோதவுவமை. (௬)

(3) அந்தியில்வெயிலொளியழியவானகம்
நந்தலில்கைகயன்பயந்தநங்கைதன்
மந்தரையுரையெனுங்கடுவின்மட்கிய
சிந்தையினிருண்டதுசெம்மைநீங்கியே.

(இ - ள்.) வானகம் அந்தியின் வெயிலொளியழிய - வானிடை அந்தியின்கண் ஞாயிற்றினொளிகெட, நந்தலில்கைகயன்பயந்த நங்கைதன் மந்தரை

யுரையெனுங் கடுவின்மட்கிய - கெடுதியில்லாத கைகேசி தன்மந்தரை சொல்லென்னும் விடத்தான்மட்கிய, சிந்தையினிருண்டது - மனத்தினுமிருண்டது—.

இதுவுமேலேயணி. மந்தரையென்றது கூனியை, அவளுரையைநஞ்சினுக்குவமை கூறினர். வெயில் ஆகுபெயர். (ரு)

(4) பரந்துமீனரும்பியபசலைவானகம்
அரந்தையின்முனிவரனறைந்தசாபத்தால்
நிரந்தரமிமைப்பிலாநெடுங்கணீடிய
புரந்தரனுருவெனப்பொலிந்ததெங்குமே.

(இ - ள்.) பரந்து மீனரும்பிய பசலைவானகம் - விண்மீன்பரந்து தோன்றிய பசியவானிடம், அரந்தையில் முனிவரனறைந்த சாபத்தால் - துன்பமில்லாத கோதமமுனிவனிட்ட சாபத்தினன், நிரந்தரமிமைப்பிலா நெடுங்கணீடிய - எஞ்ஞான்று மிமைத்தலில்லாத நெடியகண்கள்மிகுந்த, புரந்தரனுருவென வெங்கும்பொலிந்தது - இந்திரன்வடிவமேயென்னயாண்டும்விளங்கித் தோன்றிற்று—எ-று.

இது எடுத்துக்காட்டுவமை. பிறவித்துயர மொழியப்பெற்றமையின் அரந்தையில் எனவிசேடித்தார். முனிவரன்என்றது கோதமனை. இமைப்பில நெடுங்கண்என்றதுஅவன் இந்திரனை அகலியை பொருட்டுஆயிரமாதர் குறியாகக் கடவனென விட்டசாபத்தான மைந்தகண்களை. இதனை 'ஆயிரமாதர்க்குள்ள வறிகுறியுனக் குண்டாகென்றேயினை' னெனமுற்கூறியதனுனுணர்க. புரந்தரன் என்றது இந்திரனை. மீன் என்றது - உடுக்களை. இந்நான்கு செய்யுளானுஞ் சீராமன் சென்ற மாலைக்காலவருணனை யுணர்த்தப்பட்டது. (சு)

(1) திருநகர்க்கோசனையிரண்டுசென்றரு
விரைசெறிசோலையைவிரைவினெய்தினன்
இரதநின்றிழிந்தபினிராமனின்றுணை
உரைசெறிமுனிவரோடுறையுங்காலையே.

(இ - ள்.) திருநகர்க் கோசனையிரண்டுசென்று-அயோத்திநகர்க்கிரண்டு யோசனை தூரம்போய், விரைசெறி சோலையைவிரைவினெய்தினன் - மணங்கமழும்பொழிலை விரைந்தடைந்து, இரதநின்றிழிந்த பின்இராமன் இன்துணை உரைசெறி முனிவரோடுறையுங்காலை - தேரினின்றிரங்கியபின் சீராமன் தன்னொடினியதுணையாய்வந்த வேதமுணர்ந்த முனிவருடனுறையும்போது.—

உரை - ஆகுபெயர். வேதியரென்னும் பெயர்பற்றி உரைசெறிமுனிவரென்றார். எய்தினன்வினையெச்சமுற்று. ஒசனை வடசொற்சிதைவு. திருநகரென்றது-திருவயோத்தியை இது. குளகம். (எ)

(2) வட்டமொரோசனைவிளைவிற்றுய்நடு
எட்டனையிடவுமொரிடமிலாவகைப்
புட்டகுசோலையின்புறத்துப்போர்த்தென
விட்டதுகுருசிலைவிடாதசேனையே.

(இ - ள்.) குரிசிலைவிடாதசேனை - சீராமனைநீங்காதசேனை, வட்டமொரோசனைவளைவிற்றுய்-வட்டவடிவமாகவோரோசனைவளைந்து, நடு எட்டனையிடவுமொரிடமிலாவகை-நடுவில்எள்ளொன்றினையிடவுமோரிடமில்லாதவண்ணம்,புட்டகுசோலையின்புறத்துப்போர்த்தென விட்டது-புட்கணீடியசோலையின் புறத்துப்போர்த்தாலொப்பச் சூழ்ந்தது.—

வட்டமென்றது-வடமொழிச்சிதைவு; ஆணை கண்ணனென்பனபோல. போர்த்தாலென்பது திரிந்துநின்றது. குருசில் என்றது சீராமனை. (அ)

(3) குயின்றியகுலமணிநதியின்கூலத்தில்
பயின்றுயர்வாலுகப்பரப்பில்பைம்புலில்
வயின்றொறும்வைகினரொன்றும்விம்வாய்மடுத்
தயின்றிலர்துயின்றிலரழுதுவிம்மினர்.

(இ - ள்.) குயின்றியகுலமணி - பதித்தசிறந்தமணிகள்; நதியின்கூலத்திற் பயின்று - ஆற்றங்கரையிற் பயின்று, உயர்வாலுகப்பரப்பில் - உயர்ந்த வெண்மணற்றிடரில், பைம்புலில் - பசியபுல்லினுகிய, வயின்றொறும் வைகினர் - பலவிடங்களினும் தங்கினர், ஒன்றும்வாய்மடுத்தயின்றிலர் -ஒன்றையும்வாயின் உண்டிலர், துயின்றிலர் அழுதுவிம்மினர் - தூங்காதுவிம்மி அழுது கொண்டிருந்தனர்.—

வயினென்றதுரு பேலாதபெயர். சீராமன் நகர்நீங்கியதை யுள்ளத்தடைத்தவராதலான் 'ஒன்றும்வாய்மடுத்தயின்றிலர்துயின்றிலரழுதுவிம்மினு' ரென்றூர். அயின்றிலர்துயின்றிலர் வினையெச்சமுற்று. ஒன்றுமென்புழி உம்மை இழிவு சிறப்பு. (கூ)

வேறு.

(4) வாவிவிரிதாமரையின்மாமலரின்வாசக்
காவிவிரிநாண்மலர்முகிழ்த்தனையகண்ணூர்
ஆவிவிரிபானுரையினுடையணையாக
நாவிவிரிகூழையிளநவ்வியர்துயின்றூர்.

(இ - ள்.) வாவிவிரி தாமரையின் மாமலரின் வாசக்காவிவிரி நாண்மலர் முகிழ்த்தனைய கண்ணூர் - தடாகத்து விரிந்த தாமரையாகிய பெரிய மலர்போன்ற முகத்தையும் மணங்கமழு நீலமாகிய விரிந்த அன்றலர்ந்த மலர் அரும்பிய தொத்த விழியையுமுடையாரும், நாவிவிரிகூழை இளநவ்வியர்- கத்தூரியணம் விரிந்த கூந்தலையுடையாருமாகிய மாதர், ஆவிவிரிபால்நு

ரையின் ஆடைஅணையாக துயின்றார் - புகைபோல்விரிந்த பானுரைபோலு டையே யணையாகத் தூங்கினர்.—

கூழை என்றது-கூந்தலே, ஆவி என்றது-புகையை. பானுரை என்றது ஆடைக்குவமை. வாடாதிருத்தல்பற்றி 'வாவிவிரிதாமரை'யென்றார். காவி யைக்கண்ணுக்குவமைகூறினுநதாமரையை முகத்திற்குக்கூறாமை ஏகதேச வுருவகம். (௧௦)

(5) பெரும்பகல்வருந்தினர்பிறங்குமுலேதெங்கின்
குரும்பைகள்பொருஞ்செவிலிமங்கையர்குறங்கில்
அரும்பனையகொங்கையயிலம்பனையவுண்கண்
கரும்பனையசெஞ்சொனவில்கன்னியர்துயின்றார்

(இ - ள்.) பெரும்பகல் வருந்தினர் - பெரும்பகலின்கண்வருந்தி, பிறங்குமுலே தெங்கின்குரும்பைகள் பொரும்செவிலிமங்கையர் குறங்கில் - விளங்குகின்ற முலேயாகிய தென்னங்குரும்பைகளேயொத்த செவிலித் தாயராகிய மாதருடைய தொடையின்கண், அரும்பனைய கொங்கையயிலம் பனைய உண்கண் - அரும்பினேயொத்த முலேயையும் கூரிய அம்பினேயொத் தமையுண்ட கண்ணேயும், கரும்பனைய செஞ்சொல்நவில் கன்னியர் துயின் றார்-கரும்பினேயொத்த செம்மையாகிய சொல்லேயும் உடையமாதர்கள் தூங் கினர்.—

சீராமன் கானேகக் கேட்டாங்குவருத்தமுற்ற நாளாகலின் பெரும்பக லென்றார். உண்கண் எனற்கு மேலுரைத்தாம். முலேயாகிய குரும்பைக ளெ ன்றது உருவகம். கரும்பு செஞ்சொற்குவமை. அரும்பு கொங்கைக்குவமை.

(6) பூவகநிறைந்தபுளினத்திரள்கடோறும்
மாவகிரினுண்கணர்மடப்பிடியின்வைகச்
சேவகமமைந்தசிறுகட்கரிகளென்னத்
தூவகலில்குந்தமறமைந்தர்கடுயின்றார்.

(இ - ள்.) பூவகம்நிறைந்த புளினம் திரள்கடோறும் - பூக்கள்தம்மிட நிறைந்த மணற்குன்றுகளிலெல்லாம், மாவகரின் உண்கணர் மடப்பிடியின் வைக-மாவடுவன்னமையுண்ட கண்ணிணேயுடைய மாதரார் இளம்பிடிபோற் றங்கியிருப்ப, சேவகமமைந்த சிறுகண்கரிகளென்ன - துயிலிடத்தமைந்து கிடந்த சிறியகண்ணேயுடைய யானேகள்போல, தூவகலில்குந்தம் மறமன்னர் கள்துயின்றார் - ஊனீங்குதலில்லாத குந்தப்படையேந்திய வீரத்தன்மை யையுடைய வரசர்கள் தூங்கினர்.—

சேவகமென்பது விலங்குகளின்றுயிலிடத்தை. தூவென்பது இறைச்சி; 'தூஎன்றநெடுவேலான்' என்புழியும்தூவென்றதிப்பொருட்டாதலறிக. வகிர் கண்ணுக்குவமை. கரிகள் மைந்தர்க்குவமை. (௧௨)

(7) தகவுமிகுதவமுமிவைதழுவவுயர்கொழுநர்
முகமுமவரருளுநுகர்சிலர்கடுயர்முடுகெ
அகவுமிளமயில்களுயிரலசியனவனையார்
மகவுமுலைவருடவிளமகளிர்கடுயின்றார்.

(இ - ள்.) தகவும்மிகுதவமு மிவைதழுவ - தகுதியுமிக்கதவமும் ஆகிய இவை தழுவாநிற்ப, உயர்கொழுநர்முகமும் அவரருளுநுகர் சிலர்கள் துயர்முடுகெ - உயர்ந்த கணவர் முகங்களும் அவரருளுமனுபவிக்குஞ் சிலர் துன்பமுடுகலான், அகவுமிளமயில்களுயிரலசியன அனையார் - நடிக்குமிளமயில்கள் உயிரைவருத்தினலொத்தாராகி, மகவுமுலைவருட - மக்களுமுலைதடவாநிற்ப, இளமகளிகர் துயின்றார் - இளமாதர் துயில்கொண்டனர்.—

சிலர்கள் என்புழிகள்விகுதிமேல் விகுதிபெற்றபல்லோர் படர்க்கைப்பெயர். மகவென்றது இளஞ்சிறுரை. (கரு)

(8) மாக மணிவேதிகையின்மாதவிசெய்பந்தல்
கேகயநெடுங்குலமெனச்சிலர்கிடந்தார்
பூகவனமூடுபடுகர்ப்புளினமுன்றில்
தோகையிளவன்னநிரையிற்சிலர்துயின்றார்.

(இ - ள்.) மாகமணிவேதிகையின் மாதவிசெய்பந்தல் - விண்ணையழகுசெய்யும் வேள்விமேடையினருகே மாதவிப் பந்தரின்கண், கேகயநெடுங்குலமெனச்சிலர்கிடந்தார் - மயிலினீண்ட கூட்டமெனச்சிலர்கிடந்தனர், பூகவனமூடுபடுகர் புளினமுன்றில் - கமுகவனத்துநடுவினுள்ள மருதநிலத்து மணற்குன்றின் முற்றத்து, தோகையிளவன்ன நிரையிற்சிலர் துயின்றார்- தோகையையுடைய இளவன்னத்து வரிசைபோற் சிலர் தூங்கினர்.—

கேகயமென்றதுகுயிலை. புளினமென்றதுமணற்குன்றை. பூகமென்றது-கமுகினை. மணற்குன்றினிடை மாதர்துயின்றமை இளவன்னநிரைக்குவமைகூறினர். (கசு)

(9) சம்பகநறும்பொழில்களிற்றருணவஞ்சிக்
கொம்பழுதொசிந்தனவெனச்சிலர்குழைந்தார்
வம்பளவுகொங்கையொடுவாலுகம்வளர்க்கும்
அம்பவளவல்லிகளெனச்சிலரயர்ந்தார்.

(இ - ள்.) சம்பகநறும்பொழில்களில் தருணவஞ்சிக் கொம்பழுதொசிந்தனவெனச்சிலர்குழைந்தார் - சண்பகமாகிய நறுமணங்கமழுஞ் சோலையில் இளமையாகிய வஞ்சிக்கொம்பழுது தளர்ந்தாற்போலச்சிலர் குழைந்து நின்றனர், வம்பளவுகொங்கையொடுவாலுகம் வளர்க்கும் அம்பவளவல்லிகளெனச் சிலரயர்ந்தார் - கச்சளாவியமுலையொடு வெண்மணல்வளர்க்கும் அழகிய பவளக்கொடிகளென்னச்சிலரயர்ந்து நின்றனர்.—

பவளமென்பது வடசொற்சிதைவு, பயணமென்பதுபோல, ஒசிந்தன-வினையெச்சமுற்று.வாலுகம்என்றது மணற்குன்றினை.வம்பென்றதுகச்சினை.

(10) குங்குமமலைக்குளிர்பனிக்குழுமியென்னத்
துங்கமுலையிற்றுகளுறச்சிலர்துயின்றார்
அங்கையணையிற்பொலிவழுங்கமுகமெல்லாம்
பங்கையமுகிழ்த்தனவெனச்சிலர்படிந்தார்.

(இ-ள்.) குங்குமமலை குளிர்பனிகுழுமியென்ன - குங்கும மலையிற் குளிர்ந்த பனித்திவலைசேர்ந்தாற்போல, துங்கமுலையில் துகளுறசிலர் துயின்றார் - கனமாகியகொங்கையின்கண் துகள்பொருந்தச்சிலர் தூங்கினர், அங்கையணையிற்பொலிவழுங்க-அங்கையாகிய படுக்கையில் அழகழிய, முகமெல்லாம் பங்கயமுகிழ்த்தன வெனசிலர்படிந்தார் - முகங்களெல்லாந்தாமரை குவிந்தாற்போற்சிலர் படிந்தனர்.—

ஐவகையமளியின்றி அச்சோலையிற் கையணைகொண்டு துயிறலின் அங்கையணையென்றார். பொலிவழுங்கினமுகங்களாகலின் 'பங்கயமுகிழ்த்தன' என்றுவமைகூறினர். (கரு)

(11) தொடுத்தகலிடைச்சிலர்துவண்டனர்துயின்றார்
அடுத்தவடையிற்சிலரழிந்தனரயர்ந்தார்
உடுத்ததுகில்சுற்றொருதலைச்சிலருறைந்தார்
படுத்ததளிரிற்சிலர்பசந்தனரசந்தார்.

(இ-ள்.) தொடுத்தகலிடைசிலர் துவண்டனர் - தொகுக்கப்பட்டகல் லினிடைச்சிலர் துவண்டுதுயில்கொண்டனர், அடுத்த அடையில்சிலர் அழிந்தனரயர்ந்தார் - நெருங்கிய இலையிடைச்சிலர் மனமழிந்தயர்ந்தனர், உடுத்த துகில் சுற்றொருதலை சிலருறைந்தார் - உடுக்கப்பட்ட ஆடையைச்சுற்றி யொருபுறத்தேசிலருறைந்தனர், படுத்ததளிரிற்சிலர் பசந்தனரசந்தார்-படுத்த தளிரின்கண்சிலர் பசந்து அசந்திருந்தனர்.—எ-று.

கல்லிடைத்துயின்றாரும்,அடையிற்றுயின்றாரும், உடுத்தவாடையிற்று யின்றாரும், தளிரிற்றுயின்றாருமாகிய மாதர்பலரென்பது காண்க. இப்பதி னொரு செய்யுளானும் சீராமனை விடாதுவந்தமைந்தரும் மாதருந் துயின்ற மையுணர்த்தப்பட்டது. (கசு)

(1) ஏனையருமின்னணமிறங்கினருறங்கா
மானவனுமந்திரிசுமந்திரனைவாவென்
றானமில்பெருங்குணமொருங்குடையவுன்னால்
மேனிகழ்வதுண்டவுரைகேளெனவிளம்பும்.

(இ-ள்.) ஏனையருமின்னணமிறங்கினர் - பிறருமிவ்வண்ணமிறங்கி யிருந்தனர், உறங்காமானவனும் மந்திரிசுமந்திரனை வாவென்று-துயில்கொள் ளாத மனுகுலத்தோன்றலாகிய சீராமனும் மந்திரியாகிய சுமந்திரனை வா வென்றழைத்து, ஊனமில்பெருங்குண மொருங்குடையவுன்னால் - கேடில் லாதபெருமையாகிய குணமுழுதுமடையப் பெற்றநின்னால், மேல்நிகழ்வ

துண்டு அவ்வுரைகேளெனவிளம்பும் - பின்னிகழுங்காரியஞ் சிறிதுண்டதனைக்கேளெனச்சொல்லும்.—

நகரமாந்தரையு மாதரையுநீங்கிச்செல்வான்கருத்துடையானாகலின் சிராமனை 'உறங்காமானவன்' என்றார். மானவனென்பது மனுகுலத்துத்தோன்றலென்பதுபற்றியென்க. மாதரை இதுகாறும் கூறினமையான் அவருமவ்வாறுயின ரென்பார் 'ஏனைய நமின்னணமிறங்கினர்' என்றார். இன்னவண்ணமென்றது யாீஇயது. மேனிகழ்வதுண்டவுரை யென்றது - பின்வருஞ்செய்யுள்களாற் குறிக்கப்படுவனவற்றினை. (கஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

(2) பூண்டபேரன்பினுரைப்போக்குவதரிதுபோக்கா
தீண்டுநின்றேகல்பொல்லாதெந்தைநீயிரதமின்னே
தூண்டினைமீளநோக்கிச்சுவட்டையோர்ந்தென்னையங்கே
மீண்டனனென்னமீள்வரிதுநின்னைவேண்டிற்றென்றான்.

(இ - ள்.) பூண்டபேரன்பி னுரைப்போக்குவது அரிது - மேற்கொண்டவன்பினையுடையாரை நகரிற்போக்குவதரிது, போக்காது ஈண்டுநின்று ஏகல்பொல்லாது - அவரைப்போகச் செய்யாதிங்கிருந்து போதல் கொடியது, எந்தைநீயிரத மின்னேதூண்டினை - எந்தாய் நீ தேரையிப்போதே தூண்டி, மீளநோக்கிச் சுவட்டையோர்ந்து-மீளப்பார்த்துச் சுவட்டையறிந்து, என்னை அங்கே மீண்டனனென்னமீள்வர்-என்னைத்திருநகர்க்கு மீண்டேனென்று மீள்வார், இது நின்னைவேண்டிற்றென்றான் - இதனையே யானும்மைவேண்டிய தென்றனன்.—எ-று.

நகரமாந்தர் அன்பிற்கடத்த லரிதாகலின் 'பூண்டபேரன் பினுரைப்போக்குவதரி'தென்றும்,அவரைநீக்காதே கான்சேறன்முடியாதாகலின்'போக்காது ஈண்டுநின்றேகல்பொல்லா' தென்றும்,அவர்க்குத்தேரிடைமீள்வதே காட்டவேண்டுமென்பார் 'இரதமின்னே தூண்டினை மீளநோக்கிச்சுவட்டையோர்ந்தென்னையங்கேமீண்டனனென்ன மீள்வ' ரென்றும், இதுவேஎன்வேண்டுகோளென்பார்'இதுநின்னைவேண்டிற்று'என்றுங்கூறினர். இவ்விரண்டுசெய்யுளானும் சிராமன் சுமந்திரனை இரதங்கொண்டு மீள்கவென்ப துணர்த்தப்பட்டது.

(1) செவ்வியகுரிசில்கூறத்தேர்வலான்செப்புவானவ்
வெவ்வியதாயிற்றீயவிதியினின்மேலென்போலாம்
இவ்வயினின்னைநீக்கியின்னுயிர்தீர்ந்தின்றேகி
அவ்வயினனையகாண்டற்கமைதலாலளியனென்றான்.

(இ - ள்.) செவ்விய குரிசில்கூற - நடுவுநிலைமை யுடைய இறைவன் சொல்ல, தேர்வலான் செப்புவான் - தேருரவல்லானாகிய சுமந்திரன் கூறுவான்,அவ்வெவ்விய தாயின்-அக்கொடியதாயினும், தீயவிதியினின்மேலென் போலாம் - கொடியவிதியினுமே லதையொக்கும், இவ்வயினின்னைநீக்கி-

இவ்விடத்துன்னைவிடுத்து, இன்னுயிர்தீர்ந்தின்றேகி - இன்றினியவுயிரினை நீங்கிச்சென்று, அவ்வயின் அனையகாண்டற்கு அமைந்தனன் - அவ்விடத்தச் செயல்களைக் காணற்குச்சமைந்ததனேன், அளியெனென்றான்-ஏழையென்றனன்.—

செவ்வியகுரிசிலென்றது சீராமனை. விதிகொடிதென்பான் 'வெவ்வியதாயின்றீயவிதி' என்றும், உன்னை நீங்குவதாயின் உயிர்நீங்கியதாமென்பான் 'இவ்வயினின்னை நீக்கி இன்னுயிர்தீர்ந்தின்றேகி' என்றும், அங்கரசன்படுந்துன்பங்காண்டற்கமையேனென்பான் 'அவ்வயினனையகாண்டற்கமைந்தனன்' என்றும், தன்சிறுமையுணர்த்த 'அளியென்' என்றுங்கூறினார். (உ0)

கலிவிருத்தம்.

(2) தேவியுமிளவலுந்தொடரச்செல்வனைப்
பூவியல்கானகம்புகவுய்த்தேனென்கோ
கோவினையுடன்கொடுகுறுகினேனென்கோ
யாவதுகூறுகேனிரும்பினெஞ்சினேன்.

(இ - ள்.) தேவியுமிளவலுந்தொடர - சனகியுமிளையானுந்தொடர்ந்து செல்ல, செல்வனைபூவியல் கானகம்புகவுய்த்தேனென்கோ - இறைவனைப் பூக்கணிரம்பியகாட்டிற் புகச்செலுத்தினே னென்பேனோ, கோவினையுடன் கொடு குறுகினேனென்கோ - இறைவனையென்னுடன் கொண்டுகுறுகினே னென்பேனோ, யாவதுகூறுகேன் இரும்பினெஞ்சினேன் - இரும்பினையொத்தமனமுடையேன் யாதுகூறுவேன்.—

செல்வனென்றதுசீராமனை. என்குஅனைத்தும்குவ்வீற்றுத்தன்மையொருமை வினைமுற்று. யான் நின்பிரிவுணர்த்துஞ் சொல்லைச்சொல்லச் சமைந்தேனாகலின் 'இரும்பினெஞ்சினே' னென்றும், இன்னதென்றது கூறற்கியலாமையின் 'யாவது கூறுகே' னென்றுங்கூறினார். கூறுகே னென்புழிக்ககரமெய்எதிர் காலங்காட்டிற்று. கொண்டென்பது மரீஇயது. (உக)

(3) தாருடைமலரினுமொதுங்கத்தக்கிலா
வாருடைமுலையொடுமதுகைமைந்தரைப்
பாரிடைச்செலுத்தினேன்பழையநண்பினேன்
தேரிடைவந்தனென்றீதிலேனென்கோ.

(இ-ள்.) தாருடைமலரினு மொதுங்கத்தக்கிலா-மாலையாகத்தொடுத்த மலரினுமொதுங்கத் தகாதவாருடை முலையொடுமதுகை மைந்தரை-கச்சணிந்தமுலையையுடைய சனகியொடும்பேராற்றலையுடையமக்களை, பாரிடை செலுத்தினேன் - பாரிற்செலுத்தினேன், பழைய நண்பினேன் - தொன்றுதொட்டுவந்தநண்பினையுடையேன், தேரிடைவந்தனென் - தேரேறிவந்தேன், தீதிலேனென்கோ - தீதிலேனாகிவந்தேனென்பேனோ.—

ஆய்ந்து மாலையாகத் தொடுக்கப்பட்ட மலரும் இறைவிநடக்கப் பாதங்களை வருத்துதலின் 'தாருடைமலரினு மொதுங்கத்தக்கிலாமுலை ' என்றார்.' * ''அனிச்சமுமன்னத்தின் றூவியுமாத-ரடிக்குநெருஞ்சிப்பழம்'' என்பவாகலின்.தக்கிலாமுலையென்றியைக்க.முலை-ஆகுபெயர். தொன்றுதொட்டுவந்தநண்புடையேனாயினும்அதனைக்கருதாதுவிடுத்து வந்தமையான் 'பாரிடைச்செலுத்தினேன்பழைய நண்பினேன்' என்றும், அவர்கட்குத் தீதிழைத்து மீண்டேனென்பது தோன்றத் 'தீதிலேனென்கோ' வென்றும் கூறினார். உடையவென்பதீறு தொகுக்கப்பட்டது. (உஉ)

(4) வன்புலக்கன்மனமதியில்வஞ்சனேன்
என்புலப்புறவுடைந்திரங்குமன்னன்பால்
உன்புலக்குரியசொல்லுணர்த்தச்செல்கெனோ
தென்புலக்கோமகன்றூதிற்செல்கெனோ.

(இ-ள்.) வன்புலக்கன் மனமதியில் வஞ்சனேன்-வன்மையாகியபுலனையும் கற்போலுமனத்தையும் அறிவில்லாமையுமுடையவஞ்சனேன்,என்புலப்புறவுடைந்திரங்கும்மன்னன்பால்-யாக்கையழியவருந்தியேங்கு மரசனிடை, உன்புலக்குரியசொல் உணர்த்தச்செல்கெனோ-உன்னறிவினுக்கமைந்த சொல்லினையறிவிக்கச் செல்வேனோ, தென்புலக்கோமகன் தூதிற்செல்கெனோ - கூற்றுவன் தூதனெனப்போவேனோ.—

தென்புலத்தார்க்கு இறைவன் நமனாகலின் 'தென்புலக்கோமக' னென்றார். தூது - சொல்லானஃறிணை. என்புலப்புறவுடைந்திரங்கு மன்னனென்றது-உயிர்நீங்குமவதியினிற்குமரசனை. 'கன்மனமதியில்வஞ்சனே' னென்பதனை 'இரும்பினெஞ்சனே' னென்றதற்குரைத்தாங்குரைத்துக்கொள்க. என்பு-ஆகுபெயர். (உரு)

(5) நாற்றிசைமாந்தருநகரமாக்களும்
தேற்றினர்கொணர்வருஞ்சிறுவன்றன்னையென்
றூற்றினவரசனையய்யவெய்யவென்
கூற்றுறழ்சொல்லினாற்கொலைசெய்வேன்கொலோ.

(இ - ள்.) நாற்றிசைமாந்தரும் நகரமாக்களும் - நான்குதிசையினுள்ளாரும் நகரமாந்தரும், உன்சிறுவன்றன்னைதேற்றினர்கொணர்வர் - உன்மகனாகிய ராமனைத்தேற்றிக்கொணர்வர், என்றூற்றிய அரசனை - என்று சொல்லியாற்றப்பட்ட அரசனை, அய்யவெய்யவென்கூற்றுறழ் சொல்லினாற் கொலைசெய்வேன்கொலோ - ஐயனேகொடியவென் கூற்றுவனையொத்த சொல்லினாற் கொலைசெய்வேனோ.—

நாற்றிசைமாந்தரென்றது உலகத்தவரை. நகரமாக்கள் என்றது நகரமாந்தரை. சிறுவனென்றது ஸ்ராமனை. தேற்றினர் வினையெச்சமுற்று. உன்பிரிவைக்கூறுஞ் சொல்லாகலின் 'கூற்றுறழ்சொல்' என்றும்; அதுகூறின் அவனிறந்து படுவது திண்ணமாகலின் 'கொலைசெய்வேன்கொலோ' என்றுங் கூறினார். (உச)

* திருக்குறள், செ-கOஉO.

(6) அங்கிமேல்வேள்விசெய்தரிதிற்பெற்றநின்
சிங்கவேறகன்றதென் றுணர்த்தச்செல்கேனோ
எங்கள்கோமகற்கினியென்னிற்கேகயன்
நங்கையேகடைமுறைநல்லள்போலுமால்.

(இ - ள்.) அங்கிமேல் வேள்விசெய்து - தீயில்வேள்வியாற்றி, அரிதிற் பெற்ற நின்சிங்கவேறகன்றதென்றுணர்த்தசெல்கேனோ - அரிதாகப்பெற்ற நின் ஆண்சிங்கம்போல்வான் போயினனென்றறிவிக்கப்போவேனோ, எங்கள் கோமகற்கினி யென்னிற்கேகயன்நங்கையே கடைமுறை நல்லள்போலும் - எங்களரசனுக்கினி யென்னினும் கைகேசியேகடைமுறைநல்லவள்போலும்.

'அங்கிமேல்வேள்விசெய்' தென்பது மகவருவேள்வியை. உன்னைக்கானேகச் சொன்னகைகேசியினும், உன்பிரிவைக் கூறும்யானே கூற்றுவனென்பான் 'எங்கள்கோமகற் கினியென்னிற்கேகயனங்கையே கடைமுறைநல்லள்போலும்' என்றான். (உரு)

(7) முடிவுறவின்னனமொழிந்தபின்னரும்
அடியுறத்தழுவினன ழுங்குபேரரா
இடியுறத்துவளுவதென்னுமின்னலன்
படியுறப்புரண்டனன்பலவும்பன்னினான்.

(இ - ள்.) முடிவுற இன்னனமொழிந்தபின்னரும் - முடிவாக இவைபோல்வனகூறிய பின்னும், அடியுறத்தழுவினன்- அடியிற்பொருந்தத்தழுவி, அழுங்குபேரரா இடியுறத் துவளுவதென்னுமின்னலன் - வருந்துகின்ற பெரியநாகம்இடியோசைகேட்டுத்துவளுவதெனப்படுந்துன்பத்தனாய்,படியுறப்புரண்டனன் பலவும் பன்னினான் - நிலமுறப்புரண்டு பலவற்றையும் பன்னிநின்றனன்—எ-று.

இன்னனவென்றது 'தேவியுமிளவலுந் தொடரச்செல்வனைக் பூவியல் கானகம் புகவுய்த்தே' னென்பதுமுதலியவற்றை. இடியோசைகேட்டநாகம் போற்புரண்டுவருந்துதலே அவன்படுந்துன்பத்துக் குவமைகூறினார். இன்னலன், புரண்டனன் என்பன வினையெச்சமுற்று. இவ்வேழு செய்யுளானும் சுமந்திரன் சொன்னமை யுணர்த்தப்பட்டது. (உசு)

(1) தடக்கையாலெடுத்தவற்றழுவிக்கண்ணநீர்
துடைத்துவேறிருத்திமற்றினையசொல்லினான்
அடக்குமைம்பொறியொடுகரணத்தப்புறம்
கடக்கும்வாலுணர்வினுக்கணுகுங்காட்சியான்.

(இ-ள்.) அடக்கும் ஐம்பொறியொடு கரணத்தப்புறம் கடக்கும் வாலுணர்வினுக்கு அணுகுங்காட்சியான் - அடக்குமியல்பினையுடைய ஐம்பொறிகளோடு கரணங்கட்கப்பாற் கடக்குமெய்யுணர்ச்சிக்கு நெருங்கித்தோன்றும் தோற்றத்தான், தடக்கையாலெடுத்து - (அவ்வாறு சொல்லிய சுமந்திரனை) விசாலித்தகையாலெடுத்து, அவற்றழுவி - அவனைத்தழுவிநின்று, கண்ணநீர்

துடைத்து - கண்ணிற்பெருகு நீரைத்துடைத்து, வேறிருத்தி-வேறாகவிருத்தி, இனையசொல்லினன்-இன்னனசொல்வதாயினன்—

மற்று - அசைநிலை. ஐம்பொறியுங்கரணநான்குங் கடந்தமெய்யுணர்ச்சியுடையார் வாலறிவினுக்கண்மையாளுகலின் 'அடக்குமைம்பொறியொடுகரணத்தப்புறம்-கடக்கும்வாலுணர் வினுக்கணுகுங் காட்சியான்' என்றார். இதனை *"யாவையுமெவருந்தானாயவரவர் சமயந்தோறுந், தோய்விலன்புலனைந்திற்குஞ் சொலப்படானுணர்வின் மூர்த்தி" எனப்பெரியாரும் பணித்தமையானறிக. (உஎ)

(2) பிறத்தலென் றுற்றபின்பெறுவயாவையும்
திறத்துளியுணர்வதோர்செம்மையுள்ளத்தாய்
புறத்துறுபெரும்பழிபொதுவின்றெய்தலும்
அறத்திறமறத்தியோவவலமுண்டெனு.

(இ - ள்.) பிறத்தலென்றுற்றபின் - ஒருவன் பிறப்பெடுத்தலென்றமைந்தபின், பெறுவயாவையும் - பெறவேண்டுவனவெல்லாம், திறத்துளியுணர்வதோர் செம்மையுள்ளத்தாய் - முறையாலுணர வல்லதொரு செம்மையாய மனமுடையானே, புறத்துறு பெரும்பழிபொதுவின்றெய்தலும் - புறத்திற்பொருந்திய பெரிதாகியபழி பொதுவில்லாமலடைதலும், அவலமுண்டெனு அறத்திறமறத்தியோ - அவலமுண்டென்று அறத்தின் கூறுபாட்டினை மறக்கின்றனையோ—

பிறப்பெடுத்ததனாலாய பயனனைத்துமொருசேர வுணர்ந்தவனாகலின் 'பிறத்தலென்றுற்றபின் பெறுவயாவையும் - திறத்துளியுணர்வதோர் செம்மையுள்ளத்தாய்' என்றார். பழியெய்தியவழியவலமென்றுகருதியறத்திறன் மறக்கற்பாலதன் றென்பார் 'அறத்திறனவலமுண்டெனு மறத்தியோ' என்றதென்க. திறத்துளி என்புழி உளிமூன்றாவதன் பொருள் படுவதோரிடைச்சொல். இதனை $ "இயல்புளிக்கோலோச்சும்" என்புழிப்பரிமேலழகர்கூறுவதனானுமுணர்க. (உஅ)

(3) முன்புநின்றிசைநிறீஇமுடிவுமுற்றிய
பின்புநின்றுறுதியைப்பயக்கும்பேரறம்
இன்பம்வந்துறுமெனினினியதாயிடைத்
துன்பம்வந்துறுமெனிற்றுறக்கலாகுமோ.

(இ - ள்.) முன்புநின்று-முன்னே நிலைபெற்று, இசைநிறீஇ-இசையை நிறுத்து, முடிவுமுற்றியபின்புநின்றுஉறுதியைபயக்கும்பேரறம் - முடிவுமுற்றப்பெற்ற பின்னேநிலைத்து உறுதியைக்கொடுக்கும் பெரியவறம், இன்பம் வந்துறு மெனினினியது - இன்பம்வந்தெய்து விக்குமெனின் நன்றாம், ஆயிடைதுன்பம்வந்துறுமெனின் துறக்கலாகுமோ-ஆங்கே துன்பம்வந்தெய்துவிக்கு மெனின் நீக்கலாகுமோ—

* திருவாய்மொழி. திருப்பதிகம்-உச-செ-கo. $ திருக்குறள் - செ. ருசஙு.

புறங்கடை நல்லிசையைநாட்டுவதாகியவறம் இன்பம்பயக்குமெனினன்றேயாக, துன்பம் வந்தெய்துமெனிற் கைவிட லாகாதென்பார் 'துன்பம் வந்துறுமெனிற் றுறக்கலாகுமே' என்றதென்க. ஆயிடை என்புழிச்சுட்டு நீண்டது. (உகூ)

(4) நிறப்பெரும்படைக்கலநிறத்தினேருற
மறப்பயன்விளக்குறும்வன்மையன்றரோ
இறப்பினுந்திருவெலாமிழப்பவெய்தினும்
துறப்பிலரறமெனல்சூரராவதே.

(இ - ள்.) நிறம்பெரும்படைக்கலம் நிறத்தினேருற - ஒளியமைந்தபடைக்கலங்கள்மார்பினேராகவெய்ய, மறப்பயன் விளக்குறும் வன்மையன்று- மறத்தின்பயனைவிளக்குமாற்றிலினன்று, இறப்பினும்திருவெலாமிழப்பவெய்தினும்-இறந்தாலும் செல்வமனைத்துமிழக்கும்படியடைந்தாலும், துறப்பிலரறமெனல்சூரராவது-சூரராவதுஅறமென்பதைக்கைவிட்டிலர்ரென்பது.—

வீரரொருவரோடொருவர் பொருகையிற் படைக்கலங்களாலுண்டாகு மார்பின் விழுப்புண்ணை 'மறப்பய' னென்றூர். அறந்துறப்பிலர் சூரராவது வன்மையன் றெனவினைமுடிக்க. (கூo)

(5) கான்புறஞ்சேறலிலருமைகாண்டலால்
வான்பிறங்கியபுகழ்மன்னர்தொல்குலம்
யான்பிறந்தறத்தினின்றிழுக்கிற்றென்னவோ
ஊன்றுறந்துயிர்குடித்துழலும்வேலினுய்.

(இ - ள்.) கான்புறஞ்சேறலின் அருமைகாண்டலால் - கானிடஞ்செல்வதனலருமையைக் காண்டலின், வான்பிறங்கிய புகழ்மன்னர் தொல்குலம்- வானளவும் விளங்கிய புகழினையுடைய அரசர்பழைமையாகிய மரபு, ஊன்றுறந்து உயிர்குடித்து உழலும் வேலினுய் - உடலைநீக்கி உயிரையுண்டுழலும் வேலினையுடையானே, யான்பிறந்து அறத்தினின்றிழுக்கிற் றென்னவோ - யான்பிறத்தலால் அறத்தினின்றுதவறுற்றதென்று கூறவோ.—

உயிர்குடித்தென்றதிலக்கணை. மனுமுதலிய மன்னரைப்பெற்று வாய்மையுடையாரெனவிளங்கிற்றென்பார் அரசர்மரபை 'வான்பிறங்கியபுகழ்மன்னர் தொல்குல' மென்றூர்.பிறக்கவென்னுஞ்செயவெனெச்சந்திரிந்துநின்றது.

(6) வினைக்கருமெய்மையன்வனத்துள்விட்டனன்
மனைக்கரும்புதல்வனையென்றன்மன்னவன்
தனக்கருந்தவமதுதலைக்கொண்டேகுதல்
எனக்கருந்தவமிதற்கிரங்கலெந்தைநீ.

(இ - ள்.) வினைக்கருமெய்மையன்- வினையிற்றூயனுய், மனைக்கரும்புதல்வனை - மனையிற்றேன்றிய புதல்வனை, வனத்துள்விட்டனன் என்றல்-

காட்டின்கண் அடைவித்தனன் என்பது, மன்னவன் றனக்கருந்தவம் - அரசனுக்கருந்தவமாம், அதுதலைக்கொண்டேகுதல் எனக்கருந்தவம்-அதனைத்தலைமேற்கொண்டு நடப்பது எனக்கருந்தவமாம், இதற்கிரங்கலெந்தை நீ - இதற்கு நீ வருந்தாதொழி.—

வாய்மைபிறழாது மன்னவன் என்னைக் கான்புகச்செய்வது அவற்கருந்தவம், அவன்சொற்கடவாதெய்த லெற்கருந்தவமாகலினதற்கிரங்க லாகாதென்பார் 'இதற்கிரங்கலெந்தை நீ' என்றார். இரங்கல்அல்லீற்றெதிர்மறையேவலொருமைமுற்று. (௬௨)

(7) முந்தினைமுனிவனையிறைஞ்சிமுற் றுமென்
வந்தனைமுதலியமாற்றங்கூறினை
எந்தையையவனொடுமெய்தியீண்டென
சிந்தனையுணர்த்துதியென் றுசெப்புவாய்.

(இ - ள்.) முனிவனை முந்தினை-முனிவனைமுற்பட்டடைந்து, இறைஞ்சி - வணங்கிநின்று, என்வந்தனைமுதலிய மாற்றங்கூறினை - என்வழிபாடுமுதலிய சொற்களைப்பேசி, எந்தையைஅவனொடுமெய்தி-என்தந்தையை அவனிடத்தடைவித்து, எனசிந்தனை யுணர்த்துதியென்று செப்புவாய்- என் கருத்துகளைத் தெரிவிப்பாயென்று சொல்வாய்—

வந்தனைமுதலியன என்பது வழிபாடுமுதலியவற்றினை. முந்தினை கூறினைஎன்பன வினையெச்சமுற்று. (௬௩)

(8) முனிவனையெம்பியைமுறையினின் றரும்
புனிதவேதியர்க்குமேலுறைபுத்தேளிர்க்கும்
இனியனவிழைத்தியென் றியம்பியெற்பிரி
தனிமையுந்தீர்த்தியென் றுரைத்திதன்மையால்.

(இ - ள்.) முனிவனை எம்பியை-முனிவனை பரதனை, முறையினின்று-முறைமையினின்று, அரும்புனித வேதியர்க்கும்-அருமையாகிய தூய்தன்மையுள்ள முனிவருக்கும், மேலுறைபுத்தேளிர்க்கும் - வானிலுறையுந் தேவருக்கும், இனியன இழைத்தியென்று இயம்பி- இனியகாரியங்கள் செய்யென்று கூறி, எற்பிரிதனிமையைத் தீர்த்தியென்றுரைத்தி - என்னைப்பிரியுந்தனிமையு நீக்கென்றுரை, தன்மையால் - முறைமையான்.—

எம்பியைவேதியர்க்கும்புத்தேளிர்க்கும் இழைத்தியென் றியம்பித்தீர்த்தியென்றுரைத்தி யென்றியைக்க. வேதியர்க்காய வுபகாரமும், தேவர்க்காயவிழவும் செய்தல் அரசர்க்குரியகடனாகலினவற்றையேயெடுத்துக்கூறினரென்க. மேல்-ஆகுபெயர். தீர்த்தி ஏவலொருமை வினைமுற்று. (௬௪)

(9) வெவ்வியதன்னையால்விளைந்ததீண்டொரு
கவ்வையென்றிறையுந்தன்கருத்திேனுக்கலன்.
எவ்வருளென்வயின்வைத்ததின்சொலால்
அவ்வருளவன்வயினருளுகென்றியால்

(இ - ள்.) வெவ்வியதன்னை யால்விளைந்தது - தீயசெய்கையன்னையான் விளைந்தது, ஈண்டொருகவ்வையென் றிறையுந்தன்கருத்திளுக்கலன் - இங்கொருகாரியமுந்தன்கருத்திஞேக்காமல், எவ்வருளென்வயின்வைத்தது - எவ்வகையருளென்பால்வைத்தது, இன்சொலால் அவ்வருளவன் வயினருளுக என்றி - இனிய சொல்லான் அவ்வகையருளை அவனிடையருளுகவென்றுகூறு.

என்பால் வைத்தவருளைப்பரதன்பால் வைக்கவேண்டுமென்பார் 'எவ்வருளென்வயின் வைத்ததின்சொலால், அவ்வருளவன்வயி னருளுகென்றி' என்றும், தாய்தீமைசெய்ததாகக் கருதவேண்டாவென்பார் 'வெவ்வியதன்னையால் விளைந்த தீண்டொருகவ்வையென்றிறையுந்தன் கருத்திளுக்கலன்' என்றுங் கூறினர். (கூடு)

(10) வேண்டினனிவ்வரமென் றுமேலவன்
ஈண்டருளெம்பிபானி றுவியேகினை
பூண்டமாதவனெடுங்கோயில்புக்கென
தாண்டகைவேந்தனையவலமாற்றிப்பின்.

(இ - ள்.) இவ்வரம் வேண்டினன்என்று - இவ்வரத்தைவேண்டினன் என்று, மேலவன் ஈண்டருளெம்பிபானிறுவி - அரசன் என்பாற்செய்யு மருளினைப்பரதன்பானிறுத்து, பூண்டமாதவனெடுங்கோயில் ஏகினைபுக்கு - மேற்கொண்டபெருந்தவத்தனுடுமொளிகையடைந்துசென்று, என தாண்டகை வேந்தனையவல மாற்றிப்பின் - என் ஆடவரிற்சிறந்த அரசர்பெருமானைத் துயர் நீக்கிப்பின்.—

ஆண்டகைவேந்தன் இருபெயர்ப்பண்பு. * "வையத்திறையென்று வைக்கப்படு" மென்பவாகலின் 'மேலவ' னென்று கூறினர். பரதனையுமன்னையையுஞ் சினந்து பேசாமையேயான் வேண்டியதெனற்கு 'இவ்வரம் வேண்டினன்' என்றதென்க. (கூசு)

(11) ஏழிரண்டாண்டுநீத்தீண்டவந்துனைத்
தாழ்குவன் றிருவடிதளரலீண்டெனச்
சூழிவெங்கடகளிற்றரசற்சொல்லிப்பின்
வாழிமாதவன்சொலான்மனந்தெருட்டுவாய்.

(இ - ள்.) ஏழிரண்டாண்டு நீத்து - பதினான்காண்டுங் கழிந்து, திருவடி ஈண்டவந்துனைத் தாழ்குவன் தளரல் ஈண்டென - திருவடியை நெருங்கவந்துன்னை வணங்கியடைவேன் தளராதொழியிங்கிருந்தென, சூழி வெங்கடகளிற்றரசற்சொல்லி - நெற்றிப்பட்டமணிந்தகொடியமதச்சுவட்டினையுடையகளிற்றினையுடையவரசனைக்கூறி, பின் வாழிமாதவன் சொலான்மனந்தெருட்டுவாய் - பின்னர் வாழ்தலைப்பெருமையாகவுடைய தவமுடையமுனிவன்சொல்லான் மனந்தெளிவிப்பாய்.—

---

* திருக்குறள் - செ. கூஅஅ.

மெய்யுணர்ச்சியும், நிரதிசய வீட்டின்பமு மெய்தப்பெறுபவனாகலின் ‘வாழிமாதவ’ னென்றார். தாழ்குவன் - அன் ஈற்றுத்தன்மை யொருமை, புதியன புகுதல். (கூஎ)

(12) முறைமையாலெற்பயந்தெடுத்தமூவர்க்கும்
குறைவிலாவென்னெடுவணக்கங்கூறிப்பின்
இறைமகன் றுயர்துடைத்திருத்திமாடென்றான்
மறைகளைமறைந்துபோய்வனத்துள்வைகுவான்.

(இ - ள்.) மறைகளை மறைந்துபோய் வனத்துள் வைகுவான் - வேதங்களைக்கரந்து போய் காட்டிற்சென்ற சீராமன், எற்பயந்தெடுத்த மூவர்க்கும்-என்னை யீன்றெடுத்ததாயர் மூவருக்கும். முறைமையால் என்னெடுவணக்கங் கூறி-முறைமையால் என்னெடியவழிபாடுகூறி, இறைமகன் துயர்துடைத்திருத்திமாடென்றான் - அரசன் துயரமகற்றி அவன்பக்கலிருவென்றனன்.

மறையினந்தங் கடந்தானாயினும் தாய்மொழியான் வான்போந்திருத்தலின் ‘மறைகளை மறைந்துபோய் வனத்துள்வைகுவான்’ என்று கூறினார். இறைமகனென்றது - தயரதனை. இப்பன்னிரண்டு செய்யுளானும் சீராமன் சுமந்திரனுக் குணர்த்திய துணர்த்தப்பட்டது. (கூஅ)

ஆள்வினையாண்மையிற் றிறம்பலன்றெனாத்
தாள்முதல்வணங்கியதனித்திண்டேர்வலான்
ஊழ்வினைவசத்துயிர்நிலையென் றுன்னுவான்
வாழ்வினைநோக்கியைவணங்கிநோக்கினான்.

(இ - ள்.) ஆள்வினையாண்மையிற் றிறம்பலன்றெனா - செய்தொழில் ஆண்மையினின்று மாறுபடேலன்றென்று, தாள்முதல்வணங்கிய தனித்திண்டேர்வலான் - தாளில்வணங்கிய ஒப்பற்ற தேர்செலுத்துஞ் சுமந்திரன், ஊழ்வினைவசத் துயிர்நிலையென்றுன்னுவான் - ஊழ்வினைவசத்த துடம்பென்றெண்ணி, வாழ்வினைநோக்கியை வணங்கிநோக்கினான் - சனகியை வணங்கி நோக்கினான்.—எ-று.

எத்தன்மையர் யாதுவேண்டினு மதனைவரையாது வேண்டியாங்குபயப்பவ ளாதலின் ‘வாழ்வினைநோக்கி’ யென்றார். வினைநீங்கியவழி உயிருடம்பொடுவாழ்தலருமை பற்றி ‘ஊழ்வினைவசத்துயிர்நிலையென்றுன்னுவா’ னென்ற தென்க. முதல் ஏழனுருபு. ஊழெனப்படுவது இருவினைப்பயன் செய்தவனையேசென்றடைதற் கேதுவாகிய நியதி. உடம்பு அவ்வூழ் கடந்தவழிநில்லாமையின் ‘ஊழ்வினைவசத்துயிர்நிலை’யென்றார். உயிர்நிலை-உடம்பு. இதனை “கள்வார்க்குத் தள்ளுமுயிர் நிலை” என்புழி உயிர்நிலை என்பதற்குப்பரிமேலழகர்கூறியதனா னறிக. (கூகூ)

திருக்குறள், செ. உகூ0.

(2) அன்னவள்கூறுவாளரசர்க்கத்தையர்க்
கென்னுடைவணக்கமுன்னியம்பியானுடைப்
பொன்னிறப்பூவையுங்கிளியும்போற்றுகென்
றுன்னுமென்றங்கையர்க்குணர்த்துவாயென்றாள்.

(இ - ள்.) அன்னவள் கூறுவாள் - சனகி கூறுவாள், அரசர்க்கு அத்தையர்க்கு என்னுடையவணக்க முன்னியம்பி - அரசருக்கு மாமியருக்கு மென்னுடைய மிக்கவழிபாடுமுற்கூறி, யானுடைப் பொன்னிறம்பூவையும் கிளியும் போற்றுகஎன்று - யான் பெற்றுடைய பொன்னிறமுள்ள பூவையையும் கிள்ளையையும் வளர்க்கவென்று, உன்னுமென்றங்கையர்க்குணர்த்துவாயென்றாள் - என்பிரிவைநாடிவருந்து மென்றங்கையருக்கு அறிவி யென்றனள்.

என்றங்கையரென்றது பரதன், இலக்குவன், சத்துருக்க னென்பார் மனைவியராகிய மாளவி, ஊர்மிளை, சுதகீர்த்தி யென்பாரை. இதனை 'எள்ளவில் கொற்றவன்யான்பி னளித்த, அள்ளன் மலர்த்திருவன்னவ' ரென்றும், 'நெய்நிறை தாரன்குசத்துவசட்பேர் - நெய்நிறைவேலவன் மங்கையர்நேர்ந்தா' ரென்றுமுற்கூறிய தனுனுமுணர்க. இவ்விரண்டுசெய்யுளானும் சனகிசுமந்திரனுக்குச் சொன்னமை யுணர்த்தப்பட்டது. (௬0)

தேர்வலானவ்வுரைகேட்டுத்தீங்குறின்
யார்வலாருயிர்துறப்பெளிதன்றேயெனப்
போர்வலான்றடுக்கவும்பொருமிவிம்மினன்
சோர்விலாளறிவிலாத்துயர்க்குச்சோர்கின்றான்.

(இ - ள்.) தேர்வலான் அவ்வுரைகேட்டு - தேரினைச்செலுத்தலில் வல்லவனாகிய சுமந்திரன்அப்மொழியைக்கேட்டு, தீங்குறின் - தீங்கெய்தப்பெறின், யார்வலார் - யாவர் வல்லவர், எளிதன்றேயென - எளியதன்றேயென்று, சோர்விலாள் அறிவிலாத்துயர்க்கு சோர்கின்றான் - சோர்வில்லாதாள் பேதைமையாகிய துன்பத்துக்கு வருந்தி, போர்வலான்றடுக்கவும் பொருமி விம்மினன் - போர்த்தொழிலில் வல்லானாகிய சீராமன்தடுக்கவும்கலங்கி விம்மினன்.

சோர்கின்றான் வினையெச்சமுற்று. தேர்வலான் என்றது சுமந்திரனை. போர்வலானென்றது சீராமனை. இறைவனோடு கான்படர்ந்தமை பற்றித் துயரமறியாமையிற்சனகியைச் 'சோர்விலா'ளென்றதென்க. தீங்கெய்தப்பெறின் வருந்துதலியல்பாதலின் 'தீங்குறின்யார்வலா ரெளிதன்' றென்றதென்க. இதனாற் சுமந்திரன் வருந்தியது கண்டு சீராமன் தேற்றிய துணர்த்தப்பட்டது. (௬௧)

ஆறினன்போற்சிறிதவலமவ்வழி
வேறிலாவன்பினய்விடைதந்தீகென
ஏறுசேவகற்றொழுதிளையடைந்தணைக்
கூறுவதியாதெனவினையகூறினன்.

(இ - ள்.) அவ்வழி அவலஞ்சிறிதாறினன் - அங்கே சிறிது துயரநீங்கி வேறிலாவன்பினய்-வேறுபடாத வன்புடையாய், விடைதந்தீகென - விடைதர,

ருகவென்று, ஏறு சேவகன் தொழுது-சிறந்த வீரனாகிய சீராமனை வணங்கி, இளையமைந்தனை-இளையவனை, கூறுவதுயாதென - நீ சொல்வதியாதென, இனையகூறினான் - இன்னமொழிகள் கூறினான்.—எ-று.

போலசைநிலை. ஆறினன்வினையெச்சமுற்று. வேறுபாடு கருதாது யாரிடத்துமன்புடையானாகலின் 'வேறிலாவன்பினாய்' என்றார். ஏறுசேவகனென்றது சீராமனை. இதனாற் சுமந்திரன் நின்கருத்தியாதென்றிளையவனை வினாவிய துணர்த்தப்பட்டது. (சஉ)

(1) உரைசெய்தெங்கோமகற்குறுதியாக்கிய
தரைகெழுசெல்வத்தைத்தவிரமற்றொரு
விரைசெறிகுழலிமாட்டளித்தமெய்யனை
அரைசனென்றின்னமொன்றறையற்பாலதோ.

(இ - ள்.) உரைசெய்து-சொல்லி, எங்கோமகற்கு உறுதியாக்கிய-எம்மிறைவனுக்குறுதியாகக்கொடுத்த, தரைகெழுசெல்வத்தைதவிர-அரசச்செல்வத்தையொழித்து, மற்றொருவிரைசெறிகுழலிமாட்டளித்தமெய்யனை - வேறொருமணங்கமழுங்கூந்தலாளிடத்தளித்தவாய்மையானை, அரைசனென்றின்னமொன்றறையற்பாலதோ-அரசனென் றின்னமுஞ்சிறிது கூறப்படுவதோ.

தவிர என்பது செய்தெனெச்சத்திரிபு. சீராமனுக்கெனப்பரம்பரையாவருஞ்செல்வத்தை வேறொருமாதுபா லளித்தலை வாய்மையாகக்கொண்டவனாகலின் 'மற்றொருவிரைசெறிகுழலிமாட்டளித்தமெய்யனை' என்றார். (சங)

(2) கானகம்பற்றிநற்புதல்வன்காயுணப்
போனகம்பற்றியபொய்யின்மன்னர்க்கிங்
கூனகம்பற்றியவுயிர்கொடின்னும்போய்
வானகம்பற்றிலாவலிமைகூறென்றான்.

(இ - ள்.) கானகம்பற்றி நற்புதல்வன்காயுண - கானடைந்து சிறந்த மைந்தன் காயருந்த, இங்கு போனகம்பற்றிய பொய்யின் மன்னர்க்கு-தான் நாட்டிலிருந் தறுசுவை யடிசிலை உண்ணும் பொய்யிலாத அரசனுக்கு, ஊனகம்பற்றிய உயிர்கொடு - ஊனையிடங்கொண்ட உயிரைக்கொண்டு, இன்னும்போய் - இன்னமுஞ்சென்று, வானகம்பற்றிலா வலிமை கூறென்றான்- வானுலகமடையாத வலிமையைச் சொல்லென்றனன்.—

தான்மனைவிகாதலான் மகனைக்காடுபோக்கியமெய்ம்மையனென்பது பற்றி 'பொய்யின்மன்னற்'கென்றும், அவனங்குக்காயுணத்தான் அறுசுவையடிசிலுண்டுயிர் வாழ்தலினு மிறத்தனன்றென்பது தோன்ற'வானகம் பற்றிலாவலிமை கூறென்றா' னென்றுங் கூறினார். (சச)

(3) மின்னுடன்பிறந்தவாட்பரதவேந்தற்கு
மன்னுடன்பிறந்திலென்மண்கொண்டாள்கின்ற
தன்னுடன்பிறந்திலென்றம்பிமுன்னலென்
என்னுடன்பிறந்தயான்வலியனென்றியால்.

(இ - ள்.) மின்னுடன்பிறந்தவாள் பரதவேந்தற்கு-மின்னோடுதோன்றுகின்ற வாட்படையையுடையபரதராசனுக்கு, மன்னுடன்பிறந்திலென்-இறைவனுடன்தோன்றினேனல்லேன், மண்கொண்டு ஆள்கின்றதன்னுடன் பிறந்திலென் - மண்ணரசைப்பெற்றாள்கின்ற அப்பரதனுக்குப்பின் தோன்றினேனல்லேன், தம்பிமுன்னலென்-சத்துருக்கனுக்குமுன்தோன்றினேனல்லேன், (ஆதலான்) என்னுடன் பிறந்தயான் வலியனென்றி - என்னுடன்தோன்றிய யானேசுகமாயிருக்கிறேனென்று சொல்.—எ-று.

பரதவேந்தனுக்கு வலியனென்றியைக்க. மின்தோன்றிய துணையில்லாதொழிவதுபோலிவனுடையவாளுமென்றுற்றலின்முன்தோன்றலரிதாகலின் 'மின்னுடன்பிறந்தவா'ளென்றும், யான்என்திருத்தமயனைமுடிசூட்டி அவனுக்குக்குற்றேவல்செய்யும் விதியிலேனென்பதுபற்றி'மன்னுடன் பிறந்திலெ' னென்றும், தனக்குரிமையில்லாவரசைத்தாளுளத்தொடங்கினமையின் 'மண்கொண்டாள்கின்ற' வென்றும், அவன்பிறந்தமையாற்றன் மரபுதவறிற்றாகலின் அவனொடுந்தோன்றல்மிகப்பாவமென்பதுபற்றித் 'தன்னுடன் பிறந்திலெ'னென்றும், சத்துருக்கனவனையேசார்ந்தொழுகுதலின்யானுமுடன்றோன்றினேனெனிற்பூரியர்வருக்கத்துளெண்ணப்படுவேனென்பதுபற்றி 'தம்பிமுன்னலெ' னென்றும், இவரோடுறவுபெரிதுடையேனெனல்நிரயத்துன்பமாகலின் அவருறவற வொழிந்தேனென்பதுபற்றி 'என்னுடன்பிறந்தயான் வலியனென்றி' என்றுங் கூறினர். இம்மூன்று செய்யுளானும் இளையவன் சொன்னமை யுணர்த்தப்பட்டது. (சரு)

ஆரியனிளவலைநோக்கியையவிச்
சீரியவல்லனசெப்பலென்றபின்
பாரிடைவணங்கினன்பதைக்குநெஞ்சினன்
தேரிடைவித்தகன்சேறன்மேயினன்.

(இ - ள்) ஆரியன் இளவலைநோக்கி - இறைவன் இளையவனை நோக்கி, ஐய இச்சீரியவல்லனசெப்பல் - ஐயனே இச்சிறப்பில்லாத மொழிகளைச்செப்பாதை, என்றபின் - என்றுசொன்னபின், பாரிடைவணங்கினன் - நிலத்திடை வணங்கிநின்றனன், பதைக்குநெஞ்சினன்-வருத்தமுடையானுமாய், தேரிடைவித்தகன் சேறல்மேயினன்-தேரிடை அறிவுடையோனாகியசுமந்திரன் செல்வதாயினன்—எ-று.

செப்பல் - அல்லீற்று எதிர்மறையேவன்முற்று. வணங்கினன் - பதைக்குநெஞ்சினன் வினையெச்சமுற்று. சீரியவல்லன செப்பலென்றது 'கானகம்பற்றி நற்புதல்வன்காயுண' என்றாற் போல்வனவற்றை. சேறன்மேயினனொருசொல். இதனாற் சீராமனிளையவனைத் தடுத்தமையும் சுமந்திரன் தேரேறிபோகத் தலைப்பட்டது முணர்த்தப்பட்டன. (சசு)

கூட்டினன்றேர்ப்பொறிகூட்டிக்கோன்முறை
பூட்டினன்புரவியப்புரவிபோநெறி
காட்டினன்காட்டித்தன்கல்விமாட்சியால்
ஓட்டினனொருவருமுணர்வுருபலே.

(இ - ள்) தேர்ப்பொறிகூட்டினன்-தேர்ப்பொறிகூட்டி, கோல்முறை பூட்டினன் - கோன்முறையே புரவியைப்பூட்டி, அப்புரவி போம்நெறிகாட்டினன் - அப்புரவிபோம் வழியைக்காட்டினன், காட்டிதன்கல்விமாட்சியால் ஒருவருமுணர்வுறாமல் ஒட்டினன்-அவ்வாறுகாட்டித்தன்கல்விச்சூழ்ச்சியான் ஒருவருமுணராவண்ணம் செய்தனன்—எ-று.

பொறி என்றது எந்திரத்தை. கல்விமாட்சி என்றது தேரைநடத்துஞ் சூழ்ச்சியை. இதனாற்சுமந்திரன்தேரேறி அயோத்திக்கு மீண்டமையுணர்த்தப் பட்டது. (சஎ)

தையறன்கற்புந்தன்றகவுந்தம்பியும்
மையறுகருணையுமுணர்வும்வாய்மையும்
செய்யதன்வில்லுமேசேமமாகக்கொண்
டையனும்போயினனல்லிணுப்பணே.

(இ - ள்.) தையல்தன்கற்பும் - சனகிகற்புடைமையும், தன்றகவும் - தன்மேம்பாடும், தம்பியும் - இளையவனும், மையறுகருணையும் - குற்றமற்ற அருளும், உணர்வும் - அறிவுடைமையும், வாய்மையும் - மெய்மையும், செய்யதன்வில்லுமேசேமமாகக்கொண்டு-செம்மையாயதன் வில்லுமே துணையாகக் கொண்டு, அல்லிணுப்பண் ஐயனும்போயினன் - நள்ளிரவில் இறைவனும் போயினன்—எ-று.

கற்பும், தகவும், தம்பியும், கருணையும், உணர்வும், வாய்மையும், வில்லுமே துணையாவன வன்றிவேறுதுணை நாடாது நள்ளிரவில் இறைவனடந்தனனென்க. தையல் - ஆகுபெயர். மழுவாளிகையினின்று வாகைபெறுது இராவணவேட்டையானது சமைந்துநிற்றலின் 'செய்யவி' லென்றதென்க. இதனான் இறைவன் அங்குநின்றுங்கான் சென்றமை யுணர்த்தப்பட்டது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

(1) பொய்வினைக்குதவும்வாழ்க்கையரக்கரைப்பொருந்தியன்னார்
செய்வினைக்குதவுநட்பாற்செல்பவர்த்தடுப்பதேய்க்கும்
மைவிளக்கியதேயன்னவயங்கிருடுரககவானம்
கைவிளக்கெடுத்ததென்னவந்ததுகடவுட்டிங்கள்.

(இ - ள்.) பொய்வினைக்குதவும் வாழ்க்கையரக்கரைப்பொருந்தி - பொய்த்தொழிற்குதவி செய்யுமரக்கரைப் பொருந்திநின்று, அன்னார் செய்வினைக்குதவு நட்பாற்செல்பவர்தடுப்பதேய்க்கும்-அவர்செய்யுந்தொழிற்குதவி செய்யு நட்பினாற் செல்பவரைத்த ப்பதொக்கும், மைவிளக்கியதே யன்னவயங்கிருடுரக்க - கருமைநிறத்தை விளக்கியதே யொத்துவிளங்குமிருளை யோட்ட, வானம்கைவிளக்கெடுத்த தென்னக்கடவுட்டிங்கள் வந்தது - ஆகாயம் சிறு விளக்கெடுத்த தென்னும்படித் தெய்வத்தன்மை வாய்ந்ததிங்கள் வந்தது.—

வானம் இருளைத்துரப்பக்கைவிளக்கெடுத்துக் காட்டியதுபோற்கடவுட்டிங்களுதயஞ் செய்ததென்பதாம். இது தற்குறிப்பேற்றவணி. (சகூ)

(2) மருமத்துத் தன்னையூன்றுமறக்கொடும்பாவந்தீர்க்கும்
உருமொத்தசிலையினேரையொருப்படுத்துதவிநின்ற
கருமத்தின் விளைவையெண்ணிக்களிப்பொடுகாணவந்த
தருமத்தின்வதனமென்னப்பொலிந்தது தனிவெண்டிங்கள்.

(இ-ள்.) மருமத்து தன்னை யூன்றுமறக் கொடும்பாவந்தீர்க்கும் -மார்பிற் றன்னை யூன்றுகின்ற கொடும்பாவநீக்கும், உருமொத்தசிலையினேரை யொருப்படுத்துதவிநின்ற - இடியேயொத்தவில்லாளரை யொருமைப்படுத்து தவிசெய்து நின்ற, கருமத்தின்விளைவை யெண்ணிகளிப்பொடு காணவந்த - வினைவிளைவையெண்ணிமகிழ்ச்சியொடும் பார்க்கவந்த, தருமத்தின்வதன மென்னத்தனி வெண்டிங்கள் பொலிந்தது - அறத்தின்முக மென்னும்படியொப்பற்ற வெண்ணிறத்திங்கள் விளங்கிற்று.—

இறைவன் கான்போதலான்அறந்தழைத்தல் சாலுமாகலின் அதன்கிளர்ச்சியை முகத்தாற்காட்டுவெதியல் பாதலான் 'தருமத்தின் வதனமென்னப் பொலிந்த' தென்றார். இதுவுமேலையணி. (ரு)

(3) காம்புயர்கானஞ்செல்லுங்கரியவன்வறுமைநோக்கித்
தேம்பினகுவிந்தபோலுஞ்செங்கழுநீருஞ்சேரைப்
பாம்பினதலையவாகிப்பரிந்தனகுவிந்துசாய்ந்த
ஆம்பலுமென்றபோதுநின்றபோதலர்வதுண்டோ.

(இ- ள்.) காம்புயர் கானஞ்செல்லுங் கரியவன்வறுமைநோக்கி-வேயோங்கிய காட்டிற்செல்லும் ஸ்ரீராமன் வறுமைகாண்டலும், செங்கழுநீரும் தேம்பினகுவிந்தபோலும் - செங்கழுநீரும் வருந்திக்குவிந்தன போலும், சேரைப் பாம்பினதலையவாகி-சாரைப்பாம்பினையொத்த தலையையுடையனவாகி,பரிந்தனகுவிந்து சாய்ந்த ஆம்பலுமென்றபோதும்-பரிந்து குவிந்து சாய்ந்த ஆம்பலுமென்ற போதும், நின்றபோதலர்வதுண்டோ- நின்றமலர்களலர்வதுண்டோ.—

கரியவனென்றது ஸ்ரீராமனை. செங்கழுநீரும், ஆம்பலுமுறையேகுவிந்து சாய்ந்த வெனிற்பிறவலர்வன சொல்லவேண்டாவென்க. சேரைப்பாம்பு என்றதுசாரைப்பாம்பினை. காம்புஎன்றதுமூங்கிலை. ஒகாரமெதிர்மறை. கரியவன்வறுமையென்றது முடிபுனைகோலமிழந்துகான்படர்வதனை. (ருக)

(4) அஞ்சனக்குன்றமன்னவழகனுமழகன்றன்மேல்
எஞ்சலில்பொன்போர்த்தன்னவிளவலுமிந்துவென்பான்
வெஞ்சிலைப்புருவத்தாடன்மெல்லடிக்கேற்பவெண்ணூற்
பஞ்சிடைப்படுத்தாலென்னவெண்ணிலாப்பரப்பப்போனார்.

(இ-ள்.) அஞ்சனம்குன்றமன்ன அழகனும்-அஞ்சனமலைபோலும் அழகனும், அழகன்றன்மேல் எஞ்சலில் பொன்போர்த்தன்ன இளவலும்-அழகன் மேற்குறைவில்லாத பொன்போர்த்தாலொத்த இளையவனும், இந்து என்

பான் - சந்திரனெனப்படுவான், வெஞ்சிலைப்புருவத்தாள் தன் மெல்லடிக்கேற்ப-கொடியவில்லொத்த புருவமுடையாள் மெல்லடிக்கியைய, வெண்ணூற்பஞ்சிடைப்படுத்தாலென்ன-வெண்மையாகிய நூலையுடைய பஞ்சினை இடையேயிட்டதொப்ப, வெண்ணிலாபரப்பபோனூர் - வெள்ளியநிலவைப் பரப்பச் சென்றனர்.—

தன்பேரழகான் முற்றத்துறந்த முனிவரையும் துவக்குணச் செய்தலினன்றே இராமனென்றதென்க. இக்கருத்தேபற்றி 'ஆடவர்பெண்மையையவாவுந்தோளினூ' யென முற்காண்டத்திற்கூறிட்டோந்த தூஉமென்க. இந்நான்கு செய்யுளானும் சந்திரோதயவருணனையுணர்த்தப்பட்டது. (ருஉ)

சிறுநிலைமருங்குல்கொங்கையேந்தியசெல்வமென்னும்
நெறியிருங்கூந்தனங்கைசீறடிநீர்க்கொப்பூழின்
நறியனதொடர்ந்துசென்றுநடந்தெனினவையினீங்கும்
உறுவலியன்பினூங்கொன்றுண்டெனவுணர்வதுண்டோ.

(இ - ள்.) சிறுநிலைமருங்குல் கொங்கையேந்தியசெல்வமென்னும் நெறியிருங்கூந்தல் நங்கைசீறடி - சிறியநிலையையுடைய இடையும் கொங்கையேந்திய செல்வமெனப்படும் நெறித்த பெருங்கூந்தலும்பெற்ற நங்கைசிறியவடி, நீர்க்கொப்பூழின் நறியனதொடர்ந்து சென்று நடந்தெனின் - நீர்க்கொப்பூழினை நிகர்த்துநறியனவாகித்தொடர்ந்துபோய் நடந்ததெனின், நவையினீங்கும்உறுவலியன்பின் ஊங்கொன்றுண்டெனவுணர்வதுண்டோ-குற்றத்தினீங்குமிக்கவலியுள்ளவன்பினுமிக்க தொன்றுள்ளதெனவறிவ துண்டோ.—

காண்பார்க்குக்கட்புலனாகாது இறைவன் கையாற்றொட்டுணரலாந்தன்மையதாகலின்'சிறுநிலைமருங்கு' லென்றதென்க. இதனைக் 'கட்டுரைத்துவமைகாட்டக்கட்பொறி கதுவாகையிற் - றொட்டவெற் குணரலாமற்றுண்டெனுஞ் சொல்லுமில்லை' எனப்பிற்கூறுதலுமிப் பெற்றிநோக்கி யெழுந்ததென்க.*"அன்பின்வழியதுயிர்நிலை" ஆகலின் 'நவையினீங்குமுறுவலியன்பினூங்கொன்றுண்டென வுணர்வதுண்டே' என்றூர். நங்கையென்றது சனகியை. நடந்தாலென்பது திரிந்துநின்றது. (ருரு)

பரிதிவானவனுங்கீழ்பாற்பருவரைபற்றாமுன்னம்
திருவினையகனுந்தென்பால்யோசனையிரண்டுசென்றான்
அருவிபாய்கண்ணும்புண்ணுயழிகின்றமனமுந்தானும்
துரிதமான்றேரிற்போனான்செய்ததுசொல்லலுற்றாம்.

(இ-ள்.) பரிதிவானவனும்-சூரியனும்,கீழ்பாற்பருவரைபற்றாமுன்னம்-உதயவரையை யடையாமுன்னர், திருவினையகனும் தென்பால் யோசனை இரண்டுசென்றான்-ஸ்ரீராமனும் தென்றிசையில் இரண்டுயோசனைகடந்து சென்றனன், அருவிபாய் கண்ணும்புண்ணுயழிகின்றமனமுந்தானும்- அருவிபாயுங்கண்ணும் புண்ணுயழியும் நெஞ்சமுந்தானும், துரிதமான்தேரில்போனான்செய்தது சொல்லலுற்றாம்-வேகமுடைய குதிரைபூட்டிய தேரிற்சென்ற சுமந்திரன் செய்கையைச் சொல்லத்தொடங்கினாம்.—எ-று.

* திருக்குறள். செ. அo.

பரிதிவான்வனுமென்ற உம்மை ஒருபுடைஎதிரது தழீஇயது; திருவிளையகனுமென்றதும்அவ்வாறே இறந்ததுதழீஇயது. எனையஎண். கருங்கடற்பள்ளியுட்கலவிநீங்கிப்போய்ப்பிரிந்து பிறந்தமையான் 'திருவிளையக' னென்றார். சொல்லலுற்றும் தனித்தன்மைப்டன்மை. சீராமனிக்கத்தான் வருந்துதலின் சுமந்திரனை 'அருவிபாய் கண்ணும் புண்ணுயழிகின்ற மனமுந்தானும் துரிதமான்றேரிற் போனு' னென்றதென்க. கண்ணு மனமுந்தானும் போனுனென்றது திணைவிரவிச்சிறப்பானுயர் திணைமுடிபேற்றது. துரிதமான் என்றது கதியைந்தனையு முடைமையை; ஐங்கதியாவன - மல்லககதி, மயூரகதி, வானரகதி, மனோகதி, வாயுகதியென்பன. இவைகவிக்கூற்று. (ருச)

கடிகையோரிரண்டுமூன்றிற்கடிமதிலயோத்திகண்டான்
அடியிணைதொழுதானுதிமுனிவனையவனுமுற்ற
படியெலாங்கேட்டுநெஞ்சிற்பருவரலுழந்தான்முன்னே
முடிவெலாமுணர்ந்தானந்தோமுடிந்தனன்மன்னனென்றான்.

(இ - ள்.) கடிகையோ ரிரண்டுமூன்றிற் கடிமதிலயோத்தி கண்டான்-கடிகையோரைந்திற் காவலையுடைய அயோத்தியைக் கண்டனனுகி, அடியிணை தொழுதானுதிமுனிவனை-பழமையாயமுனிவனைத் திருவடிகளிரண்டுந் தொழுதான், அவனும் உற்றபடியெலாங்கேட்டு நெஞ்சிற்பருவரலுழந்தான்-அவனும் நடந்தவகையெல்லாங்கேட்டு மனத்திற்றுயரடைந்தான்-முன்னேமுடிவெலாமுணர்ந்தான்-முன்னேமுடிவெல்லாமறிந்து, அந்தோ முடிந்தனன்மன்னனென்றான்-ஐயோ இறந்துபட்டனனரசனென்றனன்.—எ-று.

இரண்டுமூன்று உம்மைத்தொகை. பிரமன் வழித்தோன்றலாதலின் ஆதிமுனிவ னென்றதென்க. அந்தோ இரக்கக்குறிப்பு. சீராமன் காடுசென்றமைகேட்டுமனம்வருந்தலின்'உற்றபடியெலாங்கேட்டுநெஞ்சிற்பருவரலுழந்தா'னென்றும், காடுசென்றதனுனினியரசன்பிழையானென்பதுபற்றி' 'முன்னே முடிவெலாமுணர்ந்தானந்தோ முடிந்தனன்மன்னனென்று' னென்றுங் கூறினர். இதனுற் சுமந்திரன் அயோத்தியடைந்தமையும் முனிவன் துயரமுற்றமையு முணர்த்தப்பட்டன. (ருரு)

நின்றுயர்பழியையஞ்சிநேர்ந்திலன்றடுக்கவள்ளல்
ஒன்றுநானுரைத்தனோக்கான்றருமத்திற்குறுதிபார்ப்பான்
வென்றவருளரேமேலைவிதியினையென்றுவிம்மிப்
பொன்றிணிமன்னன்கோயில்சுமந்திரனேடும்போனுன்.

(இ - ள்.) நின்றுயர்பழியை யஞ்சிநேர்ந்திலன் - நிலைத்தோங்கும் பழியினஞ்சிநேர்ந்திலன், தடுக்கவள்ளல்-தடுக்க இறைவன், தருமத்திற்குறுதிபார்ப்பான் - தருமத்துக்குறுதி நோக்கி, ஒன்று நானுரைத்தல்நோக்கான்-யான் சிறிதும் சொல்வது பாரான், மேலைவிதியினை வென்றவருளரே யென்று விம்மி - முன்னையூழினை வென்றவருளரோவென்றழுது, பொன்றிணி மன்னன்கோயில் சுமந்திரனேடும்போனுன் - பொன்னுனியன்ற அரசன்மாளியிற் சுமந்திரனோடுஞ்சென்றனன்—எ-று.

*"அச்சக்கிளவிக்கைந்துமிரண்டுமெச்சமில" என்பதனாற்பழியென்பதற் கிரண்டாவது விரிக்கப்பட்டது. வள்ளல் - ஆகுபெயர். ஒன்றுமென்புழி உம்மை இழிவுசிறப்புப்பொருளொடு முற்றுப்பொருளது. தாய்சொற்கடவாமையினைமேற் கொண்டமையான் 'தருமத்திற்குறுதி பார்ப்பா'னென்றும், யான்தடுக்கவும் கேளாமையின் 'ஒன்றுமுரைத்தனோக்கா'னென்றுங் கூறினார். "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று -சூழினுந்தான்முந்துறும்" என்பவாகலின் 'மேலைவிதியினை வென்றவருளரே'யென்றனென்க. ஏகாரந்தேற்றம். இதனான்முனிவன்சுமந்திரனொடுமரசன்மாளிகையடைந்தமையுணர்த்தப்பட்டது.

தேர்கொண்டுவள்ளல்வந்தானென்றுதஞ்சிந்தையுந்த
ஊர்கொண்டதிங்களன்னமன்னனையுழையர்சுற்றக்
கார்கொண்டமேனியானைக்கண்டிலர்கண்ணில்வற்றா
நீர்கொண்டநெடுந்தேர்ப்பாகனிலைகண்டேநிலையிற்றீர்ந்தார்.

(இ - ள்.) தேர்கொண்டு வள்ளல்வந்தானென்று - தேரிலேறிவள்ளியோனடைந்தனனென்று, தஞ்சிந்தையுந்த-தம்மனத்தைப் பிடித்துத்தள்ள, ஊர்கொண்ட திங்களென்ன-ஊர்கோள் கொண்டசந்திரன்போல, மன்னனை உழையர்சுற்ற-அரசனை அமைச்சர்சூழ, கார்கொண்டமேனியானைகண்டிலர்-கார்நிறங்கொண்ட மேனியையுடைய சீராமனைக்காணாமல், கண்ணில்வற்றா நீர்கொண்டநெடுந் தேர்ப்பாகனிலை கண்டேநிலையிற்றீர்ந்தார் - கண்ணினிடை வற்றாத நீரைப்பொழியும் நீண்டதேரைச் செலுத்தும்பாகனிலைகண்டு தம்முடைய நிலைதவிர்ந்தனர்—எ-று.

உழையிருப்பவராகலின் உழையரென்றார்; இப்பெற்றிநோக்கியே 'உழையிருந்தா'னெனப்பெயர் கொடுத்தாரெனக்கூறலானும், அமாத்தியரென்னும் வடமொழிப்பெயர்க்கும்பொருண்மை அதுவேயாகலானுமென்க. கண்டிலர் வினையெச்சமுற்று, விடாது சூழ்ந்திருத்தலின் 'ஊர்கொண்டதிங்க'ளென்று மை கூறினார். இதனாற் பாகனிலைகண்டு சீராமன் வந்திலாமையறிந்தமை யுணர்த்தப்பட்டது. (௫௭)

(1) இரதம்வந்துற்றதென்றாங்கியாவருமியம்பலோடும்
வரதன்வந்துற்றானென்னாமன்னனுமயக்கந்தீர்ந்தான்
புரைதபுகமலநாட்டம்பொருக்கெனவிழித்துநோக்கி
விரதமாதவனைக்கண்டான்வீரன்வந்தனனோவென்றான்.

(இ - ள்.) இரதம் வந்துற்றதென்று - தேர்வந்தடைந்ததென்று, ஆங்கியாவருமியம்பலோடும்-ஆண்டியாருஞ் சொல்லலும், வரதன்வந்துற்றானென்னா - சீராமன் வந்தடைந்தனனென்று, மன்னனுமயக்கந்தீர்ந்தான் - அரசனுமயக்கமகன்றான், புரைதபுகமலநாட்டம்பொருக்கெனவிழித்துநோக்கி-குற்றநீங்கியதாமரை மலர்போன்ற கண்களைவிரைவாய் விழித்துப்பார்த்து, விரதமாதவனைகண்டான் - விரதமேற்கொண்ட பெருந்தவனைக்கண்டு, வீரன்வந்தனனோ என்றான்-சீராமன் வந்தடைந்தனனோ என்றனன்.—எ-று.

*தொல். சொல். சூ. ௧௨௦.

வரதனென்றது சீராமனை. வீரனென்றது தமது. தவத்திற்சிறந்தவனாகலின் விரதமாதவ னென்றார். விரதமாதவனென்றது வசிட்டனை. பொருக்கென-விரைவுக் குறிப்பு. (ருஅ)

(2) இல்லையென் றுரைக்கலாற்றானேங்கினன்முனிவனின்றான்
நல்லவன்முகமேநம்பிநடந்திலனென்னுமாற்றம்
சொல்லலுமரசன்சோர்ந்தான் றுயருறுமுனிவனானிவ்
வல்லல்காண்கில்லேனென்றுவாங்குநின்றகலப்போனான்.

(இ - ள்.) இல்லையென் றுரைக்கலாற்றான்-இல்லையென்றுரைக்க நேராமல், ஏங்கினன் முனிவனின்றான் - முனிவனேங்கி நின்றனன், நல்லவன் முகமே நம்பிநடந்திலனென்னுமாற்றம் சொல்லலும் - பாகன்முகமே இறைவன்வந்திலனென்னுஞ்சொல்லை வெளிப்படுப்பவும், அரசன் சோர்ந்தான்-அரசன் சோர்ந்தனன், துயருறுமுனிவனானிவ் வல்லல்காண்கில்லேனென்று-துன்பமடைகின்ற முனிவன்யானிவ் வல்லற்படக் காணகில்லேனென்று, ஆங்குநின்றகலப்போனான் - அங்கிருந்து மப்பாற்போயினன்.—

உயிர்க்கே யறிவுள்ளது ஐம்பூதங்களா னியன்றமுகத்திற் கில்லையென் பாரைநோக்கி, உயிரதுகருத்தறிந்து அஃதுவக்குறின் மலர்ந்தும் காய்வுறிற் கருகியும்வரலான் நல்லவன்முகமே நம்பி நடந்திலனென்னு மாற்றஞ்சொல்லலுமென்றதென்க; "அடுத்ததுகாட்டும் பளிங்குபோனெஞ்சிற்-கடுத்ததுகாட்டுமுக" மென்பதூஉமிப் பெற்றிநோக்கி. இவ்விரண்டு செய்யுளானும் அரசன் வசிட்டமுனிவனைக்கேட்டதும் அவன் அல்லற்படமாட்டாதகன்று போதலுமுணர்த்தப்பட்டன. (ருகூ)

(1) நாயகன்பின்னுந்தன்றேர்ப்பாகனைநோக்கிநம்பி
சேயனோவணியனோவென் றுரைத்தலுமனையான்செய்ய
வேயுயர்கானந்தானுந்தம்பியுமிதிலைப்பொன்னும்
போயினனென்றானென்றபோழ்தத்தேயாவிபோனான்.

(இ - ள்.) நாயகன்தன் தேர்ப்பாகனை நோக்கி - அரசன்தன் தேர்ப்பாகனைப் பார்த்து, நம்பிசேயனோ அணியனோ வென்றுரைத்தலும் - சீராமன் தூரத்தனோ சமீபத்தனோ வென்றுகூறலும், அனையான் செய்யவேயுயர்கானம் தானும் தம்பியுமிதிலைப்பொன்னும் போயினனென்றான் - செம்மையாகிய வேயோங்கிய காட்டில்தானும் தம்பியும் சனகியும் போயினனென்று கூறினன், என்றபோழ்தத்தே ஆவிபோனான் - என்ற அப்பொழுதேயுயிர் நீங்கினன்.—

நாயகனென்றது தயரதனை. ஓகாரமையப்பொருளன. தானுந்தம்பியு மிதிலைப்பொன்னும் போயினன் எனக்கூட்டுக. இதனால் விரவிச் சிறப்பான் ஆண்பான்முடிபேற்றது. மிதிலைப்பொன்னென்றது சனகியை.

(2) இந்திரன்முதல்வராயகடவுளர்யாருமீண்டிச்
சந்திரனனையதாங்கோர்மானத்தின்றலையிற்றுங்கி
வந்தனனெந்தைதந்தையெனமனங்களித்துவள்ளல்
உந்தியானுலகினும்பர்மீள்கிலாவுலகத்துய்த்தார்.

(இ - ள்.) இந்திரன் முதல்வராய கடவுளர்யாருமீண்டி - இந்திரனை உள்ளிட்ட இறைவர் யாவருநெருங்கிவந்து, சந்திரனனையதாங்கோர்மானத்தின்றலை யிற்றுங்கி - சந்திரனை யொத்தவொரு விமானந்தலைமேற்றுங்கிக்கொண்டு, எந்தைதந்தை வந்தனனென - எம்மிறைவன்றாதை வந்தனனென்று, மனங்களித்து - மனமகிழ்ந்து, வள்ளல்-வள்ளியோனாகிய தயரதனை, உந்தியானுலகினும் பர்மீள்கிலா வுலகத்துய்த்தார் - பிரமனுலகிற்கு மேலாம் இரும்புண்ட நீரிற்றிரும்பாதபதத்திற்செலுத்தினர்.—எ-று.

இந்திரன்முதல்வராய கடவுள்யாவருமென்றது இந்திரனையுள்ளிட்ட இறையவரெண்மரும்பிறரும். மானமென்றது முதற்குறைந்தது, எந்தைதந்தையென்றதுதயரதனை. தன்னுயிரைக்கொடையாக வளித்தமைபற்றி வள்ளலென்றார். உந்தியானுலகினும்பர்மீள்கிலாப்பதமென்றது அயர்வருமமரர்களுறையுமொளி சூழ்விசும்பை. இவ்விரண்டு செய்யுளானும் சகமுழுதுமாண்டவரசன் இறந்துபட்டமை யுணர்த்தப்பட்டது. (சுo)

(1) உயிர்ப்பிலன்றுடிப்புமில்லனென்றுணர்ந்துருவந்தீண்டி
அயிர்த்தனணோக்கிமன்னற்காருயிரின்மைதேறி
மயிற்குலமனையநங்கைகோசலைமறுகிவீழ்ந்தாள்
வெயிற்சுடுகோடைதன்னிலென்பிலாவுயிரின்வேவாள்.

(இ-ள்.) உயிர்ப்பிலன்-உயிர்ப்பில்லாமலும், துடிப்புமில்லன்-துடிப்பில்லாமலுமிருக்கின்றனன், என்றுணர்ந்து-என்றறிந்து, உருவந்தீண்டி அயிர்த்தனள் நோக்கி - மேனியையையுற்றுத்தொட்டுப்பார்த்து, மன்னற்காருயிரின்மை தேறி - அரசனுக்கரிய வுயிரில்லாமை தேறித்தெளிந்து, மயிற்குல மனையநங்கை கோசலை-மயிற்குலம்போன்ற நங்கையாகிய கோசலை, வெயில் சுடுகோடைதன்னில் - வெயிலாற் சுடப்படுங்கோடையில், என்பிலாவுயிரின் வேவாள் - என்பில்லாதவுயிர்போல வேவாளாகி, மறுகிவீழ்ந்தாள் - கலங்கி விழுந்தனள்.—

என்பிலாவுயிர் வெயில்சுடுகோடையில் வேதலுண்மையின் அதனை இவள்படுந்துன்பத்துக்குவமை கூறினர். சாயல்பற்றி மயிற்குலமனைய நங்கையென்றதென்க. அயிர்த்தனள்-வினையெச்சமுற்று. (சுஉ)

(2) இருந்தவந்தணனேடெல்லாமீன்றவன்றன்னையீனப்
பெருந்தவஞ்செய்தநங்கைகணவனிற்பிரிந்துதெய்வ
மருந்திழந்தவரின்விம்மிமணிபிரியரவின்மாந்தி
அருந்துணைபிரிந்தவன்றிற்பெடையெனவரற்றலுற்றாள்

(இ - ள்.) இருந்த அந்தணனோடு - விதிக்கும் பிரமனொடும், எல்லா மீன்றவன்றன்னை யீனப்பெருந்தவம் செய்தநங்கை - எவற்றையும் பெற்ற வனைப்பெறப் பெருந்தவஞ்செய்த கோசலை, கணவனிற்பிரிந்து தெய்வ மருந்திழந்தவரின்விம்மி - கணவனைப்பிரிந்து வானமுதிழந்தார்போல வருந்தி, மணிபிரியரவின்மாந்தி-மணிநீங்கியபாம்பிற்றுயர்ந்து, அருந்துணைபிரிந்த வன்றிற் பெடையென அரற்றலுற்றாள் - அருமையாகிய துணைவேறுபட்ட வன்றிற் பேடைபோற் புலம்பத்தொடங்கினள்.—

அப்பனென்னும் பெயர்பற்றி இருந்தவந்தணனோடென்றும், அவனையுந் திப்பமலத்துப்பயந்ததன்றிஉலகனைத்தையும் நல்கலின் திருமாலைஎல்லாமீன்ற வன்றன்னையென்றும், அவனையே தன்னகட்டின் வைத்தீன்று கவான்கட் கிடத்தும் பெருமிதம்பற்றி ஈனப்பெருந்தவஞ்செய்த நங்கையென்றும் தெய்வமருந்துண்டார் சாவாமையறிந்தும் அஃதெய்தப்பெற்று இழந்தார்படும் பரிசுபோல் வருந்தலின் 'மருந்திழந்தவரின் விம்மி'யென்றும், மணிநீங்கியபாம்பெனக் கணவனையிழத்தலின் 'மணிபிரியரவின்மந்தி'யென்றும், காதலனைப்பிரிந்தவன்றில் போலக்கதறலின் அருந்துணையிழந்தவன்றிற் பெடையெனவரற்றலுற்றாளென்றுங் கூறினார், எல்லாமுடையானை யீனப்பெருந்தவஞ் செய்தாளென்பதனை 'மன்வயிற்றினடக்கியமாயனைத் தன்வயிற்றினடக்குந்த வத்தினாள்' என முற்கூறுதலானுமுணர்க. எல்லாமென்றது சென்றிருந்து வாழுமுயிர்களை. (கூ)

கலிநிலைத்துறை.

(3) தானே தானே தஞ்சமிலா தான் றகைவில்லான்
போனான்போனானெங்களைநீத் திப்பொழுதென்னா
வானீர்சுண்டி மண்ணறவற்றி மறுகுற்ற
மீனேயென்னமெய்தடுமாறி விழுகின்றாள்.

(இ - ள்.) தஞ்சமிலாதான் - அடைக்கலம் புகாதான், தகைவில்லான்-மேன்மையமைந்த வில்லையுடையான், எங்களை நீத்திப்பொழுதுபோனான் போனானென்னா-எங்களை நீங்கியிப்பொழுதுபோனான்போனானென்று, வானீர்சுண்டி - வெண்மையாகிய நீர்சுண்டி, மண்ணறவற்றி, மண்முழுதும்வற்றி, மறுகுற்றமீனேயென்ன -கலங்கியமீனேயென்ன, மெய்தடுமாறி விழுகின்றாள் - உடம்புதடுமாறி விழுகின்றனள்—

தஞ்சமெனப் பிறரடைவதன்றித் தான்சென்றறியாமையின் தஞ்சமிலாதானென்றும், நீர்நீங்கிய வழிமீன்கலங்குதல்போற் கணவன்பிரிந்தவழிக் கலங்குதலின் வானீர்சுண்டி மண்ணறவற்றி மறுகுற்றமீனென்றுங் கூறினார். தேவரானும் வேறன்முடியாதசம்பரனைப்பொருது இந்திரனுக்கு அவனிழந்த பெரும்பதமீட்டு மளித்தபெருமிதத்தானவனை வென்றவில்லைத்தகைவில்லென்றதென்க. அடுக்குகள் அவலப்பொருளன. குடிப்பெயர்கூறல் பெரிய

தோரிழுக்காகலின் தானே தானே யெனவிளித்ததென்க. இதனை இலங்கையர்கோன்சனகியைக்கானிடைநுங்கணவன்பெயர் யாதுகூறுகென்ன, அவள் சீராமன் பெயர்கூறுது 'அவன்பெயரினைத்தெரிகுதிர்' என்றாற்போல்வது.()

(4) ஒன்றேநன்னாட்டுய்க்குவரிந்நாட்டுயிர்காப்பார்
அன்றேமக்கட்பெற்றுயிர்வாழ்வார்க்கவமுண்டே
இன்றேவந்தீண்டஞ்சலெனதெம்மகனென்பான்
கொன்றானன்றேதந்தையையென்றாள்குலைகின்றாள்.

(இ - ள்.) இந்நாட்டுயிர்காப்பார் அன்றே - இந்நாட்டின் எம் உயிரைக் காப்பவரே, ஒன்றே நன்னாட்டுய்க்குவர் - ஒன்றுதானே பரமபதத்தினும் செலுத்துவர், மக்கட்பெற்றுயிர் வாழ்வார்க்கவமுண்டே - மக்களைப்பெற்றுயிர் வாழ்பவர்க்கவமுள்ளதோ, இன்றேவந்து ஈண்டஞ்சலெனது - இப்போதே வந்து இங்கஞ்சேலென்று சொல்லாது, எம்மகனென்பான் கொன்றானன்றே தந்தையையென்றாள் குலைகின்றாள் - எம்மகனெனப்படுபவன் தந்தையைக்கொன்றானன்றே வென்றுகூறிவருந்தினள்.—

"மக்கட்பேற்றிற்பெறும்பேறில்லை" என்பவாகலின் 'மக்கட்பெற்றுயிர் வாழ்வார்க்கவமுண்டே' என்றார். மக்கள் இம்மைமறுமையிற் சாலவுதவுதல் வேண்டுமாகலின் 'இந்நாட்டுயிர் காப்பாரன்றே ஒன்றே நன்னாட்டுய்க்குவர்' என்றும், அங்ஙனமிருப்பவும் தந்தையைக் கொலைசெய்தாரொருவருமிலர், எம்மகன்கான்போக அரசன் உயிர்துறந்தமையான் 'எம்மகனென்பான் கொன்றானன்றே தந்தையை' என்றுங் கூறியவாறென்க. எம்மகனென்றது தன்னையும் சுமித்திரை கைகேசியுள்ளிட்ட அறுபதினாயிர மனைவியரையும் தன்னொடு படுத்தியென்க. அன்றேதேற்றம். அஞ்சல் என்றது அல்லீற்றெதிர்மறை யேவலொருமைவினைமுற்று. (சுரு)

(5) நோயும்மின்றிநோன்கதிர்வாள்வேலிவையின்றி
மாயுஞ்செல்வமக்களினாலோமறமன்னன்
காயும்புள்ளிக்கர்க்கடநாகங்கனிவாழை
வேயும்போன்றானென்றுமயங்காவிழுகின்றாள்.

(இ - ள்.) நோயும் இன்றி - பிணியுமில்லாமல், நோன்கதிர்வாள் வேலிவையின்றி - வலிமையுள்ள பிரகாசந்தங்கிய வாள்வேலிவற்றாற்காயப்படாது, மறமன்னன் செல்வமக்களினாலோமாயும் - வீரத்தன்மையுள்ள அரசன்செல்வப்புதல்வராலோசாம், காயும்புள்ளிகர்க்கடம் நாகம்கனிவாழைவேயும்போன்றானென்று மயங்காவிழுகின்றாள் - வருத்துமியல்புடைய புள்ளிகளமைந்த நண்டுபொம்புகனியையுடைய வாழைமூங்கிலிவைபோன்றானென்று மயங்கி விழுகின்றனள்.—

இறக்குஞான்றும் பிணியானன்றிப் போரில் விழுப்புண்பட்டே இறக்கவேண்டும், அங்ஙனமாகாமையின் 'நோயுமின்றி நோன்கதிர்வாள் வேலிவையின்றி மாயுஞ்செல்வமக்களினுலோ மறமன்னன்' என்றும், தாங்கொண்ட கருவான் ஞண்டு சிப்பி கதலி வேயென்பன நாசமுறுதல்பற்றி உவமைமுகத்தாற் 'கர்க்கடகாகங் கனிவாழைவேயும் போன்று' னென்றுங் கூறினர். *"தம்பொருளென்பதம்மக்களென்ப" வாகலின் செல்வமக்களென்றதென்க. ‡ "மெல்லியவாழைக்குத்தானீன்றகாய்கூற்ற" மென்றதூஉ மிப்பெற்றி நோக்கியென்க. (சுசு)

(6) வடித்தாழ்கூந்தற்கேகயன்மாதேமதியாலே
பிடித்தாய்வையம்பெற்றனைபேராவரமின்னே
முடித்தாயன்றேமந்திரமென்னுண்முகில்வாய்மின்
துடித்தாலென்னமன்னவன்மார்பிற்றுவள்கின்றாள்.

(இ - ள்.) முகில்வாய்மின் துடித்தாலென்ன மன்னவன்மார்பில் துவள்கின்றாள் - மேகத்தினிடை மின்னல்துடித்தாலொப்ப அரசன்மார்பின்கண் துவள்கின்றகோசலை, வடித்தாழ்கூந்தல் கேகயன்மாதே மதியாலே வையம்பிடித்தாய் - வடித்தாழ்ந்த கூந்தலையுடைய கைகேசியே மதியாலுலகைப்பிடித்துக்கொண்டனை, பேராவரம் இன்னேபெற்றனை - நீங்காதவரத்தை இப்போதேபெற்றுக்கொண்டனை, முடித்தாயன்றே மந்திரமென்றாள் - உன்சூழ்ச்சியைமுடித்துக் கொண்டனையன்றே யென்றனள்.—

நின்னறிவிருந்த வாறழகிதென்பாள் 'மதியால் வையம்பிடித்தாய்' என்றும், அதனை வரமென்றொரு சங்கேதத்தாற் கொண்டமையான் 'பேராவரமின்னே பெற்றனை' யென்றும், கூனி சூழ்ச்சிகடைபோகமுடிந்ததென்பாள் 'முடித்தாயன்றேமந்திர' மென்றுங்கூறினர். (சுஎ)

(7) அருந்தேரானைச்சம்பரனைப்பண்டமர்வென்றாய்
இருந்தார்வானோருன்னருளாலேயினிதிந்நாள்
விருந்தாகின்றாயென்றனள்வேழத்தரசொன்றைப்
பெருந்தாளன்பிற்சூழ்பிடியென்னப்பிரிவுற்றாள்.

(இ - ள்.) வேழத்தரசொன்றைப்பெருந்தாளன்பின் சூழ்பிடியென்னப் பிரிவுற்றாள்-களிற்றரசொன்றைப் பெருமுயற்சி யுள்ளவன்பினாற்சூழ்ந்தபிடியானைபோலப் பிரிந்தகோசலை, அருந்தேரானை சம்பரனைபண்டு அமர்வென்றாய் - அருமையாகிய தேரையுடையானுகிய சம்பரனை முன்னாளில் வெற்றிகொண்டனை, வானோர் உன்னருளாலினிதிருந்தார் - தேவர்கள் உன்னருளினால் இனிமையாக வாழ்ந்திருந்தனர், இந்நாள்விருந்தாகின்றா யென்றனள் - இஞ்ஞான்றவர்க்கு விருந்தாகின்றனையென்றனள்—

* திருக்குறள் செ. சுங. ‡ நான்மணிக்கடிகை. செ. அரு.

தயரதனை வெழுத்தரசெனவும், கோசலையைப்பிடியெனவு முருவகஞ் செய்தார். தேவர்கட்குப் பகையாகிய சம்பரனைவென்று மீண்டுமவரிழந்தபதந் தருதலின் 'வானோருன்னருளா லினிதிருந்தா' ரென்றும், அவர் உதவியைநாடியிதனைவேண்டியழைத்தனரென்பார் 'இந்நாள்விருந்தாகின்று'யென்றுங்கூறியவாறென்க. தேவரான் வெல்லமாட்டாமையின் அருந்தேரென்றார்.

(8) வேள்விச்செல்வந் துய்த்தி கொன்மெய்மைத் துணையின்மைச்
சூழிச்செல்வந் துய்த்திகொறோலாமனுநூலின்
வாழிச்செல்வந் துய்த்திகொன்முன்னென்றனள்வானோர்
கேள்விச்செல்வந் துய்க்கவயிற்றோர்கிளைதந்தாள்

(இ - ள்.) வானோர் கேள்விச்செல்வம்துய்க்கவயிற்று ஓர்கிளைதந்தாள் - தேவர்கள்கேள்வியாலாயசெல்வமனுபவிக்கத்தன்வயிற்றிடை மைந்தனைப்பெற்றகோசலை, வேள்விச்செல்வம் துய்த்திகொல் - வேள்வியாகிய செல்வமனுபவிக்கின்றாயோ, மெய்மைதுணையின்மைசூழ் இச்செல்வம் துய்த்திகொல் - மெய்மையாய துணையில்லாமைசூழ்ந்த இச்செல்வ மனுபவிக்கின்றாயோ, தோலாமனுநூலின் வாழிச்செல்வம் துய்த்திகொல் முன் என்றனள் - தோல்வியெய்தாத மனுநூலின்வாழ்வைப்பெற்ற இச்செல்வமனுபவிக்கின்றாயோ என்றுகூறினள்.—எ-று.

யாருஞ்செய்யாதயாகம் இவன்செய்து மறந்த எனமுற்காண்டங்கூறலின் வேள்விச்செல்வந்துய்த்திகொலென்றும், வையகமுற்றுநடந்தவாய்மைமன்னனென முற்கூறலின் மெய்மைத் துணையின்மைசூழிச் செல்வந்துய்த்திகொலென்றும், மனுகுலத்தே தோன்றியவன்சொல்லைப்புனைவுபடச்செய்தலின் தோலாமனு நூலின்வாழிச்செல்வந்துய்த்திகொலென்றுகூறினார். அயர்வருமமரர் கட்கிறையாகியதனி முதல்வனையீன்றுள்ளாகலான் வானோர்கேள்விச்செல்வந்துய்க்கவயிற்றோர்கிளைதந்தாள் என்றதென்க. கிளை - ஆகு பெயர். இவ்வெட்டுச் செய்யுளானும் கோசலை புலம்பினமை யுணர்த்தப்பட்டது.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

(1) ஆழிவேந்தன்பெருந்தேவியன்னபன்னியழுதரற்றத்
தோழியன்னசுமித்திரையுந்துளங்கியேங்கியுயிர்சோர
ஊழிதிரிவதெனக்கோயிலுலையும்வேலைமற்றொழிந்த
மாழையுண்கட்டேவியருமயிலின்குழாத்தின்வந்திரைத்தார்.

(இ - ள்.) ஆழிவேந்தன் பெருந்தேவியன்ன பன்னியழுதரற்ற - சக்கிரவர்த்தி பெருமனைக்கிழத்திஅவற்றைப்பன்னியழுதுபுலம்ப, தோழியன்ன சுமித்திரையும் துளங்கியேங்கியுயிர் சோர - தோழிபோல்வாளாகிய சுமித்திரையுமனந்துளங்கி யேங்கியுயிர்வருந்த, ஊழிதிரிவதெனக் கோயிலுலையும்

வேலை - ஊழிதிரிவது போலமாளிகையின் கண்வருந்துமமையத்து, மற்று ஒழிந்தமாழையுண் கண்தேவியருமயிலின் குழாத்தின் வந்திரைத்தார் - அவ ரொழிந்தமாவடுவென்னமையுண்டகண்ணையுடைய தேவிமாரு மயிலின்கூட் டம்போலவந்தழுதனர்.—

அன்னபன்னி யழுதரற்றவென்றது தானேதானே தஞ்சமிலாதான் என்றதுமுதல் வேள்விச்செல்வமென்றது காறுங்கூறியவற்றை. பாங்கிபோ ன்ற தன்மையளாகலின் தோழியன்ன சுமித்திரையுமென்றும், அவளுமவளை யொழிந்த மற்றைத்தேவியரு மழுதமையின் தோழியன்னசுமித்திரையும் மற் றொழிந்த தேவியருமயிலின் குழாத்தின்வந்திரைத்தார். என்றுங்கூறினர். பெருந்தேவியென்றது கோசலையை. (எ0)

(2) துஞ்சினனைத்தம்முயிரின்றுணையைக்கண்டார்துணுக்கத்தான்
நஞ்சுகவர்ந்தாலெனவுடலநடுங்காநின்றாரென்றாலும்
அஞ்சியழுங்கிவிழுந்திலராலன்பிற்றறுகண்பிறிதுண்டோ
வஞ்சமில்லாமனத்தானைவானிற்றொடர்வான்மனம்வலித்தார்.

(இ - ள்.) துஞ்சினனை தம்முயிரின் துணையைக்கண்டார் - இறந்தவனாகிய தம்முயிர்த்துணையாவானைக் கண்டனர், துணுக்கத்தான் நஞ்சுகவர்ந்தாலென உடலநடுங்காநின்றாரென்றாலும் - நடுக்கத்தான் விடங்கவர்ந்தாற் போல உடம்புநடுங்காநின்றன ரெனினும், அஞ்சியழுங்கிவிழுந்திலர் - பயந்து வருந்தி வீழ்ந்திலர், அன்பின் தறுகண் பிறிதுண்டோ - அன்பினுங்கொடியது வேறுண்டோ, வஞ்சமில்லாமனத்தானை வானிற்றொடர்வான் மனம் வலித்தார்-வஞ்சமில்லாதமனமுடையானை வானின்கண்தொடர மனம்வலித்தனர்.—

வஞ்சமில்லா மனத்தானென்றது தயரதனை. துஞ்சினனைத்தம்முயிரின்றுணையை என்பன ஒருபொருண்மேல்வந்த பலபெயர், கண்டாரென்னும் வினைக்குச்செயப்படுபொருளாய் முடிந்தது. கணவன் இறந்து பட்டமையாலாகிய உடனடுக்கத்தை நஞ்சுகவர்ந்தமைக்குவமை கூறினர். (எக)

(3) அளங்கொளளக்கரிரும்பரப்பிலண்டருலகிலப்புறத்தில்
விளங்குமாதர்கற்பினரிவரின்யாவரெனநின்றார்
களங்கநீத்தமதிமுகத்தார்கானவெள்ளங்கால்கோப்பத்
துளங்கலில்லாத்தனிக்குன்றிற்றொக்கமயிலிற்சூழ்ந்திருந்தார்.

(இ - ள்.) அளங்கொள் அளக்கரிரும்பரப்பில் - அளத்தைக்கொண்ட கடல்சூழ்ந்த நெடியஉலகினிடத்து, அண்டருலகிலப்புறத்தில்-தேவருலகமாகிய அப்பாலிடத்து, விளங்குமாதர்கற்பினர் இவரின்யாவரெனநின்றார் - விளங்காநின்றமாதராகிய கற்பினையுடையார் இம்மாதரின் யாவரேயென்று சொல்லநின்றனர், களங்கநீத்தமதி முகத்தார் - குற்றமகன்ற மதிபோலுமுக முடையார், கானவெள்ளம்கால்கோப்ப-காடாகியவெள்ளங்கால்கோக்க, துள

ங்கலில்லாத்தனிக் குன்றிற்றொக்கமயிலின் சூழ்ந்திருந்தார்-நடுங்குதலில்லாத மலையிடைத்தொக்க மயில்போலச் சூழ்ந்திருந்தனர்.—

அறுபதினாயிரமாதராகலின் அவர் சூழ்ந்திருந்தமையைக் கானவெள்ளங் கால் கோப்பத்துளங்களில்லாத் தனிக்குன்றிற் றொக்கமயிலிற் சூழ்ந்திருந்தா ரென்றார். சககமனத்திற்குடன்பட்டவராதலின் 'அவரைகற்பினாரிவரின் யாவரென நின்றா' ரென்றதென்க. (எ௨)

(4) கைத்தசொல்லா லுயிரிழந்தும்புதல்வற்பிரிந்துங்கடையோட
மெய்த்தவேந்தன் றிருவுடம்பைப்பிரியா தரற்றிவிட்டிலரால்
பித்தமயக்காஞ்சுறவெறியும்பிறவிப்பெரியகடல்கடக்க
உய்த்துமீண்டநாவாயிற்றாமும்போவாரொக்கின்றார்.

(இ - ள்.) கைத்தசொல்லால் உயிரிழந்தும் - கைத்தமொழியாலுயிர் நீங்கியும், புதல்வற்பிரிந்தும் - குமரனைநீங்கியும், கடையோடமெய்த்த வேந்தன் திருவுடம்பைப் பிரியாதரற்றிவிட்டிலர் - கடைபோக மெய்பேசுதலே விரதமாகவுடைய அரசனழகிய மேனியைப்பிரியா தழுதுவிட்டிலா, பித்தமயக்காஞ்சுறவெறியும் - பித்தமயக்கமாகிய சுறாவினெறியும், பிறவிப்பெரிய கடல்கடக்க - பிறவியாகிய பெரியகடலைக்கடப்ப, உய்த்துமீண்ட நாவாயின் தாமும்போவாரொக்கின்றார் - செலுத்திமீண்ட மரக்கலத்திற்றாமும் போவாரையொத்திருந்தனர்—எ-று.

கைகேசி கேட்டவரத்தாலிறந்து படுதலின் 'கைத்தசொல்லாலுயிரிழந் தும் என்றும், அவள் ஆணையாற்சிராமனை நீங்கலின் 'புதல்வற்பிரிந்து' மென்றும், கடைபோக வாய்மைகாத்தலின் 'மெய்த்தவேந்த' னென்றும் கூறினார். பித்தமயக்கத்தைச் சுறவாகவும், பிறவியைப் பெருங்கடலாகவும், அக் கடலைக்கடப்பத்தாம் சககமனஞ்செயற்குடன் படலின் உய்த்துமீண்ட நாவாயிற்றாமும் போவாரொக்கின்றதாகவுங் கூறியதென்க. இந்நான்கு செய்யுளானும் அரசன் இறந்துபட்டமையான் அறுபதினாயிரந் தேவியர் வருந்தியிருந்தமை யுணர்த்தப்பட்டது. (எ௩)

மாதரார்களறுபதினாயிரருமுள்ளம்வலித்திருப்பக்
கோதில்குணத்துக்கோசலையுமிளையமாதுங்குழைந்தேங்கச்
சோதிமணித்தேர்ச்சுமந்திரன்சென்றரசன்றன்மைசொலவந்த
வேதமுனிவன்விதிசெய்தவினையைநோக்கிவிம்முவான்.

(இ-ள்.) மாதரார்கள் அறுபதினாயிரரும் உள்ளம்வலித்திருப்ப-அறுபதினாயிரமாதரும்மனம்வலித்திருக்க, கோதில்குணத்துகோசலையும்-குற்றமில்லாத குணத்தையுடைய கோசலையும், இளையமாதும்குழைந்தேங்க-இளையமனையாளுமுள்ளங்கரைந்துவருந்த,சோதிமணிதேர்சுமந்திரன்சென்று-ஒளியுள்ளமணியானியன்ற தேரையுடைய சுமந்திரன்போய், அரசன்றன்மைசொல - அரச

னது தன்மையைக்கூற, அந்தவேதமுனிவன் விதிசெய்தவினையை நோக்கி விம்முவான் - அவ்வேதமுணர்ந்தமுனிவன் விதியாற்செய்த காரியநோக்கி வருந்துவான்.—

அரசன்றன்மை யென்றது அரசனிறந்துபட்டமையை. ஊழினைக்கடப்பதற்கெவ்வகையாற்றலுடையவரானு மொல்லாதாகலின் விதிசெய்தவினையைநோக்கிவிம்முவானென்றார். (எச)

(2) செய்யக்கடவசெயற்குரியசிறுவரீண்டையாரல்லர்
எய்தக்கடவபொருளெய்தாதிகவாதென்னவியல்பென்ன
மையற்கொடியாண்மகனீண்டுவெந்தான்முடித்துமற்றென்னத்
தையற்கடனின்றெடுத்தவனைத்தயிலக்கடலின்றலையுய்த்தான்.

(இ - ள்.) செய்யக்கடவ செயற்குரிய சிறுவரீண்டையாரல்லர் - செயற்குக்கடமையாயுள்ள வுரிமைக்கடனைச் செயற்குரிய மைந்தரீண்டிருப்பாரல்லர், எய்தக்கடவபொருளெய்தாதிகவா - அடையக்கடவனவாகிய பொருள்களடையாமற்போகா, என்னஇயல்பென்ன - என்ன இயற்கையாமென்ன, மையற்கொடியாள் மகனீண்டுவெந்தான்முடித்துமற்றுஎன்ன-கரியவிருளினுங் கொடியளாகிய கைகேசிமகனீண்டுவரின் மற்றுஞ்செயற்பாலனவாகிய கருமங்களை முடிப்பெமென்று, தையற்கடனின்றெடுத்தவனை - அரசனை மாதராகிய கடலினின்றுமெடுத்து, தயிலக்கடலின்றலையுய்த்தான் - தயிலக்கடலினிடைவைத்தனன்.—எ-று.

செய்யக்கடவ செயற்குரிய சிறுவரென்றது சீராமலக்குவரை. செய்யக்கடவவென்றது உரிமைக்கடனை. யாதுகடைபோகமுடிய வேண்டுமோ அது முடியவேண்டு மென்பார் எய்தக்கடவபொருளெய்தாதிகவா என்றார். உலகமுழுதையும் வருந்தச்செய்தாளாகலின் கைகேசியை மையற்கொடியாளென்றார். தையற்வடல் உருவகம். இவ்விரண்டுசெய்யுளானும் அரசனைத் தைலமாட்டினமை யுணர்த்தப்பட்டது. (எரு)

தேவிமரையிவற்குரிமைசெய்யுநாளிற்செந்தீயின்
ஆவிநீத்திரெனநீக்கியரிவைமார்களிருவரையுந்
தாவில்கோயிற்றலையிருத்தித்தண்டார்ப்பரதற்கொண்டணகென்
றேவினான்மன்னவனாணையெழுதிமுடங்கல்கொடுத்தவரை.

(இ - ள்.) தேவிமாரை இவற்குரிமை செய்யுநாளில் செந்தீயின் ஆவிநீத்திரென நீக்கி-மனைவியரைஇவ்வரசனுக்குரிமைக்கடன்செய்யுநாளிடைச் செந்தீயின் மூழ்கி உயிர்நீக்குதிரென்று நீக்கி, அரிவைமார்களிருவரையும் தாவில்கோயிற்றலை யிருத்தி - மாதராரிருவரையும் கேடில்லா தமாளிகையின் கணிருத்தி, தண்டார்பரதற்கொண்டு அணகவென்று-தண்ணியமாலை சூடிய பரதனை யழைத்துவருகவென்று, மன்னவனாணையெழுதி - அரசனாணையைத் தீட்டி, முடங்கல்கொடுத்து - திருமோலைகொடுத்து, அவரையேவினான் - தூதுவரையனுப்பினான்.—எ-று.

செந்தீயினுவிடீத்திர் என்றது சககமனத்தை. அரிவைமார்களிருவரெ ன்றது கோசலை சுமித்திரைகளை. இதனுள் அரசனிறந்துபட்டமையையுணர் த்த முடங்கல்கொடுத்துத் தூதுவரையேவினமை யுணர்த்தப்பட்டது. (எசு)

போனூரவருங்கேகயர்கோன்பொன்மாநகரம்புகவெய்த
ஆனூவறிவினருந்தவனுமறமார்பள்ளியதுசேர்ந்தான்
சேனபதியிற்சுமந்திரனைச்செயற்பாற்குரியசெய்கென்று
மேனூஞ்சொன்னமாந்தர்க்குவிளைந்ததினிநாம்விளம்புவாம்.

(இ - ள்.) அவருங்கேகயர் கோன்பொன்மாநகரம் புகவெய்தப்போனூர்- அத்தூதரும் கேகயர்பெருமான் அழகியபெரியநகர்புகஎய்தப் போயினர், ஆனூ வறிவின் அருந்தவனும் அறமார்பள்ளியது சேர்ந்தான் - நீங்காதவறிவினையு டைய அருந்தவத்து முனிவனுந் தருமம்பொருந்திய வாச்சிரமமடைந்தனன், சேனபதியிற் சுமந்திரனை செயற்பாற்குரியசெய்க என்று - சுமந்திரனைநோக் கிச்செய்யும்படி உரியகாரியங்களைச்செய்க வென்று சொல்லி, மேனூம்சொ ன்னமாந்தர்க்கு விளைந்ததினி நாம்விளம்புவாம் - இனிநாம்முற்கூறிய மாத ராடவர்க்கு விளைந்தமையை யாம் கூறுவாம்.—எ-று.

பிரமருடிகளிற் சிறந்தவனெனப்பட்டமையின் ஆனூவறிவினருந்தவ னென்றதென்க. சுமந்திரன் பரதன்வருங்காறும் அரசநீதிசெலுத்திவந்தமை யான் சுமந்திரனைச் செயற்பாற்குரியசெய்க என்றதென்க. மேனூம்சொன் னமாந்தரென்றது மாதராடவரை. இதுகவிக்கூற்று. (எஎ)

மீனீர்வேலைமுரசியம்பவிண்ணோரேத்தமண்ணிறைஞ்சத்
தூநீரொளிவாள்புடையிலங்கச்சுடர்த்தேரேறித்தோன்றினன்
வானேபுக்கானரும்புதல்வன்மக்களகன்றூர்வருமளவும்
யானேகாப்பெனிவ்வுலகையென்பான்போலவெறிகதிரோன்.

(இ-ள்.) வானேபுக்கான் - துறக்கத்தையேயடைந்தனன், அரும்புதல் வன்-அருமையாகிய வழித்தோன்றலாகிய தயரதன், மக்களகன்றூர் - மக்கள் அவனை நீங்கினர், வருமளவும் - அம்மக்கள்வருந்துணையும், யானேகாப்பென் இவ்வுலகை யென்பான்போல - யானேகாத்து வருவேனிவ்வுலகத்தை யெ ன்று கூறுவான்போல, எறிகதிரோன் - கதிரையெறிக்கும் ஞாயிறு, மீனீர் வேலைமுரசியம்ப-கடலாகியமுரசமார்ப்ப, விண்ணோரேத்த-தேவரேத்த, மண் ணிறைஞ்ச - மண்ணுலகம்வணங்க, தூநீர் ஒளிவாள்புடையிலங்க - பரிசுத் தமான நீர்மையுடைய ஒளியுள்ளவாள்பக்கத்தேவிளங்க, சுடர்த்தேரேறிதோ ன்றினன் - பிரகாசமுள்ள தேரின்கணேறித் தோன்றினன்.—எ-று.

அரும்புதல்வனென்றதுதயரதனை ; மக்களென்றது பெருமானையும் இ ளையானையும், வேலைமுரசென்றது இருபெயர்ப்பண்பு, வாள்வாட்படைக்கு மொளிக்குஞ்சிலேடை. இதுதற்குறிப்பேற்றம். இதனுன் ஞாயிற்றினுதய முணர்த்தப்பட்டது. (எஅ)

வருந்தாவண்ணம்வருந்திஞர்மறந்தார்தம்மைவள்ளலுமங்
கிருந்தானென்றேயிருந்தார்களெல்லாமெழுந்தாரருளிருக்கும்
பெருந்தாமரைக்கட்கருமுகிலைப்பெயர்ந்தார்காணூர்பேதுற்ருர்[டார்
பொருந்தாநயனம்பொருந்திநமைப் பொன்றச்சூழ்ந்தவெனப்புரண்

(இ - ள்.) வருந்தா வண்ணம் வருந்திஞர்-வருந்தாத வகை வருந்தினர், தம்மை மறந்தார் - தம்மை மறந்து, வள்ளலுமங்கிருந்தானென்றே யிருந்தார்கள்-வள்ளியோனுகிய இறைவனங்கிருந்தனனென்றே யெண்ணி யிருந்தவர், எல்லாமெழுந்தார் - யாவரும்விழித்தெழுந்தனர், அருளிருக்கும் பெருந்தாமரைகண் கருமுகிலை-அருடங்கியிருக்கும் பெரிய தாமரைமலர்போலுங் கண்ணையுடைய கரிய மேகம்போல்வானுகிய சீராமனை, பெயர்ந்தார் காணூர் - இடம் பெயர்ந்து காணுமல், பேதுற்ருர்-மயங்கினர், பொருந்தா நயனம் பொருந்தி - துயிலாதகண் பொருந்தித்துயில்கொண்டு, நமைப்பொன்றச்சூழ்ந்த வெனபுரண்டார் - நம்மை வருந்தச்செய்தன வெனப்புரண்டனர்.—

தாமரைகட் குவமை, கருமுகிலென்ற துருவகம். கண்டு யிலாதிருப்பின் சீராமனகன்றிரா னென்பார் பொருந்தாயனம் பொருந்தி நமைப்பொன்றச் சூழ்ந்தவினையென்றதென்க. பெயர்ந்தார், காணூர்வினையெச்சமுற்று. எகூ)

எட்டுத்திசையுமோடுவாரெனழுவார்விழுவாரிடர்க்கடலுள்
விட்டுநீத்தானமையென்பார்வெய்யவையன்வினையென்பார்
ஒட்டிப்படர்ந்தண்டகமிவ்வுலகத்துளதன்றேவுணர்வைச்
சுட்டிச்சேர்தலாற்றுதுமோதொடர்துந்தேரின்சுவடென்பார்.

(இ - ள்.) எட்டுத்திசையு மோடுவொனெழுவார் - எட்டுத்திசைகளிலு மோடும்படி யெழுந்திருப்பர், விழுவார் - விழுவர், இடர்க்கடலுள் விட்டு நீத்தான் நமையென்பார்-துன்பக்கடலில் விட்டு நீங்கினன் நம்மையென்றுரைப்பர், வெய்ய ஐயன் வினையென்பார் - ஐயன் தொழில் கொடியவென் றுரைப்பர், ஒட்டிப்படர்ந்த தண்டகமிவ் வுலகத்துளதன்றே - பொருந்திப்படர்ந்த தண்டகவன மிவ்வுலகத்தின் கண் உள்ளதன்றே, உணர்வைச்சுட்டிச் சேர்தலாற்றுதுமோ - அறிவைக்குறித்து நின்று சோர்தலடைவமோ, தொடர்துந் தேரின் சுவடென்பார்-தேரின்சுவட்டைத் தொடர்ந்து செல்வே மென்பர்.

இடர்க்கடல் என்ருர் சீராமனீக்கங்கழி பெருந்துயர்விளைத்தலின்(அ0)

தேரின்சுவடுநோக்குவார்திருமாநகரின்மிசைதிரிய
ஊருந்திகிரிக்குறியொற்றியுணர்ந்தாரெல்லாமுயிர்வந்தார்
ஆருமஞ்சலையன்போயயோத்தியடைந்தானெனவசனிக்
காருங்கடலுமொருவழிக்கொண்டார்த்தவென்னக்கடிதார்த்தார்.

(இ - ள்.) தேரின்சுவடு நோக்குவார் - தேரின்சுவட்டைப் பார்ப்பர், திருமாநகரின் மிசைதிரிய - அழகிய பெரிய நகரினிடைபோக, ஊரும் திகி

ரிக்குறியொற்றி யுணர்ந்தாரெல்லாம் - ஊர்ந்துசெல்லுஞ் சக்கரத்தடையாள மொற்றியுணர்ந்தவரெல்லாம், உயிர்வந்தார்-உயிர்பெற்றனர், ஆரும் அஞ்சல்-எவரும்பயப்படன்மின்,ஐயன்போய் அயோத்தியடைந்தானென - இறைவன் சென்று அயோத்தியையடைந்தனனென்று, அசனிக்காரும்-இடியையுடைய மேகமும், கடலும் ஒரு வழிக்கொண் டார்த்தாலென்ன கடிதார்த்தார் - கடலு மொருவந்தங் கொண்டாரவா ரித்ததென்ன மிகவுமாரவாரித்தனர்.—

இறைவன் மீண்டானெனச் சுமந்திரன் கல்விமாட்சியாற் செலுத்திய தேர்ச்சுவடுகண்டு தாமு மீண்டமையி னாரவாரத்தை அசனிக்காரு மிடியு மொருவழிக் கொண்டார்த்தாலென் றுவமை முகத்தாற் கூறினர். திகிரி என்றது தேருருளையை. (அக)

மானவரவின்வாய்த்தீயவளைவான்றொளைவாளெயிற்றின்வழி
ஆனகடுவுக்கருமருந்தாவருந்துமமுதம்பெற்றுயர்ந்து
போனபொழுதிற்புகுந்தவுயிர்பொறுத்தாரொத்தார்பொருவரிய
வேனின்மதனைமதனழித்தான்மீண்டானென்னவாண்டைஇயார்.

(இ - ள்.) மானவரவின்வாய் - பெருமையுடைய பாம்பின்வாயின்கண், தீயவளைவான் தொளைவாளெயிற்றின் வழிஆன - கொடியவளைந்த சிறப்புடைய தொளையையுடைய நீண்ட பல்லின்கண் தோன்றிய, கடுவுக்கருமருந் தாவருந்துமமுதம் பெற்றுயர்ந்து-விடத்துக்கருமையாகிய மருந்தாகவுண்ணு மமுதத்தைப் பெற்றோங்கி, போனபொழுதிற் புகுந்த உயிர்பொறுத்தாரொத் தார் - சென்றபொழுதின் கண் புகுந்த உயிர்தாங்கினரொத்தனர், பொரு வரிய வேனின்மதனை - ஒப்பில்லாத வேனிற்காலத்துக் குரிய மன்மதனை, மதனழித்தான் - செருக்கழித்தசிருத்திரனையொத்த சீராமன், மீண்டானெ ன்ன ஆண்டையார் - மீண்டன னென்று அவ்விடத் துள்ளயாரும்.—

அவர்இறைவன் பிரிந்தானெனக்கொண்ட துயர்தீர்ந்தமைக்குக் 'கடுவுக் கான மருந்தாவருந்து மமுதம்பெற் றுயர்ந்துபோன பொழுதிற்புகுந்தவுயிர் பொறுத்தாரொத்தார்' என்றார். பொருவரிய வேனின்மதனை மதனழித்தான், என்று சீராமனுக் கரனையுவமைகூறியது அவன்கான் சென்றுபகையைக்களை தல் பற்றியென்க. (அஉ)

ஆறுசெல்லச்செல்லத்தேராழிகண்டாரயலப்பால்
வேறுசென்றநெறிகாணார்விம்மாநின்றவுவகையராய்
மாறியுலகம்வகுத்தநாள்வரம்புகடந்துமண்முழுதும்
ஏறியொடுங்குமெறிகடல்போலெயின்மாநகரமெய்தினார்.

(இ - ள்.) ஆறுசெல்ல செல்ல - வழிகடந்து போகப்போக, தேராழி கண்டார்-தேர்ச்சக்கரத்தைப் பார்த்தனர், அயல் அப்பால் வேறுசென்ற நெறி

காணார் - அயலாக அப்புறம் வேறு போனவழி காணாது, விம்மாநின்ற வுவகையராய்-விம்மிய மகிழ்ச்சியுடையராய், மாறியுலகம் வகுத்தநாள் - மாறுபட்டுலகத்தை விதித்த காலத்து, வரம்புகடந்து - எல்லைகடந்து, மண்முழுதும் எறியொடுங்கு மெறிகடல்போல் - மண்முற்றுமேறி யொடுங்குகின்ற அலை வீசுங்கடலைப்போல, எயில்மாநகரமெய்தினார் - மதில்சூழ்ந்த நகரத்தையடைந்தனர்.—எ-று.

அடுக்கு - இடைவிடாமைப் பொருளது. நகரமாந்தர் நகர்மதிலடைந்தமையை மண்முழுதுமேறி யொடுங்கு மெறிகடல்போ லெயின்மா நகரமெய்தினர் என்றார். இவ்வைந்து செய்யுளானும் நகரமாந்தர் மீண்டமை யுணர்த்தப்பட்டது. (அரு)

புக்காரரசன்பொன் னுலகம்போனானென் னும்பொருள்கேட்டார்
உக்காநெஞ்சமுயிருகுத்தாருற்றதெம்மா லுரைப்பரிதால்
தக்கான்போனான்வனமென் னுந்தகையுமுணர்ந்தார்மிகையாவி
அக்காலத்தேயகலுமோவவதியென்றொன் றுளதானல்.

(இ-ள்.) புக்கார்-போந்தவர், அரசன்பொன்னுலகம்போனானென்னும்பொருள்கேட்டார்-அரசன்வானடைந்தனனென்னுமெய்ம்மை கேட்டனர், நெஞ்சமுக்கார்-மனநெகிழ்ந்து, உயிர்உகுத்தார்-நெட்டுயிர்ப்பெறிந்தனர், உற்றதெம்மால் உரைப்பரிது - அவரடைந்த பரிசு எம்மாற் சொல்ல வரிது, தக்கான் வனம் போனானென்னும் தகையுமுணர்ந்தார் - தகுதியுடையனாகிய சீராமன் காடுசென்றா னென்னுந்தகைமையு மறிந்தனர், அவதியென்று ஒன்றுளதானல் - காலவெல்லையெனப் படுவதொன்றுளதாயின், மிகை யாவி அக்காலத்தேயகலுமோ - எஞ்சிநின்ற ஆவி அப்பொழுதே நீங்குமோ.—எ-று.

எனப்படுவது என்பது என்றென நின்றது; இதற்கு மரமென்று பெயரென்புழிப்போல. உயிர் உடலினின்றும் வரையறுத்த நாளிற்செல்வதல்லது போகாமையின் 'ஆவி அக்காலத்தே யகலுமோ அவதியென்றொன் றுளதானல்' என்றார். பொன்னுலகம் போனான் என்றது மங்கலம். பொருள் உண்மை; இதனைப் *'பொருள் சேர்புகழ் புரிந்தார்மாட்' டென்புழிப்பரிமே லழகர் கூறலானுமறிக. இதனான் நகரமாந்தர் அரசனிறந்து பட்டமை கேட்டெய்திய துயரமுணர்த்தப் பட்டது. (அச)

மன்னற்கல்லார்வனம்போனமைந்தற்கல்லார்வாங்கரிய
இன்னற்சிறையினிடைப்பட்டாரிருந்தார்நின்றவருந்தவனும்
உன்னற்கரியபழிக்கஞ்சியன்றேவொழிந்ததியானென்று
பன்னற்கரியபலநெறியும்பகர்ந்துபதைப்பைநீக்கினான்.

* திருக்குறள், - செ. ரு.

(இ - ள்.) மன்னற்கல்லார் - அரசனுக் காகாதவர், வனம் போனமைந் தற்கல்வார் - கான்சென்ற திருமகனுக்காகாதவர், வாங்கரிய இன்னற்சிறையி னிடைப்பட்டா ரிருந்தார் - நீங்குவதற்கரிய துன்பமாகிய சிறையிடை யகப் பட்டாராகி இருந்தனர், நின்ற அருந்தவனும்-இவை பார்த்திருந்த அருமையா கிய தவமுடையானும், உன்னற்கரியபழிக்கஞ்சியன்றோயாளுெழிந்தது-எண் ணுதற்கரிய பழிக்குப்பயந்தன்றோ யாளுெழிந்துபோனது, என்று பன்னற் கரிய பலநெறியும் பகர்ந்து பதைப்பை நீக்கினான்-என்றுசொல்லுதற்கரிய பல மார்க்கங்களுங்கூறிப் பதைப்பொழித்தனன்.—எ-று.

இதனுன் நகரமாந்தர் துயரமெய்தியது கண்டு முனிவனும் அவர்க்குப் பல நீதி கூறிப் பதைப்பொழித்தமை யுணர்த்தப்பட்டது. (அடு)

வெள்ளத்திடைவாழ்வடவனலையஞ்சிவேலைகடவாத
பள்ளக்கடலின்முனிபணியாற்பையுணகரம்வைகிடமேல்
வள்ளற்றுறைதபணியென்னும்வானோர்தவத்தால்வயங்கிருளின்
நள்ளிற்போனவரிசிலைக்கைநம்பிசெய்கைநடத்துவாம்.

(இ - ள்.) வெள்ளத்திடைவாழ் வடவனலையஞ்சி - கடலிடைவாழ் கின்ற வடவைத்தீக்குப்பயந்து, வேலைகடவாத பள்ளக்கடலின்-கரைகடந்து செல்லாத ஆழமுள்ள கடலினைப்போல, முனிபணியாற்பையுள் நகரம்வை கிட - முனிவன் ஆணையாற் றுன்பத்திடை நகரமாந்தரிருக்க, மேல்வள்ளற்று றைதபணியென்னும் வானோர் தவத்தால் - இனிவள்ளியோ னாகிய தயரதன் பணியென்னுந் தேவர்செய்த தவத்தினால், வயங்கிருளினள்ளிற்போன வரி சிலைக்கை நம்பிசெய்கை நடத்துவாம் - விளங்குகின்ற நள்ளிரவிற் சென்ற வரிந்து கட்டியவில்லேந்திய கையையுடைய சிராமன் செய்தியைக் கூறுவாம்.

அந்நகரத்தவர் துயர்நீங்கியிருத்தலை வடவனலையஞ்சி வேலைகடவாதபள் ளக்கடலிற் குவமைகூறினர். வானோர்தவத்தால் போனான் என்றார் நல்லற நிறுத்தத்தோன்றி அவர்பகையைக் களையச்சேறலினென்க. இதுகவிக்கூற்று.

தைலமாட்டு படலம் முற்றிற்று.

கங்கைப்படலம்.

ஸ்ரீராமன் தாய்சொற்றேவல் மேற்கொண்டு கான்செல்கையிற் கங்கைக்கரையையடைந்தசெய்தியை யுணர்த்துதலான் இது தைலமாட்டுபடலத்தின்பின் வைக்கப்பட்டது. படலமுறைமையுமிதனானேவிளங்கும். இதனை 'மருதவைப்பின்வளங்கெழுநாடொரீஇச்-சுருதிகற்றுயர் தோமிலர்சுற்றும் - விரிதிரைப்புனற் கங்கையை மேவினார்' எனமுற்கூறியதனானறிக.

வெய்யோனொளிதன்மேனியின்விரிசோதியின்மறையப்
பொய்யோவெனுமிடையாளொடுமிளையானொடும்போனான்
மய்யோமரகதமோமறிகடலோமழைமுகிலோ
அய்யோவிவன்வடிவென்பதொராழியாவழகுடையான்.

(இ-ள்.) மய்யோ-அஞ்சனமோ, மரகதமோ-பச்சையோ, மறிகடலோ - அலையெறியுங்கடலோ, மழைமுகிலோ - மழைபொழியுமேகமோ, ஐயோ இவன்வடிவென்பது ஒரழியாவழகுடையான் - அந்தோ இவன்மேனியெனப்படுவதாகிய ஒப்பற்ற அழிதலில்லாத அழகினையுடையான், வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின்மறைய-ஞாயிற்றினொளிதன் வடிவின்விரிந்த ஒளியாற்கரப்ப, பொய்யோஎனுமிடையாளொடும்-பொய்யோவென்னுமிடையாளாகிய சனகியுடன், இளையானொடும் போனான் - இளையவனோடுஞ் சென்றனன்.—

இறைவனது வடிவழகை மைமுதலியவற்றோடுகூறினமை ஐயநிலையுவமை; இவன்மேனியின் வெய்யோனொளி மறைதல் கூறினமை விபரீதவுவமை. இடையுமது. அய்யோ இரக்கக்குறிப்பு. ஓகாரம் - ஐயம். (க)

அளியன்னதொரறறுன்னியகுழலாள்கடலமிர்தின்
தெளிவன்னதொர்மொழியாணிறைதவமன்னதொர்செயலாள்
வெளியன்னதொரிடையாளொடும்விடையன்னதொர்நடையான்
களியன்னமுமடவன்னமுநடமாடுவகண்டான்.

(இ - ள்.) அளியன்னது-வண்டினைப்போல்வதாகிய, ஒரறல்துன்னிய குழலாள் - ஒப்பற்றகருமணலையொத்த கூந்தலையுடையாளும், கடலமிர்தின் - கடலிற்றோன்றிய அமுதத்தினது, தெளிவன்னதொர் மொழியாள் - தெளிவையொத்ததாகிய ஒப்பற்றசொல்லை யுடையாளும், நிறைதவமன்னதொர் செயலாள் - நிறைந்ததவம்போல்வதாகிய தொருசெய்கையுடையாளுமாகிய, வெளியன்னதொரிடை யாளொடும் - வெளியெனப்படுவதோரிடையையுடைய சனகியோடும் - விடையன்னதொர் நடையான் - விடைபோலுநடையுடையானாகிய ஸ்ரீராமன், களியன்னமும்-களிப்பினையுடைய ஆணன்னமும், மடவன்னமும் - பெடையன்னமும், நடமாடுவகண்டான் - உலாவுவனகண்டனன்.—

நிறைதவமன்னதொர் செயலாளென்பதற்குக்கற்பாகியதவம்போலுஞ்செய்கையாளெனினுமாம். குழற்குஅளியையும் அறலையும், மொழிக்குக்கடலமிர்தினையும், செயற்குத்தவத்தையும், இடைக்குவெளியையும், நடைக்குவிடையையுமுவமைகூறினார். விடையன்னதோர்நடையாளென்றார் 'அழியாநடையை இழிவானமல்ல லேற்றினுளதென்றான் மத்தயானைவருந்தாதோ' எனப்பிற் கூறுவதூஉமிப் பெற்றிநோக்கியென்க. விடை வடமொழிச்சிதவு. அனமென்பதற்குக் களிமடமை யென்னுஞ்சொற்கள் பிறிதினியைபு நீக்கிய விசேடணமாயின. (உ)

அஞ்சம்பையுமையன்றனதகலம்பையுமளவா
நஞ்சங்களைவெலவாகியநயனங்களையுடையாள்
துஞ்சுங்களிவரிவண்டுகள்குழலின்படிசுழலுங்
கஞ்சங்களைமஞ்சன்கழனகுகின்றதுகண்டாள்.

(இ - ள்.) அஞ்சம்பையும் ஐயன்றனது அகலம்பையும் அளவா - பஞ்சபாணங்களையும் இறைவனது அகன்றபாணத்தையுமளந்து, நஞ்சங்களை வெலவாகிய நயனங்களையுடையாள் - விடங்களை வெற்றிகொள்ளச் சமைந்தகண்களையுடையாள், துஞ்சுங்களிவரிவண்டுகள் குழலின்படி சுழலும்-தங்கியகளிப்பினையும் கீற்றினையுமுடைய வண்டுகள் குழல்போற் சுழலும், கஞ்சங்களை மஞ்சன்கழல் நகுகின்றது கண்டாள் - தாமரைமலர்களை வீரன் அடிநகைப்பது கண்டனள்.—

அஞ்சம்பென்றது, தாமரை, முல்லை, நெய்தல், மா, அசோகுகளை. இவைமாரனம் பெனப்படும். கண்களினுங்கொலைத் தொழில் விளைக்காமையின் அஞ்சம்பையுமையன்றனதகலம்பை யுமளவா என்றும், நஞ்சினுங்கொடியதாகலின் நஞ்சங்களைவெலவாகிய வென்றுங்கூறினார். வரிஎன்பதற்குப் பாடல்சான்ற வெனினுமமையும்; 'கானல்வரி' என்புழியும் இப்பொருள் படல் காண்க. (ரு)

மாகந்தமுமகரந்தமுமளகந்தருமதியின்
பாகந்தருநுதலாளொடுபவளந்தருமிதழான்
மேகந்தனிவருகின்றதுமின்னோடெனமிளிர்பூண்
நாகந்தனிவருகின்றதுபிடியோடெனநடவா.

(இ - ள்.) மாகந்தமும் மகரந்தமும்-மிக்கமணமும் பிதிருமணிந்த, அளகந்தருமதியின் பாகந்தருநுதலாளொடு பவளந்தருமிதழான் - கூந்தல் பெற்றுடைய மதியின்பாகம்போன்ற நுதலையுடைய சனகியொடு பவளம்போன்ற இதழினையுடைய சீராமன், மேகந்தனிவருகின்றது வில்லோடென - மேகந்தனியாகவருகின்றதுவில்லுடனென, மிளிர்பூண்நாகந்தனிவருகின்றது பிடியோடென நடவா-விளங்குகின்ற பூணையணிந்த களிறுதனியாகவருகின்றது பிடியுடனெனநடந்து.—

மதியைநுதற்கும்,பவளத்தையிதழ்க்குமுவமை கூறினர். மேகந்தனிவருகின்றது வில்லோடெனவும், நாகந்தனிவருகின்றது பிடியோடெனவுமுவமைகூறினர் 'விற்பிடித்தமழையனன்' எனமுற்கூறுதலேக்கியும், 'மத்தயானைவருந்தாதோ' எனப்பிற்கூறுதலேக்கியும், நடையாற்களிற்றையும் பிடியையுங் கூறினமைகாண்க. மிளிர்பூணுகம் - இல்பொருளுவமை. (ச)

தொளைகட்டியகிளைமுட்டியசுருதிச்சுவையமுதின்
கிளைகட்டியகருவிக்கிளரிசையிற்பசைநறவின்
விளைகட்டியின்மதுரித்தெழுகிளவிக்கிளர்விழிபோற்
களைகட்டவர்தளைவிட்டெறிகுவளைத்தொகைகண்டான்.

(இ - ள்.) தொளைகட்டிய கிளைமுட்டிய சுருதிச்சுவையமுதின்கிளைகட்டிய கருவிகிளரிசையின் பசைநறவின் விளைகட்டியின் மதுரித்தெழுகிளவி-தொளையமைந்தபண்ணடங்கிய சுருதிச்சுவையாகிய வமுதினும் வேய்ங்குழலினும் விளங்குகின்ற இராகத்தினும் பசியதேனினும்கரும்பின்விளைந்த சருக்கரைப் பாகினும் தித்தித்தெழுகின்ற மொழியினையுடைய சனகி, கிளர்விழிபோல் - விளங்குகின்றகண்ணேபோல், களைகட்டவர்தளை விட்டெறிகுவளைத் தொகைகண்டான் - களைகளையப்புக்கவர்தளையில் விட்டெறியும் குவளைமலர்க்கூட்டங் கண்டனன்.—

கிளவிஆகுபெயர். சுருதியென்றது இசையை. இசையையு நறவையும், கட்டியையும் கிளவிக்குவமை கூறினர். விழிபோற்குவளைத் தொகையைக் கூறினமை விபரீதவுவமை. தளை யென்றது விளைநிலத்தை. (ரு)

அருப்பேந்தியகலசத்துணையமுதேந்தியமதமா
மருப்பேந்தியவெனலாமுலைமழையேந்தியகுழலாள்
கருப்பேந்திரமுதலாயினகண்டாளிடர்காணுள்
பொருப்பேந்தியதோளானெடுவிளையாடினள்போனாள்.

(இ - ள்.) அருப்பேந்திய கலசத்துணை - அரும்புகளையேந்திய இரண்டு பாற்கலசத்து, அமுதேந்தியமதமாமருப்பேந்தியவெனலாமுலை - அமுதத்தையேந்திய யானையின்மருப்பேந்திய வென்னலாகுமுலையையும், மழையேந்திய குழலாள்-மழையேந்திய குழலையுமுடையசனகி, கருப்பேந்திர முதலாயின - கருப்பாலைமுதலியன, கண்டாளிடர்காணுள் - கண்டுதன்பங்கண் டறியாளாய், பொருப்பேந்திய தோளானெடுவிளையாடினள் போனாள் - மலையேந்தியதோளையுடையானாகிய சீராமனுடன் விளையாடிக்கொண்டுபோயினள்—

அருப்பேந்திய கலசமென்றது இல்பொருளுவமை. மழையேந்திய குழலென்றதுவமை. பொருப்பேந்தியதோளென்றதுமரு. கண்டாள்வினையெச்சமுற்று. இறைவனோடுவிளையாடிக்கொண்டும், கருப்பேந்திரமுதலானவைபார்த்துக்கொண்டுஞ் செல்லுதலுன் வழிவருத்தந் தோன்றாமை காட்டிற்று. (சு)

பன்னந்துகடராளந்தொகுபடர்பந்திகள்படுநீர்
அன்னந்துயில்வதிதண்டலையயனந்துறைபுளினம்
சின்னந்தருமலர்தந்தனசெறிநந்தனவனநன்
பொன்னந்தியநதிகண்டுளமகிழ்தந்தனர்போனார்.

(இ - ள்.) பல்நந்துகள் தரளந்தொகுபடர் பந்திகள்படுநீர் அன்னந்துயில்வதி தண்டலை - பலசங்குகள் முத்தந்தொகுத்துப் படர்ந்தவரிசைகளையுடைய ஆழ்ந்தநீரினமைந்த அன்னந்தங்கிய சோலையையும், அயல்நந்து உறைபுளினம் - அதற்கயலில் சங்குகள்வசிக்கும் மணற்குன்றையும், சின்னந்தரு மலர்தந்தன - சின்னந்தருமலர்தந்து, செறிநந்தனவனம் - பொருந்திய மலர்வனத்தையும், நன்பொன்னந்திய நதிகண்டு-செம்பொன்கொழிக்கும் ஆற்றினையும் பார்த்து, உள்ளமகிழ்தந்தனர்போனார் - உள்ளமகிழ்ச்சியடைந்துபோயினர்.—

பந்திகள் வடமொழிச்சிதைவு, மகிழ்தந்தனர் ஒருசொல்; வினையெச்சமுற்று. புளினம் - மணற்குன்று. (எ)

கால்பாய்வனமுதுமேதிகள்கதிர்மேய்வனகடைவாய்
பால்பாய்வனநறைபாய்வனமலர்வாயளிபடரச்
சேல்பாய்வனகயல்பாய்வனசெங்கான்மடவன்னம்
போல்பாய்புனன்மடவார்படிநெடுநாடவைபோனார்.

(இ - ள்.) கால்பாய்வன முதுமேதிகள் கதிர்மேய்வன - காலிற்பாய்வனவாகிய முதிய எருமைகள் நெற்பயிரை மேய்வன, கடைவாய்பால்பாய்வன - கடைவாயினின்றும் பால்பாய்வன, நறைபாய்வன மலர்வாய் - தேன்பாய்கின்ற வனங்களிலுள்ளமலரிடை, அளிபடர - வண்டுகள்படர, சேல்பாய்வன - சேற்கண்டை பாய்வன, கயல்பாய்வன - கயற்கண்டைபாய்வன, செங்கால்மடவன்னம்போல்-செங்காலையுடைய அன்னத்தைப்போல, பாய்புனல் - பாய்கின்றநீரிடை, மடவார்படி நெடுநாடவை போனார் - மாதர் ஆடுநெடியநாட்டைக் கடந்து சென்றனர்.—

செங்கான் மடவன்னம்போல் மாதரென்றது விபரீதவுவமை. கதிர்-ஆகுபெயர். கடைவாய்பால் பாய்தலென்றது நெற்கதிரின்பாலை. (அ)

வேறு

பரிதிபற்றியபல்கலன்முற்றினர்
மருதவைப்பின்வளங்கெழுநாடொரீஇச்
சுருதிகற்றுயர்தோமிலர்சுற்றுறும்
விரிதிரைப்புனற்கங்கையைமேவினார்.

(இ-ள்.) பரிதிபற்றிய பல்கலன்முற்றினர் - பரிதிபோலும் ஒளிவிளங்கும் பல வாபரணங்களணிந்த மூவரும், மருதவைப்பின்வளங்கெழுநாடொரீஇ -

மருதநிலமாகியவளப்பம் பொருந்திய நாட்டைக்கடந்து, சுருதிகற்றுயர் தோமிலர் சுற்றுறும்-வேதங்களைக்கற்றுயர்ந்த குற்றமகன்றபெரியார் சூழ்ந்திருக்கும், விரிதிரைபுனற்கங்கையைமேவினர்-விரிந்த அலைகளையுடைய திரையாற்சூழப்பட்ட கங்கையையடைந்தனர்—எ-று.

சுருதிகற்றுயர் தோமிலரென்றது வேதியரை, மருதமென்றது ஐந்திணையினொன்று. தவஞ்செய்வார்க் கிருக்கையாகையாற் கங்கையைச்சுருதிகற்றுயர் தோமிலர்சுற்றும் கங்கையென்றார். இவ்வெட்டுச் செய்யுளானு மிறைவனு மருதநிலங்கடந்துகங்கையை யடைந்தமை யுணர்த்தப்பட்டது.

(1) கங்கையென்னுங்கடவுட்டிருநதி
தங்கிவைகுந்தபோனர்யாவரும்
எங்கள்செல்கதிவந்ததென்றேமுரு
அங்கணாயகற்காணவந்தண்மினார்.

(இ - ள்.) கங்கையென்னும் கடவுள்திருநதி-கங்கையெனப்படும் தெய்வத்தன்மை பொருந்திய அழகிய ஆற்றங்கரையில், தங்கிவைகும்தபோதனர் யாவரும் - தங்கிவாழும்தவமே செல்வமாகவுடையார்யாவரும், எங்கள்செல்கதிவந்த தென்றேமுரு-எங்கள்பரகதியெய்திய தென்றுளமகிழ்ந்து,அங்கணாயகற்காணவந்தண்மினார் - அழகியகண்ணையுடைய இறைவனைப்பார்க்கவந்தடைந்தனர்.—

தெய்வத்தன்மை யுடைமையானும், தன்னைவந்தடைந்தார்க்கு மாபாதகந்தீர்த்தலானும், இறைவன்பாற்றோன்றினமையானும் கங்கையென்னுங் கடவுட்டிருநதி யென்றார். செல்கதி என்றதுபராங்கதியை. அங்கணாயகனென்றது சீராமனை.

(2) பெண்ணினோக்குஞ்சுவையிற்பிறர்பிறர்க்
கெண்ணிநோக்கியியம்பருமின்பத்தைப்
பண்ணினோக்கும்பராவமுதைப்பசுங்
கண்ணினோக்கினருள்ளங்களிக்கின்றார்.

(இ - ள்.) பிறர்பெண்ணி னோக்குஞ்சுவையின் - இல்வாழ்க்கை யுடையார் பெண்ணினடையுஞ் சுவைபோல, பிறர்க்கெண்ணிநோக்கியியம்பரும் இன்பத்தை- துறவறவொழுக்க முடையார்க் குள்ளத்தின்கண் காண்கின்ற சொல்லவரிய வின்பத்தை, பண்ணினோக்கும் பராவமுதை - பண்ணினுடைய பராவமுதத்தை, பசுங்கண்ணினோக்கின ருள்ளங்களிக்கின்றார்-ஊனக்கண்ணானோக்கி யுள்ளமகிழ்வாராயினர்.—

பிறர்பெண்ணி னோக்குமென்றது இல்வாழ்க்கையையும், பிறர்க்கெண்ணிநோக்கும் என்றமையாற் றுறவறத்தையு முணர்த்தி நின்றன. ஏழிசையின் சுவையாய் நின்றவனாகலின் பண்ணினோக்கும் பராவமுதை யென்றும்,

ஞானக்கண்ணாற் காணப்படுவானெளிவந்தமையாற் பசுங்கண்ணினோக்கின ருள்ளங்களிக்கின்றாரென்றுங் கூறினார். நோக்கினர் வினையெச்சமுற்று. உள் ளம் - ஆகுபெயர். (௧௧)

(3) எதிர்கொடேத்தினரின்னிசைபாடினர்
வெதிர்கொள்கோலினராடினர்வீரனைக்
கதிர்கொடாமரைக்கண்ணனைக்கண்ணினான்
மதுரவாரியமுதெனமாந்துவார்.

(இ - ள்.) வீரனை - வீரத்தன்மை யுடையானும், கதிர்கொள் தாமரை கண்ணனை - ஒளிகொண்ட தாமரைக்கண்ணை யுடையானுமாகிய ஸ்ரீராமனை, கண்ணினால் - கண்களினால், மதுரவாரியமுதெனமாந்துவார் - மதுரக்கடலிற் றோன்று மமுதமெனவுண்பாராகி, வெதிர்கொள்கோலினர் - திரிதண்டமேந்திய முற்றத்துறந்த முனிவர், எதிர்கொடேத்தினர் - எதிர்கொண்டு துதித்த னர், இன்னிசை பாடினர் - இனிமையாகிய இசையைப் பாடினர், ஆடினர்- கூத்தாடினர்.—

'தாமரைக் கண்ணான்' எனப்பிறருங் கூறுதலிற் கதிர்கொடாமரைக்கண் ணனை யென்றார். வெதிர்கொள் கோலினரென்றது - முக்கோற்பகவரை. மாந்துவார் வினையெச்சமுற்று. எதிர்கொண் டென்றது மரீஇயது. (௧௨)

(4) மனையினீங்கியமக்களைவைகலும்
நினையுநெஞ்சினர்கண்டிலர்நேடுவார்
அனையர்வந்துறவாண்டெதிர்ந்தார்களில்
இனியமாதவப்பள்ளிகொண்டெய்தினார்.

(இ - ள்.) மனையினீங்கிய மக்களை - வீட்டினின்று நீங்கிய மக்களை, வைகலும் நினையுநெஞ்சினர் கண்டிலர் - எஞ்ஞான்று மெண்ணு மனமுடை யார்காணாது, நேடுவார் - தேடுவார், அனையர்வந்துற - அன்னோர்வர, ஆண் டெதிர்ந்தார்களில் - அவ்விடத்தில் வந்தெதிர்ந்தவரைப்போல, இனியமாத வப் பள்ளிகொண்டெய்தினார் - இனிமையான மாதவருறையும் பள்ளியிற் கொண்டடைந்தனர்.—எ-று.

மக்களை மனையினீங்கி வருந்தினார் அன்னோரைக் கண்டாங்குச் சக் கிரவர்த்தி திருக்குமாராண் டெய்தவவரையழைத்துக் கொண்டுசென்றமை யின் மக்களைவைகலு நினையுநெஞ்சினர் கண்டிலர் நேடுவார் அனையர்வந்துற வாண்டெதிர்ந்தா ரென்றுவமை கூறினார். மாதவப்பள்ளி என்றது தவத்தவ ரிருக்கையை. கண்டிலர் வினையெச்சமுற்று. இந்நான்கு செய்யுளானும் கங் கைக்கரையிற்சீராமனைக்கண்டு முனிவர் தம்மிருக்கைக் கழைத்துச் சென்ற மை யுணர்த்தப்பட்டது. (௧௩)

(1) பொழியுங்கண்ணிற்புதுப்புனலாட்டினர்
மொழியுமின்சொலின்மொய்ம்மலர்சூட்டினர்

அழிவிலன்பெனுமாரமிர்தூட்டினர்
வழியில்வந்தவருத்தத்தைவாட்டினர்.

(இ - ள்.) பொழியுங்கண்ணில் புதுப்புனலாட்டினர்-பொழிகின்றகண்ணினின்றுவரும் புதுநீராலாட்டினர், மொழியுமின்சொலின் மொய்ம்மலர் சூட்டினர் - சொல்லுகின்ற இனியசொல்லொடு நெருங்கிய மலரைச்சூட்டினர், அழிவில் அன்பெனுமாரமிர் தூட்டினர்-கேடில்லாதவன்பெனப்படுமருமையாகிய அமுதமுண்பித்தனர், வழியில்வந்தவருத்தத்தைவாட்டினர்-வழியிடை வந்தவருத்தத்தைக் கெடுத்தனர்.—

அருவப்பொருளாகிய காதலைக்கண்ணிற் புதுப்புனலாட்டினரென்றார். அன்பென்றுந் தொடர்வதாகலின் அழிவிலென விசேடித்தார். அன்பினை அமுதாகக் கூறினர். (கஉ)

(2) காயுங்கானிற்கிழங்குங்கனிகளும்
தூயதேடிக்கொணர்ந்தனர்தோன்றனீ
ஆயகங்கையரும்புனலாடினை
தீயையோம்பினைசெய்யமுதென்றனர்.

(இ.- ள்.) காயும்கானிற் கிழங்குங் கனிகளும் - காட்டிலுள்ளகாய்களும் கிழங்குகளும் பழங்களும், தூயதேடிக் கொணர்ந்தனர் - ஆகிய தூயனவற்றினைத்தேடிக் கொண்டுவந்தனர், தோன்றல் நீ ஆயகங்கையரும்புனலாடினை - தோன்றால் நீ அக்கங்கையாகிய அரியநீரிலாடினை, தீயையோம்பினை-செந்தீயைவளர்த்து, செய்யமுதென்றனர்-அமுதுசெய்யென்றனர்.—

தோன்றல் ஆகுபெயர். செய்யமுதென்றனர் என்பதனை அமுது செய்யென்றனரென மாற்றியுரைக்க. தீயையோம்பல் என்றார் அந்தணர்க்கு மரசர்க்கு முரித்தாகலின். அமுது செய்தலென்றது உண்டலை. இவ்விரண்டு செய்யுளானும் இறைவனை நீராடி யுண்கவென்ப துணர்த்தப்பட்டது. (கரு)

(1) மங்கையர்க்குவிளக்கன்னமானையும்
செங்கைபற்றினன்றேவருந்துன்பறப்
பங்கையத்தயன்பண்டுதன்பாதத்தின்
அங்கையிற்றருங்கங்கையினாடினான்.

(இ - ள்.) மங்கையர்க்கு விளக்கன்னமானையும் - மாதர்கட்கு விளக்கினையொத்தமான் போன்ற சனகியையும், தேவருந்துன்பற - தேவர்களுந் துன்பங்களொழிய, செங்கைபற்றினன்-செங்கைபிடித்தனன், பண்டு-அஞ்ஞான்று, பங்கையத்தயன்-தாமரையில்வசிக்கும் பிரமன், தன்பாதத்தின் அங்கையிற்றரும் கங்கையினாடினான் - தன்னடியின்கண் அங்கையாலாட்டிய கங்கையி னீராடினான்.—

தன்பாதத்தின் கங்கையென்றது 'அகிலமன்றளந்த புண்டரீகமென்பதத்திடைப்பிறந்து பூமகனார் - கொண்டதீர்த்தமா' யெனமுற்கூறியதை வற்புறுத்

தற்கு; இதனை 'விண்போத கங்கை' என்னும் வழக்கானு முணர்க; இதற்கு வேறு கூறுவாருமுளர். மங்கையரிற் சிறந்தவளாகலின் 'மங்கையர்க்கு விளக்கன்னமானையும்' என்றார். (கசு)

(2) கன்னிநீக்கருங்கங்கையுங்கைதொழாப்
பன்னிநீக்கரும்பாதகம்பாருளோர்
என்னினீக்குவர்யானுமின்றெற்றந்த
உன்னினீக்கினெனுய்ந்தனென்யானென்றாள்.

(இ - ள்.) கன்னிநீக்கருங் கங்கையுங்கைதொழா - கன்னித்தன்மையின் நீங்குதலில்லாத கங்கையுங்கைதொழுது, பன்னி நீக்கரும்பாதகம் - சொல்லி நீக்குதலில்லாத பாவத்தொழில், பாருளோர் என்னினீக்குவர்-நிலத்தவர் என்னிடை நீக்கிக்கொள்வர், யானுமின்று என்தந்த உன்னின் நீக்கினென் - யானுமிஞ்ஞான் றென்னையீன்ற உன்னிடை நீக்கிக்கொண்டேன், யானுய்ந்தனெ னென்றாள்-யான்பிழைத்தே னென்றனள்.—எ-று.

கழுவாய் செயற்கு ஆகாத பாதகமென்பார் 'பன்னிநீக்கரும்பாதக' மென்றார். எற்றந்த நின்னினீக்கின னென்பதற்கு மேற்காட்டிஞம். இதுகாறும் யானடைந்த பாதகமனைத்து நீ நீராடநீங்கினேனென்பாள்உன்னினீக்கினே னுய்ந்தனன்' என்று கூறியதென்க. இவ்விரண்டு செய்யுலானுங்கங்கை இறைவனை யென்பாதக நீங்கப் பெற்றேனென்பதுணர்த்தப்பட்டது. (கஎ)

(1) வெங்கணுகக்கரத்தினன்வெண்ணிறக்
கங்கைவார்சடைக்கற்றையன்கற்புடை
மங்கைகாணநின்றாடுகின்றான்வகிர்த்
திங்கள்சூடியசெல்வனிற்றோன்றினன்.

(இ - ள்.) வெங்கண் நாகம் கரத்தினன் - தறுகண்மையையுடைய யானைப் புழைக்கைபோலுங் கையையுடையானும், வில்லினன் - வில்லினையுடையானும், வெண்ணிறம்கங்கை வார்சடைக்கற்றையன் - வெண்ணிறமுடைய கங்கையொழுகுஞ் சடைக்கற்றையை யுடையானும், கற்புடைமங்கைகாண நின்றாடுகின்றான் - கற்பினையுடைய சனகிகாண நீராடுகின்றானுமாகியசீராமன், வகிர்திங்கள் சூடிய செல்வனிற்றோன்றினன் - இளம்பிறையணிந்த சிவனைப்போலும் விளங்கினன்.—

தண்டியாசிரியர் 'ஒருவகைச்சொற்றொடர் பலபொருட்பெற்றி - தெரிதரவருவது சிலேடையாகும்' என்றமாத்திரை யொழியாது 'அதுவே - செம்மொழி பிரிமொழியெனவிருதிறப்படும்' என்பவாகலின் வெங்கண்நாகக்கரத்தினன்-தீயைக்காலும் பாம்பாகிய கங்கணமணிந்த கையையுடையானும், வில்லினன் - மேருவில்லை யுடையானும், கங்கைவார் சடைக்கற்றையன், கங்கையையணிந்த நீண்டசடைக்கற்றையையுடையானும், கற்புடைமங்கை

காணநின் ருடுகின்ருன் - மலையரையன் பயந்தமாதுகாண இரணியமன்றில் ஆனந்தத்தாண்டவஞ் செய்வானும் எனவேறுமொருபொருள் கொள்ளக்கிடந்தமை காண்க. வகிர்த்திங்கள் சூடிய செல்வனென்பதற் கிராமசந்திரனென்பது பெற்ரும். சனகியைக் கற்புடைமங்கையென்றது இவ்வாசிரியர் அயோத்தியர் பெருமான்கூற்ருக, 'அருந்ததியனையாளே' எனப்பிருண்டுங் கூறுதலானும், அவர் இவள்கற்பினிலைமையை இராவண வேட்டையாடிய பிற்றைஞான்று சோதிப்பத்தீயெனத் தோன்றி அத்தீயையுஞ் சுட்டமையானு முணர்க. இனி வெண்ணிறக்கங்கைவார்சடைக்கற்றைய னென்பதற்கு வெண்ணிறநீரைக் கையினெழுக்குஞ் சடையென்னுமறையின் பிரிவையுச்சரிப்பானு மென்றுரைப்பாரு முளர். (கஅ)

(2) தள்ளுநீர்ப்பெருங்கங்கைத்தரங்கத்தால்
வள்ளிநுண்ணிடைமாமலராளொடும்
வெள்ளிவெண்ணிறப்பாற்கடன்மேலைநாள்
பள்ளிநீங்கியபான்மையிற்ரோன்றினுன்.

(இ-ள்.) தள்ளுநீர்ப்பெருங்கங்கைத்தரங்கத்தால்-தள்ளுகின்றநீரையுடைய பெருமையாகிய கங்கையின் அலையினல், வள்ளிநுண்ணிடை மாமலராளொடும் - கொடிபோலுநுண்ணிய இடையையுடைய தாமரையாளுடன், வெள்ளி வெண்ணிறப் பாற்கடல் - வெள்ளிபோலும் வெண்ணிறமுள்ள பாற்கடலிடத்து, மேலைநாள் - முன்னுளில், பள்ளிநீங்கிய பான்மையின் றோன்றினுன் - படுக்கைவிட்டெழுந்த தன்மையினைப் போலத்தோன்றினன்.—எ-று

வள்ளியென்றது வடமொழிச்சிதைவு. மாமலராளென்றது புண்டரீகையென்பதுபற்றி. கங்கையினீராடியெழுந்தது பாற்கடனின் றெழுதல்போலுமென்றுவமை முகத்தாற் கூறினுர் பாற்கடற்பரமனே சீராமனுகத்தோன்றலினென்க. இவ்விரண்டுசெய்யுளானு மிறைவன் கங்கை நீராடிவந்தமை யுணர்த்தப்பட்டது,

(1) வஞ்சிநாணவிடைக்குமடநடைக்
கஞ்சியன்னமொதுங்கவடியன்ன
கஞ்சநீரிலொளிப்பக்கயலுகப்
பஞ்சிமெல்லடிப்பாவையுமாடினுள்.

(இ - ள்-) இடைக்கு வஞ்சிநாண - இடைக்குக்கொடி நாண்கொள்ள, மடநடைக்கஞ்சி யன்னமொதுங்க - மடப்பமுள்ள நடைக்குப்பயந்து அன்னப்பறவையொதுங்க, அடியன்னகஞ்ச நீரிலொளிப்ப-அடியையொத்த தாமரைமலர் நீரிடைக்கரப்ப, கயலுக - கயல்சிந்த, பஞ்சிமெல்லடிப்பாவையுமாடினுள்-செம்பஞ்சூட்டிய மென்மையாய பாதங்களையுடைய பாவைபோல்வாளாகிய சனகியு நீராடினள்.—

இடைக்குவஞ்சியும், நடைக்கன்னமும், அடிக்குக்கஞ்சமு முவமை முகத்தாற் கூறினர். கயலுக எனவாளாகூறினர்கண்ணுக்குவமமதுவாகலின். பாவை ஆகுபெயர். (உ0)

(2) தேவர்தேவன்செறிசடைக்கற்றையுட்
கோவைமாலையெருக்கொடுகொன்றையின்
பூவுநாறலள்பூங்குழற்கூந்தலின்
நாவிநாண்மலர்கங்கையுநாறினள்.

(இ - ள்.) தேவர்தேவன் செறிசடைகற்றையுள்-தேவர் பெருமானுகிய இறைவனது செறிந்தசடைக்கற்றையின்கண், கோவைமாலை யெருக்கொடு கொன்றையின் பூவுநாறலள் - எருக்கினுற் கோவைப்படச்சமைத்த மாலையுடன் கொன்றைப் பூவுநாறலள், பூங்குழற்கூந்தலின் - பூவைமுடித்த கூந்தலின்கணுள்ள, நாவிநாண்மலர் கங்கையுநாறினள்-கத்தூரியும் அன்றலர்ந்தமலருங்கங்கையு நாறினள்.—

மகாதேவனென்னும் வடமொழிப்பெயர்பற்றித் தேவர்தேவனென்றதென்க. கோவைமாலை இருபெயரொட்டுப் பண்புத்தொகை. நாவிநாண்மலர் கங்கையுநாறினுள் என்பதுதிணை விரவிச்சிறப்பினுன்உயர்திணைமுடிபேற்றது. (உக)

(3) நுரைக்கொழுந்தெழுந்தோங்கிநுடங்கலால்
நரைத்தகூந்தலினங்கைமந்தாகினி
உரைத்தசீதைத்தனிமையையுன்னுவாள்
திரைக்கைநீட்டிச்செவிலியினுட்டினுள்.

(இ - ள்.) நுரைக்கொழுந்தெழுந்தோங்கி நுடங்கலால் - நுரைத்தெழுந்துகொழுந்துயர்ந்து துவளுகையால், நரைத்தகூந்தலி னங்கைமந்தாகினி - நரைத்தகூந்தலையுடைய பெண்ணுகிய கங்கை, உரைத்தசீதைதனிமையையுன்னுவாள் - யாவராலுங்கூறப்படுஞ் சனகிதனிமையை யெண்ணி, திரைக்கை நீட்டி - அலையாகிய தன்னுடையகையைநீட்டி, செவிலியினுட்டினுள் - செவிலித்தாய்போல நீராட்டினுள்.—

நுரையெனனும். வினைப்பகுதிசெய்தெனெச்சப் பொருளது, * வரிப்புனைபந்தென்புழிப்போல. உரைத்த சீதையென்றுர் அறக்கற்புடையாரிற் சனகியையாவரு மெடுத்துக்கூறுதஞேக்கி, செவிலியென்றது தாயருளொருவரை, அவர்தன்னையீன்றுள் பாலுள்ளபாங்கியெனப்படுப. திரைக்கை உருவகம். மந்தாகினியென்றது கங்கைக்கொருபெயர்; அது விண்ணிலு நிலத்திலும் பாதலத்திலும் வெவ்வேறுபெயர்கொண்டு வழங்கப்படும். (உஉ)

* திருமுருகாற்றுப்படை வரி. கூஅ

மங்கைவார்குழற்கற்றைமழைக்குலந்
தங்குநீரிடைத்தாழ்ந்துகுழைப்பன
கங்கையாளொடுங்காளிந்திதன்னொடும்
பொங்குநீர்ச்சுழிபோவனபோன்றவே.

(இ - ள்.) மங்கைவார்குழற் கற்றைமழைக்குலம் - சனகியது நீண்ட கூந்தற்கற்றையாகிய மழைக்கூட்டம், தங்குநீரிடை தாழ்ந்து குழைப்பன- தங்கியநீரிடைத்தாழ்ந்துகுழைவன, கங்கையாளொடுங்காளிந்திதன்னொடும்- கங்கையாற்றிடையும் காளிந்தியாற்றிடையும், பொங்குநீர்ச்சுழிபோவன போன்ற-மிக்க நீர்ச்சுழிபோவனவொப்பன.—

காளிந்தி என்றதுயமுனையை. கூந்தற்கற்றை குழைவதனைக் காளிந்தி யாற்றிற்குவமைகூறினர். ஒடு என்னு மூன்றாவது ஏழாவதனிடப் பொரு ளின் கண்வந்தது. மங்கையென்றதுசனகியை. (உரு)

சுழிபட்டோங்கியதூங்கொலியாற்றுத்தன்
விழியிற்சேலுகள்வானிறவெள்ளத்து
முழுகித்தோன்றுகின்றாண்முதற்பாற்கடல்
அமுவத்தன்றெழுவாளெனவாயினள்.

(இ - ள்.) சுழிபட்டோங்கிய தூங்கொலியாற்று - சுழித்தோங்கி மிக்க வோசையையுடைய வாற்றின், தன்விழியிற்சேலுகள் வால்நிறவெள்ளத்து- தன்கண்ணையொப்பதாகிய சேலினம்புரள்கின்றவெண்ணிறமாகியவெள்ளத் திடை, முழுகித்தோன்றுகின்றாள் - மூழ்கித்தோன்றுஞ்சனகி, முதற்பாற் கடல் அமுவத்தன்றெழுவாளெனவாயினள் - முதன்மையாகிய பாற்கடல் வெள்ளத்திடை அஞ்ஞான்று துயினீங்கியெழுவாள் போலாயினள்—எ-று.

முதற்பாற்கடலென்றது 'கடலிற்பாற் கடனுனென' இறைவனே கூறு தனோக்கி. கடலினின்றுந்துயிலெழலை யீண்டு நீராடியெழற்குவமைகூறினர். தோன்றுகின்றாள் வினைப்பெயர். இவ்வைந்து செய்யுளானும் சனகி கங் கை நீராடினமை யுணர்த்தப்பட்டது. (உச)

செய்யதாமரைத்தாள்பண்டுதீண்டலால்
வெய்யபாதகந்தீர்த்துவிளங்குவாள்
அய்யன்மேனியெலாமளைந்தாலினி
வையமாநரகத்திடைவைகுமே.

(இ - ள்.) செய்யதாமரைத்தாள்-செந்தாமரைமலர்போன்ற பாதங்களை, பண்டுதீண்டலால் - முற்பரிசித்தலான், வெய்யபாதகந்தீர்த்துவிளங்குவாள்- கொடியபாவச் செயலனைத்து மொழிந்தகங்கை, ஐயன்மேனியெலாமளைந் தால் - இறைவன்றிருவுடம்புமுழுதும் தீண்டப்பட்டமையான், இனிவைய மாநரகத்திடைவைகுமே-இனியுலகத்தவர் மாநிரயத்துன்படைவரோ—எ-று.

பண்டுதீண்டலான் என்றது-பிரமன் இறைவன் சுடரடியைவிளக்கலே. தாட்பரிசத்தானே . யுலகத்துப்பெரும்பாதகமெல்லாந் தீர்த்தலாலினியவன் மேனிமுழுதுந் தீண்டப்பெற்றமையினுலக நிரயத்துன்பமெய்தாதென்பது. இது கவிக்கூற்று. வையமாகுபெயர், ஏகாரமெதிர்மறை. (உரு)

துறைநறும்புனலாடிச்சுருதியோர்
உறையுளெய்தியுணர்வுடையோருணர்
இறைவற்கைதொழுதேந்தெரியோம்பிப்பின்
அறிஞர்காதற்கமைவிருந்தாகினன்.

(இ - ள்.) துறைநறும்புனலாடி - கங்கைத்துறையினிழிந்து புதுநீராடி, சுருதியோர் உறையுளெய்தி-வேதியரிருக்கையணைந்து, உணர்வுடையோருணர் இறைவற்கைதொழுது - மெய்யுணர்ச்சியுடையரால் உணரப்படும் இறைவனைவணங்கி, ஏந்தெரியோம்பி-கையில்வைத்திருக்குந்தீயைவளர்த்து, பின் அறிஞர்காதற்கமைவிருந்தாகினன்-பின்னர் அவ்வுணர்வுடையோர் அன்பிற்கமைந்த விருந்தாகிச்சமைந்தனன்—எ-று.

வேதியரென்னும்பெயர்பற்றிச்சுருதியோரென்னுந்தென்க. சுருதி, வேதம், மறை, எழுதாக்கிளவி, சொல் என்பனவொருபொருட்கிளவி. தத்துவமுழுதுங்கடந்தபரம்பொருளையேயுணருமுணர்ச்சியுடையாராதலின் உணர்வுடையோரென்றும், அவராலுணரப்படுவது ஆக்கல் காத்தல் அழித்த லென்னும் முத்தொழிலையுந் தன்சந்நிதிமாத்திரையிற் செய்யுமொருமுதலென்பதுபற்றி இறைவனென்றும், அந்தணருமரசருந்தீயைவளர்த்தன் முறையாதலின் கரத்தேந்திவருவனரென்பார் ஏந்தெரியோம்பியென்றும், அவர் அக்கினிகாரியஞ் செய்யாதுண்பதரிதாகலின்பின்காதற்கமைவிருந்தாகினனென்றுங்கூறினர். இதனு னிறைவன் விருந்தாயினு னென்ப துணர்த்தப்பட்டது. (உசு)

வருந்தித்தான்றரவந்தவமுதையும்
அருந்துநீரென்றமரரையூட்டினன்
விருந்துமெல்லடகுண்டுவிளங்கினன்
திருந்தினர்வயிற்செய்தனதேயுமோ.

(இ - ள்.) வருந்தித்தான்றரவதவமுதையும் - வருந்திக்கடைந்த வமுதினையும், அருந்துநீரென்று அமரரையூட்டினன் - நீருண்மினென்று தேவரையுண்பித்த இறைவன், விருந்துமெல்லடகுண்டு விளங்கினன்-விருந்தாகமெல்லிலைபுசித்துத் தோன்றினன்,திருந்தினர் வயிற்செய்தனதேயுமோ-செம்மைநெறியாளரிடைச் செய்தன அழியுமோ—எ - று.

அமுது என்பது நீட்டும் வழிநீட்டல் பெற்றது; 'வீடுமின்முற்றவுமென் புழிப்போல. மந்தரநட்டுக் கடைந்தளித்த சிறப்பான் வருந்தித்தான்றரவந்தவமுதென்றும்,அதனை அரக்கரையொழித்துதவுதல்தோன்றஅருந்துநீரென்றமரரை யூட்டினனென்றுங் கூறினர். உண்ணுநீரென்பதற்குப் பருகு

நீரென்னலாம் படியென்றுரைப்பது மொன்று. இப்பொருட்கு என்று செயவெனெச்சத்திரிபு. காதற்கமைவிருந்தானமையின் அவரிட்டமெல்லடகு அமுதினுஞ்சீர்த்த தென்றவாறு. செய்கையிற்கோட்டமில்லாதார் வயிற்செய்தன †“ஆலம்வித்தீண்டி” ப்பெருகுதல் போனிற்றலிற் செய்தனதேயுமோ என்றதென்க. இது வேற்றுப்பொருள் வைப்பு. கவிக்கூற்று. (உஎ)

ஆயகாலையினாயிரமம்பிக்கு
நாயகன்போர்க்குகனெனுநாமத்தான்
தூயகங்கைத்துறைவிடுந்தொன்மையான்
காயும்வில்லினன்கற்றிரடோளினான்.

(இ - ள்.) ஆயகாலையின்-அன்னபொழுதில், ஆயிரமம்பிக்கு நாயகன் - ஆயிரம்படகுகட்குத்தலைவன், போர்க்குகனெனு நாமத்தான் - போர்த்தொழிலில்வல்ல குகனென்னு மியற்பெயரினன், தூயகங்கைத்துறைவிடுந் தொன்மையான் - தூயதன்மையுள்ள கங்கைக்கரையிற் படகுவிடும்பழமையோன், காயும்வில்லினன் -வருத்துமியல்புடைய வில்லினையுடையான், கற்றிரடோளினான்-திரண்டகல்லையொத்ததோளினையுடையான்.— (உஅ)

துடியனாயினன்றோற்செருப்பார்த்தபேர்
அடியனற்சிறந்தன்னநிறத்தினான்
நெடியதானைநெருங்கலினீர்முகில்
இடியினோடெழுந்தாலன்னவீட்டினான்.

(இ - ள்.) துடியன் நாயினன் தோல்செருப்பார்த்த பேரடியன் அல்சிறந்தன்ன நிறத்தினான் - உடுக்கையையுடையான் நாயினையுடையான் தோலாற்செய்யப்பட்ட செருப்பணிந்த பெரியபாதமுடையான் இருள் சிறந்தாற்போன்றநிறமுடையான், நெடியதானைநெருங்கலின் நீர்முகில் இடியினோடெழுந்தாலன்ன ஈட்டினான் - பெரியசேனை நெருங்கலினான் நீர்கொண்டமேகம் இடியொடெழுந்தாற்போன்ற கூட்டமுடையான்.— (உகூ)

கொம்புதுத்தரிகொட்டுமுறைமையன்
பம்பைபம்புபடையினன்பல்லவத்
தம்பனம்பிக்குநாதனழிகவுள்
தும்பியீட்டம்புரைகிளைசுற்றத்தான்.

(இ - ள்.) கொம்பு துத்தரி கொட்டுமுறைமையன் - கொம்பினையுந் துத்தரியையுங் கொட்டுமுறைமையையுடையான், பம்பை பம்புபடையினன் - பம்பைநெருங்கும் படையையுடையான், பல்லவத்தம்பன் - தளிரையொத்த அம்பினன், அம்பிக்குநாதன் - படகுக்கிறைவன், அழிகவுள் தும்பியீட்

† நாலடியார், செ - கஅ.

டபுழை கிளைசுற்றத்தான் - மதத்தான்விளங்கும் கன்னத்தையுடையகளிற்றின்கூட்டத்தை யொத்த கிளையாகிய சுற்றமுடையான்.—

கிளைசுற்றம் - ஒருபொருட்பன்மொழி, கிளை ஆகுபெயர். (௬0)

காழமிட்டகுறங்கினன்கங்கையின்
ஆழமிட்டநெடுமையினனரை
தாழவிட்டசெந்தோலன்றயங்குறச்
சூழவிட்டதொடுபுலிவாலினன்.

(இ-ள்.) காழமிட்டகுறங்கினன்-காழமணிந்த தொடையான், கங்கையினுழமிட்ட நெடுமையினன் - கங்கையினுழந்தங்கிய நெடுமையான், அரைதாழவிட்ட செந்தோலன் - அரையின்கண்தாழும்படியிட்ட செந்தோலினன், தயங்குறசூழவிட்ட தொடுபுலிவாலினன்-விளங்கச்சூழும்படியிட்டதொடுத்த புலிவாலுடையான்.—

ஆழத்தினேனைய வாற்றினுஞ்சிறந்தமையிற் கங்கையினுழமென்றுவமை கூறினர். (௬௧)

பற்றொடுத்தன்னபல்சூற்கவடியன்
கற்றொடுத்தன்னபோலுங்கழலினன்
அற்றொடுத்தன்னகுஞ்சியனளியின்
நெற்றொடுத்துநெரிந்தபுருவத்தான்.

(இ - ள்.) பல்தொடுத்தன்ன பல்சூல்கவடியன் - பல்லைத்தொடுத்தாலொத்த பலசூல்கொண்ட கவடியையுடையான், கற்றொடுத்தன்னபோலுங்கழலினன் - கல்லைத்தொடுத்தா லொக்குங்கழலையுடையான், அல்தொடுத்தன்ன குஞ்சியன்-இருளைத் தொடுத்தாலொத்தகுஞ்சியான், ஆளியின்நெல்தொடுத்து நெரிந்தபுருவத்தான் - ஆளியின் நெல்லைத்தொடுத்துநெரிந்தபுருவமுடையான்.

கவடியைப்பல்லென்றலென்ற திக்காலவழக்கு. அன்னபோலும்-ஒருபொருட்பன்மொழி. தொடுத்தாலென்பது திரிந்து நின்றது. (௬௨)

பெண்ணைவன்செறும்பிற்பிறங்கிச்செறி
வண்ணவன்மயிர்வார்ந்துயர்முன்கையன்
கண்ணகன்றடமார்பெனுங்கல்லினன்
எண்ணெயுண்டவிருள்புரைமேனியான்.

(இ - ள்.) பெண்ணைவன் செறும்பிற் பிறங்கிச் செறிவண்ணவன் மயிர்வார்ந்துயர் முன்கையன் - பனையின்வன்மையாகிய செறும்பின் விளங்கிப்பொருந்திய அழகிய வன்மையாகிய மயிர்சாய்ந்துயர்கின்ற முன்னை

யான், கண்ணகன்தடமார்பெனுங் கல்லினன்-இடமகன்ற விசாலமாகிய மார்பெனப்படு மலையான், எண்ணெயுண்ட இருள் புரைமேனியான் - எண்ணெயுண்டிருக்கு மிருளை யொத்த மேனியையுடையான்.—

கண்ணென்பது * 'கண்ணோட்ட மில்லாதகண்' என்புழிப்போல இடப்பொருள் பயந்து நின்றது. (கூகூ)

கச்சொடார்த்தகறைக்கதிர்வாளினன்
நச்சராவினடுக்குறுநோக்கினன்
பிச்சராமன்னபேச்சினனிந்திரன்
வச்சிராயுதம்போலுமருங்கினன்.

(இ - ள்.) கச்சொடார்த்த கறைகதிர்வாளினன்-கச்சிற்கட்டிய குருதிக்கறையோடொளியுள்ள வாளுடையான், நச்சராவின் நடுக்குறு நோக்கினன்-விடத்தையுடைய பாம்புபோலும் நடுக்கம் விளைக்கும் பார்வையான், பிச்சரா மன்ன பேச்சினன் - பித்தர்போலும் பேச்சுடையான், இந்திரன் வச்சிராயுதம் போலு மருங்கினன் - இந்திரன் வயிரப்படைபோலு மிடையையுடையான்.

கறை என்பது குருதிதோய்ந்திருத்தலை. யாவரையும் வருத்தும் பார்வையையுடையானாகலின் நச்சராவினடுக்குறு நோக்கின னென்றார். (கூச)

ஊற்றுமெய்ந்நறவூனொடுமீனுகர்
நாற்றமேயநகையின்முகத்தினன்
சீற்றமின்றியுந்தீயெழநோக்குவான்
கூற்றமஞ்சக்குமுறுங்குரலினன்.

(இ - ள்.) ஊற்று மெய் நறவூனொடு மீனுகர் நாற்ற மேய நகையில் முகத்தினன் -ஊற்றுகின்றமெய்மையாகிய மதுவை யூனுடனுண்ணு நாற்றந் தங்கிய நகையொழிந்த முகத்தையுடையான், சீற்ற மின்றியுந் தீயெழ நோக்குவான் - சினமில்லாமலுந் தீயுண்டாகப் பார்ப்பான், கூற்றமஞ்சக் குமுறுங்குரலினன்-நடுவனும்பயமெய்திட வொலிக்குங்குரலையுடையான்.—

கூற்றுமிவன் குரல் கண்டேங்கு மென்பார் கூற்றமஞ்சக்குமுறுங்குரலின னென்றார். (கூடு)

சிருங்கிபேரமெனத்திரைக்கங்கையின்
மருங்குதோன்றுநகருடைவாழ்க்கையான்
ஒருங்குதேனொடுமீனுபகாரத்தன்
இருந்தவள்ளலைக்காணவந்தெய்தினன்

(இ - ள்.) சிருங்கிபேரமெனத் திரைக்கங்கையின் மருங்குதோன்று நகருடைவாழ்க்கையான் - சிருங்கிபேரமெனக்கூற அலையையுடைய கங்கைக்

* திருக்குறள், ௫௭. ௫௭௩.

கரையினயலில் விளங்குநகரில் வாழ்க்கையையுடையான், ஒருங்கு தேனொடு மீனுபகாரத்தன் - முழுதுந் தேனுமீனு மீயு முபகார முடையான், இருந்த வள்ளலைக்காண வந்தெய்தினன்-இங்கிருந்த வள்ளியோனாகிய சீராமனைக் காணவந்தடைந்தனன்.—

தொன்மையான், வில்லினன், தோளினன், துடியன், நாயினன், அடியன், நிறத்தினன், ஈட்டினன், முறைமையன், படையினன், அம்பன், நாதன், சுற்றத்தான், குறங்கினன், நெடுமையினன், ரோஎன், வாலினன், கவடியன், கழலினன், குஞ்சியன், புருவத்தான், முன்கையன், கல்லினன், மேனியான், வாளினன், நோக்கினன், பேச்சினன், மருங்கினன், முகத்தினன், நோக்குவான், குரலினன், வாழ்க்கையா னென்னும் அம்பிக்கு நாயனாகியகுகனெனு நாமத்தான் இருந்த வள்ளலைக் காணவந்தெய்தினா னென வினைமுடிக்க. இருந்த என்றது நற்றவப்பள்ளியிலிருந்தவென்க. (கூசு)

சுற்றமப்புறநிற்கச்சுடுகணை
விற்றுறந்தரைவீக்கியவாளொழித்
தற்றநீத்தமனத்தினனன்பினன்
நற்றவப்பள்ளிவாயிலைநண்ணினன்.

(இ - ள்.) சுற்றமப்புறநிற்க-சுற்றத்தார் அப்பானிற்ப, சுடுகணை வில் துறந்து - சுடுகின்ற அம்பினையும் வில்லையு நீங்கி, அரைவீக்கியவாளொழித்து - அரையிற்கட்டிய வாளை நீக்கி, அற்ற நீத்தமனத்தினன்-அறுதியில்லதாகிய மனமுடையான், அன்பினன் - அன்பினையுடையான், நற்றவப்பள்ளிவாயிலை நண்ணினன் - நன்மையாகிய தவச்சாலை வாயிலையடைந்தனன்.—

மனத்தினன், அன்பினன், நண்ணினனென வினைமுடிக்க. அற்றநீத்த மனத்தின னன்பினனென்றார்மனத்தைம்புலன் வழிச்செல்லாது இறைவன் வழியிற்செல்லுமன்புடைமை நோக்கியென்க. இப்பத்துச் செய்யுளானுங் குகன் இறைவனைச் சென்றடைந்தமை யுணர்த்தப்பட்டது. (கூஎ)

கூவாமுன்னமிளையோன்குறுகிநீ
ஆவான்யாரெனவன்பினிறைஞ்சினன்
தேவாநின்கழல்சேவிக்கவந்தனென்
நாவாய்வேட்டுவனடியேனென்றான்.

(இ - ள்.) கூவாமுன்ன மிளையோன் குறுகி - கூவுமுன் இளையோனெதிர்ந்து, நீயாவான் யாரென-நீயாரேயென்ன, அன்பின் இறைஞ்சினன் தேவாநின்கழல்சேவிக்க வந்தனென்-அன்புடன்வணங்கிநின்று இறைவ நின்னடிசேவிக்கவந்தேன், நாவாய்வேட்டுவன் நாயடியே னென்றான்-படகுவிடும் வேட்டுவன் நாயடியே னென்று மறுமொழி கூறினன்.—எ-று.

யார் என்னுங்குறிப்பு முற்று முன்னிலைக்கண்வந்தது. நீயாவான் திணைவழுவமைதி. இதனாற் குகனை இளையவன் வினாயினமையும் இறை விடுத்தமையு முணர்த்தப்பட்டன. (கூஅ)

அறுசீர்க்கழி நெடிலடியா சிரியவிருத்தம்.

நிற்றியீண்டென் றுபுக்குநெடியவற்றொழுது தம்பி
கொற்றவநின்னைக்காணக்குறுகினனிமிர்ந்தகூட்டச்
சுற்றமுந்தானுமுள்ளந்தூயவன்றாயினல்லான்
எற்றுநீர்க்கங்கைநாவாய்க்கிறைகுகனொருவனென்றான்.

(இ- ள்.) ஈண்டு நிற்றியென்றுபுக்கு - இங்கே நில்லென்றுள்புகுந்து, தம்பி நெடியவற்றொழுது- இளைவன் சீராமனை வணங்கி, கொற்றவ-இறைய வனே, நிமிர்ந்த கூட்டச்சுற்றமுந்தானும் உள்ளம் தூயவன்-ஓங்கிய கூட்ட மாகிய சுற்றமுந்தானு மனந்தூயன், தாயின் நல்லான் - தாயினு நல்லான், எற்று நீர் கங்கை நாவாய்க்கிறை குகனொருவன் - மோதுகின்ற நீரையுடைய கங்கைக் கரைக்குத் தலைவன் குகனென்பா னொருவன், நின்னைக்காணக் குறுகினனென்றான் - நின்னைப்பார்க்கவந்தடைந்தனனென்றான்.—எ-று.

சுற்றமுந்தானு முள்ளந்தூயவனென்பது திணைவிரவிச்சிறப்பான் உயர் திணை முடிபேற்றது; தானுந்தேரும் பாகனும் வந்தென்னலனுண்டா னென் புழிப்போல. இதனாற் குகன் செய்தியை இறைவற்கறிவித்தமை யுணர்த்த ப்பட்டது. (௩௯)

அண்ணலும்விரும்பியென்பாலழைத்திநீயவனையென்றான்
பண்ணவன்வருகவென்னப்பரிவினன்விரைவிற்புக்கான்
கண்ணனைக்கண்ணினோக்கிக்கனிந்தனனிருண்டகுஞ்சி
மண்ணுறப்பணிந்துமேனிவளைத்துவாய்புதைத்துநின்றான்.

(இ - ள்.) அண்ணலும் விரும்பி யென்பாலழைத்தி நீ யவனை யென் றான்-இறைவனும் விரும்பி யென்னிடை யழை நீயென்றனன், பண்ணவன் வருகவென்னப்பரிவினன்விரைவிற்புக்கான்-இளையவன்வருகவெனக்கூறப்ப ரிவுடையானாகியகுகன்விரைவிற்புகுந்து,கண்ணனைக்கண்ணினோக்கிக்கனிந் தனன்-இறைவனைக்கண்களார அன்பாய்க்கண்டு, மண்ணுறப்பணிந்துமேனி வளைத்து வாய்புதைத்து நின்றான் - நிலனுறப்பணிந்துடம்பு வளைத்து வாய் புதைத்து நின்றனன்.—எ-று.

அண்ணல் - ஆகுபெயர்.பரிவினனென்றது குகனை. கண்ணனென்றது சீராமனை. கனிந்தனன் வினையெச்சமுற்று. இதனாற் சீராமன் குகனையழை த்தமையும், அவன் சென்றமையு முணர்த்தப்பட்டன. (௪0)

இருத்தியீண்டென்னலோடுமிருந்திலனெல்லைநீத்த
அருத்தியன்றேனுமீனுமமுதினுக்கமைவதாகத்
திருத்தினென்கொணர்ந்தேனென்கொறிருவுளமென்னவீர
விருத்தமாதவரைநோக்கிமுறுவலன்விளம்பலுற்றான். [ன்

(இ - ள்.) ஈண்டிருத்தியென்னலோடும் - இங்கிருவென்றலும், இருந்திலன் - இருந்திலன், எல்லைநீத்த அருத்தியன்-அளவைகடந்த அன்பினன், தேனுமீனும்அமுதினுக்கமைவதாகத்திருத்தினன்கொணர்ந்தேன்-தேனுமீனுந்திருத்திக்கொணர்ந்தனன், திருவுளமென்கொலென்ன-கருத்தியா தென்ன, வீரன் விருத்தமாதவரை நோக்கி முறுவலன் விளம்பலுற்றான்-ஸ்ரீராமன் தவத்தின் முதியாரை நோக்கி நகைத்துக் கூறுவான்—எ-று.

என்னலோடு மென்புழி ஒடுஇசைநிறை. அருத்திக் களவை யின்மையின் எல்லைநீத்த வருத்திய னென்றதென்க. திருத்தினென் முறுவலன்வினையெச்சமுற்று. அமுதுஎன்றது ஈண்டுணவை. கொல்அசை.திருவுளமென்றதுள்ளத்கருத்தை.வனவேடனாதலின் தேனுமீனுமமுதினுக்கமைவதாகக் கொணர்ந்தனனென்றான். ஈண்டென்றது தன்மையிடத்தது.இதனாற்குகனையிருவென்றமையும்,அவன்கையுறைகொணர்ந்தேனென்றமையுமுணர்த்தப்பட்டன.

அரியதாமுவப்பவுள்ளத் தன்பினாலமைந்தகாதல்
தெரிதரக்கொணர்ந்தவென்றாலமிர்தினுஞ்சீர்த்தவன்றே
பரிவினிற்றழீஇயவென்னிற்பவித்திரமெம்மனோர்க்கும்
உரியனவினிதினாமுமுண்டனமன்றேயென்றான்.

(இ-ள்.) அரியதாமுவப்பவுள்ளத் தன்பினாலமைந்த காதல்-அரியனவாகி விரும்பப்படுவன மனத்திடையன்பினாற் சமைந்த ஆசை, தெரிதரக்கொணர்ந்தவென்றால் அமிர்தினுஞ் சீர்த்த-தெரியக்கொணர்ந்தன வெனினமிழ்தினுஞ் சிறந்தன, பரிவினிற்றழீஇயவென்னின் பவித்திரம் - அன்பாற்றழுவப்பட்டன வென்னிற் பரிசுத்தமாம், எம்மனோர்க்கு முரியன - எம்மவர்க்குமுரிமையுடையன, இனிதினாமு முண்டன மன்றே வென்றான் - இனிதாக யாமுமுண்டனமன்றே வென்றனன்.—எ-று.

அரிய என்றது குறிப்பு வினையெச்சமுற்று. எம்மனோர்க்கு மென்றார்தம்மையுந் தம்போல்வாரையு முளப்படுத்தி. தெரிதரவொருசொல், தழீஇய என்றது செயப்பாட்டு வினைப்பொருளது. இதனா னிறைவன்அவன் கொணர்ந்த கையுறை பவித்திரமென்ற துணர்த்தப்பட்டது. (சஉ)

சிங்கவேறனையவீரன்பின்னருஞ்செப்புவான்யாம்
இங்குறைந்தெறிநீர்க்கங்கையேறுதுநாளையாணர்ப்
பொங்குநின்சுற்றத்தோடும்போயுவந்தினிதுனூரிற்
றங்கிநீநாவாயோடுஞ்சாருதிவிடியவென்றான்.

(இ- ள்.) சிங்கவேறு அனைய வீரன் செப்புவான்-ஆண் சிங்கம்போன்ற வீரனாகிய ஸ்ரீராமன் சொல்லுவான், யாம் இங்குறைந்து-யாமிங்கே வசித்து, எறிநீர்க்கங்கை யேறுதும்நாளை - மோதுகின்ற நீரையுடையகங்கைக்கரையை நாளைகடப்பேம், யாணர்பொங்கு நின் சுற்றத்தோடும்-அழகு மிகுந்தநின் உறவினரோடும், போயுவந்தினிது னூரில் தங்கி-சென்று மகிழ்ந்தினிதாக நின்

னூரிடைத் தங்கியிருந்து, விடிய நீநாவாயோடு சாருதியென்றான்-விடிய நீ படகோடு மடைதியென்றனன்.—எ-று.

தன்னொடு சனகியையும், இளையவனையு முளப்படுத்தி நாம் என்றார். சிங்கவேறனையா னென்றது ஸ்ரீராமனை. விடிய என்பது வைகறைப்போதி னென்றதென்க. இதனாற் ஸ்ரீராமன் குகனை நாளைவைகறைப்போது படகோடடை யென்றமையுணர்த்தப்பட்டது. (௪௩)

கார்குலாநிறத்தான்கூறக்காதலனுணர்த்துவானிப்
பார்குலாஞ்செல்வநின்னையிஞ்ஞனம்பார்த்தகண்ணை
ஈர்கிலாக்கள்வனேன்யானின்னலினிருக்கைநோக்கித்
தீர்கிலேனுனைதையசெய்குவெனடிமையென்றான்.

(இ - ள்) கார்குலா நிறத்தான் கூற-மேகம் விரும்பும் நிறமுடையான் சொல்ல, காதலன் உணர்த்துவான் - காதல் மிக்குடையனாகிய குகன் அறிவிப்பான், இப்பார்குலாஞ் செல்வ-இவ்வுலகம் விரும்புஞ் செல்வமுடையானே, நின்னையிஞ்ஞனம் பார்த்த கண்ணை, நின்னை யிவ்வண்ணம் கண்ட கண்ணை, ஈர்கிலாக்கள்வனேன் யான் - பிளவாக்கள்ளத்தன்மை யுடையேனாகிய யான், இன்னலினிருக்கை நோக்கிதீர்கிலே னுனைதைய - துயரத்துக்கிருக்கையை யெண்ணி முடிகிலே னுனைதையனே, அடிமைசெய்கு வென்என்றான் - குற்றேவல் செய்வேனென்றனன்.—எ-று.

கார் - ஆகுபெயர். நின்னை மணிமுடிபுனைந்த கோலத்தோடுங் காணவிதியிலே னென்பான் நின்னை யிஞ்ஞனம்பார்த்தகண்ணையீர்கிலாக்கள்வனேன் என்றான். இதனாற் குகன் ஸ்ரீராமனுக்குக் குற்றேவல்செய்திருப்பே னென்றதுணர்த்தப்பட்டது. (௪௪)

கோதைவிற்குரிசிலன்னான்கூறியகொள்கைகேட்டான்
சீதையைநோக்கித்தம்பிதிருமுகநோக்கித்தீராக்
காதலனாகுமென்றுகருணையின்மலர்ந்தகண்ணன்
யாதினுமினியநண்பவிருத்தியீண்டெம்மொடென்றான்.

(இ - ள்.) கோதை விற்குரிசில்-மாலையணிந்தவில்லேந்திய இறைவன், அன்னான் கூறிய கொள்கை கேட்டான் - அவன் சொல்லியகோட்பாட்டைக்கேட்டு, சீதையை நோக்கி - சனகியைப்பார்த்து, தம்பி திருமுகநோக்கி - இளையவன் திருமுகத்தைப்பார்த்து, தீராக்காதலன் ஆகுமென்று கருணையின் மலர்ந்தகண்ணன்-நீங்காதகாதலுடையனாமென்று கருணையினான் மலர்ந்தகண்ணனாகி, யாதினுமினிய நண்ப-எப்பொருளினு மினிய நண்புடையாய், எம்மொடிருத்தி யீண்டென்றான்-எம்முடனிங்கிருவென்றனன்.—எ-று.

வாகை சூடிய வில்லாகலிற் கோதைவில் என்றார். இனிக்குதையை யுடைய வில்லெனினு மமையும். நட்பினுஞ் சிறந்த பொருளொன்றின்

மையின் யாதினுமினிய நண்ப என்றதென்க. இதனாற் ஸ்ரீராமன் குகனை யெம்முடனிங்கிருவென்பதுணர்த்தப்பட்டது. (சரு)

திருநகர்தீர்ந்தவண்ணமானவதெரித்தியென்னப்
பருவரற்றம்பிகூறப்பரிந்தவன்பையுளெய்தி
இருகணீரருவிசோரக்குகனுமாண்டிருந்தானென்னே
பெருநிலக்கிழத்திநோற்றும்பெற்றிலள்போலுமென்னா.

(இ - ள்.) திருநகர் தீர்ந்தவண்ணம் - அழகிய நகரத்தை நீங்கியவகை, மானவதெரித்தியென்ன - மனுகுலத்தவனே யறிவியென்ன, பருவரல்தம்பி கூற - தந்துயரத்தை இளையவன் சொல்ல, பரிந்தவன்பையு ளெய்தி-அன்புடையானாகியகுகன்கேட்டுத்துன்பமடைந்து, என்னேபெருநிலக்கிழத்திநோற்றும் பெற்றிலள் போலு மென்னா-யாதே பெருநில மடந்தைதவஞ்செய்தும் பெற்றிலள்போலு மென்று சொல்லி,இருகணீரருவிசோரக்குகனுமாண்டிருந்தான்-இருகண்ணினின்று மருவிசோரக் குகனுமங்கிருந்தனன்,—எ-று.

மானவ என்பதற்கு முற்கூறினும். பருவரலென்றது இறைவன் மணிமுடியிழந்து கானடைந்த செய்தியை. நீயரசர் மாலையில்வரத் தவஞ்செய்தும் அதனை யெய்தாமையான் பெருநிலக்கிழத்தி நோற்றும் பெற்றிலள்போலு மென்றா னென்க. அவன் என்னுஞ் சுட்டுமுன் வைக்கப்பட்டது செய்யுளாகலின். இதனாற் குகன் மிகப்பரிவுடையனாயங்குட னிருந்தமை யுணர்த்தப்பட்டது. (சரு)

விரியிருட்பகையையோட்டித்திசைகளைவென்றுமேனின்
றொருதனித்திகிரியுந்தியுயர்புகழ்நிறுவிநாளும்
இருநிலத்தெவர்க்குமுள்ளத்திருந்தனனென்னவீந்த
செருவலிவீரனென்னச்செங்கதிர்ச்செல்வன்சென்றான்.

(இ - ள்.) விரியிருட்பகையை யோட்டி-விரிந்த இருளாகிய பகையைப் போக்கி, திசைகளைவென்று - திக்குகளை வெற்றிக்கொண்டு, மேல் நின்று ஒருதனி திகிரியுந்தி-வானினின்று மிகவொப்பில்லாதசக்கரத்தைச்செலுத்தி, உயர்புகழ்நிறுவி-உயரும் புகழினை நிறுத்தி, நாளும் இருநிலத்தெவர்க்கு முள்ளத்திருந்தனனென்னவீந்த-என்றும் பெரியநிலத்தின்கண்ணுள்ளார் யார்க்கு மனத்தின்கணிருந்தன னென்னலாம்படி யிறந்த, செருவலி வீரனென்னச் செங்கதிர்ச் செல்வன் சென்றான் - போரின்கண் ஆற்றலுடைய வீரனாகிய தயரதனென்ன ஞாயிறு அத்தமனவரையை யடைந்தனன்.—எ-று.

பகையையோட்டித் திசைகளைவென்று திகிரிசெலுத்திப் புகழ் நிறுவி நாளுமுள்ளத்திருந்த தயரதனைச் செங்கதிர்க்குவமை கூறினார், அவனும் இருளையோட்டுதல் முதலியன செய்தலினென்க. மேல் ஆகுபெயர். இதனான் ஞாயிற்றினத்தமன முணர்த்தப்பட்டது. (சஎ)

மாலைவாய்நியமஞ்செய்துமரபுளியியற்றிவைகல்
வேலைவாயமிர்தன்னாளும்வீரனும்விரித்தநாணல்
மாலைவாய்ப்பாரின்பாயல்வைகினன்வரிவிலேந்திக்
காலைவாயளவுந்தம்பியிமைப்பிலன்காத்துநின்றான்

(இ - ள்) மாலைவாய்நியமஞ்செய்து - மாலைக்குரிய கடனைச்செய்து, மரபுளியியற்றி - மரபாற்பின்னுஞ் செயற்பாலனமுடித்து, வைகல்வேலைவாயமிர்தன்னாளும் - இரவின்கண் கடலிற்றோன்றிய அமுதம்போன்ற சனகியும், வீரனும்விரித்த நாணல்மாலைவாய்ப் பாரின்பாயல்வைகினன் - வீரத்தன்மையுடையனாகிய சீராமனும்விரித்தநாணற்புல்லாற்றொடுத்தமாலைவாய் நிலப்பாயலிற் கிடந்தனன், வரிவிலேந்திக் காலைவாயளவுந்தம்பி யிமைப்பிலன் காத்துநின்றான்-கட்டமைந்த வில்லையேந்தி விடியுமளவுந்தம்பி கண்ணிமையாது காத்து நின்றனன்—எ-று.

இமைப்பிலன் என்றது கண்ணுறங்காமையை. காலைவாயளவுமென்றது ஞாயிற்றினுதயம் வரையுமென்க. இதனாற் சீராமனுஞ் சனகியும் நாணற்புற் படுக்கையிற்படுத் துறங்கினமையும், இளையவன் காத்திருந்தமையு முணர்த்தப்பட்டன.

தும்பியின்குழாத்திற்சுற்றுஞ்சுற்றத்தன்றொடுத்தவில்லன்
வெம்பிவெந்தழியாநின்றநெஞ்சினன்விழித்தகண்ணன்
தம்பிநின்றானைநோக்கித்தலைமகன்றன்மைநோக்கி
அம்பியின்றலைவன்கண்ணீரருவிசோர்குன்றினின்றான்.

(இ - ள்.) தும்பியின் குழாத்திற் சுற்றும் சுற்றத்தன்-யானைக்கூட்டம் போலுஞ் சூழும்சுற்றமுடையனும், தொடுத்தவில்லன்-அம்பினைத்தொடுத்தவில்லுடையனும், வெம்பி வெந்தழியா நின்றநெஞ்சினன்-வருந்திவெந்தழியுமனத்தானும், விழித்தகண்ணன் - படைகொள்ளாத கண்ணுடையானுமாகி, தம்பிநின்றானைநோக்கி - நின்ற இளையவனைப்பார்த்து, தலைமகன் றன்மைநோக்கி -இறைவன்றன்மையைப்பார்த்து, அம்பியின்றலைவன்-படகுகட்குத்தலைவனாகிய குகன், கண்ணீரருவி சோர்குன்றினின்றான் - கண்ணீராகிய அருவிபொழியு மலைபோல நின்றனன்.—எ-று.

புளிஞராற்றலை யானைகட்குவமைகூறினார். இதனாற் சீராமனோடு இளையவன் றன்மையைக்கண்டு குகன் வருந்தினமை யுணர்த்தப்பட்டது.

துறக்கமேமுதலவாயதுய்ப்பனயாவையேனும்
மறக்குமாநினையலம்மாவரம்பிலதோற்றுமாக்கள்
இறக்குமாறிதுவென்பான்போன்முன்னைநாளிறந்தான்பின்னாள்
பிறக்குமாறிதுவென்பான்போற்பிறந்தனன்பிறவாவெய்யோன்.

(இ-ள்.) துறக்கமே முதலவாய தூயனயாவையேனும்-சுவர்க்கமுதலிய தூயபொருள்கள் எவையேனும், மறக்குமாநினையல் - மறக்கும் வகைநினைக, வரம்பிலதோற்றுமாக்கள்-வரம்பில்லனவாகித் தோற்றுமக்கள், இறக்குமாறிதுவென்பான்போல் முன்னைநாளிறந்தான் - இறக்கும்வகை யிதுவென வுணர்த்துவான்போல முன்னைநாள் அத்தமனவரையை யடைந்தனன், பின்னாள் பிறக்குமாறிதுவென்பான்போல் பிறவாவெய்யோன் பிறந்தனன் - பிற்றை நாளிற்பிறக்கும்வகை யிதுவென வுணர்த்துவான்போலப் பிறவாவெய்யோன் உதயவரையில் தோன்றினன்.—எ-று.

நிரதிசய வின்பம்பயக்கும் வீடுபேறுகருதிநிற்பார் யாவையுங் கருதலாகாமையின் துறக்கமேமுதலவாய மறக்குமாநினைய லென்றும், நிரயத்துன்பத்தைநோக்கிய வழித்துறக்கவின்பஞ் சிறத்தலான் தூயனயாவையேனுமென்றும், உலகிற்பிறப்பிறப்புகளை ஞாயிற்றினுதயமுமத்தமனமும்போன்றென உவமமுகத்தாற் கூறலான் இறக்குமாறிது வென்பான்போல் முன்னைநாளிறந்தான் பின்னாள் பிறக்குமாறிது வென்பான்போற் பிறந்தனனென்றும், பிறர்போற் பிறவாமையின் பிறவாவெய்யோ னென்றுங் கூறினார். அம்மா என்றது வியப்பு. இதனான் ஞாயிற்றினுதயமுணர்த்தப்பட்டது.

செஞ்செவேசேற்றிற்றோன்றுந் தாமரைதேரிற்றோன்றும்
வெஞ்சுடர்ச்செல்வன்மேனிநோக்கினவிரிந்தவேறோர்
அஞ்சனநாயிறன்னவையனைநோக்கிச்செய்ய
வஞ்சிவாழ்வதனமென்னுந்தாமரைமலர்ந்ததன்றே.

(இ-ள்) செஞ்செவேசேற்றிற்றோன்றும் தாமரை-மிகச் செம்மையாகச்சேற்றிற்றோன்றும் தாமரைமலர், தேரிற்றோன்றும்-தேரின்மேல் தோன்றுகின்ற, வெஞ்சுடர்செல்வன்மேனி நோக்கினவிரிந்த - வெம்மையாகிய சுடரையுடைய செல்வனாகிய ஞாயிற்றின் மேனியைக்கண்டு விரிந்தன, வேறோர் அஞ்சனஞாயிறன்ன ஐயனை - பிறிதோர்கரிய ஞாயிறுபோன்ற இறைவனை, நோக்கிச்செய்ய வஞ்சிவாழ்வதனமென்னும்-கண்டுசெய்ய கொடிபோல்வாளாகிய சனகி வாழ்தலையுடைய முகமென்னும், தாமரைமலர்ந்தது-தாமரைமலர்விரிந்தது.—எ-று.

தாமரை ஞாயிற்றைக்கண்டு மலர்தல்போலும் சனகிமுகத்தாமரை இறைவனைக்கண்டு மலர்ந்தமை உவமைமுகத்தாற்கூறினார். அஞ்சனநாயிறென்றார் கருநாயிறு எனப்பிற்கூறுதனோக்கி வெஞ்சுடர்ச் செல்வனென்றது ஞாயிற்றினை, அவன் தேரில்வருவதியல் பாகலின் தேரிற்றோன்றும் வெஞ்சுடர்ச் செல்வனென்றதென்க. வஞ்சியென்றதுருவகம். யாவர்க்கும் வாழ்வைத்தரும் வதனமாகலின் வாழ்வதனமென்றார். தாமரை முகத்துக்குவமை. இதனாற் சனகி துயினீத்தமை யுணர்த்தப்பட்டது. (௫௧)

நாண்முதற்கமைந்தயாவுநயந்தனனியற்றிநாமத்
தோண்முதற்கமைந்தவில்லான்மறையவர்தொடரப்போனான்

ஆண்முதற்கமைந்தகேண்மையன்பனைநோக்கியைய
கோண்முதற்கமைந்தநாவாய்கொணருதிவிரைவினென்றான்.

(இ-ள்.) நாள்முதற் கமைந்தயாவு நயந்தனன் இயற்றி - விடியற்கால த்திற் செயப்படுவனவெல்லாம் விரும்பிச்செய்து, நாமந்தோண் முதற்கமை ந்தவில்லான் - அச்சம் பயக்கும் அந்தோளின்கணேந்திய வில்லையுடைய சிராமன், மறையவர்தொடரப்போனான் - வேதியர் தொடரச்சென்றனன், ஆண்முதற்கமைந்த கேண்மையன்பனைநோக்கி - ஆண்டொழிற்கமைந்த கே ண்மையுடையானாகிய அன்பனெனப்படுங் குகனைப்பார்த்து, ஐயகோண்மு தற்கமைந்தநாவாய்கொணருதி விரைவினென்றான்-ஐயனே! வலிமையமைந்த படகை விரைவிற் கொணரென்றனன்—எ-று.

நாண்முதற்கமைந்த யாவுமென்றது காலைக்கடனை. நாண்முதலென்றது -வைகறையை. கேண்மையன்பனென்றது குகனை. இதனாற் சிராமன் குகனை நோக்கி நாவாய்கொணரென்பதுணர்த்தப்பட்டது. (௫உ.)

(1) ஏவியமொழிகேளாவிழிபுனல்பொழிகண்ணான்
ஆவியுமுலைகின்றானடியிணைபிரிகில்லான்
காவியின்மலர்காயாக்கடன்மழையனையானைத்
தேவியொடடிதாழாச்சிந்தனையுரைசெய்வான்.

(இ-ள்.) ஏவியமொழிகேளா - தன்னையேவிய சொற்கேட்டு, இழிபு னல்பொழிகண்ணான் - நீரிழிகின்ற கண்ணையுடையானாகிய குகன், ஆவியுமு லைகின்றான்-ஆவியுஞ்சோர்நிலையனாய்,அடியிணைபிரிகில்லான்-அடித்துணைநீங் காது, காவியின் மலர்காயா கருமுகிலனையானை - நீலமலரும் காயாமலரும் கரியமேகமும் போல்வானாகிய சிராமனை, தேவியொடடிதாழா - சனகியோ டடிவணங்கி,சிந்தனையுரைசெய்வான்-தன்கருத்தினைச்சொல்வானாயினான்.—

ஏவியமொழிஎன்றது கோண்முதற் கமைந்த நாவாய் கொணருதி என் பதனை. இறைவன் வண்ணத்தைக் காவிமலர், காயாமலர், கருமுகிலிவற்றோ டுவமைகூறினார். (௫௩)

(2) பொய்ம்முறையிலரேமெம்புகலிடம்வனமேயால்
கொய்ம்முறையுறுதாராய்குறைவிலெம்வலியேமால்
செய்ம்முறைகுற்றேவல்செய்குதுமடியோமை
இம்முறையுறவென்னவினிதிருநெடிதெம்மூர்.

(இ - ள்.) கொய்ம்முறையுறுதாராய் - கொய்துமுறையாகத் தொடுத்த மாலையுடையாய், பொய்ம்முறையிலரேம்-பொய்மையான முறைமையில்லேம்- எம்புகலிடம்வனமே - எம்மிருக்கைகானேயாம், குறைவிலெம் - ஒருகுறை

† நாலடி. செ. ௩அ.

யுமில்லேம், வலியேம் - ஆற்றலுடையேம், செய்முறைகுற்றேவல் செய்குதும்-செயற்பாலனவாயமுறைமையிற் சிறிய ஏவல்செய்வேம், அடியேமை இம்முறையுறவென்ன எம்மூரினிதிருநெடிது - அடியோமை இம்முறையுறவென்னலாம் படிபல்காலம் எம்மூரிலிரு —எ-று.

கொய்முறை யுறுதாராயென்றது சீராமனை. யாம் வசிப்பது குறிஞ்சித்திணையாதலாற் புகலிடம்வனமே என்றும், யாம் மனந்தூயமுனிவர் வசிக்குமிடத் துறைபவராகலின் பொய்முறையிலரேம் என்றும், யாம்வேண்டியவனைத்துங் கிடைக்கப்பெறுதலின் குறைவிலெ மென்றும், ஆண்மையுடைமையின் வலியே மென்றும், நின்குற்றேவல்செய்வதே யெமக்குரிய கடனாகலின் செய்முறைகுற்றேவல் செய்குது மென்றும், ஆகலின் இவ்விடத்துறைதனன்றென்பான் இனிதிருநெடிதெம்மூரென்றுங்கூறினார். (ருச)

(3) தேனுள தினையுண்டாற்றேவருநுகர்தற்காம்
ஊனுள துணைநாயேமுயிருள விளையாடக்
கானுள புனலாடக்கங்கையுமுளதன்றே
நானுள தனையுநீயினிதிருநடவெம்பால்.

(இ - ள்.) தேனுள தினையுண்டு - தேனுந்தினைமாவுமுண்டு, தேவருநுகர்தற் காம் ஊனுள - தேவருமருந்தச்சமைந்த ஊனுண்டு, துணைநாயேமுயிருள - துணையாகநாயேம் உயிருண்டு, விளையாடகானுள - விளையாடச்காடுண்டு, புனலாட கங்கையுமுளதன்றே-நீராட்டயரக்கங்கையுமுள்ளதேயன்றே, நானுளதனையும் நீயினிதிருநடவெம்பால் - நானுள்ளவரையும் நீயினிமையாயிரு, எம்மிடத்துஎழுந்தருள்.—

வனவேடனாகலின் தேவருநுகற்காற்கா மூனுளவென்றான். நானுளதனையும் என்றது தானுயிருடனிருக்கும் வரையுமென்பதனை. (ருரு)

(4) தோலுள துகில்போலுஞ்சுவையுளதொடர்மஞ்சம்
போலுளபறண்வைகும்புரையுளகடிதோடும்
காலுளசிலைபூணுங்கையுளகலிவானின்
மேலுளபொருளேனும்விரைவொடுகொணர்வேமால்.

(இ - ள்.) துகில்போலுந்தோலுள-ஆடைபோலுந்தோலுள்ளன, சுவையுள தொடர் மஞ்சம்போலுளபறண்-சுவையுளதொடரப்பட்ட அணைபோலும் பறணுள்ளன, வைகும்புரையுள-வசிக்குமிடமுள்ளன, கடிதோடுங்காலுள-விரைந்தோடும்கால்உள்ளன, சிலைபூணுங்கையுள-வில்லேந்துகையுள்ளன, கலிவானின்மேலுள பொருளேனும் விரைவொடுகொணர்வேம் -ஒலியுடையவானினுள்ள பொருளையேனும் விரைவாய்க் கொண்டுவருவேம்.—எ-று.

ஓசை யொன்றே புலனாமையின் ஆகாயத்தைக்கலிவானென்றார்.(ருசு)

(5) ஐயிருபத்தோடைந்தாயிரருளராணை
செய்குநர்சிலைவேடர்தேவரின்வலியாரால்
உய்குதுமடியேமெங்குடிலிடையொருநாணீ
வைகுதியெனின்மேலோர்வாழ்விலைபிறிதென்றான்.

(இ-ள்.) ஐயிருபத்தோடைந்தாயிரருளர்-நூற்றையாயிரவருளர், ஆணை செய்குநர் - குற்றேவல்செய்பவர், சிலைவேடர் - வில்லேந்தியவேடர், தேவரின்வலியார் - அவர்தேவரினுமாற்றலையுடையார், எங்குடிலிடையொருநாள் நீ வைகுதியெனின் - எம்மிருக்கையிலொருநாள் தங்குவையேல், அடியேம் உய்குதும் - யாம்பிழைப்பேம், மேலோர் வாழ்விலைபிறிதென்றான்-அதனினு மேலாய தொருவாழ்வுவேறில்லையென்றனன்—எ-று.

ஐயிருபத்தோடைந்தாயிரருளரென்றார் 'ஐயைந்நூறாயிரமுருவமாயின' எனப்பிற்கூறுதனோக்கி, உய்குதுமென்பது தம்மீற்றுத்தன்மைப் பன்மை. எம்மிருக்கையினை படைந்தனை யாயிற்பிறிதொரு கவலைவேண்டா வென்பார் எங்குடிலிடை யொருநாணீவை குதியெனின் மேலோர்வாழ்விலை பிறிதென்றான் என்றுங்கூறினர். இவ்வைந்துசெய்யுளானும்குகன் சீராமனிடைத் தன்னிருக்கைவளங்கூறியிரு வென்றமையுணர்த்தப்பட்டது (௫அ)

அண்ணலுமதுகேளாவகநிறையருண்மிக்கான்
வெண்ணிறநகைசெய்தான்வீரநின்னுழையாமப்
புண்ணியநதியாடிப்புனிதனைவழிபாடுற்
றெண்ணியசிலநாளிற்குறுகுதுமினிதென்றான்.

(இ-ள்.) அண்ணலுமதுகேளா-இறைவனுமதனைக்கேட்டு, அகநிறையருள் மிக்கான் - மனத்திடை நிறைந்த அருள்மிகுந்து, வெண்ணிறநகை செய்தான் - வெண்ணிறநகையைவிளைத்து, வீர-வீரத்தன்மையுடையானே! நின்னுழையாம் அப்புண்ணியநதியாடி-நின்னிடையாமப் புண்ணியப்புனற் கங்கையாடி, புனிதனைவழிபாடுற்று- பெரியானைவழிபட்டு, எண்ணியசிலநாளில் -எண்ணியசிலநாள்களில், இனிது குறுகுது மென்றான்-இனிதடைவே மென்றனன்—எ-று.

அண்ணலென்றது சீராமனை. எண்ணிய சிலநாளென்றது பத்துநாலு பகலலவோ என்று மேற்கூறியதை வற்புறுத்தற்கு. இதனாற் சீராமன் சில நாளில் மீள்வேனென்றமையுணர்த்தப்பட்டது. (௫௯)

(1) சிந்தனையுணர்கிற்பான்சென்றனன்விரைவோடுந்
தந்தனனெடுநாவாய்தாமரைநயனத்தான்
அந்தணர்தமையெல்லாமருளுதிர்விடையென்னா
இந்துவினுதலாளோடிளவலொடினிதேறா.

(இ - ள்) சிந்தனைபுணர்கிற்பான் - அவன்கருத்தறிந்து, விரைவோடும் சென்றனன் - விரைந்துசென்று, நெடுநாவாய்தந்தனன் - நீண்டபடகுகொடுவந்தனனென, தாமரைநயனத்தான் - தாமரைகண்ணனாகிய சீராமன், அந்தணர்தமையெல்லாம் விடையருளுதியென்று - அந்தணரையெல்லாம்நோக்கி விடைதம்மினென்று, இந்துவினுதலாளோடிளவலொடினிதேறு -பிறையும் வில்லுமொத்த நுதலாளொடும் தம்பியொடுமினிதேறி.—

புண்டரிகாட்ச னென்னும் பெயர்பற்றித்தாமரைநயனத்தானென்றார். இந்து வினுதலா ளென்றது சனகியை.

(2) விடுநதிகடிதென்றான்மெய்யுயிரனையானும்
முடுகினனெடுநாவாய்முரிதிரைநெடுநீர்வாய்க்
கடிதினின்மடவன்னக்கதியதுசெலநின்றார்
இடருறமறையோருமெரியுறுமெழுகானார்.

(இ - ள்.) விடுநதிகடிதென்றான் - ஆற்றில்விரைந்துவிடு என்றனன், மெய்யுயிரனையானும் - மெய்மையாகியவுயிர்போல்வானாகியகுகனும், முரிதிரை நெடுநீர்வாய் - முரிகின்றஅலையையுடைய மிக்கநீரிடை, நெடுநாவாய் கடிதினின்முடுகினன் - பெரியபடகுவிரைந்து செலுத்தினன், அதுமடவன்னக்கதிசெல - அதுஇளமையாகிய அன்னத்தின்வேகத்தொடுஞ்செல்ல, நின்றார் - நின்றுகண்டு மறையோரும் இடருற எரியுறுமெழுகானார் - இடரெய்த அந்தணருத் தீயிடைமெழுகொத்தனர்—எ-று.

இறைவன்றன்னைப் பிரிதலாற் றுமையின்மறையோரை எரியுறுமெழுகானா ரென்றும், அப்படகுசென்ற கதியையுணர்த்த மடவன்னக்கதியது செல என்றுங்கூறினார். இவ்விரண்டுசெய்யுளானும் கங்கைகடப்ப நாவாயேறினமை யுணர்த்தப்பட்டது. (சுo)

பாலுடைமொழியாளும்பகலவனனையானும்
சேலுடைநெடுநன்னீர்சிந்தினர்விளையாடத்
தோலுடைநிமிர்கோலிற்றுழவிடவெழுநாவாய்
காலுடைநெடுநெண்டிற்சென்றதுகடிதம்மா.

(இ - ள்.) பாலுடைமொழியாளும் - பாலன்னசொல்லாளும், பகலவனனையானும் - ஞாயிறொப்பானாகிய சீராமனும், சேலுடை நெடுநல் நீர்சிந்தினர் விளையாட - சேலுடையநீண்ட நன்னீரைச்சிதறி விளையாடாநிற்க, தோலுடைநிமிர்கோலின் - தோலையுடையநீண்டகோலால், துழவிடஎழுநாவாய் - துழாவச்செல்லும்படகு, காலுடைநெடுநெண்டிற்கடிது சென்றது - காலையுடையநீண்ட நண்டைப்போலும் விரைந்துபோயிற்று—எ-று.

பாலுடைமொழியாளுமென்பதற்குப் பாலினையொத்த சொல்லாளுமென்றதன்றிப்பாலுஞ் சுவையிற்றோல்வியெய்துஞ் சொல்லாளெனினுமமையும்.

துழவிடவொருசொல். படகுசென்றமையை ஞண்டிற்குவமைகூறினர். இதனன் நாவாய்சென்றமை யுணர்த்தப்பட்டது. (சுக)

சாந்தணிபுளினத்தின்றடமுலையுயர்கங்கை
காந்தினமணிமின்னக்கடிகமழ்கமலத்திற்
சேந்தொளிவிரியுந்தெண்டிரையெனுநிமிர்கையால்
ஏந்தினளொருதானேயேற்றினளினிதப்பால்.

(இ - ள்.) சாந்தணிபுளினத்தின் தடமுலையுயர்கங்கை - சந்தனமணிந்த மணற்குன்றாகிய தடமுலையையுடைய ஓங்கியகங்கை, காந்தினமணிமின்ன- ஒளிவீசுமணிகள் பிரகாசிக்க, கடிகமழ்கமலத்தின் - மணங்கமழ்கின்ற தாமரையில், சேந்தொளிவிரியும்-சிவந்தொளிவிரிகின்ற, தெண்டிரையெனுநிமிர்கையால் - தெள்ளியஅலையெனப்படும் ஓங்கியகையால், ஒருதானேயேந்தினள், ஒருதானே யேந்தி நின்று, இனிதேற்றினள் - இனிதாகஏறச்செய்தனள், அப்பால் - அப்புறம்—எ-று.

திரையைக்கைக்கும் மணற்குன்றைத்தனத்திற்குமுவமைகூறினர். சனகிதாயாராகலின் திரையாகியகையாற் கங்கையேந்தினளென்றமை தற்குறிப்பேற்றம். இதனன் அவர் கங்கையைக்கடந்தமை யுணர்த்தப்பட்டது. (சுஉ)

அத்திசையுற்றையனன்பனைமுகநோக்கிச்
சித்திரகூடத்திற்சென்னெறிபகரென்னப்
பத்தியினுயிரீயும்பரிவினனடிதாழா
உத்தமவடிநாயேனேதுவதுளதென்றான்.

(இ - ள்.) அத்திசையுற்று ஐயன் - அத்திசையையடைந்திறைவன், அன்பனைமுகநோக்கி-அன்புடைய குகனைமுகத்தைநோக்கி, சித்திரகூடத்திற் சென்னெறிபகரென்ன-சித்திரகூடத்திற்குப்போகும்வழிகூறென்றுசொல்ல, பத்தியினுயிரீயும் பரிவினன் - பத்திக்குயிரை வழங்கும்பரிவுடையான், அடிதாழா - அடிவணங்கி, உத்தமஅடிநாயேனேதுவ துளதென்றான் - சிறந்தோனேயான் கூறுவதுண்டென்றனன்—எ-று.

அத்திசையுற்றென்றது அக்கங்கைக்கரை யடைந்தமையை. பத்தியின்மிக்கவனுகலின் பத்தியினுயிரீயும் பரிவினனென்ரூர். பரிவினனென்றது குகனை. இதனற்சிராமன் சித்திரகூடத்திற்குவழியாதென்றதுணர்த்தப்பட்டது.

(1) நெறியிடுநெறிவல்லேனேடினென்வழுவாமல்
நறியனகனிகாயுநறவிவைதரவல்லேன்
உறைவிடமமைவிப்பேனொருநொடிவரையும்மைப்
பிறிகிலெனுடனேகப்பெறுகுவெனெனிறையேன்.

(இ - ள்.) நெறியிடு நெறிவல்லேன் - வழியிடையிடும் வழியில்வல்லமையுடையேன், நேடினென்-தேடினேன், வழுவாமல் நறியனகனிகாயுநறவிவைதரவல்லேன் - தவறாது நறியகாயுங்கனியுந்தேனுமிவை கொடுக்கவல்லேன், உறைவிடமமைவிப்பேன் - இருக்கையையமைவிப்பேன், உடனேகப்பெறுகு வெனெனின்-எம்மோடுகூடவரப்பெறுவெனேல், ஒருநொடிவரையுமை பிறிகிலெனுயேன்-யானொருகணப்போது மும்மைநீங்கேன்.—

நெறியிடுநெறிஎன்றது சிறுவழியை. என்னுடன்வரக்கருதுவாயல்லையென்பான் உடனேகப்பெறுகு வெனெனினென்றான். நொடியென்றது நொடிக்குமளவினை; இதனைக் ‡ "கண்ணிமை நொடியெனவவ்வேமாத்திரை-நுண்ணிதினுணர்ந்தோர் கண்டவாறே" என்றதனுனுமுணர்க. (சுச)

(2) தீயனவகையாவுந் திசைதிசைசெலநூறித்
தூயனவுறைகானந் துருவினென்வரவல்லேன்
மேயினபொருணாடித் தருகுவென்வினைமுற்றும்
ஏயினசெயவல்லேனிருளினுநெறிசெல்வேன்.

(இ - ள்.) தீயனவகையாவும் திசைதிசை செலநூறி - தீயவகையினைத்தும்பல்திசைசெல்லக்கெடுத்து, தூயனவுறைகானந் துருவினன் வரவல்லேன் - தூயபொருள்களுறையுங்காடு தேடவல்லேன், மேயினபொருணாடித்தருகுவென் - விரும்பியபொருளைத் தேடித்தருவேன், ஏயினவினைமுற்றும் செயவல்லேன் - ஏவியகுற்றேவல் முழுதுஞ்செய்ய வாற்றலுடையேன், இருளினுநெறிசெல்வேன் - இருளினும் வழியறிந்து செல்லவல்லேன்.—

அடுக்குப்பன்மை; தீயனஎன்றது பாவச்செயலை. துருவினன்வினையெச்சமுற்று. தான்குறிஞ்சிநிலத்தவனுதலின் வழிச்சேறலருமையன்றென்பார் 'இருளினுநெறிவல்வேன்' என்றான். (சுரு)

(3) கல்லுவென்மலைமேலுங்கவலையின்முதல்யாவுஞ்
செல்லுவெனெறிதூரஞ்செறிபுனறரவல்லேன்
வில்லினமுளெனென்றும்வெருவலெனிருபோதும்
மல்லினுமுயர்தோளாய்மலரடிபிரியாதேன்.

(இ - ள்.) மலைமேலுங்கல்லுவென் கவலையின்முதல்யாவும் - மலையினுங்கவலையின் வேர்முதலனயாவையுங்கல்லுவேன், நெறிதூரஞ்செல்லுவென்-மிக்கதூரஞ்செல்வேன், செறிபுனறரவல்லேன் - அவ்விடையுளதாய நீர்தரவல்லேன், வில்லினமுளென் - விற்றொகுதியுடையேன், ஒன்றும்வெருவலென்-சிறிதுமஞ்சேன், மல்லினுமுயர்தோளாய்-மற்போர்க்கமைந்ததோளையுடையானே! இருபோதும் மலரடிபிரியாதேன் - இருபொழுது மலர்த்தாளைப்பிரிகலாதேன்.—

‡ தொல், எழு. சு-ப.

கவலை - மூலத்தின்விசேடம். வில்லினமுளனென்ருன் விற்சேனை மிகுதியுமுடையே னென்பதுபற்றி. இருபோதுமென்றது பகலிரவுகளை. ()

(4) திருவுளமெனின்மற்றென்சேனையுமுடனேகொண்
டொருவலெனிருபோதுமுறைகுவெனுளராஞர்
மருவலரெனின்முன்னேமாள்குவென்வசையில்லேன்
பொருவருமணிமார்பாபோதுவெனுடனென்ருன்.

(இ - ள்.) திருவுளமெனின் - இதுநின்னுடைய கருத்தாயின், என்சேனையுமுடன் கொண்டொருவலெனிருபோது முறைகுவென் - என்படையையுங்கூடக்கொண்டுன்னுடனிருபோது நீங்காதுவசிப்பேன், உளராஞர்மருவலரெனின் முன்னேமாள்குவென் - வந்தடைந்தார்பகைவரே யாயினினக்கு முன்னிறப்பேன், வசையில்லேன் - நிந்தனையில்லாதேன், பொருவருமணிமார்பா-ஒப்பில்லாதமணியை யணிந்த மார்பினையுடையானே, உடன்போதுவென் என்ருன்-கூடவருவேனென்றனன்—எ-று.

நினக்குமருவலருளரல்லர், அவ்வாறுளராயினென்பார் உளராஞர்மருவலரெனி னென்றதென்க. பொருவருமணியென்றது கவுத்துவமணியை. இந்நான்கு செய்யுளானும் குகன்கூறிய கட்டுரை யுணர்த்தப்பட்டது. ()

(1) அன்னவனுரைகேளாவமலனுமுரைநேர்வான்
என்னுயிரனையாய்நீயிளவலுனிளையானிந்
நன்னுதலவணின்கேணளிர்கடனிலமெல்லாம்
உன்னுடையதுநானுன்ருெழிலுரிமையினுள்ளேன்.

(இ - ள்.) அன்னவன் உரைகேளா - அவன்சொற்கேட்டு, அமலனுமுரைநேர்வான் - இறைவனுமறுமொழி கூறுவான், என்னுயிரனையாய்நீ - என்னுயிர்போல்வாய்நீ, இளவலுனிளையான்-தம்பிநினக்குப் பிற்ருேன்றியோன், இந்நல்நுதலவள் நின்கேள் -இந்நன்மையாகிய நெற்றியையுடைய சனகிநின் உறவாம், நளிர்கடல் நிலமெல்லாம் உன்னுடையது - குளிர்ந்தகடலாற் சூழப்பட்ட நிலவுலகமெல்லா நின்னுடையது, நானுன்ருெழிலுரிமையி னுள்ளேன்-யான் உன்தொழிற்குரிமை பூண்டிருக்கின்றேன்.—

நண்புடையாஞகலின் உயிரனையாயென்ருர். குகனைநோக்கி இலக்குவனைஅவற்கிளவலாகவும், சனகியைக்கேளாகவும், கடல்சூழுலகினை அவற்குரிமையாகவும், தான் உன்தொழிலுரிமையினுடையேஞகவுங் கூறிஞர். (சுஅ)

(2) துன்புளதெனினன்ருேசுகமுளததுவன்றிப்
பின்புளதிடைமன்னும்பிரிவுளதெனவுன்னேல்
முன்புளமொருநால்வேமுடிவுளதெனவுன்ஞ
அன்புளவினிநாமோரைவர்களுளரானேம்.

(இ - ள்.) துன்புளதெனினன்றேசுகமுளது - துன்பமுண்டாயினன்றேசுகமுண்டு, அதுவன்றி பின்புளதிடைமன்னும் பிரிவுளது எனவுன்னேல் - அதுவேயுமல்லாது பின்னுள்ளதிடையே நிலைபெற்றபிரிவுள்ள தெனக்கருதாதொழி, முன்புளமொருநால்வேம்-முற்றேன்றினேம் ஒருநால்வரேம், முடிவுளதெனவுன்ளு-முடிவுண்டென்றெண்ணுத, அன்புளவினிநாமோரைவர்களுளரானேம்-அன்புடைத்தாகிய இனிநாமோரை வருள்ளாரானேம்.

துன்பமெய்தாவழியின்பமெய்தாமையின் 'துன்புளதெனினன்றேசுகமுளது' என்றும், பின்னதுஇடையே நிலைபெறும்பிரிவெனக்கருதுதலென்பார் 'இடைமன்னும் பிரிவுளதெனவுன்னே' லென்றுந், தயரதன்மக்கள்நால்வராகலின் 'முன்புளமொருநால்வே' மென்றும், அன்புடைய நின்னேடுங் 'கூட்டிஅன்புளவினி நாமோரைவர்களுளரானே'மென்றுங்கூறினர்.

(3) படருறவுளனும்பிகானுறைபகலெல்லாம்
இடருறுபகையாபோயானெனவுரியாய்நீ
சுடருறுவடிவேலாய்சொன்முறைகடவேல்யான்
வடதிசைவருமந்நாணின்னுழைவருகின்றேன்.

(இ - ள்.) கானுறைபகலெல்லாம் - காட்டில்வசிக்குநாளெல்லாம், உம்பிபடருறவுளன் - நின்தம்பி பின்றொடர்ந்து வரவுள்ளான், இடருறுபகையா- ஆகலின்யான் துன்பமடையும் வகையாவையுள, சுடருறுவடிவேலாய் - சுடரெறிக்கும் வடித்தவேலையுடையானே, சொல்முறை கடவேல்-யான் சொல்லிய முறையைக் கடவாதை, யான்வடதிசை வருமந்நாள்-யான் வடதிசை மருங்கெய்துமஞ்ஞான்று, நின்னுழைவருகின்றேன் - நின்னிடைவருவேன், யானென உரியாய் நீபோ - எனக்கென்று முரிமையுடையாய் நீ போதி.—

என்சொற்கடத்தனினக் கறனன்றென்பார் சொன்முறைகடவே லென்றான். யாவென்றதுபலவின் படர்க்கைக் குறிப்புமுற்று. என்போற்காத்தற்குளையென்பார் யானெனவுரியாய் நீ என்றார். வடதிசைவருமந்நாளென்றது பதினான்காண்டுங் கழிந்துமீண்டுவருகையை. (எ0)

(4) அங்குளகிளைகாவற்கமைதியினுளனும்பி
இங்குளகிளைகாவற்கியாருளருரைசெய்யாய்
உன்கிளையெனதன்றேவுறுதுயருறலாமோ
என்கிளையிதுகாவென்னேவலினினிதென்றான்.

(இ - ள்) உம்பி அங்குளகிளைகாவற் கமைதியினுளன்- உன்தம்பி அங்குள்ளசுற்றத்தின்காவற் கமைந்துள்ளான், இங்குளகிளைகாவற்கியாருளருரை செய்யாய்-இங்குள்ளசுற்றத்தின் காவற்காரேயுள்ளார் சொல்லாய், உன்கிளையெனதன்றே - உன்சுற்றமென்னுடையதன்றே, உறுதுயருறலாமோ - மிக்கதுன்பமடையலாமோ, என்கிளையிது - இஃதென்சுற்றம், (ஆகலின்) என்னவலின் இனிதுகாவென்றான்-என்னேவலின்னினிதுகாவென்றனன்—எ-று.

உம்பி என்றது பரதனை. அயோத்திகாவற்குப் பரதன்சமைந்தமையான் அங்குளகிளைகாவற்கமைதியினுளன் என்றும், இங்குநீகாக்கவேண்டுமென்பார் இங்குளகிளைகாவற்கியா ருளருரை செய்யாயென்றும், எம்பியெனக்குகனைக் கோடலாலுவன் சுற்றந் தன்சுற்றமாகலின் உன்கிளையெனதன்றேவென்றும், அது அரசின்றிவருந்துமாதலான் அதனைக் காக்கவென்பார் உறுதுயருறலாமோ என்கிளையிது என்னேவலினிதுகாவென்றுங்கூறினார். இந்நான்கு செய்யுளானும் இறைவன் குகனுக்குத் தன்கருத்துணர்ந்தமையுணர்த்தப்பட்டது.　　　　(எக)

பணிமொழிகடவாதான்பருவரலிகவாதான்
பிணியுடையவனென்னும்பிரிவினன்விடைகொண்டான்
அணியிழைமயிலோடுமையனுமிளையோனும்
திணிமரநிறைகானிற்சேணுறநெறிசென்றார்.

(இ-ள்.) பணிமொழிகடவாதான் - பணிமொழியைக் கடவாதவன், பருவரலிகவாதான்-துன்பமொழியாதவன்,பிணியுடையவனென்னும்பிரிவினன்-நோயுடையா னென்னும் பிரிவுடையவன், விடைகொண்டான் - விடைபெற்றுக்கொண்டனன், அணியிழைமயிலோடும் - அணிதற்குரிய கலனணிந்தமயில் போல்வாளோடும், ஐயனுமிளையோனும், இறைவனும் தம்பியும், திணிமரநிறைகானிற்சேணுறநெறிசென்றார்-திணிந்தமரங்களடர்ந்த காட்டிற்சேய்மையுறவழி படர்ந்தேகினர்—எ-று.

பணிமொழிஎன்றதுபணிவைப் புலப்படுத்தியமொழியை. பணிமொழிகடவாதான், பருவரலிகவாதான் பிணியுடையவனென்பன ஒருபொருள்மேல் வந்தசொற்கள். அணியிழைமயில் என்றதுசாயலையுநடையையுநோக்கி. திணிமர நிறைகானிற் சேணுறநெறிசென்றார் எனத்தோற்றுவாய் செய்தமைகாண்க. இதனாற்குகன் விடைகொண்டமையு மிறைவன் கான் சென்றமையுமுணர்த்தப்பட்டன.　　　　(எஉ)

கங்கைப்படலம் முற்றிற்று.

வனம்புகுபடலம்

மேற்றேற்றுவாய் செய்தெடுத்துக்கொண்டமையானே இதனை வனம் புகு படலமெனக்கூறினர். படலமுறைமையு மிதனுன் விளங்கும். வனமென்றது கங்கைக்கரையையடுத்த காட்டினை.

(1) பூரியர்புணர்மாதர்பொதுமனமெனமன்னும்
ஈரமுமுளதில்லென்றறிவருமிளவேனில்
ஆரியன்வரலோடுமமுதளவியசீதக்
காருறுகுறிமானக்காட்டியதவணெங்கும்.

(இ - ள்.) பூரியர் புணர்மாதர் பொதுமனமென-அறிவில்லாதார் புணரும் மடவார் பொதுமனம்போல, மன்னும் ஈரமுமுளதில்லென் றறிவருமிளவேனில்-நிலைபெற்ற அன்புமுளதாவதென்று மிலதாவதென்று மறிவதற்கரிய இளவேனிற்பருவம், ஆரியன்வரலோடும்-இறைவன்வருதலும், அமுதளவிய-அமுதமளாவப்பட்ட, சீதக்காருறுகுறிமான-குளிர்ச்சியான மேகமடைந்தகுறி போல, அவணெங்குங்காட்டியது - அவ்விடத்தெம்மருங்குங்காட்டியது.—

இளவேனிலென்றது பருவமாறனுளொன்று. விலைமகளிர் மனமன்பு படாதொழுகுவதாகலின் அதனை ஈரமுமுளதில்றென்றறிவரு மென்றுறிள வேனிற்குவமைகூறினர். பூரியர்புணர்மாதரென்றது பரத்தையரை. பொதுமனமென்றூர் பலரையும் விழைவதுபற்றி. ஆரியனென்றது சீராமனை. (க)

(2) வெயிலிளநிலவேபோல்விரிகதிரிடைவீசப்
பயின்மரநிழலீனப்பனிபுரைதுளிமேகப்
புயறரவிளமென்கால்பூவளவியதெய்த
மயிலினநடமாடும்வழியினியனபோனார்.

(இ - ள்.) வெயிலிளநிலவேபோல் - ஞாயிறு இளநிலவே யென்ன, விரிகதிரிடைவீச - விரிந்தகதிரையிடையே வீசாநிற்ப, பயின்மரநிழலீன-வயிரம்பற்றிய மரங்கணிழலைத்தர, மேகப்புயல்பனிபுரைதுளிதர - மேகமானது பனியையொத்த நீர்த்துளிசிந்த, இளமென்கால்பூவளவியதெய்த-மிக்க இளந்தென்றலை அளவிறந்தமலரடைய, மயிலினநடமாடும் வழியினியனபோனார் - மயிற்கூட்ட நடஞ்செய்யும் வழியினியன கடந்துபோயினர்—எ-று.

மேகப்புயல் ஒருபொருட்பன்மொழி, இளமென்கா லென்றதுமது. துளிதரவொருசொல், வெயிலென்றதாகுபெயர். வெயிலிளநிலாப்போலெரிக்கவும், மரநிழல்செய்யவும், புயல்நீர்த்துளிசிதறவும், இளங்காற்றுமலர்வாடை வீசவும்மயிலினநடமாடும் வழிகடந்து சென்றனர் என்பது. இவ்விரண்டு செய்யுளானும்இளவேனிற்பருவத்திறைவன்சென்றமையுணர்த்தப்பட்டது.

மன்றலின்மலிகோதைமயிலியன்மடமானே
இன்றுயில்வதிகோபத்தினம்விரிவனவெங்கும்
கொன்றைகள்சொரிபோதின்குப்பைகொள்குலமாலை
பொன்றிணிமணிமானப்பொலிவனபலகாணாய்.

(இ - ள்.) மன்றலின் மலிகோதை - மணங்கமழுங் கூந்தலையும், மயிலியல்மடமானே-மயிற்சாயலையுமுடைய இளமான்போல்வாளே! இன்துயில் வதிகோபத்தினம்விரிவன-இனிய துயில்செய்யும் இந்திரகோபத்தின்கூட்டம் விரிவன, எங்கும் கொன்றைகள்சொரிபோதின் குப்பைகொள்குலமாலை-எம் மருங்கும் கொன்றைகள்சொரிகின்ற மலர்க்குப்பைகொண்ட சிறந்தமாலைகள், பொன்றிணிமணிமான-பொன்றிணிந்த மணிமாலைகளைப்போல, பொலிவனபலகாணாய்-பலதோன்றுவனபாராய்—எ-று.

கோபம்-முதற்குறைந்துநின்றது. இந்திரகோபத்தினம் விரிவனகொன்றைமாலைகள் போலவும், பொன்னானு மணியானுமமைந்த மாலைபோலவும் விளங்குவனகாணாய் என்றார். இயற்கைமணத்தாற் பூங்கோதையையும், சாயலான்மயிலையும், கண்ணான் மானையுமுவமை கூறினார். உம்மைமுற்று. (௩)

பாணிளஞிமிறுகப்படுமழைபணையாக
நாணினதொகுபீலிகோலினநடமாடல்
பூணியநின்சாயற்பொலிவதுபலகண்ணில்
காணியவெனலாகுங்களிமயிலவைகாணாய்.

(இ - ள்.) இளஞிமிறுபாணாக-இளவண்டுபாணாக, படுமழைபணையாக-சொரிமழை பணையென்னும் வாச்சியமாக, நாணினதொகுபீலி - நாணினவாகித் தொகுத்ததழை, கோலினநடமாடல்-விரித்து நடஞ்செய்தல், பூணியநின்சாயல்பொலிவது - மேற்கொண்டு நின்னுடைய சாயலையெய்தி விளங்குவது, பலகண்ணிற்காணியவெனலாகுங் களிமயிலவைகாணாய் - பலகண்ணாற்கண்டனவென்னலாகுங் களிப்பினையுடைய மயிற் கூட்டம்பாராய்.—

ஞிமிற்றைப்பாணாகவும், மழையைப்பணையாகவும், பீலிகோலிநடித்தல் பூணுநின்சாயலை யடைந்துதோன்றல்பலகண்ணிற்காணிய வெனலாகுங்களி மயிலகவுதலாகவுங் கூறினார். தோகைவிரித்தமைபல கண்ணாற்காண்டற்குவமை. பண் என்பது நீண்டதென்பாரும், பாணென்றொரு மொழியுளதென் பாருமாக விருதிறத்தர். (௪)

சேந்தொளிவிரிசெவ்வாய்ப்பைங்கிளிசெங்கோலக்
காந்தளின்மலரேறிக்கோதுவகவினுரும்
மாந்தளிர்நறுமேனிமங்கைநின்மடமுன்கை
ஏந்தினவெனலாகுமியல்பினவிவைகாணாய்.

(இ - ள்.) கவினுறும் மாந்தளிர் நறுமேனிமங்கை - அழகார்ந்த மாந்தளிரைப்போலு நல்லவடிவினையுடைய பெண்ணே, சேந்தொளிவிரி செவ்வாய்ப்பைங்கிளி - சிவந்தொளிவிரிந்த செய்ய வாயையுடைய பசுங்கிளி, செங்கோலக்காந்தளின்மலரேறிக்கோதுவ - செய்யகோலத்தையுடைய காந்தண்மலர் மேலேறிக்கோதுவன, நின்மடமுன்கையேந்தினவெனலாகும்-நின்சிறிய முன்னகையில் ஏந்தியனவென்னலாம், இயல்பின இவை காணாய்-இயல்பினையுடையன இவைபாராய்—எ-று.

மாந்தளிர் மேனிக்குவமை. பைங்கிளி காந்தளின்மலரைக் கோதுவநின் முன்கையேந்தின வெனலாகுமென்றியைக்க. (ரு)

நெய்ஞ்ஞிறைநெடுவேலினிறமுறுதிறமுற்றிக்
கைஞ்ஞிறைநிமிர்கண்ணாய்கருதினவினமென்றே
மெய்ஞ்ஞிறைவிரிசாயல்கண்டுநின்விழிகண்டும்
மஞ்ஞையுமடமானும்வருவனபலகாணாய்.

(இ - ள்.) நெய்ஞிறைநெடுவேலின் நிறமுறுதிறமுற்றிகை ஞிறைநிமிர் கண்ணாய்-நெய்தடவியநீண்டவேல்போலும்நிறமடைந்து வன்மைமுற்றுப்பெற்றுக்குடங்கையினடங்கிய ஓங்கியகண்ணையுடையாளே ,மெய்ஞிறை விரிசாயல் கண்டு மஞ்ஞையும்-உடம்பினிறைந்து விரிந்தசாயலைக் கண்டுமயிலும், நின்விழிகண்டுமானும் - நின்கண்ணைக்கண்டுமானும், இனமென்றேகருதினவருவனபலகாணாய் - முறையே இனமென்றெண்ணி வருவனபலவற்றையும்பாராய்—எ-று.

சாயல்கண்டுமயிலும், விழிகண்டுமானும் இனமென்றே கருதிவருவன எனமுறைநிரனிறையாகக்கொண்டமைக்க. குடங்கையிலடங்குங் கண்ணுதலாற் கைஞ்ஞிறைநிமிர்கண்ணாயென்றதன்றி வேல்போலு நீண்டமையான் நெஞ்ஞிறை வேலென்றும், ஒளியொடு விளங்கலின் நிறமுறுதிறமுற்றியென்றுங் கூறினர். ஞிறையென்பனபோலி. மஞ்ஞையென்பது மது. கருதின வினையெச்சமுற்று. (சு)

பூவலர்குரவோடும்புடைதவழ்பிடவீனும்
மாவலர்சொரிசூழற்றுயிலெழுமயிலொன்றின்
தூவியின்மணநாறத்துணைபிரிபெடைதானச்
சேவலொடுறவூடித்திரிவதனியல்காணாய்.

(இ - ள்.) பூவலர் குரவோடும் - மலர்கள் அலரப்பட்ட குராவோடும், புடைதவழ் பிடவீனும் - மருங்கேதவழ்கின்ற பிடாதருகின்ற, மாவலர்சொரிசூழல்-பெரிதாகியமலர் சொரிகின்ற சூழலின்கண், துயில் எழுமயிலொன்றின் - துயினீங்கிய மயிலொன்றிடை, தூவியின்மணநாற - கலபத்தின்மணம்வீச, துணைபிரிபெடைதான் - துணைநீங்கிய பெடைதானும், அச்சேவலொ

றெவூடித்திரிவது-அச்சேவலுடன்சாலப் பிணங்கித்திரிவதாகும், அதனியல் காணுப் -அதனியல்பைப்பாராய்.—

குரவும், பிடவு மீனுமலர்மணத்தான் மயிலின்கலபம் மணநாறுதலான் அது வேற்றினமெனக்கருதி மயிற்பேடையூடுமென்றியைக்க. இது மயக்கவணி. சேவல் என்றது ஆண்மயிலே. (எ)

(6) அருந்ததியனையாளேயமிர்தினுமினியாளே
செருந்தியின்மலர்தாங்குஞ்செறியிதழ்வனசோகம்
பொருந்தினகளிவண்டிற்பொதிவனபொன்னூதும்
இருந்தையினெழுதீயொத்தெழுவனவியல்காணுய்.

(இ-ள்.) அருந்ததியனையாளே -அருந்ததியை யொப்பாளே! அமிர்தினுமினியாளே - மருந்தினுமினியாளே! செருந்தியின் மலர்தாங்குஞ் செறியிதழ்வனசோகம்-செருந்திமலரைத்தாங்கிய செறிந்த இதழினையுடைய அழகிய அசோகம், பொருந்தினகளிவண்டிற்பொதிவன - பொருந்திய களிப்பினையுடைய வண்டிற்பொதிவன, பொன்னூதும் இருந்தையினெழுதீ யொத்தெழுவன இயல்காணுய் - பொன்னையூதுகின்ற கரியினெழுகின்ற நெருப்பை யொத்து விளங்குவனவாகிய இயல்பைப்பாராய்.—

கற்பிற்சிறந்தமையான் அருந்ததியனையாளேயென்றதன்றி, மொழியான் அமிர்தினு மினியாளே என்றதென்க. செருந்தி பொன்னுக்கும், அசோகு தீக்கும், வண்டுகரிக்கு முவமைகூறினர். இருந்தை என்றது கரியை. அசோகமென்றது குறைந்து நின்றது. (அ)

(7) ஏந்திளமுலையாளேயெழுதருமெழிலாளே
காந்தளின்முகைகண்ணிற்கண்டொருகளிமஞ்ஞை
பாந்தளிதெனவுன்னிக்கவ்வியபடிபாராய்
தீந்தளவுகள்செய்யுஞ்சிறுகுறுநகைகாணுய்.

(இ-ள்.) ஏந்திளமுலையாளே-ஏந்துகின்ற இளமுலையையுடையாளே! எழுதருமெழிலாளே - எழுதவரியஅழகினையுடையாளே! ஒருகளிமஞ்ஞை-ஒருகளிப்பினையுடையமயில், காந்தளின்முகைகண்ணிற்கண்டு-காந்தளினரும்பைப்பார்த்து, பாந்தளிது எனவுன்னி கவ்வியபடிபாராய்-பாம்பிதென்றெண்ணிக்கவ்வியதன்மையைப்பாராய், தீந்தளவுகள்செய்யும்சிறுகுறுநகைகாணுய்-இனிமையாகிய முல்லைகள்செய்யும் சிறிய குறுநகையைப்பாராய்.—

இளமையான் ஏந்திளமுலையாளே யென்றும், அழகானெழுதருமெழிலாளே என்றும், நகையான்தீந்தளவுகள்செய்யுஞ் சிறுகுறு நகைகாணு யென்றும் கூறினர். மஞ்ஞைகாந்தளி னரும்பினைக்கண்டு பாந்தளிது வெனக்கவ்வுதலென்றமையான் ஐயநிலையுவமம். தளவு, முல்லை. செய்தல் உவமவுருபு. (கூ)

(8) குன்றுறைவயமாவின் குருளையுமிருள்சிந்திப்
பின்றினதெனலாகும்பிடிதருசிறுமாவும்
அன்றலபிறிவொல்லாவண்டர்தமனையாவின்
கன்றொடுவிளையாடுங்களியனபலகாணாய்.

(இ - ள்.) குன்றுறைவயமாவின் குருளையும் - மலையின்கண் வசிக்கும் சிங்கக்குட்டியும், இருள்சிந்திப்பின்றினதெனலாகும் பிடிதருசிறுமாவும்-இருளைச்சிந்திப் பின்றினதென்னலாகும் பிடிபயந்த சிறியகன்றும், அன்றல பிறிவொல்லா - பகைமையிலாதவேறுபடுதலில்லாத, அண்டர்தம்மனை ஆவின் கன்றொடு விளையாடும் களியனபலகாணாய்-ஆயர் இல்லத்துப் பசுவின்கன்றினொடு விளையாடா நிற்கும்களிப்பை யுடையனபலபாராய்.—

சிங்கக்குருளையும், யானைக்கன்றும், முல்லைநிலத்துப் பசுவின்கன்றொடு விளையாடுதல்கூறுவது இறைவன் வனப்பிரவேசஞ்செய்தமையான் தாம்வேறுபாடுகருதாது வசிக்கின்றமையுணர்த்திற்றென்க. அண்டர் என்றது முல்லைநிலமாக்களை.

(9) அகில்புனைகுழன்மாதேயணியிழையெனலாகும்
நகுமலர்நிறைமாலைக்கொம்பர்கணதிதோறும்
துகில்புரைநறுநீரிற்றோய்வனதுறையாடும்
முகிழிளமுலையாரின்மூழ்குவபலகாணாய்.

(இ - ள்.) அகில்புனைகுழன்மாதே-அகிற்புகையூட்டியகூந்தலையுடைய பெண்ணே! அணியிழையெனலாகும் நகுமலர்நிறைமாலைக்கொம்பர்கள் - அலங்கரிக்கு மாபரணமென்னும் மலர்நிறைந்தமாலையுடைய பூங்கொம்புகள், நதிதோறும் துகில்புரைநறு நீரில்தோய்வன - ஆறுகடோறும் ஆடைபோன்ற நன்னீரிடைமூழ்குவன, துறையாடும்முகிழிளமுலையாரின்-துறையினடைந்து நீராடும் அரும்பன்ன இளமுலையார்போல, மூழ்குவபலகாணாய்-முழுகுவபலபாராய்.—

அகில் ஆகுபெயர். அணியிழையைப் பூங்கொம்பருக்கும், துகில்புரைநறுநீரிற் றோய்வன அவராடுதலுக்கும் உவமைகூறினர். முகிழிளமுலையார் என்றது அரும்புகின்ற இளமுலையாரென்றதனை. (கக)

(10) முற்றுறுமுகைகிண்டிமுயல்கிலசிலதும்பி
விற்றிருநுதன்மாதேயப்மலர்விரிகோங்கிற்
சுற்றுறுமலரேறித்துயில்வனசுடர்மின்னும்
பொற்றகடுறுநீலம்புரைவனபலகாணாய்.

(இ - ள்.) விற்றிருநுதன்மாதே - விற்போலும் அழகிய நெற்றியையுடைய பெண்ணே, முற்றுறு முகைகிண்டி முயல்கிலசிலதும்பி-முற்றியவரும்

பிணைக்கிண்டி முயலாத சிலவண்டுகள், அம்மலர்விரிகோங்கின்-அழகியமலர் விரிந்த கோங்கின், சுற்றுறுமலரேறித்துயில்வன-சுற்றியமலரிடையேறித்துயில்செய்வன, சுடர்மின்னும் பொற்றகடுறு நீலம்புரைவனபலகாணாய்-ஒளிமிக்க பொற்றகட்டிற் பதித்த நீலமணியையொப்பனபாராய்.—

நுதலை விற்குவமைகூறினார். முகையைக்கிண்டி முயலாத சிலவண்டுகள் கோங்கிற் றுயில்செய்வன பொற்றகடுறு நீலமொக்குமென்றியைக்க. (கஉ)

(11) கூடியநறைவாயிற்கொண்டனவிழிகொள்ளா
மூடியகளிமன்னமுடுகினநெறிகாணா
ஆடியசிறைமாவண்டந்தரினிசைமுன்னாப்
பாடியபெடைகண்ணாவருவனபலகாணாய்.

(இ - ள்.) கூடியநறைவாயிற்கொண்டன-சேர்ந்ததேனைவாயிற்கொண்டனவாகி, விழிகொள்ளா - கண்கொள்ளாமல், மூடியகளிமன்ன - மூடிக்கொண்டகளிப்புப்பொருந்த, முடுகினநெறிகாணா - முடுகிச்சென்ற வழிதோன்றாமல், ஆடியசிறைமாவண்டு - ஆடாநிற்கின்ற சிறைகளையுடையகரியவண்டு, அந்தரின் - குருடர்போல, இசைமுன்னா, இசையைநாடி, பாடியபெடைகண்ணா - பாடியபெடையேவிழியாக, வருவனபலகாணாய் - வருவனபல பாராய்.—

அந்தகரென்றது குறைந்துநின்றது. நறையுண்டகளிப்பான் வழிதோன்றாது வண்டினங்கள் இசையைநாடிப்பாடியபெடையே கண்ணாகஅந்தரின் வருவன பல என்றியைக்க. (கரு)

(12) கன்னியரணிகோலங்கற்றறிகுநரென்னப்
பொன்னணிநிறவேங்கைக்கொம்பர்கள்புதுமென்பூ
அன்னமென்னடையாய்நின்னளகநன்னுதலப்புஞ்
சின்னமென்மலர்மானச்சிந்துவபலகாணாய்.

(இ - ள்.) அன்னமென்னடையாய் - அன்னம்போலு மெல்லியநடையாளே! கன்னியரணிகோலம் கற்றறிகுநரென்ன - மாதர்களணிந்த கோலத்தைக்கற்றறிந்தார்போல, பொன்அணிநிறவேங்கைகொம்பர்கள்புதுமென்பூ - பொன்னையலங்கரிக்கும் நிறத்தையுடைய வேங்கைமரக்கொம்பிடைப் பூத்த புதிய மென்பூ, நின்னளகநன்னுதலப்பும் சின்னமென்மலர்மான - நின்னுடைய அளகத்தினும்நன்னுதலினுமப்புகின்ற சின்னப்பூவையொப்ப, சிந்துவ பலகாணாய் - சிந்துவனபலபாராய்.—

அன்னத்தை நடைக்குவமங்கூறினார். வேங்கையின் மலர்சிந்துவனநின்னுடைய அளகத்துநுதலிடத்தும் அப்புஞ்சின்னப்பூவை யொப்பச்சிந்துவன வென்றியைக்க. கோலம்என்றதஒப்பனையை. (கசு)

(13) மணங்கிளர்மலர்வாசமாருதம்வரவீசக்
கணங்கிளர்தருசுண்ணங்கல்லுடையனகானத்
தணங்கினுமினியாயுன்னணிவடமுலைமுன்றிற்
சுணங்கினமவைமானத்துறுவனபலகாணாய்.

(இ - ள்.) அணங்கினுமினியாய் - தெய்வமகளிரினு மினிமையுடையாளே! மணங்கிளர்மலர் - மணம்விளங்குமலர்கள், வாசமாருதம்வரவீச - விரைவையுள்ள காற்றுவரும்படிவீச, கணங்கிளர்தருசுண்ணம் - கூட்டமாகவிளங்கும் சுண்ணம், கல்லுடையனகானத்து - கல்லையுடையனவாகிய காட்டின்கண், உன்னணிவடமுலைமுன்றில் - உன்னுடையஅழகிய வடமணிந்தமுலைமுற்றத்தின்கண்ணதாகிய, சுணங்கினமவை மானத்துறுவன பலகாணாய் - தேமலினம்போற் பொருந்தியிருப்பன பலபாராய்.—

தெய்வமகளிர் நனிதவவிரும்புந் தன்மையளாதலின் அணங்கினுமினியாளேயென்றார். கல்லிடைக்கானத்துமலர்க்கூட்டஞ் சுண்ணம்வீசல்நின் முலைமுன்றிலிடைச் சுணங்கினமொக்கு மென்றியைக்க. (கரு)

(14) அடியிணைபொறைதல்லாவென்றுகொலதரெங்கும்
இடையிடைமலர்சிந்துமினமரமிவைகாணாய்
கொடியினெடிளவாசக்கொம்பர்கள்குயிலாயுன்
துடிபுரையிடைநாணித்துவள்வனவவைகாணாய்.

(இ - ள்.) குயிலாய்-குயில்போல்வாளே, அதரெங்கும் அடியிணைபொறைதல்லாஎன்றுகொல்-வழியிடையெங்குமடித்துணைபொறாவென்றோ,மலர்சிந்தும் இனமரமிவை காணாய்-மலரைச்சொரியு மரத்தினினமிவைபாராய், கொடியினெடிளவாசக் கொம்பர்கள் - கொடியினெடிளமையாகிய வாசனையுள்ளகொம்புகள், உன்துடிபுரையிடை நாணித்துவள்வன அவைகாணாய் - உன்உடுக்கையொத்த இடைக்குநாணித்துவளாநிற்பன அவைபாராய்.—

மொழியாற்குயிலாயென்றார். அடியிணைநிலத்திடைநடக்கப் பொறாவென்றோ மலர்சிந்துமரங்கள் எனவும், பூங்கொடிகள் நின்றுடிபுரையிடை நாணித்துவள்வனவெனவு மென்றியைக்க. கொல் ஐயம். அடுக்குப்பன்மை.

(15) வாள்புரைவிழியாயுன்மலர்புரையடிமானத்
தாள்புரைதளிர்வைகுந்தகைஞிமிறிவைகாணாய்
கோள்புரையிருள்வாசக்குழல்புரைமழைகாணாய்
தோள்புரையிளவேயின்றொகுதிகளவைகாணாய்.

(இ - ள்.) வாள்புரைவிழியாய் - வாள்போன்றகண்ணாய்! உன்மலர்புரையடிமான-உன்மலரையொத்தஅடியைபோன்ற, தாள்புரைதளிர்வைகும்தகைஞிமிறிவைகாணாய், தாளையுடைய தளிரில்வசிக்கும் தகுதியையுடைய வண்டினம்பாராய், கோள்புரையிருள் வாசக்குழல்புரை மழைகாணாய்-

இருண்ட மணங்கமழ்கின்ற கூந்தலையொத்தகடலைமுகந்தமழைபாராய், தோள்புரையிளவேயின் ளுெகுதிகளவைகாணுய் - தோளையொத்த இளவேயின் கூட்டங்களவை பாராய்.—

ஞிமிறுவண்டின்விசேடம். வாள்புரைவிழி, குழல்புரைமழை, தோள்புரைவே, பெண்பனவிபரீதவுவமை. கோள்என்புழி கார்கோளென்றது குறைந்து நின்றதெனக்கொண்டு கடலெனக்கூறினுமமையும், (கஎ)

(16) பூநனைசினைதுன்றிப்புள்ளிடையிடைபம்பி
நானிறநளிர்வல்லிக்கொடியளவிலமல்கி
மானினமயின்மாலைக்குயிலினம்வருகானந்
தீநிகர்தொழிலாடைத்திரைபொருவனபாராய்.

(இ-ள்.) பூநனைசினைதுன்றி-பூவுமரும்புங்கொம்பிடைப்பொருந்தி,புள்இடையிடைபம்பி-பறவைபலவிடத்து நெருங்கி, நால்நிறம்நளிர்வல்லிக்கொடியளவிலமல்கி-பலநிறங்களையுடையகுளிர்ச்சியையுடையவல்லிசாதக்கொடிகள் அளவில்லாதனநிரம்பி, மானினம் - மான்கூட்டமும், மயில்மாலை - மயிலின்கூட்டமும், குயிலினம்வருகானம்-குயிற்கூட்டமும் வராநின்றகாடு, தீநிகர்தொழிலாடை திரைபொருவனபாராய் - தீயைநிகர்த்ததொழிலமைந்த திரைச் சீலையையொப்பனபாராய்.—எ-று.

நால்என்றதுபலநிறங்களைக் குறிக்குமிகுசொல். அடுக்குப்பன்மை. மானினமும், மயிலினமும், குயிலினமும்வருங்கானம் பூவுமரும்புங்கொம்பிடைப்பொருந்திக் கொடிகள்பலநிரம்பித் தீயையொத்த தொழிலையுடைய ஆடையையும் திரையையுமொப்பன என்றியைக்க. இப்பதினாறு செய்யுளானும் இறைவன் வனச்சிறப்புக்கூறினமை யுணர்த்தப்பட்டது. (கஅ)

(1) என்றனன்மடவாளோடினிதினில்விளையாடிப்
பொன்றிணிதிரடோளான்போயினனெறிபோதும்
சென்றதுகுடபாலத்திருமலையிதுவன்றே
என்றனன்வினைவென்றோர்மேவிடமெனவோடும்.

(இ - ள்.) என்றனன்-என்றுகூறி, பொன்றிணிதிரடோளான் மடவாளோடினிதாடி இளவலோடு நெறிபோயினன் - அழகுதிணிந்ததிரண்டதோளானாகியசீராமன் சனகியுடனினிமையாக விளையாடிவழிகடந்தனன், குடபால்போதும் சென்றது-மேற்றிசைப்பான் ஞாயிறுஞ்சென்றது,அத்திருமலையிதுவன்றேஎன்றனன்-அவ்வழகியமலையிதுவேயன்றோ என்றதன்றி, வினைவென்றோர் மேவிடமெனவோடும் - இருவினைவென்ற முனிவரிருக்கையெனலும்.—

என்றனன் என்பனவிரண்டும் வினையெச்சமுற்று. என்றனன்பொலிவனகாணுய் முதலியவற்றோடும் அது நெறிபோயினன் என்பதனோடுமுடி

தது. போது - ஆகுபெயர்; அன்றீற்றேதேற்றம். இதுகுளகம். எனலோடும் உம்மீற்றெச்சம். வினைவென்றோர் என்றது முற்றத்துறந்தமுனிவரை. உம்மை உயர்வுசிறப்பு. இது ஞாயிற்றினத்தமனங் கூறியதென்க. குடபால் என்றது அத்தமனவரையை. போது ஆகுபெயர், ஞாயிற்றினை. என்றனன் என்றது இன்றுயில் வதிகோபத்தினம் விரிவன முதலாயினவற்றை. (கக)

(2) அருத்தியினகம்விம்முமன் பினினெடுநாளில்
திருத்தியவினை முற்றிற்றென் றனன்றெரிகின்றான
பரத்துவனெனுநாமப்பரமுனிபவநோயின்
மருத்துவனனையானை வரவெதிர்கொளவந்தான்.

(இ - ள்.) அருத்தியின் அகம்விம்மும் அன்பினின் நெடுநாளில் திருத்தியவினை முற்றிற்றென்றனன் றெரிகின்றான்-அருத்தியான்மனங்குழையும் அன்பினன் நெடுங்காலந்திருத்தப்பட்ட வினைமுடிவுபெற்றதென்றுதெரிகின்றவனாகிய, பரத்துவனெனு நாமப்பரமுனி - பரத்துவாசனென்னும் பெயரிய மேலாயமுனிவன், பவநோயின்மருத்துவன் அனையான் - பிறவிநோய்க்கு மருத்துவன்போல்வான், வர எதிர்கொளவந்தான் - அவன் எழுந்தருள எதிர்கொண்டு நடந்தனன்.—

அனையானையென்புழி ஐசாரியை. என்றனன் வினையெச்சமுற்று. தெரிகின்றான், பரமுனி, மருத்துவன் அனையானென ஒருபொருண்மேற்பல பெயர் மருத்துவன் நோய்தீர்ப்பதுபோன் முனிவனும் பிறவிநோயைக் களைகின்றமையானங்ஙன முவமைகூறினார். (உ)

(3) குடையினனிமிர்கோலன் குண்டிகையினன்மூரிச்
சடையினனுரிமானின்சருமனன்மரநாரின்
உடையினன்மயிர்நாலுமுருவினனெறிபேணும்
நடையினன்மறைநாலுநடநவிறருநாவான்.

(இ - ள்.) குடையினன் - குடையானும், நிமிர்கோலன்-திரிதண்டேந்தியானும், குண்டிகையினன் - குண்டிகையுடையானும், மூரிசடையினன்-வலியசடையானும், உரிமானின்சருமன் - மான்றோலுடையானும், நன்மரநாரின் உடையினன்-நல்லமரவுரியுடையானும், மயிர்நாலுமுருவினன்-மயிர் நாலப்பட்ட உருவமுடையானும், நெறிபேணுநடையினன் - மெய்ம்மைநெறியை விரும்புமொழுக்கமுடையானும், மறைநாலுநடநவிறருநாவான் - வேத நான்கு நடஞ்செயப்பட்ட நாவையுடையானும்.—

நெறியென்றது நிரதிசயவின்பவீட்டினெறியை. நிமிர்கோலென்றது திரிதண்டத்தை. சருமமென்றது தோலை. மறைநாலென்றதனை மேல்விரித்தாம். (உக)

(4) செந்தழல்புரிசெல்வன் றிசைமுகமுனிசெவ்வே
தந்தனவுயிரெல்லாந்தன் னுயிரெனநல்கும்
அந்தண னுலகேழுமமையெனினமரேசன்
உந்தியி னுதவாமேயுதவிடுதொழில்வல்லான்.

(இ - ள்.) செந்தழல்புரிசெல்வன் - செந்தீயோம்புஞ்செல்வமுடையானும், திசைமுகமுனி செவ்வேதந்தன வுயிரெல்லாம் தன்னுயிரென நல்கும் அந்தணன் - நான்முகனாகிய முனிவன்செவ்வேபடைத்த வுயிரையெல்லாந்தன்னுயிரென வெண்ணுமழகியதட்பமாகிய குணமுடையானும், உலகேழுமமையெனின்-ஏழுலகையும்படையெனின், அமரேசன் உந்தியினுதவாமே யுதவிடு தொழில்வல்லான் - திருமால் உந்தியிற்படையாமே படைக்குந் தொழிலில் வல்லானும்.—எ-று.

தெரிகின்றான்,குடையினன்,நிமிர்கோலன்,குண்டிகையினன்,சடையினன், சருமன்,உடையினன்,உருவினன்,நடையினன்,நாவான்,செல்வன்அந்தணன், தொழில்வல்லான், பரத்துவமுனி அனையான்வர எதிர்வந்தானெனக்கூட்டி முடிக்க.செந்தழலோம்பலேபெருஞ்செல்வமாகலின்செந்தழல்புரிசெல்வனென்றதென்க.இதனை * 'முத்தீச்செல்வத்திருபிறப்பாளர்'எனப்பிறருங்கூறியதனானறிக. 'தேவிற்றிருமாலெனச் சிறந்துநின்றதே' என்பவாகலின்திருமாலை அமரேசனென்றார். தந்தன வினைப்பெயர். இந்நான்கு செய்யுளானும் பரத்துவாசனெதிர்கொண்டழைத்தமை யுணர்த்தப்பட்டது. (௨௨)

(1) அம்முனிவரலோடுமெங்க னுமலர்தூவி
மும்முறைதொழுதானம்முதல்வனுமெதிர்புல்லி
இம்முறையுருவோநாமெய்துவதெனவுள்ளம்
விம்மினனிழிகண்ணீர்விழிவழியுகநின்றான்.

(இ - ள்.) அம்முனிவரலோடும் - அம்முனிவன்வரலும், அநகனும்மலர்தூவி-தூய்மையுடையனாகிய சீராமனுமலரைச்சொரிந்து, மும்முறைதொழுதான் - மும்முறைவணங்க, அம்முதல்வனும்எதிர்புல்லி - அம்முனிவனுமெதிர்அணைந்து, நாம்இம்முறையுருவோ எய்துவதுஎன - நீர்இத்தகைவடிவமேயோ அடைவதென்று, உள்ளம்விம்மினன் - மனங்கலங்கி, இழிகண்ணீர் - இழிகின்றகண்ணீர், விழிவழியுகநின்றான்-கண்வழிச்சிந்த நின்றனன்.

தவவேடந்தலை நின்றமையான் இம்முறையுருவோநா மெய்துவதென்றார். தொழுதான் வினையெச்சமுற்று. நாம் உளப்பாட்டுத்தன்மைப்பன்மை உயர்வான்முன்னிலை யிடத்துவந்தது; இதனை இவ்வாசிரியர் 'நங்கையிவரென நெருநலடைந்தவரோநாமென்ன' எனப்பிறகூறதலானும், ‡ 'காமரையாமத்தன்றே வந்துவைகிநயந்ததுவே' என்பதனானும், அதற்குட்

* திருமுருகாற்றுப்படை வரி. ௧௮௧. ‡ திருக்கோவையார். செ. ௧௬௪.

பேராசிரியருரை யானுமுணர்க. நானெய் தவனெனப்பாடங் கூறுவாருமுளர்; அற்றேல் அஃது அம்முனிவனுக் கெனக்கோடலானத்துணைச்சிறப்பின்மை யறிக. (உ௱)

(2) அகலிடநெடிதாளுமமைதியையதுதீரப்
புகலிடமெமதாகும்புரையிடையிதுநாளிற்
றகவிலதவவேடந்தழுவினைவருவானேன்
இகலடுசிலைவீரவிளையவனொடுமென்றான்

(இ - ள்.) இகலடுசிலைவீர - பகைவரைவெல்லும் வில்லையுடையவீர னே! அகலிடநெடிதாளுமமைதியை - அகனிலமுழுதாளு மமைதியையுடை யாய்! அதுதீர-அஃதொழிய, புகலிடமெமதாகும்புரையிடை-அருந்தவராகிய யாம்இருக்கும்தவச்சாலையிடை,இதுநாளில்தகவிலதவவேடந்தழுவினை, இது பொழுது தவவேடந்தாங்கி, இளையவனொடும் வருவானேனென்றான் - தம் பியொடும் வருவதேனென்றனன்.—எ-று.

முற்றத்துறந்த முனிவர்க்குரியதவவேடம் அரசிளங்குமரருக்கடுத்ததன் றென்பார் தவவேடந்தழுவினையென்றும், முதுமைப்பருவமே தவஞ்செயற் கமைதல்வேண்டும், இஃதன்னதன்றென்பார் இதுநாளில்என்றும், பகை வரையடுநினக்கு இது தகுதியன்றென்பார் இகலடுசிலைவீர வென்றுங்கூறி னார். தழுவினைவினையெச்சமுற்று. வருவான் - வானீற்றுத்தொழிற்பெயர். இவ்வாறே பான் பாக்கு என்பன வருமென்பர் சிவஞானமுனிவரும். இவ் விரண்டுசெய்யுளானும் பரத்துவாசன் வினவினமை யுணர்த்தப்பட்டது.

(1) உற்றுளபொருளெல்லாமுணர்வுறவுரைசெய்தான்
நற்றவமுனியந்தோவிதிதருநவையென்பான்
இற்றதுசெயலுண்டோவினியெனவிடர்கொண்டான்
பெற்றிலடவமந்தோபெருநிலமகளென்றான்.

(இ - ள்.) உற்றுள பொருளெல்லாம் உணர்வுறவுரைசெய்தான் - நட ந்தசெயலனைத்தும் அம்முனிவன் அறியக்கேட்டனன், நற்றவமுனியந்தோ விதிதருநவை யென்பான்-நன்மையாகியதவமுடைய பரத்துவாசமுனிவன் அந்தோவிதி தந்தகுற்றமென்பான், இற்றதுசெயலுண்டோவினியெனஇடர் கொண்டான் - இனி இத்தன்மையாகிய செய்கைநிகழுமோ வெனத்துயர் கொண்டு, பெருநிலமகள் பெற்றிலள்தவமந்தோவென்றான்- பெருநிலக்கிழத் திதவஞ்செயப்பெற்றில ளென்றனன்.—

உற்றுளபொருளெல்லா மென்றதுகைகேசி பெற்றவரங்களிரண்டினுனென் றான்இறைவன் கான்படர்ந்தமையும், மற்றொன்றாற் பரதனுடைடைந்தமையு மென்க. இதுவிதியான் வந்தகுற்றமல்லதுவேறன்றென்றதன்றி இற்றதுசெ யலுண்டோவினியென விடர்கொண்டானென்றுங்கூறினர்.

(2) துப்புறழ்துவர்வாயின்றாய்மொழிமயிலோடும்
அப்புறுகடன்ஞாலமாளுதிகடிதென்று
ஒப்பறுமரசுன்னையுயர்வனமுறவேகென்
றெப்பரிசுயிருய்ந்தானென்றுணையவனென்றான்.

(இ - ள்.) துப்புறழ்துவர்வாயின் தூய்மொழிமயிலோடும்-பவளம்போன்ற துவர்வாயையும் தூய்தாகியமொழியையுமுடைய மயில்போல்வாளோடும், அப்புறுகடல் ஞாலங்கடிதாளுதியென்று - நீரையுடைய கடல்சூழ்ந்த நிலவுலகத்தைவிரைவாயாளென்று, என்துணையவன்-என்துணையாவானாகிய, ஒப்பறுமர சுன்னையுயர்வனமுறவேகென்று-ஒப்பில்லாத அரசன் உன்னையுயர்ந்தகாட்டினைப் பொருந்தவடைகென்று, எப்பரிசுஉயிருய்ந்தான் என்றான் - எவ்வண்ணமுயிர் பிழைத்திருந்தனனென்றனன்.—

துப்புறழ் துவரென்றது வாய்க்குவமை. தூய்மொழிமயிலென்றது இல்பொருளுவமை. என்துணையவ னென்றது தயரதனை. தன்னையொப்பாருமிக்காருமில்லாதானாகலின் சக்கிரவர்த்தியை 'ஒப்பறுமர' சென்றார். அரசு என்றது சொல்லானஃறிணை. (உரு)

(3) அல்லலுமுளவின்பமணுகலுமுளவன்றே
நல்லவுமுளசெய்யுநவைகளுமுளவந்தோ
இல்லையொர்பயனின்றிடருறுமிதினென்னாப்
புல்லினனுடனேகொண்டினிதுறைபுரைபுக்கான்.

(இ-ள்.) அல்லலுமுள இன்பமணுகலுமுளவன்றே-துன்பமுமுளஇன்பமுமடைதலுமுளவன்றே, நல்லவுமுளசெய்யுநவைகளுமுளவந்தோ-புண்ணியமுமுள்ளனசெய்யும் பாவங்களுமுள்ளன அந்தோ, நானின்றிடருறுமிதின் இல்லையொர்பயனென்னா-நான்இன்றுதுயரமுறுவதினுமொருபயனில்லையென்று,புல்லினன்உடனேகொண்டுஇனி[illegible]புரைபுக்கான்-அணைத்துக்கொண்டவரையுடன்கொண்டு இனிதாகவசிக்குந் தவச்சாலையிற்சென்றனன்.—

இன்பத்துன்பங்களு மவற்றின் காரணமாகியபுண்ணியபாவங்களு மக்களாற் செய்யப்படுவனவாகலின் நானிடருறுமிதினில்லை யொர்பயனென்றான். புரைஎன்றது முனிவரிருக்கையை. நவையெனக்காரியத்தைக் காரணமாகவுபசரித்தார். இம்மூன்று செய்யுளானு [illegible]றைவனை யழைத்துச் சென்றமை யுணர்த்தப்பட்டது. (உஎ)

(1) புக்குறைவிடநல்கிப்பூசனைமுறைபேணித்
தக்கனகனிகாயுந்தந்துரைதருமன்பால்
தொக்கநன்முறைகூறித்தூயவனுயிர்போலும்
மக்களினருளூற்றான்மைந்தருமகிழ்வுற்றார்.

(இ - ள்.) புக்குறைவிடநல்கி - சென்றுதங்குமிடமளித்து, பூசனைமுறைபேணி - பூசனைமுறைவிரும்பி, தக்கனகனிகாயுந்தந்து - தகுந்தனவாகிய கனியுங்காயுங்கொடுத்துதவி, உரைதருமன்பால் - சொல்லத்தக்கவன்பினால், தொக்கநன்முறைகூறி - கூடியநன்முறைசொல்லி, தூயவனுயிர்போலும் மக்களினருளுற்றான் - தூயவனாகிய தயரதனுயிர்போலுமக்களருள் பெற்றனன், மைந்தருமகிழ்வுற்றார்-அம்மக்களுமகிழ்ச்சியிற் சிறந்தனர்.—

பூசனையென்றது அரசர் அதிதியாகவரிற் செய்யுமுபசாரத்தை. நன்முறைஎன்றது தேற்றத்தக்கவனவற்றை. தூயவன் என்றதுதயரதனை. உயிர்போலுமக்களென்றது சீராமலக்குவரை. (உ அ)

(2) வைகினர்கதிர்நாறுமளவையின்மறையோனும்
உய்குவமிவனோடியாமுடனுறைதலினென்பான்
செய்தனனினிதெல்லாஞ்செல்வனைமுகமுன்னுக்
கொய்குலமலர்மார்பகூறுவதுளதென்றான்.

(இ-ள்.) கதிர்நாறுமளவையின்வைகினர்-வைகறைப்போதில்தங்கினர், மறையோனும் இவனோடியாமுடனுறைதலின்-பரத்துவாசனும் இவனுடன்யாமுடன்வசிப்பதனால், உய்குவமென்பான் இனிதெல்லாம்செய்தனன் - உய்வேமென்பானினிமையாயின வெல்லாஞ்செய்து, செல்வனைமுகமுன்னு-சீராமனைமுகநோக்கி, கொய்குலமலர்மார்ப கூறுவதுளதென்றான்-கொய்தசிறந்தமலர்புனையு மார்பினையுடையானே சொல்லுவதுளதென்றனன்.—எ-று.

இறைவனென்றதுசீராமனை. மெய்யுணர்ச்சியாற்கண்டவனாகலின் உய்குவமென்பானினிதெல்லாஞ்செய்தனனென்றார். மறையோனென்றது பரத்துவாசனை. கொய்குலமார்பனென்றதுசீராமனை. கதிர்நாறுமளவையென்றது-வைகறையை. இவ்விரண்டு செய்யுளானும் பரத்துவாசன் இறைவனைக்கொண்டு சென்றுபசரித்தமையுணர்த்தப்பட்டது. (உகூ)

கலிநிலைத்துறை.

(1) நிறையுநீர்மலர்நெடுங்கனிகிழங்குகாய்நேர்ந்த
குறையுந்தீயவைதூயவைகுறைவிலவெம்மோ
டுறையுமிவ்வழியொருங்கினிலுயர்தவமுயல்வார்க்
கிறையுமீதலாதினியதோரிடமரிதின்னும்.

(இ - ள்.) நிறையுநீர்மலர் நெடுங்கனிகிழங்குகாய்-நிறைகின்ற நீருமலருநெடிய கனியுங்கிழங்குங்காயும், நேர்ந்த - இசைந்திருப்பன, குறையுந்தீயவை - தீயனகுறையும், தூயவைகுறைவில - தூயபொருள்கள் குறைவில்லாதன, இவ்வழி ஒருங்கினில் எம்மோடுறையும் - இவ்விடை ஒருங்கெம்மோடுறைமின், உயர்தவமுயல்வார்க்கு இறையுமீதலாதினியதோரிடமரிது இன்னும் - உயர்ந்ததவத்தை முயன்றுசெய்பவருக்குச்சிறிதுமிதனினுமரிதாகவோரிடமரியது இன்னும்.—

உறையுமென்பது உம்மீற்றேவற்பன்மை; புதியனபுகுதல். இன்னு மென்பது வினைமாற்றுப்பொருளது. தீயவையொழித்தலும் தூயனசெய் தலுமுண்மையின் குறையுந்தீயவை தூயவைகுறைவில என்றும், அது அருந் தவர்க்கிடனாகலின் இறையுமீதலாதினிய தோரிடமரிது என்றுங்கூறினர்.()

(2) கங்கையாளொடுகரியவளுமகள்கலந்த
சங்கமாதலிற்பிரியலென்றுமரைச்செங்கண்
அங்கநாயகவயனுக்குமரும்பெறற்றீர்த்தம்
எங்கள்போலியர்தரத்ததன்றிருத்திரீண்டென்றான்.

(இ - ள்.) கங்கையாளொடு-கங்கையுடன், கரியவள் - யமுனை, நாம கள்-சரச்சுவதி, கலந்தசங்கமாதலின்-சேர்ந்த சங்கமமாகலின், பிரியலென் - நீங்காதுறைவேன், தாமரைச்செங்கண் அங்கநாயக - செந்தாமரைமலர்போ லுங் கண்களாகிய உறுப்பினையுடைய இறைவனே, அயனுக்குமரும்பெறல் தீர்த்தம் - இது பிரமனுக்கும் பெறலருந்தீர்த்தம், எங்கள்போலியர் தரத்தத ன்று - (இதன்சிறப்புக்கூறுதல்) எங்களை யொப்பார்தரத்தது அன்று, ஈண் டிருத்திரென்றான் - இங்கிருமினென்றனன்.—எ-று.

அயனென்றதற்குப் பிறப்பில்லானென்ற துபசாரவழக்கு; சங்கமமெ ன்றது குறைந்து நின்றது. கண் உறுப்பினுளொன்றாகலானும், அருள் பொழியுமிடனாகலானும் தாமரைச்செங்கண்ணெனவிதந்து கூறினர். கங் கையாளொடுகரியவள்நாமகள்கலந்தசங்கமமென்றது பிரயாகையை. அயனுக் குமென்ற உம்மைஉயர்வுசிறப்பு. இச்சங்கமத்தின் பெருமிதங்கூறுவது மறை களுமாட்டாமையின் எங்கள்போலியர்தரத்ததன்று என்றும், அதுவேயுறை தற்குத் தக்கிடமென்பார் ஈண்டிருத்திரென்றுங்கூறினர். இவ்விரண்டுசெய் யுளானும் இங்கிருவென்றமை யுணர்த்தப்பட்டது. (௬0)

பூண்டமாதவனவ்வழிவிரும்பினன்புகல
நீண்டதன்றிதுநிறைபுனனாட்டுக்குநடுவாம்
மாண்டசிந்தையவிவ்வழிவைகுவெனென்றால்
ஈண்டயாவருநெருங்குவரென்றனனிராமன்.

(இ-ள்.) மாதவம்பூண்டவன்-மாதவமேற்கொண்ட பரத்துவாசன், அவ் வழிவிரும்பினன்புகல-அவ்வாறு விரும்பிக்கூற, இதுநீண்டதன்று-இதுசேய் மையதன்று, நிறைபுனல்நாட்டுக்குநடுவாம்-நிறைந்தநீர்வளத்தையுடையநாட் டிற்கு நடுவாகும், மாண்டசிந்தைய-மாட்சிமைப்பட்டமனத்தானே! இவ்வழி வைகுவெனென்றால்-இவ்விடத்து வசிப்பேனெனின், இராமன் ஈண்டயாவ ரும் நெருங்குவரென்றனன்-சீராமனிங்கியாவரு மணுகுவரென்றனன்-எ-று.

பூண்டமாதவனென்பதனை மாதவம்பூண்டவனென முன்பின்னாக நிறு த்தி விகுதிபிரித்துக்கூட்டியுரைக்க. தனக்குதவிய அரசுரிமையைத் தன் சிற்றவ்வைபயந்த சேய்க்குதவியகொடைச் சிறப்புத்தோன்ற மாண்டசிந்தைய

என்றார். அயோத்திக்கருகாதலின் இது நீண்டதன்று நிறைபுனல்நாட்டுக் குநடுவோ மென்றும், நகரமாந்தரெய்த இதுநாடாய்விடுமென்பார் ஈண்டயாவருநெருங்குவரென்றுங் கூறினார். இதனான் இறைவனீண்டுறைதல் கூடாதென்றமை யுணர்த்தப்பட்டது. (௬௨)

ஆவதுள்ளதேயையகேளையிரண்டமைந்த
காவதப்பொழிற்கப்புறங்கழிந்தபின்காண்டி
மேவுகாதலின்வைகுதிவிண்ணினுமினிதால்
தேவர்கைதொழுஞ்சித்திரகூடமென்றுளதால்.

(இ - ள்.) ஆவதுள்ளதே - நீகூறியதுண்மையே, ஐயகேள் - ஐயனே செவிகொடு, ஐயிரண்டமைந்தகாவதப்பொழிற்கு அப்புறங்கழிந்தபின் - பத்தென்றமைந்தகாதவிடத்தப்பாற்கடந்தபின், விண்ணினுமினிது - துறக்கநாட்டினுமினியது, தேவர்கைதொழுஞ் சித்திரகூடமென்றுளது - தேவருங்கைதொழுகின்ற சித்திரகூடமெனப்படுவதென்பதுண்டு, காண்டி - பார், மேவுகாதலின்வைகுதி - விரும்பப்பட்ட ஆசையால் தங்கு. — எ-று.

ஆல் - அசை- சித்திரகூடமென்பது ஒருவரை. காவதமென்றது காதமென மரீஇவரும். ஆவதுண்மையென்றது இது நீண்டதன்று என்பன முதலியன. இதற்குப் பத்துக்காவதத்துச் சித்திரகூடமென்னும்வரைதேவருந் தொழுந்தன்மையதுஅங்குறைக என்றானென்க. இறைவன்பிற்படர்தற்கிடங் கூறினார். இதனாற் சித்திரகூடத்திற்குச் செல்ல விடைபெற்றமை யுணர்த்தப்பட்டது. (௬௩)

என்றுகாதலினேயினனடிதொழுதேத்திக்
கொன்றைவேய்ங்குழற்கோவலர்முல்லையங்குடுமி
சென்றுசெங்கதிர்ச்செல்வனுநடுவுறச்சிறுமான்
கன்றுநீர்நுகர்காளிந்தியெனுநதிகண்டார்.

(இ - ள்.) என்றுகாதலின் ஏயினன்-என்று விருப்பத்துடன் கட்டளையிட்டனன், அடிதொழுதேத்தி - அவனடிதொழுதுவணங்கி, கொன்றைவேய்ங்குழற் கோவலர்முல்லை - கொன்றைக்காயானும் வேயானுஞ் சமைக்கப்பட்டகுழலையுடையஆயரதுமுல்லைநிலத்து, அங்குடுமிசென்று செங்கதிர்செல்வனுநடுவுற - அழகியஉச்சிசென்று செம்மையாகிய கிரணங்களையுடைய ஞாயிறும் நடுவினடைய, சிறுமான்கன்று நீர்நுகர் காளிந்தியெனுநதிகண்டார் - சிறியமான்கன்று நீருண்ணும்யமுனையாற்றைக்கண்டனர் — எ-று.

கொன்றைக்காயானுங் குழல்சமைக்கப்படுவதைக் "கொன்றையந்தீங்குழல் கேளாமோதோழீ" எனப்பிறருங்கூறுவதனாற்காண்க. வேயாற்குழல்குழல் செய்துவருவது பெருவழக்கிற்று. செங்கதிர்ச் செல்வனுநடுவுற என்றதுநண்பகலை. காளிந்தியென்றதுயமுனையை. முல்லைக்கருப்பொருளாகிய சிறுமான்கன்று நீர்நுகர்கின்றமையான் முல்லைநிலமுங்கூறினார். இதனாற் காளிந்தி நதியை யடைந்தமை யுணர்த்தப்பட்டது. (௬௪)

(1) ஆறுகண்டனரகமகிழ்ந்திறைஞ்சினரறிந்து
நீறுதோய்மணிமேனியர்நெடும்புனல்படிந்தார்
ஊறுமென்கனிகிழங்கினோடுண்டுநீருண்டார்
ஏறியேகுவதெங்கணமென்றலுமிளையோன்.

(இ-ள்.) ஆறுகண்டனர்-ஆற்றைக்கண்டு, அகமகிழ்ந்திறைஞ்சினர்-மனமகிழ்ந்து வணங்கினர், அறிந்துநீறு தோய்மணி மேனியர் நெடும்புனல் படிந்தார்-அறிந்துபுழுதிபடிந்த அழகியமேனியையுடையராதலின் நீர்வெள்ளத்தின்முழுகி, ஊறுமென்கனிகிழங்கினோடுண்டு நீருண்டார்-சுவையூறுமெல்லிய பழம் கிழங்கோடுண்டு நீரருந்தினர், ஏறியேகுவ தெங்கணமென்றலும் இளையோன்-இதனைக் கடந்தேறிச்செல்வ தெவ்வாறென்று கூறலுந் தம்பி.—

ஆறுகண்டனர் என்றது காளிந்தி யெனுநதி கண்டாரென்பதனை. கண்டனர் இறைஞ்சினர்வினையெச்சமுற்றுகள். நீறுதோய்மணிமேனியர்என்றது வழி வருதலாற் புழுதிபடிதலை. ஊறுமென்கனி யென்றது சுவையூறுங் கனியை. (நரு)

(2) வாங்குவேய்ங்கழைதுணித்தனன்மாணையின்கொடியால்
ஓங்குதெப்பமொன்றமைத்ததினும்பரினுலம்போல்
வீங்குதோளண்ணறேவியோடினிதுவீற்றிருப்ப
நீங்கினானந்தநெடுநதியிருகையானீந்தி.

(இ - ள்.) வாங்குவேய் கழைதுணித்தனன் - வளைந்தவேயின் கழையைத்துணித்து, மாணையின் கொடியால் - மாணைக்கொடியால், ஓங்குதெப்பமொன்றமைத்து அதினும்பரின் - ஓங்கியதெப்ப மொன்றுசெய்து அதன்மேல், உலம்போல் வீங்குதோள் அண்ணல் - திரண்டகற்போலு மோங்கிய தோளையுடைய இறைவன், தேவியோடினிது வீற்றிருப்ப-சனகியோடினிதெழுந்தருள, அந்தநெடுநதி யிருகையானீந்தி - அப்பெரியயாற்றை யிருகையானு நீந்தி, நீங்கினான் - நீங்கிச்சென்றனன்.—

மாணை என்றது கொடியின் விசேடம். உலம் - திரண்டகல், அது தோட்குவமை. இருகையானென்புழிமுற்றும்மை விகாரத்தாற் றொக்கது.

(3) ஆலைபாய்வயலயோத்தியராண்டகைக்கிளையான்
மாலைமால்வரைத்தோளனுமந்தரந்திரியக்
காலைவேலையைக்கடந்ததுகழிந்தநீர்கடிதின்
மேலைவேலையிற்பாய்ந்ததுமீண்டநீர்வெள்ளம்.

(இ-ள்.) ஆலைபாய்வயல் அயோத்தியராண்டகைக் கிளையான்-கருப்பஞ்சாறுபாய்கின்ற வயல்சூழ்ந்த அயோத்தியர் ஆண்டகையாகிய சீராமனுக்குத் தம்பி, மாலைமால்வரைத்தோளனு மந்தரந்திரிய - மாலைபுனையும் மால்போ

லுநீண்ட மலையன்னதோளாகிய மந்தரந்திரியும்படி, கழிந்த நீர் காலை வேலையைகடந்தது-மிகுந்தநீர்கிழக்குச்சமுத்திரத்தைக்கடந்தது,மீண்டநீர்வெள்ளம் கடிதின் மேலை வேலையிற்பாய்ந்தது-மீண்டநீர் வெள்ளம் விரைவாய் மேற்கடலிற் பாய்ந்தது.—எ-று.

புருடோத்தமனென்னும்வடமொழிப்பெயர்பற்றி ஆண்டகை என்றார். இதனை ஏழாம்வேற்றுமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையென்றறியாதார் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையென்பர். மால்வரை என்பதற்குமால் போலுநீண்ட குவடுகளையுடையவரையென்பர் ‡"மால்வரைநிவந்த" என்றதற்குநச்சினார்க்கினியரும். மேலைவேலை என்பதனுற்காலைவேலைஎன்பதற்குக்கீழ்க்கடலென்றும். அயோத்தியராண்டகை என்றது சீராமனை. இம்மூன்று செய்யுளானும் இறைவன்காளிந்திநதியைக்கடந்தமை யுணர்த்தப்பட்டது. (கூஎ)

அனையரப்புனலேறினரக்கரையணைந்தார்
புனையும்வற்கலைபொற்பினர்நெடுநெறிபோனார்
சினையுமூலமும்வேரும்வெந்திருநிலந்தீந்து
நினையுநெஞ்சமுஞ்சுடுவதோர்நெடுஞ்சுரநேர்ந்தார்.

(இ - ள்.) அனையர் அப்புனல் ஏறினர் அக்கரை யணைந்தார் - அவர் அப்புனலையேறி அக்கரை சேர்ந்து, புனையும் வற்கலை பொற்பினர் - அணிந்த மரவுரியா லழகுடையராய், நெடுநெறிபோனார் - நெடுந்தூரஞ் சென்றனர், சினையுமூலமும் வேரும் வெந்து இருநிலந்தீந்து - கிளையும் கிழங்கும் வேரும் வெந்து பெரியநிலமுந் தீந்துபோய், நினையுநெஞ்சமும் சுடுவதோர் நெடுஞ்சுரநேர்ந்தார் - நினைக்கின்ற மனத்தையுஞ்சுடுவ தாகிய ஒரு நீண்டபாலைவனமடைந்தனர்.—எ-று.

ஏறினர்-வினையெச்சமுற்று. வற்கலைஎன்றதுசீரையை.பாலையின்கொடுமையை நினையுநெஞ்சமுஞ்சுடுவதோர்நெடுஞ்சுரமென்றார்.அனையரென்றது சீராமன் முதலிய மூவரை. நிலந்தீந்தென்றது "விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழின்-எழுந்து சுடர்சுடுமென் றேங்கிச் - செழுங்கொண்டல், பெய்யாத கானகத்தே" எனப்பிறருங் கூறியதனுனுணர்க. இது கவிக்கூற்று. ()

(1) நீங்கலாற்றலள்சனகியென்றன்னவர்நினையா
ஓங்குவெய்யவனுடுபதியெனக்கதிருகுத்தான்
தாங்குவேங்கடத்துலவைகடழைகொண்டுதழைத்த
பாங்குவெங்கனல்பங்கயவனங்களாய்ப்பரந்த.

(இ - ள்.) நீங்கலாற்றலள் சனகியென்று-வருந்துதல் பொருள் சனகியென்று, அன்னவர் நினையா-அவர்நினைக்க, ஓங்குவெய்யவன் உடுபதியென

‡ திருமுருகாற்றுப்படை-வரி. கஉ.

கதிருகுத்தான் - ஞாயிறு திங்கள் போற் கிரணஞ்சிந்தினன், தாங்குவேங் கடத்துலவைகள் தழைகொண்டு தழைத்த - தாங்குகின்றவேகுஞ் சுரத்தி லுள்ள உலர்ந்த கொம்புகள் தழையடர்ந்து தழைத்தன, பாங்குவெங்கனல் பங்கயவனங் களாய்ப்பரந்த-பக்கத்திருந்த கொடுந்தீ தாமரைப் பொய்கையா கப்பரந்தன.—

அன்னவரென்றது சீராம லக்குவரை. உடுபதிஎன்றது மதியை. உலவை தழைத்த வெங்கனல் பங்கயவனங்களாய்ப் பரந்த என்றியைக்க. வேங்கட மென்றது பாலையை. நினைக்க என்றது திரிந்து நின்றது. (௩௯)

(2) வறுத்துவித்தியவனையனவல்லயிற்பரற்கள்
பறித்துவித்தியமலரெனக்குளிர்ந்தனபசைந்த
இறுத்தெரிந்தனவல்லிகளிளந்தளிரீன்ற
கறுத்தவாளரவெயிற்றினுளமுதுகக்களித்த.

(இ-ள்.) வறுத்து வித்தியவனையன-வறுத்துவித்தியவித்தினைப்போன்ற, வல் அயில் பரற்கள்-வன்மையாகிய கூரியபருக்கைக்கற்கள், பறித்துவித்திய மலரென - பறித்துவித்திய மலர்போல, குளிர்ந்தன பசைந்த - குளிர்ந்து பசப்படைந்தன, இறுத்தெரிந்தன வல்லிகள் இளந்தளிரீன்ற - இறுத்தெரிந் தனவாகிய கொடிகள் இளமையாகிய தளிர்களையீன்றன, கறுத்தவாளரவு எயிற்றினுள்அமுதுஉகக்களித்த - நீண்ட கரும்பாம்புகள் பற்களில் அமுது சிந்தக்களிப்படைந்தன.—

கிருட்டின சர்ப்பமென்னும் வடமொழிப்பெயர்பற்றிக் கறுத்தவாளர வென்றார். பரற்களைப் பறித்துவித்திய மலரென் றுவமைகூறினார். (௪௰)

(3) குழுமிமேகங்கள்குமுறினகுளிர்துளிகொணர்ந்த
முழுவில்வேடருமுனிவரின்முனிகிலருயிரைத்
தழுவிநின்றனபசியிலபகையிலதணிந்த
உழுவையின்முலைமானிளங்கன்றுகளுண்ட.

(இ - ள்.) மேகங்கள்குழுமிகுமுறின - மேகங்கள் கூட்டமாகிக்குமிறி, குளிர்துளிகொணர்ந்த - குளிர்ந்த துளிகளைச்சொரிந்தன, முழுவில் வேடரு முனிவரின் முனிகிலர் - முழுவில்லேந்திய வேடர்களும் முனிவரைப்போல முனிவொழிந்தனர்,உழுவையின் முலைமானிளங் கன்றுகளுண்ட - புலியின் முலையை மானிளங்கன்றுகளுண்டு, உயிரைத்தழுவி நின்றன பகையில பசி யிலதணிந்த - உயிரைத்தழுவி நின்று பகையில வாகியும் பசியிலவாகியுந் தணிந்தன.—

வேடரும் முனிவர்போல் முனிவொழிந்தமையும், உழுவையின் முலை மானிளங்கன்றுக ளுண்டமையும் சீராமனடைந்த விசேடத்தினை விளக்கி நின்றன. உண்டஎன்றது வினையெச்சமுற்று. (௪௧)

(4) கல்லைக்கிடந்தகடுவெந்தயர்கின்றகதழ்பாம்
பல்லலுற்றிலவலைபுனற்கிடந்தனவனைய
வல்லையுற்றவேய்புற்றெடுமெரிவனமணிவாழ்
புல்லெயிற்றிளங்கன்னியர்தோளெனப்பொலிந்த.

(இ - ள்.) கல்லளை கிடந்து அகடுவெந்து அயர்கின்ற கதழ்பாம்பு - மலைமுழையிற்றங்கி வயிறுவெந்து தளரும் சினத்தையுடைய பாம்பு, அல்லல் உற்றில - துயரமெய்திலவாகி, அலைபுனற் கிடந்தனவனைய - அலையையுடைய நீரிடைக்கிடந்தா லொத்தன, வல்லையுற்ற வேய்புற்றொடு மெரிவன - விரைவாயுற்ற மூங்கில்புற்றினோடும் வெந்துபோவன, மணிவாழ் புல்லெயிற்றிளங்கன்னியர் தோளெனப்பொலிந்த - முத்தந்தங்குகின்ற புன்மையாகிய பற்களையுடைய இளம்பெண்கள் தோளென விளங்கின.—

வேய்புற்றொடு மெரிவனமணிவாழ் புல்லெயிற்றிளங் கன்னியர்தோட்குவமை கூறினார். கல்லளை - மலைமுழை. ()

(5) படர்ந்தெழுந்தபுல்பசுநிறக்கம்பளம்பரப்பிக்
கிடந்தபோன்றனகேகையந்தோகைகள்கிளர
மடந்தைமாரெனநாடகம்வயின்றொறுநவின்ற
தொடர்ந்தபாணரிற்பாங்கிசைமுரன்றனதும்பி.

(இ - ள்-) படர்ந்தெழுந்த புல் - படர்ந்தோங்கிய புல், பசுநிறக் கம்பளம்பரப்பி - பசுமையாகிய நிறத்தையுடைய கம்பளத்தைப்பரப்பி, கிடந்த போன்றன - கிடந்தனவொத்தன, கேகையந் தோகைகள்கிளர - மயில்கள் தோகைகள் விளங்க, மடந்தைமாரென நாடகம் வயின்தொறு நவின்ற-பெண்களென நாடகத்தைப் பலவிடங்களினுஞ் செய்தன, தொடர்ந்த பாணரின் பாங்கிசைமுரன்றனதும்பி - வண்டுகள் தொடர்ந்த பாணரே போலப்பாங்காக இசைபாடின.—

கேகையம் - மஞ்ஞை, மயினட மாடலை நாடகமடந்தையர்க்கும், தும்பி இசைபாடலைப் பாணரிசைக்கு முவமை கூறினார். (சரு)

(6) காலமின்றியுங்கனிந்தனகனிநெடுங்கந்தம்
மூலமின்றியுமுகிழ்த்தனநிலனுறமுழுதும்
கோலமங்கையரொத்தனகொம்பர்களின்பச்
சீலமன்றியுஞ்செய்தவம்வேறுமொன்றுளதோ.

(இ - ள்.) காலமின்றியும் கனிகனிந்தன - பழங்கள் காலமல்லாத காலத்தும் பழுத்தன, நெடுங்கந்தம் - நெடியமணம், மூலமின்றியுமுகிழ்த்தன - காரணமில்லாமலும் வீசின, நிலனுறமுழுதும் - நிலத்திடைப் பொருந்தமுற்றும், கொம்பர்கள் கோலமங்கையர் ஒத்தன, கொம்புகள் ஒப்பனை செய்தமடவாரை யொத்தன, இன்பச்சீல மன்றியும்செய்தவம் வேறுமொன்றுளதோ-இன்பம்பயக்கு மொழுக்க மல்லாமலுக்குச் செய்தற்குரிய தவம்வேறொன்றுண்டோ.—

கவி வெய்யவனுடுபதியெனக் கதிருகுத்தானென்பனமுதலாக விதந்தார். இன்பச்சீல மன்றியுஞ்செய்தவம் வேறுமொன்றுளதோ என்பது வேற்றுப் பொருள்வைப்பு. (சச)

(7) எயினர்தங்கிடமிருடிகளிருப்பிடமேய்ந்த
வயின்வயின்றொறுமணிநிறக்கோபங்கண்மலர்ந்த
பயின்மரந்தொறும்பரிந்தனபேடையைப்பயிலுங்
குயிலிரங்கினகுருந்தநின்றரும்பினமுருந்தம்.

(இ - ள்.) எயினர்தங்கிடம் இருடிகளிருப்பிடமேய்ந்த - வேடர்வசிக்குமிருக்கை முனிவரிருக்கையை யொத்திருந்தன, வயின்வயின்றொறும் - பலவிடங்களெல்லாம், மணிநிறம்கோபங்கள் மலர்ந்த - மாணிக்கநிறத்தையுடைய இந்திரகோபங்கள்மலர்ந்தன, பயின்மரந்தொறும் பரிந்தனபேடையைப்பயிலும் குயிலிரங்கின - பிசினையுடைய மரங்களிலெல்லாம் பரிந்திருக்கின்றனவாகிய பேடைகளோடுபெழகிய குயில்களிரங்கின, குருந்தநின்றரும்பின முருந்தம்-குருந்தமரநின்று முருந்தமரும்பிநின்றன.—

எயினரென்றது பாலைநிலமாக்களை. அடுக்குப்பன்மை. கோபமென்றதுஇந்திரகோபத்தை;குறைந்துநின்றது. முருது – வெண்குருத்து. (சரு)

(8) பந்தருட்புரைபாசறைப்பொருள்வயிற்பருவந்
தந்தகேள்வரையுயிருறத்தழுவினர்பிரிந்த
கந்தவோதியர்சிந்தையிற்கொதிப்பதக்கழலோர்
வந்தபோதவர்மனமெனக்குளிர்ந்ததவ்வனமே.

(இ-ள்) அக்கழலோர் வந்தபோது-அவ்வீரகண்டையணிந்தார் வந்தடைந்தபோது, அவர்மனமெனச்குளிர்ந்தது அவ்வனம்-அவர்நெஞ்சமெனக்குளிர்ந்ததாகிய அக்காடு, பந்தர் உட்புரை - பந்தரெனப்படும் உள்ளிடமாகிய, பாசறை - பாசறையில், பொருள்வயிற்பருவம் தந்தகேள்வரையுயிருறத் தழுவினர் -பொருள்வயிற்பிரிவுநாடி இத்தனைநாளில் வருவேமெனச்சென்றதலைவரையுயிர்பொருந்தத்தழுவி, பிரிந்தகந்தவோதியர்-பிரிந்தமணங்கமழுங்கூந்தலையுடையார்,சிந்தையிற்கொதிப்பது-மனத்தைப்போலும் கொதிப்பது.எ-று.

இலைபடர்குடிலாதலாற்பந்தருட் புரைபாசறையென்றார். கழலோரென்றது சீராமலக்குவரை. பொருள்வயிற்பிரிதலென்றது தாயப்பொருளாற்பிதிர்க்கடன் செய்தலாகாதென்பது நீதி நூற்றுணிபாகலாற் பிறபிரிவுகளுளவேனுமிதனையே கூறினார். இவ்வெட்டுச்செய்யுளானும் சுரத்தின் விசேடமுணர்த்தப்பட்டது. (சசு)

வெளிறுநீங்கியபாலையைமெல்லெனப்போனார்
குளிறுவான்மதிக்குழவிதன்சூல்வயிற்றெளிப்பப்
பிளிறுமேகத்தைப்பிடியெனப்பெரும்பனைத்தடக்கைக்
களிறுநீட்டுமச்சித்திரகூடத்தைக்கண்டார்.

(இ - ள்.) வெளிறுநீங்கிய பாலையை - வயிரநீங்கிய பாலைவனத்தை, மெல்லெனப்போனார் - மெல்லெனக்கடந்து, குளிறுவான் மதிக்குழவி - ஒலிக்கின்ற வானிடத்துமதி, தன் சூல்வயிற்றெளிப்ப - தன்சூல்கொண்ட வயிற்றிலொளித்தலான், பிளிறுமேகத்தை - ஒலிக்கின்ற மேகத்தினை, பிடியெனப் பெரும்பனைத்தடக்கைக்களிறுநீட்டும் - பிடியென்னப் பெரியபனைபோன்ற தடக்கையையுடைய களிற்றியானை நீட்டுகின்ற, அச்சித்திர கூடத்தைக் கண்டார்-அச்சித்திரகூடமலையைக்கணடனர்.

இறைவன்சென்றவழிபாலைதளிர்த்தலான் 'வெளிறுநீங்கியபாலை'என்றார். வயிரமில் மரத்தை வெளிறெனல் வழக்கு நோக்கின வென்பர் பரிமேலழகரும். போனார் வினையெச்சமுற்று. இது கவிக்கூற்று. (சஎ)

வனம்புகுபடலம் முற்றிற்று.

சித்திரகூடப் படலம்.

இறைவன் தாய் சொன்மேற்கொண்டு கான்படர்ந்துழிச் சித்திரகூடத்தையடைந்த செய்தியை யுணர்த்தும் பகுதியைக் குறித்து நின்றது. படல முறைமையுமிதனனே விளங்கும். இதனைப் 'பிளிறுமேகத்தைப் பிடியெனப் பெரும்பனைத் தடக்கைக், களிறு நீட்டமெச் சித்திரகூடத்தைக் கண்டார்' எனமேற்றோற்றுவாய் செய்தமை யானுமுணர்க.

நினையுந்தேவர்க்குநமக்குமொத்தொருநெறிநின்ற
அனகனங்கணனாயிரம்பெயருடையமலன்
சனகன்மாமடமயிற்கந்தச்சந்தனஞ்செறிந்த
கனகமால்வரையியல்பெலாந்தெரிவுறக்காட்டும்.

(இ - ள்.) நினையுந் தேவர்க்கும் நமக்கு மொத்து - யாவரானு மெண்ணப்படும் தேவருக்கும் ஒன்றுங்கும் பற்றாத நமக்குமொத்து, ஒருநெறிநின்ற அனகன் அங்கணன் ஆயிரம் பெயருடைய வமலன் - ஒருவழியினின்ற பரிசுத்தனும் அழகியகண்ணுடையானும் ஆயிரம்பெயருடையானுமாகிய இறைவன், சனகன்மாமடமயிற்கு - சனகிக்கு, அந்தச்சந்தனஞ்செறிந்த கனகமால் வரையியல்பெலாந் தெரிவுறக்காட்டும் - அச்சந்தனமரங்களடர்ந்த பொன்னையுடைய பெரியமலையினியலனைத்துந் தெரியக்காட்டுவான்—எ-று.

யாவரிடத்தும் எள்ளினெய்போல் நிறைந்திருத்தலான் நினையுந்தேவர்கு நமக்குமொத்தொருவழி நின்ற என்றும், தூய்மையனாகலான் அனகனென்றும், இரக்கமுடையனாகலான் அங்கண னென்றும், மறைகூறும்பல பெயரினனாகலான் ஆயிரம் பெயருடை அமல னென்றுங்கூறினார். ஆயிரம்பெயருடையமல னென்பதனைப்* 'பேருமோராயிரம்பிறபலவுடைய வெம்பெருமான்' எனப்பெரியாரும் பணித்தமையானுமுணர்க. சனகன்மாமடமயிலென்றது சனகியை. அந்தக்கனகமால்வரை என்றது சித்திரகூடத்தை. இதுகவிக்கூற்று. (க)

(1) வாளும்வேலும்விட்டளாயினவனையகண்மயிலே
தாளினேலமுமாலமுந்தொடர்தருசாரல்
நீளமாமலைதுயில்வன நீருண்டகமஞ்சூற்
காளமேகமுநாகமுந்தெரிகிலகாணாய்.

(இ - ள்.) வாளும் வேலும் விட்டளாயின அனையகண்மயிலே - வாளையும் வேலையும் சேர்த்தளவியதொத்த கண்ணையுடைய மயிலன்னாளே! தாளினேலமும் ஆலமும் தொடர்தருசாரல் - தாளினையுடைய ஏலமும் ஆலவிருக்கமுந்தொடர்ந்தசாரல், நீளமாமலை துயில்வன - நீளமாகியபெரிய மலையிடத்துத்தங்குவனவாகிய, நீருண்டகமஞ்சூல்காளமேகமும்நாகமுந்தெரிகிலகாணாய் - நீரையுண்ட நிறைவையுடைய சூல்கொண்டகரியமேகமும் யானையும் வேறுபாடு தோன்றாதனபாராய்.—

* திருவாய்மொழி, செ. உசு.

உடலிற்சென்றவருத்துதல் போலாதுயிர்புக்கு வருத்துதலின்கண்ணை வாளும்வேலும் விட்டாளாயினவளையகண் என்றார். ஏலத்தாலும், ஆலினாலு முறையே சமஞ்சூற்காளடேகமும் நாகமுந்தெரிகில வென்றதென்க. ஏலமு மாலமுமென்புழி ஆலமென்றதனைத் தமாலமெனக்கொண்டுரைக்கினுமமை யும்; அற்றாயிற்குறைந்துநின்றது. * 'சமப்நிறைவு' என்பதனானறிக. (உ)

(2) குருதிவாளெனச்செவ்வரிபரந்தகட்குயிலே
மருவிமால்வரையும்பரிற்குதிக்கின்றவருடை
சுருதிபோற்றெளிமரகதக்கொழுஞ்சுடர்சுற்றப்
பருதிவானவன்பசும்பரிபுரைவனபாராய்.

(இ - ள்.) குருதிவாளெனச் செவ்வரிபரந்தகண்குயிலே - உதிரக்கறை பூசியவாள்போலச் செவ்வரிபரந்தகண்ணையுடைய குயில்போல்வாளே! மால் வரை உம்பரில் மருவி குதிக்கின்றவருடை - பெரியமலைமேற் பொருந்திக்கு திக்கின்றமலையாடு, சுருதிபோல்தெளிமரகதக் கொழுஞ்சுடர்சுற்ற - வேதம் போலத்தெளிந்த பச்சையின் கொழுமையாகிய ஒளிசுற்றுதலினால், பருதிவா னவன் பசும்பரிபுரைவனபாராய் - ஞாயிற்றின்பச்சைக்குதிரை யொப்பனகா ணாய்.—

செவ்வரிபரந்தகண்ணாகலிற் குருதிவாட்குவமை கூறினார். வருடை என் றது; மலையாடு. இறைவன்வண்ணப்பொலிவாகலின் மரகதக்கொழுஞ் சுடரை ச்சுருதிபோற்றெளிந்த வென்றார். உம்பரிற்றாவும் வருடைமேன் மரகதச்சு டர்சுற்றப் பருதிவானவன் பசும்பரிபுரைவன வென்றியைக்க. (ரு)

(3) வடங்கொள்பூண்முலைமடமயிலேமதக்கதமா
அடங்குபேழ்வயிற்றரவுரியமைதொறுந்தொடக்கித்
தடங்கடோறுநின்றுடுவதண்டலையயோத்தி
நுடங்குமாளிகைத்துகிற்கொடிநிகர்ப்பனநோக்காய்.

(இ - ள்.) வடங்கொள்பூண்முலை மடமயிலே - வடங்கொண்டு அணி கலப்பூணந்த முலையையுடைய இளமயில்போல்வாளே! மதக்கதமா - மதத் தையுடையயானை, அடங்குபேழ்வயிற்றரவுரி - அடங்கிய பிளந்தவயிற்றை யுடைய பாம்பினுரி, அமைதொறுந்தொடக்கி - மூங்கில்களிலெல்லாம் பிணித்து, தடங்கடோறு நின்றுடுவ - இடங்கடோறு நின்றுடுவன, தண் டலைஅயோத்தி-சோலைசூழ்ந்த அயோத்தியில், மாளிகைநுடங்குதுகிற்கொடி நிகர்ப்பனநோக்காய்-மாளிகைகளில் அசைகின்றதுகிற்கொடியை யொப்பன பாராய்.—

மதக்கயமாவடங்கும் பேழ்வயிற்றரவுரி மூங்கில்கடோறுஞ் சுற்றப்பட்டு நின்றுடுவன அயோத்திமாளிகை நுடங்குதுகிற் கொடியைநிகர்ப்பன வென் றியைக்க. பூண்முலை என்புழிப் பூண்சாதியடை. அமை - மூங்கில். தண் டலை என்றது சோலையை. (சு)

* தொல், சொல், சூ. ரூடுடு.

(4) உவரிவாயன்றிப்பாற்கடலுதவியவமுதே
துவரிணீண்மணித்தடந்தொறுமிடந்தொறுந்துவன்றிக்
கவரிபானிறவால்புடைபெயர்வனகடிதிற்
பவளமால்வரையருவியைப்பொருவியபாராய்.

(இ - ள்.) உவரிவாயன்றி-உவர்க்கடலினன்றி, பாற்கடலுதவியவமுதே-பாற்கடலளித்தவமுதன்றோ! துவரிணீண்மணித்தடந்தொறும்-பவளத்தாலாகியநீண்ட அழகியபொய்கைதோறும், இடந்தோறும்-மற்றை இடங்கடோறும், துவன்றி-சேர்ந்து, கவரிபால்நிறவால்கடிதில்புடைபெயர்வன - கவரியினது பானிறத்தையுடைய வால்விரைவாய்ப் புடைபெயர்ந்து செல்வன, பவளமால்வரையருவியை பொருவியபாராய்-பெரியபவள மலையினருவியை நிகர்ப்பன காணாய்.—

உவரிவாயன்றி என்பதற்கு உவர்க்கடலைப்பகைத் தெனினுமமையும். பாற்கடலமுதே என்றார்பாற்கடலிற்றோன்றிய திருமாமகளி னவதாரமென்றுணர்த்தற்கு. பவளத்தடந்தொறும் பானிறக்கவரிவால்புடை பெயர்ந்துசெல்வன பவளமால்வரை யருவியைப்பொருவிய என்றியைக்க. (ரு)

(5) சலந்தலைக்கொண்டசீயத்தாற்றனிமதக்கதமா
உலந்துவீழ்தலிற்சிந்தினவுதிரத்தின்மடவார்
புலந்தகாலையற்றுக்கனகுங்குமப்பொதியிற்
கலந்தமுத்தெனவேழமுத்திமைப்பனகாணாய்.

(இ - ள்.) சலந்தலைக்கொண்டசீயத்தால் - கோபமேற்கொண்ட சிங்கத்தால், தனிமதக்கதமா - ஒப்பற்றமதத்தையுடையயானை, உலந்துவீழ்தலின் உதிரத்தின்சிந்தின - உலந்துவிழுவதனால் உதிரத்திற்சிதறின, மடவார்புலந்தகாலையற்று உக்கன - பெண்கள்பிணங்கியகாலத்து அறுந்துசிந்தினவாகி, குங்குமப்பொதியில் கலந்தமுத்தென-குங்குமப்பொதியினிடத்துச் சேர்ந்தமுத்தமென, வேழமுத்திமைப்பனகாணாய்-யானைக்கோட்டின் முத்தம்பிரகாசிப்பனபாராய்.—

சிங்கத்தால் யானை உலந்துவிழுதலான் சிந்தின உதிரத்தின் மாதர் புலந்தவிடத்துச் சிந்திக்குங்குமப்பொதியிற் சேர்ந்தமுத்தமென வேழமுத்திலங்குவது பாரெனமுடிக்க. (சு)

(6) நீண்டமால்வரைமதியுறநெடுமுடிநிவந்த
தூண்டுமாமணிச்சுடரதன்கற்றையிற்சொருக
மாண்டவானிறவருவியம்பழவிடைப்பாகன்
காண்டகுஞ்சடைக்கங்கையைநிகர்ப்பனகாணாய்.

(இ - ள்.) நீண்டமால்வரைமதியுற - மிகநீண்டமலையினிடத்துச் சந்திரன்பொருந்த, நெடுமுடிநிவந்த - நெடியமுடியிடத்தோங்கிய, தூண்டுமாம

ணிச்சுடர் - தூண்டுகின்றபெரிய மணியினொளி, அதன்கற்றையிற்சொருக- அதனுடைய கற்றையிடத்துச்சொருகலான், மாண்டவானிறவருவி - மாட்சிமைப்பட்ட வெண்மைநிறமாகிய அருவி, அம்மழவிடைப்பாகன் காண்டகுஞ் சடைக்கங்கையை நிகர்ப்பனகாணாய் - அவ்விளமையாகியவிடபமேறுஞ் சிவபெருமான் சடையின் கங்கையையொத்திருப்பன பாராய்.—

சொருகவென்பது காரணப்பொருட்டாகிய செயவெனெச்சம், மால்வரைமதி அவ்வரைமுடியில்தூண்டுமாமணிச்சுடர்க் கற்றையிற்சொருகலான் மாட்சிமைப்பட்ட வெண்ணிறவருவி மழவிடையான் சடையிற்சூடியகங்கையை யொக்குமெனமுடிக்க. (எ)

(7) தொட்டமாசுணஞ்சுடரொளிமணியொடுந்தூவி
விட்டசென்றனவிடாமதமழையனவேழம்
வட்டவேங்கையின்மலரொடுந்தழைந்தனவயங்கும்
பட்டநெற்றியிற்சுற்றியபோல்வனபாராய்.

(இ - ள்.) தொட்டமாசுணம் - தொட்ட பெரும்பாம்பு, சுடரொளிமணியொடும்-மிக்கவொளியையுடையமணியினோடும், தூவிவிட்டசென்றன- தூவிவிடப்பட்டுப்போயின, விடாமதமழையனவேழம்-விடாத மதமாகியமழையையுடையனவாகிய யானை, வட்டவேங்கையின்மலரொடுந் தழைந்தன- வட்டமாகிய வேங்கைப்பூவோடு நிரம்பியிருப்பன, வயங்கும்பட்டம் நெற்றியிற்சுற்றிய போல்வனபாராய் - பிரகாசிக்கும்பட்டம் நெற்றியிற்சுற்றப்பட்டிருப்பன வொப்பனகாணாய்.—

வேங்கைஅத்திணைக்கருப்பொருள். மாசுணம்-பெரும்பாம்பு.மதத்தின்மிகுதியான் விடாமதமழையென்றார். யானைவேங்கைமலரைமணியொடுபொருந்தியிருப்பனநெற்றிப்பட்டம்போல்விளங்குமெனமுடிக்க. வட்டமென்பதுவிருத்தமென்னும்வடசொற்சிதைவு. சுடரொளி ஒருபொருட்பன்மொழி என்பதன்றிவினைத் தொகையாகக்கொண்டு சுடர்கின்றவொளியெனினுமமையும்.

(௮) இழைந்தநூலிணைமணிக்குடஞ்சுமக்கின்றதென்னக்
குழைந்தநுண்ணிடைக்குவியிளவனமுலைக்கொம்பே
தழைந்தசந்தனச்சோலைதன்செலவிணைத்தடுப்ப
நுழைந்துபோகின்றதொக்கின்றமதியினைநோக்காய்.

(இ - ள்.) இழைந்தநூல்-நுணுகியநூல், இணைமணிக்குடம் சுமக்கின்றதென்ன - இருமணிக்குடஞ் சுமப்பதொப்ப, குழைந்தநுண்ணிடைகுவியிளவனமுலைக்கொம்பே - குழைந்தநுணுகிடைதாங்கிய குவிந்த இளமையும் அழகுமுள்ளமுலையையுடையகொம்புபோல்வாளே! தழைந்தசந்தனச்சோலை- தழைந்திருக்கும் சந்தனச்சோலை, தன்செலவினைதடுப்ப - தன்வேகத்தைத் தடுக்க, நுழைந்து போகின்ற தொக்கின்ற - நுழைந்துசெல்வதை யொத்திருக்கின்ற, மதியினை நோக்காய் - திங்களைப்பாராய்.—

நூல் இடைக்கும், மணிக்குடந்தனத்திற்கு முவமை. கொம்புஉருவகம். சந்தனச்சோலை உயர்ச்சிசந்திரனைத்தடுப்பதொப்பது பாரெனமுடிக்க. இழைந்தநூலிணை மணிக்குடஞ் சுமக்கின்ற சென்றது இல்பொருளுவமை. (அ)

(9) உருகுகாதலிற்றழைகொண்டுமழலைவண்டோச்சி
முருகுநாறுசெந்தேனினைமுழைநின்றும்வாங்கிப்
பெருகுசூலிளம்பிடிக்கொருபிறைமருப்பியானை
பருகவாயினிற்கையினின்றளிப்பதுபாராய்.

(இ - ள்.) உருகுகாதலின் - மனமுருகச்செய்யும் அன்பினால், தழைகொண்டு- தழைகளைக்கொணர்ந்து, மழலைவண்டோச்சி-இளமையாகிய வண்டுகளையோட்டி, முருகுநாறுசெந்தேனினை-மணநாறுஞ்செந்தேனை,முழைநின்றும்வாங்கி - முழையிலிருந்தும் வாங்கி,பெருகுசூல்-பெருகியகருவினையுடைய, இளம்பிடிக்கு - இளமையானபெண்யானைக்கு, ஒருபிறைமருப்பியானை - ஒருபிறைபோலுங் கோட்டினையுடையயானை, பருகவாயினில்-உண்ணவாயினிடத்து,கையினின்றளிப்பதுபாராய்-கையினிடத்திருந்துகொடுப்பதுகாணாய் —

காதலான்வண்டோச்சிச் செந்தேனை முழைநின்றும் வாங்கிக்கருக்கொண்ட இளம்பிடிக்கு ஒருபிறைமருப்பியானையுண்ணவாயிற்கையினின்றளிப்பனபாரெனமுடிக்க. பிறை - என்றது மருப்புக்குவமை. (கூ)

(10) அளிக்குநாயகன்மாயைபுக்கடங்கினனெனினுங்
களிப்பிலிந்தியத்தியோகியைக்கரக்கிலனதுபோல்
ஒளித்துநின்றுளராயினுமுருத்தெரிகின்ற
பளிக்கறைச்சிலபரிமுகமாக்களைப்பாராய்.

(இ - ள்.) அளிக்குநாயகன் மாயைபுக்கடங்கின னெனினும் - அனைத்துயிரையுங்காக்குமிறைவன் மாயையாற் றோன்றப்படாமலிருந்தானாயினும், களிப்பில் இந்தியத்து யோகியை கரக்கிலன் - மயக்கமில்லாத இந்தியங்களையுடைய யோகிக்குத் தோன்றுதிரான், அதுபோல் - அதுபோல, ஒளித்துநின்றுளராயினும் - மறைந்து நின்றனரேயாயினும், உருத்தெரிகின்ற-உருத்தோன்றுகின்ற, பளிக்கறைசிலபரிமுக மாக்களைப்பாராய் - பளிக்கறையிற்சில பரிமுகமுடையாரைக் காணாய்.—

அளிக்குநாயகனென்றது திருமாலை; அவ்விறைவன் தன்விச்சுவ மாயையிற்கரப்பினுமிந்தியமவித்தயோகியர்க்குக் கரவாமைபோல், பரிமுகமாக்கள் கரக்கினும் பளிக்குப் பாறையிற் றோன்றுகின்றமையான் அவனையே யுவமைகூறினர். (கக)

(11) ஆடுகின்றமாமயிலினுமழகியகுயிலை
கூடுகின்றிலர்கொடிச்சியர்தம்மனங்கொதிப்ப
ஊடுகின்றனர்கொழுநரையுருகினர்நோக்கப்
பாடுகின்றனகின்னரமிதுனங்கள்பாராய்.

(இ - ள்.) ஆடுகின்ற மாமயிலினு மழகிய குயிலே - ஆடா நிற்கின்ற கரிய மயிலினு மழகமைந்த குயில் போல்வாளே! கூடுகின்றிலர் - கூடாமல், கொடிச்சியர் தம்மனங்கொதிப்ப-வேடமாதர்தம் மனம்வருந்த, கொழுநரை ஊடுகின்றனர் - தலைவரோடூடி, உருகினர் நோக்க - மனமுருகிப்பார்க்க, பாடுகின்றன கின்னரமிதுனங்கள் பாராய் - பாடாநிற்பனவாகியகின்னர மிதுனப் பறவைகளைக் காணாய்.—

குயிலே யென்றது தன்னொடு விளையாடலானென்க; கொடிச்சியர் கொண்டவூடலைக் கின்னர மிதுனங்கள் பாடியதனைத் தீர்க்கின்றதென்பதாம். ஊடுகின்றன என்றது வினையெச்சமுற்று, உருகினரென்பதுமது. கின்னரமிதுனமென்றது பாடும் பறவையின் விசேடம். (கஉ)

(12) வில்லிவாங்கியசிலையெனப்பொலிநுதல்விளக்கே
வல்லிதாங்கழைதாக்கலின்வழிந்திழிபிரசங்
கொல்லிவாங்கியகுன்றவர்கொடிநெடுங்கவலை
கல்லிவாங்கியகுழிகளைநிறைப்பனகாணாய்.

(இ - ள்.) வில்லிவாங்கிய சிலையெனப் பொலி நுதல்விளக்கே - வில்லிவளைத்த வில்லென விளங்குநெற்றியை யுடைய விளக்குப்போல்வாளே! வல்லிதாங்கழைதாக்கலின் - கொடிகள் தாவுமூங்கிலைத் தாக்கலான், வழிந்திழி பிரசம் - வழிந்திழிகின்றதேன், கொல்லிவாங்கிய குன்றவர் - அரிவாளைக் கைக்கொண்ட வேடர், கொடி நெடுங்கவலை - நீண்டகவலைக்கொடிகளை, கல்லிவாங்கிய குழிகளை நிறைப்பன காணாய் - தோண்டியெடுத்த குழிகளை நிரப்புவன பாராய்.—

வில்லி சாதிவிசேடம். நுதலைச்சிலைக்குவமை கூறினார். விளக்கே என்றார் தன்பிறந்தகத்தையும், புக்ககத்தையும் தன் கற்பான் விளக்கினமையானென்க. கொடிதாக்கலான் வழிந்திழியுந்தேன் வேடர்கவலைக் கொடிகளைக் கல்லுதலா லுண்டாகிய குழிகளைநிறைப்பன வென்றியைக்க. கொல்லி- அரிவாள். கவலை-கொடியின் விசேடம். கொடிக்கவலை இருபெயர்ப்பண்பு. (கரு)

(13) ஒருவில்பெண்மையென்றுரைக்கின்றவுடலினுக்குயிரே
மருவுகாதலினிதுடனாடியமந்தி
அருவிநீர்கொடுவீசத்தானப்புறத்தேறிக்
கருவிமாமழையுதிர்ப்பதோர்கடுவனைக்காணாய்.

(இ - ள்.) ஒருவில் பெண்மை யென்றுரைக்கின்ற உடலினுக்குயிரே -நீங்குதலில்லாத பெண்டன்மை யென்றுரைக்கப்படுமுடலுக்குயிர்போல்வாளே! மருவுகாதலின் இனிதுடனாடியமந்தி - பொருந்திய ஆசையாளினிமையோடாடிய பெண்குரங்கு, அருவி நீர்கொடுவீச - அருவிநீரைக் கையிற்கொண்டுவீச, தானப்புறத்தேறி - தானப்புறஞ்சென்று, கருவிமாமழையுதிர்ப்பதோர் கடுவனைகாணாய்-மின்னுமுழக்கு மவற்றது தொகுதியுமுடைய கரியமழையை யுதிர்ப்பதாகிய வொரு ஆண்குரங்கைப்பாராய்.—

பெண்மைஎன்றது பெண்டன்மையை, அதுகட்கமைதித்தன்மை யென்பர் நச்சினார்க்கினியரும். நாண்மடம் அச்சம்பயிர்ப் பென்பன நீங்காதிருப்பதே பெண்ணலமாகலின் ஒருவிற்பெண்மை யென்றார். பெண்மையை யுடலாகவும், சனகியை அதற்குயிராகவுமுவமை முகத்தாற் கூறினார். மந்தியருவி நீர்கொண்டுவீசத் தானப்புறத்திற் சென்றுகருவி மாமழையைக் கடுவனுதிர்க்கின்றதென்பதாம். மந்தி - பெண்குரங்கு. கடுவன் ஆண்குரங்கு. கருவியென்பதுமின்னுமுழக்கு மவற்றின் றொகுதியுமென்பர்சேனாவரையனா யுள்ளிட்டவுரையாசிரியரும். (கச)

(14) வீறுபஞ்சின்றியமுதநெய்மாட்டியவிளக்கே
சீறுவெங்கதிர்செறிந்தனபேர்கலதிரியா
மாறின்மண்டிலநிரப்பியமாணிக்கமணிக்கற்
பாறைமற்றொருபரிதியிற்பொலிவனபாராய்.

(இ - ள்.) வீறுபஞ்சின்றி - மிகுந்தபஞ்சில்லாது, அமுதநெய்மாட்டிய விளக்கே - அமுதமயமான நெய்விட்டெரிக்கும் விளக்கொப்பாளே! சீறுவெங்கதிர்செறிந்தன - வருத்துகின்ற கொடிய பிரகாசம் பொருந்தினவும், பேர்கல - இடம்விட்டுப் பெயராதனவும், திரியா - மாறுபடாதனவுமாகிய, மாறில்மண்டில நிரப்பிய மாணிக்க மணிக்கற்பாறை - வேறுபாடில்லாத மண்டலநிரம்பியுள்ள மாணிக்கமாகிய மணிக்கற்பாறை, மற்றொருபரிதியிற் பொலிவனபாராய் - வேறொரு ஞாயிறுபோல விளங்குவன காணாய்.—

பஞ்சின்றிநெய்மாட்டியவிளக்கேயென்றது கற்புடைமையின் சிறப்புத்தோன்றற்கென்க. மாணிக்கக் கற்பாறைவேறொரு ஞாயிற்றின் மண்டிலம் போல் விளங்குமென்பதாம். மண்டிலம் - வட்டம். செறிந்தன பேர்கில திரியா என்னுங்குறிப்பு முற்றுகள் முறையேபெயரெச்சமாய் மாணிக்கமணிக்கற்பாறை யென்பதனோடு முடிந்தன. (கரு)

(15) சீலமின்னதென்றருந்ததிக்கருளியதிருவே
நீலவண்டினம்படிந்தெழவளைந்துடனிமிர்வ
சோலைவேங்கையின்கொம்பர்கள்பொன்மலர்தூவிக்
காலினிற்றொழுதொழுவனநிகர்ப்பனகாணாய்.

(இ - ள்.) சீலமின்னதென்று அருந்ததிக் கருளியதிருவே-ஒழுக்கமின்னபடி யென்றருந்ததிக் குதவியதிருவன்னவளே! நீலவண்டினம் - நீலநிறத்தையுடைய வண்டின் கூட்டம், படிந்தெழ - படியாநின்றெழ, வளைந்துடனிமிர்வ-வளைந்துடனே நிமிர்வனவாகிய, சோலைவேங்கையின் கொம்பர்கள்-சோலையிலுள்ள வேங்கையின் கொம்புகள், பொன்மலர் தூவி - பொன்னிற மலர்களைச்சொரிந்து, காலினிற்றொழு தெழுவன நிகர்ப்பன காணாய்-காலின்கண் தொழுது வணங்குவன வொத்திருப்பன பாராய்.—

கற்பானுகிய நீயே தீக்கடவுளைச் சுட்டதென இலங்கையிற் சனகி தீ யிடைமூழ்கி யெழுந்தகாலத்திற் கூறுதலான் சீலமின்னதென் றருந்ததிக்கரு ளிய திருவேயென்றார். வேங்கை மலர் சொரிவது சனகிகாலிற் றாய்த்தொ ழுது வணங்குவதொக்கு மென்பதாம். அருந்ததி - வசிட்டமுனிவன் மனை வி, அவளைவடமீனென்பதுமொன்று. இதுதற்குறிப்பேற்றம். (கசு)

16 விற்கொள்வாணுதல்விளங்கிழையிளந்தளிர்க்கொழுந்தே
எற்கொண்மால்வரையும்பரினிரும்புனங்காக்கும்
கொற்கொள்வேற்கணார்குரீஇயினத்தெறிகுருவிந்தக்
கற்கள்வானிடைமீனெனவீழ்வனகாணாய்.

(இ - ள்.) வில்கொள்வாணுதல் விளங்கிழை இளந்தளிர்க்கொழுந்தே- வில்லைக்கொண்ட ஒளியமைந்தநெற்றியையும்விளங்குகின்ற வாபரணத்தையு முடையஇளந்தளிர்க்கொழுந்துபோல்வாளே! எல்கொள்மால்வரை உம்பரின்- ஞாயிறுதவழும் பெரியமலையின்மேல், இரும்புனங்காக்கும் கொல்கொள் வேற்கணார் - பெரியபுனத்தைக்காக்கும் கொல்லனுற் சமைக்கப்பட்ட வேல் போன்றகண்ணையுடையார், குரீஇயினத்தெறிகுருவிந்தக்கற்கள்-குருவியினத் தின்மேல்எறிகின்ற குருவிந்தக்கற்கள், வானிடைமீனென வீழ்வனகாணாய்- வானிடத்து உடுக்கணமெனவிழுவனபாராய்—

எற்கொள்என்பதற்குஒளிவிளங்கியஎனினுமமையும். கொல்-சொல்லா லஃறிணை. மேனியானிளந்தளிர்க்கொழுந்தென்றார். எல்ஆகுபெயர். எல் கொள்மால்வரை உயர்வு நவிற்சி. வானிடைமீன்எனப்பிறிதினியைபு நீக்கிய விசேடணத்தான் உடுக்களை உணர்த்திற்று. (கஎ)

17 வரிகொளொண்சிலைவயவர்தங்கணிச்சியின்மறிந்த
பரியகாரகில்சுடநிமிர்பசும்புகைப்படலம்
அரியவேதியராகுதிப்புகையொடுமளவிக்
கரியமால்வரைக்கொழுந்தெனப்படர்வனகாணாய்.

(இ - ள்.) வரிகொள் ஒண்சிலைவயவர்தம் கணிச்சியின் மறிந்த - கட்ட மைந்த வொள்ளிய வில்வீரர் மழுப்படையால் தடுக்கப்பட்ட, பரியகாரகில் சுட - பருத்த கரிய வகிற்கட்டையைச் சுடுதலான், நிமிர்பசும்புகை படலம்- ஓங்கிய பசிய புகைக்கூட்டம், அரிய வேதியராகுதிப் புகையொடுமளவி- அரிய நான்மறையாளர் ஆகுதிப்புகை யோடுங்கலந்து, கரியமால்வரைக்கொ ழுந்தெனப்படர்வனகாணாய் - மிகப்பெரிய மலைக்கொழுந்து போற்படரா நிற்பனபாராய்.—

கணிச்சி - மழு, வேதம் - நிரதிசய வீட்டடையு நெறியைக் கூறுவதனன் அரிய வென்றடை கொடுத்துக் கூறினர். ஆகுதி - வேள்வித்தீயினிடும் பொருள். (கஅ)

18 நானநாண்மலர்நறையகினவிதேனுறும்
சோனைவார்குழற்சுமைபொறுதிடுகிடைத்தோகாய்
வானயாற்றுமீன்மலர்ந்தனவெனப்புனல்வறந்த
கானயாறுகள்கணமணியிமைப்பனகாணாய்.

(இ - ள.) நானம் நாண்மலர் நறையகில் நாவிதேன் நாறும் - கத்தூரியும் அன்றலர்ந்த மலரும் மணங்கமழுமகிற் கட்டையும் நாவியும் தேனும் மணக்கின்ற, சோனைவார்குழற் சுமைபொறுதுஇடுகு இடைதோகாய் -விடாது பொழியுமழைபோலுங் கூந்தற்பாரம் பொறுதுவருந்துகின்ற இடையையுடைய மயில்போல்வாளே! வானயாற்றுமீன் மலர்ந்தன என - வானகங்கையிடத்துத்தவழும் உடுக்கள் தோன்றுவனபோல, புனல்வறந்த-நீர்வறண்ட, கானயாறுகள் - காட்டாறுகள், கணமணி இமைப்பனகாணாய்-கூட்டமாகிய மணிகளை யிமைப்பன பாராய்.—

நான முதலியவற்றான் மிகப்பார முடைமையான் குழற்சுமைபொறுதிடை வருந்தலின் சோனைவார் குழற்சுமை பொறுதிடு கிடை யென்றும், நடையாெனாத்தலின் தோகையென்றுங் கூறினர். வானயாற்றின்கண் உடுக்கணந்தோன்றல் வறண்ட காட்டாற்றிற் கணமணியிமைப்பதற்குவமை கூறியதென்க. இமைத்தல் - பிரகாசித்தல். (கக)

19 மஞ்சளாவியமாணிக்கப்பாறையின்மறைவ
செஞ்செவேநெடுமரகதப்பாறையிற்றெரிவ
விஞ்சைநாடியர்கொழுநரோடூடினர்விமலப்
பஞ்சளாவியசீறடிச்சுவடுகள்பாராய்.

(இ - ள்.) மஞ்சளாவிய மாணிக்கப் பாறையின் மறைவ - மேகமளாவிய மாணிக்கக் கல்லின் மறைந்துபோவனவும், செஞ்செவேநெடுமரகதப் பாறையிற்றெரிவ - மிகச்செம்மையாக நீண்டபச்சைக்கல்லிற் றோன்றுவனவுமாகி, விஞ்சை நாடியர் கொழுநரோடூடினர் - வித்தியாதர மாதர் தங்கணவரோடு பிணங்கி நடந்த, விமலப்பஞ்சளாவிய சீறடிச்சுவடுகள் பாராய் - பரிசுத்தமாகிய செம்பஞ்சூட்டிய சிறிய வடிச்சுவடுகள் காணாய்.—

செம்பஞ்சூட்டிய பாதமாதலின் மாணிக்கப்பாறையின்மறைவவென்றும், மரகதப்பாறையிற்றெரிவவென்றுங் கூறினர். விஞ்சை நாடியரென்பது வித்தியாதரமாதரை; செம்பஞ்சூட்டன் முறையாகலின் விமலப்பஞ்சளாவிய சீறடியென்றார். (உ௰)

20 சுழித்தசெம்பொனின்றொளைபுரையுந்தியின்றுணையே
கொழித்தமாமணியருவியோடிழிவனகோலம்
அழித்துமேவியவரம்பையரறல்புரைகூந்தல்
கழித்துநீக்கியகற்பகநறுமலர்காணாய்.

(இ - ள்.) கழித்தசெம்பொனின் றுளைபுரை உந்தியின் துணையே- கழிக்கப்பட்ட செம்பொனின் றுளையை யொத்த கொப்பூழையுடைய துணையாவாளே ! கொழித்த மாமணி அருவியோடிழிவன-கொழிக்கப்பட்ட பெரிய மணிகள் அருவியுடனிழிந்து வருவன, கோலம் அழித்து மேவிய அரம்பையர் - அலங்காரமழித்துப் பொருந்திய அரமகளிர், அறல்புரை கூந்தல் கழித்து நீக்கிய கற்பக நறுமலர்காணாய்-கருமணலையொத்த குழல்லினின்று கழித்து நீக்கிய கற்பகத்தினறுமணமுடையமலர்களைப்பாராய்.—

துணை - ஆகுபெயர். வானளாவியவையாதலின் அரம்பையர் கூந்தல் கழித்து நீக்கிய கற்பகமலரை மாமணியருவியோடிழிகின்றதென்றார். (உக)

21 அறைகழற்சிலைக்குன்றவரகன்புனங்காவற்
பறையெடுத்தொருகடுவனின்றடிப்பதுபாராய்
பிறையையெட்டினள்பிடித்திதற்கிதுபிழையென்னுக்
கறைதுடைக்குறுபேதையோர்கொடிச்சியைக்காணாய்.

(இ - ள்.) அறைகழல் சிலைகுன்றவர் - ஒலிக்கின்ற வீரகண்டையணிந்தவேடர், அகன்புனங்காவல்-விசாலமாகிய புனத்தின் காவற் கணுள்ள, பறையெடுத்தொரு கடுவனின்றடிப்பது பாராய் - பறையினை யெடுத்தோராண்குரங்குநின்றடிப்பதுகாணாய், பிறையையெட்டினள்பிடித்து-பிறையை யெட்டிப் பிடித்து, இதற்கு இதுபிழையென்னு - இதற்கிது குற்றமென்றெண்ணி, கறைதுடைக்குறு பேதையோர் கொடிச்சியை காணாய் - களங்கத்தை யழிக்கும் பேதையாகிய வோர் குறத்தியைப் பாராய்.—

எட்டினள்-வினையெச்சமுற்று. குன்றவரென்றது வேடரை, பிறையென்றது இளமதியை. (உஉ)

22 அடுத்தபல்பகலன்பரிற்பிரிந்தவரென்ப
தெடுத்துநந்தமக்கியம்புவவெனக்கரிந்திருண்ட
தொடுத்தமாதவிச்சூழலிற்சூரரமகளிர்
படுத்துவைகியபல்லவசயனங்கள்பாராய்.

(இ - ள்.) அடுத்தபல்பகல் அன்பரிற்பிரிந்தவரென்பது - அடுத்தபலநாள் தலைவரினின்று நீங்கினாரெனப்படுவது, நந்தமக்கியம்புவஎன - நமக்கறிவிப்பனபோல, கரிந்திருண்ட-கருகியிருண்டனவாகிய, தொடுத்தமாதவிச்சூழலின் - மலராற்றொடுக்கப்பட்ட குருக்கத்திச்சூழலின்கண், சூரரமகளிர் - அச்சந்தங்கிய அரமடந்தையர், படுத்துவைகிய பல்லவசயனங்கள்பாராய் - படுத்துத்தங்கிய தளிர்ப்படுக்கைகள்காணாய்.—எ-று.

வரையிடங்களின் மாதவிச்சூழலிற்கிடந்தபல்லவசயனங்கள்கரிந்திருண்டன என்பதனான் அடுத்தபற்பகல் அன்பரிற்பிரிதலை விளக்கிற்றென்க. சூர் - அச்சம். அரமகளிர் - தெய்வமகளிர். பல்லவம் - தளிர். சயனம் - படுக்கை. (உங)

23 நினைந்தபோதினுமமிர்தொக்குநேரிழைநிறைதேன்
வனைந்தவேங்கையிற்கோங்கினில்வயின்றொறுந்தொடுத்துக்
குனிந்தவூசலிற்கொடிச்சியரெடுத்தவின்குறிஞ்சிக்
கனிந்தபாடல்கேட்டசுணமாவருவனகாணாய்.

(இ - ள்.) நினைந்தபோதினுமமிர்தொக்குநேரிழை-நினைந்தகாலையினு மமிழ்தமொத்திருக்கின்ற சரியான அணிகலமுடையாளே! நிறைதேன்வனைந்த வேங்கையின் - நிறைந்ததேன் தங்கிய வேங்கையிடத்தும், கோங்கின் - கோங்கினிடத்தும், வயின்றொறும்தொடுத்து-ஒழிந்தபலவிடத்துந் தொடுக்கப்பட்டு, குனிந்தஊசலின்- வளைந்த ஊசலின்கண், கொடிச்சியரெடுத்த-வேடிச்சிகள் எடுத்துப்பாடிய, இன்குறிஞ்சி கனிந்த பாடல்கேட்டு அசுணமாவருவனகாணாய் - இனிமையாகிய குறிஞ்சிப் பண்ணின் கனிந்தபாடலைக் கேட்டு அசுணப்பறவை வருவன பாராய்.—

உள்ளங் களித்தலான் நினைத்த போதினு மமிர்தொக்குமென்றும், தனொத்தவணிபுனைந்தமையானேரிழையென்றுங் கூறினார். குறிஞ்சியென்றது அத்திணைப் பண்ணினை. அசுணப் பாடல்கேட்டு மகிழ்வதென்பதனைக் 'கோதில்யாழ்நறையடுத்தவசுணநன்மா' எனமுற் கூறிப்போந்தமையு மிப்பெற்றி நோக்கி யென்க. (உச)

24 இலவுமிந்திரகோபமும்புரையிதழினியோய்
அலவுநுண்டுளியருவிநீரரம்பையராடக்
கலவைசாந்துசெங்குங்குமங்கற்பகங்கொடுத்த
பலவுந்தோய்தலிற்பரிமளங்கமழ்வனபாராய்.

(இ - ள்.) இலவும் இந்திரகோபமும் புரையிதழினியோய் - இலவம் பழத்தையும்இந்திரகோபத்தையுமொத்த இதழினையுடைய இனியாளே! அலவு நுண்டுளியருவி நீர் அரம்பையர் ஆட - சொரிகின்ற நுட்பமாகிய துளியையுடைய அருவிநீரை அரமகளிராட்டயர, கலவைசாந்து செங்குங்குமம் - கலவையும்சாந்தும் செங்குங்குமமு மாகிய, கற்பகம் கொடுத்த - கற்பகமுதவிய, பலவுந்தோய்தலின் - பலவற்றையுந் தோய்தலினால், பரிமளங் கமழ்வன டாராய் - நறுமணம் வீசுவன காணாய்.—

இலவு மிந்திரகோபமு மிதழ்க்குவமை. கற்பகமென்பது ஐந்தருவினொன்று, வடசொற்சிதைவு. தற்குறிப் பேற்றம். (உரு)

25 செம்பொனாற்செய்துகுலிகமிட்டெழுதியசெப்போர்
கொம்பர்தாங்கியதெனப்பொலிவனமுலைக்கொடியே
அம்பொன்மால்வரையலர்கதிருச்சிசென்றணுகப்
பைம்பொன்மாமுடிமிலைச்சியதொப்பதுபாராய்.

(இ - ள்.) செம்பொனாற் செய்து-செம்பொனாற் செய்யப்பட்டு, குலிக மிட்டு-இங்குலிகத்தையிட்டு, எழுதிய செப்பு-எழுதப்பட்டசெப்பை, ஓர்கொம்பர்தாங்கியதென - ஒரு கொம்பு தாங்கியதென, பொலிவன முலைக்கொடியே - விளங்குகின்ற அழகிய முலையையுடைய கொடிபோல்வாளே! அம்பொன் மால்வரை-மிக அழகிய பெரிய உதயகிரியில் தோன்றிய, அலர்கதிர் உச்சி சென்றணுக - பரந்த கிரணங்களையுடைய ஞாயிறு உச்சிசென்றடைய, பைம்பொன் மாமுடிமிலைச்சிய தொப்பது பாராய்-பசும்பொன்னாற் செய்யப்பட்ட பெரிய கிரீடத்தைத் தரித்த தொப்பது காணாய்.—

செப்போர் கொம்பர் தாங்கியதெனப் பொலிவனமுலைக்கொடி யென்றது இல்பொருளுவமை. வனமுலைக் கொடியென்பதற்கு வனத்துள்ளமுலைக்கொடி யென்றுரைப்பாருமுளர். அலர்கதிர் - அன்மொழித்தொகை. இங்குலிகமென்றது குறைந்து நின்றது. கொம்பர் - இடைக்குறை.

26 மடந்தைமார்களிற்றிலதமேமணிநிறத்திணிகல்
தொடர்ந்தபாறையில்வேயினஞ்சொரிகதிர்முத்தம்
இடந்தொறுங்கிடந்திமைப்பனவெக்கிளஞ்செக்கர்
படர்ந்தவானிடைத்தாரகைநிகர்ப்பனபாராய்.

(இ - ள்) மடந்தைமார்களில் திலதமே - பெண்களிற்றிலதம் போல்வாளே! மணிநிறத் திணிகல் - மாணிக்கமாகியநிறத்தையுடைய திணிந்தகல், தொடர்ந்த பாறையில் - தொடரப்பட்ட பாறையின்கண், வேயினம் சொரிகதிர்முத்தம்-மூங்கிற்கூட்டம் சொரியுமொளியுள்ளமுத்தம், இடந்தொறுங்கிடந்திமைப்பன-பலவிடங்களினுந் தங்கிவிளங்குவன, எக்கிளஞ்செக்கர் படர்ந்த வானிடை - மிக்க இளமையாகிய செவ்வானத்தினிடத்தில், தாரகைநிகர்ப்பனபாராய் - நாண்மீனையொப்பன காணாய்.— (உஎ)

மடந்தைமார்களிற்றிலத மென்றார் அவரை முடிமேற்கொண்டுரைக்கப் படுவதனாலென்க. தாரகைவடசொற்சிதைவு. வேயினஞ்சொரிதரு முத்தமென்றது முத்துப்பிறப்பிட மிருபானிரொருவகையென்பதுபற்றி.மாணிக்கப்பாறையின்கண் வேயின் முத்தம்செவ்வானத்திற் றாரகையொக்கு மென்பதாம்.

27 குழுவுநுண்டொளைவேயினுங்குறிநரம்பெறிவுற்
றெழுவுதண்டமிழ்யாழினுமினியசொற்கிளியே
முழுவதும்மலர்விரியநாண்முருக்கிடைமிடைந்த
பழுவம்வெங்கனல்கதுவியதொப்பனபாராய்.

(இ - ள்.) நுண்டொளைகுழுவுவேயினும் - நுண்ணிய தொளையையுடைய கூட்டமுள்ள மூங்கிலினும், குறுநரம்புஎறிவுற்று- குறகியநரம்புகளெறிந்து, எழுவுதண்டமிழ்யாழினும் - எழுகின்றதண்ணிய இனிமையாகிய வீணையினும், இனியசொல்கிளியே - இனியமொழியையுடைய கிள்ளையே

ப்பாளே! மலர்முழுவதும் விரிய-மலர்கள்முழுதும் விரிய, நாண்முருக்கிடை மிடைந்த-அன்றலர்ந்தமுருக்க மலரிடையேநெருங்கிய,பழுவம்-சோலை, வெங்கனல்கதுவியதொப்பன பாராய்-கொடுந்தழல் மூண்டதொப்பன காணாய்.—

தமிழ்என்றது இனிமையை;இதனைத் 'தமிழ்ப்பாட்டிசைக்கும் தாமரையே' என்பதிற்கூறலானுமுணர்க. கிளி-உருவகம். யாழ்-ஆகுபெயர். மலர்முழுவதும்விரிய நாண்முருக்கிடை மிடைந்தபழுவந்தீக்கதுவிய தொப்பதென்பதாம். பழுவம் - சோலை. (உஅ)

28 வளைகள்காந்தளிற்பெய்தனவனையகைம்மயிலே
தொளைகொடாழ்தடக்கைநெடுந்துருத்தியிற்றாக்கி
அளவின்மூப்பினரருந்தவர்க்கருவிநீர்கொணர்ந்து
களபமால்கரிகுண்டிகைசொரிவனகாணாய்.

(இ - ள்.) வளைகள்காந்தளிற் பெய்தனவனையகைம்மயிலே - வளைகள் காந்தண் மலரிற்பெய்தாலொத்த கையையுடையமயில்போல்வாளே! தொளைகொள் - தொளையைக்கொண்ட, தாழ்தடக்கை- தாழ்ந்ததுதிக்கையை, நெடுந்துருத்தியிற்றாக்கி - நீண்டதுருத்தியைப்போலுமுயரவெடுத்து, அளவில்மூப்பினர்-அளவைக்கடந்த முதுமைப்பருவத்தவராகிய, அருந்தவர்க்கருவிநீர்கொணர்ந்து - அருமையாகியதவமுடையாருக்கு அருவிநீரைக்கொடுவந்து, களபமால்கரி - மதமயக்கங்கொண்ட களபமாகியயானை, குண்டிகை சொரிவன காணாய் - குண்டிகையின்கண் சொரியாநிற்பன பாராய்—

களபம்-யானை, கரி என்பனஒருபொருட்பன்மொழி. களபக்கரி இருபெயர்ப்பண்பு. புழைக்கையையுடைமையின் தொளைகொள்தாழ்தடக்கை யென்றும், அளவின்மூப்பினரு மருந்தவருமாக, யானைகள் தாமே நீர்கொணர்ந்தவர்குண்டிகையிற்சொரிவனவாதலின் அளவின்மூப்பினர் அருந்தவர்க்கருவி நீர்கொணர்ந்து களபமால் கரிகுண்டிகைசொரிவனவென்றுங் கூறினார். வளைகள் கைவளைக்கும், கைகாந்தளுக்குமுவமை. மயில்உருவகம். தடக்கையைநெடுந்துருத்தியொ டொப்பித்தார். (உகூ)

29 வடுவின்மாவகிரிவையெனப்பொலிந்தகண்மயிலே
இடுகுகண்ணினரிடருறுமூப்பினரேக
நெடுகுகூனல்வாணீட்டினவுருகுறுநெஞ்சக்
கடுவன்மாதவர்க்கருநெறிகாட்டுவகாணாய்.

(இ - ள்.) வடுவில் மாவகிர் இவையெனபொலிந்தகண்மயிலே - குற்றநீங்கியமாவடுவிவையென விளங்கியகண்ணையுடைய மயில்போல்வாளே! நெடுகுகூனல் வாணீட்டினவுருகுறுநெஞ்சக்கடுவன் - நெடுகிய கூனொடு வால் நீட்டினவுமாகி மனமுருகாநிற்பனவாகிய ஆண்குரங்குகள், இடுகுகண்ணினர் இடருறுமூப்பினரேக - ஒட்டியகண்ணுடையாரும் வருந்துகின்ற மூப்புடையாருமாகிச் செல்ல, மாதவர்க்கருநெறி காட்டுவகாணாய்-பெருந்தவமுடையார்க்கு அரியவழியைக்காட்டுவன பாராய்.—

மாவடி கட்குவமை. இடுகுகண்ணினர் வினையெச்சமுற்று; மூப்பினரெ ன்பது மது. கடுவன் மாதவர்க்கருநெறிகாட்டுமென்பதாம். அருநெறி என் பது வழியருமையைவிளக்கி நின்றது. (கூ0)

30 பாந்தள்தேரிவைபழிபடப்பரந்தபேரல்குல்
ஏந்துநூன்மணிமார்பினராகுதிக்கியைந்த
கூந்தன்மென்மயில்குறுகினநெடுஞ்சிறைகோலிக்
காந்துகுண்டத்தின்வயங்கெரியெழுப்புவகாணாய்.

(இ - ள்.) பாந்தள் தேரிவை பழிபடபரந்த பேரல்குல் - பாம்புந்தேரு மெனப்படுமிவை நிந்தனை படப்பரந்த பெரிய அல்குலை யுடையாளே! ஏந்து நூன்மணிமார்பினர்-புரிநூலையணிந்த அழகியமார்பினை யுடையார், ஆகுதிக்கி யைந்த - ஆகுதிக்குப் பொருந்தியவற்றை, கூந்தன் மென்மயில் - கூந்தலையு டையமென்மையாகியமயிலினங்கள், குறுகின-நெருங்கி, நெடுஞ்சிறைகோலி- பெரியசிறையைக்கோலி, காந்துகுண்டத்தின்வயங்கெரியெழுப்புவகாணாய்- எரிகின்ற குண்டத்ததாகிய கனல்கின்றதீயை யெழுப்புவனபாராய்.—

பாந்தளுந்தேருமல்குற்குவமை. நூன்மார்பின ராகுதிக்கியைந்தவற்றை மயில் குறுகினகோலி குண்டத்தின் வயங்கெரி யெழுப்பு மென்பதாம். குண்டமென்றது தீயைவளர்க்கு மிடம். ஏந்துநூல் மணிமார்பினரென்ற திருபிறப்பாளரை க்குறுகின வினையெச்சமுற்று (கூக)

31 அலம்புவார்குழலாய்மயிற்பெண்ணருங்கலமே
நலம்பெய்வேதியர்மார்பினுக்கியைவுறநாடிச்
சிலம்பிபஞ்சினிற்சிக்கறத்தெரிந்தநூறேமாம்
பலம்பெய்மந்திகளுடன்வந்துகொடுப்பனபாராய்.

(இ - ள்.) அலம்புவார் குழல் ஆய் மயில் பெண்ணருங்கலமே - நீண்ட கூந்தலையும் ஆய்ந்த மயிலையுமொத்த பெண்களுக் கருங்கலம் போல்வாளே! நலம்பெய் வேதியர்-நன்மையே நாடிச்செய்யு மந்தணருடைய, மார்பினுக்கு இயைவுறநாடி - மார்பிற்குப் பொருந்தநாடி, சிலம்பி பஞ்சினிற்சிக்கறத் தெரிந்தநூல் - சிலந்திபஞ்சி னின்றுஞ் சிக்கறவாய்ந்தநூலை, தேமாம்பலம் பெய்மந்திகளுடன் வந்துகொடுப்பன பாராய் - இனியமாங்கனி பெய்யும் பெண் குரங்குகளுடனே வந்து கொடுப்பன காணாய்.—

யாவருக்கு நன்மை விரும்புவா ராதலின் நலம்பெய்வேதிய ரென்றார். பெண்களுட்சிறந்த வளாகலின் பெண்ணருங்கல மென்றதென்க. தேமாம் பல மென்றது மாவின் விசேடம். (கூஉ)

32 தெரிவைமார்க்கொருகட்டளையெனச்செய்ததிருவே
பெரியமாக்களிற்பலாக்களிற்பிறங்கியவாழை

அரியமாக்கனிகடுவன்களன்புகொண்டளிப்பக்
கரியமாகிழங்ககழ்ந்தனகொணர்வனகாணாய்.

(இ - ள்.) தெரிவைமார்க்கு ஒருகட்டளையெனச்செய்ததிருவே - பெண்களுக்கொருகட்டளை யென்னச்செய்த திருவையொப்பாளே! பெரியமாக்களில் - பெரியமாமரங்களினும், பலாக்களில் - பலாமரங்களினும், பிறங்கிய வாழை அரியமாக்கனி-விளங்கிய வாழைமரங்களினுமுள்ள அருமையாகிய பெரியபழங்களை, கடுவன்கள் அன்பு கொண்டளிப்ப-ஆண்குரங்குகள் அன்பாற் கொடுத்துதவ, கரியமா கிழங்ககழ்ந்தன கொணர்வனகாணாய்-பன்றிகள் கிழங்குகளைத்தோண்டிக்கொடுவந்து தருவனபாராய்.—

மாதர்கற்பிற்குதாக லொப்பவளாகலின் தெரிவைமார்க்கொரு கட்டளையெனச் செய்ததிருவே என்றார். மா, பலா, வாழைஎன்பன முக்கனிகள். கரியமா என்றது பன்றியை. (௩௩)

33 ஐவனக்குரறினைக்கதிரிறுங்கவைபவரை
மெய்வணக்குறுவேயினமீன்றமெல்லரிசி
பொய்வணக்கியமாதவர்புரைதொறும்புகுந்துன்
கைவணத்தவாய்க்கிள்ளைதந்தளிப்பனகாணாய்.

(இ - ள்.) ஐவனக்குரல்தினைக்கதிர் இறுங்கு அவைஅவரை-ஐவனக்கதிரையும் தினைக்கதிரையும் இறுங்கையும் அவையையும் அவரையையும், மெய்வணக்குறுவேயின மீன்றமெல்லரிசி-உடல்வணக்கும் மூங்கிலினமீன்ற மென்மையாகிய அரிசியையும், பொய்வணக்கியமாதவர் புரைதொறும்புகுந்து - பொய்யையோட்டிய பெருந்தவமுடையாரிடந்தொறும் புகுந்துசென்று, உன் கைவணத்தவாய்க்கிள்ளை தந்தளிப்பனகாணாய் - உன்கையின் வண்ணத்து வாயையுடைய கிளிகள்கொடுவந்தளிப்பன பாராய்—

உன்கைவண்ணத்தவாயென்றது விபரீதவுவமை. ஐவனம் தானியவிசேடம். மெய்வணக்குறுவேயின மீன்றமெல்லரிசி என்றது மூங்கிலரிசியை. தந்தளித்தல் ஒருசொல். (௩௪)

34 இடிகொள்வேழத்தையெயிற்றொடுமெடுத்துடன்விழுங்கும்
கடியமாசுணங்கற்றறிந்தவரெனவடங்கிச்
சடைகொள்சென்னியர்தாழ்விலர்தாமிதித்தேறப்
படிகடாமெனத்தாழ்வரைகிடப்பனபாராய்.

(இ - ள்.) இடிகொள் வேழத்தை - இடிமுழக்கத்தைக் கொண்டயானையை, எயிற்றொடுமெடுத்துடன்விழுங்கும் - கோட்டொடுமெடுத்து விழுங்குகின்ற, கடியமாசுணம் - கொடிய பாம்பு, கற்றறிந்தவரென வடங்கி - பல நூல்களையுங்கற்று அவற்றின் பொருளை யறிந்தார் போலடங்குதல்செ

ய்து, சடைகொள்சென்னியர்- சடையைப்பரித்த முடியை யுடையார், தாழ்விலர், தாழ்வில்லாமல், தாமிதித்தேற - தாமிதித்தேறும்படி, படிகடாமெனபடிகளென்னலாம்படி, தாழ்வரை கிடப்பன பாராய் - தாழ்ந்தமலையிற்கிடப்பன காணாய்.—

இடிகொள்என்றது முழக்கத்தைக்கொண்டஎன்பதை. வேழத்தை யெயிற்றுடும்விழுங்கும்கடிய மாசுணமென்பதைக் 'குஞ்சரங் கோளிழைக்கும் பாம்' பெனப்பிறருங் கூறியதனு னறிக. விழுங்குவதைக் கற்றறிந்தவரடக்கத்திற் குவமை கூறினார். சடைகொள் சென்னியரென்றது கானினருந்தவஞ் செய்வாரை. மாசுணம் படிகடாமெனக்கிடப்பன என்றதுதற்குறிப்பேற்றம்.

35 அசும்புபாய்வரைய ருந்தவமுடித்தவர்துணைக்கட்
டசும்புவேய்ந்தவரொத்தவர்தமக்குவிண்டருவான்
விசும்புதூர்ப்பனவாமெனவெயிலெனவிளங்கும்
பசும்பொன்மானங்கள்போவனவருவனபாராய்.

(இ - ள்) அசும்பு பாய்வரை - சேறொழுகு மலையிடத்து, அருந்தவ முடித்தவர்-அருமையாகிய தவத்தை முற்றுப்பெறச் செய்தாராகிய, துணைக்கண்தசும்பு வேய்ந்தவரொத்தவர் தமக்கு - இரண்டுகண்களையுடைய குடத்தைப்புனைந்தவரை யொத்தவருக்கு, விண்தருவான்- துறக்கந்தரும்படி, விசும்புதூர்ப்பன ஆமென - ஆகாயத்தைத் தூர்ப்பனவா மென்னலாம்படி, வெயிலெனவிளங்கும் - ஞாயிறுபோல் விளங்கும், பசும்பொன் மானங்கள்- பசும்பொன்னலாகிய விமானங்கள், போவனவருவனபாராய் - போவனவும் வருவனவும் காணாய்.—

அருந்தவ முடித்தவர் தசும்புவேய்ந்தவ ரொத்தவ ரென்பன ஒருபொருள் மேற்பல பெயர்வந்தனஎன்க. விமானங்கள் குறைந்து நின்றது. துணைக்கண் தசும்பென்றது சடைமுடியை. வெயில்ஆகுபெயர். உதயாத்தமனம்ஞாயிறுடைமையான் விமானங்களை அவைபோவதும் வருவதுமாவதற்குவமை கூறினார். அசும்பு - சேறு. இதனை ‡ 'வாரசும்பொழுகு முன்றில்' என்றதனுனுணர்க. (௩௬)

36 நெய்கொணீருண்டுநெருப்புண்டுநீண்டமைநிறைந்த
வய்கொள்வேலெனக்காலனுமறுகுறுங்கண்ணாய்
மெய்கணோகின்றபிடிகளைவிரும்பியவேழம்
கய்கணோகிலதாங்கினநிற்பனகாணாய்.

* திருக்கோவையார், செ, உக.

‡ புறநானூறு. செ—ககச-

(இ - ள்.) நெய்கொள் நீருண்டு நெருப்புண்டு நீண்ட மை நிறைந்த - நெய்பூசிநீருண்டு நெருப்புண்டு நீண்டமையிட்டுநிறைந்த, வய்கொள்வேலென - கூரியவேற்படையென, காலனுமறுகுறுங் கண்ணாய் - கூற்றுவனுங் கலங்குங்கண்ணையுடையாளே! மெய்கள்நோகின்ற பிடிகளைவிரும்பியவேழம் - உடம்புகள் வருந்தாநிற்கின்ற பெண்யானைகளை விழைந்துநின்றகளிறுகள், கய்கஞேகில - புழைக்கைகளேகிலவாகி, தாங்கினநிற்பனகாணாய்- தாங்கிநிற்பனபாராய்.—

கண்ணைவேற்குவமை கூறியதன்றிக் காலனுமறுகுறு மென்றார். கைகளென்றது புழைக்கையினை. (௩௭)

37 விடங்கொணோக்கிநின்னிடையினைமின்னெனவெருவிப்
படங்கொணாகங்கண்முழைபுகப்பதைப்பனபாராய்
மடங்கலாளிகளெனக்கொடுமழையினமுழங்கக்
கடங்கொள்கார்மதக்கைம்மலையிரிவனகாணாய்.

(இ - ள்.) விடங்கொண் நோக்கி-விடப்பார்வையுடையாளே! நின்னிடையினை மின்னெனவெருவி-நின்னிடையைமின்னெனவஞ்சி,படங்கொள் நாகங்கள் - படங்கொண்ட பாம்புகள், முழைபுகப் பதைப்பன பாராய்- முழையிற்போய்ப் பதைப்பன காணாய், மடங்கலாளிகளென - மடங்கலாகிய சிங்கமென, கொடுமழையின முழங்க - கொடியமழையின் கூட்ட முழக்கஞ்செய்ய, கடங்கொள் கார்மதக்கைம்மலை யிரிவன காணாய் - கடங்கொண்டகார்போலு மதத்தினையுடைய யானைகள் திரியாநிற்பனபாராய்.—

'நோய்நோக்' கென்பவாகலின் விடங்கொணோக்கென்றதென்க. மதத்தை மேகத்திற்குவமை கூறினார். கைம்மலை-அன்மொழித்தொகை. இம்முப்பது செய்யுளானும் ஸ்ரீராமன் சித்திரகூடத்தைச் சனகிக்குக்காட்டினமை யுணர்த்தப்பட்டது. (௩அ)

இனையயாவையுமேந்திழைக்கியம்பினன்காட்டி
அனையமால்வரையருந்தவரெதிர்வரவணங்கி
வினையினீங்கியவேதியர்விருந்தினனானான்
மனையின்மெய்யெனுமாதவம்புரிந்தவன்மைந்தன்

(இ - ள்.) இனையயாவும் ஏந்திழைக் கியம்பினன்காட்டி - இத்தன்மையவனைத்தையுஞ் சனகிக்குச்சொல்லிக்காட்டி, அனையமால்வரையருந் தவரெதிர்வரவணங்கி-அப்பெரியமலையிலுள்ளவருந்தவமுடையா ரெதிரேவந்தடைய வணங்கி, வினையினீங்கியவேதியர் - வினையின்மையா னதனை அனுபவியாதமறையோர்பால்,மனையின்மெய்யெனுமாதவம்புரிந்தவன் மைந்தன்-இல்லிடைவாய்மை யெனப்படும்பெருந்தவம் செய்தானாகிய தயரதன்மகன், விருந்தினனானான் - விருந்தினனாகச் சமைந்தனன்—எ-று.

இனையயாவையும் என்றது நீருண்டகமஞ்சுற் காளமேகமு நாகமுந்தெரிவனமுதலியன. வரை ஆகுபெயர். அருந்தவரென்றது அம்மலையிலிருந் தவஞ்செய்வாரை. தயரதனை மனையின்மெய்யெனும் மாதவம் புரிந்தவனென்றார் வாய்மைகடவாது தன்னுருயிர்ப்புதல்வனைக் கானகவரங்கேட்டதற் கவ்வாறேயளித்தமையின். இதனாற் சீராமன் முனிவர் விருந்தாயினமை யுணர்த்தப்பட்டது. (௬௯)

கலிவிருத்தம்.

மாவியலுதயமாந் துளபவானவன்
மேவியபகையிருளவுணர்வீந்துகக்
காவியல்குடவரைக்காலநேமிமேல்
ஏவியதிகிரிபோலிரவியேகினான்.

(இ - ள்.) மாவியல் உதயமாம் துளபவானவன் - பெருமைவிளங்கிய உதயவரையாகிய துளபமாலையணிந்த மாயோன், மேவியபகையிருளவுணர் வீந்துக - அடைந்த பகையிருளாகிய அரக்கர்பட்டழிய, காவியல்குடவரை காலநேமிமேல்-சோலைகளடர்ந்தமேல்வரையெனப்படும்காலநேமிமேல், ஏவியதிகிரி போலிரவியேகினான்-ஏவப்பட்ட சக்கரப்படையென ஞாயிறு சென்று பட்டனன்?—

சுபங்கருதிச்செய்வார் கீழ்த்திசைநோக்கிச் செய்வதுமுறையாகலின் மாவியலுதயமென்றார். உதயவரையைத் திருமாலாகவும், இருளை அவுணராகவும், குடவரையைக் காலநேமியாகவும், திகிரியை இரவியாகவு முருவகஞ்செய்தமைகாண்க. காலநேமி என்றதரக்கரிறையை. இதனான் ஞாயிற்றினத்தமனங்கூறிய துணர்த்தப்பட்டது. (௭௰)

சக்கரந்தானவனுடலிற்றாக்குற
எக்கியசோரியிற்பரந்ததெங்கணும்
செக்கரத்தீயவன்வாயிற்றீர்ந்துவே
றுக்கவான்றனிபெயிறொத்ததிந்துவே.

(இ - ள்.) சக்கரந்தானவன் உடலில்தாக்குற-சக்கரப்படை அவ்வரக்கன் உடம்பிற்றாக்க, எக்கியசோரியிற் செக்கர்பரந்ததெங்கணும் - வழிந்தகுருதியைப்போல எங்குஞ்செக்கர் வானம்பரந்தது, அத்தீயவன் வாயிற்றீர்ந்துவேறுக்கவான் றனிபெயிறொத்ததிந்து- அக்கொடியோன்வாயினின்று நீங்கிவேறாகச் சிந்திய சிறந்த ஒப்பிலாத கொம்பினைச் சந்திரனிகர்த்தது. எ-று,—

சோரியைச் செக்கர்வானாகவும் தனியெயிற்றை இந்துவாகவும்கூறினார். இது உவமேயணி. இதனாற் சந்திரவுதயங் கூறினமை யுணர்த்தப்பட்டது

ஆனனமகளிருக்களித்ததாமரைப்
பூநனிமுகிழ்த்தனபுல்ரிபோனபின்

மீனெனவிளங்கியவெள்ளியாம்பல்வீ
வானெனமணித்தடமலர்ந்தவெங்குமே.

(இ - ள்.) புலரிபோனபின் - ஞாயிறுபட்டபின், அனனமகளிருக்களித்ததாரைப்பூ நனிமுகிழ்த்தன - முகத்தைமடவார்க்குதவிய தாமரை மலர்கள் குவிந்தன, மீனெனவிளங்கிய வெள்ளி ஆம்பல்வீ - மீனெனத்தோன்றிய வெள்ளிய ஆம்பல்மலர், வானெனமணித்தடமலர்ந்தவெங்கும் - வானென்னலாம்படி அழகியதடாகத்தினெம்மருங்கு மலர்ந்தன — எ-று.

புலரி என்றதுமாலைப்போதினை. மீனெனவிளங்கிய வெள்ளியாம்பல் என்றது விபரீதவுவமை.. வான்முழுது மணித்தடத்திற்குவமை. இவ்விரண்டுசெய்யுளானுமத்தமனவருணனையுணர்த்தப்பட்டது. (சஉ)

1 மந்தியுங்கடுவனுமரங்களுேக்கின
தந்தியும்பிடிகளுந்தடங்களுேக்கின
நிந்தையில்சகுந்தங்கணீளநோக்கின
அந்தியைநோக்கினனறிவைநோக்கினன்.

(இ - ள்.) மந்தியும்கடுவனும் மரங்களுேக்கின - பெண்குரங்கும் ஆண்குரங்கும் மரங்களைநாடிச்சென்றன, தந்தியும் பிடிகளும் தடங்களுேக்கின - களிறும்பிடிகளும் பொய்கைகளை நாடிச்சென்றன, நிந்தையில் சகுந்தங்கள் நீளநோக்கின - பழியில்லாத சகுந்தங்கள் கூடுகளைநாடிச்சென்றன, அறிவைநோக்கினன்-மெய்யுணர்ச்சியானுராயப்படுமிறைவன்,அந்தியைநோக்கினன்-அந்தியை நோக்கிநின்றனன்—

மெய்யுணர்ச்சியுடையார் அறிவினுக்கு மெட்டப்படாதவனுகலின் சீராமனை அறிவைநோக்கினன் என்றார். அந்தியைநோக்கல் மாலைக்கடன் செய்ல்.சகுந்தமென்றதற்குப் புட்பொது வெனினுமமையும். (சரு)

2 மொய்யுறுநறுமலர்முகிழ்த்தவாஞ்சில
மய்யறுநறுமலர்மலர்ந்தவாஞ்சில
அய்யனேடிளவற்குமமுதனுளுக்குங்
கய்களுங்கண்களுங்கமலம்போன்றவே.

(இ-ள்) . மொய்யுறநறுமலர்முகிழ்த்தவாம்சில-நெருங்கிய நறியமலர்சில குவிந்தன, மய்யறுநறுமலர்மலர்ந்தவாஞ்சில - குற்றமற்ற நறியமலர்சிலமலர்ந்தன, ஐயனேடிளவற்கும் அமுதனுளுக்கும்-சீராமனேடு இளையனுக்கும் அமுதன்னவளுக்கும், கய்களும்கண்களும் கமலம்போன்ற-கைகயவங்கண்களுந் தாமரைமலர்போற் குவிந்தன—

அமுதன்னுளென்றது - வடசொற்சிதைவு, சனகியை. ஆண்டெய்தியதுமாலைக்காலமாகலினன்றே 'மொய்யுறநறுமலர் முகிழ்த்தவாஞ்சில'என்றும், மய்யறுநறுமலர் 'மலர்ந்தவாஞ்சில' என்றுங் கூறினர். அவற்றுட்

சில புலரியிலெழுந்து நீராடிக்கொய்தலியல்பாகலின் 'மொய்யுறு' என்றும், இஃதங்ஙனமல்லாது இன்பநலமொன்றனையே யுணர்த்தற்கறிகுறியாக நின்றுமலர்தலின் 'மய்யறு' என்றடைகொடுத்தும், கமலம் குவிதலியல்பாகலின் கய்களும் கண்களுங் கமலம்போன்ற என்று முட்டையாற்றழீஇயினர். இளையவனுடைய்யனு மமுதன்னாளுந் துயில்கொண்டனரெனக்கொள்ளின் இளையவன்பதினான் காண்டுந்துயிலாமையின் மாறுகொளக்கூறலாய்முடியுமாகலானும், பின்னர்ச் 'சாலைவந்தெய்தின' னென்றும், முன்னர் 'அந்தியைநோக்கினான்' என்றும் கூறிப்போந்தமையானும், மாலைக்கடன் செய்வான்கைகூப்பிக்கண்முகிழ்த்தாயிரமோலியரும்பரஞ்சுடரைஅவர் சிந்தித்தனரெனக்கொள்ளக் கிடந்தமைகாண்க. (சச)

(3) மாலைவந்தகன்றபின்மருங்கிலாளொடும்
வேலைவந்துறைவிடமேயதாமெனக்
கோலைவந்துமிழ்சிலைத்தம்பிகோலிய
சாலைவந்தெய்தினன்றவத்தினெய்தினன்.

(இ - ள்.) தவத்தினெய்தினன்-தவத்தினடையப்படுஞ்சிராமன், மாலைவந்தகன்றபின் - மாலைப்போது சென்றபின்னர், மருங்கிலாளொடும்- இடையில்லாதாளாகிய சனகியோடும், வேலைவந்துறைவிடம்மேயதாமென - பாற்கடல்வந்துறைவிடத் தெய்தியதுபோல, கோலைவந்துமிழ்சிலை அம்பினைக்காற்றே போலுமிழ்கின்ற வில்லையேந்திய, தம்பிகோலிய-தம்பிசமைத்த, சாலைவந்தெய்தினன் - தவச்சாலையை யுடைந்தனன்.—எ-று.

தவஞ்செய்வாரா னடையப்படுபவனாகலின் தவத்தினெய்தினனென்றார். வேலையென்றது பாற்கடற்பரமனாகலி னவன்வீற்றிருக்கு மிடத்தினை அவ்வாறுகூறினார். இம்மூன்று செய்யுளானும்சந்தியாவந்தனஞ் செய்து மீண்டமையுணர்த்தப்பட்டது. (சரு)

(1) நெடுங்கழைக்குறுந்துணிநிறுவிமேனிரைத்
தொடுங்கலினெடுமுகடொழுக்கியூழுற
இடுங்கலில்கைவிசித்தேற்றியெங்கணும்
முடங்கலில்வரிச்சுமேல்விரிச்சுமூட்டியே.

(இ-ள்.) நெடுங்கழை குறுந்துணிநிறுவி - நீண்டமூங்கிலின் குறுந்துண்டுகளைநிறுத்தி, மேல்நிரைத்து -மேல்வரிசைப்படுத்தி, ஒடுங்கலில் நெடுமுகடொழுக்கி - ஒடுங்குதலில்லாத நீண்டமுகட்டினை யொழுகச்செய்து, ஊழுற - முறைபொருந்த, இடுங்கலில்கைவிசித்து - இடுங்கலில்லாத கையைவிசித்து, எற்றி - ஏறச்செய்து, எங்கணும் - எவ்விடத்தும், முடங்கலில்வரிச்சு விரிச்சுமேல்மூட்டி - ஓலையால்வரிச்சுமேல் விரித்துமூட்டி—.

முடங்கலென்றதோலையை. விரித்து என்பதுபோலிபெற்றது.

(2) தேக்கடைப்படலையிற்செறிவுசெய்துபின்
பூக்கிளர்நாணலின்புல்லுவேய்ந்துகீழ்
தூக்கியவேய்களிற்சுவருஞ்சுற்றுறப்
போக்கிமண்ணெறிந்தவைபுனலிற்றீற்றியே.

(இ - ள்.) தேக்கிலைப்படலையால் செறிவுசெய்து - தேக்கிலைப்படலையினாற் படலைசெய்து பின்பூ கிளர்நாணலின் புல்லுவேய்ந்து - பின் பூக்கள்விளங்கும் நாணற்புல்லை வேய்ந்து, கீழ்தூக்கியவேய்களில் சுவரும்சுற்றுற - கீழ்தூக்கின மூங்கிலாற்சுவருஞ்சுற்ற, போக்கி-போகச்செய்து, மண்ணெறிந்து - மண்ணெறிந்து நின்று, அவைபுனலிற்றீற்றி-அவற்றைநீரால்தீற்றி.—

(3) வேறிடமியற்றினன்மிதிலைநாடிக்குங்
கூறினநெறிமுறைகுயிற்றிக்குங்குமச்
சேறுகொண்டழகுறத்திருத்தித்திண்சுவர்
ஆறிடுமணியொடுங்கனகமப்பியே.

(இ-ள்.) வேறிடமியற்றினன் - வேற்றிடமமைத்தனன், மிதிலைநாடிக்கும் - சனகிக்கும், கூறினநெறிமுறைகுயிற்றி - சொல்லியவழிமுறையிற்செய்து, குங்குமச்சேறு கொண்டழகுறத்திருத்தி-குங்குமச்சேற்றானழகுபடத்திருத்தி, திண்சுவர் ஆறிடுமணியொடுங்கனகமப்பி-திண்ணியசுவரில் ஆற்றினிட்ட மணியொடும் பொன்னையப்பி.—

நிறுவி, நிரைத்து, ஒழுக்கி, விசித்து, எற்றி, விரிச்சு, மூட்டி, செய்து, வேய்ந்து, போக்கி, எறிந்து, தீற்றி, இயற்றினனென வினைமுடிக்க. (சசு)

(4) மயிலுடைப்பீலியின்விதானமேல்வகுத்
தயிலுடைச்சுரிகையாலருகுதூக்கறுத்
தெயிலிளங்கழைகளாலியற்றியாறிடு
செயலுடைப்புதுமலர்பொற்பச்சிந்தியே.

(இ-ள்.) மயிலுடைய பீலியின்விதானமேல்வகுத்து - மயிலினுடைய தழையால் விதானத்தைமேல்வகுத்து, அயிலுடைய சுரிகையா லருகுதூக்கறுத்து - கூர்மையுள்ள சுரிகையாலருகேதூக்கறுத்து, எயிலிளங்கழைகளாலியற்றி- மதிலாக இளவேயானமைத்து, ஆறிடு செயலுடையபுது மலர்பொற்பசிந்தி-ஆற்றிலிட்ட செய்கையையுடைய புதியமலரா லழகுறச்சிந்தி.—

பீலி, தழை என்பன ஒருபொருட்கிளவி. கழைஎன்றது வேயினை.

(5) இன்னணமிளையவனிழைத்தசாலையிற்
பொன்னிறத்திருவொடுங்குடிபுக்கானரோ
நன்னெடுந்திசைமுகனகத்துநம்மனோர்க்
குன்னருமுயிருளுமொக்கவைகுவான்.

(இ - ள்.) இன்னணமிளையவன் இழைத்தசாலையின்-இவ்வாறு இளையவன் சமைத்தசாலையின்கண், நன்னெடுந்திசைமுகனகத்தும் நம்மனோர்க்கு உன்னருமுயிருளு மொக்கவைகுவான் - நன்மையாகிய நெடியதிசைமுகனுள்ளத்து நம்மனோருடைய எண்ணரியஉயிரிடத்துமொக்கவீற்றிருக்குமிறைவன், பொன்னிறத்திருவொடும் குடிபுக்கான் - பொன்னிறத்தையுடைய சனகியோடுங்குடிபுகுந்தனன்.—எ-று

மிதிலைநாடி - சனகி ; மிதிலைநாடிக்கும் குயிற்றி, திருத்தி, தப்பி, வகுத்து, அறுத்து, இயற்றி, சிந்தி இழைத்தசாலையில் வைகுவான் குடிபுக்கானெனவினை முடிக்க. உம்மைஇரண்டனுள் முன்னைய துயர்வு சிறப்பு, பின்னையது இழிவுசிறப்பு. இறைவனதுந்திக் கமலத்துட்பிறந்தசிறப்புத்தோன்ற நன்னெடுந்திசை முகனென்றும், இறைவனையெண்ணுதற் கருமையாகலின் உன்னருமுயிருளு மென்றுங்கூறினர்.நன்னெடுந்திசைமுகனகத்துநம்மனோர்க்குன்னருமுயிருளு மொக்கவைகுவானென்றது நினையுந்தேவர்க்குநமக்கு மொத்தொருநெறி நின்றவனகனென மேற்கூறிப்போந்தமைவற்புறுத்தற்கு. இவ்வைந்துசெய்யுளானும் இளையவன் இறைவனோடிறைவிக்குச்சாலைசமைத்தமைகூறப்பட்டது. (௫0)

வேறு.

மாயநீங்கியசிந்தனைமாமறை
தூயபாற்கடல்வைகுந்தஞ்சொல்லலாம்
ஆயசாலையரும்பெறலன்பினன்
நேயநெஞ்சின்விரும்பிநிரப்பினன்.

(இ - ள்.) மாயநீங்கிய சிந்தனைமாமறைதூயபாற்கடல் வைகுந்தஞ் சொல்லலாம் - வஞ்சகமகன்றமனமும் பெருமையமைந்த மறையுட்டரிசுத்தமாகிய பாற்கடலும் வைகுந்தமுமென்றுஞ் சொல்லலாகும், ஆயசாலை - அந்தத்தவச்சாலையில், அரும்பெறலன்பினன் - பெறலரிய அன்புடையானாகிய இறைவன், நேயநெஞ்சின்விரும்பி நிரப்பினன் - பொருந்தியநெஞ்சிடைவிருப்புடையானாகி நிரப்பினன்—எ-று.

மேவுகானமிதிலையர்கோன்மகள்
பூவின்மெல்லியபாதமும்போந்தன
தாவிலெம்பிகைசாலைசமைத்தன
யாவையாதுமிலார்க்கியையாதவே.

(இ - ள்.) மிதிலையர் கோன்மகள் பூவின்மெல்லியபாதமும் மேவுகானம்போந்தன - சனகிபதுபூவினுமெல்லிய அடிகளும் விரும்பிய காட்டிடைவந்தன, தாவில் எம்பிகைசாலை சமைத்தன - கேடில்லாததம்பிகை தவச்சாலை சமைத்தன, யாதுமிலார்க்கியையாதயாவை - சிறிது மில்லாதாருக்கியையாதன யாவையுள—எ-று.

"அனிச்சமு மன்னத்தின் றூவியுமாதரடிக்கு நெஞ்சிப்பழம்" போல்வதாகலின் மிதிலைப்பர் கோன்மகள்பூவின் மெல்லியபாதமும் மேவுகானம்போந்தனவென்றும், திருவனந்தாழ்வான மிசமாதலின், தாவி லெம்பியென்றுங்கூறினர். யாது மிலார்க்கியை யாதயாவை என்றது வேற்றுப் பொருள் வைப்பு. (ருக)

என் றுசிந்தித்திளையவற்பார்த்திரு
குன் றுபோலக்குவவியதோளினுய்
என் றுகற்றனை நீயிதுபோலென்ருன்
துன் று தாமரைக்கண்பனிசோர்கின்ருன்.

(இ - ள்.) என்றுசிந்தித்து-என்றுநினைத்து, இளையவன்பார்த்து - தம்பியைநோக்கி, இருகுன்றுபோலும் குவவியதோளினுய் - இரண்டுமலைபோலுங் குவிதலையுடைய தோளையுடையானே! துன்றுதாமரைகண் பனிசோர்கின்ருன் - தாமரையெனப்பொருந்திய கண்ணிடை நீர்சொரிந்து, என்று இது நீகற்றனையென்ருன் - எஞ்ஞான்றிதனைக் கற்றுக்கொண்டனை யென்றனன்—

என்றுசிந்தித்தென்றது பாதமுங்கான்போந்தன, கைசாலைசமைத்தனவென்பவற்றை. இருகுன்று தோட்குவமை. தாமரைகட்குவமை. நகரில்வாழ்வெய்திய நீயிவ்வாறு செய்யக்கற்றதருமையென்பார் என்றிதுகற்றனை யென்றும், இறைவனெடுகானடுத்து வந்தமைநோக்கித் துன்றுதாமரைக் கண்பனிசோர்கின்ருனென்றுங்கூறினர். போலசை. (ருஉ)

அடருஞ்செல்வமளித்தவனுணையாற்
படருநல்லறம்பாலித்திரவியிற்
சுடருமெய்ப்புகழ்சூடினனென்பதென்
இடருனக்கிழைத்தேனெடுநாளென்ருன்.

(இ - ள்.) அடருஞ்செல்வம் அளித்தவன் - நெருங்கியசெல்வத்தினையளித்தசக்கிரவர்த்தி, ஆணையால்படரு நல்லறம்பாலித்து-ஆக்கினையானெருங்கிய நன்மையாகிய அறத்தைவளர்த்து, இரவியில்சுடரும்மெய்ப்புகழ் சூடினன் என்பதென் - ஞாயிற்றைப்போலும் விளங்கும் மெய்மையாகிய புகழினையடைந்தன னெனப்படுவதியாது, நெடுநாள் உனக்கிடரிழைத்தேனென்ருன் - பலகாலும் உனக்குத் துன்பத்தையாக்கினேனென்றனன்.—

தனக்கு முன்னரசளித்தவனுதலின், அடருஞ்செல்வ மளித்தவனென்றும், அவன் கழிபேருவகை பயக்குந்தவமாகிய செல்வமளித்தமையான் ஆணையாற்படரு நல்லறம் பாலித்தென்றும், அப்புகழ் எங்கும் பரந்து தோன்றலின்இரவியிற்சுடருமெய்ப்புகழ் சூடினனென்றும், இளையவனுக்குத்துன்பம் விளைத்தனனென்பார் இடரிழைத்தே னெடுநாளுனக்கென்றும், அதனுற்பயனின்றென்பார் என் என்றுங்கூறினர்.

* திருக்குறள் - செ. ககஉ0.

அந்தவாய்மொழியையனியம்பலும்
நொந்தசிந்தையிளையவனோக்கினால்
எந்தைகாண்டியிடரினுக்கங்குரம்
முந்திவந்துமுளைத்ததன்றேயென்றான்.

(இ - ள்.) அந்தவாய்மொழி ஐயன் இயம்பலும் - அம்மெய்மையாகிய மொழி இறைவன் கூறலும், நொந்தசிந்தை இளையவன் - மனநொந்த தம்பியை, நோக்கினால் எந்தைகாண்டி இடரினுக்கங்குரம் முந்திவந்து முளைத்த தன்றேஎன்றான்—நோக்கான் எந்தையே துன்பத்துக்கங்குரம் முன்னரேயேவந்து தோன்றியதன்றேயென்றனன்.

அந்தவாய்மொழி என்றது படருநல்லறம் பாலித்து மெய்ப்புகழ் சூடினேனிடரிழைத்தேனெனோவென்பதனை.இதுவாயாற்கூறியதன் றென்பார் நோக்கினாலிடரினுக்கங்குர முளைத்ததன்றேயென்றதென்க.இதனான் இறைவன்நோக்கினானிளையவனை யுணர்த்திய துணர்த்தப்பட்டது. (௫௪)

ஆகசெய்தக்கதில்லையறத்தினின்
றேகலென்பதரிதென்றுமெண்ணினன்
ஓகைகொண்டவனுள்ளிடர்நோக்கினன்
சோகபங்கந் துடைப்பரிதாலென.

(இ - ள்.) செய்தக்கதில்லை-செய்யத்தக்கதொன்றுமில்லை,அறத்தினின் றேகலென்பது - அறத்திலிருந்து மேகலெனப்படுவது, அரிதென்றுமெண்ணினன் - அரியதென்றுநினைந்து, ஓகைகொண்டவனுள்ளிடர்நோக்கினன்- மகிழ்ச்சியைக்கொண்ட இளையோன் மனத்துன்பத்தைநோக்கி, சோகபங்கம் துடைப்பரிதென - துன்பமாகியசேற்றைத் துடைப்பதரிதென்று—. (௫௫)

அறத்தைக் கடவாதிருப்பதே செயத் தக்கதென்பார் செய்தக்கதில்லையறத்தினின்றேகலென்பதென்றும்,அதுவேகழிபெருமகிழ்ச்சியாகலின் ஓகைகொண்டவனென்றுங் கூறினர். சோகபங்கம் இருபெயரொட்டுப் பண்புத்தொகை, வடநூன்முடிபு; ஆதிபகவனென்புழிப்போல. உவகை என்பது மரீஇயது. ஆக, ஆல் என்பனவசைநிலைகள்.

55 பின்னுந்தம்பியைநோக்கிப்பெரியவன்
மன்னுஞ்செல்வத்திற்குண்டுவரம்பிதற்
கென்னகேடுண்டிவ்வெல்லையிலின்பத்தை
உன்னுமேல்வருமூதியத்தோடென்றான்.

(இ - ள்.) பின்னுந் தம்பியைநோக்கி-பெயர்த்தந் தம்பியைப்பார்த்து பெரியவன் மன்னுஞ்செல்வத்திற்குண்டுவரம்பு-இறைவன் நிலைபேறுடைய செல்வத்திற்கெல்லையுண்டு, இவ்வெல்லையில் இன்பத்தை-இவ்வரம்புகடந்த இன்பத்தை,உன்னுமேல்வரு மூதியத்தோடு,நினைக்குமேல்வரூ சிறப்பேனுடு இதற்கென்னகேடு உண்டென்றான்-இதற்குக்கேடியாதென்றுசொல்லினன்.

பின்னுமென்பது வினைமாற்றுப் பொருள் படுவதோரிடைச்சொல். '*பொருட்செல்வம்பூரியார்கண்ணுமுள' என்பவாகலின்மன்னுஞ் செல்வத்திற்குண்டுவரம்பென்றும்,* அருட்செல்வஞ் செல்வத்துட்செல்வம்' என்பவாகலின்இவ்வெல்லையிலின்பத்தையுன்னுமேல்வரு மூதியத்தோடிதற் கென்ன கேடுண்டென்றுங்கூறினர். இம்மூன்று செய்யுளானும் இறைவன் இளையவனுக்கு மெய்யறிவுகொளுத்தியதுணர்த்தப் பட்டது.

56 தேற்றித்தம்பியைத்தேவருங்கைதொழ
நோற்றிருந்தனனோன்சிலையோனிப்பால்
ஆற்றன்மாதவனணையிற்போனவர்
கூற்றினுற்றதுகூறலுற்றுமரோ.

(இ - ள்.) தம்பியைதேற்றி- இளையவனைத்தேற்றி; நோன் சிலையோன்-வலியவில்லினனாகிய சிராமன், தேவரும்கைதொழ—தேவரும் வணங்க, நோற்றிருந்தனன் -தவஞ்செய்திருந்தனன், இப்பால்—பின்னர், ஆற்றல்மாதவன் ஆணையிற்போனவர் - பெருந்தவமாகிய ஆற்றலையுடைய வசிட்டன் ஆணையிற்சென்றதூதர்,கூற்றினுற்றது-நமன்போலும் அடைந்தது,கூறலுற்றும்-சொல்லத்தொடங்கினுள்ள று (நிவ)

கரன்முதலானோரைப் படுக்கும் வில்லாகலின் நோன்சிலை யென்றமைதென்க. உம்மை உயர்வுசிறப்பு, தவத்தின்வன்மையினுஞ் சிறந்ததின்மையான் ஆற்றன்மாதவனென்றும், தண்டார்ப்பரதர் கொண்டணைகென்றேவினன் மன்னவனணை யெழுதி முடங்கல்கொடுத்தவனாளனமுற் கூறிப்போந்தமையான் ஆணையிற் போனவரென்றும், விரைவினடந்தமையின் கூற்றினுற்றதென்றுங் கூறினர். தேற்றி யென்றது மன்னுஞ் செல்வத்திற்குண்டுவரம்பென்பது போல்வனவற்றை, இதுகவிக்கூற்று.

சித்திரகூடப் படலம் முற்றிற்று

---

* திருக்குறள் - செ. உசக.

கூ-வது. பள்ளியடைப்படலம்.

பரதன் அரண்மனையையடைந்து நடந்த செய்தியையுணர்த்தலின் இவ்வாறு கூறப்பட்டது. படலமுறைமையு மிதனானேவிளங்கும். பள்ளி என்பது அரண்மனையை.

பொருவிறாதுவர்போயினர்பொய்யிலார்
இரவுநன்பகலுங்கடிதேகினார்
பரதன்கோயிலுற்றார்படிகாரிரேம்
வரவுசொல்லுதிர்மன்னவற்கேயென்றார்.

(இ-ள்.) பொய்யிலார்-பொய்யொழுக்கமில்லாதாராகிய, பொருவில் தூதுவர்-ஒப்பிலாததூதுவர், இரவுநன்பகலுங்கடிதேகினார்-இரவும்பகலும்விரைந்து கடந்து, பரதன்கோயில் உற்றார்-பரதன்மாளிகையையடைந்து, போயினார்-சென்று, படிகாரிர்-காவலோரே, எம்வரவுமன்னவற்கே சொல்லுதிர் என்றார்-எம்முடையவருகையை அரசனுக்கே சொல்லுமினென்றனர்.

படிகாரிரென்றது வாயிற்காவலோரை. அரசர்க்குச் செய்தியையுள்ளவாறுணர்த்தும் பெற்றியை நோக்கிப் பொய்யிலா ரென்றதன்றிப் பொருவிலென்றுமடை கொடுத்தார். கோயிலென்ற தரசமாளிகையை; ஏகினாருற்றாரென்பன எச்சமுற்று. இதனாற்றூதுவர் கேகயதேயமடைந்து பரதன் மாளிகைசென்று காவலோர்க்குணர்த்தினமை யுணர்த்தப்பட்டது (க)

தூதர்வந்தனருந்தைசொல்லோடெனக்
காதன்முந்திக்களிக்கின்றசிந்தையான்
போதுகென்னெனப்புக்கவர்கைதொழத்
தீதிலன்கொறிருமுடியோனென்றான்.

(இ-ள்.) உந்தைசொல்லோடு தூதர்வந்தனரென-உமதுதாதைசொல்லுடன் தூதர்வந்தனரென, காதன்முந்திகளிக்கின்றசிந்தையான்-காதலினுமுற்பட்டுக் களிக்குங்கருத்துடையான், போதுகென்னென-வந்தசெய்தியாதென, புக்கவர் கைதொழ-அடைந்தவர் தொழாநிற்க, திருமுடியோன் தீதிலன்கொலென்றான்-அழகிய முடிமன்னன் தீதிலனோ வென்றனன்.

சொல்லென்றது திருமுகத்தினை, களிப்பினுங்காதன்முற் படுதலின்காதன் முந்திக்களிக்கின்றசிந்தையென்றதென்க. போதுகுமுதனிலைத் தொழிற்பெயர். இந்திரதிருவனாதலின் திருமுடியோனென்றான். நோய்முதலியவற்றானறியாமையுணர்த்தத்தீதிலனென்றுங்கூறினார். இதனாற்றூதுவர் வருகவென்றமையு மவரையரசன் சுபச்செய்தி வினாவினமையு முணர்த்தப்பட்டன.

1. வலியனென்றவர்கூறமகிழ்ந்தனன்
இலைகொள்பூணிளங்கோனெம்பிரானொடும்
உலைவில்செல்வத்தனோவெனவுண்டெனத்
தலையினேந்தினன்றாழ்தடக்கைகளே.

(இ - ள்.) வலியனென்றவர்கூற - சுகமேயிருக்கின்றன னென்றவர் சொல்ல, மகிழ்ந்தனன் - மகிழ்ச்சியடைந்து, இலைகொள் பூணிளங் கோன்எம்பிரானொடும்-இலைவடிவத்தைக்கொண்ட வணிகலம்புனைந்த இளை யவனெம்மிறைவனொடும், உலைவில்செல்வத்தனோவென- கேடில்லாதசெல் வத்தனோவெனவினவ, உண்டென-அவ்வாறுளதாமெனத், தாழ்தடக்கைகள் தலையினேந்தினன்-தாழ்ந்தநடங்கைகளை முடிமேல் வைத்துவணங்கினன்.

வலியனென்றது நோய்முதலியவற்றான் வருந்துதலின்மையை. இளங் கோனென்ற திலக்குவனை. எம்பிரானென்றது சீராமனை.இலைமுகப்பைம் பூணைலின் இலைகொள் பூணென்றார். உலைவில்செல்வத்த னென்றது முன் வலியனென்றாற் போல்வதனை. தலையினேந்தினன்றாழ்தடக்கைகளென்றது தலைமேற்கைகூப்பி வணங்குதலை (௩)

2. மற்றுஞ்சுற்றத்துளார்க்கும்வரன்முறை
உற்றதன்மைவினாவியுவந்தபின்
இற்றதாகுமெழுதருமேனியாய்
கொற்றவன்றன்றிருமுகங்கொள்கென்றார்.

(இ - ள்) மற்றுஞ்சுற்றத்துள்ளார்க்கும் வரன்முறை உற்றசன்மைவி னாவி-மற்றுஞ்சுற்றத்தாரையும் வரலாற்றுமுறையான் அவர்க்குள்ள தன்மை களைக்கேட்டு, உவந்தபின் - மகிழ்ந்தபின்னர், எழுதருமேனியாய்-ஓவியரா னெழுதவொண்ணாத மேனியையுடையானே! கொற்றவன்றன் திருமுகம் இற்றதாகும்கொள்க என்றார்-கொற்றவன்றன்திருமுகம் இன்னதாகும்கொ ள்க என்றனர்.—

திருமுகம், முடங்கல், சுருளோலை என்பன ஒருபொருட்கிளவி, திரு முகம்-மங்கலவழக்கு. மற்றுஞ் சுற்றத்துள்ளார் என்றது கோசலையுள்ளிட்ட தாய்மார்முதலானோரை.எழுதருமேனியாயெனவிளித்தது பரதனை. இவ்விர ண்டுசெய்யுளானுந்தூதுவரைவருவித்துத் தயரதன் சீராமன் இளையோனொடு கோசலையுள்ளிட்டார் சுபச்செய்திகேட்டமையு மவர்கூறினமையுமுணர்த்தப் பட்டன. (ச)

1. என்றுகூறலுமேத்தியிறைஞ்சினன்
பொன்றிணிந்தபொருவிறடக்கையால்
நின்றுவாங்கியுருகியநெஞ்சினன்
துன்றுநாண்மலர்சென்னியிற்சூடினன்.

(இ-ள்) என்றுகூறலும் - என்றுசொல்லுதலும், எத்தியிறைஞ்சினன்- தொழுதுவணங்கி, பொன்திணிந்த பொருவில் தடக்கையால்-அழகமைந்தஒப் பில்லாத விசாலித்தகரத்தால், நின்று வாங்கியுருகிய நெஞ்சினன்-நின்றேத்தி மனமுருகியோன், துன்றுநாண்மலர் சென்னியிற் சூடினன் - மணநெருங்கி அன்றலர்ந்த மலரை முடித்த முடியிற் சூடினன்.

அரசனிலச்சினைபிட்ட-திருமுகமாதலின் துன்று நாண்மலர் சென்னியிற் சூடினனென்றார். இதனாற் பரதன் திருமுகமேந்தி' முடிமி சைச்சூடினமை யுணர்த்தப்பட்டது. (௫)

2. சூடிச்சந்தனந்தோய்த்துடைசுற்றுமண்
மூடுதோட்டின்முடங்கனிமிர்த்தனன்
ஈடுநோக்கிவந்தெய்திய தூதர்க்குக்
கோடிமேலுநிதியங்கொடுத்தனன்.

(இ - ள்.) சூடிசந்தனம் தோய்த்துடை -மலரைச்சூடிச் சந்தனந்தோய் த்துடைய,சுற்றுமண்மூடு தோட்டின்முடங்கல் நிமிர்ந்தனன்-சுற்றுமண்ணான் மூடப்பட்ட இதழையுடையதாகிய ஏட்டினைப்பிரித்து, ஈடுநோக்கிவந்தெய் தியதூதர்க்கு - ஒப்புநாடிவந்தடைந்ததூதருக்கு, கோடிமேலு நிதியங்கொடு த்தனன் - கோடியென்னுந் தொகைக்குமிகுதியாகவே சொன்னதானஞ்செ ய்தனன். —

தோடென்றது ஏட்டினை, முடங்கலென்றது சுருளை, அரசனுணைமேற் கொண்டெய்திய தூதராதலின் ஈடுநோக்கி வந்தெய்தியதூதரென்றார். கோ டியென்றது மிகுதிமேற்சென்றதோர்குறி. இதனைக் *'கோடி தொகுத்தார்க் குந் துய்ப்பதரிது'என்றதனானுமறிக. இதனால் திருமுகம் வாசித்தனமையும் அதனைக்கொணர்ந்தார்க்குநிதியமளித்தமையு முணர்த்தப்பட்டன. (சு)

3. வாணிலாநகைதோன்றமயிர்புறம்
பூணவானுயர்காதலிற்பொங்கினன்
தாணிலாமலர்தூவினன்றம்முனைக்
காணலாமெனுமாசைகடாவவே.

(இ-ள்.) வாள்நிலாநகைதோன்ற-ஒளியையுடையநிலவையொத்த நகை யுண்டாக, மயிர்புறம்பூண - உரோமாஞ்சிதமெய்த, தம்முனைகாணலாமெனு மாசைகடாவ- தன்முன்னவனைக்காணவேண்டுமென்னு மாசைசெலுத்த, தா ணிலாமலர்தூவினன்-நரம்பிலாத மலர்கொண்டருச்சனைசெய்தனன்.

நகையைவாணிலாவொடுவமை கூறினர். காதல்தன்னின்முற்பட்டுச் சேறலின்காதன்முந்திய சிந்தையினனென்றார். தம்முனையென்றதி ராமனை. தாணிலாமலரென்றது காம்பரிந்த மலரை. (எ)

* திருக்குறள் - செ. ௩௭௭.

4. எழுகசேனையென்றேவினனெய்தினன்
தொழுதுகேகயர்கோமகன்சொல்லொடுந்
தழுவுதேரிடைத்தம்பியொடேறினன்
பொழுதுநாளுங்குறித்திலன்போயினன்.

(இ-ள்) எழுகசேனை யென்றேவினன் -எழுகசேனையென்றாணைதந்து, தொழுதுகேகயர்கோன் மகன்சொல்லொடும் வணங்கி-நின்றுகேகய தேயத்தரசன் ஆணையொடும், தழுவு தேரிடைத்தம்பியொடு - குதிரைகள் பூண்ட தேரின்கண் தம்பியோடும், பொழுதுநாளும் குறித்திலன்-பொழுதையு நாளையு மாராயாமல்,ஏறினன் போயினன் எய்தினன்-ஏறிச்சென்றடைந்தனன்.

பொழுதுநாளுமென்பன-சோதிடாைத்திதிவாரமுதலியனகேளாதேகல் இவ்விரண்டு செய்யுளானும் பரதன் அயோத்திக்குப் புறப்பட்டமையுணர்த்தப்பட்டது. (அ)

5. யானைசுற்றினதேரிைத்தீண்டின
மானவேந்தர்குழுவினர்வாளுடைத்
தானைசூழ்ந்தனசங்கமுரன்றன
மீனவேலையின்விம்மினபேரியே.

(இ-ள்.) யானைசுற்றின-யானைசூழ்ந்தன,தேரிைத்தீண்டின-தேர்கள்ஆரவாரித்து நெருங்கின, மானவேந்தர்குழுவினர்-பெருமையையுடைய அரசர் கூட்டத்தவர், வாளுடையதானைசூழ்ந்தன-வாளேந்தியசேனைகள்நெருங்கின, சங்குமுரன்றன-சங்குகள் ஒலித்தன,பேரி மீனவேலையின் விம்மின-பேரிகை மீனையுடைய கடல்போல ஒலித்தன.

உடையஎன்னுங் குறிப்புப்பெயரெச்சத்தகர மீறுதொகுத்தல்பெற்றது. கடலோசையினுமிக்கொலித்தலின் பேரிமீனவேலை யின்விம்மின வென்றுவமை முகத்தாற்கூறினர். மீனம் வடசொல். வேலை ஆகுபெயர். (கூ)

6. கொடிநெருங்கினதொங்கல்குழுமின
வடிநெடுங்கண்மடந்தையரூர்மடப்
பிடிதுவன்றினபூணொளிபேர்ந்தன
இடிதுவன்றினமின்னெனவெங்குமே.

(இ - ள்) கொடிநெருங்கின - கொடிகள் நெருங்கின, தொங்கல்குழுமின - மாலைகள் நெருங்கின, வடிநெடுங்கண் மடந்தையர் - மாவடுவன்ன கண்ணையுடைய மாதர்கள், ஊர்மடப்பிடிதுவன்றின - ஊர்கின்ற இளம்பிடிகள் நெருங்கின, பூணொளிபேர்ந்தன - அணிகளின் ஒளிகள் பெயர்ந்தனவாகி, மின்னென எங்கும் - மின்னென்று சொல்ல எவ்விடத்தும், இடிதுவன்றின-இடிகள் நெருங்கின.

அணிகலத் தொளியினை மின்னெனவுவமைகூறினர். (ய)

7. பண்டியங்கள்பரந்தனபல்லியம்
கொண்டியம்பினகொண்டலிற்கோதையில்
வண்டியம்பினவாளியின்வாவுறும்
செண்டியங்குபரியுஞ்செறிந்தவே

(இ-ள்.) பண்டியங்கள்பரந்தன-முழவொலிபரந்துநின்றன, கொண்டலின்-மேகமுழக்கம்போல, பல் இயம்கொண்டியம்பின - பலவாத்தியங்கள்கொண்டொலித்தன, கோதையில்வண்டியம்பின-மாலையின்கண் வண்டுகளார்த்தன, வாளியின்வாவுறும்-கணைபோற்செல்லும், செண்டியங்குபரியும் செறிந்த-செண்டுவெளியிலுலாவும் குதிரைகளுநெருங்கின.

கோதை யென்றது மலர்மாலையை. பரிதியின் வேகத்தைவாளியின் வாவுறுமென்றதென்க. பல்லியமென்றதனைக் கொண்டலோடுவமைகூறினர்.

8. தொளைமுகத்திற்சுருதிவிளம்பின
இளைமுகத்தினனும்பரினேகிட
விளைமுகத்தனல்வேலையின்மீதுசெல்
வளைமுகத்தனவாசியும்வந்தவே.

(இ - ள்) தொளைமுகத்தில் சுருதியியம்பின- தொளைக்கருவியொலிக்கப்பட்டன, இளைமுகத்தினன் உம்பரினேகிட - இளஞாயிறும்பரிடம்போதர, விளைமுகத்தனல் வேலையின்மீதுசெல், வடவைக்கனலைத்தன்னிடங்கொண்ட கடலின்மேற்பட்டேகும், வளைமுகத்தனவாசியும் வந்த - வளைந்தமுகத்தனவாகியபரிகளும் புறப்பட்டன.

தொளைக்கருவியைக் கூறிமையினேனைய உபலக்கணம். வேலையில்வடவையுளதாகலின் வளைமுகத்தனல்வேலையென்றார். வேலைவாசிக்குவமை.

9. வில்லின்வேதியர்வாள்செறிவித்தகர்
மல்லின்மல்லர்சுரிகையின்வல்லவர்
கொல்லும்வேல்குந்தங்கற்றுயர்கொற்றவர்
தொல்லைவாரணப்பாகருஞ்சுற்றினர்.

(இ-ள்) வில்லின்வேதியர்-வில்வேதம்பயின்றவரும்,வாள்செறிவித்தகர்-வாட்போரில் வல்லாரும், மல்லின் மல்லர் - மற்போரில்வல்லாரும், சுரிகையின்வல்லவர் - உடைவாளின்வல்லாரும், கொல்லும் வேல்குந்தம் கற்றுயர் கொற்றவர்-கொலைத்தொழில் செய்யும் வேற்படையையும் குந்தப்படையையுங்கற்றுவல்லாரும், தொல்லை வாரணப்பாகரும் சுற்றினர் -பழமையாகியயானைப்பாகருஞ்சூழ்ந்தனர்.

உபவேதநான்கினுளொன்றாகலின் வில்லின்வேத மென்றதென்க. உடையானது தொழிலையுடைமை மேலேற்றிக்கொல்லும்வேலென்ற தொருவகை

மரபுவழுவமைதி. வாரணமென்றபல பொருளொருசொல் ஈண்டியானையை யுணர்த்தியது. (கரு)

10. எறிபகட்டினமாடுகளேற்றைமா
குறிகொள்கோழிசிவல்குறும்பூழ்நெடும்
பொறிமயிர்க்கவுதாரிகள்போற்றுறும்
நெறியின்மாக்களுமுந்திநெருங்கினார்.

(இ - ள்) எறிபகட்டினம்-எறிகின்ற பகட்டினினம், ஆடுகள்-ஆடுகள், ஏற்றை-எருதுகள், மாகுறிகொள் - பெருங்குறிநாடிப்பொருகின்ற, கோழி சிவல்குறும் பூழ் பொறிமயிர் கவுதாரிகள்- கோழியும் சிவலும் குறும்பூழும் நெடும்பொறிகளைச் சிதறுமயிரையுடைய கவுதாரிகளும், போற்றுறும்-வளர்த்துவரும், நெறியில்மாக்களும் - நன்னெறியிற் செல்லுதலில்லாதமக்களும், முந்திநெருங்கினார் - முற்பட்டு நெருங்கினர். (கச)

11. நிறைந்தமாந்தர்நெருங்கினர்நெஞ்சினிற்
பறந்துபோதுங்கொலென்றுபதைக்கின்றார்
பிறந்துதேவருணர்ந்துபெயர்ந்துமுன்
உறைந்தவானுறுவார்களையொக்கின்றார்.

(இ - ள்.) நெஞ்சினில்பறந்துபோதுமென்றுள்ளம் பதைக்கின்றார்-நெஞ்சிடைப்பறந்துபோதுமென்றுள்ளம் பதைப்பாராய், பிறந்துதேவருணர்ந்து, நிலத்திடைத்தோன்றித் தேவரையறிந்து, பெயர்ந்து முன் உறைந்தவானுறுவார்களையொக்கின்றார்-மீண்டுமுன்வாழ்ந்துறக்கத்தினையடைபவரை யொக்கின்றாருமாகி, நிறைந்தமாந்தர் நெருங்கினர் - கல்விகேள்விகளால் நிறைந்த மக்கள்சூழ்ந்தனர்.

கல்வி கேள்விகளானிறைந்தாரைநிறைந்தமாந்தரென்றார். பிறவியடைந்துதேவரையுணர்ந்துமீண்டுமுன்உறைந்ததுறக்கத்தையடைவாரொன நிறைந்தமாந்தர் நெருங்கினர் நெஞ்சினிற்பறந்து போதுங்கொலென்றுபதைக்கின்றாரையுவமைகூறினார். உயர்திணைப்பெயராதலின்தேவரென்புழி இரண்டாவதும்[illegible]ருக்கப்பட்டது. நெருங்கினர் எச்சமுற்று. உறைந்தவானென்றது துறக்கத்தை. (கரு)

12. ஊனளைந்தவுடற்குயிராமெனத்
தானளைந்துதழுவினதண்ணுமை
தேனளைந்துசெவியுறவார்த்தென
வானளைந்ததுமாகதர்பாடலே.

(இ - ள். ஊனளைந்த உடற்குயிராமென - ஊனனமைந்த உடம்பிற்குயிரொன்னலாம்படி, தண்ணுமைதான் அளைந்துதழுவின—மத்தளம் தான்கலந்து தழுவப்பட்டன, மாகதர் பாடல் தேனளைந்து செவியுறவார்த்தால்

லெனவானளைந்தது மாகதர் பாடல் -தேனைக்கொண்டுகோதிற் பொருந்தவார்த்தாற்போல வானளவு மெட்டியது.- (கசு)

செவியுறவார்த்தல் இலக்கணை. சத்ததாதுக்களி னான்மிகுதிபற்றி வானளைந்த வுடலென்றும், உயிர்க்குடலிடமாகலின் உடற்குயிராமென்றுங் கூறினர். மாகதரென்றது பிறர் ஆற்றலைப்புகழ்வாரை.

ஊறுகொண்டமுரசுமிழோதையை
வீறுகொண்டனவேதியர்வாழ்த்தொலி
ஏறுகொண்டெழுமல்லரிடிப்பினை
மாறுகொண்டனவந்திகரேத்தரோ.

(இ - ள்.) ஊறுகொண்டமுரசு உமிழ் ஓதையை—அடிபடுகின்ற முரசமொலிக்கு மோசையை, வேதியர் வாழ்த்தொலி வீறுகொண்டன—நான்குவேதமுணர்ந்தவர் வாழ்த்துகின்ற வோசையடக்கின, ஏறுகொண்டெழும் மல்லரிடிப்பினை—ஏற்றைப்போனின்று மல்லரிடிக்குமிடிப்பினை, வந்திகரேத்துமாறுகொண்டன - வந்திகரேத்தோசை பகைமைகொண்டன.

ஏறு ஆகுபெயர். வேதியரென்றது வேதநான்கையு முணர்ந்தாரை. வந்திகரென்றதுமங்கலப் பாடகரை. (கஎ)

ஆறுங்கானுமகன்மலையுங்கடந்
தேறியேழ்பகனீந்திப்பின்னெந்திரத்
தூறுபாகுமடையுடைத்தொண்முளை
நாறுபாய்வயற்கோசலைநண்ணினான்.

(இ-ள்.) ஆறும்கானும் அகன்மலையும் கடந்துஏறி-ஆற்றினையும் காட்டினையும் விசாலமாகிய மலையையும் கடந்துசென்று,ஏழ்பகல்நீந்தி-ஏழுநாளுங் கடந்து,பின் எந்திரத்து ஊறுபாகுமடையுடைத்து-பின்னர்எந்திரத்தினின்றும் ஊறுகின்ற சுவையையுடையபாகுமடையை யுடைத்துச்சென்று,ஒண்முளைநாறுபாய் வயல்கோசலை நண்ணினான்-ஒள்ளியமுளையினும் நாற்றினும் பாய்கின்றவயலையுடைய கோசலநாட்டையடைந்தனன்.—

முளை நாறு ஆகுபெயர்கள், நாளென்புழி முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. பொழுதுநாளுங்குறித்திலன்போய்களிறுசுற்றத்தேரீண்டமுதலனவாகிய இன்னன நிகழக்கடந்தாறு நீந்தி நண்ணினான் எனவினை முடிக்க. இப்பத்துச் செய்யுளானும் பரதன் கோசலநாட்டினை யடைந்தமையுணர்த்தப்பட்டது. (கஅ)

ஏர்துறந்தவயலினையடைந்தர்தோள்
தார்துறந்தனதண்டலைநெல்லினும்

நீர் துறந்தன தாமரைநீத்தெனப்
பார் துறந்தனள் பங்கயச்செல்வியே.

(இ - ள்) வயல் ஏர் துறந்த-வயல்கள் ஏரைத்துறந்தன, இளமைந்தர் தோள் தார் துறந்தன-இளமையாகிய வீரர்புயங்கள் மலர்மாலைகளை நீத்தன, தண்டலை நெல்லினும் நீர் துறந்தன-வயல்களிலுள்ள நெற்பயிரினும் நீர் நீங்கின, தாமரை நீத்தென-தாமரை நீங்கினாலொப்ப, பங்கயச்செல்வி பார் துறந்தனள்-தாமரையாள் நிலத்தினின்று நீங்கிப்போயினள்.—

பங்கயச்செல்வியென்றது தாமரையாளை; அவள் தாமரைத்தவிசினை நீங்குவதொப்பப் பார் துறந்தனளென்றார். ஏர் ஆகுபெயர். நீத்தாலென்பது திரிந்துநின்றது. (கக)

பிதிர்ந்துசாறு பெருந்துறைமண்டிடச்
சிதிர்ந்துசிந்தியழிந்தன தேங்கனி
முதிர்ந்துகொய்யுநரின்மையின் மூக்குமிழ்த்
துதிர்ந்துலர்ந்தன வொண்மலரீட்டமே.

(இ - ள்) தேங்கனி-இனிமையாகிய பழங்கள், பிதிர்ந்துசாறு பெருந்துறை மண்டிட—பிதிர்ந்துசாறு பெரியதுறை வழிநெருங்க, சிதிர்ந்து சிந்திய ழிந்தன-சிதிர்ந்துசிந்தியழிவுற்றன, ஒண்மலரீட்டம்-ஒள்ளியமலர்க்கூட்டம், முதிர்ந்து கொய்யுநரின்மையின் - முதிர்ந்து கொய்வாரின்மையான், மூக்குமிழ்த்துதிர்ந்து உலர்ந்தன - முதிர்ந்து குறுகியுதிர்ந்துலர்ந்து போயின.—

சிதிர்ந்துசிந்தி ஒருபொருட்பன்மொழி, மூக்கு என்றது மலரின்தண்டினை, மூக்கு என்றது, 'மூக்கிற்றூக்குறு மூரிநந்து' என்றதனானும், சங்குமூக்கு என்னும் வழக்கானு மறிக; இதற்குவேறு கூறுவாருமுளர், அதுபொருந்தாமை காண்க. (உ0)

ஏய்ந்தகாலமிதுவிதற்காமென
ஆய்ந்துமள்ளரரிகுநரின்மையாற்
பாய்ந்தகூதப்பசுநறுந்தேறலால்
சாய்ந்தொசிந்துமுளைத்தன சாலியே.

(இ - ள்) ஏய்ந்தகாலம் இது இதற்காமென-பருவகாலம் இதற்கிதுவாமென்று, ஆய்ந்துமள்ளர் அரிகுநரின்மையான்-ஆய்ந்துமள்ளரரிவாரில்லாமையான், சாலி பாய்ந்தகூதம் பசுநறுந்தேறலால் - நெற்பயிர் மாங்கனியினின்றும் பெருகிப்பாய்ந்தநல்லசெந்தேனால், சாய்ந்து ஒசிந்துமுளைத்தன-சாய்ந்துதுவண்டுமுளைத்தன.—

இன்னகாலத்தின்னபயிர்விளையு மென்பது பற்றி எய்ந்தகால மிதுவிதற்காமென வென்றார். நீரைப்பாய்ச்சுதலின்றி மாங்கனிச்சாறு பெருகிச் சாலிதானே முளைத்தனவென்பது. (உக)

எட்குலாமலரேசியநாசியர்
புட்குலாவயற்பூசற்கடைசியர்
கட்கிலார்களைகாதற்கொழுநரோ
டுட்கலாமுடையாரினுயங்கினார்.

இ - ள் எள்குலாமலர் ஏசியநாசியர்-எள்ளினிளம்பூவை யொத்தமூக்கினையுடையாராகிய, புட்குலாவயல் பூசல்கடைசியர் - பறவைகள் விரும்பும் வயலிடை வேலை செய்யும் கடைசியர், காதற்கொழுநரோடு உட்கலாமுடையாரின்-காதலையுடைய கணவரிடையுள்ளங்கலாய்த்து நின்றார்போல, களைகட்கிலாருயங்கினார்-களைகலாது வருந்தினர்.—

நாசியை யெள்ளின்மலர்க்குவமை கூறினார். காதற்கணவர்மாட்டுட்கலாமுடையார் வருந்துவதைக் களைகலாதாரோடுவமைகூறினார். கலாம்-கலகம். (உஉ)

ஓதுகின்றிலகிள்ளையுமோதியர்
தூதுசென்றிலவந்திலதோழர்பால்
மோதுகின்றிலபேரிமுழாவிழா
போதுகின்றிலபொன்னணிவீதியே.

(இ-ள்) கிள்ளையு மோதுகின்றில-கிளியு மோதாதொழிந்தன, ஓதியர் தூது சென்றில தோழர்பால் வந்தில-கூந்தலையுடைய மாதர்தூது சென்றிலவாகித் தோழர்பால்வந்தில, பேரிமுழா மோதுகின்றில- பேரிகையுமுழாவுமதிர்கில, பொன் அணிவீதிவிழா போதுகின்றில- பொன்னான்வனையப்பட்டுந் தெருவில் விழாக்கள்சென்றில,—

காதற் கொழுநர்பான் மாதரார்பாங்கியரைத்தூதுவிடுதலியல்பாதலின் அன்னதொழிந்து நின்றமையான்தூதுசென்றில வந்தில வென்றார். விழா வென்றது நைமித்திகத்தை.

பாடனீத்தனபண்டொடர்பண்குழல்
ஆடனீத்தவரங்கொடகன்புனல்
சூடனீத்தனசூடிகைசூளிகை
மாடநீத்தனமங்கலவள்ளையே,

(இ - ள்.) பண்தொடர் பண்குழல் பாடல் நீத்தன-பண்ணுற்றொடரப்பட்ட பண்ணமைந்த குழல்கள் பாடலை நீங்கின, ஆடல் நீத்த அரங்கொடு அகன் புனல்-நாடகசாலையும் தடம் பொய்கையு மாடலைநீங்கின, சூளிகை சூடல்

நீத்த - மாலைகள் சூடுதலொழிந்தன, மங்கலவள்ளை குளிகை மாடநீத்தன - மங்கலத்திற்குரியவள்ளைப்பாட்டை குளிகையையுடையஉப்பரிகை நீங்கின.

ஆடனீத்தனவெனக் கூறினமையான் அரங்கிற்கு நாடகமும், புனற்கு நீராடலுங் கொள்க. வள்ளைப்பாட்டு - வள்ளியோர் மேற்புலவர் பாடும் பாட்டு; இதுஉலக்கைப்பாட்டென்ப; "வள்ளைக்குறங்கும் வளநாட" என்றதூஉமிப்பெற்றி நோக்கி என்க. குளிகை - மணியுறுப்பு.

நகையிழந்தனவாண்முகநாறகிற்
புகையிழந்தனமாளிகைபொங்கழற்
சிகையிழந்தனதீவிகைதேமலர்த்
தொகையிழந்தனதோகையரோதியே.

(இ - ள்) வாள்முகம்நகையிழந்தன-ஒளியுள்ள முகங்கள் நகையையிழந்தன, மாளிகை நாறகிற்புகையிழந்தன-மனைகள் மணங்கமழுமகிற் புகையையிழந்தன, தீவிகைபொங்கழற்சிகையிழந்தன-விளக்குகள் மிக்க தீச்சிகையையிழந்தன, தோகையர் ஓதி தேமலர் தொகையிழந்தன - மயிலனையார் கூந்தல்கள் தேன் தங்கிய மலர்க்கூட்டங்களை யிழந்தன.—

தீவிகை என்றது விளக்கினை, அதுவட மொழிச்சிதைவு; 'தோகையர் ஆகுபெயர். (உரு)

அலர்ந்தபைங்கூழகன்குளக்கீழன
மலர்ந்தவாயிற்புனல்வழங்காமையரல்
உலர்ந்தவன்கண்ணுலோபர்கடைத்தலை
புலர்ந்துநிற்கும்பரிசிலர்போலவே.

(இ - ள்.) மலர்ந்தவாயில்புனல்வழங்காமையால் - மலர்ந்தவாயிடைநீர்வாராமையான், உலர்ந்தவன்கண் உலோபர்கடைத்தலை-அன்புநீங்கியவன்கண்மையுடைய உலோபர்கடைத்தலை வாயிலில், புலர்ந்துநிற்கும்பரிசிலர்போல-வருந்திநிற்கின்ற இரவலர்போல, அலர்ந்தபைங்கூழகன்குளக்கீழன-அலர்ந்தபசியபயிரையுடைய தடம் பொய்கைக்கீழுள்ளன.—

உலோபர்கடைத்தலைவாலியிற் பரிசிலர்புலர்ந்து நிற்பதனை மலர்ந்தவாயிற் புனல்வழங்காமைக்குவமை கூறினர். பரிசிலரென்பது இரப்போரை, பைங்கூழென்பது நெற்பயிரை. கடைத்தலை - என்றது கடைவாயிலை; இலக்கணப்போலி. (உசு)

நாவிநீத்தருநல்வளந்துன்னிய
பூவிநீத்தெனநாடுபொலிவொரீஇத்
தேவிநீத்தருஞ்சேணெறிதாவிட
ஆவிநீத்தவுடலெனலாயதே.

(இ - ள்.) நாவிநீத்து-கத்தூரிநீத்து, அருநல்வளந்துன்னிய-அருமையாகிய நல்லவளப்பம் பொருந்திய, பூவினீத்தென-நிலநீத்தாலொப்ப, நாடுபொலிவொரீஇ-நாடுஅழகினையிழந்து, தேவிநீத்து-தேவிநீங்கி, அருஞ்சேணெறிதாவிட - அருமையாகியதூரநெறியை யடைய, ஆவிநீத்தவுடலெனலாயது-உயிர்நீங்கிய வுடம்புபோன்றது. எ-று.

தேவிநீத்தருஞ்சேணெறிதாவுதலை ஆவிநீத்தவுடலொடுவமைகூறினார். நாடென்றது கோசலநாட்டினை, பொலிவொருவலென்றது அரசனிறந்துபட்டு நாடழகிழந்தமையை. இப்பத்துச் செய்யுளானு நாடு பொலிவிழந்திருந்தமையுணர்த்தப்பட்டது. (உஎ)

என்றநாட்டினைநோக்கியிடருழந்
தொன்றுமுற்றதுணர்ந்திலனுன்னுவான்
சென்றுகேட்பதோர்தீங்குளதாமெனா
நின்றுநின்றுநெடிதுயிர்த்தானரோ.

(இ-ள்.) என்றநாட்டினைநோக்கி-என்றெடுத்துக்கூறிஅந்நாட்டைப்பார்த்து, இடருழந்து-துயரெய்தி, ஒன்றுமுற்றதுணர்ந்திலன், சிறிது நிகழ்ந்ததறியானாய், உன்னுவான்-எண்ணி, சென்றுகேட்பதோர்தீங்குளதாமெனா-நாம்போய்க்கேட்பதோர்கேடுளதென்று, நின்று நின்றுநெடிதுயிர்த்தான்- இடைவிடாதுநின்று பெருமூச்செறிந்தனன். எ - று.

ஒன்றுமென்னு மும்மை முற்றுப்பொருளோடிழிவுசிறப்பு. என்றநாடென்றது அழகிழந்திருந்த நாடென்றமையை. அடுக்கு-இடைவிடாமைப்பொருளது. இதனான் நாமினிக்கேட்பதோரிடருண்டென்றதுணர்த்தப் பட்டது. (உஅ)

மீண்டுமெய்தியம்மெய்யெனுநல்லணி
பூண்டவேந்தன்றிருமகன்புந்திதான்
தூண்டுதேரினுமுந்துறத்தூங்குவான்
நீண்டவாயினெடுநகர்நோக்கினான்.

(இ - ள்) மீண்டுமெய்தி-மீண்டுமடைந்து, அம்மெய்யெனு நல்லணி பூண்டவேந்தன்றிருமகன் புந்திதான் - அவ்வாய்மையெனப்படு நல்லணி பூண்டவரசன் திருமகனாகியபரதன் சிந்தையே, தூண்டுதேரினுமுந்துற-செலுத்துந்தேரினுமுற்பட, தூங்குவான்-தங்கி, நீண்டவாயினெடுநகர் நோக்கினான்-நீண்டவாயிலை யுடைய நெடியநகரைப்பார்த்தனன்.—

இதனான் நகரின்வாயிலைக்கண்டமை யுணர்த்தப்பட்டது. அரசன் தான்கொடுத்தவரங்களான்பூதவுடம்பு நீங்கிப்புகழுடம் பெய்துபவனாகலின்மெய்யெனுநல்லணிபூண்டவனென்றார். (உக)

அண்டமுற்றுந்திரிந்தயர்ந்தாயமு
துண்டுபோதியென்றொண்கதிர்ச்செல்வனை
விண்டொடர்ந்துவிலக்குவபோல்வன
கண்டிலன்கொடியின்னெடுங்கானமே.

(இ-ள்.) அண்டமுற்றுந் திரிந்தயர்ந்து-அண்டமுழுமயர்ந்திரிந்து ஆய முதுண்டு போதியென்று-ஆய்ந்தஅமிழ்தினை யுண்டு போவென்று, ஒண்கதிர்செல்வனை-ஒள்ளிய ஞாயிற்றை, விண்தொடர்ந்து விலக்குவபோல்வன-வானைத்தொடர்ந்துவிலக்குவன போல்வனவாகிய, கொடியினெடுங்கானம் - கொடிகளாகிய நீண்டகாட்டை, கண்டிலன்-பார்த்திலன்.—

இது-தற்குறிப்பேற்றம். கொடியின் மிகுதிபற்றிக் காடென்றார். வன்மை மென்மைபற்றி பாயமுதென்றதென்க. ஒண்கதிர்ச் செல்வனென்றது ஞாயிற்றினை. (கூ0)

ஈட்டுநன்புகழ்க்கீட்டியயாவையும்
வேட்டவேட்டவர்கொண்மின்விரைந்தெனக்
கோட்டிமாக்களைக்கூவுவபோல்வன
கேட்டிலன்முரசின்கிளரோதையே.

(இ-ள்.) ஈட்டுநன்புகழ்க்கு ஈட்டியயாவையும்-தேடியநன்மையாகிய புகழ்க்குத் தேடிய செல்வமனைத்தும், வேட்டவேட்டவர் விரைந்து கொண்மினென-வேட்டவற்றை வேட்டவர் விரைந்துகொள்ளுமென, கோட்டிமாக்களைக் கூவுவபோல்வன-கூட்டமாகிய மனிதரைக் கூவுவபோல்வனவாகிய, முரசின்கிளரோதை கேட்டிலன் - முரசின்விளங்கு மோசையைக் கேட்டிலன்.—

வேட்டவர் வேட்டவாறே விரைந்தீதல்புகழீட்டுதற்கிடனாகலின் ஈட்டுநன் புகழ்க்கீட்டியயாவையும் வேட்ட வேட்டவர் கொண்மி னென்றார். (கூக)

கள்ளைமாக்கவர்கண்ணியன்கண்டிலன்
பிள்ளைமாக்களிறும்பிடியீட்டமும்
வள்ளைமாக்கணிதியும்வயிரியர்
கொள்ளைமாக்களிற்கொண்டனரேகவே.

(இ-ள்) பிள்ளைமாக்களிறும்-பிள்ளையையுடைய பெருங்களிறும், பிடியீட்டமும்-பிடியின்கூட்டமும், வள்ளைமாக்கள் நிதியும்-வள்ளைப்பாட்டுக்குரியமாந்தர் செல்வமும், வயிரியர்-பாடுவோர், கொள்ளைமாக்களிற்கொண்டனரேக-கொள்ளையடிப் போர்போற்கொண்டு செல்ல, கள்ளைமாக்கவர் கண்ணியன் கண்டிலன்-தேனைவண்டினங்கவர்கின்ற மாலையையுடையான்கண்டிலன்.

மா-வண்டு. வயிரியர் - பாடுவோர். கொள்ளையடிட்போனா மாக்களென்றார் விலங்கினுணர்ச்சியையுடையராகலின். கள்ளைமாக்கவர்கண்ணியனென்றது பரதனை. (கூஉ)

காவன்மன்னவன்கான்முளைகண்டிலன்
ஆவுமாவுமழிகவுள்வேழமும்
மேவுகாதனிதியும்வெறுக்கையும்
பூவின்வானவர்கொண்டனர்போகவே

(இ-ள்.) ஆவுமாவுமழிகவுள்வேழமும்-பசுவுங்குதிரையும்மதநீர்வழிகின்ற கதுப்பினையுடையயானையும், மேவுகாதனிதியும் வெறுக்கையும்-ஆசையான் விரும்பப்படுநிதியும் செல்வமும், பூவின்வானவர் கொண்டனர்போக-நிலத்தேவர்முகந்துகொண்டேக, காவல்மன்னவன் கான்முளை கண்டிலன்-உலகு காவலினையுடைய அரசன் தோன்றல்பார்த்திலன்.—

பூசுரரென்னும் பெயர்பற்றிப் பூவின் வானவரென்றார். கான்முளை அன்மொழித்தொகை. அந்தணர்க்குத்தானம்வழங்காமையுணர்த்திற்று. காவன்மன்னவனென்றார் உலகமுழுதுமொருகுடைநிழலிலரசாண்டவனாகலினென்க. தானப்பொருள் பசு, யானை, குதிரை வெறுக்கையாகலின் அவற்றையேயெடுத்துக்கூறினார். (கூகூ)

சூழமைந்தசுரும்புநரம்புந்தம்
ஏழமைந்தவிசையிசையாமையால்
மாழையுண்கண்மயிலெனுஞ்சாயலார்
கூழைபோன்றபொருநர்குழாங்களே

(இ - ள்.) சூழமைந்த-சூழ்ந்தமைந்த, சுரும்பும் நரம்பும்-வண்டும் யாழ்நரம்புகளும், தம் ஏழமைந்த இசை இசையாமையால்-தமக்குரிய ஏழெனப்படுமிசையைப் பாடாமையால், பொருநர்குழாங்கள் - ஆடுவார்கூட்டங்கள், மாழையுண்கண்மயிலெனும் சாயலார்-மாவடுநிகர்த்துமையுண்டகண்ணையும் மயிலன்னசாயலுமுடையமாதரார், கூழைபோன்ற - கூந்தலையொத்துநின்றன.—

ஏழிசையை முற்கூறினமாண்டுக்காண்க. சுரும்பு சாதியொருமை. உண்கண்என்பதற்குமையுண்டகண்என்றது ‡'இருநோக்கிவளுண்க'ணென்புழிப்பரிமேலழகர்கூறலானுமறிக. பொருநர் என்றது ஒருவர்படிவம்போல்வேறொருவரப்படிவம்பூண்டாடுதலை. சாயல் மயிலொப்பதாகலின் மயிலெனுஞ்சாயலாரென்றார். (கூச)

தேருமாவுங்களிறுஞ்சிவிகையும்
ஊரும்பண்டியுமூருநரின்மையால்

‡ திருக்குறள் - செ. ௧௦௯௧.

யாருமின்றியெழிலழிவீதிகள்
வாரியின்றியவாலுகவாற்றினே.

(இ - ள்.) தேருமாவும் களிறும் சிவிகையும்-இரதமுங்குதிரையும் யானையும் சிவிகையும், ஊரும் பண்டியும் ஊருநரின்மையால்-செலுத்தும்பண்டியும் ஊருகின்றாரில்லாமையான், யாருமின்றி-யாருமில்லாது, எழிலழிவீதிகள்-அழகழிந்த தெருக்கள், வாரியின்றியவாலுகவாற்றின்-வருவாயில்லாதமணற்பாங்கினிடத்தாறுகளொத்திருந்தன.—

இருந்தனசொல்லெச்சம். அரசனிறந்து பட்டதுயரான் உளர்தியையுள்ளிட்டவற்றையூருநர்இன்மையான் யாருமின்றி யெழிலழிவீதிகளைவாரியின்றிய வாலுகவாற்றினேடுவமை கூறினர். இவ்வெட்டுச் செய்யுளானும் பரதனகநர்கண்டமைபுணர்த்தப்பட்டது. (கூரு)

அன்னதன்மையகநகர்நோக்கினன்
பின்னையப்பெரியோர்தம்பெருந்தகை
மன்னன்வைகும்வளநகர்போலுமீ
தென்னதன்மையிளையவனேயென்றான்

(இ - ள்.) அன்னதன்மை அகநகர் - அத்தன்மையதாகிய அகநகரினை, நோக்கினன்-பார்த்து,பின்னை அப்பெரியோர் தம்பெருந்தகை-பின்னர் அப்பெரியாரிற் பெருமையாகிய தகைமையையுடைய பரதன், மன்னன் வைகும் வளநகர் போலுமீது- இது அரசன் வசிக்கும் வளப்பத்தையுடைய நகர்போலும், இளையவனே என்ன தன்மை என்றான்-இளையானே என்ன தன்மை யென்றனன்.-

அன்ன தன்மை என்றது-இந்நகர் கண்டிலன், கேட்டிலன், கண்டிலன் கண்டிலன், கூழைபோன்றன வாலுகவாற்றினிருந்தன வாகிய அத்தன்மையை. பெருந்தகை-அன்மொழித்தொகை: சீராமனையல்லது மனத்திடைவேறறியாதானாகலின் பெரியார் தம்பெருந்தகை என்றார். வளநகர்போலு மென்றிழித்துக்கூறினன் அதன் காட்சியைநோக்கி என்க. (கூசு)

வேற்றடங்கலர்விண்ணுறவென்றிடும்
கூற்றடங்கப்பொருநெடுங்கோளினைச்
சேற்றடங்கட்டிருவொடுநீங்கிய
பாற்றடங்கடலொத்ததுபாரென்றான்.

(இ - ள்.) வேற்றடங்கலர்-வேறுகிய பகைவர், விண்ணுற -விண்ணிலடைய, வென்றிடும் கூற்றடங்க-வெல்லுகின்றகூற்றுவனடங்க, பொருநெடுங்கோளினைப்-போர்செய்யுமாற்றலையுடையானே,சேல்நெடுங்கண் திருவொடுநீங்கிய-சேலை யொத்ததடங்கண்ணையுடைய திருமாமகள் நீங்கியிருந்த,

பாற்றடங்கடலொத்ததுபாரென்றான்-விசாலமாகியபாற்கடலை யொத்திருந்ததுபாரென்றனன்.

விண்ணுறவென்றது உயர்வுநவிற்சி. பாற்கடற்பாற்றோன்றியபொருளனைத்தும் திருநீங்கிற்சிறவாமையின தனோடுவமைகூறினர். சேல்கண்ணுக்குவமை. கூற்று சொல்லானஃறிணை. இவ்விரண்டுசெய்யுளானும்பரதன் இளையவனுக்கு நகர் நோக்கிங் காணென்ற துணர்த்தப்பட்டது. (௬௭)

குருமணிப்பூணரசிளங்கோளரி
இருகைகூப்பியிறைஞ்சினனெய்திய
தொருவகைத்தன்றுறுதுயரூழிவாழ்
திருநகர்த்திருதீர்ந்தனளாமென்றான்

(இ - ள்.) குருமணிபூண் அரசிளங்கோளரி-நன்னிறமமைந்த மணிப்பூணணிந்த அரசிளஞ் சிங்கம், இருகைகூப்பியிறைஞ்சினன்-இரண்டுகைகளையும் குவித்துவணங்கி உறுதுயரெய்திய தொருவகைத்தன்று-அடைந்ததுன்பமொருவ கைப்பட்டதன்று, ஊழிவாழ்திருநகர்திருதீர்ந்தனளாமென்றான்-பன்னெடுங்காலத்திருநகர்வாழ்திருமாமகள் நீங்கினள்போலுமென்றனன்.—

பரிதிவானவன் மரபோர்யாவருமரசாண்டநகராதலின் ஊழிவாழ்திருநகரென்றார். குருமணிப்பூணரசிளங்கோளரி யென்றது சத்துருக்கனை. இதனாற் சத்துருக்கன் கூறினமையுணர்த்தப்பட்டது.

அனையவேலையிலக்கடைத்தோரண
மனையினீணெடுமெங்கலவீதிகள்
நினையுமாத்திரத்தேகியநேமியான்
தனையனுந்தந்தைசார்விடமேவினான்.

(இ-ள்.) அனையவேலையில்-அவ்வமையத்து, அக்கடைத் தோரணமனையினீணெடுமெங்கலவீதிகள்-அக்கடைத்தோரணங்கட்டிய மனையினையுடைய மிகநீண்டமங்கலவீதிகள், நினையுமாத்திரத்தேகிய-எண்ணுமளவையிற்கடந்துசென்ற, நேமியான் தனையனும் தந்தைசார்விடமேவினான் - சக்கிரவர்த்திமகனும் தந்தையிருக்குமிடமணுகினன்.—

சென்றவிரைவுபற்றி நினையுமாத்திரத்தேகியென்றதென்க. தந்தைசார்விடமென்றது - அரசமாளிகையை. விழாமுதலியன வயரும் வீதிகளை மங்கலவீதிகளென்றார். அனையவேலையென்றது ஊழிவாழ்திருநகர்த்திருதீர்ந்தனளாமென்றானென்றுரைத்த பொழுதினை. இதனாற் பலதெருக்களைக் கடந்தரசனிருக்குந் தெருவடைந்தமை யுணர்த்தப்பட்டது. (௬௯)

விருப்பினெய்தினன்வெந்திறல்வேந்தனை
இருப்புநல்லிடமெங்கணுங்கண்டிலன்

அருப்பமன்றிதென்றையுறவெய்தினான்
பொருப்புநாணவுயர்ந்தபுயத்தினான்.

(இ - ள்.) விருப்பினெய்தினன்-விருப்பத்தானடைந்து, வெந்திறல் வேந்தனை-மிக்கவல்லமையுள்ளவரசனை, இருப்புநல்லிட மெங்கணுங்கண்டிலன்-இருக்கையிடமெங்குங் காணாதானாய், பொருப்புநாணஉயர்ந்த புயத்தினான்-மலையுநாணங்கொள்ளவுயரிய தோளையுடைய பரதன், அருப்பமன்றி தென்றையுற வெய்தினான்-அருமையன்றிதென்றைய மடைந்தனன்.—

அருப்பம் என்றது பம்மீற்றுப் பண்புப்பெயர். எய்தினன் வினையெச்சமுற்று. கண்டிலனென்ற உம்மை உயர்வுசிறப்பு. மிகத்துயரமெய்தி னென்பான் அருப்பமன்றி தென்றான். சம்பரனைப் பொருதுலகமுழுதாண்ட வரசனாதலின் வெந்திறல் வேந்தனென்றார். தோள்மலையினும் விஞ்சியதாதலின் பொருப்பு நாணவுயர்ந்தபுயத்தினா னென்ற தென்க. இதனாற்றந்தையைக் காணாதயர்ந்தமையுணர்த்தப்பட்டது. (௬௰)

ஆயகாலையிலையனைநாடித்தன்
தூயகையிற்றொழலுறுவான்றனைக்
கூயளன்னைகுறுகுதிரீண்டென
வேய்கொடோளியொருத்திவிளம்பினாள்.

(இ - ள்.) ஆயகாலையில்-அன்னவேலை, ஐயனைநாடி-தந்தையைத்தேடி, தன்தூயகையில்-தன்றூய்மையாகிய கரத்தால், தொழலுறுவான்றனை-வணங்கிநிற்பானை, கூயளன்னை-அன்னை அழைக்கின்றனள், குறுகுதிரீண்டென-இவ்விடையணுகுமென, வேய்கொள்தோளியொருத்திவிளம்பினாள்-வேய்போன்றதோளையுடையாளொருத்திகூறிநின்றனள்.—

தோள்வேய்க்குவமை. மனமுந்தூயன் சொல்லுந்தூயனாதலின் அதனைக் கையினேற்றித்தூயகையென்றார். குறுகுதிர் என்றது ஈண்டொருவரைக் கூறும்பன்மை. கூயள் இறந்தகாலப் படர்க்கையுயர்திணை முற்று யகரங்காலங்காட்டிற்று. ஆயகாலைஎன்றது அருப்பமன்றிதென்றையுறவெய்தினனென்பதனை. இதனாற்பரதனைத்தாயழைப்பதாகக் கூறியதுணர்த்தப்பட்டது. (௬௧)

வந்துதாயையடியில்வணங்கலும்
சிந்தையாரத்தழுவினளதிலர்
எந்தையென்னையரெங்கையரென்றனள்
அந்தமில்குணத்தானுமஃதாமென்றான்.

(இ - ள்.) தாயை வந்து அடியில் வணங்கலும் - தாயை வந்தடைந்தடிவணங்கிநிற்றலும், சிந்தையாரத்தழுவினன்-மனமுறத்தழுவிநின்று, எந்தையென்னையரெங்கையரென்றனன்-என்தாதையே! தாயர்தங்கையர்

தீதிலரோவெனவினவ-அந்தமில்குணத்தானும்-நற்குணங்கட் கெல்லாமுடிவில்லாதாகியபரதனும்,அஃது ஆமென்றான்-அதுவேமெனமறுமொழிகூறினான்.

அஃது என்றது அங்ஙனந்தீதிலரென்றதனை. இனிஅது என்பதனைக் குறிப்பு முற்றாக்கொண்டு ஆக்கவினை கொண்டு முடிந்ததெனினுமமையும். அதுவினைக்குறிப்புமுற்றாதலை † 'யானுமதனையது' என்பதனாலறிக. எல்லா நற்குணங்கட்கு மிடனாதலின் அந்தமில்குணத்தானென்றார். இதனாற் பரதனைக் கைகேசி தாய் முதலானோர் செய்திவினவினமையுமதற்குவிடை கூறினமையு முணர்த்தப்பட்டன. (சஉ)

வேறு.

மூண்டெழுகாதலான்முளரித்தாடொழ
வேண்டினனெய்தினனுள்ளம்விம்முமால்
ஆண்டகைநெடுமுடியரசர்கோமகன்
யாண்டையான்பணித்திரென்றிருகைகூப்பினான்.

(இ - ள்.) மூண்டெழுகாதலால்-ஓங்கித்தோன்று மாசையான், முளரிதாள்தொழ-தாமரைமலரை யொத்த பாதங்களை வணங்க, வேண்டினன் எய்தினன்-வேண்டியடைந்தேன், உள்ளம்விம்மும்-உள்ளமுமகிழும், ஆண்டகை நெடுமுடியரசர் கோமகன் - ஆடவரிற் சிறந்த நீண்டமுடிமன்னர் பெருமான், யாண்டையான் பணித்திர் என்றிருகை கூப்பினான்-யாண்டுள்ளான் அறிவிப்பிரென்றிருகரங்களையுங் குவித்துநின்றனன்.—

முளரிதாட்குவமை. வேண்டினன் வினையெச்சமுற்று. ஆண்டகை யென்பதற்கு முற்கூறினும். சக்கிரவர்த்தியென்னும் பொருள்பற்றி நெடுமுடியரசர் கோமகனென்றார். அருப்பமன்றிதென்றை யுறவேய்தினனாதலின்யாண்டையான் பணித்திரென் றிருகை கூப்பினனென்றான். இதனான் அரசன் யாண்டுளன்கொல்லோவெனவினவினமை யுணர்த்தப்பட்டது. (சங)

ஆனவனுரைசெயவறிவில்சிந்தையாள்
தானவர்வலிதவகிமிர்ந்ததானையத்
தேனமர்தெரியலான்றேவர்கைதொழ
வானகமெய்தினன்வருந்தனீயென்றாள்.

(இ - ள்.) ஆனவனுரைசெய-அவன்வினவ, அறிவில் சிந்தையாள்-மனம்வருந்துதலில்லாத கைகேசி, தானவர் வலிதவநிமிர்ந்ததானை - அரக்கர் ஆற்றல் சாலக்கெடவோங்கிய சேனையையுடைய, அத்தேனமர் தெரியலான்-வண்டுகள்விரும்புமாலையை யுடையனாகிய அவ்வரசன், தேவர்கைதொழ - வானவர்வணங்காநிற்ப, வானகமெய்தினன் - வானுலகமடைந்தனன், வருந்தனீயென்றாள் - நீவருந்தாதையென்றனன்.—

† நாலடியார்-செ. உஎக.

யாவர்க்குஞ்சால நல்லனென்பார் ஆனவனென்றார். வானகமெய்தல்-பிறிதுநவிற்சி. தமக்குச்செய்த நன்றிபாராட்டுதல் பற்றித் தேவர்கைதொழ வென்றதென்க. அரசனிறந்து பட்டமை முதுமைப்பருவமுடைமையாகலின் வருந்தனீயென்று கூறினர். இதனாற்கைகேசி பரதனுக்கரச னிறந்து பட்டமை யறிவித்ததுணர்த்தப்பட்டது. (சச)

எறிந்தனகடியசொற்செவியுளெய்தலும்
நெறிந்தலர்குஞ்சியானெடிதுவீழ்ந்தனன்
அறிந்திலனுயிர்த்திலனசனியேற்றினால்
மறிந்துயர்மராமரமண்ணுற்றென்னவே.

(இ - ள்.) எறிந்தனகடியசொல்- எறிந்தாலொத்த கடுஞ்சொல், செவியுளெய்தலும்-காதிற்சார்தலும், நெறிந்து அலர்குஞ்சியான் - நெறிந்துபரந்த குடிமியையுடையான், அறிந்திலன்-தன்னை யறியாமலும், அசனியேற்றினால் மறிந்துயர் மராமரமண்ணுற்றென்ன-இடியேற்றினன்மறிந்தோங்கிய மராமர மண்ணிற்கிடந்தாலென, நெடிது வீழ்ந்தனன் - மிகவும்விழுந்தனன்.—

எறிந்தனகடியசொலென்றது தேனமர் தெரியலான்வானக மெய்தினானென்பதனை. நெறிந்தலர்குஞ்சியானென்றது பரதனை. அறிதிலனென அவன் மண்ணிற்புரண்டு வீழ்ந்தமையை அசனியேற்றினன் மறிந்துயர் மராமர மண்ணுற்றென்ன நெடிதுவீழ்ந்தனனென்றுவமையாற் கூறினர். இதனான் அவனடைந்த துயர் கூறப்பட்டது. (சரு)

வாயொளிமழுங்கத்தன்மலர்ந்ததாமரை
ஆயலர்நயனங்களருவிசோர்தரத்
தீயெரிசெவியில்வைத்தனையதீயசொல்
நீயலதுரைசெயநினைப்பரோவென்றான்,

(இ-ள்.) வாயொளிமழுங்க-வாயினொளி மழுங்க, தன் மலர்ந்த தாமரை ஆயலர் நயனங்கள் அருவிசோர்தர - தன்மலர்ந்த தாமரை மலர் போன்ற கண்கள் அருவிநீர்சொரிய, தீயெரிசெவியில் வைத்தனைய தீயசொல் - மிக்கதீயைக்காதில் வைத்தாலொத்தகொடியசொல், நீயலதுரை செய நினைப்பரோவென்றான் - நீயல்லாமலுரைக்கவெண்ணுவரோ வென்றனன்.—

தாமரை கண்ணுக்குவமை, தீயெரிசெவியில்வைத்தனைய தீயசொலென்றது வானகமெய்தினான் வருந்தனீயென்றானென்பதனை. பிறர்கூறவாராதமொழி நீபகர்ந்தனையென்பார் நீயலதுரைசெயநினைப்பரோ வென்றதென்க. இதனாற் பரதன் தன் றாயைக்கடிந்தமையுணர்த்தப்பட்டது. (சசு)

எழுந்தனனேங்கினனிரங்கிப்பின்னரும்
விழுந்தனன்விம்மினன்வெய்துயிர்த்தனன்

அழிந்தனனரற்றினனரற்றியின்னன
மொழிந்தனன்பின்னருமுருகிறசெவ்வியான்

(இ - ள்.) எழுந்தனன் ஏங்கினன் - எழுந்தேங்கி, இரங்கி பின்னரும் விழுந்தனன்,இரங்கிப் பின்னும் விழுந்தனன்,விம்மினன்வெய்துயிர்த்தனன்-விம்மினன்நெட்டுயிர்ப்பெறிந்தான்,அழிந்தனன்-மனமழிந்தான்,அரற்றினன்-புலம்பினன், அரற்றிஇன்னன-புலம்பிஇன்னோரன்னவைற்றை, முருகிற் செவ்வியான் - சேயினுமழ குடையான், மொழிந்தனன் - கூறுவானாயினன்.

எழுந்தனன் ஏங்கினன் என்பன வினையெச்சமுற்று. பேராற்றலுங்கல்வியறிவுமுதலன வுடைமையின் முருகிற் செவ்வியானென்றார். முருகு சொல்லானஃறிணை. இன்னன என்றது அறந்தனைவேரறுத் தருளைக்கொன்றனை என்றாற்போல்வனவற்றை.— (சஎ)

அறந்தனைவேரறுத்தருளைக்கொன்றனை
சிறந்தநின்றண்ணளித்திருவைத்தேசழித்
திறந்தனையாமெனிலிறைவநீதியை
மறந்தனையுனக்கிதின்மாசுமேலுண்டோ.

(இ - ள்.) அறந்தனைவேரறுத் தருளைக்கொன்றனை-அறத்தைவேரறுத்தருளைச்சிதைத்தனை, சிறந்த நின்றண்ணளித்திருவை - சிறந்த நின்தண்ணியகருணையாகிய செல்வத்தை, தேசழித்திறந்தனை-தேசழித்துமாண்டனை, நீதியைமறந்தனை - நீதியைமறந்து நின்றனை, இறைவ-இறைவனே, உனக்கிதின் மாசுமேலுண்டோ-இதனினுமுனக்குக் குற்றம் பின்னுமுண்டோ. —

அருளைக்கொன்றமைஇலக்கணை. அறம்என்றது தொடர்புபற்றுதேவருக்குமுற்றூர் மேற்செல்வது. அளித்திரு-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ()

சினக்குறும்பெறிந்தெழுகாமத்தீயவித்
தினக்குறும்பியாவையுமெற்றியாவர்க்கும்
மனக்குறுநெறிசெலும்வள்ளியோய்மறந்
துனக்குறுநெறிசெலலொழுக்கின்பாலதோ.

(இ - ள்.) சினம் குறும்பு எறிந்து எழுகாமத்தீ அவித்து சினமாகிய குறும்பினையெறிந்தெழா நின்றகாமமாகிய நெருப்பையவித்து, இனக்குறும்பு யாவையும் எற்றி-இனமாகிய குறும்பெனைத்தமோதி, யாவர்க்கு மனக்குறுநெறிசெலும் வள்ளியோய் -யாவர்க்குமனக்குப் பொருந்திய வழியிடைக்கும் வள்ளன்மையுடையானே, மறந்து உனக்குறு நெறிசெலல் - அதனைமறந்து உனக்கு ஏற்றவழியிற்சேறல், ஒழுக்கின்பாலதோ-நல்லொழுக்கின்பான்மையதோ.—

சினக்குறும் பென்றமையானும் காமத்தீயென்றமையானும் இனக்குறுப்பென்றது மயக்கத்தினை. வடநூலார் அவிச்சையும், அகங்காரமும், அவா

வும், ஆசையும், கோபமுமென ஐந்தென்பர்; இவையேபஞ்சக்கிலேசமெனப் படும். இவற்றைத் † 'காமம் வெகுளிமயக்க' மென்புழிப் பரிமேலழகர் விரித்தலானுமுணர்க. யாவர்க்கு மனக்குறு நெறிசெலலென்றது ஒப்புரவொழுகுதலை. (௬௯)

முதலவன்முதலியமுந்தையோர்பழங்
கதையையும்புதுக்கியதலைவன்கண்ணுடை
நுதலவன்சிலைவிலினேன்மைநூறிய
புதல்வனையெங்கணம்பிரிந்துபோயினாய்.

(இ - ள்.) முதலவன் முதலிய முந்தையோர் - ஞாயிறு முன்னாயமுன்னோர், பழங்கதையையும் புதுக்கிய தலைவன் - பழங்கதையையும் புதுக்கிய இறைவன், கண்ணுடைய நுதலவன் சிலைவிலினேன்மைநூறிய - நெற்றியிற் கண்ணுடைய கடவுள் மலைபோன்ற வில்லாற்றலைக்கெடுத்த, புதல்வனையெங்கணம் பிரிந்துபோயினாய் - மகனையெவ்வாறு பிரிந்து சென்றனை.—

தலைவன் புதல்வனை யெங்கணம் பிரிந்துபோயினாயென வினைமுடிக்க. ஆடகமால்வரையன்னதென முற்காண்டத்துக் கூறலான் சிலைவில் என்றதென்க. ஆதித்தனென்னும் பெயர்பற்றிமுதலவனென்றார்; அல்லது மனுவின் தொடக்கமானவனென்பதுபற்றி முதலவனெனக் கூறினாரெனினுமமையும். உம்மை உயர்வு சிறப்பு. கண்ணுடை நுதலவனென்றது அரனை. சிலைவில் ஒலிக்கும் வில்லென்பதன்றி யொருபொருட்பன் மொழியெனக்கொண்டு சிலையாகிய வில்லென்றுரைப்பினுமமையும். புதல்வனென்றது சிராமனை. தலைவன் புதல்வனையெனக்கொண்டு தலைவனாகிய புதல்வனெனவிரிக்கினுமாம். (௭௰)

செவ்வழியுருட்டியதிகிரிமன்னவ
எவ்வழிமரபினுமிரவலாளர்தாம்
இவ்வழியுலகினிலின்மைநண்பினோர்
அவ்வழியுலகினுமுளர்கொலோவையா.

(இ - ள்.) செவ்வழியுருட்டிய திகிரிமன்னவ - செம்மையாகிய நெறியிற் செலுத்திய ஆக்கினைச்சக்கரமுடைய அரசனே, எவ்வழிமரபினும் இரவலாளர் தாம் - எல்லா மரபினும் இரப்பவரே, இவ்வழியுலகினி லின்மை - இவ்வழித்தாய உலகினிடையின்மையான், நண்பினோர் அவ்வழியுலகினும் ஐயா உளர்கொலோ - நண்புடையார் அவ்வழியுலகத்தினும் இறைவனே இருக்கின்றனரோ.—

அவ்வழியுலகென்பது துறக்கநாட்டினை. எவ்வழிமரபினுமிரவலாளர்தாம் அவ்வழி யுலகினிலின்மையென்றார் 'மொய்யார்கலிசூழ் முதுபாரின் மூகந்துதானக் - கையார் புனலானனையாதனகையுமில்லை' 'ஈந்தேகடந்

† திருக்குறள். செ. ௩௬௦.

தானிரப்போர்கட்' லென்பனமுதலிய முற்றாண்டத்துக் கூறுவனநோக்கி. ஓகாரமெதிர்மறை. (ருக)

பற்பகனிழற்றுநின்கவிகைபாய்நிழல்
நிற்பனபல்லுயிருணங்கநீநெடுங்
கற்பகநறுநிழல்காதலித்தியோ
மற்பகமலர்ந்ததோண்மன்னர்மன்னனே.

(இ - ள்.) பற்பகல் நிழற்று நின்கவிகைபாய்நிழல் - பலகாலு நிழலைச் செய்யும் நின்குடையின் பரந்த நிழலிடை, நிற்பனபல்லுயிருணங்க - நிற்பனவாகிய பல்லுயிரும்வருந்த, மற்பகமலர்ந்ததோள் மன்னர் மன்னனே - மற்போர்க்குரிய பரந்ததோளையுடைய அரசர்க்கரசனே, நீகற்பகநறு நிழல்காதலித்தியோ - நீ கற்பகத்து நன்னிழலை விரும்பிச்சென்றனையோ.—

பற்பகலென்றது அறுபதினுயிரமாண்டென்பதனை. நிற்பனவென்றது சேதனப்பொருளை. பல்லுயிரென்புழி முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. இதுகாறுங் கவிகைநிழலினிருந்தநீகற்பகநறுநிழல்விரும்பிச்சென்றனையென்பார் கற்பகநறுநிழல்காதலித்தியோவென்றார். (ருஉ)

இம்பர்நின்றேகினையிருக்குஞ்சார்பிழந்
தும்பர்வந்துன்கழலொதுங்கினர்கொலாம்
சம்பரனனையவத்தானைத்தானவர்
அம்பரத்தின்னமுமுளர்கொலாமையா

(இ - ள்.) ஐயா-ஐயனே, சம்பரனனைய அத்தானை தானவர்-சம்பரனையொத்த அச்சேனையையுடைய அரக்கர், அம்பரத்தின்னமு முளர்கொலாம் - இன்னும் விண்ணுலகத்தினு முளரோ, இருக்குஞ் சார்பிழந்து உம்பர்வந்துன் கழலொதுங்கினர்கொலாம் - இருக்கின்றசார்பினை இழந்து, உம்பர்வந்துன் கழலொதுங்கினர் கொலாம் - தேவர்வந்துன்றாளிடை யொதுங்கினரோ, இம்பர் நின்றேகினை - ஆதலால் இவ்வுலகினின்றும் போந்தனை.—

முன்னையொன்று சம்பரன்போல்வாரைவிண்ணவர் பொருட்டு வெற்றிகொண்ட நீயின்னும்அன்னான் போல்வாரை வெல்லச்சென்றனையோ வென்பார் இம்பர்நின்றேகினை யென்றும், அம்பரத்தின்னமுமுளர் கொலாமென்றுங் கூறினர். இருக்குஞ் சார்பிழந்தென்றது இந்திரதிருவம் பெற்றிருத்தலை விட்டென்பதனை. (ருங)

இயங்கெழுதானையரிறுத்தமாத்திறை
உயங்கலின்மறையவர்க்குதவியும்பரின்
அயங்கெழுவேள்வியோடமரர்க்காக்கிய
வயங்கெரிவளர்த்தனைவைகவல்லையோ

(இ - ள்.) இயங்கெழுதானையர்-வாத்தியமொலிபடும் சேனையையுடையார், இறுத்தமாத்திறை-கொடுத்தபெருந்திறை, உயங்கலில்-வருந்தலில்லாத, மறையவர்க்குதவி - அந்தணர்க்குபகரித்து, அயங்கெழுவேள்வியோடு - பரிமேதத்தோடு, அமரர்க்காக்கிய - தேவருக்காக்கிய, வயங்கெரிவளர்த்தனை - விளங்குகின்ற தீயையோம்பினை, வைகவல்லையோ - பொருந்தவன்மையையுடையையோ.—

அயங்கெழுவேள்வியென்றது பரிமேதத்தை. வேள்விதேவர்பொருட்டாகச்செய்யவேண்டுதலின் அயங்கெழுவேள்வியோடமரர்க்காக்கிய வென்றும், நாளுமுத்தீயோம்பன் முறையாகலின் வயங்கெரிவளர்த்தனை யென்றும், அந்தணர்க்குத்தான முதலியனவியற்றவேண்டுதலின் உயங்கலின் மறையவர்க்குதவியென்றுங்கூறினர். (ருச)

ஏழுயர்மதகளிற்றிறைவவேகினை
வாழியகரியவன்வறியன்கையெனப்
பாழியம்புயத்துநின்பணியினீங்கலா
ஆழியையினியவற்களிக்கவெண்ணியோ

(இ - ள்.) ஏழுயர்மதகளிற்றிறைவ-ஏழாகிய உயர்ந்த மதத்தையுடைய களிற்றையூருமரசனே! வாழியகரியவன் கை-வாழ்தலையுடைய கரியவன்கை, வறியன்கையென-வறுமையுடையான் கைபோல, பாழியம்புயத்துநின்பணியினீங்கலா - பருத்ததோளை நின்பணியினின்று நீங்காத, ஆழியை - சக்கரத்தை, இனி அவற்களிக்கவெண்ணியோ - இனி அவனுக்குதவ வெண்ணங்கொண்டோ, ஏகினை - போயினை.—

கையென்டதனைப் பொருட்குங்கூட்டுக. வாழிய என்றார் அவன் வாழ்தலையுடையானாகலின் என்பதன்றி அசையெனினுமமையும். யானையினுறுப்பிலேழுயர்வாகலின் ஏழுயர்மதகளிறென்றார். கரியவனென்றது சீராமனை. வறியவனேற்றலொப்பக் கரியவன் கைநின்னாழியினை யடையவேண்டுமென்பார் வாழியகரியவற்கு நின்பணியினீங்கலாவாழியை யளிக்கவென்றார். வறியன்மையைக் கரியவன்கைக்கு வமைகூறினர். (ருரு)

பற்றிலைதவத்தினிற்பயந்தமைந்தற்கு
முற்றுலகளித்ததுமுறையினெய்திய
கொற்றவன்முடிமணக்கோலங்காணவும்
பெற்றிலைபோலுநின்பெரியகண்களால்.

(இ - ள்.) தவத்தின்பற்றிலை - தவத்திடைப்பற்றுடையாயல்லை, நின் பயந்தமைந்தற்கு - நின்னாற்பெறப்பட்ட புதல்வனுக்கு, முற்றுலகளித்து - உலகமுழுதுந்தந்து, அதுமுறையினெய்திய-அதுமுறைமையாலடைந்த, கொற்றவன்முடி மணக்கோலங்காணவும் - அரசன் மகுடாபிடேகமாகிய கோலத்

தைப்பயாக்கவும், பெற்றிலைபோலும் - நின்பெரியகண்களால் - நின் பெரிய விழிகளால், அடைந்தாயல்லை போலும்.

பயந்த மைந்தனென்றது சீராமனை. அரசர்மாலையிற்றோன்றினோனாதலின் அவனுக்குலக முழுது மளிக்கவேண்டுமென்பார் பயந்தமைந்தற்கு முற்றுலக வித்தென்றும், அதனைச்சீராமனேபெற்று முடிபுனைகோலமுலகங்காணவேண்டுதலின் முறையினெய்திய மணிமுடிக்கோலங்காணவுமென்றும், அதனை நின்கண்ணாற்காணவேண்டுமாகலின் நின் பெரிய கண்களாற் காணவும் பெற்றிலை போலுமென்றும், தவத்திற்பற்றிலையாயினன்றேதுநற்கமெய்தினையென்பார் பற்றிலை தவத்தினென்றுங்கூறினார். இப்பத்துச்செய்யுளானும்பரதன் அரற்றினமை யுணர்த்தப்பட்டது. (கூஎ)

ஆற்றலனின்னனபன்னியாவலித்
தூற்றுறுகண்ணின னுருகுவான்றனைத்
தேற்றினனொருவகைசிறிதுதேறிய
கூற்றுறழ்வரிசிலைக்குரிசில்கூறுவான்,

(இ - ள்.) ஆற்றலன்-ஆறுதலனாகி, இன்னனபன்னி-இவைபோன்றன பன்முறையெடுத்துக்கூறி, ஆவலித்து - கொட்டாவிவிட்டு, ஊற்றுறுகண்ணினன் - ஊற்றுப்போற் கண்ணீர்பெருக்கி, உருகுவான்-மனங்குழைவான், தனைத்தேற்றினன் - தன்னிற்றேறி, ஒருவகை சிறிதுதேறிய-ஒருவண்ணஞ் சிறிதுதெளிந்த, கூற்றுறழ் வரிசிலைகுரிசில் கூறுவான்-கூற்றுவனை நிகர்த்த கட்டமைந்த வில்லையுடைய அரசன் கூறுவான். எ-று.

இன்னனபன்னியென்றது எழுந்தனனேங்கினன் முதலாயவற்றை. ஆற்றலன், கண்ணினனென்பனவினையெச்சமுற்று. தனைத்தேற்றினன்-உருபு மயக்கம். கூற்றுச்சொல்லானஃறிணை. வரிசிலைக்குரிசிலென்றதுபரதனை. இதனாற் பரதன் சிறிது தேறிப்பின்னருங் கூறத்தொடங்கியதுணர்த்தப்பட்டது.

எந்தையும்யாயுமெம்பிரானுமெம்முனும்
அந்தமில்பெருங்குணத்திராமனாதலால்
வந்தனையவன்கழல்வைத்தபோதலாற்
சிந்தைவெங்கொடுந்துயர்தீர்கலாதென்றான்.

(இ - ள்.) அந்தமில்பெருங் குணத்திராமன்-முடிவில்லாத பெருங்குணத்தினையுடைய சீராமன், எந்தையும் யாயும் எம்பிரானும் எம்முனும் ஆதலால்-என்தாதையும் தாயும் எங்கடவுளும் எம்முன்னோனும் ஆகையால்,அவன்கழல்வந்தனை வைத்தபோதலால்-அவன்றாளைவணங்கினாலல்லது, சிந்தை வெங்கொடுந்துயர் தீர்கலாதென்றான்-மனத்திடைமிகக் கொடிய துன்ப நீங்கலாதென்றான்-எ-று.

அந்தமில்பெருங்குண மென்றார் தாய் சொற்கடவாமை, தந்தை சொன் மிக்க மந்திரமில்லை யெனக் கோடல், பெரியாரைத் துணைக்கோடல், நட்டார்க்கிடுக்கண் செய்யாமை முதலிய குணங்களுடைமை, துயர் தீர்தலவன்றாளைவ ணைத்தலைப்பெய்ப்பார் அவன்கழல் வணங்கிறலல்லது சிந்தை வெங்கொடுந்துயர்தீர்கலாதென்றதென்க. வெங்கொடுந்துயரொடு பொருட்பன்மொழி 'தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லால்-மனக்கவலை மாற்றலரிது' என்பதூஉமிப்பொருணோக்கி. இதனாற் பரதன் சீராமனையடைந்தாலல்லது துயர் நீங்காதென்பதுணர்த்தப்பட்டது. (௫௧)

அவ்வுரைகேட்டலுமசனியேறென
வெவ்வுரைவல்லவள்மீட்டுங்கூறுவாள்
தெவ்வடுசிலையினாய்தேவிதம்பியென்
றிவ்விருவோரொடுங்கானத்தானென்றாள்.

(இ-ள்.) அவ்வுரைகேட்டலும்-அச்சொற்கேட்டலும், அசனியேறென-இடியேறென்னலாம்படி, வெவ்வுரை வல்லவள்-கொடுஞ்சொல்லில் வல்லமையுடையாள், மீட்டும் கூறுவாள்-பின்னும்கூறுவாள், தெவ்வடுசிலையினாய்-பகைவரை வெற்றிகொள்ளும் வில்லையுடையானே, தேவிதம்பியென்றிவ்விருவோரொடும் -மனைவிதம்பியெனப்படு மிருவருடன், கானத்தான்என்றாள்-காட்டிற்சென்றனனென்றனள். எ-று.

அவ்வுரை கேட்டலென்றது சிந்தைவெங்கொடுந்துயர் தீர்கலாதென்பதனை. இறைவன் காடுபோந்ததையையஞ்சாது கூறுதலின் அசனியேறென வெவ்வுரை யென்றார். தெவ்வடுசிலையினாயென்றது பரதனை. இதனாற்கைகேசி தேவிதம்பியென்றிவ்விருவோரொடுஞ்சீராமன் கானத் தானென்றதுணர்த்தப்பட்டது. (௫௨)

(1) வனத்தினனென்றவளிசைத்தமாற்றத்தை
நினைத்தனனிருந்தனனெருப்புண்டானென
வினைத்திறம்யாதினிவிளைவதின்னமும்
எனைத்துளகேட்பனதுன்பம்யானென்றான்.

(இ-ள்.) வனத்தினன் என்று அவளிசைத்தமாற்றத்தை-காட்டகத்தானென்றவள் கூறியசொல்லினை, நினைத்தனன் நெருப்புண்டானென இருந்தனன் - எண்ணி நெருப்பினையுண்டவன் போலிருந்தனன், இனிவிளைவது வினைத்திறம்யாது-இனிவிளைவதாகிய வினையின்வகையாது, இன்னமும் கேட்பன துன்பம் எனைத்துளயான்என்றான்-இனியான்கேட்கப் படுவனவாகிய துயரங்கள் எத்தனையோ வென்றனன்.—

வனத்தினனென்றது கானத்தானென்றதனை வற்புறுத்தற்கு, நினைத்தனன் வினையெச்சமுற்று. கழிபெருந்துயரெய்தினனென்பார் நெருப்புண்டா

னென விருந்தனனென்றும், வினைவிளைவாவது இன்னமும் மலகிலவென்பார் இனிவிளைவது வினைத்திறம்யாதென்றும், இதுவேயல்லது யான் கேட்டனவற்றிற்கலகில வென்பார் இன்னமுங்கேட்பன துன்பம் எனைத்துளவென்றுங் கூறினர். (சுக)

(2) ஏங்கினன்விம்மலோடிருந்தவேந்தலப்
பூங்கழற்காலவன்வனத்துப்போயது
தீங்கிழைத்ததனினோதெய்வஞ்சீறியோ
ஓங்கியவிதியினோயாதினோவெனா.

(இ-ள்.) ஏங்கினன் விம்மலோடிருந்த எந்தல்-ஏங்கியழுகையோடிருந்த அரசிளஞ்சிங்கம், அப்பூங்கழற்காலவன்-அப்பூவினியன்றவீரகண்டையணிந்த தாளையுடையசீராமன், வனத்துப்போயது-காட்டிற்சென்றது, தீங்கிழைத்ததனினோ-பொல்லாங்கிற்றியதனானோ, தெய்வஞ்சீறியோ - தெய்வக்குற்றத்தானோ, ஓங்கியவிதியினோ-ஓங்கிய ஊழினானோ, யாதினோ வெனா-யாதானோ வென்று.

ஏந்தல் ஆகுபெயர். எம்முன் வனத்திற்குச் சென்றது தீங்கிழைத்ததனினோதெய்வஞ் சீறியோ விதியினோ யாதினோ வின்ன தென்றறியேனென்றையத்தாற்கூறினன். (சுஉ)

(3) தீயனவிராமனேசெய்யுமேலவை
தாய்செயலல்லவோதலத்துளோர்க்கெலாம்
போயதுதாதைவிண்புக்கபின்னரோ
ஆயதன்முன்னரோவருளுவீரென்றான்.

(இ - ள்.) தீயன இராமனே செய்யுமேல்-தீக்கருமங்களைச் சீராமனே செய்வானெனின், அவை தாய் செயலல்லவோ தலத்துளோர்க்கெலாம்—நிலத்தவர்க்கெல்லாம் அவைதாயின் செய்கையன்றோ, போயது - அவன் காடு சென்றது, தாதைவிண்புக்க பின்னரோ - தந்தை துறக்க மடைந்தபின்னோ, ஆயதன்முன்னரோ - அதன்முன்னோ, அருளுவீரென்றான் - கூறுமினென்றனன்.—எ-று.

பொல்லாங்கென்பவை யெல்லாந்தவிர்ந்தவனாதலின் அவன் அவற்றைச் செய்யானென்பார் தீயனவிராமனே செய்யுமேலென்றும், அவற்றையுலக மேற்கொள்ளுமென்பார் தலத்துளோர்க் கெலாம் தாய் செயலல்லவோ என்றும், தாதை அவனைக் கணமேனும் பிரிந்துயிர்தரியா னென்பார் போயது தாதை விண்புக்க பின்னரோ ஆயதன் முன்னரோ என்றும் வினாயினனென்க. இம்மூன்று செய்யுளானும் சீராமன் அரசனிறந்து பட்டதன் முன்னரோ பின்னரோ காடுசென்ற தென்பதுணர்த்தப்பட்டது. (சுங)

குருக்களையிகழ்தலினன்றுகூறிய
செருக்கினாலன்றொருதெய்வத்தானுமன்
றருக்கனேயனையவவ்வரசர்கோமகன்
இருக்கவேவனத்தவனேகினானென்றாள்.

(இ - ள்.) குருக்களை இகழ்தலினன்று - ஆசிரியரை யிகழ்வதினன்று, கூறிய செருக்கினாலன்று-சொல்லிய செருக்கானன்று, ஒருதெய்வத்தானுமன்று ஒப்பற்றதெய்வஞ்சீறியதனாலுமன்று, அருக்கனேயனைய அவ்வரசர்கோமகன்-ஞாயிற்றையே யொத்த அவ்வரசர் பெருமான், இருக்கவே வனத்தவனேகினானென்றான்-உயிருடனிருக்கவே காட்டகத்தவன் சென்றானென்றனன். எ-று

குருக்களையிகழ்தலாவது தீங்கிழைத்தலையும், கூறிய செருக்கினாவது விதியினும், தெய்வஞ் சீறினமை தெய்வஞ்சீறினமையும், ஞாயிறன்ன தூய்மையுடையனாகலான் அருக்கனேயனையவென்றும், அவனுயிருடனிருக்கவே சென்றனன் வனத்தென்றுங் கூறினாள். இதனாற்கைகேசி அரசனிருக்கவே அவன்காடு சென்றானென்றது உணர்த்தப்பட்டது. (கூ௪)

குற்றமொன்றில்லையேற்கொதித்துவேறுளோர்
செற்றதுமில்லையேற்றெய்வத்தாலன்றேற்
பெற்றவனிருக்கவேபிள்ளைகான்புகல்
உற்றதென்பின்னவனுலந்ததென்னென்றான்.

(இ - ள்) குற்றமொன்றில்லையேல்-பிழைசிறிது மில்லையேல், கொதித்து வேறுளோர் செற்றது மில்லையேல் - கோபித்து வேறாயோர் பகைத்தது மில்லையேல், தெய்வத்தாலன்றேல்-தெய்வத்தாலல்லையாயின், பெற்றவனிருக்கவே-தாதையுயிருடனிருக்கவே - பிள்ளைகான் புகலுற்றதென் பின்னவனுலந்ததென் என்றான்- மகன் காடுசென்றமை யாது பின்னர் அவன் இறந்த காரணம் யாதென்றனன்.

தெய்வத்தாலென்றது தெய்வஞ்சீறியென்றதன்றி விதியானெனினுமமையும். ஒன்றுமென்னு மிழிவுசிறப்பும்மை விகாரத்தாற் றொக்கது. இருக்கவென்றது உயிரோடிருத்தலை யுணர்த்திற்று. இதனாற்பரதன் மீட்டும் அரசனிருக்கவே அவன் காடு சென்றமையும், பின்அவன் இறந்து பட்டமையும் வினயமை யுணர்த்தப்பட்டது. (கூ௫)

வாக்கினால்வரந்தரக்கொண்டுமைந்தனைப்
போக்கினேன்வனத்திடைப்போக்கிப்பாருனக்
காக்கினேனவனதுபொறுக்கலாமையால்
நீக்கினான்றன்னுயிர்நேமிவேந்தென்றாள்.

(இ - ள்.) வாக்கினால் வரந்தரக்கொண்டு - வாக்கினால் வரங்கொடுப்பக்கொண்டு, மைந்தனைபோக்கினேன் வனத்திடை - மகனைக் காட்டிற்போகச்செய்து, போக்கிபாருனக்காக்கினேன்-அவ்வாறுபோக்கி நிலத்தையுனக்குரிய தாக்கினேன், அவனது பொறுக்கலாமையால்-அவன் அதுபொறாமையான், தன்னுயிர் - தன் உயிரினை, நேமிவேந்து போக்கினானென்றாள் - அரசர்பெருமான் நீக்கினனென்றனன்.

நேமிவேந்து சொல்லானஃறிணை. சுட்டுமுன்வந்தது செய்யுளாதலின். மைந்தனென்றதுசீராமனை. அரசன் வாக்கானே நாடுபெற்றேனென்பாள் வாக்கினால் வரந்தரக்கொண்டு பாருனக்காக்கினேனென்றாள். வாக்கினாலென்றது மேலருக்கனேயனையவென்பதை வற்புறுத்தற்கு. நோய்முதலிய வற்றாலிறந்திலனென்பதற்கு அதுபொறாமை யாற்றன்னுயிர் போக்கினானென்றதென்க. இதனாற் கைகேசி விடையிறுத்தமை யுணர்த்தப்பட்டது. (௬௬)

கூடினமலர்க்கரஞ்சொல்லின்முன்செவி
கூடினபுருவங்கள்குதித்துக்கூத்துநின்
றாடினவுயிர்ப்பினோடனற்கொழுந்துகள்
ஓடினவுமிழ்ந்தனவுதிரங்கண்களே.

(இ - ள்) மலர்க்கரம் - மவர்போன்ற கைகள், கூடின - கூப்பின, சொல்லின்முன் - சொல்லுதன்முன், புருவங்கள் செவிகூடின - புருவங்கள் காதுவரையிற்கூடின, குதித்து கூத்துநின்றாடின - குதித்துநின்று கூத்தாடின, உயிர்ப்பினோடழற் கொழுந்துகளோடின - உயிர்ப்பினோடு தீக்கொழுந்துகளோடின, கண்கள் உதிரம் உமிழ்ந்தன - விழிகள் உதிரஞ்சொரிந்தன.

கண்கள் உதிரமுமிழ்ந்தன என்றது பால்வழுவமைதி. கூடினபுருவமென்றது சினத்தின்குறி. உயிர்ப்பினோடழற்கொழுந்துகளோடின வுமிழ்ந்தன வுதிரங் கண்களென்றதுமது. (௬௭)

துடித்தனகபோலங்கள்சுற்றுந்தீச்சுடர்
பொடித்தனமயிர்த்தொளைபுகையும்போர்த்தன
மடித்ததுவாய்நெடுமழைக்கைமண்பக
அடித்தனவொன்றொடொன்றசனியஞ்சவே.

(இ - ள்) கபோலங்கள் துடித்தன - கபோலங்கள் துடித்து நின்றன, சுற்றும் தீச்சுடர் மயிர்த்தொளை பொடித்தன - சுற்றும் அனற்கொழுந்தை மயிர்த்துவாரம் அரும்பின, புகையும் போர்த்தது-புகையுமூடிக்கொண்டது, வாய்மடித்தது-வாய் மடித்துக்கொண்டது, ஒன்றொடொன்று அசனியஞ்ச-ஒன்றினோடொன்று இடியஞ்ச, நெடுமழைக்கை-நீண்டமழைபோன்ற கரங்கள், மண்பக அடித்தன- மண்பிளக்க அடித்துக்கொண்டன. எ-று.

பெருங்கொடையுடையா னென்பதைச் சிறப்பித் தற்கு நெடுமழைக் கைஎன்றார். (கூஅ)

பாதங்கள்பெயர்தொறும்பாருமேருவும்
போதங்கொணெடுந்தனிப்பொருவில்கூம்பொடு
மாதங்கம்வருகலமறுகிக்கால்பொர
ஓதங்கொள்கடலினின் றுலைவபோன்றவே.

(இ - ள்.) பாதங்கள் பெயர்தொறும்- தமது பாதங்கள் பெயருந்தோறும், பாருமேருவும்-பாருமேருவரையும், போதங்கொணெடுந்தனிப்பொருவில் கூம்பொடும்- மரக்கலங்கொண்ட தனிநெடிய வொப்பிகந்த பாய்மரத்தோடும், மாதங்கம்வருகலம்-யானையேறிவருமரக்கலம், மறுகிக்கால்பொர - காற்றினாற் பொரக்கலங்கி, ஓதங்கொள்கடலினின்றுலைவபோன்ற - பெருக்கினையுடைய கடலினிடைவருந்துவன போன்றன.

கூம்பு-பாய்மரம், ஓதம்-பெருக்கு. மாதங்கம்-யானை. போதம், கலம் என்பன ஒருபொருட்கிளவி. பாதங்கள் பெயர்தொறும் பாருமேருவும் கலங்கியவாறென்க; இது உவமையணி. பெயர்என்னும்வினைத்தொகை வினைச்சொல் தொறுமென்னு மிடைச்சொற்கொண்டது. மறுகிப்பொரவுலைவபோன்ற எனவினைமுடிக்க. (கூகூ)

அஞ்சினர்வானவரவுணரச்சத்தால்
துஞ்சினரெனைப்பலசொரிமதத்தொளை
எஞ்சினதிசைக்கரியிரவிமீண்டனன்
வெஞ்சினக்கூற்றுந்தன்விழிபுதைத்ததே.

(இ - ள்.) வானவர் அஞ்சினர்-தேவர் அச்சமடைந்தனர், அவுணர் அச்சத்தால் துஞ்சினர்-அரக்கர் பயத்தினாலிறந்தனர், திசைக்கரி-திசையானைகள், எனைப்பல-எத்தனையோபல, சொரிமதத்தொளையெஞ்சின- சொரிகின்ற மதத்தொளைகள் குறைந்தன, இரவிமீண்டனன்-ஞாயிறுமீண்டான், வெஞ்சினக்கூற்றும்-கொடிய கோபத்தையுடையநமனும், தன்விழிபுதைத்தது- தன் கண்புதைத்தனன்.

எத்தனையென்பது மரீஇயது. அமுதுண்டவராதலாற் சாவாமையும், உண்மையாற் செத்தமையுமமைய அஞ்சினர் வானவர் அவுணரச்சத்தாற் றுஞ்சினரென்றுங்கூறினர். கூற்றுமென்புழி உம்மை உயர்வு சிறப்பு. கூற்றுந்தன்விழி புதைத்தமை அச்சத்தாலென்பது பெறப்பட்டது. (எ0)

கொடியவெங்கோபத்தாற்கொதித்தகோளரி
கடியவடாயெனக்கருதுகின்றிலன்

நெடியவன்முனியுமென்றஞ்சிநின்றனன்
இடியுருமனைய வெம்மொழியியம்புவான்.

(இ-ள்) கொடியவெங்கோபத்தால்-மிக்க கொடிய கோபத்தால், கொதித்த கோளரி-மூண்ட சிங்கமன்னான், கடியவளாமெனா-தாய்கடியவளென்று, கருதுகின்றிலன்-எண்ணுகின்றிலனாய், இடியுருமனைய வெம்மொழியியம்புவான் - இடியேற்றைப்போன்ற கொடிய சொற்களைக் கூறி, நெடியவன் முனியுமென்று அஞ்சிநின்றனன்-முன்னோன்சினங்கொள்வானென்று அஞ்சிநின்றான்.—

இவன் தாயிடைமுனியாமைக் கேது தன்முன்னோன் முனியுமென்றதனானென்க. தன்முன்னோன் காடுசென்றமைக்கு மிக்ககோபமொழி கூறினமையான் அதனை யிடியுருமனையவென்றடைகொடுத்தார். (எக)

மாண்டனனெந்தையென்றம்முன்மாதவம்
பூண்டனனின்கொடும்புணர்ப்பினாலென்றால்
கீண்டிலென்வாயதுகேட்டுநின்றயான்
ஆண்டனனேயன்றோவரசையாசையால்.

(இ-ள்) நின்கொடும்புணர்ப்பினால்-நின்கொடிய சூழ்ச்சியால், எந்தை மாண்டனன் - தாதையிறந்துபட்டான், என்தம்முன்மாதவம்பூண்டனன் என்றால்-என்முன்னோன் பெருந்தவமேற் கொண்டனனெனின், வாய்கீண்டிலென்-வாய்கீறிலேன், அதுகேட்டுநின்ற யான் அரசை ஆசையால் ஆண்டனனேயன்றோ-அம்மொழியைக் கேட்டிருந்தயான் அரசினை ஆசையினால் ஆண்டிருந்தவனேயன்றோ.

நின்சொல்லைக்கேட்டும் வாய்கிளாமையான் அரசினையாண்டனனுமென்பார் அதுகேட்டுநின்றயான் ஆண்டனனேயன்றோ அரசை யாசையாலென்றார். (எஉ)

நீயினமிருந்தனையானுநின்றனன்
ஏயெனுமாத்திரத்தெற்றுகிற்றிலென்
ஆயகன்முனியுமென்றஞ்சினேனலால்
தாயெனும்பெயரெனைத்தடுக்கற்பாலதோ.

(இ-ள்.) நீயினமிருந்தனை-நீயின்னுமிருக்கின்றனை, யானுநின்றனன்-யானுமுயிருடனிருக்கின்றேன், ஏயெனுமாத்திரத்தெற்றுகிற்றிலென் - ஏயென்னும்மாத்திரையின்மோதுகில்லேன், ஆயகன்முனியுமென்று - தாயைப்போற்றும் மனமுடைய இராமன் சினங்கொள்வானென்று நினைந்து, அஞ்சினேனலால்-பயந்தேனல்லது, தாயெனும்பெயர்-தாயெனப்படும்பெயர், எனைத்தடுக்கற்பாலதோ-என்னைவந்து தடுக்கும் பான்மையதோ.—

யாவரிடையும் அன்னைபோல்பவனாகலின் ஆயகன் என்றான். நீயுமிறந்துபடவேண்டும் யானுநின்றேன் இவ்வாறு இருத்தல் தகாதென்பது படத் தாயெனும் பெயரெனைத்தடுக்கற்பாலதோ என்றதென்க. (எரு)

மாளவுமுளனொருமன்னன்வன்சொலான்
மீளவுமுளனொருவீரன்மேயபார்
ஆளவுமுளனொருபரதனாகினாற்
கோளலதறநெறிகுறையுண்டாகுமோ.

(இ-ள்) வன்சொலால்-கடியசொல்லான், ஒருமன்னவன்மாளவுமுளன்-ஓராசனிறக்கவுமுள்ளான், ஒருவீரன் மீளவுமுளன்- ஒருவீரன்கானினின்று மீளவுமுள்ளான், ஒருபரதன் மேயபார்ஆளவுமுளன்-அவன்விருப்பிய நிலத்தைப்பரதனாளவுமுள்ளான், ஆகினால் - அங்ஙனம் ஆயின், கோளலதறநெறி குறையுண்டாகுமோ - விதியின் கொள்கை யன்றி யறநெறி குறைபடுமோ.

நின்கொடும்புணர்ப்பென்பதனை வற்புறுத்தற்கு வன்சொலாலென்றார். பரதனாகிய யானரசாளன் முறையன்மையிற்கோளலதற நெறிகுறையுண்டாகுமோ வென்றதென்க. வீரனென்றது சீராமனை. (எசு)

சுழியுடைத்தாயுடைக்கொடியசூழ்ச்சியால்
வழியுடைத்தாய்வருமரபைமாய்த்தொரு
பழியுடைத்தாக்கினன்பரதன்பண்டெனும்
மொழியுடைத்தாக்கலின்முறைமைவேறுண்டோ.

(இ - ள்) சுழியுடைய-வஞ்சனையுள்ள, தாயுடையகொடிய சூழ்ச்சியால்-தாயின்கொடிய சூழ்ச்சியினால், வழியுடைத்தாய்- பரம்பரையாக, வருமரபைமாய்த்து- வருகின்றமரபினைக்கெடுத்து, பண்டுபரதன்- முன்னாளிற்பரதனென்பான், பழியுடைத்தாக்கினன்- பழிபெருகச்செய்தனன், எனுமொழியுடைத்தாக்கலின்-என்னுஞ் சொல்வழங்குவ தாக்குதலினும், முறைமை வேறுண்டோ - முறைமைவேறுள்ளதோ.—

இதுகாறும் பரம்பரையாக வருமரபினைக்கெடுத்தாக்கல் தகுதியன்றென்பான் பழியுடைத்தாகலின் பரதன் பண்டெனு முறைமை வேறுண்டோ என்றான். (எஎ)

வேறு

நோயீரல்லீர் நுங்கணவன்றன் னுயிருண்டீர்
பேயீரேநீரின்னமிருக்கப்பெறுவீரே
மாயீர்மாயாவன்பழிதந்தீர்முலைதந்தீர்
தாயீரேநீரின்னுமெனக்கென்றருவீரே.

கலிவிருத்தம்.

(இ-ள்.) நுங்கணவன்றன் உயிருண்டீர்-உம்முடைய கணவனை உயிர் மாய்த்தீர், நோயீரல்லீர்-நோய்போல்வீரல்லீர், நீர் பேயீரே-நீர்பேயையொப்பீரே, இன்னமிருக்கப்பெறுவீரே- இன்ன முயிருடனிருக்கப் பெறுவீரே, மாயீர்-சாகீர், மாயாவன்பழிதந்தீர்-அழியாத வன்மையாகிய பழியை உண்டாக்கினீர், முலைதந்தீர் - எனக்குமுலைப்பாலுங்கொடுத்தீர், தாயீரேநீர் - நீர்தாயீரே, இன்னுமெனக் கென்றருவீர் - இன்னுமெனக்கியாது தர நிற்பீர்.—

சொல்லளவிற் பன்மைப்பாலாற்கூறினார் இழித்தற்கு. கணவனுயிருண்டமையாற்பேயீரென்றார். உயிருண்டல் இலக்கணை. இறைவனைக்கான்பட ரச் செய்தலான் மாயா வன்பழிதந்தீரென்றும், இன்னுமெனக்குத்தராதன வேறின்மையின் இன்னும் எனக்கென்றருவீரென்றுங்கூறினார். (எடு)

ஒன்றும்பொய்யாமன்னனைவாயா லுயிரோடுந்
தின்றுந்தீராவன்பழிகொண்டுந்திருவெய்தி
என்றுநீரேவாழவுவந்தீரவனேகக்
கன்றுந்தாயும்போவனகண்டுங்கழியீரோ.

(இ - ள்.) ஒன்றும் பொய்யாத மன்னனை-வாயினாற்சிறிதும் பொய் பேசுதலறியாத வரசனை, வாயால் உயிரோடும் தின்றும்-வாய்ச்சொல்லால் உயிர்க்கொலை செய்தும், தீராத வன்பழிகொண்டும் - ஒழியாத கொடும்பழி மேற்கொண்டும், திருவெய்தி - அரசச்செல்வமடைந்து, என்றும் நீரேவாழவு வந்தீர்-எஞ்ஞான்றும் நீரேவாழமகிழ்ந்தீர், அவனேகக்கன்றும் தாயும்போவனகண்டும் கழியீர் - அவன் செல்லக்கன்றுந்தாயும் போவனவற்றைக்கண்டிருந்தும் உயிர் நீங்கீர். —

உம்மை இழிவுசிறப்பு.சொன்னசொற் கடவாமையின்அரசப்பெருமானை ஒன்றும் பொய்யாமன்னனையென்றும், படைமுதலியவற்றாற் கொல்லாமை .த்தாற்கொன்றமையின் வாயாலுயிரோடுந் தின்றுமென்றும், அதனாலுலகுள்ளதுணையும் பழியெய்தலின் தீராவன்பழி கொண்டுமென்றும், அரசன் இறந்துபட நீரரசச்செல்வங் காதலித் தமையான் திருவெய்தி நீரேவாழவு வந்தீரென்றுங் கூறினார்.உயிரோடு முருபுமயக்கம். தின்றுமென்றதிலக்கணை. தின்றும் கொண்டும் என்னு மும்மைகள்தின்னாமையுங்கொல்லாமையுமுணர்த்தி நின்றன. என்றும் என்புழி உம்மைமுற்று;ஏனைய எண்ணுப்பொருளன,

இறந்தான்றந்தையீந்தவரத்துக்கிழிவென்றா
அறந்தானீதென்றன்னவன்மைந்தனரசெல்லாந்
துறந்தான்றுபின்சூழ்ச்சியின்ஞாலமவனோடும்
பிறந்தானுண்டானென்னுமிதென்னாற்பெறலாமோ.

(இ - ள்.) தந்தை இறந்தான் - தந்தை இறந்து பட்டனன், ஈந்த வரத்துக் கிழிவென்னுமை - அவன் அளித்த வரத்துக் கிழிவென்னுமை, அறந்தானீதென்று - இதுவேயறமென்று கருதி, அரசெல்லாம் அன்னவன் மைந்தன் தாயின்சூழ்ச்சியின் துறந்தான் - அரசச்செல்வமனைத்தும் அவன் மகன் தாய்சூழ்ச்சியான் துறந்தனன், அவனோடும் பிறந்தான் - அவனோடும் பிறந்த பரதன், ஆண்டானென்னுமிது - ஆண்டு வந்தனனென்னுமிது, என்னாற் பெறலாமே - என்னாற் பெறுந்தன்மையதோ.—

தாதையென்றது தயரதனை. தாயென்றது கைகேசியை. மைந்தனென்றது சீராமனை. தந்தை யளித்த வரத்தை மேற்கொண்டுகான்படர்ந்தமையான் அறந்தானீ தென்றன்னவன் மைந்த னரசெல்லாந்துறந்தானென்றும், இம்முறை பிறழநடந்தமைதாயானாகலின் தாயின்சூழ்ச்சியி னென்றும்,பின்னோனுமன்னமுறை யொழுகினனென்று கூறுவது பற்றி அவனோடும் பிறந்தானண்டா னென்னும், இதென்னாற் பெறலாமே யென்றுங் கூறினார். அவனோடும் பிறந்தானென்றது பரதனை. (எஎ)

மாளும்மென்றதந்தையையுன்னுவசைகொண்டாள்
கோளும்மென்னாலேயெனல்கொண்டானதுவன்றேல்
மீளும்மன்றேயென்னையுமெய்யேயுலகெல்லாம்
ஆளும்மென்றேபோயினனன்றேவரசாள்வான்.

(இ-ள்.) அரசாள்வான் - அரசுசெய்தற்குரியசீராமன், மாளுமென்றே தந்தையை யுன்னுவசைகொண்டாள்கோளும் - இறந்து படுவன் என்றே தந்தையை யெண்ணிப் பழிகொண்டாள் கொள்கையும், என்னாலேயெனல் - என்னானேர்ந்ததென்பது,கொண்டான்-மேற்கொண்டனன்,அது அன்றேல்- அது அன்னதாகாதேல், மீளும் அன்றே-மீண்டுவருவனே, என்னையு மெய்யே யுலகெல்லாம் ஆளும் என்றே போயினன்றே - என்னையுமுண்மையாகவே அரசாள்வானென்று கருதியே அவன் போயினன்றே.—

அரசர்மாலையிற்றோன்றித் தன்றந்தைபின்ஆள்வதற்குரியனாகலின் அரசாள்வானென்றார். நேர்ந்தது சொல்லெச்சம். கோளுமென்றதுஎச்ச வும்மை. என்னையுமென்றதுமது. கோள்முதனிலைத் தொழிற்பெயர். அன்றீற்றோ தேற்றம். (எஅ)

ஓதாநின்றதொல்குலமன்ன னுணர்வப்பால்
யாதானுந்தானாகவெனக்கேபணிசெய்வான்
தீதாநின்றசிந்தனைசெய்தானவனென்னப்
போதாதோவென்றாயிவள்கொண்டபுகழம்மா

(இ - ள்.) ஓதாநின்றதொல்குலமன்னன் உணர்வு-ஓதுகின்றபழமையாகிய குலத்துத்தோன்றிய அரசன் அறிவு, அப்பால் யாதானுந்தானாக - அப்பால்யாதேயெனினுமாகுக, தனக்கே பணிசெய்வானவன் - தனக்கே குற்றேவல் செய்பவர்தக்கானாகிய அப்பரதன், தீதாநின்ற சிந்தனைசெய்தான் - கொடிய

தாகியஎண்ணங் கொண்டனன், என்ன - என்றுகூற, என்தாய் இவள் கொண்ட புகழ் போதாதோ - என்தாயாகிய இவள் மேற்கொண்ட புகழ் நிரம்பாதோ.—

கடலொட்டலும், கங்கைகொணரலும், ஆயிரமோலியரும் பரஞ்சுடரைக் கொணரலுமுதலாகிய சிறப்பினைப் பற்றி ஓதாநின்றசொல்குலமென்றார். தனக்கே பணிசெய்வானவனென்றது பரதனை, தனக்குப் பணியெனக்குப் பணிசெய்தலெனக்கருதாது மாறுபட்டொழுகலின் தீதாநின்றசிந்தனை செய்தானென்றதென்க. ஆவென்றதீறு தொகுக்கப்பட்டது, யாதானுமென்ற உம்மை எச்சவும்மை. ஒகாரமெதிர்மறை. (எக)

உய்யாநின்றேனின்னமுமென்முன்னுடன்வந்தான்
கய்யார்கல்லைப்புல்லடகுண்ணக்கலமேந்தி
வெய்யோனின்சாலியின்வெண்சோறமுதென்ன
நெய்யோடுண்ணநின்றதுநின்றார்நினையாரோ.

(இ-ள்.) என்முன் என்னுடன் வந்தான்-என்கண்முன் உடன்றொடர்ந்தோனாகியசீராமன், கய்யார் கல்லை புல்அடகுண்ண - கையினிறைந்த கல்லையிற் புன்மையாகிய இலையுணவுண்டுவர, கலமேந்தி-கலத்தினையேந்தி, வெய்யோன்நான்-கொடியோனாகியயான், இன்சாலியின்வெண்சோறு- இனிமையாகிய நெல்லின் வெண்சோற்றினை, அமுதென்ன-அமுதென்னலாம்படி, நெய்யோடுண்ண-நெய்பெய்தருந்த, நின்றது-நின்றதன்மையை, நின்றார் நினையாரோ-உயிரோடிருப்பவர் யாதுகூறுரோ, இன்னமும் உய்யாநின்றேன் - இங்ஙனமிருக்க இன்னுமதுகேட்டுயிர் பிழைத்திருக்கின்றேன்.—

கல்லை என்றது இலைக்கலத்தை. கான்சென்றுதுய்க்குமுணவு காய்கனிகிழங்கு சருகாகலின் கல்லைப் புல்லடகுண்ணவென்றும், நாட்டில் வசிக்கும் யான் பொற்கலத்துப் பெய்த நெய்யடிசிலுண்பதாகலின் இன்சாலியின் வெண்சோறமுதென்ன நெய்யோடுண்ணவென்றுங் கூறினார். அவன் கான்படர்ந்து புல்லடகுண்ணக் கேட்டின்னலுற்றிருத்தலொருதலை யன்றென்பார் இன்னமுமுய்யாநின்றேனென்றார். (அ0)

வில்லார்தோளான்மேவினன்வெங்கானகமென்ன
நல்லானன்றேதுஞ்சினனஞ்சேயனையாளைக்
கொல்லேன்மாயேன்வன்பழியாலேகுறைவற்றேன்
அல்லேனேயானன்புடையார்போலழுகின்றேன்.

(இ - ள்.) வில்லார்தோளான் வெங்கானகம் மேவினனென்ன-வில்லேந்திய தோளையுடைய சீராமன் கொடியகாட்டினை யடைந்தனனென்னலும், நல்லானன்றேதுஞ்சினன்-நல்லொழுக்கமுடையானாகியஅரசன் அப்பொழுதே இறந்து பட்டனன், நஞ்சேயனையாளை - விடம்போல் வாளாகிய தாயை, கொல்லேன் - கொலைத்தொழில் செய்யேன், மாயேன்-இற

து பட்டிரேன், அன்புடையார் போலழுகின்றேன் - யானன்புடையாரைப் போலு மழுகின்றேன், வன்பழியாலேகுறைவற்றே னல்லேனோ - கொடும் பழியாற் குறைவில்லாதேனல்லேனோ.—

வில்லார்தோளானென்றதுசீராமனை. நல்லானன்றேதுஞ் சினன் என்றார், 'போயினனென்றானந்தப் போழ்தத்தேயாவிபோனான்' எனமுற்கூறியதனை வற்புறுத்தற்கு. வில்லென்றதுகோதண்டத்தை. நல்லானென்றது தயரதனை. (அக)

பாரோர்கொள்ளார்யானுயிர்பேணிப்பழிபூணேன்
தீராதொன்றோதுன்புமிவ்வூரிற்றிருநில்லாள்
ஆரோடெண்ணிற்றாருரைதந்தாயறமெல்லாம்
வேரோடுங்கேடாகமுடித்தென்விளைவித்தாய்.

(இ - ள்.) பாரோர்கொள்ளார் - உலகத்தார் கொள்ளற்கியையார், யான் உயிர்பேணி பழிபூணேன் - யான் உயிரை விரும்பி இப்பழியைமேற்கொண்டொழுகேன், துன்பும் தீராதொன்றோ-துன்டமும் ஒழியாததொன்றேயோ, இவ்வூரில் திருநில்லாள் - இந்நகரிடைத் திருமாமகள் வாழ்க்கை செய்யாள், ஆரோடெண்ணிற்று - நீ யாருடன் ஆய்ந்தது, ஆருரைதந்தாய்- யார்சொன்மேற்கொண்டனை, அறமெல்லாம் வேரோடுங் கேடாகமுடித்து- அறமனைத்தும் வேருடன்கெடச்செய்து, என்விளைவித்தாய்- யாது விளையச்செய்தனை.—

அரசர் மாலையிற்றோன்றும் புதல்வனையேபுனிதநீராட்டிப் பொன்முடி கவித்தல் வழக்காக,அதனை அவன்பெறாதொழுகலின் பாரோர் கொள்ளாரென்றும், அவன் காடெய்தியவழி அவன் மணிமார்பிடங்கொண்ட திருமாமக ளிருப்பதரிதாகலின் இவ்வூரிற்றிரு நில்லாளென்றும், அறிவுடையார் சூழ்ச்சியிதன் றென்பார் ஆரோடெண்ணிற்றென்றும் ஆருரைதந்தாயென்றும்,இதனான் அறமனைத்துங் கேடெய்தலின் அறமெல்லாம் வேரோடுங் கேடாகமுடித்தென்விளைவித்தாயென்றுங் கூறினார். உம்மை எச்சம்.

கொன்றேனானென்றந்தையைமற்றுன்கொலைவாயால்
ஒன்றோகானத்தண்ணலையுய்த்தேனுலகாள்வான்
நின்றேனென்றானின்பிழையுண்டோபழியுண்டோ
என்றேனுந்தானென்புகழ்மாயுமிடமுண்டோ.

(இ-ள்.) நான் என்தந்தையைகொன்றேன் - யானென் தந்தையைக் கொன்றேன், உன் கொலைவாயாலொன்றோ - உன் கொலைத்தொழில் செய்யும் வாயால்நேர்ந்ததொன்றேயோ, அண்ணலைகானத் துய்த்தேன்-என்முன்னோனைக் கானிடைச்செலுத்தி, உலகாள்வான் நின்றேன் - அரசாள நிற்கின்றேன், என்றால்-என்னலாமெனின்; (அதனால்)நின்பிழையுண்டோ-நினக்குப்

பிழையுளதேயோ, பழியுண்டோ-பழியுளதேயோ, என்றேனுந்தான் என்புகழ்மாயுமிடமுண்டோ-என்றுயினுந்தானென்புகழ்கெடுமிடமுளதேயோ.—

கொலைத் தொழில் நேர்ந்தவாயாகலின் உன் கொலைவாயா லென்றார். அது செய்ததொன்றன்றென்பார் அண்ணலைக் கானத்துய்த்தேன் என்றும், உலகாள்வானின்றேனென்றுங் கூறினார். (அரு)

கண்ணாலேயென்செய்வினையின்னுஞ்சிலகாண்பார்
மண்ணார்பாராதெள்ளுவர்வாளாபழிபூண்டாய்
உண்ணாநஞ்சங்கொல்கிலதென்னுமுறையுண்டென்
றெண்ணாநின்றேனன்றியிரேனென்னுயிரோடே.

(இ-ள்.) கண்ணாலே என்செய்வினை இன்னும் சிலகாண்பார்-கண்ணினால் என்செய்தொழில்கள் சில இன்னும் காண்பவரில், மண்ணார்பாராதெள்ளுவர்—மண்ணுலகோர்பாராதிகழ்வர், வாளாபழிபூண்டாய்-வாளாபழியையும் பூண்டாய், உண்ணாநஞ் சம்கொல்கிலது-உண்ணாமை விடங்கொலைத்தொழில் செய்திலது, என்னுமுரையுண்டு - என்னுஞ்சொல்லுண்டு, என்று எண்ணாநின்றேன் - என்று எண்ணுகின்றேன்,அன்றி என்னுயிரோடே இரேன் - அல்லாது என்னுயிரோடும் வாழ்தல் செய்யேன்.—

நஞ்சமுண்டவழிக் கொல்லுவதன்றி உண்ணாமை கொல்லுதலியல் பன்றாகலின் உண்ணாநஞ்சங் கொல்கிலதென்னுமுறை யுண்டென்றார். இரேன் என்புழி 'ஏன்' விகுதியே எதிர்மறைப் பொருளைத் தருமென்பர் சேனாவரையரும்; அற்றேல் அது இருப்பேன்,இருக்கின்றேன், இருந்தேன் என்புழியு மன்னதாக வேண்டுதலானவ்வுரை போலியுரை யென்றொழிக. இரேன்என்பதற்கு|| 'ஏரினுழாஅ' ரென்புழிப்பரிமேலழகர் உழுதலைச் செய்யாரெனவிரித்தலின் இருத்தலைச் செய்யேன் என்றும். (அச)

ஏன்றுன்பாவிக்கும்பிவயிற்றினிடைவைகித்
தோன்றுந்தீராப்பாதகமற்றென்றுயர்தீரச்
சான்றுந்தானேநல்லறமாகத்தகைஞாலம்
மூன்றுங்காணமாதவம்யானேமுயல்கின்றேன்.

(இ-ள்.) உன்பாவிக்கும்பிவயிற்றினிடையேன்றுவைகி-பாவியாகியநினது நரகினை யொக்கும் வயிற்றின் இயைந்து தங்கி, தோன்றும் தீராப்பாதகமற்று - தோன்றிய நீங்குதலில்லாப்பாதக நீங்கி,என் துயர்தீர-என் துன்பநீங்க, சான்றுந்தானே நல்லறமாக-சான்று மொன்றே நன்மையாகிய அறமேயாக, தகைஞாலமூன்றும் காண - தகைமையையுடைய உலகமூன்றுங்காண, மாதவம் யானே முயல்கின்றேன் - பெருந்தவம்யானே செய்யமுயல்வேன்.—

|| திருக்குறள். செ.கச.

வயிற்றினைக்கும்பியென்றுருவகஞ் செய்தார்; கும்பிபாகமென்னும்நிரயத்திடைப்புக்கார் மீள்வதரிதாகலின்.கும்பிபாகமென்பது குறைந்துநின்றது. பாவிக்கும்பிஎன்பது வைசேடிகநூலார்பொருள்பண்புதொழில் முதலியவற்றைஅறுவகைப்பொருளெனக் கூறுவது பற்றியென்க. இதனைச்§'சினத்தைப் பொருளென்றுகொண்டவன்' என்புழிப்பரிமேலழகருரையானுமுணர்க. இதனின்வயிற்றிற்பிறந்தபெரும்பாவங் கழியயான்றவஞ் செய்வலென்பதாம்.

சிறந்தார்சொல்லுநல்லுரைசொன்னேன்செயலெல்லாம்
மறந்தாய்செய்தாயாகுதிமாயாவுயிர்தன்னைத்
துறந்தாயாகிற்றாயையுமாதியுலகத்தே
பிறந்தாயாதியீதலதில்லைபிறிதென்றான்.

(இ-ள்.) சிறந்தார்சொல்லும் நல்லுரை சொன்னேன் - கல்விகேள்விகணிரம்பிய விழுமியோரா னெடுத்துக் கூறு முறுதி மொழிகூறி நின்றேன், செயலெல்லாமறந்தாய் செய்தாய் - நின்செய்கைகளனைத்து மறந்தனையாகிச்செய்தனை யாகின்றனை, மாயாவுயிர்தன்னை - நிலையுதலுடைய உயிரினை, துறந்தாயாகில்-துறந்தனையாயின், தாயையுமாதி - தாய்தொழிலுடையையுமாகின்றனை, உலகத்தே பிறந்தாயாதி - உலகிடைப் பிறந்தாயுமாகின்றனை, ஈதலதில்லைபிறிதென்றான் - இதுவேயல்லது வேறொன்றில்லை யென்றனன்-எ-று.

உயிரை நித்தமென்பார் மதம்பற்றிமன்னுயிரென்பவாகலின் மாயாவுயிரென்றார். சிறந்தாரென்றது கல்வி கேள்விகளிற் சிறந்தாரென்ப தன்றி, தவவொழுக்கங்களிற் சிறந்தாரெனினுமமையும். இறைவன் மாட்டுத் தீயனசெய்தொழுகினமையானிறத்தல் வேண்டும்; அது செய்தனையாயிற் குணத்தாற்றாயையுமன்றிப் பிறப்பெடுத்த பயனையு மெய்தினை யென்பார் உலகத்தே பிறந்தாயாதியீதல தில்லை பிறி தென்றானென்றுங்கூறினர். இப்பன்னிரண்டு செய்யுளானும் கைகேசியிடஞ் சென்று வருந்த லுணர்த்தப்பட்டது. ()

கலிவிருத்தம்.

இன்னணமினையனவியம்பியானுமிப்
பன்னருங்கொடுமனப்பாவிபாடிரேன்
துன்னருந்துயர்கெடத்தூயகோசலை
பொன்னடிதொழுவனென்றெழுந்துபோயினான்.

(இ - ள்) இன்னவண்ணம் இனையன இயம்பி – இவ்வாறு இவை போல்வன கூறி நின்று, யானும் இப்பன்னருங்கொடு மனப்பாவி பாடுஇரேன் - யானு மிக்கூறற்கரிய கொடிய மனத்தள்பாலிருத்தல் செய்யேன், துன்னருந்துயர்கெட - நெருங்குதற்கரியதுன்பந்தீர, தூயகோசலை பொன்னடிதொழுவனென்று-தூயகுணமுடைய கோசலையழகியபாதங்களைவணங்குவேனென்று, எழுந்துபோயினான் - எழுந்து சென்றான்.--

§ திருக்குறள், செ. ௩௦௭.

இன்னணமென்றதற்கு முற்கூறினும். இனையன இயம்பியென்றது நோயீரல் லீர்நுங்கணவன் றனுயிருண்டீரென்பனபோல்வனவற்றை. உலகுமுண்ட பெருவாயனை நல்கும் பெருந்தவமுடைமை பற்றித் தூயகோசலை யென்றார். (அஎ)

ஆண்டகைகோசலையருகரெய்தினன்
மீண்டுமண்கிழிதரவீழ்ந்துகேழ்கிளர்
காண்டகுதடக்கையிற்கமலச்சீறடி
பூண்டனன்கிடந்தனன்புலம்பினனரோ.

(இ - ள்) ஆண்டகை கோசலையருகரெய்தினன் - புருடரிற்சிறந்தோனாகிய பரதன் கோசலையருகெய்தி, மீண்டுமண் கிழிதரவீழ்ந்து—பெயர்த்து நிலங்கிழியவிழுந்து, கேழ்கிளர் காண்டகு தடக்கையின் - ஒளிவிளங்குங் காணத்தகுந்தடங்கையான், கமலச்சீறடி பூண்டனன்-தாமரைமலரன்னசிறியவடியைப்பூண்டு, கிடந்தனன் புலம்பினான் -கிடந்து புலம்பி நின்றனன்- எ - று,

ஆண்டகையென்றது பரதனை, அன்மொழித்தொகை. மீண்டு மென்றது வினைமாற்றுப் பொருள் பயப்பதோரிடைச்சொல். கமலமாகுபெயர். பூண்டனன் கிடந்தனன் எச்சமுற்று. இவ்விரண்டு செய்யுளானும் பரதன் கோசலை மாளிகை யடைந்தமை யுணர்த்தப்பட்டது. (அஅ)

எந்தையெவ்வுலகுளானெம்முன்யாண்டையான்
வந்ததுதமியெனிம்மறுக்கங்காணவோ
சிந்தையினுறுதுயர்தீர்த்திராலெனும்
அந்தரத்தமரருமழுதுசோரவே.

(இ - ள்) எந்தை எவ்வுலகுள்ளான் - என்றந்தை எவ்வுலகினுள்ளான், எம்முன் யாண்டையான்—எம்முன்னோன் எவ்விடத்தான், தமியென்வந்தது இம்மறுக்கங் காணவோ - தமியேனெய்திய திக்கலக்கங் காண்டற்கோ, அந்தரத்தமரரும் அழுதுசோர - வானிடை யமரருமழுது வருந்தாநிற்க, சிந்தையினுறு துயர்தீர்த்திர் எனும்-மனத்திடை மிக்க துன்பத்தைத்தீர்ப்பிரென்பான்.--

அமரருமென்ற வும்மை சிறப்பு. பரதன்படு மின்னலினு மவ்விராவணனைக் கோறலானுயவின்பமத்தேவர்க்கத்துணைச்சிறந்ததன் றெனபார் அந்தரத்தமரருமழுது சோரவென்றார். ஒவினு, ஆல் அசை. (அகூ)

அடித்தலங்கண்டிலென்யானென்னையனைப்
படித்தலங்காவலன்பெயரற்பாலனோ
பிடித்திலிர்போனுநீர்பிழைத்திராலெனும்
பொடித்தலந்தோளுறப்புரண்டுசோர்கின்றான்.

(இ - ள்) பொடித்தலந் தோளுறப்புரண்டு சோர்கின்றான் – புழுதியையுடைய நிலத்திடைத்தோள் பொருந்தப் புரண்டுசோர்கின்றவன், யான்

என்னையனையடித்தலங் கண்டிலன்- யான் என்தாதையை யடித்தலம்பார்த்தலைச்செய்யேன், படித்தலங்காவலன் பெயரற்பாலனோ - நிலத்தையாளுமரையன் பெருந்தன்மையனோ,பிடித்திலிர்போலும்-பிடித்தல் செய்யாமலிருந்தீர் போலும், நீர்பிழைத்திரெனும் - நீருயிர்பிழைத்தீரென்பான்- எ-று.

பொடித்தலம் தோளுறப்புரண்டு சோர்கின்றானென்றதுபரதனை, படித்தலம் இருபெயர்ப்பண்பு. ஒவெதிர்மறை. காவலனன்றார் இனியாளவருபவனாகலின்.

கொடியவர்யாவருங்குலங்கள்வேரற
நொடிகுவென்யானது நுவல்வதெங்கணம்
கடியவள்வயிற்றினிற்பிறந்தகள்வனேன்
முடிகுவெனருந்துயர்முடியவென்னுமால்.

(இ - ள்) கொடியவர்யாவரும் - கொடியோர்யாவரும், குலங்கள் வேரற - குலங்கள் வேருடனழிய, நொடிகுவன்யான்-யான்கொல்வேன், அது நுவல் தெங்கணம் - அதனைக்கூறுவ தெவ்வண்ணம், கடியவள்வயிற்றினிற்பிறந்தகள்வனேன் - கொடியாள்வயிற்றிடைத் தோன்றிய கள்ளமுடையேன், அருந்துயர் முடிய முடிகுவெனென்னும் - மிகுதியாகிய துன்பம் முடியமுடிவேனென்பான்.—

வேர் ஆகுபெயர். கடியவள்என்றது கைகேசியை. கல்லினுந் திண்ணிதாகிய நெஞ்சங்கொடு கணவனுயிர் நீப்பவரம் பெற்றவளாதலின் கடியவளென்றும், அவள்வயிற்றிற்றோன்றியபாவ விசேடமுடைமையான்வயிற்றிடைப் பிறந்த கள்வனே னென்றுங் கூறினர். (கூக)

இரதமொன்றூர்ந்துபாரிருளைநீக்குமவ்
வரதனிலொளிபெறவளர்ந்ததொல்குலம்
பரதனென்றொருபழிபடைத்ததென்னுமால்
மரதகமலையெனவளர்ந்ததோளினான்.

(இ - ள்) மரதகமலையென வளர்ந்த தோளினான்- மரகதமலைபோலும் வளர்ந்த தோளினான், இரத மொன்றூர்ந்து - தேரொன்றூர்ந்து,பாரிருளை நீக்கும் - பாரினிருளை யோட்டும், அவ்வரதனில் ஒளிபெற வளர்ந்த தொல் குலம் - அஞ்ஞாயிற்றினைப்போன் றொளிபெறவளர்ந்த பழமையாகியகுலம், பரதனென்ற ஒரு பழிபடைத்த தென்னும் - பரதனென்னும் பழியொன்றினையடைந்த தென்பான்.—

பாரிருளென்பதற்குப் பரந்த விருளெனினுமாம். வரதனென்றதுஞாயிற்றை.அகரச்சுட்டுயர்வுப்பொருட்டு,இன் உருபுறழ்பொருளது. என்றஎனனும்பெயரெச்சத்தகரவிறுதிதொகுத்தல்பெற்றது. ஒற்றையுருளைத் தேரூர்ந்து

பரந்தவிருளை யோட்டுவதினு மிவர் புகழ்சாலச்சிறந்த தென்பார் ஒளிபெற வளர்ந்த தொல்குலமென்றார். (௬௨

வாடொடுதானையான்வானில்வைகிடக்
காடொருதலைமகனெய்தக்கண்ணிலா
நாடொருதுயரிடைநைவதேயெனுந்
தாடொடுதடக்கையத்தருமமேயனான்.

(இ - ள்.) தாள்தொடுதடக்கை - ~~அடியைத்தொடும் நீண்ட~~ கையையுடைய, அத்தருமமேயனான் — அத்தருமமே போல்வான், வாள்தொடு தானையான் - வாளை யேந்திய படையையுடைய சக்கிரவர்த்தி, வானில் வைகிட, துறக்க மெய்த, காடொருதலைமகனெய்த-கானொருதலைமகன் அடைய,கண்ணிலா நாடொருதுயரிடை நைவதே யெனும் - கண்ணில்லாத நாடொப்பற்றதுன் பத்திடைவருந்துவதே யென்பான்- எ - று.

தருமமும் பரதனும் வேறன்றென்பார் தருமமேயனானென்றும், ஆசானுபாகு வென்னும் வடமொழிப்பெயர்பற்றித்தாடொடுதடக்கையென்றுங் கூறினார். அரசன் துறக்கமடைந்தமையுமிறைவன் கானெய்தினமையுநோக்கிக் கண்ணிலா நாடென்றதென்க. வானில்வைகிடல் பிறிதினவிற்சி. இவ் வைந்து செய்யுளானுங் கோசலைபாற்சென்று பரதன்வருந்தினமை யுணர்த் தப்பட்டது. (௬௩)

புலம்புறுகுரிசிறன்புலர்வுநோக்கினாள்
குலம்பொறைகற்பிவைசுமந்தகோசலை
நிலம்பொறையாற்றலனெஞ்சந்தூய்தெனச்
சலம்பிறிதுறமனந்தளர்ந்துகூறுவாள்.

(இ-ள்.) புலம்புறுகுரிசில் தன்-புலம்பும்பரதன், புலர்வுநோக்கினாள்-துய ரைக்கண்டு, குலம்பொறை கற்பிவை சுமந்த கோசலை-குலமும் பொறையும் கற்புமாகிய இவற்றைப் பொறுத்த கோசலை, நிலம்பொறையாற்றலன்-அரச பாரம் பொறுத்திலன், நெஞ்சந்தூய்தென - மனந்தூயதென்று, சலம்பிறி துற - தணியாச்சீற்றம் வேறெய்த, மனம் தளர்ந்து கூறுவாள் - மனங்கரை ந்து சொல்வாள்.—

பிறப்பானுயர்வும், பொறையும், கற்புந்தன் பாலெய்திச் சிறந்தனளா கலின், குலம்பொறை கற்பிவை சுமந்த கோசலை யென்றார். இப்பெற்றி நோக்கி அரசர் மாலையில் வருமரசச் செல்வத்தைப் பொறுத்தற்கு மனமியை யாதானாகலின் நிலம் பொறையாற்றல னெஞ்சந்தூய் தென்றாள். புலம்புறு குரிசிலென்றது எந்தை யெவ்வுலகுளானெம்முன்மாண்டையா னென்றாற் போல்வனற்றை. நிலம்பொறை யென்றதுமெலிந்து நின்றது. குரிசிலெ ன்றது பரதனை.

மய்யறுமனத்தொருமாசுளானலன்
செய்யனேயென்பதுதேருஞ்சிந்தையாள்
கய்கயர்கோமகளிழைத்தகைதவம்
அய்யநீயறிந்திலைபோலுமாலென்றாள்.

(இ-ள்) மய்யறுமனத்து-குற்றமற்றமனத்திடை, ஒருமாசுளானலன்-ஒருமாசுடையானல்லன், செய்யனேயென்பது-செவ்விய குணமுடையவனேயெனச் சிறப்பித்துரைப்பது, தேருஞ் சிந்தையாள்-ஆராயுமனமுடையகோசலை, கய்கயர்கோமகள் இழைத்தகைதவம்-கைகேசிசெய்தவஞ்சகம், அய்ய நீயறிந்திலைபோலுமென்றாள்-ஐயனே நீயறிந்தாயல்லை போலு மென்றனள்-எ-று.

எம்முன்யாண்டையான் வந்தது தமியெனிம்மறுக்கங் காணவோவென முற்கூறலான்மய்யறுமனத்தொருமாசுளானலன் செய்யனே என்றாள். கய்கயர்கோ மகளிழைத்த கைதவமென்றது அரசனை வரமிரண்டு கேட்டொன்றான் அவனை வானேகச்செய்தலும், மற்றொன்றானிறைவனைக்கானேகச் செய்தலுமென்பவற்றை. அறிந்தால்நீயாற்றியிராயென்பாளய்ய நீயறிந்திலைபோலுமென்றாள். இவ்விரண்டு செய்யுளானும் கோசலை பரதனை நோக்கிக் கூறினமை யுணர்த்தப்பட்டது. (கரு)

தாளுறுகுரிசிலத்தாய்சொற்கேட்டலுங்
கோளுறுமடங்கலிற்குழுறிவிம்முவான்
நாளுறுநல்லறநடுங்கநாவினுற்
சூளுறுகட்டுரைசொல்லன்மேயினான்.

(இ - ள்) தாளுறு குரிசில் அத்தாய்சொல் கேட்டலும் - தோள்கள் தாளொடும்பரதன் அத்தாய் மொழி கேட்டலும், கோளுறுமடங்கலின் குழுறி விம்முவான்-துயரமெய்திய வரிமாவைப்போல் குழுறிவருந்தி நின்று, நாளுறு நல்லறநடுங்க-நாளிற்செய்த நல்லறநடுக்கமெய்த, நாவினுல் சூளுறுகட்டுரை சொல்லன் மேயினான்-நாவாற் சூளமைந்த உறுதிமொழி கூறத்தொடங்கினான்.—

விம்முவான் எச்சமுற்று. தாளுறு குரிசிலென்றது. முயற்சியையுடைய குரிசிலெனினும், தாளையடைந்த குரிசிலெனினுமாம். தான் சொல்வனவறம் பிழையாதன வாகலின் சூளுறுகட்டுரையென்றார். அவன்படுந்துயரினைக் கோளுறுமடங்கற்குவமை கூறினார். (கசு)

அறங்கெடமுயன்றவனருளினெஞ்சினன்
பிறன்கடைநின்றவன்பிறனைச்சீறினோன்
மறங்கொடுமன்னுயிர்கொன்றுவாழ்ந்தவன்
துறந்தமாதவர்க்கருந்துயரஞ்சூழ்ந்துளோன்.

(இ - ள்) அறங்கெடமுயன்றவன்-அறங்கெட்டழிய முயற்சிசெய்தானும், அருளில்நெஞ்சினன்-அருளில்லாதமனமுடையானும்,பிறன்கடைநின்றவன்-பிறன் கடை நின்றானும், பிறரைச்சீறினோன்-பிறரிடைச் சினங்கொண்டானும், மறங்கொடு மன்னுயிர் கொன்று வாழ்ந்தவன் - கொடுமையான்நிலைபெற்ற வுயிரைக் கொன்றுயிர் வாழ்க்கை செய்தானும், துறந்தமாதவர்க்கருந்துயரம் சூழ்ந்துளோன்-முற்றத்துறந்த பெருந்தவமுடையார்க் கருமையாகிய துன்பமாராய்வோனும்:—

அறமென்றதறவொழுக்கங்களை. அருளென்றதற்கு மன்னுயிரென்பதற்கு மேலுரைத்தாம். உயிர் கோறல் இலக்கணை. உயிர்கொன்று வாழ்ந்தவனென்பது கொலைத்தொழிலா னுயிர்வாழ்ந்தவனென்பது. துறந்தமாதவரென்பது இன்னிலையிகந்து இருபற்று மற்ற மெய்யுணர்ச்சியுடையாரை.

குரவரைமகளிரைவாளிற்கொன்றுளோன்
புரவலனுறுபொருள்புனைவில்வாரினோன்
விரவலர்வெரிநிடைவிழிக்கமீண்டுளோன்
இரவலரருநிதியெறிந்துவௌவினோன்.

(இ - ள்) குரவரை-குரவரையும், மகளிரை-மாதரையும், வாளிற்கொன்றுளோன்-வாளாற் கொன்றோனும், புரவலனுறு பொருள்புனை வில்வாரினோன்-அரசன் அடைந்தபொருளை வஞ்சனையாற் கவர்ந்தானும், விரவலர் வெரிநிடை விழிக்க மீண்டுளோன்-பகைவர்க்குப் புறங்காட்டிமீண்டானும், இரவலர் அருநிதி யெறிந்துவௌவினோன் - இரப்போர் தேடியவரும்பொருளை எறிந்து கைக்கொண்டானும்;—

குரவரென்றது ஐம்பெருங் குரவரை; அது தாய், தந்தை, போதகாசிரியன், மூன்மேனோன்,அரசனென்றித்திறத்தவரை. குரவரையும் மகளிரையுங் கொலை செய்யலாகாதென்ப தறநூற்றுணிபாகலின் குரவரை மகளிரை வாளிற் கொன்றுளோ னென்றும், சுத்தவீரன் புறங்காட்டாது நின்றே போர் செய்யவேண்டுமாகலா னங்ஙன மொழுகாது புறங்காட்டிச்சென்றனைமாபாவியெனப் படுமாகலின் விரவலர் வெரிநிடை விழிக்கமீண்டுளோனென்றுங் கூறினர். அருநிதி யென்றது பெரும் பொருட்குவியலை. (கூஅ)

தழைத்ததண்டுளவினோன்றலைவனல்லனென்
றழைத்தவனறநெறியந்தணாளரிற்
பிழைத்தவன்பிழைப்பிலாமறையைப்பேணலர்
[illegible]ழைத்தவன்பொய்யெனுமிழுதைநெஞ்சினோன்.

(இ - ள்.) தழைத்ததண்டுளவினோன் தலைவன்அல்லன்என்று அழைத்தவன்-செழித்ததண்ணிய துளவமாலை யணிந்த இறைவன் பரம்பொருள் அல்லனென்றழைத்தானும், அறநெறியந்தணாளரில் பிழைத்தவன் - அழகிய

தட்பமாகிய குணமுடையவரிடையறவொழுக்கினைத் தவிர்ந்தானும், பிழைப்பிலாமறையைப்பேணலாதிழைத்தவன்-பிழைத்தலில்லாதமறையினை விரும்பாது செய்தானும், பொய் எனும் இழுதை நெஞ்சினேன் - பொய்யாகிய அறிவின்மையை யுடைய மனமுடையானும்:—

'முப்பரம்பொருளுக்குண் முதலை மூலத்தை, இப்பரந்துடைத்தவரெய்து மின்பத்தை, அப்பனையப்பினுளமுதந்தன்னையே, யொப்பனையென' மயர்வறும தினலமருளப்பெற்ற ஆழ்வார் தொடக்கமானவராற்பரம்பொருளெனத் துணிந்துரைக்கப்படுமெபர்வருமமரர்கட்கிறைவனைத்தலைவனென்றுதார்மாபாதகராகலின் தழைத்ததண்டுளவினேன்றலைவனல்ல னென்றழைத்தவனென்றார். அவனே தலைவனென்பதனைத் 'தேவிற்றிருமா' லெனப்பிறருங்கூறலானுமுணர்க. பிழைப்பிலாமறை யென்றார் ஒழுக்கினை யுயிர்கட்குத் தவறாதுரைத்தலின். அந்தணரிலொழுக்கம் பிழைத்தானை அறநெறியந்தணாளரிற் பிழைத்தவனென்றதென்க. இதனை §'மறப்பினு மோத்துக்கொளலாகும்பார்ப்பான்-பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்' என்பதனானறிக. (௯௯)

தாய்பசியுழந்துயிர் தளரத்தான்றனிப்
பாய்பெரும்பாழ்வயிறளிக்கும்பாவியும்
நாயகன்படநடந்தவனுநண்ணுமத்
தீயெரிநரகத்துக்கடிதுசெல்கயான்.

(இ - ள்) தாய்பசியுழந்து - ஈன்றதாய் பசியான் வருந்தி, உயிர்தளர - உயிர்வருந்த, தான் தனிபாய் பெரு பாழ்வயிறளிக்கும் பாவியும் - தான் தனித்துப் பரந்த பெரும்பாழாகியவயிற்றினை யோம்பும் பாவியும், நாயகன் படநடந்தவனும் - போரிற்றலைவன்வீழநடந்தானும், நண்ணும் அத்தீயெரி நரகத்துயான் கடிது செல்க-தீப்போற்கனன்றெரியு மந்நரகிடையான்விரைந்து செல்க:—

நாயகன்பட நடந்தவனென்றது போர்க்களத்திடை நாயகனை விட்டுத் தன்னுயிர்காத்தற் பொருட்டேகியானை. 'இதனை 'ஆண்டவனை விட்டமரிலாடவர்கள் பின்றொடர, நாண்டுறந்து சென்றோனும்' எனப்பிறருங் கூறுதலானுமுணர்க. அறங்கெட முயன்றவன், அருளினெஞ்சினன் பிறன்கடைநின்றவன், சீறினேன், மன்னுயிர்கொன்று வாழ்ந்தவன், துயரஞ்சூழ்ந்துளோன், வாளிற் கொன்றுளோன், வாரினேன், மீண்டுளோன், வெளவினேன், அழைத்தவன், பிழைத்தவன், இழுதைநெஞ்சினேன், பாவி, படநடந்தவன் என்றிவர் நண்ணுமத்தீயெரிநரகத்துக் கடிதுயான்செல்க என்றொட்டுக. தீயெரிநரகமென்றது நிரயவிசேடத்தொன்று. (௧00)

தாளினிலடைந்தவர்தம்மைத்தற்கொரு
கோளுறவஞ்சினன்கொடுத்தபேதையும்
நாளினுமறமறந்தவனுநண்ணுறும்
மீளருநரகிடைக்கடிதுவீழ்கயான்.

§ திருக்குறள்-செ-௧௩௪.

(இ - ள்) தாளினிலடைந்தவர் தம்மை - தம்மைப் புகலடைந்தவரை, தற்கொருகோளுற அஞ்சினன் கொடுத்த பேதையும் - தம்பாலோரிடையூறெய்த வஞ்சிப் பகைவனிடைக் கொடுத்தவறிவிலாளனும், நாளினுமறந்தவனும் - எந்நாளுமறத்தினை மறந்தொழிந்தானும் - நன்னுறு மீளருநரகிடை கடிதுயான் வீழ்க - எய்தப்பெறு மீளற்கரிய நிரயத்திடையான் விரைந்து வீழ்வேனாக:—

தாளினி லடைந்தவரென்றது சரணபுதல்கண்டஞ்சிப்புகலடைந்தாரை. தற்கென்பது நபுமயக்கம். நாளினும் என்றது விரத முதலியகாலங்களை. புகலடைந்தாரைத் தமக்குக் கேடெய்தினும் பகைப்புலத்து விடுத்தா ரறிவிலாளராகலின் பேதை யென்றார். (௧0௧)

பொய்க்கரிகூறினேன்போருக்கஞ்சினேன்
கைக்கொளுமடைக்கலங்கரந்துவவ்வினேன்
எய்த்திடத்திடர்செய்தோனென்றின்னோர்புகும்
மெய்க்கொடுநரகிடைவிரைவின்வீழ்கயான்.

(இ - ள்) பொய்க்கரி கூறினேன் - மன்றிடைப் பொய்ச்சான்று கூறினேனும், போருக்கஞ்சினேன் - போரிடையஞ்சி நின்றானும், கைக்கொளுமடைக்கலங்கரந்து வவ்வினேன் - கைவயர்ததாயவடைக்கலப் பொருளை யொளித்துரிமை கொண்டோனும், எய்த்த இடத்திடர் செய்தோன் - வருத்த முற்றவிடத் திடர்விளைத்தோனும், என்றஇன்னோர் புகும்-என்று கூறப்படுமின்னோரடையும், மெய்க்கொடு நரகிடையானும் வீழ்க - மெய்ம்மையாகிய கொடிய நிரயத்திடையானும் வீழ்வேனாக:—

இருவர் மாறுபட்டு மன்றிடையெய்தக் கண்டதொன்றன்றிப் பிறிதொன்று கூறலும், அடைக்கலப் பொருளைச் சேமித்துக் காவாமற்றாமே கவர்தலும், துன்ப நாடி யடைபவர்க் கிடர்விளைத்தலுமதிபாதகமாதலான் அவரெய்து நிரயத்திடையானெய்துவேனாக வென்றார். நரகானுபவத்துன்பமுணர்த்த மெய்க்கொடு நரகென்றதென்க. எய்த்த வென்ப தீறுதொகுத்தல் பெற்றது. என்ற வென்பது மது. அடைக்கல மென்பதடைக்கலப் பொருளை.

அந்தணருறையுளையனலியூட்டினேன்
மைந்தரைக்கொன்றுளோன்வழக்கிற்பொய்த்துளோன்
நிந்தனைதேவரைநிகழ்த்தினேன்புகும்
வெந்துயர்நரகத்துவீழ்கயானுமே.

(இ - ள்.) அந்தணருறையுளையனலியூட்டினேன் - அழகிய தட்பமாகிய குணமுடையார் மாளிகையில் தீப்பற்றச் செய்தோனும், மைந்தரைக் கொன்றுளோன் - மக்களைக் கொன்றானும், வழக்கிற் பொய்த்துளான் - வழக்கிடைப் பொய் கூறினானும், தேவரை நிந்தனை நிகழ்த்தினேன் - யா

வானும் வணங்கப்படுந் தேவரை நிந்தனை கூறினானும் ஆகிய இவர், புகும் வெந்துயர் நரகத்து யானும் வீழ்க-அடையுங் கொடிய நரகிடையானும் வீழ்வேனாக.—

அந்தணரென்பதற்கு முன்னுரைத்தாம். உறையுளை என்ப துருபு மயக்கம் யாவரும் வணங்குங்கடவுளரை நிந்திப்பததிபாதக மாகலின்நிந்தனை. தேவரை நிகழ்த்தினோ னென்றார். துயரத்தின் கொடுமையையுணர்த்தவெந் துயர் நரகென்றதென்க. (௧0௩)

கன்றுயிரோய்ந் துகக்கறந் துபாலுண்டோன்
மன்றிடைப்பிறர்பொருண்மறைத் துவவ்வினேன்
நன்றியைமறந் திடுநயமினாவினேன்
என்றிவருறுநரகென்னதாகவே.

(இ - ள்) கன்றுயிரோய்ந்துக் கறந்து பாலுண்டோன் - கன்றினுயிரோய்ந்து வருந்தப் பசுவின்பால் கறந்துண்டானும், மன்றிடைப் பிறர் பொருள் மறைத்து வவ்வினேன் - அரசவையிற் பிறர் பொருளைக் கரந்து கைக்கொண்டானும், நன்றியை மறந்திடுநயமில் நாவினேன்-பிறர் செய்த நன்றியைமறந்த நன்மொழியயிலாத நாவினையுடையானும், என்றஇவர்உறு நரகென்னதாக-என்றின்னோரடையு நிரயமெனக் குரியதாக.—

கன்றினைப்பாலூட்டாது கறந்துதா மனுபவித்தலும், அரசவையிற்பிறர் பொருள் பொய்த்துக் கைக்கோடலும், பிறர் செய்த நன்றிகோறலுந்தீராத வதிபாதகமாதலி னவற்றையே யெடுத்தோதினார். 'நன்றிமறப்பது நன்றன்' றென்பவாகலின் நன்றியை மறந்திடு நயமில் நாவினேன் என்றதென்க.

ஆறுதன்னுடன்வருமஞ்சொன்மாதரை
ஊறுகொண்டலைக்கத்தன்னுயிர்கொண்டேகினேன்
சோறுதன்னயலுளோர்பசிக்கத்துய்த்துளோன்
ஏறுமக்கதியிடையானுமேறவே.

(இ - ள்) ஆறுதன்னுடன் வருமஞ்சொல் மாதரை - வழியின்கண் தன்னொடும் வருமழகிய சொல்லையுடைய மகளிரை, ஊறுகொண்டலைக்க - இடையூறெய்தச் செய்துவருத்த, தன்னுயிர் கொண்டேகினேன்-தன்னுயிரோம்பிச் சென்றானும், சோறுதன்னயலுளோர் பசிக்கத்துய்த்துளோன்-சோறுதன்னொடுமலர் பட்டினிகிடப்ப நுகர்ந்தானும், ஏறுமக்கதியிடை யானுமேற-எறுநிற்கு நரகிடையானுமேறுவேனாக:—

நாற்கதியுள்ளது நரககதியொன்றாகலான் அக்கதியென்றார். சோறென்றது உணவை. அயலுளோரென்றது வந்த விருந்தினரை. $'செல்விருந்தோம்பிவரு விருந்து பார்த்திருப்பான்—நல்விருந்து வானத்தவர்க்' காகலின அதற்குமாறு பொருவான் பெறும்பரிசுநரகானுபவமாகலின் சோறு தன்னயலுளோர் பசிக்கத் துய்த்துளோனையும், துணையின்றி யாற்றிடைச்செல்லு மாதர்ப்

$ திருக்குறள், ௯, ௮௬.

கிடையூறு நீக்கானுகித் தன்னுயிரோம்புவானையு மதிபாதகரெனப்படுமாகலின் அவனையே தன்னெடுடன் கூறினர். (௧0௫)

எஃகெறிசெருமுகத்தேற்றதெவ்வருக்
கொஃகினனுயிர்வளர்த்துண்ணுமாசையான்
அஃகலிலறநெறியாக்கியோன்பொருள்
வெஃகியமன்னன்வீழ்நரகின்வீழ்கயான்.

(இ - ள்.) எஃகெறி செருமுகத்து ஏற்ற தெவ்வருக்கு - படைக்கலங்கொண்டு ஞாட்பிடையெதிர்ந்த பகைவருக்கு, ஒஃகினன் - தளர்ந்து புறந்தந்தானும், உயிர்வளர்த் துண்ணும் ஆசையான் - சேதனப்பொருளை வளர்த்துக்கொன்று தன்னுடலோம்புமாசையுடையானும், அஃகலில் அறநெறி ஆக்கியோன் - ஈட்டியபொருளைச் சுருங்குதலில்லாத அறவழியாகச் செலுத்தியோனும், பொருள்வெஃகிய மன்னன் - பொருளைவிரும்பியவரசனும், வீழ்நரகின் யான்வீழ்க - விழுகின்ற நிரயத்திடை யான் வீழ்வேனாக:—

ஞாட்பிடைப் படைக்கலமெடுத்தெறிதல் மரபாகலின் எஃகெறிசெருமுகத் தென்றனெர். ஒல்கினனென்றது திரிந்து நின்றது. அறநெறியாக்கியோனென்றுங் குறைவெய்தாமையி னஃகலிலறநெறியென்றார். வெஃகல் - விரும்புதல். (௧0௬)

அழிவருமரசியலெய்தியாகுமென்
றிழிவருசிறுதொழிலியற்றியாண்டதின்
வழிவருதருமத்தைமறந்துமற்றொரு
பழிவருநெறிபடர்பதகனாகயான்.

(இ - ள்.) அழிவருமரசியல் எய்தியாகுமென்று - கேடிலாத வரசியலையெய்தியாகுமென்று, இழிவரு சிறுதொழிலியற்றி - இழிவினைத்தருஞ்சிறுதொழிலினைச்செய்து, ஆண்டதின்வழிவரு தருமத்தைமறந்து - ஆண்டதின்வழித் தாகவருந்தருமத்தினை மறந்துவிட்டு, மற்றொரு பழிவரு நெறிபடர் பதகன் யானாக - பிறிதொரு பழிவருநெறியினெழுகும் பாதகன் யானேயாக:—

தொன்றுதொட்டுவரு மரசியலாகலின் அழிவருமரசியலென்றார். மற்று வினைமாற்றுப்பொருளது. இழிவரு சிறுதொழிலென்றது இழிவையாக்குஞ் சிறுதொழிலை. அறத்தை மறவாதுசெய்வதே துறக்கமெய்துவிப்பதாகலின் அதின் வழிவரு தருமத்தை மறந்துமென்றார். மறந்து மென்பு(?)ழி உம்மை மறயாமை வேண்டுமென்ப துணர்த்திநின்றது. (௧0௭)

தஞ்செனவொதுங்கினர்தனதுபாருளோர்
எஞ்சலின்மறுக்கினேடிரியல்போயுற
வஞ்சிசென்றிறுத்தவன்வாகைமீக்கொள
அஞ்சினமன்னவனாகயானுமே.

(இ-ள்.) தஞ்செனவொதுங்கினர்-புகலென்றடைந்த, தனதுபாருளோர்-தன்னாட்டவர், எஞ்சலில் மறுக்கினோடிரியல்போயுற-குறைதலில்லாத கலக்கத்தினோடிரியல்போயடைய, வஞ்சிசென்றிறுத்தவன்வாகைமீக்கொள-வஞ்சிமாலைவேய்ந்து தானையிறுத்தோன் வாகைமாலைசூடிவர, அஞ்சினமன்னவன் யானுமாக-அஞ்சியொதுங்கிய வேந்தனும் யானுமாக:—

தஞ்சமென்பதீறு தொகுத்தல்பெற்றது. மறுக்கு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். வேற்றுப்புலத்தோர் நாட்டிடையெதிர்ந்தவரக்கண்டு தம்முடைய பொருளைத் தாங்கொண்டன்னுழியோடலியல்பாதலின் தனதுபாருளோரெஞ்சலின் மறுக்கினோடிரியல்போயுற வென்றார். வஞ்சிசென்றிறுத்தவன் வாகைமீக்கொளவென்புழி||'வஞ்சிதானே முல்லையது புறனே' என்றும், 'எஞ்சாமண்ணசைவேந்தனை வேந்த-னஞ்சுதகத்தலைச் சென்றடல்குறித்தன்றே' என்றுங்கூறுதலின்வஞ்சியென்றது அகத்திணையேழனுண்முல்லைக்குப்புறனாமென்றும், அஃதுஒழியாதமண்ணச்சுதலையுடையவேந்தனைவேறொரு வேந்தன் ஆண்டு வாழ்வார்க் கச்சம்பயப்ப அந்நாட்டிடைச்சென்று வேறல் குறிப்பதனை. வாகையென்றது$'வாகைதானே பாலையதுபுறனே' யென்றும், 'தாவில்கொள்கைத் தத்தங்கூற்றைப்-பாகுபடமிகுதிப்படுத்தலென்ப'என்றுங் கூறலின் அதுநடுவுநிலைத்திணையாகிய பாலைக்குப்புறனாமென்றும், அது கேடில்லாதகோட்பாட்டினையுடைய தத்தமியல்பினை இருவேறுபட மிகுதிப்படுத்தலென்றுங் கொள்ளப்படுதலான் போர்க்களத்து வென்றானொருவன் வென்றமையுணர்த்தப் புனையுமாலையென்பார் மீக்கொளவென்றதூஉமென்க.

கன்னியையழிசெயக்கருதினேன்குருப்
பன்னியைநோக்கினேன்பருகினேனறை
பொன்னிகழ்களவினிற்பொருந்தினேனென
இன்னவருறுகதியென்னதாகவே.

(இ-ள்.) கன்னியையழிசெயக்கருதினேன்-கன்னித்தன்மையையழிக்கக்கருதினானும், குருப்பன்னியை நோக்கினேன்-குருமனைவியைக் காதலித்தானும், நறைபருகினேன் - கள்ளுண்டுகளித்தானும், பொன்னிகழ்களவினிற் பொருந்தினேன்-பொன்னினை இழிவைப்பயக்குங் களவினிற்கைக்கொண்டானும், என இன்னவர் உறுகதியென்னதாக - என இன்னோரன்னோரெய்துங்கதி யெனதேயாக:—

கன்னியென்றது மன்றலயராமாதினை; பன்னியென்றது வடமொழிச்சிதைவு. கள்ளுண்டலைத் தீயரென்பதனைத் 'துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்' என்பதனானறிக. பொன்னைக்களவாடல் தீயபாதகமாதலிற் பொன்னிகழ்களவினிற் பொருந்தினேனென்றதென்க. குருப்பன்னியை விரும்பினேன் பொன்னிகழ்களவினிற்பொருந்தினேனென்றின்னோரெய்துங்கதியைமுறையே'எனைத்துணையராயினு மென்னாம்','கள்வார்க்குத் தள்ளுமுயிர்நிலை' என்றித்தொடக்கத்தனவாய திருக்குறளானும் அவற்றிற்குப் பரிமேலழகர் விரித்தவுரையானுமுணர்க. (௪0௬)

|| திருக்குறள்-செ. ௯௨௬, ௧௪௪, ௨௯0.

$ தொல், பொருள், புறம், ௫, ௯௧, ௯௨, ௫, ௭௩, ௭௪,

ஊணலவுண்வழிநாயினுண்டவன்
ஆணலன்பெண்ணலனார்கொலாமென
நாணலனரகமுண்டென்னுநல்லுரை
பேணலன்பிறர்பழிபிதற்றியாகயான்.

(இ-ள்.) ஊணல உண்வழிநாயின் உண்டவன்-நல்லனவாகியஉணவினை யுண்ணுங்கால்சுணங்கன்போலுண்டானும், ஆணலன்பெண்ணலன்ஆர்கொலாமென நாணலன்-ஆணல்லன் பெண்ணல்லன் இவன் யாவன்கொல்லோவென நாணமில்லாதானும், நரகம் உண்டென்னும் நல்உரைபேணலன்-நிரயமொன்றுண்டென் றுரைக்கும் நன்மையாகிய சொல்லினையும் விரும்பாதானும், பிறர்பழி பிதற்றியாக யான் - பிறரைப் பழியெடுத்துப் பேசுவானும் ஆகிய இத்திறத்தோர் யானாக:—

ஊண் அலவெனப்பிரித்து ஊணல்லாதனவற்றையென்றுரைப்பாருமுளர். உண்வழிஎன்பதுவழியீற்று வினையெச்சம். யாரென்பதுமரீஇயது. ஆண்பெண்ணென்னும் இருவகைப்பகுப்பினையுமுணராதுபேசிநிற்பானை ஆணலன்பெண்ணலனார்கொலாமெனநாணலனென்றார். பாவச்செயல்செய்வார் நிரயமெய்துவரென்பது வேதநூற்பிரமாணமாதலின் அதனை நல்லுரையென்றும், அதனைக்கைப்பிடியாமையிற்பேணலனென்றுங் கூறினார். பிறர் புகழினைத் தூற்றுவதேயன்றிப் பழியையெடுத்துக் கூறலாகாமைபற்றிப் பிறர்பழிபிதற்றியென்றார். பிதற்றி-வினைப்பெயர். (கக0)

மறுவிறொல்குலங்களைமாசிட்டேற்றினேன்
சிறுவிலையெளியவருணவுசிந்தினேன்
நறியனவயலவர்நாவினீர்வர
உறுபதநுங்கியவொருவனாகயான்.

(இ-ள்.) மறுவில் தொல்குற்றங்களை மாசிட்டு ஏற்றினேன் - குற்றமில்லாத பழமையாகிய குலங்களைக் குற்றமிட்டேற்றினனும், சிறுவிலையெளியவருணவுசிந்தினேன் - சிறுவிலையையுடைய ஏழையருணவைச் சிந்தினவனும், அயலவர் நாவினீர்வர - அயலார்நாவிடை நீருற, நறியன உறுபதநுங்கிய ஒருவனாகயான் - யான் நல்லனவாகிய சோற்றினையுண்டவொருவனுமாகுக:—

மறுவில்தொல்குலங்களை மாசிட்டேற்றலாவது $‘கலத்தல் குலமில்வழி’யை. சிறுவிலை யெளியவருணவு சிந்தலாவது வற்கடத்துப் பெருவிலைக்குத் தானியங்கள் விற்றலை. நுகர்ச்சியையயலவர்க் கியாதுண்டா ரென்பார் அயலவர் நாவினீருறவுறுபத நுங்கலென்றதென்க. (ககக)

வில்லினும்வாளினும்விரிந்தவாண்டொழில்
புல்லிடையுகுத்தனென்பொய்மையாக்கையைச்
சில்பகலோம்புவான்செறுநர்சீறிய
இல்லிடையிடுபதமேற்கவென்கைபால்.

$ இன்னா நாற்பது, செ. கக.

(இ-ள்.) வில்லினும் வாளினும் விரிந்த ஆண்டொழில் - வில்லினிடத்தும் வாளினிடத்தும் விரிந்த ஆண்மைத்தொழில், புல்லிடையுகுத்தனென் - புல்லிடைச்சிந்தினேனாகி, பொய்மையாக்கையை - பொய்மையாகிய உடம்பினை, சில்பகல் ஓம்புவான் - சிலநாள்காப்பான், செறுநர்சீறிய இல்லிடை இடுபதமென்கையால் ஏற்க - பகைவராற் சீறப்பட்ட வீட்டிடைஇட்டவுணவினையென்கையினாலேற்க.—

ஆண்டொழினீத்துக்கல்லினுந் திண்ணிதாகயாக்கையைக்கருதிச்செருநர்கைக்கொளவுணவினையுண்டான் அடையுங்கதி சாலச்சிறிதாகலின் யாக்கையைச் சில்பகலோம்புவான் செறுநர்சீறிய இல்லிடை யிடுபதமென்கையாலேற்க என்றார். (கக௨)

ஏற்றவற்கொருபொருளுள்ளதின்றென்று
மாற்றலனுதவலன்வரம்பில்பல்பகல்
ஆற்றினனுழற்றுமோராதனெய்துமக்
கூற்றுறுநரகினோர்கூறுகொள்கயான்.

(இ-ள்.) ஏற்றவற்கு உள்ளதொரு பொருளின்றென்று - இரப்பவர்கட்குள்ளதாகிய வொருபொருள் இன்றென்று நினைந்து, மாற்றலன் உதவலன் - மாற்றுனாகவுதவாதான், வரம்பில்பல்பகல் - அளவில்லாத பலநாள், ஆற்றினன்-ஆற்றி, உழற்றும் ஓராதன் எய்தும் - உழலச்செய்யு மோரறிவில்லாதான் அடையும், அக்கூற்றுறுநரகின் ஓர்கூறுயான் கொள்க-அக்கூறுபாட்டினை யடைந்த நிரயத்தினோர் கூற்றையான் கொள்க.—

ஏற்றவர்க்கொருபொருளில்லையென் றுதவாமையினும் கழிபெரும் பாதக மின்மையின் அதனை யெடுத்துக்கூறினார். (ககங)

பிணிக்குறுமுடையுடல்பேணிப்பேணலார்த்
துணிக்குறுவயிரவாடக்கைதூக்கிப்போய்
மணிக்குறுநகையிளமங்கைமார்கண்முன்
தணிக்குறுபகைஞரைத்தாழ்கவென்றலை.

(இ-ள்.) பிணிக்குறுமுடையுடல்பேணி - பிணிக்கப்பட்ட முடைநாற்றத்தையுடைய உடம்பினை விரும்பி, பேணலார்துணிக்குறு வயிரவாள் - பகைவரைத் துணிக்கும் வயிரவாட்படையை, தடக்கை தூக்கிப்போய்-தடங்கையால் தூக்கிச்சென்று, மணிக்குறுநகையிள மங்கைமார்கண்முன்-அழகிய புன்னகையையுடைய மாதரார்முன், தணிக்குறுபகைஞரை என்தலைதாழ்க-தணிக்கும்பகைவரை என்சிரந்தாழ்க.—

வயிரவாளென்பதற்கு வயிரத்தையும் வாளினையு மென்றுரைப்பினுமமையும். மங்கைமார்கண்முன்என்பதற்குமாதரார்கண்ணின்முன்னெனினுமாம். சில்வாழ்நாள் வாழுமுடலைக்காத்தற்பொருட்டுப் பகைவர் படைக்கலங்களைச் சுமந்துவாழ்தலினுங் கழிபெருந்துன்பம் பிறிதின்மையா னதனைக் கூறினார். (ககச)

கரும்பலர்செந்நெலங்கழனிக்கானநா
டரும்பகைகவர்ந்துணவாவிபேணினென்
இரும்பலர்நெடுந்தலையீர்த்தகாலொடும்
விரும்பலர்முகத்தெதிர்விழித்துநிற்கயான்.

(இ-ள்.) கரும்பலர் - கரும்பலர்ந்த, செந்நெலங்கழனி கானநாடு-செந்நெற்காட்டினையுடைய நாட்டினை, அரும்பகைகவர்ந்துண ஆவிபேணினென் - அரும்பகைவர் கைக்கொண்டனுபவிப்ப வுயிரினைக்காத்தோம்பி, இரும்பலர் நெடுந்தலையீர்த்து - இரும்பினாலாய நீண்ட தலையையிழுத்து, காலொடும் - காலினோடும், விரும்பலர் முகத்திடையான் விழித்துநிற்க-பகைவர்முகத்து யான் விழித்துநிற்க.—

|| 'நிலத்துக்கணியென்ப நெல்லுங்கரும்பு' மாகலின் கரும்பலர் செந்நெலங்கானநாடென்றதென்க. நாட்டினைப்பகைவன் கைக்கொளத் தன்னுடம்போம்புதற்கவன் காலினிட்ட தலையொடும் வாழ்தலினுமுயிர்நீக்கஞ் சிறந்தமையின் அவ்வாழ்க்கையையே யெடுத்துக்கூறினார். (௧௧௫)

தீயனகொடியவள்செய்தசெய்கையை
நாயினேனுணரினன்னெறியினீங்கலாத்
தூயவர்க்கிடரிழைத்துழலுந்தோமுடை
ஆயவர்வீழ்கதியதனின்வீழ்கயான்.

(இ-ள்.) கொடியவள்செய்த தீயனசெய்கையை - கொடியவளாகிய கைகேசிசெய்த தீயனவாகிய செய்கையை, நாயினேனுணரின் - நாயேனறியின், நன்னெறியி னீங்கலாத - நன்னெறியினின்று நீங்காத, தூயவர்க்கிடரிழைத்து-தூயசிந்தையாளர்க்குத்துன்பம்விளைத்து, உழலுந்தோமுடைய ஆயவர்வீழ்கதியதனின்யான்வீழ்க - உழலாநிற்கும் குற்றமுடையார் விழுகின்ற கதியின்கண் யான் வீழ்க-எ-று.

கைகேசி செய்த தீமையாவது சீராமனைக் கானேகச் செய்ததனான் உலகமுழுது மாளுமரசனுயிர் மாண்டமை. நன்னெறியாவது மெய்யுணர்ச்சியுடையராந்தன்மை. அவர்க்கிடையூறியற்றினார் கழிபெருந்துன்பம்பயக்கும் நிரயமெய்துவ ராகலின் அவரடைந்தகதியை யானடைக வென்றார். இவ்விருபது செய்யுளானும் பரதன் சூளுரைகட்டுரைத்தமையுணர்த்தப்பட்டது.

தூயவாசகஞ்சொன்னதோன்றலைத்
தீயகானகந்திருவினீங்கிமுன்
போயினான்வரக்கண்டபொம்மலாள்
ஆயகாதலாலழுதுபுல்லினாள்.

(இ-ள்.) தூயவாசகம் சொன்னதோன்றலை - பரிசுத்தமாகிய சொற்களைக் கூறிய பரதனை, திருவினீங்கி - செல்வமிழந்து, தீயகானகம் போயி

|| நான்மணிக்கடிகை, செ-௯.

னன் - கொடியகானிற்சென்றவன், வரக்கண்டபொம்மலாள் - வரக்கண்ட ஆசையினள், ஆயகாதலாலழுது புல்லினள்-உண்டாகிய காதன் மிகுதியா லழுது புல்லிநின்றனள்.—

தூயவாசகம் சொன்னவென்பது சூளாகிய கட்டுரையை. தீயகானகம் போயினனென்பதிராமனை. முன்வரக்கண்டபொம்மலாளென்பதுகோசலை யை. சீராமன் நீக்கத்தான் மனம் வருந்துபவள் இவனது நன்னெறியைக் கண்டு சழிபேருவகையெய்தலின் தீயகானகம்போயினன்வரக்கண்டபொம்ம ளாளென்றார். (கள)

செம்மைநன்மனத்தண்ணல்செய்கையும்
அம்மைதீமையுமறிததேற்றினள்
கொம்மைவெம்முலைகுமுறுபாலுக
விம்மல்விம்மநின்றழுதுவிங்கினள்.

(இ-ள்.) செம்மை நன்மனத்தண்ணல் செய்கையும்-நேவுநிலைமையை யுடைய நன்மையாகிய மனத்தினையுடைய அரசன்செயலும், அம்மைதீமை யுமறிதல்தேற்றினள் - தாய்செய்த தீமையுமறியத் தெரித்தாள், கொம்மை வெம்முலைகுமுறுபாலுக - குவிதலையுடைய வெம்முலைபொழியும் பால்சிந்த, விம்மல்விம்ம நின்று அழுது வீங்கினள் - விம்மலினால் விம்மி நின்று மிக அழுதாள்.—

அரசன் கைகேசிக்குப் பண்டைவரங்கள் பரிந்தளித்தமையான் செம் மை நன்மனத்தண்ணல்செய்கையுமென்றார். இனி தாயேவக் கானேகிய செ ய்கை நோக்கி யங்ஙனங்கூறினளெனினு மமையும். (ககஅ)

முன்னைநுங்குலமுதலுளோர்கடாம்
நின்னையாவரேநிகர்க்குநீர்மையார்
மன்னர்மன்னவாவென்றுவாழ்த்தினள்
உன்னஉன்னநைந்துருகிவிம்முவாள்.

(இ-ள்.) உன்ன உன்ன நைந்துருகி விம்முவாள்-பன்முறை நினைக்க மன நைந்துருகி யேங்குமியல்புடைய கோசலை, முன்னைநுங்குல முதலு ளோர்கள்தாம்-முன்னையாண்டநுங்குலக்குரவரில், நின்னையாவரே நிகர்க்கு நீர்மையார்-உன்னையாரேயொக்குந்தன்மையுடையார், மன்னர்மன்னவாவெ ன்று வாழ்த்தினள்-அரசர்க்கரசனேயென்று வாழ்த்திநின்றனள்-எ-று.

அடுக்கு மிகுதிப் பொருளது. முன்னைநுங்குல முதலுளோரென்பது புறவின்பொருட்டுத் தசையறுத்துதவியானும், கடலுரட்டானும், கங்கை தந்தானும், நிலங்கடைந்தானும், வாய்மைக்குத் தன்னைவிற்றானு மென்றின் னோரை; அவரு நின்செய்கைக்கொவ்வாரென்பார் நின்னையாவரே நிகர்க்கு நீர்மையாரென்றாள். இம்மூன்று செய்யுளானும் கோசலை பரதனைக் குற்ற முடையனல்லனென்றதுணர்த்தப்பட்டது. (ககக)

உன்னவுன்னனைந் துருகுமன்புகூர்
அன்னை தாளில்வீழ்ந் திளையவண்ணலும்
சொன்னநீர்மையாற்றெழுதுமாழ்கினன்
இன்னவேலைவாய்முனிவனெய்தினன்.

(இ-ள்.) உன்னவுன்னனைந்துருகும் அன்புகூர் அன்னை தாளில்வீழ்ந்து - பன்முறையு மெண்ணியவிடத்து மனங்கசிந்துருகாநிற்கு மன்புமிக்க தாயது தாளிடைவிழுந்து, இளையவண்ணலும் சொன்ன நீர்மையால் தெழுதுமாழ்கினன் - இளையவனாகிய சத்துருக்கனும் மேற்கூறியவண்ணம் வணங்கி மனங்கலங்கி நின்றனன், இன்னவேலை வாய்முனிவனெய்தினன்-இவ்வமயத்து வசிட்டமுனிவன் வந்தடைந்தனன்.—

அடுக்கு மிகுதிப் பொருளது. மக்கட்கிரங்குந் தன்மையளாதலின் உருகுமன்புகூரன்னையென்றார். சொன்னநீர்மையென்பது பரதனுக்குச் சொன்ன தன்மையை. இளையவண்ணலுமென்றதிறந்ததுதழீஇயது. (கஉ௰)

வந்தமாதவன் தாளில்வள்ளல்வீழ்ந்
தெந்தையாண்டையானியம்புவீரெனா
நொந்துமாழ்கினனுவல்வதோர்கிலா
அந்தமாதவனழுதுபுல்லினன்.

(இ-ள்.) வந்தமாதவன் தாளில்வள்ளல்வீழ்ந்து - வந்தடைந்த பெருந்தவத்து வசிட்டமுனிவன் பதங்களில் பரதன்விழுந்துநின்று, எந்தை யாண்டையான் இயம்புவீரெனா - எமது தாதையாண்டிருக்கின்றனன் கூறுமினென்று வினவாநின்று, நொந்துமாழ்கினன்-மனநொந்து கலக்கமுற்றனன், நுவல்வதோர்கிலா அந்தமாதவன் அழுதுபுல்லினன்-அங்ஙனங் கேட்டதற்கு மறுமொழி கூறவறியாத அப்பெருந்தவத்து வசிட்டமுனிவனழுது கட்டிச் சேர்த்தனன்.—

எந்தை யாண்டையானென்பது அறியான் வினாவன்று; முனிவன்வாயாற் றந்தைமாண்டமை கேட்டற்கென்க. அரசன் மாண்டமை கூறற்கு நாவெழாமையி னுவல்வதோர்கிலாவென்றார். வள்ளலென்பது தான்பெற்றவரசைத் தன்முன்னோற்கீவான்றுணிந்தமையை. (கஉக)

மறுவின்மைந்தனேவள்ளலுந்தையார்
இறுதியெய்தினாளேழிரண்டின
சிறுவர்செய்கடன்செய்துதீர்த்தியென்
றுறுவன்மேயினனுாயின்மேயினன்.

(இ-ள்.) மறுவில்மைந்தனே - குற்றந்தீர்ந்த குணத்தையுடைய மகனே, வள்ளல் உந்தையார் இறுதியெய்தி நாளேழிரண்டின - வள்ளன்மையுடையானாகிய நின்றாதை இறுதியடைந்த நாள்பதினான்காயின, சிறுவர் செய்கடன் செய்து தீர்த்தியென்றுறுவன் மேயினன் உசாயின்மேயினன் -

புகழ்நிலைநின்ற முனிவன்மக்கள் செயற்குரிய உரிமைக்கடன் செய்து முடித்தியென் றுறுதிமொழி கூறினன்.—

மறை யோதுவித்தவனை வளர்த்தானும் வசிட்டன்காண் என முற்காண்டத்துக் கூறலின் மைந்தனேயென விளித்தார். தன்னுயிர் வாய்மைக்களித்த சிறப்புநோக்கிவள்ளலென்றார். சிறுவர் செய்கடனென்பது தந்தைக்குரிய பிரத பூசனையை. இம்மூன்றுசெய்யுளானும் வசிட்டமுனிவனடைந்து கூறினமையுணர்த்தப்பட்டது. (கஉஉ)

அன்னையேவினளடியிறைஞ்சினன்
பொன்னின்வார்சடைப்புனிதனோடும்போய்த்
தன்னைநல்கியத்தருமநல்கினான்
பன்னுதொல்லறப்படிவநோக்கினன்.

(இ - ள்.) அன்னையேவினள் அடியிறைஞ்சினன் - தாயாலேவப்பட்டுப் பரதனவளடிகளை வணங்கி, பொன்னின்வார் சடைமுனிவனோடும் போய் - பொன்போன்ற நீண்டசடையையுடைய வசிட்டமுனிவனொடுஞ் சென்று, தன்னைநல்கியத்தருமநல்கினான்- தன்னையே யுதவிநின்றுஅத்தருமத்தை வளர்த்த தயரதனது, பன்னுதொல்லறப்படிவ நோக்கினன்-சொல்லப்பட்ட தொன்மையாகிய தருமசொரூபத்தைப் பார்த்தான்.—

தன்னைநல்கியத் தருமநல்கினனென்பது தன்னுயிர்நல்கித் தான் அரசளித்தமையானென்க. (கஉங)

மண்ணின்மேல்விழுந்தலறிமாழ்குவான்
அண்ணலாழியானவனிகாவலான்
எண்ணெயுண்டபொன்னெழில்கொண்மேனியைக்
கண்ணநீரினாற்கழுவியாட்டினான்.

(இ-ள்.) மண்ணின்மேல்விழுந்தலறிமாழ்குவான் - மண்ணிடைவிழுந்தலறுநின்று கலங்குபவனாகிய பரதன், அண்ணலாழியான் - பெரியதோராக்கினைசக்கரமுடையானும், அவனி காவலான்-உலகமுழுதுமாண்டவனுமாகிய அரசனது, எண்ணெயுண்டபொன்எழில் கொள் மேனியை-தைலமாட்டிய அழகிய பொன்போன்றவடிவழகுடைய வுடம்பினை, கண்ணநீரினாற் கழுவியாட்டினான்-கண்ணிற்பெருகிய நீரினால் கழுவி நீராட்டினன்-எ-று.

மண்ணின்மேல் விழுதலடியற்ற பனைமரம்போல்வீழ்தலே. அண்ணலாழியானவனிகாவலானென்பது ஒருபொருணுதலிவந்த பலசொற்கள். எண்ணெயுண்ட பொன்மேனியென்பது தயிலக்கடலின்றலையுய்த்தானென்பதனை. இவ்விரண்டு செய்யுளானும் பரதன் தயரதன் றிருமேனிகண்டமை யுணர்த்தப்பட்டது. (கஉச)

பற்றியவ்வயின்பரிவின்வாங்கினர்
சுற்றுநான்மறைத்துறைசெய்கேள்வியார்
கொற்றமன்கணைகுமுறமன்னனை
மற்றோர்பொன்னின்மாமானமேற்றினார்.

(இ-ள்.) பற்றியவ்வயின்பரிவின்வாங்கினூர்-அவ்விடத்துப் பற்றிநின்று பரிவின்வாங்கி, சுற்றுநான்மறைத்துறைசெய் கேள்வியார் - சூழ்ந்து நான்குவேதத்துறையிற்சென்ற கேள்வியையுடையார், கொற்றமண்கணைகுமுற - வெற்றி முரசறைபட, மன்னனை மற்றொர்பொன்னின்மாமானமேற்றினூர் - அரசனை வேறோரழகிய பெரிய விமானத்தேற்றினர்.—

வயினென்றது உருபேலாத பெயர்ச்சொல். மண் - மார்ச்சனையை. மானமென்பது முதற்குறை. வேதவிதிவழாது செய்வாரென்பார் நான்மறைத்துறை செய் கேள்வியாரென்றார். (கஉரு)

கனைசெய்வேலைபோனகரிகையெடுத்
துனைசெய்பூசலிட்டுயிர்துளங்குற
அரைசவேலைசூழ்ந்தழுதுகைதொழப்
புரைசையானையிற்கொண்டுபோயினூர்.

(இ-ள்.) கனைசெய்வேலைபோல் நகரிகையெடுத்து - கனையிட்டகடலைபோல் நகரமெடுத்து, உரைசெய்பூசலிட்டு - சொல்லப்படு மோசையிட்டு, உயிர்துளங்குற-உயிர்நடுக்கமெய்த, அரைசவேலைசூழ்ந்தழுதுகைதொழ-அரசராகிய கடல்நெருங்கியழுதுவணங்க, புரைசையானையிற் கொண்டுபோயினூர்-யானைமேற்கொண்டு சென்றனர்-எ-று.

புரைசையென்றது-யானைகழுத்திடுகயிற்றினை. அரசவேலையென்பது உருவகம். கனைசெய்வேலை என்றார் இதனோடுகட்டிற்கு வேற்றுமைத்தோன்றுதற்கு. இவ்விரண்டுசெய்யுளானும் தயரதனைவிமானத்தேற்றிக்கொண்டு சென்றமை யுணர்த்தப்பட்டது. (கஉசு)

உந்துபொற்றடந்தேர்வலானெடும்
மந்திரப்பெருந்தலைவர்மற்றுளோர்
தந்திரத்தனித்தலைவர்நண்பினோர்
வந்துசுற்றமுற்றழுதுமாழ்கினூர்.

(இ-ள்.) உந்துபொற்றடந்தேர்வலானெடும் - செலுத்துகின்ற அழகிய பெரியதேர் வல்லானாகிய சுமந்திரனோடும், மந்திரப்பெருந்தலைவர் மற்றுளோர் தந்திரத் தனித்தலைவர் நண்பினோர் - மந்திரத்தலைவரும் பிறரும் ஒப்பற்ற சேனைகாவலரும் நட்பினரும், வந்துசுற்ற-வந்துசூழ, முற்றழுதுமாழ்கினூர் - முழுதுமழுது மனங்கலங்கினர்.—

தேர்வலானெடும் மந்திரப்பெருந்தலைவர் மற்றுளோரென்பது ஐம்பெருங்குழுவை. (கஉஎ)

சங்குபேரியுந்தழூவுசின்னமும்
எங்குமெங்குநின்றிரங்கியேங்குவ
மங்குறோய்நகர்மகளிராமெனப்
பொங்குகண்புடைத்தழுவபோன்றவே.

(இ-ள்.) சங்குபேரியுந் தழூவுசின்னமும்-சங்கும்பேரிகையுந் தழுவப்பட்ட சின்னமும், எங்குமெங்கு நின்றிரங்கியேங்குவ - எவ்விடத்தும்

எவ்விடத்துநின்று கறங்காநிற்பன, மங்குல்தோய்நகர் மகளிராமென-மேகந் தவழ்கின்ற நகர்வாழ்மடவாரேபோல, பொங்குகண்புடைத் தழுவபோன்ற-கண்கண் மிகப்புடைத் தழுவன வொத்திருந்தன.—

எங்குமெங்குமென்றவடுக்கு பன்மைப் பொருளது. சங்குபேரி முதலிய வாச்சியவோசையை நகர்வாழ்மகளிர முழுகுரற்குவமைகூறினர். பொங்குகண் புடைத்தழுவ போன்ற என்பது வேற்றுப்பொருள் வைப்பு. (கஉஅ)

மாவும்யானையும்வயங்குந்தேர்களும்
கோவுநான்மறைக்குழுவுமுன்செலத்
தேவிமாரொடுங்கொண்டுதெண்டிரை
தாவுவார்புனற்சரயுவெய்தினர்.

(இ-ள்.) மாவும் யானையும் வயங்குதேர்களும் - பரியும்களிறும் விளங்கும் தேர்களும், கோவுநான்மறைக் குழுவுமுன்செல - அரசரும் வேதியர் குழுவுமுன்போக, தேவிமாரொடுங்கொண்டு - மனைவியருடன் கொண்டு, தெண்டிரைதாவுவார்புனல் சரயுவெய்தினர் - தெள்ளிய வலைதாவிச்செல்லுந் திரையுடைய சரயுநதியை யடைந்தனர்-எ-று.

நான்மறைக்குழுவென்பது வேதியரென்னும் பெயர்பற்றியென்க.வாரி யையுடைய நதியாதலின் தாவுதெண்டிரைச் சரயுவென்றார். இம்மூன்று செய்யுளாலும் நகரமாந்தர் முதலானோர் சரயுநதியடைந்தமை யுணர்த்தப் பட்டது. (கஉக)

எய்திநூலுளோர்மொழிந்தயாவையும்
செய்துதீக்கலந்திருத்திச்செல்வனை
வெய்தினேற்றினர்வீரநுந்தைபால்
பொய்யின்மாக்கடன்கழித்திபோகென்றார்.

(இ-ள்.) எய்தி-அடைந்து, நூலுளோர் மொழிந்த யாவையுஞ்செய்து-வேதநூலில் வல்லார் கூறியவண்ணங் கருமமெல்லா முடித்து, தீக்கலந்திருத்தி-தீக்கலந்திருந்தச்செய்து, செல்வனைவெய்தினேற்றினர்-இந்திரதிருவனை விரைந்தேற்றினர், வீரநுந்தைபால் பொய்யின்மாக்கடன் போந்து கழித்தி யென்றார் - வீரனே நுன்றந்தையிடத்துப் பொய்மையகன்ற பெருங்கடன் புகுந்து கழித்திடுக என்றனர்-எ-று.

செல்வனென்பது இந்திரதிருவமுடையானென்னும் பொருட்டு. வெய்து விரைவுக்குறிப்பு. நூலுளோரென்பது வேதியரை. வீரவென்பது பரதனை. இதனாற் பரதனை உரிமைக்கடன் செய்தியென்ற துணர்த்தப்பட்டது.

என்னும்வேலையிலெழுந்தவீரனை
அன்னைதீமையாலரசனின்னையும்
துன்னுதுன்பத்தாற்றுறந்துபோயினன்
முன்னரேயெனமுனிவன்கூறினான்.

(இ-ள்.) என்னும்வேலையில் - என்னுமமையத்து, எழுந்த வீரனை - எழுந்த அரசனை, அன்னைதீமையால் - தாய்செய் தீமையால், முன்னரே அரசன் நின்னையும் தன்னுதுன்பத்தால் துறந்துபோயினன் என - முன்னரே அரசன் நின்னையு நெருங்கிய துயரத்தால் துறந்துசென்றனனென்று- முனிவன் கூறினன்-வசிட்ட முனிவன் கூறினன்.—

அரசன் அன்னைதீமையால் துறந்துபோயினனென்றார் மன்னேயாவான் ஒருமப்பரதன்றனையு மகனென்றுன்னே னென முற்கூறிப்போந்தமையை விளக்குதற்கு. (கருக)

துறந்துபோயினனெனவேதோன்றனீ
பிறந்துபேரறம்பிழைத்ததென்றல்போல்
இறந்துபோயினனிருந்ததாண்டது
மறந்துவேறொருமைந்தனுங்கொலாம்.

(இ-ள்.) தோன்றல்நீ பிறந்து - தோன்றலே நீதோன்றி, பேரறம் பிழைத்ததென்றல்போல் - பெரிய அறம்பிழைபட்டது என்பதுபோல, துறந்துபோயினனென - நின்னைத்துறந்துசென்றனனென, இறந்துபோயினன் - இறந்துபட்டனன், இருந்ததுஆண்டு-ஆண்டிருந்த எண்ணமிது, அதுமறந்து வேறொரு மைந்தனுங்கொலாம்-அதனை மறந்து மற்றொருமகனுமோ.--என்று.

துறந்துபோயினனெனவே தோன்றனீ பிறந்துபேரறம் பிழைத்ததென்றல்போலென்றார் நின்னையுந்துன்னு துன்பத்தாற் றுறந்துபோயினனென முற்கூறிப் போந்தமையை வற்புறுத்தற்கு; ஆகானுரிமைக் கென்றொனென்றமையான் அதுமறந்து வேறொரு மைந்தனுங்கொலா மென்றதென்க. தோன்றல் ஆகுபெயர். இவ்விரண்டு செய்யுளானும் வசிட்டமுனிவன் கூறினமை யுணர்த்தப்பட்டது. (கருஉ)

இடிக்கண்வாளராவிடைவதாமெனப்
படிக்கண்வீழ்ந்தகம்பதைக்குநெஞ்சினன்
தடுக்கலாகலாத்துயரந்தன்னுளே
துடிக்கவிம்மிநின்றழுதுசொல்லுவான்.

(இ-ள்.) இடிக்கண்வாளரா இடைவதாமென - இடியிடத்து நீண்டபாம்பு வருந்துவதுபோல, படிக்கண் வீழ்ந்து அகம்பதைக்கு நெஞ்சினன்-நிலத்திடைவிழுந்துள்ளம்பதைக்கு மனமுடையபரதன், தடுக்கலாகலாத் துயரந்தன்னுளே - தடுக்கமுடியாத துயரத்தால், துடிக்க விம்மிநின்று - துடிக்கும்படி விம்மிநின்று, அழுதுசொல்லுவான்-அழாநின்று சொல்லுவான்.—

அவன் மனம்பதைத்துருகுதலை இடிக்கண்வாளராவிடைவதற்குவமை கூறினார். அத்துயரங்கூறற்கமையாமையின் தடுக்கலாகலாத் துயரமென்றதென்க. (கருடு)

உரைசெய்மன்னன்மற்றுன்னிலென்னில்யார்
இரவிதன்குலத்தெந்தைமுந்தையோர்

பிரதபூசனைக்குரியபேறிலேன்
அரசுசெய்யவோவாவதாயினேன்.

(இ-ள்.) உரைசெய்மன்னன் - சொல்லுமரசன், உன்னிலென்னில் யார் - உன்னுவானெனின் யாவர், இரவிதன்குலத் தெந்தைமுந்தையோர் - ஞாயிற்றின்மரபின்கண் என்றுதைக்குமுந்தையோர்க்குமாம், பிரதபூசனைக் குரிய பேறிலேன் - உரிமைக்கடனுக்குரிய பேற்றை யுடையேனல்லேன்; அரசுசெய்யவோ ஆவதாயினேன்-அரசாள்வதற்கோ சமைவதானேன்.—

பிரதபூசனையென்ப துரிமைக்கடனே. இதுகாறு மிம்மரபின்கண் வந்த மக்கள் பிரதபூசனைக் குரியராயினர், யானங்ஙனமாகாமையின் பிரதபூசனைக்குரிய பேறிலேனென்றார். மற்று-அசை நிலை. எந்தை முந்தையோர் என்பது தயரதனுக்குத் தந்தையாகியவயனுள்ளிட்டோரை. (கூசு)

பூவினான்முகன்புதல்வனாதியாம்
தாவின்மன்னர்தந்தருமநீதியால்
தேவராயினார்சிறுவனாகியே
ஆவநான்பிறந்தவத்தனாவா.

(இ-ள்.) பூவின்நான்முகன் புதல்வன் ஆதியாம் - தாமரைமேயான் மகன்முதலாகிய, தாவில்மன்னர்-கேடில்லாதவரசர், தந்தருமநீதியால்-தமது தருமநீதியினால், தேவராயினார்-அமரர்களாயினர், சிறுவனாகி - புதல்வனாகி, ஆஅநான்பிறந்து - அஆயான்தோன்றி, அவத்தனாவாறு-பொய்யொழுக்க முடையேனாயினவாறு சாலநன்று.—

ஆனவாறுஎன்பதூஉறுதொகுத்தல் பெற்றது, இது அழகு செய்தவாஎன வருஞ் செய்யுளினுங் கொள்க. நான்முகன் புதல்வனென்பது மனுத் தொடக்கமானவரை. ஆவஎன்பதிரக்கத்தின்கண் குறிப்பு. (கூரு)

துன்னுதாள்வளஞ்சுமந்ததாழையிற்
பன்னுவான்குலைப்பதடியாயினேன்
என்னையென்னையேயீன்றுகாத்தவென்
அன்னையாரெனக்கழகுசெய்தவா.

(இ-ள்.) துன்னுதாள்வளஞ் சுமந்த தாழையில்-பொருந்திய தாளால் வளஞ்சுமந்த தென்னமரத்தில், பன்னுவான்குலைப்பதடியாயினேன்-சொல்லுமிடத்துச்சாலச்சிறந்தகுலையாகிய பதடியாயினேன், என்னை என்னையீன்று காத்த - யாது என்னைப்பெற்றெடுத்துக்காத்த, என் அன்னையாரெனக் கழகு செய்தவாறு-என்தாயெனக் கழகுசெய்தவாறு.—

தாளென்றது வேரினை. அடுக்கு அவலப்பொருளது. தாழையின் குலை அம்முதற்குப் பயன் செய்யாமையிற் குலைப்பதடியென்று உவமை முகத்தாற் கூறினார். அன்னையார் எனப்பன்மையாற்கூறியது இழித்தற்கு

இவ்வைந்து செய்யுளானும் பரதன் வசிட்டமுனிவனுக்குத் தன்துயரெடுத்துரைத்தமை யுணர்த்தப்பட்டது. (கருகு)

என்றுகூறிநொந்திடரின்மூழ்குமத்
துன்றுதாரவற்கிளையதோன்றலால்
அன்றுநேர்கடனமைவதாக்கினன்
நின்றுநான்மறைநெறிசெய்நீர்மையான்.

(இ-ள்.) என்றுகூறி - என்றுசொல்லி, நொந்திடரின்மூழ்கும் - வருந்தித் துயரின்முழுகும், அத்துன்றுதாரவற்கிளைய தோன்றலால் - பொருந்திய மாலையணிந்த அப்பரதனுக்கிளையவனால், நின்று நான்மறைநெறிசெய் நீர்மையான் - நான்குவேதமுறையினின்று செய்யுந்தன்மையனாகிய வசிட்டமுனிவன், அன்றுசெய்கடனமைவதாக்கினன்-அன்றுசெயற்பாலதாகிய கடனைப்பொருந்தச்செய்தனன்-எ-று.

உரைசெய்மன்னன் மற்றுன்னிலென்னில் யாரென்பது முதலியவற்றை என்றுகூறி என்றார். துன்றுதாரவன் என்பதுபரதனை. இளையதோன்றலென்பது சத்துருக்கனை. அன்றுசெய்கடனென்ப துரிமைக்கடனை. இதனன் வசிட்டமுனிவன்சத்துருக்கனால் உரிமைக்கடன்செய்வித்தமை யுணர்த்தப்பட்டது. (கருஎ)

இழையுமாரமுமிடையுமின்னிடக்
குழையுமாமலர்க்கொம்பனார்கடாம்
தழையின்முண்டகந்தழுவுகானிடை
மழையின்மஞ்ஞைபோலெரியின்மூழ்கினர்.

(இ-ள்.) இழையுமாரமு மின்னிட - அணிகலனும் ஆரமும்விளங்க, இடையுமின்னிட-இடையுமின்போற்றோன்ற, குழையுமாமலர்க் கொம்பனார்கடாம் - வருந்துகின்ற பெரிய மலர்க்கொம்பையொத்தவர், தழையில் முண்டகந்தழுவு கானிடை-தழையில்லாத தாமரைக் காட்டினிடை, மழையின் மஞ்ஞைபோ லெரியின் மூழ்கினர் - மழையின் மயிலேபோலத் தீயிடைமுழுகினர்.—

அறுபதினாயிரமாதர் தீயிடைமுழுகினமையை மஞ்ஞைபோ லெரியின் மூழ்கினமையும், அத்தீயின்மிகுதியைத் தழையின் முண்டகக்கானெனவு முவமித்தார். அத்தாமரைக்காட்டினுக்கு மிதனுக்கும் வேற்றுமை தோன்றத் தழையிலென்றடைகொடுத்துக் கூறினர். (கருஅ)

அங்கிநீரினுங்குளிரவம்புயத்
திங்கள்வாண்முகந்திருவிளங்குறச்
சங்கைதீர்ந்துதங்கணவர்பின்செலும்
நங்கைமார்புகுமுலகநண்ணினர்.

(இ-ள்.) அங்கிநீரினும் [illegible] - தீயானது நீரினுங் குளிர்ச்சியெய்த, அம்புயத்திங்கள் வாண்முகம் திருவிளங்குற - தாமரைபோலும் மதியம் போலு மொளியமைந்த முகம் அழகுவிளங்க, சங்கைதீர்ந்து தங்கண [illegible]ன்செலும் நங்கைமார்புகும் உலகநண்ணினர் - ஆசங்கையொழிந்து தங் கணவர்பின்சென்று எய்தும் மாதரார்புகுங்கதியை யடைந்தனர்-எ-று.

அவர் நாயகனிறந்துபட்டமைக்குத் தம்முயிரை யொருபொருளென மதியாது துறத்தலின் திங்கள்வாண்முகந் திருவிளங்குற என்றார். இவ்விரண்டு செய்யுளானும் அறுபதினாயிர மாதர் சககமன மடைந்தமையுணர்த்தப்பட்டது. (கருக)

அனையசெய்கையாலரசர்கோமகற்
கினையதன்மையாலியைவசெய்துபின்
மனையினெய்தினன்மரபின்வாழ்வினை
வினையினெய்துமோர்பிணியின்வேலையான்.

(இ-ள்.) அனையசெய்கையால் - அன்னசெய்கையான், அரசர்கோமகற்கு - அரசர்பெருமானுக்கு, இனையதன்மையால் - இன்னதன்மையால், இயைவசெய்து-செய்யத்தக்கனசெய்து முடித்து, மரபின்வாழ்வினை-மரபிற்குரிய வாழ்வை, வினையினெய்தும் - வினையானடையும், ஒரு பிணியின்வேலையான் - ஒருபிணியன்னதொழிலான், பின்மனையினெய்தினன் - பின்னர் மனையின்கணடைந்தனன்-எ-று.

வாழ்வினை வினையினெய்துமென்றார்அரசர் மாலையின்வந்தமையாற்பெறுது தாயதுசூழ்ச்சியாற் பெற்றமையின். இதனாற்பரதன் தன் மாளிகையடைந்தமை யுணர்த்தப்பட்டது. (கசய)

ஐந்துமைந்துநாளூழியாமென
மைந்தன்வெந்துயர்க்கடலின்வைகினன்
தந்தைதன்வயிற்றருமம்யாவையும்
முந்துநாலுளோர்முறையின்முற்றினன்.

(இ-ள்.) ஐந்துமைந்துநாள் ஊழியாமென-பத்துநாளு மூழிகாலமன்ன, மைந்தன் வெந்துயர்க்கடலின் வைகினன்-பரதன்கொடியதுன்பக் [illegible]ழ்ந்து, தந்தைதன்வயின்தருமம் யாவையும்-தந்தைபாற் செய்யத் [illegible]மனைத்தும், முந்துநூலுளோர் முறையின் முற்றினன் - வேதநூலோர்கூறிய முறைமையிற்செய்து முடித்தனன்-எ-று.

பிரேத சம்ஸ்காரஞ் செய்தமை யுள்ளிட்ட ஈரைந்து நாளுந் துன்பங்காக்குநாளாகலின் ஐந்துமைந்து நாளூழியாமென வெந்துயர்க்கடலின் வைகினனென்றார். தந்தை தன்வயிற்றருமம் யாவையுமென்பது தந்

தைமாட்டு அவ்வந்நாட்களிற் செயற்பாலவாங் கருமங்களை. மூர்த்த நூலுளோர்முறை என்பது வேதவிதியை. இதனாற்பரதன் பத்துநாளுந் துன்பங்காத்ததையுணர்த்தப்பட்டது. (கசக)

முற்றுமுற்றுவித்துதவிமுப்மைநூல்
சுற்றம்யாவையுந்தொடரத்தோன்றினான்
வெற்றிமாதவன்வினைமுடித்தவன்
கொற்றவேனெடுங்குமரற்கூடினான்.

(இ-ள்.)முற்றுமுற்றுவித்துதவி-முழுதுமுடிப்பித்து நடத்தி,முப்மைநூல் சுற்றம் யாவையும் தொடர - ஒரு புரிமூன்றாகிய நூலையணிந்த அந்தணரெல்லாருஞ் சூழ - வெற்றிமாதவன் வினைமுடித்தவன் - செய்த்தக்ககருமங்களைமுடித்த வெற்றிகொண்ட பெருந்தவனாகிய வசிட்டமுனிவன், தோன்றினான்-வந்தடைந்து, கொற்றவேல்நெடுங் குமரற்கூடினான் - வெற்றிவேலையுடைய நீண்ட வரசிளங்குமரனைச்சேர்ந்தனன்-எ-று.

மும்மைநூலென்றது மூன்றுபுரிநூலை. இதனை || 'மூன்றுபுரிநுண்ஞாண் புலராக்காழகம்' என்பதற்கு நச்சினார்க்கினியருரையானு முணர்க. இவ்வாறன்றி நூல் என்பதனை வேதநூலெனக்கொண்டு அதனைத் 'திரயி' என்பவாகலின் அதர்வணமொழிந்த ஏனையவற்றைத்தங்கொள்கையாகக் கொண்ட மூவகைப்பட்ட வேதியரெனினுமாம். வெற்றிமாதவனென்றார் காமம்வெகுளி மயக்கங்களை வென்றமையான். தோன்றினான் எச்சமுற்று. இதனான் வசிட்டமுனிவன்பரதனையெய்தினமைபுணர்த்தப்பட்டது. (கசஉ)

மன்னரின்றியேவையம்வைகருன்
தொன்மையன்றெனத்துணியுநெஞ்சினர்
அன்னமாநிலத்தறிஞர்தம்மொடும்
முன்னைமந்திரக்கிழவர்முந்தினார்.

(இ-ள்.)மன்னரின்றி-அரசரில்லாதிருப்பது, வையம்வைகருன் - உலகம் எக்காலும், தொன்மையன்றென - தொன்மைவழக்கன்றென, துணியுநெஞ்சினர் - துணியுமனமுடையராய், அன்னமாநிலத்தறிஞர் தம்மொடும் - அப்பெரியநிலவுலகத்தறிவாளரொடும், முன்னைமந்திரக்கிழவர் முந்தினார் - பழமையாகிய மந்திரச்சுற்றத்தவர் முற்பட்டடைந்தனர்-எ-று.

இறைகாக்குங்காவலின்மையேல் வையமுறை தடுமாறுமாகலின் உலகபாலருருவாயுலகங்காக்குமொருபெருவேந்தனுளனாதல்வேண்டுமென்பார் மன்னரின்றியேவையம்வைகருன்தொன்மையன்றெனத்துணியுநெஞ்சினரென்றார். அன்னமாநிலத்தென்பது கோசலநாட்டினை. முன்னைமந்திரக்கிழவரென்பது சுமந்திரனை யுள்ளிட்டவமைச்சரை. இருப்பது-தொழிற்பெயர். இதனானரசவையில் நகரமாந்தரு மமைச்சருமடைந்தமை யுணர்த்தப்பட்டது. ()

பள்ளியடைப்படலம்

முற்றிற்று

|| திருமுருகாற்றுப்படை வரி. கஅ.

கா-வது ஆற்றுப்படலம்.

இது அரசனைப் பள்ளிப்படுத்தபின்னர் கான்சென்ற அரசனாவானைக் கொடுவரப்பரதன் அவன்சென்றாங்கு போதரலின் ஆற்றுப்படல மென்னப் பட்டது. படலமுறைமையு மிதனானே விளங்கும்.

வரன்முறைதெரிந்துணர்மறையின்மாதவத்
தருமறைமுனிவனுமாண்டையானென
விரைவின்வந்தீண்டினர்விரகினெய்தினர்
பரதனைவணங்கினர்பரியுநெஞ்சினர்.

(இ-ள்) வரன்முறை தெரிந்துணர் - வரலாற்றுமுறைமையை யாராய்ந்துணர்ந்த, மறையின் - வேதநூற்கேள்வியையுடைய, மாதவத்தருமறை முனிவனும் - பெருந்தவத்தானாகிய வசிட்டமுனிவனும், ஆண்டையானென - அவ்வரசவையிலிருந்தானென்றறிந்து, பரியு நெஞ்சினார் - பரிகின்ற மனமுடையராய், விரைவின் வந்தீண்டினர் - விரைந்துவந்துகூடி, விரகினெய்தினர் - சூழ்ச்சியினடைந்து, பரதனை வணங்கினர் - பரதனை வணங்கினின்றனர்.—

மறையின்மாதவத்தென்றமையான் அருமறைமுனிவனென்பதுவாளா பெயராக நின்றது, அடியளந்தானென்புழிப்போல; வேதத்தினை வரலாற்று முறையினறிந்தானென்பதன்றி இட்சுவாகுமுதலிய மன்னரை யெல்லாம் அரசநெறியி னிறுத்தினானென்பதுபட நின்றதெனினுமமையும். ஆண்டையானென நெஞ்சினார், ஈண்டினர், எய்தினர், வணங்கினர் எனவினை முடிக்க. வணங்கினர் என்பதொழிந்தன எச்சமுற்று. (க)

மந்திரக்கிழவருநகரமாந்தரும்
தந்திரத்தலைவருந்தரணிபாலரும்
அந்தரமுனிவரோடறிஞர்யாவரும்
சுந்தரக்குரிசிலைமரபிற்சுற்றினார்.

(இ-ள்.) மந்திரக்கிழவரும் - மந்திரிமாரும், நகரமாந்தரும் - புரசனங்களும், தந்திரத் தலைவரும் - தானைத்தலைவரும், தரணிபாலரும் - பிறவரசரும், அந்தரமுனிவரோடு - அந்தரவாசிகளாகிய முனிவருடன், அறிஞர் யாவரும் - அறிவுடையார்யாவரும், சுந்தரக்குரிசிலை - பரதனை, மரபிற்சுற்றினார் - முறையிற் சூழ்ந்தனர்-எ-று.

ஸ்ரீராமனையல்லது வேறறியாத மனத்தானாகலின் சுந்தரக்குரிசிலென்றும், இன்னோர் பின்னரின்னோ ரிருக்கவேண்டுமென்பதுபடச் சூழ்ந்தமையின் மரபிற் சுற்றினாரென்றுங் கூறினார். இவ்விரண்டு செய்யுளானும் அமைச்சர் முதலானோர் பரதனை யடைந்தமை யுணர்த்தப்பட்டது. (உ)

சுற்றினரிருந்துழிச்சுமந்திரப்பெயர்
பொற்றடந்தேர்வலான்புல்லமையுள்ளத்தான்

கொற்றவற்குறுபொருள்குறித்தகொள்கையான்
முற்றுணர்முனிவனை முகத்துநோக்கினான்.

(இ - ள்.) சுற்றினர் இருந்தழி-இவ்வாறு சூழ்ந்திருக்கையில், சுமந்திரப்பெயர்-பொற்றடந்தேர்வலான் - அழகிய பெருந்தேர்செலுத்த வல்லானாகிய சுமந்திரனென்னும் பெயரினையுடையானும், புலமையுள்ளத்தான் - அறிவுமிக்கவுள்ளமுடையானுமாகிய, கொற்றவற்குறுபொருள் குறித்தகொள்கையான் - அரசனுக் குறுதிப்பொருளேயே நாடுங் கொள்கையுடையான், முற்றுணர் முனிவனை முகத்துநோக்கினான் -அனைத்துமறிந்த வசிட்டமுனிவனை முகத்தான் நோக்கிப்பார்த்தனன்-எ-று.

முகத்தினோக்கல் - இங்கிதமொழி; அதுபரதனை அரசனாதியென வேண்டலை. சுற்றினர் எச்சமுற்று. தேர்வலான், உள்ளத்தான், கொள்கையானென்பன சுமந்திரனென்னு மொருபொருள் மேனின்றன. மந்திரிக்கழகு அரசனுக்குறுதிப்பொருளுரைத்தலே யாகலின் கொற்றவற்குறுபொருள் குறித்த கொள்கையா னென்றதென்க. இதனாற் சுமந்திரன் வசிட்டமுனிவன்பாற் சங்கேதத்தா னுரைத்தமை யுணர்த்தப்பட்டது. (௫)

நோக்கினாற்சுமந்திரனுவலலுற்றதை
வாக்கினாலன்றியேயுணர்ந்தமாதவன்
காக்குதியுலகுநின்கடனதாமெனக்
கோக்குமரனுக்கிதுதெரியக்கூறுவான்.

(இ-ள்.) நோக்கினால் சுமந்திரன்நுவலலுற்றதை - நோக்கினாற் சுமந்திரன் குறித்தபொருளினை, வாக்கினாலன்றி யுணர்ந்த மாதவன் - சொல்லானன்றிச் சங்கேதத்தானறிந்த பெருந்தவமுடைய வசிட்டமுனிவன், கோக்குமரனுக்கு - அரசிளங்குமரனாகிய பரதனுக்கு, காக்குதியுலகு - உலகைக்காத்திடு, நின்கடனதாமென-அது நின்கடனே யாமென்று, இது தெரியக் கூறுவான்-இதனை யறியச்சொன்னான்.—

$ "மதிநுட்ப நூலோடுடையார்க்கதி நுட்பம்-யாவுளமுன்னிற்பவை" என்பதனான் நோக்கினானுவலலுற்றதை வாக்கினாலன்றியே யுணர்ந்தமாதவனென்றார். இது என்பது பின்வருவனவற்றை. தாய்பெற்றவரத்தானுலகையாள்வ துனக்கேமுறையென்பார் காக்குதியுலகு நின்கடனது என்றதென்க. (௬)

வேதியரருந்தவர்விருத்தர்வேந்தர்கள்
ஆதியர்நின்வயினடைந்தகாரியம்
நீதியுந்தருமமுநிறுவநீயது
கோதறுகுணத்தினாய்மனத்துட்கோடியால்.

(இ-ள்.) வேதியர் அருந்தவர் விருத்தர் வேந்தர்கள் ஆதியர்-அந்தணரும் அருமையாகிய தவமுடையாரு முதியாரும் அரசராவாரு முதலானோர் யாவரும், நின்வயினடைந்த காரியம் -நின்னிடத்தடைந்தபொருள், நீதியுந் தருமமுநிறுவ-நீதியையும் தருமத்தையு நிறுத்துதற்பொருட்டே, கோதறு

$ திருக்குறள்-செ. ௬௩௬.

குணத்தினாய்-குற்றமகன்ற குணத்தினை யுடையானே, நீஇதுமனத்துட் கோடி - நீஇதனைமனத்திற்கொள்.—

அரசனாவான் உலகினை நீதியினிறுத்தித் தருமத்தைப் பரிபாலிப்பது முறைமையாதலின் நீதியுந்தருமமுமிறுவ என்றார். (ரு)

தருமமென்றொருபொருடந்துநாட்டுதல்
அருமையென்பதுபெரிதறிதியையநீ
இருமையுந்தருவதற்கிசைவதீண்டிது
தெருண்மனத்தார்செயுஞ்செயலிதாகுமால்.

(இ-ள்.) தருமமென்ற ஒருபொருள்தந்து நாட்டுதல் - தருமமென்றுரைக்கப்படுமொருபொருளைத் தந்து நாட்டுவது, அருமையென்பது பெரிது அறிதிஐயநீ - ஐயனே நீ அருமையென மிகவுமறிவை, இருமையுந் தருவதற்கிசைவது ஈண்டிது-இது உலகிடை இம்மை மறுமையென்னுமிரண்டினையும் பயப்பதற்கிசைந்ததாம், தெருண்மனத்தார்செயும் செயலிது ஆகும்-தெருண்மனமுடையார் செய்கின்ற செய்கையாமிது.—

வாளின்மேல்வருமாதவ மெனமுற்கூறிப்போந்ததனைவற்புறுத்தற்குத் தருமமென்றொருபொருடந்து நாட்டுத - லருமையென்பதுபெரிதறிதி என்றார். தருமமென்றொரு பொருளென்றார் வைசேடிகர் பொருள்சாதி கருமமுதலியவற்றைப் பொருளென்ப வாகலின். இருமையென்ப தீண்டெண்ணின்கணின்றது. (சு)

வள்ளுறுவயிரவாளரசில்வையகம்
நள்ளுறுகதிரிலாப்பகலுநாளொடும்
தெள்ளுறுமதியிலாவிரவுந்தேவுடன்
உள்ளுறையுயிரிலாவுடலுமொக்குமே.

(இ-ள்.) வள்ளுறு வயிரவாள் அரசில்வையகம்-உறையிற்புகும் வயிரவாளையுடையஅரசனில்லாத உலகம், கதிரிலாநள்ளுறு பகலும் - ஞாயிறில்லாத நண்பகலும், நாளொடு தெள்ளுறுமதியிலாவிரவும் - விண்மீனொடுதெளிந்த மதியில்லாதவிரவும், தேவுடன் உள்ளுறை யுயிரிலாவுடலு மொக்கும் - இறைவனோடுள்ளே வதியு முயிரில்லாத வுயிருமொப்பாகும்.—

உயிருடனிறைவனு முடலின்கணுறைதல்பற்றி தேவொடும் உள்ளுறையுயிரிலாவுடலுமென்றார். நாளென்றது அசுவனிமுதலவாகிய நாண்மீனை. இது பல்பொருளுவமை. அரசுசொல்லானஃறிணை. கதிராகுபெயர். (எ)

தேவர்தம்முலகினுந்தீமைசெய்துழல்
மாவலியவுணர்கள்வைகுநாட்டினும்
எவ்வெவையுலகமென்றிசைக்குமன்னவை
காவல்செய்தலைவனாயின்மைகண்டிலம்.

(இ - ள்) தேவர் தம் உலகினும் - தேவர்நாட்டினிடத்தும், தீமை செய்துழல்-தீமைசெய்துடலையோம்பும், மாவலியவுணர்கள் வைகுநாட்டினும்-பெருவலிபடைத்த வரக்கர் வாழு நாட்டினிடத்தும், எவ்வெவையுலகமென்றிசைக்கும் - எவைஎவையுலகமெனக்கூறப்படும், அன்னவை-அவையனைத்தும், காவல்செய்தலைவரையின்மை கண்டிலம் - காவலை மேற்கொண்ட அரசரையில்லாமைபார்த்திலேம்.—எ-று.

தேவரும் அசுரருமொழிந்த வெவ்வுலகினு மரசனில்லதொரு சருமஞ்செய்யலாகாமையின் 'எவ்வெவையுலகமென்றிசைக்கு மன்னவை' யெனக்கூறினர். இந்திரன் முதலானோரும் அவ்வவ்வுலகங்களுடைமையா னென்க. எவையெவையென்பது, மரீஇயது. அடுக்குப்பன்மை. (அ)

முறைதெரிந்தொருவகைமுடியநோக்குறின்
மறையவன்வகுத்தனமண்ணில்வானிடை
நிறைபெருந்தன்மையினிற்பசெல்வன
இறைகளையில்லனயாவைகாண்கிலம்

(இ-ள்) முறைதெரிந்து - முறைமையையறிந்து, ஒருவகைமுடியநோக்குறின் - ஒருவாறுமுடியவாராயுமிடத்து, மறையவன் வகுத்தன - பிரமன் படைத்தனவாகிய, மண்ணில்வானிடை - மண்ணகத்தும் வானகத்தும், நிறைபெருந்தன்மையின் - நிறைந்த பெருந்தன்மையான், நிற்பசெல்வன—நிற்பனவுஞ்செல்வனவுமாகிய இருதிணையின்கண், இறைகளையில்லன யாவை காண்கிலம் - இறைகளையில்லாதன யாவைபார்த்திலேம்.—எ-று.

இறைகள் சொல்லானஃறிணை. வகுத்தன, நிற்ப, செல்வன வென்றிணைக்க. நாகருலகமென்பதுபலக்கணம். நிற்ப செல்வனவென்பதனை முற்கூறினும். நிற்பசெல்வன என்றார் அஃறிணையினுப், மரங்களினரசும், மலைகளின் மேவுரும், புட்களிற் கருளனும், நாகங்களினனந்தனும், விலங்குகளிற் கேசரியு மின்னோரன்னபிறவு மிருத்தலானென்க.

பூத்தநாண்மலரயனாதிப்புண்ணியர்
ஏத்துவான்புகழினரின்றுகாறுங்கூ
காத்தனர்பின்னொருகளைகணின்மையால்
நீத்தநீருடைகலநீரதாகுமால்

(இ-ள்.) பூத்தநாண்மலரயன் ஆதிபுண்ணியர் - தாமரையானாகிய பிரமனை யுள்ளிட்ட புண்ணியரும், ஏத்துவான்புகழினர் - ஏத்தப்படும் சிறந்த புகழினையுடையாருமாவார், இன்று காறும் கூகாத்தனர் - இற்றைவரையும் உலகைக்காத்துவந்தனர், பின் ஒரு களைகணின்மையால்-பின்வேறொருகளைகணில்லாமையால், நீத்த நீருடைகல நீரதாகும் - கடலிடையுடைந்துகவிழ்ந்த மரக்கலத்தன்மையொக்கும்.—எ-று.

பூத்தநாண்மலரயனென்பது பிரமனை. ஆதிப்புண்ணியர்என்பது,மனுத்தொடக்கமாயினோரை. கூவென்பது நீட்டல்விழிநீட்டல் பெற்றது. களை

கண் என்பது துன்பங்களையுமிடத்தை. அரசனில்வழிஉலகம் என்பது நீத்த நீருடைகல நீரதாகுமென் றுவமைமுகத்தாற் கூறினர். (கo)

உந்தையோவிறந்தனனும்முனீத்தனன்
வந்ததுமன்னை தன்வரத்தின்மைந்தநீ
அந்தமில்பேரரசளித்தியன்னது
சிந்தனையெமக்கெனத்தெரிந்துகூறினன்.

(இ - ள்) உந்தையோ இறந்தனன் - நின்றுதை இறந்துபட்டனன், உம்முனீத்தனன் - நின்முன்னோனகர் நீங்கினன், மைந்த - மகனே, அந்தமில் பேரரசு - முடிவில்லாத பெரிய அரசினை, அன்னை தன் வரத்தின் அளித்தி - தாய்வரத்தினற்புரத்தி. அன்னது சிந்தனை யெமக்கெனத் தெரிந்து கூறினன் - அது எமக்கெண்ணமெனத் தெரிந்துரைத்தனன்.—எ-று.

தந்தையுந் தம்முனுமின்மையான் நீயேகாக்கவேண்டுமென்பார் 'உந்தையோ இறந்தன னும்முனீத்தன' னெனக் கூறினர். தொன்றுதொட்டுவந்த அரசாகலின் அந்தமில் பேரரசென்றதென்க. அன்னது சிந்தனையென்றார் நீகடைமுறையாளவேண்டுமாகலின். (கக)

தஞ்சமிவ்வுலகநீதாங்குவாயெனச்
செஞ்செவேமுனிவரன்செப்பக்கேட்டலும்
நஞ்சினைநுகரெனநடுங்குவாரினும்
அஞ்சினனயர்ந்தனனருவிக்கண்ணினன்.

(இ-ள்.) இவ்வுலகம் தஞ்சம் நீ தாங்குவாயென - இவ்வுலகினைத் தஞ்சமெனக் கொண்டு காத்தியென்று, செஞ்செவேமுனிவரன் செப்பக்கேட்டலும் - மிகச் செவ்விதெனவசிட்டமுனிவன் கூறக்கேட்டலும், நஞ்சினை நுகரென நடுங்குவாரினும் - விடத்தையுண்ணென்றுரைப்ப நடுங்குகிற்பாரினும், அருவிக்கண்ணினன் - அருவிபொழியுங் கண்ணையுடையபரதன், அஞ்சினன் அயர்ந்தனன் - பயந்தயர்ந்து நின்றனன்.—எ-று.

செஞ்செவே யென்பது ஒருபொருட் பன்மொழி. அம்மொழி தன் செவிக்குவிடமொப்பதாகலி னதனையே யுவமையாகக் கூறினர். முனிவன் சொல்லக்கேட்டுப் பரதன்பொருமையின் 'நஞ்சினை நுகரெனநடுங்குவாரினு மஞ்சினனயர்ந்தனனென்ற'தென்க. அஞ்சினனென்பதெச்சமுற்று. இவ்வைந்துசெய்யுளானும் வசிட்டமுனிவன் பரதனுக்குலக மரசில்வழி நிலை பெறுதென்பதுணர்த்தப்பட்டது. (கஉ)

நடுங்கினனுத்தமோறிநாட்டமும்
இடுங்கினன்மகளிரினிரங்குனெஞ்சினன்
ஒடுங்கியவுயிரினனுணர்வுகைதரத்
தொடங்கினனரசவைக்குள்ளஞ்சொல்லுவான்.

(இ - ள்) நடுங்கினன் - நடுக்கமடைந்தனன், நாத்தடுமாறி-உரைதடுமாறி, நாட்டமும் இடுங்கினன் - கண்களும் குறுகினன், மகவிரினிரங்கு நெஞ்சினன் - மாதர்போலிரங்கு மனமுடையான், ஒடுங்கிய வுயிரினன் - ஒடுங்கிய வுயிருடையான், உணர்வுகைதர - அறிவுகைவர, அரசவைக்குள்ளம் சொல்லுவான்தொடங்கினன் - அரசவைக்குத் தன் கருத்தினைச்சொல்லத்தொடங்கினன்.—எ - று.

உள்ளமென்பதாகுபெயர். நாவென்பதுமது. பரதன்வருந்தலை 'மகவிரினிரங்கு நெஞ்சின' னென்றார், நாட்டமுமென்பது எதிரது தழீஇயது. சொல்லுவானென்பது வானீற்றெச்சம். (கரு)

மூன்றுலகினுக்குமோர்முதல்வனாய்முதல்
தோன்றினனிருக்கயான்மகுடஞ்சூடுதல்
சான்றவருரைசெயத்தருமமாதலால்
ஈன்றவள்செய்கையினிழுக்குண்டாகுமோ.

(இ-ள்.) மூன்றுலகினுக்குமோர் முதல்வனாய் - மும்மையுலகினுக்குமோர் முதல்வனாகி, முதல்தோன்றினன் இருக்க - முற்றோன்றிய எம்முன்னோன் உயிர்வாழ்ந்திருக்க,யான்மகுடம்சூடுதல்-யான்முடிபுனைந்துகோடல், சான்றவர் உரைசெயத்தருமம்-பெரியோர் சொலத்தக்கதருமமே, ஆதலால் ஈன்றவள் செய்கையின்-ஆகலின் அன்னை செய்கையினும், இழுக்குண்டாகுமோ-பிழையுளதாமோ.—எ - று.

'மூன்றுலகினுக்குமோர்முதல்வ' னென்பதுமும்மையுலகுக்கு மொருபரம்பரனென்பதை. 'சான்றவருரைசெயத்தரும' மென்பது வஞ்சப்புகழ்ச்சியணி முதற்றோன்றினனென்பது சிராமனை ஓகாரமெதிர்மறை. (கச)

அடைவருங்கொடுமையென்னன்னைசெய்கையை
நடைவருந்தன்மைநீர்நன்றிதென்றிரேல்
இடைவருங்காலமீண்டிரண்டுநீத்தது
கடைவருந்தீநெறிக்கலியினாட்சியோ

(இ-ள்.) அடைவரும் கொடுமை என் அன்னை செய்கையை-பொருந்துவதருமையாகிய கொடுந்தொழிலையுடைய என்தாய்செய்கையை, நடைவருந்தன்மைநீர்-நல்லொழுக்கமுடைய நீவிர், நன்றிதென்றிரேல்-நன்றென்றுமேற்கொள்விராயின், இடைவருங்கால மீண்டிரண்டுநீத்தது-இடைவருங்காலமிங்கிரண்டு மொழிந்ததாகிய, கடைவருந் தீநெறிக் கலியினாட்சியோ - இறுதியில்வருந் தீயவொழுக்கத்தையுடையகலியினாட்சியெனப்படுமோ.—

இடைவருங்காலமென்பது இருதயுகத்தின்பின்னதாகிய திரேதைதுவாபரயுகங்களை. நடைவருந்தன்மை நீர் கூறீ ரென்பதுதோன்ற நன்றிதென்றிரேலென்றார். நடையென்பதொழுக்கத்தை. பாவத்தொழில் மேற்கொண்டகாலமாதலிற் நடைவருந்தீநெறிக்காலமென்றதென்க. (கரு)

வேத்தவையிருந்தநீர்விமலனுந்தியிற்
பூத்தவன்முதலியபுவியுட்டோன்றினார்
மூத்தவரிருக்கவேமுறைமையாநிலங்
காத்தவருளரெனிற்காட்டிக்காண்டிரால்.

(இ-ள்.) வேத்தவையிருந்தநீர் - அரசவையிலிருந்த நீவிர், விமலனுந்தியிற் பூத்தவன்முதலிய புவியிற்றோன்றினோர் - இறைவன் உந்தியின்கண் தோன்றியோனைமுதலிய நிலத்திற்பிறந்தார், மூத்தவரிருக்க-மூத்தோரிருக்க, முறைமையான் - முறைமையினால், நிலங்காத்தவருளரெனின்-நிலத்தைக்காத்துவந்தோ ருளரென்னின், காட்டிக்காண்டிர் - எடுத்துக்காட்டிக் காண்மின்.—எ - று.

மூத்தோரிருக்க இளையோரரசுபுரிதல் இன்றென்பார் 'மூத்தவரிருக்க நிலங்காத்தவருளரெனிற் காட்டிக்காண்டி'ரென்றார். வேத்தவை எதுகை நோக்கி வலித்தல்பெற்றது. உந்தியிற்பூத்தவனென்பது பிரமனை. (கசு)

நன்னெறியென்னினுநானிந்நானிலத்
தின்னுயிர்ப்பொறைசுமந்திருந்துவாழ்கிலேன்
அன்னவன்றனைக்கொணர்ந்தலங்கன்மாமுடி
தொன்னெறிமுறைமையிற்சூட்டிக்காண்டிரால்.

(இ-ள்.) நன்னெறியென்னினும்-நன்னெறியேயாயினும், நான் இந்நானிலத்தின்னுயிர்ப்பொறை சுமந்திருந்து வாழ்கிலேன்-யான் இந்நானிலத்துயிர்ப்பாரஞ் சுமவாநின்று வாழேன், அன்னவன் றனைக்கொணர்ந்து—அவனைக்கொணர்ந்து, அலங்கன்மாமுடி - மாலையணிந்த பெரிய முடியினை, தொன்னெறிமுறைமையிற் சூட்டிக்காண்டிர்-பழையமுறைமையிற் சூட்டிக் காண்மின்'—எ - று.

நன்னெறியென்னினுமென்ற குறிப்பான்நன்னெறியன்மைவிளக்கிநின்றது. உயிர்ப்பொறையென்பதுடம்பினை. அன்னவனென்பதிறைவனை. தொன்னெறிமுறையென்பது தொன்றுதொட்டு முடிகவிக்குமுறையை. (கஎ)

அன்றெனிலவனொடுமரியகானிடை
நின்றினிதிருந்தவநெறியினூற்றுவென்
ஒன்றினியுரைக்கிலென்னுயிரைநீக்குவென்
என்றனனென்றபோதிருந்தபேரவை.

(இ-ள்.) அன்றெனின் - அல்லதெனின், அவனொடு மரியகானிடைநின்று - அவனுடனரிய காட்டிடைநின்று, இனிது இருந்தவ நெறியினூற்றுவென் - இனிமையாகப் பெருந்தவ வொழுக்கத்தினொழுகுவேன், ஒன்றுஇனியுரைக்கிலென்னுயிரை நீக்குவென் - இனி ஒன்றுகூறினெனென்னுயிரை நீக்குவேன், என்றனன் - என்றுகூறினன், என்றபோதிருந்த பேரவை - என்று கூறியபோதிருந்த பெரியசவை:—எ - று.

ஒன்றினியுரைத்தலாவது அரசு மூத்தவற்கென்பதொழிந்ததனை முற்றத்துறந்த முனிவருறையுளாகலின் அரியதாமென்றார். என்றபோதென்பது உயிர்நீங்குவேனென்பதனை. இவ்வாறுசெய்யுளானும் பரதன் இவ்வுலகாளத் தக்கானைக் கொணர்ந்து முடிசூட்டிக்காண்டிரென்பதுணர்த்தப்பட்டது. (கஅ)

ஆன்றபேரரசனுமிருப்பவையனும்
ஏன்றனன்மணிமுடியேந்தல்வேந்தநீ
வான்றொடர்திருவினைமறுத்திமன்னிளந்
தோன்றல்கள்யாருளர்நின்னிற்றோன்றினார்.

(இ - ள்) ஆன்றபேரரசனுமிருப்ப - அறிவுவிசாலித்த பெரிய அரசனுமிருப்ப, ஏந்தல்வேந்த - அரசர்க்கரசனே, மணிமுடி ஐயனுமேன்றனன் -மணி முடியை இறைவனு மிசைந்தனன், நீ வான்றொடர்திருவினைமறுத்தி- நீமிக்கபெருஞ்செல்வத்தைமறுக்கின்றனை, நின்னிற்றோன்றினார்-நின்போலத்தோன்றினார், மன்னிளந்தோன்றல்கள்யாருளர்-அரசிளங்குமரர்யாருளர்.—

ஆன்றபேரரசனென்பது தயரதனை. ஏந்தல்வேந்த வென்பது பரதனை. பேரரசாதலின் வான்றொடர் திருவென்றார். யாருளர் என்பதீண்டின்மைகுறித்துநின்றது- (கக)

அழியையுருட்டியுமறங்கள்போற்றியும்
வேள்வியையியற்றியும்வளர்க்கவேண்டுமோ
ஏழிரெண்டேழனுமுலகுமெஞ்சினும்
வாழியநின்புகழென்றுவாழ்த்தினார்.

(இ - ள்.) ஆழியையுருட்டியும் - சக்கரத்தை யுருட்டியும், அறங்கள் போற்றியும் - தருமங்களைவளர்த்தும், வேள்வியை யியற்றியும் - யாகங்களைச் செய்தும், வளர்க்கவேண்டுமோ - வளர்க்கவேண்டுவதோ, ஏழிரெண்டேழனுமுலகமெஞ்சினும்-பதினான்கு குலகங்குறையினும், நின்புகழ் வாழியவென்று வாழ்த்தினர் - நின்புகழ்வாழ்க வென்று வாழ்த்தினர். எ-று.

ஆழியைச் செலுத்தல், அறங்காத்தல், வேள்விசெயலென்பவற்றானெய்தும் புகழினும் நின்புகழ்சாலச்சிறந்ததென்பார் வாழிய நின்புகழென்றுவாழ்த்தினரென்றார். ஓகாரமெதிர்மறை. ஏழிரெண்டேழுலகென்றது பதினான்குலகங்களை. வாழிய என்பது வியங்கோண்முற்று. எஞ்சினுமென்பது எஞ்சாமையுணர நின்றது: இவ்விரண்டுசெய்யுளானும் அவையோர் பரதனுக்குக் கூறியதுணர்த்தப்பட்டது. (உ0)

குரிசிலுந்தம்பியைக் கூவிக்கொண்டலின்
முரசறைந்திந்நகர்முறைமைவேந்தனைத்
தருதுமீண்டென்பதுசாற்றித்தானையை
விரைவினிலெழுகெனவிளம்புவாயென்றான்.

(இ - ள்) குரிசிலும் - பரதனும், தம்பியை கூவி-சத்துருக்கனைக்கூவியழைத்து, கொண்டலின்-மேகமுழக்கம்போல, முரசறைந்து - முரசமார்க்கச்செய்து, இந்நகர் முறைமைவேந்தனை - இந்நகருக்கு முறைமையரசனை, ஈண்டுதருதும்-இங்கேகொணர்வேம், என்பது சாற்றி-என்பதனையறிவித்து, விரைவினில் தானையை யெழுக என - விரைவாய்ச் சேனை புறப்படுகவென, விளம்புவாயென்றான் - சொல்லுவையென்றனன்:—எ-று.

தருதும் தும்மீற்றுத்தன்மை. குரிசிலுமென்பது உயர்வுசிறப்பு. அரசர்மாலையில் வந்துதோன்றினமையின் இந்நகர் முறைமைவேந்தனை என்றார். இதினால் பரதன் தம்பியைச் சேனையெழுகவென்பறிவியென்பது துணர்த்தப்பட்டது. (உக)

நல்லவனுரைசெயநம்பிகூறலும்
அல்லலிலழுங்கியவன்பின்மாநகர்
ஒல்லெனவிரைத்ததாலுயிரில்யாக்கையைச்
சொல்லெனுமமிர்தினாற்றுளித்ததென்னவே.

(இ - ள்) நல்லவன் உரைசெய - பரதன்சொல்ல, நம்பிகூறலும் - சத்துருக்கன் கூறலும், அல்லலில் அழுங்கிய - துன்பத்தழுந்திய, உயிரில் யாக்கையை - உயிரில்லாத உடம்பினை, சொல்லெனும் அமிர்தினால்-சொல்லெனப்படுமமிழ்தத்தால், துளித்ததென்ன—துளித்ததுபோல, அன்பின்-அன்பினையுடைய, மாநகர் - அயோத்திநகரம், ஒல்லென இரைத்தது — ஒல்லென்றோலிட்டது:—எ - று.

சிராமனீக்கத்தா னுயிரில்யாக்கை யென்றும், நம்பி கூறலான் உயிர் பெற்றாற்போறலான் சொல்லெனு மமிர்தினாலொல்லென விரைத்ததென்றுங்கூறினார். அமுது-சொற்குவமை. துளித்தது - வினைப்பெயர். (உஉ)

அவித்தவைம்புலத்தவராதியாயுள
புவித்தலையுயிரெலாமிராமன்பொன்முடி
கவிக்குமென்றுரைக்கவேகளித்ததாலது
செவிப்புலநுகர்வதோர்தெய்வத்தேன்கொலாம்.

(இ - ள்.) அவித்த ஐம்புலத்தவராதியாயுள - ஐம்புலன்களை நீத்தார் முதலானோராகிய, புவித்தலை யுயிரெலாம் - நிலத்திடை யுயிரனைத்தும், இராமன் பொன்முடி கவிக்கும் - சிராமன் அழகியமுடி சூடிக்கொள்ளும், என்றுரைக்கவே களித்தது - என்றுசொல்லவே மகிழ்ந்தது. அது செவிப்புலன் நுகர்வதோர் தெய்வத்தேன்கொலாம் - அதுகாதாகிய புலன் உண்பதாகியதொரு தெய்வத்தன்மைபொருந்திய தேன்போலாம்:—

ஐம்புலத் தாறவிந்தாரைஅவித்த ஐம்புலத்தவரென்றார். வாயானுகருந் தேனினுஞ் செவிவாய்த்தேக்கலின் தெய்வத்தேன்கொலாமென்றார். நீத்தவரென்பது துறவறவொழுக்கி லொழுகுபவரை. (உந)

படுமுரசறைந்தனர்பரதன்றம்முனைக்
கொடிநகர்தருமவற்கொணரச்சேனையை
முடுகுகவென்றசொன்மூரிமாநகர்
உடுபதிவேலையினுதயம்போன்றதே.

(இ-ள்.) படுமுரசறைந்தனர் - அடிபடு முரசமறைந்தனர், பரதன் தம்முனைகொடிநகர்தரும் — பரதன் தன் முன்னோனைக் கொடிகளையுடைய நகரிற்கொணரும், அவற்கொணர சேனையைமுடுகுக - அவனைக்கொணரும்படி சேனைகளைமுடுகுக, என்றசொல் - என்றுசொல்லப்பட்ட மொழி, மூரி மாநகர் - மிகப்பெரிய நகரம், உடுபதி வேலையினுதயம்போன்றது - சந்திரன் கடலிலுதயஞ்செய்ததொத்தது.—எ-று.

சேனையினை முடுகுகவென்றசொற்கேட்ட கிளர்ச்சியை 'உடுபதிவேலையினுதயம்போன்ற' தென்றுவமித்தார். எழுநகரங்களுட்சிறந்தமையின் மூரிமாநகரென்றதென்க. (உ௪)

எழுந்ததுபெரும்படையேழுவேலையின்
மொழிந்தபேரூழியின்முழங்கிமுந்தெழ
அழிந்ததுகேகயன்மடந்தையாசைபோய்க்
கழிந்ததுதுயர்நெடுங்காதறூண்டவே.

(இ-ள்.) எழுவேலையின் - எழுகடல்போல, மொழிந்தபேரூழியின் முழங்கி முந்தெழ — சொல்லப்பட்டபெரிய ஊழிகாலம்போன் முற்பட்டெழ, பெரும்படைஎழுந்தது - பெருஞ்சேனையெழுந்தது, கேகயன்மடந்தையாசை - கைகேகியினதாசை, அழிந்தது — கெட்டது, துயர்நெடுங்காதல் தூண்டபோய்கழிந்தது - துயரமாகிய நீண்டகாதல் தூண்டுதலால் போய்ச் சென்றது.—எ-று.

சேனையைக்கடலாகவும், அதுஎழுந்தமையை ஊழியாகவுமுவமித்தார், காதலான் ஆயதுயரமாதலின் துயர்நெடுங்காதலென்றதென்க. (உ௫)

பண்ணினபகடுதேர்புரவிபண்டியும்
மண்ணினைமறைத்தனவளர்ந்தமாக்கொடி
விண்ணினைமறைத்தனவிரிந்தமாத்துகள்
கண்ணினைமறைத்தனகமலத்தோனையே.

(இ-ள்.) பண்ணினபகடு — அலங்கரிக்கப்பட்ட யானையும், தேர்புரவி பண்டியும் - தேரும் குதிரையும்பண்டிகளும், மண்ணினைமறைத்தன - நிலத்தைமறைத்தன, வளர்ந்தமாகொடி விண்ணினைமறைத்தன - ஓங்கியபெருங்கொடிகள் ஆகாயத்தைமறைத்தன, விரிந்தமாத்துகள் கமலத்தோனைகண்ணினைமறைத்தன - விரிந்த பெருந்தூசுகள் பிரமனைக்கண்ணை மறைத்தன.—

விரிந்தமாத்துகள் விண்ணினை மறைத்தமை கமலத்தோனை, உயர்வுநவிற்சி, கமலத்தோனையுமென்ற சிறப்பும்மை தொகுத்தல் பெற்றது.

ஈசனிவ்வுலகினையழிக்குநாளெழும்
ஓசையினிமிர்ந்துளதொல்லென்பேரொலி
காசையில்கரியவற்காணவூண்டெழும்
ஆசையினிமிர்ந்ததவ்வணிகராசியே.

(இ-ள்.) ஈசன் இவ்வுலகினையழிக்குநாள் - உருத்திரமூர்த்தி இவ்வுலகத்தைச்சங்கரிக்குங் காலத்தில். எழும்ஓசையின் - எழுமொலியினும், ஒல்லென்பேரொலி — ஒல்லென்னும்பேரோசை, நிமிர்ந்தது - ஓங்கியது, காசில்கரியவற்காண - குற்றமில்லாத கரியகோலத்தனாகிய ஸ்ரீராமனைக்காணும்படி. மூண்டெழுமாசையின் - மூண்டெழாநின்றஆசையினும், அவ்வணிகராசி நிமிர்ந்தது - சேனைக்கூட்டம் ஓங்கியது:— எ — று

சங்காரகிருத்திய நடத்துகின்றபொழுது பேரோசைமிகுதலான் அவ்வணிகராசியொலிக்குவமை கூறினார். ஈசனென்றது காலருத்திரனென்பாருமுளர்; சங்காரகாரணனுக்குப் பொருந்தாமையான துபொருந்தாமையுணர்க. இவ்வாறுசெய்யுளானும் காலாட்களெழுந்தமையுணர்த்தப்பட்டது. (உ௯)

படிபொருதிருநகர்துறந்துபன்மரம்
செடியொடுகொடுவனநோக்கிச்சீதையாம்
கொடியொடுநடந்தவக்கொண்டலாமெனப்
பிடியொடுநடந்தனபெருங்கைவேழமே.

(இ-ள்.) படிபொருதிருநகர்துறந்து - அரசொடுநகரநீங்கி, பன்மரம்செடியொடுகொடுவனநோக்கி - செடிகளோடுபல மரங்களையுடைய கொடியகாட்டினை நாடி, சீதையாங்கொடியொடு நடந்தவக்கொண்டலாமென - சனகியாகிய கொடிபோல்வாளொடுஞ்சென்ற அம்மேகம் போல, பெருங்கைவேழம் - பெருங்கையையுடைய களிறுகள், பிடியொடுநடந்தன - பிடியானையுடன் சென்றன:— எ - று.

வேழமும்பிடியுஞ் ஸ்ரீராமனுக்குஞ் சனகிக்கு நடையுவமம். கொடி-ஆகுபெயர்.

சேற்றிளமரைமலர்சிறந்தவாமெனக்
காற்றளம்பொலிதருகன்னிமாரொடும்
ஏற்றிளம்பிடிக்குலமிகலிலின்னடை
தோற்றிளமகளிரைச்சுமப்பபோன்றவே.

(இ-ள்.) சேற்றிளமரைமலர் சிறந்தவாமென - சேற்றிற்பிறந்த இளந்தாமரைமலரினுஞ் சிறந்தனவென்றுகூற, காலதளம்பொலிதரு கன்னிமாரொடும் - கான்மலர் விளங்குமாதரொடும், ஏற்றிளம் பிடிக்குலம் - பொருந்திய இளம்பிடிக்கூட்டம், இகலில் - இகலும்பொழுதில், இன்னடைதோற்று - இனிமையாகியநடையில் தோல்வியடைந்து, இளமகளிரை சுமப்பபோன்று - இளம்பெண்களைச் சுமப்பனவொத்திருந்தன:— எ - று.

பங்கயமென்னும் பெயர்பற்றிச் சேயுஞ்சென்றமை. இது தன்பெற்ருர் குறிப்பேற்றம். இவ்விரண்டு செய்யுளானும் களிறும்பிடியும் சென்றமை யுணர்த்தப்பட்டது. (௨௯)

வேதனைவெயிற்கதிர் தணிக்கமென்மழைச்
சீதநீர்கொடுநெடுங்கொடியுஞ்சென்றன
கோதைவெஞ்சிலையவன்கோலங்காண்கிலா
மாதரினுடங்குவவரம்பில்கோடியே.

(இ - ள்.) வேதனை வெயிர்கதிர் தணிக்க-வேதனையைத்தரும் ஞாயிற்றின் வெப்பந்தணிப்ப, மென்மழை சித நீர்கொடு—மென்மையாகிய குளிர்ந்தமழை நீர்கொண்டு, நெடுங்கொடியுஞ்சென்றன — நீண்ட கொடிகளுஞ் சென்றனவாகி, கோதைவெஞ் சிலையவன் கோலம் காண்கிலா-மாலையணிந்த கொடிய வில்லாளியாகிய சிராமனது கோலங்காணப்பெருத, மாதரின் வரம்பிலகோடி நுடங்குவ-மாதரேபோலஅளவில்லாத கோடி துவண்டன. எ-று.

கோதை எனற்குக் குறையெனக்கொண்டுரைப்பினுமமையும். சென்றன வினையெச்சமுற்று. சிராமன்முடிபுனைகோலங் காணப்பெருது வருந்தினுர் நுடங்குதலைக் கொடிகட் குவமை கூறினுர். இதனுற் கொடிகள்சென்றமை யுணர்த்தப்பட்டது. (௩0)

வெண்மதிமீச்செலமேகமூர்ந்தென
அண்ணல்வெங்கதிரவனளவின்மூர்த்தியாய்
மண்ணிடையிழிந்தொருவழிக்கொண்டாலென
எண்ணருமன்னவர்களிற்றினேகினுர்.

(இ - ள்.) வெண்மதி மீச்செல—வெள்ளியசந்திரவட்டக்குடை கிழல்செய்துசெல்ல, மேகமூர்ந்தென-மேகத்தையூர்ந்ததுபோல, அண்ணல் வெங்கதிரவன்—பெருமையுடைய கொடிய கிரணத்தையுடைய ஞாயிறு, அளவில் மூர்த்தியாய்-பலவடிவங்களுடன், மண்ணிடையிழிந்து - நிலத்திடையிழிந்து, ஒரு வழி கொண்டாலென—ஒருவழிக்கொண்டதொப்ப, எண்ணருமன்னவர் - எண்ணிலாத அரசர், களிற்றினேகினுர் - களிற்றிலேறிச் சென்றனர். எ-று.

வெண்மதி, மேசமூர்தலு முருவகம். யானையேறிச்சென்ற சிராமனை யுணர்த்திற்று. "சோலைமிசைத்தோன்று மதியம்போல் யானைத்தலைமிசைகொண்ட்குடையர்" என்றுராகலின் எண்ணருமன்னவர் களிற்றினேகினுரென்றுர். இதுவுமது. இதனுன் அரசர் களிறூர்ந்து சென்றமை யுணர்த்தப்பட்டது. (௩௧)

தேர்மிசைச்சென்றதோர்சிந்துசெம்முகக்
கார்மிசைக்கழிந்ததார்கலியோர்கார்க்கடல்
ஏர்மிசையிவுளிமேலேகிற்றெங்கணும்
பார்மிசைப்படர்ந்ததுப்தாதிப்பெளவமே.

(இ - ள்.) தேர்மிசைச்சென்றதோர் சிந்து - தேர்மேற்சென்றதொரு கடல், செம்முகக்கார்மிசைக்கழிந்தது ஆர்கலி — செம்மையாகிய முகத்தை யுடைய கரியமேகம்போல்வதாகிய யானையேறிச்சென்றது ஒரு கடல், ஓர் கடல்-ஒரு பெரிய கடல், ஏர்மிசை யிவுளிமேலேகிற்று-அழகமைந்த குதிரைமேற்சென்றது, பதாதிப்பௌவம்-காலாட்கடல், எங்கணும்பார் மிசைப் படர்ந்தது-நிலத்திடை யெவ்விடத்தும் பரவியது.—எ - று.

ஆர்கலி — அன்மொழித்தொகை. செம்முகம் என்றது புகர்முகத்தை. கார் ஆகுபெயராய் யானையை யுணர்த்திற்று. உம்மை முற்று. இது பரியாய வணி. இதனுன் நாற் படைசென்றமை யுணர்த்தப்பட்டது. (௬௨)

தாரையுஞ்சங்கமுந்தாளங்கொம்பொடு
வார்மிசைப்பம்பையுந்துடியுமற்றவும்
பேரியுமியம்பலசென்றபேதைமைப்
பூரியர்குழாத்திடையறிஞர்போலவே.

(இ - ள்.) தாரையும் சங்கமும் தாளம் கொம்பொடு - தாரை சங்கு தாளம் ஊதுகொம்புடன், வார்மிசை பம்பையும் துடியுமற்றவும் - வாரணிந்த பம்பை யுடுக்கையும் பிறவும், பேரியுமியம்பல-பேரிகையுமாகிய பலவாத்தியங்களு மொலிக்கவில்லை, பேதைமை பூரியர்குழாத்திடையறிஞர்போலச் சென்ற - அறியாமையையுடைய மூடர்கூட்டத்தறிவுடையார்போல சென்றன.—எ-று.

அறிஞர்கூட்டத் தறிவிலார் வாயடங்குதல்போல் அவை யொலிபடாமற் சேறலி னங்ஙன முவமைகூறினர். சென்ற என்பது சாரியை பெறாத பலவறிசொல். பல்லியமுழங்காமை யுணர்த்தப்பட்டது. (௬௩)

தாவருநாண்முதலணியலாற்றகை
மேவருகலங்களைவெறுத்தமேனியர்
தேவருமருள்கொளத்தெரியுங்காட்சியர்
பூவுதிர்கொம்பெனமகளிர்போயினர்.

(இ - ள்.) தாவரு நாண்முதலணியலால்-கேடில்லாதநாண் முதலியவாகிய வணிகளல்லது, தகைமேவரு கலங்களை வெறுத்த மேனியர்-பெருந்தகைமை மேவுதலரிய அணிகலங்கிய மேனியையுடையராயும், தேவருமருள்கொளதெரிந்த காட்சியர் - தேவரு மயசகங்கொள்ளத் தெரிந்ததோற்றத்தராய், மகளிர் பூவுதிர் கொம்பெனப்போயினர்-மாதர் மலர்கள் உதிர்ந்த கொம்புபோற் சென்றனர். எ-று.

உயிர்க்குறுதிபயப்பதாய் அதனை நீக்காததாயிருத்தலின் 'தாவருநாண் முதலணியலா' லென்றதென்க, நாணமட மச்சம பயிர்ப் பென்னு மாதர்க்குரிய குணங்களின் நாண் சிறந்ததையி னதனையே விதந்தமை காண்க.

இசனை என்பாலோவா நாண் மடமச்ச மிவையேதம், பூண் பாலாகக் கொள்ளுநர்' என்புழி விரித்தாமாண்டுக்காண்க. சிரோமணீக்கத்தானும், அரசனிறந்து பட்டமையானும் மாதர் கலனணிமுதல நீத்தமை பூவுதிர் கொம்பென் றுவமித்தார். (௬௪)

அதிர்கடல்வையகமனைத்துங்காத்தவன்
விதிவருந்தனிக்குடைமீதிலாப்படை
பொதிபலகவிகைமீன்பூத்ததாகினும்
கதிர்மதிநீங்கியகங்குல்போன்றதே.

(இ - ள்.) அதிர் கடல் வையகம் அனைத்தும் காத்தவன்-ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த உலகமுழுதுங் காத்த அரசன், விதிவருந் தனிக்குடைமீதிலாப் படை - விதிக்கவரு மொப்பற்ற கவிகை நிழல்செய்யாத சேனை, பொதிபல கவிகைமீன் பூத்ததாகினும்-பொதிந்த பல குடையாகிய விண்மீன் பூத்ததேனும், கதிர்மதி நீங்கிய கங்குல் போன்றது-ஒளியுள்ள மதியநீங்கிய இரவினை யொத்திருந்தது.—எ-று.

அரசன் கவிகை மதியினுக்கும் ஏனையரசர் கவிகை விண்மீனுக்கு முவமை கூறினார். அரசன் இறந்து பட்டமை யவன்கருத்து கவிகை நிழறருமையின் கதிர்மதி நீங்கிய கங்குல்போன்ற தென்றார். (௬௫)

செல்லியசெலவினாற்சிறியதிக்கெனச்
சொல்லியசேனையைச்சுமந்ததேயெனில்
ஒல்லியல்வேலைநீருடுத்தபாரையோர்
மெல்லியளென்றவர்மெலியரேகொலாம்.

(இ - ள்.) செல்லிய செலவினால் சிறிய திக்கென-போகின்ற போக்கினால் திசையும் சிறிதென்னும்படி, சொல்லிய சேனையைச் சுமந்ததேயெனின் - எடுத்துச் சொல்லிய படையைத் தாங்கியதேயென்னின், ஒல்லியல் வேலை நீர் உடுத்தபாரை-ஒல்லெனு மோசையையுடைய கடலாகிய வாடையை யுடுத்த நிலத்தை, ஓர் மெல்லிய ளென்றவர் மெலியரேகொலாம் - ஒருமென்மையாகிய தன்மையை யுடையளெனக் கூறிப்போந்தவர் அறிவிலிகள் போலாம்.—எ-று.

பல்வகைச்சேனையுந் தாங்குதலான் 'மெல்லிய ளெனப்படா தெனப்புகழ்ந்தமையென்க. செல்லிய செலவென்புழி செல்லிய என்னும் பெயரெச்சம் செலவென்னும் செயற் பெயர் கொண்டது. ஏகாரந் தேற்றப் பொருளது. இது கவிக்கூற்று. (௬௬)

தங்குசெஞ்சாந்தகில்கலவைசார்கில
குங்குமங்கொட்டிலகோவைமுத்தில
பொங்கிளங்கொங்கைகள்புதுமைவேறில
தெங்கிளநீரெனத்தெரிந்தகாட்சியே.

(இ - ள்.) தங்குசெஞ் சாந்தகில் கலவைசார்கில - பூசப்பட்ட செம்மையாகிய சாந்து அகில் கலவை இவை சாராதன, குங்குமம் சொட்டில - குங்குமமணிந்தில, கோவைமுத்தில - முத்துவடமணியப் பெற்றில, பொங்கிளங் கொங்கைகள் — இளமை மிக்க தனங்கள், புதுமைவேறில - அலங்கார மமையப் பெருமையான், தெங்கிள நீரெனத் தெரிந்தகாட்சி - தெங்கினிள நீரேயாமெனத் தெரிந்த தோற்றமுடையன.—எ-று.

தெங்கிளநீர் சாந்தகில் முதலியன புனையப்பெருமையின் பூவுதிர்கொம்பெனப் பொலிந்த தோற்றமுடைய மகளிர் கொங்கை யொப்பனை யெய்தப்பெருமையி னன்ன வாயின. (கஎ)

இன்றுணையவர்முலையெழுதுசாந்தின
மன்றலந்தாரினுமறைந்திலாமையால்
துன்றிளங்கொடிமுகிற்றூசுநீங்கிய
குன்றெனப்பொலிந்தனகுவவுத்தோள்களே.

(இ - ள்.) இன்துணையவர் முலையெழுது சாந்தின மன்றலந்தாரினு மறைந்திலாமையால் — இனிமையாகிய துணைவியராகிய மகளிர்தனம் எழுதும் சாந்தினத்தாலும் மணங் கமழ்கின்ற மலர் மாலையாலு மறையப்பெருமையான், குவவுதோட்கள் - குவிதலையுடையதோள்கள், துன்றிளங்கொடி முகில் தூசு நீங்கிய குன்றெனப் பொலிந்தன - பொருந்திய இளங்கொடி மேகமாகிய தூசு நீங்கப் பெற்ற மலையாமென விளங்கின.—எ-று.

இல்லற நடத்தற் கமைந்த துணைவியராகலான் மகளிரை இன்றுணையவரென விசேடித்தார். சாந்து தார் முதலியவற்று ணையப் பெருமையான் துன்றிளங்கொடி முகிற்றூசுநீங்கிய குன்றெனப் பொலிந்தன குவவு தோளென்றார். (கஅ)

நறையறுகோதையர்நாட்செய்கோலத்தின்
றுறையறவஞ்சனந்துறந்தநாட்டங்கள்
குறையறநிகர்த்தனகொற்றமுற்றுவான்
கறையறக்கழுவியகாலவேலையே.

(இ-ள்.) நறையறு கோதையர்-தேனீங்கிய மாலையையுடைய மகளிர், நாட்செய்கோலத்தின்றுறையற-நாடோறுஞ்செய்யும் ஒப்பனை வகைமை நீங்க, அஞ்சனந்துறந்த நாட்டங்கள் - மைதீட்டப் பெறுத கண்கள், கொற்ற முற்றுவான்-வெற்றியடையப் பெற்றுளொருவன், கறையறக்கழுவிய காலவேலை-கறைநீங்கப் பெற்றகாலனை யொத்த வேலினை, குறையற நிகர்த்தன-குறையொழிய வொத்திருந்தன.—எ-று.

நாட்செய்கோல மொழியப் பெற்றமையானும் புதுமலர்மாலைபுனையாமையானும், நறையறு கோதையர் நாட்செய்கோலத்தின் றுறையற வென்றும், கண்கள் மையுண்ணப் பெருமையான் கறையறக்கழுவியவேலை நிகர்த்

தனவென்றுங் கூறினர். காலன்வேலென்பன உயர்திணைப் பெயராதலின், னகாவீறு கெட்டது. (௩௯)

விரிமணிமேகலைவிரவியார்க்கில
தெரிவையரல்குறுரொலியிறேரெனப்
பரிபுரமார்க்கிலாப்பவளச்சீறடி
அரியினமார்க்கிலாக்கமலமன்னவே.

(இ-ள்) தெரிவையரல்குல்தார் ஒலியில் தேரென - மாதர் அல்குல் தாரொலி நீங்கிய தேரென, விரிமணிமேகலை விரவியார்க்கில - விரிந்த மணிகளாலாகியமேகலை யொலித்தில, பவளச்சீறடி பரிபுரமார்க்கில-பவளம் போன்ற சிறியவடி சிலம்பணிந்தில வாதலின், அரியினமார்க்கிலாக் கமல மன்ன-வண்டின மொலிக்கப் பெறாத தாமரைமலரை யொத்தன — எ-று.

பவளமென்றது வடமொழிச்சிதைவு. பயணமென்புழிப்போல. சீறடிப் பதுமத்துப் பரிபுர மொலிக்கப் பெறுமையான் அரியினமார்க்கிலாக் கமல மன்னவென் றுவமை முகத்தாற்கூறினர். அடிச் சிறுமையியல்பாகலிற் சீறடி யென்றதென்க. (௪0)

மல்கியகேகயன்மடந்தைவாசகம்
நல்கியதரிவையர்நடுவிற்கேகொலாம்
புல்கியமலர்வடம்பூண்கிலாமையால்
ஒல்கியவொருவகைபொறையுயிர்க்கவே.

(இ-ள்) கேகயன் மடந்தை மல்கியவாசகம்-கைகேசி நிரப்பிய மொழி, புல்கிய மலர்வடம்பூண்கிலாமையால்-பொருந்தியமலரையும் வடங்களையும் பூண்டுகொள்ளாமையான், ஒல்கிய வொருவகை பொறையுயிர்க்க-சுருங்கிய வொருவகையான பாரமுயிர்க்க, நல்கிய தரிவையர் நடுவிற்கே கொலாம் - அளித்தது மாதரார் இடைக்கே கொல.—எ-று.

அணிகலன் முதலியவணியாதிருத்தலின் நடுவிற்கொலாம், வடம்பூண் கிலாமையால் வொல்கிய ஒருவகை பொறையுயிர்க்க என்றார். இது கவிக் கூற்று. (௪௧)

கோமகன்பிரிதலிற்கோலநீத்துள
தாமரைச்செல்வியுந்தவத்தைமேவினள்
காமனுமருந்துயர்க்கடலின்மூழ்கினன்
ஆமெனநிகழ்ந்ததவ்வளவில்சேனையே.

(இ-ள்.) கோமகன் பிரிதலின் கோலநீத்துள - இறைவன் பிரிதலா னொப்பனை நீக்கிய, தாமரைச்செல்வியும்—தாமரையாளும், தவத்தை மேவினள்-தவஞ்செயப்புக்கனள், காமனு மருந்துயர்க்கடலின் மூழ்கினன் - மன்மதனு மிக்க துன்பக் கடலி லழுந்தினனுகும, ஆமென அவ்வளவில் சேனை நிகழ்ந்தது-ஆம் என்றவ்வளவிறந்த சேனையறிவித்தது.—எ-று.

இறைவன் பிரிவான் அரசிலாமையான் தாமரைச்சொவியுந் தவத்தை மேவினளென்றும், மாதராடவர்காமநுகர்ச்சி யெய்தப்பெறாமையான் காமனுமருந்துயர்க் கடலின் மூழ்கினனென்றும், இதனை அச்சேனையினிலைமை யறிவித்தமையான் அவ்வளவில் சேனை நிகழ்ந்ததென்றுங் கூறினர். (௪௨)

மண்ணையும்வானையும்வயங்குதிக்கையும்
உண்ணியநிமிர்கடலொக்குமென்பதென்
கண்ணினுமனத்தினுங்கமலத்தண்ணறன்
எண்ணினுநெடிதவனெழுந்தசேனையே.

(இ-ள்.) கமலத்தண்ணல் தன் கண்ணினும் மனத்தினும் எண்ணினும் நெடிதவனெழுந்தசேனை-பிரமனது கண்ணினும் மனத்தினும் கருத்தினு நீண்டது அங்கெழுந்த படையெனின், மண்ணையும் வானையும் வயங்குதிக்கையும் உண்ணிய நிமிர்கடலொக்கு மென்பதென்-நிலத்தையும் வானையும் திசையினையும் உண்ணவோங்கிய கடலையு நிகர்க்குமென்ப தியாது. எ-று.

அகத்திய முனிவராலொருகா லுண்ணப்பட்ட தாகலின் உண்ணிய நிமிர்கடலென்றார். படையினளவு கூறலாகாதென்பதாம். (௪௩)

அலைநெடும்புனலறக்குடித்தலாலகம்
நிலைபெறநிலைநெறிநிறுத்தலானெடு
மலைகளைமண்ணுறவழுத்தலாற்றமிழ்த்
தலைவனைநிகர்த்ததத்தயங்குதானையே.

(இ-ள்) அலைநெடும் புனலறக் குடித்தலால்-அலையெறிகின்ற நெடியபுனலினை முழுதுண்டமையானும், அகம் நிலைபெற நிலைநெறி நிறுத்தலால்-உள்ளிடத்தை நிலைபெற நிலையின்கணிறுத்தலானும், நெடுமலைகளை மண்ணுற வழுத்தலால்-நீண்டமலைகளை மண்ணிற்பொருந்த வழுத்தலானும், அத்தயங்கு தானை தமிழ்த்தலைவனை நிகர்த்தது—அவ் விளங்கிய படை தமிழ் முனிவனை யொத்தது.—எ-று.

அலைநெடும் புனலென்றது கடலென்னுந்துணையாய் நின்றது. முனிவனும் பருகினமையானும், மண்ணை நிறுத்தலானும், மலையை யழுத்தலானும், அச்சேனையு மன்னவாகலாற் சிலேடையாற் கூறினர். தமிழ்த்தலைவனென்ற தகத்திய முனிவனை, இழ்க் குறியவனென்றதுமது. (௪௪)

அறிஞருஞ்சிறிஞருமாதியந்தமாச்
செறிபெருந்தானையுந்திருவுநீங்கலாற்
குறியவன்புனலெலாம்வயிற்றிற்கொண்டநாள்
மறிகடலொத்ததவ்வயோத்திமாநகர்.

(இ-ள்.) அறிஞரும் சிறிஞருமாதி யந்தமாச்செறி பெருந்தானையும்-அறிவுடையாரு மல்லாருமாகி யாதியந்தமாகப் பொருந்திய பெருஞ்சேனை

யும், திருவு நீங்கலால்-திருவு நீங்கப்பெறுதலால், குறியவன்-குறுமுனி, புனலெலாம் வயிற்றிற்கொண்டநாள்-நீர் முழுதும் வயிற்றிடை யடைத்த நாள், மறிகடலொத்தது அவ்வயோத்திமாநகர்-அலையெறியும் கடலினிலை யடைந்தது அவ்வயோத்திமாநகரம்.—எ-று.

புனலறவயிற்றிடைப் பெய்தழி வறிதேகிடந்த கடலைத்தானையுந் திருவநீங்கிய நகர்க்குவமை கூறினர். (சுரு)

பெருந்திரைநதிகளும்வயலும்பெட்புறு
மரங்களுமலைகளுமண்ணுங்கண்ணுறத்
திருந்தலிலயோத்தியாந்தெய்வமாநகர்
அருந்தெருவொத்ததப்படைசெல்லாறரோ.

(இ-ள்.) பெருந்திரை நதிகளும் வயலும்-பெரிய அலைகளையுடைய நதிகளும் வயல்களும், பெட்புறு மரங்களும் மலைகளும்-விருப்பத்தக்க மரங்களும் மலைகளும், மண்ணுங்கண்ணுற-மண்ணுங் கண்ணிறபொருந்த, திருந்தலில்-ஒருவராலும் திருந்தல் செய்யாத, அயோத்தியாம்தெய்வமாநகர்-அயோத்தியென்னப்படுந் தெய்வத்தன்மையுடைய நகரத்தின், அருந்தெருவொத்தது-அருமையாகிய வீதிகளை நிகர்த்தது, அப்படை செல் ஆறு-அச்சேனை செல்லும் வழி.—எ-று.

படைசெல்வழி திருந்தல் செய்தமையின் திருந்தலிலென்றும், முத்திக்கரமாகிய எழு நகரங்களின் முதன்மையாதலின், தெய்வமாநகரென்றும், நதி வயன் மரங்கள் மலைகளெனக் கண்ணுற் காணப்படாமையின் அப்படை செல்லாற்றினை அருந்தெருவொத்ததென்றுங்கூறினர். (சுசு)

தார்கடாங்கோதைதாந்தாமந்தாந்தகை
ஏர்கடாங்கலவைதாங்கமழ்ந்தின்றென்பரால்
கார்கடாமெனமிகக்கடுத்தகைம்மலை
வார்கடாமல்லதம்மன்னன்சேனையே.

(இ-ள்.) அம்மன்னன் சேனை-அவ்வரசன் படைசேனை, கார்கடாமென-மேகங்களேயாமென்ன, மிகக் கடுத்த-மிகசினம் பொருந்திய, கைம்மலை-யானையினது, வார் கடாமல்லது-மதநீரல்லாது, தார்கடாம்-தாரையோ, கோதை தாம்-கோதையேயோ, தாமந்தாம்-தாமமேயோ, தகையேர்கள் - தகுதியையுடைய அழகமைந்த, கலவைதாம்-கலவையேயோ, கமழ்ந்தின்று-கமழ்ந்தது இன்று, என்பர்-என்று கூறுவர்—எ-று.

கார் யானைக்காகுபெயர். கைம்மலை அன்மொழித்தொகை, தார்கோதை தாம் மாலைகளின்விசேடங்கள். சேனைவார்கடாமல்லதுதார், கோதை தாமங் கமழ்ந்தின்று என வினை முடிக்க. (சுஎ)

ஆளுலாங்கடலினுமகன்றவக்கடல்
தோளுலாங்குண்டலமுதலதொல்லணி
கேளுலாமின்னொளிகிளர்ந்ததில்லையால்
வாளுலாநுதலியர்மருங்குல்போலவே.

(இ-ள்) ஆளுலாங்கடலினும்- ஆட்கள் உலாவுகின்ற சமுத்திரத்தினும், அகன்ற அக்கடல்-விசாலித்த அப்படைச்கடல், தோளுலாங் குண்டல முதல்தொல்லணி-தோளினுலாவப்பட்ட குண்டல முதலனவாகிய பழமையாகிய அணிகள், கேளுலாமின்னொளி-கேண்மையுலவப்பட்ட மின்னினொளி, வாளுலாநுதலியர்-வாளன்ன நெற்றியையுடைய மகளிர், மருங்குற்போல, இடைபோல, கிளர்ந்ததில்லை-தோன்றினதில்லை—எ-று.

உலாவுமென்னும் பெயரெச்சத்திற்றுமிசை யுகரங்கெட்டு வாளின மெனவந்தமைதலின் வாளுலாநுதலென்றார். அக்கடலென்றது படைக்கடலை இடை கட்புலனுக்குத் தோன்றுவாறு போல் மின்னொளியுந் தோன்றாமை கூறினார், ஆள் ஆகுபெயர். (சஅ)

மத்தளமுதலியவயங்குபல்லியம்
ஒத்தனசேறலினுரையிலாமையில்
சித்திரச்சுவர்நெடுஞ்சேனைதீட்டிய
பத்தியைநிகர்த்ததப்படையினீட்டமே.

(இ-ள்.) மத்தளமுதலிய வயங்குபல்லியம் - மத்தளமுதலாய விளங்குகின்ற பலவாத்தியங்கள், ஒத்தனசேறலின்-ஒத்தனவாகச்செல்லுதலால், உரையிலாமையின் - ஒலிக்கப்படாமையின், அப்படையினீட்டம் - அச்சேனைக்கூட்டம், சித்திரச்சுவர்—சித்திரமெழுதிய சுவரிடை, நெடுஞ்சேனை தீட்டிய - பெருஞ்சேனையெழுதிய, பத்தியைநிகர்த்தது - வரிசையையொத்திருந்தது.—எ-று.

அரசனில்வழி அவை முழக்கப் படாமையின் சித்திரச் சுவர்நெடுஞ் சேனைதீட்டிய பத்தியைநிகாத்ததென்றார்.

ஏடறுகோதையர்விழியினெய்தகோல்
ஊடுறவுரந்தொளைத்துயிருணுவகை
ஆடவர்க்கரும்பெருங்கவசமாயது
காடுறைவாழ்க்கையைக்கண்ணனண்ணவே.

(இ-ள்.) ஏடறுகோதையர்-இதழ்நீங்கப்பட்ட மாலையணிந்த மாதரார், விழியினெய்தகோல் - கண்ணிடை யெய்த அம்பு, ஊடுற-நடுவே பொருந்த, உரந்தொளைத்து-மார்பைத் தொளைத்து, உயிர் உணுவகை-உயிருண்ணுதவகை, காடுறைவாழ்க்கை - வனத்திடைவசித்தலை, அக்கண்

ணன்நண்ண - அக்கண்ணன் சென்றடைய, ஆடவர்க்கரும் பெருங்கவசம் ஆயது - ஆடவர்கட்குப் பெறலரும் பெருங்கவசமாயிற்று —எ-று.

செம்மலாகிய மாலையாகலின் ஏடு அறு கோதையென்றார். இராமனீக்கத்தாற் காமநலம்பொய்யானமையின் விழியினெய்த கோலாடவாக் கரும் பெருங்கவசமாயதென்க. (ருய)

கனங்குழைக்கைகயன்மகளிற்கண்ணிய
சினங்கிடந்தெரிதலிற்றீய்ந்தவேகொலாம்
அனங்கனைங்கொடுங்கணைகடந்தவாடவர்
மனங்கிடந்துண்கிலமகளிர்கொங்கையே.

(இ-ள்.) கனம்குழை கைகயன் மகளிர் - கனமாகிய குண்டல மணிந்தவளாகிய கைகேசிக்கு, அண்ணிய - நெருங்கிய, சினங்கிடந்தெரிதலின் - கோபந்தங்கி யெரிதலினுன், அனங்கன் ஐங்கணைகொடுகடந்த ஆடவர் - மன்மதனது ஐந்தாகிய கொடியபாணத்தைக் கடந்த ஆடவர், மனங்கிடந்து - மனந்தங்கி, மகளிர் கொங்கையுண்கில - மாதர்கொங்கை யனுபவித்தில, தீய்ந்தவேகொல் - அவை தீந்தனபோலும்.—எ-று.

கனங்குழை அன்மொழித்தொகை. இதனை ஆகுபெய ரென்றாரர் பரிமேலழகரெனின அவர் இருமொழியுந் தொக்கதொகையாற்றலாற் பிறிது பொருளுணர்த்தி இருமொழிக்கண் வந்தமை கூடாமையறிந்திலர் என்பதனைத் தொல்காப்பியச் சூத்திர விருத்தியினும் பரக்கக்காண்க. மகளின் கண்ணியவெனக் கொண்டுரைப்பினு மமையும். ஏதுத் தற்குறிப்பேற்றம். உண்ணலின் டனுபவித்தலை. இப்பத்துச்செய்யுளானும் சேனைநடந்த காட்சி யுணர்த்தப்பட்டது. (ருஅ)

இன்னணநெடும்படையேகவேந்தனும்
தன்னுடைத்திருவரைச்சீரைசாத்தினன்
பின்னிளையவனொடும்பிறந்ததுன்பொடும்
நன்னெடுந்தேர்மிசைநடத்தன்மேயினன்.

(இ - ள்) இன்னணம் நெடும்படையேக - இவ்வகை நீண்டசேனை செல்ல, வேந்தனும் தன்னுடை திருவரைச் சீரைசாத்தினன் - அரசனும் தனது நீண்டவரையிடை மரவுரியுடுத்து, பின் இளையவனொடும் - பின்னர் தம்பியுடனர், பிறந்த துன்பொடும் - தோன்றிய துயரத்தோடும், நன்னெடுந்தேர்மிசை நடத்தன் மேயினன் - நன்மையாகிய நீண்ட தேரிடையேறிச் செல்வானாயினன்.—எ-று.

இன்னவண்ணமென்றது மரீஇயது. இன்னவண்ணமென்றது, மேலெழுந்த பெரும் படைத்தோற்றத்தை. சாத்தினன் எச்சமுற்று. துயரமறியாதார்க் கிடையே வந்தெய்தப் பெற்றமையாற் பிறந்ததுன்பொடு வென்றார். (ருஉ)

தாயருமருந்தவத்தவருந்தந்தையின்
ஆயமந்திரியருமளவில்சுற்றமும்
தூயவந்தணர்களுந்தொடர்ந்துசூழ்வரப்
போயினன்றிருநகர்ப்புரிசைவாயிலே.

(இ-ள்.) தாயரும் அருந்தவத்தவரும்- தாய்மாரு மருமையாகிய தவமுடையாரும், தந்தையின் ஆயமந்திரியரும் - தாதைபோலிருந்த கேள்வியமைந்த அமைச்சரும், அளவில்சுற்றமும் - அளவிறந்த சுற்றத்தவரும், தூயவந்தணர்களும் - மனத்தூய்மையுள்ள வேதியரும், தொடர்ந்து சூழ்வர - தொடர்ந்து சுற்ற, திருநகர்புரிசைவாயில் - நகரத்து மதிலின் வாயிலில், போயினன் - கடந்து சென்றனன்.—எ-று.

சத்தபுரிகளில் முதல்மையாதலின் திருநகரென்றதென்க. தந்தை போலத்தனக்கு நன்மையியைப்பவராகலின் தந்தையினுய மந்திரியரும்என்றூர். சுற்றமாகுபெயர். தூய்மையுடைமை யவற்றுள் மனஞ்சிறப்புடைமையிற் றூயவந்தணரு மென்றதென்க. இவ்விரண்டு செய்யுளானும் வாயிலைக் கடந்தமை யுணர்த்தப்பட்டது. (௫௩)

மந்தரைக்கூற்றமும்வழிச்செல்வாரொடும்
உந்தியேபோதல்கண்டிளவலோடியார்த்
தந்தரத்தெற்றுவானழன்றுபற்றலும்
சுந்தரத்தோளவன்விலக்கிச்சொல்லுவான்.

(இ-ள்.) மந்தரை கூற்றமும்-மந்தரையாகிய நமனும், வழிச்செல்வாரொடும் உந்திபோதல்கண்டு - வழியிற்செல்பவருடனுந்திப் போகப்பார்த்து, இளவல் ஓடியார்த்து - இளையவன் ஓடிச்சென்றூரவாரித்து, அந்தரத்தெற்றுவான் அழன்றுபற்றலும் - அந்தரத்திலெறியக் கைப்பிடித்தலும், சுந்தரத்தோளவன் விலக்கிச் சொல்லுவான் - அழகிய தோளையுடையா னுகிய பரதன் தடுத்துக் கூறுவானுயினுன்.—எ-று.

மந்தரையைக் கூற்றமென்றூர், அரசனுக்கும் நாட்டினுக்குங்கழிபெருந்துயர் விளைந்தமையின். இளவல் ஆகுபெயர், ஈண்டுச்சத்துருக்கனை. சுந்தரத்தோளவனென்றது பரதனை. கூற்றமுமென்ற வும்மை இறந்தது தழிஇயது. இறைவனைக் கானேகச்செய்த கடுமைநோக்கி அந்தரத் தெற்றுவானழன்று பற்றலுமென்றூ னென்க. (௫௪)

முன்னையர்முறைகெடமுடித்தபாவியைச்
சின்னபின்னஞ்செய்தென்சினத்தைத்தீர்வெனேல்
என்னையின்றென்னையன்றுறக்குமென்றலால்
அன்னையென்றுணர்ந்திலெனையநாவென்றூன்.

(இ-ள்) முன்னையர்முறைகெட - முன்னையோர்முறை கெட்டழிய, முடித்தபாவியை - நடத்திய பாவியாகிய தாயை, சின்னபின்னம் செய்து-

கூறபடுத்த, என்சினத்தை தீர்வெனேல் - என் சீற்ற மொழிப்பேனாயின், என்னையன் - என்முன்னோன், என்னை இன்றுதுறக்கு மென்றலால் - என்னை இன்று நீங்குவா னென்றல்லது, ஐய நான் அன்னையென் றுணர்ந்தில னென்றான் - ஐயனே யான் தாயென்றறியே னென்றனன். —எ-று.

முன்னையர் முறைகெடல் என்றது தொன்றுதொட்டு நடந்த வழக்கத் தழிவு தேடலை. என்னையனென்ற திராமனை. முன்னையர் முறையென்றது இட்சுவாகு முதலிய வரசர்கள் தம்முதற்புதல்வனை மணிமுடிபுனைந்து கோலங்காணு முறையினை. (ருரு)

ஆதலான்முனியுமென்றையனந்தமில்
வேதனைக்கூனியைவெருண்டுமென்னினும்
கோதிலாவருமறைகுலவுநூல்வலாய்
போதுநாமென்றுகொண்டரிதிற்போயினான்,

(இ-ள்) கோதிலா வருமறை குலவுநூல் வலாய்-குற்றமில்லாத அரியவேதத்திற் குலாவுநூல் வன்மையுடையானே, ஆதலால் அந்தமில் வேதனைக் கூனியை-ஆதலால் முடிவில்லாத துன்பத்தைவிளைத்த மந்தரையை, வெருண்டு மென்னினும்-வெருள்வோமாயினும், ஐயன் முனியு மென்று-எந்தை சினங் கொள்வனென்றும், நாம்போது மென்று-நாம் போவோமென்றும், கொண்டரிதிற் போயினான் - அழைத்துக்கொண் டரிதினடைந்தனன். எ-று

மறையினங்கணன்குபயின்றவ னாகலின் அருமறைகுலவுநூல்வலாயென்றார். கழிபெருந்துன்பம் விளைத்தலின் அந்தமில்வேதனை யென்றதென்க. ஐயனென்றது இராமனை. வெருண்டும் என்றது டும் மீற்றுத்தன்மைப் பன்மை. இம்மூன்று செய்யுளானும் சத்துருக்கன் மந்தரை யெற்றுதற்கேதுதலைப் பரதன்றடுத்துக் கூறினமை யுணர்த்தப்பட்டது. (ருசு)

மொய்பெருஞ்சேனைமூரிமாக்களும்
கய்கலந்தயலொருகடலிற்சுற்றிட
அய்யனுந்தேவியுமிளையவாளியும்
வய்கியசோலையிற்றானும்வைகினான்.

(இ - ள்.) மொய்பெருஞ்சேனையும்-வலியமைந்த பெருஞ்சேனையும், மூரிமாக்களும்-யானை பரிகளும், கைகலந்து - ஒழுங்கிற்பரந்து, அயல் ஒரு கடலிற்சுற்றிட-பக்கத்திலொருகடலெனச்சூழ, அய்யனும் தேவியும் இளையவாளியும் - இராமனும், சானகியும் இளஞ்சிங்கமும், வய்கியசோலையிற்றானும் வைகினான்-தங்கிய பொழிலிடைத் தானு மடைந்தனன். எ-று.

இளையவாளியென்றது இலக்குவனை. சேனையென்றது ஆட்படையை, மாக்களெனப் பொதுப்படக் கூறலான யானைப்பரிகளை யுணர்த்தி

நின்றன. சேனையுமாக்களும் கடலாக வுருவகஞ் செய்தார். ஆளியென்றது மது. உம்மை எண், (நிஎ)

அல்லணைநெடுங்கணீரருவியாடினன்
கல்லணைகிழங்கொடுகனியுமுண்டிலன்
வில்லணைத்துயர்ந்ததோள்வீரன்வைகிய
புல்லணைமருங்கிற்றான்பொடியின்வைகினன்.

(இ-ள்.) அல்லணை நெடுங்கணீ ரருவியாடினன்-அல்லிணையணைகின்ற நீண்டகண்ணீராகிய வருவியாடி, கல்லணை கிழங்கொடு கனியுமுண்டிலன்-மலையிற் பொருந்துங் கிழங்கினோடு பழமு முண்ணாது, வில்லணைத் துயர்ந்த தோள் வீரன் - வில்லேந்தியோங்கிய தோளையுடைய சீராமன், வைகிய புல்லணை மருங்கில்-தங்கியபுல்லணைப்பக்கத்தில், தான்பொடியில் வைகினன்-தான் புழுதியிற்றங்கி யிருந்தனன். எ-று.

ஆடினன் உண்டிலன் எச்சமுற்று. கோதண்ட பாணி என்னும் பெயர்பற்றி வில்லணைத் துயர்ந்த தோள்வீரனென்றார். நீரான்நிரம்பிய கண்ணாகலின் அல்லணைநெடுங்கணீ ரருவியாடின னென்றார். இவ் விரண்டு செய்யுளானும் பரதன் சீராமன் வைகிய சோலையிற் றங்கினமை யுணர்த்தப்பட்டது. (நிஅ)

ஆண்டுநின்றாண்டகையடியினேகினன்
ஈண்டியநெறியெனத்தானுமேகினன்
தூண்டுதேர்களுந்துரகராசியும்
காண்டகுகரிகளுந்தொடரக்காலினே.

(இ-ள்.) ஆண்டு நின்று ஆண்டகை - அங்கிருந்து சீராமன், அடியினேகினன் - அடியிற்சென்று, ஈண்டிய நெறியென-நெருங்கிய வழியென, தூண்டுதேர்களும் - தூண்டிச் செல்லும் தேர்களும், துரகராசியும - பரியின் கூட்டமும், காண்டகுகரிகளும்-காட்சியமைந்த யானைகளும், தானும் தொடரக்காலின் ஏகினன் - தானும் தொடரும்படி காலிற் சென்றனன்.

ஆண்டு இடப்பொருளதாய இடைச்சொல்; ஒரோ விடங்களிற் பெயர்த்தன்மை யெய்தலினைந்தனுருபேற்ற தெனினுமமையும். துரகராசி வடநூல் முடிபு. ஆண்டகை அன்மொழித்தொகை; ஈண்டிராமனை. காலினேகினனென்பதற்குக் காற்றெனை விரைந்து சென்றானெனினுமமையும். உம்மை எண். தேர்களும் துரசராசியும் கரிகளும் தானுமேகினன் எனத் திணைவிரவிச் சிறப்பினா லுயர்திணை முடிபேற்றது. இதனால் அச்சோலையை யகன்றமை யுணர்த்தப்பட்டது. (நிகூ)

(கய-வது. ஆற்றுப்படலம் முற்றிற்று. ஆ திருவிருத்தம்-கூகூஅ.)

குகப்படலம்

சான்படர்ந்த இறைவனைக் கொடுவரச்சென்ற பரதன் கங்கைக்கரை யடைந்து குகனைக்கண்ட செய்தியின் றொடர்ச்சிகூறலான் இது ஆற்றுப்படலத்தின் பின் வைக்கப்பட்டது. படல முறைமையு மிதனானே விளங்கும்.

பூவிரிபொலன்கழற்புனைவிறானையான்
காவிரிநாடன்னகழனிநாடொரீஇத்
தாவரசங்கமமென்னுந்தன்மைய
யாவையுமிரங்கிடக்கங்கையெய்தினான்.

(இ-ள்.) பூவிரி பொலன்கழல் புனைவில் தானையான் - பூப்போலும் விரிந்த பொன்னாற்செய்யப்பட்ட கழல் அலங்காரஞ்செய்தலில்லாத சேனையையுடையான், காவிரிநாடன்ன கழனி நாடொரீஇ-பொன்னி நாடொத்த கழனிகளையுடைய கோசலநாட்டினை நீங்கி, தாவரசங்கமமென்னுந் தன்மைய-நிலைத்திணை இயங்குதிணை யென்னு மிருபகுதியுடைய, யாவையும் இரங்கிட-எவ்வகைப் பொருள்களு மிரங்காநிற்ப, கங்கையெய்தினான்-கங்கையை யடைந்தனன்.—எ-று.

பூவென்றது மலருட் சிறந்த தாமரையை யுணர்த்தி நின்றது. அது "பூவிற்குத் தாமரையே" எனப் பிறர் கூறுவதனானுணர்க. பொன் என்பது "பொன்னென் கிளவி" யானமைக்க. தானையானென்றது பரதனை. காவிரி நாடென்றது சோணாட்டினை. சோணாடு சோறுடைத்தாகலின் அதனை யுவமைகூறினார். தாவரசங்கமமென்றது நிலைத்திணை, இயங்குதிணைகளை. அரசனிறந்துபட்டமை விளக்குதற்குப் புனைவில் தானை என்றதென்க. இவன் வருந்துவதற்கு எவ்வகைப்பொருளு மிரங்கிய வென்பார் யாவையு மிரங்கிடவென்றார். (க)

எண்ணருஞ்சுரும்புதம்மினத்துக்கல்லது
கண்ணகன்பெரும்புனற்கங்கையெங்கணும்
அண்ணல்வெங்கரிமதத்தருவிபாய்தலால்
உண்ணவுங்குடையவுமுரித்தன்றாயதே.

(இ-ள்) எண்ணருஞ் சுரும்பு தம்மினத்துக் கல்லது - கணக்கில்லாத வண்டினத்துக் கல்லாது, கண்ணகன் பெரும் புனற் கங்கை எங்கணும்-இடமகன்ற பெரும் புனலை யுடைய கங்கையினெவ்விடத்தும், அண்ணல்வெங்கரி மதத்தருவிபாய்தலால்-அரசனது கொடிய யானை மதமாகிய நீர் பாய்தலினால், உண்ணவுங் குடையவு முரித்தன் றாயது-பருகவு மாடவு முரித்தன்றாயிருந்தது.—எ-று.

அண்ணல் - ஆகுபெயர். உம்மை முற்று. வினையிரண்டுமென்ன;அல்லது குறிப்பு வினையெச்சம். இதனுன் யானைப்படை மிகுதி யுணர்த்தப் பட்டது. (உ)

அடிமிசைத்தூளிபுக்கடைந்ததேவர்தம்
முடியுறப்புலர்ந்ததோர்முறைமைதேர்ந்திலென்
நெடிதுயிர்த்துண்டவுநீந்தநின்றவும்
பொடிமிசைப்புரண்டவும்புரவியீட்டமே.

(இ - ள்.) நெடிதுயிர்த்துண்டவும் - மிகுதியும் பெரு மூச்செய்தி யுண்டவும், நீந்த நின்றவும் - நீந்த நின்றவும், பொடிமிசை புரண்டவும்-புழுதியிற் புரண்டவுமாகிய, புரவி யீட்டம் - குதிரையின் கூட்டம், அடிமிசை தூளி புக்கடைந்த - அடியின் பொடி புகுந்தடைந்தது, தேவர் தம்முடி உறப் புலர்ந்ததோர்முறைமை தேர்ந்திலென் - தேவர்முடி பொருந்தப் புலர்ந்ததாகிய முறைமை யாய்ந்தறியேன். —எ-று.

புலர்ந்தது வினைப்பெயர். இதனுற் புரவிப்படை மிகுதி யுணர்த்தப் பட்டது. (௩)

பாலையேய்நிறத்தொடுபண்டுதான்படர்
ஓலையேய்நெடுங்கடலோடிற்றில்லையால்
மாலையேய்நெடுமுடிமன்னன்சேனையாம்
வேலையேமடுத்ததக்கங்கைவெள்ளமே.

(இ - ள்.) மாலையேய் நெடுமுடி மன்னன் சேனையாம்-மாலைபுனைந்த நெடுமுடியரசன் சேனையாகிய, வேலையே அக்கங்கை வெள்ளம் மடுத்தது- கடலே அக்கங்கை வெள்ள மருந்தப் பட்டமையான், பாலையேய்நிறத் தொடு - பாலையொத்த நிறத்தினேடு, பண்டு தான் படர் ஓலை யேய் நெடுங்கடல் ஓடிற்றில்லை - முன்தான் படர்ந்த ஒல்லொலியமைந்த பெருங்கடலின் கண் ஓடிய தில்லை. எ-று.

சேனையைக் கடலெனக் கூறினர் மிகுதிபற்றி. ஓலை ஒலி. வேலை ஆகுபெயர். இதனுற் காலாட் படை மிகுதி யுணர்த்தப்பட்டது. நெடுங்கடற்கும் வருவாய் வேண்டுமாதலின் கங்கை பாலையேய் நிறத்தொடு மோடிற் றில்லை யென்றார். இந்நான்கு செய்யுளானும் பரதன் கங்கையை யடைந்தமை யுணர்த்தப்பட்டது. (௪)

கான்றலைநண்ணியகாளைபின்படர்
தோன்றலையவ்வழிதொடர்ந்துசென்றன
ஆன்றவருணர்த்தியவக்குரோணிகள்
மூன்றுபத்தாயிரத்திரட்டிமுற்றுமே.

(இ-ள்.) கான்றலை நண்ணிய - கானின்கண்விரும்பி யடைந்த, காளைபின்படர்—இறைவன் பின்சென்ற, தோன்றலை அவ்வழி தொடர்ந்து

சென்றன-பரதனை அம்முறை தொடர்ந்துபோயின, ஆன்றவர் உணர்த்திய-பெரியோரறிவித்த, அக்குரோணிகள் - அக்குரோணிகள், மூன்று பத்தாயிரத்திரட்டி முற்றும்-அறுபதினாயிர முழுதும்.—எ-று.

சீராமனைக் கானின்றழைத்து வரச்செல்பவனாகலின் கான்றலை நாண்ணிய சாலை பின் படர்தோன்ற லென்றார். அக்குரோணி என்றது வடமொழிச் சிதைவு. ஆன்றவர் மரூஉ. உம்மைமுற்று. தோன்றலென்றது பரதனை. இந்நான்கு செய்யுளானும் அவ்வாறடைந்த பரிசுணர்த்தப்பட்டது. (ரு)

அப்படைகங்கையையடைந்தவாயிடைத்
துப்புடைக்கடலினீர்சுமந்தமேகத்தை
ஒப்புடையண்ணலோடுடற்றவேகொலாம்
இப்படையெடுத்ததென்றெடுத்தசீற்றத்தான்.

(இ - ள்) அப்படை-அந்நால்வகைப்படையும், கங்கையை யடைந்தவாயிடை-கங்கைக்கரையை யடைந்தபொழுது, துப்புடைக்கடலினீர் சுமந்த மேகத்தை-வலியையுடைய கடனீரைச்சுமந்த மேகத்தினோடு, ஒப்புடைய அண்ணலோடு - உவமிக்கப்படுமிறைவனை, உடற்றவேகொல்—வருத்தவேகொல், இப்படை யெடுத்ததென்று-இப்படை யெடுத்து வந்ததென்று, எடுத்த சீற்றத்தான் - மேற்கொண்டகோபத்தினையுடையான்.—எ-று.

உரவுநீரென்றும் பெயர் பற்றித் துப்புடைக் கடலென்றதென்க. நீர் பருகிய மேகம் இவன் வண்ணத்தையும் இவன் வள்ளன்மையுமுடையதாக துப்புடைக் கடலினீர் சுமந்த மேகத்தை யொப்புடை யண்ணலென்றும், இவனோடு படையெடுத்துவந்தது சாவாதென்பார் உடற்றவே கொலாமிப் படையெடுத்ததென்றுங் கூறினார். (சு)

குகனெனப்பெயரியகூற்றினாற்றலான்
தொகைமுரட்சேனையைத்துகளினோக்குவான்
நகைமிகக்கண்கடீநாறநாசியிற்
புகையுறக்குனிப்புறும்புருவப்போர்விலான்.

(இ-ள்.) குகனெனப் பெயரிய கூற்றினாற்றலான்-குகனெனும்பெயரையுடைய கூற்றுவனை யொத்த வன்மையையுடையான், தொகைமுரண் சேனையைதுகளின் நோக்குவான்-தொகையுள்ள வலிமையுள்ளசேனைகளைத் துகளே போற்கருதுவோன், நகைமிக- சிரிப்புமிக, கண்கடீநாற-விழி தீயைச்சொரிய, நாசியிற் புகையுற- மூக்கிற்புகை யுண்டாக, குனிப்புறும் புருவப் போர் வில்லான்- வளைக்கின்ற புருவமாகிய போர்த்தொழிலை யுடையவில்லை யுடையான்.—எ-று.

கூற்று என்றார் ஊனுயிர். வேறுசெய்தலின் சொல்லாணையிறினே. புருவத்தை விற்குவமை கூறினர். (எ)

மையுறவுயிரெலாமிறுதிவாங்குவான்
கையுறுகவரயில்பிடித்தகாலன்றான்
ஐயைநூறாயிரமுருவமாயின
மெய்யுறுதானையான்வில்லின்கல்வியான்.

(இ-ள்.) மையுற-குற்றமடைய, உயிர் எலாம் இறுதிவாங்குவான்-உயிரனைத்துமுடிவைச் செய்வான், கையுறு கவர் அயில் பிடித்தகாலன் தான்-கையிற்பொருந்திய பிளப்பினையுடைய சூலம் பிடித்த நமனே, ஐயை நூறாயிரம் உருவமாயின மெய் உறு தானையான்- அழகமைந்த ஐந்திலட்சம் வடிவமாயின மெய்யடைந்த சேனையான், வில்லின கல்வியான்-வில்வித்தை கற்றுடையான்.—எ-று.

குகன் படையிலுள்ளார்க்குங் கருநிறமுங் கண்டவருட்கு மாற்றலுமுடைமையாற் கவரயில் பிடித்தகாலன்றான் ஐயைநூறாயிரம் உருவமாயின மெய்யுறு தானையா னென்றுவமை கூறினர். தான் தேற்றப் பொருட்டு. காலன் என்றது: சாற்றுநாளற்றபோது தருமம் பார்த்த நேர்றுவிண்ணென்ற தாகலினென்க. இனி ஐயை நூறாயிரமென்பதற்கு இருபத்தைந்திலக்கமென்றாற் படமிழுக்கென்னே யெனின் ஐயிருபத்தோ டைந்தாயிர ருளராணைசெய்குநர்சிலைவேடர் என முற்கூறலிற் பொருந்தாமை யுணர்க. கொலைத்தொழின் மேற்கொண்டவனாகலின் மையுற என்றார். மையுறவாங்குவானெனக்கொண்டு அவர் வினைக் கேற்பக் கோடலுமாம். வில்லின் கல்வியென்றது தனுர்வேதம் வல்லானென்றதென்க. (அ)

கட்டியசுரிகையன்கடித்தவாயினன்
வெட்டியமொழியினன்விழிகட்டீயினன்
கொட்டியதுடியினன்குறிக்குங்கொம்பினன்
கிட்டியதமரெனக்கிளர்ந்ததோளினன்.

(இ-ள்) கட்டியசுரிகையன்-அரையிற் கட்டிய உடைவாளுடையான். கடித்தவாயினன் - இதழினைக்கடிந்த வாயினை யுடையான், வெட்டிய சொல்லினன்- கடியமொழியையுடையான், விழிசுடும் தீயினன் - தீயைப் போலும் விழிக்குங்கண்ணுடையான், கொட்டிய துடியினன் - அறைகின்ற பறையையுடையான், குறிக்குங்கொம்பினன் - ஒலிக்கின்ற கொம்பினையுடையான், அமர்கிட்டிய தெனக்கிளர்ந்த தோளினன்- போர்நெருங்கிய தென்றுபருக்கும் தோளினையுடையான்.—எ-று. (கூ)

வெட்டிய சொல்லினன் என்றது கடுஞ்சொல்லையுடையானென்பதனை. துடி, கொம்பு என்பன அந்நிலத்துவாத்திய விசேடம். குறிக்குமென்பது ஓடித்தலை கோடுகுறித்தலென வழக்கினுங் காண்க. வீரனுக்குப்போர்கிட்டியஞான்று தோள்பூரித்த லியல்பாதலின் அமர்கிட்டியதென்று கிளர்ந்த

தோளினானென்றார். இதனை 'எய்யென வெழுபகையெங்கு மின்மையால் மொய்பொருதினவுறு முழவுத்தோளினா' னென முற்கூறிப்போந்தமையானறிக. கிட்டியதமரெனக் கிளர்ந்த தோளினான் என்பதற்கு, நெருங்கிய வுற்றவினரேபோலும் தோளினையுடையா னென்றுரைப்பதுமாம். இதனை, *"உடுக்கையிழந்தவன் கைபோலவாங்கே யிடுக்கண்களைவதாநட்பு" எனப் பிறருங் கூறலானுங்காண்க. தமர் முறைப்பெயர். (கூ)

எலியெலாமிப்படையரவம்யானென
ஒலியுலாஞ்சேனையையுவந்துகூயினான்
வலியுலாமுலகினில்வாழும்வள்ளுகிர்ப்
புலியெலாமொருவழிப்புகுந்தபோலவே.

(இ-ள்.) இப்படையெல்லாம் எலி அரவம்யானென - இச்சேனைமுழுதும் எலியாகும் யான்நாகமாவே னென்றுகூறி, உலகினில் வாழும்வலியுலாம்வள்ளுகிர் புலியெலாம் ஒருவழி புகுந்தபோல- உலகில் வசிக்கும் வலிமிகுந்த கூர்மையுள்ள நகங்களையுடைய புலியனைத்தும் ஓர்பாற் றிரண்டாலொத்த, ஒலியுலாஞ்சேனையை யுவந்து கூயினான் - ஒலிதங்கிய சேனையை மகிழ்ந்து கூவினன்:—எ – று.

சீற்றத்தான், நோக்குவான், போர்விலான், கல்வியான், வாயினன்: தீயினன், கொம்பினன், தோளினன்குகனெனப் பெயரியகூற்றினாற்றலான் எனக்கொண்டு சேனையையுவந்து கூயினானென வினைமுடிக்க. எலியெலாமிப்படை யரவம் யானென, என்றார் "எலிப்பகை நாகமுயிர்ப்பக் கெடும்" எனப்பிறருங்கூறுவது நோக்கியென்க. எலியும், அரவமும் சேனைக்கும் குகனுக்குமுவமை. வள்ளுகிர் என விசேடித்தார். அவர் கூறிய படைகளையுடைமை குறித்தென்க. (கo)

மருங்கடைதென்கரைவந்துதோன்றினான்
ஒருங்கடைநெடும்படையொல்லெனார்ப்பினோ
டருங்கடையுகந்தனிலசனிமாமழை
கருங்கடல்கிளர்ந்தெனக்கலந்துசூழவே.

(இ-ள்.) ஒருங்கடை நெடும்படை யொல்லென் ஆர்ப்பினோடு- ஒருங்குவந்தடைந்த சேனை ஒல்லென்னுமு முழக்கத்தோடு, அருங்கடையுகந்தனில் அசனிமாமழை கருங்கடல் கிளர்ந்தென-அருமையாகிய கற்பாந்தத்து இடியொடு கூடியகரியமேகமும் பெரியகடலு மிகவெழுந்தாற்போல், கலந்துசூழ- தன்பாற்சூழ்ந்துவர, மருங்கடைதென்கரை வந்து தோன்றினான் அருகேயுள்ள தென்கரையில் வந்துசேர்ந்தனன். எ - று.

மா- கருமை, இதனை 'மாமிடற்றம் பலவன்' எனப்பிறருங் கூறலானுங்காண்க. கிளர்ந்தானென்பது கிளர்ந்தெனத் திரிந்து நின்றது. அவன்

* திருக்குறள், நட்பு செ. 8,

சேனைமுழுவதும் சிற்றத்தோடுவருகின்றமையான் 'அருங்கடையுகந்தனில் அசனிமாமழை கருங்கடல் கிளர்ந்தெனெ' என்றார். (கக)

தோன்றினபுளிஞரைநோக்கிச்சூழ்ச்சியின்
ஊன்றியசேனையையும்பரேற்றுதற்
கேன்றனெனென்னுயிர்த்துணைவற்கீகுவான்
ஆன்றபேரரசுநீரமைதிராமென்றான்.

(இ - ள்.) தோன்றின புளிஞரைநோக்கி - அவ்வாறுவந்த வேடரைக் கண்டு, சூழ்ச்சியின் ஊன்றிய சேனையை யும்ப ரேற்றுதற்கு,—ஆராய்ச்சியுடன் நிலைத்து நின்ற படையினைக் கொல்லுதலால், ஆன்றபேரரசு என் உயிர் துணைவற் கீகுவான் என்றனென்-அகன்றபெரிய அரசச் செல்வத்தை என் உயிர்த்தோழனுக்களிக்க இசைந்து நின்றேன், நீர் அமைதிர் என்றான்-நீர் உடன்படு மென்றனன். எ - று.

என்உயிர்த்துணைவ னென்றது சிராமனை. உம்பரேற்றுதல் வீரசுவர்க்கமடைவித்தல், மங்கலவழக்கு. ஆன்ற பேரரசுஎன்றது சக்ரவர்த்தியாண்டு வருஞ்செல்வத்தை. சூழ்ச்சியென்றது பரதனை வெல்லலாம் கருத்து. இறைவன் ஈடும்எடுப்புமில்லாத உயர்ந்தோனெனினும் ஈகுவானென இழிந்தோன் கூற்றாகவவனைக் கூறியது என்னுதலியோ வெனின் முன்னிலைமொழியாய் வரும்வழியன்றிப் பிறவிடங்களால், இன்னமொழி இன்னார்க் குரித்தென் னும்வரையறையின் றென்பதுணர்த்தற் கன்றே ஈ,தா,கொடு என முன்னிலை வாய்பாடுபற்றியே யோதினாரென்றார் சேனாவரையருமென்க. உம்பரேற்றுதற்கென்றது பரதன்போர்வீரர் முழுதுமிறந்துபடுவரென்பதுபற்றி (கஉ)

துடியெறிநெறிகளுந் துறையுஞ்சுற்றுற
ஒடியெறியம்பிகள்யாதுமோட்டலிர்
கடியெறிகங்கையின்கரைவந்தோர்களைப்
பிடியெறிபடவெனப்பெயர்த்துங்கூறுவான்.

(இ - ள்.) துடியெறிநெறிகளும் துறையும் சுற்றுற ஒடியெறியம்பிகள்யாதுமோட்டலிர்-பறைகொட்டும் வழியிடத்தும் நீர்த்துறையிடத்தும் சூழ ஒடி யெறி என்றேவிப் படகுகள்யாதினையும் ஓட்டலீர், கடியெறி கங்கையின் கரைவந்தோர்களை - மணங்கமழுங்கங்கைக் கரையிடை வந்தவரை, பிடிபடஎறிஎனப் பெயர்த்துங் கூறுவான்-பற்றுநீங்க அழிமினென்று மீட்டுஞ் சொல்லுவான். எ - று.

துடியென்றது குறிஞ்சித்திணை வாச்சியப் பொதுவினை யுணர்த்திற்று. ஒடியெறியென்புழி மின்னீறு தொக்கதென் றேனும், தனித்தனியொவ்வொருவரிடைக் கூறினனென்றேனுங் கூறிக் கொள்க. ஒடியெறியோட்டலீரென்றது பன்மையினொருமை வந்தமயக்கம். ஒடி என்றது குறுக்கும்

வழிகுறுக்கலாக்கொண்டு விரைந்தோடி என்றும், எறி என்பதற்குக் கற்களெறிமின்னவும், ஈட்டியாற்குத்துமி னெனினுமமையும். இவ்வொன்பதுசெய்யுளானும் பரதன் சேனையைக் காணக் கங்கைக்கரையைக் குகனுடைச்சென்ற துணர்த்தப்பட்டது. (கரு)

கலிநிலைத்துறை.

அஞ்சனவண்ணனென் னாருயிர்நாயகனாளாமே
வஞ்சனையாலரசெய் தியமன்னரும்வந்தாரே
செஞ்சரமென்பனதீயுமிழ்கின்றனசெல்லாவோ
உய்ஞ்சிவர்போய்விடி னாய்க்குகனென் றெனையோதாரோ.

(இ - ள்) அஞ்சனவண்ணன் - கரியகோலப் பெருந்தகையாகிய, என் ஆருயிர் நாயகன் ஆளாமே - என் அரிய உயிர்போன்ற இறைவன் அரசாண்டுவராமல், வஞ்சனையா லரசெய்திய மன்னரும் வந்தாரே - வஞ்சனையினா லரசடைந்தவரும் வந்தடைந்தாரே, செஞ்சரமென்பன தீயுமிழ்கின்றன செல்லாவோ - சிவந்த வாளியெனப்படுபவை தீயையுமிழ்வனவாகிச் செல்லமாட்டாவோ, இவர் உய்ஞ்சுபோய்விடின் நாய்குகனென்றனை யோதாரோ - இவர் பிழைத்துப் போய்விட்டால் நாய்த்தன்மையையுடைய குகனென்று என்னையிகழ்ந்து பேசாரோ.— எ - று.

அஞ்சனவண்ணனென்றார்* 'கரியகோலத்திருவுரு' எனப்பெரியாரும் பணித்தமைபற்றி; உயிரினுஞ் சிறந்தபொருள் பிறிதின்மையானும், இறைவன் எப்பொருட்கு முடையானென்ப துண்மையானும் என்னாருயிர் நாயகனென்றார். வஞ்சனையா லரசெய்திய தென்றது வரமென்னும் நியாயம்பற்றி. இறைவனைக் கான்படரச் செய்தமையை, மன்னரும் வந்தாரோ இவர் உய்ஞ்சுபோய் விடினெனக் கூறினார். இழித்தலா னொருமைப்பாலாயிற் றாகலின். செஞ்சரமென்றது செவ்வே செல்லும் வாளியென்றதன்றிப் பகைவருடலிற் புகுந்தவர் குருதி தோய்ந்திருத்தலை. உய்ந்து என்றது மரீஇயது. நாய்க்குகனென்றது தன்னை இழித்தற் கென்க. ஓத லீங்குப் பிறரிகழ்ந்து பேசுதலை. உமிழ்கின்றன என்பது வினையெச்சமுற்று. ஓகாரமெதிர்மறை, ஏகாரம் வினா, உம்மை இழிவுசிறப்பு. (கசு)

ஆழநெடும்புனல்கங்கைகடந்திவர்போவாரோ
வேழநெடும்படைகண்டுவிலங்கிடும்வில்லாளோ
தோழமையென்றவர்சொல்லியசொல்லொருசொல்லன்றோ
ஏழமைவேடனிறந்திலனென்றெனையேசாரோ.

---

* கண்ணிநுண் சிறுத்தாம்பு, செ. ௯.

(இ - ள்.) இவர் ஆழிநெடும்புனல் கங்கை கடந்துபோவாரோ - இவர் ஆழமும் நீளமுமுடைய அலையெறியும் கங்கையாற்றினைக் கடந்து செல்வரோ, வேழநெடும்படை கண்டும்விலங்கிடும் வில்லாளோ-சேனையாகிய பெரும்படையைப் பார்த்தும் விலங்காநிற்கும் வில்வீரனோ, தோழமையென்றவர் சொல்லியசொல் ஒருசொல் லன்றோ - நட்பார் தன்மை இருக்க என் றவர்கூறியமொழி யொருமொழியே யன்றோ, ஏழைமைவேடனிறந்திலன் என்று என்னை யேசாரோ - எளிமையையுடைய வேடன் இறவாதிருந்தன னென்றென்னை யேசமாட்டாரே.—

வேழநெடும்படை என்றது * 'யானையுடைய படைகாண்டல்' என்பிறருங்கூறுதலை, வேழத்தைக்கூறலான் ஏனைய படைகளையு முபலக்ஷணத்தாலமைக்க. தோழமை என்றது சொல்லானன்றினை. ஏழைமை அறிவின்மையை யுணர்த்திற் றென்னினுமமையும். ஒருசொல் என்றது உறுதிமொழி. (௪௫)

முன்னவனென் றுநினைந்திலன் மொய்புலியன்னானோர்
பின்னவனின் றனனென் றிலனன்னவைபேசானேல்
என்னிவனென் னையிகழ்ந்த திவ்வெல்லைகடந்தன் றோ
மன்னவர்நெஞ் சினில்வேடர்விடுஞ்சரம்வாயாவோ.

(இ - ள்.) இவன் முன்னவனென்று நினைந்திலன் - இப்பரதன் ஸ்ரீராமன் தனக்கு முன்றோனென் றெண்ணினானல்லன், மொய்புலி யன்னான் ஓர் பின்னவன் நின்றனன் என்றிலன் - வலிமையுடைய புலியை யொப்பானாகிய இலக்குவனாகிய ஒப்பற்ற பின்றோன் விடாது நிற்கின்றானென்பது கருதிலன், அன்னவை பேசானேல் - அவற்றைக் குறித்தெண்ணானேனும், என்னை இகழ்ந்ததென் - என்னை இகழ்ச்சியாகக் கருதியது என்பற்றி, இவ்வெல்லை கடந்தன்றோ-இவ்வெல்லையைக் கடந்துபோயன்றோ, வேடர் விடும் சரம்மன்னவர் நெஞ்சினில் வாயாவோ - வேடரெய்யும் அம்பு அரசர் மார்பி னூடுருவிப் பாயமாட்டாவோ.—

முன்னவன், பின்னவன் என்பன முன்பிறத்தல், பின்பிறத்தலை, பேசுதல் என்றது கருதுதலை; இதனைச் § 'செவிகைப்ப' என்று கூறியதற்குப் பரிமேலழகர் கூறியதனாற் காண்க. நெஞ்சு ஆகுபெயர். (௪௬)

* இனியவைநாற்பது. செ. ௧.

§ திருக்குறள், இறைமாட்சி செ. 9.

பாவமுநின்றபெரும்பழியும்பகைநண்போடும்
ஏவமுமென்பவைமண்ணுலகாள்பவரெண்ணாரோ
ஆவதுபோகவென்னாருயிர்த்தோழமைதந்தான்மேல்
போவதுசேனையுமாருயிருங்கொடுபோயன்றோ.

(இ - ள்.) பாவமுநின்ற பெரும்பழியும் பகைநண்போடும் ஏவமும் என்பவை மண்ணுலகாள்பவ ரெண்ணாரோ - தீவினையினையும் நிலைத்தபெரும் பழியினையும் பகைநட்புடன் துன்பமெனப்படுவனவும் மண்ணுலகாண்டு வருவாரெண்ணமாட்டாரோ, ஆவதுபோக - அது கிடக்க, என்னாருயிர் தோழமைதந்தான் மேல்போவது-என்னுயிருக்கு நண்பளித்தவன்மேற்செல்வது,சேனையுமாருயிருங் கொடுபோயன்றோ-தன்படையையும் தன்னரிய வுயிரையும் உடன்கொடு போனபின் பன்றோ.—

மேற்போவதென்பது போர்செய்து வெல்வது. ஆருயிர் கொடு போதலென்பது தன்கையம்புக் கிரையாதலை. இறைவனை கானேகச் செய்ததுமன்றி அங்கும் போர்க்கெழுந்தமை யடாதென்பார் "பாவமுநின்ற பெரும்பழியும் பகைநண்போடு மேவமு மென்பவை மண்ணுலகாள்பவரெண்ணாரோ"என்றார். அவற்றை நோக்கின் இங்ஙனம் வாராரென்பது காண்க. எவ்வமென்பது திரிந்து நின்றது. பாவம் என்றது மறக்கடையை, பழி என்றது பிறரால் தூற்றப்படுதலை. நண்பென்றது அரசனுக்கு வினையிடத் துதவுவதாய நட்பினை. அது இயற்கை, செயற்கை யென்றிருவகைப்படும். அவற்றை § "செயற்கரிய யாவுள நட்பின்" என்புழிப் பரிமேலழகர் கூறலானுங் காண்க. பகை என்றதுநலிவுசெய்தலை. 'சேனையுமாருயிருங் கொடுபோயன்றோ' எனப் பொதுபடக் கூறினமையான் என்சேனையு மென்னாருயிரு மென்பதன்றித் தன் சேனையுந் தன்னாருயிரு மெனவுங் கூறிக்கொள்க. கொண்டென்பது மரீஇயது. (கஎ)

அருந்தவமென் றுணையாளவிவன்புவியாள்வானோ
மருந்தெனினன் றுயிர்வண்புகழ்கொண்டுபின்மாயேனோ
பொருந்தியகேண்மையுகந்தவர்தம்மொடுபோகாதே
இருந்ததுநன் றுகழிக்குவெனென்கடனின்றோடே.

(இ - ள்.) அருந்தவமென் துணையாள இவன் புவியாள்வானோ-அருமையாகிய தவத்தை என் தோழன் செய்துகொண்டிருக்க இவன் நாடாண்டுவருவனோ, உயிர் மருந்தெனின் அன்று வண்புகழ் கொண்டுபின் மாயேனோ-உயிர்மருந்து போல்வதாயின் வளவிய புக

§ திருக்குறள், நட்பு, செ. க

ழுடம்பினைக்கொண்டு பின் பூதவுடம்புழியேனோ; பொருந்தியகேண்மை யுகந்தவர் தம்மொடு போகாதே இருந்ததுநன்று—என்னோடு பொருந்தியநட்பினைவிழைந்தவரோ டுடன்செல்லாதிங்கிருந்தமையேநன்று, என்கடனின்றே கழிக்குவென்-என் கடமையை இஞ்ஞான்றே கழிப்பேன்.—எ-று.

துணை என்றது சீராமனை - ஆகுபெயர், இவன் என்றது பரதனை, புகழென்றதனாற் புகழுடம்பினையும், மாய்வேனோ என்றதனாற் பூதவுடம்பினையு முணர்த்தின. என்றுணையென்றார் 'அன்புளவினி நாமோரைவர்களுளராமோம்' என முற்கூறியதனை வற்புறுத்தற்கு. உடன் செல்லாதிருந்தமையானன்றோ இப்பரதனைக் சேனையொடும் படைபொருதற்கு நேர்ந்ததென்பான் 'உண்மை யுகந்தவர் தம்மொடு போகாதேயிருந்தது நன்' றென்றார், என்கடன் என்றது பொருது வேறலை. (கஅ)

தும்பியுமாவுமிடைந்தபெரும்படைசூழ்வாரும்
வம்பியறாரிவர்வாள்வலிகங்கைகடந்தன்றோ
வெம்பியவேடருளீர்துறையோடம்விலக்கீரோ
நம்பிமுன்னேயினிநம்முயிர்மாய்வதுநன்றன்றோ.

(இ - ள்.) தும்பியு மாவுமிடைந்த பெரும்படை சூழ்வாரும் வம்பு இயல்தாரிவர் வாள்வலிகங்கை கடந்தன்றோ - யானையும் குதிரையுமாகிய பெருஞ்சேனை சூழப்பெற்ற மலர்மாலையணிந்த இவ்வரசர்வாள் வன்மை கங்கையாற்றினைக் கடந்தபின்னன்றோ; வெம்பிய வேடருளீர் துறையோடம் விலக்கீரோ - நீர்த்துறையில் ஓடம் விடுப்பதொழிவீர், இனி நம்பிமுன்னே நம் உயிர்மாய்வது நன்றன்றோ-இனி இறைவன் பொருதற்கு முன்னரே நம்முயிர் அழிவதுநன்றே யன்றோ.—எ-று.

வாளென்றது படைக்கலப்பொதுவை, துறையோட விலக்கீரோ வென்றார் துறையோடம் விட்டாலல்லதவ்விராமனை யடையாராகலின், நம்பி,முன்னே யென்றான் நம்மையனைத்தும் பொருதுவென்றாலல்லது இராமனைப்பொருதுவேற லாகாதென்ப துணர்த்திற்று. (கக)

போனபடைத்தலைவீரர்தமக்கிரைபோதாவிச்
சேனைகிடக்கிடுதேவர்வரிற்சிலைமாமேகம்
சோனைபடக்குடர்சூறைபடச்சுடர்வாளோடும்
தானைபடத்தனியானைபடத்திரள்சாயேனோ.

(இ - ள்.) போனபடைத் தலைவீரர் தமக்கு - சென்ற படைவீரர்க்கு, இரைபோதா-ஒருபோர்க்கேனும் பற்றாத; இச்சேனைகிடக்கிடு.

இப்பண்டிடக்க, தேவர்வரின் - தேவரே வந்தெய்தினும், சிலைமா மேகம் சோனைபட - என்வில்லாகிய பெரியமேகம் சோணமழையைப் பொழிய, குடர் சூறைபட - குடல் அலைபட, சுடர்வாளோடும் தானைபட - விளங்கும் வாளுடன் சேனையழிய, திரள்சாயேனோ - அக்கூட்டத்தினை யழிக்கேனோ.—எ-று.

போனபடைத் தலைவீரரென்றது சீராமலக்குவரை, அன்றிச் சென்ற சேனையின்கணுள்ள வீரரென்னினுமமையும். போதாவென்பது நிரம்பாவென்றபடி. சோனை - விடாதமழை. கிடக்கிடு திசைச்சொல். தேவர்வருத லருமையின் தேவர் வரினென்றதென்க. சிலையை மேகமெனக்கூறி அம்பினைக் கூறாமை ஏகதேசவுருவகம். சூறைபட ஒருசொல். ஓகார மெதிர்மறை. (உ௰)

நின்றகொடைக்கையென்னன்பனுடுக்கநெடுஞ்சீரம்
அன்றுகொடுத்தவண்மைந்தர்பலத்தையென்னம்பாலே
கொன்றுகுவித்தநிணங்கொள்பிணக்குவைகொண்டோடித்
துன்றுதிரைக்கடல்கங்கைமடுத்திடைதூராதோ.

(இ-ள்.) நின்ற கொடைக்கை என் அன்பன் உடுக்க - முடிபுனைய நின்ற கைத்தன்மையையுடைய கையையுடையனாகிய என் தோழன் புனைய, அன்றுநெடுஞ் சீரம்கொடுத்தவள் மைந்தர்பலத்தை - அற்றைஞான்று நீண்டமரவுரி கொடுத்தாள் மக்களாற்றலை, என் அம்பால் கொன்றுகுவித்த - என்கணையினாற் கொன்று குவியலாக்குவித்த, நிணங்கொள் பிணக்குவைகங்கை கொண்டோடி - நிணத்தைக்கொண்ட பிணக்குவையைக் கங்கையாறு இழுத்துக் கொடுசென்று, துன்றுதிரைக்கடல் மடுத்து - நெருங்கிய அலையையுடைய கடலினிறைத்து, இடைதூராதோ - அதனிடத்தைத் தூர்த்திடாதோ.—எ-று.

சீரைகொடுத்தவள் கைகேசி, மைந்தர்என இழிவாற் பன்மைப்பாலாற்கூறினார். அல்லது சத்துருக்கன் பரதனைவிடாது வருபவனாகலினுடன்கூறினா ரெனினுமமையும். குவித்தபிணக்குவை என்றியைக்க. தான்பெற்ற திருவமனைத்துந்தன் சிற்றவ்வைதான் பயந்தசேய்க்குதவிய சிறப்புத்தோன்ற கொடைக்கை யன்பனென்றார். அன்பனென்றது சீராமனை. (உக)

ஆடுகொடுப்படைசாடியறத்தவரேயாள
வேடுகொடுத்ததுபாரொனுமிப்புகழ்மேவீரோ
நாடுகொடுத்தவென்னாயகனுக்கிவர்நாமாளும்
காடுகொடுக்கிலராகியெடுத்ததுகாணீரோ.

(இ - ள்.) ஆடுகொடிப்படைசாடி - ஆடுகின்ற கொடியையுடைய சேனையையழித்து, அறத்தவரேயாள - அறத்தாற்றி னொழுகுபவரே யாண்டுவர, பார்வேடு கொடுத்தது எனும்புகழ் மேவீரோ - அரசச் செல்வத்தை வேடர் கொடுத்தனரென்றும் புகழினையடையீரோ, நாடு கொடுத்த என்னாயனுக்கு - நாட்டினையளித்த என்னிறைவனுக்கு, இவர் நாம் ஆளும் காடு கொடுக்கிலராகி - இவர் நாமுறையும் காட்டினையுங் கொடாது, எடுத்ததுகாணீரோ - படையெடுத்து வந்தமை பாரீரோ. எ-று.

வேடு சாதிப்பெயர், சொல்லானஃறிணை. நாயகன் இறைவனென்னும்பொருள்பயக்கும்வடசொல். பரம்பரையாய்த் தனக்கெய்தியசெல்வத்தைப் பின்னோனுக்குதவிய கொடைமை தோன்ற 'நாடுகொடுத்த வென்னாயக'னென்றும், காட்டையுமவர்கொடாதொழின் முறையன்றென்பார் 'நாடுகொடுத்தவென்னாயகனுக்கிவர் நாமாளுங்காடுகொடுக்கில' ரென்றார். எடுத்ததென்றது படையெடுப்பதனை. காடென்புழி இழிவு சிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. (௨௨)

மாமுனிவர்க்குறவாகிவனத்திடையேவாழும்
கோமுனியத்தகுமென்றுமனத்திரைகொள்ளாதே
ஏழுனையுற்றிடலேழுகடற்படையென்றாலும்
ஆழுனையிற்சிறுகூழெனவிப்பொழுதாகாதோ.

(இ - ள்.) மாமுனிவர்க்கு-பெருமை மிகுந்த முற்றத்துறந்த முனிவருக்கு, உறவாகிவனத்திடையே வாழும்கோ-நண்புடையனாய் கானினுறையும் எம்மிறைவன், முனியத்தகும் என்று - சினங்கொளத்தகுமென்று, மனத்திரை கொள்ளாது-உள்ளத்திடைச் சிறிதேனு நினையாமல், ஏழுனையுற்றிடினின் - அம்பினைப் போர்க்களத் தடைந்தெய்திடினும், ஏழு கடற்படை என்றாலும் - எழுகடலை யொத்தசேனையேயெனினும், ஆழுனையின் சிறுகூழென இப்பொழு தாகாதோ - இதுபொழுது ஆவினங்களிக்க முயல்கிற்பின் இளம்பயிரென் றழியாதோ.—எ-று.

தவவேடந்தாங்கியவர்க் குதவிசெய்தலின் மாமுனிவர்க்கென்றும், அவரோடுறவு பெரிதுடையனாய்க் காடுறைவாழ்க்கை மேற்கோடலின் உறவாகி வனத்திடையேவாழுங் கோவென்றும் அவனெடைதிர்ப்பினிறைவன் சிறிதுஞ் சினவாமையின் முனியத்தகுமென் மனத்திரை கொள்ளாதென்றும், அவன்சேனை என்வாளிக்கிலக்காகாமையின் 'ஏழுனையுற்றிடலேழுகடற்படை யென்றாலும் ஆழுனையிற்சிறு கூழெனவிப்பொழுதாகாதோ' வென்றுங்கூறினார். ஏவென்றதம்பினை. கூழென்றதாகுபெயர். சேனையின்மிகுதியை ஏழுகடற்படை என்றதென்க.

அப்படை முழுதுந் தன் கைவாளிக் கிலக்காகாவென்றார். 'ஆழுனையிற் சிறுகூழைனென்றுவமைமுகத்தாற் கூறியவாறு. தருமென்றது பொது வினை. இப்பத்துச் செய்யுளானும் குகன் பரதன் சேனையை வெல்லுதல் கூடுமெனத் தன்பரிவாரத்திடைக் கூறினமையுணர்த்தப்பட்டது. (உங)

என்பனசொல்லியிரும்பனமேனியரேனோர்முன்
வன்பணைவில்லினன்மல்லுயர்தோளினன்வாள்வீரற்
கன்பனுநின்றனனின்றதுகண்டரியேறன்ன
முன்பனில்வந்துமொழிந்தனன்மூரியதேர்வல்லான்.

(இ - ள்.) இரும்பன மேனிய ரேனோர்முன் - இரும்பன்ன வுடம்பினையுடையராய் ஏனை வேடர்முன், வன்பணை வில்லினன் மல்லுயர் தோளினன் வாள் வீரற் கன்பனு மென்பனசொல்லி நின்றனன் - வலிய வேயாற் சமைந்த வில்லையுடையானும் மற்போரி னுயர்ந்த தோளையுடையானும் வாட்போரில்வல்லனாகிய சிராமன்பால் அன்புமேற் கொண்டானுமாகிய குகன் இன்னன கூறி நின்றனன்; நின்றதுகண்டு - அவனின்ற நிலைகண்டு, மூரியதேர்வல்லான் - வலியதேரில் வல்லனாகிய சுமந்திரன், அரியேறன்ன முன்பனில்வந்து மொழிந்தனன் - ஆண்சிங்கம்போன்ற பரதனிடை வந்து கூறுவானாயினான். எ-று.

ஏனையோரென்றது திரிந்துநின்றது. வில்லினன், தோளினன், அன்பனென்பன குகனென்னு மொரு பொருண் மேனின்ற பலசொல். உம்மை உயர்வு சிறப்பு. என்பனவென்றது 'என்னுருயிர் நாயகனுளாமே வஞ்சனையாலர செய்தியமன்னரும் வந்தாரோ' என்பது முதலாயின. அரியேறன்ன முன்பனென்றது பரதனை, மூரியதேர் வல்லானென்றது சுமந்திரனை. (உச)

வேறு.

கங்கையிருகரையுடையான்கணக்கிறந்தநாவாயான்
உங்கள்குலத்தனிநாதற்குயிர்த்துணைவனுயர்தோளான்
வெங்கரியினேறனையான்விற்பிடித்தவேலையினான்
கொங்கலருநறுந்தண்டார்க்குகனென்னுங்குறியுடையான்.

(இ - ள்.) கங்கையிரு கரையுடையான் - கங்கையிருகரையுந் தனக்குரிமையாக வுடையான், கணக்கிறந்த நாவாயான் - அளவிறந்த படகுகளையுடையான், உங்கள் குலத்தனிநாதற் குயிர்த்துணைவன் - உங்கள் குலத் தனித்தோன்றலாகிய சிராமனுக் குயிர்த்தோழன்; உயர்தோளான் - உயர்ந்ததோளையுடையான், வெங்கரியின் ஏறு அனையான் - கொடிய யானைத்திரட்குச் சிங்கம் போல்வான், விற்பிடித்த வேலையினான் - வில்லேந்திய சேனைக்கட லுடையான்; கொங்கலரு நறுந்தண்டார்

குகனென்னுங் குறிப்புடையான் - தேன்பொழியு நறிய தண்ணிய மாலை வேய்ந்த குகனென்னும் பெயரினன்.—எ-று.

உங்கள் குலமென்றது மனுத்தொடக்க மானவரை; நனிநாதன் என்றது ஸ்ரீராமனை. உயர்தோளானென்றார் தோளுயர்ந்திருத்தல் புருடவிலக்கணத்துட் சிறந்தமையின். வெங்கரியி னேறென்பதற்குக் கொடிய களிற்றினை யொப்பனெனக் கூறினுமிழுக்காது. வேலை ஆகுபெயர். குறியென்பது பெயரை. விற்பிடித்த வென்றவடையான் வேலையெனற்குப் படையென் றுரைக்கப்பட்டது. (உ௫)

கற்காணுந்திண்மையான்கரைகாணுக்காதலான்
அற்காணிற்கண்டனையவழகமைந்தமேனியான்
மற்காணுந்திருநெடுந்தோண்மழைகாணுமணிநிறத்தாய்
நிற்காணுமுள்ளத்தானெறியெதிர்நின்றனனென்றான்.

(இ-ள்.) மற்காணும் திருநெடுந்தோள்-மற்போரினெல்லையைக் கண்ட அழகிய நீண்டதோளையும், மழைகாணும் மணிநிறத்தாய்-மழைபோலுமழகிய நிறத்தையுடையானே, கற்காணும்திண்மையான் - மலையைக் கண்டாற்போன்ற வன்மையுடையானும், கரைகாணுக் காதலான் - கரைகடந்த காதலையுடையானும், காணின் அல் கண்டனைய-நோக்குங்கால் இரவினைக் கண்டாற்போன்ற, அழகு அமைந்த மேனியான்-அழகமைந்த உடம்புடையானுமாகிய குகன், நிற்காணு முள்ளத்தான் நெறியெதிர் நின்றனன் என்றான் - நின்னைக் காணிய வுள்ளமுடையனாகி வழியெதிர் நிற்கின்றனன் என்று கூறினன்.—எ-று.

மழைகாணு மணிநிறத்தாய் என்றார் 'எள்ளரிய குணத்தாலு மில்லிருந்த - வள்ளலையே யனையானை, எனமுற்கூறிப் போந்தமையானுமுணர்க. நிற்காணு முள்ளத்தானென்றவனைக் காணுமுன்னரேயவன் கருத்துணர்ந்தமை *'மதிநுட்ப நூலோடுடைமையு மதிநுட்பம் - யாவுள முன்னிற்பவை' என்பதனாற் காண்க. இவ்விரண்டு செய்யுளானும் பரதனிடைச் சுமந்திரன் குகனைப்பற்றிக் கூறியதுணர்த்தப்பட்டது. (உ௬)

தன்முன்னேயவன்றன்மைதன் றுணைவன்முந்துரைத்த
சொன்முன்னேயுவக்கின்றதுருசிலாத்திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்டமனக்கினியதுணைவனேல்
என்முன்னேயவற்காண்பென்யானேசென்றெனவெழுந்தான்

(இ-ள்.) தன்முன்னே அவன் றன்மை - தன்னெதிர் அக்குகனது தன்மையை, தன் துணைவன் முந்துரைத்த சொன்முன்னே உவக்கின்ற - தன் மந்திரி முன்னே கூறிய சொன்முன்னே மகிழ்கின்ற, துரி

* திருக்குறள், அமைச்சு, செய். ௬.

சிலாத்திருமனத்தான்-மாசில்லாத அழகிய மனமுடையான், மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல் - நம்மிறைவன் முன்னட்புக்கொண்ட மனத்துக்கினிய நண்பனே யாயின், என் முன்னே அவற்காண்பென் யானே சென்றென எழுந்தான் - என்னைக் காணுமுன்னே யானேயவனைச் சென்று காண்பேனென் றெழுந்தனன்.—எ-று.

உழையிருப்பானாகலான் துணைவனென்றதென்க. மன்னென்றது இராமனை. துரிசிலாத் திருமனத்தானென்றார் 'எனைத்துள மறையவை யியம்பற்பாலன, பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையேன்' எனப் பிறகூறுதலா னென்க. தழீஇ சொல்லிசை யளபெடை. மன்னன் மனக்கினிய துணைவனேயாயின் அவனை யானே காண்பேனென்றான். இதனாற் பரதன் குகனைக் காண்பேனென்றமை யுணர்த்தப்பட்டது. (உஎ)

என்றெழுந்ததம்பியொடுமெழுகின்றகாதலொடும்
குன்றெழுந்துசென்றதெனக்குளிர்கங்கைக்கரைகுறுகி
நின்றவனைநோக்கினன்றிருமேனிநிலையுணர்ந்தான்
துன்றுகருநறுங்குஞ்சியெயினர்கோன் றுண்ணென்றான்.

(இ - ள்.) என்றெழுந்த தம்பியொடும் - எனக்கூறியெழுந்த தம்பியுடன், எழுகின்ற காதலொடும் - உள்ளெழுங்காதலுடனும், குன்று எழுந்து சென்றது என - மலையெழுந்து சென்றாற்போல, குளிர்கங்கைக் கரைகுறுகி - குளிர்ந்த கங்கையாற்றின் கரையை யடைந்து, நின்றவனை நோக்கினன் - நின்றுகொண் டிருந்தவனைக் கண்டனன், திருமேனி நிலையுணர்ந்தான் - அழகிய வுடம்பினையறிந்து, துன்றுகரு நறுங்குஞ்சி எயினர்கோன் - அடர்ந்த கருமையாகிய நெடிய மயிர்முடியையுடைய வேடர் பெருமான், துண் என்றான் - திடுக்கிட்டனன். எ-று.

என்றெழுந்து எனப்பாடங் கூறுவாருமுளர். தான் கருதிப்போந்தமைக்கும் பரதனிலைக்கு மெனைத்துமியைபின்மையான் துண்ணென்றானென்றதென்க. உயர்விற்கும் வன்மைக்குங் குன்றினை யுவமைகூறினார். எயினர்கோனென்றது குகனை. சென்றாலென்பது திரிந்து நின்றது. நின்றவனை என்றது பரதனை. இதனாற் குகன் பரதனைக் கண்டமை யுணர்த்தப்பட்டது. (உஅ)

வற்கலையினுடையானைமாசடைந்தமெய்யானை
நற்கலையின்மதியென்னநகையிழந்தமுகத்தானைக்
கற்கனியக்கனிகின்றதுயரானைக்கண்ணுற்றான்
விற்கையினின்றிடைவீழவிம்முற்றுநின்றொழிந்தான்.

(இ - ள்.) வற்கலையினுடையானை-மரவுரியாகிய ஆடையானும், மாசு அடைந்த மெய்யானை - புழுதிப்படிந்த மேனியானும், கல்கலையில் மதியென்ன நகையிழந்த முகத்தானை - அழகிய கலைகளை யிழந்த மதி போலு நகையிழந்த முகமுடையானும், கல்கனிய கனிகின்ற துயரானை - கல்லுமிகக் குழைந்துருகுந் துயரமுடையானுமாகிய பரதனை, கண்ணுற்றான் - கண்டு, விற்கையினின் றிடைவீழ - கையினின்றும் வில் நழுவிவிழ, விம்முற்று நின்றொழிந்தான் - கலக்குற்றுச் செயலற்று நின்றொழிந்தனன். — எ-று.

வற்கலை-வடசொற்சிதைவு. கலை - சந்திரன் பங்கு. விம்முற்று-ஒரு சொல். உடையான், மெய்யான், முகத்தான், துயரான் எனப்பரதனை யுணர்த்தி நின்ற வொருபொருள் மேனின்றன. இதனாற் பரதனிலைமையைக் குகன் கண்டமை யுணர்த்தப்பட்டது. (௨௧)

நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயனின்றான்
தம்பியையு மொக்கின்றான் றவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா ரிழைப்பரோ பிழைப்பென்றான்.

(இ - ள்.) நம்பியும் - பரதனும், என்நாயகனை ஒக்கின்றான்-என்னிறைவனை யொக்கின்றனன், அயல் நின்றான்-அயனின்றவனும், தம்பியையு மொக்கின்றான் - இலக்குவனையு மொக்கின்றனன், தவவேடம் தலைநின்றான் - தவப்படிவ மேற்கொண்டிருக்கின்றனன், துன்பமொரு முடிவில்லை - துயரத்துக்கோ ரெல்லையில்லை, திசைநோக்கி தொழுகின்றான்-திக்குநோக்கி வணங்குகின்றனன், எம்பெருமான் பின் பிறந்தார் பிழைப்பு இழைப்பரோ என்றான் - எம்மிறைவன் பின்றோன்றினோர் பிழைபாடு செய்வரோ வென்றனன். — எ-று.

'மற்றையவொளி' என முற்கூறியதனான் நம்பியுமென் னாயகனை யொக்கின்றானென்றும், அவனைப் பிரியாது கயிங்கரியஞ் செய்வானாய் இளையவன்போ லெய்தலின் தம்பியையு மொக்கின்றா னென்றும், அண்ணலெய்திய கான்படரக் கருதிச் சேறலின் றவவேடந் தலைநின்றானென்றும், தானுற்றாது செல்வான் திசைநோக்கி வணங்குவதாகலின் 'துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றா' னென்றும், ஸ்ரீராமன் பின்றோன்றியோர் பிழைபாடு செய்திலரென்பார் 'எம்பெருமான் பின் பிறந்தா ரிழைப்பரோ பிழைப்' பென்றுங் கூறினார். இதனாற் குகன், பரதன் றீங்கிலனென்ற துணர்த்தப்பட்டது. (௨௨)

உண்டிடுக்கணொன் றுடையானுலையாதவன் புடையான்
கொண்டதவவேடமேகொண்டிருந்தான் குறிப்பெல்லாம்
கண்டுணர்ந்துபெயர்கின்றேன்காமின்கணெறியென்னாத்
தண்டுறையோர்நாவாயிலொருதனியேதான்வந்தான்.

(இ - ள்.) உண்டு இடுக்கண் ஒன்றுடையான்-உள்ளதெனப்படுந் துயரமொன்றுடையானும், உலையாத அன்புடையான் - கெடாதவன்பினையுடையானாகிய இறைவன், கொண்ட தவ வேடமே கொண்டிருந்தான்-மேற்கொண்ட தவப்படிவமே கொண்டிருக்கின்றானுமாகிய பரதன், குறிப்பெல்லாங் கண்டுணர்ந்து பெயர்கின்றேன் - கருத்தனைத்தும் பார்த்தறிந்து மீள்வேன், நெறிகாமின்கள் என்னா - அதுகாறும் வழியினைக் காமினென்றுகூறி, தண்டுறையோர் நாவாயிலொருதனியே தான் வந்தான்-தண்ணிய கங்கைத் துறையிலொரு படகிற் றன்னந்தனியே சென்றனன்.—எ-று.

உலையாத வன்புடையான் கொண்ட தவவேடமே கொண்டிருந்தானென்றார், தவவேடந்தலைநின்றானென மேலதனை வற்புறுத்தற்கு; உலையாத வன்புடையானெனற்குக் கெடாத வாற்றலுடையானென்றுரைக்கினு மிழுக்காது. பெயர்கின்றேன் காலவழுவமைதி. உண்டு குறிப்பு முற்று. இதனாற் குகன் வேடரை மீண்டிருமினென்று சென்றமை யுணர்த்தப்பட்டது. (௫௧)

வந்தெதிரேதொழுதானைவணங்கினான்மலரிருந்த
அந்தணனுந்தனைவணங்குமவனுமவனடிவீழ்ந்தான்
தந்தையினுங்களிகூரத்தழுவினான்றகவுடையோர்
சிந்தையினுஞ்சென்னியினும்வீற்றிருக்குஞ்சீர்த்தியான்.

(இ - ள்.) வந்தெதிரே தொழுதானை - எதிரிலடைந்து வணங்கின குகனை, மலரிருந்த அந்தணனுந் தனை வணங்குமவனும் வணங்கினான் - தாமரை மலரின் மேவிய பிரமனுந் தனை வணங்குதற்குரிய பரதனுந் தலையசைத்தனன், தகவுடையோர் சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியான் அவனடி வீழ்ந்தான் - பெருங்குணமுடையார் மனத்தினுந் தலையினும் வீற்றிருக்குஞ் சிறப்பினையுடைய குகன் அவனடியில் விழுந்தனன்.—எ-று.

திசைநோக்கித தொழுகின்றானென மேலதனை வற்புறுத்த, வந்தெதிரே தொழுதானை, என்றார். இனித் தகவுடையோர் சிந்தையினுஞ் சென்னியினும் வீற்றிருக்குஞ் சீர்த்தியானென்பதற்கும் வந்தெதிரே தொழுதானென்பதற்கும் பரதனுக்கேற்றிக் கூறுவாருமுள்ளர். அற்றேல்

வருதல் குகனுடைய தொழிலாகலானும், பிற்கருத்தா வினை கொண்டு முடியவேண்டுதல் சாலாமையானும் அஃது உரையன்மை யறிக. சீர்த்தி யென்பது மிக்கபுகழினை. வடமொழிச் சிதைவென்பாருமுளர். அடி வீழ்ந்தான் என்பதற்கு அடியில் வீழ்ந்தானெனப் பொருளுரைக்க. இதனாற் குகன் பரதனைச்சென்று வணங்கினமை வுணர்த்தப்பட்டது. (௩௨)

வேறு.

தழுவினபுளினர்வேந்தன்றாமரைச்செங்கணானை
எழுவினுமுயர்ந்ததோளாயெய்தியதென்னையென்ன
முழுதுலகளித்ததந்தைமுந்தையோர்முறையினின்றும்
வழுவினனதனைநீக்கமன்னனைக்கொணர்வானென்றான்.

(இ - ள்.) தழுவின புளினர் வேந்தன் - தழுவப்பட்ட வேடர் பெருமானாகிய குகன், தாமரைச் செங்கணானை-தாமரை மலர் போலுஞ் செய்ய கண்ணையுடைய னாகிய பரதனை, எழுவினு முயர்ந்த தோளாய்-தூணினுந்திரண்ட தோளையுடையானே, எய்திய தென்னையென்ன - வந்தகாரண மியாதென்றுகூற, முழுதுலகளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும் வழுவினன் - உலகமுழுதுங் காத்தோம்பிய அரையர் பெருமான் பழயவரச ரொழுக்கினின்றுந் தவறினன், அதனை நீக்க மன்னனைக் கொணர்வானென்றான் - அதனைத் தவிர்க்க அவ்வரசுக்குரிய அரசனைக் கொடுபோக வந்தேனென்றனன்.—எ-று.

தழுவின எனச்செயப்படு பொருள் வினை முதல்போலக் கூறப்பட்டது. * 'இல்வாழ்வா' னென்புழிப்போல. புளினர் வேந்தனென்றது குகனை. தழுவின புளினர் வேந்தனென மேலதனை வற்புறுத்தியது. இறைவனாற்கூற்றினனென்றாகலாற் தாமரைச் செங்கணனென்றார். மன்னனென்றது ஸ்ரீராமனை. முந்தையோர் முறையினின்றும் வழுவுதல் ஸ்ரீராமனைக்காட்டேயச்செய்தலே. இதனாற் குகன் பரதனை வந்தகாரணமென்னவென்றமையும்; அவன் இறைவி[illegible]த்தமையு முணர்த்தப்பட்டது. (௩௩)

கேட்டனன்கிராதர்வேந்தன்கிளர்ந்தெழுமுயிர்ப்பனாகி
மீட்டுமண்ணதனில்வீழ்ந்தான்விம்மினனுவகைவீங்கத்
தீட்டருமேனிமைந்தன்சேவடிக்கமலப்பூவில்
பூட்டியகையன்பொய்யிலுள்ளத்தன்புகலலுற்றான்.

(இ - ள்.) பொய்யில் உள்ளத்தன் கிராதர் வேந்தன் கேட்டனன்-பொய்யில்லாத மனமுடையனாகிய வேடர்கட் கிறைவன்கேட்டு, கிளர்ந்தெழுமுயிரனாகி உவகைவீங்க விம்மினன் மீட்டு மண்ணதனில் வீழ்ந்தான்-சால மகிழ்ச்சி பூத்த உயிரினை யுடையனாகி உவகைமிக உடல்

* திருக்குறள், இல்வாழ்கை, செய். ௧.

பூரித்து மீள மண்ணிடை விழுந்து, திட்டருமேனிமைந்தன் சேவடிக்கமலப்பூவில் பூட்டியகையன் புகலலுற்றான்-எழுதரிய மேனியையுடைய பரதன் செந்தாமரை மலர்போன்ற சேவடியில் சேர்ந்த கைகளையுடையனாய்க் கூறத்தொடங்கினான்.—எ-று.

கேட்டனன், வீழ்ந்தனன், விம்மினன் வினையெச்சமுற்று. கிராதர் வேந்தன், பொய்யி லுள்ளத்தனென்பன குகனென்னு மொருபொருள் குறித்து நின்றன. (௬௪)

தாயுரைகொண்டுதாதையுதவியதரணிதன்னைத்
தீய்வினையென்னநீத்துச்சிந்தனைமுகத்திற்றேக்கிப்
போயினையென்றபோழ்துபுகழினோய்தன்மைகண்டால்
ஆயிரமிராமர்நின்கேளாவரோதெரியினம்மா.

(இ-ள்) புகழினோய்-புகழினையுடையானே, தாயுரைகொண்டு-தாய்சொன் மேற்கொண்டு,தாதை யுதவியதரணி தன்னை-தந்தையளித்த தரணியை,தீவினை யென்னநீத்து-கொடுந்தொழிலென்றறவே கைவிட்டு, சிந்தனை முகத்திற் றேக்கி-முகத்திற் கவலைகாட்டி, போயினையென்ற போழ்தும்-வந்தனையென்ற பொழுதினும், தன்மைகண்டால்-தன்மையைக்காணின், தெரியின் ஆயிரம் இராமர் நின்கேளாவரோ-ஆராயின் ஆயிரஞ் சீராமர் நினக்கொப்பாவரோ.—எ-று.

தான் தாய்வரத்தாற் பெற்றவரசைத் துறத்தலாற் புகழினையென்றதென்க. தாயென்றது கைகேசியை. இறைவன் கைவிட்ட வரசைத் தான் பாவமென நீத்தமையின் தீவினையென்ன நீத்தென்றும், இத்தன்மையாய் நற்குணத்துக் கிராமர் பலரு நின்னொப்பாரன்மையின் 'ஆயிரமிராமர் நின்கேளாவரோ' வென்றுங்கூறினார். 'சிந்தனை முகத்திற்றேக்கி யென்றது, * 'நெஞ்சிற் கடுத்தது காட்டுமுக' மென்பதனை. (௬௫)

என்புகழ்கின்றதேழையெயினனேனிரவியென்பான்
தன்புகழ்க்கற்றைமற்றையொளிகளைத்தவிர்க்குமாபோல்
மன்புகழ்பெருமைநுங்கண்மரபினோர்புகழ்களெல்லாம்
உன்புகழாக்கிக்கொண்டாயுயர்குணத்துரவுத்தோளாய்.

(இ-ள்.) உயர்குணத் துரவுத்தோளாய்-உயர்வாகிய குணத்தையும் ஆற்றன்மிக்க தோளையு முடையானே, ஏழை யெயினனேன் என்புகழ்கின்றது-அறிவிலியாகிய வேடனாகிய யான் புகழ்வது யாது, இரவி

---

* திருக்குறள், குறிப்பறிதல், செய். ௬.

யென்பான் தன்புகழ்க் கற்றை - ஞாயிற்றின் ஒளிக்கூட்டம், மற்றை யொளிகளைத் தவிர்க்குமாபோல் - ஏனைக் கோளினொளிகளைத் தன்னு ளடக்குவதுபோல, மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழை யெல்லாம் - நிலைபெற்ற புகழினையுடைய பெருமையமைந்த நும் மர போர் புகழினையெல்லாம், உன்புகழாக்கிக் கொண்டாய்-நின்புகழின்க ணடங்கச் செய்தனை.—எ-று

எவன் என்னும் வினாவினைக் குறிப்பு என்னென்னென்றாய் இன் மைப்பொருள் குறித்து நின்றது. புகழென்றது வினைப்பெயர். புகழெனக் காரியத்தைக் காரணமாக உபசரித்தார். மன்புகழ் பெருமை யெனற் கரசராற் புகழப்படும் பெருமையெனக் கூறுவதுமொன்று. ஏழையெயினேன் இடவழுவமைதி. அரசர் புகழினை நின்னினடங்கு வதென்பதற்கு ஞாயிற்றினொளியி னேனைக் கோள்களினொளி யடங்கு வதனை யுவமை கூறினர். மற்றையொளி யென்றதனைக் கோள்களி னொளியை. நும்மரபோரென்றது மனுத்தொடக்கமானவரை. நுங்க ளெனப் பன்மையாகக் கூறினர் சீராமனையு முளப்படுத்தியென்க. இம் மூன்று செய்யுளானும் குகன் பரதனைப் புகழ்ந்துகூறினமை யுணர்த்தப் பட்டது. (௫௯)

எனவிவையின்னமாற்றமியைவனபலவுங்கூறிப்
புனைகழற்புலவுவேற்கைப்புளிஞர்கோன்பொருவில்காதல்
அனையவற்கமைவிற்செய்தானவற்கன்பிலாதார்
நினைவருங்குணங்கொடன்றோவிராமன்மேனிமிர்ந்தகாதல்

(இ-ள்.) புனைகழல் புலவுவேற்கை புளிஞர்கோன்-புனைந்த வீர கண்டையினையும் ஊன்றங்கிய வேலேந்திய கையையுமுடைய வேடர் கோமான், இயைவன இவை அன்னமாற்றம் எனைப்பலவுங் கூறி - பொருந்துவனவாகிய இவைபோன்ற சொற்கள் எனைப்பலவுஞ் சொல் லி, அனையவற்கு பொருவில் காதல் அமைவிற்செய்தான் - அன்னனுக் கொப்பில்லாதவன்பை அமைதியாகச் செய்தனன்; அவற்கன்பிலாதா ரார்-அவன் பாலன்பு செய்யாதார் யாவர்; நினைவருங் குணங்கொடன் றோ விராமன்மே னிமிர்ந்த காதல் - நினைத்தற் கருமையாகிய குண முடையானன்றோ சீராமன்பாலு மன்பு சிறந்தது.—எ-று,

யாரென்பதாரென மரீஇயது. சீராமனைக் கண்டார்க்கு காதன் மிகுதலின் நினைவருங் குணங்கொடன்றோ விராமன்மே னிமிர்ந்த காத லென்றார். அவன் செய்த காதற்கு நிகரின்மையின் பொருவில் காத லென்றதென்க. எனையவை யன்ன மாற்றமியைவன பலவுங் கூறி

பென்றார் தாயுரைகொண்டு தாதையுதவிய தரணிதன்னை யென்றார்போல் வனவற்றை, இது கவிக்கூற்று. (௬௭)

அவ்வழியவனைநோக்கியருடருவாரியன்ன
செவ்வழியுள்ளத்தண்ணறென்றிசைச்செங்கைகூப்பி
எவ்வழியுறைந்தானம்முன்னென்றலுமெயினர்வேந்தன்
இவ்வழிவீரயானேகாட்டுவலெழுகவென்றான்.

(இ-ள்.) அவ்வழி அருள்தரு வாரியன்ன செவ்வழி யுள்ளத்தண்ணல் - அவ்வேலை கருணைக்கடல் போன்ற நடுவு நிலையிற் செல்லுமனத்தையுடைய பெரியோன், அவனைநோக்கி - குகனைப்பார்த்து, தென்றிசை செங்கைகூப்பி - தென்றிசை நோக்கிச் செங்கை குவித்துநின்று, நம்முன் எவ்வழியுறைந்தானென்றலும் - யாண்டு நம்முன்னோன் எழுந்தருளியிருந்தனனென்றலும், எயினர்வேந்தன் இவ்வழியானே காட்டுவல் வீரவெழுக வென்றான் - வேடர்பெருமான் வீரத்தன்மையுடையானே யீண்டேயான் காட்டுவேனெழுக வென்றனன்.—எ-று.

நம்முனென்றார் குகனைத்தன்னொடுளப்படுத்தி. காட்டுவல் என்றது அல்லீற்றுத்தன்மை யொருமை. அண்ணலென்றது பரதனை. தவவேடங்கொண்டமையின் அருடருவாரியன்ன செல்வழி யுள்ளமென்றார், இதனாற் சிராமன் யாண்டிருந்தானெனப் பரதன் வினாயினமையு மதற்குக் குகன் கூறினமையுமுணர்த்தப்பட்டன. (௬௮)

காரெனக்கடிதுசென்றான்கல்லிடைப்படுத்தபுல்லின்
வார்சிலைத்தடக்கைவள்ளல்வைகியபள்ளிகண்டான்
பார்மிசைப்பதைத்துவீழ்ந்தான்பருவரற்பரவைபுக்கான்
வார்மணிப்புனலான்மண்ணைமண்ணுநீராட்டுங்கண்ணான்.

(இ-ள்.) காரெனக் கடிது சென்றான் - மேகம்போல் விரைந்து சென்று, வார்சிலைத்தடக்கையவள்ளல் - நீண்ட வில்லேந்திய விசாலித்த கையையுடைய வள்ளியோனாகிய சிராமன், வைகியகல்லிடைப் படுத்த புல்லின் பள்ளிகண்டான் - தங்கிய கல்லிடைப்பரப்பிய புல்லினாகிய படுக்கையைப்பார்த்து, பார்மிசை பதைத்து வீழ்ந்தான் - நிலத்திடைப்பதைத்து விழுந்து; வார்மணிப்புனலான் மண்ணை மண்ணு நீராட்டுங்கண்ணான் - பெருகும் முத்தையொத்த நீரான்மண்ணை நீராட்டுங் கண்ணையுடையனாகிய, பருவரற்பரவைபுக்கான் - துன்பக்கடலிடையாழ்ந்தனன்.—எ-று.

காரெனப்பரதனுக்குவமை கூறினார். சென்றான் என்பது வினைப்பெயர். பரதனை, கண்டான், புக்கான், கண்ணான் என்பன வினையெச்சமுற்று. (௬௯)

60

இயன்றதென்பொருட்டினலிவ்விடருனக்கென்றபோழ்தும்
அயின்றனைகிழங்குங்காயுமமிர்தெனவரியபுல்லில்
துயின்றனையெனவுமாவிதுறந்திலென்சுடருங்காசு
குயின்றுயர்மகுடஞ்சூடுஞ்செல்வமுங்கொள்வென்யானே.

(இ-ள்.) என் பொருட்டினல் - என்னிமித்தமாக, உனக்கு இவ் விடர் இயன்றது - உனக்கித்துன்ப நேர்ந்தது, என்ற போழ்தும் - என் றறிந்த காலத்தும், கிழங்கும்காயும் அமிர்தெனவயின்றனை - கிழங்கும்காயு மமுதம்போலுண்டனை, அரியபுல்லில் - கண்படைகொள்ளுதற் கரியபுல்லி ன்கண், துயின்றனை-தூங்கினை, எனவும்-என்றறிந்தஇதுபொழுதும், யானு வி துறந்திலேன் - யானுயிர் நீங்கிலேன், சுடருங்காசுகுயின்று - பிரகாசிக் கின்ற மணிகள்பதித்து, உயர்மகுடஞ்சூடும் செல்வமும் - உயர்ந்த கிரீடம் புனைகின்ற செல்வமும், யானேகொள்வேன்-யானே அடைவேன்.—எ-று.

என்பொருட்டு என்புழி பொருட்டுச் சொல்லுருபு. ஆலசை. கண் படை கோடற் கியல்பாகலின் அரிய புல்லென்றார். யானுவி துறந்திலே னென்புழித் தன்மையிற் படர்க்கைவந்த வழுவமைதி. இட்சுவாகு குலத் தார் புனையு முடியாதலின் உயர் மகுடமென்றதென்க. இச்செய்யுளாற் பரதன் தன்னைத்தானேவெறுத்துக்கொண்ட துணர்த்தப்பட்டது. (சஎ)

தூண்டரநிவந்ததோளான்பின்னருஞ்சொல்லுவானந்
நீண்டவன்றுயின்றசூழலிதுவெனினிமிர்ந்தநேயம்
பூண்டவன்றொடர்ந்துபின்னேபோந்தவன்பொழுதுநீத்த
தியாண்டெனவினிதுகேட்டானெயினர்கோனிதனைச்சொன்னன்.

(இ-ள்.) தூண்தர நிவந்த தோளான் பின்னரும் சொல்லுவான் - தூண்போலோங்கிய தோளையுடைய பரதன் பின்னும் சொல்லுவான், அந்நீண்டவன் துயின்ற சூழல் இதுவெனின் - அப்பெரியவனுகிய ஸ்ரீராமன் துயில்கொண்ட இடமிதுவெனின், நிமிர்ந்த நேயம் பூண்டவன் - அவன்பால் மிக்க அன்புமேற் கொண்டவனும், தொடர்ந்து பின்னே போந்தவன் - அவனை விடாது பின் சென்றவனுமாகிய இளையவன், பொழுது நீத்ததுயாண்டென - பொழுது போக்கிய தெவ்விடத் தென, இனிது கேட்டான் - இனிமையாய்க் கேட்டனன், எயினர்கோன்இதனைச் சொன்னன்-வேடர்க்கரசனுகிய குகனிதனைச் சொல்வானயினன்.—எ-று.

தூண்டரவென்புழி தரவுவமவுருபு. தூண்தோட்குவமை. பின்னரு மென்றது வினைமாற்றுப்பொருளது. பெரியோனென்றூர், திருவிக் கிரமனை. (சஅ)

அல்லையாண்டமைந்தமேனியழகனுமவளுந்துஞ்ச
வில்லையூன்றியகையோடும்வெய்துயிர்ப்போடும்வீரன்
கல்லையாண்டுயர்ந்ததோளாய்கண்கணீர்சொரியக்கங்குல்
எல்லைகாண்பளவுநின்றானிமைப்பிலனயனமென்றான்.

(இ-ள்.) கல்லையாண் டுயர்ந்த தோளாய் - மலைபோ லுயர்ந்த தோளையுடைய பரதனே, அல்லை ஆண்டு அமைந்த மேனியழகனும் - இரவுப் பொழுதையாண்டு சமைந்துள்ள மேனியையுடைய அழகப்பிரானாகிய இராமனும், அவளும் - சனகியும், துஞ்ச - கண்படைகொள்ள, வீரன்வில்லை யூன்றிய கையோடும் - இளையவன்வில்லை யூன்றியகையுடன், வெய்துயிர்ப்போடும் - பெருமூச்சோடும், கண்கள் நீர் சொரிய - கண்களில் நீர் பொழியா நிற்ப, கங்குல் எல்லை காண்பளவும் - இரவுகழிந்து வைகறையாமளவும், நயனம் இமைப்பிலன்-கண்களிமையாமல், நின்றானென்றான் - காவல் செய்து நின்றனன் என்றான்.—எ-று.

கல்லையாண்டுயர்ந்த தோளாயெனவிளித்தது பரதனை. தோட்குவமம், இராத்திரிமேனி யென்பகாவலின் அல்லையாண் டமைந்தமேனி யென்றும், இராமனென்றும் பெயர் பற்றியழகனென்றுங்கூறினார். அன்றையிரவு இறையவன் கண்டுஞ்சாமையை விளக்குவான் வீரன்வில்லை யூன்றிய கையோடும் வெய்துயிர்ப்போடும் கண்கணீர் சொரிய நயனமிமைப்பில நின்றானென்றதென்க. வைகறை யெய்துமென்பார் கங்குல்எல்லை காண்பளவுமென்றார். இச்செய்யுளான் பரதனுக்குக்குகன் விடையிறுத்தமை யுணர்த்தப்பட்டது. (சஉ)

என்பத்தைக்கேட்டமைந்தனிராமனுக்கிளையாரென்று
முன்பொத்ததோற்றத்தேமில்யானென்றுமுடிவிலாத
துன்பத்துக்கேதுவானேனவனது துடைக்கநின்றான்
அன்பத்துக்கெல்லையுண்டேயழகிதென்னடிமையென்றான்

(இ-ள்.) என்பத்தை கேட்ட மைந்தன் - என்பதனைக் கேட்ட பரதன், இராமனுங் கிளையாரென்று - சிராமனுக் கிளையவனென்று, முன் பொத்த தோற்றத்தேமில் - முன்பொத்த பிறப்பினருள்; யானென்று முடிவிலாத துன்பத்துக் கேதுவானேன் - யானென்ஞான்று மீறில்லாத துயருக்குக் காரணமானேன், அவன் அது துடைக்க நின்றான் - அவன் அது கெடுக்க நின்றனன், அன்பத்துக் கெல்லையுண்டே - அன்பிற் கெல்லையுள்ளதே, அழகி தென் அடிமை யென்றான் - அழகுடைய தென்னடிமைத் தன்மை யென்றனன்.—எ-று.

அன்பத்தைக் கேட்டலென்றது "கண் கணீர் சொரியக் கங்குலெல்லை காண்பளவு நின்றானிமைப்பிலனயன" மென்றதுபோல் வதை.

என்பதை யென்றது விரித்தல் பெற்றது, 'இத்தை' என் புழிப்போல; இளையார் மூவரேனும் இராமனுக் கிளையானெனப்படுபவன் இலக்குவ ளுகலின் இராமனுக் கிளையாரென்று' என்றும், அவனொடொத்த பிறப் புடையரேனும் தான் காடுசெல்லக் காரணமாதலின் முன்பொத்ததோற் றத் தேமில் யானென்று முடிவிலாத துன்பத்துக் கேதுவானேனென் றும், அவன் உடன் சென்றூழித்தலான் அவனது துடைக்க நின்ரு னென்றும், அவன் அன்பினுக் கெல்லையின்ருகலின் அன்பத்துக் கெல்லை யுண்டேயென்றும், என்னடிமை சிறப்பன்ருகலின் அடிமை யழகிதெ னென்றுங் கூறினர். ஏது வடமொழிச் சிதைவு. இதனுற் பரதன் குக னிடந்தன்னடிமைத்திற மழகிதென்றமை யுணர்த்தப்பட்டது. (சங)

அவ்விடையண்ணருனுமன்றரும்பொடியின்வைகித்
தெவ்விடைதரநின்ருர்க்குஞ்செறிகழற்புளிஞர்கோமாஅன்
இவ்விடைக்கங்கையாற்றினேற்றினேயாயினெம்மை
வெவ்விடர்க்கடனின்றேற்றிவேந்தன்பால்விடுத்ததென்ருன்.

(இ - ள்.) அவ்விடை அண்ணருனும் - அவ்விடத்துப் பரதனும் அன்றரும் பொடியின் வைகி-அற்றையிர விடைத்துயிலலாகாத புழுதி யிற்படுத்து, தெவ்விடைதர நின்ருர்க்குஞ் செறிகழற் புளிஞர் கோ மா அன் - பகைவர் புறங்காட்ட நிலைத்தொலிக்கும் பொருந்திய வீர கண்டை யணிந்த வேடர்பெருமானே, இவ்விடை கங்கையாற்றி னேற் றினேயாயின் - இற்றைப் போதென்னைக் கங்கையாற்றி னின்றுங் கரையேற்றினையேல், வெவ்விடர்க் கடனின் றேற்றி வேந்தன் பால் விடு த்ததென்ருன் - கொடிய துன்பக்கடலி னின்றேற்றி யரசன் பால் விடு த்ததென்றனன்.—எ-று.

தெவ் வாகுபெயர். கோமாஅன் என்றதுவிளிப்பெயர். 'அளபெடைப் பெயரே யளபெடையியல' என்பதனுலமைக்க. புளிஞர்கோமாஅனென்றது குகனை. இடர்க்கடல் என்ற திருபெயரொட்டுப் பண்புத்தொகை. வேந்த னென்றதிறைவனை. அரும்பொடியென்ருர் பிறர் துயிலற் கமையாமை யின். இடர்க்கடலென்ற திறைவனைக் சாணுமையை. இதனுற் பரதன் குகனைக்கங்கைக்கரையேற்றுசென் றுவேண்டினமை யுணர்த்தப்பட்டது. (சச)

நன்றெனப்புளிஞர்வேந்தனண்ணினன்றமறைநாவாய்
சென்றினித்தருதிறென்னவந்தனசிவன்சேர்வெள்ளிக்
குன்றெனக்குனிக்குமம்பொற்குவடெனக்குபேரன்மானம்
ஒன்றெனநாணிப்பல்வேறுருவுகொண்டனையவான.

(இ-ள்) புளிஞர் வேந்தன் நன்றென - குகன் நன்றென்று, தமரை நண்ணினன் - சுற்றத்தவரை அடைந்து, நாவாய் சென்று நீர் தருதிர் என்ன -

போய்ப்படகினைக் கொணர்மினென்று கூற, சிவன் சேர் வெள்ளிக்குன்றென-சிவன் இருக்கும் கயிலைமலையென, குனிச்குமம் பொற்குவடென-அவன் வளைத்த அழகிய மேரு மலையென, குபேரன் மானமொன்றென-குபேரன் விமான மொன்றென, நாணிப் பல்வேறுருவுகொண் டனைய வான வந்தன—நாணங்கொண்டு பல வேறுருவங்கொண்டாற் போன்றனவான வந்து சேர்ந்தன.—எ-று.

நன்றென்ற தடன்படலை. பெருமை வெண்மை செம்மையாகிய வேறுபாட்டிற்கு நாவாயை வெள்ளிக்குன்றெனக் குனிசுமம் பொற் குவடென வென்றும், தன்னிடைப் பலருமுழுதொருங் கிருக்கவிடந்தருதற்குக் குபேரன்மானமொன்றெனவென்றுமுவமைகூறினர். குபேரன் மானமென்றது புட்பகத்தை. விமானமென்றது முதற் குறைந்து நின்றது. குபேரனென்றது வடதிசைக்கோனை. (சரு)

நங்கையர்நடையினன்னநாளுறுசெலவினுவாய்
கங்கையுமிடமிலாமைமிடைந்தனகலந்தவெங்கும்
அங்கொடிங்கிழித்தியேற்றுமமைதியினமரர்வையத்
திங்கொடங்கிழித்தியேற்றுமிருவினையென்னலான.

(இ-ள்.) அங்கொடிங் கிழித்தியேற்று மமைதியின் - ஆண்டுள்ளாரை யீண்டும் ஈண்டுள்ளாரை யாண்டுமாக விழித்தியேற்றுகின்ற தன்மையான், அமரர்வையத் திங்கொடங் கிழித்தியேற்றும் இருவினை யென்னலான-துறக்கநாட்டிற்கிங்குநின்றமங்கு மங்குநின்றிங்குமாக விழித்தியேற்று மிருவினையுமென்றுவமை கூறபடுவனவான, நாவாய் நங்கையர் நடையின்-படகுகள் மாதர்நடைபோன்றும், அன்னம் நாளுறு செலவின் – அன்னங்கள் நாளுறுஞ்செலவினுல், கங்கையு மிடமிலாமை மிடைந்தன கலந்த வெங்கும் - கங்கையுமிடம்பெறுமை யாண்டும் நெருங்கிச் சேர்ந்தன.—எ-று.

நங்கையரென்றது மாதறிற்சிறந்தோரை. இருவினையென்றது நல்வினை தீவினைகளை, ஆனவினைப்பெயர். நல்வினையான துறக்கமும், அஃதொழிந்த பின்னர் மண்ணுலகமுமெய்தலின் அங்கொடிங்கிழித்தியேற்று மிருவினையென்னலான வென்றார். நாவாய் நடைநங்கையர் நடையினன்ன நாளுறு செலவினென் றுவமைகூறினர். மிடைந்தவென்றது வினையெச்சமுற்று. இவ்விரண்டு செய்யுளானுங்குகன் படகு கொணர்ந்தமை யுணர்த்தப்பட்டது. (சசு)

வந்தனவரம்பினுவாய்வரிசிலைக்குரிசின்மைந்த
சிந்தனையாவதென்றுசிருங்கிபேரியர்கோன்செப்பச்
சுந்தரவரிவிலாளுஞ்சுமந்திரன்றனைநோக்கி
எந்தையித்தானைதன்னையேற்றுதிவிரைவினென்றான்.

(இ-ள்.) சிருங்கி பேரியர் கோன்-சிருங்கி பேரபுரத்தார்க்கரசனாகிய குகன், வரிசிலைக்குரிசின் மைந்த-கட்டமைந்த வில்லையுடைய அரசன்மகனே, வரம்பில் நாவாய் வந்த-அளவில்லாத படகுகள் வந்தன, சிந்தனையாவதென்று செப்ப-கருத்தி யாதென்று கூற, சுந்தரவரிவிலானும்-அழகிய கட்டமைந்த வில்லையுடையானும், சுமந்திரன் றன்னைநோக்கி- சுமந்திரனைப்பார்த்து, எந்தை இத்தானைதன்னை விரைவின் ஏற்றுதியென்றான்- எந்தையன்றானே இப்படையை விரைந்து ஏற்றுதியென்றனன்.—எ-று.

சிருங்கி பேரமென்றது குகப்பெருமான் வசிக்குமூரை. இதனைச் சிருங்கி பேரபுரமெனக் கங்கையின் மருங்குதோன்று நகர் என முற்கூறலாற்காண்க. குருசின்மைந்த என்றதும், சுந்தர வரிவிலானு மென்றதும் பரதனை. எந்தையென்றார் தந்தைக்குப் பெருந்துணைவனாகலின். இதனாற் பரதன் சுமந்திரனை நோக்கிப் படையினைப் படகிலேற்றுகென்ற துணர்த்தப்பட்டது. (எள)

குரிசிலதேவலாலக்குரகதத்தேர்வலானும்
வரிசையின்வழாமைநோக்கிமரபுளிவகையினேற்றக்
கரிபரியிரதங்காலாள்கணக்கறுகரையில்வேலை
எரிமணிதிரையின்வீசுங்கங்கையாறேறிற்றன்றே.

(இ - ள்.) குரிசிலது ஏவலால்-பரதனது ஆணையான், அக்குரகதத்தேர்வலானும்-அக்குதிரை பூட்டிய தேர்வல்லமையுடைய சுமந்திரனும், வரிசையின் வழாமைநோக்கி-ஒழுக்கின் வழுவாமைகண்டு, மரபுளிவகையினேற்ற-முறைமையான்வகைப்படுத்தேற்ற, கரி பரி யிரதங் காலாள் கணக்கறுகரையின் வேலை-யானை குதிரை தேர் காலாளென்னுங் கணக்கிறந்த கரையினையுடைய கடல், எரிமணி திரையின் வீசுங்கங்கையாறேறிற்று-விளங்குமணிகளை யலைகளாலெறியுங் கங்கையாறேறிற்று.—எ-று.

மரபுளி என்பதற்கு மரபுள்ளியென்றுரைப்பாருமுளர், மரபுளியெனற்கு முன்னர்க்கூறினும். நால்வகைப்படையுட் களிறு சிறந்தமையாற் கரியை முற்கூறினார். கய ரத துரகமாக் கடலன் கல்வியன் என முற்கூறுதனோக்கி. படையைக்கரையின் வேலையென்றவமை கூறினார். இதனாற்பரதன் சேனை கங்கைக்கரை கடந்தமையுணர்த்தப்பட்டது- (எஅ)

இப்படிமுழக்கம்பொங்கவினமழைமகரநீரை
முடிவுறமுகப்பவூழியிறுதியின்மொய்ப்பபோலக்
கொடியொடுவெங்கம்வேலைகூம்பொடுபடர்வபோல
நெடியகையெடுத்துநீட்டிநீந்தினநெடுங்கைவேழம்.

(இ - ள்.) இனமழை - மேகக்கூட்டம், இடிபடுமுழக்கம் பொங்க - இடியோசை கெடுமொலிமிக, ஊழியிறுதியின் மகரநீரை முடிவறமுகப்ப-ஊழிகாலத்திறுதியிற் கடனீரைமுகந்துகொள்ள, மொய்ப்போல - நெருங்

குவபோல,கொடியொடுவேங்கம் - கொடியொடு கூடியமரக்கலம், வேலை கூம்பொடுபடர்வபோல - கடலிற்பாய்மரத்துடன் செல்வனபோல, நெடுங்கை வேழம் - நீண்ட கையையுடைய யானைகள், நெடியகையெடுத்து நீட்டிநீந்தின - நீண்ட கையையுயரவெடுத்து நீந்திச்சென்றன.—எ-று.

மகரநீரென்றது கடலை. வேலையென்றதுமது. முசத்தல்என்றது குறைப்படுதலை. தடிதலுமது. இதனைக் 'கடல் குறைபடவெறிந்து' என்பதனுமறிக. மேகம் யானைக் கூட்டத்திற்குவமை. இடியோசை அவற்றினோசைக்குவமை. யானையிடியோசைபோன் முழங்கிக் கங்கைநீரைக் குறைப்படுத்துக கொடியொடுவங்கம் வேலைக் கூம்பொடு படர்வபோல நீந்திச் சென்றனவென்பதாம். (சகூ)

சங்கமுமகரமீனுந் தாளமுமணியுந்தள்ளி
வங்கநீர்கடலும்வந்துதன்வழிப்படரமானப்
பொங்குவெங்களிறுநூக்கக்கரையொரீஇப்போயிற்றம்மா
கங்கையுமிராமற்காணுங்காதலதென்னமாதோ.

(இ - ள்.) சங்கமும் மகரமீனுந் தாளமு மணியுந்தள்ளி - சங்கினையு முதலையையுமுத்தையு மணியையுங்கொழித்து, வங்கநீர்க்கடலும் வந்துதன் வழிபடர - மரக்கலமுலாவு நீரையுடையகடலும் வந்துதன்பாற்படரவ, மானம்பொங்குவெங்குகளிறுநூக்க-பெருமைமிக்க கொடியயானைகள் தள்ளுதலினன், கங்கையுமிராமற் காணுங்காதலதென்ன கரையொரீஇப் போயிற்று- கங்கையுமிறைவனைக் காணும் ஆசையையுடையதெனக் கரைகடந்துசென்றது.—எ-று.

மகரமீன் இருபெயர்ப்பண்பு. யானை கங்கையினிக்கரை கடந்து அக்கரை சேறலான் இறைவனைக் காணுங் காதலாற் சென்றதென்றுவமைமுகத்தாற் கூறினர். காணுமென்னும் பெயரெச்சம் காதலென்னுஞ்செயற்பெயரைக்கொண்டது. மாதே, அம்மா அசைகள். கங்கையுமென்ற உம்மை உயர்வு சிறப்பு. வங்கநீர்க்கடலுமது. எனைய எண். ஒரீஇ யென்றது சொல்லிசையளபெடை. இவ்விரண்டு செய்யுளானும் யானைகடந்தமையுணர்த்தப்பட்டது. (ருஎ)

கொடிஞ்சொடுதட்டுமெச்சுமாழியுங்கோத்தமொட்டும்
நெடுஞ்சுவர்கொடியும்யாவுநெறிவருமுறையினீக்கி
விடுஞ்சுவற்புரவியோடும்வேறுவேறேற்றிச்சென்ற
மடிஞ்சபினுடம்புகூட்டும்வினையெனவயிரத்தேர்கள்.

(இ - ள்.) கொடிஞ்சொடு தட்டுமெச்சும் ஆழியுங்கோத்தமொட்டுங்- கொடிஞ்சுடன் தட்டையும் அச்சையும் உருளையும் தொடுக்கப்பட்ட சிகரத்தையும், நெடுஞ்சுவற்கொடியும் யாவும் நெறிவருமுறையினீக்கி—நீண்ட

மேலிடத்துக் காட்டிய கொடிகளையும் பிறவும் பூட்டிய முறையிற் கழற்றி, வயிரத்தேர்கள்-வயிரம்பற்றிய மரத்தினாகிய இரதங்கள், மடிஞ்சபின்உடம்பு கூட்டும் வினையென-உயிர் நீங்கியபின் உடலைக் கூட்டும்வினைபோல, விடும் சுவற்புரவியோடு வேறு வேறேற்றிச் சென்ற-அவற்றை நீங்கிய சுவலையுடைய குதிரையுடன் வேறு வேறாக வேற்றிச் சென்றன.—எ-று.

கொடிஞ்சென்றது தாமரைப்படிவமாகத் தேர் முன்னர் வைப்பதாகிய தோருறுப்பினை. தட்டென்றது தேர் நடுவினை. அச்சென்ற தருளைகோத்த மரத்தை. ஆழியென்றது உருளையை. சுவலிரண்டின் முன்னதுமேலிட பின்னது பரியின் பிடர்மயிரினை. யாவுமென்றது பிறவுறுப்பினை அடுக்குப் பன்மை. நெறிவருமுறையினீக்கலென்றது தேரைக் கோத்தவழிக்கழற்றுதலை, மடிந்தவென்றது மரீஇயது. மடிதலீண்டு உயிருடம்பினீங்குதலை, உடம்பு கூட்டும் வினையென்றது பரகாயப்பிரவேசத்தை. நல்வினை தீவினை என வினையெனற்குக் கொள்ளின் வினைநீங்கிய வழி உடம்பினுயிர் புகாமையான் அஃதுவமையாகாமை காண்க. வயிரமென்றது வயிரமணியானமைந்ததன்றி மரக்காழென்பது கொள்க, இதனான் தேர் கடந்து சென்றமையுணர்த்தப்பட்டது. (௫௧)

நாலிரண்டாயகோடிநவைபினாவாய்கண்மீதா
சேறிரண்டனையவாயகதியொடுநதியிற்சென்ற
பாறிரண்டனையமெய்யபயந்திரண்டனையநெஞ்ச
காறிரண்டனையகாலகடுகடக்கலினப்பாய்மா.

(இ - ள்.) பால்திரண்டனைய மெய்ய-பால்திரண்டாலொத்தவுடம்புடையனவும், பயந்திரண்டனைய நெஞ்ச-அச்சந்திரண்டாலொத்த மனமுடையனவும், கால்திரண்டனைய கால-காற்றுத்திரண்டாலொத்த காலையுடையனவுமாகிய, கடுநடை கலினப்பாய்மா-வேகமான நடையையுடைய கலினம்பூண்ட குதிரைகள், நாலிரண்டாயகோடி-எட்டுக் கோடியென்னுந் தொகை கொண்டவைகள், நவையில் நாவாயின்மீதாக குற்றமகன்றபடகுகளின்மேல், சேல்திரண்டனைய வாயகதியொடும் நதியிற்சென்ற-சேல்திரண்டாலொத்த வேகத்தோடு மாற்றிச்சென்றன.—எ-று.

வெள்ளைநிறத்தவா யுத்தம விலக்கணமுடைய புரவியென்பார் பால்திரண்டனைய வென்றும், வேகத்தை நோக்கிக் கால்திரண்டனைய கால வென்றும், மரக்கலத்தேறிச் செல்வனவாகலின் பயந்திரண்டனைய நெஞ்ச வென்றுங்கூறினார். ஆயிரமம்பிக்கு நாயகனென முற்கூறிப்போந்தமையான் நாலிரண்டாயகோடி யென்பதனைப் புரவிக்கேகொள்வதன்றி நாவாய்க்குறைப்பின் முன்னொடு பின்மலைவாமென்க. சேறிதிரண்டனைய கதியென்றது நாவாய்சென்ற வேகத்தினை. இதனாற் குதிரைகடந்து சென்றமை யுணர்த்தப்பட்டது. (௫௨)

ஊடுறநெருக்கியோடத்தொருவர்முன்னொருவர்கிட்டிச்
சூடகத்தளிர்க்கைமாதர்குழுமினர்துவன்றித்தோன்றப்
பாடியல்களிநல்யானைப்பந்தியங்கடையிற்குத்தக்
கோடுகண்மிடைந்தவென்னமிடைந்தனகுவவுக்கொங்கை.

(இ - ள்.) சூடகத் தளிர்க்கை மாதர் - வளையலணிந்த தளிர்போன்ற கைகளையுடைய மாதர், ஊடுற நெருக்கி யோடத்து ஒருவர்முன் ஒருவர் கிட்டி-ஒருவர் முன்னொருவர் இடையே நெருக்கியோடத்தில் அண்மையாய், குழுமினர் துவன்றித்தோன்ற - கூடிநிறைந்து தோன்றலான், குவவுகொங்கை-குவிதலையுடைய முலைகள், பாடியல் களி நல் யானைப்பந்தியங்கடையிற்குத்த கோடுகள் மிடைந்த வென்னமிடைந்த-பெருமையமைந்த மதக்களிப்பினையுடைய சிறந்தயானைநிரைகளில் அவற்றின்கோடுகள் ஒன்றோடொன்று தாக்குதலான் நெருங்கினபோல நெருங்கின.—எ-று.

தளிர் கைக்குவமம். குழுமினர் என்றது வினையெச்சமுற்று. மாதர் படகெறிச்செறலிற் கொங்கைகளொன்றோடொன்று நெருங்கித்தாக்குதலானவற்றை யானையின் கோடுகளொன்றோடொன்று தாக்குதற்குவமை கூறினார். பந்தியென்றது வடசொற்சிதைவு. (ருக)

பாங்கினுத்தரியமானப்படர்திரைதவழப்பாரின்
வீங்குநீரமுவந்தன்னுள்விழுமதக்கலுழிவெள்ளத்
தோங்கல்கடலைகடோன்றவொளித்தவனுயர்ந்தகும்பம்
பூங்குழற்கங்கைநங்கைமுலையெனப்பொலிந்தமாதோ.

(இ - ள்) பாங்கின் உத்திரியமான - மருங்கினுடுத்த மேலாடைபோல, படர்திரைதவழ-பரவுகின்றஅலைகள் தவழாநிற்ப, பாரின்வீங்குநீரமுவந் தன்னுள்-நிலத்தின் மிக்ககங்கை நீர்ப்பரப்பின்கண், விழுமதக்கலுழிவெள்ளத்து-விழுகின்றமதவாற்றுவெள்ளத்து, ஓங்கல்கள்தலைகள்தோன்ற - மலைகளாகிய தலைகள் காணப்பட, ஒளித்தவண் உயர்ந்தகும்பம் - எனையுறுப்பு மறைந்தோங்குகின்ற கும்பங்கள், பூங்குழல் கங்கைநங்கை முலையெனப்பொலிந்த - பூவைமுடித்த கூந்தலையுடைய கங்கையாகிய பெண் முலைப்போல் விளங்கின.—எ-று.

யானைகளின் எனையுறுப்பு மறைந்து மத்தகங்கள் மேற்றோன்றநிற்றலின் "கங்கைநங்கை முலையெனப்பொலிந்த" என்றுவமை முகத்தாற் கூறினார். ஓங்கலென்றது தாருமாம். கும்பமென்றது மது. நதிகளிற் சிறந்தமையாற் கங்கை நங்கையென்றார். (ருஉ)

பொலன்குழைமகளிர்நாவாய்ப்போக்கினொன்றொன்றுதாக்க
மலங்கினரிரண்டுபாலுமருகினர்வெருவிநோக்க
அலங்குநீர்வெள்ளந்தள்ளியழிதரவங்குமிங்கும்
கலங்கலின்வெருவிப்பாயுங்கயற்குலநிகர்த்தகண்கள்.

(இ-ள்.) பொலன் குழை மகளிர் - பொன்னாலாகிய குழையை யணிந்த மாதர், நாவாய்போக்கின் ஒன்றொன்று தாக்க-படகுகள் சேறலாலொன்றோடொன்றுதாக்க, மலங்கினரிரண்டுபாலும் மருகினர்வெருவிநோக்க - அச்சமெய்தி யிருமருங்குங் கலங்கிப்பயந்து பார்க்க, கண்கள் - விழிகள், அலங்குநீர் வெள்ளந்தள்ளி யழிதர - அசையுமியல்பினையுடைய நீர்வெள்ளந் தள்ளியழிக்க, அங்குமிங்குங் கலங்கலின் வெருவிப்பாயுங் கயற்குல நிகர்த்த - எம்மருங்கும் கலக்கத்தான் அஞ்சிப்பாய்கின்றகயற்கூட்டங்களையொத்தன.—எ-று.

பொலன்குழை யென்றது பொன்னென்கிளவியான் முடிக்க. உம்மை முன்னதுமுற்று. ஏனையவெண். அழிதரவொருசொல். கலங்க லொன்றோ டொன்று தாக்குதலாற் கண்கள்வெருவ அவைகயற்குலம் போல நீரிற்றோன்றலைக் கயற்குல நிகர்த்தகண்களென்றார். (௫௫)

இயல்வுறுசெலவின்நாவாயிருகையுமெயினர்தூண்டத்
துயல்வனதுடிப்புவீசுந்துவலைகண்மகளிர்மென்றூ
சுயல்வுறுபரவையல்குலொளிப்புறத்தளிர்ப்பவுள்ளத்
தயர்வுறுமதுகைமைந்தர்க்கயர்வுயிர்ப்பளித்ததம்மா.

(இ-ள்.) இயல்வுறுசெலவின் - நடக்கும்வேகத்தான், நாவாயிரு கையும் - படகுகளினிருமருங்கும், எயினர்தூண்ட - வேடர் தூண்ட லினால், துயல்வனதுடிப்பு வீசும் துவலைகள் - அசையுந்துடிப்புகள் சிந்துநீர்த்துளிகள், மகளிர்மென்றூசுயல்வுறு பரவையல்கு லொளிப் புறத்தளிர்ப்ப-மாதரணிந்த மெல்லியவாடையிற் றங்கிய பரவையல்கு லொளியெய்த நனைப்ப, உள்ளத்தயர்வுறுமதுகை மைந்தர்க் கயர் வுயிர்ப்பளித்தது-மனத்திடைக் காமநோயான் மெலிந்த வன்மையையுடைய ஆடவர்க்கு மகிழ் வெய்தச்செய்தது —எ-று.

அம்மா-அசை. உம்மைமுற்று. நாவாயிருகையுமெயினர் தூண்டத்துடிப்பு வீசுந்துவலை மாதர் மெல்லிய ஆடையினுள்ளவல்குலோன்ற மதுகைமைந்தரையும் அயர்வுயிர்ப் பளித்ததென்றார். பரவை யல்குற்குவமை. (௫௬)

இக்கரையிரைத்தசேனையெரிகடன்முகந்துவெஃகி
அக்கரையடையவீசிவரிபனவணுகுநாவாய்
புக்கலையாழிநன்னீர்பொறுத்தனபோக்கிப்போக்கி
அக்கணத்துவரிமீளுமகன்மழைநிகர்த்தவம்மா.

(இ-ள்.) இக்கரையிரைத்த சேனை-இக்கரையிடையிரைந்து வருஞ்சேனையாகிய, எறிகடல் முகந்துவெஃகி - எறி கடலை விழைந்தேற்றி, அக்கரையடையவீசி - அக்கரையிடை யடையச்செலுத்தி, வறியன அணுகும் நாவாய் - வறியனவாகிச்சேரும் படகுகள், அலை ஆழிபுக்கு நன்னீர்பொறுத்தன போக்கி போக்கி - அலையையுடைய கடலிற் புகுந்து சிறந்தநீரை முகந்து எழுவகையாகி மிகப் பெய்தொழிந்து, அக் கணத் துவரிமீளும் அகன்மழை நிகர்த்த - அக்கணத்துக்கடலினை முகந்து மீளும் பெருமழையை யொத்தன.—எ-று.

கடலைக்குறைபடுத்துப் பெய்தொழிந்த மேகங்களை சேனையேற்றிச்சென்று வறியனவாகி வந்த நாவாய்க்குவமை கூறினர். அடுக்கு மிகுதிப் பொருட்டு. நன்னீரென்றார், மேகந்தானுண் டவ்வுவரி நீரை யுவர்ப்பொழித்தலின். (௫எ)

அகிலிடுதூபமன்னவாய்மயிற்பீலியார்த்த
முகுளிடுமுரண்மாத்தண்டுகூம்பெனமுகிலின்வண்ணத் [தம்
துகிலொடுதொடுத்தசெம்பொற்றகட்டிடைத்தொடுத்தமுத்
நகுகொடிநெடியபாயினவ்வெனச்சென்றநாவாய்.

(இ - ள்.) அகிலிடுதூபமன்ன - அகிலிடு தூபம்போன்ற, ஆய் மயிற்பீலி ஆர்த்த - ஆராயப்பட்ட மயிற்றழைகளாற் கட்டப்பட்ட, முகிளிடு முரண்மாத்தண்டு - அரும்பேபோற் குவிந்த வலியபெருந்தண்டுகள், கூம்பென - பாய்மரமே போன்றும், முகிலின்வண்ணம் துகிலொடு தொடுத்த செம்பொற் றகட்டிடை தொடுத்தமுத்தம் நகு கொடி நெடியபாயின் - மேகத்தினிறமமைந்த கொடிச்சீலையுடன் தொடுக்கப்பட்ட செம்பொன்னினாகிய தகட்டிலமைந்த முத்துகள் விளங்கிய கொடிகள் நீண்டபாய் போன்றும், நாவாய் நவ்வெனச்சென்ற - படகுகள் மரக்கலமென்னப்போயின.—எ-று.

மயிற்பீலிக்கு அகலிடு தூபத்தை யுவமை கூறினர். மயிற்பீலி முதலிய கொண்டு செல்லும் நீண்ட தண்டுகள் கூம்பெனவும், துகிலொடு கூடிய கொடிகளைப்பாயெனவுங் கூறினர். பாயினவ்வெனவிரிந்தவாகக்கொண்டு பாயினுடையன போல்வனவெனக் கூறலுமமையும். இவ்வாறு செய்யுளானும் நாவாய்ச்சேற லுணர்த்தப் பட்டது. (௫அ)

ஆனனங்கமலத்தன்னமின்னன்னவமிர்தச்செவ்வாய்த்
தேனனைகுழலாரேறுமம்பிகள்சிந்துமுத்தம்
மீனெனவிரிந்தகங்கைவிண்ணெனப்பண்ணைமுற்றும்
வானவர்மகளிரூருமானமேநிகர்த்தமாதோ.

(இ - ள்.) விரிந்தகங்கை - விரிந்தகங்கை, விண்ணென-ஆகாயம்போன்றும், சிந்துமுத்தம் மீனென-சிதறுமுத்துகள் உடுக்கள்போன்றும், கமலத்தன்ன ஆனனம் அமிர்தம் செவ்வாய்மின் அன்னதேன் நனைகுழலார் ஏறும் அம்பிகள் - தாமரைமலர்போன்ற முகத்தையும் அமிழ்தம்போன்ற செய்யவாயையும் மின்போலும் தேனொடுகூடிய அரும்புமுடித்த கூந்தலையுடைய மாதர்கள் ஏறும்படகுகள், பண்ணை முற்றிவானவர் மகளிர் ஏறுமானமே நிகர்த்த - ஆயமிருந்து தெய்வமடந்தையரேறும் விமானத்தைப்போன்றும் விளங்கின.—எ-று.

கங்கையைவிண்ணென்றும், முத்தமீனென்றும், மின்குழலென்றும், அம்பிகள்மானமென்று முவமை முகத்தாற் கூறினர். பண்ணை, ஆயமொரு பொருட்பன்மொழி. மானமுதற் குறைந்து நின்றது. (௫௯)

துளிபடத்துழாவுதிண்கோற்றுடுப்பிருகாலிற்றோன்ற
நளிர்புனற்கங்கையாற்றினடந்தெனச்செல்லுநாவாய்
களியுடைமஞ்ஞையன்னகனங்குழைகயற்கண்மாதர்
ஒளிரடிக்கமலந்தீண்டவுயிர்படைத்தனவேயொத்த.

(இ - ள்.) துளிபடத்துழாவு திண்கோல் துடுப்பு - நீர்த்துளிகள் தெறிக்கத் துழாவுகின்ற திண்ணிய துடுப்புக்கோல்கள், இருகாலின் தோன்ற-இரண்டு பாதங்கள் போன்று விளங்க, நளிர்புனல்கங்கையாற்றின்-குளிர்ந்த நீரையுடைய கங்கையாற்றினிடை, நடந்தெனச் செல்லுநாவாய்-நடந்தாற்போலுஞ்செல்லும்படகுகள், களியுடைமஞ்ஞையன்ன-களிப்பினையுடைய மயில்போன்ற, கனங்குழை கயற்கண் மாதர்-கனவியகுழையையணிவியகயல் போன்ற கண்ணையுமுடைய மாதர், ஒளிர் அடிகமலம் தீண்ட-விளங்கும் பாததாமரை தீண்டப்பெறுதலால், உயிர்படைத்தனவேயொத்த-உயிர் பெற்றன போன்றன.—எ-று.

மஞ்ஞை சாயற்கு நடைக்கு முவமை. கயல் கண்ணுக்கும், கமலம் அடிக்குமது. மகளிர் ஒளிரடிக் கமலந்தீண்டலான் உயிர்படைத்தனவே யொத்தவென்றார். நடந்தாலென்றது திரிந்துநின்றது. இதனாற் படகுசென்ற தன்மை யுணர்த்தப்பட்டது. (௬௰)

மய்யறுவிசும்பின்மண்ணின்மற்றுமோருலகின்முற்றும்
மெய்வினைதவமேயன்றிமேலுமொன்றுளதோகீழோர்
செய்வினைநாவாயேறித்தீண்டலர்மனத்திற்செல்லும்
மொய்விசும்போடமாகத்தேவரின்முனிவர்போனார்.

(இ - ள்.) மய்யறுவிசும்பில் - குற்றநீங்கிய விண்ணினிடையும், மண்ணில்-மண்ணினிடையும், மற்றுமோருலகில் முற்றும்-வேறுமோருலகி

டையுமுழுதும், மெய்வினை! தவமேயன்றி மேலுமொன்றுளதோ- உண்மையாய்ப் பலிக்குந்தொழில் வேறுமொன்றுண்டோ, கீழோர் செய்வினை நாவாய் தீண்டியேறிலர் மனத்திற் செல்லும்மொய்விசும்போடமாகத் தேவரின் முனிவர் போனார் - கீழோராற் செய்யப்பட்ட படகுகளி லேறித்தீண்டாமல் மனத்தானினைத்த மாத்திரத்திற் செல்லும் வன்மையாய் ஆகாயமே யோடமாகத் தேவர்போன்று முனிவருஞ் சென்றனர்.—எ-று.

ஏறித்தீண்டலர் என்றதனை முன்பின்னாக நிறுத்திவிகுதி பிரித்துக்கூட்டி யுரைக்கப்பட்டது. மனத்தானினைத்த மாத்திரஞ் சென்றனரென்பதுட்கொண்டு ஆற்றைக்கடந்தமையாகிய சிறப்புப்பொருள் தவத்தானென்னப்பயந்து நிற்றலின வேற்றுப் பொருள்வைப்பு. கீழோர் செய்வினை நாவாயேறித் தீண்டலர் என முற்றத்துறந்த முனிவரொழுக்கநெறி மேற்கொண்டமையான் தற்குறிப்பேற்றமாம். (சுக)

வேறு

கலிவிருத்தம்.

அறுபதினாயிரமக்குரோணியென்
றிறுதிசெய்சேனையுமெல்லைதீர்நகர்
மறுவறுமாக்களுமகளிர்வெள்ளமும்
செறிதிரைக்கங்கைபின்கிடக்கச்சென்றவே.

(இ - ள்.) அறுபதினாயிரமக் குரோணியென் றிறுதிசெய் சேனையும் - அறுபதினாயிரமாகிய அக்குரோணி யெனப்பட் டிறுதியாகிய படையும், எல்லை தீர்நகர் மறுவறு மாக்களு மகளிர் வெள்ளமும் - எல்லைகடந்த குற்றமற்ற நகரமாந்தரும் மாதர் கூட்டமும், செறிதிரைக் கங்கைபின் கிடக்கச்சென்ற - பொருந்திய அலைகளையுடைய கங்கைபின்னேயிருக்கப்போயின.—எ-று.

முடிவிலாப் புகழுடைய தாகலின் எல்லைதீர் நகரென்றும், அந்நகர் வாழ்வார் இறைவனையின்றி வேறறியாமையின் மறுவறுமாக்களுமென்றார். உம்மை எண். இதனாற் சேனையும் நகர்மாந்தரு மாதருங் கங்கையாற்றினைக் கடந்தமை யுணர்த்தப்பட்டது. (சுஉ)

சுழித்துநீர்வருதுறையாற்றைச்சூழ்படை
கழித்துநீங்கியதெனக்கள்ளவாசையை
அழித்துவேறவனிபண்டாண்டவேந்தரை
இழித்துமேலேறினன்றானுமேறினன்.

(இ - ள்.) சுழித்துநீர் வருதுறையாற்றை - சுழித்துக்கொண்டு நீர் வருந்துறையையுடையவாற்றினை; கழித்து நீக்கியதென-தன்னோடு

வந்தபடைவிட்டு நீக்கியதென்று, கள்ளவாசையை யழித்து - வஞ்சகமாகிய ஆசையையொழித்து, வேறவனிபண்டாண்ட வேந்தரை - வேருக நிலத்தை முன்னுண்டு வந்த அரசரை, இழித்து மேலேறினன் - தாழ்த்துமேற் சென்றபரதன், தானுமேறினன் - தானும் படகேறினன்.—எ-று.

வெள்ளமிகுதி நோக்கிச் சுழித்து நீர் வருதுறையாற்றை யென்றும், 'நங்குலக்குரவர் கணவையினீங்கினர்' என முற்கூறிப் போந்தமையின் அவ்வரசர்புகழை யெல்லாந்தன் புகழினடக்கினனென்பார் வேறவனி பண்டாண்ட வேந்தரை இழித்து மேலேறின னென்றதென்க. (௪௫)

தன்னனதம்பியுந்தாயர்மூவரும்
சொன்னதேர்வலவனுந்தூயதோழனும்
துன்னினரேறலுந்துழாதுடுப்பெனும்
நன்னயக்காலினடத்தன்மேயினன்.

(இ - ள்.) தன்னன தம்பியும் தாயர் மூவரும்-தன்னை யொத்த தம்பியும் தாய்மார் மூவரும், சொன்ன தேர்வலவனும்-சொல்லப்பட்ட தேரினைச் செலுத்துதலில் வல்லவனுகிய சுமந்திரனும், தூயதோழனும்-மனந்தூயனுகிய குகனும், துன்னினரேறலும்-வந்தேறலும், துழாதுடுப்பெனுநன்னயக்காலினடத்தல்மேயினன் - துழாவுகின்றதுடுப்பெனப்படும் நன்னயக் கால்களினல் நடக்க ஆரம்பித்தனன்.—எ-று.

தன்னையொத்த குணமுடைய னுகலின் றன்னன தம்பியுமென்றார். தேர்வலவனென்பதற்குத் தேர்ப்பாகனுமாம். துன்னினரென்றது வினையெச்சமுற்று. தாய்மூவரென்றார் கோசலை முதலிய மூவரையும். இதனுன் தம்பியும் தாயர் மூவரும் சுமந்திரனும் தோழனும்கங்கையைக் கடந்தமை யுணர்த்தப்பட்டது. (௪௬)

வேறு

சுற்றத்தார்தேவரொடுந்தொழநின்றகோசலையைத்தொழுதுநோக்கிக்
கொற்றத்தார்க்குரிசிலிவராரென்றுகுகன்வினவக்கோக்கள்வைகும்
முற்றத்தான்முதற்றேவிமூன்றுலகுமீன்றானைமுன்னீன்றானைப்
பெற்றத்தார்பெருஞ்செல்வம்யான்பிறந்தலாற்றுறத்தபெரியாளென்றான்.

(இ-ள்.) சுற்றத்தார் தேவரொடுந்தொழ நின்ற கோசலையைத் தொழுதுநோக்கி - உறவினர் தேவரொடும் பணியநின்ற கோசலையை வணங்கிக்கண்டு, வெற்றித்தார்குரிசில் - வெற்றிமாலையையணிந்த பரதனை, குகனிவர் ஆரென்று வினவ - குகனிவர் யாவரென்று கே

ட்ப, வேந்தர் வைகும் முற்றத்தான் முதற்றேவி - அரசரடையு முற்றத்தையுடையான் முதன்மனைவி, மூவுலகுமீன்றானை முன்னீன்றானை- மூன்றுலகையும் படைத்த பிரமனை முன்னேதந்தவிறைவினை, பெற்றத்தால் பெறும்செல்வம் - பெற்றதனாலடையும் செல்வத்தை, யான் பிறத்தலாற் றுறந்த பெரியாளென்றான்-யான் பிறந்தமையா னீங்கப்பெற்ற பெருங்குணத்தியென்றனன்.—எ-று.

(சுஙு)

என்றலுமேயடியின்மிசைநெடிதுவீழ்ந்தழுவானையிவன் யாரென்று
கன்றுபிரிகாராவின் றுயருடையகொடிவினவக்கழற்கான்மைந்தன்
இன்றுணைவனிராகவனுக்கிலக்குவற்குமிளையவற்குமெனக்குமூத்தான்
குன்றனையதிருநெடுந்தோட்குகனென்பானிந்நின்றகுரிசிலென்றான்.

(இ - ள்.) என்றலும் - என்று கூறலும், அடியின்மிசை நெடிதுவீழ்ந்தழுவானை-அடிமேன் மிகுதியும் விழுந்தழு வியல்புடைய குகனை, இவன்யாரென்று-இவன்யாரென்று, கன்றுபிரிகாராவின் துயருடைய கொடிவினவ - கன்றுநீங்கிய சேதாவையொத்த துன்பினையுடைய கொடிபோல்வாள் கேட்ப, கழற்கான் மைந்தன் - வீரகண்டையணிந்த காலையுடைய பரதன், இராகவனுக்கு இன் துணைவன்-சீராமனுக்கினிய நண்பன், இலக்குவனுக்கும் இளையவற்கும் எனக்கு மூத்தான் - இலக்குவனுக்கும் சத்துருக்கனுக்கும் எனக்கும் முன்னோன், இந்நின்ற குரிசில் - இந்நின்ற பெருந்தகை, குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பானென்றான் - மலையையொத்த அழகிய பெருந்தோளையுடைய குகனெனப்படுபவனென்றனன்.—எ-று.

என்றலுமென்றது வேந்தர் வைகுமுற்றத்தான் முதற்றேவி என்பது முதலியவற்றினை. அயர்வருமமரர்களிறை யாகிய தன் மகனை யிழந்த பெருந்துயரினைக் கன்றுபிரிகாராவின் றுயர்க்குவமை கூறினர். இரகுவின்வழி வந்தமையான் இராகவனென்றார். காகுத்தனென்றது மது. கொடி யாகுபெயர். குரிசிலென்றது குகனை. அழுவானென்றது மது. வினைப்பெயர், உம்மைஎண். இதனாற் பரதன் குகனினையனெனக் கோசலைக் கறிவித்தமை யுணர்த்தப்பட்டது. (சுசு)

நைவீரலீர்மைந்தீரினித்துயரானுடிறந்துகாடுநோக்கி
மெய்வீரர்பெயர்ந்ததுவுநலமாயிற்றுமன்றேவிலங்கற்றிண்டோள்
கைவீரக்களிறனையகாளையிவன்றன்னோடுங்கலந்துநீர்கள்
ஐவீருமொருவீராயகலிடத்தைநெடுங்காலமளித்திரென்றாள்.

(இ - ள்.) மைந்தீர் துயரால் நைவீரலீர் - இனிமக்காள் துன்பத்தான் வருந்துவீரல்லீர், நாடிறந்து காடுநோக்கி - நாட்டினை நீங்கிக் காட்டினைநோக்கி, மெய்வீரர் பெயர்ந்தது நலமாயிற்றுமன்றே

வாய்மையையுடையவீரர் பெயர்ந்து சென்றது நன்மையாயிற்றன்றே-விலங்கல்திண்டோள்கை வீரக்களிறனைய காளையிவன் றன்னோடுங்கலந்து - மலைபோலுந் திண்ணியதோளையும் வீரத்தன்மையுடைய யானையின்கைபோன்ற கையையுமுடைய காளைபோல்வானாகிய குகனோடுஞ்சேர்ந்து, நீர்கள் ஐவீருமொருவீராய் - நீவிர் ஐவீரு மொருதன்மையுடையீராய், அகலிடத்தை நெடுங்கால மளித்திரென்றாள்-அகலிடத்தைப்பெரும்பொழுது காமினென்றனள்.—எ-று.

மெய்வீரரென்றது சிராமலக்குவரை. காளை ஆகுபெயர். நீர்களென்றது கள்விகுதி யேற்றமுன்னிலைப்பெயர். ஒருவிரென்ற தொருதன்மையரா யென்றதனை. (௬௭)

அறந்தானேயென்கின்றவயனின்றானை நோக்கியையவன்பின்
பிறந்தானையுரையென்னநெறிதிறம்பாத்தன்மெய்யைநிற்பதாக்கி
இறந்தான்றன்னிளந்தேவியாவர்க்குந்தொழுகுலமாமிராமன்பின்பு
பிறந்தானு முளனென்னப்பிரியாதான்றனைப்பயந்தபெரியாளென்றான்.

(இ-ள்.) அறந்தானேயென்கின்ற-அறமேயெனப் படுகின்ற,அயனின்றானைநோக்கி-அயனிற்பானைப்பார்த்து, அன்பின்பிறந்தானை -அன்புருவமுடையானை, உரைஎன்ன-ஐயனே இன்னரென்றுகூறென்ன,நெறிதிறம்பாத்தன் மெய்யை நிற்பதாக்கி-நெறியின் மாறுபடுதலில்லாத தன்வாய்மையை நிற்பதாகச்செய்து, இறந்தான்றன் இளந்தேவி-உடனீங்கிய அரசன் இளையமனைவி, யாவர்க்குந்தொழுகுலமாம் இராமன்பின்பு பிறந்தானும் முளனென்ன-யார்க்கும் குலதெய்வமாகிய இறைவன் பின்னர் பிறந்தவனுமுளனென்று கூற, பிரியாதான்றனைப்பயந்த பெரியாளென்றான்-பிரியாதானாகிய இலக்குவனைப்பெற்ற பெருந்தவத்தி யென்றனன்.—எ-று.

பிறந்தானென எதுகைநோக்கிமெலிந்து நின்றது. அன்பின்னிறந்தானையென்றார் சொன்மாண்புடை யன்னை சுமித்திரையென முற்கூறிப்போந்தமையானென்க. கைகேசிக்குக் கொடுத்தவரங்க ளிரண்டினென்றான்அரசன் தன்னுயிர் துறந்தமையின் நெறிதிறம்பாத்தன் மெய்யைநிற்பதாக்கி யிறந்தானென்றும், இருவரைப்பயந்தவ ளீன்ற கான்முளையொருவனேவிவற் கிவ்வூருறவென முற்கூறிப் போந்தமையின் யாவர்க்குந்தொழுகுலமா மிராமன் பின்புபிறந்தானு முளனென்னப் பிரியாதானென்றும், அவனைப்பெற்ற பெருந்தவமுடையா ளாகலின்பயந்த பெரியாளென்றுங் கூறினார். இதனாற் பரதன் குகனுக்கு இவ்வன்னை சுமித்திரையாமென்ப துணர்த்தப்பட்டது. (௬௮)

சுடுமயானத்திடைத்தன்றுணையேகத்தோன்றதுயர்க்கடலினேகக்
கடுமையார்கானகத்துக்கருணையார்கலியேகக்கழற்கான்மாயன்
நெடுமையாலன்றளந்தவுலகெல்லாந்தன்மனத்தேநினைந்துசெய் [யும்
கொடுமையாலளந்தாளையாரிவரென்றுரையென்னக்குரிசில் கூறு [ம்.

(இ-ள்.) சுடுமயானத்திடை தன் துணையேக - சுடுகாட்டகத்துத் தன்றுணைவன் செல்ல, தோன்றல் துயர்க்கடலினேக - தன்மகன் துன்பக் கடலிலாழ, கடுமையார் கானகத்துக் கருணையார்கலி யேக-கடுமை பொருந்திய காட்டினிடைக் கருணைக்கடல் செல்ல; கழற்கான் மாயன் நெடுமையால் அன்றளந்த உலகெல்லாம் - வீர கண்டையணிந்த காலையுடைய மாயப்பிரான் திருவிக்கிரம உருவாகி யன்றளந்த உலக மெனைத்தும், தன்மனத்தே நினைந்து செய்யுங்கொடுமையால் அளந்தாளை-தன் நெஞ்சிடை நினைத்து செய்த சூழ்ச்சியால் அளந்த கைகேசியை, இவராரென்றுரை யென்ன - இவர் யாரென்று கூறென்ன, குரிசில் கூறும் - பரதன் கூறுவான்.—எ-று. (சுகூ)

படரெலாம்படைத்தாளைப்பழிவளர்க்குஞ்செவிலியைத்தன்பாழ்த்தபாவிக்
குடரிலேநெடுங்காலங்கிடந்தேற்குமுயிர்ப்பாரங்குறைந்துதேய
உடரெலாமுயிரிலாவெனத் தோன்றுமுலகத்தே யொருத்தியன் [றே
இடரிலாமுகத்தாளையறிந்திலையேலிங்நின்றாளென்னையீன்றாள்.

(இ-ள்.) படரெலாம் படைத்தாளை - துயரஞ் செய்வித்தாளும், பழி வளர்க்கும் செவிலியை - நிந்தனையை வளர்க்குஞ் செவிலித்தாயாவாளும், தன் பாழ்த்த பாவிக் குடரிலே நெடுங்காலம்கிடந்தேற்கும் - தன் பாழாகிய தீயவினைக் குடலின்கண் நீண்டகாலம் கிடந்தவெனக்கும், உயிர் பாரம் குறைந்து தேய - உயிர்ச்சுமை குறைந்து தேய, உடரெலா முயிரிலா வெனத் தோன்றும் இடரிலாமுகத்தாளை - உடம்பனைத்து முயிரில்லாத வெனக் காணப்படும் துன்ப மில்லாத முகமுடையாளு மாகிய, உலகத்தே இங்நின்ற ளொருத்தி யன்றே - இவ்வுலகத்திடை நின்ற ஒருத்தியே, என்னை யீன்றாள். - என்னைப் பெற்றாள்.—எ-று.

உயிர்ப்பாரமென்றது இறைவன் கானேக யாவரும் வருந்திக்கிடந்தமை பற்றி. நெடுங்கால மென்றது இறைவன் முதலாய நால்வரையும் தாயார் மூவருங் கருக்கொண்டிருந்தமை பன்னிரு திங்க ளாகலினெ

ன்க. பழிவளர்குஞ்செவிலி யென்ற தேகதேசவுருவகம். எல்லா உடம் பிடத்துந்தான் நிறைந் திருத்தலான் அவன் பிரிந்தமையை உடலெலா முயிரிலாவென்றார். (௭௰)

வேறு

என்னக்கேட்டவ்விரக்கமிலாளையும்
தன்னற்கையின்வணங்கினன்றாயென
அன்னப்பேடைசிறையிலதாய்க்கரை
துன்னிற்றென்னவும்வந்ததுதோணியே.

(இ-ள்.) என்னக்கெட்டு - என்று சொல்லக் கேட்டு, அவ்விரக்க மில்லாளையும் - அவ்விரக்க மில்லாதாளாகிய கைகேசியையும், தாயெனத் தன்னற்கையின் வணங்கினன்-தாயெனத் தன்னுடைய நல்ல கைகளால் வணங்கி நின்றனன், (அதன் பின்னர்) தோணி அன்னப் பேடை சிறையிலதாய் - படகு அன்னப் பறவை சிறையில தாகி, கரை துன்னிற் றென்னவும் வந்தது - கரையை யடைந்தது என்று சொல்ல வும் வந்தது.—எ-று.

தோணியை அன்னப்பேடை சிறை யிலதாய் கரையடைந்ததுபோ லுவமை கூறினார். உம்மை இழிவு சிறப்பு. பேடை மரபு. அன்னப் பேடை இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. அன்ன மென்றது வட மொழிச் சிதைவு. அன்னத்தின் கதி யெனப் பிறண்டுங் கூறுதலை நெடு நாவாய் முரிதிரைவாய்க் கடிதினின் மடவன்னக் கதி' என முற்கூறிப் போந்தமையானு முணர்க. (௭௧)

இழிந்ததாயர்சிவிகையினேறத்தான்
பொழிந்தகண்ணிற்புதுப்புனற்போயினான்
ஒழிந்திலன்குகனும்முடனேகினான்
கழிந்தனன்பலகாவதங்காலினே.

(இ-ள்.) இழிந்த தாயார் சிவிகையினேற - படகினின் றிழிந்த தாய்மார் சிவிகையி லேறிக் கொள்ள, பொழிந்த கண்ணில் புதுப் புனற் போயினான் - பொழிகின்ற கண்ணிற் புதுப் புனல் சொரி பவனாய், ஒழிந்திலன் - நீங்காது, குகனு முட னேகினான் - குகனு முடன் சென்று, பல காவதம் காலிற் கழிந்தனன் - பல காதங் காலிற் சென்றான்- — எ-று.

ஒழிந்திலன்; ஏகினானென்பன வினை யெச்ச முற்று. ஏகல் திசைச் சொல் இறைவனீக்கத்தான் வருந்தா நிற்பவ னாகலின் பொழிந்த கண் ணிற்புதுப் புனல்போயினானென்றார். இதனாற் பரதன் குகனுடன்காலிற் சென்றமை கூறப் பட்டது. (௭௨)

பரத்திநீங்கும்பரத்துவனென்னும்பேர்
வரத்தின்மிக்குயர்மாதவன்வைகிடம்
அருத்திகூரவணுகினனாண்டவன்
விருத்திவேதியரோடெதிர்மேவினான்.

(இ-ள்.) பரத்தி நீங்கும் - வினைச்சுமையி னீங்கிய, பரத்துவ னென்னும் பேர் வரத்தின் மிக்குயர் மாதவன் வைகிடம் - பரத்துவ னென்னும் பெரியசிறப்பினை மிகுந்த பெருந்தவமுடையான்றங்குமிடம், அருத்தி கூர வணுகினன் - அன்பு மிக வணுகினன், ஆண்டு அவன் விருத்தி வேதியரோ டெதிர் மேவினான் - அங்கு அவன் அறு தொழிலை யுடைய வேதியருட னெதிர் சென்றடைந்தான்.—எ-று.

வினைச்சுமை நீங்கலை பரத்திநீங்கும்என்றார். விருத்தி அறுதொழிலை என்றது ஓதல் ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். (எ௩)

(௰க-வது. குகப்படலம் முற்றிற்று. ஆக திருவிருத்தம்-௲௪எக)

௰உ-வது. கிளைகண்டு நீங்குபடலம்.

இது இறைவன் குகனொடுந் தம்பியோடுஞ் சேனை சூழச் சித்திர கூடத்திற்கு வந்தெய்தத் தாமங்கு நின்றகன்ற செய்தியை யுணர்த்தி யுருகலின் குகப்படலத்தின் பின் வைக்கப்பட்டது. படல முறைமை யுமிதனானே விளங்கும். இதனைக் குன்றினிமிருந்தன னென்னுங் கொள்கையானென இவ்வாசிரியர் கூறியதூஉ மிப்பெற்றி நோக்கி. கிளை யென்றது ஐம்பெருங் குழுவை.

வந்தமாதவத்தோனையம்மைந்தனும்
தந்தையாமெனத்தாழ்ந்துவணங்கினான்
இந்துமோலியன்னானுமிரங்கினான்
அந்தமில்குணத்தாசிகள்கூறினான்.

(இ-ள்.) வந்த மாதவத்தோனை - தன் பாலடைந்த முற்றத் துறந்த வப்பெரிய முனிவனை, அம்மைந்தனுந் தந்தையாமெனத் தாழ்ந்து வணங்கினான் - அப்பரதனும் தந்தை போனினைந்து தாழ்ந்து வணங்கினான். இந்து மௌலியன்னானு மிரங்கினான் - நிலாவணிந்த முடியையுடைய கடவுளை யொப்பானு மனமிரங்கி, அந்தமில் குணத்தாசிகள் கூறினான் - அளக்கலாகாத குணத்தொடு பொருந்திய ஆசிகளைக் கூறினான்.—எ-று.

வந்த மாதவத்தோனென்றது பரத்துவாசனை; ஆண்டவன் விருத்தி வேதியரோ டெதிர் மேவினான் என மேற்கூறிப்போந்தமையு மிப்

பெற்றி நோக்கியென்க. பேராற்றலுடைய ருகவின் மைந்தனென்ற தென்க. மதனைப் பொடி படுத்தியவாறு முற்றத் துறந்த முனிவரும் காமவாஞ்சை விட்டிருப்பவாகலின் இந்து மௌலியோ டுவமை கூறினார். உம்மை உயர்வு சிறப்பு. இரங்கினன் வினையெச்சமுற்று. நற்குணத்தின் பெருமை தோன்ற அந்தமிலென் றனைகின்றார். ஆமென்றது ஆக்கப் பொருடரா துவமப்பொருள் குறித்து நின்றது. (எச)

எடுத்தமாமுடி சூடிநின்பாலியைந்
தடுத்தபேரரசாண்டிலையையநீ
முடித்தவார்சடைக்கற்றையைமூசுதா
சுடுத்துநண்ணுதற்குற்றுளதியாதென்றான்.

(இ - ள்.) ஐயநின் பாலியைந் தடுத்த பேரரசு - ஐயனே நின்னிடைப் பொருந்தி யமைந்த பேரரசினை, நீ எடுத்த மாமுடி சூடி-நீயோங்கிய பெரிய முடியைப் புனைந்து, ஆண்டிலை - ஆண்டு வாராமல், முடிந்த வார்சடைக் கற்றையை - புனைந்த சடைக் கற்றைய யுடையையாய், மூசு தூசுடுத்து - மரவுரி யுடுத்து, நண்ணுதற்கு - அடைதற்கு, உற்றுளது யாதென்றான்-நேர்ந்தது யாது காரணமென்றனன்.—எ-று.

பரம்பரையாக வருமுடியாதலின் நின்பாலடுத்த பேரரசரென்றும், இக்குவாகு தொட்டாண்டு வந்த வரசர் புனைந்து வந்த முடியாதலின் எடுத்த மாமுடியென்றும், அதனை யொழித்துச் சடைமுடி பரித்தமையின் முடித்த வார்சடைக் கற்றையை யென்றும், மூசு தூசுடுத்து என்றும், அது தோன்றக் காரணமென் னென்பார் உற்றுளதியாதென்றா னென்றுங் கூறினார். ஐய அண்மைவிளி. ஆண்டிலை எச்சமுற்று. கற்றையை குறிப்பெச்சமுற்று. (எரு)

சினக்கொடுந்திறற்சீற்றவெந்தீயினான்
மனக்கடுப்பினன்மாதவத்தோங்கலை
எனக்கடுத்ததியம்பிலைநீயென்றான்
உனக்கடுத்ததுமன்றுரவோயென்றான்.

(இ - ள்.) கொடுந்திறல்-கொடிய வன்மையும், சினம் சீற்ற வெந்தீயினான்-நெடுங்கோபமாகிய கொடுந் தீயையுடையானும், மனக்கடுப்பினன்-மனக்கொதிப்பினையுடையானுமாகி, மாதவத்தோங்கலை - பெரிய தவமலை போல்வனாகிய பரத்துவனை, உரவோய் - மெய்யுணர்ச்சியுடையானே, நீ எனக்கடுத்தது இயம்பிலை யென்றான் - நீ எனக்குத் தக்கதனைக் கூறினையல்லை யென்றதன்றி, உனக் கடுத்தது மன்று என்றான் - உனக்குத் தக்கது நீ கூறியதன் றென்றனன்.—எ-று.

உம்மை இறந்தது தழீஇயது. சினச்சீற்றம் ஒரு பொருட் பன்மொழி. சினத்தை வெந்தீயாக உருவகஞ் செய்தார். உரமென்ப தறி

வென்பதாதலே உரனென்னுந் தோட்டியா னென்புழியுமுணர்க. உர மென்பதற்கு மனத்திண்மையும் தவவாற்றலுமெனினு மமையும். அடுத் தது இரண்டும் வினைப்பெயர். என்றான் எச்சமுற்று. நீயினனென் றதும் கடுப்பின னென்றது மன்ன. உரவோய் எனப் பரத்துவனை விளித்தார். (எசு)

மறையின்கேள்வற்குமன்னிளந்தோன்றல்பின்
முறையினீங்கிமுழுநிலங்கொள்கிலேன்
இறைவன்காக்கிலனாமெனில்யாண்டெலாம்
உறைவென்கானத்தொருங்குடனேயென்றான்.

(இ - ள்.) மறையின் கேள்வற்கு மன் இளந்தோன்றல் - சிராம பிரானுக் கிளையோனாகிய பரதனாகிய யான், பின் முறையினீங்கி முழு நிலங்கொள்கிலேன் - பின்னர் அரசர் மாலையாகிய முறையினொழிந்து பேரரசினைக் கொள்ளுமாற் றலையுடையே னல்லேன், இறைவன் காக்கி லன் ஆமெனின் - இறைவனாகிய சிராமன் அரசுரிமை மேற்கொண்டு காவானேயாயின், ஒருங்குடனே யாண்டெலாங் கானத்துறைவெனெ ன்றான் -'ஒரு சேரவவனுடன் பதினான் காண்டும் வனத்து வசிப்பே னென்றனன்.— எ-று.

மறையின் கேள்வனென்றான் முன் வேதநாயக னென்பதை வற் புறுத்தற்கு. மூத்தவற் குரித்தரசெனு முறையென முற்கூறிப்போந்தமை தோன்றப் பின் முறையினீங்கி முழுநிலங் கொள்கிலே னென்றார். மறை யின் கேள்வற் கென்பதனைப் பரத்துவாச முனிவனுக்கு என்றும், மன் னிளந்தோனறல் என்பதனைச் சிராமனுக் கிளையோனாகிய பரதனென் றுங் கோடலுமமையும். யாண்டெலா மென்றது பதினான்காண்டையும். இதனால் பரதன் இறைவன் அரசினை மேற்கொளானேல் யானு மவ னோடுறைவேனென்ப துணர்த்தப்பட்டது. (எஎ)

உரைத்தவாசகங்கேட்டலுமுள்ளெழுந்
திரைத்தகாதலிருந்தவத்தோர்க்கெலாம்
குரைத்தமேனியொடுள்ளங்குளிர்ந்ததால்
அரைத்தசாந்துகொடப்பியதென்னவே.

(இ - ள்.) உரைத்த வாசகம் கேட்டலும் - அவன் கூறியமொழி கேட்டலும், உள் எழுந்திரைத்த காத லிருந் தவத்தோர்க் கெலாம் - இறைவன் பால் மனத்தெழுந் தோங்குங் காதலையுடைய பெரிய தவ த்தையுடையார்க் கெல்லாம், அரைத்த சாந்து கொடப்பிய தென்ன - அரைத்த சாந்தைக் கொண்டப்பினாற்போல, குரைத்த மேனியொடுள் ளங் குளிர்ந்தது - புளகரும்பிய வுடலொடு மனங் குளிர்ந்தது.— எ-று.

உரைத்த வாசகமென்றது - இறைவன் காக்கிலனுமெனின் யாண்டலாம் உறைவென்கானத் தொருங்குடனென்பதனை. கொண்டென்றது மரீஇயது. மூன்றாவதன் பொருள்பட வந்தது. குரைத்தல் இரைத்தலென்பன இலக்கணை. வெப்பத்தாற் றளர்வாரைச் சாந்து கொண்டப்பினால் எத்துணைக் கழிபேருவகை பயக்குமோ அத்துணைக் கழிபேருவகை பயக்குமென்றதை உள்ளமுமேனியுங் குளிர்ந்தமைக் குவமைகூறினர். சாந்து வடசொற் சிதைவு. இதனான் முனிவரெல்லா மகிழ்வடைந்தமை யுணர்த்தப்பட்டது. (எஅ)

ஆயகாதலொடையனைக்கொண்டுதன்
தூயசாலையுறைவிடந்துன்னினான்
மேயசேனைக்கமைப்பென்விருந்தெனத்
தீயினாவுதிசெங்கையினீக்கினான்.

(இ - ள்.) ஆயகாதலோடையனைக்கொண்டு - அவ்வாறு தோன்றிய காதலுடன் பரதனை யழைத்துக் கொண்டு, தன்றூய உறைவிடம் சாலை துன்னினான் - தன்றூய்தாகிய வுறைவிடமாகிய தவச்சாலையை யடைந்து, மேயசேனைக்கு விருந்தமைப்பெனென - நின்னொடு வந்த படைக்கு விருந்தமைப்பேனென்றெண்ணி, தீயினாவுதி செங்கையினீக்கினான் - தீயிடையாவுதியைச் செங்கையினின்றும்பெய்தனன். எ-று.

ஐயனை யென்றது பரதனை. தூயசாலை யுறைவிட மென்றது தவச்சாலையை. விருந்து ஆகுபெயரராய்ப் புதியராய் வந்தார் மேனின்றது. அவரிருவகையர், பண்டறி வுண்மையின் குறித்து வந்தாரும் அஃதின்மையிற் குறித்து வந்தாருமென. துன்னினான் வினையெச்சமுற்று. ஆவுதி என்றது வடசொற் சிதைவு. இதனாற் பரத்துவாச முனிவன் பரதன் சேனைக்கு விருந்தமைக்க தீயினாவுதி பெய்தமை யுணர்த்தப்பட்டது. ()

துறந்தசெல்வனினையத்துறக்கந்தான்
பறந்துவந்துபடிந்ததுபல்சனர்
பிறந்துவேறொருலகுபெற்றாரென
மறந்துவைகினர்முன்னைத்தம்வாழ்வெலாம்.

(இ - ள்.) துறந்த செல்வன் - இருவகைப் பற்றையும் அறவேயொழித்த பரத்துவாசன், நினைய - எண்ணிய மாத்திரையில், துறக்கம் பறந்து வந்து படிந்தது - வானுலகம் விரைய வந்து சேர்ந்தது, பல்சனர் - (அவ்வாறெய்த) பலசனங்களும், பிறந்து வந்தோருலகு பெற்றாரென - பிறப் பெய்தி வேறோருலகத்தை யடைந்தார் போல, முன்னை தம் வாழ்வெலாம் மறந்து வைகினர் - முன்னை யெய்திய வாழ் வனைத்து மறந்து நின்றனர். - எ-று.

அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வமாகலின் துறந்தசெல்வனென்ருர். துறத்தல் இருவகைப் பற்றை யறவே யொழித்தல். அவையானெனதென்பவற்றை. இது பற்றியே 'நீர் நமதென்றிவை வேர் முதன்மாய்த் தெனப் பெரியாரும் பணித்தமை காண்க. முன்னைத் தம் வாழ்வென்ற தலகவாழ்வை. உம்மை இத்துணையும் அம் முனிவனினைத்த வாவே யமைந்த தென்பார் 'சினைய' என்ற தென்க.()

நந்தலில்லறநந்தினராமென
அந்தரத்தினரம்பையரன்பினர்
வந்துவந்தெதிரேத்தினர்மைந்தரை
இந்துவிற்சுடர்கோயில்கொண்டேகினர்.

(இ - ள்.) நந்தல் இல் அறம் நந்தினராமென- கேடில்லாத அறப்பயன் அடைந்தார் போன் றெண்ணி, அந்தரத்தின் அரம்பையர் - விண்ணுலகின் கணுறையும் அம்மகளிர், அன்பினர் மைந்தரை வந்து வந்தெதிரேத்தினர்-அன்புடையராய் ஆடவரை மிக வந்து தொழுது, இந்துவின் சுடர்கோயில் கொண்டேகினர் - மதியம் போல் விளங்கும் மாளிகையிற் கொண்டு சென்றனர்.—எ-று.

அந்தர மென்றது துறக்கத்தை. அரம்பைய ரென்றது அரமகளிரென்னும் பொதுமைபற்றி வந்தது. அன்பினர், ஏத்தினர் என்பனவினையெச்சமுற்று. அடுத்து மிகுதிப் பொருட்டு. நந்தலென்பது கேடுமாக் கமு மொருங்கே குறிக்கு மொரு சொல், (அக)

நானநன்குரைத்தார்நளிர்வானிடை
ஆனகங்கையரும்புனலாட்டினர்
தானமாமணிக்கற்பகந்தாங்கிய
ஊனமின்மலராடையுடுத்தினர்.

(இ - ள்) நான நன்குறைத்தார் - நான நன்கு பூசி, நளிர் வானிடையான கங்கை யரும்புனலாட்டினர் - வானிலுள்ள கங்கையின் தண்ணிய அரும்புனலை யாட்டி, தானம் ஆமணி கற்பகந்தாங்கிய-தானந் தருதற் குகந்த காமதேனுவும் சிந்தாமணியுங் கற்பக தருவுமேற்ற, ஊனமில் மலராடை உடுத்தினர்-குற்றமில்லாத மலர்போல் மெல்லிய ஆடைகளை யுடுத்தி.—எ-று.

வானிடையான கங்கை யென்றது ஆகாய கங்கையை. தானமளிப்பாரைக் காமதேனு, சிந்தாமணி, கற்பத்தோடுவமை கூறலின் தானமாமணி கற்பகந் தாங்கிய வென்ருர். பூவின் மெல்லிய வாடையினை மலராடையென்ற தென்க. 'உண் பொழுது நீராடியுண்ட' லியல்பாகலின் புனலாட்டலை முற்கூறினர். இது குளகம். (அஉ)

கொம்பினின்று நுடங்குறுகொள்கையார்
செம்பொனின்கலராசிதிருத்தினர்
அம்பரத்தினரம்பையரன்பொடும்
உம்பர்கோனுகரின்னமிர் தூட்டினர்.

(இ-ள்.) கொம்பினின்று நுடங்குறு கொள்கையார்-பூங்கொம்பு போன்று நிலைத்துத் துவள்கின்ற தோற்றத்தவராய், அம்பரத்தினரம்பையர் - விண்ணுலகத்து வாழு மரமகளிர், செம்பொனின் கலராசி திருத்தினர் - செம்பொனானியன்ற வணிகலத்தின் கூட்டங்களைத் திருந்த வணிந்து, அன்பொடும் உம்பர்கோனுகரின்னமிர் தூட்டினர் - அன்பான் இந்திரனுண்ணும் இனியவமிழ்த மிசை வித்தனர்.—எ-று.

உரைத்தார், ஊட்டினர், உடுத்தினர், திருத்தினர் என்பன வற்றை முறையேவினையெச்ச முற்றாகக்கொண்டு ஊட்டினரென்னும் வினைமுற்றைக் கொண்டு முடிந்ததெனக் கொள்க. அம்பரம், துறக்கம்,விண்,அந்தரமென்பன ஒருபொருள்குறித்த பலசொல். கொள்கையார் அரம்பையரென்பன ஒருபொருண் மேற்பல பெயர் வந்தன. மென்மலராடையுடுத்தினரென்பதற் கேற்பக் கலராசியென்ப தணிகலக் கூட்டங்களை யுணர்த்திற்று. கலராசி யெனற் குண்கல மெனினுமாம். இந்நான்கு செய்யுளானு மரமகளிர் பரதன் சேனையையுபசரித்தமையுணர்த்தப்பட்டது.()

அஞ்சடுத்தவமளியலத்தகப்
பஞ்சடுத்தபரிபுரப்பல்லவ
நஞ்சடுத்தநயனியர்நவ்வியில்
துஞ்சவத்தனைமைந்தருந்துஞ்சினர்.

(இ - ள்.) அஞ்சடுத்த அமளி - பஞ்ச சயனத்தில், அலத்தகப் பஞ்சடுத்த பரிபுரப் பல்லவம் - செம்பஞ் சூட்டிய சிலம்பணிந்த தளிரை யொத்த பாதத்தையும், நஞ்சடுத்த நயனியர்-விடத்தை யொத்த நோக்கையுமுடைய மாதர், நவ்வியுற்றுஞ்ச - பெடை மான்போலுந் துயில் கொள்ள, அத்தனை மைந்தருந் துஞ்சினர் - வீரரத்தனை பேருந் துயில் கொண்டனர்:—எ-று:

அஞ்சடுத்தவமளி எனபதனை மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி' எனப் பெரியாரும் பணித்தமையானுணர்க. அஞ்சடுத்தவமளி என்றது அன்னத்தின்றூவி, இலவம்பஞ்சு, செம்பஞ்சு, மயிற்றூவி, வெண்பஞ் சென்பனவற்றை. நஞ்சடுத்த நயனமென்றது விடநோக்கை. மருண்ட நோக்கியராதலான் நவ்வியுற்றுஞ்ச வென்றார். அத்தனை மைந்தருமென்றது பரதன் சேனைமுழுதும். அலத்தகம்-செம்பஞ்சு.(அச)

ஏந்துசெல்வத்திமையவராமெனக்
கூந்தறெய்வமகளிர்கொண்டாடினார்
வேந்தராதிசிவிகையின் வீங்குதோள்
மாந்தர்காறும்வரிசைவழாமலே.

(இ-ள்.) ஏந்து செல்வத் திமையவராமென் - தாங்கப்பட்ட செல்வத்தையுடைய தேவரேயென்னும்படி, வீங்குதோள் வேந்தராதி - பருத்த தோளையுடைய வரசர் முதல், சிவிகையின் மாந்தர் காறும் வரிசைவழாமல் - சிவிகையைக் காவு மாந்தர்வரையும் தத்தமுறைமை வழுவாது, கூந்தல்தெய்வமகளிர் கொண்டாடினார் - கூந்தலையுடைய வரமகளிர் சிறப்புச்செய்தனர்.—எ-று.

யாவரானும் வேள்விசெய்து வேண்டப்படுவது தேவர்செல்வமே யாதலின், தேவர்செல்வத்தை ஏந்துசெல்வமென்றார். கற்பகம், தேனு, சிந்தாமணி முதலியன ஏந்தித் தருஞ் செல்வமாதலின் ஏந்து செல்வமென்றாரெனினுமமையும். சிவிகையையூர்தல் அறத்தாற்றிற் செல்வாராயினாருர்த லியல்பாதலின், சிவிகையைக்காவுவாரைச்சிவிகையின் மாந்தரென்றார். இமையவரென்றது இமையாநாட்டமுடையாரை. (௰௨)

மாதர்யாவரும்வானவர்தேவியர்
கோதில்செல்வத்துவைகினர்கொவ்வைவாய்த்
தீதில்செல்வமடந்தையர்சேடியர்
தாதிமாரெனத்தம்பணிகேட்பவே.

(இ-ள்.) கொவ்வைவாய் - கொவ்வைக்கனிபோலும் வாயையுடைய, தீதில் செல்வமடந்தையர் - குற்றமற்ற செல்வத்தையுடைய மாதர், சேடியர் தாதிமாரென - சேடியரென்றும் தாதிமாரென்றும், தம்பணிகேட்ப - தங்குற்றேவல் கேட்க, வானவர் தேவியர் கோதில் செல்வத்து வைகினர்-அரமகளிரது குற்றமில்லாத செல்வத்தின்கண் தங்கியிருந்தனர்.—எ-று.

பணியென்றது குற்றேவலை. வானவர் தேவியரென்றது வானநாடியரை. மாதர் யாவருமென்றது அயோத்திமாதரை. சேடியரென்றது பாங்கியரை. தாதிமாரென்றது குற்றேவல் செய்வாரை. (௰௩)

நந்தநந்தவனங்களினுண்மலர்
கந்தமுந்தியகற்பகக்காவினின்
றந்தர்வந்தெனவந்திதன்கைதர
மந்தமந்தமணந்ததுவாடையே.

(இ - ள்.) கந்தமுந்திய கற்பகக்காவினின்று-மணங்கமழ்கின்ற கற்பகச்சோலையினின்றும், நந்தவனங்களின் - ஆண்டுள்ள பூஞ்சோலைகளாகத் தோன்றிய, நந்தநாண்மலர்-பெருக அன்றலர்ந்த மலரை, அந்தர்வந்தென - குருடர்வந்ததுபோல, அந்திதன்கைதர - அந்திதன் கைதர, மந்தமந்த மணந்தது-மெல்ல மெல்ல வந்தது, வாடை - தென்றற் காற்று.—எ-று.

வடக்கோடுதலின் தென்றலை வாடை யென்றும், அதுமெல்ல மெல்லச்சேறலின் அந்தர்வந்தெனவென்றும், தென்றலுக் குவமைமுகத்தாலுங்கூறினார். அந்தர் வடசொற்சிதைவு. (௰௪)

மான்றளிக்குலநன்மதம்வந்துணத்
தேன்றளிர்த்தகவளமுஞ்செங்கதிர்
கான்றநெற்றழைக்கற்றையுங்கற்பகம்
ஈன்றளிக்கநுகர்ந்தனயானையே.

(இ - ள்.) அளிக்குலமான்று நன்மதம்வந்துண-வண்டின்கூட்டமயங்கி நல்லமதத்தை வந்துண்ண, தேன்தளிர்த்த கவளமும்-மது நிரம்பிய கவளமும், செங்கதிர் கான்ற நெற்றழைக்கற்றையும் - செம்மையாகிய கதிரைத்தரு நெல்லினது தழைதலையுடைய கற்றையும், கற்பகம் ஈன்றளிக்க - கற்பகத்தருவளிக்க, யானைநுகர்ந்தன-யானைகளுண்டன.—எ-று.

நறுமண முடைமையின் தேன்றளித்த என்றார். செங்கதிர்கான்ற நெற்றழைக்கற்றை யென்றது செந்நெற்கதிர்க் கற்றையை. கற்பகமென்றது வடசொற்சிதைவு. (௰௫)

நரகதற்கறநல்குநலத்தநீர்
கரகதக்கரிகாணிமிர்த்துண்டன
மரகதத்தின்கொழுந்தெனவார்ந்தபுல்
குரகதத்தின்குழாங்களுங்கொண்டவே.

(இ -ள்.) நரகதற் கற-நரகவேதனை யொழிப்ப, நல்கு நலத்த நீர்-உதவுகின்ற நன்மையையுடைய சுரநீரை, கரகதக்கரி-புழைக்கையுஞ் சினமுமுடையயானைகள், கால் நிமிர்த்துண்டன-கால்களை நிமிரவைத் தருந்தின, மரகதத்தின் கொழுந்தெனவார்ந்த - பச்சையினிளங் கொழுந்தென்று விளங்குகின்ற, புல் குரகதத்தின் குழாங்களுங் கொண்ட-புல்லைக் குதிரைக் கூட்டங்களு முண்டன.—எ-று.

நரகதர்க்கறவென்றும் பாடம். நரகதற்கற நல்கு நலத்த நீரென்றது சுரநீரை. பசும்புல்லாதலின் மரகதத்தின் கொழுந்தோ டுவமை

கூறினர். கொள்ளலீண்டு மிசைதலை. மிசைவேழமாதலின் கதக்கரி யென்றதென்க. (௬௬)

இன்னரின்னணம்யாவருமிந்திரன்
றுன்னுபோகங்கடுய்த்தனர்தோன்றருன்
அன்னகாயுங்கிழங்குமுண்டப்பகல்
பொன்னின்மேனிபொடியுறப்போக்கினன்.

(இ - ள்) இன்னர் யாவரும் - இத்தன்மையராகிய யாவரும், இன்னணம் இந்திரன் துன்னுபோகங்கள் துய்த்தனர் - இவ்வாறு இந்திரனெய்துதற் குரிய போகங்களை யனுபவித்தனர், தோன்றல் தான் அன்னகாயுங் கிழங்கு முண்டு அப்பகல்-அப்பொழுது பரதனும் அக்காயுங் கிழங்குமருந்தி, பொன்னின்மேனி பொடியுறப் போக்கினன்-அழகிய மேனி புழுதிபடியக் கழித்தனன்.—எ-று.

இன்னணமென்றது மரீஇயது தோன்றலாகுபெயர். பகலென்றது பொழுதென்னுந் துணையாய் நின்றது. அன்னகாயுங் கிழங்கு முண்டு போக்கினனென்றார், இறைவன் கனிவாற்றானெய்திய விரதத்தினை. விருந்தமைப்பேனென முற்கூறினதை யொன்பது செய்யுளான் உணர்த்தப்பட்டது. (௬௭)

நீலவல்லிருணீங்கலுநீங்குமம்
மூலமில்கனவிற்றிருமுற்றுற
ஏலுநல்வினை துய்ப்பவர்க்கிறுசெல்
காலமென்னக்கதிரவன்றோன்றினன்.

(இ-ள்.) நீலவல்லிருணீங்கலும்-நீலநிறத்ததாகிய இரவினிருணீங்குதலும், நீங்குமம் மூலமில்கனவில்-நீங்கிய அக்காரணமில்லாத கனவொப்ப, திருமுற்றுற-போகமிறுதியெய்த, ஏலும் நல்வினை துய்ப்பவர்க்கு-அடையும் புண்ணியப்பயனை யனுபவிப்பார்க்கு, ஈறுசெல்காலமென்ன-அந்நுகர்ச்சி யிறுதியடையுங் காலம்போல, கதிரவன் தோன்றினன் - ஞாயிறுதயஞ்செய்தது.—எ-று.

தோற்றம்போற் றோன்றி மறைந்தமையின் மூலமில் கனவென்றார். திருவென்றதுபோக நுகர்ச்சியை. நல்வினையா னுகர்ந்த செல்வமது நீங்கியவழி யழிதலின் ஏலுநல்வினை துய்ப்பவர்க்கீறுசெல் காலமென்ன வென்றுவமை கூறியவாறு. இதனான் ஞாயிற்றி னுதயங் கூறப்பட்டது. (௬௮)

ஆறிநின்றறமாற்றலர்வாழ்வெனப்
பாறிவீய்ந்ததுசெல்வம்பரிந்திலர்
தேறிமுந்தைதஞ்சிந்தையராயினர்
மாறிவந்துபிறந்தன்னமாட்சியார்.

(இ - ள்.) ஆறிநின்று அறம் ஆற்றலர் வாழ்வென - மனமுதலியன அடங்கிநின்றறத்தைக் கடைபோகச் செய்யாதார் வாழ்வுபோல, செல்வம்பாறி வீந்தது-பரதனுடன் வந்தாரெய்திய போகம் கெட்டொழிந்தது, மாறிவந்து பிறந்தன்ன மாட்சியார்-தேவர்கதி மாறிப் பிறந்தாலொத்த தன்மையராய், பரிந்திலர் தேறி முந்தைதம் சிந்தையராயினர்-அப்போக நுகர்ச்சி நீங்கினமை நாடிவருந்தாமல் முன்னையுள்ள மெய்தி நின்றனர்.—எ-று.

"பல்சனர் பிறந்து வேறுருலகு பெற்றுரென - மறந்துவைகினர் முன்னைத் தம் வாழ்வெலாம்" என்றதனை வற்புறுத்த மாறி வந்தன்ன மாட்சியரென்றார். மாறிவருதல் கனவிடைக்கண்ட போகநீக்கத்தை. இதனாற் கனவினீக்க முணர்த்தப்பட்டது. (௯௬)

வே று.

காலையன்றெழுந்ததுகண்டுவானவர்
வேலையன்றனிகமேயென்றுவிம்மறச்
சோலையுங்கிரிகளுஞ்சுண்ணமாயெழப்
பாலைசென்றடைந்ததுபரதன்சேனையே.

(இ - ள்.) அன்று காலை-அற்றைக்காலையில், எழுந்ததுகண்டு-துயிலெழுந்து செல்வதுகண்டு, வானவர் வேலையன்று - தேவர்கள் இது கடலே அன்று, அனிகமேயென்று விம்மற-சேனையே யென்று துணிந்து ஐயமொழிய, பரதன் சேனை-பரதன்சேனை, சோலையுங் கிரிகளும் சுண்ணமாயெழ - வழியிடைச் சோலைகளு மலைகளும் புழுதிபட்டெழ, பாலைசென்றடைந்தது - பின்னர்ப் பாலைவனம் போயடைந்தது.—எ-று.

பாலையென்றதனை நடுவு நிலத்திணை யென்பர். ஆசிரியர் தொல்காப்பியரும், இதனை "முல்லையுங் குறிஞ்சியு முறைமையிற் றிரிந்து-நல்லியல்பழிந்து நடுங்கு துயருறுத்துப்- பாலையென்பதோர் படிவங் கொள்ளும்" என்பதனானுமுணர்க. அனிகமென்றது சேனையின் விசேடத்தை. பரதனென்பதனை "இறைவன் கானேகவும், இளையவனவனோ டுடன்சேரவும், அது பொறாதரசன் வானேகவும், சத்துருக்கனின்னல தறியே னெனக்கூறவும் அரசபாரம் பொறுத்தமை நோக்கியென்க. "பரதனெனப்பெயர் பன்னினர் நாமம்" என முற்காண்டத்துங் கூறுத லிப்பெற்றி நோக்கி. (௨௰)

எழுந்ததுதுகளதினெரியும்வெய்யவன்
அழுந்தினனவிப்பரும்வெம்மையாறினன்
பொழிந்தனகரிமதம்பொடிவெங்கானகம்
இழிந்தனவடிநடந்தேறுருளுமையே.

(இ-ள்.) துகள் எழுந்தது - வானளாவித் தூசெழும்பியது, அதின் எரியும்வெய்யவன்-அதினிடைச்சுடுகின்றஞாயிறு, அவிப்பவரும்வெம்மையாறினன் - பிறரால் அவித்தற்கருமையாகிய வெப்பமாறிநின்றனன், கரிமதம் பொழிந்தன - களிற்றியானை மதம் பொழிந்தன, பொடி வெங்கானகம் - புழுதிபடர்ந்த கொடிய காட்டகத்து, அடிநடந்தேறுமையிழிந்தன- அடிநடந்தேற மாட்டாமை இழிந்து நின்றன.—எ-று.

ஞாயிற்றுக்கவிப்பரும் வெம்மையுடைமை பற்றி வெய்யவனெனப்பட்டது. கரமுடையது கரியெனப்படும். இவ்வாறே பட்சி, தும்பி, தந்தி எனவருதல் காண்க. பொடியென்றது புழுதியை. நீறென்பது மப்பொருட்டாதல் காண்க. உயர்வு நவிற்சி. (உக)

வடியுடையயிற்படைமன்னர்வெண்குடை
செடியுடைநெடுநிழல்செய்ததீப்பொதி
படியுடைப்பரலுறைப்பாலைமேலுயர்
கொடியுடைப்பந்தரிற்குளிர்ந்தவெங்குமே.

(இ-ள்.) வடிவுடை யயிற்படை மன்னர் வெண்குடை-வடித்தலையுடையவேற்படையையுடைய அரசர் வெண்கொற்றக்குடையின், செடியுடை நெடுநிழல் செய்த தீப்பொதி - மரங்களடர்ந்த நீண்டநிழல் செய்ததீப்படர்ந்த, படியுடைப் பரலுறைப் பாலைமேல் -இடத்தையுடைய பருக்கைக்கல் தங்குதலையுடைய பாலையின்மேல், உயர்கொடியுடைய பந்தரின்-உயர்ந் தோங்கிய கொடிகளை யுடைய படர் கொடிகளாற் சமைந்த மனையே போல, எங்குங் குளிர்ந்தது - யாண்டுங் குளிர்ச்சியடைந்தது.—எ-று.

பாலையென்றது நடுவு நிலத்திணையை. தீப்பொதி யிடத்ததாகலின் தீப்பொதிபடியுடைப் பரலுறைப்பாலை யென்றார். இப்பெற்றி நோக்கியே "செழுங்கொண்டல் பெய்யாத கானகம்" என்றார் பிறரும். (உஉ)

பெருகியசெல்வநீபிடியென்றாள்வயின்
திருகியசிற்றத்தாற்செம்மையாய்நிறம்
கருகியவண்ணலைக்கண்டுகாதலின்
உருகியதளிர்த்தனவுலவையீட்டமே.

(இ-ள்.) உலவையீட்டம்-மரத்தினீட்டம், பெருகியசெல்வம் நீபிடியென்றாள் வயின்- மிகுந்தசெல்வத்தை நீ பிடியென்ற கைகேசியிடை, திருகியசிற்றத்தால் செம்மையாய்-மாறுபட்ட சினத்தான்செம்மைநிறத்தவாகி, நிறங்கருகிய அண்ணலைக்கண்டு - கரியகோலப் பெருந்தகையைக்கண்டு, காதலின் உருகிய தளிர்த்தன - காதலானுருகித் தளிர்த்தன.—எ-று.

பெருகிய செல்வமென்றார் மனுத்தொடக்க மானவ ராண்டுவந்த வரசச்செல்வ மாகலின். நிறங்கருகிய அண்ணலென்றது இராமனை.

அவன்கரியகோலத் தடங்கண்ண னாதலின். உருகிய வினையெச்ச முற்றாகக் கோடலன்றிச் செய்யியவென்னும் எச்சமாகக் கொள்ளினுமாம். (உரு)

வன்றெறுபாலையைமருதமாமெனச்
சென்றதுசித்திரகூடஞ்சேர்ந்ததால்
ஒன்றுரைத்துயிரினுமொழுக்கநன்றெனப்
பொன்றியபுரவலன்பொருவில்சேனையே.

(இ-ள்) ஒன்றுரைத்து-வாய்மையே கூறி, உயிரினுமொழுக்க நன்றென-உயிரினுமொழுக்கமேசிறந்ததென, பொன்றிய புரவலன்பொருவில் சேனை-பூதவுடம்பழிந்த வரசன் ஒப்பிலாத சேனை, வன்றெறு பாலையை மருதமாமென - வன்மையான் வருத்துகின்ற பாலைத்திணைதனை மருதத்திணை யாமெனக்கூற, சென்றது சித்திரகூடம் சேர்ந்தது-சென்று சித்திர கூடத்தினையடைந்தது.—எ-று.

ஒன்று ஆகுபெயரான் வாய்மையை யுணர்த்திற் றென்பதன்றி சான்றோர் வாய்ச்சொல் வாய்மையதாகலிற் றம்மொடு பொருந்துவதாகிய வம்மெய்ம்மைமொழி கூறி யென்னினுமமையும், 'ஒழுக்கமுயிரினு மோம்பப்படு' மென்பவாகலின் உயிரினுமொழுக்கமே சிறந்ததென்றார். சேனைபடர்வதனாற் பாலையைக் கெடுத்தலான் மருதமாமெனவென்றதென்க. சித்திரகூடமென்றதிராமன் வீற்றிருந்த விடத்தினை. சென்றது வினையெச்சமுற்று. இவ்வாறு கொள்வதன்றிச் சென்று பின்னது சித்திரகூடஞ் சேர்ந்ததெனினுமாம். வேந்தன் மேயதீம்புனலுலகமென்றது மருதத்தை. (உச)

தூளியின்படலையுந்துரகந்தேரொடு
மூளிருஞ்சினக்கரிமுழங்குமோதையும்
ஆளிருங்குழுவினராரவாரமும்
கோளிரும்படையிதென்றுணரக்கூறவே.

(இ-ள்) தூளியின்படலையும்-தூளியின் திரட்சியும், துரகந்தேரொடு-குதிரைதேருடனும், மூளிருஞ்சினக்கரி முழங்குமோதையும் பெருஞ்சினமெழுங் களிற்றியானையி னோசையும், ஆளிருங்குழுவி னரவாரமும்-பதாதியாகிய பெருங்கூட்டத்தி னரவாரமும், கோளிரும்படையிதென்றுணரக்கூற-ஆற்றலமைந்த பெரும்படை யிதுவென்றறியக்கூற-எ-று.

படலையும் ஓதையும் ஆரவாரமும் படையிதென்றுணரக் கூறப் பொருவில் சேனைசென்றது சித்திரகூடஞ் சேர்ந்தது எனக்கூட்டி முடிக்க. இதனான் நாற்படையு முணர்த்தினார். (உரு)

எழுந்தனனிளையவனேறினானிலம்
கொழுந்துயர்ந்தனையதோர்நெடியகுன்றின்மேல்
செழுந்திரைப்பரவையைச்சிறுமைபேசிய
கழுந்துடைவரிசிலைக்கடலைநோக்கினான்.

(இ - ள்) இளையவன் எழுந்தனன்-இளையோனெழுந்து, நிலம் கொழுந்துயர்ந்தனையதோர் நெடிய குன்றின்மே லேறினான் - நிலங் கொழுந்துவிட் டுயர்ந்தா லொத்ததோர் பெருவரைமேலேறி, செழுந் திரை பறவையை சிறுமைபேசிய-செழுமையாகிய அலையையுடையகடலினைச் சிறுமைகூறிய, கழுந்துடைய வரிசிலைக்கடலை நோக்கினான்-வன் மையையுடைய கட்டமைந்த வில்லேந்திய கடல்போல்வானாகிய இராமனைக்கண்டனன்.— எ - று.

எழுந்தனன், ஏறினானென்பன முற்றெச்சம். வில்லேந்திய படையாகலின் வரிசிலைக்கடலென்றார். கழுந்தோடும் வரிசிலைக் கைக் கூற்றனை எனமுற்கூறிப் போந்தமை காண்க. இனிக்கழுந்தெனற்கு வில்லின்றண்டும், கைப்பிடித்தலானாய தேய்வு மென்பனவுமாம். இவ் விரண்டு செய்யுளானும் இளையவன் பரதன் சேனையை நோக்கிப் பார்த்தமை யுணர்த்தப்பட்டது. உருவகம். ஓங்கலென்னும் பெயர் பற்றி நிலத்திற்றோன்றி யோங்கியிருத்தலின் நிலங்கொழுந் துயர்ந்தனை யதென்றதென்க. (உ௬)

பரதனிப்படைகொடுபார்கொண்டாண்மற
கருதியுள்கிடந்ததோர்கறுவுகாதலால்
விரதமுற்றிருந்தவன்மேல்வந்தானிது
சரதமற்றிலதெனத்தழங்குசீற்றத்தான்.

(இ-ள்.) பரதன் இப்படை கொடுபார்கொண்டு ஆள்மறங்கருதி-பரதன் இப்படையினைக்கொண் டரசினைக் கைக்கொண் டாளுங் கொடுந்தொழி லெண்ணி, உள்கிடந்தது ஓர் கறுவுகாதலால் - உள்ளடங்கி யிருந்ததொரு கருவொடுங்கூடிய காதலினால், விரத முற்றிருந் தவன்மேல் வந்தான் - தவநெறிமேற் கொண்டவன் மேற் பொர வந் தான், இது சரத மற்றில தென - இஃதுண்மையே வேறின் றெனக் கருதி, தழங்கு சீற்றத்தான்-மிக்கசினங் கொண்டவனாகி—எ-று.

உள் ஆகுபெயர். கொண்டு என்பது மரீஇயது. கிடந்தது வினைப் பெயர். விரதமுற்றிருந்தவ னென்றது சீராமனை. மற்று பிரிதென்னும் பொருளது. மேல்வரவென்றது பொரவந்தமையை. சீற்றத்தான் வினை யெச்சமுற்று. தனக்குறிமையல்லாத வரசாகலின் பார் கொண் டாள் மறங்கருதியென்றார். (உ௭)

குதித்தனன்பாரிடைக்குவடுநீறெழ
மிதித்தனனிராமனைவிரைவினெய்தினான்
மதித்திலன்பரதனின்மேல்வந்தான்மதில்
பதிப்பெருஞ்சேனையின்பரப்பினானென்றான்.

(இ-ள்.) பாரிடைக் குவடு நீறெழ-நிலத்தின்கண் மலைபுழுதிபட, மிதித்தனன் குதித்தனன் . மிதித்துக் குதித்து, விரைவின் இராமனை யெய்தினான் – விரைவொடு மிராமனை யடைந்து, பரதன் மதித்திலன்-பரதன் மதியாது, நின்மேல் வந்தான்-நின்பாற் பொரவந்தனன், மதில் மதிப்பெருஞ் சேனையின் பரப்பினான் – மதில் சூழ்ந்த நகரத்துப் பெருஞ்சேனையின் பரப்பினையுடையனாகி, என்றான்-என்றனன்.—எ-று

மதிப்பதி என்றது திருவயோத்தியை. இளையவன் சீற்றத்தான் மிதித்தனன் குதித்தனன் எய்தினான் மதித்திலன் வந்தானென்றான் என முடிக்க. ஆனுருபு போடுருபின் பொருளது. நீறு என்றது புழுதியை. (உஅ)

கட்டினன்சுரிகையுங்கழலும்பல்கணைப்
புட்டிலும்பொறுத்தனன்கவசம்பூட்டமைத்
திட்டனனெடுத்தனன்வரிவிலேந்தலைத்
தொட்டடிவணங்கிநின்றினையசொல்லினான்.

(இ-ள்.) சுரிகையுங் கழலும் கட்டினன் – உடைவாளையும் வீரகண்டையையுங் கட்டிக்கொண்டு, பல்கணை புட்டிலும் பொறுத்து-பல அம்புகளடங்கிய கூடுகளையுந் தாங்கி, கவசம் பூட்டமைத் திட்டனன்-போர்க் கவசத்தைப் பூட்டமைத் தணிந்து, வரிவில் ஏந்தினன்-வரிந்து கட்டிய வில்லேந்தி, ஏந்தலைத் தொட்டடி வணங்கி நின்றினைய சொல்லினான் – இறைவனைத் தாளைத் தொட்டு வணங்கி நின்றின்னன கூறத் தொடங்கினான்.—எ-று.

கட்டினன் எச்சமுற்று. இட்டனன் ஏந்தினனென்பனவுமன்ன. சுரிகை உடைவாளை. கவசம் உடற்கணியு மிருப்புப்பூட்டு. புட்டிலென்ற தம்பறாத் தூணியை. ஏந்தல் என்றது ஆகுபெயர். இனைய வென்றது இருமையு மிழந்த வப்பரதனென்பது போல்வனவற்றை. (உகூ)

இருமையுமிழந்தவப்பரதனேந்துதோள்
பருமையுமன்னவன்படைத்தசேனையின்
பெருமையுநின்னொருபின்புவந்தவென்
ஒருமையுங்கண்டினியுவத்தியுள்ளநீ.

(இ-ள்.) இருமையு மிழந்த – இருமையையு முழுது மிழந்த– அப்பரதன் ஏந்து தோள் பருமையும் – அன்னவன் படைத்த சேனையின்

பெருமையும் - அவன் பெற்ற சேனையின் பெருமிதத்தையும், நின்னொரு பின்பு வந்த என்னொருமையும்-நின்னைப்பற்ற பின்றோன்றிய என்னொருமைப் பாட்டினையும், கண்டு இனி உள்ளம் உவத்தி நீ - நீ இனி கண்டு மனமகிழ்.—எ-று.

பரதன் றோளாற்றலு மவன் சேனைப் பெருக்கமும், என்றற்றலாற் காட்டுவேனென்பார், "பரதன் றோட்பருமையும் அவன் படைத்த சேனையின் பெருமையும் பின்பு வந்த வென்னொருமை கண்டுவத்தினீ என்றார். இருமை என்றதீண்டெண்ணின்கணின்றது இம்மை மறுமையின்பங்களை. அன்னவனென்றது பரதனை. (௩௰)

படரெலாம்படப்படும்பருமயானையின்
திடரெலாமுருட்டினதேருமீர்த்தன
குடரெலாந்திரைத்தனகுருதியாறுகள்
கடரெலாமடுப்பனபலவுங்காண்டியால்.

(இ - ள்.) படரெலாம் பட - பல்வகைத் துன்பமெய்த, படும் பரும யானையின் - இறந்துபடும் பருமங்கொண்ட யானையாகிய, திடரெலாம் - மேடனைத்தும், உருட்டின - உருட்டப் பட்டன, தேரு மீர்த்தன - தேர்களு மிழுக்கப் பட்டன, குடரெலாம் திரைத்தன - குடர்களனைத்தும் அலைக்கப் பட்டன, கடரெலாம் மடுப்பன - கடல் முழுது மடுப்பன, குருதி யாறுகள்-உதிர வெள்ளங்கள், பலவுங் காண்டி-அனைத்தும் பார்.—எ-று.

பருமமுற் கூறினும். படரென்பதற்குப் பாகரையும் பரிக்கோற்காரரையுமென் றுரைப்பாரு முளர். கடர் குடர் என்பன இறுதிப் போர்கள். உயர்வு நவிற்சி. (௩௧)

கருவியுங்கைகளுங்கவசமார்பமும்
உருவினவுயிரினொடுதிரந்தோய்வில
திரிவனசுடர்க்கணைதிசைக்கையானைகள்
வெருவரச்செய்வனகாண்டிவீரநீ.

(இ - ள்.) கருவியும் கைகளும் - படைகளும் கைகளும், கவச மார்பமும உருவின - கவச மணிந்த மார்பு மூடுருவி, உயிரினொடு திரந் தோய்வில - உயிரொடு முதிரந் தோயாமல், திசைக்கை யானைகள் வெருவர - கையையுடைய திசையானைகளஞ்ச, சுடர்க்கணை - ஒளியையுடைய வாளின், செய்வன வீர காண்டி நீ - பொருவனவற்றை வீரனே நீ பார்.—எ-று.

திசையானைகளென்பன கீட்டிசை யானையாகிய ஐராவதத்தினை யுள்ளிட்டன. உம்மை எண். வெருவர ஒரு சொல. யானை கட்குக் கைமிகச் சிறந்தமையின் கையை யெடுத்துக் கூறினர். (௩௨)

கோடகத்தேர்படுகுதிரை தாவிய
ஆடகத்தட்டிடையலகையற்றுகு
கேடகத்தடக்கைகள்கவ்விக்கீதத்தின்
நாடகநடிப்பனகாண்டிநாதநீ.

(இ - ள்.) கோடகத்தேர் - கோட்டினாற் செய்யப்பட்ட இடமமைந்ததேர்களும், தாவிய குதிரை - தாவிச் செல்லும் பரிகளும், படு ஆடகத்தட்டிடை - அழிந்த பொன்னாலாய தட்டினிடை, அலகை-பேய்கள், அற்றுகு கேடகத் தடக்கைள் கவ்வி - அறுந்து சிந்தும் கேடகமணிந்த போர் வீரர் பெருங் கைகளைக் கவ்வி, கீதத்தின் நாடக நடிப்பன காண்டி நாதநீ - இசையொடு நாடகத்தைச் செய்வனவற்றை இறைவனே நீ பார் —எ-று. (௩௩)

பண்முதிர்களிற்றொடுபரதன்சேனையின்
எண்முதலறுத்துநானிமைப்பினீக்கலால்
விண்முதுகுளுக்கவும்வேலையாடையின்
மண்முதுகாற்றவுங்காண்டிவள்ளனீ.

(இ - ள்.) பண்முதிர் களிற்றொடு - கோலமிக்க களிற்றினோடு, பரதன் சேனையின் - பரதனது படையின், எண் முதலறுத்து-தொகையினை வேரொடுங் களைந்து, நாணிமைப்பின் நீக்கலான் - யான் கணப்பொழுதி னழித்தலான், விண் முதுகுளுக்கவும் - விண்ணுலக முதுகு நெளியவும், வேலையாடையின் மண்முதுகாற்றவும் - கடலையாடையாகவுடைய நிலமகள் முதுகாற்றிக் கொள்ளவும், வள்ளனீ காண்டி - வள்ளியோய் நீ பார்.—எ-று.

படை நான்கில் யானை தேர் குதிரை காலா ளென்பவற்றுள் யானை சிறப்புடைய தாகலின் பண் முதிர்களிற்றொடு என்றார். கசரத துரக மாக்கடலன் என்றதூஉ மிப்பெற்றி நோக்கி யென்க, "யானையுடைய படை காண்டன் மிக வினிதே" எனப் பிறருங் கூறுவது மிக்கருத்தே பற்றி யென்க. கடல்புடை சூழ்ந்த நிலவுல காகலின் வேலையாடையின் மண்ணென்ற தென்க. வேலையாடை இருபெயரொட்டுப் பண்புத் தொகை. (௩௪)

நிவந்தவான்குருதியினீத்தநீந்திமெய்
சிவந்தசாதகரொர்டுசிறுகட்கூளியும்
கவந்தமுமுலகநின்கையதாயதென்
றுவந்தனகுனிப்பனகாண்டியும்பர்போல்.

(இ - ள்.) சிவந்த வான் குருதியின் நீத்தம் நீந்தி - வழிந்த சிறந்த உதிர வெள்ளம் நீந்தி, மெய் சிவந்த சாதகரோடு சிறு கண் கூளியும்- உடம்பு சிவந்த சாதகரோடும் சிறிய கண்ணையுடைய கூளிகளும், கவந்தமும் - உடற் குறைகளும், உலகம் நின்னையதாமென - நிலவுலக முழுவது நின்வயத்ததா மென்று, உம்பர் போல் உவந்தன குனிப்பன காண்டி - தேவர்போன்று மகிழ்ந்து நடிப்பனவற்றைப்பார். — எ - று.

சாதகர், குறள், கூளி என்பன புறத்திணைப் பாற்பட்ட பாரிடங்களே. கவந்தமென்றது உடற்குறைப் பிணம். சிவந்தவான் குருதி யென்றதுயர்வு நவிற்சி. (௩௫)

சூழிவெங்கடகரிதுரகராசிகள்
பாழிவன்புயத்திகல்வயவர்பட்டற
வீழிவெங்குருதியாலலைந்தவேலைகள்
ஏழுமொன்ருகிநின்றிரைப்பக்காண்டியால்

(இ - ள்.) சூழி வெங் கட கரி - முகபடாமணிந்த கொடிய மதச்சுவட்டினையுடையயானையும், துரக ராசியும்- குதிரைக் கூட்டமும், பாழி வன் புயத்திகல் வயவர் - பெரியவன்மையாகிய தோளையுடைய போர் வீரரும், பட்டற - இறந்துபட, வீழி வெங்குருதியால்- வீழ்தலையுடைய வெய்யவுதிரத்தால், அலைந்த வேலைகளேழும் - திரைந்த கடலேழும், ஒன்ருகிநின்றிரைப்பக்காண்டி-ஒன்றுகூடி நின்றொலிக்கப்பார். — எ - று.

சூழிஎன்றது முகபடாத்தினை. இதனை விழுச்சூழிய விளங்கோடைய, என்னு மதுரைக் காஞ்சியில் நச்சினர்க்கினியர் உரைத்தலானுமறிக. கடமாகுபெயர். வீழிஎன்றதற்கு வீழிக்கனியை யொத்த வெனினுமாம். வேலைகளாகுபெயர். வேலைகளேழென்பன உவர்க்கடன் முதலாயின. உம்மைமுற்று. ஆல் அசை. (௩௬)

ஆளறவலங்குதேரழியவாடவர்
வாளறவரிசிலைதுணியமாக்கரி
தாளறத்தலையறப்புறவிதாளொடும்
தோளறவடிக்கணைதொடுப்பக்காண்டியால்.

(இ - ள்.) ஆளற-பதாதிஅழியவும், அலங்குதேர் அழிய - அசைந்து செல்லுந் தேரழியவும், ஆடவர்வாள்அற - வீரர்வாட் படை யழியவும், வரிசிலைதுணிய - கட்டமைந்த வில்லழியவும், மாக்கரிதாளற- பெரியானைகாலழியவும், புரவிதலையற- குதிரை தலையறவும், தாளொடு தோளற-அவற்றை யூர்ந்தார் தாளுந் தோளு மறவும், வடிக்கணை தொடுப்பகாண்டி—கூரியவாளி தொடுக்கப்பார்த்தி. — எ - று.

ஆள் என்றது காலாளே. தாளொடு தோளற வென்றமையான் ஆடவர்என்றதனைப் பின்னுங்கூட்டி, அவற்றினை யூர்ந்து செல்வாரையுண

ர்த்திற்று. ஆல் - அசைநிலை. வடித்தல் கூறியதாதலே. ஆள் ஆகுபெயர், வாள் ஆகுபெயர். (௯௭)

தழைத்தவான்சிறையன தசையுங்கவ்வின
அழைத்தவான்பறவைகளலங்குபொன்வடிம்
பிழைத்தவான்பகழிபுக்கிருவர்மார்பிடைப்
புழைத்தவான்பெருவழிபோவக்காண்டியால்.

(இ - ள்.) தழைத்தவான்சிறையன - செழித்த பெருஞ் சிறகினையுடையனவாகி, அலங்கு பொன்வடிம்பு இழைத்தவான் பகழிபுக்கு-அசைந்து பிரகாசிக்கும பொன்னு ேேரமமைக்கப்பட்ட சிறந்தவாளி சென்று, இருவர் மார்பிடை - இருவர் மார்பகத்து; புழைத்த வான் பெருவழி - தொளைப்பட்ட மிகப்பெரிய வழியில், தசையுங்கவ்வின- தசையையும் கவ்வினவாகி, வான்பறவைகள் அழைத்த- பெரும் பறவைகள் விருந்து நுகர வழைக்கப்பட்டனவாகி, போகக்காண்டி- செல்லப்பார்.—எ - று.

விசையோடுசேறற்குக் கழுகிறகு பூண்டிருத்தல் பற்றித் தழைத் தவான்சிறை யென்றார். இருவரென்றது பரத சத்துருக்கனரை. சத்துருக்குநன் தன்னொடு வந்தானேனும் பரதனைச் சார்ந்திருப்பது நோக்கி அவனையுமுடன் கூறினர். இருவர் தொகைக்குறிப்பு. வான் பெரு ஒருபொருட்பன்மொழி. கவ்வின எச்சமுற்று. தழைத்த வென் பதற்கு நெருங்கியவெனினு மமையும். (௯௮)

ஒருமகள்காதலினுலகைநோய்செய்த
பெருமகனேவலிற்பரதன்றன்பெரும்
இருநிலமாள்கைவிட்டின்றெனேவலால்
அருநரகாள்வதுகாண்டியாழியாய்.

(இ-ள்.) ஒருமகள் காதலின்-ஒருத்தியாசை மேற்கொண்டு, உலகை நோய் செய்த - உலகை நோய் செய்து, பெருமக னேவலின்-அரைய னாணையான், பரதன் றன்பெற்ற இருநிலம் - பரதன்றனடைந்த பெருநிலம், ஆள்கைவிட்டு-ஆண்டு வருவது நீங்கி, இன்று என் ஏவலால்-இன்றைப்போது என் ஆணையான், ஆழியாய்!-ஆக்கினை சக்கரமுடையானே, அருநரகாள்வது காண்டி- மீட்டுமடைந்தாரையுமிழப்பெறாத நிரயத்தினை யாள்வது டார்.—எ-று.

இளையான் பரதன்றன்முன்னோனுக் கிடரிழைத்தானென்பது கருதி யருநரகாள்வதென்றார். ஒருமகள் காதலென்றது கைகேசியை;பெருமகனே வல என்றது பரதன் குற்றேவலை. என் ஏவல் என்றது என்னுடைய ஆணை. நரகென்றது நிரயத்தை. ஆணையாயென்றது விளி. (௯௯)

வையகந்துறந்துவந்தடவிவைகுதல்
எய்தியதுனக்கெனநின்னையீன்றவள்
நைதல்கண்டுவந்தவணவையினேங்கிய
கைகயன்மகள்விழுந்தரற்றக்காண்டியால்.

(இ-ள்.) வையகந்துறந்து - அரசினைக் கைவிட்டு, அடவிவந்து வைகுதல்-காடடைந்து தங்குதல், உனக்கெய்தியதே யென்ற-நினக்கெய்தியதேயென்று, நின்னையீன்றவள் நைவதுகண்டு-உன்னையீன்றாள் வருந்தல் கண்டு, உவந்தவள்-மகிழ்ந்தவளாகிய, நவையினேங்கிய கேகயன்மகள்-குற்றத்தினேங்கிய கேகயராசன் மகள், விழுந்தரற்றக்காண்டி-விழுந்தழப்பார். எ-று.

உன்னை யீன்றவளென்றது கோசலையை. கோனெய்தக்கண்டு வருந்தி நின்றாய்பொருமலைக்கண்டுமகிழ்வாளாகலின் நவையினேங்கியளென்றதென்க. உவந்தவள் கேகயன் மகளென்றது ஒரு பொருண் மேற்பல பெயர்வந்தன. நின்னையீன்றவள் கோசலையை. ஆல் அசை. (சல)

அரஞ்சுடவழனிமிரலங்கல்வேலினய்
விரஞ்சொருநொடியிலிவ்வனிகவேலையை
உரஞ்சுடுவடிக்கணையொன்றில்வென்றுமுப்
புரஞ்சுடுமொருவனிற்பொலிவென்யானென்றான்.

(இ-ள்.) அரஞ்சுட அழல் நிமிரலங்கல் வேலினய்-அரத்தாலராவுதற்றெழிலமைந்த மாலையணிந்த வேலினையுடையாய், விரஞ்சொரு நொடியில் இவ்வனிக வேலையை - விரைந்தொரு நொடிப் பொழுதிலிச்சேனைக்கடலை, உரஞ்சுடுவடிக்கணை யொன்றின் வென்று-ஆற்றலழிக்கும் வடித்தவாளியொன்றான் வெற்றிகொண்டு, முப்புரஞ்சுடு மொருவனிற் பொலிவென் யானென்றான்-புரமூன்றினையு மெரித்த வொருவனிற்றோன்றுவனியானென்றனன்.—எ-று.

விரைந்தென்றது மரீஇயது. சுடவென்றது காரணப் பொருட்டாய செயவெச்சம். வேலினுயென்றது சீராமனை. நொடியென்றது கைந்நொடிப் பொழுதின் காலத்தை, ஆகுபெயர். மிகுதிபற்றி யனிகத்தை வேலையென்றார். உரஞ்சுடுவடிக்கணையென்பதற்கு மார்பிற்பட்டுருவும் வடித்தகணையெனினு மையும். முப்புரஞ்சுடுமொருவனென்றது ருத்திரனை, இன் உவமவுருபு. முப்புரஞ்சுட்டமை தப்பாது நிகழ்தலின் யானுமஃதவ்வாறு புரிவேனென்பார் முப்புரஞ்சுடுமொருவனிற் பொலிவேன் யானென்றதென்க. இப்பதின்மூன்று செய்யுளானுமிளையவன் பரதன் பொரவந்தானென்ப துணர்த்தப்பட்டது. (சக)

இலக்குவவுலகமோரேழுமேழுநீ
கலக்குவனென்பதுகருதினலது
விலக்குவதரிதுவிளம்பல்வேண்டுமோ
புலக்குரித்தொருபொருள்புகலக்கேட்டியால்

(இ-ள்.) இலக்குவ - இலக்குவனே, நீயுலகமோரேழுமேழுங் கலக்குவனென்பது-நீ பதினான்குலகங்களையும் கலங்கச் செய்வனெனப்படுவது கருதின்-எண்ணி நிற்பின், அது விலக்குவதரிது-அது விலக்காநிற்பதரிது, அது விளம்பல் வேண்டுமோ - அது சொல்லுதற்குரியதோ, புலக்குரித்தொரு பொருள் அறிவினுக்குரித்தாகிய மெய்ம்மைச் செய்தியை, யான் புகலக்கேட்டி-யான் சொல்லக்கேள்,—எ-று.

உலகமோரேழு மேழுமென்பது கீழ்மேலெனப்படும் பதினான் குலகங்களையும். உம்மை முற்றுப்பொருளோடெண்ணுப் பொருளன. கலக்குவனென்ப தொருமைத்தன்மை முற்று. புதியன புகுதல், இலக்குவனென்றது வடசொற்சிதைவு. புலத்துக்குரித்து என்பது சாரியை யுள்வழி தவிர்ந்து வந்தது, மாடக்குச் சித்திரமென்றாற்போல. ஓ எதிர்மறை. ஆல் அசைநிலை. (சஉ)

நங்குலத்துதித்தவர்நவையுணீங்கினர்
எங்குலப்புறுவர்களெண்ணில்யாவரே
தங்குலத்தொருவருந்தருமநீங்கினர்
பொங்குலத்திரளொடும்பொருததோளினாய்.

(இ-ள்.) பொங்குலத்திரளொடும்பொருததோளினாய்-மிகத்திரட்சியாகிய கல்லின்றிரளோடும் பொருகின்ற தோளினையுடையானே, நங்குலத்துதித்தவர்- நம் மரபின்கண் தோன்றியோர், நவையுள் நீங்கினர்-குற்றத்தினின்று நீங்கினர், எங்குலப்புறுவர்கள் - எங்குலப் புறுவர்கள், யாண்டிறுதி யெய்துவர்-யாண்டிறுதி எய்துவர், எண்ணில்யாவரே-எண்ணுங்கால் யாவரே, தங்குலத்தொருவருந் தரும நீங்கினர்—தங்குலத்திடை நீங்காததருமந் தவிர்ந்தனர்.—எ-று.

யாவரேயென்றது ஒருவருமில ரென்றவாறு, * "நங்குலக்குரவர்கணவையினீங்கினர் எங்குலப் புறுவ" ரென மேற்கூறியதை யீண்டும் வற்புறுத்தினர். (சங)

எனைத்துளமறையவையியம்பற்பாலன
பனைத்திரள்கரக்கரிப்பரதன்செய்கையே
அனைத்திறமல்லனவல்லவன்னது
நினைத்திலையென்வயினேயநெஞ்சினால்.

(இ-ள்.) எனைத்துள மறையவை யியம்பற்பாலன-எத்தனையுள்ளன மறைகளவை சொல்லற்பாலன, பனைத்திரள்கரக் கரி பரதன் செய்கையே-

*மந்திரப்படலம்,செ. கஎ.

பனைபோலுந் திரண்ட புழைக்கையினையுடைய யானை போல்கின்ற பரதன் செயலே, அனைத்திறமல்லனவல்ல-அத்தனை வகையல்லனவல்ல, அன்னது என்வயின் னோ நெஞ்சினல் நினைத்திலே-அதனை யென்பால்வைத்த அன்பினையுடைய சிந்தையான் எண்ணலே.—எ-று.

எனை, அனை என்பனமரூஉ. மறைகள் கூறுமறவொழுக்க மனைத்தும் பரதனொழுக்கமேயென்பார் எனைத்திறமறை இயம்பற்பாலன,பரதன்செய்கையேயென்றும், வேறு கூறமாட்டாவென்பார் அனைத்திறமல்லன வல்லவென்றுங் கூறினார். (சச)

பெருமகனென்வயிற்பிறந்தகாதலின்
வருமெனநினைகையுமண்ணையென்வயின்
தருமெனநினைகையுந்தவிரத்தானையாய்
பொருமெனநினைகையும்புலமைப்பாலதோ.

(இ-ள்) பெருமகனென் வயிற்பிறந்த காதலின் வரும்—பெருந்தகைமையுடைய பரதன் என்பால் வைத்த காதலான் வருகின்றான், என நினைகையும்-என எண்ணி நிற்பதும், மண்ணை என்வயின்தரும்-அரசினை என்பாலுதவும்,எனநினைகையும்-எனநினைத்து நிற்பதும்,தவிரதானையால் பொரும்-ஒழியச் சேனையாற் போர் செய்வன், என நினைகையும் -எனநினைத்து நிற்பதும், புலமைப்பாலதோ-அறிவின் பகுதியேயோ.—எ-று.

பெருமகனென்றது பரதனை. வருமென்னுஞ் செய்யுமென் முற்று நிகழ் காலத்தைக்காட்டிற்று. ஏனைய எதிர்காலத்தைக் காட்டின. உம்மை எண். இருகையும் தருகையும் பொருகையும் புலக்குரித்தன்றென்பார் புலமைப் பாலதோவென்றார். (சரு)

பொன்னெடும்பொருகழற்பரதன்போந்தனன்
நன்னெடும்பெரும்படைநல்கலன்றியே
என்னெடும்பொருமெனவியம்பற்பாலதோ
மின்னெடும்பொருவுறவிளங்கும்வேலினாய்.

(இ-ள்.) மின்னொடும் பொருவுற விளங்கும் வேலினாய்-மின்னொடு மொத்துத் தோன்றும் வேற்படையுடையானே, பொன்னொடும்-பொன்னாற் செய்யப்பட்ட ,பொருகழற் பரதன் போந்தனன்-போர்க் குரித்தாகிய கழலையணிந்த பரதன் எய்தினன், (அங்ஙனமெய்தினமை) நன்னெடும் பெரும்படை நல்கலன்றி-நன்மையாகிய நீண்ட பெருஞ்சேனையை என் பாற்றரலியைந்ததென்பதன்றி, என்னொடும் பொருமென - என்னொடும் போர் செய்யுமென்று, இயம்பற்பாலதோ-சொல்லத்தக்கதோ (வன்று).—எ-று.

பொன்னொடு மென்புழி ஒடு உருபு ஆனுருபின் பொருளது போந்தனனென்பதுமரூஉ. நெடும்பெரு ஒருபொருட்பன்மொழி. கழலென்றது வீர

ராயினர் ஞாட்பிடைபெதிர்கையின் காலிலணியு மோரணிகல விசேடம். என்னொடும பொரவிசையானென்பார் என்னொடும் பொருமென வியம்பற்பாலதோ என்றார். (சக)

சேணுயர்தருமத்தின்றேவைச்செம்மையின்
ஆணியையன்ன துகினைக்கலாகுமே
பூணியன்மொய்ம்பினய்போந்ததீண்டெனைக்
காணியநீயிதுபின்னுங்காண்டியால்.

பூணியல் மொய்ம்பினேய்-அணிகலம் புனைந்த தோளையுடையானே, சேணுயர் தருமத்தின் தேவை-மிகப்பெரிய தருமதேவதை போல்வானை, செம்மையினாணியை-நடுவு நிலைக்குரையாணியன்னானை, அன்னது நினைக்கலாகுமே-நீ குறித்துரைத்தமை சொல்லற்பாலதேபோ, எனைக்காணிய ஈண்டு போந்தது-என்னைக் காண்டற்பொருட்டே அவனிங்குப்போந்தமை, நீயிது பின்னுங்காண்டி-நீயிதனைப் பின்னுங்காண்.—எ-று.

மேற்பெருமகனென்பதனை வற்புறுத்தற்குச் சேணுயர் தருமத்தின் றேவை செம்மையினாணியை, இது பரதனென்னும் ஒரு பொருண்மேற் பல பெயர் வந்தன. சேணுயர் ஒரு பொருட்பன்மொழி. நீ நினைந்தாங்கியானினைந்து கூறப்படாதென்பார் அன்னது நினைக்கலாகுமே என்றார். ஏகாரமெதிர்மறை. புதியன புகுதல். ஆல் அசை நிலை. (சஎ)

என்றனனிளவலைநோக்கியேந்தனும்
நின்றனன்பரதனுநிமிர்ந்தசேனையைப்
பின்றருகென்றுதன்பிரிவில்காதலின்
தன்றுணைத்தம்பியுந்தானுமுந்தினான்

(இ-ள்.) என்றனனிளவலைநோக்கி- என்றின்னன கூறி இளையானை நோக்கி, ஏந்தலும நின்றனன்—இறைவனு நின்றனன், பரதனு நிமிர்ந்த சேனையை-பரதனும் மிக்க சேனையினை,பின் தருகென்று-பிற்பட வருகென்றேவி, தன் பிரிவில் காதலின் தன்றுணை தம்பியுந் தானு முந்தினான் - தனனொடும பிரிதலில்லாத காதலையுடைய தன்றுணைவனாகிய சத்துருக்கனுந் தானுமுற்பட வந்தனன்.—எ-று.

என்றனனென்றது, புலக்குரித்தொருபொருள் புகலக்கேட்டி யெனக்கூறிய தொடங்கிச் சொன்னவற்றினை. என்றனன் எச்சமுற்று. ஏந்தலாகுபெயர். தருகென்று ஈறுதொகுத்தல் பெற்றது. தம்பியுந் தானு மெனப்பால் விரவா தெண்ணப்பட்டுச் சிறப்பினனொருமை முடிபெற்றது. இவ்வாறு செய்யுளானும் இறைவன் இளையவனுக்குப் பரதன் செயலுணர்த்தினமை கூறப்பட்டது. (சஅ)

னையுடையேனாகிய யான், மாண்டு முடிவதல்லால் - இறந்தொழிவ தல்லாமல், மாயாவுடம்பிதுகொண்டு-உயிர்நீங்குதலில்லாத விவ்வுடம்பினைக்கொண்டு, ஆண்டு வருவது - ஆளுகை செய்து வருவது, இனியார் முகத்தே நோக்கவோ-யார் முகத்தே விழிக்கவோ.—எ-று. (சஅ)

தொழுதுயர்கையினன்றுவண்டமேனியன்
அழுதழிகண்ணினனவலமீதெனை
எழுதியபடிவமொத்தெய்துவான்றனை
முழுதுணர்சிந்தையான்முடியநோக்கினான்.

(இ-ள்.) தொழுதுயர்கையினன் – தொழுதோங்கிய கையையுடையானும், துவண்டமேனியன் - தளர்ந்த வுடம்பினையுடையானும், அழுதழிகண்ணினன் - அழுது வருந்துங் கண்ணையுடையானுமாகி, அவலமீதென எழுதியபடிவமொத் தெய்துவான்றனை - துன்பப்படிவமீதென்றெழுதிய வோவியப்படிவ மொத்தடையும் பரதனை, முழுதுணர்சிந்தையான் - அனைத்துமொருங் குணர்ந்த வறிவுடையனாகிய சிராமன், முடிய நோக்கினான் - முழுது நன்கு நோக்கினன்.—எ-று.

கையினன்முதலியனகுறிப்பெச்சமுற்று. சருவஞ்ஞனென்பதுபற்றி முழுதுணர் சிந்தையானென்றார். தொழுதுயர் கையென்றது திரியாங்கத்தினை. (சக)

கார்ப்பொருமேனியக்கண்ணன்காட்டினான்
ஆர்ப்புறுவரிசிலையிளையவையநீ
தேர்ப்பெருந்தானையால்பரதன்சிறிய
போர்ப்பெருங்கோலத்தைப்பொருந்தநோக்கென.

(இ-ள்.) கார்பொரு மேனி அக்கண்ணன் - கருமுகில் போலு நிறத்தினையுடைய அச்சிராமன், ஆர்ப்புறுவரி சிலை இளையவைய - ஆர்க்கின்ற வரிந்து கட்டிய வில்லையுடைய இளையவையனே, நீ தேர்ப்பெருந்தானையால் - நீ பெருந்தேர்ச் சேனையான், சிறிய போர்ப் பெருங்கோலத்தை - சினங்கொண்டெய்திய போர்க்குரிய பெருங்காட்சியினை, பொருந்த நோக்கென காட்டினான் - நன்றாகக் காணென்று காட்டி நின்றனன்.—எ-று.

ஐயவென வன்புபற்றி விளித்தான். தேர்ப்பெருந்தானை யென்றது சேனைப் படைகட்கு முபலக்கணம். கண்ணனென்றது சிராமனை. இவ்வாறே இவர் கூறுவதியல்பு. மேற்செய்யுளோடு கூட்டிக் கையினன், மேனியன் கண்ணினன் எய்துவான்றனை சிந்தையான் நோக்கினான் பரதன் கோலத்தைநீபொருந்த நோக்கெனக் காட்டினானென வினை முடிக்க. 'கரிய கோலத்தடங் கண்ணன்' எனப் பெரியாரும் பணித்தமையான் கார்ப்பொரு மேனியக் கண்ணனென்றார். இவ்விரண்டு செய்யு

ளானும் ப்ரதன் போர்க்கோலங் கொண்டெய்தினமை காணென்றிளை யவற் குணர்த்தினமை கூறப்பட்டது. (௫௰)

எல்லொடுங்கியமுகத்திளவனின்றனன்
மல்லொடுங்கியபுயத்தவனைவைதெழும்
சொல்லொடுஞ்சினத்தொடுமுணர்வுசோர்தர
வில்லொடுங்கண்ணநீர்நிலத்துவீழவே.

(இ - ள்.) இளவல் - இளையோன், மல் ஒடுங்கிய புயத்தவனை - மற்போர் ஒடுங்கிய தோளையுடைய பரதனை, வைது எழும்-நிந்தித் தெழுந்த,சொல்லொடும்-மொழியினோடும்,சினத்தொடும்-சீற்றத்தொடும், உணர்வு சோர்தர - அறிவு அழிந்துபோக, வில்லொடுங் கண்ண நீர் நிலத்து வீழ - ஏந்திய வில்லினோடுங் கண்ணினின்றும் பெருகிய நீர் நிலத்திடை விழ,எல்லொடுங்கிய முகத்து நின்றனன்-ஒளியிழந்த முகத் தொடு நின்றனன்.—எ-று.

கண்ணநீர் என்புழிக் கண்ணவென்பது குறிப்புப் பெயரெச்சம், நீரென்றுஞ் செய்வினைக்கொண்டது. சடைமுடி பரித்தெய்தினமை யின்மல்லொடுங்கிய புயத்தவனையென்றும், அவனைக் கண்டாங்கு முன் னர் வைதமை முதலிய கழிந்தமையின் வைதெழும் சொல்லொடுஞ் சினத்தொடு மறிவு சோர்தர வில்லொடுங் கண்ண நீர் நிலத்து வீழ எல் லொடுங்கிய முகத்து நின்றனனென்றுங் கூறினர். இதனான் இளையோன் பரதனைக் கண்டாங்கெய்தினமை கூறப்பட்டது. (௫௧)

கோதறத்தவஞ்செய்துகுறிப்பினெய்திய
நாதனைப்பிரிந்தனணலத்துநீங்கினாள்
வேதனைத்திருமகண்மெலிகின்றாள்விடு
தூதெனப்பரதனுந்தொழுதுதோன்றினான்.

(இ - ள்.) கோதற தவஞ்செய்து - குற்ற நீங்கத் தவஞ்செய்து, குறிப்பினெய்திய - கருத்தின் வண்ணமெய்தப்பட்ட, நாதனைப் பிரிந்த னள்-இறைவனை நீங்கியதன்றி, நலத்து நீங்கினாள்-பலநலத்து நீங்கி, வேதனை மெலிகின்றாள் - துயரான் மெலிகின்றவளாகிய, திருமகள்- திருமடந்தை, விடுதூதென-அனுப்பிய தூதுபோல, பரதனுந்தொழுது தோன்றினான் - பரதனுந் தொழா நின்று தோன்றினன்.—எ-று.

கோதென்பது குற்றம்; அதுகாமம் வெகுளி மயக்கங்களை; இதற்கு வேறு கூறுவாருமுளர். பிரிந்தனள் எச்சமுற்று; மெலிகின்றா ளென்பது வினைப்பெயர். தொழுது: தொழாநின்று என நிகழ்காலத் துச் செய்து வந்தமையைத் 'தன் கணவற்றொழுது எழுவா' ளென்னுந் திருக்குறட்குப் பரிமேலழகருரையானும், 'வினைவள நீறெழ' வென்னுங்

திருக்கோவையாருக்குப் பேராசிரியருரையானு முணர்க. பரதனைத் திருமகளனுப்பிய தூதென்றுவமை முகத்தாற் கூறினர். (௫௨)

அறந்தனைநினைந்திலையருளைநீத்தனை
துறந்தனைமுறைமையையென்னுஞ்சொல்லினன்
மறந்தனன்மலரடிவந்துவீழ்ந்தனன்
இறந்தனன்றாதையையெதிர்கண்டென்னவே.

(இ - ள்.) அறந்தனை நினைந்திலை-அறத்தை நினைந்தாயல்லை, அருளை நீத்தனை-அருளை யொழித்தனை, முறைமையை துறந்தனை - நீதியை யொழிந்தனை, என்னுஞ் சொல்லினன்-என்னுஞ்சொல்லையுடைய னாய், மறந்தனன் - மெய்ம்மறந்து, இறந்தனன்தாதையை-இறந்துபட்ட தாதையை, எதிர் கண்டென்ன- நேரிற் கண்டாங்கு, மலரடி வந்து வீழ்ந்தனன்-மலர் போன்ற தாளில் வந்து வணங்கினன்.—எ-று.

அரசதருமத்தை யெண்ணிநின்றிலை யென்பார் அறந்தனை நினைந் திலையென்றும், மன்பதை யோம்பாமே கான் புகுந்தனை யென்பார் அருளை நீத்தனையென்றும், இறந்துபட்ட தாதையைக் கண்டாங்கு தோன்றி நின்றமையின் மறந்தனன் இறந்தனன் தாதையை எதிர்கண் டன்ன மலரடி வந்து வீழ்ந்தனனென்றுங் கூறினர். உண்டான் சாத்த னூருக்குப் போயினு னென்புழிப் போல இறந்தனன்றாதை யென்றார்; மறந்தனன் எச்சமுற்று. கண்டாலென்பது திரிந்து நின்றது. (௫௩)

உண்டுகொலுயிரெனவொடுங்கினனுருக்
கண்டனநின்றனன்கண்ணன்கண்ணெனும்
புண்டரீகம்பொழிபுனலவன்சடா
மண்டலநிறைந்துபோய்வழிந்துசோரவே

(இ-ள்.) கண்ணன்-இராமன், கண் எனும் புண்டரீகம் பொழி புனல் - கண்ணெனப்படுஞ் செந்தாமரை பொழியுநீர், அவன் சடாமண் டலம் நிறைந்து-அவன் சடைமுடியிற் சென்று நிறைந்து,வழிந்துசோர-நிரம்பிப் பெருக்கெடுப்ப, உயிருண்டு கொல் என ஒடுங்கினனுரு - உயி ருண்டோவென வொடுங்கிய பரதன் வடிவத்தினை, கண்டனன் நின்ற னன்-கண்டு நின்றனன்.—எ-று.

கண்ணனென்பதற்கு மேலுரைத்தாம். தன்னுயிர்போன்றவிராமனை கானிடை நீத்திருப்பவனுதலின் உயிருண்டு கொலென வொடுங்கினு னென்றார். பரதன்றேற்றங்கண்டு இராமன் கண்ணீர் பொழிந்தமை யவன்பாற் காதலை வெளிப்படுத்தற்கென்க. இதனை புன்கணீர்ப்பூசறு மென்னுந்திருக்குறட்குப் பரிமேலழகருரையானுமுணர்க. (௫௪)

அயாவுயிர்த்தழுகணீ ரருவிமார்பிடை
உயாவுறத்திருவுளமுருகப்புல்லினன்
நியாயமத்தனைக்குமோர்நிலையமாகினன்
தயாமுதலறத்தினைத்தழுவியென்னவே.

(இ-ள்.) தயாமுதல் அறத்தினைத் தழுவி என்ன - அருளையுடைய இறைவன் அறத்தைத்தழுவி நின்றாற்போல, நியாயமத்தனைக்கு மோர் நிலயமாகினன்-நீதியனைத்தினுக்குமோர் நிலைக்களமாகிய இராமன், அயாவுயிர்த்து-நெட்டுயிர்ப்பெறிந்து, அழுகணீர் அருவி மார்பிடையுயா வுற-அழுதலாலாய கண்ணினின்றும் வழியுநீரருவி மார்பிடைப்பெருக, திருவுளமுருக-மனங்கரைய, புல்லினன் - தழுவி நின்றனன்.—எ-று.

ரவிகுலதிலகன், ராசமாபுரியென வடமொழியினின்றாங்கு தயாமுதலென வந்தது. இதனைத்தயாமூல தன்மமெனப் பிறருங் கூறலானுமுணர்க. அறவியலனைத்து மறிவிக்கத் தோன்றியோனாகலின் நியாயமத்தனைக்குமோர் நிலயமாகினனென்றார். இறைவன் பரதனைப்புல்லினமையைத் தயா முதலறத்தொடுதழுவினமைக்குவமை கூறினார். இவ்விரண்டு செய்யுளானும் பரதன் சீராமனைப் புல்லினமை யுணர்த்தப்பட்டது. (௫௫)

புல்லினனின்றவன்புனைந்தவேடத்தைப்
பன்முறைநோக்கினன்பலவுமுன்னினன்
அல்லலினழுங்கினையையவாளுடை
மல்லுயர்தோளினன்வலியனோவென்றான்.

(இ-ள்.) அவன் புனைந்த வேடத்தை-அவன் கொண்ட கோலத்தை, புல்லினன் நின்றனன்-தழுவி நின்று, பன்முறை நோக்கினன்-பலமுறை கண்டு, பலவும் உன்னினன் - பலவற்றையுமெண்ணி, ஐய அல்லலினழுங்கினை-ஐயனே நீ துயரிலழுந்தினை, ஆளுடைய மல்லுயர் தோளினன் வலியனோ என்றான் - அரசச் செல்வத்தினையுடைய மற்போர்க்குரிய சிறந்த தோளையுடைய வரசன் வலியனோவென்றனன்.—எ-று.

புல்லினன் முதலியன எச்சமுற்று. மல்லுயர் தோளினனென்றார் அரையர் மரபினை விசேடிப்பா ரதனையே விசேடித்தலின்; வலியனோ வென்றது யானுடைப் பிரிவான் மறுக்கமொழிந்துள்ளானோ வென்பதனை. ஓ வினா உலகமெல்லாமுடையனாகலினாளுடைய என்றடை கொடுத்தார். (௫௬)

அரியவனுரைசெயப்பரதனையகின்
பிரிவெனும்பிணியினலென்னைப்பெற்றவக்
கரியவள்வரமெனுங்காலனானனக்
குரியமெய்ந்நிறுவிப்போயும்பரானென்றான்.

(இ - ள்.) அரியவனுரை செய-மறைகளானு முணரமாட்டாத இறைவனெடுத்துக் கூற, பரதன் - பரதனும், ஐய- இறைவனே! நின்பிரிவெனும் பிணியினால்-நின் பிரிவெனப்படு நோயானும், என்னைப்பெற்ற வக்கரியவள்வரமெனுங் காலனால்- என்னையீன்ற அம்மனக்கொடியாள் பெற்ற வரமெனப்படுஞ் சமனாலும், தனக்குரிய மெய் நிறுவிப்போய்- தனக்குரிய மெய்ம்மொழி நிறுத்துச் சென்று, உம்பரானென்றான்- துறக்கமடைந்தன னென்றனன்.—எ-று.

இனி இரட்டுற மொழிதலான் பூதவுடம்பொழிந்து புகழுடம் பெய்தினமை பற்றித் துறக்கமடைந்தன னென்றானெனினுங் கொள்க. இது இயைபுருவகம். உம்பரானென்றது பிறிதினவிற்சி. கரியவளென்றது பாவ மிகுதிபற்றி. அரியவனென்றது மறைகளு மமரர் கூட்டமு மவனை யறியமாட்டாமையின். இதனானரசன் றுஞ்சினானெனப் பரதன் கூறியமையுணர்த்தப்பட்டது. (கஎ)

விண்ணிடையடைந்தனனென்றவெய்யசொல்
புண்ணிடையயிலெனச்செவிபுகாமுனம்
கண்ணொடுமனஞ்சுழல்கறங்குபோலவாய்
மண்ணிடைவிழுந்தனன்வானினும்பரான்.

(இ-ள்) விண்ணிடையடைந்தனன் - அரசன் துறக்கம்புக்கான், என்ற வெய்ய சொல்-எனப்பட்ட கொடிய சொல், புண்ணிடையயிலென-புண்ணிடை வேல்போல, செவிபுகாமுன்-செவியினுழையாமுன், வானினும்பரான் - விண்ணிற்கப்புரத்ததாய நித்த விபூதிக் கிறைவன், கண்ணொடு மனஞ்சுழல் கறங்கு போல வாய் - கண்ணுமனமுங் கறங்கெனச் சுழன்று, மண்ணிடை விழுந்தனன் - தரையின்கண் விழுந்தனன்.—எ-று.

விண்ணிடை யடைந்தனன் என்றது பிறிதினவிற்சி. கானெய்தி வருந்துவதினுங் கடுந்துயர் விளைத்தலின் புண்ணிடை யயிலென் றுவமை கூறினார். நித்தர் முத்தர் வழிபடற் குரியான் அரசன்றுஞ்சினமைகேட்டாங்கு மண்ணிடை விழுந்தனனென்றதென்க. (கஅ)

இருநிலஞ்சேர்ந்தனனிறையுயிர்த்திலன்
உருமினையரவெனவுணர்விநீங்கினான்
அருமையினுயிர்வரவயர்வுயிர்த்தகம்
பொருமினன்பன்முறைபுலம்பினனரோ.

(இ-ள்.) இருநிலஞ்சேர்ந்தனன் - பெரிய நிலத்திடை விழுந்து, இறையுயிர்த்திலன்-சிறிதுமுயிர்ப் பெறியாது, உருமின் னை அரவென-இடியான் வருந்தும் பாம்பேபோல, உணர்வு நீங்கினான். அறிவழிந்து,

அருமையின் உயிர்வர-பின்னர் அரிதாக உயிர்மீள, அயர்வுயிர்த்து-நெட்டுயிர்ப்பெறிந்து, அகம்பொருமினன் பன்முறை புலம்பினுன் -மன மறுகிப் பலமுறை புலம்பிநின்றனன் —எ-று.

இறை என்பதற்கு அயர்வருமமரர்கட் கிறையாகலின் அங்ஙனங் கூறினர். இடியின் அரவு வருந்துதல் துணிபாகலின் அதனையே உவமித்தார். இதனையே 'விரிகிறநாகம் விடருளதேனு முருமின் கடுஞ் சினஞ் சேணின்றுமுட்கும்' எனப்பிறருங் கூறுவதனுனு முணர்க. நீங்கினன் முதலியன எச்சமுற்று. இவ்விரண்டு செய்யுளானும் இறைவன் கேட்டு வருந்தினமை யுணர்த்தப்பட்டது. (ருக)

வேறு.

நந்தாவிளக்கனையநாயகனேநானிலத்தோர்
தந்தாய்தனியறத்தின்றுயேதயாநிலையே
எந்தாயிகல்வேந்தரேறேயிறந்தனையே
அந்தோவினிவாய்மைக்காருளரேமற்றென்றுன்.

(இ-ள்) நந்தாவிளக்கனைய நாயகனே - அவியா விளக்கன்ன இறைவனே, நானிலத்தோர் தந்தாய் - நான்கு நிலத்தவர்க்குந் தந்தையே. தனியறத்தின்றுயே - ஒப்பிகந்த அறத்துக்குத்தாயே, தயாநிலையே- அருட்குநிலைக்களமே, எந்தாய் - எம்மையீன்றுனே, இகல் வேந்தரேறே-பகையரசருக்கேறன்னுனே, இறந்தனையே-துஞ்சினையே, அந்தோ இனிவாய்மைக்காருளர் மற்றென்றுன்- ஐயோ இனிவாய் மைக் கியாவரே யுளார் வேறென்றனன்.—எ-று.

குணஞ்செயல் புகழென்பவற்றுற் குலத்தை விளக்குதலின் நந்தா விளக்கென்றுர். தந்தை காப்பதுபோல் மன்பதையைக் காத்தோம்ப லின் நானிலத்தோர் தந்தாயென்றும், அறத்தை வளர்த்தலின் அறத் தின்றுயே யென்றும் கூறினர். (சுഠ)

சொற்பெற்றநோன்பின்றுறையோனருள்வேண்டி
நற்பெற்றவேள்விநவைநீங்கநீயியற்றி
எற்பெற்றுநீபெற்றதின்னுயிர்போய்நீங்கலோ
கொற்பெற்றவெற்றிக்கொலைபெற்றகூர்வேலோய்.

(இ-ள்.) கொல்பெற்ற வெற்றி கொலை பெற்ற கூர்வேலோய் - கொல்லனுற் குயிற்றப்பட்ட வெற்றியொடு கூடிய கொலைத் தொழி லடைந்த கூரியவேற்படையை யுடையானே, சொல்பெற்ற நோன்பின் துறையோ னருள்வேண்டி—மறைகளாேேதப்பட்டவிரதங்களின்வகை யனைத்துஞ் செய்தோனுகிய கலைக்கோட்டு முனிவனருளடைந்து, நற் பெற்ற வேள்வி- நன்மையமைந்த வேள்வியினை, நவை நீங்க நீ யியற்றி- குற்றமொழிய நீ செய்து, எற் பெற்று நீ பெற்ற தின்னுயிர் போய் நீங்க

லோ - என்னை மகவாகப்பெற்று நீ யடைந்துனதினிமையாகிய உயிர் துறக்கமெய்தவோ.—எ-று.

வேலோயெனவிளித்தது தயரதனை. கொல் சொல்லானஃறிணை. சொல்லென்றது மறையினை; ஆகுபெயர். நோன்பென்றது விரதங்களானுண்டி சுருக்குதலை. துறையென்றதவற்றின் வகையை. வெற்றிக்கொலையென்றது! கொன்று வெற்றியடைந்தமையை. நற்பெற்ற வேள்வியென்றது புத்திரகாமேட்டியை. (சுக)

மன்னுயிர்க்குநல்குறிமைமண்பாரநான்சுமக்கப்
பொன்னுயிர்க்குந்தாரோய்பொறையுயிர்த்தவாறிதுவோ
உன்னுயிர்க்குங்கூற்றுயுலகாளவுற்றேனே
மின்னுயிர்க்குந்தீவாய்வெயிலுயிர்க்கும்வெள்வேலோய்.

(இ-ள்.) மின்னுயிர்க்குந் தீவாய் வெயிலுயிர்க்கும் வெள்வேலோய்-ஒளியைக் காலும் வெம்மையமைந்த கிரணங்களை வீசுங் கூரிய வேற்படையையுடையானே, மன்னுயிர்க்கு நல்குரிமை மண்பாரம்-நிலைபேறுடைய உயிரைக் காவல் செய்யும் அரசபாரம், நான் சுமக்க-யான் பொறுக்க, பொன்னுயிர்க்குந் தாரோய்-அழகமைந்த மலர்மாலையுடையானே, பொறையுயிர்த்த வாறிதுவோ-நீயப்பொறை யொழிந்து இளைப்பாறிய வகை யிதுவோ, உன்னுயிர்க்குங் கூற்றுயுலகாளவுற்றேனே - உன்னுயிர்க்குஞ் சமனேபோன் றுலகினையாளக் கருதினேனே.—எ-று.

மண்பாரமென்றது அரசபாரத்தை. கூற்றுச் சொல்லானஃறிணை. உம்மை இறந்தது தழீஇயது. வெண்மை யீண்டொளியின் மேற்று. ‘மாதவர் நோன்பு மடவார் கற்புங்-காவலன் காவலன்றித் தங்கா’வாகலின் மன்னுயிர்க்கு நல்குரிமைமண்பார நான்சுமக்கஎன்றார். யானுலகாள்வேனென் றென்றமை யுன்னுயிர் நீங்கவோ வென்பார் பொறையுயிர்த்தவாறிதுவோ வென்றும், உன்னுயிர்க்குங் கூற்றுயுலகாளவுற்றேனே வென்றுங் கூறினார். வேந்தனை வருமுதுமைப்பருவத்துத் தம் மக்கள்பா லரசபார மளித்துத் தாந் தவ வொழுக்கத்தைமேற்கொண்டு வர அஃதில்லாமைபற்றி யீண்டுக் கவன்றமை கூறினார். (சுஉ)

என்பரத்ததாக்கியரசுரிமையிந்தியங்கள்
வெம்பவத்தின்வீயத்தவம்விளைத்தவாறிதுவோ
சம்பரப்பேர்த்தானவனைத்தள்ளிச்சதமகன்றன்
அம்பரத்தினீங்காவரசளித்தவாழியாய்.

(இ-ள்.) சம்பரன்பேர்த்தானவனை-சம்பரனென்னும் பெயரினையுடைய அசரனை, தள்ளி-வெற்றிகொண்டு, சதமகன் - இந்திரனுக்கு

அம்பரத்தின் நீங்காவரசு அளித்த ஆழியாய் - விண்ணுலகத்தினின்று நீங்காத வரசாட்சியை யுதவியஆக்ஞைசக்கரமுடையானே, அரசுரிமை அரசாட்சியுரிமை, என்பரத்தது ஆக்கி-என் வயத்ததாக்கி, இந்தியங்கள் வெம்பவத்தின் வீய-இந்தியங்களைந்தும் கொடிய தீவினையினின்று மொழிய, தவம் விளைந்தவாறிதுவோ - தவத்தினை யாற்றிய வகை யிதுவேயோ.—எ-று.

என்பரத்ததாக்கி யென்றதற்கென் பொறையாக்கி யெனினுமமையும். அசுரரொடுஞ் சென்று சம்பர னிந்திரனோடு போர் செய்து விண்ணுலகை வெற்றி கொண்டதற்கு ஆற்றானாகித் தயரதனைவேண்டியிரப்ப அவன் விண்ணுலகெய்திப் போரிடை வென்று மீட்டுமதனை யுதவினா னென்பது. இதனை "இன்றளிர்க்கற்பக நறுந்தேனிடை துளிக்கு நிழலிருக்கையிழந்து போந்து - நின்றளிக்குந் தனிக்குடைக்கீழ் திறைதுங்கிக் குறையிரந்து நிற்பநோக்கிக் – குன்றளிக்குங்குலமணித்தோட் சம்பரனைக் குலத்தோடுந் தொலைத்" தென முற்கூறிப் போந்தமையானு முணர்க. (சுங)

வேண்டுதிறத்தாரும்வேண்டாவரசாட்சி
பூண்டிவ்வுலகுக்கிடர்கொடுத்தபுல்லனேன்
மாண்டுமுடிவதல்லான்மாயாவுடம்பிதுகொண்
டாண்டுவருவதினியார்முகத்தேநோக்கவோ.

(இ - ள்.) வேண்டு திறத்தாரும் - பொருள்களனைத்தையும் விரும்புந்தன்மையுடையாரும், வேண்டாத வரசாட்சி பூண்டு-விரும்பாதவரசாட்சியை மேற்கொண்டு, இவ்வுலகுக் கிடர்கொடுத்தபுல்லனேன் - இம் மண்ணுலகினுக்குத் துன்பத்தினை விளைத்த புன்மையாகிய ஒழுக்கத்தினையுடையேனாகிய யான், மாண்டு முடிவதல்லால்-இறந்தொழிவதல்லாமல், மாயாவுடம்பிது கொண்டு-உயிர் நீங்குதலில்லாத வில் வுடம்பினைக் கொண்டு, ஆண்டு வருவது-ஆளுகை செய்து வருவது, இனியார் முகத்தே நோக்கவோ - யார் முகத்தே விழிக்கவோ.—எ-று.

வேண்டு திறத்தாரும் உம்மை உயர்வு சிறப்புப் பொருளது அரசாட்சியை மேற்கொண்டு நினக்குத் துயர் விளைத்தேனென்பார் வேண்டா வரசாட்சி பூண்டிவ்வுலகுக் கிடர் விளைத்த புல்லனே னென்றார். நின்முக நோக்கத்தவமிலேனென்பார்இனியார் முகத்தேநோக்கவோஎன்றதென்க.

தேனடைந்தசோலைத்திருநாடுகைவிட்டுக்
கானடைந்தேனென்னத்தரியாதுகாவலநீ
வானடைந்தாயின்னமிருந்தேனான்வாழ்வுகந்தே
ஊனடைந்ததெவ்வருயிரடைந்தவொள்வேலோய்.

(இ - ள்.) ஊனடைந்த தெவ்வருயி ரடைந்த வொள்வேலோய் - ஊன றங்கிய பகைவ ருயிரினைக் கவர்ந்த வொள்ளிய வேற்படையை யுடையானே, தேனடைந்த சோலை திருநாடு கைவிட்டு - தேன் றங்கிய சோலை சூழ்ந்த கோசலை நாட்டை நீங்கி, கானடைந்தேன் - வனம் புக்கேன், என்ன தரியாது — என்பகை ஆற்றாது, காவல நீ வானடைந்தாய் - அரசனே நீ துறக்க மெய்தினை, இன்னம் நான் வாழ்வுகந்தே யிருந்தேன - இன்னும் யான் இவ்வுலக வாழ்க்கையை விரும்பியிருந்தேன்.—எ-று.

தேனடைந்த சோலைத் திருநாடென்றது - கோசல நாட்டினை. வானடைந்தாய் என்றது பிறிதினவிற்சி. அருவப் பொருளாகிய வுயிரைக் கவருதலாகிய தருமத்தை வேலின்மே லேற்றிக் கூறினார். நீயிறந்து படவுமிவ்வாழ்க்கையை விரும்பினே னென்பார் இன்னமிருந்தே நான் வாழ்வுகந்தே என்றதென்க. என்னவென்னுஞ் செயவெனெச்சந் தொழிற்பெயர் பொருட்டு. (௬௫)

வண்மைஇயுமானமுமேல்வானவர்க்கும்போக்கிலாத்
திண்மைஇயுஞ்செங்கோனெறியுந்திறம்பாத
உண்மைஇயுமெல்லாமுடனேகொண்டேகினையே
தண்மைஇதகைமதிக்குமீந்ததனிக்குடையோய்.

(இ - ள்.) தகைமதிக்கும் - நிறை மதிக்கும், தண்மையீந்த - தட்பத்தை யுதவிய, தனிக்குடையோய் - ஒப்பில்லாத குடையையுடையானே, வண்மையும் மானமும் மேல் வானவர்க்கும் போக்கிலாத திண்மையும் - ஈகைத் தன்மையும் பெருமையும் விண்ணுலகத்து வானவராலும் அழிக்கமாட்டாத வன்மையும், செங்கோல் நெறியும் திறம்பாத உண்மையும் - நீதி குன்றாத அரசிய லொழுக்கமும் மாறுபடாத வாய்மையு , எல்லாம் உடனே கொண்டேகினையே - அனைத்தையும் உடன் கொண்டிலகிடை நின்று சென்றனையே.—எ-று.

தகைமதி யென்றது நிறை மதியை. வண்மை யென்றது கொடைத் தொழிலை. வானவர்க்கும் உருபுமயக்கம், உம்மை உயர்வு சிறப்பு. மேல் என்றது ஆகுபெயர். நிலமிசை நீடுவாழ்வா ரென்புழி மிசை யென்பதற்குப் பரிமேலழகர் கூறலானு முணர்க. தனிக்குடை யென்றது தனியரசாட்சியை. (௬௬)

என்றெடுத்துப்பற்பலவும்பன்னியிடருழக்கும்
குன்றெடுத்தவொக்குங்குவவுத்தோட்கோளரியை
வன்றடக்கைத்தம்பியருமற்றுள்ளமன்னவரும்
சென்றெடுத்துத்தாங்கினார்மாவதிட்டன்றேற்றினான்.

(இ - ள்.) என்றெடுத்துப் பற்பலவும் பன்னி - என்றெடுத்துப் பற்பலவற்றையுங் கூறி, இடருழக்கும்-துன்பத்தினால் வருந்தும், குன்றெடுத்து ஒக்கும்-மலைதிரண்டாலன்ன, குலவுத்தோட் கோளரியை-திரட்சியையுடைய தோளையுடைய சிங்கம் போல்வானை, வன்றடக்கை தம்பியரும் மற்றுமுள்ள மன்னவரும் - வன்மையாகிய விசாலித்த கையையுடைய தம்பிமாரும் ஏனைய வரசரும், சென்றெடுத்து தாங்கினார் - போயெடுத்துத் தாங்கி நின்றனர், மாவசிட்டன் தேற்றினான் - பெருமை வாய்ந்த வசிட்ட முனிவன் தேற்றத் தொடங்கினான்.—எ-று.

என்றெடுத்துப் பற்பலவு மென்றது நந்தா விளக்கனைய நாயகனே என்பது முதலிய வற்றை. அரசர்கட்குத் தோளாற்றன் மிகுதி பற்றி குன்றெடுத்த வொக்குங் குலவுத்தோ ளென்றார். கோளரியென்றது ஸ்ரீராமனை; மற்றுமுள்ள மன்னவரு மென்றது பரதன் முதலானோர். தோட்கோளரியென்றது இல்பொருளுவமை இவ்வெட்டுச் செய்யுளானும் ஸ்ரீராமன் தயரதனைப்பற்றி வருந்திய துணர்த்தப்பட்டது. (சுஎ)

பன்னரியநோன்பின்பரத்துவனேயாதியாம்
பின்னுசடையோரும்பேருலகமோரேழின்
மன்னவருமந்திரியரெல்லாரும்வந்தடைத்தார்
தன்னுரிமைச்சேனைத்தலைவோருந்தாமடைந்தார்.

(இ - ள்.) பன்னரிய நோன்பின்-சொல்லரிய தவத்தினையுடைய பரத்துவனே யாதியாம் - பரத்துவன் முதலாகிய, பின்னு சடையோரும் பேருலகம் ஓரேழின் மன்னவரும் மந்திரியர் எல்லாரும் வந்தடைந்தார்-பின்னி விட்ட சடையையுடையாரும் பேருலக மேழுமாண்டு வருமரசரும் அமைச்சர் யாரும் வந்தடைந்தனர், தன்னுரிமைச் சேனைத் தலைவோரும் தாமடைந்தார் - தன்னுரிமையையுடைய சேனைத் தலைவரும் வந்து சேர்ந்தனர்.—எ-று.

தவத்தினை யளவிடக் கூடாமையிற் பன்னரிய நோன்பென்றார். பரத்துவனே யாதியாம் பின்னு சடையாரு மென்றது முனிவரை, உம்மை எண். தன்னுரிமை யென்றது படை நான்கையுங் கொண்டு மறுபுல வேந்தரை வென்று நாட்டினை யுதவலின். (சுஅ)

மற்றும்வரற்பாலரெல்லாரும்வந்தடைந்தார்
சுற்றுமிருந்தவமைதியினிற்றுன்புழக்கும்
கொற்றக்குரிசின்முகநோக்கிக்கோமலரோன்
பெற்றபெருமைத்தவமுனிவன்பேசுவான்.

(இ - ள்.) மற்றும் வரற் பாலார் எல்லாரும் வந்தடைந்தார்-பின்னும் வருதற் பான்மையுடையார் யாவரும் வந்து சேர்ந்தனர், சுற்று

யிருந்த அமைதியினின் - சற்றும் தன்னொடிருந்த அமையத்து, துன்புழக்கும் கொற்றம் குரிசில் முகநோக்கி - துன்பத்தால் வருந்தும் வெற்றியையுடைய பரதன் முகத்தை நோக்கி, கோமலரோன் பெற்ற பெருமைத் தவமுனிவன் பேசுவான்-தேனையுடையதாமரையானாகிய பிரமன் பெற்ற பெருமிதத்தையுடைய தவத்தினையுடைய வசிட்ட முனிவன் சொல்லத் தொடங்கினான்.—எ-று.

துன்புழக்குங் கொற்றக் குரிசிலென்றது பரதன் றன் சீராமன்பிரிவான் வருந்துதலெய்துகின்றமையின். கோமலரோன்பெற்றபெருமைத் தவமுனிவனென்றது வசிட்டனை. (௬௯)

வேறு.

துறத்தலுநல்லறத்துறையுமல்லது
புறத்தொருதுணையிலைப்பொருந்துமன்னுயிர்க்
கிறத்தலும்பிறத்தலுமியற்கையென்பதை
மறத்தியோமறைகளின்வரம்புகண்டநீ.

(இ-ள்.) துறத்தலும்-துறவற நிலையினிற்றலும், நல்லறத் துறையுமல்லது-நன்னிலையி னிற்றலுமல்லாது, பொருந்து மன்னுயிர்க்கு - உலக வாழ்வெய்தி நின்ற நிலைபேறுடைய உயிர்கட்கு, புறத்து ஒரு துணையிலை - வேறொரு துணையையுங் கண்டதில்லை, இறத்தலும் பிறத்தலும்—சாதலுந் தோன்றுதலும், இயற்கை யென்பது-இயல்பினையுடையதே, மறைகளின் வரம்பு கண்ட நீ - மறைகளின் முடிவினை யளவைகளா லுணர்ந்த நீ, மறத்தியோ - மறந்தனையோ.—எ-று.

வீடுபேற்றிற்கு நிமித்தமாதலின் துறவற நிலையை முற்கூறினார். இப்பெற்றி நோக்கியே நாலடியாருள் ஆசிரியர் பதுமனார் துறவினை முன் னிறுத்தியதூஉ மென்க. செய்யக் கடவவற்றைச் செய்தொழுகிற் சாலச் சிறந்ததாகலி னின்னிலையை நல்லறமென்றார். அந்நிலையினொழுகி நெடும்பொழுது நின்றவரசனை நாடி வருந்தலிற் பயனின்மையின் அளவைகளான்மறைகளை வரம்பு கண்டநீ மறத்தியோ வென்றதென்க. (௭௰)

உண்மையில்பிறவிகளுலப்பில்கோடிகள்
தண்மையில்வெம்மையிற்றழுவினவ்வெனும்
வண்மையைநோக்கியவரியகூற்றின்பால்
கண்மையுமுளதெனக்கருதலாகுமோ.

(இ-ள்.) உண்மையில் பிறவிகளுலப்பில் கோடிகள் - நிலைபேறில்லாத பிறவிகளுயிர்கட்கு அலகிலாப் பலகோடிகளெய்தப்படுவன், தண்மையில் வெம்மையில் தழுவின - அவை தாம் இன்பத்தினைப் பயந்தும் துன்பத்தினைப் பயந்தும் தழுவப்பட்டன, எனும் வண்மையை நோக்கி-எனப்புகழும் நூல்களாற் சாலக் கூறப்படுந்தன்மையை நோக்கி

அவ்வலிய கூற்றின்பால் - அக்கொடுங் கூற்றுவன் பால், கண்மையும் உளதெனக் கருதல் வேண்டுமோ - கண்ணோட்ட முளதாமென்று நினைத்தல் தகுதியோ.—எ-று.

தோன்றியழியு மாலையவாகலின் உண்மையில் பிறவியென்றும், நல்வினை தீவினை காரணமாக வின்பத்துன்பக் கூறுபாடுகளுயிர்களெய் தலின் அவை தாம் தண்மையில் வெம்மையில் தழுவினவென்றும், இவை நூல்களாற் பரக்கக் கூறுதலின் வண்மையை நோக்கியென்றும், அவற்றைக்கா நோக்கி யூனுயிர் வேறு செய்தலின் கூற்றுவனைக் கண் மையு முளதெனக் கருதல் வேண்டுமோ வென்றுங்கூறினார். கண்மை என்றது கண்ணின் றன்மையை; இதனைக் 'கண்ணென்னுங் கண்ணோ ட்டமில்லாத கண்' என்புழிக் கண்ணப் பொருட்டாதலறிக. தழுவினவ் வெனுமென்பது விரிக்கும் வழி விரித்தல் பெற்றது. (எக)

பெறுவதன்முன்னுயிர்பிரிதல்காண்டியால்
மறுவறுகற்பினில்வையம்யாவையும்
அறுபதினாயிரமாண்டுமாண்டவன்
இறுவதுகண்டவற்கிரங்கல்வேண்டுமோ.

(இ-ள்.) பெறுவதன் முன் உயிர் பிறிதல் காண்டி - மக்களைத்தாயுயிர் நீங்கலின் முன் நீங்குதல் கண்கூடாகக் கண்டனையன்றே, மறுவறுகற்பினில் வையம் யாவையும் - குற்றமற்ற வறக் கற்பினை யுடைய நிலமுழுவதும், அறுபதினாயிர மாண்டு மாண்டவன் இறுவது - அறுப தினாயிரமாண்டுவரையும் அரசியனடத்திய வரசனிறத்தலை, கண்டவற் கிரங்கல்வேண்டுமோ - நோக்கியவர்க்கு இரங்குவது தகுதியோ.—எ-று.

இறைவன் பொதுக்கடிந் துலகமுழு தாண்டமையான் மறுவறுகற் பினி லென்றார். இனிமனு முதலிய நூல்கள் கூறியாங் கரசியனடத்தி னமையின் மறுவறுகற்பினி லென்றாரெனினுமமையும். பெறுவதன் உயிர்பிறிதல் காண்டியென்றது 'பீட் பிதுக்கிப்பிள்ளையைத் தாயலறக் கோடலை' என்க. உட்மைமுற்று. இனி யவற்கிரங்கல் வேண்டா வென்ப தாம். (எஉ)

சிலமுந்தருமமுஞ்சிதைவில்செய்கையும்
சூலமுந்திகிரியுஞ்சொல்லுந்தாங்கிய
மூலம்வந்துதவியமூவர்க்காயினும்
காலமென்றொருவலைகடக்கலாகுமோ.

(இ-ள்.) சீலமும்தருமமும் சிதைவில்செய்கையும்—தவ வொழுக்க மும், அறமும்கேடில்லாதசெய்கையும்,சூலமும் திகிரியும்சொல் லுந்தாங்கிய- முத்தலைப்படையும் ஆழிப்படையும் வாக்காயுதத்தையுந் தாங்கப்பட்ட மூலம்வந்துதவிய மூவர்க்காயினும் - மூலமுழுமுதற் பொருளுதவிய மும்

மைப்பெருந்தேவர்க்கேயாயினும், காலமென்றவொரு பொருள் கடக்கலாகுமோ - காலமெனப்படும் பொருளைக் கடத்தலாகுமோ.—எ-று.

சீலமுடைய சூலந்தாங்கிய உருத்திரனுக்கெனவும், தருமமுடைய திகிரிதாங்கிய உபேந்திரனுக்கெனவும், இறைவில் செய்கையுடைய சொல்தாங்கிய பிரமனுக்கெனவும், நிரநிறையாகக் கொண்டு காலமென்றொரு பொருள் கடக்கலாகுமோ வெனக்கூட்டி முடிக்க. சீலமென்றது தோலொடு மென்பு நீறு சடைமுடி புனைந்திருத்தலை. அறமென்றது தருக்காவல் பூண்டிருத்தலை. இறைவில் செய்கையென்பது விதித்தற்றொழிலைப் பற்றாமையை. மூலமென்றது பரமபதநாதனை. அவ்விறைவனை உருத்திரனுக்கு அந்தரியாமியாயிருந் தழித்தற்றொழிலும், உபேந்திரனுக்கு அந்தரியாமியாய் நின்று காத்தற்றொழிலு மேற்கோடலின் மூலமுடைய மூவர்க்காயினு மென்றார். இப்பெற்றி நோக்கியன்றே பரிமேலழகர் கடவுள் வாழ்த்தென்புழிப் பரக்க விரித்தமை காண்க. இனி 'முனிவோன் கண்ணிமுக்கணப்பா வெனவோ பொல்லாக் - கனிவாய்த் தாமரை கண்கறு மாணிக்கமே யென்கள்வா' எனப்பெரியாரும் பணித்தமையானும் மதனுரையானும் இவ்வாசிரியரும் உருளுநேமியினான் 'கவரெலீகமும் - மருளில்லாதையு மயல்லவா மூவர்க்கும்' என்று முற்கூறிப்போந்தமையானு முணர்க. உம்மை கண். மூவர்க்காயினு மென்றது உயர்வுசிறப்பு. ஒருவரும் காலத்தைக் கடக்கக் கூடாதென்பதாம். ஓ எதிர்மறை. காலமென்றொரு பொருள் எனபுழி. ஈறுதொகுத்தல் பெற்றது. வைசேடிகர் பொருண் முதலாறையும் பொருளென்றமைபற்றிக் காலமென்றொரு பொருளென்றதென்க. இதனைச் 'சினத்தைப்பொருளென்று' எனக்கூறலானு மறிக. கொல்லுமென்பதற்கு வேறுவிரிப்பாரு முளர். (எ௩)

கண்முதற்காட்சியகரையினீளத்த
உண்முதற்பொருட்கெலாமூற்றமாவன
மண்முதற்பூதங்கண்மாயுமென்றபோ
தெண்முதலுயிர்க்குநீயிரங்கல்வேண்டுமோ.

(இ-ள்.) கண்முதற்காட்சிய - கண்முதலிய புலன்கட்குக் காட்சியாவனவும், கரையினீளத்த - எல்லையிகந்த நீளத்தனவும், உண்முதற்பொருட்கெலாமூற்றமாவன - உள்பொருளாகிய முதற்பொருட்கெல்லாம் பிறப்பிடமுமாகிய, மண்முதற் பூதங்கள் மாயுமென்றபோது - நிலமுதலிய பூதங்களும் அவற்றின் காரியங்களும் ஒடுங்குமென்றபோது, எண்முதலுயிர்க்கு நீயிரங்கவேண்டுமோ - ஓருயிரின்பொருட்டு உயர்வருள்ளக் கமலத்து மேவியிருக்கு நீயிரங்குதல் தகுதியோ.—எ-று.

மலர்மிசை யேகினான் என்பதுபற்றி எண்முதலென்றார். இனி எண்மையாய் தந்தையுயிர் பொருட்டெனினு மமையும். அரிதாகிய பூதம் பொறிபுலன்கள் முதலாயின மூலப்பகுதியின் காரியமாதலின் அவைநித்த மென்பார் மதம்பற்றி அம்மூலப்பகுதியை உண்முதற் பொருளென்ற

தென்க. கண்முதலென்பது மெய் வாய் கண் மூக்குச் செவிகளே, அவற்றுள் காட்சிப்புலனே சிறந்தமையின் கண்ணை முற்கூறினர். இதற்குப் பிறிதுரைப்பாருமுளர். சேதனப் பொருளொன்றனுக்கு இறங்கலாகாதென்பதாம். (எச)

புண்ணியநறுநெயிற்பொருவில்காலமாம்
திண்ணியதிரியினில்விதியென்றீயினில்
எண்ணியவிளக்கவையிரண்டுமெஞ்சினல்
அண்ணலேயவிவதற்கையமாவதோ.

(இ-ள்) அண்ணலே-பெரியானே, புண்ணியநறுநெயில்-நல்வினையெனப்படும் நறிய நெய்யிடை, பொருவில் காலமாம் திண்ணிய திரியினில்-ஒப்பிகந்தகாலமெனப்படும் வலியதிரியிடை, விதியென் தீயினில்- ஊழெனப்படுந்தீயால், எண்ணிய விளக்கு- கருதியேற்றப்பட்ட உலகவாழ்வாகிய விளக்கு, அவையிரண்டு மெஞ்சினல் - முன்னர்க் கூறப்படுமவை யிரண்டு நீங்கின், அவிவதற்கையமாவதோ- அவிந்து போதற்கையமுள்ளதோ—எ-று.

எப்பொருட்கு மிறைவனுகலின் அண்ணலே யென்றதென்க. புண்ணியத்தினை நெய்யாகவும், காலத்தைத் திரியாகவும்விதியினைத்தீயாகவும் உருவகஞ்செய்தமைகாண்க. நல்வினை தீவினையாகிய இவைதம்மையாக்கினனைச் சென்றெய்துவதற் குரியதோர் நியதியை விதியென்றார். ஊழ், விதி, நியதி, முறை, உண்மை, பால், செய்வமென்பன ஒருபொருட்கிளவி. அவையிரண்டு மென்பது நெய் திரி யென்பனவற்றை. காலமும் வினையு மொழிந்தால் உடனில்லா தென்பதாம். அரசவின்பநுகர்தல் நல்வினைப்பயனுகலினன்றே புண்ணிய நறுநெய்யென்றார். எண்ணிய என்னுங் காரியத்தைக் காரணமாக வுபகரித்தார். (எரு)

இவ்வுலகத்தினுமிடரினேகிடந்
தவ்வுலகத்தினுநரகினுழ்ந்துபின்
வெவ்வினைதுய்ப்பனவிரிந்தயோனிகள்
எவ்வளவிற்செலவெண்ணலாகுமே.

(இ-ள்) இவ்வுலகத்தினும் இடரினேகிடந்து - இம்மையினுந் துன்பத்தினையே துய்த்து, அவ்வுலகத்தினு நரகினுழ்ந்து - அம்மையினு நிரயத்துன்பமெய்தி, பின்வெவ்வினை துய்ப்பன - மறுபிறப்பிடைப் பழவினைநுகர்தற் காவனவாகிய, விரிந்தயோனிகள் - பலதிறத்தனவாகிய பிறவிப்பேதங்கள், எவ்வளவிற் செலவெண்ணலாம்-எவ்வளவை யிலடங்க எண்ணுதலாகும்.—எ-று.

ஒருவாற்றானு மளத்தற்கரிய பிறவியின் வகையெல்லைப் பலவாகலின் விரிந்த யோனிகளென்றார். கன்மவயத்தால் உயிர்கள் பிறவியெடுத்தல் பற்றி நீ யிரங்கலாகாதென்பதாம். இவ்வுலகம் அவ்வுலக

மென்பன இம்மை மறுமைகளை. உம்மை எண். வினைப்போகமேயுயிர்க் குறுதலின் வெவ்வினை துய்ப்பன வென்றதென்க. தீவினையீட்டினோர் இம்மையில் இடரும் மறுமையில் நரகானுபவமு மெய்தலின் இவ்வுலகத்தினுமிடரினை யிடந்தவ்வுலகத்தினு நரகினுழ்ந்தென்றதென்க. (எசா)

உண்டுகொலிதுவலதுதவிநீசெய்வ
தெண்டருகுணத்தினாய்தாதையென்றலால்
புண்டரீகத்தனிமுதற்கும்போக்கரு
விண்டுவினுலகிடைவிளங்கினனரோ.

(இ-ள்) எண்டகு குணத்தினாய்-நன்கு மதிக்கற்பாலனவாகிய குணமுடையானே, தாதை யென்றலால்-நினக்கரசன் தாதையாகிய சிறத்தால், புண்டரீகத் தனிமுதற்கும் போக்கரும்-தாமரையாகிய நாரிசினையுடைய ஒப்பிகந்த பிரமகனுக்கும் செல்லுதலாகாத, விண்டுவினுலகிடை விளங்கினன் - செங்கண்மா லுலகஞ் சென்றனனிடந்தனன், இதுவலது நீ செய்வது உதவியுண்டு கொல்-இது வல்லாது நீ செயற்பாலதாகிய உதவி பிறிதுண்டோ:—எ-று.

நிலைத்திணை யியங்குதிணையாய அனைத்துப்பொருளினும் சேதனருட் பிரமன் சிறந்தோனாகலின் புண்டரிகத்தனி முதலென்றார். உம்மை உயர்வு சிறப்பு, உருபு மயக்கம். எண்தரு குணமென்றது தியானகமாதிகளாற் றேன்றப்பட்டுந் தன்மையனாகலின். இனி எண்குணங்களென்றுரெனினுமமையும். அவன் விண்டுவினுலகெய்தலி னீகவலவேண்டாவென்பதாம்.

அய்யநீயாதொன்றுமவலிப்பாயலை
உய்திரமவற்கினியிதனினுங்குண்டோ
செய்வனவரன்முறைதிருத்திச்சேந்தநின்
கய்யினலொழுக்குதிகடனெலாமென்றான்.

(இ-ள்) ஐய நீயாதொனறும் அவலிப்பாயலை-ஐயனே நீ பிறிதொன்றுந்துன்புறுவாயல்லை,செய்வன வரன்முறைதிருத்தி-செய்யத்தக்கன கன்மங்கள் வரலாற்று முறையிற் றிருந்தச் செய்து,நின்சேந்த கையினல் கடனெலாமொழுக்குதி-நினது சிவந்த கையான் நீர்க்கடனெனைத்துஞ் செலுத்துதி, இனி அவற்கிதனினுங்கு உய்திரம் வேறுண்டோ—இனி நின்றுதைக்கிதனினும் உய்தியினிலை பிறிதுண்டோ, என்றான்-எனறு கூறினன். எ-று.

மறைகளின் வரம்பு கண்ட நீ வருந்துதல் சாலவழகன்றென்பார் நீயாதொன்று மவலிப்பாயலை யென்றார். உம்மை இழிவு சிறப்பு. செய்வன வென்றது அந்திட்டியை, கடனெலாமென்றது தருப்பண முதலியவற்றை. செய்வனவாகிய கடனெலா மென்றதான் இவ்வாசிரியரும் "மெய்த்ததாதை விருப்பினளிட்டிய-கைத்தலங்களைக் லைகளினீக்கிவே-றுய்த்

தபோது தருப்பையி லுண்பதற் கைத்த வேதிகைச் செய்தி" எனப் பிற காண்டத்துங் கூறியது நோக்கிக் காண்க. என்றான் வினை எச்சமுற்று.

விண்ணுநீர்மொக்குளின்விளியும்யாக்கையை
எண்ணிநீயழுங்குதலிழுதைப்பாலதால்
கண்ணிநீருகுத்தலிற்கண்டதில்லைபோய்
மண்ணுநீருகுத்திதாமரைக்கையாலென்றான்.

(இ-ள்) விண்ணுநீர்மொக்குளின் விளியும் யாக்கையை - மேகத்தினின்று விழு நீர்க்குமிழி யொத்துக் கழியுமுடலினை நோக்கி, எண்ணிநீயழுங்குதலிழுதைப் பாலது-எண்ணி நீ வருந்துவது பேதமைத்தன்மையது, கண்ணினீருகுத்தலிற் கண்டதில்லை, கண்ணீரொழுக்கலாற் கண்டது பிறிதொன்றில்லை, மண்ணுநீருகுத்தி தாமரைக் கையாலென்றான்- ஆதலால் அதனையொழித்து முழுகிச்சென்று தாமரை மலரையொத்த கையால் பாவங்கழிக்குந் தருப்பணஞ்செய்யென்றனன்.—எ-று.

விண்ணுநீர் மொக்குளின் விளியும் யாக்கையை யென்றமை 'மாரி மொக்குளின் மாய்ந்தெனச் சிந்தாமணியிற் கூறியதனானுமுணர்க. விண் ஆகு பெயர். கண்டதில்லையென்றார் செத்தார் வருவதில்லையாகலின்.

என்றபின்னேந்தலையேந்திவேந்தரும்
பொன்றிணிந்தனசடைப்புனிதனோடும்போய்ச்
சென்றனர்செறிதிரைப்புனலிற்செய்கென
நின்றனரிராமனுநெறியைநோக்கினான்.

(இ-ள்) என்றபின்-என்று கூறியபின்னர், ஏந்தலையேந்தி-இறைவனை யேந்தி நின்று, வேந்தரும் பொன் திணிந்தன சடை புனிதனோடும் போய்-அரசரும் பொன் திணிந்தாலொத்த சடையையுடைய இறைவனோடுஞ்சென்று, செறிதிரை புனலிற் செய்கென-நெருங்கிய அலையையுடைய நீரிற்செய்கவென, சென்றனர்-போயினர், நின்றனர்-நின்றனர், இராமனு நெறியைநோக்கினான்-இராமனும் வழிநோக்கிச் சென்றனர்.—எ-று.

என்றவென்னும் பெயரெச்சம் பின்னென்னு மிடைச் சொல்லொடு முடிந்தது. (அ௰)

புக்கனன்புனலினின்முழுகிப்போந்தனன்
தக்கநன்மறையவன்சடங்குகாட்டத்தான்
முக்கையினீர்விதிமுறையினீந்தனன்
ஒக்கநின்றுயிர்தொறுமுணர்வுநல்குவான்

(இ-ள்) புனலில் புக்கனன்-நீரிடையடைந்து, தக்கநன்மறையவன் சடங்கு காட்ட—மறையனைத்து முணர்ந்த நன்மையையுடைய வசிட்ட முனிவன் சடங்கினைக் காட்ட, ஒக்கநின்று உயிர் தொறு முணர்வுநல்கு

வான் தான்-சேதனர் யாவரிடை யொரு தன்மையாக அந்தரியாமியாக நின்றுணர்வினை யளிப்பவனாகிய இராமனை, முக்கையின் நீர்விதி முறையினீந்தனன்-மும்முறை விடுநீரை விதிமுறையிற் பெய்தனன்.—எ-று.

மும்முறை விடுவதாகலின் முக்கையினிரென்றும், தருப்பித்து விடு நீரை யெண்ணொடு விராயே விடவேண்டுதலின் விதி முறையினீந்தனனென்றும், அங்ஙனஞ் செய்யவேண்டுதல் வேதோப்பிருங்கண மாதலின் சடங்கு காட்டவென்றார். ஒக்கவன்றுயிர்தொறு முணர்வு நல்குவானென்ற திராமனை. புக்கனனெச்சமுற்று. தோறுமேழாவதன்பன்மையிடைச்சொல்.

ஆனவன்புரவுளயாவுமாற்றிப்பின்
மானமந்திரத்தவர்மன்னர்மாதவர்
ஏனையர்பிறர்களுஞ்சுற்றவேகினன்
சானகியிருந்தவச்சாலையெய்தினான்.

(இ-ள்) ஆனவன் பிறவுளயாவுமாற்றி - அவ்விறைவன்செய்யற்பாலனவாகிய பிறவனைத்துஞ் செய்து, மானமந்திரத்தவர் மன்னர்மாதவர் ஏனையர் பிறர்களுஞ்சுற்ற-பெருமையை யுடைய மந்திரிமாரும் அரசரும் பெருமையாகிய தவத்தினையுடையாரும் ஏனைத்துணைப் பிறருஞ்சூழ்ந்து வர, ஏகினன் சானகியிருந்த அச்சாலை யெய்தினான் - சென்று சனகியிருந்த பன்னசாலையையடைந்தனன்.—எ-று.

பிறவுள யாவுமாற்றி யென்றது முன் சடங்கு காட்டச் செய்தவை யொழிந்தவற்றினை. மானமந்திரத்தவர் என்றது மான நோக்கிற் கவரி மாவனைய நீராரென முற்கூறிப் போந்தமை வற்புறுத்தற்கு. எத்துணை யோரென்றது மரீஇயது. (அஉ)

எய்தியவேலையிற்றமியளெய்திய
தய்யலைநோக்கினன்சாலைநோக்கினான்
கய்களில்கண்மலர்புடைத்துக்கான்மிசை
அய்யனப்பரதன்வீழ்ந்தாற்றினனரோ.

(இ-ள்.) எய்திய வேலையில் - அத்தவச்சாலையை யடைந்தபின், தமியள் எய்திய தையலை நோக்கினன் - தன்னந்தனியாக வந்தடைந்த சனகியைக் கண்டு, சாலையை நோக்கி - சாலையையுங்கண்டு, கண்மலர் கைகளிற் புடைத்து - கண்ணாகிய தாமரையைக் கைகளானடித்துக் கொண்டு, ஐயன் அப்பரதன் கான்மிசை வீழ்ந்தரற்றினன் - ஐயனாகிய அப்பரதனும் காலிடை விழுந்தழுதனன்.—எ-று.

திருவயோத்தியிற் பாங்கியர் சேடியர் கைத்தாயர் செவிலியர் ஒன்றோரன்றோர் சூழ நிற்பா ளிக்கானிடையங்ஙனமின்மையின் தமிய

ளெய்தி என்றார். நோக்கினனெனச்சமுற்று. பேரழ குடையனாகலி லேயனென்றதென்க. அரோ அசை. (அங)

வெந்துயர்தொடர்தரவிம்மல்விம்மநீர்
உந்தியநிரந்தரமூற்றுமாற்றில
சிந்தியகுரிசிலச்செம்மல்சேந்தகண்
இந்தியங்களிலெறிகடலுண்டென்னவே.

(இ - ள்.) குரிசில் அச்செம்மல் - பெருந்தகைமையுடையனாகிய அப்பரதன், சேந்த கண் இந்தியங்களில்-சிவந்த கண்களாகிய பொறிகளிடை, எறிகடலுண்டென்ன - அலையெறியுங் கடலுண்டென்னலாம்படி, வெந்துயர் தொடர - கொடிய துன்பம்பற்றி நிற்ப,விம்மல் விம்ம-பொருமியழ, நீருந்திய - நீரைச் சொரிந்து நின்றனவாகி, நிரந்தரம்-ஊற்று மாற்றில - ஊற்று இடைவிடாது மாறாதனவாகி, சிந்திய-சொரிந்து நின்றன.—எ-று.

கண்ணிந்தியத்தோன்றாகலின் சேர்ந்தகண்ணிந்தியங்களில் என்றும், அவற்றிற் கண்ணீர் வெள்ள மிகுதி தோன்றலின் அலையெறி கடலுண்டென்னலாம்படியென்றுங் கூறினர். குரிசிலச்செல்வம் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. குரிசில் ஆண்பாற் பெயர். செம்மல் ஆகுபெயர். (அச)

அந்நெடுந்துயருறுமரியவீரனைத்
தன்னெடுந்தடக்கையாலிராமன்றாங்கினன்
நன்னெடுங்கூந்தலைநோக்கி நாயகன்
என்னெடும்பிரிவினிலிறந்திட்டானென்றான்.

(இ-ள்.) அந்நெடுந்துயருறும் அரிய வீரனை-அம்மிக்க துன்பமெய்து மரிய வீரத்தன்மையனாகிய பரதனை, தன்னெடுங் கைகளால் இராமன்றாங்கினன்-தன் மிக நீண்ட கைகளாற் சீராமன்றாங்கிக் கொண்டு, நன்னெடுங் கூந்தலைநோக்கி-மிகநீண்ட கூந்தலையுடையசனகியை நோக்கி, நாயகன் என்னெடும் பிறிவினு லிறந்திட்டான் என்றான்-அரசர் பெருமான் என் நீண்ட பிரிவானிறந்துபட்டனனென்றனன்.—எ-று.

தாதை யிறந்துபட்டமையான் வருந்துபவனாதலின் அந்நெடுந்துயருறுமென்றும், ஆஜாநு பாகுவென்னும் வடமொழிபற்றித் தன்னெடுங் கைகளானென்றும், உத்தமவிலக்கணத்த மாதர்க்குக் கூந்தனிண்டதாகலின் நன்னெடுங் கூந்தலையென்றும், உலகமுழுதுமுடையனாகலின் நாயகனென்றும், பதினான்காண்டுங் காடுசெல்ல வரம்பெறலின்என்னெடும் பிரிவினிலென்றும், உயிர்தரியாது பட்டமையி னிறந்திட்டானென்றுங்கூறினர், வீரனென்றது பரதனை. தாங்கினன் எச்சமுற்று. (அரு)

துண்ணெனுநெஞ்சினள்துளங்கினள்துணைக்
கண்ணெனுங்கடனெடுங்கலுழிகான்றிட
மண்ணெனுஞ்செவிலிமேல்வைத்தகையினள்
பண்ணெனுங்கிளவியாற்பன்னியேங்கினள்.

(இ-ள்.) துண்ணெனு நெஞ்சினள்-திடுக்கிடுமனத்தளாய், துளங்கினள்-நடுக்கமுற்று, துணைக்கண்ணெனுங் கடல் நெடுங்கலுழி கான்றிட - இரண்டு கண்ணென்னுங் கடல் கலங்க நீரைச்சொரிய, மண்ணெனுஞ் செவிலிமேல் வைத்த கையினள்-நிலமகளென்னுஞ் செவிலித்தாய்மேல் வைத்த கையாளாகி, பண்ணெனுங்கிளவியாற் பன்னியேங்கினள்- இசையெனப்படுஞ் சொல்லாற்பலபடக்கூறிபுலம்பினள். எ-று.

அரசர் பெருமான் இறந்து பட்டமையான் வருந்தலின் துண்ணெனுநெஞ்சினளென்றும், திருமாமகளமிச பூதையாய் அயோனிசையாய் சனகியை நிலமகள் காத்துச் சனகனிடை யொப்பித்தமை பற்றி மண்ணெனுஞ் செவிலிமேல் என்றும், தான் கைவைத்துப் புலம்பத்தொடங்கினமையின் வைத்த கையினள் பண்ணெனுங்கிளவியாற் பன்னியேங்கினளென்றுங் கூறினர். கடல் கண்ணுக்கும், பண் கிளவிக்கு முவமம். செவிலி வளர்க்குந்தாயை. (அசு)

கன்னகுதிரள்புயக்கணவன்பின்செல
நன்னகரொத்ததுநடந்தகானமும்
மன்னவன்றுஞ்சினனென்றமாற்றத்தால்
அன்னமுந்துயர்க்கடலடிவைத்தாளரோ.

(இ-ள்) கல்நகுதிரள் புயம் கணவன் பின் செல-மலையை நகுந் திரண்ட தோளையுடைய நாயகனாகியசிராமனைப்பின்செல்ல, நடந்த கானமும் நன்னகரொத்தது - நடந்து சென்ற காடும் நன்மையாகிய அயோத்தி நகரத்தினை யொத்தது, மன்னவன் துஞ்சினன் என்ற மாற்றத்தால்-அரசர்பெருமான் இறந்துபட்டனன் என்றுகேட்டமாத்திரையான், அன்னமும் துயர்க்கடலடிவைத்தாள் - அன்னம்போல்வாளும் துன்பமாகிய கடலிற் கால் வைத்தனள்.—எ-று.

கன்னகு என்பதற்குக் கல்போலவெனினுமமையும். கணவன் என்றது சிராமனை. அவனொடு காடுசென்றமை நகரொத்தமையான் நடந்த கானமு நன்னகரொத்தது என்றும், அரசர்பெருமான் இறந்துபட்டமை கேட்ட மாத்திரையான் அவட்துயர்க்கடலடிவைத்தாளென்று முவமை முகத்தாற் கூறினர். அன்னமாகுபெயர். துயர்க்கடல் என்றமை பஞ்சவடிசேறல், சிராமனைப் பிரிதல், இலங்கையிற் சிஞ்சுபவனத்திற்சிறையிடத்திற் கிடத்தல் இவற்றுள் இதுகாறுங் கேளாத்துயரமாகலின் துயர்க்கடலடிவைத்தாளென்றார். (அஎ)

ஆயவடன்னைநேர்ந்தங்கையேந்தினர்
தாயரின்முனிவர்தந்தருமப்பன்னியர்
தூயநீராட்டினர்துயரநீக்கினர்
நாயகற்சேர்த்தினர்நவையுணீங்கினர்.

(இ-ள்.) நவையுள் நீங்கினர்-குற்றத்தினின்று நீங்கிய, முனிவர் தம் தருமம் பன்னியர் - முற்றத்துறந்த முனிவருடைய தருமப்பன்னிகள், தாயரின்-தாயரைப் போல, நேர்ந்து-பாங்கரிற் சென்று, ஆயவள் தன்னை-அச்சனகியை, அங்கையேந்தினர் - அழகிய கையாலெடுத்து, தூயநீராட்டினர் - பரிசுத்தமான நீரினையாட்டி, துயர நீக்கினர்-துன்பத்தினை யொழித்து, நாயகற் சேர்த்தினர்-கணவனாகிய ஸ்ரீராமன் பாலடைவித்தனர்.—எ-று.

சாமுத்திரிகை நூலிற் குறைவில்லாதிருத்தலை நவையுணீங்கினர் என்றார். பன்னியரென்றது வடசொற்சிதைவு. நீங்கினர், ஏறினர், ஆட்டினரென்பன எச்சமுற்று. ஆயவளெனச் சுட்டுநீண்டது. தூயநீரென்றது கங்கை முதலிய சுத்தோதகத்தினை. (அஅ)

தேன்றருந்தெரியலச்செம்மனல்வரை
ஈன்றவர்மூவரோடிருமைநோக்குறும்
சான்றவர்குழாத்தொடுந்தருமநோக்குறும்
தோன்றல்பாற்சுமந்திரன்றொழுதுதோன்றினன்.

(இ-ள்.) தேன்தரு தெரியல் - தேன் சொரியு மாலையையுடைய அச்செம்மல் நால்வரை-பெருந் தகைமையையுடைய அக்குமரர்நால்வரை, ஈன்றவர் மூவரோடு - ஈன்ற கோசலை முதலிய மூவருடன், இருமை நோக்குறும்-இன்பதுன்பக் கூறுபாடுகளையுணர்ந்த, சான்றவர் குழாத்துடன்-பெரியார் கூட்டத்துடன், சுமந்திரன்-சுமந்திரன், தரும நோக்குறும் தோன்றல்பால் - அறத்தினை நாடு மிறைவன்பால், தொழுது தோன்றினன்-தொழாநின்று சேர்ந்தனன்—எ-று.

தொழுது தொழாநின்றென்னும்பொருட்டு. தொழுது என்புழிப் பரிமேலழகரும் பேராசிரியருங்கூறுதல் காண்க. ஈன்றவர் மூவரென்றது கோசலை, கைகேசி, சுமித்திரை யென்பாரை. செம்மல் ஆகுபெயர். நால்வராவர் ஸ்ரீராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கனென்பாரை. இருமையென்றது எண்டென்ணின்கணின்றது. அதனை 'இருமை வகை தெரிந்து' என்புழிப் பரிமேலழகர் கூறலானுமுணர்க. தருமமென்றது பிதுருவாக்கிய பரிபாலனம், மாதுருவாக்கிய பரிபாலனமுதலிய சாதாரண தருமத்தினை யனுட்டித்தலை. தோன்றலாகுபெயர்.()

வேறு

எந்தையாண்டையானியம்புவீரெனு
வந்ததாயர்தம்வயங்குசேவடி
சிந்தினின்றனன்சேந்தகண்ணநீர்
முந்தைநான்முகத்தவற்குமுந்தையான்.

(இ-ள்.) முந்தை நான்முகன்றனக்கு முந்தையான்-சேதனர் யாவருக்கு முற்பட்டவனாகிய பிரமனுக்கு முற்பட்ட ஸ்ரீராமன், எந்தையாண்டையான் இயம்புவீர் - எந்தையாண்டுளன் சொல்லோ சொன்மின், எனு-என்று கூறி, வந்த தாயர் தம் வயங்கு சேவடி - வந்த தாயர் தம் விளங்கும் செம்மையாகிய பாதங்களில், சேந்த கண்ணினீர் சிந்தி நின்றனன்-சிவந்த கண்ணிற் பொழியுநீரைச் சொரிந்து நின்றனன்.—எ-று.

சேதனர்கட்கு முற்பட்டவனாகலின் முந்தை நான் முகன்றனக்கு என்றும், அவனுக்கு முந்தையானாகலின் முந்தையானென்றுங் கூறினார். எந்தையென்றது தயரதனை. யாண்டையானியம்புவீரென்றதிடவழுவமைதி. வந்த தாயார் என்றது தாயார் மூவரையும். முந்தையானென்றது விபவாவதாரத்தை. (கூ0)

தாயருந்தலைப்பெய்துதாந்தழீஇ
ஒய்விலன்பினுலூரறலோங்கினர்
ஆயசேனையுமணங்கனார்களும்
தீயில்வீழ்ந்துதீமெழுகிறேம்பினர்.

(இ-ள்.) தாயாருந் தலைப்பெய்து - அத்தாயரு மொருங் கெய்தி, தாம் தழீஇ- ஸ்ரீராமனைத் தாம் தனித்தனி தழுவி, ஒய்விலன்பினுல் ஊரறல் ஒங்கினர் - நீக்கமில்லாத வன்புடைமையால் மிக்ககதறி நின்றனர், ஆய சேனையும் அணங்கனார்களும் - அத்திரண்ட படைவீரரும் அரமகளிரன்னாரும், தீயில் வீழ்ந்து தீமெழுகில் தேம்பினர் - அனலிடைவீழ்ந்துருகு மெழுகொப்ப வருந்தினர்.—எ-று.

தழீஇ சொல்லிசையளபெடை. ஊரறல் என்றது கதறுதலை. உம்மை எண். தாயருமென்றது எதிரது தழீஇயது. அணங்கு என்றது ஈண்டுத் தெய்வமகளிரென்னுந்துணையாய் நின்றது. தீமெழுகுவினைஉவமைத்தொகை. (கக)

பின்னவ்வீரரைப்பெற்றபெற்றியப்
பொன்னனார்களுஞ்சனகன்பூவையைத்
துன்னிமார்புறத்தொடர்ந்துபுல்லினர்
இன்னல்வேலைபுக்கிழிந்தழுந்துவார்.

(இ - ள்.) பின்னவ் வீரரைப் பெற்ற பெற்றி அப்பொன்னன்னார்களும் - பின்னர் அச்சிராமனையுள்ளிட்ட வீரர் தம்மை மகவாகப் பெற்ற பெற்றியையுடைய அத்திருமகளன்னாரும், சனகன் பூவையை- சனகன் பெற்ற பூவை யொப்பாளை, தன்னி மார்புறத் தொடர்ந்து புல்லினார் - அடைந்து தொடர்ந்து மார்புறத் தழுவி, இன்னல் வேலைபுக் கிழிந்து அழுந்துவார் - துன்பமாகிய கடலிற் புகுந் தாழ்ந்தழுந்தினர்.—எ-று.

பூவைவாய் சொற்குவமம்; ஆகுபெயர். துன்பத்தைக் கடற் குவமஞ் செய்தார். அவ்வீரரென்றது சிராமனையுள்ளிட்டாரை. பொன்னன்னாரென்றது கோசலையுள் ளிட்டாரை. (கூஉ)

சேனைவீ ரருந்திருநன்மாநகர்
மானைமாந் தருமற்றுளோர்களும்
ஏனைவேந் தரும்பிறரும்யாவரும்
கோனையெய்தினார்குறையுஞ்சிந்தையார்.

(இ - ள்.) சேனை வீரரும் - படைவீரரும் திரு நன் மா நகர்மானைமாந்தரும்—சிறந்தநன்மையாகியபெருநகரிடை யுள்ள அஞ்சால் வருந்துகின்ற மக்களும், மற்றுளோர்களும் - ஏனையோரும்; ஏனைவேந்தரும்-மற்றையரசரும், பிறரும் - அமைச்சர் புரோகிதரை யுள்ளிட்டாரும், யாவரும் - ஆகிய அனைவரும், குறையும் சிந்தையார், அழியுமனத்தராகி, கோனை யெய்தினார்- இறைவனை யடைந்தனர்.—எ-று.

சத்தபுரியுட் சிறந்ததனாலும், உலகமே பேருருவாகிய இறைவன் திருவவதரித் திறைவியொடு பரசாண்ட நகரமாதலானும் திருநன்மா நகரென்றார். மானமென்றது மானையென ஈரீஇயதெனினு மாம். ஏனைவேந்தரென்றது முடிமன்னரும் குறுநில மன்னருமாகிய இவரை. பிறரென்றது அமைச்சர். (கூகூ)

படஞ்செய்நாகணைப்பள்ளிநீங்கினான்
இடஞ்செய்தொல்குலத்திறைவனாதலால்
தடஞ்செய்தேரினான்றானுநீரினால்
கடஞ்செய்வானெனக்கடலின்மூழ்கினான்.

(இ - ள்.) படஞ்செய்நாகணை பள்ளிநீங்கினான் - படத்தினைவிரிக்குஞ்சருப்பப்பரியங்கந் துறந்த சிராமன், இடஞ்செய்தொல்குலத்து இறைவனாதலால் - தான்றோன்றியதற் கிடமாகிய பழமையாகிய குலத்திறைவனே யாதலால், தடஞ்செய்தேரினான் - பெரியதேரினனாகிய ஞாயிறு, தானிரினாற்கடஞ்செய்வானென - தான் நீர்க்கடன் செய்வான்போன்று, கடலின் மூழ்கினான் - மேற்கடலில்மூழ்கினன்.—எ-று.

நாகணை என்பது கடைக்குறைந்து நின்றது. 'பேதுசெய் தவள நாகணையினான்' எனப்பிறருங் கூறுதல் காண்க. ஞாயிறு பட்டமையைக்

கவிதான் ஒருகாரணமேற்றிக் கூறலின் ஏதுத் தற்குறிப்பேற்றம். பள்ளி நீங்கினனென்றது "சென்றாற்குடையா மிருந்தாற் சிங்காதனமாய்' என்பன ஆதியாகிய கயிங்கரியங்களைச் செயுமனந்தனை இலக்குவனாகப் பெற்றமை குறித்தற்கு. (கூச)

அன்றுதீர்ந்தபின்னரசவேலையும்
துன்றுசெஞ்சடைத்தவருஞ்சுற்றமும்
தன்றுணைத்திருத்தம்பிமார்களும்
சென்றுசூழவாண்டிருந்தசெம்மறுன்

(இ - ள்.) அன்றதீர்ந்தபின் - அற்றைநாள் கழிந்தபின்னர், அரசர் வேலையும் - அரசர்வெள்ளமும், துன்றுசெஞ்சடைதவரும் - நெருங்கிய செம்மையாகிய சடைமுடியையுடைய முனிவரும், சுற்றமும் - உறவினரும், தன் திருதுணை தம்பிமார்களும்-தன் சிறந்த துணைவராகிய தம்பியரும், சென்றசூழ - போய்ச் சூழ்ந்திருக்க, ஆண்டிருந்த செம்மல் - அங்கிருந்த இறைவனாகிய சீராமன்.

செம்மல் ஆகுபெயர், வேலையுமது. தவசிகள் சடைமுடி புனைந்துடையாராதலின் செஞ்சடைத்தவரென்றார். உம்மை எண். தீர்ந்த என்னும் பெயரெச்சம் பின்னென்னுமிடைச்சொற் கொண்டது. தான் அசை. (கூரு)

வரதன்றுஞ்சினன்வையமாணையால்
சரதநின்னதேமகுடந்தாங்கலாய்
விரதவேடநீயென்கொல்வேண்டுவான்
பரதகூறெனப்பரிந்துகூறினான்.

(இ - ள்.) வரதன் துஞ்சினன் - அரசர்பெருமான் இறந்து பட்டனன், வையமாணையால் - பின்னர் உலகமுழுதும் அவன் கட்டளையால், சரதம் நின்னதே - உண்மையாக நின்னுடையதேயாம், நீமகுடம் தாங்கலாய் விரதவேடம் வேண்டுவானென்கொல் - நீமுடிபுனைகோல மெய்தாமல் தவவேடம் விரும்பி மேற்கொண்டதென்னே, கூறெனப்பரிந்து கூறினான்- சொல்லெனப்பரிந்து கேட்டனன்.—எ-று.

தன்னுயிரைக் கான்விடுத்து வரமளித்த பெருமிதநோக்கி வரதனென்றார். வேண்டுவானென்பது வானீற்றுத் தொழிற்பெயர். தாங்கலாய் எச்சமுற்று. கொல் ஐயம், ஆணையெனற்கு முற்கூறினும். தாய் பெற்றவரத்தான் நீ யரசனாகும்பேறெய்தியு மிவ்வாறு வருவானேனென்பார் நீ மகுடந்தாங்கலாய் வேடம்வேண்டுவானென்கொ லென்றார். (கூசு)

என்றலும்பதைத்தெழுந்துகைதொழா
நின்றுதோன்றலைநெடிதுநோக்கிநீ
அன்றியாவரேயறத்துளோரதர்
பின்றுவாய்கொலாமென்னப்பேசுவான்.

(இ - ள்.) என்றலும் - என்றுகேட்டலும், பதைத்தெழுந்து - வருந்தியெழுந்து, கைதொழாநின்று - வணங்கிநின்று, தோன்றலை நெடிதுநோக்கி, இறைவனை நீடநோக்கி, அறத்துளோர் நீயன்றியாவர் - அறத்துவழி நிற்பார் நீயல்லதியாவர், அரசின்றுவாய் கொலாம் - அவ்வழி நின்றும் பின்னிடுவைகொலாம், என்னப் பேசுவான் - என்று கூறுவானாயினான்.—எ - று.

தோன்றல் - ஆகுபெயர். எல்லாவறங்கட்கும் பிறப்பிடமாகலின் நீயன்றியறத்துளோர் யாரென்றும், அரசின்றுவாய்கொலாமென்றுங் கூறினர். அதர் - வழி. கைதொழாநின்று நிகழ்கால 'வினையெச்சம். இதனை 'தெய்வந்தொழாஅள்' என்புழித்தொழுது எனற்கும் வினைவளநீரெழ' என்புழி தொழுது எனற்கும் பரிமேலழகரும் பேராசிரியரும் தொழாநின்றுஎன நிகழ்காலப் பொருட்டாகப் பொருள்விரித்தமையும் செய்தெனச்ச மிறந்தகாலத்தனறி நிகழ்காலப் பொருட்டாகவும் வருவது புதியனபுகுதலாற் கொள்க. (கஎ)

மனக்கொன்றுதனவரத்தினின்னையும்
நினக்கொன்றுநிலைநிறுவிநேமியான்
தனக்கொன்றுடருந்தனயனாதலால்
எனக்கொன்றுதவமடுப்பதெண்ணினால்.

(இ - ள். மனக்கு ஒன்றுதன வரத்தின் - யாவர் மனத்துக்கு மொவ்வா தனவற்றை வரத்தான், நின்னையும் நினக்கொன்று நிலை நிறுவி - நின்னையும் நினக்குப் பொருந்தாவண்ண நிறுத்து, நேமியான் றனக்கொன்றுள் தரும் தனயன் ஆதலால் - அரசர்பெருமான் மனக்கிலையயாதாளாகிய கைகேசிபெற்ற மகனாதலான், தவமடுப்பது எண்ணினால் எனக்கொன்று - நினையுங்கால் தவநெறிமேற் கோடல் எனக்குத் தக்கதேயன்று.—எ - று.

மனக்கொன்றுதன என்பழி அத்துச்சாரியை சாரியையுள்வழி தவிர்ந்து நின்றது. உலகமுழுது மாண்டவனாதலான் நேமியானென்னப் பட்டான். நேமியானென்றது தயரதனை. நீகானேசற் குறிமையல்லை யென்பார் நினக்கொன்றுதனை நிறுவி என்றம், அவ்வெநறியொழுகு பேற்றுத் தவமடுப்பதாகா தென்பார் எனக்கொன்று தவமடுப்பதென்றுங் கூறினர். (கஅ)

நோவதாகவிவ்வுலகைநோய்செய்த
பாவகாரியிற்பிறந்தபாவியேன்
சாவதோர்கிலேன்றவஞ்செய்வேனலேன்
யாவனாகியிப்பழிநின்றேறுவேன்.

(இ-ள்.) நோவதாக-வருந்துவதாக, இவ்வுலகை நோய் செய்த—இந்நில வுலகை வருத்திய, பாவகாரியிற் பிறந்த பாவியேன் - பாவச்செயலை மேற்கொண்ட கைகேசியிடத்துப்பிறந்த தீவினையுடையேனாகிய யான், சாவதோர்கிலேன் - சாவத் துணியகில்லேன், தவஞ்செய்வென் அலென் - தவஞ் செயற்குந் தக்கேனல்லேன், யாவனாகி இப்பழி நின்றேறுவேன் - யாவனேயாகி யிப்பழியினைக் கடப்பேன்.—எ-று.

நோவது வினைப்பெயர். நோவது உடம்பினை வருத்துவது. நோய்- வினைவயத்தா னுடற் கெய்துந்துன்பம். பாவகாரியென்றார் எப்பொருட்கு மிறைவனாகிய சரியகோலப் பெருந்தகையைக் கானகச் செய்தாளாகலின். அவள் வயிற்றிற் பிறந்தமை சாலத்தீவினை யென்பார் பிறந்தபாவியேனென்றும், அவ் வுடம்பொடு வாழ்வது மிகையென்பார் சாவதோர்கிலேன் றவஞ் செய்வெனலேன் யாவனாகி யிப்பழி நின்றேறுவே னென்றுங் கூறினார். (௬௯)

நிறையினீங்கியமகளிர்நீர்மையும்
பொறையினீங்கிபதவமும்பொங்கருள்
துறையினீங்கியவறமுந்தொல்லையோர்
முறையினீங்கியவரசின்முந்துமோ.

(இ-ள்.) நிறையி னீங்கிய மகளிர் நீர்மையும் - கற்பினின்று நீங்கிய மாதர்குணமும், பொறையினீங்கிய தவமும் - பொறையினின்று நீங்கிய தவவொழுக்கமும், பொங்கு அருட்டுறையினீங்கிய அறமும் - மிக்க அருணெறியினின்று நீங்கிய தருமமும், தொல்லை யோர்முறை யினீங்கிய அரசின் முந்துமோ-மேலையோர் முறைமையினின்று நீங்கப்பெற்ற அரசினும் கொடுஞ்செய்கையின் முந்துமோ.—எ-று.

நிறையென்பது நெஞ்சைக் கற்புநெறியி னிறுத்தலை. பொறையென்பது யாவரேனுந்தனக்கு மிகையாயின செய்தலும்சொல்லுதலுஞ் செய்தவழி அவற்றினை அவர்க்கு மீண்டுஞ் செய்யாமையை.அறமென்ப தீண்டுத் துறவறநிலையை. மகளிர்க்குநிறையுடைமையும், தவத்துக்குப் பொறையுடைமையும்அருளுமின்றியமையா வாறுபோல், அரசனெறி தொல்லையோர் முறையினின்று நீக்கப்படாதென்பது பெறப்பட்டது. தொல்லையோர் என்பது மனுத்தொடக்கமானவரை. தவமென்பது மனம்பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும், கோடைக்கண் வெயினிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர் நிலையினும் நிற்றல் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றாற் றம்முயிர்க்குவருந் துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களை யோம்புதலுமாம். (௭௰)

பிறந்துநீயுடைப்பிரிவிறேல்பதம்
துறந்துமாதவந்தொடங்குவாயென்றால்

மறந்துநீதியிற்றிறம்பிவாளிற்கொன்
றறந்தின்றுலெனவரசதாள்வேனோ.

(இ-ள்.) பிறந்து நீயுடைய பிரிவில் தொல்பதம் - நீ முதற் குமரனாகத் தோன்றியதனாலுன்னுடைய நீங்குதலில்லாதபழமையாகியபதவியை, துறந்து மாதவந் தொடங்குவா யென்றால் - அறத்தைவிட்டுப் பெருமையாகிய தவத்தினைச் செய்யத் தொடங்குவாயென்னின், மறந்து நீதியின் திறம்பி - மறந்தாயினும் நீதியினின்று முறைமைவழுவி, அறம்வாளிற் கொன்று தின்றாலென - அறத்தினை வாளினாற் கொன்றுதின்றாலொப்ப, அரச தாள்வேனோ - அரசுரிமை மேற்கொண்டாள வல்லனோ.—எ-று.

நீ பிறந்துனக் குரிமையுடைய வரசென்பார் பிறந்து நீயுடைப் பிரிவில் தொல்பதமென்றார். அதனை யறக்கைவிட்டுக் கான்படாந்தமையான் துறந்து மாதவந் தொடங்குவாயென்றதென்க. அறத்தைச்சிதைத்தாய் அறத்தை வாளிற் கொன்றுதின்றாலென இலக்கணவகையாற் கூறினர். நானரசாளன் முறையன்றென்பார் அரசதாள்வேனோவென்று கூறியதென்க. (௱௧)

தொகையிலன்பினாலிறைவன்றுஞ்சநீ
புகையும்வெஞ்சுரம்புகுதப்புந்தியால்
வகையில்வஞ்சனாயரசுவெளவயான்
பகைவனேகொலாமிறவுபார்க்கின்றேன்.

(இ-ள்.) தொகையிலன்பினால் இறைவன் றுஞ்ச - அளவுபடாத நின்னிடைவைத்த அன்பா னரச னிறந்துபட, நீ புகையும் வெஞ்சுரம் புகுத - நீ வருந்துங் கொடுங்காட்டிடையெய்த, புந்தியால் வகையில் வஞ்சனாயரசு வெளவ - மனத்தான் வகுத்தற்கரிய வஞ்சகமுடையனாகி அரசுரிமை கவர்ந்து கொள்ள, யான் பகைவனேகொலாம் இறவு பார்க்கின்றேன் - யான் பகைவனேயோ நின்னற்ற நோக்கி நிற்கின்றமையான்.—எ-று.

தாதை வான்படர நீ கான்படர இத்தன்மைத்தாய வமையத்து நின்னற்ற நோக்கி நிற்றலின் பகைவனே கொலாமிறவுபார்க்கின்றேன் என்றார் இறவென்றது அற்றத்தினை. (௱௨)

உந்தைதீமையுமுலகுறாதநோய்
தந்ததீவினைத்தாய்செய்தீமையும்
எந்தைநீங்கமீண்டரசுசெய்கெனாச்
சிந்தையாவதுந்தெரியக்கூறினான்.

(இ-ள்.) எந்தை-என்தந்தையே, உந்தை- உன்தந்தையாரது, தீமையும்- தீங்கும், உலகுஉறாத-உலகம்சகிக்காத, நோய்- துன்பத்தை, தந்த-உண்டாக்கின தீவினை-தீவினையையுடைய, தாய்- தாயானவள், செய்-செய்த, தீமையும்-தீங்

கும், நீங்க-ஒழியுமாறு, மீண்டு- தேவரீர் திரும்பிவந்து, அரசுசெய்க எனு- அரசாள்கவென்று, சிந்தையாவதும்- தன்கருத்து முழுதும், தெரிய-வெளிப்பட, கூறினான்-சொல்லினான், எ-று.

என்தந்தை உன்தந்தை யென்பன எந்தை உந்தை யென மரூஉவாயின, ஸ்ரீ ராமபிரானை எந்தையென்றும் சக்ரவர்த்தியை உந்தையென்றுங் கூறியது இருவரிடத்துந் தனக்குண்டான விருப்பு வெறுப்புக்களா னென்க. விருப்புக்குக்காரணம் தானின்றியுண்ணுமையு முறங்காமையு முதலாயின், வெறுப்புக்குக்காரணம் பெண்வழிச்சேறல் முதலாயின, தீவினை-கொடுஞ்செய்கை, அது ஸ்ரீ ராமபிரானுக்கு முடிகவித்தலைத் தவிர்த்தமை, செய்க எனு என்பது நிலைமொழியீறு தொகுத்தலாய் செய்கெனு என்ருயிற்று, எந்தை அண்மைவிளி.

சொற்றவாசகத்துணிவுணர்ந்தபின்
இற்றதோவிவன்மனமென்றெண்ணுவான்
வெற்றிவீரயான்விளம்பக்கேளெனு
முற்றநோக்கினுன்மொழிதன்மேயினுன்.

(இ-ள்.) சொற்ற வாசகத் துணிவுணர்ந்தபின் - பரதன் கூறியசொற்களின் துணிந்த வாய்மையை யுணர்ந்தபின்னர், இவன் மனம் இற்றதோ என்று எண்ணுவான்-இவன் கருத் தித்தன்மையதோ வென்று சிந்தித்து, வெற்றிவீர யான் விளம்பல் கேளெனு - வெற்றிபுனையும் வீரனே யான் சொல்லுமொழியினைக் கேளென்று, முற்ற நோக்கினுன் மொழிதன் மேயினுன் - முழுவது மாராய்ந்து இதனைக் கூறத்தொடங்கினுன்,—எ-று.

எண்ணித் துணிக கருமமென்பவாகலின் முற்ற நோக்கினுன் மொழிதன் மேயினுன் என்ருர். சொற்ற வாசகத்துணிவு என்றது நீயன்றி யறத்துளோர் யாவர், அதிற் பின்றுவாய் கொலாமென்பது முதலியவற்றினை. (௱௪)

முறையும்வாய்மையுமுயலுநீதியும்
அறையுமேன்மையோடறனுமாதியாம்
துறையுள்யாவையுஞ்சுருதிநூல்விடா
இறைவரேவலாலியைவகாணையா.

(இ-ள்.) முறையும் வாய்மையும் முயலு நீதியும் அறையுமேன்மையோடறனு மாதியாம்—ஒழுக்கமும் மெய்ம்மையும் யாவரு முயல்கின்ற நீதியும் சிறப்பித்துரைக்கப்படும் பெருமிதமும் தருமமு மிவையுள்ளிட்டன வாகிய, துறையுள் யாவையும் - நன்னெறியிற் சேர்ந்த வனைத்தும், சுருதி நூல்விடா இறைவர் ஏவலால் - ஆத்த நூலின் பொருள் விடாமை மேற்கொண்ட அரசர் ஏவலினுல், இயைவ-வந்து பொருந்துவன, ஐயா-ஐயனே, காண்- நீயே யறிதி.-எ-று.

உயிரினு மோம்பப்படுதலா னொழுக்கத்தை முற்கூறினுர். ' வாய்மைமொழியிற் ருனஞ் செய்வாரிற்றலை' என்பதனுன் அகமாகிய மனமொழிகளாற்

செய்வது பயனுடைத்தாகலின் ஒழுக்கத்தின் பின்னர் வாய்மையும், நீதியரை யர்க்குரிமையுடையதாகலின் முயனு நீதியென்றும், பெருமை பெருமித மின்மை யென்பவாகலின் அறையுமேன்மையென்றடை கொடுத்தும், அறத்திற் சிறந்ததொன்றின்மையி னைவற்றோடுட னெண்ணியுங்கூறினார். ஆதி யென்றார் பொறை, கல்வி, கேள்வி முதலியவற்றினை, உலக பாலருருவா யுலகம் புரத்தலின் இறைவனென்றார். இதனைத் 'திருவுடை மன்னரைக் காணிற்றிருமாலைக்கண்டேனே யென்னும்' எனப்பெரியார் டணித்ததையுமிப் பெற்றி நோக்கி, இவ்வாறே பரிமேலழகருங் கூறுவதுங் காண்க. சுருதி யென்றது எழுதாக்கிளவியை. அது வேதமுதலிய வாத்த கலைகளை. (௱௫)

பரவுகேள்வியும்பழுதின்ஞானமும்
விரவுசீலமும்வினையின்மேன்மையும்
உரவிலோய்தொழற்குரியதேவரும்
குரவரேயெனப்பெரிதுகோடியால்.

(இ-ள்) உரம்விலோய்- ஆற்றலையுடைய வில்லையுடையானே, பரவு கேள்வியும் பழுது இல்ஞானமும் விரவு சீலமும் வினையின் மேன்மையும்- சிறப்பித் துரைக்கப்படும் கேள்வியும் குற்றமற்ற மெய் யுணர்ச்சியும் பொருந்திய வொழுக்கமும் வினை தூய்மையும் யாவராலுந்தொழுதற்குரிய தேவரும், குரவரே யெனப் பெரிது கோடி-பெரியாரெனப்பெரிது மனங் கொள்.—எ-று.

வில்லாற்றலிற் றன்னொப்பாரில்லவனாகலின் உரவிலோ யென்றார். கற்றலிற் கேட்டலினிது என்பவாகலின் கேள்வியைப் பரவு கேள்வியென்றடை கொடுத்து முற்கூறினார். கேள்வியென்றது கேட்கத்தகு நூற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல், அது கற்றவழி அதனினுடையவறிவை வளர்த்தலும் கல்லாத வழியுமதனையுண்டாக்குதலும்பற்றியென்க. பழுதின் ஞானமென்றது மெய்யுணர்ச்சியை. அது பிறப்பு வீடுகளையு மவற்றின் காரணங்களையும் விபரீத வையங்களானன்றி யுண்மையானுணர்தல். சீலமென்ற தொழுக்கத்தினை. அதுதத்தம் வருணத்திற்கும் நிலைக்கு மோதப்பட்ட ஒழுக்கத்தினை யுடையராதல். வினையின் மேன்மையென்றது "மனந்தூய்மை செய்வினை தூய்மையிரண்டும்" அவைமுறையே விசேட வுணர்வு புலப்படுமொறு இயற்கையாய வறியாமையினீங்குதலும், மொழிமெய்களாற் செய்யும் நல்வினையுடையனாதலுமாம். தொழற்குரிய தேவருமென்றது மும்மைப்பெருந்தேவரையும் முப்பான் மும்மையினாய தேவரையும். பரவுகேள்வி' முதலியவற்றினைக்குரவரே யெனக்கோடி யென்றார், (௱௬)

அந்தநற்பெருங்குரவராரெனச்
சிந்தைதேர்வுறத்தெரியநோக்கினல்

தந்தைதாயரென்றிவர்கடாமலால்
எந்தைகூறவேறெவருமில்லையால்.

(இ-ள்.) அந்த நற்பெருங் குரவ ராரென - நன்மையாகிய அப்பெருங் குரவர் யாரேயென்று, சிந்தை தேர்வுற - சிந்தை தெளிய, தெரியநோக்கினல் - தெரிய நோக்குமிடத்து, தந்தை தாயரென்றிவர்க டாமலால்- தந்தை தாயரென்று சிறப்பித்துரைக்கப்பட்ட இவர்களல்லாமல், எந்தை கூற வேறெவருமில்லை – எந்தாய் சொல்ல வேறியாருமில்லை.—எ. று.

அந்த நற்பெருங்குரவரென்றது குரவரேயெனப் பெரிது கோடியென்பதை வற்புறுக்தற்கு. தந்தை தாயராகிய பெற்ரோரினுஞ் சிறப்புடைய தெய்வமின்மைகலின் தந்தை தாயரென்றிவர்கடாமலால் வேறெவருமில்லையென்ருர். (௯௭)

தாய்வரங்கொளத்தந்தையேவலால்
மேயநங்குலத்தருமமேவினேன்
நீய்வரங்கொளத்தவிர்தனீர்மையோ
ஆய்வரும்புலத்தறிவுமேவினுய்.

(இ-ள்) தாய்வரம் கொள - தாய்வரமெய்த, தந்தையேவலால் - தந்தையாகிய அரசனுணையான், மேய நங்குலம் தரும மேவினேன் - மேவிநின்ற நங்குலத்தினெழுங்கினையடைந்து நின்றேன், ஆய்வரும் புலத்தறிவு மேவினுய் - ஆராய்வதற்கரிய அறநூலும் நீதிநூலு முதலியவற்றி னறிவினையுடையானே, நீ வரங்கொளத் தவிர்தனீதியோ - நீ வேண்டி பெற்றுக்கொண்டனையேல் நான் தவறுதல் நன்மையேயோ.—எ-று.

புலமென்றது நூலெனப் படுவதனுன் அறிவு நூன் முதலியன கொள்க. மேய நங்குலத்தரும மேவி னேனென்பதற்கு வேறு கூறுவாருமுளர் - ஓகார மெதிர்மறை – குலத்தருமமென்றது குலத்தொழுக்கமாகிய வாய்மை தவருதிருத்தலை. (௯௮)

தனையராயினுர்தந்தைதாயரை
வினையினல்லதோரிசையைவெய்தலோ
நினையலோவிடாநெடியவன்பழி
புனையலோவையபுதல்வராதருன்.

(இ—ள்.) அய்ய புதல்வராதல் தான்-ஐயனே ! புதல்வரெனப் படுவதனுலாய பயன், தனையராயினுர் - மக்களானவர், தந்தை தாயரை- தம் தந்தையையுந்தாயையும், வினையின் நல்லதோரிசையை வேய்தலோ - தத்தஞ் செய்கையானல்லதாகிய தொரு புகழினை யடைவித்தலேயோ, நினையலோ விடாநெடி

யவன் பழி பூணபலோ—எண்ணத்தினின்று நீங்குதலில்லாத நீண்ட பெரும் பழியினை மேற்கோடலோ அறியேன்.—எ-று.

"மகன்றந்தைக் காற்று முதவியிவன்றந்தை யென்னோற்றான் கொல்லெ ன்னுஞ் சொல்" என்பவாகலின் வினையினல்ல தோரிசையை வேய்தலோ என்றும், அவ்வாறுநடவாதான் பழிபாவமெய்துவது கடனாகலின் 'வினையலோ விடாநெடியவன் பழி பூணயலோவென்றுங் கூறினார். ஒருவென்னு முதனிலை வேறெனவும் கோடலே சிறப்பன்றி மருஉவெனக் கோடலத்துணைச் சிறப் பன்றென்க. (ால)

இம்மைபொய்யுரைத்திவறியெந்தையார்
அம்மைவெம்மைசேர்நரகமாளயான்
கொம்மைவெம்முலைக்குவையின்வைகிவாழ்
செம்மைசேர்நிலத்தரசுசெய்வனே.

(இ-ள்.) இம்மை எந்தையார் இவறி—இம்மையின் கண் என்றந்தை யார் தாம் கொடுத்தவரத்தையுலோவி, பொய்யுரைத்து-பொய்கூறி, அம்மை வெம்மை சேர் நரகமாள—அம்மையின் கண் கொடியதாகிய நிரயத்தினை யெய்த, யான் கொம்மை வெம்முலை குவையின் வைகிவாழ்-யான் விரும்பப் படும் திரண்ட முலைக் குவையிற்றங்கி வாழ்கின்ற, செம்மைசேர் நிலத்தரசு செய்வனே-இன்பத்தினைத் தருகிற வுலகத்தரசு செய்வேனே.—எ-று.

இம்மை அம்மையென்பன இம்மை மறுமை என்னுந் துணையாய் நின்றன. வம்மை விருப்பம், இவறல் - உலோபஞ்செய்தல் - குவை என்பது மேட்டினை, நிலவுலகத்தரசச் செல்வத்தினைச் சிறப்பித்துக் கூறக்கொம்மை வெம்முலைக் குவையின்வைகிவாழ் செம்மைசேர்நிலத்தரசுசெய்வனேஎன்றுங்கூறினார் ()

வரனிலுந்தைசொன்மரபினாலுடைத்
தரணிநின்னதென்றியைந்ததன்மையால்
உரனினீபிறந்துரிமையாதலால்
அரசுநின்னதேயாள்கவென்னவே.

(இ-ள்.) வரனில் உந்தைசொல் மரபினாலுடைய தரணி-வரத்தான் நின்றந்தை சொல்லினை முறையாகவுடைய நிலவுலகம், நின்னதென்றியைந்த தன்மையான்-நினக்குரிய தென்றமைந்த தன்மையானும், உரனில் நீ பிறந் துரிமையாதலால்-அவ்வரசினையாளத் தக்க ஆற்றலோடு நீ தோன்றி நிற்குரிய தாதலாலும்: அரசுநின்னதே-அரசச் செல்வ நினக்குரிய தாயதே, ஆள்க என்ன - நீ யாள்க வென்று கூற.

"தன்மை முன்னிலையா யீரிடத்தொடு மன்னாதாகும் வியங்கோட்கிளவி" என்புழி மன்னாதாகுமென்ற விதப்பாற் சிறுபான்மை வியங்கோள்வினை முன்

னிலையிடத்து வருதலுங்கொள்க. வரனில் என்பதற்கு கைகேசிக்கு வரமளித்துத் தவருது நின்றவென்பதுமொன்று. (ககக)

முன்னர்வந்துதித்துலகமூன்றினும்
நின்னையொப்பிலாநீபிறந்தபார்
என்னதாகிவ்யானின்றுதந்தனென்
மன்னபோந்துநீமகுடஞ்சூடென.

(இ-ள்.) முன்னர் வந்துதித்து-எங்கள் முன் வந்து தோன்றி, உலகமூன்றினும்-மும்மையுலகத்தினும், நின்னையொப்பிலா நீபிறந்த பார்-நின்னொப்புமையிலாத நீ யரசுரிமை யுடையனுகத் தோன்றிய நிலவுலகம், என்னதாகில்-நீ கூறியாங்கு எனக்குரியதேயாகில், யான் இன்று தந்தனன் - யானின்றே நினக்குதவி நின்றேன், மன்ன போந்து நீ மகுடஞ் சூடென-அரசனே நீ சென்று முடிபுனை கோலங்கொள்கவென்று கூற.—எ-று.

முன்னரென்றது பரதன் முதலிய மூவர்க்கு முற்றோன்றியென்பதனை. என்னது குறிப்புமுற்று, நின்னெடுவமை யிலாதாயாகலின் நின்னொடொப்பிலா நீ பிறந்த பாரென்ருர். புகுந்து என்றது போந்து மரீஇயது. மன்னவென என இராமனை விளிக்கப்பட்டது. மகுடமென்றது இட்சுவாகு முதலியவரசர் தாங்கிய முடியாதலின் அதன் சிறப்புப்பற்றி யடைகொடுத்துக் கூறினுர். ( )

மலங்கிவையகம்வருந்தும்வைகனீ
உலங்கொடோளுனக்குறுவசெய்தியோ
கலங்குருவணங்காத்திபோந்தெனப்
பொலங்குலாவுதாள்பூண்டுவேண்டினுன்.

(இ-ள்.) வையகம் மலங்கிவருந்தும் வைகல் - மண்ணுலகமுழுவதுங் கலங்கி வருந்து மமையத்து, நீ உலங்கொடோளுனக் குறுவ செய்தியோ - நீ திரள்கற்போன்ற தோளாற்றலான் நினக்கியைவனவற்றைச் செய்தியோ, கலங்குருவணம் காத்தி போந்து என - யாவருங் கலங்குத லடையாவகை போய்க் காத்தருளென்று, பொலங்குலாவு தாள்பூண்டு வேண்டினுன் - அழகமைந்த சேவடியைப்பற்றி வேண்டியிரந்தான்.—எ-று.

அரச னிறந்துபட்டமையான் உலகம் வருந்துமாகலின் வையகம் கலங்கி வருந்தும் வைகலென்றும், நின்றோளாற்றலால் உலகைக் காக்கவேண்டுமென்பார் கலங்குருவணம் போந்து காத்தியென்றும்-நீ கானேகல் நன்றன்றென்பார் உலங்கொடோளுனக்குறுவ செய்தியோவென்றும் - அவனருள்வர இரந்தானென்பார் பொலங்குலாவு தாள்பூண்டு வேண்டினுனென்றுங் கூறினுர்: இம்மூன்று செய்யுளானும் பரதன் வேண்டினமையுணர்த்தப்பட்டது. (ககரு)

பசைந்தசிந்தைநீபரிவின்வையமென்
வசஞ்செய்தாலதுமுறைமையோவசைக்
கசைந்தவெந்தையாரருளவன்றுநான்
இசைந்தவாண்டெலாமின்றொடேறுமோ.

(இ-ள்.) பசைந்த சிந்தை நீ பரிவின் வையகம்-அன்பமைந்த சிந்தையையுடைய நீ விழைவின்மண்ணுலகை, வசஞ்செய்தால் - என்வயத்தாக்கின், அது முறைமையோ-அது அறநூற்றுணி பாமோ, வசைக்கசைந்த எந்தையார் - பழிக்கஞ்சிய என் தாதையார், அருள-என் தாய்க்குவரமளிக்க, அன்றுநானிசைந்த ஆண்டெலாம்-அன்று நான் மேற்கொண்ட பதினான்காண்டு முழுதும், இன்றொடு ஏறுமோ-இற்றைநாளொடு முடிவெய்துமோ.—எ-று.

தந்தை வரமளித்த அற்றை நாளென்பார் அன்று நானிசைந்த வாண்டெலாமென்றும், அது நீ வேண்டிய இற்றை நாளில் முடிவெய்தாதென்பார் இன்றொடேறுமோவென்றும், இது தந்தையளித்த வரமென்பார் எந்தையாரருளவென்றும் கூறினர். (கக௭)

வாய்மையென்னுமீதன்றிவையகம்
தூய்மையென்றுமொன்றுண்மைசொல்லுமோ
தீய்மைதானதிற்றீர்தலன்றியே
ஆய்மெய்யாகவேறறையலாவதே.

வாய்மையென்னுமீதன்றி – வாய்மை யென்றுரைக்கப்படு மிதுவல்லாமல், வையகம்-மண்ணுலகம்; தூய்மையென்று மொன்றுண்மை சொல்லுமோ - தூய்மையென்றும் ஒன்றுகின்ற வாய்மையமைந்து கூறுமோ, தீமைதான் - தீயதுவுமே, அதிற்றீர்தலன்றி - அவ்வாய்மையினின்றுந் தீர்தலல்லாமல், வேறறையலாவதே - வேறு சொல்லலாவதே. ஆய் மெய் ஆக-உண்மையாக வாய்ந்து காண்.—எ-று.

எந்தையேவவாண்டேழொடேழுறு
வந்தகாலநாள்வனத்துள்வைகநீ
தந்தபாரகந்தன்னைமெய்மையால்
அந்தநாளெலாமாளென்னாணையால்.

(இ-ள்.) எந்தை—என்தந்தையாராகிய சக்ரவர்த்தியானவர், ஏவ-ஏவுதலால், ஏழொடு ஏழுறுவந்த காலநாள்-பதினான்குவருடகாலம், வனத்துள் வைக-ஆரணியத்துள் வாழும்படி, நீதந்த-நீகொடுத்த, பார் அகம் தன்னை-பூமியை, மெய்ம்மையால் - சத்தியத்தால், அந்தநாள் எல்லாம் - அந்தநாள்முழுதும், என் ஆணையால்—என் கட்டளையால், ஆள்—ஆளக்கடவை,—எ-று.

எந்தை என்தந்தை யென்பதன் மரூஉ, என செய்தென்னும் வாய்பாட்டிறந்த கால வினையெச்சம். (கககூ)

வேறு.

மன்னவனிருக்கவேயுமணியணிமகுடஞ்சூடு
கென்னயானியைந்ததன்றனேயதுமறுக்கவஞ்சி
அன்னதுநினைந்துநீயென்னாணையைமறுக்கலாமோ
சொன்னதுசெய்தியையதுயருழந்தயரலென்றான்.

(இ-ள்.) மன்னவன்-சக்ரவர்த்தியானவர், இருக்கவேயும் - இருக்கவும், மணி அணி-மணிகளால் அலங்கரிக்கப்பட்ட, மகுடம் சூடுக என்ன-முடிசூடுக வென்று சொல்ல, யான் இயைந்தது-நான் சம்மதித்தது, அன்னான்-அவர், ஏயது-கட்டளையை, மறுக்க அஞ்சி-மறுத்தற்கஞ்சி, அன்னது- அதனை, நீ நினைத்து - நீ நினையாநின்று, என் ஆணையை மறுக்கல் ஆமோ - என்கட்டளையை மறுத்தல்தகுமோ, சொன்னது-நான் சொன்னதை, செய்தி-செய்யக்கடவை, ஐய - ஐயனே, துயருழந்துஅயரல் — துன்புற்றுத் தளராதை, என்றான்—என்று சொன்னான்,—எ-று.

அணிமகுடம் வினைத்தொகைநிலைத் தொடர். சூடுக என்ன என்பது சூடுகெனவெனத் தொகுத்தலாயிற்று. ஐய அண்மைவிளி. (ககஎ)

ஒள்ளியோனினையவெல்லாமுரைத்தலுமுரைக்கலுற்ற
பள்ளநீர்வெள்ளமென்னப்பரதனைவிலக்கிப்பண்டு
தெள்ளியகுலத்தோர்செய்கைசிக்கறச்சிந்தைநோக்கி
வள்ளியோய்கேட்டியென்றுவசிட்டமாமுனிவன்சொன்னான்.

(இ-ள்.) ஒள்ளியோன்-ஒண்மையனாகிய ஸ்ரீ ராமபிரான், இனைய எல்லாம் - இத்தன்மையனயாவும், உரைத்தலும்-சொல்லுதலும், உரைக்கலுற்ற - சொல்லப்பட்ட, பள்ளம் நீர்வெள்ளம் என்ன - பள்ளத்திற்பாயும் நீர்ப்பெருக்குப்போன்ற, பரதனை- பரதாழ்வானை, வசிட்டமாமுனிவன் - பெருமைபொருந்திய வசிட்டமுனிவர், விலக்கி (சும்மா விருவென்றுகையமைத்து) விலக்கி, பண்டு-பூர்வகாலத்திலிருந்த, தெள்ளியகுலத்தோர் செய்கை-பரிசுத்தமான உயர்குலத்தோரது ஒழுக்கங்களை: சிக்கு அற-கசடற, சிந்தைநோக்கி-மனத்தினலாராய்ந்து, வள்ளியோய் - உதாரசீலனாகிய ஸ்ரீராம, கேட்டியென்று-கேட்கக்கடவையென்று, சொன்னான்-(அடியில் வருவனவற்றை) சொல்லினர்.-எ-று.

ஒண்மை-ஒட்பமுடைமை. (நடுவுநிலைமை) தெள்ளிய-குற்றமற்ற எனினுமாம். நோக்கியென்பது ஆராய்ந்து என்னும் பொருளில் வந்தது. வண்மை - கொடை. (ககஅ)

வேறு.

கிளரகன்புனலுணின்றரியொர்கேழலாய்
இளையெனுந்திருவினையேந்தினனரோ
உளைவரும்பெருமையோரெயிற்றினுட்புரை
வளரிளம்பிறையிடைமறுவிற்றேன்றவே.

(இ-ள்.) அரி-திருமாலானவர், ஓர்கேழல் ஆய் - ஒப்பற்றவராகவுருவெடுத்து, கிளர் - விளங்குகிற, அகன்புனலுள் நின்று-பிரளய வெள்ளத்தினின்று, இளை என்னும் திருவினை - பூமியென்கிற பெண்ணை, உளைவரும்

பெருமை-புறமயிரின் மிகுதியையுடையதாகி, ஓர் எயிற்றின் உட்புரை- ஒரு கொம்பினுட்டுளையில், வளர் இளம் பிறையிடை - வளராநின்ற இளம் பிறையினிடத்துள்ள, மறுவின்தோன்ற-களங்கம்போலத் தோன்றும்படி, ஏந்தினன்-தாங்கினன்.—எ-று.

கேழலாய் ஏந்தினன் எனவியையும், மறுவின் என்பதில் இன் ஐந்தாவதனுருபுப் பொருட்டு. (கககூ)

ஆதியவமைதியினிறுதியைம்பெரும்
பூதமும்வெளியொளித்தெவையும்புக்கபின்
நாதனவ்வகன்புனனல்கிநண்ணருஞ்
சோதியாந்தன்மையிற்றுயிறன்மேயினன்.

(இ-ள்.) ஆதிய அமைதியின் இறுதி – முதல் யுகத்தினிறுதியில், ஐம்பெரும் பூதமும் - பஞ்சமஹாபூதங்களும், எவையும் - மற்றெல்லாப்பொருள்களும், வெளி-மஹாகாசத்தில், ஒளித்துபுக்கபின்-மறைந்துபோனபிறகு, நாதன்-இறைவன், அ - அந்த, அகன்புனல்நல்கி - அந்தப்பிரளய வெள்ளத்தையுண்டாக்கி, (அதன்மீது) நண்அரு-கிட்டுதற்கரிய, சோதி ஆம் தன்மையின் - ஒளியுருவாகி, துயிறல் மேயினன்-யோகநித்திரை செய்தார்.—

அமைதி—காலம், அது ஈண்டுயுகத்தைக்குறித்தது, ஐம்பெரும்பூதம்-நிலனீர்நெருப்புயிர் நீள்வி சும்பு, இன்னார்க்கு நாதனென்னாது நாதனெனவாளா கூறினது எல்லார்க்கு நாதனென்னும்பொருள் போதற்கென்க, துயிறல் - துயில்தல். (கஉ0)

ஏற்றவித்தன்மையினமரர்க்கின்னமு
தூற்றுடைக்கடல்வணனுந்தியுந்திய
நூற்றிதழ்க்கமலத்தினெய்தின்யாவையும்
தோற்றுவித்துதவிடமுதல்வன்றோன்றினன்.

(இ-ள்.) ஏற்ற இத்தன்மையின்-தகுதியாகிய இத்தக்குணத்தையுடைய, அமரர்க்கு-தேவர்பொருட்டு, இன் அமுது-இனிய அமிர்தத்தை, ஊற்று உடை வார்த்த, கடல் வணனன்-கடல்நிறமுள்ளவனாகிய திருமாலின்: உந்தி உந்திய-திருநாபியானது தோன்றுவித்த, நூற்றிதழ் கமலத்தின் - நூறிதழ்களையுடைய தாமரைமலரில், நொய்தின் - விரைவாக, யாவையும் - எல்லாப்பொருள்களையும், தோற்றுவித்து உதவிட - உண்டாக்கித் தரும்பொருட்டு, முதல்வன் தோன்றினன் – பிரமன் உண்டானான்,—எ-று.

அமரர் சாவாதவர் என்னும் பொருள தோர்வடசொல். சாவாமை இங்ஙனங் கூறியது மங்கலவழக்கு. கடல்வண்ணன் - நீலநிற முடையவன்,பிரபஞ்சத்தோற்றத்துக்குக் காரணனாத னேக்கிப் பிரமனைமுதல்வன் என்றார்.

அன்றவனுலகினையளிக்கவாகிய
துன்றனிக்குலமுதலுள்ளவேந்தர்கள்
இன்றளவினுமுறையிகந்துளாரிலை
ஒன்றுளதுரையினமுணரக்கேட்டியால்.

(இ-ள்.) அன்று-அந்நாளில்-அவன்-அந்தப்பிரமன், உலகினை அளிக்க - உலகத்தைப்படைக்க, ஆகிய -உண்டானதாகிய, உன்-உனது,தனி-ஒப்பற்ற குலம்-குலத்துக்கு, முதல் உள்ள வேந்தர்கள்-முதல்வராயிருந்த அரசர்களில்'

இன்று அளவினும்-இந்நாளளவும், முறை-செங்கோல் முறைமையை, இகந்துளார் இலை-கடந்தவரில்லை, இன்னம்-இன்னமும், ஒன்று உரை உள்ளது-ஒருவார்த்தையுண்டு, (அதனையான் சொல்ல) உணரக்கேட்டி- சாவதானமாயிருந்து கேட்கக்கடவை.—எ - று.

முறையிகத்தல் - செங்கோல் முறையைக்கடத்தல், கேட்டி முன்னிலையேவலொருமைவினை, ஆல்-அசை. (சஉஉ)

இதவியலியற்றியகுரவர்யாரினும்
மதவியல்களிற்றிஞய்மறுவில்விஞ்சைகள்
பதவியவிருமையும்பயக்கப்பண்பினல்
உதவியவொருவனேயுயருமென்பரால்.

(இ-ள்.) மத இயல்களிற்றிஞய்- மதாயக்கத்தோடு கூடிய யானைப்படையையுடையவனே, இதம் இயல் இயற்றிய - நன்மையைத்தருகிற வித்தைகள் யாவையுங் கற்பித்த, குரவர் யாரினும்-ஆசாரியர்களாகிய எல்லாருள்ளும், பதவிய இருமையும் பயக்க - சிரேஷ்டமான இம்மை மறுமையின்பங்களைத்தரும்படி, மறுவில் விஞ்சைகள்-குற்றமில்லாத வித்தைகளை, பண்பினல்-அன்புடனே, உதவிய வொருவனே-கற்பித்தவொருவனே, உயரும் என்பர்-உயர்வடைவானென்று சொல்லுவர் மேலோர்,—எ-று.

பயத்தல் - அளித்தல், பண்பு - குணம், அது ஈண்டன்பைக் குறித்தது-ஏ தேற்றம், பிரிநிலையெனினுமாம், ஆல்-அசை. (சஉ௩)

என்றலால்யானுனையெடுத்துவிஞ்சைகள்
ஒன்றலாதனபலவுதவிற்றுண்மையால்
அன்றெனுதின்றெனதாணையைநீ
நன்றுபோந்தளியுனக்குரியநாடென்றான்.

(இ-ள்.) என்றலால்-என்று பெரியோர் சொல்லுதலால், யான்-நான், உன்னையெடுத்து - உன்னை விர்த்திசெய்து, ஒன்று அல்லாதன-ஒன்றல்லாதனவாகிய, பலவிஞ்சைகள்-பலவித்தைகளையும், உதவிற்று உண்மை - கற்பித்ததுமெய், ஆல்-ஆதலால், ஐய-ஐயனே, இன்று-இப்பொழுது, எனது ஆணை-என்கட்டளையை, அன்று எனுது - அல்லவென்று மறுக்காமல், நீ-நீ, உனக்கு உரியநாடு-உனக்குஉரியநாட்டினை, நன்று - நன்ருக, போந்து அளி - வந்து காக்கக்கடவை, என்றான்-என்றுசொன்னான்.—எ-று.

உதவிற்று - உதவினது, அளி - முன்னிலையேவலொருமைவினை. (சஉச)

கூறியமுனிவனைக்குவிந்ததாமரை
சீறியகைகளால்தொழுதுசெங்கணன்
ஆறியசிந்தனையறிஞவொன்றுரை
கூறுவதுளதெனக்கூறன்மேயினன்.

(இ-ள்.) கூறிய (இவ்வாறு) சொல்லிய, முனிவனை - வசிட்டமுனிவரை, செங்கணன் - செந்தாமரைக்கண்ணனுகிய ஸ்ரீராமபிரான், குவிந்த - கூம்பின, தாமரை - தாமரைமலரை, சீறிய - சோவித்த, கைகளால் - திருக்கரங்களால், தொழுது-வணங்கி, ஆறியசிந்தனை-தணிந்த மனத்தினையுடைய, அறிஞ - அறிவனே, கூறுவது - யான் சொல்லவேண்டுவதாகிய, ஒன்று உரை உள்ளது என-ஒரு வார்த்தையுண்டென்று, கூறல் மேயினன்-சொல்லலாயினன்.—எ-று.

சீறியஎன்றது வென்ற என்றபடி, செங்கண்மால் என்பதிற்போலச் செங்கணன் என்பது செந்தாமரை மலர்போலுங் கண்களையுடையவன் என்னும் பொருடந்து நின்றது, ஆறியசிந்தனை-விசிராந்தியடைந்த மனம், அறிஞ- அண்மைவிளி. (கஉ௫)

சான்றவராகதன்குரவராகதாய்
போன்றவராகமெய்ப்புதல்வராகதான்
தேன்றருமலருளான்சிறுவசெய்வெனென்
றேன்றபின்னவ்வுரைமறுக்குமீட்டதோ.

(இ-ள்.) தேன்தரும் மலருளான் சிறுவ-தேனைச்சிந்துகிற தாமரைமலர்த் தவிசிலிருப்பவனாகிய பிரமதேவனது சிறுவனே, சான்றவர் ஆக-பெரியோரேயாகட்டும், தன்குரவர் ஆக-தனது ஆசாரியரேயாகட்டும், தாய்போன்றவர் ஆக-தாய்போன்ற அன்புடையவரே யாகட்டும், மெய்ப்புதல்வர் ஆக-உண்மையையுடைய புத்திரரேயாகட்டும், செய்வென் என்று-செய்வேனென்று, ஏன்றபின்-சம்மதித்தபிறகு, அவ்வுரை-அந்தச்சொல், மறுக்கும் ஈட்டதோ-மறுக்குந்தகுதியதோ.—எ-று.

நீசிறியையாதலிற் காரியாகாரியப்பாகுபாட்டினை யறியவில்லை யென்பது தோன்ற, தேன்றருமலருளான் சிறுவ என்றார். ஈடு-தகுதி, ஓகாரம் எதிர்மறை. (கஉ௬)

தாய்பணித்துவந்தன தந்தைசெய்கென
ஏயவெப்பொருள்களுமிறைஞ்சிமேற்கொளாத்
தீயவப்புலையனிற்செய்கைதேர்கிலா
நாயெனத்திரிவதுநல்லதல்லதோ

(இ-ள்.) தாய்பணித்துவந்தன-தாயினால் கட்டளையிடப்பட்டுவந்தவற்றையும், தந்தைசெய்க என ஏய எப்பொருள்களும், தந்தையானவன் செய்கவென்றேவின எந்தக்காரியங்களையும், இறைஞ்சி (அவர்களை) வணங்கி, மேல்கொளா-சிரசாவகிக்காத, தீய-தீயனாகிய, அப்புலையனின்-அந்த நீசனைப்போல, செய்கை-செய்வதற்குரியவற்றை, தேர்கிலா-ஆராய்ந்தறியாத, நாய் என திரிவது-நாய்போலத்திரிதல், நல்லது அல்லது-தீயது.—எ-று.

பணித்து என்னும் செய்வினை ஈண்டுச்செயப் பாட்டுவினைப்பொருளில் வந்தது, தாய்பணித்து மூன்றும் வேற்றுமைத்தொகை நிலைத்தொடர். பணித்து என்பதைப்பணிக்க என வெச்சத்திரிபாக்கினுமாம், கொளா செய்யாவென்னும் வாய்பாட்டிறந்த கால வினையெச்சம், புலையனின் என்பதில் இன் ஐந்தாவதனுருபுப் பொருளது. தேர்கிலா என்பதில் கில் ஆற்றற்பொருண்மை விகுதி. (கஉ௭)

முன்னுறப்பணித்தவர்மொழியையானெனச்
சென்னியிற்கொண்டதுசெய்வனென்றதின்
பின்னுறப்பணித்தனைபெருமையோவெனக்
கென்னினிச்செய்வதையுரைசெயீங்கென்றான்.

(இ-ள்.) முன்னுறப்பணித்தவர் மொழியை-முற்படப் பணித்த தந்தைதாயார் மொழியை, யான்என்சென்னியிற்கொண்டு அது செய்வனென்றதன் பின்னுற-யான் என் றலைமேற் கொண்டதனைக் செய்வே னென்றுடன்பட்டபின் பொருந்த, பணித்தனை-கட்டளையிட்டனை, பெருமையோ-பெருமையுடையதாமோ, இனி செய்வதை யெனக்கீங்கு என் உரைசெய்

என்றான் - இனிச்செயக்கடவதை யெனக்கு இவ்விடத்தியாது சொல்லென்றனன்.—எ-று.

முன்னுறப்பணித்தவர் என்பது தந்தைதாயரை. அவர்பணித்த பின்பணித்தலால் பெருமையோவென்றார், ஓகார மெதிர்மறை. (கஉஅ)

முனிவனுமுரைப்பதோர்முறைமைகண்டிலம்
இனியெனவிருந்தனனிளையமைந்தனும்
அனையதேலாள்பவராள்கநாடுநான்
பனிபடர்காடுடன்படர்தன்மெய்யென்றான்.

(இ-ள்.) முனிவனும் - வசிட்டமுனிவனும், இனி உரைப்பதோர் முறைமை கண்டிலமென - இனிக் கூறுவதாகிய தொருமுறைமையை யறிந்திலமென்று எண்ணி, இருந்தனன் - வாளாகிடந்தனன், இளையமைந்தனும்- (அங்ஙனமருக்க) பரதனும், அனையதேல்நாடு ஆள்பவர் ஆள்க - அஃதேல் உலகினியாளத்தக்கார் ஆள்க, நான் பனிபடர் காடுடன் படர்தல் மெய்யென்றான் - யான் பனிதங்கிய காட்டினிடை இறைவனுடன் சேறல் உண்மையென்றனன்.—எ-று.

அனையதேல் என்பதில் எல் எனின் என்பதன் மரூஉ, படர்தல்-நடத்தல். (கஉகூ)

அவ்வழியிமையவரறிந்துகூடினார்
இவ்வழியிராமனையிவன்கொண்டேகுமேல்
செவ்வழித்தன்றுநஞ்செயலென்றெண்ணினார்
கவ்வையர்விசும்பிடைக்கழறன்மேயினார்.

(இ-ள்.) அவ்வழி - அங்ஙன நிகழுஞ்சமயத்து, இமையவர் அறிந்து கூடினார் - தேவர்களுணர்ந்து கூடி, இவ்வழி இராமனை இவன் கொண்டேகுமேல்-இப்பொழுது சீராமனை இவன் கொண்டுசெல்வனேயாயின், நம்செயல் செவ்வழித்தன்று என்றெண்ணினார் - நஞ்செய்கை நேர்வழி யாகாதென்றெண்ணி, கவ்வையர் விசும்பிடைகழறன்மேயினார் - துயர்ந்து விண்ணிடைக் கூறலாயினர்.—எ-று.

கவ்வையர் - முற்றெச்சம், இடை ஏழனுருபு. (சுஙo)

ஏத்தரும்பெருங்குணத்திராமனிவ்வழி
போத்தருந்தாதைசொற்புரக்கும்பூட்சியான்
ஆத்தவாண்டேழிரேடேழுமந்நிலம்
காத்தலுன்கடனிவைகடமையென்றனர்.

(இ-ள்.) ஏத்தரும் பெருங்குணத்திராமன் - புகழ்தற்கரிய பெருங்குணத்தினையுடைய சீராமன், தாதைசொல்புரக்கும் பூட்சியான் - தாதைசொல்லைக்காக்கும் உரிமையனுகி. இவ்வழி போத்தரும் - இவ்வாறுதான் செல்லும், ஆத்தவாண்டேழிரேடேழும். தாதைபணித்த பதினான்காண்டும், அந்நிலங் காத்தல் உன்கடன் - அவ்வரசபாரம் பொறுத்தல் நினக்குரிய கடமையேயாம், இவை கடமையென்றனர் - இவை இருவருஞ் செயற்பாலனவா முறைமை யென்று கூறினர்.—எ-று.

போந்த போத்தென்றாயிற்று, போத்து -குற்றம், ஆதலால் போத்தரு என்பதற்குக் குற்றமல்லாத என்றுரைத்தலுமாம், போத்தரார் புல்லறிவினார் என்றார் பிறரும், ஆத்த நியமித்த.

வானவருரைத்ததுமறுக்கற்பாலதன்
றியானுனையிரந்தனனினியென்னுணையால்
ஆனதோரமைதியினளித்திபாரெனுத்
தானவன்றுணைமலர்த்தடக்கைபற்றினுன்.

(இ-ள்.) வானவருரைத்தது மறுக்கற்பாலதன்று - தேவர்களெடுத்துரைத்தது தடுக்கற்பாலதன்று, யானுனையிரந்தனன்-யானின்னையிரந்தேன், இனியென்னுணையாலானதோர் அமைதியினளித்திபாரெனு-இனி என் ஏவலாய தொருமுறைமையினுல் நிலனைக்காத்தியென்று, தான் அவன்தணை மலர் தடக்கைபற்றினுன் - இறைவன் அப்பரதன் தாமரைமலர்போன்ற இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டான்—எ-று.

அளித்தி முன்னிலையேவ லொருமைவினை, எனு செய்யாவென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம், துணை - இரண்டு, கைக்குவமையாகப் புணர்க்கப்பட்டமையால் மலர் தாமரைமலரைக்குறித்தது. (கஙஉ)

ஆமெனிலேழிரண்டாண்டிலையநீ
நாமநீர்நெடுநகர்நண்ணிநானிலம்
கோமுறைபுரிகிலையென்னிற்கூரெரிச்
சாமிதுசரதநின்னுணைசாற்றினேன்.

(இ-ள்.) ஆமெனின் - அஃதங்ஙனமாயின், ஐய - இறைவனே, எழிரண்டாண்டில் - பதினன்காண்டின்பின், நீ நாமநீர் நெடுநகர் நண்ணி - நீர் அஞ்சுதற்குரிய நீரரணையுடைய அயோத்திமா நகரினையடைந்து, நானிலம் கோமுறைபுரிகிலையென்னின்-உலகினையாண்டு வருகின்றிலையெனின், கூரெரிசா மிது-மிக்க தீயிற் புக்கிறப்பது, சரதம் - உண்மையேயாம், நின் ஆணை சாற்றினேன் - நின்மே லாணையிட்டுரைத்தேன்.—எ-று.

ஐய - அண்மைவிளி, பாலைக்கு நிலமின்மையின் நானிலம் என்ருர், கோமுறை-அரசாட்சி. எரிச்சாம் மூன்ரும் வேற்றுமைத்தொகைநிலைத்தொடர் ()

என்பதுசொல்லியபரதன்யாதுமோர்
துன்பிலனவனதுதுணிவைநோக்கினுன்
அன்பினனுருகினனன்னதாகென்ருன்
தன்புகழ்தன்னினும்பெரியதன்மையான்.

(இ-ள்,) என்பது சொல்லியபரதன் - என்பதனையெடுத்துக் கூறியபரதன், யாதுமோர் துன்பிலன், சிறிதுந் துயரமில்லாவனயினன், தன்புகழ் தன்னினும் பெரியதன்மையான்-தன்புகழினும் பெரியதன்மையுடையவனுகியஇறைவன், அவனது துணிவை நோக்கினுன்-அவனது மனத்திண்மையை நோக்கி, அன்பினனுருகினன்-அன்பினுல் மனமுருகாநின்று, அன்னதாக என்ருன்-அங்ஙனமேயாக வென்றெடுத்துக் கூறினுன்.—எ-று.

ஆக என்ருன் என்பது ஆகென்ருன் எனத் தொகுக்கப்பட்டது. (கஙச)

விம்மினனபரதனும்வேறுசெய்வதொன்
றின்மையினரிதெனவெண்ணியேங்கினுன்
செம்மையின்றிருவடித்தலந்தந்தீகென
எம்மையுந்தருவனவிரண்டுநல்கினுன்.

(இ-ள்.) பரதனும் வேறு செய்வதொன்றின்மையின் - பரதனும் பிறிதொன்றுஞ் செய்யக்கடவதொன்றின்மையான், அரிதென எண்ணி ஏங்கி

ஞன் - அரிதாமென்று நினைத்து வருந்தியேங்கி, திருவடித்தலம் செம்மையிற்றந்தீ+என - திருப்பாதுகையை அன்பினோடளித்தியென்று வேண்ட, எம்மையுந் தருவன இரண்டுநல்கினன் - இன்டமனைத் துந்தருவன வாகிய அவை யிரண்டுமளித்து நல்கினன்.—எ-று.

இன்மையினென்பதில் இன் என்னுமைந்தாவது மூன்றாவதன் கருவிப் பொருளில்வந்தது, திருவடித்தலம்-திருவடிநிலை (பாதுகை) மரவடியென்றுங் கூறுப. (கஙடு)

அடித்தலமிரண்டையுமழுதகண்ணினன்
முடித்தலமிவையெனமுறையிற்சூடினன்
படித்தலத்திறைஞ்சினன்பரதன்போயினன்
பொடித்தலமிலங்குறுபொலங்கொண்மேனியான்.

(இ-ள்.) அழுதகண்ணினன் - அழுதகண்களையுடையானும், தலம்பொடித்தலமிலங்குறுபொலங் கொள்மேனியான் - நிலத்தின் புழுதிபடிந்த அழகிய மேனியையுடையானுமாகிய-பரதன்-பரதன், அடித்தல மிரண்டையு முடித்தல மிவையென - திருப்பா துகை யிரண்டனையு முடிகளே யாமென்று, முறையிற் சூடினன் - முறைமையிற்புனைந்து, படித்தலத்திறைஞ்சினன் - நிலத்தில்விழுந்திறைஞ்சி, போயினன்-சென்றனன்.—எ-று.

முடித்தலம் - சிரஸ்த்தாநம், அது அவ்விடதிற் சூடு மகுடத்திற்காயினமையால் இடவாகுபெயர்.

ஈன்றவர்முதலியவெண்ணில்சுற்றமும்
சான்றவர்குழுவொடுதவத்துளோர்களும்
வான்றருசேனையுமற்றுஞ்சுற்றுற
மூன்றுநூல்கிடந்ததோண்முனியும்போயினன்.

(இ-ள்.) ஈன்றவர் முதலிய எண்ணில் சுற்றமும்-தந்தை தாயார் முதலிய எண்ணிறந்த சுற்றமும், சான்றவர்குழுவொடுதவத்துளோர்களும்-பெரியோர் கூட்டத்துடன்தவத்தையுடைய முனிவரும்,வான்றருசேனையுமற்றும் சுற்றுற-பெருமிதமுடைய சேனையும் பிறவுஞ் சூழ்ந்துவர, மூன்றுநூல் கிடந்த தோள் முனியும் போயினன் - முப்புரிநூல் தங்கிய தோளையுடைய வசிட்டமுனிவனுஞ் சென்றனன்.— எ-று.

மூன்றுநூல் - முப்புரிநூல் (பூணூல்) மூன்றுநூல் கிடந்த தோள்முனியென வாளா கூறினரேனும் இவ்விடத்து வசிட்டமுனிவனை யுணர்த்திற்று.

பண்டைநூறெரிபரத்துவனும்போயினன்
மண்டுநீர்நெடுநகர்மாந்தர்போயினர்
விண்டுறைதேவரும்விலகிப்போயினர்
கொண்டறன்ஞணையாற்குகனும்போயினன்.

(இ-ள்.) பண்டைநூல் தெரிபரத்துவனும் போயினன்-வேதநூலறிந்த பரத்துவ முனிவனுஞ் சென்றனன், மண்டுநீர் நெடுநகர் மாந்தர்போயினர் - நீரரண் சூழ்ந்த அயோத்தியின் கணுள்ள புரிசனங்களுஞ் சென்றனர்,விண்டு உறைதேவரும் விலகிப்போயினர் - விண்ணின்கண் வதியுந் தேவரும் விலகிச் சென்றனர், கொண்டல்தன் ஆணையால் குகனும் போயினன்-கொண்டல் போல் வானாகிய சிராமன் கட்டளையாற் குகனுஞ் சென்றனன்.—எ-று.

கொண்டல் என்றது ஸ்ரீராமனை, உருவகம், குகன் - குகப்பெருமான், கொண்டல் உவமையாகு பெயருமாம். (௧௫௮)

பாதுகந்தலைக்கொடுபரதன்பைம்புனல்
மோதுகங்கையின்கரைகடந்துமுந்தினான்
போதுகுங்கடிபொழிலயோத்திபுக்கிலன்
ஓதுகங்குலினெடிதுறக்கநீங்கினான்.

(இ-ள்.) பாதுகந் தலைக்கொடு-திருவடிநிலைதலைமேற்கொண்டு, பரதன் பைம்புனல்மோது கங்கையின் கரைகடந்து முந்தினான் - பரதன் ஈரமாகிய நீர் மோதுகின்ற கங்கைக்கரையைக்கடந்து முற்பட்டு, போதுகும் கடிபொழில் அயோத்திபுக்கிலன் - மலர்சிந்தும் நறுமணங்கமழும் சோலைசூழ்ந்த அயோத்தியையடையாது, ஓதுகங்குலின் நெடிதுறக்கம் நீங்கினான்-சொல்லப்பட்ட இரவினு நித்திரைகொள்ளாது இருந்தனன்.—எ-று.

பாதுகம் என்றது இறைவன் திருவடிநிலையை, முந்தினான் புக்கிலன் என்பன எச்சமுற்று, நகரடைந்து மாலையினுங்கண்படை கொள்ளாதிருந்தானென்பதுபற்றி ஓதுகங்குலினெடிதுறக்கம் நீங்கினான் என்றார். இச்செய்யுளால் அவன் அயோத்தியடையா திருந்தானென்பதுணர்த்தப்பட்டது. (௧௫௯)

நந்தியம்பதியிடைநாதன்பாதுகம்
செந்தனிக்கோன்முறைசெலுத்தச்சிந்தையான்
இந்தியங்களையவித்திருத்தன்மேயினான்
அந்தியும்பகலுநீராருதகண்ணினான்.

(இ-ள்) நந்தியம் பதியிடை நாதன்பாதுகம் - நந்திக்கிராமத்தில் இறைவன திருவடிநிலை செந்தனிக்கோன் முறைசெலுத்த - ஒப்பற்ற செங்கோல் முறைமைய செலுத்த, அந்தியும் பகலு நீராருதகண்ணினான்-இரவும் பகலும் கண்ணீர் பொழிதலை யொழியாது. சிந்தையான் இந்தியங்களை யவித்திருத்தல் மேயினான்-ஐம்பொறி யடக்கியிருந்தனன்.—எ-று.

நாதன் - ஸ்ரீராமபிரான். (௧௬௦)

குன்றினிலிருந்தனனென்னுங்கொள்கையான்
நின்றவர்நலிவரானேயத்தாலெனாத்
தன்றுணைத்தம்பியுந்தானுந்தையலும்
தென்றிசைநெறியினைச்சேறன்மேயினான்.

(இ-ள்.) குன்றினில் இருந்தனன் என்னும் கொள்கையான் - சித்திரகூட பர்வதத்திலிருக்கிறான் என்று பலரும் எண்ணங்கொள்ளப்பட்டவனாகிய ஸ்ரீராமபிரான், நின்றவர்-(அயோத்தியில்) இருப்பவர்கள், நேயத்தால்-(நம்மீதுவைத்த) அன்பினால், நலிவர் எனா-நம்மை வருத்துவார்களென்றெண்ணி, தன் துணைத்தம்பியும் - தனது துணைவனாகிய இளையபெருமாளும், தானும் - தானும், தையலும் - சீதாபிராட்டியுமாக, தென்திசை நெறியினை - தென்றிசை வழிநோக்கி, சேறல் மேயினான்-செல்லுதலைப் பொருந்தினான்.—எ-று.

ஆவிரண்டனுள் முன்னையதுஅசை, பின்னையது கருவிப்பொருளில்வந்த மூன்றனுருபு. (௧௬௧)

அயோத்தியாகாண்டம் மூலமும் உரையும்
முற்றிற்று.